# ரங்கா *vs* ரங்கா

## அஜிதா காந்தன்

# பாகம் 1

# முன்னுரை

இருபத்தி ஓராம் நூற்றாண்டின் முற்பகுதியில் இருக்கும் நான், இந்த கதையை 22ஆம் நூற்றாண்டில் பிறக்கும் பெண்களுக்கு சமர்ப்பணம் செய்கிறேன்...

இந்தக் கதை, முழுக்க முழுக்க எனது சொந்த கற்பனை... இதில் நிகழும் சம்பவங்களும், அதற்கான காரணங்களும் பெரும்பாலாக நமது சமூகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் விஷயங்களைப் பொறுத்து, எனது மனதில் தோன்றிய கற்பனைகளை நான் கதையாக வடிவமைத்து இருக்கிறேன்...

இப்படி நடக்குமா...? நீங்கள் இதை எழுதியது சரிதானா...? என்ற உங்களின் கேள்விக்கு எனக்கு பதில் தெரியவில்லை... ஆனால் இன்றைய சமூக சூழ்நிலை, இதற்கு ஒரு வாய்ப்பாக மாறி விடக் கூடாது என்ற எண்ணத்தில், நான் இதை எழுதி இருக்கிறேன்...

# அத்தியாயம் 1

“அடியே ரங்கா, இன்னும் என்ன தூக்கம்? கார்த்தால இப்படி தூங்கினா வீடு விளங்கிடும். எழுந்துருடி, போயி வாசல் தெளிச்சு கோலம் போடு…” தேவகியின் குரல் அந்தத் தெரு முழுவதும் கேட்கும்படி ஒலித்தது.

ஆத்துக்குப் போய் விட்டு வீட்டுக்குள் நுழைந்து கொண்டிருந்த நீலகண்டன், “ “ஏண்டி தேவகி குழந்தையை கார்த்தால இப்படித்தான் எழுப்புவியா…? ஒரு நல்ல வார்த்தை சொல்லப்படாதோ…?”

“ஆமா, நீங்களும் தான் எப்பவும் நல்ல வார்த்தையாதான் பேசறீங்க… ஆனா என்ன அள்ளி கட்டிகிட்டீங்க… என்ன கேட்டாலும், எப்ப கேட்டாலும் கொஞ்சம் பொறு, வாங்கித்தரேன், அப்படின்னு நானும் கல்யாணம் முடிஞ்சு வந்த நாள் முதலா சொல்லிட்டு தான் இருக்கீங்க… ஆனா ஒண்ணும் காணும்… எல்லாம் என் தலையெழுத்து…” என்று முகவாயை தோளில் இடித்துக் கொண்டவள் முனங்கிக்கொண்டே அடுக்களைக்குள் நுழைந்து கொண்டாள்.

பத்து வயது ரங்கநாயகி தூக்க கலக்கத்தில் அப்பாவும்

அம்மாவும் பேசுவதை கேட்டுக்கொண்டே எழுந்தவள், தன்னுடைய பாயை சுருட்டி வைத்துவிட்டு விளக்குமாற்றை எடுத்துக்கொண்டு வாசலை பெருக்க சென்றாள். பெருக்கி கோலம் போட்டு விட்டு உள்ளே வந்தவள் திண்ணையிலிருந்த அப்பாவிடம் “அப்பா உங்களுக்கு காப்பி எடுத்து வரவா…?” என்று புன்னகையுடன் கேட்டாள்.

“நீ பல் துலக்கி முகம் கழுவிட்டு, உனக்கும் எனக்கும் எடுத்துட்டு வாம்மா…”

அப்பா சொன்னபடியே தனக்கும் அப்பாவுக்கும் காப்பியை எடுத்து கொண்டு வந்து ஒரு டபராவை அவரிடம் கொடுத்துவிட்டு, அப்பாவின் அருகில் உட்கார்ந்து தனது காப்பியை குடிக்க ஆரம்பித்தாள். காப்பியை குடித்துவிட்டு தனது அருகில் உட்கார்ந்து காபியை குடிக்கும் தனது மகளை நீலகண்டன் பார்த்தார்.

தனது அம்மாவின் வார்ப்பாக இருக்கும் மகளை பார்க்கும் போதெல்லாம் தேவகிக்கு தனக்கும் இத்தனை ஒரு அழகு பெட்டகமா…? என்று எப்போதும் தோன்றும் எண்ணம் அன்றும் தோன்றியது. அழகு மட்டுமல்லாது பொறுமையிலும், புத்திசாலித்தனத்திலும் சிறந்து விளங்கிய அந்தச் சிறுமியை எப்போதும் சிடுசிடுக்க தேவகிக்கு எப்படித்தான் மனது வருகிறது

என்று அவருக்கு புரியவில்லை.

“கொடுங்கப்பா…உங்களுக்கு வேற எதும் வேணுமாப்பா…? என்று அப்பாவிடம் இருந்து டபராவை வாங்கிக் கொண்டாள்.

“இல்லம்மா, நீ பள்ளிக்கூடம் போக கிளம்பு… அம்மாடி அம்மா உன்னை திட்டிண்டே இருக்காளே… உனக்கு வருத்தமே இல்லையா…?”

“அம்மா தானே சொல்றா… அதை ஏன் திட்டுன்னு நினைக்கனும். அம்மாவுக்கு நிறைய ஆசை நடக்க மாட்டேங்குது. அதனால வர்ற கோபத்தை அப்படி காட்டிடறா… அதையெல்லாம் நான் பெருசா நினைக்க மாட்டேன். நீங்க கவலைப் படாதீங்க…” பொறுப்பாய் சொன்ன மகளைப் பார்த்து “நீ ரொம்ப நன்னா இருப்பேம்மா… அந்த அம்பாள் உனக்கு துணை இருப்பா…!” என்று மனதார வாழ்த்தினார்.

“***I don’t want fear of failure to stop me, doing what I real care about***”

***-Emma Watson***

சென்னையில் புகழ்பெற்ற ஹைகோர்ட் வக்கீல் ரங்கபாஷ்யத்தின் அலுவலகம் ஜார்ஜ் டவுனில் இருந்து, பாரீஸ்

கார்னர் செல்லும் மெயின் ரோட்டில் அலுவலகங்கள் இருக்கும் ஐந்து மாடி கட்டிடத்தில் இருந்தது. முதலாவது தளம் முழுவதும் அவரது அலுவலகம் இயங்கி வந்தது.

தனக்கு ஒதுக்கப் பட்ட கேபினில் ரங்கா கம்ப்யூட்டரில் ஒரு புதிய கேஸுக்கான முக்கிய குறிப்புகளை டைப் செய்து கொண்டு இருந்தாள்.

இன்னொரு ஜூனியர் வக்கீல் சரவணன், “என்ன ரங்கா ஈவினிங் அஞ்சு மணிக்கு எங்கேயோ போகணும்னு சொன்னே…? இன்னும் கிளம்பலையா…?”

“போகணும், ஒரு போன் எதிர் பார்த்திட்டு இருக்கேன். அது வந்ததும் கிளம்பிடுவேன்…”

“ஷாப்பிங்கா அல்லது சினிமாவா…?”

“உங்களுக்கு எல்லாம் இதை விட்டா வேற எதுவும் தெரியாதா…?” என்று கேட்ட ரங்கா ஒரு சாதாரண காட்டன் சுடிதாரில் இருந்தாள். கம்ப்யூட்டரை சட் டவுன் பண்ணிக்கொண்டே ஹாலுக்கு வந்த போன் காலை அட்டண்ட் செய்தவள், “வாசு, நான் ரெடியா இருக்கேன், நீ எங்க இருக்கே…?”

‘‘உங்க ஆபீஸ் வாசல்ல…”

“ஓகே… டூ மினிட்ஸ்யா…” என்றவள் “பை சரவண், மார்னிங் பார்க்கலாம்…” தோள்பையை எடுத்துக்கொண்டு கிளம்பிவிட்டாள். சரவணனும் வந்த நாள் முதலாய் பார்க்கிறான். எத்தனையோ பெண்கள் ஜூனியராக இருந்தாலும் அத்தனை பேரிலும் ரங்கா மட்டும் வித்தியாசமானவளாய் இருந்தாள்.

எப்போதும் ஒரு சாதாரண காட்டன் சுடிதார், எந்தவிதமான அலங்காரமோ, அலட்டலோ இல்லாத பேச்சு… பார்க்கும் பார்வையில் நேர்மையும், தைரியமும் பளீரிடும் அவளிடம் மட்டும் எல்லோருமே தேவையில்லாமல் பேச்சு வைத்துக் கொள்ள மாட்டார்கள். பார்வையாலேயே மற்றவர்களை தள்ளி நிறுத்தும் கலையை கற்று வைத்திருந்தாள்.

அவளைப் பற்றி ரங்கபாஷ்யத்தை தவிர வேறு யாருக்கும் அவ்வளவாய் தெரியாது. அவரும் குறிப்பிட்ட சில கேசுகளை அவளிடம் மட்டுமே கொடுப்பார். சரவணனும், அவளும் ஒரே சமயத்தில் தான் அவரிடம் ஜூனியராய் சேர்ந்தனர். ஆனாலும் அவர் அவளுக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுப்பது சில சமயம் அவனுக்கு பொறாமையாய் கூட இருக்கும்.

அதிலும் இப்போது வந்து அவளை பிக்கப் செய்த வாசு யார் என்பது கூட இங்கு உள்ள யாருக்கும் தெரியாது. தெரியாது என்பதை விட அவளிடம் அதை கேட்க, தைரியம் கிடையாது.

ஒரு தடவை இன்னொரு பெண் ஜூனியர் வாசுவை பார்த்து ரங்காவிடம் “இது யார்…?” என்று கேட்க, “ உனக்கு தெரிஞ்சு என்னவாக போகுது…?” என்று ரங்கா பதில் கேள்வி கேட்டு அவள் வாயை அடைத்தாள். அதில் இருந்து அவள் சொந்த விஷயத்தில் மூக்கை நுழைக்க எல்லோருக்கும் பயம்.

“ஏன்டா இவ்வளவு லேட்…?

“பாக்டரி வரை போயிருந்தேன். அங்கே ஒரு மிஷின் ரிப்பேர் பண்ண கொஞ்சம் டைம் ஆயிடுச்சு…”

“சரி பாட்டி கிளம்பி போய்ட்டாங்களா…?”

“ஆமா, கீர்த்தி கூட அனுப்பி வச்சிட்டேன்…”

“நீ என்ன இப்படியேவா பங்ஷனுக்கு வரப்போறே…?”

“இல்ல, நீ நேர நம்ம அப்பார்ட்மெண்ட் போ… பத்து நிமிஷம் டைம், அதுகுள்ள நீயும் பிரஷ் ஆகிட்டு வா… நானும் ரெடியாகி வந்துடறேன்…”

சொன்னபடியே தயாராகி வந்தவளை பார்த்த வாசு “ ஏய் இன்னைக்கு மழை தான் பெய்ய போகுது…!”

“ஏன்டா, ஏற்கனவே சென்னை ஒரு தடவை தீவு மாதிரி

மிதந்தது போதாதா...? அதை பார்த்த பிறகுமா உனக்கு மழையே கூப்பிடணும்னு தோணுது...?" என்று சிரித்தவளை பார்த்து...

"ஏன் ரங்கா, நீ ஏன் தினமும் இந்த மாதிரி டிரஸ் பண்ணக்கூடாது...? எப்ப பாரு ஒரு சாயம் போன காட்டன் சுடிதார்... இந்த மாதிரி கொஞ்சம் கலர்ஃபுல்லா டிரஸ்தான் போடேன்... பாட்டி ரொம்ப சந்தோஷப்படுவாங்க..."

"இதோப் பாரு, இன்னைக்கு பாட்டி விருது வாங்குற நிகழ்ச்சிக்கு போறதுனால அவங்களுக்கு கொஞ்சம் கவுரவமா இருக்கட்டுமேன்னு இந்த சுடிதார் போட்டுட்டு வந்திருக்கேன். இன்னும் ஏதாவது சொன்னேன் வை, அடுத்து என்ன பங்ஷன் போனாலும் அதே காட்டன் சுடிதார்தான்... ஒகேவா...?"

"அம்மா, பரதேவதை நான் வாயே திறக்கல, போதுமா...? வந்து சேர்ந்தியே, எனக்கு பிரண்ட்ன்னு..." என்று புலம்பிய வாசு, "இந்த ட்ராபிக்ல நாம போய் சேர்றதுக்குள்ள, விழா முடிஞ்சுடும்னு நினைக்கிறேன்..."

"அதெல்லாம் முடியாது... காம்பியர் பண்றவங்க ஒவ்வொருத்தரையா கூப்பிட்டு அவங்க வரலாறு, பூகோளம் எல்லாம் சொல்லி, அவங்க கிட்ட பேசி விருது வழங்க குறைந்தது அரை மணி நேரம் ஆகும். பதினோரு மணி வரை பங்ஷன்

இருக்கும். நாம் இன்னும் ஒரு மணி நேரத்துக்குள்ள போயிட மாட்டோம்…!”

“தெரியல, இந்த சென்னையில் மட்டும் டைம் பிக்ஸ் பண்ணி எங்கேயும் போக முடியாது…!” சொல்லிக்கொண்டே காரை சற்று விரைவாக செலுத்தினான்.

சென்னையில் மிகப்பெரிய உள் விளையாட்டு கலையரங்கம். மக்களின் வெள்ளத்திலும், பல விதமான விளக்குகளின் வெளிச்சத்திலும், பல முக்கிய பிரமுகர்களின் வருகையாலும், திணறிக்கொண்டிருந்தது. விதவிதமான பெண்கள், வித விதமான அலங்காரங்களில் சபையின் முன் வரிசைகளை அலங்கரிக்க அவர்களை வரவேற்று மேடையிலிருந்த விஜய் டிவி காம்பியர் ம.க.ப ஆனந்த் மற்றும் ரம்யா சுப்ரமணியன் பேசிக்கொண்டு இருந்தனர்.

“விஜய் டிவியும், ஃபெமினா புத்தகமும் இணைந்து நடத்தும் இந்த ஆண்டின் “மிகச்சிறந்த பெண்மணிகள்” விருதுகள் வழங்கும் விழாவிற்கு வந்திருக்கும் அனைவரையும் வாழ்த்தி வரவேற்கிறோம்… ஒவ்வொரு துறையிலும் சிறந்து விளங்கும் பெண்மணிகளை கவுரவித்து விருதுகள் வழங்கிக் கொண்டிருந்தனர்…

“அடுத்து நாம் அறிவிக்கப் போகும் விருது, ஒரு கௌரவ விருது என்று சொல்லலாம். இந்த விருதைப் பெற்றிருக்கும் பெண்மணி ஒரு மூத்த தலைமுறையை சேர்ந்தவர்… அவருக்கு இந்த விருதை அளிப்பதில் விஜய் டிவியும், பெமினாவும் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறது… இந்த விருதை அவர்களுக்கு வழங்க திருமதி.வசுந்தரா தேவி “கலைத் தாய்” பத்திரிக்கையின் ஆசிரியர், உரிமையாளர் அவர்களை அன்புடன் அழைக்கறேன்…

Mrs.ரங்கநாயகி… “ரங்கா புட் ப்ராடக்ட்ஸ்” என்ற நிறுவனத்தின் உரிமையாளர் அவர்களை மேடைக்கு அன்புடன் அழைக்கிறேன்…” ரம்யாவின் குரல் உச்ச ஸ்தானியில் ஒலிக்க கரகோஷம் விண்ணை பிளக்க… ரங்கநாயகி எழுந்து மேடைக்கு சென்றார்.

64 வயது பெண்மணி. இந்திய பெண்களுக்கே உரிய சராசரி உயரம். நல்ல களையான முகம். சிவந்த நிறம். பார்க்கும் போதே யாரும் கையை எடுத்து கும்பிட வைக்கும் முகத்தோற்றம். புன்னகைக்கும் உதடுகள். கருணை பொங்கும் விழிகள்… அரக்கு நிறத்தில் சாதாரண காட்டன் புடவை அணிந்து வந்த ரங்கநாயகியை, கையை பிடித்து அழைத்து கொண்டு வந்த இன்னொரு பெண் மேடை ஏற உதவி செய்தாள்.

“வணக்கம்” மேடை ஏறிய ரங்கநாயகி அங்கு குழுமி இருந்த

மக்களையும் மற்றும் விருந்தினர்களையும், விருது வழங்க நின்று கொண்டிருந்த வசுந்தரா தேவியையும் பார்த்து புன்னகைக்கும் விதமாய் கூறினார்.

“வணக்கம்மா...! உங்களைப் பற்றி நான் நிறைய கேள்விப்பட்டு இருக்கேன். ஆனால் இன்று தான் நேரில் பார்க்கும் வாய்ப்பு கிடைத்திருக்கிறது. அதற்காகவே இந்த விழாவை நடத்தும் விஜய் டிவிக்கும், பெமினாவிற்கும் நன்றி...!”என்று கூறிக்கொண்டே விருதை ரங்கநாயகியின் கையில் கொடுத்தார் வசுந்தரா தேவி...

சரியாக அந்த நேரத்தில் அரங்கத்தினுள் நுழைந்த வாசுவும், ரங்காவும் முன் வரிசையில் தங்களுக்கு என்று ஒதுக்கப்பட்டிருந்த இருக்கையில் வந்து அமர்ந்தனர்...

விருதை வாங்கிய ரங்கநாயகி “எல்லோருக்கும் வணக்கம். இந்த விருதை எனக்கு வழங்கி என்னை பெருமைப்படுத்திய விஜய் டிவிக்கும், ஃபெமினா புத்தகத்திற்கும் நன்றி. நானும் உங்களைப்போல ஒரு சாதாரண பெண் தான். இந்த விருது வாங்குமளவிற்கு பெரிதாக ஒன்றும் நான் சாதித்து விடவில்லை.

எல்லோருக்கும் உள்ளேயும் ஏதோ ஒரு திறமை ஒளிந்து கிடக்கின்றது. சந்தர்ப்பங்களும், சூழ்நிலைகளும் எப்போதும்

நமக்கு சாதகமாகவே இருப்பது இல்லை. அதை எதிர்த்து போராட வேண்டிய இடத்தில் போராடி, அமைதியாக செல்ல வேண்டிய இடத்தில் அமைதியாகி ஒரு சிலரே, தாங்கள் நினைத்ததை சாதிக்கிறார்கள்...

எனக்கும் அப்படி ஒரு வாய்ப்பை வழங்கியது எனது பேத்தி ரங்கா. அவள் தான் இப்படி ஒரு நிறுவனத்தை ஆரம்பித்து எனது கையில் கொடுத்து, இதை உங்களால் நடத்த முடியும் என்று தைரியத்தைக் கொடுத்து, நிர்வாகம் செய்ய வைத்தது அவள் தான். அடுத்து இதற்கு உறுதுணையாய் இருந்த அவளது நண்பன், எனது பேரன் வாசுதேவன். அந்த இருவரையும் இந்த மேடைக்கு அழைக்கிறேன்...!" என்று சொல்ல... அனைவரது கண்களும் யார் அவர்கள் என்று எதிர்பார்க்க...

ரம்யா "ப்ளீஸ் மிஸ் ரங்கா. அன்ட் மிஸ்டர். வாசு கம் ஆன் தி ஸ்டேஜ்..." என்று சத்தமாய் மைக்கில் அறிவிக்க, வேறு வழியில்லாது மேடையை நோக்கி இருவரும் சென்றனர்.

அடர்ந்த பச்சையும், நீலமும் கலந்த அனார்கலி மாடலில், வொர்க் வைத்த உயர்ரக ஜார்ஜெட் சுடிதாரும், அதற்கு பொருத்தமான காதணிகளும், வளையல்களும் அணிந்து, முதுகு வரை கத்தரித்து விட்டு இருந்த முடியை மேலே மட்டும் கொஞ்சமாய் கிளிப்புக்குள் அடக்கி, லூஸ் ஹேர் விட்டு மேலே

ஏறியவளை அரங்கமே வியந்து பார்த்தது.

ரங்கநாயகியின் சாயலில் அவர்களை விட நல்ல சிவந்த நிறத்துடன், பேசும் விழிகளும், தீர்க்கமான முகவாயும், கனிந்த உதடுகளும், ரங்கநாயகி சிறிய வயதில் இவளைப் போலவே மிக அழகாக இருந்திருக்க வேண்டும், என்று தோன்றும் விதமாய், வந்த ரங்கா பாட்டியை கட்டிப்பிடித்து “ வாழ்த்துக்கள் பாட்டி…” என்று சொன்னாள்.

அவளைத் தொடர்ந்து மேடையேறிய வாசுவும், “வாழ்த்துக்கள் பாட்டி…” என்று பாட்டியின் கையைப் பிடித்து குலுக்கினான்.

ரம்யா ரங்காவை பார்த்து “மேடம், நீங்கதான் இந்த விருது வாங்கறதுக்கு முக்கிய காரணம்னு உங்க பாட்டி சொல்றாங்க…?” இதை பத்தி நீங்க என்ன நினைக்கிறீங்க…?”

“இதுல நான் நினைக்கிறதுக்கோ, சொல்றதுக்கோ எதுவுமே இல்ல. சின்ன வயசுல இருந்து நான் அவங்கள பார்த்துக்கிட்டே இருக்கேன். சொல்லப்போனா அவங்கதான் என்னோட லைஃப்க்கு ஒரு பெரிய இன்ஸ்பிரேஷன்…

சிறிய அளவில் அவங்க தன்னுடைய வருமானத்துக்காக செய்துகொண்டிருந்த தொழிலை நானும், வாசுவும் சேர்ந்து கொஞ்சம் முறைப்படுத்தி, ஒரு பெயர் சூட்டி கம்பெனியா

ஆரம்பிச்சு கொடுத்தோம். அவ்வளவுதான், அதிலுள்ள தயாரிப்புக்கள் பற்றி எனக்கு எதுவுமே தெரியாது.

“ரங்கா புட் ப்ராடக்ட்ஸ்ல” ஒவ்வொரு பொருளும் அவங்களோட நேரடி கண்காணிப்பில் தயாரிக்கப்படுது. அதுதான் அந்த கம்பெனியின் வெற்றிக்கு காரணம். அந்த மாதிரியான ஒரு கடின உழைப்பு அவங்களோடது. அதுக்குத்தான் இந்த விருது.

இன்றைய காலகட்டத்துல பெண்களுக்கு உள்ள சுதந்திரம், இரண்டு தலைமுறை முந்தைய பெண்மணிகளுக்கு கிடையாது. அந்த காலத்திலேயே அவங்க தன்னுடைய வாழ்க்கையில உள்ள சவால்களை, தன்னுடைய தைரியத்தாலும், விவேகத்தாலும் சமாளிச்சவங்க… அந்தக் குணங்கள் அவரை இத்தகைய தகுதிக்கு உயர்த்தி இருக்கு. அவங்க என்னுடைய பாட்டி என்று சொல்வதில் நான் பெருமிதமும், மகிழ்ச்சியும் அடைகிறேன்…” ரங்கா முடித்ததும் கைத்தட்டல் அடங்க வெகு நேரம் ஆயிற்று.

‘‘மேம் உங்கள பத்தி…”

“நோ கமெண்ட்ஸ் ப்ளீஸ்…” என்றவள் அடுத்த நொடி பாட்டியை அணைத்து கன்னத்தில் முத்தமிட்டு, “ ரொம்ப சந்தோஷமா இருக்கு…” என்று கூறி பாட்டியையும் அழைத்துக்கொண்டு அவளும், வாசுவும் மேடையை விட்டு கீழே

இறங்கினர்.

அவர்கள் இறங்கி வரவும், கீழே அமர்ந்திருந்தவர்கள் நிறைய பேர் ரங்கநாயகிக்கு வாழ்த்து சொன்னனர். கொஞ்ச நேரம் இருந்து இன்னும் சிலர் விருது வாங்குவதை பார்த்தனர். ஒன்பது மணி ஆகியதும், ““பாட்டி இப்ப கிளம்பினால் தான் பத்து மணிக்குள் வீடு போய் சேரமுடியும்…!” என்று வாசு சொல்ல…

“அப்ப கீர்த்தியையும் கூட்டிட்டு கிளம்புவோம்…” என்று நால்வரும் கிளம்பினர். வாசுவின் அருகில் ரங்கா உட்கார்ந்து கொள்ள, பின் சீட்டில் பாட்டியும் கீர்த்தியும் அமர்ந்து வந்தனர்.

“ஏன் பாட்டி, அந்த வீட்டிலிருந்து யாரும் வரலையா…?”

“தாரா வரேன்னு தான் சொன்னா… ஆனா அவளுக்கு பஸ்ல வர முடியாதாம். கார் அனுப்பி வைங்க… அப்படின்னு சொன்னா…”

“ஏன் ஒரு கால் டாக்ஸி பிடிச்சு வர வேண்டியது தானே…?”

“கால் டாக்ஸி பிடிச்சா அவ தானே ரூபாய் கொடுக்கணும். நம்ம கார் அனுப்பி வச்சா அவளோட பணம் மிச்சமாகும் இல்லையா…?”

“ஏதேது நீங்க கூட அவளைப் பத்தி சரியா யோசிச்சு

சொல்றீங்க…?”

“எப்போதுமே எல்லாரையும் சரியாத்தான் புரிஞ்சு வச்சிருக்கேன். ஆனால் அவங்க கிட்ட அதை காட்டிக்க முடியாது… !”

“உங்களை திருத்தவே முடியாது. சொந்த பாட்டி விருது வாங்கறா… அதை ஆசையா வந்து பார்க்கிறதுக்கு கூட பைசா கணக்கு பாக்குறவங்களை… நீங்களும் காலங்காலமா கட்டிட்டு அழறீங்க…!”

‘‘ஏன் நீயும் அதைத்தானே செய்யறே…?”

“என்ன செய்யறது…? குடும்பத்துக்கு மூத்தவளாவும், பொறுப்பில்லாத தகப்பனுக்கு மகளாவும் பிறந்த பாவத்துக்கு என்னோட கடமையை நான் செய்து தானே ஆகணும்…”

“உனக்கு அப்பான்னா, எனக்கு அது மகன்… அப்ப ஒரு வகையில எனக்கும் அது கடமை தான்…”

“இல்ல பாட்டி… தப்பா சொல்றீங்க… ஒரு தாய் தன் குழந்தைகளை ஒரு குறிப்பிட்ட வயது வரைதான் காப்பாத்த கடமை பட்டு இருக்கா… அதே அந்த குழந்தைகள் வளர்ந்து பெரியவங்க ஆகி சம்பாதிக்கிற பருவம் வந்தா, கண்டிப்பா

தன்னை பெத்தவங்கள அவங்களோட வயதான காலத்தில் காப்பாத்தணும். இதுதான் நியாயம்…

அதை விட்டுட்டு பாசம்கிற போர்வையில தேவையில்லாத சுமையை நீங்க சுமக்கக் கூடாது. ஒருவகையில அது அவங்கள சோம்பேறி ஆக்கிடும். இதுதான் நம்ம வீட்ல நடந்தது. உங்க மகன் சோம்பேறியானதுக்கு நீங்களும் ஒரு காரணம்… அப்பவே இந்த குடும்ப பொறுப்பை நீங்க சுமக்காமல் இருந்திருந்தால் ஒருவேளை அப்பா தன் பொறுப்பை உணர்ந்து திருந்தி இருக்கலாம்…!

“தெரியல ரங்கா. உன்னளவுக்கு எனக்கு யோசிக்க தெரியல. நண்டு சிண்டுமாய் நீங்க மூணு பேர். எப்பவும் உங்க அப்பாவை குறை சொல்ற உங்க அம்மா… அவங்க ரெண்டு பேர் சண்டையும், சச்சரவும் தான் அவங்களுக்கு பிரதானமா இருந்ததே தவிர, உங்களை வளர்க்கணுமே, படிக்க வைக்கணுமே என்ற எண்ணமே அவங்களுக்கு இல்ல… நான் என் மகனுக்காக இந்த குடும்பத்தை பார்த்துக்கணும்னு நினைக்கல… உங்களுக்காக பார்த்துக்கணும்னு நினைச்சேன்…”

பேசிக்கொண்டு இருக்கையிலேயே ரங்காவின் போன் ஒலித்தது. பார்த்தால் வீட்டு தொலைபேசி எண். ஆன் செய்ததும் அம்மாவின் குரல் “டீ ரங்கா மோகன் குடிச்சுட்டு வண்டியோட்டி,

எதிர்த்தார் போல வந்த கார்ல மோதி அவனை ஆஸ்பத்திரியில சேர்த்திருக்காங்களாம்… இப்பதான் போன் வந்தது… எனக்கு கையும் ஓடல, காலும் ஓடலைடி… நீ கொஞ்சம் வாயேன்…”

“எந்த ஹாஸ்பிடல்…?”

“இங்க தான் வடபழனில உள்ள சார்லி ஹாஸ்பிட்டல்…”

“சரி அழாதே, நான் வர்றேன். நீ இப்ப அங்க தானே இருக்கே…?”

“ஆமாம்…”

“என்ன ரங்கா, உங்க அம்மா தானே போன்ல…?”

“என்னவாம்…?”

“அடுத்த பிரச்சனை. மோகன் குடிச்சுட்டு பைக் ஓட்டி யார் மீதோ மோதிட்டான் போல இருக்கு… சார்லி ஹாஸ்பிட்டல்ல சேர்த்து இருக்காங்களாம். அங்க வரச் சொல்லி போன்…”

“வாசு, எங்கேயாவது ஓரமா வண்டியை நிறுத்து. நான் இறங்கிக்கிறேன். நீ பாட்டியையும், கீர்த்தியையும் வீட்ல கொண்டு போய் விட்டுடு…”

“நீ எப்படி போவே…?”

“நான் ஒரு ஆட்டோ பிடிச்சு போய்க்கிறேன்…?!”

அவன் ஒரு ஓரமாய் காரை நிறுத்த, ரங்கா இறங்கிக் கொண்டாள்… கூடவே ரங்கநாயகியும் இறங்க, “என்ன பாட்டி நீங்களும் இறங்குறீங்க…?”

“இல்ல, நானும் வர்றேன். நீ தனியா போக வேண்டாம்…”

வாசுவும் அவளிடம் “நான் கீர்த்தியை அவள் வீட்டில் விட்டுவிட்டு ஹாஸ்பிட்டல் வந்துடறேன்…” என்று சொல்லிவிட்டு காரை கிளப்பினான்.

போய்க் கொண்டிருந்த ஒரு வெற்று ஆட்டோவை நிறுத்தி இருவரும் ஏறிக்கொண்டனர். “எங்கம்மா போகணும்…?”

“வடபழனி, சார்லி ஹாஸ்பிடல் போங்க…”

இவர்கள் சென்றபோது அம்மா மட்டும் தான் அங்கு இருந்தாள். இவளை பார்த்ததும் அழுதுகொண்டே, ““போலீஸ் வந்து விசாரிச்சு கேஸ் எழுதிட்டு போயிருக்காங்க… எனக்கு பயமா இருக்கு…?”

“ஏம்மா, பயப்படுறே…? உன் பெயரிலா கேஸ் எழுதி இருக்காங்க,,,? அவன் பெயர்ல தானே… ஒரு தடவை உள்ள போய்ட்டு வரட்டும் அப்பதான் உன் பையனுக்கு புத்தி வரும்…”

“என்னடி ரங்கா இப்படி சொல்ற…?”

“வேற என்னை என்ன செய்ய சொல்றே…? எத்தனை வேலை வாங்கி கொடுத்தாச்சு… ஒன்றுலேயாவது நிலைச்சு நின்னுருப்பானா…? பாட்டி அவனையும்தான் படிக்க வச்சாங்க… ஒழுங்கா படிச்சானா…? அப்பவே இல்லாத கெட்ட பழக்கம் எல்லாம் பழகிட்டு வந்தான். பாட்டி சத்தம் போட்டா, நீ அவனுக்கு சப்போர்ட் பண்ணி அவனை கெடுத்தே… இப்ப அனுபவி…!”

“உஷ், என்ன ரங்கா இது…? சொல்லிக் காட்டற நேரமா இது…?”

“சொல்லிக் காட்டலேன்னா இவங்க செய்யற தப்பு இவங்களுக்கு தெரியாது. அவங்க செய்யறது எப்பவும் சரின்னே நெனச்சு கிட்டே இருப்பாங்க…”

“நீ சொன்னதும் உடனே அவங்க திருந்திடுவாங்க அப்படின்னு நீ நினைக்கிறாயா…?”

“அந்த மாதிரி தப்பான நினைபெல்லாம் என்கிட்ட கிடையாது பாட்டி,. ஆனால் என்ன, என்னோட மனசு கொஞ்சம் ஆறிடும்…” என்று சொன்னவள், ரிசப்ஷன் கவுண்டர் சென்று பணம் எவ்வளவு கட்ட வேண்டும் என்று விசாரித்து அதை கட்டி விட்டு வந்தாள்.

அம்மாவின் கையில் கொஞ்சம் பணத்தை கொடுத்து “ பத்திரமா வச்சுக்கோ, உன் வீட்டுக்காரரர் கேட்கிறார்னு தாரை வார்த்துட்டு அப்புறம் எனக்கு போன் பண்ணாதே…?”

“எங்க ஆக்சிடென்ட் நடந்தது…? உனக்கு தெரியுமா…? அல்லது எந்த ஸ்டேஷன்லே இருந்து போலீஸ் வந்தாங்க…? அதாவது தெரியுமா…?”

“வடபழனி போலீஸ் ஸ்டேஷன். அப்படின்னு தான் சொன்னாங்க… ஏதோ ஒரு நம்பர் சொன்னாங்களே…?”

“R 8…ன்னு சொன்னாங்களா…?’

‘‘ஆமாம், அந்த நம்பர் தான் சொன்னாங்க…”

“பாட்டி, நீங்க இங்க இருங்க… நான் ஸ்டேஷன் போய் பார்த்துட்டு வந்துட்டேன்…!” சொல்லிக்கொண்டு இருக்கையிலே வாசுவும் வந்துவிட்டான். வாசுவை அழைத்துக்கொண்டு வடபழனி ஸ்டேஷன் நோக்கி சென்றாள்.

ஸ்டேஷனில் இருந்த இன்ஸ்பெக்டரிடம் “சார் நான் ரங்கா… ஹை கோர்ட் வக்கீல் ரங்கபாஷ்யம் சாரோட ஜூனியர்…” என்று அறிமுகப் படுத்தி கொண்டதும்…

“உட்காருங்க மேம்… நீங்களும் உக்காருங்க சார்…” என்று

இருவரையும் உட்கார சொன்னவர்…

“என்ன விஷயம் மேடம்…?”

“சார், இப்ப உங்க ஸ்டேஷன்ல இருந்து ஒரு கான்ஸ்டபிள் வடபழனி சார்லி ஹாஸ்பிடல் போய் ஒரு கேஸ் சீட் எழுதிட்டு வந்தாங்க இல்லையா, அதைப்பத்தி கொஞ்சம் விபரம் வேணும்…”

“ஓ… அந்த கேசா… ஆமா மேடம். தப்பு டூ வீலர் ஓட்டிட்டு வந்த அந்த பையன் மேல தான்… மோதியது ஒரு ஆடி கார் மேல… அந்த பையனுக்கு அடிபட்டு ஹாஸ்பிடல்ல அட்மிட் ஆகியிருந்தாலும், காரோட முன்பக்கம் பயங்கர சேதம்… அது போக ரோட்டில் போயிட்டு இருந்த ஒரு வயாதனவர் மேல மோதி அவருக்கு நல்லா அடி… அதனாலதான் அவர் கம்ப்ளைன்ட் கொடுத்திருக்கிறார். எப்படின்னாலும் நிறைய ரூபாய் கிளைம் பண்ணுவாருன்னு நினைக்கிறேன்…”

“அதான் சார், ஆள் யாருன்னு கொஞ்சம் அட்ரஸ் கொடுத்தால் நாங்க நேர்ல போய் பார்த்து பேசலாம்னு நினைக்கிறோம்… ப்ளீஸ் இந்த ஹெல்ப் கொஞ்சம் பண்ணுங்க…”

“நான் இந்த மாதிரி உதவி பண்ணக்கூடாது. ஆனாலும் சார் பெயர் நீங்க சொன்னதுனால இந்த உதவி செய்யறேன்…! என்றவர் அட்ரசை ஒரு பேப்பரில் குறித்துக் கொடுத்தார்.

“ரொம்ப தேங்க்ஸ் சார்...!” என்ற இருவரும் அங்கிருந்து கிளம்பினர்.

# அத்தியாயம் 2

புதுக்குடி கிராமத்து மேல்நிலை பள்ளி. பத்தாம் வகுப்பு ரிசல்ட் அன்று வந்திருந்தது. முதல் மதிப்பெண் சேதுராம். இரண்டாவது மதிப்பெண் ரங்கநாயகி... வெளியே நோட்டீஸ் போர்டில் எழுதி ஒட்டியிருக்க மதிப்பெண் பார்க்க வந்த ரங்கநாயகியும், நீலகண்டன் இருவரும் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தனர்.

“ரங்கா நீ மேலே என்ன படிக்க போறே?” கேட்டது சேது அவளுடைய நண்பன், ஒரே வகுப்பு. அந்த உரிமையில் அவன் கேட்க, பதில் சொல்ல முடியாமல் விழித்தாள் ரங்கநாயகி.

அப்பாவை பார்க்க, “மேலே படிக்கணும்னா பி.யூ.சி தான் படிக்கணும். அதுக்கு வெளியூர் போகணும். உன்னை வெளியூர் அனுப்பி படிக்க வைக்க அம்மா சம்மதிக்க மாட்டா...!” என்று தன் கருத்தை சொன்னார். ரங்கநாயகியின் படிப்புக்கு மூடு விழா நடத்தப் பட்டது.

“நான் டாக்டருக்கு படிக்கலாம்னு இருக்கேன்...” அவனாகவே சொன்னான் சேது.

நான்கு வருடங்கள் கடந்து ஒரு நாள் கோவிலில் சேதுவை

பார்த்தாள். “எப்படி இருக்க?” சேது கேட்க…

“ம்ம்…” தலை அசைத்தாள். அவன் பேசும் போது நகர முடியாமல் “நீ டாக்டருக்கு படிக்க சேர்ந்துட்டியா…?”

“ஆமாம். சென்னையில…”

“வாழ்த்துக்கள், நான் வர்றேன்…” கிராமம் ஆகையால் மற்றவர்கள் பேச இடம் கொடுக்கக் கூடாது என்று நகர்ந்து விட்டாள். ஆனாலும் வீட்டுக்குள் நுழையும் போதே அம்மாவின் அர்ச்சனை காதில் கேட்டது.

“இதுக்குத்தான் காலா காலத்துல மாப்பிள்ளை பாருங்கன்னு சொன்னேன். சின்ன பொண்ணு இன்னும் கொஞ்ச வருஷம் போகட்டும்னு சாக்கு வேற, கையில இருக்கத வெச்சு கரையேத்தி விட வேண்டியது தானே…” அப்பாவுக்கும் சேர்த்து கதா காலட்சேபம் நடத்தி கொண்டு இருந்தாள்.

விளைவு அடுத்த இரண்டு மாதங்களில் ஒரு சுபயோக தினத்தில் ராகவமூர்த்தி என்ற ராகவனுக்கு திருமதியானாள்.

☆☆☆☆☆

"*Every moment wasted looking back. Keeps us from moving forward.*"

*-Hillary Rodham Clinton.*

சென்னையில் மிகவும் எக்ஸ்பென்சிவ் என்று சொல்லப்படும் மிகக் குறிப்பிட்ட இடங்களில் ஒன்றான புகழ் பெற்ற அடையார் ருக்மணி நகர். பணத்தில் மிதப்பவர்கள் வாழும் சொர்க்கபூமி.

'ப்ருத்விதா' பெயருக்கு ஏற்றால் போல் கம்பீரத்தோடு நவீன விதமாக வடிவமைக்கப்பட்ட பங்களா. அதன் வாசலில் தங்கள் காரில் வந்து இறங்கிய ரங்காவும், வாசுவும் அந்த பங்களாவை பார்த்து பிரமித்து போயினர்.

"என்ன ரங்கா பார்த்தால் பெரிய பணக்காரன் போல தெரியுது. நம்மளை உள்ளேயாவது விடுவாங்களா…?"

"ம்ம்ம்…"

"என்ன ம்ம்ம்ம்…?"

"நீ சொன்னதத்தான் நானும் யோசிச்சுட்டு இருக்கேன்…"

"அந்த இன்ஸ்பெக்டர் கொடுத்த அட்ரஸ் இதுதானா…?"

"ஆமாம். பெயர் உபேந்திரான்னு போட்டு இருக்கு…"

“சரி, வா, அந்த வாட்ச்மேன் கிட்ட கேட்டுப் பார்ப்போம்…”

“ஏன்பா, உபேந்திரா சார் வீடு இதுதானா…?” வாசு கேட்க அவன் இவனை பார்த்த பார்வையில் ‘அடக் கிறுக்கா, பங்களாவைப்போய் வீடுன்னு சொல்ற கேணைய நான் இப்பதான் பார்க்கிறேன்…’ என்ற செய்தி தெரிந்தது.

“உபேந்திரா சார் மாளிகைதான் இது. உங்களுக்கு என்ன வேணும்…?”

“சார பார்க்கணும்…”

“அதெல்லாம் வீட்ல யாரையும் பார்க்க மாட்டார். ஆபீஸ்ல நீங்க அப்பாயிண்ட்மெண்ட் வாங்கிட்டு போய் பாருங்க…”

“எங்களுக்கும் வேலை இருக்கு. அதனால காலையிலே வீட்டில பாத்துட்டு போயிடலாம்னு வந்தோம். கொஞ்சம் போன் பண்ணி கேட்டு சொல்லுங்களேன்…”

“க்யா… அரே சார் உங்களுக்கு நான் இங்க செக்யூரிட்டியா இருக்கிறது பிடிக்கலையா…? எனக்கு போன் பண்ணி கேட்டு யாரையும் உள்ளே அனுப்புற அதிகாரம் கிடையாது…”

இவர்கள் வழக்கடித்துக் கொண்டிருந்த வேளையில் இங் ப்ளூ கலர் ஆடி பாரின் கார் ஒன்று விரைந்து வந்து கேட் அருகில்

நிற்க, இவர்களிடம் பேசிக்கொண்டிருந்த கூர்க்கா அடித்து பிடித்து கேட்டை திறக்க ஓடினான். கேட் திறந்ததும் சர்ரென்று அந்த கார் உள்ளே நுழைந்துவிட, பின்னாலேயே கேட்டை சாத்தினான்.

அரை பர்லாங் நடைபாதையில் விருட்டென்று வழுக்கிக்கொண்டு சென்ற காரை போர்டிகோவில் நிறுத்திய வாலிபன் காரை விட்டு இறங்கியதும், கையசைத்து கூர்க்காவை அழைத்தான்.

"என்ன மான்சிங் யார் அவங்க…?"

"தெரியல சாப். அப்பவே வந்து உங்கள பாக்கணும்னு கேட்டுட்டு இருக்காங்க…?"

"எதுக்கு…?"

"அதை அவங்க சொல்லலை…?"

கையை திருப்பி மணியை பார்த்தவன் "சரி அவங்கள உள்ள வரச்சொல்…" என்று கூறி விட்டு படியேறினான்.

வெளியில் விரைந்து வந்த மான்சிங் அவர்கள் எங்கே என்று பார்த்தான். சற்று தள்ளி நின்று போனில் பேசி கொண்டு இருந்த ரங்காவிடம் சென்று "சார் உங்கள உள்ள வரச்சொன்னார்…" என்று அவர்களை அழைத்துக் கொண்டு சென்று விசிட்டர்ஸ் ஹாலில்

உட்கார வைத்து விட்டு சென்று விட்டான்.

வாசு பிரமிப்புடன் அந்த ஹாலை பார்த்துக்கொண்டு இருந்தான். மிக உயரமான மேற்கூரையும், அதில் இருந்து தொங்கும் லஸ்தர் விளக்குகளும் சுவரில் மாட்டப் பட்டிருந்த விலை உயர்ந்த பிக்காசோ ஓவியங்களும், மாளிகையின் சொந்தக்காரரின் ரசனையை பறைசாற்றின. ரங்கா எதையும் கவனிக்காமல் போனை நோண்டிக் கொண்டிருந்தாள். எங்கோ குயில் ஒன்று கூவும் ஒலி கேட்டு தலையை நிமிர்த்தி பார்த்தாள்.

ஏதோ ஒரு கடிகாரத்தில் இருந்து வந்த ஒலி அது. இவள் நிமிர்ந்து பார்க்கவும் மாடிப்படியில் ஒருவன் இறங்கி வருவது தெரிந்தது. இவன் யாராக இருக்கும் என்று எண்ணுகையிலே, அவன் இறங்கி வந்து எதிரே இருந்த சோபாவில் கால் மேல் காலிட்டு அமர்ந்து “எஸ், வாட் கேன் ஐ டு பார் யூ…?”

அவன் கேட்டதும் சற்று திகைத்த ரங்கா அப்படியே அவனை பார்வையிட “மிஸ்டர் உபேந்திரா…?” வாசுதான் கேட்டான்.

“எஸ்…”

அவன் பார்வையும், பேச்சும், தோரணையும் இருவரையும் வாயடைக்க செய்தது. முதலில் சுதாரித்துக் கொண்ட வாசு “சார் நேத்து உங்க கார்ல ஒரு பைக்காரன் மோதினான் இல்லையா…?

அது விஷயமா பேச வந்திருக்கோம்.

"அதுல பேச என்ன இருக்கு...? அதான் நேத்தே கம்பளைனட் பண்ணியாச்சே...!"

"சார் இவங்க தான் அந்த பையனோட சிஸ்டர். கம்ப்ளைன்ட் வேண்டாம். என்ன காம்பன்சேசன் எதிர்பார்க்கிறீர்களோ அதை கொடுத்திடலாம்னு நினைக்கிறோம்..." வாசு தான் பேசினான்.

பதிலே பேசவில்லை உபேந்திரா... அவன் வந்ததுமே அவர்கள் இருவரையும் பார்வையிட்டான். வாசுவை ஒரு பார்வையிலே கணித்தவன், ரங்காவை பார்வையிட்டான். மிக மிக சாதாரண காட்டன் சுடிதார். கழுத்தில் ஒரு மெல்லிய செயின். காதுகளில் ஒரு சிறிய ரிங். இதைத் தவிர வேறு எந்த வித அலங்காரமும் இல்லை. வந்ததில் இருந்து அவள் வாயை திறக்கவும் இல்லை. பார்த்தால் பயந்த சுபாவமாகவும் தெரியவில்லை. ஒரு வேளை ஊமையோ...? அதனால் தான் இவனை எடுபிடியாக கூட்டி வந்து இருக்கிறாளோ? பலவித எண்ணங்கள் அவளைப் பற்றி ஓட...

"மிஸ்டர் நீங்க இவங்களுக்கு...? பார்வை என்னவோ அவள் மேலேயே...

"பிரதர்..."

“இல்லை வந்ததில் இருந்து நீங்கதான் பேசிட்டு இருக்கீங்க…? ஒரு வேளை அவங்களுக்கு பேச வரதா?” எள்ளலாக கேட்டான்.

‘டேய் இவ வாயை திறந்தா தெரியும் சேதி…’ என்று மனதுக்குள் கவுண்ட்டர் கொடுத்தவன், பதில் சொல்வதற்குள்…

“இப்ப யார் பேசினா என்ன? உங்களுக்கு விசயம் தானே தெரியணும்…” குயில் கூவியதோ என்று ஒரு நொடி அவனுக்கு தோன்றியது.

“என்னோட கார் மேல மோதியவன் உங்களுக்கு என்ன வேணும்…?”

“என்னோட பிரதர் தான்…” இனிமையாக இருந்தாலும் அழுத்தமாக இருந்தது அவளது குரல்.

“ஓஹ்… அவன் என்னவோ காம்பன்சேசன் எல்லாம் தர முடியாதுன்னு சொன்னான்…”

“அவன் ஏதோ தெரியாம பேசிட்டான். நீங்க எவ்வளவுன்னு சொல்லுங்க… நான் தந்திடறேன்…”

“எனக்கென்னவோ உங்க பிரதர் சொன்னதுதான் சரின்னு தோணுது…!” அவன் குரலில் ஒரு புரியாத பாவனை இருந்தது.

‘நம்மதான் தரேன்னு சொல்றோமே. பிறகு என்ன இவனுக்கு...?’ என்று நினைத்தவள்...

“நீங்க சொல்லுங்க அமௌண்ட் என்னன்னு...?” கத்தரித்தார் போல் பேசினாள்.

“பைவ்...”

“ஐந்தாயிரமா...!”

“என்னை பார்த்தா உங்களுக்கு என்ன அவ்வளவு சீப்பாவா தெரியுது...?”

“சாரி, நான் யாரையும் பார்த்து, எதையும் ஜட்ஜ் பண்றது இல்ல... உங்க காரோட டேமேஜுக்கும், உங்களுக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறதா நீங்க நினைக்கிறீங்க...?”

அவளோட அலட்சியமான பதிலில் டெம்ப்ட் ஆனவன், அதை வெளியில் காட்டிக் கொள்ளாது “பைவ் லாக்ஸ்...” என்றான்.

“வாட் பைவ் லாக்ஸ்...” என்று திகைப்பு கலந்த குரலில் அவள் சொல்ல, ‘இதைத்தானேடி அப்போது பூடகமாய் சொன்னேன்...’ என்ற பாவனையை கண்களில் தேக்கி, புருவத்தை உயர்த்தி நமட்டு சிரிப்புடன் இருந்தவனை பார்த்து...

“என்ன டேமேஜுக்கு அமௌண்ட் சொல்றீங்களா...? அல்லது

இத வச்சு புது கார் வாங்கிடலாம்னு பிளான் பண்றீங்களா…?” அவள் கேட்டதும் அடக்க முடியாமல் “ஹா ஹா…” என்று சிரித்தவனைப் பார்த்து…

“இப்ப நான் என்ன ஜோக்கா சொன்னேன்…? சிரிக்கறதுக்கு…!”

“உனக்கு எப்படியோ…? எனக்கு இதுதான் இந்த இயர்லயே பெஸ்ட் ஜோக்…!” என்றவனை புரியாமல் பார்த்தாள்.

அவள் பார்வையை பார்த்து “உன் தம்பி இடிச்ச வண்டியோட விலை என்னன்னு தெரியுமா…? நைன்டி லேக்ஸ்…”

“நைன்டி லேக்ஸ்…”

“அந்த வண்டிய ரீ சேல் பண்ணினா எனக்கு 20 லாக்ஸ் கூட கிடைக்காது. சோ நான் கேட்கிற அமௌண்ட் ரொம்ப சிறியது…”

“சின்ன அமௌண்ட்டா…?”

“யா…”

“சார், ரிப்பேர் பண்றதுக்கு என்ன செலவு ஆகுமோ அதை மட்டும் சொல்லுங்க…”

“அதை மட்டும்தான் சொல்றேன். பாரின் கார் அதனால பார்ட்ஸ் கிடைக்கிறது கஷ்டம். எனக்கு டூப்ளிக்கெட் யூஸ் பண்றது

பிடிக்காது. சோ பார்ட்ஸ் வெளிநாட்டுல இருந்து வரவழைச்சு அப்புறம் ரிப்பேர் பண்ணனும்…”

“கார் இந்தியா ரோட்லதான ஓடுது…” அவள் கேட்ட கேள்வியில் அப்படி ஒரு எகத்தாளம்…

“மே பி அது என்னோட இஷ்டம்…” இம்முறை அவனது பதிலும் விடாக்கண்டனாக…

“சார் எங்களால அவ்வளவு தர முடியாது…”

“ஓகே… அது உங்க இஷ்டம்…!” தோள்களை குலுக்கினான். அடுத்த நொடி எழுந்து நின்றவனை ஊன்றி பார்த்தாள். எதற்கும் அலட்டிக் கொள்ளாத முகபாவத்துடன் உள்ளே செல்ல திரும்பியவனை…

“ஹலோ, ஒன்றும் சொல்லாமல் போனால் என்ன அர்த்தம்…?”

மணிக்கட்டை திருப்பி பார்த்தவன் “உங்களுக்கு வேணா வேலை இல்லாமல் இருக்கலாம். எனக்கு நிறைய வேலை இருக்கு. உங்களால முடிஞ்சா அந்த பணத்தை கொடுத்துட்டு கேஸ் இல்லாமல் பண்ணிக்கோங்க. இல்லைன்னா கோர்ட்ல பாத்துக்கலாம்…!”

“என்ன சார் கோர்ட்ன்னா நான் பயந்திடுவேன்னு

நினைக்கிறீங்களா…! அங்கேயே பார்த்துக்கலாம்…” என்றவள் திரும்பி பாராமல் விடு விடென்று வாசலை நோக்கி நடந்தாள்.

“ரங்கா, ஏய் ரங்கா, ஒரு நிமிஷம் நில்லு…” என்று கூறிக் கொண்டே வாசு அவள் பின்னால் சென்றான்.

‘ரங்கா… இது என்ன பாய் நேம் மாதிரி இருக்கு…’ தனக்குள் நினைத்தவன் ‘கிரேசி கர்ல்…’ என்று சொல்லிவிட்டு, படியேறினான்.

“பணம் கேட்கிறதுக்கு ஒரு அளவு இல்லையா…? என்ன நினைச்சுட்டு இருக்கான் அந்த ஆள்…?” என்று பொரிந்து கொண்டு வந்தவளை…

“கொஞ்சம் சும்மா வா ரங்கா. அவர் கிட்ட கொஞ்சம் தயவா நம்ம நிலமையை சொல்லி இருந்தா அவர் கொஞ்சம் குறைத்து கேட்டு இருப்பார்…”

“தயவான்னா எப்படி? அய்யா, அரசே எங்க கிட்ட ஒண்ணுமே கிடையாது, அப்படின்னு ஒப்பாரி வைக்கணுமா என்ன…?”

“நீ இப்படி பேசுறதை எப்பதான் மாத்திக்க போறியோ…?”

“ஏன் இப்ப நான் பேசுறதற்கு என்ன…?”

“ரங்கா, ப்ளீஸ் புரிஞ்சுக்கோ. நமக்கு காரியம் ஆகணும்னா நாம கொஞ்சம் பணிவா, சாரி சாரி. முறைக்காத, கொஞ்சம் பொலைட்டா பேசினா தப்பு இல்ல…”

“என்னால முடியாது. தப்பு பண்ணுனா கூட அந்த தப்புக்கு தண்டனை என்ன உண்டோ, அதை வேணா ஏத்துக்குவேனே தவிர அப்பக்கூட எனக்கு தயவா பேசுறது பிடிக்காது. எதுக்கு பேசணும்? அவங்க கிட்ட கெஞ்சணும் அப்படின்னு நான் நினைப்பேன். இப்பவும் அவன் செஞ்ச தப்புக்கு நியாயமான அமௌண்ட் கேட்டு இருந்தா கொடுக்கத்தான் செய்வேன்…

ஒரு நிமிஷம் யோசி. அவனுக்கு அடிபட்டு ஹாஸ்பிடல்ல இருக்கான். அதுக்கு வேற எப்படியும் ஒரு ஐம்பதாயிரம் வர ஆகும். அதுவும் ஒரு வகையில நமக்கு அது நஷ்டம்தான். அப்ப அதை யார்கிட்ட கேட்கிறது…? அவர் கோடீஸ்வரரா இருக்கலாம். அதுக்காக எல்லார்கிட்டயும் கோடிஸ்வரர் ரேஞ்சுல நஷ்ட ஈடு கேட்கக் கூடாது. இந்த அடிப்படை விஷயம் கூட புரியாமல் பேசுற அந்த ஆள் கிட்ட இப்படித்தான் என்னால பேச முடியும். நீ பேசாம வா. கோர்ட்டுல பார்த்துக்கலாம்…” இருவரும் வீடு திரும்பினர்.

“ரங்கா நான் கம்பெனிக்கு போகணும். நீ உன்னோட டூவீலரில்

போயிடுவேல்ல…”

“ஓகே. ஈவினிங் பாக்கலாம்…” தனது அப்பார்ட்மெண்ட்க்குள் நுழைந்தாள். இவளை எதிர்பார்த்து இருந்த ரங்கநாயகி “வா முதல்ல சாப்பிடு…”

“என்ன பாட்டி நீங்க இன்னைக்கு உங்க கம்பெனி போகலை…?”

“இல்லடா, நான் கீர்த்தி கிட்ட செய்யவேண்டிய வேலையை சொல்லி அனுப்பி இருக்கேன். அவளும் வாசுவும் பார்த்துக்குவாங்க… நீ போன விஷயம் என்னாச்சு…?”

கட்டைவிரலை கவுத்தி காட்டியவள் “ ஊத்திக்கிச்சு…”

“ஊத்திக்கிற அளவுக்கு நீ என்ன பண்ணுனே…?”

“பாட்டி இது உங்களுக்கே ஓவரா தெரியல…?”

சிரித்த ரங்கநாயகி “சரி சொல்லு. என்ன நடந்தது…?”

“முதல்ல இருந்து விவரிச்சு சொல்லணுமா, அல்லது ஒரு வரியில சொல்லணுமா…?”

“அது உன் இஷ்டம்…”

“கோர்ட்ல பாத்துக்கலாம்...”

“அப்படின்னு அவர் சொன்னாரா...?”

“ம்ம்ம்...”

“ஏன் நீ நம்ம நிலைமையை சொன்னியா...?”

“வாட்...? நம்ம நிலைமையை எதுக்கு அந்த ஆள் கிட்ட சொல்லணும். கோர்ட், கேசுன்னு போனா நேரம் விரயம் ஆகும். கோர்ட்ல சொல்ற தொகையைவிட கொஞ்சம் அதிகமா இருந்தாலும் பரவாயில்ல... அவுட் ஆப் தி கோர்ட், நாம செட்டில் பண்ணிக்கலாம் அப்படின்னு நெனச்சேன். அந்த ஆள் அதுக்கு சரிப்பட மாட்டான்...

என்ன கொஞ்சம் இந்த கேசுக்கும் வேலை பார்க்கணும். வேற கேசுக்கு ஆஜரான பணம் கிடைக்கும். இதுக்கு அதுவும் கிடையாது. என்னோட நேரம் தான் வேஸ்ட்டா போகும். ஓகே... பாத்துக்கலாம் பாட்டி. நான் கிளம்பறேன். இப்பவே ஆபீசுக்கு லேட் ஆச்சு. ஒன் அவர் தான் பர்மிஷன்... அதுக்குள்ள நான் ஆபீஸ்ல இருக்கணும்...” அடித்து பிடித்து கிளம்பியவள் தனது ஹேண்ட் பேக்கை எடுத்துக்கொண்டு விரைந்தாள்.

“நீங்க எங்க இருக்கீங்க...?” யாருடனோ பேசிக் கொண்டே

அவள் படிகளில் இறங்கிவிட, ரங்கநாயகி கதவை சாத்தினார்.

‘ச்ச… என்ன இது…? டெல்லி ட்ராபிக் ஜாஸ்தினு பார்த்தா மெட்ராஸ் ட்ராபிக் அதை தூக்கி சாப்பிட்டுரும் போல இருக்கு.’ மனசுக்குள் அலுத்துக் கொண்ட உபேந்திரா ஸ்டேரிங் வீலில் கைவிரல்களால் தாளம் போட்டுக்கொண்டே, சுற்றி நின்ற ட்ராபிக்கை வேடிக்கை பார்த்தான்.

இவனது வலதுபுறம் ஒரு வரிசை தாண்டி டூவீலரில் இருந்த ஒரு பெண்ணை வேடிக்கை பார்க்க, அவள் அணிந்திருந்த சுடிதார் எங்கேயோ பார்த்தார் போல் இருந்தது… தற்செயலாக அவள் ஹெல்மெட்டை கழட்டி விட்டு செல்போன் பேச, அவள் முகம் தெரிந்தது.

“அட பாய்…” என்று வாய் விட்டே சொன்னவன், அவளை மீண்டும் பார்த்தான். அதற்குள் சிக்னல் விழுந்துவிடும் என்று தெரிந்து, போனை ஸ்கூட்டியின் முன்புறம் உள்ள பாகில் வைத்துவிட்டு, அவசரமாய் ஹெல்மெட்டை அணிந்து வண்டியை கிளப்பினாள்.

இவனும் அவசரமாய் காரை கிளப்பி தனது புதிய அலுவலகத்தை நோக்கி சென்றான். ரங்காவின் அலுவலகத்திலிருந்து சரியாக ஒரு கிலோமீட்டர் தள்ளி உள்ள ஒரு பத்து மாடி கட்டிடத்தில் இவனது அலுவலகம் இருந்தது. ஆறாவது

தளம் முழுவதும் இவனது அலுவலகம்.

“சார், நீங்க இங்க வொர்க் பண்றதுக்கு உள்ள பிராசஸ் எல்லாம் முடிச்சாச்சு… கமிங் மண்டேல இருந்து நீங்க அட்டென்ட் பண்ணலாம்…” உதவியாளர் பாபு சொல்ல…

“வேற அப்பாயின்மென்ட்ஸ்…”

“இன்றைக்கு போக்குவரத்து துறை அமைச்சர் அப்பாயிண்ட்மெண்ட் கேட்டிருக்கார்… ஈவினிங் பைவ் ஒ கிளாக் அவரோட கெஸ்ட் ஹவுஸ்ல…” அடுத்து என்ன என்பது போல் பார்த்தவனிடம்…

“சார் நாளைக்கு ஈவினிங் ரங்கபாஷ்யம் சார் வீட்ல ஒரு சின்ன பங்க்ஷன். அதுக்கு நீங்க கட்டாயம் போகணும். நினைவு படுத்த சொல்லி உங்க தாத்தா போன் பண்ணினார்…”

“பார்க்கலாம்…”

“நீங்க அப்படித்தான் சொல்வீங்கன்னும் அவர் சொன்னார். நீங்க போகலைன்னா அவரை கூட்டிட்டு போக சொல்லி என் கிட்ட சொல்லி இருக்கிறார்…”

“ஓ.கே… அப்ப நாளைக்கு ஈவினிங் நீ என்கூட அந்த பங்ஷனுக்கு வா. அது என்ன பங்க்ஷன்…? அதுக்கு எந்த மாதிரி

கிப்ட் பண்ணனும். எல்லாம் முடிவு பண்ணி நீயே வாங்கி வச்சிரு. இப்ப நான் வெளியில போயிட்டு ஈவினிங் போன் பண்றேன். மினிஸ்டர் கெஸ்ட் ஹவுஸுக்கு வந்துடு…”

அவசர அவசரமாய் உள்ளே நுழைந்த ரங்காவை பார்த்த இன்னொரு ஜூனியர் “என்ன ரங்கா பர்மிஷனா…!”

“இல்ல. லீவ்…” என்று சிரித்துக் கொண்டே பதில் சொல்ல…

“இந்த நக்கல் தானே வேண்டாங்கிறது…”

“அது இல்லைன்னா இந்த ரங்காவே இல்ல…” என்று சொன்னவள், தனது இடத்தில் அமர்ந்து சிஸ்டத்தை ஆன் செய்தாள். அதற்குள் அவள் மேஜையில் புதிதாக இரண்டு கேஸ் கட்டுகள் இருப்பதை பார்த்தவள், அடுத்து இருந்த ஜூனியரிடம், “இதை யார் கொண்டு வந்து வெச்சாங்க…”

“ஆபீஸ் பாய் தான்… ரங்கா நாளைக்கு நம்ம சீனியரோட ஃபங்ஷனுக்கு நீ என்ன பண்ண போறே…?”

“தெரியல. நீங்க எல்லாரும் கிப்ட் வாங்கிட்டீங்களா…?”

“இல்ல. அமௌன்ட் கலெக்ட் பண்ணி வச்சிருக்கோம். ஈவினிங் போய் வாங்கணும். நீ வாயேன். செலக்ட் பண்ண உதவியா இருக்கும்…”

“ஓகே. ஷேர் எவ்வளவுனு சொல்லுங்க. நானும் தர்றேன்…”

“அது சரிதான். ஆனால் ஈவ்னிங் நீ வர்றேன்னு சொல்லு… அப்பதான் இதுக்கு நான் ஒத்துக்க முடியும்…”

அவளுடைய வற்புறுத்தல் தாங்காமல் “ஓகே. வர்றேன். ஆனால் சீக்கிரம் பர்ச்சேஸ் முடிச்சு என்னை விட்டுறணும்…”

“டன். நான் இந்த விஷயத்தை இப்பவே நம்ம மத்த பிரண்ட்ஸ் கிட்ட சொல்லிடறேன்…”

ரங்கா, வினோ, சரவணன், மகேஷ், லீலா இன்னும் இருவர் என்று ஒரு கும்பலே கிளம்பி அந்த நகைக்கடைக்குள் நுழைந்தனர். “மோதிரம் பார்க்கணும்…” எதிர்பட்ட விற்பனை பெண்ணிடம் சொல்ல அவள் விதம் விதமான டிசைனில் மோதிரங்களை காட்டினாள்.

“பவித்திர மோதிரம் கொடுங்க…” அந்தப் பெண் முழிக்க… அருகில் இருந்த மற்றொருவர் “என்ன மாதிரி பங்சன்…?” என்று கேட்க, “சஷ்டியப்ப பூர்த்தி…” என்ற பதிலில் “அறுபதாம் கல்யாணம்” என்று புரிந்து கொண்டவர்…

அதற்கு ஏற்றவாறு அவர் மோதிரம் எடுத்து தரவும், இந்த டிசைனுக்கு பெயர்தான் அது என்று விளக்கமும் கூறினார்.

அதையே இருவருக்கும் வாங்கிக் கொண்டு கிளம்பினர். “ஏய் நாளைக்கு சாரிதானே…?” என்று லீலா கேட்க…

“ஆமாம்…” என்று மற்றவர்களும் சம்மதம் தெரிவித்தனர். “வினோ நாளைக்கு பார்க்கலாம்…” என்று சொல்லிக் கொண்டு கிளம்பிய ரங்கா ஹாஸ்பிடலில் போய் தம்பியை பார்த்து விட்டு வீடு வந்து சேரும் போது இரவு ஒன்பது மணி. வீட்டில் பாட்டிக்கு துணையாக இருந்த வாசுவிடம் “நாளைக்கு ஈவினிங் என் கூட எங்க சீனியர் வீட்டு பங்ஷனுக்கு வா…”

“நான் எதுக்குடி…?”

“வேற எதுக்கு…? டிரைவர் வேலைக்கு தான்…”

“அதுக்கு வேற ஆளைப் பாரு…”

“டேய் ரொம்ப பண்ணாத. நானே அலைஞ்சுட்டு டயர்டா வந்திருக்கேன். ஏதாவது பேசினே மவனே என் கிட்ட அடி வாங்கிட்டு தான் போவ…”

“ஏன் ரங்கா வந்ததும் வராததுமா அவன் கிட்ட மல்லுக்கட்டற…?”

“அப்ப உங்க வளர்ப்பு பேரன் கிட்ட சொல்லி வைங்க. என்ன பத்தி தான் தெரியும் இல்ல…? உங்களுக்கு என்ன இருந்தாலும்

அவன் தான் உசத்தி இல்லையா...?”

“இல்லை. எனக்கு நீதான் முதல்ல. அப்புறம் தான் யாருமே...” தயங்காமல் அடுத்த நொடி சொன்ன பாட்டியை அணைத்துக் கொண்டாள்.

மறுநாள் பாட்டியின் ஆசைப்படி கிளம்பிய ரங்கா குங்குமக் கலரில் இலைப்பச்சை பார்டர் கொண்ட மைசூர் சில்க் பட்டில் இருந்தாள். கழுத்தில் ரோஸ் கலர் பெரிய சதுரக் கற்கள் வைத்த, ஒற்றை வரிசை அட்டிகையும், காதுகளில், டிராப்சும், ஒரு கையில் ஒற்றை வளையலும், இன்னொரு கையில் வாட்சும் அணிந்து, இடைவரை அடர்த்தியாய் இருந்த கூந்தலை பின்னி அதில் சிறிதளவு பூவும் வைத்து கிளம்பி இருந்தாள். இந்த அலங்காரம் செய்வதற்கே பாட்டி ஒரு மணி நேரம் அவளிடம் தர்க்கம் செய்ய வேண்டி இருந்தது.

கண்ணாடியில் தன்னை ஒரு நிமிடம் பார்த்தவளுக்கு அது தான் தானா என்று இருந்தது. வட்ட முகமும் அதில் நீந்தும் பெரிய விழிகளும், கூர் நாசியும், சிவந்த அதரங்களும், அவளை பேரழகியாக காட்ட, இது நமக்கு சரிப்படாது என்று நினைத்தவள் டிரஸ் மாற்றும் எண்ணத்துடன், சுடிதார் ஒன்றை கையில் எடுக்க, அங்கு வந்த பாட்டி...

“எனக்கு தெரியும் இப்படித்தான் நீ ஏதாவது வேண்டாத வேலை பண்ணுவேன்னு… ஃபங்ஷனுக்கு போகும் போது இப்படி போனால்தான் நல்லா இருக்கும். வாசு வந்தாச்சு. பேசாம கிளம்பு…” அவள் கையில் எடுத்த சுடிதாரை பிடுங்கி வைத்து விட்டு அவளை கிளப்பினார்.

# அத்தியாயம் 3

“அடியே ரங்கா, இன்னுமா தூக்கம், கொல்லையில லக்ஷ்மி கத்துது, எழுந்து என்னனு பார்க்கப்படாதோ...” மாமியார் கோமளத்தின் குரல் உச்சஸ்தாயில் கேட்க, ராகவனின் அணைப்பில் இருந்த ரங்கா, அவசரமாய் எழ முயல...

அவள் விலகளில் எரிச்சலுற்ற ராகவன், “ஏய் எங்க கிளம்பறே? இரு...” என்று அவளை அணைக்க முயல, மாமியார் அழைத்தும் தான் போகாவிட்டால், அடுத்த கதா காலேட்சேபம் ஆரம்பம் ஆகிவிடும் என்று இத்தனை நாட்களில் நன்கு தெரிந்து வைத்திருந்த ரங்கா...

“விடுங்க, நான் போகாட்டி அப்புறம் உங்க அம்மா என் மானத்தை இந்த தெருவே கேட்கும்படி ஏலம் போடுவா.” என்று அவனிடம் இருந்து தன்னை பிய்த்துக் கொண்டு, புடவை, தலைமுடியை சரிப்படுத்திக் கொண்டு அறைகதவை திறக்க, கோபத்தில் அவள் மேல் அவன் எறிந்த தலையணை வந்து விழுந்தது.

எதையும் கவனிக்கும் மனநிலையில் ரங்கா இல்லை. வந்த கொஞ்ச நாளிலேயே புருசனின் சுபாவமும், மாமியாரின் புடுங்கலும்

அத்துபடி ஆகி இருக்க, எல்லாவற்றையும் சமாளிக்கும் திறன் கொண்ட இந்தியப் பெண்களின் சாமர்த்தியம் ரங்காவுக்கு கொஞ்சம் அதிகமாகவே இருந்தது.

நல்ல மாப்பிள்ளை என்று நீலகண்டன் தனது மகளை திருமணம் பண்ணிக் கொடுத்த, மாப்பிளை ராகவன் ஒரு முழுச்சோம்பேறி. எந்த வேலைக்கும் செல்லாதவன். எது என்றாலும் அதில் ஒரு குறை கண்டு பிடித்து, அந்த வேலைக்கு செல்லாமல் வீட்டிலேயே மூன்று வேளையும் கொட்டிக் கொண்டு, நன்கு தூங்கி எழும் ரகம்…

மாமியார் அந்தக் காலத்தில் தாங்கள் வீடு இருந்த செல்வ நிலையை வைத்து பழம் பெருமை பேசிக் கொள்ளும் காலி பெருங்காய டப்பா. இவளுக்கு திருமணம் ஆகும் போதே மாமனார் இல்லை. அவர் மிகவும் நல்ல மனிதர் என்று கேள்விபட்ட ரங்கா, ‘ஒரு வேளை அம்மாவும், பிள்ளையும் படுத்திய பாட்டில் தான் மாமனார் போய் சேர்ந்து விட்டாரோ’ என்று அவ்வப்போது மனசுக்குள் நினைப்பது உண்டு.

‘யாரையும், எதையும், மாற்ற முடியாது. தானாக திருந்தினால்தான் உண்டு.’ என்று தெளிவாக தெரிந்து வைத்திருந்த ரங்கா, கணவனையோ, மாமியார் சொல்வதை எதிர்த்து ஒன்றும் சொல்வது இல்லை. இருக்கும் சொத்தை விற்றுவிட்டால் தாங்கள்

தெருவில் தான் நிற்க வேண்டும் என்பதை நன்கு புரிந்து கொண்ட ரங்கா, வீட்டிலிருந்தே தனக்குத் தெரிந்த அப்பளம், ஊறுகாய், வத்தல், பொடி வகைகளை செய்து விற்க ஆரம்பித்தாள். அந்த வருமானத்தை புருஷனிடமோ, மாமியாரிடமோ கொடுக்காமல் தானும் செலவழிக்காமல் சீட்டுக்கட்டி சேமிக்க ஆரம்பித்தாள்.

"*There is a special place in hell for women who dont help other women.*"

*-Madelenine Almigh*

சென்னை பாரிஸ் கார்னருக்கு அருகிலுள்ள ஒரு பெரிய ஹோட்டலில் உள்ள வரவேற்பு ஹாலில் ரங்கபாஷ்யம், மீனா அவர்களது சஷ்டியப்த பூர்த்தியின் வரவேற்பு விழா நடந்து கொண்டிருந்தது. தனது தந்தை காலத்தில் இருந்தே வக்கீல் தொழிலில் இருந்ததாலும், அவரது தந்தையின் நேர்மையும் புகழும், இவருக்கும் இருந்ததாலும், எல்லா தெரிந்த மனிதர்களும் விழாவுக்கு வருகை தந்திருந்தனர்.

வாசுவுடன் சென்ற ரங்காவை, அவளது ஆஃபீஸ் தோழர்கள் வரவேற்க, ரங்கபாஷ்யத்தின் மகன் விஷ்வா, மகள் அஸ்வினி இருவரும் எல்லோரையும் வரவேற்றனர்.

நண்பர்கள் அனைவருடனும் சென்று தங்களது சீனியரை

வாழ்த்தி பரிசு கொடுத்தனர். “சார், இதை நீங்க மேடம் கையில போடுங்க.” என்று மோதிரத்தை எடுத்து அவர் கையில் கொடுத்து, அவரது மனைவிக்கு போட வைத்தனர். அதைப் போல அவரது மனைவியின் கையில் இன்னொரு மோதிரத்தைக் கொடுத்து அவருக்கும் அணிவிக்க வைத்தனர்.

மிகவும் சந்தோஷத்துடன் சீனியர், “இதெல்லாம் எதுக்குப்பா…?”

“இருக்கட்டும் சார். நீங்க எங்களுக்கு குரு. உங்களுக்கு நாங்க செய்யவேண்டிய கடமைதான் இது.” என்று புன்சிரிப்புடன் பதில் சொன்ன ரங்காவை ரங்கபாஷ்யம் தனது மனைவிக்கு அறிமுகப்படுத்தி வைத்தார்.

“மீனா, இது ரங்கா. என்னோட ஜூனியர். கொஞ்சம் பிடிவாதக்காரி. ஆனால் நேர்மையான பொண்ணு. இது வினோத், சரவணன், மகேஷ், லீலா என்று அனைவரையும் அறிமுகம் செய்தார்.

எல்லோரையும் பார்த்து அன்பாக புன்னகை செய்த மீனா, “இருந்து, சாப்பிட்டு தான் போகணும்.” என்று அவர்களிடம் சொல்லி கொண்டிருக்க…

ஹாலுக்குள் சற்று பரபரப்பான சூழ்நிலை தெரிய,

என்னவென்று எல்லோரும் பார்க்க, உபேந்திரா தனது உதவியாளர் பாபுவுடன் வந்து கொண்டிருந்தான். “மீனா வர்றது யார் தெரியுதுல்ல. அப்பாவோட பிரண்ட் டாக்டர் சேதுராமன் பேரன் உபேந்திரா.”

அவர் சொல்லி முடிக்கவும், அவர்கள் மேடையை நெருங்கவும் ரங்காவும், அவளது தோழர்களும், மேடையை விட்டு இன்னொரு படி வழியாக கீழே இறங்கினர்.

ரங்கா அவளது ஆபீஸ் நண்பர்களுடனும் வாசுவுடனும் பேசிக்கொண்டிருக்க, மேடையில் “வாங்க உபேந்தரா, சென்னை எப்படி இருக்கு? பிடிச்சிருக்கா? அல்லது டெல்லி தான் பிடிச்சிருக்கா…?”

“சென்னையில தானே வளர்ந்தேன். சோ, நோ ப்ராப்ளம். என்ன, முந்திய விட இப்ப ட்ராபிக் ஜாஸ்தியாயிருச்சு…”

“தாத்தா எப்படி இருக்கிறார்?”

“யா பைன். பட் பங்சன் எல்லாம் கலந்துக்கிறது இல்ல. ஏஜ் பேக்டர்…” பரிசை கொடுத்து வாழ்த்து சொன்னவன், கீழே இறங்க முற்பட, “விஷ்வா இங்க வா.” என்று மகனை அழைத்தவர், “திஸ் இஸ் மை சன் விஷ்வா. சாப்ட்வேர் இன்ஜினியர்…”

“விஷ்வா, இவர் மிஸ்டர் உபேந்திரா. நம்ம பேமிலி பிரண்ட். கவனிச்சுக்கோ…” என்று மகனிடம் சொல்லி அனுப்பினார்.

“வாங்க சார்…” என்று அழைத்துக் கொண்டு வந்து இடம் பார்த்து அவர்களை அமர வைத்து, தானும் அருகில் உட்கார்ந்தான்.

“நீங்க லா படிக்கலையா…?”

“அப்பா லாயாரா இருந்தா கட்டாயம் பையனும் லா படிக்கணுமா என்ன?” என்று சின்ன சிரிப்புடன் கேட்டவனைப் பார்த்து…

“கரெக்ட். அப்ப நீங்களும் நம்ம ஜாதி தான்.”

“ஏன் அப்படி சொல்றீங்க?”

“தாத்தா, அப்பா, அம்மா எல்லோரும் டாக்டரா இருந்தா, பையனும் டாக்டர் ஆகணுமா என்ன?” என்று உபேந்திரா கேட்க, இருவரும் ஒன்று போல சிரித்தனர்.

அவர்களின் சிரிப்பொலி கேட்டு, திரும்பிய ரங்காவை நான்கு விழிகளும் பார்த்தது. ‘அட பாய்’ என்று உபேந்திரா நினைக்க, ஏற்கனவே முதலில் பார்த்தவுடன், தனது மனதில் சிறிது சலனம் ஏற்படுத்திய அவளை விஷ்வாவும் பார்த்தான்.

“அப்ப நீங்க என்னவா இருக்கீங்க?”

“நீங்க சொல்லுங்களேன். உங்களால கெஸ் பண்ண முடியுதான்னு பார்ப்போம்…!” என்று உபேந்திரா சொல்லிக்கொண்டு இருக்கும்போதே, அருகில் வந்த ஹை கோர்ட் சீனியர் லாயர் கிருஷ்ணன் “ஹலோ உபேந்திரா. வெல்கம் அவர் சென்னை ஹை கோர்ட்…” என்று அவனது கரத்தை குலுக்கி வாழ்த்து தெரிவிக்க…

“ஆர் யூ எ லாயர்?” என்று ஆச்சரியத்துடன் புருவத்தை உயர்த்தி, விஷ்வா கேட்க…

“தெரியாதா உங்களுக்கு. சார் மிகப்பெரிய கிரிமினல் லாயர் இன் டெல்லி ஹைகோர்ட். பெரிய, பெரிய ஆட்களுக்கு மட்டும்தான் சார் ஆஜராவதே. இந்த பங்ஷன்ல இவரை பார்த்து நானே ஆச்சரியப்பட்டு தான் பேச வந்தேன். சார் எப்படி உங்களுக்கு பழக்கம்?” என்று விஷ்வாவிடம் கிருஷ்ணன் கேட்க…

“பேமிலி பிரண்ட்…” என்று அழுத்தமாய் சொன்ன விஷ்வா, உபேந்திராவின் பிரபலத்தை கண்டு, வியந்து நின்றான்.

வாசு, ரங்காவிடம் “நாம சாப்பிட்டு கிளம்பலாமா?” என்று கேட்க…

“ஓகே. வினோத், சரவணா நாங்க சாப்பிட்டு கிளம்பறோம்.”

என்று ரங்கா சொல்ல…

“நாங்களும் வர்றோம்.” எல்லோரும் ஒன்றுபோல் சாப்பிட கிளம்பினர். பஃபே சிஸ்டம். நிறைய வெரைட்டி ஆப் புட். தங்களுக்கு வேண்டியதை எடுத்துக் கொண்டு ஒரு டேபிள் பார்த்து எல்லோரும் அமர்ந்தனர்.

“சார் நீங்களும் சாப்பிட வாங்க.” உபசரித்த விஷ்வா அவர்களுக்கு வேண்டியதை எடுத்துக்கொள்ள உதவி செய்து, ஒரு டேபிள் பார்த்து அமர வைத்துவிட்டு, மற்றும் சிலரை கவனிக்க வேண்டியிருந்ததால் உபேந்திரா விடம் சொல்லிவிட்டு சென்றான்.

ரங்காவிற்கு நேர் பின்னால் உள்ள டேபிள் அது. அவளுக்கு நேர் பின்புறம் பாபு, உட்கார எதிரில் உபேந்திரா உட்கார்ந்தான். உபேந்திராவின் பார்வையில் ரங்காவின் பின்புறமும், அவளுக்கு அருகில் இருந்த சேரில் உட்கார்ந்திருந்த வாசுவும் தெரிந்தனர்.

உபேந்திரா அமர்ந்ததும் தற்செயலாக திரும்பிப் பார்த்த வாசு முன்பே அறிமுகம் ஆனதற்கு அடையாளமாக தலையைத் தாழ்த்தி ஒரு வணக்கத்தை வைக்க, தன்னுடைய கவர்ச்சிகரமான சிரிப்பால் உபேந்திரா அதை அங்கீகரிக்க…

இவன் யாருக்கு விஷ் பண்ணுகிறான் என்று அறிந்துகொள்ள தலையை லேசாக திரும்பிய ரங்கா, உபேந்திராவை பார்த்ததும்

'இவன் எப்படி எந்த பங்ஷனில்?' என்ற பாவனையோடு பார்த்தாள்.

அன்று பார்த்ததற்கும் இன்று பார்ப்பதற்கும் நிறைய வித்தியாசம் இருவரிடமும் இருந்தது. மிக மிக சாதாரணமாக இருந்த ரங்கா, இன்று மைசூர் சில்க் சாரியில் தனது பெண்மை மிளிர, காண்போரை கவரும் வண்ணம் இருந்த அழகை பார்த்த உபேந்திரா 'அட பாய் இன்னைக்கி கேர்ள் ஆயிற்று' என்று மனதுக்குள் அவளை ரசித்து கொண்டான்.

அன்று வீட்டில் பார்க்கும் போது வாக்கிங் போய்வந்த யூனிபார்மோடு பார்த்தவளுக்கு இன்று கரு நீல கலர் ஜீன்ஸ் வெளிறிய ஆகாய வண்ண கலரில் நீள் கோடுகள் கொண்ட புல் ஹான்ட் சர்ட், மாநிறத்திலும் சற்று கூடுதலான நிறம், நீண்ட முகவாய், அழுத்தமான உதடுகள், அளவாக வெட்டப்பட்ட மீசை, எதிராளியை ஊடுருவிப் பார்க்கும் லேசர் கண்கள். ஆறடிக்கும் மேலான உயரம், எந்தப் பெண் பார்த்தாலும் திரும்பி ஒரு முறை பார்க்க தூண்டும் அக்மார்க் இன்றைய நாகரிக, பணக்கார, அவனுடைய தொழில் வட்டராத்தில் மிகவும் புகழ் பெற்ற ஒரு வாலிபன்…

பார்த்த ஒரு நிமிடத்தில் அவனை தன் எக்ஸ்ரே கண்கள் மூலம் மனதில் படம் பிடித்துக் கொண்ட ரங்கா, அறிமுகமற்ற

பார்வை ஒன்றை அவன் மீது வீசி விட்டு, சாப்பிடுவதில் கவனம் செலுத்தினாள்.

“ரங்கா, ஏய் ரங்கா” கிசுகிசுப்பான குரலில் அழைத்த வாசு, அவள் என்னவென்று பார்த்தவுடன் “உங்க சீனியருக்கு இவர் நல்ல பழக்கம் போல இருக்கு. பேசாமல் சீனியர் மூலம் பேசிப் பாரேன்…”

பதில் சொல்லாமல் உணவில் கவனம் செலுத்தியவளிடம், “உன்னை திருத்தவே முடியாது…” என்று புலம்பிக் கொண்டே வாசுவும் சாப்பிட…

அருகில் இருந்த வினோத், சரவணா, லீலா மூவரும் தங்களுக்குள் ரகசியம் பேச, வாசு அவர்களிடம் “என்ன நானும் அப்பவே பிடிச்சு பார்த்துட்டே இருக்கேன், நீங்க மூணு பேர் மட்டும் என்னவோ பேசிட்டே இருக்கீங்க…!” என்று கேட்க…

இவன் பக்கம் சாய்ந்த சரவணன் “வாசு பின்னால உட்கார்ந்து இருக்கிறவர் யார் தெரியுமா?” என்று ரகசியக் குரலில் கேட்க…

“யாரு அந்த லைட் ப்ளூ கலர் சர்ட்டா…?”

“ஆமாம்”

“யாரு…?”

“டெல்லி ஹைகோர்ட்ல பேமஸ் கிரிமினல் லாயர்… அவரோட க்ளையன்ட்ஸ் எல்லோருமே அரசியல்வாதிங்க, பெரிய பெரிய பிசினஸ்மேன் தான். அப்பாயின்ட்மெண்ட் வாங்கவே ரொம்ப நாள் காத்திருக்கணும். டெல்லி ஹைகோர்ட்ல இருந்து இப்ப மெட்ராஸ் ஹைகோர்ட்க்கு தன்னோட ஆபிசை மாத்தி இருக்கார். இனி இங்க தான் தொழில் கவனிக்கப் போறதா பேச்சு அடிபடுது. இப்பவே நிறைய சீனியர்ஸ்க்கு வயித்தில புளிய கரைக்குது. அவன் சொல்லிக் கொண்டே போக, ஓரக் கண்ணால் உபேந்திராவைப் பார்த்தான்.

அவன் வந்து உட்கார்ந்ததில் இருந்து யாரவது ஒருவர் மாறி, மாறி வந்து அவனிடம் மரியாதையை நிமித்தம் பேசி விட்டு செல்ல, அனைவரிடமும் நாசுக்காக அவன் பேசிய விதமும், ஊடே அவன் கண்ணை காட்டிய போது எல்லாம் அவனது பிஏ அவர்களது விசிட்டின் கார்ட் கொடுத்து விட்டு அவர்களது நம்பர் தேவை என்றால் வாங்கி வைத்துக் கொண்டான்.

ரங்காவும், லீலாவும் கை அலம்பி விட்டு ஐஸ்க்ரீம் வாங்கிக் கொண்டு திரும்பி அவர்கள் இடத்திற்கு வரும் போது, எதிரே சென்ற உபேந்திரா “ஹாய் அபி தேக்னே மேன், தும் லட்கி ஹோகி…” என்று கண்ணை சிமிட்டி விட்டு சென்றான். அவன் என்ன சொன்னான் என்று புரியாததால், ஒரு முறை முறைத்து

விட்டு தன் வழியே சென்றாள்.

“அவர் என்ன சொன்னார் ரங்கா?”

“நத்திங்” என்றவள் “நாங்க கிளம்பறோம்” என்று நண்பர்களிடம் சொல்லிவிட்டு, விஷ்வாவிடம் “சார் கிட்ட சொல்லிடுங்க. நேரமாச்சு.”

“நீங்க எப்படி போவீங்க மிஸ் ரங்கா?”

“நான் வாசு கூட கார்ல தான் வந்திருக்கேன்... சோ நோ ப்ராப்ளம்.” தலையாட்டிவிட்டு வாசுவுடன் மண்டபத்தை விட்டு கிளம்பினாள்.

உபேந்திரா ரங்கபாஷ்யத்திடம் விடைபெற சென்றபோது அவர் சரவணனிடம் “ரங்கா அதுக்குள்ள கிளம்பிட்டாளா? நான் சார் கிட்ட உங்க எல்லாரையும் அறிமுகப்படுத்தி வைக்கணும்னு நெனச்சேன். பை த பை, உபேந்தரா இவங்க என்னோட ஜூனியர்ஸ்.” என்று அனைவரையும் அறிமுகப்படுத்தி வைத்தார்.

“இன்னொரு ஜூனியர் உண்டு. வெரி ஸ்மார்ட் கேர்ல். நேரம் ஆயிடுச்சின்னு கிளம்பி போயிட்டாள்னு நினைக்கிறேன்.” அவர் ரங்காவை சொல்வதை புரிந்து கொண்டான்.

காரில் போகும்போது வாசு அவளிடம் “ரங்கா அவரும்

பெரிய லாயர் போல இருக்கு. அப்ப நம்ம கேசை அடிச்சு, அவர் கேட்ட பணத்தை நாம கொடுக்குற மாதிரி ஆயிடுமா? பேசாம உங்க சீனியர் கிட்ட சொல்லி கேஸ் இல்லாம செட்டில்மெண்ட் பண்ணிடு.”

“இல்ல. நான் ஒரு தடவை போய் கேட்டாச்சு. இனி என்னால கேட்க முடியாது. பாக்கலாம் கேஸ் எப்படி போகுதுன்னு?” அவள் வீட்டில் அவளை இறக்கிவிட்டு “நான் வர்றேன்” என்று சொல்லி சென்றான்.

“பாபு நாளைக்கு கோர்ட்ல என்ன வேலை இருக்கு?”

“நீங்க வரவேண்டிய வேலை எதுவும் இல்ல. ஆனால் உங்க கார் ஆக்சிடெண்ட் கேஸ் பைல் பண்ணி இருக்கோம்ல. அந்த கேஸ் இந்த வாரம் வர வாய்ப்பிருக்கு. யாரை அட்டென்ட் பண்ண சொல்லணும்?”

“நம்மகிட்ட இருக்கிற லாயர்ஸ்ல கொஞ்சம் அனுபவசாலியா இருக்கிற வர்கிட்ட கேஸ் கொடு.”

“ஓகே சார்.”

“பாபு நீ எங்க போகப்போறே?”

“அடுத்த ஸ்டாப்ல நான் இறங்குகிறேன் சார். நீங்க நேரே

வீட்டுக்கு தானே?”

“ஆமா. தாத்தா எனக்காக வெயிட் பண்ணிட்டு இருப்பார்“ என்று சொன்னவன், பாபு காரைவிட்டு இறங்கியதும் வேகமாக தனது பங்களாவை நோக்கி சென்றான்.

பங்களாவின் உள்ளே சென்றதும் ஹாலிலேயே இவனுக்காக டிவி பார்த்துக்கொண்டு காத்துக்கொண்டிருந்த அவனது தாத்தா சேதுராம் “என்னடா ரங்கபாஷ்யம் வீட்டு பங்ஷனுக்கு போனியா இல்லையா?”

“ஆமா தாத்தா. நீங்க சாப்பிட்டாச்சா. தூங்க போகலை?”

“போகணுண்டா. அதுக்கு முன்னாடி எனக்கு இன்னைக்கு உன்கிட்ட கொஞ்சம் பேசணும். உட்கார்…”

“எதிரே உள்ள சோபாவில் உட்கார்ந்து ரிலாக்ஸ்டாக கால்களை நீட்டி இரண்டு கைகளையும் பின் தலையில் கொடுத்து சாய்ந்து அமர்ந்தவன் “சொல்லுங்க…” என்றான்.

“உனக்கு வயசு ஆகிட்டே போகுது. ஒரு கல்யாணம் பண்ணிப் பார்க்க எனக்கு ஆசை இருக்காதா…? உன்கிட்ட நானும் ரெண்டு வருஷமா சம்மதம் கேட்டுட்டு இருக்கேன். பதில் சொல்லாம நழுவிப்போனா என்ன அர்த்தம்?”

“தாத்தா இதுக்கு நான் பதில் ஏற்கனவே சொல்லிட்டேன். கல்யாணம் பண்ண எனக்கு இஷ்டம் இல்லை. என்னோட சுதந்திரத்தை யார்கிட்டயும் அடகு வைக்க எனக்கு பிரியமில்லை.”

“இப்படி சொன்னா என்ன அர்த்தம்? இப்ப நாங்க எல்லாம் கல்யாணம் பண்ணிட்டு வாழலையா?”

“நீங்களும் பாட்டியும் எப்படி இருந்தீங்களோ எனக்கு தெரியாது. ஆனா எங்க அம்மாவும், அப்பாவும் ஒற்றுமையாய் இருந்து நான் பார்த்ததே இல்லை. அது உங்களுக்கும் தெரியும். எனக்கும் அதுபோல ஒரு வாழ்க்கை அமைஞ்சிடுச்சுன்னா, என்னால போராட முடியாது.,”

“எல்லாருக்கும் ஒரே மாதிரி வாழ்க்கை அமையாது. கல்யாணம், குடும்பம் இது எல்லாம் அவரவர் வாங்கிட்டு வந்த வரம். சொல்ல முடியாது உனக்கே ஏன் அது நல்ல வரமா இருக்க கூடாது?”

“தாத்தா ப்ளீஸ் என்ன விட்டுடுங்க. எனக்கு இந்த கமிட்மென்ட் எல்லாம் வேண்டாம்.,”

“உபேந்திரா.” என்று அவர் ஆரம்பிப்பதற்குள் அவன் மாடிக்கு சென்றிருந்தான். பெருமூச்சு விட்ட சேதுராம் எழுந்து தன்

அறைக்கு சென்றார்.

சேதுராம் சென்னையில் மிகப்பெரிய கார்டியாலஜிஸ்ட். அவரது மகன் கல்யாணசுந்தரம், மருமகள் நந்தினி டாக்டர்ஸ் தான். ஆனால் அவர்களிடத்தில் மிகப் பெரிய ஒற்றுமை இதுவும் இல்லை. இத்தனைக்கும் லவ் மேரேஜ் இவர்களின் சண்டையில் பாதிக்கப்பட்டது உபேந்திராதான். அதனாலேயே அவன் மருத்துவம் படிக்க மாட்டேன் என்று சொல்லிவிட்டான்.

காலேஜ் சென்றதும் அவனுடைய நண்பர்கள் வட்டாரம் வேறு மாதிரி ஆயிற்று. இன்ஜினியரிங் சேர்ந்தவன் முதல் வருடத்திலேயே அந்தப் படிப்பை விட்டுவிட்டு டெல்லியில் உள்ள இந்தியன் லா இன்ஸ்ட்யூட் அதில் சேர்ந்து வக்கீலுக்கு படித்தான். கல்யாணசுந்தரம் உருவாக்கிய ஹாஸ்பிடலை இப்போது மேனேஜ்மென்ட் பார்க்கவும், தாத்தாவுடன் இருக்க வேண்டும் என்றுதான் அவன் தன்னுடைய வேலையை சென்னைக்கு மாற்றிக் கொண்டது.

வக்கீல் படிப்பு முடித்ததும் ப்ராக்டிசை டெல்லியில் உள்ள பிரபல கிரிமினல் லாயர் சன் குப்தா அவர்களிடம் மூன்று வருடங்கள் இருந்தான். அதன் பிறகே தனி பிராக்டிஸ். அவனுடைய புத்திசாலித்தனமும் வாதம் செய்யும் திறனையும், மிக விரைவில் அவனுக்கு பிரபலத்தை ஏற்படுத்தி தர, அவனுடைய

கிளையண்ட்ஸ் அனைவரும் செலிபிரிட்டி ஆகவே இருந்தனர். அவர்களின் பழக்க வழக்கத்தில் வருமானம் குவிந்தது. எல்லாவித சந்தோஷங்களும் அவன் விரும்பாமலே கிடைக்க வாழ்க்கையை எளிதாக வாழ கற்றுக்கொண்டான்.

தன்னுடைய கவுரவத்தையும், கம்பீரத்தையும் விட்டுக் கொடுத்து எந்த பெண்ணையும் திரும்பி பார்த்தது இல்லை. ஆனால் ஹையர் சொசைட்டியில் அவனின் நட்பை விரும்பி மேலே வந்து விழுந்த பெண்கள் அதிகம். எல்லோரையும் அனுமதிக்காதவன் சில சமயம் தவிர்க்க முடியாத சூழ்நிலையில் இருக்கும்போது சில பெண்களிடம் நெருக்கமான தொடர்பு வைத்தது உண்டு. அனைத்தும் சேதுராமனுக்கு தெரியும்…

ஆனாலும் அவர்களின் தொடர்பை அவன் தொடர்ந்து வைத்துக்கொள்வதில்லை என்பதை அறிந்தவர், சூழ்நிலை கருதி அவனை அதிகம் கண்ட்ரோல் செய்யவும் இல்லை. பெற்றவர்கள் ஒரு விபத்தில் மறைந்த பின்னர் தன் பேச்சுக்கு மட்டும் ஏதோ கொஞ்சம் செவி சாய்த்து கொண்டிருக்கும் அவனை எதிர்க்க மனமில்லாமல் அமைதியாக இருந்தார்.

இப்போது சென்னை வந்துவிடவே தனது ஆசையை சொல்லிப் பார்ப்போம் என்றுதான் சொன்னது. பதில் இப்படித்தான் இருக்கும் என்றும் தெரியும். அவனுடைய பதவியும், ஆளுமையும்

இருக்கும் வட்டாரமும் அவனுக்கு எல்லாவற்றையுமே கிடைக்கக்கூடிய வாய்ப்பை வழங்கியிருந்தது. அதைவிட்டு அவனை வெளியே இழுக்க ஏதாவது ஒரு வாய்ப்பு கிடைக்காதா என்பது மட்டுமே தாத்தாவின் எண்ணமாய் இருந்தது.

அடுத்த இரண்டு நாட்கள் கழித்து அம்மா வீட்டிற்கு அந்த கேஸ் சம்பந்தமாய் வக்கீல் நோட்டீஸ் வந்திருக்க, அதை அம்மா அவள் அங்கு சென்று இருக்கும்போது கொடுத்தாள். இதற்குள் தம்பியும் டிஸ்சார்ஜ் ஆகி வீட்டிற்கு வந்திருக்க ஹாஸ்பிடல் செலவாக நாற்பத்து ஐந்து ஆயிரம் ரூபாய் ரங்கா தான் செலவழித்தாள்.

தம்பியிடம் “உன் டூவீலரை நான் ரிப்பேர் செய்யவில்லை. உனக்கு குணமானதும் நீயே வேலைக்கு போய் பணம் சம்பாதித்து அதை சரி செய்து கொள்.” என்று சொல்ல…

அதற்கு அவன் “அது எப்படி ரங்கா முடியும்? வேலைக்கு போகவே டூவீலர் தேவைப்படுமே! என்று சொல்ல…

“டூ வீலர் சரியாகும் வரை நடந்து போ. அப்போதுதான் உனக்கு வண்டியை பத்திரமா ஓட்டணும்னு புரியும்.” என்றவள் பேச்சு முடிந்தது என்பது போல் கிளம்பிவிட்டாள்.

“பாரும்மா ரங்கா சொல்றதை?” என்று புலம்பிய மகனிடம்

“டேய் அவளுக்கு தான் அதிகம் சம்பாதிக்கிறோம்கிற திமிரு. இப்போதைக்கு உனக்கு வண்டி வேணும்னா அவள் சொல்ற மாதிரி கொஞ்ச நாள் இரு. அப்புறம் வேற ஏதாவது ஐடியா பண்ணி, வண்டி சரி பண்ண பணம் வாங்கிக்கலாம்.” அம்மாவின் பேச்சைக் கேட்டவன் அமைதியாக இருந்துவிட்டான்.

வக்கீல் நோட்டீஸ் எடுத்துக்கொண்டு வந்தவள் பிரித்து படித்துவிட்டு அதற்கு பதில் நோட்டீஸ் தயார் செய்தாள். இரண்டு நோட்டீஸையும் எடுத்துக்கொண்டு ரங்கபாஷ்யத்திடம் சென்றவள் அதை அவரிடம் கொடுத்தாள்.

படித்துவிட்டு “என்ன இது ரங்கா? கேஸ் யார் மேலே?”

“என் தம்பி மேலே தான். அன்னைக்கு ஆக்சிடென்ட் பண்ணி கீழே விழுந்தான் இல்லையா. அவன் மோதி விழுந்தது ஒரு பணக்காரனோட கார்ல. அவர் இப்ப நஷ்ட ஈடு கேட்டு கேஸ் போட்டு இருக்கார். “

“தப்பு யார் மேல?”

“தப்பு என்னவோ தம்பி மேலதான். அதனாலதான் அவுட் ஆப் கி கோர்ட் செட்டில்மெண்ட் பண்ணிடலாம்னு அவரை போய் பார்த்தேன்.”

“என்னாச்சு? என்ன சொன்னார்?”

“அஞ்சு லட்சம் கேட்கிறார். சரி அப்போ கோர்ட்டிலேயே பாத்துக்கலாம்னு வந்துட்டேன்.”

“அப்படியா” என்று தாடையை தடவியவர் “நான் வேணும்னா பேசிப் பாக்கட்டுமா?”

“வேணாம் சார். நானே ஆஜராகலாம்னு இருக்கேன். எனக்கு உங்க பெர்மிஷனும், ஆசீர்வாதம் கிடைச்சா போதும்.”

“ஓகே நீயே அட்டென்ட் பண்ணு.” அனுமதி அளித்த அவர், ”எதுவும் சந்தேகம் என்றாலும் என்கிட்ட கேளுமா” என்று சொல்லவும் தவறவில்லை.

“தேங்க்ஸ் சார்” சொன்ன ரங்கா அந்த பதிலை அவனுடைய ஆபீஸ் அட்ரசுக்கு போஸ்ட் செய்தாள். அடுத்து எந்த மாதிரி ஆர்கியுமென்ட் வந்தால் அதற்கு எப்படி பதில் சொல்ல வேண்டும் என்பதை பிரிப்பேர் செய்ய ஆரம்பித்தாள்.

# அத்தியாயம் 4

காலையில் எழும்போதே ரங்காவிற்கு தலைவலியாக இருந்தது. ஆனாலும் கேசவன் பள்ளிக்கு செல்ல வேண்டுமே என்று நினைத்தவள், தனது உடல் நலத்தை கண்டு கொள்ளாது எழுந்து வழக்கமான வேலைகளை செய்து இரண்டாம் வகுப்பு படிக்கும் தனது மகனை பள்ளிக்கு அனுப்பினாள்.

“ரங்கா உன் கிட்ட பத்து ரூபாய் இருந்தால் தாயேன்…!” என்று காலையிலேயே ஆரம்பித்த கணவனிடம், பதில் பேசாமல் நகர முற்பட,

“ஏய் நான் கேட்டுக்கிட்டே இருக்கேன். நீ பாட்டுக்கு எவனோ கத்திண்டு இருக்கான், எனக்கென்னங்கிற மாதிரி போயிட்டே இருக்க…? உன் மனசுல என்ன தாண்டி நெனச்சிட்டு இருக்க…?” என்று குரலை வேண்டுமென்றே உயர்த்த,

அவர் எதிர் பார்த்தது போல் கோமளத்திடம் இருந்து பதில் வந்தது. “ஏன்டா உனக்கு இன்னைக்கு தான் அவ உன்னை கண்டுக்கலைங்கிறது தெரிய வந்ததாக்கும். போடா போக்கத்தவனே, என்னைக்கு அவ உன்னையும், என்னையும் மதிச்சிருக்கா…? எல்லாம் சம்பாதிக்கிற திமிரு…” என்று தனது

மாமியார் தர்பாரை காட்டி மகனை ஏத்தி விட, இது தான் சாக்கு என்று, ரங்காவிடம் வந்து சண்டையை ஆரம்பித்தார்.

“ஏன்னா, நேக்கு தலைவலி மண்டையைப் பொளக்குது. நான் செத்த படுக்கப் போறேன். மிளகு ரசம், வாழக்காய் எரிசேரி, பாகற்காய் பிட்லை செஞ்சி, சாதம் வச்சிருக்கேன். எடுத்து போட்டுண்டு நீங்களும் அம்மாவும் சாப்பிடுங்கோ…” என்று சொல்லி விட்டு படுக்க அறைக்குள் சென்றாள்.

உள்ளேயும் வந்து ராகவன் ஆரம்பிக்க “இதோ பாருங்கோ, என்கிட்ட நயா பைசா கிடையாது. உங்க இரண்டு பேருக்கும் சாப்பாடு போடுறதே பெருசு. நீங்க இப்படி மாறி மாறி தொந்தரவு பண்ணா நான் எங்காத்துக்கு என் பையனை கூட்டிண்டு கிளம்பறேன்…!” என்ற தன் வழக்கமான அஸ்திரத்தை வீச அது பலமாக வேலை செய்தது.

‘அய்யோ இவ பாட்டுக்கு கிளம்பி போயிட்டானா அப்பப்ப நமக்கு காசு கொடுத்து சாப்பாடும் போடறது யாரு…?” என்று பயந்து போன ராகவன் தனது வாலை சுருட்டிக் கொண்டு வெளியில் சென்றார்.

அவர் வெளியே செல்லவும் கோமளம் வழக்கமான பல்லவியுடன் ரங்காவை திட்ட ஆரம்பிக்க ஒரு சிறிய துண்டை

எடுத்து நெற்றியில் கட்டியவள் பேசாமல் படுத்தாள்… ஏற்கனவே தலைவலி மண்டையை பிளக்க, காணததற்கு கோமளத்தின் வெண்கல தொண்டையில் இருந்து புறப்பட்ட வார்த்தைகள் அவள் காதுகளில் நாராசமாய் ஒலிக்க, தூக்கம் வருவேனா என்றது…

‘அது எப்படி, தன் மகன் தம்பிடி காசு சம்பாதிக்கவில்லை என்று தெரிந்தும், தன் கணவர் வைத்து விட்டு போனதை இருவரும் காலி பண்ணி ஆகிவிட்டது என்று புரிந்தும், தன்னைப் போல அவளும் ஒரு பெண் தானே, அவள் உழைத்து கொண்டு வரும் காசை வாங்கி அதையும் வீணாக செலவு பண்ணி விட்டால் குடும்ப செலவுக்கு என்ன பண்ணுவது என்று ஒரு பெரிய மனுஷிக்கு தெரியாமல் இருக்குமா…? யார் எப்படி போனால் என்ன, தன்னலம் மட்டுமே பேணும் சுயநலப் பிறவிகள்… நினைக்கையிலே நெஞ்சு கசந்து வழிந்தது ரங்காவுக்கு…

“***When we the best we can, we never knew what miracle is wrought in our life or in the life of another.***”

***-Helen Keller***

ரங்கா தங்களது ஆபிசில் இருந்து கோர்ட்டுக்கு கிளம்பிக் கொண்டு இருந்தாள். அவளை அழைத்த ரங்க பாஷ்யம், “நீயா சமாளிச்சிருவியா…? அல்லது எதுக்கும் சரவணன் கூட்டிட்டு

போம்மா...!”

அவர் சொன்னதும் மறுக்க முடியாமல், அவனுடன் கிளம்பினாள். அவள் தன்னுடைய ஸ்கூட்டியிலும், அவன் தன்னுடைய பஜாஜ் வண்டியிலும் கிளம்பினர். அவர்களுடைய கேஸ் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் இன்று நடப்பதாக இருந்தது...

அங்கு சென்று இறங்கியதும் இருவரும் அவர்களுடைய கேஸ் நடக்கும் இடத்திற்கு சென்றனர். சரவணன் உள்ளே சென்று, இன்று எத்தனை வழக்கு உள்ளது...? அதில் இந்த வழக்கு எத்தனாவது என்று விசாரித்து வந்தான்...

“ரங்கா, நாலாவது தான் நம்ம வழக்கு, எதிர்ல வாதடப் போறது கிருஷ்ணன்னு சீனியர் ஒருத்தர்...! என்ன ரங்கா யோசனையாய் இருக்கே...?”

“இல்ல எதிர்க் கட்சி ஆளே வக்கீல் தானே...? ஆனால் இந்தக் கேசுக்கெல்லாம் அவர் ஆஜராக மாட்டாரான்னு யோசிச்சுட்டு இருக்கேன்...!” இதை அவள் சொன்னதும் சரவணன் இவளைப் பார்த்த பார்வையில், ‘அட லூசே...’ என்கிற பாவனை இருந்தது.

“என்ன லூசுன்னு, நினைச்சியா...?” என்று ரங்கா சிரித்துக் கொண்டே கேட்கவும்...

"ச்ச,சச..." என்று அவசரமாக அவன் சொன்னதை பார்த்து விட்டு, பேசாமல் திரும்பிக் கொண்டாள். அதற்குள் அவசரமாக வாசுவும், அவளது தம்பியும் வருவதைப் பார்த்தவள், கையை தூக்கி தான் நிற்பதை வாசுவுக்கு தெரியப் படுத்தினாள். வாசுவின் வேகத்துக்கு ஈடு கொடுக்க முடியாமல் கெந்தி, கெந்தி நடந்து வந்த மோகனையும் அழைத்துக் கொண்டு தனது சீனியர் வந்தால், இருக்கும் சேம்பருக்கு சென்றாள்.

"மோகன், எதிர்க் கட்சி வக்கீல் கேள்வி கேட்கும்போது நடந்ததை சொல்லு. மாற்றி சொல்லாதே... சொன்னதை அழுத்தம் திருத்தமாய் சொல்லு... மற்றதை நான் பார்த்துக் கொள்கிறேன்...!" என்று கூறி விட்டாள்.

"என்ன ரங்கா அவன் நடந்ததை சொன்னால் தப்பு அவன் பேர்லன்னு ஆயிடுமே...?"

"ஆமா ஆதுதானே உண்மை..."

"அப்பா நஷ்ட ஈடு கொடுத்துதானே ஆகணும்...!"

"ஆமா...!"

"அதுக்கு எதுக்கு கோர்ட், கேசுன்னு... கேட்டதை கொடுத்திட வேண்டியதுதானே...!"

“கேட்ட அமௌன்ட் கொடுக்க முடியாது. நம்மாலே எவ்வளவு கொடுக்க முடியுமோ அவ்வளவுதான் கொடுக்க முடியும். அதுக்குத்தான் கேசே…!” அவள் சொல்லிக் கொண்டு இருக்கும் போதே, அடுத்து அவர்கள் கேஸ்தான் என்று தகவல் வர, தனது கருப்பு கவுனை எடுத்து மாட்டிக் கொண்டு, கேஸ் நடக்கும் அறைக்குள் நுழைந்து மாஜிஸ்ட்ரேட்டுக்கு வணக்கம் சொல்லி விட்டு வக்கீ ல்கள் இருக்கும் நாற்காலியில், அமர்ந்தாள்…

எதிர் வரிசையில் அமர்ந்திருந்த கிருஷ்ணன், அவளை பார்த்து விட்டு, ‘நல்ல வேளை, ரங்க பாஷ்யம் வரலை…’ என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டார்…

கோர்ட் குமாஸ்தா வழக்கு விசயத்தை தெளிவாக படிக்கவும், வழக்கு ஆரம்பம் ஆகியது. நீதிபதி வாதத்தை ஆரம்பிக்கலாம் என்றதும், குமாஸ்தா, “மோகன், மோகன்…” என்று அழைக்க, மோகன் வந்து கூண்டில் ஏறி நின்றான். அவனிடம் அவர் உறுதி மொழி வாங்கியதும், கிருஷ்ணன் தனது வாதத்தை ஆரம்பித்தார். அவர் கேட்ட கேள்விக்கெல்லாம் ஒழுங்காக பதில் சொல்லிக் கொண்டே வந்த மோகன், விபத்து நடந்த விதத்தை அவர் கேட்டதும் உண்மையை சொன்னான்.

அவனின் விளக்கத்தை கேட்ட கிருஷ்ணன், “நீதிபதி அவர்களே பிரதி தானே குற்றத்தை ஒப்பு கொண்ட காரணத்தால்,

நடந்த விபத்தில் எனது கட்சி காரரின், காருக்கு ஏற்பட்ட சேதத்துக்கும், அந்த பெரியவருக்கு சேர்த்து நஷ்ட ஈடாக, ரூபாய் ஐந்து லட்சம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்…” என்று தனது வாதத்தை நீதிபதியின் முன்னால் வைத்தார்.

“எதிர்க்கட்சி வக்கீல் என்ன சொல்றீங்க…?” என்று ஜட்ஜ் கேட்கவும், எழுந்த ரங்கா ஜட்ஜூக்கு ஒரு வணக்கத்தை வைத்து விட்டு, “நீதிபதி அவர்களே, எதிர்க் கட்சி வக்கீல் சொன்னது போல், “நஷ்ட ஈடு தர வேண்டியது எங்கள் கட்சிக்காரரின் கடமை தான்… ஆனால் நஷ்ட ஈடாக அவர்கள் கேட்கும் தொகைதான் பெரிது… அவர் கார் ரிப்பேர் செய்ய பணம் கேட்கிறாரா…? அல்லது புதிய கார் வாங்க பணம் கேட்கிறாரா…? என்று தெரியவில்லை… மேலும் ஒரு முக்கியமான தகவலை நான் இங்கு பகிர் ந்து கொள்ள விரும்புகிறேன்.

பெரியவருக்கு நஷ்ட ஈடாக இன்சுரன்ஸ் கம்பெனி மூலம் ரூபாய் ஒரு லட்சம் தருவதற்கு ஏற்பாடு பண்ணி விட்டேன்… இன்சூரன்ஸ் கம்பெனி ஆட்கள் பெரியவரை மருத்துவ மனையில் பார்த்து அவரது பாதிப்புக்கு ஈடாக இந்த தொகையை தர ஒப்புக் கொண்டு உள்ளனர்… ஆனால் வாதியின் காருக்கு ஏற்பட்ட சேதத்துக்கு நாங்கள் மட்டும் பொறுப்பல்ல.

ஆதாலால் அவரே அவரது இன்சூரன்ஸ் கம்பெனி மூலம்

கார் பழுது பார்க்க ஆக வேண்டிய ரூபாயை வாங்கிக் கொள்வதுதான் சாலச் சிறந்தது… ஒரு வேளை அவரது காருக்கு இன்சூரன்ஸ் போட வில்லையோ என்னவோ…?” என்று அவள் இழுக்க…

கிருஷ்ணன் எழுந்து “இல்லை நீதிபதி அவர்களே, இன்சூரன்ஸ் எல்லாம் இருக்கிறது…” என்று சொல்ல…

“அப்போது எதிர்க் கட்சி வக்கீல் சொன்னது போல் நீங்க இன்சூரன்ஸ் கம்பெனி மூலம் பணத்தை வாங்கிக் கொள்ள வேண்டியது தானே… அவர்கள் அந்த பெரியவருக்கு நஷ்ட ஈடு கொடுக்க முன் வருவதால் நீங்க அந்த இன்சூரன்ஸ் கம்பெனி மூலம் பணத்தை வாங்கிக் கொள்ளுங்கள்…” என்று கேசை முடித்து வைத்தார்…

உபேந்திரா மற்ற ஜூனியர்களுடன் தனது சேம்பெரில் அமர்ந்து மற்றொரு கேஸ் பற்றி விவாதித்துக் கொண்டு இருந்தான். அப்பொழுது அவனது உதவியாளர்களில் ஒருவர் வந்து அவன் காதைக் கடிக்க, “அப்படியா…” என்றவன் எழுந்து விடு விடென்று கேஸ் நடக்கும் இடத்திற்கு சென்றான்…

அப்பொழுதுதான் வெளிவந்த கிருஷ்ணனிடம், “என்ன சார் என்ன ஆச்சு…?” என்று கேட்க…

“சார்… கேஸ் அவங்களுக்கு சாதகமா முடிஞ்சிருச்சு… அந்த பெரியவருக்கு இன்சூரன்ஸ் கம்பெனி மூலம் ஒரு லட்ச ரூபாய் கொடுக்க ஒத்துகிட்டாங்க… அதுக்கு அவங்களும் சம்மதம் சொல்லிடாங்க போல… பேப்பர்ஸ் காட்டிடாங்க… அதனால் ஜட்ஜ் நமக்கும் இன்சூரன்ஸ் மூலம் கிளைம் பண்ணிக்கோங்கன்னு சொல்லிட்டார்…” அவர் சொல்லி முடிக்கவும், அவன் எதிரில் ரங்கா வந்து நிற்கவும் சரியாக இருந்தது…

அசாத்தியமான அவனது உயரமும், ஆளை அசத்தும் அந்தக் கவர்ச்சியும், முழுக்கை சட்டையை லேசாக மணிக்கட்டில் மடக்கி விட்டு அவன் நின்ற தோரணையும், வழக்கம் போல இவளது மனதினுள் நுழைந்து ரகசியமாய், அவனை சைட்டடிக்க, ‘நீ வேற நேரம் காலம் தெரியாமல் ஜொள் விடாதே…’ என்று மனசாட்சியை தலையில் தட்டி உட்கார வைத்து விட்டு, அவனை ஏறிட்டு பார்த்தாள்.

பெண்களில் சற்று வளர்த்தியும், வளர்த்திகேற்ற உடலமை ப்பும், ஒவல் வடிவ முகமும், அதில் கெண்டை மீன்களாய் நீந்தும் விழிகளும், கூர்மையான மூக்கும், அழுத்தமான சதைப் பற்றான இதழ்களும், அவளை அழகியாய் காட்ட, அந்தக் கர்வம் துளியும் இல்லாமல், ஆனால் அறிவு சொட்டும் களையோடு வக்கீல் உடையில் நின்றவளை பார்த்தவனுக்கு, தனக்கு எதிரே நிற்கும்

ஒரு பொம்மையாக அவளை நினைத்தவன்… கண்களில் ஒருவித அலட்சியத்தை காட்டி என்னவென்ற பாவனையில் நின்றான்.

அவனது அலட்சியத்தை லட்சியம் பண்ணாமல், “ரொம்ப தேங்க்ஸ்…” என்றவளுக்கு அவன் பதில் சொல்லாமல் அதே தோரணையுடன் பார்த்திருக்க, எதுக்குன்னு பார்க்கிறீங்களா…? நீங்க கேஸ் பைல் பண்ணலைன்னா நாங்க எங்க கையில இருந்து பணம் கொடுக்க வேண்டி வந்திருக்கும்… இப்ப அந்த நஷ்டம் எதுவும் இல்லை. அதுக்குத்தான்…

உங்க காருக்கு கொடுக்க வேண்டிய நஷ்ட ஈடை இன்சூரன்ஸ் கம்பெனி கொடுக்கும்னு ஜட்ஜ் சொல்லிட்டார்… ஆனால் இன்சூரன்ஸ் கம்பெனி கொடுக்கா துன்னு உங்க லாயருக்கு தெரியுமான்னு தெரியலை…” என்று ஏளனமாக வினவியவளைப் பார்த்து பதில் சொல்லாமல் ஒரு கண்ணை மட்டும் சுருக்கி பார்த்தவன், என்ன விஷயம் என்பது போல் கிருஷ்ணனை பார்த்தான்.

“சார் இன்சூரன்ஸ் ஏற்கனவே முடிந்து போய் இருந்துபோல் இருக்கு… கட்ட சொல்லி நம்ம ஆபிஸ்ல இருந்து தகவல் போய் இருக்கு… ஆனால் அன்னிக்கு அந்த ஏஜென்ட் லீவ்… மறுநாள் எடுத்திரலாம்னு நினைச்சு இருக்கார்…” என்று மென்னு முழுங்கி சொல்ல… தனது பி.பி உச்சத்திற்கு ஏறியதை, முகத்தில் துளியும்

காட்டாமல், “அவரை நாம் கம்பெனி டீலிங்ல இருந்து எடுத்திருங்க…!” என்றவன், ‘இவ்வளவுதானா அல்லது வேற எதுவும் இருக்கா…’ என்கிற பார்வையை அவளை நோக்கி திருப்பினான்.

(ஹை கோர்ட்ல பெரிய வக்கீல்னு பெத்த பேர் வேற… இது கூடத் தெரியலை…) மனதுக்குள் ஓடிய நினைப்பு வெ ளியில் அவள் இதழ்களில் ஒரு இகழ்ச்சியான சிரிப்பை தோற்றுவிக்க, அவன் பார்வையை ஒரு வீச்சில் சந்தித்து விட்டு திரும்பி நடந்தாள். அவள் முகத்தின் பாவனைகளை வைத்தே அவள் மனதில் ஓடிய எண்ணங்களை படித்தவன், தனது கோபத்தை வெளியில் காட்டாமல் அவள் செல்வதை பார்த்து விட்டு திரும்பி தனது சேம்பரை நோக்கி நடந்தான்…

அவனது கோபத்தை விட அமைதி மிகவும் ஆபத்தானது என்று புரிந்த கிருஷ்ணன் என்ன செய்வது என்று கைகளை பிசைந்து கொண்டு நிற்க, அவன் சென்றது தெரிந்து பின்னாலேயே ஓடினார்… உள்ளே சென்றவன், கேசை வாய்தா வாங்கும்படி ஜூனியரிடம் சொல்லி விட்டு கிளம்பி விட்டான்.

“என்ன ரங்கா அவர் கிட்ட இப்படி பேசிட்டு வந்துட்டே…?” என்று வாசு கேட்க…

“இப்ப என்ன அதுக்கு…? உண்மையை தானே சொன்னேன்…”

“உண்மையாகவே இருக்கட்டும். பெரிய இடத்துல இருக்கிறவங்களுக்கு இந்த மாதிரி தோத்ததே பெரிய அவமானமா நினைப்பாங்க… நீ வேற அதை சொல்லிக் காட்டிட்டு வந்து இருக்க… வீணா அவர் விரோதத்தை சம்பாதிச்சுக்கிற…” என்று சொல்லவும்…

“ஆமா ரங்கா… கேஸ் ஜெயித்ததும் பேசாம வந்திருக்க வேண்டியது தானே… எதுக்கு இந்த பிரச்சினை எல்லாம்…?” என்று சரவணனும் தன பங்குக்கு வாதிட…

“நீங்க எல்லாம் ஆம்பிளைங்க தானா…?’ என்ற ரீதியில் பார்த்தவளை, அவர்கள் இருவரும் புரிந்து கொண்டு, ‘ஆகா இவ கிட்ட போய் வாய் கொடுத்தோமே. மத்தவங்க முன்னாடி நாம் மானத்தை வாங்காம இருக்கணுமே, என்று மனதுக்குள் பிரார்த்திக்கொண்டு சரவணன் பார்க்க…

“வம்பு வேணும்னு நான் இழுக்கலை. பெரிய வக்கீல் அப்படின்னா அவர்க்கு என்ன கொம்பா முளைச்சிருக்கு. அல்லது பெரிய ஆளா இருந்தா அவர் தப்பு பண்ணுனா சொல்லக் கூடாதுன்னு இருக்கா…? எனக்கு புரியலை.

யார் தப்பு பண்ணுனாலும் தப்பு தப்புதானே… என்னை அவர்

பொருட்டாவே நினைக்கலை… அதான் அதை கொஞ்சம் நினவு படுத்திட்டு வந்தேன்… வாசு இது எதுக்கு…? எனக்கு சரின்னு தோணுச்சு செய்தேன்… நீ மோகனை ட்ராப் பண்ணிட்டு, நான் சொன்ன வேலையை பார்த்துட்டு வீட்டுக்கு போ… எனக்கு ஆபிஸ்ல வேலை இருக்கு… வரேன்… சரவணன் நீங்க எப்படி ஆபிசா…? அல்லது வீடா…?”

“இல்லை நானும் ஆபிஸ்தான்…” என்றவன் அவளுக்கு முன்னால் வண்டியை ஸ்டார்ட் செய்து இருந்தான்…

வாசுவும் சென்றதும் தனது ஸ்கூட்டியை எடுக்கப் போனவள், அப்போது தான தனக்கு அருகில் பார்க் செய்யப் பட்டு இருந்த வண்டியை நோக்கி போனில் பேசி கொண்டே உபேந்திரா வருவதை பார்த்தாள்… இவள் வண்டியை ஒட்டி அவன் காரை நிறுத்தி இருந்தான். இவள் பின்னால் வண்டியை எடுக்க முடியாதவாறு நிறைய டூ வீலர் இருந்தது.

நகர்த்தி வைக்க வாசுவை கூப்பிடுவோம் என்று எண்ணுகையில் உபேந்திரா வந்து வண்டியை எடுக்கவும்… ‘அப்பாடா ஒரு வழியாய் வழி கிடைத்து விட்டது… எங்க இவன் கிட்ட இதுக்கு வேற பல்லை காட்ட வேண்டியிருக்குமோன்னு நினச்சேன்…’ என்று மனதுக்குள்ளே கவுண்டர் கொடுத்துக் கொண்டு இருந்தவள் ஒரு நிம்மதியுடன் வண்டியில் கிளம்பினாள்.

ரிவெர்யூ மிரரில் அவள் வண்டியை கிளப்புவதை பார்த்துக் கொண்டே தனது காரை செலுத்தியவனுக்கு மனசு கொதித்தது. எத்தனை பெரிய பெரிய கேஸ் எல்லாம் ஊதித் தள்ளியவனுக்கு இந்த சின்னப் பெண் தனக்கு தோல்வியை பாடமாய் தந்து விட்டதை நினைத்து ஆறவே இல்லை… 'நீயும் வக்கீல் தானே… ஏதாவது ஒரு கேசிலமாட்டாமால போயிடுவே… அப்ப உனக்கு நான் தண்ணி காட்டல, நான் உபேந்திரா இல்லை…' என்று மனதுக்குள்ளே கருவியவன் கைகளில் அவன் கோபத்துக்கு ஏற்றார் போல கார் பறந்தது…

அலுவலகத்தில் நுழைந்ததும், "என்னம்மா ஜெயம் போல இருக்கு…?" என்று மகிழ்ச்சியுடன் வரவேற்ற தனது சீனியரிடம், "எல்லாம் உங்க ஆசிர்வாதம் சார்…" என்று சிரித்தவாறு கூறினாள்.

"அது மட்டும் இல்லம்மா. உன்னோட நேர்மைக்கு கிடச்ச பரிசுன்னு வச்சுக்கோயேன்…" என்றவர் அவளிடம் ஒரு புது கேஸ் ஒண்ணு வந்திருக்கு… நீயும் சரவணனும் சேர்ந்து அதை நடத்தறீங்களா…? எனக்கு ரொம்ப வேண்டியவரோட பொண்ணு கேஸ் அது… டைவர்ஸ் கேஸ்… எனக்கு இஷ்டம் இல்லை… ஆனால் மறுக்க முடியலை…"

"ஒ.கே சார் நாங்க பார்த்துக்கிறோம்…" என்றவள் தனது

வேலையை கவனிக்க உள்ளே சென்றாள்.

“ரங்கா உன்னோட ப்ரதருக்கு வேலை விசயமா சொல்லி இருந்தீங்க இல்ல… நான் ஒரு கம்பெனில கேட்டு இருந்தேன்… ஒ.கே சொல்லி இருக்காங்க… நீங்க போய் பார்க்க சொல்லுங்களேன்…”

“ஒ.கே… தேங்க்ஸ் சரவணன்…” என்றவள் தனது வேலையை தொடங்கினாள். ஆனால் தொடர்ந்து செய்ய விடாமல் அவளது அலைபேசி ஒலிக்கவே, எடுத்து காதில் வைத்தவள், எதிர்புறம் ஒலித்த குரலில், “இப்ப என்னம்மா அவசரம்…?” என்று சிடு சிடுக்க…

அந்தப் புறம் என்ன சொன்னார்களோ… முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்க, “அம்மா கொஞ்சம் நிம்மதியா வேலை செய்ய விடு… நான் சாயங்காலம் வீட்டுக்கு வரேன். அப்ப பேசுவோம்…” என்றவள் பேசியை வைத்து விட்டு ‘வேறு வேலை இல்லை… இவங்களுக்கு…’ என்று முனங்கிக் கொண்டே வேலையை பார்க்க ஆரம்பித்தாள்…

மாலை வழக்கத்துக்கு முன்னதாகவே கிளம்பிய ரங்காவை சரவணன் வியப்புடன் பார்த்தாலும், அதைப் பற்றி ஒன்றும் கேட்கவில்லை… “சரவணன் சார் கேட்டா சொல்லிடுங்க…” என்று

கூறி விட்டு விரைந்து விட்டாள்.

வீட்டுக்கு சென்றால் அங்கு ஏற்கனவே பாட்டியும் வாசுவும் வந்திருப்பதை பார்த்து விட்டு, “என்னமா எதுக்கு வர சொன்னீங்க…?”

“நேத்து புரோக்கர் ஒரு வரன் கொண்டு வந்தார்… அதான்… அதை பத்தி பேச உங்களை வரச் சொனேன்…”

“யாருக்கு…?” என்று கேட்க…

“நம்ம தாராவுக்குத்தான்…” என்று வைதேகி சொல்ல…

ஆற்ற முடியாமல் பாட்டி, “மூத்தவ இருக்கறச்சே இவளுக்கு என்ன அவசரம்…?” என்று வாதிட…

“ப்ளீஸ் பாட்டி, எந்த தர்க்கமும் வேண்டாம்… நான்தான் அவளுக்கு முதல் பார்க்கும்படி சொல்லி வச்சிருந்தேன்…”

“இப்ப அவளுக்கு என்னடி அவசரம், அவளுக்கு இருபத்து மூணுதான் ஆறது… ஆனால் உனக்கு இருபத்திஆறு வயசு நடக்கு. உனக்கு பார்த்த பிறகுதானே அவளுக்கு பார்க்கணும். அதுதானே நியாயம்…!”

“நான் என்ன மாட்டேன்னா சொல்றேன். இவளுக்கும்

அவளுக்கும் சேர்த்தே பார்ப்போம்...!" என்று வைதேகி சாக்கு சொல்ல...

"அது எதுக்கு சேர்த்து பார்க்கிறது... மூத்தவளுக்கு முடிச்சிட்டு அப்புறம் பார்க்கலாம்...!" என்று தன் கருத்தை பாட்டி வலியுறுத்த...

"பேஷா பாருங்கோ... நானா வேண்டாங்கிறேன். சின்னவா கல்யாணத்துக்கு ஒரு தொகை ஒதுக்கி வைச்சிட்டு அவ கல்யாணத்துக்கு பாருங்கோ... இவதான் அவ கல்யாணத்தையே நடத்தணும்கிறச்சே ஏதாவது ஏற்பாடு பண்ணனும் இல்லையோ...!"

"ஏன் அவ கல்யாணம் முடிஞ்சாலும் அவ பார்க்க மாட்டாளா...?" பாட்டி தன் ஆதங்கத்தை கொட்ட...

"பாட்டி செத்த சும்மா இருக்கேளா... ப்ளீஸ்..." என்றவள் "முதல்ல அவ கல்யாணம் முடியட்டும்..." என்றவள் மாப்பிள்ளையை பற்றி விசாரித்தாள்.

"பையன் என்ஜினீயர்..." என்று எல்லா விவரத்தையும் அம்மா சொல்ல...

"ஏம்மா அவங்க கேட்கிற நகைக்கும், வரதட்சிணைக்கும் நாம் எங்க போறது...? என்னால அவ்வளவு முடியாது...!"

# ரங்கா vs ரங்கா

"இதோப் பாரு, வர்ற வரன் எல்லாம் பொண்ணு வேலை பார்க்கிறாளா என்று கேட்கிறா… இல்லைன்னதுமே அப்பா வரதட்சிணை இவ்வளவு கொடுங்கன்னு ஆரம்பிக்கிறா…! என்று வைதேகி சொல்ல…

"நான் அதான் முதலிலேயே சொன்னேன்… படி… படி… படிச்சு ஒரு வேலைக்குப் போன்னு… இந்தக் காலத்து பொண்ணுங்களுக்கு வேலை மிக அவசியமான ஒண்ணு… சொல்லும் போது அதை கேட்கலை… இப்ப சொல்லி என்ன பயன்…?" பாட்டியின் அர்ச்சனை தாங்க முடியாமல்…

தாரா கண்ணை கசக்கி கொண்டு "ஏம்மா நான் இப்ப உங்களை எனக்கு கல்யாணம் பண்ணி வைன்னு சொன்னேனா…! கல்யாணம் ஆகாமல் இருந்தா என்ன? எனக்கு நீ சாப்பாடு போட மாட்டியா என்ன…?" என்று நீலிக் கண்ணீர் விட…

"எல்லாம் என் நேரம், எனக்கு வந்து வாச்சதும் சரி இல்லை… பொறந்ததும் சரி இல்ல… உன்னை எப்படி கரை ஏத்தப் போறேன்னு தெரியலியே…?" என்று வைதேகி வேறு பின் பாட்டு பாட… தனது கைப்பையை எடுத்துக் கொண்டு ரங்கா வெளியில் கிளம்பினாள்.

"ஏய் ரங்கா என்ன இது…? இரு கொஞ்சம்…" பின்னாலேயே

சென்ற வாசு கெஞ்ச…

“டேய், அவங்களை எல்லாம் பேசி முடிச்சு, அப்புறமா ஒரு முடிவு சொல்லச் சொல்லு… வரேன்… எப்படினாலும் இந்த மாப்பிள்ளைக்கு செய்யற அளவு எனக்கு வசதி இல்லை… நான் இன்னும் அங்க இருந்தா தேவை இல்லாத பேச்சுதான் வரும்… நான் வரேன்…” என்றவள் வண்டியை எடுத்துக் கொண்டு விருட்டென்று கிளம்பி விட்டாள். நேராக தங்களது அபார்ட்மெண்டுக்கு செல்ல நினைத்தவள் மனதை மாற்றிக் கொண்டு கடற்கரை சாலையில் வண்டியை பறக்க விட்டாள்.

கடற்கரையில் போய் கூட்டமில்லாத ஒரு இடத்தை தேர்ந்து எடுத்து அங்கு அமர்ந்தவள், பொங்கி வரும் கடலைகளை வேடிக்கை பார்க்கலானாள். அந்த கடலைகளை விட மிக வேகமாக கரையை கடக்க முனைந்த அவளது உணர்வுகளை சமன் படுத்த, எதையும் எண்ணாமல் இயற்கையின் சீற்றத்தை ரசிப்பதின் மூலம் வெற்றியும் கண்டாள்… என்னதான் பிரச்சினைகளை விட்டு விலக நினைத்தாலும், திரும்ப திரும்ப கரையை நோக்கி வரும் அலைகளைப் போல நித்தமும் பிரச்சினைகள் வருவது குறித்து கோபம் கொண்டாலும், அந்தக் கரையைப் போலவே தாங்கி நிற்கும் உறுதியான உள்ளம் படித்த ரங்கா ஒரு பெரு மூச்சுடன் எழுந்தாள்.

அவள் சிறிது தொலைவு நடப்பதற்குள் அவளை தேடி வந்த வாசு, “என்ன ரங்கா, இவ்வளவு நேரம் இங்கதான் இருந்தியா…! மணி என்னன்னு பாரு… ஒன்பது மணி ஆகுது… தனியா இங்க ரொம்ப நேரம் இருக்காதேன்னு சொல்லி இருக்கேன்ல…!” என்று கடிந்து கொள்ள…

அதில் புலப்பட்ட அக்கறையும், அன்பும் தன்னை பெற்றவளுக்கோ, அல்லது கூடப் பிறந்தவர்களுக்கோ இல்லை என்று நினைக்கையில் அவள் உதடுகளில் ஒரு விரக்தி புன்னகை தோன்றியது… அடுத்த நொடி, ‘என்ன இது… அவர்கள் குணம் தெரிந்தது தானே… இதற்கு போய் இன்னைக்கு என்ன புதுசா…!’ தன் நினைவுக்கு கடிவாளமிட்டவள்…

“வாசு பாட்டி வீட்டுக்கு வந்தாச்சா…?”

“வந்தாச்சு… ஆனால் உன் மேல கோபமா இருக்காங்க…!”

“எதுக்கு…? நான் அங்க சண்டை போடாம வந்ததுக்கா…?”

“ஏய் ஆனாலும் உனக்கு இருக்கிற அழும்பு இருக்கே…!? என்று சொன்ன நண்பனிடம்…

“அதெல்லாம் இருக்கட்டும். உனக்கும் கீர்த்திக்கும் எப்ப மேரேஜ்…?”

“இப்ப அதுக்கு என்ன அவசரம்…?”

“டேய், என்னை விட நீ இரண்டு வயசு மூத்தவன். அவளுக்கு இப்ப இருபத்தி நாலு இருக்கும்… இப்ப கல்யாணம் பண்ணாம வேற எப்ப கல்யாணம் பண்ணுவாங்க…?”

“அப்படி பார்த்தா கீர்த்தியை விட நீ இரண்டு வயசு பெரியவ… நீ கல்யாணம் பண்ணிக்கலையே…! ஏன்…?”

“ஏய் என்னைப் பத்தி தெரியாதா உனக்கு… என்னோட கமிட்மெண்ட்ஸ் தெரிஞ்சிட்டு ஏன் நீ இப்படி கேட்கிற…?”

“அதெல்லாம் தெரியாது… உன்னோட கல்யாணம் முடிஞ்ச பிறகுதான் எங்க கல்யாணம்…” என்று அவன் வாய் விட…

“அப்ப மகனே, உனக்கு இந்த ஜென்மத்தில் கல்யாண ப்ராப்தி நோ லஸ்து…” என்று சொன்னவள் கலகலவென்று சிரித்தாள்…

அவள் சிரிப்பொலி கேட்ட நடைபாதையில் நின்றிருந்த காரில் ஏறப்போன உபேந்திரா யார் சிரிப்பது என்று பார்க்க கடற்கரை மின் விளக்குகளின் வெளிச்சத்தில் மோகினியென தெரிந்த ரங்கா கண்ணில் பட்டாள்… ‘இந்த நேரத்தில் இவள் இங்கே தனியாக…’ என்ற யோசனையில் புருவம் சுருங்க…

“என்ன இந்தர்…? என்று அருகில் இருந்த ஒரு நவநாகரிக

யுவதி கேட்க… “ஒண்ணுமில்லை ஏறு… போவோம்…” என்று காரில் ஏறினான். அவன் காரை கிளப்பும் போது, முதலில் ரங்கா ஸ்கூட்டியில் செல்ல அவளை பின் தொடர்ந்து வாசு செல்வது கண்ணாடியில் தெரிந்தது…

# அத்தியாயம் 5

“அம்மா, கொஞ்சம் ரூபாய் வேணும்...!” கேசவன் அம்மாவிடம் கேட்டான்.

“எதுக்குடா...?”

“பள்ளிக் கூடத்துல டூர் கூட்டிட்டு போறாங்க... நானும் போகணும், எனக்கு பணம் வேணும்...”

“வீட்டு நிலைமை தெரிஞ்சும் போகணுமா கண்ணா...!”

“ஏன் வீட்டு நிலைமைக்கு என்ன...?” அதிகாரமாய் வந்தது அவன் குரல்...

“இல்லடா அம்மாவோட வருமானத்துலதான் எல்லாமே நடக்குது... இப்ப உனக்கு டூர் போக காசு கொடுத்தால் அப்புறம் இந்த மாசம் செலவுக்கு நான் கஷ்டப் படணும்...

அவள் சொன்னதும் கேசவன் முகத்தி தூக்கி வைத்துக் கொள்ள, மனசு கேளாமல் பணத்தை தூக்கி கொடுத்தாள். இப்போது எல்லாம் கேசவன் நடவடிக்கைகள் அவளுக்கு திருப்தி அளிக்கவில்லை... ஆனால் தோளுக்கு மேல் வளர்ந்த பிள்ளையை தட்டி கேட்டால், அவன் எதிர்த்து பேசினான். அப்போது தான்

ஒரு ஆண் குழந்தையை வழி நடத்த அவன் தந்தையின் கவனிப்பு அவசியம் என்று புரிந்தது…

இதை சொல்லி கேசவனை கண்டிக்க சொல்லி ராகவனிடம் கேட்ட போது அது எதிர்மறை விளைவை ஏற்படுத்தியது. அவன் தனக்கு ஏற்றார் போல பையனின் மனதை கெடுக்க, கேசவன் அம்மா பணம் தராமல் தன்னை கண்டிப்பதை அறவே வெறுத்தான்… கணவனால் விடியவில்லை, பையனாவது நல்ல நிலைமைக்கு வருவான் என்ற கனவு நிறைவேறுமா என்று ரங்கா கவலை படத் தொடங்கினாள்.

"*I am a women, Phenomenaly, Phenomenal women,That's me…*"

*-Maya Angelou*

இரண்டு நாட்களாக பாட்டி தன்னிடம் பேசவில்லை என்பது மனதுக்கு பாரமாய் இருக்க, அலுவலகத்திலும் அவளது வழக்கமான கலகலப்பு இல்லாமல் அவளது நண்பர்கள் குழம்பினர்… சாப்பிடும் போது லீலா, ரங்காவிடம் "ஏய் நான் உன்கிட்ட கேட்டா கோபம் வரும்… இருந்தாலும் மனசு கேட்கலை… என்ன மேட்டர்…? ஆள் டல்லா இருக்கே…?"

"அதெல்லாம் ஒண்ணுமில்லே…"

“அதானே உன்னை பத்தி சொல்லிட்டா, எங்க உன் கிரேடு இறங்கிடுமே...!” என்று வெளிப்படையாகவே சொல்ல...

அதைப் பற்றி கவலைப் படாமல், “ஏய் மகேஷ், வினோத் உங்களுக்கு தெரிஞ்ச ஏதாவது நல்ல பையன் இருந்தா சொல்லுங்க...?”

“எதுக்கு...?”

“என் தங்கைக்கு மாப்பிளை பார்த்துட்டு இருக்காங்க... அவளுக்குத்தான். வசதி வாய்ப்பு இதெல்லாம் வேணும்னு அவசியம் இல்லை... ஆனால் நல்ல பையனா இருக்கணும்... ஏதாவது ஒரு வேலையில் இருக்கணும்...”

“உங்க ஆட்கள் அப்படின்னு எதுவும் கண்டிசன் இருக்கா...?”

“அப்படி எல்லாம் இல்லை... ஒரு வேலையில இருக்கணும்... முக்கியமா நல்ல பையனா இருக்கணும்... அவ்வளவு தான்...”

“உன் தங்கை என்ன படிச்சிருக்கா...” லீலா கேட்க...

“அவ ப்ளஸ் டூ வரை படிச்சிருக்கா... அவ்வளவுதான்... என்னால முடிஞ்சது செய்வேன்...!” என்று தெளிவாய் அவள் நிலையை சொல்லி விட... மற்றவர்கள் ஓரளவு அவள் நிலைமையை புரிந்து கொண்டனர். ரங்கா எப்போதுமே அவளைப்

பற்றி அவ்வளவாய் கூறாததால், இன்று அவளாய் வாய் திறந்து கேட்டது அவர்களுக்கு அதிசயமாய் இருந்தது…

சரவணனும் அவளும் சேர்ந்து பார்க்கும் அந்த டைவர்ஸ் வழக்கு சம்பந்தமாக அந்த பெண்ணும் அவள் அப்பாவும் வந்திருந்தனர்…

“சொல்லுங்க மேடம் உறுதியா உங்களுக்கு டைவர்ஸ் வேணுமா…?”

“ஆமாம் மேம்… அவங்க எங்க கிட்ட மறைச்சு வச்சு கல்யாணம் பண்ணிட்டாங்க மேடம்… அவங்க பையனுக்கு இப்படி ஒரு குறை இருக்கிறது அவங்களுக்கு தெரிஞ்சு தான் இருக்கு… ஆனால் இவ நல்ல வேலையில இருக்கிறது அவங்களுக்கு கண்ணை உறுத்தி இருக்கு… பையன் தனியார் கம்பெனில தான் வேலை பார்க்கிறான்… இருந்தாலும் நல்ல குடும்பமா இருக்கேன்னு தான் கல்யாணம் பண்ணி வச்சேன்… ஆனால் இப்படி ஆகி விட்டதே…! பெண்ணை பெற்றவர் நொந்து போய் பேச…

“ராஸ்கல்ஸ்… இவனுகளை எல்லாம் நிக்க வச்சு சுடணும்…” என்று பல்லை கடித்தவள்…

“கவலைப் படாதீங்க சார்… ஒரே சிட்டிங்கல டைவர்ஸ் வாங்கிடலாம்… சரவணன் நீங்க அந்த பையனை போன்ல

கூப்பிட்டு பேசுங்க... ஒரே சிட்டிங்தான்... வேற எதுவும் அவன் வாய திறக்க கூடாது..."

"ரொம்ப நன்றி மேடம்..." அந்த பெரியவர் அவளிடம் சொல்ல...

"நன்றி எல்லாம் வேண்டாம்... இனிமேல்தான் நீங்க எல்லாத்தையும் தைரியமா பேஸ் பண்ணனும்... முடிஞ்சவரை உங்க பொண்ணை மத்தவங்க ஏதும் சொல்லிடாம பார்த்துக் கோங்க... அவளுக்கு இன்னொரு வாழ்க்கை அமைச்சு கொடுக்கும் போது ரொம்ப கவனமா இருங்க..." அவளது அக்கறை கலந்த பேச்சும், தெளிவும் அவருக்கு பிடித்து விட, "கண்டிப்பாம்மா..." என்று கூறி விடை பெற்றார்.

அவர் சென்றதும் "என்ன ரங்கா இவ்வளவு கோபம்...?"

"பின்ன கொஞ்ச சொல்றியா...? ஆண்மை இல்லைன்னு தெரிஞ்சும் ஒரு பொண்ணோட வாழ்க்கையை கெடுக்க அவனுக்கு எப்படி மனசு வந்தது. மனசாட்சி இல்லாத ஜென்மங்கள்... அவன் மட்டும்தான் பார்த்தால் அவன் குடும்பமும் சேர்ந்து பண்ணி இருக்காங்க... இதே ஒரு பொண்ணு வீட்டில பண்ணினா ஏத்துக்குவாங்களா...? பிரிச்சு மேஞ்சுருவாங்கல்ல... ச்ச... என்ன மாதிரி ஜென்மங்கள்...!" பொங்கி விட்டாள்...

"ஓகே. கூல்... கூல்... நான் அவன் கிட்ட பேசிட்டு சொல்றேன்... ஜட்ஜ் பாத்து பேசி என்னைக்குன்னு முடிவு பண்ணி, ஒரே நாள் வரச்சொல்லி முடிச்சு வச்சிரலாம்... நீ கிளம்பு..." அவளை கிளப்பி விட்டான்.

வீட்டுக்கு வேண்டிய காய்கறிகள், பழங்கள், மளிகை சாமான்கள் என்று வாங்கிக் கொண்டு வீடு செல்ல இரவு எழு மணி ஆகி விட்டது. உள்ளே நுழைந்தவள் பசியாய் இருக்கவே கிச்சனுக்குள் சென்று என்ன இருக்கிறது என்று பார்த்தாள். இவளுக்கு பிடித்த தவலை வடையும், சட்னியும், பிளாஸ்கில் காபியும் இருப்பது கண்டு, அதை ஒரு சிறிய பிளேட்டில் எடுத்துக் கொண்டு ஹாலுக்குள் வந்தாள்.

ஹாலில் உட்கார்ந்து டிவி பார்த்துக் கொண்டிருந்த பாட்டியின் பக்கத்தில் வந்து அமர்ந்தவள், "என்ன பாட்டி சீரியலா... மௌன ராகமா...?" என்று கேட்க... அது காதில் விழாதது போல மௌனமாய் அமர்ந்திருந்த பாட்டியிடம்... வேண்டுமென்றே...

"என்ன கோபம்... சொல்லு ரங்கா...

**என்னை பார்த்து... கோபப் பட்டால்...**

**தாங்கலாமா... தாங்கலாமா...**

என்று ராகம் போட்டு பாட ஆரம்பிக்க... சிரிப்பு வந்தாலும்

அடக்கிக் கொண்டு அவள் பாடுவதை மௌனமாய் ஓரக் கண்ணால் பார்த்துக் கொண்டு இருந்த பாட்டி… அதையே அவள் திருப்பி, திருப்பி பாடுவதைக் கண்டு, டிவியை பட்டென்று அணைத்தார்.

“அய்யோ ஏன் பாட்டி சீரியலை ஆப் பண்ணிடீங்க…? உங்களை மாதிரி ஆட்களை நம்பித்தான் எல்லா டி.வி சேனல் பொழைப்பும் ஓடுது… நீங்க இப்படி பண்ணுனா எப்படி…?” என்று அதற்கும் ஒரு காரணம் கேட்க…

“அது இருக்கட்டும். அதுதான் ஒரு சீனை மூன்று தடவை மாத்தி மாத்தி போட்டு காட்டுறாங்களே… அப்ப பார்த்துக்கிறேன்… எனக்கு இப்ப ஒரு உண்மை தெரிஞ்சாகணும்…”

“என்னது முதல் மரியாதை பாணியா…?”

“அது என்னை முதல் மரியாதை…?”

“அதுலதான் இந்த வசனம் வரும்… அதான் கேட்டேன்…” என்று அவள் சிரிக்காமல் சொல்ல…

சட்டென்று சிரித்த பாட்டி, “ஏய் உனக்கு இன்னும் அந்த குறும்பு போகவே இல்லடி…”

“அது எப்படி போகும்… கூடவே பொறந்தது இல்லையா…!”

“சரி, விசயத்துக்கு வரேன்…”

“நீங்க இன்னும் வரவே இல்லையா… எங்க இருக்கேள்…?” என்று அதற்கும் கலாய்க்க…

எட்டி பேத்தியின் முதுகில் ஒரு அடி வைத்தவள், கொஞ்ச நேரம் வாயை மூடிட்டு நான் சொல்றதை கேட்கப் போறியா இல்லையா…?” எனவும்…

“ப்ளீஸ் ஜஸ்ட் எ மினிட்… காபியை மட்டும் குடிச்சிக்குறேன்…” என்றவள் காபியை கடகடவென்று குடித்து விட்டு, “கையை கட்டி வாயை பொத்தி உட்கார்ந்து கொண்டு, சொல்லு என்கிற மாதிரி தலையை ஆட்டினாள்.

அவளின் வம்பு புரிந்த பாட்டியும், இதற்கு ஏதாவது சொன்னால், இப்போதைக்குள் நாம் நினைத்ததை அவளிடம் பேச முடியாது என்று புரிந்து கொண்டு, “ரங்கா நீ எப்ப கல்யாணம் பண்ணிக்கப் போறே…? நீ சரின்னு சொன்னால் நான் உனக்கு மாப்பிளை பார்க்கிறேன்…

உன் அம்மாவும் அப்பாவும் அதைப் பத்தி யோசிக்க மாட்டா… ஏன்னா நீ இந்த வீட்டை விட்டு போயிட்டேன்னா அவங்க பாடு திண்டாட்டமா ஆயிடும்… அதனால் நானே உனக்கு மாப்பிளை பார்த்து கல்யாணம் பண்ணனும்னு நினைக்கிறேன்…!”

என்று கேட்டதற்கு பதில் இல்லாமல், “ம்கூம் ம்கூம்…” ன்ற சத்தம் தலையாட்டலோடு வந்தது…

“ஏய் என்ன இது. நான் கேட்டுண்டே இருக்கேன். நீ பதில் சொல்லாம தலையாட்டிட்டு இருக்கே… அப்ப உனக்கு சம்மதமா… மாப்பிள்ளை பார்க்கவா…?” என்று கேட்டதும் தான் தாமதம்…

‘ஆஹா, நாம் வாயை திறக்கலைன்னா கதை கந்தலாயிடும்’ என்று மூளை அபாயமணி அடிக்க… “பாட்டி இப்ப நான் உங்க கிட்ட எனக்கு கல்யாணம் பண்ணி வைங்கன்னு கேட்டேனா…?” என்று தனது அபிநயத்தை விட்டு, இயற்கையான குணத்தை காட்ட…

“ஏண்டி எந்த வயசுப் பொண்ணாவது எனக்கு கல்யாணம் பண்ணி வைங்கன்னு, கேட்குமா…? பெரியவங்கதான் புரிஞ்சுகிட்டு கல்யாணம் பண்ணி வைக்கணும்… எனக்கெல்லாம் எங்க அப்பா என்கிட்டே கேட்டுட்டா கல்யாணம் பண்ணி வச்சார்… மாப்பிளை பார்த்துட்டு வந்து இதுதான் மாப்பிளை. இந்த தேதில உனக்கு கல்யாணம் னார்… அப்படித்தான் நடந்தது…!”

“இதுக்கு உங்கப்பா உங்களுக்கு கல்யாணம் பண்ணாமலே இருந்திருக்கலாம்…!”

“ஏன்…? என்ன குறை இப்ப எனக்கு…?”

“ஏன் பாட்டி…? தாத்தாவாலும் நீங்க சுகப் படலை… உங்க பையனாலும் நீங்க சுகப் படலை… இப்படி ஒரு வாழ்க்கையை உங்க அப்பா அமைச்சுக் கொடுக்க அவ்வளவு அவசரப் பட்டு இருக்க வேண்டாம்…”

”இப்ப உன்னாலே நான் சுகப் பட்டு இருக்கேனே… இதுக்காக கூட அந்த கல்யாணம் எங்க அப்பா பண்ணி வச்சிருக்கலாம் இல்லியா…?”

“பாட்டி உங்க கிட்ட பேசி ஜெயிக்க முடியாது… எனக்கு கல்யாணம் வேண்டாம். நான் கல்யாணமே பண்ணிக்கப் போறது இல்லை…”

“ம்ம்… அந்தக் காலம் மாதிரி இப்ப இல்லை. உங்க கிட்ட அனுமதி கேட்டுதான் கல்யாணம் பண்ண வேண்டி இருக்கு. அதுல கூட நீங்க எப்ப சொல்றேளோ, அப்பத்தான் பெத்தவா ஜாதகத்தை கையில தூக்க வேண்டி இருக்கு… அதுலேயும் இன்னும் சிலருக்கு அந்த பாக்கியம் கூட இல்லை…

நானே மாப்பிள்ளை பார்த்துட்டேன்… அல்லது பொண்ணு பார்த்துட்டேன்… நீங்க கல்யாணம் மட்டும் பண்ணி வைங்க… அல்லது ஆசிர்வாதம் மட்டும் பண்ணுங்கன்னு சொல்ற காலமா

இருக்கு… நீ அப்படி ஒரு மாப்பிளை பார்த்து வைத்து இருந்தாலும் எனக்கு சந்தோசமே…”

“பாட்டி எனக்கு உங்க வாழ்க்கையை பார்த்த பிறகு கல்யாணம் என்கிற அமைப்பு மேல பெரிய நம்பிக்கை எல்லாம் இல்லை… அதுவும் இப்ப வக்கீல் வேலைக்கு போய் அங்க நடக்கிற வழக்குகளை பார்த்த பிறகு கல்யாணம் பண்ணற எண்ணமே இல்லை. ப்ளீஸ் என்னை விட்டுடு…

உன்னோட இன்னொரு பேத்திக்கு மாப்பிளை பார்க்க சொல்லி என்னோட பிரண்ட்ஸ் கிட்ட கேட்டு இருக்கேன். அவளுக்கு கல்யாணம் பண்ணி சந்தோசப்படு… அடுத்து உன் பேரன்… உன்னோட சந்தோசத்துக்கு நம்ம வீட்டில இரண்டு கல்யாணம் இருக்கு…” என்று சொன்னவள் அடுத்து எதுவும் பாட்டி கேட்பதற்குள் எழுந்து சென்றாள்…

அவள் சென்று சற்று நேரம் யோசனையிலே கழித்த பாட்டி, ‘சரி விட்டு பிடிப்போம்…’ என்ற முடிவுக்கு வந்தார்…

☆☆☆☆☆

இரண்டே நாட்களில் அந்த விவாகரத்து வழக்கு கோர்டுக்கு வந்தது… சரவணனும், ரங்காவும் அந்த வழக்கில் ஆஜராக

கோர்ட்டுக்கு சென்றனர். அந்தப் பெண்ணும், அவளது தந்தையும், தனியாக வந்து இருந்தனர்… பையன் மட்டும் தனியாக வந்து இருந்தான்…

இருவரையும் கூப்பிட்டு விசாரித்த நீதிபதி காரணம் முறையாக இருக்கவே உடனே விவகாரத்து வழங்கினார். உண்மை தெரிந்தும், மறைத்து கல்யாணம் பண்ணிய குற்றத்திற்காக அத்தனை நகை, ரொக்கம் எல்லாவற்றையும் திருப்பி கொடுக்க வேண்டும் என்றும், அது மட்டும் அல்லாது திருமணத்திற்காக ஆன செலவு அத்தனையையும் திருப்பி கொடுக்க வேண்டும் என்று உத்தரவிட்டார்.

தீர்ப்பு முடிந்து வெளியில் வந்த அந்த பெண், மேடம் ”ரொம்ப தாங்க்ஸ், நான் விவகாரத்து மட்டும் தான் எதிர் பார்த்தேன். நீங்க எல்லா பணத்தையும் வாங்கி கொடுத்துட்டீங்க… உண்மையிலேயே எங்க அப்பா என்னோட கல்யாணத்துக்காக நிறைய பணம் செலவு பண்ணினார்… இன்னும் எனக்கு அடுத்து ஒரு தங்கச்சி இருக்கா…

அவ கல்யாணத்துக்கு என்ன பண்ணறதுன்னு யோசிச்சுட்டு இருந்தோம்… எல்லாரும் வேற வக்கீல் கிட்ட போங்க… இவர் டைவர்ஸ் கேஸ் எடுக்க மாட்டார்னு அட்வைஸ் பண்ணுனாங்க… ஆனால் அங்கிள் அப்பாவோட பிரண்ட். அதனால் அவர் கிட்ட

வந்தோம்… எங்களுக்கு நீதி கிடைச்சிட்டு மேடம்…” அவள் கண்கலங்க கூறிய போது…

“ச்ச என்ன இது. உங்க வாழக்கையில நீங்க எந்த விசயத்துக்கும் கண்கலங்கவே கூடாது. நடந்ததை கெட்ட கனவா நினச்சு மறந்திடுங்க. முடிஞ்சா நீங்க வேலை செய்யற இடத்தை மாத்தி வேற இடத்துக்கு போய் வேலை செய்ங்க… ஆல் தி பெஸ்ட்…” என்று அந்த பெண்ணை வாழ்த்தி, அவளை அணைத்து தேறுதல் சொல்லிய போது அவளின் முன்னாள் கணவன், இவர்கள் முன்னாடி வந்து…

“என்னடி விவகாரத்து வாங்கிட்டேன்னு ரொம்ப தைரியமா இருக்கியா…? இனிதான்டி உனக்கு இருக்கு… நீ வேற எவனையாவது கல்யாணம் பண்ணிருவியான்னு நான் பார்க்கிறேன்… இந்த ஜென்மத்துல உன்னை நான் வாழ்வே விட மாட்டேன்டி…” என்று சவால் விட…

ஒரு வார்த்தை பேசாமல், ‘பளார்…’ என்று ஒரு அறை வைத்தாள் ரங்கா… அப்போது தான் தனது சேம்பரில் இருந்து வெளி வந்து, வழக்கு நடக்கும இடத்திற்கு வராண்டா வழியாக சென்று கொண்டிருந்த உபேந்திரா இந்த கண் கொள்ளா காட்சியை கண்டான்.

அதற்குள் அங்கே ஓடி வந்த சரவணா, அவள் கணவனை அங்கிருந்து நகர்த்தி கொன்டு போய் தள்ளி விட்டு விட்டு, “என்ன சார் உள்ள வாங்கினது பத்தாதா… ஒழுங்கா இங்கே இருந்து கிளம்புங்க. இல்லேன்னா போலீஸ் கேஸ் ஆயிடும்…” என்று எச்சரித்து அவனை அங்கிருந்து கிளப்பி விட்டான். அவன் தனது கன்னத்தை தடவிக் கொண்டே ரங்காவையும், அந்தப் பெண்ணையும் முறைத்துக் கொண்டே செல்ல…

ரங்காவிடம் வந்த சரவணா, “என்ன இது…? இப்ப எதுக்கு அவனை அடிச்சீங்க…?”

“அவனை ஒரு அடி அடிச்சதோடு விட்டேனேன்னு, சந்தோசப் படுங்க… இன்னும் எதாவது சொல்லி இருந்தான் கால் கிடக்கிறதை கழற்றி நாலு சாத்து, சாத்தி இருப்பேன்…” என்று கொதிக்க…

“வேண்டாம். ஒருத்தனை மாதிரி ஒருத்தன் இருக்க மாட்டான். காலம் ரொம்ப கெட்டு கிடக்கு. நாளைக்கு எதாவது வம்பு பண்ணினால், நமக்குதான் கஷ்டம்…”

“இப்படி எல்லாரும் நினக்கிறதுனால தான், இவனை மாதிரி ஆள்களுக்கு துளிர் விட்டு போகுது… அப்ப யார்தான் இவனுகளுக்கு மணி கட்டுறது…?”

“நம்ம வேலை அது இல்லையே. கேஸ் வந்தா ஜெயிச்சு கொடுக்கிறது மட்டும் தான் நம்ம வேலை... நீங்க முதல்ல கிளம்புங்க...” என்று அவளை கிளப்பி விட்டான். அத்தனையையும் வராண்டாவில் சற்று தள்ளி நின்று தனது கட்சிக்காரரிடம் பேசிக் கொண்டே, உபேந்திரா கவனித்து கொண்டு இருந்தான்.

ஒரு வழியாய் அவள் கிளம்பியதும் தான் அந்த இடத்தை விட்டு சரவணா நகர்ந்தான். அலுவலகத்திற்கு மாலை வந்த ரங்கபாஷ்யம், “என்னம்மா நீயும் சரவணாவும் சேர்ந்து இன்னைக்கு அந்த டைவர்ஸ் கேஸ் நல்லபடியா முடிச்சு கொடுத்தீடீங்க போல இருக்கு...!”

“ஆமா சார்... ஆனாலும் ரொம்ப கஷ்டமா இருக்கு சார்... இப்படியும் மனுசங்க இருக்காங்களே...!”

“என்னம்மா பண்ணறது...? காலம் அப்படி இருக்கு...? ஆமா உன்னோட தங்கைக்கு எதாவது வரன் அமைஞ்சுதா...? அவள் வீட்டு விவகாரம் அவருக்கும் தெரியும் என்பதால் கேட்டார்.

“ஒரு வரன் வந்தது... ஆனால் ரொம்ப எதிர்பார்க்கிற மாதிரி இருக்கு. அதான் வேண்டாம்னு சொல்லிட்டேன்...”

“ஏம்மா, நான் ஒரு யோசனை சொல்றேன். கேட்கிறியா…?”

‘சொல்லுங்க சார்…”

“நம்ம சரவணா பத்தி என்ன நினைக்கிறே… நல்ல பையன். அம்மாவும், ஒரு தங்கையும் மட்டும் தான்… மேலும் நம்ம ஆட்கள் வேற. நான் சொன்னா அவங்க வீட்டில கேட்பாங்க… நான் சொல்லட்டுமா…?”

“ஒ.கே கேட்டு சொல்லுங்க. எங்க வீட்டு நிலைமையும் உங்களுக்கு தெரியும். அதுக்கு ஏத்த மாதிரிதான் பண்ணுவோம். அதுக்கு ஒ.கேன்னா, நான் என் தங்கை போட்டோவை கொடுக்கிறேன். பொண்ணு பிடிச்சு இருந்ததுன்னா நேர்ல பார்க்கலாம் சார்… இல்லேன்னா தேவை இல்லாத மனக் கஷ்டத்தை தவிர்க்கலாம் இல்லியா…!”

“அதுவும் சரிதான்… நான் கேட்டு சொல்றேன்…” என்றவர் மறுநாளே அவளை அழைத்து விஷயத்தை சொல்லி விட்டார்.

“அவனும், அவங்க வீட்டிலேயும் சம்மதம்னு சொல்லிட்டாங்க. பொண்ணு போட்டோ காட்டவான்னு கேட்டதற்கு, “அதெல்லாம் தேவை இல்லை. பொண்ணு எப்படி இருந்தாலும் நான் கல்யாணம் பண்ணிக்கிறேன்… அவங்க என்னை வேண்டான்னு சொல்லாம இருந்தா சரி… என்னோட குடும்பத்தை பத்தி சொல்லிடுங்கன்னு

சொல்லிட்டான். உனக்கு தெரியும் இல்லையா, அவன் தங்கையும், அம்மாவும் அவன் பொறுப்புதான்… அதை தெளிவா சொல்லிடு உங்க வீட்டில…!”

“ஒ.கே சார்… நானும் வீட்டில கேட்டுட்டு பதில் சொல்றேன்…” என்றவள் பாட்டிக்கு போன் செய்தாள்.

“பாட்டி நீங்களும், வாசுவும் ஈவ்னிங் அம்மா வீட்டுக்கு வந்துடுங்க… ஒரு முக்கியமான விசயம் பேசணும்… அப்பாவையும் வரச் சொல்லிடுங்க…” என்றவள் தன்னுடைய வேலை முடிந்ததும், தனது டூவீலரில் கிளம்பினாள்.

வீட்டுக்கு செல்லும் வழியில், அடுத்து வந்த சிக்னலில், இவள் வண்டியை ஒட்டி ஒரு புதிய மாடல், சிவப்பு வண்ண எரிடிகா கார் ஒன்று வந்து நின்றது. அதைப் பார்த்ததும் தேவை இல்லாமல் இவளுக்கு உபேந்திராவின் நினவு வந்தது. ‘அவனது வண்டி புதிது என்பதால் தான், அது சேதமாகிவிட்டது என்றதும் அவனுக்கு கோபம் வந்தது… இப்போது இன்சூரன்ஸ் வேறு கிடைத்து இருக்காது… சரி பண்ண நிறைய பணம் ஆகி இருக்கும்…’ என்று யோசித்தவள்…

‘அதுக்கு என்ன செய்ய முடியும். நாம கேட்கும்போதே ஞாயமாக ஒத்துக் கொண்டிருந்தால், இப்போது இந்த நிலைமை

இல்லை, அதற்கு என்ன செய்வது, தனக்குள், தானே விவாதித்துக் கொண்டவள், ஒரு பெருமூச்சுடன் சிக்னலை கவனிக்க துவங்கினாள்.

ஆனால் அவள் அறியாதது ஒன்று உண்டு. அந்தக் காரிலும் உள்ளே இருந்தது இரு ஆண்கள். ஒன்று உபேந்திரா, இன்னொன்று அவனது தொழில் முறை நண்பர் ஒருவர்… அவர் கார் அது. உபேந்திராவை அவரது வேலை விசயமாக ஒரு இடத்திற்கு அழைத்து சென்று கொண்டு இருந்தார்…

உபேந்திரா இருந்த பக்கத்தில், மூடிய கதவின் கண்ணாடி வழியே பார்த்ததில், அவள் அந்தக் காரை பார்த்ததும் அவள் முகத்தில் ஓடிய முக பாவனைகளும், பின்னர் ஒரு பெருமூச்சுடன் முகத்தை திருப்பி கொண்டதும், ‘காரைப் பார்த்து, ஆசைப் படுகிறாள்…’ என்று தவறாக அவளை கணித்துக் கொண்டான்.

வீடு சென்றதும் ஏற்கனவே சொல்லி வைத்தபடி எல்லோரும் அங்கு இருக்க, தனது சீனியர் வக்கீல் சொன்னதை சொன்னாள்… “பாட்டி எனக்கு தெரிஞ்சு நல்லவர். திறமையானவரும் கூட… எனக்கு சம்மதம் தான் ஆனால் உங்க கிட்ட கேட்டுட்டு சொல்றேன்னு சொல்லி இருக்கேன்…!”

“உங்க சீனியரே சொல்லும் போது பிரச்சினை இல்லையே…?

அப்புறம் என்ன…? பாட்டியும் வழி மொழிந்தாள்.

“மாப்பிள்ளை எவ்வளவு சம்பளமாம்…?’ வெத்தலையை மென்று கொண்டே, கால் மேல் கால் போட்டுக் கொண்டு கேசவன் வினவ…

“நிச்சயமாக உங்களை மாதிரி இல்ல… கட்டயமா ஏதாவது சம்பாதிப்பார்…!” நறுக்கு தெரித்தார் போல்… ரங்கா பேசவும்…

“அப்ப நான் சம்பாதித்து உங்களுக்கு கொடுக்கலைன்னு சொல்றியா…?” என்று தனது விதண்டாவாதத்தை ஆரம்பிக்க…

“நான் சொல்லிக் காட்டணும்னு அவசியம் இல்லை… இங்க உள்ள எல்லாருக்குமே அது நல்ல தெரியும்…

“ரங்கா, நீ பேசாம இரு… கேசவா மாப்பிளை வக்கீல்… மாத சம்பளம் லிமிட் கிடையாது. அவரோட திறமையை பொறுத்து அவருக்கு வருமானம் கூடும். ஏன் நம்ம ரங்கா என்ன மாத சம்பளமா வாங்கறா…? அவளை மாதிரி தான் மாப்பிளையும்… நல்ல பையன்…” என்று சொல்ல…

“ஆனால் மாப்பிள்ளைக்கு அப்பா இல்லையே. அப்ப எல்லாம் இவர்தானே பார்க்கணும்…”

“அப்ப, நீ இருந்தும் இப்ப எல்லாவற்றையும் உன் பொண்ணு

பார்க்கலியா…? அப்ப உங்களுக்கு மட்டும் ஒரு நியாயம். உங்க பொண்ணை கட்ட வர்றவன் மட்டும் அவன் குடும்பத்தை பார்க்கக் கூடாதுங்கிறது என்ன மாதிரி நியாயம்னு எனக்கு புரியலை…!” அதுவரை அமைதியாக பதில் சொன்ன பாட்டி, கோபமாய் பேச…

ரங்கா, “அம்மா இந்தாப் பாரு, தாரா ப்ளஸ் டூ தாண்டலை. இந்த படிப்புக்கு நல்ல பெரிய உத்தியோகத்துல இருக்கிறவன் எல்லாம் தாராவை ஒத்துக்க மாட்டான். எப்படின்னாலும் சாதாரண வேலை பார்க்கிற, அல்லது ஒரு கடையில் இருக்கிற மாப்பிள்ளை தான் கிடைக்கும். அவ நினைச்ச மாதிரி டீசன்ட்டா இருக்க முடியாது. இது அப்படி இல்லை. சரவணன் நல்ல குணம். சொல்லப் போனா தாராவை விட நல்லவன். இந்த மாப்பிளை கிடைச்சா அவ அதிர்ஷ்டம்…

ஆனால் ஒண்ணு, கல்யாணத்துக்கு அப்புறம் தன்னோட குணத்தை அங்க காட்டாம இருந்தா சரி. இந்த மாப்பிளை என்றால் என்னால் இந்தக் கல்யாணத்தை நடத்த முடியும். இல்ல வேற மாப்பிளை தான் வேணும்னா, நீ, அப்பா, மோகன் மூணு பேரும் பார்த்து முடிவு பண்ணி, நீங்களே நடத்துங்க. நாங்க வந்து ஆசிர்வாதம் பண்றோம்… வாங்க பாட்டி கிளம்பலாம்…” என்று பேச்சை முடித்து விட்டு கிளம்பு ஆயத்தமானாள்.

# அத்தியாயம் 6

“அப்பாவுக்கு ரொம்ப உடம்புக்கு முடியலை. நான் ஊருக்கு போய் அவரைப் பார்த்துட்டு வரேன்...!”

“என்ன செய்து அந்தாளுக்கு...?”

“கொஞ்சம் மரியாதையா பேசுங்க... என்ன இருந்தாலும் வயசுல மூத்தவர்...!”

“நான் எதுக்கடி மரியாதை கொடுக்கணும் அந்தாளுக்கு! அந்தாள் எனக்கு என்ன செஞ்சிட்டான்...” என்று ராகவன் ஆரம்பிக்க... பதில் சொல்லாது வெளியேறினாள்.

“போறாப் பாரு உங்கம்மா... உடம்பு பூரா திமிர்... தான் சம்பாதிக்கிறோம்கிற திமிர்...!” என்று ராகவன் மேலும் வசை பாட...

“விடுங்கப்பா. உங்களுக்கு எப்பவும் இதே வேலையா போச்சு. ரூபாய் கொடுங்க நான் காலேஜுக்கு போகணும்...”

“ஏன் உங்கம்மா தான் உனக்கு சைக்கிள் வாங்கி கொடுத்து இருக்காளே...! அதில போக வேண்டியதுதானே...!”

“எல்லாரும் சிரிக்கிறா… நான் மோட்டார் சைக்கிள் தான் கேட்டேன். அம்மாதான் என்கிட்டே அவ்வளவு பணம் இல்லைன்னு சைக்கிள் வாங்கி தந்துட்டாங்க… ரூபாய் இருந்தால் கொடுங்க… நான் பஸ்ல போய்கிறேன்…!”

“ஏன் இந்த ரூபாவை உங்க அம்மாகிட்ட கேட்க வேண்டியதுதானே…?”

“பேசாம நடந்து போன்னு சொல்லிடுவாங்க… நான் படிச்சு வேலைக்கு போனப்புறம், என் இஷ்டப்படி இருப்பேன். இப்ப அவங்க பேச்சுதான் கேட்க வேண்டி இருக்கு…!” என்று கூறி விட்டு, அப்பாவிடம் இருந்து செலவுக்கு பணம் வாங்கிய பின்னரே சென்றான்.

பேருந்து நிலையம் வரை நடந்து சென்று, பேருந்தில் ஏறி உட்கார்ந்த ரங்காவிற்கு மனது வலித்தது. ‘என்ன மாதிரி மனிதன் இவன் என்று, கணவன் மேல் வெறுப்பு உண்டாயிற்று… தனது தந்தை இது நாள் வரை ஒரு தடவை கூட ராகவனை மரியாதைக் குறைவாய் நடத்தியதில்லை, என்ற நினைவு வந்ததும், அவருக்கு இப்படி ஒரு மருமகனா, என்ற நினைவும், மனைவி என்பவளை, போகப் பொருளாகவும், சம்பாதிக்கும் இயந்திரமாகவும் நினைக்கும் இவர்களைப் போன்றவர்களுக்கு, அவளுக்கும் ஒரு மனது

இருக்கும், என்பதே நினைவில் இருக்காது போல’ என்ற எண்ணங்களோடு தனது அப்பாவை பார்க்க ஊருக்கு சென்றாள்.

***“Real men treat women with diginity and give them the respect they deserve”***

***-Prince Harry***

சரவணன் தன் தாய் ராஜத்துடனும், தங்கை சுசித்ராவுடனும் பெண் பார்க்க வந்து இருந்தான். அவனது தாயும், சகோதரியும் மிகவும் அமைதியானவர்களாகவும், பண்பானவர்களாகவும் தெரிந்தார்கள். வைதேகிக்கு அவர்களைப் பார்த்தவுடன் நிம்மதி ஏற்பட்டது. ஒரு வேளை அவர்கள் நிறைய கேட்பார்களோ என்று பயந்தது போக, இவர்கள் தான் என்ன சொன்னாலும் ஏற்றுக் கொள்வார்கள் என்ற எண்ணம் மனதில் தோன்றி மறைந்தது. அதை விட முக்கியமாக, ‘தன் மகளோட ராஜியத்துக்கு எந்தக் குறைவும் வராது என்பதுதான்…’ அந்த எண்ணமே அவள் முகத்தில் மகிழ்ச்சியை தோற்றுவிக்க, வந்தவர்களை அவள் உற்சாகத்துடன் வரவேற்றாள்.

தாராவை எல்லாருக்கும் மிகவும் பிடித்து விட்டது… “என்ன எதிர் பார்க்கிறீர்கள்…? என்று பாட்டி சம்பிரதாயமாக கேட்க, ராஜம் பெருந்தன்மையாக உங்க விருப்பம், உங்க பெண்ணுக்கு

நீங்க செய்றீங்க...? செய்ங்க...” என்று சொல்லிவிட்டார்.

“அப்போ பிரச்சினை இல்லை... பேசாமல் ஒரு கோவிலில் வைத்து தாலி கட்டி கூட்டிட்டு போயிடுங்களேன். எங்களுக்கும் செலவு மிச்சம்...” என்று ராகவன் தனது விஷமத்தை காண்பிக்க, ராஜத்துக்கு முகம் சுண்டி போயிற்று...

“நீங்க தப்பா நினைக்காதீங்க சம்பந்தி அம்மா... அவனுக்கு பேசும் வகை தெரியாது. அவன் சார்பில் நான் உங்க கிட்ட மன்னிப்பு கேட்டுக்கிறேன். அதெல்லாம் எங்க பொண்ணை சும்மா அனுப்பிட மாட்டோம். எங்க ரங்காவால என்ன செய்ய முடியுமோ... அதை செய்துதான் அனுப்புவா...!” என்று பாட்டி சொன்னதும் தான் ராஜம் முகத்தில் கொஞ்சம் தெளிவு பிறந்தது. விரைவிலேயே முகூர்த்தம் வைத்துக் கொள்ளலாம், என்று சொல்லி விட்டு அவர்கள் அனைவரும் விடை பெற்றனர்.

அவர்கள் சென்றதும், “என்ன ராகவா வந்தவங்க கிட்ட இப்படியா பேசுவே...?”

“நான் என்ன தப்பா பேசிட்டேன்...? அவங்கதான் ஒண்ணும் வேணான்னு சொன்னாங்க...! அப்போ கோவில்ல கல்யாணம் பண்ணலாமான்னு கேட்டேன்... என்ன தப்பு...!”

“அவங்க பெருந்தன்மையா இருக்கிற மாதிரி நாமும் இருக்கணும். இது ஏன் உனக்கு தெரிய மாட்டேங்குது…!”

“பாட்டி தெரியாம இல்லை. திமிர்… அவரைக் கேட்காம எல்லாம் செய்யறோமேன்னு வர்ற ஆம்பளைத் திமிர்… அம்மா, தாரா இரண்டு பேரும் நல்லாக் கேட்டுக் கோங்க… அப்பாவோ, அல்லது மோகனோ இந்தக் கல்யாணம் முடியிற வரை வாயை திறக்கக் கூடாது… இல்ல இப்படித்தான் நாங்க பேசுவோம்னு சொன்னா, அவங்க இரண்டு பேரையும் வைத்து இந்தக் கல்யாணத்தை நடத்திக் கோங்க…

என்னையும், பாட்டியையும் கூப்பிடாதீங்க… மாப்பிளையும் வேற மாப்பிளை பார்த்துக் கோங்க… ஏன்னா, எங்க சீனியர் சொன்னதால மட்டும் தான் இந்த சம்பந்தம் இவ்வளவு ஈசியா முடிஞ்சு இருக்கு… அதை மட்டும் நியாபகம் வச்சுக் கோங்க…! வாங்க பாட்டி போகலாம்…” என்ற ரங்கா கிளம்பி வெளியில் வந்து விட்டாள்.

அவர்கள் சென்றதும் வைதேகி பிலு பிலுவென்று கேசவனை பிடித்துக் கொண்டாள். அவள் கொடுத்த கொடையில், கடைசியில் தாராவும், மோகனும் சேர்ந்து சொல்லித்தான் அப்பாவை அவள் வாயில் இருந்து காப்பாற்றினர்…

“தேவையாப்பா உங்களுக்கு… மூணு நேரம் வாய்க்கு ருசியா சாப்பாடு… அப்பப்ப வெத்தலை பாக்குக்கு பாக்கெட் மணி… இது போக அம்மாவை மிரட்டி நீங்க அப்பப்ப வாங்கிற காசுல குவாட்டர்ன்னு வாழ்க்கையை ஜாலியா என்ஜாய் பண்ணறதை விட்டுட்டு, ஒத்தப் பைசா சம்பாத்தியம் இல்லாம, எதுக்கு வெட்டி பந்தாவும், பேச்சும்…!” என்று மோகன் கடிந்து கொள்ள, இதற்கும் ஏதாவது சொன்னால் முதலுக்கே மோசமாகிவிடும் என்ற நிலைமையில் கேசவன் வாயை மூடிக் கொண்டார்.

மறுநாள் அலுவலகத்தில், ரங்க பாஷ்யத்திடம் விசயத்தை சொன்னதும் அவர், “சரவணா ரொம்ப நன்றி… எங்க நீ மாட்டேன்னு சொல்லிடுவியோன்னு ஒரு நினைப்பு மனசுக்குள்ளே ஓடிகிட்டே இருந்தது. ரொம்ப சந்தோசம்பா… ரங்காவோட கஷ்டத்தில் தோள் கொடுக்க, நீ ஒரு சகோதரன் ஸ்தானத்துல இருக்கணும்…” என்று அவரும் அவனுக்கு குரு ஸ்தானத்தில் இருந்து அறிவுரை சொல்ல, அவனும் ரங்காவின் நிலைமையை தெள்ளத் தெளிவாக உணர்ந்து கொண்டான்.

ரங்கா மதிய நேரத்தில் அவனிடம், “நீங்க ஆபிஸ் முடிஞ்சதும் கடற்கரைக்கு ஒரு ஐந்து மணிக்கு வரமுடியுமா…? எனக்கு கொஞ்சம் உங்க கிட்ட பேசணும்…”

“ஒ.கே... நான் வரேன்...” என்றவன் சரியாய் ஐந்து மணிக்கு எம்.ஜி.ஆர் சமாதி அருகில் காத்திருந்தான். பத்து நிமிடங்கள் கழித்து வாசுவுடன் வந்த ரங்கா, அவனருகில் வந்ததும், “வந்து ரொம்ப நேரம் ஆச்சா...? சாரி, எனக்கு வாசுவை கூட்டிட்டு வர நேரம் ஆகிட்டுது...” என்றாள்.

“இல்ல இப்பத்தான் வந்தேன்... சொல்லுங்க... எதுக்கு வரச் சொன்னீங்க...?”

“இந்தக் கல்யாணத்தை பத்தி பேசத்தான்...” என்றவள் சற்று நேரம் மௌனமாய் இருந்தாள்... அவள் முகத்தையே பார்த்து இருந்தவன், அவளுக்கு எந்த விஷயத்தையும் விளக்கி சொல்லும் பழக்கம் இருந்தது இல்லை என்பதையும், அதுவும் தன் குடும்பத்தை பற்றி மற்றவர்கள் அறிய சொல்ல வேண்டி இருக்கிறதே, என்ற ஒரு வித அவமான உணர்வும் இருப்பதை புரிந்து கொண்டான். அதனால் அவளாகவே பேச்சை ஆரம்பிக்கட்டும் என்று மௌனமாகவே இருந்தான்...

“என்ன ரங்கா அவரை வரச்சொல்லிட்டு, என்னையும் கூட்டிட்டு வந்துட்டு இப்படி மௌனமாகவே இருக்கே...? என்ன பேசணுமோ பேசு...!” என்று வாசு அவளை உரிமையுடன் அதட்ட...

“சரவணன், இது வாசு, என்னோட நண்பன், குரு, ஆசான், வழிகாட்டி, எப்படி வேணா வச்சுக்கோங்க… இதை நான் ஏன் சொல்றேன்னா, நாம் அலுவலகத்தில நான் யார் கிட்டேயும் இவனைப் பத்தி சொன்னது கிடையாது. நீங்க என் உறவினரா ஆகப் போறீங்கறதால சொல்றேன்.

அப்புறம் ஒரு முக்கியமான விஷயம்… எங்க வீட்டு ஆட்களைப் பார்த்ததுமே, ஓரளவுக்கு அவங்க குணாதிசயங்கள் உங்களுக்கு புரிஞ்சு இருக்கும்… அவங்க அப்படித்தான்… அதை நான் புரிஞ்சுட்டு, அவங்க சொல்றதை ஒரு பொருட்டா நினைக்காம, என்னோட கடமையை செய்ய பழகிகிட்டேன்…

அன்னைக்கு எங்க அப்பா, உங்க அம்மாகிட்ட பேசின முறை தப்பு. அதுக்கு நான் உங்க கிட்ட மன்னிப்பு கேட்டுக்கிறேன். நீங்களும் ஒரு விஷயத்தை நினைவு வச்சுக்கணும்… உங்களுக்கு கல்யாணம் ஆன பிறகும், நீங்க உங்க குடும்பத்துக்கு செய்ய வேண்டிய கடமையை சரி வர செய்யணும்… எந்தக் காரணத்தைக் கொண்டும் கல்யாணத்துக்கு அப்புறம் நீங்க உங்க அம்மாவுக்கோ, தங்கைக்கோ செய்ய வேண்டிய கடமையில் இருந்து தவறிட்டதா அவங்க நினைக்காதபடி பார்த்துக்கோங்க…

இது ஒரு ஆணுக்கு மிகவும் கஷ்டமான சூழ்நிலைதான்… நீங்க மூணு பேர் கிட்டேயும், வாய் வார்த்தையா கெட்ட பெயர்

வாங்கினால் கூட தப்பில்லை… ஆனால் மூன்று பேருக்கும், எந்தெந்த நேரத்துல என்ன தேவையோ அதை சரியா செஞ்சிடுங்க… இதுக்கு நீங்க முதல்லேயே மத்தவங்களை பழக்கப் படுத்திட்டா, அது சுலபம்… இல்லாம உங்க மனைவியை நம்பி குடும்ப பொறுப்பையோ, அல்லது உங்க அம்மாவை நம்பி பொறுப்பையோ கொடுக்காதீங்க…

அது அவங்களுக்கு இடையில ஒரு வித விரோத மனபான்மையையும், வெறுப்பையும் வரவழைக்கும்… எந்த விஷயம் என்றாலும் உங்களோடதே இறுதி முடிவா வச்சுக்கோங்க… நான் சொல்றது புரியும்னு நினைக்கிறேன்…” என்று பூடகமாக சொல்லி, தன்னை பார்த்தவளை, வியப்புடனும், ஒரு வித மரியாதையுடனும் பார்த்தான்.

தன் தங்கையை கல்யாணம் பண்ணப் போகும் மாப்பிள்ளை என்றாலும், ‘தன் தங்கையை மட்டும் பார்த்துக் கொள்’ என்று கேட்காமல், உன் குடும்பத்தையும் பார்த்துக் கொள், என்று சொல்வதன் மூலம், தன்னுடைய குடும்பத்தாரின் குண இயல்புகளை சொல்லாமல் சொல்லிய அந்த புதுமைப் பெண்ணை வியப்புடன் பார்த்தான்.

அந்த நீதி தேவதையே, ஒரு அழகான பெண் உரு கொண்டு வந்தது போல், நேர் கொண்ட பார்வையுடன் நின்றவளிடம், “நீங்க

சொல்ல வருவது புரியுது…? ஆனால் எனக்கு ஒரு சின்ன சந்தேகம்… என்னைப் பார்த்தால், கடமை தவறுபவன் போலவா தெரிகிறது…? என்று கேட்க…

“இல்லை… நான் வழக்கமாக எல்லா ஆண்களுக்கும் ஏற்படும் தடுமாற்றம் குறித்து பேசினேன். பொதுவாக ஆண்களின் மிக நெருங்கிய உறவுகள் இரண்டு. ஒன்று அம்மா, இன்னொன்று மனைவி, இந்த இரண்டு உறவுகளும் ரயில் தண்டவாளம் போல், இதில் செல்லும் ரயில் வண்டி இந்த இரண்டு உறவுகளையும் சமாளிக்கத் தெரிய வேண்டும். இல்லயென்றால் வண்டி கவிழ்ந்து விடும்… பெரும்பாலான ஆண்கள் இந்த தவற்றை செய்கிறார்கள்…

ஒன்று மனைவி பக்கம் சாய்ந்து விடுகிறார்கள்… அல்லது மனைவியை சற்றும் மதிக்காமல் அம்மா பக்கம் சேர்ந்து கொள்கிறார்கள்… இரண்டு பேரையும் சமாளித்து வாழ்க்கையை சுமுகமாக கொண்டு செல்பவர்கள் மிகவும் சிலரே… அதானால்தான் சொன்னேன்.

எந்தப் பக்கம் வண்டி கவிழ்ந்தாலும், இன்னொரு பக்கம் பாதிக்கப் படுவது உங்களுடைய முக்கியமான உறவுகள்… அப்போது உங்களின் நிம்மதியும் போய் விடும்… அந்த மாதிரி நிலைமை வரவேண்டாம் என்பதால், முதலிலேயே இதைப் பற்றி சொல்லிடறது நல்லதுன்னு நினைச்சேன்…” என்று அவள் சொல்ல

சொல்ல ஆச்சரியமும், அவள் குணத்தின் மேன்மையும் அவனுக்கு புலப்பட்டது.

“கண்டிப்பா செய்யறேன். ஆனால் நீங்களும் எனக்கு ஒரு வாக்குறுதி கொடுக்கணும்… உங்களுக்கு ஏதாவது ஒரு கஷ்டம்னா, என்னை உங்க வீட்டு மாப்பிளையா நினைக்காம, ஒரு சகோதரனா நினச்சு என் கிட்ட உதவி கேட்கணும்…” என்று கூறியவனை மகிழ்வோடு பார்த்தாள்.

“ரொம்ப சந்தோசம் சார். எங்க ஒரு மாப்பிளை, ‘தன்னை சகோதரனா நினைத்து கொள்’ என்று சொல்றாரோ, இதை விட ஒரு சிறந்த மாப்பிளை எங்காத்து பொண்ணுக்கு கிடைக்காது. எங்க தாரா ரொம்ப கொடுத்து வச்சவ…” என்ற சொல்லிய வாசுவிடம்…

“ஏன் நீங்க இல்லியா… அந்தக் குடும்பத்துல ஒருத்தரா, ரங்காவுக்கு சகோதரனா…!” என்று பதிலுக்கு சரவணன் மடக்க…

“என் கதை வேற சார். நான் ஒரு வகையில் பாட்டியின் தூரத்து சொந்தம். எனக்கு யாரும் கிடையாது… என்னை வளர்த்து ஆளாக்கினது பாட்டி… கிராமத்துல நானும், ரங்காவும், பாட்டி வீட்டில ஒண்ணாதான் வளர்ந்தோம்.

அதனால அந்தப் பாசம் எங்களுக்குள்ள இருக்குது… ஆனால்

நீங்க அப்படி இல்ல… தாரா மூலம் தான் நீங்க எங்களுக்கு உறாவா ஆகப் போறீங்க… நீங்க இப்படி சொல்றதுதான் ஆச்சரியமா இருக்கு…” என்று மனதார பாரட்டியவனை சரவணன் அணைத்துக் கொண்டான்…

“இனி நீங்க என்னை சரவணன் அப்படின்னே கூப்பிடலாம்… எனக்கும் ஒரு நண்பன் ப்ளஸ் சகோதரன் கிடைச்சதா நான் நினச்சுக்கறேன்…” என்று மகிழ்ச்சியுடன் சொன்ன சரவணனை, வாசு நெகிழ்ச்சியுடன் அணைத்துக் கொண்டான்.

திருமணத்திற்கு ஜவுளி எடுக்கவென்று எல்லோரும் கடைக்கு செல்ல, ரங்கா தனக்கு வேலை இருப்பதால், தான் வரவில்லை என்று சொல்லி விட்டாள்… கடைக்கு வந்த சரவணன், பாட்டியிடம், “என்ன பாட்டி ரங்கா வரலை…?” என்று கேட்க…

“இல்ல அவளுக்கு இதில் எல்லாம் விருப்பம் கிடையாது. எப்போதுமே நான் தான் அவளுக்கு தேவையானது வாங்கி வைப்பேன். அவளா விரும்பி கடைக்கு போய் துணிமணி, நகைகள் வாங்கியது கிடையாது… இன்னைக்கு நான் கூப்பிட்டதுக்கு, வழக்கம் போல என்னையவே எடுக்க சொல்லிட்டா…” என்று சாதரணமாய் சொல்லி விட… தான் கூப்பிட்டால் தப்பாகி விடுமோ என்ற எண்ணத்தில், வாசுவிடம்,

“ஏன் நீ ரங்காவை கூப்பிடலை…?” என்று கேட்டான்.

“அவளை எந்த ஒரு விசயத்துக்கும் கட்டாயப் படுத்த முடியாது… நானும் எத்தனையோ தடவை சொல்லிட்டேன்… கொஞ்சம் நல்ல விதமாத்தான் ட்ரெஸ் பண்ணேன்னு… ஆனால் அவ கேட்கிறதா இல்லை… எப்பவும் ஒரு சாயம் போன சுடிதார்… அல்லது காட்டன் சாரி… ரொம்ப பேசினா முதலுக்கே மோசம் வந்திடும்கிறதால, நான் ரொம்ப சொல்றது இல்லை…” என்று கூறி விட அவனால் ஒன்று சொல்ல இயலாது போயிற்று…

ஆனால் பாட்டி ரங்காவுக்கு என்று தேர்வு செய்து எடுத்த புடவையை பார்த்தவனின் மனது நிறைந்து போயிற்று… அழகான மாம்பழக் கலரில், கருநீல கலர் பார்டர் வைத்த பட்டு சாரியும், அதற்கு மேட்சாக அணிகலன்களும் எடுக்க, அது வரை தனக்கு முகூர்த்த சாரி தவிர, வேறு புடவை எடுக்க என்று புடவையை பார்த்துக் கொண்டு இருந்தவள், பாட்டியிடம் “பாட்டி நல்லா இருக்கே, அதைக் கொடுங்க…” என்று வாங்க முயல, மனதில்லாமல் கொடுத்த பாட்டியை பார்த்த சரவணன்…

“தாரா, எனக்கு அந்தக் கலர் பிடிக்கலை… அடிக்க வர்றாப்ல இருக்கு… இதோ இந்த பச்சை நல்லா இருக்கு பார்…” என்று அவள் கவனத்தை திசை திருப்பினான். ஒரு நிம்மதிப்

பெருமூச்சுடன் பாட்டி அதை ரங்காவுக்கு என்று எடுத்து வைத்தாள். அனைத்தையும் பார்த்துக் கொண்டிருந்த வாசு, சரவணனை புரிந்து கொண்டான்.

தாரா, சரவணன் கல்யாணம் பல பிரச்சினைகளை கடந்து நடந்து கொண்டிருந்தது… கேசவனும், மோகனும் கொடுத்த இன்னல்களை எல்லாம் சமாளித்து பாட்டியும், பேத்தியுமாக அந்தக் கல்யாணத்தை சிறப்புடன் நடத்திக் கொண்டு இருந்தனர்…

கல்யாண வீட்டில் வேறு வழி இல்லாமல் பாட்டி எடுத்து வைத்திருந்த பட்டு புடவையை உடுத்தி, நகைகளை அணிந்து அழகோவியமாய் நின்ற ரங்காவை பார்த்த பாட்டியின் விழிகள் கலங்கியது… ரங்கா யாரையோ வரவேற்க அந்தப் பக்கம் செல்ல, கலங்கிய கண்களை கண்ணாடியை கழற்றி விட்டு துடைத்துக் கொள்வதை பார்த்த வாசு, “என்னாச்சு பாட்டி…?” என்று கேட்க…

“ஒண்ணுமில்லேடா, இதனை அழகும், அறிவும்,பாசமும் உள்ள பொண்ணுக்கு ஒரு நல்லது நடத்தி பார்க்கணும்னு நானும் ஆசை படறேன்… ஆனா அவ பிடிவாதமா கல்யாணத்துக்கு சம்மதிக்க மாட்டேங்கிறாளே…?” என்று விசனப்பட…

“கவலை படாதீங்கோ… தாரா கல்யாணம் முடிஞ்சிடுச்சு இல்ல… மோகனுக்கு இன்னும் இரண்டு வருஷம் போகட்டும்.

அதுக்குள்ள அவ கல்யாணத்தை பத்தி நான் பேசறேன்…” என்று சமதானப் படுத்தினான்.

வந்த ஆட்களிடம் பேசிக் கொண்டு இருந்த ரங்காவின் அலைபேசி அழைக்க எடுத்தவள், “இல்ல சார், இங்க பக்கம் தான்… நான் கீழே வந்து நிக்கறேன்… நீங்க வாங்க…” என்று சொல்லி, பேசிக் கொண்டு இருந்தவரிடம்… “எக்ஸ்க்யூஸ் மி…” என்று கூறிக் கொண்டு கீழே விரைந்தாள்.

மண்டபம் இருந்த இடம் சற்று நெரிசலான, சந்து என்பதால், வழி தெரியாமல் அவளது சீனியர் ரங்க பாஷ்யம் தான் அழைத்து இருந்தார்… அவள் கீழே வந்து நிற்கவும், அவளருகில் ஒரு பெரிய கார் வந்து நிற்கவும் சரியாக இருந்தது…

அது அவரின் கார் இல்லை என்பதால் சற்று ஆச்சரியத்துடன் பார்க்க, “வெரி தேங்க்ஸ்…” என்றவாறு கீழே இறங்கிய சீனியரை, “வாங்க சார்…” என்று கை குவித்து வரவேற்றாள்.

அதற்குள் காரின் முன்பக்கம் இருந்த கதவு திறந்து உபேந்திரா இறங்கினான். காரின் ஓட்டுனர் இருக்கையில் பாபு அமர்ந்து இருக்க… இரங்கி நின்ற உபேந்திராவிடம், “உபேந்திரா இது என்னோட ஜூனியர் ரங்கா… அன்னைக்கு என்னோட பங்சன்ல… இவளை நான் முறையா அறிமுகம் செய்ய முடியாமல்

போயிற்று…” என்று அறிமுகம் செய்து வைக்க…

“ஆனால் எனக்கு தொழில் எதிரியா ஏற்கனேவே அறிமுகம் ஆயிட்டாங்க சார்…” என்றான், அவளை அளவெடுத்தாற் போல பார்த்துக் கொண்டே…

‘பார்க்கிறதைப் பார் பட்டிக்காட்டான் மிட்டாய்க் கடையை பார்த்தாற்போல்…’ என்று மனதினுள் அவனை அர்ச்சித்துக் கொண்டே… தனது சீனியருக்கு மரியாதை கொடுக்கும் வண்ணம், வேறு வழி இல்லாமல் கைகளை குவித்து “வணக்கம்…” என்றாள்…

பதில் வணக்கம் சொல்லாமல் உதடுகளை இகழ்ச்சியாக வளைத்தவன், ஒரு சிறு தலையசைப்புடன் வணக்கத்தை ஏற்றுக் கொண்டு, ரங்கபாஷ்யத்திடம் “சார் உங்களுக்கு திருப்பி எத்தனை மணிக்கு கார் அனுப்பி வைக்கட்டும்…?” என்று கேட்டான்.

“அதெல்லாம் வேண்டாம்பா… நான் வீட்டுக்கு போன் பண்ணி இருக்கேன்… அவங்க இப்ப வந்திடுவாங்க… ரொம்ப நன்றி…” எனவும், அவன் உள்ளே ஏறவும் கார் கிளம்பியது…

அதுவரை அவனையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்த அவளைப் பார்த்து, கார் நகரவும் ஒற்றைப் புருவத்தை உயர்த்தி “என்ன…?” வென்று பார்வையில் கேட்டதும், உணர்வுக்கு வந்தவள், தன் பார்வையை விலக்கிக் கொண்டாள்…

மிக மிக சாதாரண உடைகளிலே அவளை இரண்டு மூன்று முறை சந்தித்த அவனுக்கு, இன்று பட்டுப் புடவையில் பார்த்ததும், அவளது அழகு பளீரென்று கண்களில் புலப்பட, அவளை ரசித்து பார்த்திருந்தான்… அதற்கு அவனை ‘பட்டிகாட்டான் ரேஞ்சில் நினைத்த நாமே அவனைப் பார்த்த விதத்தை நினைத்து வெட்கியவளாய்’ ரங்க பாஷ்யத்தை அழைத்துக் கொண்டு மண்டபத்திற்குள் நுழைந்தாள்…

“மாமிக்கு நெருங்கிய சொந்தத்துல ஒரு கல்யாணம். அதுக்கு அவ போயிருக்கா… அங்கே இருந்து நேரா இங்க வந்துடறேன்னு சொல்லி இருக்கா… எனக்கு இன்னைக்கு முக்கியமான கேஸ்… போகாம முடியாது… அதான் நான் கால் டாக்சி பிடிச்சு போயிட்டேன்… இங்க வர்றதுக்கு நான் கால் டாக்சிக்கு போன் பண்ணப் போகும் போது, உபேந்திரா நானே கொண்டு போய் விட்டுடறேன் அங்கிள்… அப்படின்னு கொண்டு வந்து விட்டான்… கல்யாணம் நல்ல படியா முடிஞ்சுதா…?”

“ஆமா சார்… வாங்க…” என்று அவரை அழைத்துக் கொண்டு போய் பெண், மாப்பிளையை ஆசிர்வாதம் செய்ய வைத்தாள். அவரை கண்டதும் மைதிலியும், மோகனும் வந்து வரவேற்றனர். எங்கிருந்தோ அவசரமாய் வந்த வாசுவும் வரவேற்க, “உங்க பாட்டி எங்க ரங்கா…?” என்று ரங்கபாஷ்யம் கேட்டார்…

"இதோ கூட்டிட்டு வரேன் சார்... இவ்வளவு நேரம் இங்க தான் இருந்தாங்க... ரெஸ்ட் எடுங்கன்னு நான் தான் ரூமில கொண்டு போய் விட்டேன்... வாசு சார் கூட நின்னு பேசிட்டு இரு... இதோ வந்திடறேன்..." என்று மண்டபத்தில் பாட்டி இருந்த அறைக்கு சென்றாள்.

"வாங்க நன்னா இருக்கேளா...?" என்று கேட்டுக் கொண்டே வந்த பாட்டியை "உங்க ஆசிர்வாதத்தில் நன்னா இருக்கேன்... நீங்க எப்படி இருக்கேள்... தேக சௌகரியம் எப்படி...?"

"அதுக்கென்ன...? வயது ஆயிடுத்தோ இல்லையோ... அப்பப்ப கொஞ்சம் படுத்தறது... ஆமா ஆத்துக்காரியை கூட்டிண்டு வரலியா...?" பாட்டி கேட்டு வாய் மூடு முன், "பாட்டி மாமி வந்துட்டாங்க..." என்று ரங்கா சொல்லி கொண்டே அவளை வரவேற்க விரைந்தாள்.

"வாம்மா..." என்று மீனாவை பாட்டி வரவேற்க, "ஆமாம் மாமி நன்னா இருக்கேளா...!" என்று கேட்டுக் கொண்டே வந்து பாட்டியின் கையை பிடித்துக் கொண்டாள், மீனா ஒரு வகையில் பாட்டியின் தூரத்து உறவு...

"ஒரு பொறுப்பு உங்களுக்கு முடிஞ்சிருச்சு... அடுத்து ரங்காவுக்கு பார்த்துடலாம் இல்லியா...?" என்று மீனா வினவ...

“ஆமா, பார்க்கணும்… ஆனால் அவ இப்போ கல்யாணம் வேண்டாம்னு சொல்லிண்டு இருக்கா…!”

“இப்ப வேண்டாம்னா… எப்ப பண்ணிப்பாளாம்…! வாழ வேண்டிய வயசுல தள்ளிப் போட்டுட்டு, அப்புறம் கல்யாணம் பண்ணி என்ன பயன்…! அதது நடக்க வேண்டிய காலத்துல நடக்க வேண்டாமோ… உங்க காலத்துல பால்ய விவாகம் பண்ணினா… எங்க காலத்துல பதினெட்டு ஆயிடப் படாது… இன்னும் வரன் பாக்கலியான்னு பிடுங்கி எடுத்திடுவா…

இப்ப என்னடான்னா, இப்ப வேண்டாம், அப்ப வேண்டாம்னு, தள்ளிப் போட்டுட்டே போறதுகள்… என் பையனும் இப்படித்தான் பிடி கொடுக்கவே மாட்டேங்கிறான்…” மீனா ஒட்டுமொத்த இளைய தலைமுறையின் மேல் உள்ள ஆதங்கத்தை வார்த்தையால் வடிக்க…

“ஏய், என்ன இது கல்யாண வீட்டில வைத்து…!” என்று ரங்கா பாஷ்யம் மனைவியை அதட்ட…

“ஏன், இப்ப என்ன எல்லார் கிட்டேயுமா இப்படி புலம்பிகிட்டு இருக்கேன்… அது என்னவோ மனசுக்கு நெருக்கமானவங்களை பார்த்தா மட்டும் தான், இப்படி நம்ம கவலை எல்லாம் கொட்டித் தீக்கணும்னு தோணுது… இது ஒரு தப்பா மாமி சொல்லுங்கோ…”

என்று பாட்டியையே பஞ்சாயத்துக்கு இழுக்க…

“சரி நீங்க இரண்டு பேரும் பேசிட்டு இருங்க… எனக்கு ஒரு போன் வருது… நான் பேசிட்டு வரேன்…” என்று கூறி சற்று நகர்ந்து நின்று போன் பேச ஆரம்பித்தார். சற்று நேரத்தில் அவர்கள் சாப்பிட்டு கிளம்பி விட, “பாட்டி மத்த எல்லா ஏற்பாடும் சரியா பண்ணியாச்சு இல்ல…!” என்று ரங்கா கேட்க…

“எல்லாம் வாசு ஏற்பாடு பண்ணிட்டான். பொண்ணும் மாப்பிள்ளையும் கிளம்பினதும், எல்லாம் செட்டில் பண்ணிட்டு அவன் வந்திடுவான்… நீ நம்மாத்துக்கு வந்திடு… அவா எல்லாம் வீட்டுக்கு போகட்டும்… நாளைக் காலையில் நாம தாராவை புக்கத்துக்கு கொண்டு போய் விட, காலையில கிளம்பி போய்க்கலாம்…” என்று பாட்டி முடித்தாள்.

# அத்தியாயம் 7

“கேசவா காலேஜ் முடிச்சாச்சு. எதாவது வேலைக்கு முயற்சி பண்ணினாயா…?”

“அது எல்லாம் அப்ளிகேஷன் போட்டுருக்கேன்மா… ஆனால் ஒரு இன்டர்வியூ கூட வர மாட்டேங்குது…!”

“இன்டர்வியூ வந்தாதான் வேலைக்கு போகணுமா என்ன…? அடுத்த தெரு அம்புஜத்தோட சொந்த அண்ணா மெட்ராஸ்ல ஒரு கம்பெனி வச்சிருக்காராம். அவா கிட்ட உன்னை வேலைக்கு சேர்த்துக்க சொல்லி அம்புஜத்துகிட்ட சொல்லிண்டு வந்திருக்கேன். அவ கேட்டுட்டு சொல்றேன்னு சொல்லி இருக்கா… அந்த வேலை கிடைச்சுதுன்னா ஒழுங்கா மெட்ராஸ் போய் வேலை செய்யப் பாரு… இப்படியே உட்கார்ந்திருந்தா, சோம்பேறித்தனம் தான் உடம்புல ஏறும்…”

“அம்மா என்ன வேலை…?”

“என்ன வேலையா இருந்தா என்ன… சும்மா இருக்கிறதுக்கு முதல்ல கிடச்ச வேலையைப் பாரு… அப்புறம் உனக்கு பிடிச்ச வேலைக்கு முயற்சி பண்ணு… எல்லாருக்கும் கையெழுத்து போடற வேலை மட்டும் தான் பிடிக்கும்… ஆனால் அதுக்கான தகுதி நம்ம

கிட்ட இருக்கான்னு யோசிக்கனும்…” அம்மா சொன்னதை கேட்டவன் வாயை மூடிக் கொண்டான்…

“ரங்கா அடுக்களைக்குள் சென்றதும் அதுவரை பேப்பரில் தலையை நுழைத்துக் கொண்டிருந்த ராகவன், “ஏண்டா காலங் கார்த்தாலே அவ கிட்ட வாயை கொடுத்து மாட்டிக்கிறே…? முதல்ல ஏதாவது ஒரு வேலையில் சேர்ந்து இந்த ஊரை விட்டு வெளியே போ… அப்பத்தான் நீ தப்பிப்பே… இல்லேன்னா என்னை மாதிரி தினம் அவ கிட்ட பாட்டு வாங்கிட்டு தான் இருக்கனும்…” என்று அறிவுரை செய்தார்…

“என்ன அங்க, உங்கப்பா கிட்ட ஐடியா கேட்டாகுதா…? உனக்கு நாளைக்கு ஒரு கல்யாணம், காட்சி அப்படின்னு ஒண்ணு நடக்கணும்னா ஒரு வேலை அவசியம்… அது இல்லாம யாரும் பொண்ணு தர மாட்டா… நானும் அந்த மாதிரி ஒரு தப்பை செய்ய மாட்டேன்…” என்று இருவருக்கும் பொதுவாக சொல்லி விட்டு வெளியே சென்றாள்.

“டேய் அதுவும் உண்மைதான்… அந்தக் காலத்துல மாப்பிள்ளைக்கு எவ்வளவு வசதி இருக்குன்னு பார்ப்பாங்க… ஆனால் இந்தக் காலத்துல எதாவது ஒரு வேலை இருக்கான்னு தான் பார்க்கிறாங்க… அதனால் கிடைச்ச வேலைக்கு போ…”

என்று ராகவனும் சொல்லி விட வேறு வழியின்றி, கேசவன் சென்னைக்கு சென்றான்.

“*If you want something said, ask a man. If you want something done ask a woman…*”

*-Margaret Thatcher*

மறுநாள் எல்லோரும் தாராவை அவளது புக்காத்தில் கொண்டு போய் விட்டுட்டு வந்தனர்… “தாரா இது வரை நீ அம்மா வீட்டில இருந்த மாதிரி இருக்கக் கூடாது… கொஞ்சம் பொறுப்பா இருக்கணும்… எல்லார் கிட்டேயும் அனுசரிச்சு போகணும்…” பாட்டி சொன்னதற்கு பதிலே சொல்லாமல் கடனே என்று கேட்டுக் கொண்டு இருந்தவளை பார்த்து ரங்காவுக்கு வந்த கோபத்தில் ஏதாவது பேசி விடலாமா என்று இருந்தது…

ஆனால் இருக்கும் சூழ்நிலை வாயைக் கட்டிப் போட, “பாட்டி கிளம்புவோமா… எனக்கு கொஞ்சம் ஆபிஸ்ல வேலை இருக்கு…” என்று பாட்டியை அங்கிருந்து கிளப்புவதில் முனைப்பாக நின்றாள்.

“சாயங்காலம் வரை இருந்துட்டு போகலாமே…” என்று சம்பந்தி அம்மா சொல்ல…

“இருக்கட்டும் மாமி நாங்க கிளம்புறோம். எல்லாருக்கும்

கொஞ்சம் ரெஸ்ட் வேணும்… நீங்களும் கொஞ்சம் ரெஸ்ட் எடுங்க…” என்று கூறிவிட்டு வலுக்கட்டாயாமாய் எல்லாரையும் அழைத்துக் கொண்டே வீட்டுக்கு கிளம்பினாள்.

சரவணன், தாரா வாழக்கையும் ஆரம்பிக்க, மற்றவர்களின் வாழ்க்கையும் வழக்கம் போல செல்ல ஆரம்பித்தது. அன்று வக்கீல் ஆபிசில் மதியம் மூன்று மணி வாக்கில், ரங்காவை சந்திக்க கீர்த்தி வந்து இருந்தாள். அவளை தனது திருமணத்தில் பார்த்து இருந்த சரவணன், “வாங்க என்ன விஷயம்…?’ என்று கேட்க…

“எனக்கு ரங்கா அக்காவை பார்க்கணும்…!”

“சரி, இங்க உட்காருங்க… நான் போய் அவங்க கிட்ட சொல்லி வரச் சொல்றேன்…” என்றவன் உள்ளே போய் ரங்காவை வரச் சொல்ல…

விரைந்து வந்த ரங்கா, “என்ன கீர்த்தி. இவ்வளவு தூரம்… என்ன விஷயம். பாட்டி எதுவும் சொல்லி அனுப்பினாங்களா…? அல்லது வாசு எதுவும் சொன்னானா?”

பதில் சொல்லாமல் அவள் கண் கலங்கவும், “ஏய், என்ன விஷயம்…? இது ஆபிஸ்… இங்க எதுவும் வேண்டாம்… வா வெளியில போவோம்…” என்றவள்…

சரவணனை அழைத்து, “கொஞ்சம் அவசரம். நான் வெளியில் போறேன்... நம்ம சீனியர் கிட்ட சொல்லிடுங்க...! என்று கூறி விட்டு அவளை அழைத்துக் கொண்டு தனது வண்டியில் கடற்கரைக்கு சென்றாள்.

கடற்கரையில் ஒரு இடம் பார்த்து அமர்ந்ததும், “என்ன கீர்த்தி சொல்லு...!”

“அக்கா எங்க வீட்டில எனக்கு மாப்பிள்ளை பார்க்கிறாங்க... அதை சொல்லி வாசு கிட்ட, எங்க அப்பா கிட்ட வந்து பேச சொன்னேன்... அதுக்கு அவர் இப்ப முடியாதுன்கிறார்...”

“ஏன், அவனுக்கு இப்ப பேசினா என்ன...? அவனுக்கும் வயது ஆகிட்டே தானே போகுது... பாட்டி கிட்ட சொன்னா, அவர் தானே வந்து பேசி முடிச்சிடுவார்... இரு நான் பாட்டி கிட்ட சொல்லி உங்க அப்பாகிட்ட வந்து பேச சொல்றேன்... இதுக்கு போய் யாராவது அழுவாங்களா...?”

“இல்லை அதுக்கு அழலை...?”

“அப்புறம்...?”

“அவர் என்கிட்டே நீ உங்கப்பா பாக்கிற பையனையே கல்யாணம் பண்ணிக்கோ. நம்ம கல்யாணம் நடக்காதுன்னு

சொல்லிட்டார்…”

“என்னது…? கல்யாணம் நடக்காதாம்மா…? அந்த ராஸ்கல் அப்படியா உன்கிட்ட சொன்னான்…? என்ன நினச்சுகிட்டு இருக்கிறான் மனசுல…! என்றவள் அதே கோபத்தோடு அலைபேசியில் அவனை அழைக்க, அந்த எண் தற்போது செயல் படவில்லை என்று பதில் வந்தது…

“இந்தாப் பாரு… நான் இன்னைக்கு வீட்டுக்கு போய் அவன் கிட்ட பேசறேன்… நீ கவலைப் படாதே… அவன் கூட உன் கல்யாணம் நிச்சயம் நடக்கும். நான் நடத்தி வைக்கிறேன்… என்ன நினச்சுகிட்டு இருக்கான் அவன், காதலிக்க தெரியுது… கல்யாணம் மட்டும் பண்ண மாட்டாராம்மா…” கோபத்தில் கொதித்தவள், அவளை அழைத்துக் கொண்டு போய் பஸ் ஏற்றி விட்டு, வீடு வந்து சேர்ந்தாள்.

“பாட்டி…” உள்ளே வரும் போதே கோபமாக அழைத்துக் கொண்டே வந்தவளைப் பார்த்த பாட்டி, “என்னாச்சு ரங்கா…? எதுக்கு இப்படி சத்தமா அழைச்சுண்டே வரே…?”

“எங்கே உன் சீமந்தப் பேரன்… தத்துப் பிள்ளை…?”

“யாரைடி சொல்றே… வாசுவையா… அவனுக்கு என்ன…?”

“உங்களுக்கு சேதி தெரியுமா, இல்லையா…? அது மட்டும் சொல்லுங்க…?”

“எனக்கு என்ன தெரியும்… அதான் உனக்கு தெரிஞ்சிருக்கே நீயே சொல்லு…”

“அவர் கீர்த்தியை கல்யாணம் பண்ணிக்க மாட்டாராம்…!”

“ஒ, அப்படியா…!”

“என்ன நான் ஒரு முக்கியமான விசயத்தை சொல்லிட்டு இருக்கேன்… நீங்க என்னடான்னா சர்வ சாதாரணமா, அப்படியான்னு கேட்கறீங்க…?”

“இல்லை… வாசு அப்படி எல்லாம் சொல்ல கூடிய பிள்ளை இல்லை… அப்படி அவன் சொல்லி இருந்தா அதுல ஏதாவது முக்கியமான விஷயம் இருக்கும்…”

“நீங்க தான் மெச்சிக்கணும், உங்க தத்துப் பேரனை…” அவள் சொல்லி வாய் மூடு முன் கதவை திறந்து கொண்டு வாசு உள்ளே வந்தான்…

“பாட்டி இந்தாங்க நீங்க கையெழுத்து போட வேண்டிய பேப்பர்ஸ். போட்டு வைங்க. நான் நாளைக்கு கார்த்தால ஆபிஸ் போகும் போது வந்து வாங்கிக்கிறேன்…” என்று கூறி விட்டு

வெளியே செல்லப் போனவனை…

“வாசு, நான் உன்கிட்ட ஒண்ணு கேட்கணும்…!” என்ற ரங்காவின் குரல் தடுத்து நிறுத்தியது…

“ரங்கா எனக்கு பசிக்குது… நான் இன்னும் வெளியே போய் சாப்பிட்டு வந்து படுக்கணும். எதுவா இருந்தாலும் நாளைக்கு பேசிக்கிலாமே…!” என்று சோர்வுடன் அவன் பதிலளிக்க…

“டேய் நீ மதியம் சாப்பிட்டியா, இல்லையா…?” என்ற பாட்டியின் குரல் அவனை தேக்கியது…

“இல்லை…”

“சரி இரண்டு பேரும் கையலம்பிண்டு வாங்கோ…!” என்ற பாட்டி அடுக்களைக்குள் சென்றார்…

“வாடா… என்ன யோசனை… சாப்பிட்டுட்டு என் கிட்ட திட்டு வாங்கிட்டு போ…” என்று தன் பங்குக்கு ரங்காவும் சொல்லி விட்டு சென்றாள்…

பாட்டி சுடச்சட தோசை வார்த்து போட மௌனமாய் இருவரும் சாப்பிட்டு எழுந்தனர். தனக்கு இரண்டு தோசை வார்த்துக் கொண்டு வந்து, உட்கார்ந்து சாப்பிட ஆரம்பித்தார். கையைக் கழுவிக் கொண்டு வந்தவன் பாட்டிக்கு எதிரில் இருந்த

நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு, “சொல்லு ரங்கா என்ன விஷயம்…?” என்று கேட்க…

“ஏண்டா கீர்த்தி கிட்ட நீ அவளைக் கல்யாணம் பண்ண முடியாதுன்னு சொன்னியாமே…?”

“ஆமா, சொன்னேன்…!”

“கேட்டுக்கோங்க பாட்டி… நீங்க என்னமோ சொன்னேளே, அவன் அப்படிப்பட்டவன் இல்லைன்னு… இப்ப அவன் வாயாலேயே, அவனே ஒத்துக்கிறான் பாருங்க…!” என்று பாட்டியிடம் சொன்னவள்…

அவனிடம் திரும்பி, “அவளை கல்யாணம் பண்ணலைன்னா, வேறு யாரை கல்யாணம் பண்றதா உத்தேசம்… ஒரு வேளை வேற ஏதாவது வசதியான பொண்ணு பாத்து வச்சிருக்கியா என்ன…?”

“அதெல்லாம் ஒண்ணும் இல்லை…”

“அப்புறம் என்ன…?”

“எனக்கு கல்யாணமே வேண்டாம்…”

“வெரி குட்… ரொம்ப நல்ல முடிவு… இதை நீ அவளை காதலிக்கிறதுக்கு முன்னாடி எடுத்திருக்கணும். காதலிச்ச பிறகு நீ

மட்டும் தனியா முடிவு எடுக்கிற விஷயம் இல்ல இது…! நறுக்கு தெரித்தாற்போல் பதில் வந்தது…

மௌனமே பதிலாய் இருக்க, "என்னடா பதில் சொல்லு…? கேட்கிறா இல்ல…"

"கேட்கிறா, புரியுது… ஆனால் இவ யாரு என்னை கேட்கிறதுக்கு… அதான் யோசிச்சுட்டு இருக்கேன்…!"

"டேய்… ஏண்டா… இப்படி பேசறே…?" என்று பாட்டி வருத்தப்பட…

"பின்ன என்ன…? நாம சொல்றதை அவ கேட்கிறாளா…?"

"நீ சொன்னது எதை நான் கேட்கலை… சொல்லு…" என்று வரிந்து கட்டிக் கொண்டு அவனுடன் சண்டையிட்டாள் ரங்கா…

"இப்ப சொல்றேன் கேளு… உன் கல்யாணம் முடிந்த அடுத்த நாளே நான் கல்யாணம் பண்ணிக்கிறேன்… அதுவரை என் கிட்ட யாரும் கல்யாணப் பேச்சே பேசக் கூடாது…"

"டேய், என் கல்யாணத்துக்கும், உன் கல்யாணத்துக்கும் என்னடா சம்பந்தம்…? உனக்காக ஒரு பொண்ணு எவ்வளவு நாள் தான் காத்திட்டு இருப்பா…?"

“அதனாலதான் அவகிட்ட அவ அப்பா பாக்கிற மாப்பிளையை கல்யாணம் பண்ணிக்க சொல்றேன்…!”

“ப்ளீஸ் புரிஞ்சுக்கோடா… எனக்கு கல்யாணத்து மேலேயே நம்பிக்கை இல்ல. ஏன் நீயும், கீர்த்தியும் என்னை கடைசி வரை பாத்துக்க மாட்டீங்களா…?”

“அதெப்படி அவ உன்னை பார்த்துக்க மாட்டேன்னு சொல்லிடுவாளா என்ன…?” என்று அதற்கும் அவன் எகிற… ஒரு சிறு புன்முறுவல் வந்தது ரங்காவிடம்…

“எல்லாம் இருக்கட்டும் வாசு… அவ சொல்றது சரிதானே. ஒரு பொண்ணை ரொம்பா நாள் காக்க வைக்க முடியாது. இதுவே இரண்டு வருசமா அவளும் கல்யாணத்தை பத்தி கேட்டுட்டே இருக்கா… நீயும் தள்ளி போட்டுண்டே இருக்க… இந்த தடவை உன்னோட கல்யாணத்தை பேச வரோம்னு அவ கிட்ட சொல்லு…” பாட்டி தீர்மானமாய் சொல்ல…

“இல்ல. என்னை மட்டும் நீங்க பேசி வாயை அடைச்சிடுங்க… ஆனால் உங்க பேத்தியை ஒண்ணும் சொல்லிராதீங்க… ஏன்னா நான் என்ன இருந்தாலும் அநாதை தானே… நான் சொல்றதைதான் நீ கேட்கணும்னு சொல்லாம சொல்றீங்களா…?”

“வாசு பாட்டியை பார்த்து என்ன வார்த்தை சொல்லிட்டே…? அவங்களுக்கும் நீயும் நானும் ஒண்ணுதாண்டா…!” ரங்கா பொருமினாள்.

“அவன் சொல்றது சரிதான்… நானும்தான் உன்னை எவ்வளவு நாளா சொல்லிட்டே இருக்கேன்… கல்யாணம் பண்ணிக்கோன்னு… நீ காது கொடுத்து கேட்கிறாயா…?”

“ஐயோ பாட்டி அவன் தான் புரியாம பேசறான்னா, நீங்களும் ஏன் இப்படி பேசறீங்க…?”

“அவனைப் போல எனக்கும் புரியலைன்னே வச்சுக்குவோம்…? ஏன், கல்யாணம் வேண்டாங்கிற…?”

“எனக்கு கல்யாணம் என்கிற பந்தத்து மேலேயே நம்பிக்கை இல்லை… அதனால் வேண்டாங்கிறேன்… இப்ப நான் உங்களை ஒரு கேள்வி கேட்கிறேன்… அதுக்கு பதில் சொல்லுங்க…?” என்றவள் பாட்டியை பார்த்து…

“நீங்க கல்யாணம் பண்ணிட்டு சந்தோசமா இருந்தீங்களா…? எனக்கு உண்மையான பதில் வேணும்… தாத்தா உங்களை ஒரு நாளாவது சந்தோசமா வச்சு கிட்டாரா? அல்லது சந்தோசமாத்தான் வாழ்ந்தாரா…? நீங்கதான் கடைசி வரை அவரோட போராடி

வாழ்ந்தீங்க…

பொருளாதாரத்துலே இருந்து, பையனை வளர்த்து கல்யாணம் பண்ணி கொடுத்து, அவர் குடும்பத்தையும் சேர்த்து பார்த்து… இன்னும் உங்க கடமை நீண்டுட்டே தான் இருக்கே ஒழிய அது முடியவே இல்லை… யாரவது ஒரு நாள் உங்களைப் பார்த்து "பாட்டி பேசாமல் நீங்க என் கூட வந்து இருங்க… நாங்க உங்களைப் பார்த்துக்கிறோம்னு சொல்றாங்களா… இல்லை… உங்களை கல்யாணம் பண்ணின தாத்தாவும், அப்பாவும், அடுத்து மோகனும் ஆண் வர்க்கம் தான். நான் இவங்க எல்லோரையும் பார்த்து, பார்த்து ஆண் வர்க்கம் மேலேயே எனக்கு நம்பிக்கை போயிடுச்சு…

நானே சம்பாதிச்சு, நானே குடும்பத்தை நடத்தி, நானே செய்யறதுக்கு எதுக்கு கூட இன்னொரு ஆள்… இருக்கிற ஆட்களை பார்த்துக்கிறது பத்தாதுன்னு புருசன்னு வர்றவனுக்கும் நான் இதை எல்லாம் செய்யணுமா…? நோ… என்னால முடியாது… நான் இப்பவே சந்தோசமாத்தான் இருக்கேன்… என்னால மேலும் மேலும் பொறுப்புகளை சுமக்க முடியாது…"

"நீ சொல்ற அத்தனை விசயமும் உண்மைதான்… நான் உங்க தாத்தாவை கல்யாணம் பண்ணிட்டு அவரால நான் சுகப் படலை. ஆனால் நான் கஷ்டப்பட்டு சம்பாதிக்கணும்னு யாரும் என் கிட்ட

சொல்லலை... நான் அப்படியே வீட்டில முடங்கி இருந்தா உங்க அப்பா வாழக்கை இன்னும் மோசமா இருந்து இருக்கும்... உங்களை இந்த மாதிரி நான் பார்த்திருக்க முடியாது. இது சந்தோசம் இல்லியா...?"

"இந்த சந்தோசத்துக்கு நீங்க கொடுத்த விலை அதிகம் பாட்டி...?"

"இருக்கட்டுமே... ஒவ்வொருத்தர் ஒவ்வொரு விலை கொடுத்துதான் இந்த உலகத்துல ஒவ்வொண்ணையும் அடையறோம்... அது மனசுக்கு ரொம்ப பிடிச்சிருந்தா அதோட விலையைப் பத்தி கவலைப் படறது இல்லை... இங்க நான் விலைன்னு சொன்னது பணத்தை பத்தி இல்லை...! அப்படிப் பட்ட சொக்கத் தங்கம் நீ... உன்னை என் பேத்தியா அடைஞ்சதுக்கு நான் ரொம்ப கொடுத்து வச்சிருக்கணும்...

நாம் என்னதான் வளர்த்தாலும், இயல்பா வரக் கூடிய பிறவிக் குணத்தை மாத்த முடியாது இல்லியா... அதுதான்... தாராவும், மோகனும், நீயும் என் மகனோட பிள்ளைங்கதான்... ஆனால் எவ்வளவு வித்தியாசம் இருக்கு... உன்னை வளர்த்த மாதிரி தான் அவர்களுக்கும் எல்லாம் செஞ்சேன்... ஆனால் உன்கிட்ட இருக்கிற குணங்கள் அவங்க கிட்ட இல்லையே? என்ன பண்ண?...

என்னோட மனத்திருப்திக்கு நான் வேலை செய்து உங்களை காப்பாத்தினேன்... ஆனால் அதற்கு பிரதி பலனா நான் எதையும் எதிர் பார்க்கலை... சொல்லப் போனா, அது ஒரு வித கர்வம், அது ஒரு வித போதை, அது ஒரு வித அடையாளம்... அந்த அடையாளம் இத்தனை காலமா ஒரு ஆணுக்குதான்னு இருந்தது... அதுக்கு அவங்க உண்மையா இருந்தாங்க...

ஒரு ஆண் படிச்சு முடிச்சு வேலைக்கு போய், கல்யாணம் பண்ணி அவனோட உழைப்புல, அடுத்த தலை முறையை உருவாக்கினான்... பெண்களுக்கு கருத்து சுதந்திரம், பொருளாதார சுதந்திரம் இருந்தது இல்ல... ஆனால் பொருளாதாரப் பிரச்சினையும் இருந்தது இல்லை... அதை ஒரு ஆண் பார்த்து கிட்டான். அது அந்தக் காலம்... அதையும் மீறி சிலருக்கு வாழ்க்கையில அந்த அதிர்ஷ்டம் கிடைக்கிறது இல்லை... அப்படிப்பட்ட ஜென்மத்தில நானும் ஒருத்தி... உனக்கு அப்படித்தான் வாழ்க்கை அமையும்னு நீ ஏன் நினைக்கிறே...? ஏன் இப்ப வாசு இல்லியா...? பொறுப்பா... நம்ம தாரா மாப்பிளை இல்லியா...?"

"நீங்க என்ன சமாதானம் சொன்னாலும் சரி... எனக்கு கல்யாணம் பண்ண இஷ்டம் இல்லை... இந்த ஒரு காரணம் மட்டும் இல்லை... ஒருத்தர் கூட நாம வாழ்க்கை முழுவதும்

சேர்ந்து இருக்கணும்னா, நம்ம குண இயல்புகளோட ஒத்துக்கிற ஒருத்தரோடதான் இருக்க முடியும்… அதனாலதான் நான் வீட்டில அம்மா அப்பா கூட இருக்காம, இங்க உங்க கூட இருக்கேன்… புதுசா ஒரு வளர்ந்த ஆளை சகிச்சிக்கிற அளவுக்கு எனக்கு நேரமும் இல்லை, பொறுமையும் இல்லை…”

“ரங்கா, கல்யாணம் பண்ணிக்கிறது எதுக்கு? மனுஷனுக்கு பேராசை… ஏன்னா அவனால நிரந்தரமா இந்த பூமில இருக்க முடியாது… என்னைக்குனாலும் இந்த பூமியை விட்டு நாம நிரந்தரமா போயிடுவோம்னு அவனுக்கு தெரியும்… அதனாலதான்… தான் போனாலும் இந்த பூமியில் தன்னை நிலை நிறுத்த, கல்யாணம், அவனோட சந்ததிகள் அப்படிங்கிற ஒரு வழக்கத்தை கண்டு பிடிச்சு, அதை நடைமுறைப் படுத்தி, தன்னோட அடையாளம் அழியாம பார்த்துகிட்டான்…

எனக்கும் அந்த ஆசைதான் ரங்கா… என்னதான் தாராவோட குழந்தைகள், மோகனோட குழந்தைகள் அப்படின்னு என்னோட வம்சம் வளர்ந்தாலும், என்னை போலவே குணத்திலும், உருவத்திலும் இருக்கிற உன்னோட குழந்தைகள் இந்த பூமியில் பிறந்து நம்ம பேர் சொல்லி வாழணும்… பாட்டி எப்படியாவது பேத்தியின் மனதை மாற்ற போராட…

அதற்கு பதில் சொல்ல ரங்கா வாய் திறக்கு முன், அவளின்

அலை பேசி அலறியது… அம்மா வீட்டிலிருந்து போன் என்றதும் எடுத்து காதில் வைத்தாள்… “டீ ரங்கா நீ இப்ப உடனே கிளம்பி வாடி…?”

“ஏம்மா விஷயத்தை சொல்லாம, ஏம்மா இப்படி ஒப்பாரி வைக்கிற…? முதல்ல விஷயத்தை சொல்லு… அப்புறம் நான் கிளம்பி வர்றதா இல்லையான்னு முடிவு பண்றேன்…!”

“மோகன் நம்ம எல்லார் தலையிலேயும் கல்லை தூக்கி போட்டுண்டாடி…!”

“அவனால அதைதான் செய்ய முடியும்…! வேற என்ன செய்வான்னு எதிர் பார்த்தே…? வேலை செஞ்சு சம்பாத்தியம் பண்ணி உனக்கு தருவான்னு எதிர்பார்த்தியா…?”

“பார்த்தியா, உனக்கு எல்லாமே இளக்காரமா இருக்கு… ஐயோ நான் இப்ப யாருகிட்ட சொல்லுவேன்… இந்த விளங்காத மனுசனை வைச்சிட்டு என்னை இப்படி புலம்ப வச்சிட்டியே பெருமாளே…?”

“அம்மா, அவரை ஏன் இப்ப தொந்தரவு பண்றே…? அவரே இப்பதான் எல்லா பக்தர்களின் கோரிக்கை எல்லாம் நிறைவேத்தி வைச்சுட்டு அக்கடான்னு தலையை சாச்சுக்க போயிருப்பார்… பிரச்சினை என்னன்னு என் கிட்ட சொல்லு…?”

“நம்ம மோகனை தேடி ஒரு பொண்ணு வீட்டில வந்து உட்கார்ந்து இருக்காடி…!”

“என்னது… பொண்ணா…? அப்ப உன் பையன் எங்க…?”

“அவன் இன்னும் வீட்டுக்கு வரலை…!”

“வந்த பொண்ணு என்ன சொல்றா…?”

“தெரியலைடி… கேட்டா அழறா…?”

இவள் பேசுவதை பார்த்துக் கொண்டிருந்த பாட்டி, “என்ன விஷயம் ரங்கா…? மோகன் ஏதாவது தப்பு பண்ணிட்டானா…?”

“அதைத் தவிர வேறு என்ன பண்ணத் தெரியும் அவனுக்கு… ஏதோ ஒரு பொண்ணு அவன் பேரை சொல்லிட்டு நம்ம வீட்டில வந்து உட்கார்ந்து இருக்காம்… அம்மா நம்மை வர சொல்றா… சரி இன்னைக்கு தூங்கினார் போல தான்… சரி பாட்டி நீங்க இருங்க… நானும் வாசுவும் போய் என்னன்னு பார்க்கிறோம்…”

“இல்லை நானும் வரேன்… எந்த வில்லங்கத்தை இழுத்துட்டு வந்திருக்கானோ…! மூவரும் கிளம்பினர்.

அங்கு சென்றதும், இவர்களைப் பார்த்தவுடன் அந்தப் பெண் மிரண்டு போய் எழுந்து நிற்க… வைதேகி, “பார்த்தியாடி

கலிகாலமால்ல இருக்கு… பையனுக தான் பொண்ணுங்களை தேடி போய் நிப்பாங்கன்னு இருக்கு… ஆனால் இப்ப என்னன்னா…” வைதேகி மேலே பேசுமுன்…

“வைதேகி நமக்குத்தான் வாய் இருக்குன்னு எதைனாலும் பேசக் கூடாது… முதல் என்னன்னு விசாரிப்போம்… அப்புறம் முடிவு எடுக்கலாம்…” என்று பாட்டி மருமகளை அதட்ட, வைதேகி முகவாயை தோளில் இடித்துக் கொண்டு, ‘இனிமேல் வாயை திறக்க விடுவாங்களா…?’ என்று வாய்க்குள் முனங்கினாள்.

“உன் பெயர் என்னம்மா…?”

அவள் பதில் சொல்லாமல் மிரண்டு போய் பார்த்தாள்… என்னோட பெயர் காயத்ரி…?”

“ஆமா இங்க யாரை பார்க்க வந்திருக்கே…?”

“மோகன்னு ஒருத்தரை…”

“அவனை எப்படி உனக்கு தெரியும்…?”

“நான் ஒரு ஜெராக்ஸ் கடையில வேலை பார்க்கிறேன்… அப்ப ஒரு நாள் ரீசார்ஜ் பண்ண அவரும் அவரோட பிரண்ட்ஸ் எல்லாரும் வந்து இருந்தாங்க… அப்ப அவராத்தான் என் கிட்ட பேசினார்… அப்புறம் அடிக்கடி அங்க வந்து ரீசார்ஜ்

பண்ணுவார்…!”

“அப்படியே உனக்கும் சார்ஜ் பண்ணிட்டானா…?” என்று ரங்கா கோபத்தில் கொதிக்க…

“ஏம்மா இந்த வீடு உனக்கு எப்படி தெரிஞ்சுது…?”

“அது வந்து ஒரு தடவை அவர் கூட பைக்ல போகும்போது, இந்த வீட்டை அடையாளம் காண்பிச்சார்… நான் அதை ஞாபகம் வச்சு இப்ப வந்தேன்…”

“வெரி குட்… மத்த எந்த விசயத்தையும் ஞாபகம் வச்சுக்கலைன்னாலும், இதையாவது ஞாபகம் வச்சுட்டு இருந்தியே…” என்ற ரங்கா…

“ஆமா உனக்கு எத்தனை வயசு ஆகுது…?”

“பத்தொன்பது வயசு…”

“சரி… கல்யாண வயசு ஆயிட்டுது…! என்ன படிச்சிருக்கே…?”

“ப்ளஸ் டூ… மேலே படிக்க வசதி இல்லை… அதனாலே கடைக்கு வேலைக்கு போனேன்…”

“அப்பா என்ன பண்றார்…?”

“புரோகிதம் தான் தொழில்… ஆனால் இப்ப கொஞ்ச நாளா

உடம்பு சரி இல்லாததால் வெளியே போறது இல்லை… அம்மா இரண்டு ஆத்துல சமையல் வேலை பார்க்கிறா…?”

‘சரி இப்ப என்ன விசயமா இவனை தேடி வந்திருக்கே…?”

“இல்லை எங்காத்துல வயசான ஒரு ஆளுக்கு இரண்டாந் தாரமா என்னை கல்யாணம் பண்ணி கொடுக்க பேசிண்டு இருக்கா… எனக்கு அது பிடிக்கலை… இவரைத்தான் நான் விரும்பறேன்… அதனால் இவரையே கல்யாணம் பண்ணிக்கணும்னு தேடி வந்திருக்கேன்…?”

“அவன் கிட்ட சொன்னியா…?”

“போன் பண்ணினேன்… அதெல்லாம் முடியாதுன்னு சொன்னார்… அதான் அவரை பார்த்துட்டு போயிடலாம்னு இங்க உட்கார்ந்து இருக்கேன்…?”

“இப்ப அவன் கல்யாணம் பண்ண மாட்டேன்னு சொன்னா என்ன செய்வே…?”

“தெரியலை… எங்கியாவது போய் தற்கொலை பண்ணிக்க வேண்டியதுதான்… என்னால இரண்டாம் தாரமா எல்லாம் வாழ்க்கைப் பட முடியாது…!” கொஞ்சம் பயந்து கொண்டே பதிலளித்தவளை அந்தக் குடும்பத்தினர் திகிலுடன் பார்த்தனர்…

# அத்தியாயம் 8

“அம்மா என்னால ஹோட்டல்ல சாப்பிட முடியல… நீயும் அப்பாவும் அங்கேயே வந்துட வேண்டியது தானே…?” வேலைக்கு போன கொஞ்ச நாட்களிலேயே கேசவன் அம்மாவிடம் முறையிட…

“நானும் அப்பாவும் இந்த ஊரை விட்டு வர்றதா இல்லை… கேசவா, பேசாமல் ஒரு கல்யாணத்தை பண்ணிண்டு உன்னோட ஆத்துக்காரியை அழைச்சுண்டு போய் குடித்தனம் பண்ணு… எப்படியும் இப்பவே இருபத்தி நாலு ஆறது… இப்ப பார்க்க ஆரம்பிச்சா சரியா வரும்…” என்று பதில் சொன்ன ரங்கா அதன் படியே அவன் ஜாதகத்தை எடுத்து, தங்களுக்கு பழக்கமான ஜோசியரிடம் வரன் வந்தால் சொல்லுமாறு கொடுத்து வைத்தாள்…

கேசவனின் அதிர்ஷ்டமோ என்னமோ ஆறே மாதத்தில் வைதேகியின் ஜாதகம், கேசவன் ஜாதகத்தோடு நன்கு பொருந்தி விட பெண் பார்க்க சென்றனர்… பெண் அழகாய் இருக்கவே கேசவன் தலையாட்டி விட, அம்மா இல்லாத பெண் என்பதால் ரங்காவும் பரிதாபப்பட்டு அவர்களிடம் எதையும் எதிர் பார்க்காமல் தன் மகனுக்கு மணமுடித்துக் கொண்டாள்…

ஏற்கனவே பிறந்தாத்திலும் கஷ்டம், தான் தான் எல்லா வேலையும் செய்ய வேண்டும், புகுந்தாத்திலும் பெரிசாக ஒன்றும் இல்லாதாதால், இளமையில் தான் கண்ட கல்யாணக் கனவுகள் ஒன்றும் நிறை வேறாததால், அதற்கு ஏற்றார் போல் கேசவனும் ஊதாரி என்பதால், கணவன் மனைவிக்குள் அடிக்கடி பிணக்கு ஏற்பட்டு அது வாக்கு வாதமாய் வெடிக்க ஆரம்பித்தது…

இத்தனை பிரச்சினைக் கிடையிலும் நண்டும் சிண்டுமாய் மூன்று குழந்தைகள், ஆன போது கேசவனுக்கு நிரந்தர வருமானம் இல்லாமல் போயிற்று… வேலை இல்லை, என்ற பிரச்சினை வேறு, குடும்பத்தை எப்படி நடத்துவது என்பது வேறு, அது போக மனைவியின் பேச்சு வேறு என்று கேசவன் பாதை மாறி போகத் தொடங்கினான்…

"*If it doesn't scare you, You 're probably not dreaming enough*"

***-Tory Burch***

இரவு பன்னிரண்டு மணிக்கு நுழைந்த மோகன் வீட்டில் அனைவரும் தூங்காமல் முழித்து இருப்பதை பார்த்து அதிர்ச்சியடைந்தான்.

அவன் உள்ளே வந்ததும் அம்மாவிடம் "என்னம்மா

எல்லாரும் தூங்காம முழிச்சிட்டு இருக்கீங்க…? பாட்டி, அக்கா, வாசு எல்லாரும் வேற வந்து இருக்காங்க…?”

“இன்னொரு ஆளும் உன்னைதேடி தூங்காம இருக்கு…!” ரங்கா தான் முதலில் வாய் திறந்தாள்…

“யாரு அப்பாவா…? அவர் தூங்காம இருக்க மாட்டாரே…? அவரால தூங்கமல்லாம் இருக்க முடியாது…!” கரெக்ட் ஆக மோகன் சொல்ல… அது மாதிரியே இத்தனை பிரச்சினயிலும் கேசவன் குறட்டை விட்டு தூங்கி கொண்டு இருந்தார்…

“அப்பா இல்ல… ஒரு பொண்ணு…” என்று பாட்டி சொல்ல…

“ஏன் பாட்டி இங்க வாசுவைத் தவிர அவ்வளவு பேரும் பொம்பிளைங்க தான்… இதுல புதுசா யாரு…?”

“புதுசுதாண்டா… இங்க பாரு…” ஓரமாக இருந்த காயத்திரியை வைதேகி காட்ட… மோகனின் முகம் பேயறைந்தாற் போல் ஆகியது…

“இவளை உனக்கு தெரியுமா…?”

“பார்த்து இருக்கேன்… ஆனால் ரொம்ப பழக்கம் இல்லை…” என்று பதில் சொன்னவன் “ஆமா நீ எதுக்கு இங்க வந்துருக்கே…?

“கல்யாணம்… அதை சொல்லிட்டு போக வந்திருக்கா…!” என்று இடக்காக வைதேஹி பதில் சொல்ல…

“அதுக்கு எதுக்கு இங்க வீடு வரை வந்திருக்கே…! நான் ரீசார்ஜ் பண்ண வரும்போது சொன்னா போதாதா…?” அவன் யாருக்கும் விஷயம் தெரியாது என்ற நினைப்பில் கெத்தாய் பேச…

“ஏய் நடிச்சது போதும்… நீ அந்தப் பொண்ணு கிட்ட லவ் பண்ணறேன்னு சொல்லி வச்சிருக்கியா…?”

“ச்ச… ச்ச அதெல்லாம் இல்லை…!”

“ஏய்… பொய் சொன்னே… இருக்கு உனக்கு… எந்தப் பொண்ணும் இந்த விசயத்துல பொய் சொல்ல மாட்டா…!”

“அதெல்லாம் இந்தக் காலத்து பொண்ணுங்க சொல்வாங்க…” ஊடே வைதேஹி பேச…

“நீ செத்த சும்மா இரு வைதேஹி… தேவை இல்லலாம ஒரு பொண்ணை பத்தி பேசாதே… மோகன் நீ சொல்லு… நீ எதுவும் பேசாம இந்தப் பொண்ணு சொல்லாது… அது நிச்சயம்… இப்ப ஒரே ஒரு கேள்விதான்… இவளை கல்யாணம் பண்ணிக்கிறேன்னு சொன்னியா, இல்லியா…?”

பாட்டியின் கேள்விக்கு அவன் பதில் சொல்லாமல் தலை

குனிந்தான்… எரிச்சலான ரங்கா “பாட்டி கிளம்புங்க… அவன் பதில் சொல்ல மாட்டான்… அவ போய் போலீஸ் ஸ்டேசன்ல கம்ப்ளைன்ட் பண்ணட்டும்… அவங்க வந்து இரண்டு போடு போட்டா… சரி வருவான்…” என்று சொல்ல,

அது சரியாக வேலை செய்தது… “பாட்டி விளையாட்டுக்கு சொன்னேன்… அதை இவ நம்பிட்டா… ஆனால் நான் எந்த லெட்டரும் கொடுக்கலை பாட்டி…!”

“லெட்டர் கொடுக்கலை… ஆனால் பைக்ல ஊரெல்லாம் சுத்தி இருக்கே… அப்படித்தானே…! இப்ப அதெல்லாம் பிரச்சினை இல்லை… இதுக்கு மேலே இவளை நீ கல்யாணம் பண்ணித்தான் ஆகணும்… இல்ல வெளியே போன்னு சொன்னால் நீயும் சேர்ந்து வெளியே போயிடு… ஏன்னா நாளைக்கு எதாவது பிரச்சினைன்னா போலீஸ் வந்து குடும்பத்தோட உள்ள வச்சிடும்…!” என்று ரங்கா சொல்லவும்…

வைதேகி “ஏய் என்னடி புதுசா சொல்றே…!” என்று பயப்பட…

“புதுசா எல்லாம் இல்லை… எல்லாம் பழசுதான்… நாளைக்கு இவளோ இவளை சார்ந்தவங்களோ ஒரு கம்ப்ளைன்ட் கொடுத்தா நாம் குடும்பமே அங்க போய் நிக்கணும்… நானும் பாட்டியும் இங்க இல்ல. அதனால் ஓரளவு தப்பிக்கலாம்… ஆனா மத்தவங்க

களி திங்கப் போறது நிஜம்…!” இப்படி பேசினால் தான் அம்மாவை சம்மதிக்க வைக்க முடியும் என்று தெரிந்து பேசினாள்.

அது படியே “ஏய் ரங்கா அதெல்லாம் வேண்டாம்… இப்ப என்ன செய்யணும்னு சொல்லு…” என்று கேட்க…

“இந்தப் பொண்ணுக்கும் மோகனுக்கும் கல்யாணம் பண்ணி வைங்க… இவங்க வீட்டு போன் நம்பர் வாங்கி விசயத்தை இவங்க வீட்டில் சொல்லி இவளைக் கொண்டு போய் அவ வீட்டில விடணும்… இல்லேன்னா விஷயம் விபரீதம் ஆயிடும்…” என்று சொல்லவும் வைதேகி சம்மதித்தாள்.

அவ அப்பா போன் நம்பர் வாங்கி அவரிடம் விஷயத்தை மேம்போக்காக சொல்லி அவரை வரவழைத்து, வந்து கோபத்தில் குதித்தவரை சமாதனம் செய்து, கல்யாணம் உறுதி செய்து… இவர்கள் யாரும் விடிய விடிய தூங்கவே இல்லை…

அதிகாலை மூன்று மணிக்கு மேல் சற்று கண் அசந்த பாட்டிக்காக அவளும், வாசுவும் அங்கேயே தூங்கி விட்டு காலையில் பாட்டி எழுந்ததும் கிளம்பினர்… வீட்டுக்கு வந்ததும் வாசுவும் கிளம்பி விட மிகவும் டயர்ட் ஆக இருந்ததால் அன்று அவளும் ஆபிசுக்கு மட்டம் சொல்லி விட்டு வீட்டில் இருந்தாள்…

மதியம் மூன்று மணி வாக்கில் ஆபிசில் இருந்து அவளுக்கு

போன் வந்தது… சீனியர்… ”ரங்கா, இன்னொரு டைவர்ஸ் கேஸ்… இது ரொம்ப பெரிய இடம்… என்கிட்ட வந்தாங்க… எனக்கு விருப்பமே இல்லை… ஆனாலும் உனக்காக நான் ஒத்துகிட்டேன்… நீயே பண்ணு…! இன்னைக்கு அவங்களை போய் நேர்ல பார்த்துட்டு வா… போன் நம்பர் அனுப்பறேன்…” என்று சொல்லி போன் நம்பரையும் அனுப்பி வைத்தார்.

வாணிப் ப்ரியா என்று பெயரும் நம்பரும் இருந்தது… சற்று யோசனைக்கு பிறகு இவள் அழைக்க, எடுத்து பேசியது ஒரு இளம்பெண்… “நீங்க ஈவ்னிங் ஆறு மணிக்கு வர முடியமா…? என்று கேட்டு தங்கள் அட்ரெஸ் சொல்ல “சரி…” என்று போனை வைத்தாள்…

சென்னை அடையாரில் உள்ள மிகப் பெரிய பங்களா… வாட்ச்மேனிடம் சொல்லி… அவன் கேட்டு கதவை திறக்கவே பத்து நிமிடத்திற்கு மேல் ஆயிற்று… கேட்டுக்கு உள்ளே நுழைந்ததும் அதன் பிரம்மாண்டத்தை பார்த்து வியந்து போய் நின்று விட்டாள்…

அத்தனை அழகாய் இருந்தது அந்த மாளிகை போன்ற வீடு… போர்டிகோவை கடந்து படிகளில் ஏறி ஹாலுக்குள் நுழைந்து யார் இருக்கிறார்கள் என்று பார்க்க, சற்று வயதான பெண்மணி ஒருவர் இவளைப் பார்த்து, “நீங்க தான் சார் சொன்ன வக்கீலா…?”

“ஆமாம்…”

“வாங்க…” என்று அழைத்துக் கொண்டு வீட்டுக்குள் இருந்த ஒரு அறைக் கதவை தட்டி திறந்ததும் “வாணி, உன்னை தேடி வக்கீல் வந்து இருக்காங்க…” என்று சொல்லி விட்டு சென்றார்…

எதிரே நின்ற பெண்ணை பார்த்தாள்… ஒரு முப்பத்தைந்து வயது இருக்கு… பார்த்தவுடனே தெரிந்தது… நல்ல அழகியா இருந்து இருக்க வேண்டும் என்று… இப்போது சற்று சதை போட்டு, கவலையினால் கண்களுக்கு கீழ் கரு வளையம் ஏற்பட்டு சற்று டல்லாக தெரிந்தாள்…

“வாங்க…” என்று உள்ளே அழைத்து கதவை சாத்தினாள்.

“உட்காருங்க…” என்று அவளுக்கு சோபாவை காட்டி விட்டு எதிரில் உட்கார்ந்தாள்…

“என் பெயர் ரங்கா… நான் ரங்கபாஷ்யம் சாரோட ஜூனியர்… சார்தான் உங்களை பார்த்துட்டு வரச் சொல்லி அனுப்பி வைச்சார்… உங்க பெயர்…?”

“என் பெயர் வாணிப் ப்ரியா… நான் நடிகர் அமரேஷ் மனைவி… எங்க அப்பாதான் தயாரிப்பாளர் (விவி) வி.விஜயரங்கம்… எங்க அம்மா பெயர்ல புரடெக்சன் கம்பெனி

வச்சு இருக்காரு… மாயா ப்ரோடேக்சன் கம்பெனி அதுதான்…”

“அப்படியா… எனக்கு அவ்வளவா தெரியாது மேடம்… நான் படம் பார்க்கிறது ரொம்ப அபூர்வம்…”

“எனக்கு எங்க ஹஸ்பண்ட் என்கிட்டே விவகாரத்து கேட்டு வக்கீல் நோட்டீஸ் அனுப்பி இருக்காரு…!”

“உங்களுக்கு கல்யாணம் ஆகி எத்தனை வருஷம் ஆச்சு…?”

“கல்யாணம் ஆகி பத்து வருஷம் ஆயாச்சு… எட்டு வயதில் ஒரு மகள் இருக்கிறாள்… இப்ப போய் விவகாரத்து வேணும்னு கேட்கிறாரே…!”

“காரணம் என்ன…?”

“காரணம் என்ன பெரிய காரணம்… இப்ப புதுசா

ஒரு படுத்துளல அறிமுகம் ஆகியிருக்கிற கதாநாயகி நளினிஸ்ரீ தான் காரணம்…! என்று வெறுப்பாக பதில் சொன்னாள்…

“உங்க முடிவு என்ன…?”

“எனக்கு விவகாரத்து கொடுக்க மனசு இல்ல மேடம்… எங்க ரெண்டு பேர் மாரேஜ் லவ் மாரேஜ்… என்னால அவரை மறக்க முடியலை… பெண் குழந்தை வேற… அதனால அவர் கூட

என்னை சேர்த்து வச்சிருங்க மேடம்…”

“அந்த நோட்டீஸ் எடுத்திட்டு வாங்க…!” என்று கேட்டு அதை எடுத்திட்டு வந்ததும் பிரித்து பார்த்தாள்…

வக்கீல் யார் என்று பார்த்தால் உபேந்திரா என்று இருந்தது… ‘இவனுக்கு எதுக்கு இந்த மாதிரி கேஸ் எல்லாம்…’ என்று மனதுக்குள் ஒரு நினைப்பு ஓடியது…

“சரி… நான் இதுக்கு பதில் நோட்டீஸ் அனுப்பறேன்… அதுக்கு என்ன பதில் வருதுன்னு பார்ப்போம்… அதுக்கு முன்னாடி நான் சொல்றபடி செய்ங்க…” என்றவள் சில விஷயங்களை அவளிடம் சொல்லி விட்டு சென்றாள்.

மறுநாள் சீனியரிடம் “சார் உபேந்திரா வக்கீல் ஆபிஸ்ல இருந்து தான் நோட்டீஸ் அனுப்பி இருக்காங்க…! அவர் கிரிமினல் கேஸ் மட்டும்தானே பார்க்கிறார்…”

“அப்படித்தான்… ஆனால் உபேந்திராவும் அமரேஷும் பிரண்ட்ஸ்…”

“ஒஹ்… அதனால் கேஸ் எடுத்து இருப்பார்னு நினைக்கிறேன்…!”

“என்னம்மா பதில் அனுப்ப போறே…!”

“எப்படியும் ஜட்ஜ் இரண்டு பேரையும் வச்சு பேச சொல்வாங்க… அதை நாம் முதலிலேயே சொல்லி பார்ப்போம்… ஏன்னா அவர் செலிபிரட்டிங்கிறதாலே கோர்ட்டுக்கு கடைசி ஒரு நாள் மட்டும்தான் வருவார்,, அப்ப நாம் தனியா எங்கேயாவது மீட் பண்ணி பேசிடலாம்னு நினைக்கிறேன்…!”

“ஒ.கே நான் இந்தக் கேஸ்ல தலையிடலை… உனக்கு சரின்னு பட்டதை செய்… ஆனால் நியாயமா செய்…”

சீனியர் சொல்லி விடவும், பதில் கடிதத்தில் தன்னுடைய கட்சிக்காரருக்கு விவகாரத்து செய்வதில் இஷ்டமில்லை எனவும் இது பற்றி கணவன் மனைவி இருவரும் நேரில் சந்தித்து பேசி விட்டால் நல்லது எனவும் குறிப்பிட்டு இருந்தாள்…

தபால் கிடைத்த அடுத்த நாளே அவனிடம் இருந்து போன் வந்து விட்டது… “ஆபிஸ் லேண்ட் லைனில் அழைத்தவன் இவளை கூப்பிடுமாறு போனை எடுத்த சரவணனிடம் சொல்ல, அவன் இவளிடம் போனை கொடுத்தான்…

“ஹலோ…”

“நீ என்ன நினைச்சிட்டு இருக்கே…? ஒரு நோட்டீஸ் அனுப்புனா அதுக்கு பதில் எப்படி எழுதணும்னு தெரியாத நீயெல்லாம் எதுக்கு வக்கீலுக்கு படிச்சே…?”

“ஹலோ மரியாதை… அதென்ன நீ, வா போன்னு… மரியாதையே கொடுக்கத் தெரியாத நீங்களே வக்கீலுக்கு படிச்சு வேலை பார்க்கிறப்ப எனக்கு என்ன…? என்ன பதில் கொடுக்கலை… ஹியரிங் எப்படியும் ஜட்ஜ் போடுவாங்க… அது எதுக்கு…? நேரடியா உட்கார்ந்து இரண்டு பேரும் பேசட்டும்… நம்ம முன்னாடி… அப்ப தெரிஞ்சிடும்… இல்லேன்னா, எங்க கட்சிகாரர் விவகாரத்து கொடுக்க இஷ்டப்படலை… கேஸ் இழுக்கும் என்ன செய்யலாம்.? உங்க கட்ச்சிகாரர் கிட்ட கேட்டு சொல்லுங்க…”

ஜூனியர் தானே தான் பேசினாலே பயந்து விடுவாள் என்று எதிர்பார்த்து அவன் பேசி இருக்க, அவளோ அவனுக்கே ஆப்பு அடிப்பது போல பேசியதும்… அவனுக்கு இவள் வேறு மாதிரி என்று தோன்றியது…

தான் ஜெயிப்பது திண்ணம் என்றாலும், இவள் அதை ஈசியாக கிடைக்கக் விட மாட்டாள் என்று புரிந்தது… ஏற்கனவே தனது கேசில் இவளிடம் பல்ப் வாங்கியது எரிச்சலை கிளப்பி இருக்க, அவன் இந்தக் கேஸ் சம்பந்தமாய் எதிர் தரப்பில் இருந்து நோட்டீஸ் வந்ததுமே வக்கீல் யார் என்று தான் பார்த்தான்…

ரங்கபாஷ்யம் ஆபிஸ் என்றதுமே இவனுக்கு தானே ஆஜராகி விடவேண்டும் முடிவு எடுத்து விட்டான். அதற்கு ஏற்றார் போல்

போனில் இந்தக் கேஸ் டீல் பண்ணும் வக்கீலிடம் கொடுங்கள் என்று சொன்னதுமே இவள் குரல் கேட்க…

தன் எண்ணங்களிலே உழன்றவனுக்கு “என்ன பதிலையே காணோம்…?” என்ற அவளது குரல் எரிச்சலை கிளப்பியது… ‘நக்கல் வேறு’ என்று தோன்றியது… ஆனால் அவள் சாதரணமாக தான் பேசினாள்…

“நாளைக்கு ஈவ்னிங் என்னோட வீட்டுக்கு நீங்க உங்க கிளையன்ட் கூட்டிட்டு வாங்க…!”

“உங்க வீடா…?” என்று இழுத்தவளுக்கு… “என்ன பயமா…?” என்ற அவனது கேலிக் குரல் அவளை சீண்ட…

“ஓகே…” என்று கூறி போனை வைத்து விட்டாள்… அவன் வீடு இவளுக்கு மிக தொலைவு… போகும் பொது ஆட்டோவில் போய் விட்டு வரும் போது வாசுவிடம் சொல்லிக் கொள்ளலாம் என்று முடிவு செய்தாள்…

வாணியிடம் சொல்ல “அவர் வீடு எதுக்கு…? என்று கேட்டாள்…

“அம்ரேஷ் செலிபிரட்டி… தேவை இல்லாத பிரச்சினை வேண்டாம்னு நினைச்சு இருப்பார்…” என்று அவளுக்கு புரிய

வைக்கவும் அவளும் ஒத்துக் கொண்டாள்.

“நீங்க போகும் போது என் வீட்டுக்கு வர்றீங்களா…? சேர்ந்து போயிடலாம்…” என்று வாணி கேட்க… தனது ஸ்கூட்டியை அலுவலகத்திலே விட்டு விட்டு ஆட்டோவில் அவள் வீடு சென்று வாணியையும் அழைத்துக் கொண்டு உபேந்திரா வீடு சென்ற போது மணி ஆறு ஆகி இருந்தது…

அங்கு ஏற்கனவே அமரேஷ் வந்திருக்க நண்பர்கள் இருவரும் பேசிக் கொண்டு இருந்தனர்… நேரடியாக அமரேஷ் பார்த்தவள் முகத்தில் ஒரு சின்ன சலனமோ, அல்லது ஒரு பெரிய சினிமா நடிகனை பார்த்த பிரமிப்போ இல்லாத அவளது முக பாவனையை உபேந்திரா கவனித்தான்…

“வாங்க… உட்காருங்க…” என்று தங்களது அலுவலக அறையில் இருந்த மிகப் பிரம்மாண்டமான டேபிளுக்கு எதிரில் இருந்த சேர்களை காட்டியவனை பார்த்தாள்…

அமரேஷ் ஒரு சினிமா நடிகனுக்குரிய சகல விதமான ஒப்பனைகளோடு தனது வயதை குறைத்துக் காட்ட முயலுவது புரிய… அதே சமயத்தில் எந்தவித ஒப்பனையும் இல்லாமல் அமரேஷை விட அதிக கவர்ச்சியாகவும், கம்பீரத்தோடும் உபேந்திரா தெரிவது அவளது அறிவுக்கு எட்டியது…

கணவனும் மனைவியும் ஒருவொருக்கொருவர் பார்த்தும் பேசிக் கொள்ளக் கூட முயாலததது புரிய, ‘என்ன’ என்பது போல ரங்கா உபேந்திராவை பார்த்தாள்…

“அமர், நீ முடிவா என்ன சொல்றே…?” உபேந்திராதான் ஆரம்பித்து வைத்தான்…

“நான் ஏற்கனவே உன்கிட்ட சொன்னதுதான்… எனக்கு டைவேர்ஸ் தான் வேணும்…!” அவன் அழுத்தமாய் சொல்ல…

“இப்போது உன்னோட ஆளு பதில் என்ன…?” என்பது போல ரங்காவை பார்த்தான் உபேந்திரா…

இதற்குள் வாணியின் கண்கள் கலங்கி, முகம் சிவந்து உதடு கடித்து அவள் அழுகையை அடக்க போராடுவது தெரிந்தது… ‘பெண்களுக்கு மட்டும் ஏன் இந்த நிலைமை…? ரங்காவிற்கு கோபம் கொப்பளிக்க துவங்கியது…’

யாரும் அறியாமல் வாணியின் கையை பிடித்து அழுத்தி தையிரியம் சொன்னவள், “மேடம் உங்க பதிலை சொல்லுங்க…” என்றாள்.

“இல்ல… என்னால டைவர்ஸ் கொடுக்க முடியாது… என்னஙக, நம்ம பொண்ணு சுசியை நினைச்சு பாருங்க… அவளுக்கு இப்பதான் எட்டு வயது ஆகுது. அவ உங்களை ரொம்ப மிஸ்

பண்ணுவா…”

“அதான் என் பொண்ணையும் கொடுத்திடுன்னு சொல்றேன்…

“இன்னொருத்தியை நம்பி என் பொண்ணை அனுப்ப மாட்டேன்…”

அது உன் இஷ்டம், என்பது போல் அவன் உட்கார்ந்து இருக்க, ‘இவர்கள் இருவரும் எதைக் கண்டு காதலித்தார்கள்’ என்று தோன்றியது… ‘அவளின் அழகா, அல்லது அவனது செலிபிரட்டியா…!’

‘எதுவானாலும் இரண்டுமே அழியக் கூடியது… அழியாதது அல்லவா அன்பு… அல்லது அப்படி ஒன்று இவர்களுக்கு இடையில் இருக்கவே இல்லையா… ஆசை அறுபது நாள்… தீர்ந்ததும், இருவரின் அருவெறுப்பான நிஜங்கள் ஒருவருக்கு ஒருவர் பிடிக்கவில்லையா… அல்லது தான் ஆண், அதிலும் எல்லோராலும் கொண்டாடப் படுபவன் என்ற அகம்பாவமா…?’ யார் மேல் தப்பு அவள் உற்றுக் கவனிக்கத் துவங்கினாள்…!’

“உங்களுக்கு பிடிக்கிற மாதிரி தானே இருந்தேன்… நீங்க செய்யற எதுக்கும் மறுப்பு சொல்றது கிடையாது… நீங்க என்ன தப்பு செஞ்சாலும் கேட்கிறது கிடையாது… அப்படித்தானே இருந்தேன், இந்த இரண்டு வருசமா…? அப்புறம் எதுக்கு

டைவேர்ஸ் கேட்கிறீங்க...?”

“ஏய் எனக்கு இதுக்கெல்லாம் விளக்கம் சொல்லிட்டு இருக்க முடியாது... எனக்கு உன்னை பிடிக்கலை... விவகாரத்து வேணும்... அவ்வளவுதான்...!”

“என்னை ரொம்ப பிடிச்சிருக்குன்னு சொல்லி, உங்க காதலை சொல்லித்தானே கல்யாணம் பண்ணுனீங்க... அப்புறம் இப்ப எப்படி பிடிக்காம போகும்...!”

“அது எனக்கு தெரியாது... நீயே உன்னைப் பாரு... அப்ப தெரியும்... எப்ப பார்த்தாலும் அழுது வடிஞ்சிட்டு...!”

தயந்து, நயந்து, பயந்து பேசியவள் இப்போது, “ம்ம் இப்ப இருபத்திரண்டு வயசுல ஒண்ணை பிடிச்சு இருக்கீங்க... அதான் பேசறீங்க...!”

“ஆமாண்டி, அப்படித்தான்... இப்ப என்ன செய்யணும்...? எனக்கு அவளை கல்யாணம் பண்ணனும்... நீ டைவர்ஸ் தரலைன்னா உன்னை நாறடிச்சுருவேன்... என்னோட பலம் தெரியாம மோதாதே...!” ஆக்ரோசமாய் அவன் சொல்ல...

“நிறுத்துங்க சார்... என்னமோ நீங்க மட்டுதான் இங்க இருக்கிற மாதிரி பேசிட்டே போறீங்க... ஆமா நீங்க இவங்களை

எதுக்காக கல்யாணம் பண்ணிகிடீங்கன்னு நான் சொல்லட்டுமா…!

இவங்க அப்பா பெரிய தயாரிப்பாளர்… அவர் படத்துல நீங்க நடிக்கணும்… அவரோட சொத்துக்களுக்கு நீங்க அதிபதி ஆகணும்… இது மட்டுமில்லாம உங்களுக்கு ஒரு தலையாட்டி பொம்மை வேணும்… இதெல்லாம் தெரிஞ்சுதான் கல்யாணம் பண்ணிகிட்டீங்க…

இவங்களை கல்யாணம் பண்ணிய பிறகும் உங்க ஆட்டம் எதுவும் அடங்கலை. ஆனால் கொஞ்ச நாள் இவங்களுக்கு தெரியாத மாதிரி பாத்துகிட்டீங்க… அவ்வளவுதான்… இப்ப உங்க காதலியா இருக்கிற நளினி ஸ்ரீ… நீ இவளை விவகாரத்து பண்ணினாதான் ஆச்சுன்னு ஒத்தைக் கால்ல நிக்கிறா… உன்னோட ஆசைக்கு அவ இணங்கலை… அதுதான் காரணம்… த்தூ… நீயெல்லாம் ஒரு மனுசன்னுட்டு உன்கூட பேச வந்ததே பாவம்…

வாங்க மேடம்… இந்த ஆள் கூட வாழறது உங்களுக்கு அவமானம்… பொண்ணுன்னா புருஷன் வேணும்னு யார் சொன்னது… உங்க குழந்தையை சிறந்த முறையில் உருவாக்குங்க… அதை உங்க வாழ்க்கை லட்சியமா எடுத்துக்கோங்க. நானாச்சு உங்களுக்கு விவகாரத்து வாங்கி தர…!" என்று படபடவென்று பொரிந்தவள், வாணியின் கையை பிடித்து இழுத்துக் கொண்டு வெளியே வந்து விட்டாள்.

வெளியே வந்து வாணி அழ, “மேடம் உங்களை என் சகோதரியா நினைச்சு சொல்றேன்… உங்க கூட இருக்க இஷ்டம் இல்லாத ஆளை இழுத்து பிடிச்சு வைக்கிறதால் எந்த ஒரு நன்மையும் உங்களுக்கு கிடைக்கப் போறது இல்லை… உங்களுக்கு உங்க அம்மா, அப்பா இருக்காங்க… நீங்க உங்க குழந்தைன்னு ஒரு வட்டத்தை போட்டுட்டு வாழுங்க அது நிம்மதி… நீங்க போங்க… இனி இந்த ஆள் மூஞ்சில முழிக்காம உங்களுக்கு நான் டைவர்ஸ் வாங்கித் தரேன்…” என்று அவளை காரில் ஏற்றி அனுப்பினாள். தனக்காக வெளியே காரில் காத்துக் கொண்டிருந்த வாசுவின் அருகில் சென்று “என்ன வாசு போகலாமா…?” என்று கேட்டுக் கொண்டே முன் கதவு திறந்து காரில் ஏறி உட்கார்ந்தாள்…

“என்ன இவ்வளவு தூரம்…? அதுவும் உன்னோட எதிரி வீட்டுக்கு…? என்று சிரித்துக் கொண்டே அவன் கேட்க…

“பச்ச்… நீயும் ஆரம்பிக்காதே… ஏற்கனவே ஒரே தலைவலி…” என்றவள் சீட்டில் சாய்ந்து கண்ணை மூட, “சரி தூங்கு நான் மெல்ல ஓட்டுறேன்… என்றான் கரிசனமாக…

# அத்தியாயம் 9

“அம்மா, தாரா என்ன கிட்ட சண்டை போடறா…! ஐந்து வயது மோகன் கத்தினான்…

“டேய் அவ உன் தங்கை தானே… எதுக்கு அவ கிட்ட சண்டை போடறே…?”

“என் டப்பா, என் பென்சில் எல்லத்தையும் எடுத்துக்கிறா அம்மா…!” இவன் கத்திய கத்தலில் உள்ளே இருந்து வந்த வைதேகி…

“ஏண்டா ஸ்கூலுக்கு கிளம்பறதை விட்டுட்டு இப்படித்தான் அடிச்சுப்பேளா… நான் அடுக்களையில் வேலை பார்ப்பேனா, அல்லது உங்க சண்டையை தீர்த்து வைப்பேனா, உங்க அப்பா எங்க போனார்…? ஏய் ரங்கா இங்க தானே இருக்க… இவங்களை சண்டை போடாதீங்கன்னு சொன்னா என்ன…?”

“அது என் வேலை இல்லம்மா… அவங்களுக்கு தெரியணும்… சொன்னா கேட்கமாட்டாங்க…” என்று சொல்லிவிட்டு தன் படிப்பில் ஆழ்ந்த மூத்த மகளை கோபத்துடன் வெறித்தாள் வைதேகி…

‘அப்படியே அவங்க பாட்டி மாதிரி…” மனதுக்குள்

கடுகடுத்தவள் சிறியது இரண்டுக்கும் ‘தொப், தொப் பென்று’ அறை வைத்தாள்.

வெளியிலிருந்து வந்த பாட்டி, “ஏன் வைதேகி குழந்தைகளை போட்டு இப்படி அடிக்கிறே…?”

“வேற என்ன பண்ண…? உங்க பையன் பிடுங்கல் போதாதுன்னு இதுகளும் பிடுங்கல்…!”

“அதுகளுக்கு என்ன தெரியும்… நீ சொன்னா புரிஞ்சுப்பா…!”

‘ஆமா இங்க பெரிய ஆள்களுக்கே புரியலை… இதுகளுக்கு புரிஞ்சிட்டு தான் மறு வேலை…!’ அவள் சத்தமாய் முணுமுணுக்க… ரங்காவுக்கு புரிந்தது…

கேசவனுக்கு சம்பளம் கம்மி… இதில் மூன்று குழந்தைகள் படிப்பு… என்று ஏக செலவு… ரங்காவும் எதாவது பணம் கொடுத்தாலும்… அது எல்லாம் கடலில் கரைத்த உப்புதான்…

நகர வாழ்க்கை வண்ண மயமாக இருக்கும் என்று கனவு கண்டவளுக்கு, அடிப்படை செலவுக்கே திண்டாடும் நிலைமை… ராகவனும் மறைந்து வருஷம் இரண்டுதான் ஆகிறது… வருஷம் கழிந்ததும் மகனுடன் சில நாள் இருக்கலாம் என்று சென்னை வந்து மாதம் ஆறுதான் ஆகிறது… உள்ள நிலைமையை பார்த்து தான் திரும்பவும் கிராமத்துக்கே போய் விடலாமா என்ற நினைவு

இப்போது உறுதியாயிற்று…

மகன் வந்ததும், "கேசவா நான் கிராமத்துக்கே போறேன்… உனக்கு சரின்னா நான் ரங்காவை கிராமத்துக்கே அழைச்சிட்டு போய், நானே படிக்க வைக்கிறேன்…"

"அங்க இங்கிலீஷ் மீடியம் இருக்குமா…?"

"முந்தி மாதிரி எல்லாம் கிடையாது… இப்ப எல்லா ஊர்லேயும் இங்கிலீஷ் மீடியம்தான்…"

"சரி… அப்ப அவ கிட்ட கேட்டுட்டு கூட்டிட்டு போ…"

"ரங்கா, நீ பாட்டி கூட வர்றியா… நான் உன்னை அங்க படிக்கச் வைக்கிறேன்…!" பாட்டி அழைத்ததும், பேத்தி ரங்கா சரி, என்றாள்.

"*I don't know a woman alive who isn't courageous*"

***-Reese Witherspoon***

"சார், இந்தக் கேஸ்ல நான் என்ன பண்ணினாலும், உங்களுக்கு ஆட்சேபணை இல்லியா…?" ஒரு சந்தேகத்துக்காக ரங்கபாஷ்யத்திடம் கேட்டு கொண்டாள்…

காரணம் இல்லாமல் அவள் எதுவும் கேட்கமாட்டாள்

என்பதால், “என்ன வேணும் சொல்லும்மா…?” என்றதும் நடந்ததை சொன்னவள்…

“சார் அந்தாளுக்கு இப்ப நளினி ஸ்ரீ மேல மோகம்… அவ இதை சரியானபடி பயன்படுத்தி கிட்டு இவனை வளைக்க பார்க்கிறா… இதுக்கு ஒரு பாடம் கற்பித்து கொடுக்கனும்…”

“ஓ.கே… உன் கோபம் எனக்கு புரியுது… கேஸ் மட்டும் ஜெயிச்சு கொடு போதும்… எதுக்கு தேவை இல்லாத பெரிய இடத்து வம்பு…”

“இப்படி எல்லா பெண்களும் நினைக்கிறதாலதான், ஆண்கள் எல்லோருமே பெண்களை ஏமாத்துறாங்க… தலை மேல் ஏறி உட்காருறாங்க…!”

“எம்மா நான் அப்படி கிடையாது…!” சீனியர் வேடிக்கையாய் சொல்ல…

“சார் உங்களை நான் சொன்னேனா… நூத்துல தொண்ணுத்தி ஒன்பது பேர் இப்படி இருக்கிறாங்க… சார் நான் கொஞ்சம் சரவணன் ஹெல்ப் எடுத்துகிட்டுமா…?”

“ஷ்யூர்… இரண்டு பேரும் சேர்ந்து பாருங்க…” என்றவர் சரவணனையும் அழைத்து விபரத்தை சொல்லி விட அவனை

அழைத்துக் கொண்டு அந்த தயாரிப்பாளர் விவியை பார்க்க சென்றாள்…

“என்னமா இங்க ஆபிசுக்கு வந்து இருக்கீங்க…!”

“இல்ல சார் பீஸ் விபரம் கொஞ்சம் பேசணும்…!” சரவணன் தான் சொன்னான்…

ஆனால் அவன் கண்களில் தெரிந்த செய்தியில் சற்றே யோசித்தவர்… “ஓகே ஐந்து நிமிஷம் வெய்ட் பண்ணுங்க நான் சாப்பிட பக்கத்துல உள்ள ஹோட்டலுக்குதான் போறேன். அங்க பேசலாம்…!”

“என்ன விஷயம்…? எதுவா இருந்தாலும் வீட்டில் வைத்தே பேசி இருக்கலாமே…!”

“இல்ல… இது உங்க பொண்ணுக்கு தெரிய வேண்டாம்…!” ரங்கா தான் இப்போது பேசினாள்.

“சார் உங்க மருமகன் கிட்ட இருக்கிற பணம்தான் இப்போ நளினி ஸ்ரீ கண்ணை உறுத்துது… அது இல்லேன்னா அவ அவரை திரும்பி கூட பார்க்க மாட்டா… ஒருவேளை இப்ப இருக்கிற இமேஜ் வைச்சு அவ கல்யாணம் பண்ணினாலும், அவர் கிட்ட பணம் இல்லேன்னதும் அவ வேற யார் கூடவாவது போயிடுவா…”

‘அது தெரிஞ்ச விஷயம் தானே...!”

“அப்ப நாம அதைதான் பயன்படுத்தணும்...!”

“புரியலை... சார் நீங்க பெர்சனலா ஒரு சில உதவிகள் செய்யணும்... உங்களுக்கு மிகவும் நம்பிக்கையான போலீஸ் ஆபிசர் யாரவது தெரியுமா... அதுவும் நேர்மையானவரா இருக்கணும்...”

“இருக்கான்மா... இப்ப இங்க இருக்கிற ஏசி எனக்கு சொந்தகார பையன்தான்... நான் தான் படிக்க வைச்சேன். அதனால் என் மேல ரொம்ப மதிப்பு உண்டு...”

“அவர்கிட்ட உங்க பெயர் சொன்னா, எங்களுக்கு உதவுவாரா...?”

“ம்ம்... நிச்சயமா...” என்றவர் உடனே அவரை அழைத்தார்... ‘மதிவாணன் ஐபிஎஸ்...’...

“என்ன மாமா...?” என்று உடனே அவன் கேட்கவும்...

“இல்லப்பா எனக்கு ஒரு உதவி ஆகணும்... அதான்...!” என்று இவர் இழுக்க...

“சொல்லுங்க மாமா... நீங்க எதுவும் தப்பா செய்ய சொல்ல

மாட்டேங்கன்னு நம்பிக்கை இருக்கு…!”

“உனக்கு நேர்மைன்னு தோணுச்சுன்னா மட்டும் செய்து கொடு… நான் என்னோட வக்கீலை உன்னை பார்க்க வரச் சொல்றேன்…” என்றவர், இவர்களிடம் அவனது போன் நம்பரை கொடுத்து போய் சொல்லுங்க… செய்துதந்தா ஓ.கே… இல்லேன்னா வேற வழி பார்க்கலாம்…!” என்றார்.

அவரிடம் விடை பெற்று, மதிவாணனிடம் பேசி அவனது அலுவலகத்துக்கு சென்ற போது மாலை நான்கு மணி… சற்று நேரம் கழித்தே அவர்களை அழைத்தான்…

உள்ளே சென்று பார்த்ததுமே தெரிந்தது… இவனிடம் பேசுவது எளிதல்ல என்று… போலீஸ் என்ற தேர்வுக்கு அதிகப்படியான உயரம்… நல்ல நிறமாக இருந்து இருக்க வேண்டும்… ஆனால் வெயிலில் அலைவதால் சற்று நிறம் மங்கிய தோற்றம்… கத்தரித்தார் போல் மீசையும், ஒட்டி வெட்டிய கிராப்பும், ஜிம் உடலும், விரைப்பான யூனி பார்மும் அவனது நேர்மையை பறைசாற்ற, “குட் ஈவ்னிங் சார்…” என்றனர்…

வக்கீல் என்றதும் ஒரு ஆணை மட்டும் எதிர் பார்த்தவன், அருகில் நின்ற ரங்காவைப் பார்த்ததும், மனதுக்குள் அவள் தோற்றம் குறித்து வியந்தாலும், தனது முகம் மாறாமல் “எஸ்… பீ

சீட்டட்,," என்று கையை காட்டினான்.

"தேங்க்ஸ் சார்..." என்று உட்கார்ந்தவர்களிடம் "ஹாட் ஓர் கோல்ட்..." என்றவன் உள்ளே வந்த பிசியிடம் "மூணு காபி..." என்றான்...

"சொல்லுங்க என்ன ஹெல்ப் வேணும்...?"

சரவணன் தான் "சார் உங்க மாமா பொண்ணு டைவர்ஸ் கேஸ் நாங்கதான் எடுத்து இருக்கிறோம்... ஹஸ்பண்ட் ஆக்டர் அமரேஷ்... அவரைப் பத்திய சில விசயங்கள் எங்களுக்கு எவிடென்ஸ் வேணும்... நாங்க ஏதாவது டிடெக்டிவ் ஏஜென்ட் கிட்ட போனா, அது பூமராங் மாதிரி எங்க கிட்டேயே திரும்பி வந்திடும்...!"

"டைவர்ஸ் கேசுக்கும் அவரோட பர்சனல் எவிடன்சுக்கும் என்ன சம்பந்தம்...? பொண்டாட்டியை பிடிக்கலைன்னு டைவேர்ஸ் பண்றாரு... அதுக்காக நீங்க என்னவோ பிளாக் மெயில் கும்பல் மாதிரி அவர் பெர்சனலை எவிடென்ஸ் கிரியட் பண்ணனும்னு சொல்றீங்க...!"

"சர் பெண்டாட்டியை பிடிக்கலைன்னு டைவர்ஸ் பண்ணலை... அப்போ முதல்ல எதுக்கு பிடிச்சிருக்குன்னு கல்யாணம் பண்றாரு...? இப்போ இன்னொருத்தியை கல்யாணம் பண்ணனும்.

அதுக்குத்தான்...

அப்ப அவரோட குடித்தனம் பண்ணி, பிள்ளை பெத்து தன்னோட நலனை எதுவும் பேணிக்காமல், கல்யாணத்துக்கு நகை, சீர்னு இவங்க பணத்தை எல்லாம் அவர் வாங்கிட்டு இப்ப அவரையும், அவங்க பொண்ணயும் கொஞ்ச ரூபா கொடுத்து ஒதுக்கி வைக்க நினச்சா...? அதான் பாம்புக்கு பல்லுல விஷம் அப்படின்னா... அந்தப் பல்லை புடுங்கிறணும்...!" ரங்கா சொல்லவும்... அவள் குரலில், தெரிந்த ஆத்திரத்தில் அவன் ஒரு நொடி அசந்து போனான்...

அவளின் குமுறல் ஒட்டு மொத்த பெண்களின் குரலாய் பட, எதோ ஒன்று அவன் மனதை அசைக்க, "நான் யாருக்கும் இந்த மாதிரி உதவினது இல்லை... உங்களுக்காக செய்யறேன்... ஆனால் கேஸ் முடிஞ்சதும் அந்த எவிடென்ஸ் எல்லாம் என் கையில் கொடுத்திடணும்...! என்ற டீலோடு அவன் சம்மதம் சொன்னான்...

அடுத்த நொடி ஒரு நம்பருக்கு அழைத்து பேசியவன், இவர்களிடம் அந்த நம்பரை கொடுத்து, "போய் பாருங்க... நான் சொன்னது நினைவு இருக்கட்டும்...!" என்று சொல்லி அவர்களை அனுப்பி வைத்தான்.

இவர்கள் இருவரும் ராம்குமார் அலுவலகத்திற்கு சென்று

விஷயத்தை சொன்னனர்… “இந்த அசைன்மென்ட்க்கு எவ்வளவு பணம் வேணும்னாலும் வாங்கிக்கங்க… எனக்கு ஆதாரம் வேணும்… விஷயம் லீக் ஆகக் கூடாது… அதுக்குதான் ஏசி உங்க கிட்ட அனுப்பி வச்சாரு…!”

“ஒ.கே சார் நான் பார்த்துக்கிறேன்… எப்படியும் ஒருமாதம் டைம் கொடுங்க…!”

“கண்டிப்பா…” கிளம்பி அவரவர் வீடு வந்து சேர்ந்தனர்… மறுநாள் சரவணனிடம் இன்னும் இரண்டு தடவை கேஸ் கோர்டுக்கு வரும்போது நீங்க வாய்தா வாங்குங்க… அதுக்குள்ளே ஒரு மாசம் ஓடிடும்… அப்புறம் பார்த்துக்கலாம்… அதுக்குள்ளே நான் வாணி மேடம் சந்திச்சு சில தகவல்கள் வாங்கணும்…”

“ஒ.கே… அப்படியே பண்ணிடறேன்… அப்புறம் மோகன் பிரச்சினை என்னாச்சு…?”

“அவனுக்கு இன்னும் கொஞ்சம் பெட்டரான வேலை கிடைத்தால் நல்லது… எப்படியும் இந்த மாசத்துல ஒரு நல்ல நாள் பார்த்து சிம்பிள் ஆக மாரேஜ் வச்சிட வேண்டியதுதான்…

“ஒ.கே நான் தெரிஞ்சவங்க கிட்ட சொல்லி வைக்கிறேன்…!” என்று கூறிவிட்டு சரவணன் வேறு வேலையாய் சென்று

விட்டான்…

அவள் எதிர்பார்த்தது போலவே அடுத்து இரண்டு தடவை கேஸ் கோர்ட்டுக்கு வந்த போது வாய்தா சரவணன் வாங்கி விட்டான்.

வைதேகியின் விருப்பம் இல்லாமலே மோகனுக்கும் வைதேகிக்கும் திருமணம் நடந்து முடிந்தது… மோகனிடம் பாட்டி "இனியாவது ஒரு வேலையில் நிலைத்து இருக்கப் பாரு… உன்னை நம்பி பொண்ணு ஒன்னு இருக்கு…" என்றதற்கு, மோகன் அதிசயமாக "சரி பாட்டி…" என்றான்…

பாட்டி வைதேகியிடமும், "வைதேகி உன்னோட கோபத்தை அந்தப் பொண்ணு கிட்ட காட்டாதே… அது பாவம் சின்னப் பொண்ணு. தெரியாம ஏதாவது தப்பு பண்ணிட்டா நீ சொல்லிக் கொடு…!" என்றார். வைதேகி முகவாயை தோள்பட்டையில் இடித்துக் கொண்டதோடு சரி…

ரங்கா தனது கடமைக்கு பணம் கொடுத்ததோட சரி… பாட்டியே சொல்லிக் கொள்ளட்டும் என்று இருந்து விட்டாள். அவளுக்கு வாணி கேஸ் வேலை நிறைய இருந்தது… இன்னும் இரண்டு நாளில் கேஸ்… இந்த ஒரு தடவையில் எல்லாம் முடித்து விட ஏற்பாடு…

மறுநாள் கடல் நீல நிறத்தில் மரூன் பூக்கள் போட்ட காட்டன் சாரி… அதே கலரில் சின்னதாக ஒரு ட்ராப்ஸ்… உள்ளங்களுத்தில் வழக்கமாய் போடும் செயின்… அதுதான் அவள் அலங்காரம்… இன்று நிறைய சேனல் மக்களின் படையெடுப்பு இருக்கும் என்று அவளுக்கு தெரியும்… அதனால்தான் இந்த அலங்காரம்… இல்லை என்றால் வழக்கம் போல ஒரு சாயம் போன சுடியிலே கிளம்பி போயிருப்பாள்…

வாணியும் இவளும் போய் சேர்ந்த போதே கோர்ட்டில் நல்ல கூட்டம் இருந்தது… “மேடம் நான் சொன்னது எல்லாம் நினவு இருக்குல்ல… இனி ஒரு சொட்டு கண்ணீர் உங்க கண்ணுல இருந்து வரக் கூடாது… நான் பார்த்துக்கிறேன்…“ என்று தைரியம் சொன்னவள் சரவணனை பார்த்து “எல்லாம் ரெடியா…” என்று கேட்க… அவன் “ரெடி” என்று சொன்னான்…

இவர்கள் கேஸ் என்று குமாஸ்தா அழைக்க உள்ளே சென்றனர்… அமரேஷ், உபேந்திரா இன்னும் ஒரு ஜூனியர். மற்றும் குறிப்பிட்ட ஆட்கள் மட்டுமே இருந்தனர்…

கேஸ் பற்றி குமாஸ்தா சொல்லவும் ஜட்ஜ் வக்கீலிடம் கேட்டார்… உபேந்திரா எழுந்து டைவேர்ஸ் வண்டும் என்று கேட்க…

பதிலுக்கு ரங்காவும் “மேடம் எங்க கட்சிக்காரர் டைவேர்ஸ் விரும்ப வில்லை… ஆனாலும் வாழமாட்டேன் என்று பிடிவாதமாய் திரு.அமரேஷ் அவர்கள் சொல்வதால், எங்க கட்சிக்கரரரின் வாழ்க்கை பாதுகாப்பு கருதி இந்த தொகையை ஜீவனாம்சம் ஆகவும், அது போக எனது கட்சிக்காரரின் வாழக்கையை கெடுத்தற்கு நஷ்ட ஈடாக இந்த தொகையும் திரு.அமரேஷ் தரவேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்…” என்று ஒரு பேப்பரை அவள் குமாஸ்தாவிடம் கொடுக்க… அவர் அதை நீதிபதியிடம் கொடுத்தார்…

அதைப் பார்த்த நீதிபதியே ஒரு நொடி அசந்து விட்டார்… “என்ன மேடம் இவ்வளவு பெரிய தொகை கேட்டு இருக்கீங்க…?”

“ஆமாம் மேடம் அவர் சொத்தில் எழுபத்தி ஐந்து சதவீதம் வேண்டும்… உண்மையில் எனது கட்சிக்காரரின் தியாகத்துக்கு விலையே இல்லை என்றுதான் சொல்லுவேன்…

எப்படி என்று கேட்கிறீர்களா…? பெண்ணை கல்யாணம் பண்ணிக் கொடுக்கும் போது அவள் நல்வாழ்க்கைக்காக என்று பணமும், நகையும் போட்டுத்தான் பெண்ணை பெற்றவர்கள் அவள் கணவன் வீட்டுக்கு அனுப்புகிறார்கள்…

அங்கு சென்று கணவனோடு குடித்தனம் நடத்தி பிள்ளைகளை

பெற்று, அவனை கவனித்து, பிள்ளைகளை கவனித்து, தன்னை கவனிக்க நேரமில்லாமல் தனது உடல் நலத்தை கெடுத்துக் கொண்டு, குடும்பத்தையே உயிர் மூச்சாக கொண்டு வாழும் பெண்ணுக்கு இந்த மாதிரி ஆண்கள் கொடுக்கும் மிகப் பெரிய துரோகம், இந்த மாதிரி விவாகரத்து… ஜீவனாம்சம்…

நான் தெரியாமல்தான் கேட்கிறேன் யுவர் ஆனர், கல்யாணம் செய்து வந்த பெண்ணுக்கு, சாப்பாடும் துணி மணியும் வருஷம் தவறாமல் தருகிறேன்… அதனால் அவள் நான் என்ன சொன்னாலும் கேட்க வேண்டும் என்ற ஆணாதிக்க மனப்பான்மை என்று தான் தீரும்…

என்னை கேட்டால் அந்த சாப்பாட்டுக்கும் துணிமணிக்கும் அவள் அப்பா வீட்டில் இருந்து நகை வரதட்சணை என்று கணிசமாக ஒரு தொகையை கறந்து விடுகிறார்கள் என்பேன்.,.

இவங்க சொல்றபடி படி பார்த்தாலும் அவள் புகுந்த வீட்டில் காலை முதல் இரவு படுக்கும் தன்னியும் செய்யும் ஒவ்வொரு வேலைக்கும் தனித்தனியாக பணம் வசூலித்தால், இவனது வாழ்நாள் சம்பாத்தியம் தாண்டி இவர்கள் பணம் கொடுக்க வேண்டும்…

பணம் வந்ததும், எல்லாவற்றையும் மாற்றுகிற மாதிரி பொண்டாட்டியையும் மாற்ற வேண்டும் என்று நினைக்கிற

ஆண்களுக்கு இது ஒரு பாடமாய் இருக்க வேண்டும்… ஆண் மட்டும் விவகாரத்து பெற்றுக் கொண்டு இன்னொரு திருமணம் முடித்து ஜாலியாக இருக்கலாம். அதே பெண் இந்த சமூகத்தில் விழும் ஏச்சுக்களையும், பேச்சுக்களையும் கேட்டுக் கொண்டு தன் குழந்தையை வளர்க்க போராட வேண்டும்…? இது என்ன நியாயம்…” என்று ரங்கா தனது வாதத்தை சொல்லிக் கொண்டு இருக்கும் வேளையிலே…

உபேந்திரா எழுந்து, “எக்ஸ்க்யூஸ் மீ யுவர் ஆனர். எதிர்க் கட்சி வக்கீல் எந்தக் காலத்தில் இருக்கிறார் என்று தெரியவில்லை… இப்போது பெண்களும் மறுமணம் செய்து கொள்கிறர்கள்… அது போல அவரது கட்சிக்காரரும் தாரளமாக மறுமணம் செய்து கொள்ளலாம்…” என்று குறுக்கிட்டான்…

“எதிர்க்கட்சி வக்கீலுக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை… ஆதலால் பெண்ணின் மறுமணம் பற்றி வெகு எளிதாக பேசுகிறார்… ஒரு ஆண் எனக்கென்ன என்று எதையும் உதறி விட்டு செல்லும் மனோ பாவம் உடையவன்… பெண் அப்படி கிடையாது. அவளால் தன் குழந்தையை விட்டு இன்னொரு வாழ்க்கை பற்றி யோசிக்க முடியாது…

இவர்கள் இருவரும் சுயநலமாக யோசித்தால் இவர்கள் இருவருக்கும் பொதுவான குழந்தை என்ன செய்யும்…? தன்னை

நம்பி வந்தவள் இன்னொருவரின் மகள்… ஆனால் குழந்தை தன் உயிரில், தன் உதிரத்தில் ஜனித்தது… அதை தள்ளி வைக்க, அதற்கு துரோகம் பண்ண எப்படி மனசு வந்தது…

நான் குழந்தையை தள்ளி வைக்க வில்லையே என்று கூறலாம்… ஆனால் குழந்தைக்கு இவர்கள் இருவரும் இரு கண்கள்… எந்தக் கண்ணை குத்தினால் என்ன… குழந்தைக்கு வலிக்கும் தானே… இது தெரியாமலா இவர்கள் திருமணம் முடித்து குழந்தை பெற்றுக் கொண்டார்கள்…

உடல் சுகத்திற்காகவும், வாழக்கையை தன் இஷ்டப்படி வாழ வேண்டும் என்று நினைப்பவர்கள் தயவு செய்து குழந்தை பெற்றுக் கொள்ளக் கூடாது… அல்லது ஒரு பெண்ணுக்கு தனக்கு குழந்தை வேண்டும் என்று ஆசை இருந்தால் அதற்காக என்று இந்த மாதிரி ஆட்களை திருமணம் முடிக்கக் கூடாது…

இப்போது குழந்தை பெற்றுக் கொள்ள ஆயிரம் மருத்துவ முறைகள் உள்ளது… அதில் ஒன்றை பின்பற்றி ஒவ்வொரு பெண்ணும் குழந்தை பெற்றுக் கொள்ள முடியும்… பிள்ளை வேண்டுமெனில் புருஷனை அட்ஜஸ்ட் பண்ணிட்டு போ, என்ற பழைய காலத்து மனோபாவம் எல்லாம் இப்போது செல்லாது… இதை தற்போதுள்ள ஆண்கள் கவனத்தில் கொள்வது நல்லது… இல்லையேல் அடுத்த நூற்றாண்டில் இந்த குடும்ப அமைப்பு

இல்லாது போவதோடு ஆண்களின் நிலைமைதான் திண்டாட்டமாகவும் ஆகிவிடும்…

அதனால் தான் மேடம், இந்தப் பணம் எனது கட்சிக்காரரின் குழந்தையை வளர்த்து ஆளாக்க தேவைப்படும்… அவரது நல்வாழ்க்கைக்கு உதவி புரியும், யுவர் ஆனர்… ஒட்டு மொத்த பாதிக்கப் பட்ட பெண்களின் சார்பாக நீங்க எனது கட்சி காரருக்கு தீர்ப்பு வழங்குவீர்கள் என்று நம்புகிறேன்…” என்று கூறி தனது வாதத்தை முன் வைத்தாள்.

நீதிபதி தீர்ப்பு நாளை வழங்கப்படும்… என்று சொல்லி எழுந்து செல்ல, கோர்ட் குமாஸ்தாவிடம் ரங்கா செட்டில்மென்ட் பண்ண தொகை விபரம் கேட்ட உபேந்திரா அசந்து போனான்…

ஏற்கனவே அமரேஷ் வந்து இருந்ததால் கூட்டம் அதிகமாக இருந்தது… உபேந்திரா அவசரமாய் தனது சேம்பருக்கு அமரேசை அழைத்து சென்று உட்கார வைத்து விட்டு ரங்காவுக்கு அழைத்தான்…

“என்னது நீ என்ன கொள்ளை கூட்டத் தலைவியா? இவ்வளவு பணம் கேட்டு இருக்கே…!”

“ஹலோ யார் நீங்க…? என்ன பேசறீங்க…? எதுவா இருந்தாலும் எங்க சீனியர் சேம்பருக்கு வந்து பேசுங்க…!” என்று

போனை வைத்தாள்…

‘எவ்வளவு திமிரு இவளுக்கு…? என்று கொதித்தவன் ரங்காபாஷ்யம் சேம்பர்க்கு வர அவள் முக்கியமாய் சரவணனுடன் பேசிக் கொண்டு இருந்தாள்…!”

உள்ளே வந்தவன் எதிரே இருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு “என்ன இது…?” என்றான்…

“என்னது, என்ன இது…?”

“இல்லை… இவ்வளவு பணம் கேட்டு இருக்கே… அதெல்லாம் தர முடியாது…!”

“ஹலோ அது என்ன உங்க பணமா…? அந்தாளுக்கு புது கல்யாணம் பண்ணனும்னு ஆசை இருக்கு இல்ல… அப்ப அபராதமா இவ்வளவு பணம் கட்டட்டும்…!”

“என்ன ரொம்ப துள்ரீங்க…? நாளைக்கு எங்களுக்கு இவ்வளவு பணம் போதும்னு நான் சொல்ற அமௌன்ட் சொல்லி, கொடுக்கிறதை வாங்கிட்டு போயிட்டே இருக்கணும்… இல்லை… வேற விளைவுகளை சந்திக்க வேண்டி இருக்கும்… என்ன அநதக் கேஸ்ல ஜெயிச்ச மாதிரி இதுல ஜெயிச்சிடலாம்னு மனப்பால் குடிக்காதே…!

“எனக்கு பசும்பால் குடிச்சே பழக்கம் இல்லை… இது மனப்பால் வேறேயா… அது என்ன…?”

“ஏய்…”

“ஹலோ உங்களுக்கும் மரியாதைக்கும் ரொம்ப தூரமா…?”

“ரொம்ப பேசுறே… நாளைக்கு கோர்ட்ல உங்க பெயர் நாறப் போகுது பாரு…”

“அதுக்கு முன்னாடி உங்க ஆள் பெயர் இந்த உலகமெல்லாம் நாறப் போகுது பார்க்குறீங்களா… சரவணன் சாருக்கு ஒரு சாம்பிள் காட்டு…!” என்றதும்…

சரவணன் “உங்க நம்பர் சொல்லுங்க… நான் அனுப்பி வைக்கிறேன்…” என்றான் கூலாக…

கோபத்தில், எண்களை கடித்து துப்பியவனின் எண்ணை தன் போனில் பதிந்து அதில் ஒரு ஐந்து நிமிட வீடியோவை அனுப்பி வைத்தான்…

அதைப் பார்த்த உபேந்திரா ஒரு நிமிடத்தில் அதை பார்க்க முடியாமல் அழித்தான்…

“ஏய் இவ்வளவு கீழ்த்தரமான் பொண்ணா இருப்பேன்னு

நான் நினைக்கலை…!”

“ஹலோ இப்ப எதுக்கு என்னை திட்டறீங்க… சரவணன் என்ன அனுப்பினாரு, நீங்க என்ன பார்த்தீங்க… எதுவுமே எனக்கு தெரியாது… அப்புறம் எப்படி நீங்க என்னை இப்படி சொல்லலாம்… இதுக்கே நான் உங்க மேல மான நஷ்ட வழக்கு போட முடியும்…!

“என்ன மேடம் எதுவும் பிரச்சினையா…?” என்று கேட்டுக் கொண்டே மதிவாணன் தனது காக்கி சீருடையில் உள்ளே வர… சூழ்நிலை கருதி உபேந்திரா வெளியேற தீர்மானித்தான்…

அவன் கிளம்பவும் சரவணன் அவனை அழைத்து “சார் நீங்க அந்த டீலுக்கு அமரேசை ஒத்துக்க வைங்க… இல்லேன்னா அவரோட இமேஜ் தவிடு பொடியாக்கிடும்… புரிய வைங்க போங்க… எங்க மேல என்ன நடவடிக்கை எடுத்தாலும் அதுல இருந்து எப்படி வெளியே வரணும்னு எங்களுக்கு தெரியும்…!” என்று சொல்லி அனுப்பினான்.

கோபத்தோடு தனது சேம்பருக்கு திரும்பிய உபேந்திராவை எதிர் கொண்ட அம்ரேஷ் “என்னாச்சு…?” என்று கேட்க தனது போனில் சரவணன் அனுப்பிய வீடியோவை அவனிடம் காட்டினான்…

அத்திப் பார்த்து அதிர்ச்சி அடைந்த அமரேஷ் “என்ன இது…? இதைக் காட்டி அவள் உன்னை மிரட்டினாளா…? சும்மவா விட்ட அவளை…! இப்ப பாரு அவளை நான் என்ன செய்யறேன்னு…” என்று சொல்ல…

“அமரேஷ் நிலைமை தெரியாம மோதாதே… அவளை நான் ரொம்ப சாதரணமா எடை போட்டுட்டேன்… அவ கிட்ட இதே மாதிரி எத்தனை இருக்குன்னு தெரியலை… இதுல அவளுக்கு ஹெல்ப் பண்ண நிறைய ஆட்கள் இருக்காங்க… அவளோட நோக்கம் நம்மை மிரட்டுறது இல்லை…

அவ கேட்ட பணத்தை நாம ஜீவனாம்சம் மற்றும் நஷ்ட ஈடு இரண்டும் கொடுக்கணும்… அதுக்குத்தான் அவ இதை வாங்கி வச்சிருக்கா… இதை நீ கொடுத்திட்டா அவ இதை யூஸ் பண்ண மாட்டா… நாம் ஜீவனாம்சம் இவ்வளவு கொடுக்க ஒத்துக்க மாட்டோம்னு அவ தெரிஞ்சு வச்சிருக்கா…

“அதுக்காக…? நான் சம்பாதிச்ச அத்தனையும் அவளுக்கு வாரி வழங்கிட்டு நான் என்ன பண்றது…?”

“இதோப் பார் நிலைமையை சொல்லிட்டேன்… மற்றது உன் இஷ்டம்… நான் வரும் போது கூட ஒரு ஏசி அவங்க கிட்ட பேசப் போறதைப் பார்த்தேன்… சோ அவளுக்கு உன் மாமனார்

சப்போர்ட், அப்புறம் போலீஸ் சப்போர்ட் எல்லாம் இருக்கு… நீ கிளம்பு… யோசிச்சுட்டு சொல்லு… நாளைக்கு தீர்ப்பு… சொத்து விசயமா மேல் முறையீடு எல்லாம் பண்ணனும் நினச்சா அதுக்கு வேற ஆள் பாரு…” என்று சொல்லியே அவனை அனுப்பி வைத்தான்…

உள்ளே வந்த மதிவாணனைப் பார்த்து “வாங்க சார்… ரொம்ப தேங்க்ஸ் உங்க டைம்லி ஹெல்புக்கு… இப்பத்தான் அந்த வக்கீல் என்கிட்டே வந்து மிரட்டிட்டு போறார்… உங்களைப் பார்த்தும் போயிட்டார்…” என்று சரவணன் சொல்ல, ரங்கா வணக்கம் என்பதோடு முடித்துக் கொண்டாள்…

மதிவாணன் அன்று கேஸ் நடக்கும் போதே வந்து விட்டான்… வேறு வேலை இருப்பது போல வந்து அவள் ஆர்க்யூ செய்வதை பார்த்துக் கொண்டு இருந்தான்… மிக எளிமையாக கருப்பு கவுன் அணிந்து அவள் பேசிய பேச்சின் போது அவளது முக பாவனைகள் அவன் மனதில் இதுவரை அவள் இருந்த ஒரு வித அப்பிபிரயத்தை மாற்றி, அவளை மேலும் பார்க்க தூண்டியது…

பளீரிடும் வெண்மை நிறம். அதற்கு அந்த கடல் நீலநிற சாரியும், கருப்பு கோட்டும், அவள் அணிந்து இருந்த நீலக் கல் ட்ராப்ஸஸுமே அத்தனை அழகை வாரி வழங்க, இயற்கையில் பிரம்மன் வேறு வஞ்சனை இல்லாத உடல் அமைப்பையும்,

அழகையும் படைத்து இருக்க, அவனையறியாது அவள் மேல் மிகுந்த மதிப்பும், மரியாதையும் வந்தது…

பெண்களின் நிலைமையை அவள் தெள்ள தெளிவாக சொன்ன விதமும், வழக்கை அவள் கையாண்ட விதமும் வேறு அவனை கவர்ந்தது. “ரொம்ப நல்லா வதாடினீங்க…? உங்களோட கோபம், ஆதங்கம் நியாயமானது. பிள்ளைங்களை நினைத்தால் யாரும் இப்படி ஒரு முடிவு எடுக்க மாட்டாங்க…

அதையும் மீறி ஒரு கணவன் மனைவியை விலக்கி வைக்கணும்னா அதுக்கு நியாயமான காரணம் இருக்கணும்… நிச்சயமா அதற்கு இன்னொரு கல்யாணம், இருக்கக் கூடாது… அதே நீதிதான் பெண்ணுக்கும்…

முந்திய காலத்தில் தவறு எப்போதும் ஆண்கள் மேலேயே இருந்தது… ஆனால் இப்ப சம உரிமைன்கிற பெயரில பெண்களும் இதே தவறை செய்யறாங்க…!” என்று மதிவாணன் சொல்ல…

“உண்மைதான்… அதுக்கும் ஆண்கள் தான் காரணம்… எவ்வளவு தான் இழுத்தாலும் பிய்ந்து விடாதுன்னு நினைச்சு நாம ஒரு ரப்பர்பேன்ட் இழுக்கிறோம்… ஆனால் முடிவே இல்லாம இழுக்கும் போது அது பயிந்து விடும்… அதுபோல பெண்களை எவ்வளவு கொடுமை படுத்தினாலும் தாங்குவார்கள என்ற

மனோபாவம் தான் அதற்கு காரணம்…

அதனால் அவர்கள் பொறுமையும் மீறி அந்த இலாஷ்டிசிட்டி அறுந்து விட்டது… அவள் வேறொரு ஆணை நம்பி தன் குடும்பத்தை விட்டு செல்லும் போது அந்த இரண்டாவது ஆண் அவளை மதிப்பது என்று வேண்டாம், ஒரு பொருட்டாக நினைப்பது கூட இல்லை என்பதுதான் உண்மை… அதாவது வாணலிக்கு தப்பி நெருப்பில் விழுந்தார் போல…

அப்படிப்பட்ட பெண்கள் செய்வதும் தவறுதான்… ஆனால் அந்த இடத்திலும் ஆணின் பங்கு அதிகமாக இருக்கிறது… அதுதான் வருத்தமாக இருக்கிறது…!” ரங்கா சொன்னதும் மதிவாணனால் மறுக்க முடியவில்லை…

# அத்தியாயம் 10

“பாட்டி இந்த ஊர் ஏன் ரொம்ப சின்னதா இருக்கு...?”

“இது சின்ன ஊர்தான்... இதுக்கு பெயர் கிராமம்... நாம் நாட்டுல இதே மாதிரி நிறைய கிராமங்கள் இருக்கு... இங்க தான் உங்க அப்பா பிறந்து வளர்ந்தது...”

“ஓ...அப்படியா... அப்ப ஸ்கூல்...!”

“உங்க அப்பா படிச்ச ஸ்கூல்ல இப்ப இங்கிலீஷ் மீடியம் எல்லாம் வந்துட்டுது... அங்கேயே உன்னை சேர்த்து விட்டுர்றேன்...”

“சரி பாட்டி...” என்று சொல்லி விட்டு சம்ர்த்தா உட்கார்ந்த தன் பேத்தி ரங்காவை வாஞ்சையுடன் அணைத்துக் கொண்டாள்.

“ரங்கா உனக்கு சென்னையை விட்டு இங்க வந்தது பிடிக்கலியா...?”

“அப்படி எல்லாம் இல்லை பாட்டி... எதுக்கு அப்பாவும் அம்மாவும் இப்படி சண்டை போட்டுட்டே இருக்காங்க...?” தன் மனதில் இத்தனை நாள் ஓடியதை அவள் கேட்டாள்...

“அதுவா… உனக்கு எப்படி சொன்ன புரியும்…? ம்ம் இப்ப நமக்கு பசிச்சா என்ன பண்றோம்…?”

“சாப்பிடறோம்…”

“சாப்பாடு யார் பண்றா…?”

‘அம்மா…’

“அம்மா பண்ணறா, ஆனால் அதுக்கு சாமான் வாங்க பணம் யார் கொடுக்கிறா…?”

“அப்பா…!”

“அப்பா சாமான் வாங்கறதுக்கு கம்மியா பணம் கொடுக்கிறாங்க… அது நம்ம எல்லருக்கும் சமையல் பண்ண பத்தாது… அதான் அம்மாவுக்கும் அப்பாவுக்கு சண்டை வருது…!”

“ஏன் அப்பா கூட பணம் கொடுத்தால் என்ன…?”

“அப்பாவுக்கு சின்ன வேலை தான்… அதனால சம்பளம் அவ்வளவு கிடையாது… அதனால அம்மாவுக்கு கொடுக்க முடியலை… நீ சம்பாதிச்சு உங்க அம்மாவுக்கு கொடு என்ன…?”

“எனக்கு என்ன வேலை கிடைக்கும்…?” என்று கேட்ட பேத்தியை கண் கலங்க அணைத்துக் கொண்ட ரங்கா, “செல்லம்

இப்ப நீ வேலைக்கு போக வேண்டாம்... நீ படி, படிச்சிட்டு வேலைக்கு போய் சம்பாதிச்சு கொடு... என்ன...?”

“சரி பாட்டி... நீங்க என்ன வேலை பார்க்கிறேள்...?’

“எதுக்கு...?”

“இல்லை என்னை படிக்க வைக்க காசு வேண்டாமா...?” ரங்காவின் கேள்வி பிறந்தது...

“***All men should be feminists. If men care about women’s rights, the world will be better place. we are better off when women are empowered...***”

***-John Legend***

தீர்ப்பு ரங்கா எதிர்பார்த்தபடியே வந்தது. அமரேஷ், உபேந்திரா சொன்னதை யோசித்துப் பார்த்து கேட்ட தொகையை கொடுத்து விடுவதாக ஜட்ஜ் இடம் ஒத்துக்கொண்டான்...

தீர்ப்பைக் கேட்டதும் வாணி ரங்காவை கட்டிப்பிடித்து நன்றி சொன்னாள்... “உண்மையிலேயே நீங்க திறமைசாலிதான்... நான் கூட ரொம்ப சின்ன பொண்ணா இருக்கீங்களே, எந்த அளவுக்கு உங்களால இந்த கேசை வெற்றிகரமாக முடித்து தர முடியும் அப்படின்னு நெனைச்சேன் ஆனால் வெற்றிகரமாக முடித்தது

மட்டுமில்லாமல் எனக்கும் நிறைய தன்னம்பிக்கை கொடுத்து இருக்கீங்க… உங்களை நான் என் வாழ்க்கையில மறக்கவே மாட்டேன்… கூட பிறந்த சகோதரி இல்லாத எனக்கு நீங்கதான் எனது சகோதரி…”

“அப்படி எல்லாம் எதுவும் இல்லை மேடம்… நான் என் கடமை யைத் தான் செஞ்சேன்… ஆனா என்ன…? டைவஸ் கேஸ் எடுக்கக்கூடாது அப்படின்னு எங்க சார் நினைக்கறார். அதனால இந்த கேஸ் எல்லாம் என்கிட்ட கொடுத்து விடுவார்… அவ்வளவுதான்…

இனிமேல் தான் நீங்க உங்க வாழ்க்கையில் எச்சரிக்கையா இருக்கணும்… உங்ககிட்ட இருக்கிற பணத்துக்காக நிறைய பேரு உங்கள சுத்தி வருவாங்க… யாரையும் நம்பாதீர்கள்… எதையும் கொடுத்துராதீங்க…” அதற்குள் பத்திரிக்கை நிருபர்கள் அவர்களைச் சுற்றி வளைக்க… இருவரும் பத்திரிக்கைக்கு பேட்டி கொடுக்க ஆரம்பித்தனர்…

அவள் பேட்டி கொடுப்பதை பார்த்துக் கொண்டே உபேந்திராவும், அமரேசனும் கோபத்தோடு சென்றனர்… உபேந்திராவின் கோபம் இத்தனை ஆண்டுகள் தன்னுடைய வக்கீல் தொழிலில் யாரிடமும் இந்த அளவு கீழ்த்தரமாக தோற்றதில்லை என்பதால்…

எத்தனையோ கிரிமினல் வழக்குகளை தன்னுடைய வாதத்திறமையால் தூள்தூளாக்கிய அவனுக்கு, கணவன் மனைவி, அந்த உறவின் தாத்பரியம் புரியாததால், ஓரளவுக்கு மேல் பெண்களின் கஷ்டங்களும் தெரியாததால், அவனது ரத்தத்திலேயே நேர்மையும், உண்மையும் கலந்து இருந்ததால் அவனால் அமரேசன் தவறை மறைத்து அவனுக்காக முழுவதும் பொய்யுரைக்கவோ, அல்லது அவனது மனைவியின் மேல் வீண்பழி போடவோ மனது இடம் கொடுக்கவில்லை…

‘இந்த கேசை தான் எடுத்திருக்கக் கூடாது’ என்பதை மிகவும் லேட்டாக உணர்ந்தான் உபேந்திரா… ஆனாலும் ஒரு விஷயம் நடந்து முடிந்த பிறகு அதனைப் பற்றி பரிசோதனை செய்வது என்பது, ‘ பிணத்துக்கு பரிசோதனை செய்வதற்கு சமம்’ என்பது தெரிந்ததால் அவனால் தன் மேல் வந்த கோபத்தையும் கட்டுப்படுத்த முடியவில்லை…

அன்று முழுவதும் மறுநாளும், எல்லா நியூஸ் சேனல்களிலும் ஹெட்டிங் நியூஸ் அமரேஷ் டைவர்ஸ் தான். அதிலும் ரங்கா தான் எல்லாவற்றிலும் பரபரப்பாக பேசப்பட்டாள்… ‘மிகப் பெரிய கிரிமினல் லாயர் உபேந்திராவை எதிர்த்து பெண் வக்கீல் வெற்றி…’ இந்த ஹாட் நியூஸ் வேறு உபேந்திராவின்பிபியை எகிற வைத்துக் கொண்டிருந்தது…

"கன்கிராஜூலேசன்ஸ் ரங்கா..." ரங்கபாஷ்யம் அட்டகாசமாக அவளை வரவேற்றார்... "என்ன ரொம்ப பெரிய ஆளா ஆயிட்டே போல இருக்கு...?"

"ஐயோ அதெல்லாம் இல்ல சார்... ஏதோ நீங்க சொல்லிக் கொடுத்தது வச்சு நான் வாதாடினேன்... அந்த ஆளோட கெட்ட நேரம், எனக்கு நல்ல நேரம், கேஸ் ஜெயிச்சுட்டு அவ்வளவுதான்... மத்தபடி இதுல பெரிய விசயம் ஒண்ணும் இல்ல சார்...!"

"அப்படி சொல்லாதம்மா... சரவணன் நீ வாதாடினத எனக்கு வீடியோ எடுத்துக்கொண்டு வந்து போட்டுக் காட்டினான். அதுபோக கோர்ட்லேயும் நிறைய பேர், நீ ரொம்ப நல்லா வாதாடினதா என்கிட்ட வந்து சொன்னாங்க... நீ ரொம்ப நல்ல வருவேம்மா...!" என்று மனதார ஆசீர்வதித்தார்...

பாட்டியும், வாசுவும் அவளை மிகவும் புகழ்ந்தனர்... "கேட்கவே சந்தோஷமா இருக்கு... பெண்களுக்கு எதிராக நடக்கிற கொடுமைகள்ல, முக்கியமானது இரண்டாம் கல்யாணம் பண்ணிக்கிறதுகாக பொண்டாட்டிய டைவர்ஸ் பண்றது... இது மிகப்பெரிய கொடுமை...

கேட்டா நீ அழகா இல்ல, இளமையாய் இல்ல, என்னோட தேவைக்கு இல்ல, அப்படின்னு ஆயிரம் காரணம்... அந்த

அழகும் இளமையும் எதனால, எப்படி போச்சு? யாரால போச்சு? அப்படின்னு யோசிச்சா அதுக்கு தான் தான் காரணம் என்று தெரியும்… ஆனால் அதை யாரும் யோசிக்கிறதே இல்லை…

ஆண்கள் மட்டும் என்ன அப்படியேவா இருக்கிறாங்க 40 வயசுல சொட்டை விழுந்து, தொப்பை விழுந்து பல்லு போயி இருக்கிற வியாதி, எல்லாம் வைத்துக் கொண்டு தான் இருக்கிறார்கள்… ஆனாலும் பல்லு போன கணவனுக்கும் ஐம்பது வயதிலே ஆசை பிறக்கும். பணம் இருந்துட்டால் எத்தனை கல்யாணம் வேணும்னா பண்ணிக்கலாம், அப்படின்னு அவங்க நினைச்சுட்டு ஆடுற ஆட்டத்துக்கு, இது சரியான ஆப்பு வச்சிருக்க…! என்று பாட்டி பேத்தியை வாழ்த்தினாள்.

‘‘பாட்டி நீ தானா…?”

“ஏன் இப்படி கேக்குற…?”

“என்ன எப்ப பார்த்தாலும், தாய்க்குலத்தை அப்படி இருக்கணும், இப்படி இருக்கணும், பொறுமையா போகணும் அப்படின்னு அட்வைஸ் பண்ணுவியே… இன்னைக்கு என்ன பொங்கி எழுந்துட்ட…?”

“எந்த விஷயத்துக்கும் ஆண்களுக்கு ஓரளவு சப்போர்ட் பண்ற நான் இந்த விஷயத்தில் சப்போர்ட் பண்ண மாட்டேன்.

ஒருவனுக்கு ஒருத்தி… சந்தர்ப்ப வசத்தில் சின்ன வயதில் துணையை இழந்து விட்டால், வேற ஒரு கல்யாணம் பண்ணிக்க வேண்டியதுதான்… ஆனால் பணம் இருக்குன்னு எத்தனை அழகான பொண்ணு கிடைச்சாலும் கல்யாணம் பண்ணிக்கிறேன் அப்படின்னு சொல்ற ஆண்களை நான் எப்பவும் சப்போர்ட் பண்ண மாட்டேன்…!”

“இப்பதான் நீங்க என் பாட்டி…!” என்றவள் சலுகையாய் பாட்டி மடியில் படுத்துக்கொண்டாள்… அப்போது உள்ளே வந்த வாசு, “ஏய் எழுந்திரு எனக்கு பசிக்குது பாட்டி தோசை ஊத்தி தரட்டும்…”

“போடா… நானே ரொம்ப நாளைக்கு அப்புறம் இன்னைக்கு தான் பாட்டி மடியில இடம்பிடிச்சு படுத்து இருக்கேன்… உனக்கு அதுக்குள்ள பொறுக்காதே…”

“ஏன் ரங்கா ஒரு நாளாவது அவன் கூட சண்டை போடாமல் இரேன்…”

“அது என்னால முடியாது பாட்டி… அப்படின்னா ரங்கான்னு ஒருத்தி இல்லாம போகணும்…”அவள் சொல்லி முடித்தது தான் தாமதம் பாட்டி ஒரு அடியும் வாசு ஒரு அடியும் அவளுக்கு கொடுத்து இருந்தனர்…

“ஏய் பிசாசு, உன்னை இந்த மாதிரி பேசாதேன்னு எத்தனை தடவ சொல்லியிருக்கேன்… இனி இப்படி பேசினே, நான் என்ன செய்வேன்னு எனக்கே தெரியாது…”

“வெரி குட் ரஜினி ஸ்டைல் மாதிரி இருக்கே பஞ்ச் டயலாக் வச்சிடலாமா…?”

“ரங்கா விளையாட்டுக்கு கூட இப்படி பேசாதே… எத்தனையோ கஷ்டங்களுக்கு இடையில நான் வாழறதே உனக்காகத்தான். பர்ஸ்ட் எழுந்திரு… தோசை சுடறேன் ரெண்டு பேரும் சாப்பிடுங்க…”

“அதானே என்ன சொன்னாலும், உனக்கு உன் வளர்ப்பு பையன் தான் முக்கியம்…!”

“ஆமா அப்படித்தான்… நீங்க தோசை ஊத்துங்க…”

“பாட்டி இந்த வாரம் ஞாயிற்றுக்கிழமை நாம கீர்த்தி வீட்டுக்கு போறோம்… இவனுக்கு கல்யாணத்தை பேசி முடிக்கிறோம் இவன் தொல்ல தாங்கல எனக்கு… டேய், அதுக்கப்புறம் தோசை கொடு, இட்லி கொடு, சாதம் கொடுன்னு இங்க வந்த மகனே, உன்னை பொளந்து கட்டிடுவேன்…”

“அதை நீ என்ன சொல்றது…? உனக்கு பாட்டிகிட்ட

எவ்வளவு உரிமை இருக்கோ… அதே அளவு உரிமை, எனக்கும் இருக்கு. நான் வருவேன். சாப்பாடு கேப்பேன், சாப்பிடுவேன், போவேன்…!''

''ஏய் ரெண்டு பேரும் இப்ப சண்டை போடாமல் சாப்பிட்டு எழும்புங்க…'' என்று ஒருவழியாய் அவர்களை விலக்கி விட்டு சாப்பாடு கொடுத்து, தனக்கும் இரண்டு தோசை சுட்டுக் கொண்டு வந்து பாட்டி உட்கார்ந்தார்…

கையை கழுவிவிட்டு வந்த ரங்கா, ''டேய் எரும, நல்ல கொட்டிக்கிட்டே இல்லை, வா… வந்து என் கூட ஹெல்ப் பண்ணு. கிச்சன் ஒதுங்க வைக்கணும்…!''

''என்னது, கிச்சன் ஒதுங்க வைக்கணுமா…? ஏய் சாப்பாடு போட்டு, வேலை வாங்குற சாமர்த்தியம் உனக்கு தாண்டி உண்டு… பாட்டி ஏதாவது சொன்னாங்களா…?''

''பாட்டி சொல்ல மாட்டாங்க அதான் நீதான சொன்ன எனக்கு சாமர்த்தியம்னு… பாட்டிக்கு அது தெரியாது… நீ பாத்திரம் கழுவுறியா அல்லது மேடை தொடைக்கிறியா…?

''அம்மா தாயே நான் மேடை தொடர்கிறேன்… நீ பாத்திரம் கழுவு…'' என்றவன் '' பாட்டி எதுக்கும் கீர்த்தி அப்பா கிட்ட சீக்கிரம் கல்யாணத்தை வைக்கச் சொல்லுங்கள். நம்மளால

இவளுக்கு வேலை பார்க்க முடியாது...!''

''அப்படி வா வழிக்கு...'' என்று ரங்கா சொல்ல...

''டேய் இவளுக்குகாவது ஒண்ணு ரெண்டு வேலை பார்த்தா போதும். பொண்டாட்டிக்கு நிறைய பார்க்கணும்...!''

''போற போக்க பார்த்தா கீர்த்தி கிட்ட நீங்களே சொல்லிக் கொடுத்து, நிறைய வேலை என்ன செய்ய வச்சிருவீங்க போல இருக்கு...!''

''டேய் லேட் பிக்கப்டா நீ...'' என்று சொன்ன ரங்கா பாட்டியுடன் இடது கையில் ஹைபை கொடுத்துக் கொண்டாள்...

ஞாயிற்றுக்கிழமை பாட்டி தனது மருமகளையும் மகனையும், பேத்தியையும் அழைத்துக்கொண்டு கீர்த்தி வீட்டில் சென்று பெண் கேட்டார்...

ஏற்கனவே கீர்த்தி எல்லா விஷயமும் சொல்லி வைத்திருந்ததால் அவருக்கும் வாசுவை மிகவும் பிடித்து இருந்தது. கல்யாணத்திற்கு சம்மதம் சொல்லிவிட்டார்...

''என்னால ஓரளவுதான் செய்ய முடியும்...'' என்று கீர்த்தியின் அப்பா சொல்ல ஆரம்பிக்கும்போதே, ''உங்க பொண்ணுக்கு நீங்க என்ன செய்யணும்னு நினைக்கிறீங்களோ, அதை செய்யுங்க

போதும். கல்யாணம் நாங்க பண்ணிக்கிறோம்…'' என்று பாட்டி சொல்லிவிட்டார்…

கீர்த்தி வீட்டில் அவளும் அவள் தம்பியும் மட்டும்தான்… அப்பா சாதாரண கிளார்க் மிக மிக நடுத்தர குடும்பம்… அதனால் பொறுப்பை பாட்டியை ஏற்றுக்கொண்டார்…

வைதேகிக்கு மாமியாரின் யோசனை பிடிக்கவில்லை என்பது அவளது முகமே காட்டிக் கொடுத்தது ஆனால் அதைப்பற்றி எல்லாம் பாட்டி கவலைப்படவில்லை…

அடுத்த மாதமே கல்யாணம் வைத்துக் கொள்வது என்று தீர்மானித்து அது சம்பந்தமான வேலைகள் எல்லாம் பார்க்க ஆரம்பித்தனர்… வாசு தான் சேமித்து வைத்திருந்த காசைக் கொண்டு வந்து பாட்டியிடம் கொடுத்து ''பாட்டி கல்யாண செலவுக்கு வைச்சுக்குங்க. எனக்கு எதை எப்படி பண்றதுன்னு தெரியாது. நீங்கதான் எல்லாம் செய்யணும்…'' என்று சொல்ல…

''எல்லாம் நான் செய்வேன்… எனக்கு நீயும் ஒரு பிள்ளை தான்… உனக்குன்னு ஒரு பகுதி நான் சேமிச்சு தான் வச்சிருந்தேன். அதனால இந்த பணத்தை நீ பத்திரமா வச்சுக்கோ, ஏதாவது ஒரு சந்தர்ப்பத்துல இது தேவைப்படும்…'' என்று பிடிவாதமாக மறுத்துவிட்டார்…

மிகவும் ஆடம்பரமாக இல்லாமல் வழக்கம் போல தன்னால் முடிந்த அளவு செலவு செய்து வாசு, கீர்த்தியின் திருமணம் சிறப்பாக நடைபெற்றது… ரங்கபாஷ்யத்திற்கு மட்டும் அழைப்பு வைத்திருந்ததால் அவர் வந்து கல்யாணத்தில் கலந்து கொண்டார்…

கல்யாணம், கல்யாணம் என்று வாசுவின் கல்யாணமும் முடிந்துவிட்டது… எல்லோரும் செட்டிலாகி விட்டனர். ஆனால் ரங்கா…? இதைப் பற்றி நினைத்துக் கூடப் பார்க்காமல் அவள் தனது வழக்கமான வேலைகளை செய்ய… வாசுவின் கல்யாணம் முடிந்து இரண்டு மாதம் கழித்து ஒரு நாள் இரவு பாட்டி மீண்டும் அவளது கல்யாணத்தை பற்றிய பேச்சை எடுத்தார்…

“ரங்கா இந்த தடவை நான் தீர்மானமா சொல்றேன்… இதுநாள் வரை ஒவ்வொரு பொறுப்பா சொல்லி நீ தட்டி கழிச்சுட்ட… ஆனா இந்த தடவ நான் உன்னை அப்படி விடறதா இல்லை…”

இரவு சாப்பிட்டு முடித்து ஹாயாக தனது மடியில் படுத்திருந்த பேத்தியிடம் பாட்டி சொல்லவும், “ இப்ப என்ன பிரச்சனை பாட்டி உங்களுக்கு…?” என்று ரங்கா கேட்க…

“எனக்கு அப்புறம் உனக்கு ஒரு துணை வேணும்… அந்த துணை, உனக்கு வாழ்க்கையில பிடிப்பு உண்டாக்கணும்… அப்படிப்பட்ட பந்தம் ஒன்னே ஒண்ணுதான். புருஷன், குழந்தை

இதுதான். அதனாலதான் சொல்றேன் நீ கல்யாணம் பண்ணிக்கோ…’’

‘‘பாட்டி நான் எப்பவும் சொல்றதைத்தான் இப்பவும் சொல்றேன். எனக்கு கல்யாணத்து மேல நம்பிக்கை இல்லை… அதுலயும் ஆண்கள் மேல சுத்தமாக நம்பிக்கை இல்லை அதனால என்ன விட்டுடுங்க… நான் இப்படியே இருந்துட்டு போறேன்…’’

‘‘சொன்னா புரிஞ்சுக்கோமா… உன்னோட குணத்துக்கு ஏத்த மாப்பிள்ளை பார்க்கலாம்…!’’

‘‘ஹலோ,அது நடக்கிற காரியமா…? ஒரு நாள் ஒரு அரை மணி நேரம் ஒருத்தரை பார்த்து நம்மால அவங்க குணத்தை ஜட்ஜ் பண்ண முடியுமா…? வருஷக்கணக்கா பழகுகிறவங்களையே நம்மளால புரிஞ்சிக்க முடியல… பாட்டி ப்ளீஸ் என்ன விட்டுடு…’’ என்றவள் பேச்சு முடிந்தது என்பது போல் கட்டிலில் படுத்து தூங்க முயற்சித்தார்…

மறுநாளிலிருந்து பாட்டி அவளிடம் பேசவும் இல்லை… சாப்பிடவும் இல்லை… பேசவில்லை என்பதை ரங்கா பெரிதாக மைண்ட் பண்ணவில்லை ‘சரி இரண்டு நாள் கோபமாக இருப்பாங்க அப்புறம் பேசிட்டு வாங்க’ என்று நினைத்துவிட்டு தனது வேலையை பார்க்க கோர்ட்டுக்கு சென்று விட்டாள்…

ஆனால் பாட்டி சாப்பிடவில்லை என்பதை அவள் கவனிக்கவில்லை… வெறும் தண்ணீரை குடித்து விட்டு எப்பவாவது ஒரு நேரம் காப்பியோ பாலோ குடித்ததன் விளைவு மறுநாள் இரவு ஏழு மணிக்கு ரங்கா ஆபீசில் இருந்து வந்த போது பாட்டி மயக்கமாக இருந்தார்.

சாயந்தரம் வந்த வேலைக்காரி பாட்டிக்கு தூங்குகிறார் என்று நினைத்து, சத்தம் போடாமல் வாசல் கதவை சும்மா சாத்தி வைத்து சென்றிருக்க, ரங்கா கதவை தொடவும் அது திறந்து கொண்டது…

‘‘பாட்டி, பாட்டி என்று அழைத்துக் கொண்டு வந்த ரங்கா ஹாலிலும், கிச்சனிலும் தேடிவிட்டு, அங்கு இல்லை என்றதும் பெட்ரூமுக்குள் நுழைந்து பார்த்தாள். அங்கு பாட்டி தூங்குவது போல் இருக்கவே அருகில் வந்து மெல்ல தொட அதற்கும் பாட்டி விழிக்காமல் போகவே, சற்று உலுக்க, அதற்கும் பாட்டி எழும்பவில்லை…

பயந்துபோன ரங்கா உடனே வாசுவுக்கு அழைத்துவிட்டு தண்ணீரை முகத்தில் தெளித்தாள்… நல்ல வேளை வாசு ஏற்கனவே அப்பார்ட்மெண்ட் அருகில் வந்துவிட்டதால் பத்து நிமிடத்தில் வந்துவிட்டான்…

அவசரத்தில் டெலிபோன் டைரக்டரியில் இவன்

மருத்துவமனை பெயர் பார்த்தபோது கல்யாண் மருத்துவமனை வட்டமிட்டு வைத்திருந்தது தெரிந்தது… அந்த நம்பருக்கு அழைத்து, ஆம்புலன்ஸ் அனுப்ப சொல்லி, தனது முகவரியை தெரிவித்தாள்…

அதற்குள் வாசு வந்துவிட இருவரும் சேர்ந்து பாட்டியை அந்த ஹாஸ்பிடலில் சேர்த்தனர்… எதற்கும் கலங்காத ரங்கா விக்கி, விக்கி அழுவதைப் பார்த்து வாசு தவித்து விட்டான்… அவசரத்தில் வேறு யாருக்கும் தகவல் சொல்லாததால், ஐசியூ வில் சேர்த்த பிறகு கீர்த்திக்கு அழைத்து விஷயத்தை சொல்லி, தான் படுக்கவர முடியாது என்பதை தெரிவித்தான்…

டாக்டர் வந்து பார்த்துவிட்டு, வெளியில் வந்து “ரொம்ப பெரிய பிரச்சனை எதுவும் ஆகல… ஆனா அவங்க சாப்பிட்டு இரண்டு நாளாய் இருக்கும்னு தோணுது… கொஞ்சம் எனர்ஜி இல்லை ட்ரிப்ஸ் போட்டு இருக்கோம்… தூக்கத்துக்கும் ஊசி போட்டு இருக்கோம்… இனி காலையிலதான் கண்ணு முழிப்பபாங்க. நீங்க வீட்டுக்கு போயிட்டு காலையில வாங்க…

“டாக்டர் அவங்க இன்னும் இரண்டு நாள் இங்கே இருக்க தானே வேணும்… அப்ப ஒரு ரூம் புக் பண்ணிக்கலாமா… நாங்க அங்கே இருக்கிறோம்…!”

“ஓகே அப்படியே பண்ணுங்க...” என்றவர் சென்றுவிட்டார்...

நர்சிடம் சொல்லி ஒரு ரூம் ஏற்பாடு பண்ணி விட்டு வந்ததும், ஐசியூவில் சென்று பாட்டியை பார்த்தனர்... கிழிந்த நாராய் கட்டிலில் கிடந்த பாட்டியைப் பார்த்து ரங்கா வாயைப் பொத்திக் கொண்டு அழ அங்கிருந்த நர்ஸ், “இங்கெல்லாம் அழக்கூடாது... பேஷண்ட்டுக்கு டிஸ்டர்ப் ஆக இருக்கும். வெளிய போங்க...” என்று அவர்களை வெளியே அனுப்பி விட்டாள்...

“ரங்கா அழாதே... வா ரூமுக்கு போவோம்...” என்று அழைத்துக்கொண்டு வந்துவிட்டான் வாசு...

“ஆமாம். பாட்டி ஏன் இரண்டு நாளா சாப்பிடல...? அதை எப்படி நீ கவனிக்காம விட்டா...?” என்று வாசு கேட்க...

“எல்லாம் என்னால தான்... பாட்டி என்கிட்ட மறுபடியும் கல்யாண பேச்சு எடுத்தாங்க. எனக்கு அதுல இஷ்டமில்லை அப்படின்னு சொல்லிட்டேன்... அதனால என்கிட்ட ரெண்டு நாளா பேசல... சரி ரெண்டு நாள் ஆனால் சரியாகிடும்னு நான் நெனச்சேன்... ஆனால் இப்படி பண்ணுவாங்கன்னு நான் எதிர்பார்க்கலை...!” என்று கூறி விட்டு கதறி அழ... தனது தோழியின் தலையை தடவி ஆறுதல் படுத்தினான்...

“சரி விடு. நடந்தது நடந்து போச்சு... இப்ப பாட்டிக்காக

எவ்வளவு வருத்தப் படுறியே, இதே மாதிரி தானே அவங்க உனக்காக வருத்தப்படுவாங்க… அவங்க இல்லாத வாழ்க்கையே உன்னால தாங்கிக்க முடியல… பாட்டிக்கும் அப்படித்தானே இருக்கும். உனக்குன்னு ஒரு வாழ்க்கை அமையாமல் எங்க தான் போய் விடுவோமோ, என்று பயந்துதான் அவங்க உன் கிட்ட கல்யாணம் பண்ணிக்க சொல்றாங்க…!''

''நீ சொல்றது எனக்கு புரியுது… ஆனா எனக்கு பிடிக்கலேயே…! எனனை என்ன பண்ண சொல்ற…?''

''ரங்கா உனக்கு உடம்பில எதுவும் பிரச்சனை இருக்கா…? டாக்டர் கெட்ட செக்கப் பண்ணிக்கலாமா…? அல்லது மனரீதியாக பிரச்சனை என்றாலும் டாக்டர்கிட்ட போகலாம்…!''

''ஐயோ அதெல்லாம் இல்ல… நீ வேற ஆரம்பிக்காத. கொஞ்சம் பேசாம இரு… முதல்ல பாட்டி பிழைத்து வரட்டும்…!'' என்றவள் அதற்கு மேல் எதுவும் பேசவில்லை…!'' அவள் யோசிக்கட்டும் என்று வெளியே சென்ற வாசு, அவளுக்கு ஒரு பால் மட்டும் வாங்கி வந்தான்…

'வேண்டாம்…' என்று மறுத்தவளை வற்புறுத்தி குடிக்க வைத்து விட்டு, வெளியே ஒரு பெஞ்சில் கால் நீட்டி படுத்தான்… இருவரும் விடிய விடிய தூங்கவில்லை…

“காலை எழுந்ததும் நேராக ஐசியூக்குள் சென்று பார்த்தனர்… அப்போதுதான் பாட்டி கண்விழித்து இருந்தார்…!”

“என்ன பாட்டி இப்படி பண்ணிட்டீங்க…? எதுவா இருந்தாலும் என்கிட்ட சொல்ல உனக்கு உரிமை இல்லையா…? அதை விட்டுட்டு இப்படி சாப்பிடாம கிடந்து உனக்கு ஏதாவது ஒண்ணு மண்ணா ஆயிடுச்சின்னா…!”

“என்னைக்குனாலும் அதுதானே நடக்கப் போகுது…! நான் ரொம்ப ஆசைப் படுவது உன்னோட குழந்தையை நான் தூக்கி கொஞ்சணும்… உனக்கு ஒரு பிடிப்பு வாழ்க்கையில் வரணும். அதுதான் என்னோட மிகப் பெரிய ஆசை

“பாட்டி ப்ளீஸ் ரெண்டு நாள் டைம் கொடு. கொஞ்சம் யோசிக்க வேண்டும்…” என்று சொல்லிவிட்டு வெளியே வந்தாள்.

அதற்குள் விஷயம் தெரிந்து அம்மா, அப்பா, மோகன், தாரா சரவணன் எல்லோரும் பாட்டியை பார்க்க வந்துவிட்டனர்… பாட்டியை ரூமுக்கு மாற்றிவிட்டனர்… அம்மாவும், அப்பாவும் துணைக்கு இருக்க ரங்கா வீட்டுக்கு சென்று குளித்துவிட்டு பாட்டிக்கு சமைதது சாப்பாடு எடுத்துக் கொண்டு வந்தாள்.

மற்றவர்களிடம் சாதாரணமாக உடம்பு சரியில்லை என்று சொன்னதால் நடந்த விஷயம் யாருக்கும் தெரியவில்லை… வயது

காரணம் பாட்டிக்கு முடியவில்லை நினைத்தனர்… வற்புறுத்தி பாட்டியை சாப்பிட வைத்து பின்னரே ரங்கா தானும் சாப்பிட்டாள்…

தான் துணைக்கு இருப்பதாக சொல்லிவிட வாசு வீட்டுக்கு சென்றுவிட்டு குளித்து சாப்பிட்டு கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுத்துவிட்டு கீர்த்தியுடன் வந்தான்…

‘‘பாட்டி எப்படி இருக்கீங்க…?’’ கீர்த்தி வந்து பாட்டியின் கையை பிடித்துக் கொண்டாள்…

‘‘ஒண்ணும் இல்ல, ரங்காவும், உன் புருஷனும் சேர்ந்து சும்மா ஆஸ்பத்திரியில கொண்டு வந்து சேர்த்துட்டாங்க…’’

‘‘இல்ல, பாட்டி உங்களுக்கு ஒண்ணுனா, அவங்க ரெண்டு பேரும் தாங்க மாட்டாங்க. நீங்க கொஞ்சம் உங்களை கவனிச்சுக்கோங்க… இனி நீங்க ஆபீஸ்க்கு எல்லாம் வர வேண்டாம். அவரே உங்க கிட்ட என்ன கையெழுத்து வேணுமோ, வீட்டுக்குக் கொண்டு வந்து வாங்கிக்கொள்வார்…’’

‘‘அதெல்லாம் இருக்கட்டும்… நீ எப்ப எனக்கு பேரக்குழந்தை பெற்று தருவே…?’’ என்று அவளை கேட்டதும் அவள் வெட்கத்துடன் தலை குனிந்தாள்… அருகிலிருந்த வாசு அவளை பார்த்து சிரிக்க…

“என்னடா உனக்கு ஏன் இவ்வளவு சிரிப்பா இருக்கு…? நீ ஒழுங்கா அவள கவனிச்சிக்கிறேயா, அல்லது ஆபீசே கதின்னு இருக்கியா…?”

“ஐயோ இல்ல பாட்டி… நீங்களாவது நான் எப்ப வந்தாலும் தோசை வார்த்துக் கொடுப்பீங்க… ஆனால் ஏழு மணிக்கு மேல வந்தா வீட்டுக்குள்ள விட மாட்டேன்னு சொல்லி வைத்து இருக்கா, அதுக்குப் பயந்து நான் சீக்கிரமே கிளம்பி வந்தர்றேன்…!” என்று சொல்லி சிரித்தான்…

இதற்கு பதில் ரங்கா ஏதாவது சொல்லுவாள் என்று எதிர்பார்த்து இருக்க அவள் இவர்கள் பேச்சை கவனிக்காமல் தீவிர யோசனையில் இருந்தாள்.

டாக்டர் வந்ததும் கேட்டுவிட்டு செல்லலாம் என்று நினைத்திருந்தனர்… பதினோரு மணிக்கு ரவுண்ட்ஸ் வரும்போது வயதில் மூத்த டாக்டர் ஒருவரும் வந்தார். அவருடன் அந்த மற்ற டாக்டர்கள் பவ்வியமாக அவர் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லிக்கொண்டு அருகில் நின்றனர்…

“கேஸ் ஹிஸ்டரி கொடுங்க…!” என்று வாசித்து பார்த்தவர், பெயர் என்ன ரங்க நாயகியா…?”என்று கேட்டவர் பாட்டியை உற்றுப் பார்த்தார்.

பாட்டியும் அவரை உற்றுப் பார்க்க, “ நீங்க ரங்கா திருச்சி பக்கத்துல…” என்று இழுக்கையிலேயே…

“நீங்க சேதுராம்…!” என்று பாட்டி சொல்லவும், டாக்டர் அங்கிருந்த சேர் ஒன்றை அருகில் இழுத்துப் போட்டு உட்கார்ந்து விட்டார்…

“எப்படி இருக்கே ரங்கா…?”

“நான் நல்லா இருக்கேன் நீங்க எப்படி இருக்கீங்க…? அப்ப இது தான் உன்னோட ஹாஸ்பிடலா? சாரி பழக்க தோஷம் நீன்னு வந்துடுத்து…

“அப்படியே கூப்பிடு… நீ என்ன இருந்தாலும் என்னோட சிறுவயது தோழி இல்லையா…” உனக்கு இல்லாத உரிமை யாருக்கும் இல்லை… ஆமா என்ன உடம்புக்கு…? டாக்டர் என்ன பிரச்சனை சொல்லுங்க…?” என்று ட்யூட்டி டாக்டரிடம் கேட்க அவர் எல்லாவற்றையும் சொன்னார்…

“ஓகே… நான் இன்னும் சில டெஸ்ட் எழுதித் தரேன்… அதையெல்லாம் செக் பண்ணிட்டு அப்புறம் வீட்டுக்கு அனுப்பினால் போதும்… எக்காரணம் கொண்டும் பில் எதுவும் செட்டில் பண்ண சொல்லக்கூடாது…!” என்று கூட வந்த

டாக்டருக்கு உத்தரவிட்டு பாட்டியிடம் திரும்பி “ சொன்னத கேட்ட இல்ல… உனக்கும் சேர்த்து தான்… டெஸ்ட் எல்லாம் எடுத்துட்டு ரிப்போர்ட் வந்ததும் நீ போகலாம்…”

“டாக்டர்ஸ் நீங்க ரவுண்ட்ஸ் போயிட்டு வாங்க நான் கொஞ்சம் இவங்க கிட்ட பேசணும்…” என்று சொன்னதும் மற்றவர்கள் சென்றுவிட்டனர்.

“எத்தனை வருஷம் ஆச்சு உன்ன பார்த்து…? எப்படி இருக்க…?”

“ம்ம்… இது என்னோட பேத்தி ரங்கா… இது பேரன் வாசு… அவனோட மனைவி கீர்த்தி…”

“வணக்கம்…” என்றனர்.

“உன்னோட கணவர்…”

“அவர் போய் நிறைய வருஷம் ஆயிடுத்து…!”

“ஓ சாரி…”

“அதெல்லாம் இருக்கட்டும்… உன்னோட மனைவி குழந்தைங்க…?”

“மனைவி, மகன்,மருமக எல்லாரும் போயாச்சு… எனக்கு

ஒரே ஒரு பேரன். அவன் மட்டும் என் கூட இருக்கான்…'' சற்று நேரம் பேசிக் கொண்டு இருந்தனர். தன்னுடைய விசிட்டிங் கார்டு எடுத்துக் கொடுத்து…

''வீட்டுக்கு போய் ஒரு வாரம் கழிச்சு என் வீட்டுக்கு நீ வரணும் ஒரு சின்ன டின்னர்… எனக்கு உன்னை பார்த்ததுல ரொம்ப சந்தோஷம். மனசு விட்டு பேச ஆட்கள் இல்லாமல் தவிச்சிட்டு இருக்கேன். வா கொஞ்ச நாள் நம்முடைய சிறு வயது காலங்களை பேசலாம்…'' என்று சொல்லி விடை பெற்றார்…

# அத்தியாயம் 11

கிளியூர் இதுதான் ரங்காவை திருமணம் செய்து கொடுத்த ஊர்… அங்கு உள்ள ஐந்து வரை உள்ள இங்கிலீஷ் மீடியம் ஸ்கூல் ரங்காவை பாட்டி சேர்த்துவிட்டாள்… திருவெறும்பூர் கிளியூருக்கு மிகவும் அருகில் உள்ள டவுன்ஷிப்… அங்கு ஹை ஸ்கூலில் இங்கிலீஷ் மீடியம் இருப்பதால் தொடர்ந்து அங்கு படிக்க வைத்துக் கொள்ளலாம்’ என்று பாட்டி முடிவு செய்திருந்தார்…

ரங்காவுக்கு அந்த ஊரும் கோவிலும் மிகவும் பிடித்துவிட்டது. அவள் பள்ளி செல்ல ஆரம்பித்து ஆறு மாதம் கழித்து தனது பிறந்த ஊரின் தூரத்து சொந்தக்காரர் ஒருவர் மறைவுக்கு சென்ற பாட்டி வரும்பொழுது ரங்காவை விட இரண்டு வயது மூத்தவனான வாசுவை கையில் பிடித்துக் கொண்டு வந்தாள்…

பாட்டி யாருது…?’’

‘‘இவன் பேரு வாசு… இது உன்னோட ப்ரெண்ட். இனிமேல் இங்கதான் உன்கூட படிக்க போறான்…!

‘‘ஓ… ரொம்ப ஜாலி…! ‘‘என்று ரங்கா துள்ளிக்குதிக்க அந்த வாசு அவளை அமைதியாக பார்த்திருந்தான்…

‘‘என்னடா கண்ணா…! இந்த பார் இனிமேல் இதுதான் உன்

வீடு. நான் தான் உன்னை வளர்க்க போறேன்... நீயும் இனிமேல் பாட்டின்னு என்னை கூப்பிடு... இந்த ரங்கா உன் கூடப் பிறக்காத தங்கை... நீங்க ரெண்டு பேரும் எப்போதும் ஒற்றுமையாய் இருக்கணும்...!"

"சரி பாட்டி..." இருவரும் ஒருமித்த குரலில் சொன்னனர்...

பாட்டி வாசுவையும், ரங்கா கூடவே பள்ளியில் சேர்த்துவிட்டார்... இருவரும் ஒன்று போலவே பள்ளி சென்றுவிட்டு திரும்பி வந்தனர்...

"***A woman is like a tea bag.You never know how strong she is until she gets in hot water...***"

"பாட்டி எனக்கு நிறைய வேலை இருக்கு அதனால வாசு உங்களை கொண்டு போய் விட்டுட்டு கூட்டிட்டு வந்துடுவான்..."

"நீயும் வாயேன்...!"

"இல்ல பாட்டி... என்னையும் வாசுவையும் மாதிரி நீங்களும் டாக்டரும் பிரண்ட்... உங்களுக்கு பேச நிறைய விஷயம் இருக்கும்... அதை என்ஜாய் பண்ணி பேசிட்டு வாங்க. நாங்க வந்தா எங்களுக்காக நீங்க சீக்கிரம் வர வேண்டி இருக்கும். நீங்க எவ்வளவு டைம் கழிச்சு கூப்பிட்டாலும் வாசு வந்து உங்களை

பிக்கப் பண்ணிப்பான்…”

“அவள் சொல்வது தான் சரி” என்று வாசுவும் சொல்லிவிடவே வேறு வழி இல்லாமல் பாட்டி ஒத்துக் கொண்டார்… கம்பெனியிலிருந்து சீக்கிரம் வந்த வாசு ஐந்து மணிக்கு கிளம்பி ஆறு மணிக்கு டாக்டரின் வீட்டுக்கு கூட்டி சென்றான்…

அந்த ஏரியாவை பார்த்ததும், “பாட்டி நாங்க இங்கதான் வந்தோம்…!?”

“என்னடா சொல்ற… புரியும் படியாசொல்லு…?”

“பாட்டி மோகன் ஒரு கேஸ்ல மாட்டினான் தெரியும் இல்ல… அவன் இடிச்ச காருக்கு சொந்தக்காரர் இந்த ஏரியால தான் இருக்கிறார்… நானும் ரங்காவும் அவர் கிட்ட வந்து பேசினோம்… அவர் தான் முடியாதுன்னு சொல்லி கேஸ் போட்டு தோற்றுப் போனார்…”

“ஓ அந்த லாயர் பையனா…!”

“ஆமா பாட்டி… அட்ரஸ் எத்தனாவது நம்பர் தெரு, போட்டிருக்கு…?”

பாட்டி நம்பரை சொல்லவும் அந்தத் தெருவுக்குள் காரை செலுத்தினான்… வீட்டு நம்பர் சொல்லவும் தேடிப்பிடித்து

நிறுத்திவிட்டு நிமிர்ந்து பார்த்த அவனுக்கு ஷாக் அடித்தது…

“இறங்குடா…!”

“ஐயோ, நான் வரல… இதுதான் அந்த லாயர் வீடு… எதுக்கும் நீங்க ஒரு தடவை அந்த டாக்டருக்கு போன் பண்ணி இந்த வீடு தானா அப்படின்னு செக் பண்ணிக்கோங்க…!”

அவன் பயந்த விதத்தைப் பார்த்து, பாட்டி டாக்டருக்கு போன் செய்து கேட்க, அவர் அந்த வீடு தான் என்பதை உறுதி செய்தார்…

இறங்கி வாட்ச்மேனிடம் கேட்ட வாசு, உடனே அவர் கதவு திறந்து விடவும் பாட்டியை அழைத்துக்கொண்டு உள்ளே சென்றான்… போர்டிகோ வரை சென்றவன் பாட்டி உள்ளே செல்லும் வரை பார்த்துவிட்டு உடனே திரும்பி விட்டான்… அவனுக்கு எங்கே உபேந்திரா கண்ணில் பட்டு விடுவோமோ என்று பயம்… ‘முதல் கேசில் தோற்றது மட்டுமல்லாமல், இப்போது வேறு அவனைத் தோற்கடித்து மண்ணைகவ்வ வைத்திருக்கிறாளே… நாம மாட்டினோம் அவ்வளவுதான்…’ என்று நினைத்தவன் உடனே திரும்பி விட்டான்…

“வா ரங்கா…” என்று அன்புடன் வரவேற்ற சேதுராம், “ இங்க உட்காரு” என்றார்.

“வீடு ரொம்ப நன்னா இருக்கு… நீ மட்டுமா இருக்கே…?”

“இல்லை… என் பேரன் வக்கீலா இருக்கான்… பெயர் உபேந்திரா. இப்ப வரக்கூடிய நேரம் தான்…”

“அப்படியா…! உன்னை பார்த்ததும் எனக்கு ரொம்ப சந்தோஷமா இருந்தது… நாம குழந்தையா இருந்தப்ப நடந்த விஷயங்கள் எல்லாம் நினைவுக்கு வந்துச்சு. இரண்டு நாள் அதையே நினைச்சிட்டு இருந்தேன்…” பாட்டி மறைக்காமல் தனது மனதை சொன்னார்…

“எனக்கும் அப்படித்தான் இருந்தது… குழந்தையாகவே இருந்திருக்கலாம்… என்ன பண்றது வளர்ந்துட்டோமே…!” என்று சேதுராமன் சொல்ல இருவரும் சிரித்தனர்…

வெகு நேரம் அவர்களைப் பற்றி அவர்கள் குடும்பத்தை பற்றி, பிள்ளைகள் நிலைமை பற்றி தங்களுடைய வாழ்க்கையில் தற்போதைய நிலைமை பற்றி, வருங்காலத்தில் என்னவெல்லாம் செய்வது என்பது பற்றி பேசப்பேச விஷயங்கள் வந்து கொண்டே இருந்தது…

பள்ளிப் பிராயத்தில் ஏற்படும் நட்புக்கு என்று ஒரு தனி அகராதியே ஒன்று உண்டு. அப்போது ஏற்படும் நட்பு எந்த எதிர்பார்ப்பும் கொள்ளாதது… அங்கு அன்பு மட்டுமே பிரதானம்…

ஏமாற்றுதல் கிடையாது. வஞ்சகமும் கிடையாது சூழ்ச்சி கிடையாது. ஏற்றத் தாழ்வு கிடையாது. ஜாதி மத பேதம் கிடையாது. அறிவு விரிவடைய, விரிவடைய வசதிகள் ஏற்பட, ஏற்பட மனிதனின் மனதில் நிறைய கெட்ட எண்ணங்கள் ஏற்பட, ஏற்பட அங்கு நட்பு கூட கணக்குப் பார்த்து வருகிறது… அன்பு கூட எதிர்பார்த்தே தருகிறது…!

எங்கோ ஒரு குயில் கூவும் சத்தம் கேட்டு, ‘‘அதுக்குள்ள மணி எட்டு ஆயிடுச்சா…? நான் கிளம்பட்டுமா… வாசுவை வரச் சொல்ல வேண்டும்…’’

‘‘நோ… இன்னைக்கு டின்னர் என் கூடத்தான்… அதுக்கப்புறம் நானே என்னோட கார்ல டிரைவர் துணையோடு உன்னை கொண்டு போய் ட்ராப் பண்றேன்…!’’ என்று கண்டிஷன் ஆக சேது சொல்லிவிட… வேறுவழியில்லாமல் பாட்டியும் ஒத்துக் கொண்டார்.

‘‘வா, சாப்பிட போகலாம்…’’ என்று சொல்லும்போது வாசலில் ஒரு கார் வந்து நிற்கும் சத்தமும், அதைத் தொடர்ந்து யாரோ வரும் காலடி ஓசை கேட்க திரும்பிப் பார்த்த ரங்கா, அங்கு வந்த இளம் வாலிபனைப் பார்த்து மனதுக்குள் ‘இதுதான் உபேந்திரா வாக இருக்க வேண்டும்’ என்று நினைத்துக் கொண்டார்.

“ஹாய் தாத்தா…” என்று உள்ளே வந்த உபேந்திரா, ஹாலில் தாத்தாவுடன் ஒரு பெண்மணியும் அமர்ந்திருப்பதை பார்த்தான். ஒரு நொடி திகைத்தவன், “சாரி நீங்க பேசிட்டு இருக்கீங்களா… கவனிக்கலை…!”

“நோ ப்ராப்ளம்… உபேந்திரா இவங்க ரங்கநாயகி… என்னுடைய பள்ளித் தோழி நான் ரங்கான்னு கூப்பிடுவேன்…”

“ரங்கா இது என்னுடைய பேரன். உபேந்திரா, கிரிமினல் லாயர். இத்தனை வருஷம் டெல்லியில் பெரிய வக்கீலா தொழில் பண்ணிட்டு இருந்தான். இப்ப எனக்காக தன்னோட ஜாகையை மெட்ராசுக்கு மாத்தி இருக்கான்…!” என்று இருவரையும் அறிமுகப்படுத்தி வைத்தார்…

“வணக்கம்…” என்று சொன்னவனை பாட்டியின் கண்கள் அளவெடுத்தது…

“ஆமா சேது, நீ டாக்டர், உன்னோட பையனும் டாக்டர்… பேரன் மட்டும் ஏன் படிக்கலை…?”

“அவனுக்கு என்னமோ இந்த ப்ரோபெசன் பிடிக்கல… அதனால அவனுக்கு பிடிச்சதை படிக்கட்டும்னு விட்டுட்டேன்…!’

இருவரும் சாப்பிட டைனிங் ஹால்l சென்றபோது

உபேந்திராவும் சாப்பிட வந்து அமர்ந்தான்… பெரியவர்கள் இருவரும் பேசுவதை சற்று நேரம் வேடிக்கை பார்த்தவன் ஏதோ ஒன்று தோன்ற ரங்காவை பார்த்து, ‘‘உங்க பேர் எனக்கு ஏற்கனவே பெமிலியர்…!’’

‘‘எப்படி…?’’

‘‘இதே பெயரில் வக்கீல் ஒருத்தி இருக்கா… அப்பா சரியான வாய்…’’ என்று கோபத்தோடு சொல்ல…

‘‘வக்கீலுக்கு வாய் தானடா வேணும்…’’ என்று தாத்தா சொல்ல…

‘‘அதுக்காக இப்படியா… ஐயோடா சாமி டைவர்ஸ் கேசுக்கு வரிஞ்சு கட்டிக்கிட்டு, என் கூட சண்டைக்கு வந்தா பாருங்க… என்னமோ நான்தான் டைவர்ஸ் பண்ற மாதிரி…!’’

‘‘உண்மைதானடா உன் கட்சிக்காரனுக்கு நீ வக்காலத்து வாங்கி பேசுற… அப்ப நீ பேசினால் என்ன, அவன் பேசினா என்ன… அவளும் அவனை திட்டுவதற்கு பதில் உன்னை திட்டி இருப்பா, சரிதானே நான் சொல்றது…!’’ தாத்தா நியாயமான பதிலை சொல்ல…

‘‘நீங்க சும்மா இருங்க தாத்தா. உங்களுக்கு தெரியாது

ஏற்கனவே அவ ஒரு கேஸ்ல என்னை மாட்டி விட்டுட்டா, இப்பவும் இந்த கேஸ்… வேற ஏதாவது கேஸ்ல அவ என்கிட்ட மாட்டட்டும்… அப்புறம் இருக்கவே இருக்கு கச்சேரி,…''

''அப்போ ஏதாவது கேஸ்ல, அவ உனக்கு எதிரான வக்கீலா வந்தா, கச்சேரி களைகட்டும்னு சொல்லு…'' அப்படித்தானே என்றவர் ''ஹா… ஹா… ஹா'' என்று சிரித்தார்…

பார்த்துக்கொண்டிருந்த பாட்டி ''அவ வேறு யாரும் இல்லை… என்னோட பேத்தி ரங்கா தான்…'' என்று சொன்னதும் கேட்டு கொண்டிருந்தவனுக்கு புரை ஏறிற்று.

தண்ணீரை அவன் பக்கம் நகர்த்தி வைத்த தாத்தா நமட்டு சிரிப்பு சிரிக்க, பாட்டியும் மெலிதாக புன்னகை புரிந்தார்… ''தப்பு ஒண்ணும் இல்ல… நீங்க ரெண்டு பேரும் அறிமுகமானது அந்த மாதிரி ஒரு சூழல்… நீ சொன்ன மாதிரி நூறு பங்கு என் பேத்தி சொன்னா… இதுல என்ன இருக்கு…? எல்லாத்தையும் ஈஸியா எடுத்துக்க பழகிக்கணும்…!'' என்று சொல்லிவிட்டு…

''ஆனா ஒரு விஷயம்… எல்லாத்தையும் சொன்ன பேத்தி நீ ரொம்ப ஹான்ட்சம்மா இருக்கேன்கிறத சொல்ல விட்டுட்டா…!''

இப்போது சத்தமாகவே சிரித்த சேதுராம், ''ஏய் ரங்கா, அவன்

என் பேரனாக்கும்… என்னோட அழகுல முக்கால்வாசி இருக்காதா என்ன…?'' என்று அவள் காலை வார…

''தாத்தா இத்தனை வயசு ஆகியும் உங்களுக்கு இருக்கிற தன்னம்பிக்கை போகல… ஐ அப்ரிசியேட் யூ…'' என்றவன் கை கழுவி எழுந்தான்…

''உபேந்திரா டிரைவர் இருக்காரா…? இருந்தா வரச் சொல்லு. நான் இவங்கள கூட்டிட்டு போய் விட்டுட்டு வரேன்…!''

கையை திருப்பி நேரத்தைப் பார்த்த உபேந்திரா, ''தாத்தா ஒன்பது மணி மேல ஆச்சு. இனிமே நீங்க போக வேண்டாம்… நானே கொண்டு போய் விட்டுட்டு வரேன்…'' என்றவன் விடுவிடுவென்று மாடி ஏறிப் போய் தனது கார் சாவியை எடுத்து வந்தான்…

''எதுக்கு சிரமம் எல்லாம்…? நான் வாசுவை வரச்சொல்லி போயிப்பேன்…!''

''ரங்கா இதுல என்ன சிரமம் இருக்கு… இந்த விஷயம் கூட நான் உனக்கு செய்யலேன்னா நீ என் தோழிங்கிறதுக்கு என்ன அர்த்தம்…? உரிமையாய் சொன்ன சேதுவை ஏமாற்ற மனம் வராமல் பாட்டி ரங்கா உபேந்திராவுடன் கிளம்பினார்…

பாட்டியை இறக்கி விட்டதும், நேரமாயிற்று என்று உடனே உபேந்திரா திரும்பி விட்டான்… அடுத்த ஒரு வாரம் எந்தவித பரபரப்பும் இன்றி நாட்கள் அமைதியாக நகர்ந்தது…

‘‘பாட்டி இன்னைக்கு செக்கப் போகணும்… ஞாபகம் இருக்கு இல்ல… ஈவினிங் நானும் வாசுவும் சீக்கிரம் வந்திடறோம் கிளம்பி ரெடியா இருங்க… !’’ என்று கூறி விட்டு ரங்கா ஆபிசுக்கு சென்றுவிட்டாள்…

ஈவினிங் நாலு மணிக்கு வீட்டுக்கு வந்த ரங்கா, பாட்டி கிளம்பாமல் தனது ரூமில் படுத்திருப்பதை பார்த்து அருகில் வந்து, ‘‘என்ன பாட்டி… என்ன செய்து…? ஏன் படுத்திருக்கிறே…? ஹாஸ்பிடல் கிளம்பலையா…?’’

‘‘இல்ல நான் வரல… செக்கப் எல்லாம் எனக்கு வேண்டாம்… நான் நல்லாத்தான் இருக்கேன்…!’’

‘‘அதை நீங்க சொல்ல வேண்டாம். டாக்டர் சொல்லட்டும். ப்ளீஸ் கிளம்புங்க டென் மினிட்ஸ் டைம். அதுக்குள்ள நானும் கிளம்பிட்டு வந்துடறேன்…’’ என்றவள் மறு பேச்சு பேசாமல் தனது அறைக்குள் நுழைந்து விட்டாள்…

பத்து நிமிடம் கழித்து வந்து பார்த்தபோதும் பாட்டி அப்படியே இருக்கவே, ‘‘என்ன பாட்டி, என்ன பிடிவாதம் இது…?’’

என்று கேட்க…

“உன்னோட பிடிவாதத்துக்கு முன்னாடி இதெல்லாம் ஒன்றுமே இல்லை…!”

“ஐயோ பாட்டி… நான் என்ன பிடிவாதம் பண்ணினேன்…?”

“நீ பிடிவாதமே பிடிக்கறதில்லையா…? கல்யாணம் பண்ணச் சொல்லி எவ்வளவு நாள் சொல்றேன்…? நீ மாட்டேன்னு பிடிவாதம் பிடிக்கல…?”

“பாட்டி, நீங்க எதுக்கும், எதுக்கும் முடிச்சு போடுறீங்க… அது சாதாரண விஷயம்… ஆனா இது அப்படியில்லை உங்க உயிர் சம்பந்தப்பட்ட விஷயம். எனக்கு நீங்க முக்கியம் பாட்டி. எனக்கு உங்கள விட்டா வேற யாரு இருக்கா சொல்லுங்க…?”

“அதையே தான் சொல்றேன் எனக்கு உன்ன விட்டா யார் இருக்கா… மற்ற எல்லாரும் இருக்காங்க தான். ஆனால் மனசளவுல… யோசிச்சு பாரு… உனக்கும் அப்படி தானே… எத்தனையோ பேர் இருந்தாலும், அவங்க நமக்கு மனசுக்கு நெருக்கமானவங்களா இருக்காங்களா…? அதுதான் ரொம்ப முக்கியம்…

உன்ன நெனச்சு தான் என் கவலையே ரங்கா… என்னோட

வம்சம் உன்னை வைத்தும் தழைக்கணும்... அதுதான் என் விருப்பம்...! புரிஞ்சுக்கோ...''

பாட்டியின் பிடிவாதத்தை கண்ட ரங்கா, என்ன செய்வது என்று புரியாமல் குழம்பினாள்... சற்று நேரத்தில் வாசு வந்து எவ்வளவோ சொல்லியும் பாட்டி அசையவே இல்லை... வேறுவழியில்லாமல் வாசு கிளம்பி சென்று விட இரவு சாப்பாடும் பாட்டி சாப்பிடவே இல்லை... 'ரங்காவுக்கு புரிந்தது, தான் ஒரு முடிவு சொல்லாமல் பாட்டியை சமாளிக்க முடியாது என்று... என்ன செய்யலாம்...?' என்று யோசிக்க ஆரம்பித்தாள்.

இரவு முழுவதும் யோசித்து ஒரு முடிவுக்கு வந்தவள், மறுநாள் காலை ஆபீசுக்கு செல்லவில்லை. குளித்து பூஜை முடித்து வந்த பாட்டி ரங்கா இன்னும் கிளம்பி வரவில்லையே என்று அவளது அறைக்கு வந்து பார்த்தார்... ரங்கா கிளம்பாமல் இருப்பதை பார்த்து ''ஆபீஸ் போகலை...?''

''இல்ல பாட்டி, எனக்கு கொஞ்சம் உங்க கிட்ட பேசணும். லீவு சொல்லி இருக்கேன்...''

''அப்ப சரி முதல்ல குளிச்சு சாப்பிடு. அப்புறம் பேசுவோம்...'' பாட்டி சொன்னது சரி என்று தோன்ற குளித்து சாப்பிட வந்தாள். மௌனமாகவே இருவரும் சாப்பிட்டு முடித்தனர்...

வாசல் கதவை தாள் போட்டுவிட்டு படுக்கை அறைக்குள் நுழைந்த ரங்கா “ பாட்டி இங்க உக்காருங்க…” என்று நாற்காலியை காட்டிவிட்டு தான் கட்டிலில் அமர்ந்தாள்…

ஏதாவது சொல்லுவாள் என்று பாட்டி எதிர்பார்த்து இருக்க, கைவிரல்களை பிரிப்பதும் கோர்ப்பதுமாக இருந்த ரங்காவை புதிதாக பார்த்தார்… பாட்டி முகத்தை பார்ப்பதும், பின் தன் விரல்களை பார்ப்பதுமாக ரங்கா இருக்க…

“என்ன ரங்கா சொல்லு…? நீ இப்படி இருந்து நான் பார்த்ததே இல்லை… எதுவா இருந்தாலும் தேங்கா உடைச்ச மாதிரி பளிச்சென்று சொல்லிடுவே… இப்ப என்ன இவ்வளவு தயக்கம் புதுசா…?”

“அப்படி இல்ல… பாட்டி நான் சொல்லப்போற விஷயத்தை நீங்க எப்படி எடுத்துபீங்கன்னு எனக்கு தெரியல… அதான் கொஞ்சம் தயக்கமா இருக்கு…!”

“பாட்டி எனக்கு கல்யாணம் வேண்டாம்… ஆனால் ஒரு குழந்தை பெத்துக்கலாம்னு நினைக்கிறேன்…”

“என்ன ரங்கா… என்ன சொல்றே.? எனக்கு புரியல…! கல்யாணம் பண்ணிக்காம குழந்தை எப்படிடி வரும்…?”

“பாட்டி... அதெல்லாம் அந்த காலம். கல்யாணம் ஆனா தான் குழந்தை பொறக்கும் அப்படிங்கறது...! இப்ப ஒரு பொண்ணு நெனச்சா கல்யாணம் பண்ணாமலே, ஒரு ஆண் தன்னை தொடாமலே குழந்தை பெத்துக்கலாம்... அப்படி ஒரு குழந்தை பெத்துக்கலாம் நான் நினைக்கிறேன்... கிட்டதட்ட குந்திதேவி மாதிரி...!”

“ரங்கா என்ன பேச்சு இது...?”

“கூல் கூல்... உங்களுக்கு புரியும்படியா சொல்றேன்... இப்ப நிறைய பெண்களுக்கு கருப்பையில் பிரச்சனை இருக்கு... அதே மாதிரி ஆண்களுக்கும் விந்து பிரச்சினை இருக்கு... கருமுட்டை உற்பத்தி குறைவாக இருக்கிற பெண்களுக்கு, டோனர் மூலமா... அதாவது வேற ஒரு பெண்ணோட கருமுட்டையை எடுத்து, இந்தப் பெண்ணோட கணவனோட விந்தணுவோடு சேர்த்து ஒரு குழந்தையை உருவாக்கி, அந்த மனைவியோட கர்ப்பப் பையில் வைத்து குழந்தை பெற்றுக் கொள்வது...

அதே மாதிரி அந்த ஆணுக்கு பிரச்சனை அப்படின்னா... ஒரு ஆணோட விந்தணுவை வாங்கி மருத்துவமனையில் இப்ப ஸ்டாக் பண்ணி வச்சிருக்காங்க... அதுல யாரோட உருவ ஒற்றுமை இந்த கணவனுக்கு இருக்குமோ, அதே மாதிரி ஒரு ஆளோட விந்தணுவை எடுத்து அந்த பெண்ணோட கருமுட்டையை சேர்த்து

குழந்தை உருவாக்கி அந்த பெண்ணோட கர்ப்பப்பையில் வச்சுடுவாங்க…

இதாவது பரவாயில்லை… சில தம்பதியர் தாங்க வாழ்க்கையில செட்டில் ஆகணும், அதனால இப்ப குழந்தை வேண்டாம் என்று தீர்மானித்து, பின்னாடி பெத்துக்கலாம் நினைக்கிறார்கள்… அந்த சமயம் வயது காரணமாக குழந்தைப்பேறு கிடைக்காமல் போய்விட்டால் என்ன செய்வது என்று பயந்து தங்களுடைய விந்தணு, கருமுட்டையை சேமித்து வைக்கிற பழக்கம் இப்பவும் பரவலா இருக்கு…

அப்புறம் என்ன…? நானும் அதே மாதிரி ஒரு டெஸ்ட் டியூப் பேபி பெத்துக்கிறேன்… இப்ப இன்னொரு விஷயம் இந்த மாதிரி பெண்களுக்கு ஆதரவாக இருக்கு… சட்டத்திலேயும் அம்மாவோட இன்ஷியலை குழந்தைக்கு வைக்கலாம்னு இருக்கு…

சோ… படிப்பு, வேலை இதெல்லாம் ஒரு பிரச்சினையே கிடையாது… நீங்க நினைச்ச மாதிரி உங்களோட வாரிசும் கிடைக்கும்… என்னோட பிற்காலத்தில் உங்களுக்கு பிறகு என்னோட குழந்தை எனக்கு துணையாய் இருக்கும்… என்ன சொல்றீங்க…?''

''ரங்கா, இது என்ன விபரீத முடிவு…? நான் உன்னை கல்யாணம் பண்ணி ஒரு குழந்தை பெற்று என் கையில கொடு

என்று சொன்னேன்… இப்படி ஒரு முடிவு நான் உன்கிட்ட எதிர்பார்க்கலை…?

பேசுவதற்கு இது ஈஸியா இருக்கும்… ஆனால் இது நடைமுறையில் சாத்தியமில்லை… இதனால நீ ஏகப்பட்ட பிரச்சினைகளை சந்திக்க வேண்டி இருக்கும்…!”

“எது நடைமுறையில் சாத்தியமில்லை…? ஆரம்ப காலத்தில் பெண்கள் உடன்கட்டை ஏறும் வழக்கம் இருந்தது… அப்புறம் கணவன் இறந்தால், காவி அல்லது வெள்ளை தான் அணியனும், பொட்டு வைக்கக் கூடாது… நகைகள் போடக் கூடாது, பூ வைக்கக்கூடாது, யார் எதிரேயும் வரக்கூடாது… இப்படி எத்தனை விதிமுறைகள்… அத்தனையும் மாறல…

இன்னைக்கி கணவனை இழந்த பெண்கள் யாரும் பழைய விதிமுறைகளை கடைபிடிக்கிறது இல்ல… இன்னும் பெரிய விஷயம் அந்த இழப்பை இயற்கையாக ஏத்து கிட்டு தன்னோட கடமையை அழகா செய்யறாங்க…!”

உண்மைதான் நான் இல்லைன்னு சொல்லலை… ஆனா முதல், முதல்ல ஒரு நியதியை மீறுறவங்க எதிர்கொள்கிற பிரச்சனைகள் ரொம்ப ஜாஸ்தி… அதுலயும் இந்த பிரச்சனை உன்னோட கற்பு, நம்ம குடும்பத்தோட மானம், நம்மளோட நிம்மதி அத்தனையும்

குலைச்சிடும்…!''

''அப்படி எதுவும் கிடையாது பாட்டி… இப்ப இருக்கிற மக்களுக்கு தங்களுடைய பிரச்சினையை தீர்க்கவே நேரம் கிடையாது… இதுல எதுக்கு மத்தவங்கள பத்தி பேச போறாங்க…!'

''நீ நினைக்கிறது தப்பு ரங்கா… எவ்வளவுதான் காலம் மாறினாலும் மக்கள் மாறவே மாட்டாங்க… அதே மாதிரி அவங்களுக்கு எவ்வளவு தான் பிரச்சனை இருந்தாலும், அடுத்தவங்க பிரச்சினையைப் பற்றி தான் முதலில் பேசுவாங்க…!

''பேசினால் பேசிட்டு போட்டும்… நான் அதை மைண்ட் பண்ண போறது இல்ல…!''

''நீ இருப்ப… ஆனா அது உனக்கு வலிக்கும்… அது சொன்னா புரியாது… வார்த்தை கேட்கும்போது ரொம்பவே வலிக்கும்…!''

''பாட்டி எதுக்கும் முதல்னு ஒண்ணு இருக்கு இல்லையா…?''

''அதுக்காக அத நாம ஏத்துக்கணும்னு என்ன பாப்பா தலையெழுத்து…?'' பாட்டியும் விதவிதமாக அவளிடம் பேசி பார்த்தார். ஆனால் எதுவுமே ரங்காவின் காதில் ஏறவில்லை…

''பாட்டி இரண்டே முடிவுதான்… ஒண்ணு என்னை இப்படியே

விட்டுடு… அல்லது என்னோட முடிவுக்கு ஒத்துக்கோ… ஆனால் யார் சொன்னாலும் என்னோட வாழ்க்கையில ஒரு ஆணுக்கு இடமில்லை…'' என்றவள் பாட்டி யோசிக்கட்டும் என்று எழுந்து வெளியே சென்றாள்.

பாட்டிக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை… யாரிடம் இதை சொல்ல முடியும்…? கல்யாணம் ஆகாமல் குழந்தை வந்தால் என்னென்ன கேள்வி வரும்…? முதலில் தன் குடும்பத்திலேயே இதை ஏற்றுக் கொள்வார்களா…!

'நன்கு புரிந்து தான் சொல்கிறாளா…! அல்லது இப்படி பேசினால் தான் கல்யாணம் வேண்டாம் என்று நான் ஒத்துக் கொள்வேன் என்று பேசுகிறாளா' ஒன்றும் புரியாமல் மண்டையை பிய்த்துக் கொண்டது தான் மிச்சம்… ஆனால் ஒன்று மட்டும் புரிந்தது… நிச்சயமாக கல்யாணத்திற்கு ஒத்துக்கொள்ள வைக்க முடியாது என்பது மட்டும்…

மறுநாளிலிருந்து எதுவுமே நடக்காதது போல் ரங்கா ஆபீசுக்கு செல்ல, பாட்டிக்கு தான் இதைப் பற்றி யோசித்து யோசித்து தலைவலி வந்தது மிச்சம்… வாசு கூட பாட்டியிடம் '' என்ன பாட்டி…! எப்ப பார்த்தாலும் ஏதாவது யோசனையாவே இருக்கீங்க…?''

அவனிடம் சொல்லலாமா என்று யோசித்த பாட்டி, பிறகு வேண்டாம் இது ஒரு பெண்ணின் வாழ்க்கை பிரச்சனை. அவள் அனுமதி இல்லாமல் சொல்லக்கூடாது, என்று முடிவு செய்து, ‘ஒன்றுமில்லை’ என்று கூறிவிட்டார்…

மிகவும் மூளையை கசக்கி யோசித்த பின் இதற்குத் தீர்வு ஒருவரிடம் பேசலாம் என்று யோசித்து அவருக்கு போன் செய்தார்… “ ஹலோ என்ன ரங்கா எப்படி இருக்க…? நானே உன்னை கூப்பிட்டு கேட்கணும்னு நினைச்சேன்…? திருப்பி செக்கப் பண்ணினாயா…?”

“இல்ல… இப்ப அது முக்கியமில்லை… எனக்கு ஒரு பிரச்சனை… ஆனா அதுக்கு தீர்வு யார்கிட்ட கேட்கறதுன்னு தெரியல…? உன்னை பார்த்து பேசணும்…!”

“சரி வீட்டுக்கு வாயேன்…!”

“ஈவினிங் வேண்டாம்… பகல்லயே வர்றேன்… ஒரு ஆட்டோ பிடிச்சு… அட்ரஸ் மட்டும் அனுப்புங்க…”

“இல்ல வேண்டாம். நீ உன் அட்ரஸ் அனுப்பு. நான் கார் அனுப்பி வைக்கிறேன்…!” என்றவர் அதன்படியே கார் அனுப்பி வைத்தார்…

“உட்காரு...” என்றவர் வேலைக்காரனை அழைத்து ஜூஸ் கொண்டு வர செய்து “நல்ல வெயில்ல வந்திருக்க... முதல்ல இந்த ஜூஸ் குடி... பயப்படாதே, சுகர் ப்ரீ தான் போட சொல்லி இருக்கேன்...”

அவள் குடித்து முடித்ததும் “என்ன விஷயம் ரங்கா...?” என்றதற்கு சற்று நேரம் பாட்டி பதில் சொல்லவில்லை...

“சேது மாடியில உங்க ரூம்ல போயி பேசலாமா...?”

“ஒஹ் தாராளமா...” என்றவர் அவளை அழைத்துக் கொண்டு தனது அறைக்கு சென்றார்.

ரங்காவின் முகத்தைப் பார்த்தே, ஏதோ ஒரு முக்கிய பிரச்சினை என்ற அளவில் புரிந்து கொண்டார்... அவளை உட்காரச் சொல்லிவிட்டு “என்ன ரங்கா.? உன் முகமே சரியில்லையே...? அப்படி என்ன முக்கியமான விஷயம்...?”

“சேது நான் ஒரு கேள்வி கேட்கிறேன். அதுக்கு நீங்க உண்மையான பதில் சொல்லணும்...?”

“கேளு...?”

“இந்த சமூகத்துல ஒரு பெண் கல்யாணம் ஆகாம குழந்தை பெத்து கொண்டா, அவளோட நிலைமை எப்படி இருக்கும்...?”

“இது என்ன கேள்வி…? ரொம்ப மோசமாக தான் இருக்கும்… என்னதான் காலம் மாறினாலும், பெண்களுக்கு என்று ஒரு வரைமுறை இருக்கிறதை, இன்னும் யாரும் மறக்கல, மாத்திக்கலை…!”

“தகப்பன் இல்லாத குழந்தையை ஒரு பெண் வளர்த்து ஆளாக்குவதற்கு நம்ம காலத்திலே ரொம்ப கஷ்டப் படணும்… இப்பவும் அதே நிலமைதானா…?”

‘பொருளாதார ரீதியா வேணும்னா பெண்கள் கொஞ்சம் கஷ்டப் படாமல் இருக்கலாம்… ஆனால் சமூக ரீதியாகவும், மனரீதியாகவும் சிங்கிள் பேரன்டா குழந்தையை வளர்க்கறது, ரொம்ப கஷ்டமான விஷயம்… அதுவும் அந்த குழந்தை தகப்பன் யாருன்னு தெரியாம பிறந்தால் இன்னும் ரொம்ப கஷ்டம்…! ஆமா இதெல்லாம் எதுக்கு நீ கேக்குற…? உன்னோட ஃபேமிலில எதுவும் பிரச்சனையா…?”

“இப்ப வர எதுவும் இல்ல… ஆனால் இனிமேல் எப்படின்னு தெரியல…!”

“இது என்ன பதில் ரங்கா…?” என்றவருக்கு ஒரு பெருமூச்சுடன் தனக்கும் பேத்தி ரங்காவுக்கும் இடையில் நடந்த அனைத்து பேச்சு வார்த்தைகளையும் கூறினார்…

“ஓ… ஓ… வெரி பிட்டி… ஏன், உன்னோட பேத்திக்கு கல்யாணம் பண்ணிக்க இஷ்டம் இல்ல…?”

“அது ஒரு பெரிய கதை…” என்ற ரங்கா, ஒரு பெருமூச்சுடன் பேத்தி ரங்காவின் கதையை சுருக்கமாக கூறினார்…

“ஓ… இது தான் உன் பிரச்சனையா…?”

“ஆமாம்… என்னோட முடிவை அவளால ஏத்துக்க முடியல. அதுக்கு இப்படி ஒரு வழிகண்டு பிடிச்சிருக்கா. எனக்குதான் இப்ப என்ன சொல்றதுன்னு தெரியல… இதுக்கு நான் என்ன பதில் சொல்றது சேது…?” என்றார் கவலையுடன் ரங்கா…

# அத்தியாயம் 12

“ஏய் ரங்கா எதுக்கு அழுதுகிட்டு இருக்க…?”

“என்னோட படிக்கிற பையன் என் நோட்ட எடுத்து கிழிச்சிட்டான்…”

“ஏன் கிழிச்சேன்னு கேட்க வேண்டியதானே…?”

“கேட்டா அடிக்க வர்றான்…”

“சரி வா… அவன் கிட்டயே கேட்போம்…!”

“ஏண்டா இவ நோட்டை கிழிச்சே…!”

“அப்படித்தான் கிழிப்பேன்… என்ன செய்வே…?”

“சரி வா ரங்கா பிரின்ஸ்பால் கிட்ட போவோம்…”

“போங்க… அவரைப் பார்க்கக் கூட முடியாது. அப்புறம் என்ன…?”

“நீ வா…” என்றவன் நேராக பிரின்ஸ்பல் ஆபீஸ் வாசலில் போய் நின்று கொண்டான்… ஸ்கூல் முடிந்து வெகு நேரம் கழித்து வெளியில் வந்த பிரின்ஸ்பால் தன்னை பார்க்க இரண்டு குழந்தைகள் அங்கு ஒரு ஓரத்தில் உட்கார்ந்து இருப்பதைக்

கண்டார்…

“என்னடா…? வீட்டுக்கு போகல…!”

“இல்ல சார்… உங்களை பார்க்கணும்னுதான் வெய்ட் பண்றோம்…!”

“எதுக்குப்பா பாக்கணும்…?” என்று கேட்டவரிடம் விஷயத்தை சொல்லி, அந்த பையன் சொன்னதையும் சொன்னான்…

தன்னைப்பற்றி பள்ளிப் பிள்ளைகள் மனதில் இருந்த பிம்பத்தை அறிந்துகொண்ட அந்த பிரின்ஸ்பால் தனது தவறை உணர்ந்து, மறுநாளே அந்த பையனை அழைத்து கண்டித்தும் அல்லாமல், அவனது பெற்றோரையும் அழைத்து எச்சரிக்கை செய்து அனுப்பினார்…

பாட்டிக்கு விஷயம் தெரிந்தது… “ரங்கா இந்தமாதிரி யாராவது தப்பு பண்ணினால், அதை நாமளே நேரடியாக கேட்பதை விட, யார் சொன்னா அவங்க கேட்பார்களோ, அவங்க கிட்டதான் சொல்லணும் சரியா… வாசு செய்ததுதான் சரி…!” பாட்டியும் அவர்கள் செய்தது சரி என்று சொன்னார்…

என்னதான் இருவரும் நட்பாக இருந்தாலும், அடிக்கடி சண்டையும் வந்துவிடும். அதிலும் பாட்டி யாருக்கு முக்கியத்துவம்

கொடுக்கிறார் என்பதில் இருவருக்கும் மிகப் பெரிய போட்டியே உண்டு…

“பாட்டி உனக்கு என் மேல பாசமே இல்லை…!”

“ஏன் செல்லம் அப்படி சொல்ற…?”

“நீ அவனுக்கு தானே முதல்ல டிபன் பாக்ஸ் எடுத்து வச்சே…!”

“அவனுக்கு ஸ்கூல் எத்தனை மணிக்கு…?”

“7.30 மணிக்கு…!”

“உனக்கு…!”

“8.30 மணிக்கு…”

“அதனாலதான் அவனுக்கு முதல்ல டிபன் கட்டி கொடுத்தேன்… புரியுதா எனக்கு ரெண்டு பேருமே ஒண்ணு தான். நீங்க ரெண்டு பேரும் கடைசி வரைக்கும் சண்டை போடாம இருக்கணும். ஒருத்தருக்கு ஒருத்தர் ஆதரவா இருக்கணும்…!”

“சரி பாட்டி…” என்றனர் இருவரும்.

“***You educate a man… You educate a man… You educate a woman… You educate a generation…***”

*-Brigham Young*

இந்த காலத்து பொண்ணுங்களும் சரி பசங்களும் சரி, 'தாங்க நினைத்துதான் சரின்னு' ஒரு கொள்கை வச்சிருக்காங்க... என்ன பண்றது...? நானும் இப்படி ஒரு பிரச்சினையில் தான் சிக்கி இருக்கேன்..."

"என்ன சொல்றீங்க...?"

"என்னோட பேரனுக்கும் கல்யாண வயசு வந்தாச்சு... நானும் சொல்லிப் பார்த்துட்டேன்... காதிலேயே வாங்கிக்க மாட்டேங்கிறான்... கேட்டா இப்படியே சுதந்திரமாக இருந்திடலாம் தாத்தா... இன்னொருத்தி வந்து அவ நாள் பூரா அவ தொணதொணப்ப நம்மளால கேட்க முடியாது... அப்படிங்கிறான்..."

"இதுல என்ன சுதந்திரம் பறிபோகும் இருக்கு...?"

"அதுதான் எனக்கும் புரியல... அந்த காலத்துல எத்தனை சண்டை சச்சரவு வந்தாலும் ஒருத்தருக்கு ஒருத்தர் வெளியில விட்டுக் கொடுக்காமல் வாழ்ந்தாங்க... காரணம் அப்ப பெண்களுக்கு இந்த அளவுக்கு சுயமரியாதை என்கிற பேர்ல, ஈகோ இல்லை...

சுயமரியாதை என்றால் என்ன? ஈகோன்னா என்னன்னு தெரியாம, எதுக்கு எடுத்தாலும் ஏட்டிக்குப் போட்டி பேசுற

பெண்கள் தான் இப்ப ஜாஸ்தி… அதை பார்த்து இவன் கல்யாணம் அப்படின்னாலே காததூரம் ஓடறான்…!''

''நமக்கும் இவங்க கல்யாணம் பண்ணி சந்தோசமா வாழறதை பார்க்கணும்னு ஆசை இருக்காதா என்ன? கல்யாணம் பண்றது மூலம் நமது சந்ததிகளுக்கு ஒரு அடையாளத்தை காட்டுறோம்…? முகம் தெரியாத ஒரு ஆளோட குழந்தையை பெற்றுக்கொள்வது என்பது நிறைய விஷயங்கள் நமக்கு பாதகமாக முடியும்… படித்த பெண்களுக்கு அது தெரியாதா…?''

''உண்மைதான் ரங்கா… ஒரு குழந்தைங்கிறது சாதாரண விஷயமல்ல… ஆணோட விந்தணுவின் ஒரு துளி (ஒரு செல்) பெண்ணின் கருமுட்டையில் இருந்து ஒரு முட்டை (ஒருசெல்) ஒரு அணுவில் இருந்து உருவாகிறது… ஒரு செல்லில் 23 குரோமோசோம் உள்ளது. 23=23=46. ஒரு உயிர், குழந்தை. அந்த குழந்தைக்கு கண்டிப்பாக அந்த ஆண், பெண் இருவருடைய பரம்பரையில் இருபத்தி மூன்று தலைமுறையில் உள்ள குணாதிசயங்கள் இருக்கும்… அதுல நல்லதும் இருக்கும் கெட்டதும் இருக்கும்… இதுக்கு தான் அந்த காலத்துல அவங்களுடைய பழக்கவழக்கத்திற்கு ஏற்றார்போல உள்ள தலைமுறையில் பொண்ணும், மாப்பிள்ளையும் பார்த்து கிட்டாங்க…

ஆனா இப்ப இந்த மாதிரி இன்னொருத்தர் கருமுட்டையோ,

விந்தணுவோ செலுத்தும்போது குழந்தையின் தாய், தகப்பன் ஆக மாறும் பெண், ஆணுக்கு ஏற்ப உருவ அமைப்புள்ள ஆண்களின் விந்தணு, அல்லது பெண்ணின் கரு முட்டை எடுத்து குழந்தை உருவாக்குகிறார்கள்…

அதுல நிறம் மட்டும் தான் பார்க்க முடியும்… மற்றபடி உருவ அமைப்புகளும், பிளட் குரூப், எதுவுமே ஒற்றுமையாக அமையப் போவதில்லை… இதற்கு அவர்கள் ஒரு அனாதைக் குழந்தையை தத்து எடுத்துக் கொண்டு வந்துவிடலாம்… ஆனால் இதை இப்போது யாரிடமும் சொல்ல முடியாது… ஏனென்றால் உங்களுக்கு பரந்த மனது இல்லை என்பார்கள்.

“உண்மைதான்… ரங்கா நான் ஒரு யோசனை சொல்கிறேன்… விளைவு எப்படி இருக்கும் என்று நாம் யோசிக்க வேண்டாம்… செயல்படுத்தி பார்ப்போம். மற்றபடி கடவுள் விட்ட வழி… நீ உன் பேத்திக்கு அவளது முடிவிற்கு சம்மதம் சொல்லு…”

“என்ன சொல்றீங்க…?”

“ஆமா உன் பேத்தியின் முடிவுக்கு சம்மதம் சொல்லு சொல்லு…!”

“தப்பான முடிவு தான்னு தெரிஞ்சு, எப்படி நான் சம்மதம் சொல்றது?”

“சொல்லித்தான் ஆகணும். அவங்க சொல்றது தப்புன்னு நமக்குத் தெரியும்… ஆனா அவங்களுக்கு அது நடைபெறும் போது தான் புரியும்… உன் பேத்தி சொன்னாளா, இல்லையா…! எதுக்குமே முதல்னு என்று ஒன்று உண்டு… அது நமக்கும் பொருந்தும்…

யதார்த்தமான வாழ்க்கைனா என்னன்னு, நாம அவங்களுக்கு புரிய வைக்கலாம்… எப்போதுமே அடுத்தவங்க தப்புல இருந்து பாடம் கத்துக்கணும்…

ஆனா நம்ம பசங்க ஏன், எதுக்குன்னு கேள்வி கேட்டு, அந்த தப்பை தானே செய்து, அதிலிருந்து பாடம் கத்துக்கிறேன்னு சொல்றப்ப, நாம் அதை நிறைவேற்றி வைக்கலாம்…

நீ ஒண்ணு செய்… ஹாஸ்பிடல் ரெகம்மன்ட் பண்ணும்போது, நம்ம ஹாஸ்பிட்டல் கூட்டிட்டு வந்துடு, மத்தத நான் பாத்துக்கறேன்… நான் அதுல சம்பந்தப்படாத மாதிரி எல்லாம் பாத்துக்கலாம்…” என்றவர் அவர்களுக்கு வேண்டிய தகவல்களையும் கொடுத்து ரங்காவை அனுப்பி வைத்தார்.

பாட்டி இந்த விஷயத்துக்கு சம்மதித்ததும் ரங்காவுக்கு மிக ஆச்சரியமாக இருந்தது… அவள் நினைத்தது வேறு… கண்டிப்பாக இதற்கு சம்மதிக்க மாட்டார்…’ என்று நினைத்தது போக… சம்மதித்தது ஒரு பக்கம் சந்தோஷமாக இருந்தாலும்… இதை

எப்படி நடத்திக் கொள்வது என்று அடுத்த யோசனை வந்தது…

“பாட்டி நிஜமாவா…? உங்களுக்கு சம்மதமா…?”

“முழு சம்மதம் என்று சொல்ல மாட்டேன்… ஆனால் எனக்கு உன்னோட வாரிசு பார்க்கணும்… காலம் மாறும் போது பெரியவங்க தானே மாறிக்கிட வேண்டியிருக்கு…”

தன்னுடைய பதிலைக் கேட்டு யோசனையில் ஆழ்ந்த பேத்தியின் முகத்தை பார்த்து, “என்ன தயக்கமா இருக்கா…?”

“தயக்கம் எல்லாம் இல்ல… எந்த டாக்டரை பார்க்க போகலாம்…? எந்த ஹாஸ்பிட்டல்…? இதை பத்தி யோசிச்சிட்டு இருக்கேன்…”

“ஏன் ரங்கா, எனக்கு செக்கப் போகணும் இல்ல, அங்க போய் விசாரித்து பார்ப்போமே…!”

“அதுவும் சரிதான்…இன்னைக்கு சாயங்காலம் போகலாம்…!”

“சாயங்காலம் போனா வாசு வருவான்… அவன் வேண்டாம்… அதனால இப்ப போகலாம்…!”

“இப்ப வா… எனக்கு ஆபீஸ் போகணும்…!”

“இன்னைக்கு ஒரு நாள் லீவ் போடு… இதப்பத்தி முழு

விபரமும் எனக்கு தெரியணும்…’’ பாட்டியும் பிடிவாதத்தினால் உடனே சென்றனர்… பாட்டிக்கு செக்கப் முடிந்ததும், அங்கு உள்ள நர்சிடம் கைனகாலஜிஸ்ட் டாக்டர் பாக்கணும்…!’’ என்று கேட்க…

அந்த நர்ஸ் இரண்டு மூன்று டாக்டர்கள் பெயர் சொல்ல அதிலிருந்து, ‘‘மகாலட்சுமி, அந்த டாக்டர் தான் நாங்க பாக்கணும்…’’ என்று பாட்டி சொன்னாள்.

‘‘நேரா போயி வலது பக்கம் திரும்புங்க… அவங்களோட ரூம் வரும்…!’’ என்று சொல்லிவிட்டு அந்த நர்ஸ் சென்றுவிட…

‘‘என்ன பாட்டி இந்த டாக்டர் உங்களுக்கு தெரியுமா…?’’

‘‘யாருக்கு தெரியும்…? மகாலட்சுமின்னு பெயர் கேட்டதும் எனக்கு என்னவோ மங்களகரமா தோணுச்சு அதான்…’’

அதற்குள் அந்த டாக்டர் ரூம் வந்துவிட, வாசலில் இருந்த நர்சிடம் சொல்லி அனுமதி வாங்கி உள்ளே சென்றனர்… ‘‘உட்காருங்க யாருக்கு பார்க்கணும்…?’’

‘‘இது என் பேத்தி ரங்கா… இவளுக்கு தான் பார்க்கணும்…?’’

‘‘என்ன செய்து உங்களுக்கு…?’’ டாக்டர் கேட்டதும் பதில் சொல்ல இருவருமே திணறினர்…

“என்னம்மா என்ன பிரச்சனை தயங்காம சொல்லுங்க…? டாக்டர் மறுபடியும் கேட்க…

“இல்ல, என் பேத்திக்கு தான் ஒரு குழந்தை வேணும்…”

“அப்படியா…? அவங்களுக்கு கல்யாணம் ஆகி எத்தனை வருஷமாச்சு?” டாக்டரம்மா கேள்வி கேட்டார்…

பாட்டி பதில் சொல்லாமல் மவுனமாக இருக்க, டாக்டர் திரும்பியும் அந்த கேள்வியை கேட்க பேத்தி ரங்கா, “இல்லை டாக்டர் எனக்கு கல்யாணம் ஆகல…!” என்று சொன்னதும் டாக்டருக்கு தூக்கிவாரிப் போட்டது…

“என்னது கல்யாணம் ஆகலையா…? குழந்தை வேணும்னு உங்க பாட்டி சொல்றாங்க… அல்லது ஒரு வேளை தெரியாமல் தப்பு பண்ணி கன்சீவ் ஆயிட்டியா…?

“ஒரு குழந்தை வேணும் சொன்னா அதுக்கு இப்படி தான் பேசுவீங்களா டாக்டர்…?”

“பின்ன என்னம்மா கல்யாணம் ஆன பிறகு தான் குழந்தை வரும்… இது கூட தெரியாத மக்கு பொண்ணா… நீ…?”

“எனக்கும் அது தெரியும்… எனக்கு கல்யாணத்துல இஷ்டமில்லை… அதனால எனக்குன்னு ஒரு குழந்தை

பெத்துக்கலாம்னு நினைக்கிறேன்…’’ கேட்ட டாக்டருக்கு தலைசுத்தி போயிற்று…

ரங்காவை விட்டு பாட்டியைப் பார்த்தார் டாக்டர்… ‘‘என்னம்மா நீங்க கூட உங்க பேத்திக்கு அட்வைஸ் பண்ண மாட்டீங்களா…?’’

‘‘டாக்டர் ஒரு கேள்வி கேட்டா தப்பா நினைக்க மாட்டீங்களே…?’’ என்று பாட்டி கேட்க…

‘ஐயோ இவங்க கிட்ட இன்னும் எத்தனை கேட்கணுமா’ மனசுக்குள் திகிலடிக்க பாட்டியை பார்த்து டாக்டர் சொன்னார் ‘‘கேளுங்க…’’

‘‘உங்களுக்கு எத்தனை பசங்க…?’’

‘‘ஆண் ஒன்று பெண் ஒன்று…’’

‘‘பெரிய பசங்களா?’’

‘‘ஆமா, காலேஜ் முடிக்க போறாங்க…!

‘‘நீங்க சொன்னா அச்சரம் பிசகாமல் கேட்பார்களா…!’’

‘‘பாட்டி கேட்ட கேள்வியில் டாக்டருக்கு இவர்கள் பிரச்சினை மறந்து போயிற்று… தனது பிள்ளைகள் பற்றி ஆரம்பித்தவர்,

“எங்க இந்த காலத்து பிள்ளைங்க கிட்ட பேசி மாள முடியாது...!” என்றவர் அரை மணி நேரம் அர்ச்சனை செய்துவிட்டு ஓய்ந்தார்...

“இதே பிரச்சனை தான் டாக்டர் எங்க வீட்டிலேயே ஓடுது... உங்களுக்காவது பிள்ளைங்க. எனக்கு பேத்தி. சுத்தமா பேச்சு கேட்கிறது இல்லை...!”

“சாதாரண விஷயம்னா பரவாயில்லை. இது வாழ்க்கைப் பிரச்சினை... நாளைக்கு கேள்வி கேட்கிறவங்களுக்கு பதில் சொல்லணும்...!”

“எதுக்கு பதில் சொல்லணும் டாக்டர்...?” பேத்தி ரங்கா குறுக்கிட்டாள்.

‘டாக்டருக்கு இப்போதுதான் வில்லங்கம் இங்கிருந்து புறப்பட்டு இருக்கிறது என்பது புரிந்தது...’ அதற்குள் அவரது போனில் ஒரு அழைப்பு வரவே, எக்ஸ்க்யூஸ் மீ ஒரு நிமிஷம் என்றவர் அந்த காலை அட்டன்ட் செய்தார்.

“சொல்லுங்க சார்...” எதிர்ப்பக்கம் என்ன சொன்னார்களோ, “சரி சார், சரி சார்...” என்றவர் போனை உடனே வைத்து விட்டார்.

“மிஸ். ரங்கா... உங்களுக்கு நான் இத பண்ணி தரேன்...

ஆனால் எனக்கு எந்த பிரச்சினையும் வராமல் நீங்க பார்த்துக்கணும்…”

“என்ன பிரச்சனை வரப் போகுது… அதெல்லாம் வராது டாக்டர்…!”

“ஓகே… அப்ப நீங்க ஒரு ரெண்டு நாள் கழிச்சு வாங்க. அதுக்குள்ள டிடெயில்ஸ் என்ன…? என்ன பண்ணனும் எல்லாம், நான் கலெக்ட் பண்ணி வைக்கிறேன் அதுக்கப்புறம் ப்ரோசீஜர்ஸ் எப்ப ஆரம்பிக்கலாம்னு பேசி டிசைட் பண்ணிக்கலாம்…” என்றவர் “வெளியில நர்ஸ் கிட்ட என் நம்பர் வாங்கிட்டு போயிடுங்க…” என்று சொல்லி வழியனுப்பி வைத்தார்…

அவர்கள் இருவரும் சென்றதும் திரும்பவும் போனை எடுத்து இதற்கு முன் வந்த காலுக்கு டயல் செய்தவர், “சார் சொல்லுங்க. அவங்க போயிட்டாங்க…!” கூறி அரைமணி நேரம் அவரிடம் பேசிவிட்டு போனை வைத்தார்.

“இந்த டாக்டர் நம்ம என்ன சொல்றமோ, செஞ்சு தர வேண்டியது தானே…?”

“அது எப்படி முடியும்… இதுநாள் வரை இந்த மாதிரியான ஒரு கேஸ் அவங்க அனுபவத்துல சந்தித்திருக்க மாட்டாங்க…

என்ன குழந்தை அப்படிங்கிறது வெளியில சொல்றதே குற்றம்... அதே மாதிரி ஆண் துணை இல்லாமல் வந்து அபார்ஷன் பண்ணிக்கிறது குற்றம்...

அதே மாதிரி புருஷன் பெயர் தெரியாமல் வந்து டெலிவரி பார்க்க சொன்னா அதுவும் செய்ய மாட்டாங்க... இத்தனை கட்டுப்பாடு உள்ள நம்ம சமூகத்துல, நீ புதுசா வந்து ஏதாவது சொன்னா எப்படி அது ஈஸியா நடக்கும்...?''

''இல்ல பாட்டி, நான் இதை மாற்றி காட்டுகிறேன்...!

''சரி முயற்சி பண்ணு...'' என்று அவர்கள் வீடு வந்து சேர்ந்தனர்.

அன்று இரவு அவர்களை பார்க்க வந்த வாசு ''என்ன ரங்கா ஆபீஸ்க்கு போகலையா...? சரவணன் போன் பண்ணி விசாரிச்சார்...!''

''இல்ல போகல... பாட்டியை செக்கப்புக்கு கூட்டிட்டு போனேன்...''

''என்கிட்ட சொல்லியிருந்தா நான் தான் கூட்டிட்டு போய் இருப்பேன் இல்ல... நீ ஆபீஸ் போக வேண்டியது தானே...?'' என்ற அக்கறையோடு அவன் சொல்ல...

“ஏண்டா ஒருநாள் நான் லீவு போட கூடாதா…? நான் ரெஸ்ட் எடுக்கிறதுல உனக்கு என்ன பிரச்சனை…?

“அம்மா தாயே எனக்கு எந்த பிரச்சினையும் இல்லை…” என்றவன் தாரா கன்சீவ் ஆகி இருக்கிறதா சொன்னான்…

கேட்ட இருவருக்கும் செய்தி சந்தோசம் அளித்தாலும், ‘தன்னைப் பற்றிய செய்தி மற்றவர்கள் கேள்விப்படும்போது எந்த மாதிரியான ஒரு ரியாக்சன் இருக்கும் என்ற எண்ணமே மனதில் மேலோங்க இருவருமே அமைதியாக இருந்தனர்…

“என்ன ஒண்ணுமே பதில் சொல்லல…!” என்று வாசு கேட்டதும் தான்… பாட்டி சுதாரித்துக்கொண்டு, “சந்தோஷம்” என்றார்.

“சரி சாப்பிட வாங்க…” என்று பாட்டி இருவரையும் அழைக்க

வாசு முதல் ஆளாக வந்து உட்கார்ந்தான்… “என்னடா இங்க சாப்பிட்டா வீட்ல போய் கீர்த்திக்கு என்ன பதில் சொல்லுவ…?”

இங்கே என்ன புல்லாவா சாப்பிட போறேன்… இங்க பாட்டி கைமணத்துக்கு இரண்டு… அங்க போய் அவ கிட்ட திட்டு வாங்காமல் இருக்க இரண்டு, இப்படி மேனேஜ் பண்ணிர மாட்டேன்…!”

அவன் சொன்ன விதத்தைப் பார்த்து தலையில் அடித்துக்கொண்ட ரங்கா ‘‘சரியான ஆளுடா நீ. பிழைச்சு க்குவே…!’’

‘‘ஏண்டி ஆசையா இரண்டு தோசை சாப்பிட்டுட்டு போறான்… அதுக்கு எதுக்கு அவனை இந்தப் பாடு படுத்துற…?’’

‘‘அவ கிடக்கிறா பாட்டி… நீங்க ரெண்டு தோசை போடுங்க…! என்று கேட்டு வாங்கி சாப்பிட்டு விட்டு கிளம்பினான்.

மறுநாள் காலையிலேயே சரவணன் பாட்டிக்கு போன் பண்ணி விஷயத்தை சொன்னான்… ‘‘ரொம்ப சந்தோஷம் நாங்க பார்க்க வர்றோம்… அம்மா, தங்கை எல்லாரும் நல்லா இருக்காங்களா…?’’

‘‘எல்லாரும் நல்லா இருக்காங்க… தங்கைக்கு தான் வரன் பாத்துட்டு இருக்கேன் ஏதாவது தெரிஞ்சா சொல்லுங்க…!’’

‘‘கண்டிப்பா…’’

‘‘ரங்கா ஏன் நேத்து ஆபிசுக்கு வரல…? உடம்பு சரி இல்லையா…?’’

‘‘இல்ல என்னை செக்கப்புக்கு கூட்டிட்டு போனா… லேட்டாயிடுச்சு வர முடியல…’’ என்ற பாட்டி பதில் சொன்னதும்

‘‘சரி’’ என்று போனை வைத்து விட்டான்…

அந்த வாரம் சனி, ஞாயிறு அம்மாவையும் அழைத்து கொண்டு தாராவை பார்க்க சென்றனர்… இவர்களைக் கண்டதும் மகிழ்ச்சியுடன் சரவணனின் வீட்டில் எல்லோரும் வரவேற்றனர்…

‘‘தாரா எப்படிமா இருக்க…?’’ என்றார் வைதேகியின் கேள்விக்கு அம்மாவை அணைத்துக் கொண்ட தாரா ‘‘சந்தோஷமா இருக்கேம்மா… வா உட்காரு…’’ என்று அம்மாவை உட்கார வைத்து அருகிலேயே உட்கார்ந்து கொண்டாள்…

பாட்டியின் கேள்விக்கும் ரங்காவின் கேள்விக்கும் சற்று மகிழ்ச்சியுடனே பதிலளித்த தாராவை பார்த்து இவர்களுக்கும் சந்தோஷமாக இருந்தது… அவளுக்குப் பிடித்த பலகாரம், பழம் என்று வாங்கி வந்ததை அவள் கையில் கொடுத்தாள்…

‘‘மோகன் எப்படிம்மா இருக்கான்…?’’

மோகனின் பெயரைக் கேட்டதும் வைதேகியின் முகம் மாறிவிட்டது… ‘‘அவனுக்கு என்ன…? வழக்கம் போல இருக்கான்…!’’

‘‘ஏன்மா வேலைக்கு போகலையா…?’’

‘‘அதெல்லாம் போறான், போறான்… ஆனால் ரெண்டு

பேருக்கு அந்த சம்பளம் எப்படி போதும்...?'' வைதேகியின் நோடிப்பை பார்த்து பாட்டி...

''தாரா எந்த ஹாஸ்பிட்டல்ல காட்டுற...? செக்கப் எல்லாம் பண்ணிட்டியா...? என்ன சொன்னாங்க...?'' என்று பேச்சை மாற்றினார்...

அருகிலுள்ள ஒரு பெரிய மருத்துவமனை பெயரைச் சொன்ன தாரா, '' பாட்டி செக்கப் முடிஞ்சுது. எல்லாம் நல்லா இருக்குன்னு சொல்லி இருக்காங்க... இனி அடுத்த மாசம் போகணும்...!''

''எதுக்கும் கவனமாயிரு... கொஞ்ச நாளைக்கு வெளியே எங்கும் போகாதே... பைக்ல போகாத... கனமான பொருள் தூக்காமல், சாதாரண வேலை பாரு...!''

''அதெல்லாம் அம்மா பாத்துப்பாங்க பாட்டி...'' என்று சரவணன் சொல்ல...

''ராஜம் பார்த்துப்பா... எனக்கு தெரியும்... அதுக்காக வேலையே செய்யாமல் இருக்கணும்னு அர்த்தமில்லை. சின்ன, சின்ன, வேலை செய்யலாம் அப்பதான் ஆரோக்கியமா இருக்கும்...''

''அவ எங்கே வேலை செய்றா. விஷயம் தெரிந்ததிலிருந்து

ஒரு வேலை செய்யல...!'' என்று விளையாட்டாக சரவணன் சொல்ல...

''உங்களுக்கு எப்பவும் இப்படித்தான் என்னை ஏதாவது குறை சொல்லிகிட்டே இருக்கணும்...!'' என்று தாரா முகத்தை தூக்கி வைத்துக் கொள்ள...

''தாரா, தப்பு. தம்பி சும்மா உன்னை சீண்டுவதற்காக சொன்னது... இதையெல்லாம் பெருசா எடுக்கக் கூடாதும்மா...!'' என்ற பாட்டி சரவணனிடம்,

''அவளுக்கு இன்னும் கொஞ்சம் பொறுமை வரணும்... சின்ன பொண்ணுதானே... சொன்னா புரிஞ்சுப்பா...'' என்று சமாதானமாக சொல்லிவிட்டு கிளம்பினர்...

வைதேகி ராஜத்திடம் ''ஆத்துக்கு அனுப்பி வைங்க...'' என்று சொல்ல...

''அடுத்த செக்கப் முடிந்து அனுப்பி வைக்கிறேன்...!'' என்று சொல்லி வழியனுப்பி வைத்தாள்...

அடுத்த ஞாயிற்றுக்கிழமை டாக்டர் மகாலட்சுமியை சந்திக்க இருவரும் சென்றனர்... ''வாங்க உட்காருங்க...''

''பொதுவா இந்த மாதிரி கேஸ் எல்லாம் நான் எடுத்துக்க

மாட்டேன்… ஆனா உங்க பாட்டியை பார்த்து அவங்களோட ஆசையை நிறைவேற்றுவதற்காக நான் இதைச் செய்கிறேன்… டெஸ்ட் ட்யூப் பேபினா கொஞ்சம் நிறைய செலவாகும்… ஐந்து, ஆறு லட்சம் ஆகலாம்…'' என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே குறுக்கிட்ட பாட்டி…

''டெஸ்ட் டியூப் பேபி எப்படி உருவாக்குவீர்கள் எனக்கு கொஞ்சம் சொல்லுங்க…!''

''டெஸ்ட் ட்யூப் பேபி என்கிறது, குழந்தை உருவாகிறதில ஒரு ஆணுக்கோ, பெண்ணுக்கோ பிரச்சினை இருந்தது என்றால் அதுக்கு இது ஒரு மாற்று தீர்வு…

இப்ப பெண்ணுக்கு கரு முட்டை வளர்ச்சி குறைவா இருக்கு… அல்லது கருமுட்டை வளர்ச்சியே இல்லை… அல்லது கருமுட்டைக்கு ஒரு குழந்தைக்கு உயிர் கொடுக்க கூடிய சக்தி இல்லை… இந்த மாதிரி குறைகள் சில பேருக்கு வந்து யூட்ரஸ் வந்து பலவீனமாக இருக்கும். ஒரு குழந்தையை தாங்கக்கூடிய சக்தி இருக்காது… இன்னும் சிலருக்கு கர்ப்பப்பையில் பைப்ராய்ட், நீர் கட்டிகள் இருக்கும்…

இந்த மாதிரி பெண்களுக்கு ட்ரீட்மென்ட் பண்ணி அவங்களோட கருமுட்டையை பலமாக்கி அவங்க கிட்ட இருந்து

குறிப்பிட்ட நாளில் அந்த கருமுட்டையை வெளியே எடுத்து, அவங்க கணவரோட விந்தணுவோட சேர்த்து ஒரு டெஸ்ட் டியூபில் போட்டு அதை ஒரே இடத்தில் வைத்திருப்போம்… அதை பத்திரப்படுத்த கூடிய இருப்பிடம், அந்த அறையின் தட்பவெப்ப நிலை, கருப்பை என்ன விதமான ஒரு தட்பவெட்ப நிலையில் இருக்கோ, அதே தட்பவெட்ப நிலைல இருக்கும்… அப்படின்னா தான் அந்த சூழ்நிலை இருந்தால் தான், அந்த ரெண்டு உயிரணுக்களும் சேர்ந்து ஒரு குழந்தை உருவாகும்…

அப்படி உருவாகிற அந்த குழந்தையை, அந்த உயிரணுவை, திருப்பி உடனே தாயோட கர்ப்பப்பை குள்ள வச்சு குழந்தை வளர வழி செய்வோம்… அதுலயும் ஒரே தடவை சிலருக்கு அது சகசஸ் ஆயிடும்… இன்னும் சிலருக்கு ஒரு ரெண்டு தடவ பண்ண வேண்டியிருக்கும்…

“ஏன் அப்படி…?”

“ஆக்ச்சுவலா குழந்தை கர்ப்பப்பை சுவத்துல ஒரு பல்லி ஒட்டுனது மாதிரி ஒட்டிட்டு இருக்கும்… அப்பதான் குழந்தைக்கு உணவு, தாயின் தொப்புள் கொடியிலிருந்து குழந்தையின் தொப்புள் கொடி செல்ல வழி கிடைக்கும்…

அது இயற்கையாக நடக்கும் போது ஈஸியா நடந்திடும்… நம்ம முறையில் கருவை உள்ள வைக்கும் போது ஒரு நாத்த

பிடுங்கி இன்னொரு இடத்தில நடற மாதிரி தான்... அந்த சூழ்நிலையில் இருந்து கர்ப்பபப்பைக்கு வந்து அந்த குழந்தை கர்ப்பபப்பை சுவரில் ஒட்டி தன்னோட உயிர்ப்பை தக்க வைத்துக் கொள்ளும்... அது சில சமயங்களில் ஒரே தடவையில் நடக்கும்... சில சமயம் அது பெயிலியர் ஆவது உண்டு...

அதே மாதிரி ஆணுக்கு விந்தணு குறைபாடு இருக்கும்... அதனுடைய எண்ணிக்கை, நீந்தும் தன்மை இதெல்லாம் ரொம்ப கம்மியா இருந்தா, அவங்களுக்கு குழந்தை பிறக்கும் வாய்ப்பு ரொம்ப கம்மி...

அப்ப அந்த ஆணுக்கு மருந்து மாத்திரை மூலம் அவங்களுடைய வீரியத் தன்மையை அதிகப்படுத்தி விட்டு, அவங்களோட விந்தணுவை கலெக்ட் பண்ணி அதுல இருந்து நல்லதை மட்டும் பிரித்து எடுத்து, அதையும் பெண்ணோட கருமுட்டையும் வைத்து இந்த டெஸ்ட் டியூப் பேபி குழந்தை உருவாக்குவார்கள்...

ஒரு கரு உருவாக்காமல், ஒரு அஞ்சாறு கரு உருவாக்கி அதை பரீஸ் பண்ணி பத்திரப்படுத்தி வைப்பாங்க... முதல் தடவை ஃபெயிலியர் ஆயிடுச்சு, அப்படின்னா, அடுத்த ரெண்டு தடவை இத ட்ரை பணணுங்க... இதுக்கு பணம் அதிகம் செலவாகாது... கருவை உருவாக்கத் தான் நிறைய பணம் செலவாகும்...

இதுல அந்த ஆணுக்கோ பெண்ணுக்கோ எந்தவிதமான ட்ரீட்மெண்டும் பயன் தராது… அப்படிங்கிற ஒரு நிலைமை இருந்ததுனால், அந்தத் தம்பதிகளோட சம்மதம் கேட்டு டோனர் யூஸ் பண்ணுவாங்க…

கருமுட்டைக்கு வேற ஒரு பெண் கிட்டே இருந்து கருமுட்டை எடுத்து உபயோக படுத்துவார்கள் அதேமாதிரி விந்தணுவுக்கும் அப்படிதான்…

இதுல நிறைய பேரு மனைவிக்கு குறைன்னா, அடுத்த பெண்ணோட கருமுட்டை உபயோகப்படுத்த தயங்க மாட்டாங்க. ஆனா அதையே தங்களுக்கு குறைன்னா, வேற ஆளோட விந்தணு உபயோகப்படுத்த சம்மதிக்க மாட்டாங்க… இதுதான் உண்மை நிலைமை…

அப்படியும் சில ஆட்கள், இருக்காங்க அவங்க ரொம்ப ரேர்… இப்ப உங்க பேத்திக்கு கல்யாணமே ஆகலைங்கறீங்க… அதுதான் கொஞ்சம் யோசனையா இருக்கு… சரி பார்க்கிறேன். நல்ல டோனர் ஏற்பாடு பண்ணி விட்டு, நான் உங்களை திருப்பி கூப்பிடுறேன். நீங்க பணம் மட்டும் ரெடி பண்ணி வச்சிக்கோங்க…” என்று கூறி மறுபடி எப்போது வரவேண்டும் என்பதையும் விளக்கமாக சொல்லி அனுப்பி வைத்தாள்.

# அத்தியாயம் 13

வருஷம் ஒரு தடவை லீவு விடும்போது ரங்காவை அழைத்துக்கொண்டு சென்னை சென்று வருவார் பாட்டி… வாசு அவனது உறவினர் ஒருவரின் வீட்டுக்கு சென்று வருவான். அவனையும் முதலில் ரங்காவுடன் அழைத்துக்கொண்டுதான் சென்றார் ஆனால் அதை வைதேகி விரும்பாதது மாதிரி தெரியவே, தனது தூரத்து உறவினர் ஒருவர் வாசுவுக்கும் உறவினராக வேண்டும், அவர் வீட்டில் பத்து நாள் இருக்கட்டும் என்று சொல்லி விட்டு விட்டு சென்று விடுவார்…

வாழ்க்கைச் சக்கரம் வெகு வேகமாக ஓடியது… ரங்காவுக்கு பாட்டியின் சிரமமும், தங்களது வீட்டில் சூழ்நிலையும் புரிய தொடங்கியது… வாசுவும் தனக்கு யாரும் இல்லை என்பதும் பாட்டியின் தயவால்தான் படிக்கிறோம், என்பது புரிந்ததால் இருவருமே படிப்பில் வெகு சுட்டியாக இருந்தனர்.

பாட்டியின் நேர்மை, கனிவு, அன்பு,ஒழுக்கம், பாசம் அத்தனையும் ரங்கா விடமும் வாசு விடவும் அப்படியே படிந்தது…

வாசுவின் கூடவே வளர்ந்ததால் ரங்காவுக்கு எப்போதுமே அவனிடம் ஒரு சகோதர வாஞ்சையும், அதைவிட மேலாக ஒரு நட்பும் இருந்தது…

வருமானத்திற்காக பாட்டி சமையல் வகை பொடிகளும் வத்தல், வடகம், அப்பளம், ஊறுகாய் இவைகளை செய்து விற்று வந்தார்…

அதைப் பார்த்த ரங்கா அடிக்கடி பாட்டியிடம் சொல்வது, “பாட்டி உன்னோட பொடிகளும், ஊறுகாயும் நல்ல சுவை, மணம், தரம் நிறைந்தது… இதை பெரிய அளவில் பண்ணுனா நல்லாவே பணம் சம்பாதிக்கலாம்…!”

“அது எனக்கு தெரியாது… எனக்கு தெரிஞ்ச மனுஷங்க கிட்ட இதை நான் கொடுத்து கொஞ்சம் பணம் சம்பாதித்துக் கொண்டு இருக்கேன்… நீங்க இரண்டு பேரும் பெரியவங்களா வளர்ந்து இத பெருசா பண்ணுங்க…!”

பாட்டி சொன்னது மனதில் ஆழப்பதிந்ததாலோ என்னவோ, வாசு டிகிரி படித்த உடன் இந்த தொழிலை கையில் எடுத்தான்… ரங்காவும் டிகிரி தான் படித்தாள். ஆனால் அவளுக்கு என்னவோ வக்கீல் தொழில் மேல் ஒரு தீராத ஆசை, எனவே அடுத்து வக்கீலுக்கும் படித்தாள்…

“***Give that girl the right shoes and she can conquer the world.***”

***-Marilyn Monroe***

தன்னிடமிருந்த சேமிப்பு முழுவதையும் எடுத்து பாட்டி பேத்தி ரங்காவிடம் கொடுத்துவிட்டார்… “எதுக்கு பாட்டி இவ்வளவு பணம்…?”

“இருக்கட்டும். நிறைய செலவாகும் சொல்லியிருக்காங்க, அப்ப உனக்கு தேவைப்படும் இல்லையா…”

“பாட்டி என்கிட்டயும் கொஞ்சம் இருக்கு. நீங்க இதை பத்திரமாக வைச்சிருங்க. மேலும் நீங்கதானே என்கூட ஹாஸ்பிடல் வர போறீங்க… அங்க செட்டில் பண்ணும் போது தேவையான வாங்கிக்கிறேன்…!”

“டாக்டர் என்னைக்கு வரச் சொல்லி இருக்காங்க…?”

“சைக்கிளுக்கு அடுத்த நாள் வர சொல்லி இருக்காங்க… ஏதோ ஸ்கேன் எடுக்கணுமாம்…”

“இந்த மாதம் போகலாம்னு நினைக்கிறேன். ஆனா அதுக்கு அப்புறம் கொஞ்ச நாள் நீ நிறைய லீவ் போட வேண்டி இருக்கும். இதை பத்தி உங்க சீனியர் கிட்ட பேசினியா…!”

“இல்ல பாட்டி… வேற ஏதாவது ஒரு காரணம் சொல்லி லீவ் வாங்கணும்…!”

“சரி… முதல்ல ஹாஸ்பிடல் போகறதுக்கு சும்மா ஹெல்த்

சேலஞ்ச் சொல்லி லீவ் வாங்கு… அப்புறம் இது கன்பார்ம் ஆயிடுச்சு அப்படின்னா நான் ஒரு வழி சொல்றேன்…!

“அடுத்த சைக்கிள் போகலாம்னு நினைக்கிறேன். அதுக்கு இன்னொரு பதினைந்து நாள் இருக்கு…!”

“ரங்கா கடைசியா ஒருமுறை இது தேவையான்னு யோசிச்சுக்கோ… ஒரு கல்யாணம் பண்ணி குழந்தை பெத்தா அதுக்கு மதிப்பே வேறு… இதுல நீ நிறைய விஷயங்களை தாங்கித்தான் ஆகணும். உனக்குச் அப்போதும் நான் என்னைக்குமே இருப்பேன். ஆனாலும் கூட அதையும் மீறி சில சமயங்கள்ல பிரச்சினை வெடிக்கும்…!”

“பாத்துக்கலாம் பாட்டி…!”

“ரங்கா அலுவலகம் சென்ற பின் பாட்டி டாக்டர் சேது ராமனை அழைத்து விஷயத்தைச் சொன்னாள்…

“ரங்கா பீஸ் பத்தி கவலை படாதே… நான் ஏற்கனவே டாக்டர் கிட்ட சொல்லிட்டேன். பீஸ் உன் கிட்ட வாங்க மாட்டாங்க…!

“இல்ல… அதுக்கு என் பேத்தி சம்மதிக்க மாட்டாள்…!”

“தேவையில்லா ரங்கா… நீ அவ கிட்ட சொல்லாத… எல்லாப்

பணமும் நீ செட்டில் பண்றதா சொல்லி கையில் வாங்கிக்கோ... அவள் ரெஸ்ட் எடுக்கணும்னு டாக்டர் சொன்னாங்கனு சொல்லிட்டு, நீ கட்டிட்டதா சொல்லு... மத்தத நான் பாத்துக்கறேன்...!''

''இல்ல சேது...''

''ப்ளீஸ் பேசாத... இதுநாள் வரைக்கும் நான் ஏதாவது உன்னை கம்பெல் பண்ணி இருக்கேனா...? ஆனா இந்த விஷயத்துல எனக்கும் உனக்கு உதவின ஒரு நன்மை கிடைக்கப்போகுது... இருக்கட்டும்... ஓகே, என்னைக்கி ஹாஸ்பிடல் போறீங்க...?''

''இன்னும் பத்து நாள் கழிச்சு...!''

''முதல் நாள் எனக்கு போன் பண்ணி சொல்லிட்டு நீ போ...!'' என்றவர் மேலும் சில விஷயங்கள் குறித்தும் ரங்காவிடம் பேசிவிட்டு போனை வைத்தார்.

முதல் நாள் பாட்டியையும் துணைக்கு அழைத்துக் கொண்டு ரங்கா மருத்துவமனைக்கு சென்றாள். இவருக்காகவே காத்திருந்த டாக்டர் மகாலட்சுமி அவளை பரிசோதனை செய்து ஸ்கேன் எடுத்து பார்த்து விட்டு சில ஊசி, மருந்துகள் எழுதித் தந்தார்.

ஊசி எத்தனை நாட்கள், மருந்துகள் எத்தனை நாட்கள் என்று விளக்கமாக குறிப்பிட்டு அடுத்து அவள் தன்னை சந்திக்க

வேண்டிய நாளையும் குறிப்பிட்டு அனுப்பி வைத்தார்.

“ஊசி இங்கே வந்து தான் போடணுமா மேடம்…?”

“ஆமா இங்க வந்து தான் போடணும்…”

“இல்லை. நான் வேலைக்கு போகணும்…”

“அது ஒண்ணும் பிரச்சனை இல்ல நீங்க வாங்க, நான் உங்களை உடனே பார்த்து அனுப்பி வைக்கும்படி சிஸ்டர் கிட்ட சொல்லி வைக்கிறேன்…!”

“ஓகே… மேடம். தேங்க்ஸ்…!”

தொடர்ந்து ஹார்மோன் ஊசி, டேப்லட் அடுத்த பத்தாவது நாளில் இருந்து மூன்று நாட்கள் தொடர்ந்து ஸ்கேன் என்று வரிசைக்கிரமமாக பரிசோதனை செய்து குறிப்பிட்ட நாளில் கரு வளர்ச்சி தேவையான அளவு வந்ததும் டாக்டர் அவளிடம், “நாளைக்கு உங்களுக்கு ஒரு சின்ன ஆப்ரேஷன் மாதிரி, செய்யணும்… அதிகாலையில் வெறும் வயிற்றில் வந்துடுங்க…!”

மறுநாள் அதிகாலை 6 மணிக்கே வந்துவிட மயக்க மருந்து கொடுத்து அவளிடமிருந்து கருமுட்டை வெளியே எடுத்து பத்திரப்படுத்தி வைக்கப்பட்டது…

அன்றுமுழுவதும் முழுவதும் ஹாஸ்பிடலில் ரெஸ்ட் எடுத்து

விட்டு மாலை தான் வீட்டுக்கு அனுப்பி வைத்தனர்…

“அடுத்து எப்போ வரணும்ன்னு நீங்க போன் பண்ணி கேட்டுக்கோங்க…”என்று டாக்டர் சொல்லி விட பதினைந்து நாட்கள் கழித்து அடுத்த சைக்கிள் ஆரம்பித்ததும் அவள் போன் பண்ணி கேட்க… மறுநாள் நேரடியாக ஹாஸ்பிடல் அவளை வரச் சொன்னார்

“ரங்கா ப்ராசெஸ் சக்சஸ் ஆயிடுச்சு. இந்த மாதம் அதே மாதிரி சைக்கிள் வந்து பதினைந்து நாள் கழித்து உங்க கருப்பைக்குள் இந்த எம்ப்ரியோஸ் வச்சுடுவாங்க…!”

நாங்க எட்டு கருமுட்டை வைத்தோம். அதில் நாலு எம்பிரியோஸ் பார்ம் ஆகி இருக்கு… அதுல இரண்டு பரீஸ் பண்ணி வைத்து விட்டு, மீதம் ரெண்டு உங்க யூட்ரஸ்ல வைத்திடுவோம்… ஆனா இதுல ஒரு சின்னப் பிரச்சினை இருக்கு…”

“என்ன டாக்டர்…?”

நைண்டி பர்சன்ட் இரட்டை குழந்தைகள் தான் பிறக்கும்… உங்களுக்கு ஓகேவா…?

“அதை மாற்ற வழி இல்லையா…?

“ஒவ்வொரு எம்ப்ரியோஸ் வைக்கும்போது சக்சஸ் ஆகலைன்னா திரும்ப திரும்ப ட்ரை பண்ண வேண்டும்… அது வேஸ்ட்… அதனால தான் இரண்டு எம்ப்ரியோஸ் வைக்கிறது… ஒன்று பெயிலியர் ஆனாலும் இன்னொன்னு சக்சஸ் ஆகட்டும்னு…”

“ஓகே டாக்டர்…” என்று சொன்னதும், அடுத்த பதினைந்தாவது நாள் அந்த எம்ப்ரியோஸ் அவளது கருப்பைக்குள் வைக்கப்பட்டது… அதற்குப் பிறகு கவனிக்க வேண்டிய விஷயங்கள், மருந்துகள் மாத்திரைகள் கொடுத்து, அவளது சைக்கிள் கணக்கு பண்ணி வர வேண்டிய நாள் சொல்லி அனுப்பி வைத்தனர். இந்த பதினைந்து நாட்களும் கண்டிப்பாக ரெஸ்டில் இருக்கவேண்டும் என்றும் அறிவுறுத்தி அனுப்பினார்…

“பாட்டி பதினஞ்சு நாள் ஆபீஸ்ல எப்படி லீவு கிடைக்கும்.?

“போட்டு தான் ஆகணும். அதை பத்தி மேல பேசாத…”

வீட்டில் பேத்தியை எந்த வேலையும் செய்ய விடாமல் பாட்டி அவளைப் பார்த்துக் கொண்டார்… நேரா நேரத்துக்கு சாப்பாடு ஜூஸ் தள்ளாத வயதிலும் பாட்டி கவனித்து கொண்டது பார்த்து…

“பாட்டி எதுக்கு சிரமப்படறீங்க…? என்ன கூப்பிட்டா நான் தான் வருவேனே…!”

“இன்னும் பத்து மாசத்துக்கு நான் என்ன சொல்றேனோ அத மட்டும் நீ கேளு…!” என்றவர் அவளை பேசவே விடவில்லை…

பொழுது போகவில்லை என்று சொன்ன பேத்தியிடம் உட்கார்ந்து பல கதைகள் பேசி அவளது உற்சாகம் குறையாமல் பார்த்துக் கொண்டார்.

அப்படி இருந்தும் சில சமயங்களில் அவரது அலுவலக வேலையை வீட்டில் வைத்தே செய்தாள்…

சரவணன் அவளுக்கு உடம்பு சரியில்லையா என்று போன் பண்ணி கேட்டதற்கு, “நான்தான் அவளை லீவ் போட சொல்லி இருக்கேன்…” என்று பாட்டி அவனுக்கு பதில் சொல்லிவிட்டார்.

டாக்டர் வரச் சொன்ன தேதிக்கு இருவரும் கிளம்பி ஹாஸ்பிடல் சென்றனர்…

டாக்டர் மகாலஷ்மி “இன்னைக்கு தான் நீங்க வர வேண்டிய நாளா…? ஓகே… ஒரு பிளட் டெஸ்ட் எடுத்துட்டு வாங்க…” என்று எழுதிக் கொடுத்தார்.

பிளாட் எடுத்து டெஸ்டுக்கு கொடுத்து விட்டு வந்து பாட்டியும், பேத்தியும் காத்துக்கொண்டு இருந்தனர்… இருவருக்குமே அது ஒரு புதுவிதமான அனுபவமாக இருந்தது.

ரங்காவை பொருத்தவரை அவளுக்கு ரிசல்ட் என்னவாகும் என்ற எதிர்பார்ப்பு மேலோங்கியிருந்தது… ஆனால் பாட்டிக்கு ரிசல்ட் தாண்டி 'இனி ரங்கா எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் எந்த மாதிரி விளைவுகளை ஏற்படுத்தும் என்ற பயமும் சேர்ந்து இருந்தது…'

சரியாக இரண்டு மணி நேரம் கழித்து ரிசல்ட் வந்தது… நர்ஸ் வந்து அவர்கள் இருவரையும் டாக்டர் அழைப்பதாகக் கூற… இருவரும் உள்ளே சென்றனர்.

"வாங்க உக்காருங்க…'" என்ற டாக்டர் ரிப்போர்ட் எடுத்து படித்து பார்த்துவிட்டு "கங்கிராஜுலேசன்ஸ் ரங்கா… யூ ஆர் கன்சீவ்ட்" என்றார் மகிழ்ச்சியாக…

ரங்காவுக்கும், பாட்டிக்கும் நம்பவே முடியவில்ல. "உண்மையாவா…" என்று பாட்டி டாக்டரிடம் கேட்க…

"உண்மையாக தான் சொல்கிறேன்… சக்சஸ் ஆயிடுச்சு"

எந்த மாதிரி உணர்வு என்று ரங்காவுக்கு பிரித்தறிய முடியவில்லை… சந்தோஷத்தை கூட மிகச் சிறிய அளவுகோலிலேயே அனுபவித்தவளுக்கு, டாக்டர் சொன்ன வார்த்தை வானளாவிய மகிழ்ச்சியை கொடுத்தது…

ஆனால் அதை அவளுக்கு பூரணமாக அனுபவிக்க

தெரியவில்லை… ஒரு சந்தோஷத்தை மனசுக்குள்ளே பூட்டி வைத்து அனுபவிப்பதை விட தனக்கு நெருக்கமானவர்களிடம் சொல்லி அனுபவிப்பது என்பது… அந்த சந்தோஷம் பல மடங்காக தெரியும்…

ஆனால் சொல்ல வேண்டும் என்று நினைக்கும் பாட்டிக்கு ஏற்கனவே விஷயம் தெரிந்து விட்டது… மற்றபடி இந்த விஷயத்தை யாரிடமும் சொல்லி சந்தோஷப்பட…?

சந்தோஷமான விஷயம் தான்… ஆனால் மற்றவர் பார்வையில் இது சந்தோஷமான நிகழ்வா? அவளுக்கு புரியவில்லை…

பாட்டியுமே ஒருவித சந்தோஷம் கலந்த அதிர்ச்சியில் இருந்தார்… அதனால் அவரும் எதுவும் பேசிக்க இல்லை…

‘‘இனி அடுத்து எப்ப வரணும்…? வேற என்ன மாத்திரை சாப்பிடணும்…? பாட்டி தான் டாக்டரிடம் கேட்டார்…

அவர் எழுதிக் கொடுத்து எல்லாவற்றையும் வாங்கிக் கொண்டு அங்கிருந்து கிளம்பினர்…

வீடு வரும் வரை பாட்டியும் பேத்தியும் பேசிக்கொள்ளவே இல்லை…

உள்ளே நுழைந்ததும் பாட்டி என்று அக்கா ஆரம்பிக்க,

முதல்ல சாப்பிடு அதுக்கு அப்புறம் பேசலாம்…!'' என்று அவள் வாயை அடைத்து அவனை சாப்பிட வைத்தார்.

''நான் எப்படியும் வேலைக்கு போகணும் பாட்டி…''

''அதுக்கு ஏதாவது வழி பண்ணலாம்…'' பாட்டி சொல்லி கொண்டு இருக்கும் போது வாசலில் யாரோ காலிங் பெல் அடிக்கும் சத்தம் கேட்டது…

பாட்டி சென்று கதவை திறக்க, ''நான் காலைல ஆபீஸ் போகும் போது வீட்டுக்கு வந்தேன், நீங்க ரெண்டு பேரும் இல்லை… எங்க போய்ட்டீங்க…?''

''உள்ள வா முதல்ல… நானே உனக்கு போன் பண்ணனும்னு நெனச்சேன்…'' என்று கூறி அவன் உள்ளே வந்ததும் கதவை தாழ்ப்பாள் போட்டு விட்டு பாட்டியும் உள்ளே வந்தார்.

''ரங்கா எங்க பாட்டி…?

''சாப்பிட்டுட்டு இருக்கா… நீயும் வா சாப்பிடு…'' பாட்டி கிச்சனுக்குள் சென்று அடுப்பை கவனிக்க…

சாப்பிட்டுக் கொண்டு இருந்த ரங்கா இவனைப் பார்த்ததும்,:. ''வா வாசு, சாப்பிடு…'' என்றாள்.

பதிலே சொல்லாமல் ஒருவித கோபத்தோடு ஒரு சேரில்

அமர்ந்து ரங்கா “பாட்டி நான் சாப்பிடுட்டேன்...” எனக்கு எதுவும் வேண்டாம்...” என்று உள்ளே பார்த்துக் குரல் கொடுக்க...

“ஒஹ்... என்கிட்ட எதுவும் பேச மாட்டியா...? நான் கேட்டதுக்கு பாட்டிக்கு பதில் சொல்ற...?”

“பாட்டி என்கிட்ட யாரும் பேச வேண்டாம்ன்னு சொல்லுங்க...”

“ஏன்டா...?” என்றவாரே பாட்டியும் வந்து உட்கார்ந்து கொள்ள...

“நியாயமா நான் உங்க ரெண்டு பேர் கிட்டேயும் பேசக் கூடாது. ஆனால் பாட்டி பெரியவங்க... அந்த ஒரு காரணத்துக்காக நான் பேசுறேன்...!

பாட்டி நீங்க என்ன வளர்க்க ஆரம்பிச்சதுல இருந்து இன்னைக்கு வரைக்கும் ஏதாவது ஒரு விஷயம் எனக்கு தெரியாம செஞ்சி இருக்கீங்களா...?

ஆனால் இந்தப் பதினைந்து நாளும் இரண்டு பேருமே ஏதோ ஒரு முக்கிய காரணத்தை என்கிட்ட மறைச்சிட்டு இருக்கீங்க...?’ என்று கோபப்பட... அவன் எதைப் பற்றிக் கேட்கிறான் என்று பாட்டிக்கும் ரங்காவுக்கும் நன்கு புரிந்தது...

“தப்புதான் வாசு… ஆனா இந்த விஷயத்தை நீ எப்படி எடுப்பேன்னு எங்களுக்கு தெரியல. அதனாலேயே குழம்பி குழம்பி உன்கிட்ட சொல்ல முடியல…

இன்னைக்கி எப்படியும் சொல்லிடணும்னு முடிவு பண்ணி இருந்தோம்… நீயே வந்துட்ட… வா ஹாலில் போய் உட்கார்ந்து பேசலாம்… ரங்கா நீ வேணா போய் ரெஸ்ட் எடு…!”

ரங்கா பெட்ரூமுக்குள் போய்விட பாட்டி ஹாலில் வைத்து நடந்த அனைத்தையும் சொன்னார்… கேட்ட வாசு அதிர்ச்சியில் உறைந்து விட்டான்.

சற்று நேரம் இருவரும் ஒன்றும் பேசவில்லை… அந்த அதிர்ச்சியில் இருந்து வெளிவந்து முதலில் மௌனத்தை கலைத்தது பாட்டி தான்.

“என்ன வாசு…? பதிலே பேசல…”

“பாட்டி என்ன இது…? அவள்தான் புரியாமல் சொன்னானா நீங்களும் அதுக்கு சம்மதம் சொல்வீங்களா…?”

“நான் எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன்…? அவ கேட்கல… இன்றைய தலைமுறை அப்படித் தானே இருக்கீங்க…?”

“பாட்டி சும்மா சொல்லாதீங்க… ஒன்றிரண்டு பேர் அப்படி

இருக்காங்க… எல்லாரும் அப்படி இருக்கிறது இல்லை…’’

‘‘எதுவுமே முதல்ல சிறிய எண்ணிக்கையில் ஆரம்பிக்கும்… அப்புறம் அதுவே வழக்கமா மாறும்,, உதாரணம் கலப்பு திருமணம் ஒரு ஐம்பது வருஷத்துக்கு முன்னாடி ரொம்ப, ரொம்ப தப்பா இருந்துச்சு… இப்ப சர்வ சாதாரணமா மாறிட்டுது. அது மாதிரிதான்…

இன்னைக்கு ரங்கா எடுத்து இருக்கிற முடிவு வருங்கால சமுதாயத்திற்கு ஒரு எச்சரிக்கை கொடுக்குற முடிவு… ஆண்கள் மேல நம்பிக்கை இல்லை… ‘அடுத்த தலைமுறையை உருவாக்குவதற்கு உன் துணை இல்லாமல் என்னால் செய்ய முடியும்…’ அப்படின்னு ஒரு பொண்ணு நிரூபிக்கிறான்னா அது, ஆண்களுக்கு ஒரு எச்சரிக்கை தான்…’’

‘‘ஏன் அப்படி நினைக்கிறீங்க…? அதே ஆண்களும் அப்படி நினைக்கலாம் இல்லையா…?’’

‘‘நினைக்கலாம்… ஆனால் ஒரு ஆணால் தனியா குழந்தையை வளர்க்க முடியாது… ஆனால் ஒரு பெண்ணால குழந்தையை தனியா வளர்க்க முடியும்… பொருளாதாரம் மட்டும்தான் பெண்ணுக்கு கடினம்… இன்னைக்கி பொருளாதாரத்தில் பெண்கள் சுதந்திரமாக இருக்காங்க… அப்படி

பார்த்தா ஆண் தான் இன்னைக்கு டிபெண்டேன்ட்... பெண்ணில்லை... அதுதான் உண்மை...! பாட்டியின் வார்த்தைகள் சுளீரென சாட்டையடி போல் விழுந்தது...

பாட்டி பேசியதில் உள்ள உண்மை வாசுவை தாக்கிற்று... ஒரு ஆணாக வாசுவால் ரங்கா செய்த காரியத்தை ஒத்துக்கொள்ள முடியவில்லை... ‘ஆனால் ஒரு நண்பனாக தனது தோழியின் துயர் தீர்க்க உதவி செய்வது’ என்று முடிவெடுத்தான். இதைப் பற்றி பேசி ஆழ் மனதை நோகடிக்கக் கூடாது என்பது அவனது உறுதியான முடிவாக இருந்தது...

“பாட்டி நான் ரங்காவை பார்க்கட்டுமா...?”

“போய் பாரு...” எஎன்று பாட்டி சொன்னதும் அவளது அறைக்கதவைத் தட்டிவிட்டு உள்ளே நுழைந்தான்...

கட்டிலில் படுத்து இருந்தாலும் தூங்காமல் ஏதேதோ நினைவுகளில் உழன்றுகொண்டிருந்த ரங்கா அறை கதவு தட்டப்படும் சத்தம் கேட்டு வாசு தான் என்று கணித்து “கதவு திறந்துதான் இருக்கு உள்ள வா வாசு...” என்று அழைத்தாள்.

உள்ளே சென்றவன் அவளுக்கு அருகில் இருந்த சேரில் உட்கார்ந்து கொண்டு, “என்னை நீ உன் பிரண்டாக நினைக்கல அப்படித்தானே...!” என்று வருத்தத்துடன் சொன்னதும்...

“ஐ அம் சாரி வாசு… நான் உன்கிட்ட இப்படி இந்த விஷயத்தை சொல்றதுன்னு தயங்கிட்டேண்டா…!

“ஏன் ரங்கா இந்த மாதிரி ஒரு முடிவு எடுத்தே?”

“நான் கல்யாணமே பண்ணிக்க மாட்டேன்னு தான் சொன்னேன்… பாட்டி தான் எனக்கு பிறகு உன் வாழ்க்கை யில் உனக்கு ஒரு பிடிப்பு வேண்டும். கல்யாணம் பண்ணி க்கோன்னு வற்புறுத்தினாங்க… வாழ்க்கையில் பிடிப்பு வேண்டும்கிறதுக்காக கல்யாணம் தான் பண்ணிக்கணுமா என்ன…?

எனக்கு ஒரு குழந்தை இருந்தாலும் பிடிப்பு வரும்னு தோணுச்சு… சிம்பிள்… இப்ப மெடிக்கல் வேற அதை சுலபமாக்கிடுச்சு…” அவள் பேச, பேச அவளது மன நிலை நன்கு புரிந்தது…

ஏற்கனவே அவள் கூடவே வளர்ந்தவன் என்பதால், அவனுக்கு ஆண்கள் மீது ரங்கா வைத்திருக்கும் அபிப்ராயம் பற்றி நன்கு தெரியும். அதன் காரணமாகவே அவள் கல்யாணத்தை விரும்பவில்லை என்பதும், ஒரு ஆணின் துணையே தேவையில்லை என்ற அவளது மனோபாவமும் புரிந்தவன் அவன்.

அதனால் “சரி விடு… இனிமே நடக்கறதை பத்தி யோசிப்போம்… ஆபீஸ் என்னைக்கு போகப் போறே?”

“அது விஷயமாக தான் என்ன பண்றதுன்னு யோசிச்சிட்டு இருக்கேன்…!”

“ஏன் ஆபீஸ் போகணும் தானே…?

“போகணும்… ஆனா பாட்டி டூவீலர் யூஸ் பண்ணக் கூடாது ன்னு சொல்றாங்க… கார்ல போங்கிறா… டெய்லி கேப்ஸ் பிடிச்சா அதுக்கு ஒரு அமௌன்ட் ஆகும்…!”

“அதெல்லாம் வேண்டாம். இனிமே நான் உன்னை காலைல கொண்டு போய் விட்டு, ஈவினிங் கூட்டிட்டு வரேன்…!”

“உன்னோட வேலை கெட்டு போயிருமே…!”

“அதெல்லாம் பார்த்துக்கலாம். நான் சொல்றதை நீ கேளு…! பாட்டி கிட்ட நான் சொல்லிடறேன்…”

“தேங்க்ஸ் வாசு…”

“தேங்க்ஸ் எல்லாம் வேண்டாம். இனி என்ன பண்றது னாலும் என் கிட்ட சொல்லிட்டு பண்ணு…! என்றவன் பாட்டியிடம் செனறு தானே ரங்காவை ஆபீஸ் கொண்டுபோய் விட்டு கூட்டி வருவதாக வாக்களித்தான்…

“வாசு… எதுக்கும் கீர்த்தி கிட்ட மட்டும் நடந்தது சொல்லிடு.

வேற யார்கிட்டயும் சொல்ல வேண்டாம் அப்படின்னு சொல்லி வை…!''

‘‘சரி… நாளைக்கு காலையில நான் சீக்கிரமே இங்க வரேன்…''என்றவன் விடை பெற்று சென்று விட்டான்…

அவன் சென்றதும் கதவை தாளிட்டு விட்டு வந்த பாட்டி, ரங்காவிடம் ‘‘அங்க போனாலும் சில விஷயங்கள் கவனமாய் இருந்துக்கோ…!'' என்று அவள் எப்படி, எப்படி இருக்க வேண்டும் என்பதை பற்றி சொல்லிக்கொண்டே இருந்தார்…

‘‘இப்போ உனக்குள்ள இருக்கிறது ஒரு உயிர்… அதை நல்லபடியா வெளியில கொண்டு வரணும்… அது மட்டும் தான் உன்னுடைய எண்ணமா இருக்கணும்… தேவையில்லாத டென்ஷன் பரபரப்பு எதுவும் வேண்டாம்…!'' என்று ஒரு குழந்தைக்கு சொல்வது போல் சொல்லவும்…

‘‘என்ன பாட்டி போர் அடிக்குறீங்க…?''

‘‘இப்ப இப்படி தான் சொல்லுவே. இன்னும் ஒரு அஞ்சு மாசம் கழிச்சு நீ என்ன சொல்றேன்னு நான் பார்க்கிறேன்…! என்றவர் ஒரு பெருமூச்சுடன் உள்ளே சென்று விட்டார்.

மறுநாளிலிருந்து ரங்கா வாசுவுடன் செல்ல ஆரம்பித்தாள்…

வாசுவும், கீர்த்தியும் இவளுக்காக சற்று சீக்கிரமே கிளம்பி வந்து இவனை அழைத்துக் கொண்டு செல்வர்…

வாசு மூலம் கீர்த்திக்கும் விஷயம் போயிருக்கும் என்று ரங்காவுக்கு தெரிந்தது. அவள் ஏதாவது கேட்டால் என்ன பதில் சொல்வது என்று யோசித்தாள். அதற்கு நேர்மாறாக கீர்த்தி ஒரு வார்த்தை கூட அவளிடம் கேட்கவில்லை.

முதல் நாள் ரங்கா சென்றதும், ரங்கபாஷ்யம், ‘‘என்ன ரங்கா உடம்பு சரியில்லைன்னு லீவ் போட்டு இருக்க…! என்ன பிரச்சினை? சொல்லலாம்னா சொல்லு…!’’

ஒண்ணுமில்ல… லேடிஸ் ப்ராப்ளம் தான் சார்… இப்ப ஓகே ஆயிடுச்சு…

‘‘நான் கூட நீ அந்த கேஸ்ல வின் பண்ணியதை பார்த்து தனியா ஆபீஸ் திறந்துட்டியோன்னு நினைச்சேன்…!

‘‘அப்படி தனியா போற ஐடியா எல்லாம் இல்ல சார்…! ஒருவேளை போனா சொல்லிட்டு தான் போவேன்…’’

‘‘அதுதான் ரங்கா…!’’ என்று அவர் சிரிக்கவும்…

‘‘ஏன் அப்படி சொன்னீங்க…?’’

‘‘உன்னை பத்தி எனக்கு தெரியாதா… நீ எதுனாலும்

சொல்லிட்டு தாம்மா செய்வே… எனக்கு உன்கிட்ட பிடிச்சது அந்த நேர்மை தான்…! என்று அவர் பேசிக் கொண்டிருக்கும் போதே…

“ஹாய் ரங்கா…” என்று உள்ளே நுழைந்தான் அவரது மகன்…

“எப்படி இருக்கீங்க…? எப்ப வந்தீங்க…?”

“வந்து ரெண்டு நாளாச்சு. உங்கள தான் ஆபீஸ்ல பார்க்க முடியல…!”

அதற்கு பதில் சொல்லாமல் சிரித்து மழுப்பினாள் ரங்கா… ஓகே சார், நேரம் ஆயிடுச்சு நான் போய் வேலையைப் பார்க்கிறேன்…!” என்று சொல்லிவிட்டு தனது இடத்தில் போய் உட்கார்ந்து, அவளுக்கு புதிதாக என்ன கேஸ் வந்திருக்கிறது என்று பார்க்க ஆரம்பித்தாள்…

ரங்க பாஷ்யமும் வெளியே சென்று விடவே, அவள் அருகில் வந்து நின்ற விஷ்வா “எக்ஸ்க்யூஸ் மீ ரங்கா எனக்கு கொஞ்சம் உங்க கிட்ட பேசணும்… ஈவினிங் கொஞ்சம் வெளியில போய் பேசலாமா…!”

“என்ன விஷயம் இங்கே சொல்லுங்களேன்…!”

“இல்லை ரங்கா… பர்சனலா பேச வேண்டிய விஷயம் இது… அவன் சொல்ல வருவதை ஓரளவு யூகித்தாள்…

‘இது ஏதடா புது வம்பா இருக்கு… கூட வேலை பார்க்கும் நபர் என்றாலோ, அல்லது தெரிந்த நபர் என்றாலோ கட் அண்ட் ரைட்டாக சொல்லிவிடலாம்… ஆனால் இது சீனியரின் பையன்… எப்படி தவிர்ப்பது’ என்று தெரியாமல் தலையை மட்டும் ஆட்டி வைத்தாள்.

ஈவினிங் விஷ்வா வரும்போது ரங்கா சென்று விட்டாள்… சரவணன் இடம் “ரங்கா எங்கே…?”

“அவங்க அப்போவே போய்ட்டாங்க…!”

“அப்படியா…! ‘நான் பேசணும் சொல்லி இருந்தேன் மறந்துட்டாங்க போல இருக்கு…’ தனக்குள் செல்வது போல் அவன் சத்தமாகவே சொல்லிவிட்டுப் போக…

சரவணனுக்கு சற்று புதிராக இருந்தது… ஏனெனில் ஈவ்னிங் வழக்கத்திற்கு முன்பாகவே, கேப்ஸ் புக் பண்ணி சென்று விட்டாள்… அவள் சீக்கிரம் கிளம்பவும் சரவணன் கூட அவளிடம்

“வாசு இன்னும் வரலையே அதுக்குள்ள என்ன அவசரம்…?”

“இல்ல கொஞ்சம் வேலை இருக்கு என்று சொல்லிவிட்டு கிளம்பி விட்டாள்… ‘ஒருவேளை இவனை தவிர்க்கவோ’ அவன் மனதிற்குள் ஓடியதை தடுக்க முயலவில்லை.

மறுநாள் காலை வந்தவுடனே ஏதோ வேலை இருப்பது போல் அங்கு வந்த விஷ்வா “இன்னைக்கு ஈவினிங் தான் உங்களை தேடி வந்தேன்…அதுக்குள்ள போயிட்டீங்க…!”

“ஓஹ் சாரி… பர்ஸ்ட், எனக்கு நினைவில்லை… அதுக்கப்புறம் பாட்டியும் கொஞ்சம் அவசரமாக வரச் சொன்னாங்க அதனால போயிட்டேன்…!” அவள் சமாளித்ததை சரவணன் பார்த்துக்கொண்டே இருந்தான்.

“ஓகே… இன்னைக்கு ஈவினிங்…!”

“பாக்கலாம்… எனக்கு கொஞ்சம் வேலை இருக்கு வெளியில போக வேண்டியிருக்கும்,…!” முடிந்தவரை தவிர்க்க நினைத்தாள்.

“இல்ல… இன்னைக்கு கண்டிப்பா ஒரு ஆப் அன் அவர் ஒதுக்குங்கள்… ஏன்னா எனக்கு நைட் பஸ்… நான் ஊருக்கு போய் ஆகணும்…!” என்று சொல்லிவிட்டு விஷ்வா சென்றுவிட, தலையில் கை வைத்து சற்று நேரம் அப்படியே அமர்ந்து விட்டாள்.

“என்ன ரங்கா…? என்ன விஷயம்…? எதுவும் ஹெல்ப் வேண்டுமா…?” என்று சரவணன் கேட்க…

ஒரு பெருமூச்சுடன் தலையசைத்தவள், தனது வேலையை

பார்க்க ஆரம்பித்தாள்…

ஆனால் அன்று அதிர்ஷ்டவசமாக கேஸ் விஷயமாக வெளியே செல்ல வேண்டி இருந்ததால், வாடகை காரில் சென்று, கட்சிக்காரரை பார்த்துவிட்டு அப்படியே வீட்டுக்கும் சென்று விட்டாள்.

அவளைத் தேடி வந்த விஷ்வாவிடம் சரவணன், "ரங்கா கேஸ் விஷயமாக வெளியே சென்று விட்டாள். அப்பா தான் அனுப்பினார்கள்… எதுவும் சொல்லணுமா? என்கிட்ட சொல்லிட்டு போங்க. நான் வேணா சொல்லட்டுமா…!" என்று கேட்க…

அவசரமாக "இல்லை வேண்டாம் நானே பார்த்துக் கொள்கிறேன்…!" என்றவன் உள்ளே சென்று விட்டான்.

நாட்கள் விரைந்து கொண்டிருந்தது… ஐம்பதாவது நாள் செக்கப்புக்கு வரச்சொல்லி இருந்தனர்… கடந்த நான்கு நாட்களாகவே ரங்காவிற்கு காலை எழுந்தவுடன் தலைசுற்றலும் சிறிது வாமிட்டும் இருந்தது…

ஓரளவு தனது உடல்நிலையில் மாற்றம் ஏற்படும் என்று தெரிந்ததால், அதற்கு ஏற்றபடி சிறிது நேரம் ரெஸ்ட் எடுத்துவிட்டு அதன் பின்னர் கிளம்பி ஆபீஸ் சென்று கொண்டு இருந்தாள்…

ஆனால் அன்று காலை தலைச்சுற்றல் அதிகமாக இருக்கவே

எழுந்திருக்காமல் படுத்து இருந்தாள்… அவள் எழுந்து வராமல் இருக்கவும் உள்ளே வந்த பாட்டி ‘‘‘‘இன்னைக்கு ஹாஸ்பிடல் போகணும்… லீவ் சொல்லிட்டியா…?’’

‘‘ம்ம்…’’ என்றவள் மேலும் சோர்ந்துவிட…

‘‘என்ன ரங்கா டயர்டா இருக்கா.?

‘‘ஆமா பாட்டி நாலஞ்சு நாளா தலை சுற்றல் இருந்தது. இன்னைக்கு ரொம்ப இருக்கு… ரெண்டு மூணு தடவை வாமிட் எடுத்துட்டேன்… எழும்ப முடியல…!

‘‘அப்படித்தான் இருக்கும்… பேசாம படு… நான் ஏதாவது பால் கலந்து எடுத்துட்டு வரேன்…’’ என்று பால் எடுத்து வந்து கொடுத்து குடிக்க வைத்தாள்.

ஒருவழியாய் கிளம்பி ஹாஸ்பிட்டல் வந்தனர். வாசு பிடிவாதமாக ‘நானும் வருவேன்…’ என்று கூறி உடன் வந்தான்.

‘‘டேய் உனக்கு ஆபிஸ்ல நிறைய வேலை இருக்கும்…!’’

‘‘பரவாயில்லை கீர்த்தி பார்த்துப்பா… அவகிட்ட நான் சொல்லித்தான் வச்சிருக்கேன்’’

டாக்டர் மகாலட்சுமி ஸ்கேன் செய்யும்போது பாட்டியையும் உள்ளே அழைத்து குழந்தைகளை காட்டினார்.

இந்த பாருங்க… வட்டமா ஒரு சின்ன உருவம் தெரியுது இல்லையா… அதுதான்… பாட்டிக்கு பார்த்துவிட்டு மிகவும் சந்தோஷமாக இருந்தது…

டாக்டர் “இன்னொரு சந்தோஷமான விஷயம்… டிவின்ஸ்…” என்றார்.

ரங்காவும் பாட்டியும் சந்தோச அதிர்ச்சி அடைந்தனர்.

“டாக்டர் எப்படி இப்படி…?”

“அது அப்படி தான். நாம சக்ஸஸ் ஆகணும்னு இரண்டு எம்பிரியோஸ் உள்ள வைத்தோம். அதனால ட்வின்ஸ்…”

“இதனால் பிரச்சினை ஒன்றும் வராதே…?”

“அதெல்லாம் ஒரு பிரச்சனையும் இல்லை. நார்மலாக நாம் கன்சீவ் ஆனால் எப்படி இருக்கணுமோ அப்படி இருந்தால் போதும்…|

“அப்படி இல்லை… இதனால் அம்மாவுக்கு ஏதும் பிரச்சினை வருமான்னு கேட்டேன்…”

அதெல்லாம் இல்லை. என்ன வயிறு கொஞ்சம் பெரிசா தெரியும்… அவ்வளவு தான்…” டாக்டரிடம் எல்லாவித விபரங்களையும் கேட்டு சத்து மாத்திரை வாங்கி கொண்டு வீடு

வந்து சேர்ந்தனர்…

ட்வின்ஸ் என்று கேள்வி பட்டதும் வாசு மிகவும் மகிழ்ச்சி அடைந்தான். ‘‘ரங்கா நீ இனி வேலைக்கு போக வேண்டாம்… வீட்டில் ரெஸ்ட் எடு…’’

‘‘அப்புறம்…?’’

‘‘பாப்பாவை நல்லா கவனித்து கொள்…!’’

‘‘ம்… சொல்லு…’’

‘‘நல்ல முறையில் டெலிவரி ஆகட்டும்… அப்புறம் நாங்களும் சேர்ந்து பாப்பா கவனிச்சுப்போம்…!’’

‘‘எல்லாம் சரி… பூவாக்கு என்ன பண்றது…?’’

‘‘ஏன்…? அதுக்கென்ன…? நான் இல்லையா? உங்களை பார்த்துக்க மாட்டேனா…?’’

‘‘நீ பார்த்துப்பே… ஆனால் என்னால் சும்மா இருக்க முடியாது… ப்ளீஸ் எனக்கு உதவி செய்றதா நினைத்து என்னை பலவீனமாக்காதே…’’ என்றவளை சற்று கோபத்துடன் பார்த்தான் வாசு…

# அத்தியாயம் 14

தாராவுக்கும், மோகனுக்கும் படிப்பு அவ்வளவாக ஏறவில்லை… பாட்டி ஊருக்கு வரும்போது எவ்வளவோ சொல்லியும், தாரா பிளஸ் டூ உடன் படிப்பை நிறுத்தி விட்டாள்… ‘‘வைதேகி பெண் குழந்தைகளுக்கு படிப்பு அவசியம்… ஏதாவது கைத்தொழில் ஆவது கத்துக்க சொல்லு…’ என்று சொல்லியும் அவள் அதை சட்டை பண்ணவே இல்லை…

மோகனுக்கு படிப்பு வரவில்லையே தவிர, மற்ற எல்லா விதமான சேட்டைகளும் இருந்தது… கேசவனே வீட்டை கவனிக்காததால் பிள்ளைகளுக்கு அப்பா மேல் ஒரு மதிப்பு இல்லை… ஆண் குழந்தை என்று மோகனுக்கு வைதேகி அதிக அளவு செல்லத்தை கொடுக்க அவன் சிறு வயதிலேயே ஊரைச் சுற்ற பழகிக் கொண்டான்…

கிராமத்தில் சம்பாதிப்பதில் தங்கள் செலவுக்கு போக மீதத்தை இந்தக் குழந்தைகள் முகத்திற்காக கேசவனுக்கு அனுப்பி வைத்தார் பாட்டி… அதில்தான் அவர்களது ஜீவனம் நடந்து கொண்டிருந்தது…

ரங்காவின் கல்லூரி படிப்பு முடிந்ததும் பி.எல் படிப்புக்காக சென்னை செல்ல வேண்டும் என்று நினைத்து வைதேகி யிடம் கேட்டபோது, தாங்கள் இருக்கும் வீட்டில் இன்னும் மூவர் வந்து

தங்குவது சிரமம், என்று சொல்லிவிட பாட்டி தனக்கு தெரிந்தவர் மூலம் திருவல்லிக்கேணியில் ஒரு ஒண்டு குடித்தனத்தில் வாசு ரங்காவுடன் குடியேறினார்...

"***Human rights are women's rights and men's rights or human rights. let s not forget that among those rights are the the right to speak freely and the right to be heard.***"

***-Hillary Clinton***

வாசுவின் கோபம் மனதை வருத்த, "சாரி வாசு... என்னை உனக்கு தெரியாதா...?" என்றாள்.

"இதே மாதிரி நானும் உன் கிட்ட பேசலாம் இல்லையா?

"தாராளமா பேசலாம்... ஆனா நான் உனக்கு எந்த விதமான பினான்சியல் சப்போர்ட்டும் பண்ணினதா ஞாபகம் இல்லை...!"

"அப்ப பாட்டி என்னை வளர்த்ததற்கு என்ன அர்த்தம்...? நம்ம ரெண்டு பேரையும் சொந்த பேரன், பேத்தியா நினைத்துதான் வளர்த்தாங்க... அப்ப நம்ம ரெண்டு பேருக்கும் ஒரு உடன்பிறந்த பாசம் இருக்காதா...?

என்னோட சகோதரியும், என்னோட பாட்டியும் கஷ்டப்படறப்ப, அத பாத்துட்டு சும்மா கையை கட்டிட்டு இருந்தா

என் மனசாட்சியே என்னை கொன்னுரும்…! என்னை கொஞ்சம் நன்றியுள்ள மனிதனாக இருக்க விடு ரங்கா…!’’

‘‘பிளீஸ்… வாசு நீயாவது என்ன புரிஞ்சுக்கோ… இப்ப கொஞ்ச நாள் என்ன ஃப்ரீயா இருக்க விடு… கண்டிப்பா கடைசி ரெண்டு மாசம் என்னால வேலைக்குப் போக முடியாது. அப்ப உன்னோட ஹெல்ப் நான் ஏத்துக்கிறேன்…!"

அதற்கு மேலும் அவளை வற்புறுத்த முடியாமல் ‘சரி’ என்று தலையை ஆட்டி வைத்தான். ஆனால் மனதுக்குள் வேறு முடிவு தோன்றியது… அதன் விளைவாக ரங்காவுக்கு தெரியாமல் பாட்டியும், வாசுவும் அவளது சீனியர் ரங்கபாஷ்யத்தை சந்திக்க முடிவு எடுத்தனர்…

வாசுவிடம் அவரது நம்பர் இருந்ததால், அவரை தனியாக சந்திக்க வேண்டுமென்று ரங்காவின் பாட்டி விருப்பப் படுவதாக அவரிடம் அனுமதி வேண்ட, அவரும் ரங்காவின் கல்யாண விஷயமாக இருக்கும் என்று நினைத்து சம்மதம் அளித்தார்…

"ஆனால் ஆபீஸ்ல ரங்கா இருப்பாளேப்பா…!"

‘‘அதான் சார் எங்களுக்கும் என்ன செய்றதுன்னு தெரியல… மேலும் பாட்டி ஆபீஸ் வந்தால், அதை யாராவது ரங்காவிடம் சொல்லிடுவாங்க…!’’ என்று வாசு சொல்ல…

சற்று யோசித்தவர், "ஓகே உங்க வீட்டு அட்ரஸ் சொல்லுங்க. நானே பாட்டியை வந்து பகல்ல சந்திக்கிறேன்..." என்றவர் அதன்படியே ஒரு நாள் நண்பகலில் ரங்காவின் வீட்டுக்கு வந்தார்.

முன்கூட்டியே சொல்லி இருந்ததால் வாசுவும் அவரை சந்திக்க வீட்டில் இருந்தான்...

"வாங்க உட்காருங்க..." என்று வரவேற்ற இருவரின் முகத்திலும் சுரத்தில்லாததும், சற்று குழப்பமும் விரவி இருப்பதை பார்த்த ரங்கபாஷ்யத்தின் மனதிற்குள் ஏதோ ஒரு எச்சரிக்கை மணி அடித்தது.

"எதுவும் முக்கியமான விஷயமா...? ரங்காவின் கல்யாண விஷயமா...? அதற்கு ஏதும் உங்களுக்கு பண உதவி தேவைப்படுதா...?"

"அதெல்லாம் இல்லை... கல்யாண விஷயம் என்றால் நாங்களே தயங்காம உங்ககிட்ட கேட்டிருப்போம்... இது வேற..." சொல்லிவிட்டு பாட்டி தயங்க...

"சொல்லுங்க... எதுவும் காதல் விவகாரமா...?"

‘‘அதெல்லாம் இல்ல... அப்படி எதுவும் இருந்தா கூட நாங்க சந்தோஷப்பட்டு இருப்போம்... இதை எப்படி சொல்றது...? நீங்க இதை எப்படி எடுத்துக் கொள்வீங்க...? அதுதான் எனக்கு ரொம்ப

யோசனையாக இருக்கு...!’’

‘‘பரவாயில்ல... சொல்லுங்க... ரங்கா பற்றியா?’’

"ஆமாம்...!"

"அவ ரொம்ப தெளிவான பொண்ணு... அவ எது செய்தாலும் ஒரு நியாயமான காரணம் இருக்கும்... !

‘‘இந்த அதீத நம்பிக்கையும், அவளுடைய புத்தி சாலித்தனமும் தான் அவளை இந்த மாதிரி ஒரு முடிவு எடுக்க தூண்டியிருக்கு..." பாட்டியின் புதிரான பேச்சு அவருக்கு வியப்பாக இருந்தது... ரங்கபாஷ்யத்திற்கு பாட்டி ரங்காவை நன்றாக தெரியும்...

சொல்லப் போனால் பாட்டியின் குணமும், தன்னம்பிக்கை யும்தான் ஜூனியர் ரங்கா... அதை தெளிவாக தெரிந்து வைத்து இருந்த ரங்கபாஷ்யம் எதுவாக இருந்தாலும் பாட்டி வாயிலாக வெளி வரட்டும் என்று மௌனமானார்.

"ரங்கா இப்ப கன்சீவ் ஆக இருக்கிறாள்..."

"வாட்.? என்ன...?‘‘ என்றவர் ஒரு நொடி அதிர்ந்து விட்டார்...

"நோ... நீங்க இதை நம்பறீங்களா? நான் நம்ப மாட்டேன்... !" என்றவரிடம்...

"நீங்கள் எங்காத்து பொண்ணு மேல வச்சிருக்கிற நம்பிக்கையை பார்த்து எங்களுக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கு... ஆனால் அவ சந்தோசத்துக்கு பதிலாக நமக்கு ஒரு அதிர்ச்சிதான் கொடுத்து இருக்கா...

"என்ன விஷயம் புதிர் போடாமல் சொல்லுங்க...?"என்றதும், தனக்கும் ரங்காவுக்கும் இடையில் நடந்த விவாதங்கள் அதனடிப்படையில் அவளின் முடிவு, வேறுவழி இல்லாமல்தான் சம்மதித்தது... என்று அனைத்தையும் சொன்னார்...

எல்லாவற்றையும் பொறுமையாக கேட்ட ரங்கபாஷ்யம், "அவளோட மனநிலைக்கு உங்க குடும்ப சூழ்நிலையும் ஒரு காரணம்...! இந்த காலத்தில் பிள்ளைங்க தான் என்ன நினைக்கிறார்களோ அந்த மட்டும்தான் செய்யறாங்க.,...

நான் ரங்காவை பத்தி என்னென்னமோ நினைச்சேன்... சரி நாமொன்று நினைக்க தெய்வமொன்று நினைக்கும்னு சும்மாவா சொன்னாங்க...

நடக்க வேண்டியது பார்ப்போம். இனி கொஞ்ச நாள் ஆபீஸ் வேலை மட்டும் பார்க்கட்டும். கோர்ட்டுக்கு நான் வேற யாரையாவது அனுப்புகிறேன்...

எதுவாயிருந்தாலும ரங்காவுக்கு என்னோட சப்போர்ட்

உண்டு… கவலைப்படாதீங்க… ! என்றவர் அவர்களிடம் விடைபெற்று கிளம்பினார்.

ரங்க பாஷ்யம் சொன்ன மாதிரியே ரங்காவை அழைத்து, "எனக்கு சில முக்கியமான பைல் பார்த்து தர வேண்டி இருக்கு. நீ அதெல்லாம் கொஞ்சம் பார்த்து தரியா…?"

"அப்ப கோர்ட் வேலை…!"

"அது நான் வேற யாராவது வைத்து பாத்துக்கிறேன்…!"

"சரிங்க சார்…!" என்று ஒப்புக் கொண்டு அலுவலக வேலையை மட்டும் பார்க்க ஆரம்பித்தாள்…

சில சமயம் பகலில் டயர்டாக இருக்கும்போது அவர் ரங்காவை அழைத்து, "உள்ள போய் மாமி கிட்ட எனக்கு ஏதாவது குடிக்க வாங்கிட்டு வா…!" என்று அனுப்பிவைப்பார்.

மாமியும் அவளைப் பார்த்ததும், " வா ரங்கா, உட்காரு…’ என்று அவளை உட்கார வைத்து கதை பேசி பின்னர் அவளுக்கு ஏதாவது குடிக்க கொடுத்து, தனது கணவருக்கும் கொடுத்து அனுப்புவார்.

ஒரு வாரம் போல் இப்படி தொடரவே, ஒரு நாள் சீனியர் தனியாக இருக்கும்போது, "என்ன சார் எங்க பாட்டியாவது வாசுவாவது உங்களை வந்து பார்த்தாங்களா…?"

"இல்லையே ஏன் அப்படி கேட்கிற...?"

"இல்ல இப்ப கொஞ்ச நாளா என்னை வேற மாதிரி ட்ரீட் பண்றீங்களே...?" அதனால கேட்டேன்.

"அதெல்லாம் ஒன்றுமில்லை" என்று அவர் சமாளித்து அனுப்பிவிட்டார்.

ஆனாலும் சந்தேகம் விலகாத ரங்கா பாட்டியிடம், "நீங்க என்னோட சீனியரை பார்த்தீங்களா பாட்டி...?" என்று கேட்க...

பொய் சொல்லத் தெரியாத பாட்டி உண்மையை ஒப்புக்கொண்டார். "ஏன் பாட்டி அவர் கிட்ட எல்லாம் போய் சொல்லிட்டு...!"

"ரங்கா எப்படியும் ஒரு நாள் விஷயம் தெரியத்தான் போகுது... அப்ப அவரும் தெரியாம ஏதாவது பேசிட்டா...!"

"அப்படி எல்லாம் பேசக்கூடிய ஆளில்லை பாட்டி அவர்...!"

"இருக்கலாம்... ஆனா சூழ்நிலை எப்படி, எப்படி மாறும்னு என்று சொல்லமுடியாது... முடிந்தவரை நான் உன்னை சேவ் பண்ண நினைக்கிறேன்... முடியாத சில இடங்கள் இருக்கு. அதை அப்ப பாத்துக்கலாம்...!" என்று சொல்லிவிட்டு அந்த இடத்தை விட்டு நகர்ந்தார்.

அடுத்த மாத செக்கப்புக்கு போய் வந்த பிறகு, டாக்டர் எல்லாம் நார்மல் என்று சொல்லிவிட்டார்… ஆனால் பசியும், சில சமயம் தலை சுற்றலும் இருந்துகொண்டுதான் இருந்தது…

அலுவலகத்தில் சில சமயம் இவன் சோம்பி இருப்பதை பார்த்த நண்பர்கள் இவளை கேள்வி கேட்க, சிரித்து மழுப்பினாள்…

ஆனால் ஒருநாள் நடந்து செல்லும்போது தலைசுற்றி விழப் போக, அருகிலிருந்த லீலா இவளை பிடித்து விட்டாள்… "என்ன ரங்கா நீ இப்படி எல்லாம் இருந்தது இல்லையே! உடம்புக்கு என்ன…!"

"ஒண்ணுமில்ல… காலைல சாப்பிடாம வந்துட்டேன்… அது கொஞ்சம் டயர்டா இருக்கு…" அவள் சொன்னதை லீலா நம்பியது போல் தெரியவில்லை.

"ஆமா, உன்னை போல கோர்ட்ல வாதாட முடியாது ன்னு சீனியர் உன்னை அவ்வளவு புகழ்ந்தார்… இப்ப என்னடான்னா உன்னை கோர்ட்டுக்கே அனுப்பாமல் வீட்டிலேயே வைத்திருக்கிறார்… என்ன விஷயம்…?"

"தெரியல இது நீ அவரைத் தான் கேட்கணும்…!" தன் கண்களை பார்த்து பதில் சொல்லாமல் ஏதோ ஒன்றை சொல்லி

விட்டு தப்பிச் செல்லும் ரங்காவை பார்த்து மனதுக்குள் 'உன்கிட்ட ஏதோ ஒரு மாறுதல் தெரியுது... பாப்போம் எத்தனை நாள் நீ மறைக்கிறேன்னு...!"

சரவணனுக்கும் அவளது செய்கை வித்தியாசமாகப்பட்டது. ஆனாலும் அவன் எதுவும் கேட்கவில்லை... அடுத்த வாரம் தாராவிற்கு வளைகாப்பு...

அன்று அலுவலகத்தில் வைத்து ரங்காவிடம், "வளைகாப்புக்கு உங்க வீட்டிலேயே இருந்து எத்தனை பேர் வருவீங்க...?"என்று சரவணன் கேட்டதற்கு...

எப்போதும் கணக்காக பதில் சொல்லும் ரங்கா, "தெரியல நான் வேணா பாட்டியை கேட்டு சொல்லட்டுமா...!" என்று கூறவும்.

"என்னாச்சு ரங்கா உனக்கு...! எப்ப கேட்டாலும் பதில் டான்னு வரும்... இப்ப என்ன...! நீங்க எல்லாரும் வர்றீங்க தானே...!"

"ஆங்... அதெல்லாம் எல்லாரும் வருவாங்க..."

"எல்லாரும் வருவாங்க... அப்படின்னா, நீ வரலையா...?"

"தெரியல நான் இந்த நிமிஷம் வரைக்கும் டிசைட் பண்ணல...!"

"என்ன கோபம்...? என் மேலயா அல்லது தாரா மேலயா...?"

"சேச்சே அப்படியெல்லாம் இல்ல சரவணன்... எனக்கு என்னமோ வரணும்னு தோணல...!" ரங்கா தன் நிலைமையை நினைத்து கொண்டு சொல்ல...

"உங்களுக்கும் தாராவுக்கும் அறவே ஒத்துப் போகாது என்று எனக்கு தெரியும்... இருந்தாலும் நீங்க எனக்காக வரணும்..." என்று வற்புறுத்த

"சரி முயற்சிக்கிறேன்...'' மறுக்க முடியாமல் தலையாட்டி வைத்தாள்...

வளைகாப்பு செய்வதற்கும் பணம் இல்லாததால் வைதேகி மகளிடமே கேட்டாள்... ரங்கா கொடுக்க முன்வந்தபோது அதை தடுத்த பாட்டி நான் வளையல் செய்து கொண்டு வரேன் என்று கூறிவிட்டார்...

ரங்காவுக்கு நாலு மாசம் ஆகிவிட்டதால் சற்று வித்தியாசம் தெரிய ஆரம்பித்து இருந்தது. பூசினாற்போல் உடல்வாகும் சற்று மேடிட்ட வயிறும் அவளை வித்தியாசப்படுத்திக் காட்ட பாட்டியின் அறிவுரைபடி சேலையை கட்டிக்கொண்டு கிளம்பினாள்,

‘‘பாட்டி... நான் வரல நீங்க போயிட்டு வாங்களேன்...!

‘‘இல்ல நீ வா... இந்த கல்யாணமே உன்னுடைய ஏற்பாடுதான். அப்புறம் நீயே வரலைன்னா அதுக்கு ஏதாவது

சொல்லுவாங்க…!' என்று வற்புறுத்தி அவளை அழைத்துக் கொண்டு சென்றார்…

பாட்டி, ரங்கா, கீர்த்தி, வாசு நால்வரும் கிளம்பி சென்றனர்… அங்கு சென்று இறங்கியதும் மோகனின் மனைவி காயத்ரி, ரங்காவை பார்த்து "வாங்க அக்கா நல்லா இருக்கீங்களா…?" என்று பாசத்துடன் கேட்க…

அதை குரோதமாக பார்த்துக்கொண்ட வைதேகி "ஏண்டியம்மா, சம்பாதிக்கிற நாத்தனார் அப்படின்னதும் இழையறே?" என்று முகவாயை தோளில் இடித்துக் கொண்டு கேட்க…

காயத்ரியின் முகம் காற்றிழந்த பலூன் போல் சுருங்கிப் போயிற்று… "அம்மா நீ சும்மாவே இருக்க மாட்டியா…?" என்று அம்மாவை கடிந்த ரங்கா காயத்ரியிடம், "விடு உனக்குதான் அம்மா குணம் தெரியும் இல்லையா…?" என்று அவளை அணைத்துக் கொண்டாள்…

"மோகன் இப்ப எப்படி இருக்கான்…?"

"பரவாயில்லை அக்கா…"

"வேலைக்கு ஒழுங்கா போறானா…?"

“போறார்...!”

“சம்பளம் வாங்கியதும் நீ வீட்டுச் செலவுக்கு தேவையானதை கேட்டு வாங்கிடு... சரியா...? இப்ப விட்டேனா அப்புறம் அவனை திருத்தவே முடியாது...!”

“சரி அக்கா...”

“சரி வா உள்ளே போவோம்...” என்று அனைவரும் உள்ளே சென்றனர்.

தாராவை பட்டுப் புடவை நகை அலங்காரத்தில், மேடிட்ட வயிற்றுடன் பார்க்க மிகவும் அழகாக இருந்தாள்... அவளை அழைத்து வந்த பெண்கள் நாற்காலியில் அவளை அமரவைத்து நலங்கிட ஆரம்பித்தனர்...

“ஒவ்வொருத்தராக சந்தனம், குங்குமம் கன்னத்தில் வைத்து கைகளில் வளையல் போட்டனர்... முதலில் கண்ணாடி வளையல்கள் போட்டுவிட்டு, பின்னர் சூல் காப்பு என்று சொல்லப்படும் மெல்லிய தங்க வளையல்கள் வெள்ளி வளையல்களை அணிவித்தனர்...

பாட்டி தான் வாங்கி வந்திருந்த சூல்காப்பு தங்க வளையல்களை, வைதேகியின் கையில் கொடுத்து தாரா விற்கு போட்டுவிட சொன்னார்...

வளையலை வாங்கி மேலும் கீழும் திருப்பித் திருப்பி பார்த்த வைதேகி, “ ஏம்மா, கொஞ்சம் காத்திரமா வாங்கி இருக்க கூடாதோ...?” என்று எல்லார் முன்னாடியும் மாமியாரிடம் வேண்டும் என்றே கேட்க...

பார்த்துக்கொண்டிருந்த பாட்டிக்கும் பேத்திக்கும், வைதேகி வேண்டுமென்றே பேசுவது புரிந்தது... மற்றவர்கள் முன்னிலையில் எப்போதுமே எதற்கும் யாரையும் மட்டம் தட்டுவதே தனது குணம் என கொண்டிருந்த வைதேகி, சம்பந்தார் முன்னிலையிலும் தங்களை அவமானப்படுத்துவதை கண்டு ரங்கா ஏதோ பேச முற்பட... பாட்டி அவளை அமைதியாக இருக்கும்படி சைகை செய்தார்...

வெளியாட்கள் முன்னிலையில் ஒரு பெரிய மனுஷி அவமானப்படுத்துவதை காண சகியாத சரவணன், “நான் தான் இந்த டிசைன் வேணும் பாட்டி கிட்ட சொல்லி இருந்தேன். அதனால்தான் அப்படி வாங்கி இருக்காங்க இதுவே போதும் எங்களுக்கு...” என்று சொல்லிவிட...

ஏதோ பெரிதாக நடக்கப்போகிறது வேடிக்கை பார்க்கலாம் என்று நினைத்துக் கொண்டிருந்த மற்றவர்களுக்கு சப்பென்று போய்விட, மருமகனே அவர்களுக்கு சப்போர்ட்டாக இருப்பதைக் கண்டு மனதுக்குள் உறுமியபடி வைதேகி கையிலிருந்த

வளையலை மகளுக்கு போட்டுவிட்டு நலுங்கும் வைத்தார்…

அடுத்து பாட்டி தன் பங்குக்கு என்று வெள்ளி வளையல் போட்டு நலங்கு வைத்தார்… தாராவுக்குமே பாட்டி வெள்ளி வளையல் போட்டதும் முகம் மாறியது… எதையும் கண்டுகொள்ளாமல் பாட்டி நகர்ந்துவிட எல்லோரும் நலங்கு வைத்து முடித்தாயிற்று என்று தாராவை எழுப்பிவிட்டு ஆலம் சுற்றி முடித்தனர்…

அடுத்து கல்யாணம் ஆகியும் குழந்தைப்பேறு இல்லாத பெண்களை ஒரு சம்பிரதாயத்திற்காக மணையில் உட்கார வைத்து நலங்கு பூச என்று மோகனின் மனைவி காயத்ரியையும், வாசுவின் மனைவி கீர்த்தியையும் உட்கார வைத்து நலங்கு பூசி விட்டனர்…

வந்திருந்த பெண்களில் சிலர், “உங்க ரெண்டு பேரையும் பார்த்தா கல்யாணமான பொண்ணு மாதிரியே தெரியலையே…? கல்யாணம் ஆகி கொஞ்ச நாள் தான் ஆகிறதுன்னு சொல்றாங்க… குளுமையா இருக்க வேண்டாமா…? இந்த பொண்ண பார்த்தா தான் குளுமையா இருக்கு… பூசினாற்போல சதை வைத்து, நல்ல நிறம் கொடுத்து, பாக்கும்போதே பளபளன்னு தெரிய வேண்டாமா…? இவ தான் அப்படி இருக்கா…? ஏம்மா உனக்கு கல்யாணம் ஆயிடுச்சா…?” என்று ரங்காவை பார்த்து ஒரு பெண்மணி கேட்க, ரங்கா திருதிருவென்று விழித்தாள்…

அப்போதுதான் எல்லோருமே ரங்காவை உற்று கவனித்தனர்… சற்று மிக லேசாக தெரிந்த வயிறும், பூசினாற் போல கொஞ்ச சதையும், பளபளவென்று மின்னிய கன்னங்களும், செர்ரிப்பழ உதடுகளுமாக, சேலையில் மின்னியவளை பார்த்தனர்…

சரவணனுக்கே இந்த வித்தியாசம் பளிச்சென்று தெரிந்தது… அவனுக்கே தெரியும் போது மற்றவர்களுக்கு தெரியாதா என்ன…? நிமிட நேரத்தில் வைதேகியும், தாராவும் ரங்காவின் உடம்பிலும் முகத்திலும் ஏற்பட்ட மாற்றத்தை கவனித்து விட்டனர்…

“இவ என் பேத்தி ரங்கா… தாராவோட அக்கா… இவளுக்கு கல்யாணம் ஆகல…?” என்று பாட்டி விளக்கமளிக்க…

“அக்காங்கிறேள்… ஏன் இன்னும் கல்யாணம் ஆகல…?” என்று இன்னொருத்தி கேட்க…

“அவ இப்ப பண்ணிக்க முடியாதுன்னு சொல்லிட்டா… அவ தான் வேலைக்கு போறா… அவதான் தங்கச்சிக்கு கல்யாணம் பண்ணி வைத்தது…!”

“ஓ அப்படியா… அப்ப சரிதான்… எதுக்கும் காலாகாலத்துல கல்யாணம் பண்ணி வச்சிடுங்க… இப்பதான் பார்க்க பொண்ணு அழகா இருக்கா… வயசு ஆயிடுச்சின்னா பிறகு மாப்ள கிடைக்கிறது கஷ்டம்…!” அந்தப் பெண்மணி இலவச

ஆலோசனை கொடுத்த பின்பே ஓய்ந்தார்…

‘ஷ் அப்பாடி…’ மனசுக்குள் ஒரு பெருமூச்சு விட்டுக் கொண்டே பாட்டி, இனி இங்கு இருந்தால் சரிப்படாது என்று புரிந்துகொண்டு கிளம்ப எத்தனித்தார்…

“என்ன அதுக்குள்ள சாப்பிட்டு போகலாம்…?” என்று ராஜம் உபசரிக்க…

“இல்ல… நேக்கு வயிறு சரியில்ல… ரங்காவுக்கும், வாசுவுக்கும் கம்பெனியில ஒரு முக்கியமான கையெழுத்துப் போடணும்… வேலை இருக்கு நாங்க கெளம்புறோம். இன்னொரு நாள் சாவகாசமா வந்து சாப்பிடலாம்…” என்று கிளம்பி விட்டார். அவரது குறிப்பறிந்து கீர்த்தி, வாசு, ரங்கா மூவரும் உடன் கிளம்பிவிட்டனர்…

ரங்காவும் பாட்டியும் மௌனமாக வர, வாசு தான் மனது கேட்காமல் பொருமிக் கொண்டே வந்தான்…

ஃபங்ஷனுக்கு வந்தமா, வந்த வேலையை பார்த்தோமா, சாப்பிட்டேன்னு போனோமான்னு இல்லாம, என்ன வம்பு பேசலாம், யாரை பேசலாம்… இப்படினுட்டு சில ஜென்மங்கள் வருது…

இந்த மாதிரி ஆட்கள் வாயில விழக்கூடாதுன்னு தான், அவ

வர வேண்டாம் என்று நான் சொன்னேன். நீங்க தான் கேட்கல…!'' என்று பாட்டியை குற்றம் சாட்டி பேச…

''அவங்களை ஒண்ணும் சொல்லாதே வாசு… இந்த மாதிரியெல்லாம் பிரச்சினை வரும்னு தெரிஞ்சு தானே, பண்ணியிருக்கேன்… அப்ப அத எதிர்பார்த்து தான் இருக்கணும்…!''

''ரங்கா புரியாம பேசாதே… இது சாதாரண விஷயம் கிடையாது… நீ பண்றது உன்னை பொறுத்தளவில் சரி… ஆனால் இந்த சமுதாயம் அந்த மாதிரி உன்னை பார்க்காது…!

அது மட்டும் கிடையாது… நமக்கும் அவளுக்கும் சம்பந்தமில்லை… அவளப் பத்தி நாம பேசக்கூடாது அப்படின்னு நினைக்காமல் யாராயிருந்தாலும் வாய்க்கு வந்தபடி பேசுவாங்க… இதுதான் இந்த உலகம்…

அவங்க பேசட்டும் நான் பாத்துக்கிறேன்… அப்படின்னு நீ சொல்லலாம்… சொல்றது ஈசி செய்வது கஷ்டம்… வலிக்கும்டா…" வாசு நிஜமான அக்கறையோடு பேசினான்.

அவன் சொல்வது அத்தனையும் நிஜம் என்பதால் பாட்டி வாயே திறக்கவில்லை… பாட்டி மனதெல்லாம் வேறொரு கவலையே சூழ்ந்திருந்தது…

"ரெஸ்ட் எடு ரங்கா. இனி நீ ஆபீஸ் போக வேண்டாம் என்று சொல்லிவிட்டு வாசு சென்று விட்டான்.

'ரங்கா டயர்ட் ஆக இருக்கிறது' என்று சொல்லிவிட்டு தனது அறைக்குள் தூங்கப் போய்விட்டாள். பாட்டி மட்டும் ஹாலில் உள்ள சோபாவில் படுத்து விட்டார். நான்கு மணி வாக்கில் கதவு தட்டப்படும் சத்தம் கேட்டு எழுந்து கதவு திறக்க, அவர் எதிர்பார்த்தபடியே அவரது மகன் கேசவனும் வைதேகியும் நின்றனர்…

"உள்ள வாங்க…" என்று பொத்தம் பொதுவாய் சொல்லிவிட்டு, அவர்கள் உள்ளே வரவும் கதவை அடைத்து தாழ்ப்பாள் போட்டாள் பாட்டி…

"எங்க உங்க பேத்தி…? என்று வைதேகி கேட்க…

"இப்ப எதுக்கு அவளை தேடுறே. அவ தூங்கறா…!"

"எழுப்புங்க முதல்ல…!" என்ற வைதேகி தானே "ஏய், ரங்கா ரங்கா எழுந்திரு…" என்று போட்ட அவயத்தில் ரங்கா பதறிப்போய் எழுந்தாள்.

'வயிற்று பிள்ளைக்காரி பதறி விடக்கூடாதே' என்று கவலைப்பட்ட பாட்டி தன்னை அறியாமல் "எதுக்கு இப்படி கத்துற…? அவ பதறி எழுந்து வரப் போறா…!"

“பதறி எந்திரிச்சா என்ன? என்ன ஆகும்?” என்று கூர்மையாக மாமியாரைப் பார்த்து வைதேகி கேட்க...

“இந்த சமயத்தில் பதறி எழுந்திருக்கக் கூடாது...!”

"அது என்ன இந்த சமயம்...?" ‘ஐயோ தெரியாம வாய விட்டுட்டோமே பிடிச்சுக்குவாளே...!’ என்று நினைத்தது போலவே வைதேகி, “ உங்ககிட்ட தான் கேட்கிறேன்...? அவளுக்கு என்ன ஆச்சு...?”

“வைதேகி, ஏன் இப்படி பேசுற...? தாரா ஆத்துல எல்லாம் சிறப்பா முடிஞ்சுதா...? அவள நம்மாத்துக்கு அழைச்சிட்டு போயாச்சா...?”

“அதெல்லாம் நல்லபடியா முடிஞ்சது... நீங்க பேச்ச மாத்தாதீங்கோ... அவளை எங்க...? உங்க கிட்ட கேட்டா பதில் கிடைக்காது... நீங்க அவளை காப்பாத்த என்ன வேணா செய்வீங்க...?” என்று கோபத்தோடு சொல்ல...

“அம்மா இப்ப உனக்கு என்ன தெரியணும்...?” என்றவாரே தனது ரூமில் இருந்து வந்த ரங்கா, ஹாலில் இருந்த சோபாவில் உட்கார்ந்தாள்.

“ம்ம்... உனக்கு என்ன ஆச்சு...?”

“ஏன் ஒண்ணும் ஆகலையே…? உனக்கு என்னை பாத்தா எப்படி தெரியுது…?” ரங்கா பளிச்சென்று கேட்டாலும், வைதேகியால் அப்படி கேட்க முடியவில்லை…

“இல்ல உன்ன பாத்தா ரொம்ப வித்தியாசமா இருக்கு…? அதான்…” என்று இழுக்க…

“வித்தியாசம்னா… புரியல…!”

“அதாண்டி தார ஆத்துல, பக்கத்து ஆத்து மாமி எல்லாம் உன்னைப் பார்த்து பேசினாங்க இல்லையா…!” என்று தயங்க…

“ஒஹ்… என்ன பார்த்தா தான் குளுமையா இருக்குன்னு சொன்னாங்களே அதுவா…? அதான் அப்பவே எனக்கு கல்யாணம் ஆகலைன்னு பாட்டி சொல்லிட்டாங்களே…!”

“உங்க பாட்டி உனக்கு ஜால்ரா தட்ட தானே இருக்காங்க… கல்யாணம் ஆனா மட்டும் குளுமையாக இருக்கிறது இல்லை… இது வேற… உண்மைய சொல்லு… நீ மாசம், மாசம் தலைக்கு குளிச்சிட்டு இருக்கியா இல்லையா…?”

“அம்மா நான் டெய்லி தான் குளிக்கிறேன்… மாசம் ஒரு தடவை குளிச்சா கப் அடிச்சுரும்மா…!” ரங்கா வேண்டுமென்றே அம்மாவின் பிபியை எகிற வைத்தாள்…”

“ஏய் நான் என்ன கேட்டுட்டு இருக்கேன்…? நீ தெரியாதது போல நடிக்கிற…?” என்று அவளிடம் வைதேகி கத்தி விட்டு “ பிள்ளையாண்டு இருக்கிற மாதிரி தெரியுது…!” இருக்கிற கோபத்தில் வைதேகி ஏதோ சும்மா சொல்லி வைக்க…

“கரெக்ட்… அப்படித்தான் வச்சுக்கோயேன்…!” என்றவாரே பாட்டியிடம், “பாட்டி ரொம்ப பசிக்குது. ஏதாவது கொடுங்க அப்படியே இவங்களுக்கும்…!” என்றாள் அலட்டிக்கொள்ளாமல்…

“ஐயோ, ஐயோ எப்படி பேசுறா, பாருங்க உங்க பொண்ணு…?” என்று கேசவனிடம் சொல்ல…

அவருக்கு ரங்காவை பற்றி நன்றாகவே தெரியும் என்பதால், கொஞ்சம் அமைதியாகவே மகளிடம், “ரங்கா என்னம்மா இதெல்லாம்…?” என்று கேட்டார்.

“ஆமா, அப்படியே தூக்கி வச்சு கொஞ்சுங்க… எல்லாம் ஒரே ரத்தம் தானே… அதே திமிரும் தெனாவட்டும் எங்கே போகும்…?” வைதேகி பொரிய…

“அம்மா தேவையில்லாம எல்லாரையும் பேசாதே… நீ சொன்னது உண்மைதான்… எனக்கு இப்போ த்ரீ மந்த்ஸ் ஆறது…!” என்று சொல்ல வைதேகி அதிர்ச்சியில் அப்படியே

உட்கார்ந்துவிட்டாள்.

“வைதேகி உனக்கு இப்ப என்ன தெரியணும். உட்கார் நான் சொல்றேன்…!” என்ற பாட்டி எல்லா விஷயத்தையும் பளிச்சென்று கூறினார்

“ஐயோ, ஐயோ… ஏன்னா, நம்ம குடும்ப மானமே போயிடுத்தே…? அவ சின்ன பொண்ணு விஷயம் தெரியாம அடம் பிடிச்சா அப்படின்னா, நீங்க பெரிய மனுசாள் தானே உங்களுக்கு தெரியாதா… கல்யாணம் ஆகாமலே குழந்தை பெத்துண்டா, அதுக்கு பேரு என்னன்னு உங்களுக்கு தெரியாதா…? இப்படி ரெண்டு பேருமா சேர்ந்து குடும்ப மானத்தை வாங்கிட்டீங்களே?” என்று ஒப்பாரி வைக்க… கேசவன் தனது தாயையும், மகளையும் நம்பமுடியாமல் திரும்பித் திரும்பிப் பார்த்தார்.

“வைதேகி சும்மா கத்தி பிரயோஜனமில்லை… குடும்ப மானத்தை நாங்க வாங்கல… நாங்க அமைதியா தான் இருக்கோம்… நீதான் இப்ப கத்தி ஊரைக் கூட்டிற…! இவ்வளவு கத்துறவ, அவ கல்யாணத்தை பத்தி என்னைக்காவது ஒரு வார்த்தை பேசி இருப்பியா… அல்லது அதற்காக ஏதாவது முயற்சி எடுத்து இருப்பியா…? அவளை நான் கூட்டிட்டு போயி வளர்த்தேன்கிற, ஒரு காரணத்துக்காக, அவ உன் பொண்ணு இல்லைங்கிற மாதிரி நடந்துக்கிட்டே, நீ இப்ப வந்து மானம்

போயிடுச்சு, மரியாதை போயிடுச்சுன்னு ஏன் கூப்பாடு போடுற...!"

உங்களால தான் அவ இப்படி ஒரு முடிவு எடுத்தாள்... வேலைக்கு போகாமல் வீட்டிலேயே தண்டமா உட்கார்ந்து சாப்பிடற ஒரு அப்பா, ஒரு தம்பி, எல்லாத்துக்கும் மகளையே சார்ந்து இருக்கிற ஒரு அம்மா, ஒரு தங்கை இந்த குடும்பம் தான் தன்னோட குடும்பம்னு நெனச்சு அவன் உங்களுக்காக பார்த்து, பார்த்து செஞ்சா...!

ஆனா அவள நீங்க மனுஷியாவது நெனச்சு பாத்து இருப்பீங்களா...? பணம் வேணும்னா மட்டும் அவ கிட்ட பேசுவீங்க... அவளுக்கு ஆண்கள் மேலேயும், உறவுகள் மேலேயும் ஒரு தீராத வெறுப்பு இருக்கு...

அதனால என்கிட்ட கல்யாணமே வேண்டாம்னு பிடிவாதமா சொல்லிட்டா... எனக்கு அப்புறம் அவளுக்கு வாழ்க்கையில் ஒரு பிடிப்பு வேணும், ஒரு துணை வேணும்... அது அவ குழந்தைய தான் இருக்க முடியும்... அதனாலதான் நான் இப்படி ஒரு முடிவுக்கு சம்மதிச்சேன்... உங்களுக்கு இது கௌரவக் குறைச்சல் அப்படின்னு நினைச்சீங்கன்னா, நீங்க இனிமே எங்களை பார்க்க வராதீங்க... அவளை ஒரு வார்த்தை பேசக் கூடாது...!"

"பாத்தீங்களா... உங்க அம்மாவை... இந்த வயசுக்கு

இவங்களுக்கு இவ்வளவு திமிர் இருக்குன்னா, இவங்களோட வளர்ப்பு தானே அவ, அதுலயும் அவங்கள மாதிரியே இருக்கிறோம் ஒரு கர்வம் கூட... பிறகு எவ்வளவு திமிரு இருக்கும்...?

இந்த திமிருக்கு நீயும் உன் பாட்டியும் நல்லா படுவீங்கடி...! கல்யாணம் ஆகாமலே புள்ள பெத்தா இந்த ஊரே காரித்துப்பும்... ஊர் என்ன ஊர்... உலகமே காரித்துப்பும்... அப்பன் பேர் தெரியாத பிள்ளைன்னு... உலகமே கரித்துக் கொட்டும்... ஆண் துணை இல்லாமல் இருந்தா இன்னும் நாலு பேரு நாலுவிதமா பேசுவான்... தினம் ஒரு கச்சேரி... ஒரு வழக்குன்னு தான் வாழ்க்கை போகும்...

ஆமா, ஏற்கனவே வக்கீல் தானே... கச்சேரியும், வழக்கும் பார்த்து, பார்த்து பழகிப் போய் இருக்கும்... நீங்க வாங்க முதல்ல... இவங்க வீட்டுல தண்ணி குடிச்சா கூட பாவம்... பெத்தவ என்கிட்ட இருந்து என் பிள்ளையை தான் பிரிச்சீங்கன்னு நெனச்சேன்... ஆனா அது மட்டும் இல்ல உறவையே பிரிச்சு விடறேன்னு, செஞ்சு காட்டீட்டீங்க... உங்களையும் சேர்த்து நான்கு பேர் நாலுவிதமா பேசுவாங்க!” என்று பாட்டியைப் பார்த்து பொரிந்தவள்...

மகளைப் பார்த்து, “ உன்னை பெத்தவளுக்கு ரொம்ப நல்ல

பெயர் வாங்கி கொடுத்துட்டே… ரொம்ப சந்தோஷம்… மனசு குளிர்ந்து போச்சு…! இனி எங்க மூஞ்சிலேயே முழிக்காத…!'' என்று கூறி விட்டு கணவனை அழைத்துக்கொண்டு சென்று விட்டாள்.

# அத்தியாயம் 15

கிராமத்தில் இருந்து வந்ததும், முதலில் சென்னை வாழ்க்கை வாசுவுக்கும், ரங்காவுக்கும் மனதிற்கு பிடிக்கவில்லை... கிராமத்தில் சற்று பெரிய வீடு... தண்ணீர் பாத்ரூம் எல்லாமே வசதியாக இருந்தது...

ஆனால் சென்னையில் ஒண்டுக்குடித்தன வீடு கிட்டதட்ட 15 வீடுகள் லயன் ஆக இருந்த இடத்தில் எல்லோருக்கும் சேர்த்து பொதுவாக இரண்டு பாத்ரூம் இரண்டு டாய்லெட் தான்... ஆதலால் எல்லோரும் வரிசையில் நின்று தான் குளித்து கிளம்ப வேண்டும்... ரங்கா பெரும்பாலும் அதிகாலையில் எழுந்து குளித்து கிளம்பி பின்னர் தூங்கிவிடுவாள்... காலேஜ் செல்லும் போது பாட்டி அவளை எழுப்பி சாப்பாடு கொடுத்து அனுப்புவார்...

வாசு தான் படித்தது போதும் என்று ரங்கா புட் புராடக்ட்ஸ் கம்பெனி ஆரம்பிக்க பேங்க் லோன் வாங்க அலைந்து கொண்டு இருந்தான்... சொற்ப சேமிப்பு... சென்னை வந்த பாட்டிக்கு உதவுவதற்கு யாரும் இல்லை...

ஒரு தடவை தற்செயலாக தி நகர் சென்றிருந்தபோது, அங்குள்ள கடை வாசலில் ரங்க பாஷ்யத்தை எதிர்பாராமல் சந்தித்தார்... ரங்க பாஷ்யத்தின் மனைவியும் ரங்காவும் கொஞ்சம்

சுற்றி வளைத்து உறவினர்கள்… அன்று மனைவியுடன் கடைத்தெருவுக்கு வந்து இருந்த ரங்க பாஷ்யத்தை, பாட்டி பார்த்துவிட மீனா அவருக்கு பாட்டியை அறிமுகம் செய்து வைத்தாள்…

பேச்சுவாக்கில், பேத்தி ரங்கா வக்கீலுக்கு படிப்பதற்காக காலேஜில் சேர்ந்திருப்பதை பற்றி சொல்ல, அவர் உடனே சந்தோஷமாக தன்னிடமே அவளை ஜூனியராக அனுப்பி வைக்கும்படி சொன்னதோடு மட்டுமல்லாமல், வாசுவுக்கும் பட்டி ரங்காவுக்கும் சேர்த்து தொழில் தொடங்குவதற்கு பேங்கில் ஜாமீன் கையெழுத்துப் போட்டுக் கொடுத்து, அவர்கள் சென்னையில் நிரந்தரமாக வசிப்பதற்கு ஒரு வழி ஏற்படுத்திக் கொடுத்தார்…

வாசுவும், ரங்காவும் அதில் பங்குதாரர்கள். உழைப்பும் வாசுவும் பாட்டியும் மட்டுமே… ஏற்கனவே பாட்டியின் பொடி தயாரிப்பு வகைகளைப் பற்றி அறிந்திருந்த வாசு அதை பெரிய அளவில் செய்ய திட்டமிட்டு, ஆரம்பத்தில் உற்பத்தியை ஓரளவு செய்து அதை தனது திறமையால் மார்க்கெட்டிங் செய்தான்…

ஆனால் அவர்களது அதிர்ஷ்டம் பாட்டியின் கைமணமும், கைராசியும் அவர்களது கம்பெனியை போட்டி கம்பெனியிலிருந்து வேறுபடுத்திக் காட்டிய தோடு மட்டுமல்லாமல் தொழில் துறையில் ஒரு நிலையான இடத்தையும் பெற்று தந்தது…

ஓரளவு வருமானம் வந்த பின்னரே அவர்கள் அந்த திருவல்லிக்கேணியை விட்டு வேறு இடம் வாடகைக்கு மாறினர்... ரங்காவும் தனது இரண்டு வருட பி.எல் படிப்பை முடித்து, ரங்கபாஷ்யத்திடம் ஜூனியராக சேர்ந்தாள்...

"*The thing women have yet to learn is nobody gives you power... you just take it...*"

ரங்காவும் பாட்டியும் செக்கப்புக்கு வந்திருந்தனர்... ஸ்கேன் பார்த்து குழந்தைகள் நன்றாக இருக்கிறது என்று சொன்ன மகாலட்சுமி டாக்டர், அந்த மாத தடுப்பூசியை எழுதிக் கொடுத்து போட்டுக் கொள்ளுங்கள் என்று சொல்லி அனுப்பிவைத்தார்...

"வாக்கிங் போகலாமா டாக்டர்...? பாட்டி கேட்க...

"ஆறு மாசம் முடியாட்டும். அதுக்கு அப்புறம் பாத்துக்கலாம்..." என்று அவர்களை அனுப்பி வைத்தார்.

"பாட்டி நீங்க இங்க உட்கார்ந்து இருங்க... நான் போய் ஊசி போட்டுட்டு வரேன்..." என்று சொல்லிவிட்டு பாட்டியை ரிசப்ஷனில் உக்காரவைத்து விட்டு உள்ளே சென்று விட்டாள்.

ரிசப்ஷனில் உட்கார்ந்திருந்த பாட்டியின் அருகில் வந்த ஒரு நர்ஸ் "பாட்டி உங்களை பெரிய டாக்டர் கூப்பிடுறாங்க...?"

“யாரு...?”

“சேதுராம் டாக்டர்...”

"ஒஹ்... எந்த ரூம்...!"

“வாங்க நான் கூட்டிட்டு போறேன்...!” என்று அந்த நர்ஸ் கூட்டிட்டு போய் அந்த அறையை காட்டினார்...

பாட்டி உள்ளே நுழைந்ததும், “வா ரங்கா...” என்று டாக்டர் வரவேற்றார்...

“இன்னைக்கு என்ன ஹாஸ்பிடல் வந்து இருக்கீங்க...?”

“இல்ல... என்னோட பழைய ஃபிரண்ட் ஒருத்தரோட பேரனுக்கு கொஞ்சம் உடம்பு சரியில்ல... அது விஷயமா அவங்க என்ன பாக்க இங்க வரேன்னு சொன்னாங்க... சரி ஒரு எட்டு வந்து பார்த்துட்டு போலாம்னு வந்து இருக்கேன்...!”

“என்னை எப்படிப் பார்த்தீங்க...?”

“இப்படித்தான்...” என்று சிசிடிவி கேமராவை வைத்து காட்டினார்.

இப்ப இது ஒரு வசதி...!

“பின்ன சும்மாவா... முன்னயெல்லாம் ஒரு பிசினஸ்

விரிவுபடுத்த நம்பிக்கையான உறவினர்கள் அல்லது நண்பர்கள் வேண்டும்...!”

“இப்ப அதெல்லாம் தேவையில்லை... இந்த மாதிரி சாதனங்களை வச்சுக்கிட்டு வேலைக்கு ஆட்கள் போட்டுட்டு, யார் வேணா, எங்க வேணா பிசினஸ் மேனேஜ் பண்ணலாம்...!”

“ஆமா நீ மட்டுமா வந்த...?”

“இல்ல... ரங்காவோட செக்கப்புக்காக வந்தோம். அவள் ஊசி போட போயிருக்கா...!”

“அப்படியா...! இப்ப அவளுக்கு எத்தனாவது மாதம்...?”

“அஞ்சாவது மாதம் நடக்குது...!”

“ஓ... வேற ஏதாவது பிரச்சனை...?”

“பெருசா பாதிக்கிற அளவு எதுவும் இல்லை... ஆனா வீட்டுக்கு தெரிஞ்சிருச்சு... அவளுக்கும் எனக்கும் பயங்கர திட்டு..., சாபம்...!”

“ஓகே... நீ எதிர்பார்த்ததுதான். சரி... எதைப்பற்றியும் கவலைப்படாத... முதல்ல குழந்தை பிறக்கட்டும் பிறகு பார்ப்போம்...!”

“நேரமாயிடுச்சு… ரங்கா வந்து என்னைத் தேடுவா… நான் உங்ககிட்ட பேச வந்தது அவளுக்கு தெரியாது…!” என்று சொல்லிவிட்டு கிளம்பினார்.

ரிசப்ஷனுக்கு வந்து பாட்டியை தேடிக்கொண்டிருந்த ரங்கா பாட்டி வேறொரு இடத்தில் இருந்து வருவதைப் பார்த்து, “பாட்டி எங்க போய்ட்டீங்க…?”

“இல்லம்மா… ரெஸ்ட் ரூம் போகணும் போல இருந்தது. அதனால் போயிட்டு வந்தேன். வா, போகலாம்…” இருவரும் வாசலுக்கு வரவும், அப்போதுதான் அங்கு வந்து நின்ற காரில் இருந்து உபேந்திரா இறங்கினான்.

இன்னொரு பக்கம் திரும்பி நின்று கால் டாக்ஸி டிரைவரை அழைத்து பேசிக்கொண்டு இருந்ததால் ரங்கா அவனை கவனிக்கவில்லை…

ஆனால் உபேந்திரா அவளை கவனித்து விட்டாள். அவள் அருகில் நின்ற பாட்டி ரங்காவை பார்த்ததும் அவனுக்கு தனது தாத்தாவின் தோழி என்பது நினைவுக்கு வந்தது…

அவர்களிடம் பேசலாம் என்று அருகில் செல்ல போக அவனது மொபைல் சிணுங்கியது.

“எஸ். வந்துட்டேன்… வாசல்ல தான் நிற்கிறேன். இதோ வந்துடறேன் தாத்தா…” என்று கூறிவிட்டு திரும்பி பார்த்த போது அவர்கள் இருவரும் கால் டாக்ஸியில் ஏறி செல்வது தெரிந்தது…

நேராக தனது தாத்தாவின் அறைக்குள் சென்றவன், "நான் தான் உங்களை இங்கே வரக்கூடாது. நான் மேனேஜ்மென்ட் பார்த்துக்குறேன், அப்படின்னு சொல்லி இருக்கேனே, அப்புறம் எதுக்கு வந்தீங்க…?”

“இல்லடா, என்னோட ஃபிரண்ட் அவனோட பேரனுக்கு உடம்பு முடியல, இங்க வந்து காட்டணும்னு சொன்னான்… கண்டிப்பா நான் வந்து அவனோட பேரனை பாக்கணும்னு வேற சொல்லிட்டான். அதுக்கு தான் வந்தேன்…!”

“தாத்தா நீங்க பிரண்டுன்னு சொன்னதும் எனக்கு உங்களோட லேடி பிரண்டு ஞாபகம் வந்துச்சு…!” என்று கண்ணை சிமிட்டி சிரிக்க…

“டேய், என்கிட்ட நீ உதை வாங்குவடா படவா… என்று இணைந்து சிரித்த டாக்டர் “அவங்க கிட்ட பேசுனியா…?” என்று கேட்க.

“எங்க… போய், பேசலாம்னு நினைச்சேன். ஆனா

அதுக்குள்ள அவங்க கால் டாக்ஸி பிடிச்சு கிட்டாங்க...!''

''தாத்தா, இன்னொரு விஷயம். அவங்க கூட அவங்க பேத்தி வந்திருந்தா...!''

''பேத்தியா... அவளை உனக்கு தெரியுமா.?''

''என்ன இப்படி கேட்டுட்டீங்க...! சென்னையில் வந்ததும் என்னோட முதல் எதிரியே அவதான்...!''

''ஓஹ்...!''

''அவளுக்கு கல்யாணம் ஆயிடுச்சி நினைக்கிறேன்...!''

''எப்படி சொல்ற...?''

''பார்க்க கேரிங் மாதிரி தெரிஞ்சா. எந்த புண்ணியவான் கட்டிட்டு அவஸ்தைப்படறானோ...!''

''அதான் புண்ணியவான்னு சொல்லிட்டு அப்புறம் எதுக்கு அவஸ்தைப்பட போறான்... அவதான் அவஸ்தை படணும்...!

''ஓ... அப்படி ஒண்ணு இருக்குல்ல... அப்போ பாவம் செஞ்சவன்னு வெச்சுக்கலாம்...''

''பாவம் செய்தவனா இருந்தா அவனோட பாவமெல்லாம் தீர்ந்துடும்... ஏன்னா அவ புண்ணியவதியா இருக்கலாம்

இல்லையா…!''

''தாத்தா…!'' என்று அழுத்தமாய் பேரன் அழைக்கவும்…

''ஓகே ஓகே… எதுக்கு அவங்க பேச்சு நமக்கு, இப்பொழுது எனக்கு ஆள் வந்தாச்சு… நீ உன் வேலையை பாரு… '' என்று தன்னை அழைக்க வந்த நர்சுடன் சென்று விட்டார்…

'எப்ப மாரேஜ் ஆகி இருக்கும்…? ரங்கா பாஷ்யம் சார் கூட சொல்லலை… ஆமா நீ என்ன அவளோட வெல்விஷரா… உனக்கு பத்திரிகை கொடுக்க…!' மனசாட்சி வேற இடித்து உரைக்க… தலையை குலுக்கி கொண்டு தனது அறைக்கு சென்றான்.

ரங்கா அன்று அலுவலகத்தில் ஒரு புது கேசில் சீனியர் பேசுவதற்காக, குறிப்புகள் தயாரித்துக் கொண்டிருந்தாள்… அப்போது பழைய புத்தகங்கள் பார்த்து குறிப்புகள் எடுக்கலாம் என்ற எண்ணத்தில் அலுவலகத்தில் உள்ள லைப்ரரிக்கு சென்றாள்…

லைப்ரரி மிகப்பெரியது… நிறைய புத்தகங்கள் இருப்பதால் அலமாரியில் மேலடுக்கில் வரை புத்தகங்கள் வரிசையாக அடுக்கப்பட்டிருக்கும்… மேல் அடுக்கில் உள்ள புத்தகங்களை ஸ்டூலில் ஏறிதான் எடுக்க வேண்டும்…

கீழ் வரிசையில் உள்ள புத்தகங்களில் தேவையானவற்றை

எடுத்து விட்டு மேல் வரிசையை எட்டிப் பார்த்தாள்… அதிலிருந்து இரண்டு புத்தகம் தேவைப்பட்டது… எடுக்கலாம் என்று ஸ்டூலை இழுத்துக் கொண்டே சென்று, அலமாரி பக்கத்தில் போட்டு விட்டு, ஏறுவதற்கு தயாராக காலை தூக்கவும், ‘‘ரங்கா ஒரு நிமிஷம் நில்லு… என்ன புத்தகம் வேணும் சொல்லு நான் எடுத்து தரேன்…!’’ என்ற சரவணன், தானே மேலே ஏறி புத்தகத்தை எடுத்துக் கொடுத்தான்…

‘‘ரொம்ப தேங்க்ஸ்…!’’

‘‘இருக்கட்டும்… இனி மேல ஏறனும்னா என்னை கூப்பிடு… நீ ஏறாதே… இந்த நிலைமையில நீ மேல ஏறக்கூடாதுன்னு உங்க பாட்டி சொல்லி அனுப்பலியா…?" அதுவன் அவள் பதில் பேசும் முன் விரைந்து வெளியில் சென்று விட்டான்.

சரவணன் பேசிய விதமும் முகபாவனையும் வித்தியாசமாக இருக்கவே, ரங்கா ஒரு நொடி அப்படியே நின்று விட்டாள். எப்படியோ தனது விஷயம் அவனுக்கும் தெரிந்திருக்கிறது என்பது அவளுக்குப் புரிந்தது…

ஏற்கனவே அலுவலகத்தில் அவளைப் பற்றி அங்கொன்றும் இங்கொன்றுமாய் பேச்சுக்கள் கிளம்பியிருப்பது அவளுக்கு தெரிந்து தான் இருந்தது…

அது எப்படி சம்பந்தப்பட்ட ஒருவரின் உணர்வுகளை புரிந்து கொள்ளாமல், தாங்களே மற்றவர்களைப் பற்றிய முடிவு எடுக்கும் அதிகாரத்தை இவர்களுக்கு யார் கொடுத்தது, என்பது அவளுக்கு புரியாத புதிராகவே இருந்தது…

மற்றவர்கள் இவளடு சம்பந்தப்பட்டவர்கள் அல்ல. ஆனால் சரவணன் அவளுடைய உறவினன்… ஒரு வார்த்தை தன்னிடம் இதுபற்றி கேட்டிருக்கலாம் அதை விடுத்து இப்படி முகத்தை திருப்பிக் கொண்டு போவது எந்த விதத்தில் நியாயம் என்று தோன்றினாலும், அவன் நேரடியாக கேட்டிருந்தால், தான் என்ன பதில் சொல்லியிருப்போம் என்று ஒரு நிமிடம் யோசித்தாள்.

ஏதோ ஒரு வேகத்தில் இந்த விஷயத்தை தீர்மானம் செய்து, அதை செய்து விட்டாலும், எப்போதுமே யாருக்குமே விளக்கம் கொடுத்து தான் அவர்களிடம் தான் பேச வேண்டி இருக்குமோ என்று தோன்ற ஏற்கனவே இருந்த மனப்பான்மையுடன் இப்பொழுது கொஞ்சம் சலிப்பும் சேர்ந்து கொண்டது…

சற்றுப் பொறுத்து லைப்ரரி விட்டு வெளியே வந்தவள் தனது அறைக்கு செல்லும் முன் அலுவலகத்தின் ஹாலை கடந்து செல்ல வேண்டும்… அதற்குள் நுழையும் முன் அங்கு உள்ள வக்கீல் மற்றும் குமாஸ்தாக்கள் இரண்டு மூன்று பேர் சேர்ந்து பேசிக் கொண்டிருப்பதை கண்டாள். உள்ளே செல்லலாம் என்று

நினைக்கையில் அவளது பெயர் அடிபடவே சற்று ஒதுங்கி நின்று கவனித்தாள்…

புதிதாக சேர்ந்த ஒருவன், மகேஷிடம். "மகேஷ் சார் நீங்க இங்க ரொம்ப நாளா வொர்க் பண்றீங்களா… ரங்கா மேடம் உங்களுக்கும் சீனியரா…?"

"இல்ல நாங்க எல்லாரும் ஒண்ணு போல தான் வேலைக்கு வந்தோம்…!"

"அப்புறம் எப்படி? அவங்களுக்கு மட்டும் ஒரு வேலையும் சீனியர் கொடுக்கிறதில்லை… சும்மா ஆபீஸ் பைல் மட்டும் பாத்துட்டு இருக்காங்க… சீனியர் சார்க்கு ரொம்ப வேண்டியவங்களோ…!" அவன் கேட்ட விதத்தில் நக்கல் வெளிப்படையாகவே தெரிந்தது.

"மெல்லப் பேசுங்க… அவங்க காதில் விழுந்தது உங்கள உரிச்சு உப்புக்கண்டம் போட்டுருவாங்க…!"

"அதுக்கெல்லாம் பயந்த ஆளு நான் இல்லை. இது மாதிரி எத்தனை நான் பார்த்திருப்பேன்… சார்… உண்மையிலேயே இந்தப் பயந்த சாதுவான பெண்களைக் கூட நம்பிவிடலாம். ஆனால் நான் ரொம்பஸ் ஸ்டெயிர்ட் பார்வேர்ட், ரொம்ப புத்திசாலி, மத்தவங்களுக்கு எல்லாம் ஒண்ணுமே தெரியாது, நான் தான்

எல்லாத்திலும் கரெக்டா இருப்பேன், இந்த மாதிரி ஆட்டிட்யூட் உள்ள பொண்ணுங்கள நம்பவே முடியாது…

எல்லா வேலைலேயும் எல்லாம் கரெக்ட்டாக இருப்பாங்க… ஆனா வாழ்க்கைன்னு வரும் போது இப்படித்தான் எசகுபிசகாய் எவன் கிட்டேயாவது ஏமாந்திட்டு நிப்பாங்க…!'' என்று அவன் சொல்ல…

சுற்றியிருந்த ஜால்ராக்களில் சிலர் ''ரொம்ப கரெக்டா சொன்னீங்க சார்… ரங்கா எப்பவுமே அப்படிதான்… யாருக்கும் எதுவுமே தெரியாது என்கிற மாதிரி ஒரு அலட்சியம், திமிரு, இதெல்லாம் அவங்ககிட்ட ரொம்பவே இருக்கும்… யாருடனும் ரொம்ப ஈஸியா ஒத்துப் போக மாட்டாங்க… தனக்குத்தான் எல்லாம் தெரியும், இந்த உலகத்திலேயே தான் மட்டும் தான் நியாயவாதி என்று ஒரு எண்ணம்…!'' என்று மற்றொருவன் கூறினார்.

வெளியில் நின்று கேட்டுக் கொண்டிருந்த ரங்காவுக்கு தன்னைப்பற்றி அவர்கள் இத்தனை நாள் மனதுக்குள் நினைத்து இருந்தது புரிந்தது.

'நேர்மையாகவும், மற்றவர்கள் விஷயத்தை புறம் பேசாமலும் இருப்பதற்கு இப்படி ஒரு பெயரா…?' என்று மனது

வருத்தப்பட்டாலும் அதையும் தாண்டி அடுத்து என்ன சொல்கிறார்கள் என்று கவனித்தாள்

"மகேஷ் சார் அவங்களுக்கு கல்யாணம் ஆயிடுச்சா...?"

"எனக்குத் தெரிஞ்சு ஆகல...!"

"ஓஹ், உங்களுக்கு தெரியாமல் இருக்கும் அப்படின்னு சொல்றீங்களா...?"

"வேண்டாம் தேவையில்லாம அவங்கள பத்தி பேசாதீங்க என்னை ஆள விடுங்க...!" என்ற மகேஷ் அந்த இடத்தை விட்டு நகர்ந்து விட...

"சாருக்கு அவங்க கிட்ட ரொம்ப பயம் போல இருக்கு...!" என்று அவன் சொல்ல மற்றவர்கள் சிரித்தனர்.

சீனியர் வருவதாக யாரோ சொல்ல கூட்டம் கலைந்தது... வெளி வாசலில் இருந்து சீனியர் உள்ளே நுழைய ரங்காவும் ஹாலை கடந்து தனது அறைக்குள் சென்றாள்.

சீனியரின் அறையிலேயே ஒரு ஓரத்தில் இவளது டேபிள் இருந்ததால் அங்கு சென்று டேபிளில் புத்தகங்களை வைத்தவள், அவர்கள் பேசியது மனதுக்குள் ஓட முதல் முறையாக அவளது மனம் வருந்தியது...

‘ஏன் இப்படி இருக்காங்க...? நான் இவங்களுக்கு என்ன தப்பு செஞ்சேன் அல்லது துரோகம் செஞ்சேன், எனக்கும் இவங்களுக்கு என்ன சம்பந்தம்... கூட வேலை பார்க்குறாங்க அவ்வளவுதானே... கல்யாணம் குடும்பம் என்பது என்னோட இஷ்டம்... என்னை விமர்சிக்க இவர்களுக்கு யார் இந்த உரிமையை கொடுத்தது...?’ எழுந்து சென்று கேட்டு விடலாமா என்ற ஆத்திரம் கண்ணை மறைக்க அறிவு தடுத்தது. உள்ளே வந்த பாஷ்யம் கண்கள் கலங்க ஏதோ ஒரு யோசனையோடு தனது சேரில் இருந்த ரங்காவை பார்த்தார்...

‘‘என்ன ரங்கா, யோசனை ரொம்ப பலமா இருக்கு...? எந்தக் கோட்டையை பிடிக்க உத்தேசம்...?’’

சீனியரின் குரல் கேட்டதும், தனது நினைவிலிருந்து கலைந்தவள், கலங்கிய கண்களை அவர் அறியாமல் துடைத்துவிட்டு, ‘‘அதெல்லாம் ஒண்ணும் இல்ல சார்... கொஞ்சம் டயர்டாக இருந்தது... அவ்வளவுதான்...’’

அவளை பார்த்துக்கொண்டே தனது சேரில் உட்கார்ந்த பாஷ்யம், ‘‘என்ன ரங்கா என்ன பிரச்சனை...?’’

தனது முகபாவனையை வைத்து தன்னை கேள்வி கேட்டேன் சீனியரிடம் உண்மையைச் சொல்ல மனது வராமல், ‘‘நத்திங்...’’

என்று கூறிவிட்டு தனது வேலையை தொடர்ந்தாள்…

“ரங்கா கொஞ்சம் இங்கே வா…”

“என்ன சார்…?” என்று எழுந்து வந்தவளிடம்…

“இங்க உட்கார்…” என்று தனது எதிரில் இருந்த சேரை காட்டினார்… அவள் அமர்ந்ததும் அவள் முகத்தையே கூர்ந்து நோக்கியவர், “இப்ப என் முகத்தை பார்த்து சொல்லு…? என்ன ஆச்சு…?”

தன்னுடைய விஷயம் அனைத்தும் அறிந்தும் இதுவரை ஒரு வார்த்தை கூட அதைப்பற்றி பேசியிராத அவருடைய பரந்த மனத்துக்கு முன்னால் அவளால் அதிக நேரம் தனது உணர்வுகளை மறைக்க இயலவில்லை… “இல்ல, சார் ஆபீஸ்ல கொஞ்சம் என்ன பத்தி பேச்சு ஓடிட்டு இருந்தது… அதைக் கேட்டு கொஞ்சம் மூட் ஆப்… போய் கேக்கலாமான்னு நெனச்சேன்… அப்புறம் என்னுடைய எண்ணங்களும், உணர்வுகளும் வேற… அவங்களோடது வேற… இவங்களுக்கு என்னை நிரூபிக்கணும்னு அவசியமில்லை, அப்படின்னு தோணுச்சு அதான் அமைதியாகிவிட்டேன்…!”

“நீ சொல்றது சரிதான்… அது உன்னோட பார்வையில்… ஆனால் அது இந்த நாட்டுக்கு பொருந்தாது… வெளிநாட்டுக்கு

தான் சரி… அங்க தான் சின்ன குழந்தையில் இருந்தே அதுக்கு பிரைவசி கொடுத்து, அதோட உணர்வுகளுக்கு மதிப்பு கொடுத்து வளர்க்கிறார்கள்… நம்ம நாட்டில் அப்படி இல்லை… எல்லோரும் ஒருத்தரை ஒருத்தர் சார்ந்து தான் இருக்கிறார்கள்… அப்படிங்கிறப்ப மத்தவங்கள பத்தி அவங்களால பேசாம இருக்க முடியாது… இட்ஸ் மஸ்ட், அவங்கள பொறுத்த அளவில்…''

''உண்மைதான் சார்… ஆனால் அதுக்காக அவங்க மத்தவங்க விஷயத்துல மூக்கை நுழைக்கிறது எந்த விதத்தில் நியாயம்…?

''அவங்க உன்னோட விஷயத்தில் மூக்கை நுழைக்கவில்லை ரங்கா… உன்னை பத்தி பேசறாங்க… பேசத்தான் செய்வார்கள்…

ஒரு பழமொழி உண்டு… ஆடையில்லா ஊர்ல வேட்டி கட்டுபவன் பைத்தியக்காரன்னு… அதுக்கு அர்த்தம் என்னன்னு தெரியுமா…?

எல்லோரும் ஒரே விஷயத்தை பின்பற்றி நடந்து கொண்டிருக்கும் போது, புதுசா யாராவது எதையாவது செய்தால் அது அவங்களுக்கு வித்தியாசமாக இருக்கும்… அப்போ கட்டாயம் அதை அவங்க கவனிக்க தான் செய்வாங்க… இதையெல்லாம் நீ இந்த மாதிரி செய்யறது முன்னாடி யோசிச்சிருக்கணும்…!''

"இல்ல சார்… இப்ப கூட நான் செய்தது சரி, என்று தான் நினைக்கிறேன்… எனக்கு கல்யாணம் பிடிக்கல… இன்னொரு ஆணை சகிச்சுக்க அளவுக்கு பொறுமை இல்லை, எப்படி வேணா வச்சுக்கலாம்… இப்பவும் இவங்க பேச்சுக்காக ஒரு நிமிஷம் என் மனசு சலனப்பட்டது அவ்வளவுதான்…

சொல்லிட்டாங்களேன்னு நான் தலைகுனியவும் மாட்டேன், இவர்களுக்கு விளக்கம் சொல்லவும் மாட்டேன்…! தெளிவாக இருந்தது அவள் பேச்சு…!''

''ஆனா ரங்கா இந்த எண்ணத்தை நீ மாத்திக்க வேண்டிய சூழ்நிலை கண்டிப்பா வரும்…''

''இல்ல, சார் அப்படி ஒரு சூழ்நிலை வராது, என்னால முடியும், என்று நினைத்து தான் நான் இந்த விஷயத்தை கையில் எடுத்து இருக்கேன்…!''

''உண்மைதான் உன்னால முடியும்… ஏனனா நீ அந்த மாதிரியான ஒரு மனநிலைக்கு வந்துவிட்ட… ஆனால் உன்னை விட உன்னோட குழந்தைகள் அதிகம் பாதிக்கப்படுவார்கள்… அப்ப இந்த சூழ்நிலையை மாற்றி அமைக்க நினைப்பாய்… அது நடக்கும்…!''

''நடக்கும்போது பார்க்கலாம் சார்…'' என்றவள் தனது

வேலையைக் கவனிக்க சென்று விட்டாள்...

'நல்ல பெண், ஆனால் ஏன் இப்படி ஒரு முடிவு எடுத்தான்னு தான் தெரியல...!' என்று மனதுக்குள் நினைத்தவர், 'இவள் மனதையும் மாற்றும் சூழ்நிலை வரும். வர வேண்டும்...!' என்று மனதார நினைத்து கொண்டு தனது வேலையில் ஆழ்ந்தார்.

வேலை முடிந்து கிளம்பும்போது, ஹாலைத் தாண்டி தான் வாசலுக்கு செல்ல வேண்டும்... இவளைப் பற்றி பேசிய அந்த புதிய வாலிபன் தனது டேபிளில் அமர்ந்து வேலையைப் பார்த்துக் கொண்டிருக்க, இவள் நேராக அவனது டேபிளுக்கு சென்று எதிரில் உள்ள சேரில் அமர்ந்தாள்...

தன் எதிரே நிழல் ஆடவும் யாரென பார்க்க, ரங்கா அமர்ந்திருப்பது கண்டு, உள்ளுக்குள் விதிர்த்தவன், வெளியே காட்டிக் கொள்ளாது அவளை தெரியாதது போல், "யார் நீங்கள் உங்களுக்கு என்ன வேணும்...? சார் பாக்கணுமா...?" என்று நடிக்க...

"இல்ல எனக்கு உங்கள தான் பார்க்கணும்...? உங்க பெயர்...?"

“அது எதுக்கு உங்களுக்கு? என்ன விஷயமா என்ன பாக்கணும்...?”

அதற்குள் ஹாலில் ஆங்காங்கு உட்கார்ந்து வேலை பார்த்தவர்கள், தங்களது வேலையை விட்டுவிட்டு இவர்களை கவனிக்க ஆரம்பிக்க, தற்செயலாக அந்த ஹாலுக்குள் வந்த மகேசை அழைத்தாள்.

'அய்யோ இவ கிட்ட மாட்டிட்டானா... இன்னைக்கு தொலைஞ்சான்...' என்று மனதுக்குள் நினைத்துக்கொண்டே "என்ன ரங்கா...?" என்று கேட்டவாறு அவளருகில் வந்தான்.

"சார் புதுசா...? பெயர் என்ன மகேஷ்?"

"நகுலன்..."

"ஓ அப்படியா..." என்றவள் "இந்த பாருங்க மிஸ்டர்... என்ன நகுலனனா... நீங்க இந்த ஆபிஸ் வந்து எத்தனை நாள் ஆகுது...?

"ரெண்டு மாசம் இருக்கு மேடம்...!"

"இந்த நிமிஷம் வரைக்கும் எனக்கு உங்க பெயர், நீங்க எங்கிருந்து வர்றீங்க, உங்க குடும்ப பின்னணி எதுவுமே எனக்குத் தெரியாது... தெரிஞ்சுக்க விரும்பல... அதே மாதிரிதான் நானும் உங்களுக்கு... இந்த ஆபீஸ்ல வொர்க் பண்றேன்... அவ்வளவுதான்...

உங்க கூட ஒர்க் பணறேன், என்கிற ஒரே காரணத்துக்காக, என்ன பத்தி உங்களுக்கு ஒண்ணுமே தெரியாட்டாலும், தெரிஞ்ச

மாதிரி தேவை இல்லாத விஷயத்தை பேசாதீங்க...

இல்ல, அப்படித்தான் பேசணும்னு நீ நெனச்சா, உங்க வீட்ல போயி அங்க உட்கார்ந்துட்டு உங்க அம்மா, தங்கை முன்னாடி என்னை பத்தி பேசுங்க...

அப்பவாவது அவங்க இது தப்புன்னு உங்களை சொல்றாங்களான்னு பார்ப்போம்... இல்ல அவங்களும் உங்க கூட சேர்ந்து இதை பத்தி பேசினா, மொத்தத்துல குடும்பத்துக்கே புத்தி இல்லை என நினைத்து விட்டுட்டு போயிடுறேன்..." என்று சொல்லிவிட்டு தனது கைப்பையை எடுத்துக்கொண்டு வெளியில் சென்றாள்...

அவள் சென்றதும் நகுலன் அருகில் வந்த மகேஷ் "நான் சொன்னேன் கேட்டியா...?"

"இப்ப என்ன அவ என்னை திட்டவா செய்தா...?" என்று மரியாதை இல்லாமல் பேச...

'இவன் திருந்த மாட்டான். பட்டா தான் புத்தி வரும்...' என்று மனதுக்குள் நினைத்த வண்ணம், தன் தலையில் அடித்துக் கொண்டு, சென்று விட்டான்...

இவர்கள் பேசுவதை அப்போதுதான் வந்த சரவணன் கவனித்து விட்டு, என்னவென்று இன்னொருவரிடம் விசாரிக்க,

அவன் எல்லாவற்றையும் சொல்லி விட்டான்.

நேராக நகுலனிடம் வந்தவன் பிடிபிடியென்று பிடித்து விட்டான்…"ஒழுங்கா வேலை பார்க்கிறதா இருந்தா இங்க இரு… இல்ல சீனியர் கிட்ட சொல்லி வேற வக்கீல் ஆபீஸ் பார்த்து போயிட்டே இரு… இங்க உள்ள லேடிஸ்க்கு நம்மளால எந்த தொந்தரவும் வரக்கூடாது… அதுவும் ரங்கா எனக்கு சிஸ்டர்… இனி ஒரு தடவை அவளைப் பற்றி பேசினேன்னு தெரிஞ்சது வாய் வெத்தல பாக்கு போட்டுக்கும்…" அதிகம் சத்தம் வராமல், சிரித்த முகத்தோடு வேறு ஏதோ பேசுவது போல் அவனை நெருங்கி நின்று சொன்னவன், அவன் தோளை தட்டி கொடுத்து விட்டு அகன்றான்.

# அத்தியாயம் 16

ஓரளவு வருமானம் வர ஆரம்பித்ததும் கேசவன் பற்றி குறை கூற ஆரம்பித்த வைதேகி வருமானமே இல்லை என்று புலம்ப ஆரம்பிக்க, வழக்கம் போல பாட்டி உதவ ஆரம்பித்தார்...

ஆனால் இப்போது ரங்கா வளர்ந்து விட்டதால், அவள் பாட்டியிடம் இருந்து பணத்தை வாங்கி, தான் அம்மாவிடம் கொடுக்க ஆரம்பித்தாள்... அவள் பணம் கொடுக்கும்போது ஆயிரம் கணக்கு கேட்க, வைதேகியால் சரியான பதில் கூற முடியவில்லை... அடுத்தடுத்து பாட்டி உதவி செய்வதை தடுத்து விட்டு, தனது சம்பளப் பணத்திலிருந்து தேவையானவற்றை கொடுக்க ஆரம்பித்தாள்...

மாமியாரிடம் ஏதாவது சொல்லி பணம் வாங்கிக் கொண்டிருந்த வைதேகிக்கு மகளிடம் அவ்வாறு செய்ய முடியவில்லை... மோகனுக்கு கஷ்டப்பட்டு கல்லூரியில் இடம் வாங்கி கொடுத்து படிக்க வைத்தால் அவன் படிக்காமல் ஊரைச் சுற்ற ஆரம்பித்தான்...

இது தெரிந்த ரங்கா தம்பியை அழைத்து கண்டிக்க, "அம்மா, நீங்க என்ன படிக்க வைக்கிறீங்க...? நீங்களே ஒண்ணும் சொல்லாதப்ப இவங்க யாரு என்னை அதிகாரம் பண்றதுக்கு...?"

“மோகன் யார் படிக்க வச்சா என்ன…? படிப்பை தவிர நீ மத்த எல்லா வேலையும் செய்றே…? நீ படிச்சு ஒழுங்கா வேலைக்கு போனா தான் குடும்பம் தலையெடுக்கும்… அதுக்காக சொல்றேன்… !” என்று ரங்கா சொல்ல…

“அதெல்லாம் எங்களுக்கு தெரியும்… பொம்பளைங்க நீங்களே சம்பாதிக்கும்போது, ஆம்பளைங்களுக்கு சம்பாதிக்க தெரியாதா…?” தேவை இல்லாமல் மோகன் பேச…

பாட்டி அவனிடம், “மோகன் தப்பு செஞ்சா யார்னாலும் கேட்கலாம்… முதல்ல அதை புரிஞ்சுக்கோ…!” என்று சொல்ல…

வைதேகி அவனை கண்டிப்பதற்குப் பதிலாக, “டேய் இப்ப அவங்க ரெண்டு பேரும் தான் குடும்பத்திற்கு பணம் கொடுக்கிறாங்க… உங்க அப்பாதான் எதுவுமே கொடுக்கிறது கிடையாது இல்ல… அதான்…!”

“வைதேகி, நீ நல்லதை சொல்லி அவனைத் திருத்தாட்டி கூட, அவனை கெடுக்காதே… அது உனக்கு தான் கஷ்டம்…!” என்று சத்தம் போட…

“பாட்டி சும்மா, சும்மா எங்க அம்மாவே சத்தம் போடாதீங்க… உங்க பையன் ஒழுங்கா இருந்திருந்தா எங்களுக்கு இந்த

பிரச்சனை...!'' என்று பாட்டியை மோகன் எதிர்த்து விட...

''பாட்டி விட்டுருங்க... பட்டால் தான் தெரியும்...''அதிலிருந்து தேவையில்லாமல் பேசுவதை குறைத்துக் கொண்டு பணம் கேட்டால் மட்டும் அவசியம் என்றால் கொடுக்க இருவருமே பழகிக் கொண்டனர்.

''***Feminisam isn't about making woman strong. Women are alredy strong. It's changing the way the world perceives that strength.***''

***-G.D. Anderson***

நாட்கள் மெதுவாக நகர்வது போல் ரங்காவுக்கு தோன்றியது... எப்போதும் சுறுசுறுப்பாகவும் டூவீலரிலும் பல இடங்களுக்கு தனியாகவே சென்று வந்தவள் என்பதால் இப்போது வாசுவின் துணையோடு ஆபீஸ் மட்டும் சென்று விட்டு வருவது மிகவும் போராக தெரிந்தது...

சாப்பிட்டு முடித்து தனது அறையில் உள்ள கட்டிலில் சாய்ந்து அமர்ந்து கொண்டு டிவி பார்த்துக் கொண்டிருந்தவள் திடீரென்று வயிற்றில் குடுகுடுவென்று ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு ஏதோ ஓடுவது போல் தோன்றவும் பயந்து விட்டாள்.

''பாட்டி பாட்டி சீக்கிரம் இங்க வாங்க...!'' அவள் கத்தி

அழைத்ததும் ஏதோ என பயந்த பாட்டி அப்படியே கைவேலையை போட்டுவிட்டு பதறிக் கொண்டு ஓடி வந்து…

“என்னாச்சு ரங்கா…? என்னமோ பண்ணுது…? டாக்டர்கிட்ட போகணுமா…?” என்று கேட்க…

“இங்க என் பக்கத்தில வாங்க பாட்டி…” என்று அழைத்து பாட்டியின் கையைப் பிடித்து அவளது வயிற்றில் வைத்து, இப்ப, இதோ இங்கே இருக்குதா… இது அஞ்சு நிமிஷத்துக்கு முன்னாடி இங்க இருந்தது… இப்ப குடுகுடுன்னு இங்கு வந்துடுச்சு…! என்று சொல்லவும் பாட்டிக்கு நிம்மதியும், சிரிப்பும் ஒருங்கே தோன்றிற்று…

'எத்தனை பெரிய பெண்ணாக இருந்தாலும், எத்தனை கெட்டிக்காரியாக இருந்தாலும், தாய்மையின் போது எந்தபெண்ணும் ஒரு குழந்தைதான்' மனதிற்குள் நினைத்து கொண்ட பாட்டி…

"அது ஒண்ணும் இல்ல ரங்கா… உன்னோட குழந்தைங்க உன் வயிற்றுக்குள்ளேயே ஓடிப்பிடித்து விளையாடுதுங்க…”

"பாட்டி… நெஜமாவா உள்ளே விளையாட தெரியுமா…?” என்று ஆச்சரியத்துடன் அவள் கேட்க…

"ஏய் நான் சும்மா சொன்னேன்… ஐந்து மாதத்திற்கு பிறகு

குழந்தைகள் வயிற்றுக்குள்ள ஒரே இடத்தில் இருக்காது... அங்க இங்க ஓட ஆரம்பிக்கும்... அதுவும் உனக்கு ரெட்டைங்க வேற, கேட்கவா வேண்டும்... நாள் முழுவதும் இதோட அசைவுகளை நீ பார்க்கலாம்... கைய வெச்சா உணரலாம்...

பசிக்குதுன்னா அங்க இங்க ஓடும்... அதை வச்சு நமக்கு தெரிந்துவிடும்... அசைவு இருக்கறதுதான் நல்லது... தொடர்ந்து அசைவில்லாமல் இருந்தா, நாம என்ன ஏதுன்னு செக் பண்ணி பாக்கணும்...'' பாட்டி தனக்கு தெரிந்த விபரத்தை பேத்தியிடம் விவரித்தார்.

''பாட்டி கிச்சென்ல வேலை முடிஞ்சுதா...?

''இல்ல... இன்னும் கொஞ்சம் தான் இருக்கு. நாளைக்கு பாத்துக்கறேன் நீ தூங்கு...

''உன் மடியில் படுத்துக்கவா பாட்டி...''

''தாராளமா படுத்துக்கோ...'' என்றவர் கட்டிலில் சாய்ந்து அவளை மடியில் குழந்தையாக தாங்கிக் கொண்டார்... அவள் தலையை வருடிக்கொண்டே பேத்தி கேட்ட கேள்விகளுக்கு பதில் சொல்ல, கல்யாணமே ஆகாத தனது பேத்தி தாய்மையின் பயத்தில் தன்னிடம் கேட்ட கேள்விகளுக்கு, அவளுடைய பயத்தை போக்கும் வண்ணம், தாய்மையை பற்றியும், பிரசவ

காலத்தையும் பற்றி எளிதாக சொல்லி மனதளவில் அவளை தைரியப் படுத்தினார்…

சற்று நேரத்தில் ரங்கா தூங்கிவிட அவள் முகத்தையே பார்த்த பாட்டிக்கு முதன் முறையாக தன்னை மீறி கண்ணீர் வந்தது. தாய்மையின் பூரிப்பிலும், போஷாக்கான உணவிலும் ஏற்கனவே அழகியான ரங்கா, இப்போது பேரழகியாக தெரிய தன் மடியில் சிறிய குழந்தையென தூங்கும் பேத்தியின் மனதில், தனது அம்மாவைப் பற்றிய ஏக்கம் ஒரு ஓரத்தில் இருக்கிறது என்பது புரிந்துதான் இருந்தது…

'இதுதான் விதியோ… இதற்காகதான் கடவுளே இவளை என்னை மாதிரியே படைத்தாயா…? மற்ற எல்லா பெண்களைக் காட்டிலும் பாட்டிக்கு அந்தக் காலத்திலேயே சுயமரியாதை அதிகம்… அதே போலவே ரங்காவுக்கும் சுயமரியாதை அதிகம்…

ஒருவேளை தன்னைப் பார்த்து, பார்த்து வளர்ந்ததாலோ என்னவோ தன்னுடைய குணங்களும், சுயமரியாதை பார்க்கும் கௌரவமும் அவளுக்குப் பெரிதாக தோன்ற தான்தான் காரணமோ என்ற உறுத்தல் பாட்டிக்கு எப்போதும் உண்டு…

ஆணும், பெண்ணும் நிறைந்ததுதான் வாழ்க்கை… தாம்பத்தியத்தில் கணவனும் மனைவியும் சரி சமம் வகிக்க வேண்டும் என்பது இறைவனின் நியதி…

ஆனால் எந்தப் பெண்ணுக்கும் அப்படி ஒரு அன்பான, புரிதலான கணவன் கிடைப்பது இல்லை. கட்டிலில் மட்டுமல்ல, எந்த ஒரு இடத்திலும் ஆண்கள் தனது மனைவியை புரிந்து கொண்டு, அவள் உணர்வுகளை மதித்து சமமாக நடத்துவதில்லை…

ஆயிரத்தில் ஒரு சில ஆண்கள் மட்டுமே பெண்களின் உடல் ரீதியான பிரச்சனைகளை புரிந்து கொண்டு அவளுக்கு ஆதரவாக தங்களது அந்தரங்கத்திலாவது, அவளை தாங்குகிறார்கள் அல்லது அன்பான அரவணைப்பின் மூலம் ஆறுதல் படுத்துகிறார்கள்…

அப்படி ஒரு இணையை பெற்ற பெண் மிகவும் கொடுத்து வைத்தவள்… கோடானுகோடி சொத்துக்களும், நகைகளும் பணமும், யாரும் கொடுக்காத மன சந்தோஷத்தை, ஒரு ஆண் பெண்ணின் பிரசவ சமயத்திலும் அல்லது மாதாந்திர தொந்தரவின் போதும், அவளுக்குப் பணிவிடை செய்து அவளை தாய்க்கு பதிலாக கவனித்துக் கொள்ளும் போது கிடைக்கும் மன நிறைவு அல்லது சந்தோஷம் மிகவும் பெரிது…

"என்னடா ரொம்ப டயர்டா இருக்கா? பேசாம தூங்கு… நான் வேணா கொஞ்சம் காலை அழுத்தி விடவா…?'' என்று எந்த ஒரு ஆண்மகனும் தன்னுடைய மனைவியிடம் கேட்டதாக சரித்திரமே கிடையாது…

ஆனால் அதே ஆண் வெளியில் அலைந்து திரிந்து விட்டு வரும் போது, மனைவிக்கு முடியாவிட்டால் கூட அவள் கணவனது தேவைகளை கண்டிப்பாக நிறைவேற்றியே ஆக வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தில் இருக்கிறாள்… காலம் மாறி விட்டது, ஆனால் அடிப்படை விதிகள் மாறவே இல்லை… இதெல்லாம் மற்றவர்கள் சொல்லி வருவதில்லை… புரிதல் இருந்தால் மட்டுமே வரும்…

காதல் என்பது கல்யாணம் முடிந்தவுடன் முடிந்து விடக்கூடிய சமாச்சாரம் இல்லை… அது உணர்வு… அது கடைசி வரை தொடர்ந்து அந்த உணர்விலேயே வாழ வேண்டும்… அந்த உணர்வு சலிக்கும் போது, உணர்வு மாறும் போதோ வாழ்க்கை கசக்க ஆரம்பிக்கிறது…

காதலிக்கும் போது இல்லாத தளைகளும், பொறுப்புகளும் கல்யாணம் முடிந்தவுடன் தம்பதிக்கு வந்துவிடுகிறது… அந்த பொறுப்புகளை இருவரும் சேர்ந்து, சுமப்பதுதான் வாழ்க்கை… இதில் யார் பிசகினாலும், வண்டி கவிழ்ந்து விடும்… ஆண்கள் மட்டுமல்ல, பெண்களுமே இதை புரிந்து கொண்டு நடக்க வேண்டும்…

ஒட்டுமொத்த ஆண் சமுதாயத்தை மட்டுமே குற்றம் சொல்ல முடியாது… பெண்களும் தவறிழைக்க தான் செய்கிறார்கள்…

ஆனால் இருவருமே அதைப் பிடித்து தொங்கிக் கொண்டிருக்காமல், இந்த சிறிய பிரச்சினைகளினால், தங்களது குடும்பம் சிதறி விடக்கூடாது என்று இருவரும் நினைக்க வேண்டும்…

துரதிர்ஷ்டவசமாக இந்த மாதிரியான தம்பதிகள் உள்ள குடும்பங்களும் குறைவு… அனேக இடங்களில் எப்போதும் விட்டுக்கொடுப்பவர்கள் பெண்களாகவும், மிகச் சில இடங்களில் விட்டுக்கொடுப்பவர் ஆண்களாகவும் இருக்கிறார்கள்… ஒருவரே விட்டுக் கொடுத்தால் அது குடும்பமே அல்ல… அது நிர்ப்பந்தம்…

இந்த விஷயங்கள் எல்லாமே ரங்காவுக்கு வாழ்க்கையின் மீது ஒரு வெறுப்பையும் கல்யாணத்தின் மீது ஒரு நம்பிக்கை யின்மையும் ஏற்படுத்தியிருக்க வேண்டும் என்பது பாட்டியின் கணிப்பு… அதற்கு தங்கள் குடும்பமும், அவள் வக்கீல் வேலையில் ஏற்பட்ட அனுபவங்களும் ஒரு காரணம் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போல தெளிவாக விளங்கியது.

ஒரு பெருமூச்சுடன் பேத்தியின் தலையை எடுத்து தலையணையில் வைத்தவர், கதவையெல்லாம் பூட்டி விட்டு வந்து தானும் அவள் அருகில் படுத்தார்… இப்போது ரங்காவை தனியா படுக்க பாட்டி அனுமதிக்கவில்லை… அவளது அறையிலேயே இன்னொரு சிறிய கட்டிலை போட்டு தானும் அவளுக்கு

துணையாக படுத்துக் கொண்டார்…

“நீங்க வேற வக்கீல் பாத்துக்கோங்களேன்… என்னால் முடியாது…” ரங்கபாஷ்யம் எதிரில் இருந்தவரிடம் சொல்லிக் கொண்டு இருந்தபோது ரங்கா உள்ளே நுழைந்தாள்…

“இல்ல சார், நீங்க தான் என்னோட பொண்ணுக்கு ஒரு வழி பண்ணனும்… கல்யாணம் பண்ணி நாலு வருஷம்தான் ஆகுது… அதுக்குள்ள குழந்தை இல்லைன்னு இவளை டைவர்ஸ் பண்ணிவிட்டு வேற கல்யாணம் பண்ண திட்டம் போடுகிறார்கள்… மாப்பிள்ளையும் இதற்கு உடந்தை…

மாப்பிள்ளை ஏற்கனவே வேற பொண்ண காதலித்து இருப்பார் போல இருக்கு… இதுதான் சந்தர்ப்பம் என்று அந்த பொண்ண கல்யாணம் பண்ணிக்கிற நினைக்கிறார்… நீங்கதான் இந்த கேசை நல்லபடியா முடிச்சி என் பொண்ண வாழ வைக்கணும்…!”

“சொன்னா புரிஞ்சுக்கோங்க சார்… நான் டைவர்ஸ் கேஸ் எடுக்கிறது இல்லை… என்னோட ஜூனியர் ஒருத்தங்க தான் பார்த்தாங்க… அவங்களும் இப்ப பார்க்க முடியாத நிலைமை இல்லை இருக்காங்க… அதனாலதான் சொல்றேன்…”

சீனியர் சொன்னதைக் கேட்டு, அந்தப் பெண்ணும் அவர் அப்பாவும் செல்ல மனதில்லாமல் வெளியே செல்ல, சற்றுப்

பொறுத்து பாஷ்யத்திடம் வந்தவள், ‘‘என்ன சார் பிரச்சனை…? அவங்க கேசை ஏன் எடுத்துக்க மாட்டேன் சொன்னீங்க…?’’

‘‘அது டைவர்ஸ் கேஸ்… உனக்குதான் தெரியுமே டைவர்ஸ் கேஸ் நான் எடுத்துக்க மாட்டேன்… அவங்க மறைமுகமா உன்னை எடுத்துக்க சொன்னாங்க… ஆனா நான் முடியாதுன்னு சொல்லிட்டேன்…!’’

‘‘சார் நான் வேணா இந்த கேஸ் எடுத்து நடத்தட்டுமா? அந்த பொண்ண பார்த்தா பாவமா இருக்கு…!’’

’’முடியுமா…?’’

‘‘பரவால்ல சார்… மேனேஜ் பண்ணிக்கிறேன்… வாசு கூட வருவான்…’’

உனக்கு ஓகேன்னா எனக்கு நோ அப்ஜெக்சன்…!’’ என்று சொல்லி அவர்களை அழைத்து விஷயத்தைச் சொல்லி, திரும்ப வந்து ரங்காவை சந்திக்குமாறு சொன்னார்.

சாந்தி அதுதான் அந்த பெண்ணின் பெயர். அவளும் அவளது அப்பாவும் வந்தபோது சரவணனும் கூட இருந்தான்… "சார் என்ன இந்த கேஸ்ல, உன்னோட சேர்ந்து அசிஸ் பண்ணச் சொல்லியிருக்கிறார்… "

"ம்ம்…'' என்று தலையாட்டி விட்டு அவர்கள் இருவருமாக அந்தப் பெண்ணிடம் விசாரிக்க ஆரம்பித்தனர்…

''சாந்தி உங்களுக்கு டைவர்ஸ் வாங்கிக்க இஷ்டமா…?''

''இல்லைங்க மேடம்… எனக்கு அவர் கூட வாழத்தான் இஷ்டம்…''

''ஓ… அப்படியா… சரி குழந்தை பிறக்கிறதுக்கு உள்ள டெஸ்ட் எல்லாம் பண்ணி பாத்துட்டீங்களா…!''

''ஆமா மேடம் பண்ணிப் பார்த்தாச்சு… ரெண்டு பேருக்குமே எந்த பிரச்சனையும் இல்லை தான் சொல்றாங்க… ஆனால் இன்னும் குழந்தை பாக்கியம் இல்லை…!''

''இப்ப இதெல்லாம் சர்வ சாதாரணம்… நீங்க ட்ரீட்மெண்ட் போனாலே உங்களுக்கு ஈஸியா குழந்தை பிறக்கும்…!''

''சொன்னேன் டாக்டர்… ஆனால் அதை அவர் ஏத்துக்க மாட்டேங்கிறார்… இதை சாக்கு வச்சு அவரோட லவ்வரை கல்யாணம் பண்ணிக்க ஆசைபடறார்…!''

''அவங்களை உங்களுக்கு தெரியுமா…?''

''பார்த்தது இல்ல… ஆனா அவரு கூட ஆபீஸ்ல வேலை

பார்த்த பொண்ணுன்னு கேள்விப்பட்டிருக்கேன்…!"

"அவர் உங்களுக்கு அனுப்பிய டைவர்ஸ் நோட்டீஸ் குடுங்க…" என்று வாங்கிப் பார்த்துவிட்டு,

"சரி நாங்க உங்களுக்கு போன் பண்றோம்…" என்று கூறி அனுப்பி வைத்தனர்…

"சரவணன் நீங்க அவரோட ஹஸ்பண்ட் வரவழைத்து பேச முயற்சி பண்றீங்களா…?

"எனக்கென்னவோ சரி வரும்ன்னு தோணலை…?"

"இல்ல… எதுக்கும் ஒரு முயற்சி பண்ணிப் பார்ப்போம். சரி வரலைன்னா வேற வழி வச்சிருக்கேன்…!" என்றவள் தனது திட்டத்தை அவனிடம் விவரித்தாள்…

"இது ஒர்க் அவுட் ஆகுமா…?"

"கண்டிப்பாக வொர்க் அவட் ஆகும்… பார்க்கலாம்… நீங்க முதல்ல அவர்கிட்ட பேசிட்டு சொல்லுங்க…!" ஆனால் மறுநாளே சரவணன் இது வேலைக்காகாது என்று சொல்லிவிட்டான்.

"சரி… ஒரு கால் டாக்ஸி பிடிங்க… நாம வெளியில் போகலாம்…!"

“நான் என்னோட கார்தான் எடுத்துட்டு வந்திருக்கேன்… அதுல போகலாம் வா… என்று கூறியவன் “முதல்ல எங்க போறோம்…?” என்று வினவ

ஒரு ஹாஸ்பிடல் பெயர் சொல்லி அங்கே போகச் சொன்னாள். “ஆமா கார் வாங்கியதை என்கிட்ட சொல்லவே இல்லை…?” எதார்த்தமாய் ரங்கா கேட்க, அவளை ஒரு பார்வை பார்த்து விட்டு அவன் பதில் சொல்லாமல் காரை விரட்டினான்…

அவன் கோபத்தை பார்த்து, குலுக்கி ஒரு புன்னகை புரிந்தவள் “என்னாச்சு சரவணன் கேட்டதுக்கு பதிலே இல்ல…?”

“நீ மட்டும் எல்லாம் சொல்லிட்டியா என்ன.?”

“ஓ… நீங்க முதல்ல கேட்கவே இல்லை… இரண்டாவது கேட்டாலும் சொல்லக் கூடிய விஷயம் அல்ல… ஆனா நான் கேட்டது ரொம்ப சாதாரண விஷயம்… அவ்வளவு தான்… பதில் சொல்ல இஷ்டம் இல்லேன்னாலும் தப்பு இல்லை…!”

ரங்காவின் பதில் இப்படித்தான் இருக்கும் என்று தெரிந்தவனுக்கு ஒரு சின்ன புன்னகை வந்தது…

“என்ன… ரொம்ப நாளைக்கு அப்புறம் என்ன பார்த்து சிரிக்கிறே…?”

“நீ மாறவே இல்ல ரங்கா...!”

“எதுக்கு மாறணும்... நான் என்ன கொலையா பண்ணிட்டேன்... நான் எந்த தப்பும் பண்ணல, அப்படிங்கறப்போ எதுக்கு மாறணும்...?”

“மத்தவங்க உன்ன விமர்சிக்கிறது பத்தி உனக்கு வருத்தம் இல்லையா...!”

“இருக்கு... ஆனா அது கூட என்னை பத்தி இல்ல... அவங்கள பத்தி தான்... ஆனா ஒரே ஒரு வருத்தம் உண்டு. என்னை பத்தி நல்லாத் தெரிஞ்ச நீ என்கிட்ட பேசறத அவாய்ட் பண்ண பார்த்தியா... அது கொஞ்சம் வருத்தம்தான்...”

“தப்புதான் ரங்கா... சாரி... முதல்ல இதைப் பத்தி கேள்விப்பட்டப்ப எனக்கு ரொம்ப கோபம் வந்தது. அப்புறம் உன்னை நேர்ல பார்த்தப்ப, உன் முகத்துல தெரிஞ்ச அந்த கள்ளமில்லாதன்மை, என்னை அந்த செய்தியை கூட நம்ப வைக்க இயலலை... நாள் போகப்போக அது தான் உண்மை என்று தெரிஞ்சப்ப, கொஞ்சம் வருத்தமாக கூட இருந்தது... ஏன்...? எதற்காக...? இப்படி ஒரு முடிவு எடுத்தேன்னு, நான் எனக்குள்ளே கேட்டுக்கிட்டே இருந்தேன்... ஆனா அதை நேர்மையாக உன்கிட்ட கேட்க தைரியம் எனக்கு இல்ல ரங்கா...

முதல் காரணம் உன்னோட தங்கை… இரண்டாவது என்ன இருந்தாலும் இந்த விஷயம் உன்னோட பர்சனல்… அதுல தலையிடற அதிகாரம் எனக்கு கிடையாது…!''

''பரவாயில்லை வாசு அளவு இல்லைனாலும், நீயும் எனக்கு ஒரு நல்ல பிரண்டு தான்…!'' என்று சொல்லி சிரித்தவளிடம்…

''அதென்ன வாசு அளவு…?'' என்று வேண்டுமென்றே அவளை வம்புக்கு இழுத்தான்…

''அவன மாதிரி ஒரு பிரெண்ட் கிடைக்க எனக்கு கொடுத்து வச்சிருக்கணும்… எந்த நிலையிலும் என்னைப்பற்றி சந்தேகப்படாத என்மேல் கோபப்படாத நட்பு அவனோடது… எனக்கு எதுவும் செய்யணும்னு அவனுக்கு எந்த விதமான நிர்ப்பந்தமும் இல்லை… ஆனாலும் அவன் என்னை எந்த இடத்திலேயும் விட்டுக் கொடுத்ததாய் ஞாபகமே இல்லை ஸ்கூல் படிக்கும்போது இருந்து அப்படியேதான் இருக்கான்…!''

''ஒகேம்மா… அவன் அளவுக்கு என்னால் வர முடியாது… ஒத்துக்கிறேன்… ஹாஸ்பிடல் வந்துட்டுது… இறங்கி வேலையை பார்ப்போம்…!'' என்று சொன்னவன் காரை பார்க்கிங்கில் கொண்டு போய் நிறுத்தினான்…

தன் முன்னால் அமர்ந்திருந்த அந்த இருவரையும் கூர்ந்து

நோக்கினாள் டாக்டர் நந்தினி…

“டாக்டர் நீங்க நினைச்சா முடியும்… ஒரு பொண்ணோட வாழ்க்கை மேடம்…!” என்று ரங்கா சொல்ல…

“நீங்க என்னோட புரபஷனுக்கு துரோகம் பண்ண சொல்றீங்க…? அது எப்படி முடியும்…?”

"டாக்டர் நீங்க ஏன் அப்படி நினைக்கிறீங்க…?

‘பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்த்த

நன்மை பயக்கு மெனின்…’

“அப்படி நினைச்சுக்கலாமே. ப்ளீஸ் மேம்…!”

“சரி என்ன செய்யணும்…? சொல்லுங்க…” என்றதும் தனக்கு தேவையானதை ரங்கா கூறினாள்…

“ஓகே… சரி நான் சொல்லிடறேன் நீங்க வாங்கிக்கோங்க…”

“இப்ப எதுக்கு இந்த டாக்டர் கிட்ட இருந்து இந்த சர்டிபிகேட் வாங்கினே…?”

“காரணமாத்தான்…”

“நாளைக்கு சாந்தியோட ஹஸ்பண்ட் வேலை பார்க்கிற ஆபீஸ்க்கு போவோம்… அந்த அவர் கூட வேலை பாக்குற

பொண்ணு யாருன்னு கண்டு பிடிச்சு அவ கிட்ட பேசணும்… அவ்வளவுதான்…”

“என்ன பேச போறே…?”

“அதை நாளைக்கு பாருங்க…!”

மறுநாள் இருவரும் அந்தப் பெண்ணை சந்தித்தனர்… புவனா அவள்தான் சாந்தியின் கணவர் சேகருடன் வேலை செய்பவள்…

ரிசப்ஷன் ஹாலில் அமர்ந்திருந்த ரங்கா, சரவணனை பார்க்க உள்ளிருந்து வந்த புவனா, இவர்களைப் பார்த்ததும், “ நீங்க யாரு…? எதுக்காக என்ன பாக்கணும்…?”

“உங்ககிட்ட கொஞ்சம் பெர்சனலா பேசணும். ஒரு பத்து நிமிஷம் வெளியில் வர்றீங்களா…?”

“எதுக்கு வெளியில வரணும்…?”

“இங்க பேசுறதா இருந்தாலும் ஓகே. ஆனாலும் உங்க பர்சனல் நாலு பேருக்கு தெரிய வேண்டாம் என நினைத்தேன்… !”

அவள் மவுனமாக வெளியே வர, அவளிடம், “நீங்களும் சேர்க்கும் எத்தனை வருஷம் லவ் பண்ணீங்க…?”

“ரெண்டு வருஷம்…”

“உண்மையான காதலா...?”

“ஆமா... அப்படித்தான்...!”

“அப்புறம் எதுக்கு அவர் வேற பொண்ணு கல்யாணம் பண்ணினாரு...?”

“அவங்க வீட்டில ஒத்துக்கல...!”

“அவங்க வீட்டுல ஒத்துக்கல அப்படின்னா, ஒண்ணு அவர் கல்யாணம் பண்ணிக்காம இருக்கணும்... அல்லது வீட்டை எதிர்த்து உங்களை கல்யாணம் பண்ணிட்டு இருந்திருக்கணும்... அது எல்லாம் இல்லாம கல்யாணம் பண்ணி குடித்தனமா நாலு வருஷம் வாழ்ந்துட்டு, இப்ப குழந்தை பிறக்கல, அதனால உங்கள கல்யாணம் பண்ணிக்கிறேன் சொல்லி இருக்காரு... இதுக்கு நீங்க எப்படி ஒத்துக்கிட்டீங்க...?”

ரங்கா இப்படி கேட்டதும் அவள் விக்கித்துப் போனாள்... “உங்களுக்கு எப்படி தெரியும்...?”

“எப்படி தெரியும்கிறது வேற விஷயம்...? உண்மையா இல்லையா...?”

“உங்களுக்கு சுயமரியாதை இருக்கா...?” ரங்காவின் கேள்வி அவளை கோபப்படுத்தியது...

“ஹலோ பார்த்து பேசுங்க… என்ன விமர்சனம் பண்ண நீங்க யாரு…?”

“நீங்க பண்ற வேலைக்கு யார்னாலும் விமர்சனம் பண்ண தான் செய்வாங்க… ஒரு பொண்ணோட வாழ்க்கை கெடுக்கணும் நெனச்சா இந்த மாதிரி பேச்சு எல்லாம் வாங்கி கட்டிக்கணும்…!”

“ஹலோ அது என்னோட பர்சனல், நீங்க யாரு…?”

“நான் யாரோ தான்… ஆனாலும் எனக்கு தெரிஞ்ச ஒரு உண்மையை சொல்லி உன்ன காப்பாற்றலாம் என்று வந்தேன்… சரி அது தேவை இல்லை போல இருக்கு. நாம போகலாம் சரவணன்…!”என்று கிளம்பினாள்…

சற்றுக் குழம்பிய புவனா, “ ஒரு நிமிஷம் இப்ப நீங்க என்ன சொன்னீங்க…?”

“ஒண்ணும் சொல்லலையே… ஒரு தகவல் தெரியும் அதப்பத்தி உங்ககிட்ட சொல்லலாம்னு நெனச்சேன்… ஆனா வேண்டாம்னு நீங்க சொல்லிட்டீங்க…!” என்று சொல்லி கொண்டே நகர எத்தனிக்க…

“ப்ளீஸ் என்னன்னு சொல்லிட்டு போங்க…!”

“எதுக்கு சொல்லணும். உங்களோட பர்சனல் உங்களுக்கு

தெரிஞ்சு இருக்கணுமே...!''

''ப்ளீஸ்...'' என்று புவனா சொன்னதும் தன் கையில் உள்ள மெடிக்கல் ரிப்போர்ட் அவள் கையில் கொடுத்தாள்...

''என்ன இது...?''

''படிச்சு பாருங்க... உங்களுக்கு புரியும்...?'' என்று சொல்லிவிட்டு சற்று தள்ளி நின்று வேடிக்கை பார்க்க புவனா அதை பிரித்து படித்தாள்.

அதில் சாந்தி, சேகர் இருவரின் ரிப்போர்ட்டும் இருந்தது... அதில் சேகருக்கு தான் குறை என்பதும் சாந்தி தாய்மை அடைய எந்தவித குறையும் இல்லாதவள் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது...

''இப்ப சொல்லு...! உன்ன கல்யாணம் பண்ணி, உனக்கும் குழந்தை பிறக்கலைன்னா, உன்னையும் உதறிட்டு போக எவ்வளவு நேரம் ஆகும்...?''

''என்ன சொல்றீங்க...?''

''யோசிச்சு பாரு... அவருக்கு தான் பிரச்சனை... ஆனாலும் கூட அதை மறைச்சிட்டு இப்ப சாந்தியை டைவர்ஸ் பண்ண மாதிரி உன்னையும் டைவர்ஸ் பண்ணிட்டு போக எவ்வளவு நேரம் ஆகும்...? நியாயமா பாத்தா அவருக்கு குழந்தை பிறக்காதுன்னு

தெரிஞ்ச சாந்தி தான் அவருக்கு டைவர்ஸ் நோட்டீஸ் கொடுக்கணும்... நாலு வருஷம் ஒரு பொண்ணு கூட வாழ்ந்துட்டு, அவளை அனுபவித்துவிட்டு, குழந்தை இல்லைன்னு மறு கல்யாணம் பண்றது எல்லாம் ரொம்ப தப்பு...

பழைய காலமா இப்போ...? மெடிக்கல் எவ்வளவு முன்னேறி இருக்கு... ஒண்ணுமே இல்லையா டெஸ்ட் ட்யூப் பேபி இருக்கு...? இதெல்லாம் யோசிக்காமல் உன்ன கல்யாணம் பண்ணிக்கிறேன் சொன்னது தப்பு. ஒருவேளை உனக்கும் குழந்தை பிறக்கலைன்னா... எதுக்கும் யோசிச்சு முடிவெடு...! என்றவள் அவள் பிரமித்து நிற்கும் போதே, கையிலுள்ள ரிப்போர்ட்டை வாங்கிக்கொண்டு சரவணனுடன் நடந்துவிட்டாள்.

காரில் திரும்ப வரும் போது சரவணன் அவளிடம், “எதுக்கு இப்ப அவளை குழப்பி விட்டு இருக்க...?” என்று கேட்க...

“வேடிக்கை பார்... இரண்டு நாள்ல விஷயம் தெரியும்...!” என்று சொன்னவள் மௌனமாக வெளியில் வேடிக்கை பார்க்க ஆரம்பித்தாள்...

# அத்தியாயம் 17

‘‘பாட்டி காலேஜ்க்கு நேரமாச்சு நான் வரேன்…!’’

‘‘பார்த்து போய்ட்டுவா ரங்கா…’’ பாட்டி வழி அனுப்பிவிட்டு உள்ளே சென்றார்…

திருவல்லிக்கேணியில் ஒரு ஒண்டுக்குடித்தன வீடு… திண்ணை, ஒரு ஹால் ஒரு கிச்சன் அவ்வளவுதான்… வாசுவின் படுக்கை எப்பொழுதும் திண்ணை… ஹாலில் ரங்காவும் பாட்டியும்… பாட்டியின் மசாலா தயாரிப்புக்கு தேவையான அத்தனை பொருள்களும் ஹாலிலும் அடுக்களையில் இருக்கும்…

சில சமயம் மிளகாய் வற்றல், கொத்தமல்லி, மிளகு இவற்றின் வாசனை இடைவிடாது இருமலை வரச்செய்யும். தூக்கம் கூட இருக்காது.

நடு இரவு விழித்து வந்து திண்ணையில் அமர்ந்து வாசு, பாட்டி ரங்கா மூவரும் பேசுவர்…

"என்ன வாசு, பேங்க் லோன் கிடைச்சிருச்சா…!"

‘‘இப்பதான் மேலிடத்துக்கு அனுப்பி வச்சிருக்காங்க… இன்னும் சாங்சன் ஆகி வரணும் இல்ல…

“கிடைச்சிடும் இல்லை…?”

“கிடைச்சிடும்… ரங்கபாஷ்யம் சார் ரெக்கமண்டேஷன் இருக்கறதுனால கண்டிப்பா கொடுத்துடுவாங்க… ஆனா கொஞ்சம் டைம் ஆகும்…!”

“சரி, உன்னோட ஈவினிங் ஜாப் எப்படி இருக்கு…?” வாசு ரங்காவை கேட்க

"ஒரளவு போகுது…" லா காலேஜ் சீக்கிரம் முடிந்துவிடுவதால் மாலை 4 மணி முதல் 6 மணி வரை கம்ப்யூட்டர் கோச்சிங் சென்டரில் வருபவர்களுக்கு பேசிக் கம்ப்யூட்டர் கோர்ஸ் கற்றுத்தருவது ரங்காவின் வேலை…

சிறிய வயதிலேயே பாட்டி தங்களை வளர்க்கப் பாடு படுவதைக் கண்டு, தேவையில்லாமல் எதற்கும் காசு கேட்டு பாட்டியை தொந்தரவு பண்ணுவதில்லை… துணி மணியில் இருந்து எல்லாமே மிகவும் அத்தியாவசிய தேவை என்றால் மட்டுமே இருவரும் வாங்கிக் கொண்டனர்…

பாட்டிக்கு அந்த விதத்தில் இருவர் மீதும் மிகுந்த பரிவு உண்டு… மற்ற குழந்தைகள் மாதிரி அவர்கள் எதற்கும் ஆசைப்பட்டதில்லை என்பதாலேயே பாட்டி அவர்கள் விரும்பியதை படிக்க வைத்தார்…

“லோன் எவ்வளவு அப்ளை பண்ணி இருக்கோம்…!”

“என்ன… பத்து லட்சம் கேட்டு இருப்போம்… ஆனா அஞ்சு லட்சம் கொடுப்பாங்க என நினைக்கிறேன்…!”

“அது போதுமா…?”

“போதும்… அத வச்சு முதல் ஆரம்பிப்போம். அப்புறம் கொஞ்சம், கொஞ்சமா டெவலப் பண்ணினதுக்கப்புறம், பெரிய அளவில் ஆரம்பிக்கலாம்…

ரங்காவின் படிப்பு முதல் வருட முடிவில் இருக்கும் போது வாசு, ‘ரங்கா புட் ப்ராடக்ட்ஸ்’ கம்பெனியை திறந்தான்… ரங்கபாஷ்யத்தின் தலைமையிலேயே ரங்கா புட் ப்ராடக்ட்ஸ் கம்பெனி திறக்கப்பட்டது…

முதலில் இரண்டு ரூம்கள் இருக்கும் படியான ஒரு கடையை வாடகைக்கு எடுத்து அதில் ஒரு ரூமில் மிஷின்கள் போட்டு பொடி வகைகள் தயாரிக்க ஆரம்பித்தனர்…

அடுத்த அறையில் ஒரு ஓரத்தில் மேஜை நாற்காலி… மற்ற இடத்தில் ஆட்கள் அமர்ந்து பேக்கிங் வேலையை கவனித்து செய்தனர்…

பாட்டி காலையிலேயே வந்து கம்பெனியில் உட்கார்ந்து

கொள்ள, வாசு கடைகளுக்கு சென்று ஆர்டர் பிடிக்க வந்தான்...

ரங்காவுக்கு கல்லூரியிலும் பெரிய அளவில் தோழிகள் யாரும் இல்லை... கல்லூரி நேரம் தவிர இரண்டு இடத்தில் வேலை பார்த்தாள்...

மாலை நாலு முதல் ஆறு மணி வரை கம்ப்யூட்டர் கம்பெனி, ஆறு முதல் எட்டு மனை வரை டுடோரியல் டியூசன் சென்டர்...

சென்னை காலேஜ் என்பதால் செலவுகளும் கல்லூரி கட்டணமும் சற்று அதிகம் என்பதால் தானே தனது செலவுகளை சமாளிக்க பகுதி நேர வேலைக்கு சென்றாள்.

பாட்டிக்கு அதில் விருப்பமில்லை என்றாலும், "இந்த வயசுல நீங்கள் உழைக்கும் போது, நான் வேலைக்கு போறதில் தப்பில்லை..." என்று கூறி பாட்டி வாயை அடைத்து விட்டாள்...

அதற்கு நேர்மாறாக மோகனும், தாராவும் வேலை செய்யாமல் சோம்பேறித்தனமாகவும், ஆடம்பரமாக வாழ கற்றுக் கொண்டு விட்டனர்...

***"I didn't get there by wishingf for it or hoping for it, but by working for it..."***

***-Estee Lauder***

வாசுவும் ரங்காவும் அன்று காலை 10 மணி அளவில் கோர்ட்டுக்கு வந்தனர்.

அவளை இறக்கி விட்டுவிட்டு "ஆபீஸ் முடிஞ்சதும் எனக்கு சொல்லு... நான் வந்து உன்னை பிக்கப் பண்ணிக்கிறேன்..." என்று கூறிவிட்டு சென்று விட்டான்.

அவனிடம் தலையாட்டிவிட்டு பேமிலி கோர்ட்டிருக்கும் பக்கம் நடக்க ஆரம்பித்தவளை இரு ஜோடி விழிகள் அதிசயத்துடன் பார்த்தனர்... அப்போதுதான் தனது காரில் வந்து இறங்கிய உபேந்திரா, ரங்காவின் புதிய பரிமாணத்தை கண்டு திகைத்து விட்டான்...

நன்கு வயிறு பெரிதாக தெரிய கொஞ்சம் நடக்க முடியாமல் சிரமப்பட்டு நடந்து கொண்டிருந்த ரங்காவை பார்த்தவனுக்கு அவளை ஹாஸ்பிட்டலில் பார்த்த நினைவு வந்தது.

அவன் மனதிற்குள் என்னவோ அவளுக்கு திருமணம் ஆகிவிட்டதா, யார் கணவனாக இருக்க முடியும் என்ற ஒரு கேள்வி ஒரு நொடி தோன்றி மறைந்தது...

அதற்குள் அங்கு ஏற்கனவே வந்து இருந்த சரவணன் ரங்காவை பார்த்ததும் அவள் அருகில் வந்து ஏதோ பேசிக்கொண்டே இருவரும் பேமிலி கோர்ட் பக்கம் செல்வதை

பார்த்தான் உபேந்திரா.

அவனது ஜூனியரும், கட்சிகாரர்ளுமாக இரண்டு மூன்று பேர் சேர்ந்து வரவே தனது கவனத்தை அவர்களி டத்திலிருந்து திருப்பிக் கொண்டு அவர்களுடன் பேசிக்கொண்டே தானும் சேர்ந்து நடக்க ஆரம்பித்தான்.

ஆனால் அவனது பார்வை போன திக்கை பார்த்த ஜூனியர் “சார் நீங்க ரங்கபாஷ்யம் சார் ஜூனியர் மேடத்துக்கு என்ன ஆச்சுன்னு தானே பாக்கறீங்க, அவங்களுக்கு கல்யாணமே ஆகலை என்று சூசகமாக சொல்ல…!”

“என்னது மேரேஜ் ஆகலை…? ஆனால் அப்புறம் எப்படி… இப்படி…? என்று அவள் நிலையை குறிப்பிட்டு கேட்க…

“யாருக்கும் தெரியல சார்… புரியாத புதிரா இருக்கு… ஆனா அந்த அம்மா தைரியமாக வெளியில் நடமாடிகிட்டு இருக்கு…!”

“அப்படியா…?” என்றான் ஆச்சரியத்துடன்

“ஆமா சார்… கலிகாலமா இருக்கு. பொண்ணுங்களுக்கு இப்ப எந்த விஷயத்துக்கும் மானம், ரோசம், குடும்ப கவுரவம் இதெல்லாம் எதுவுமே இல்லை…!”

“அப்பா ஆண்களுக்கு அதெல்லாம் வேண்டாம்கிறியா…!”

உபேந்திராவின் கேள்வியில் குழம்பிப் போன ஜூனியர், 'இவர் இப்போ அந்த அம்மாவுக்கு சப்போர்ட் பண்றாரா…அல்லது அவங்களை திட்டுறாரா… நம்மள கிண்டிக் கிளறி எடுக்கிறாரா…? ஒண்ணுமே புரியலையே.' மனதுக்குள் இந்த எண்ணம் ஓட அவன் மௌனம் காத்தான்.

“சரி இத்தனை நாள் கோர்ட்டுக்கு வராதவங்க இன்னைக்கு என்ன கேஸ் ஆஜ்ராகிறாங்க…?” எப்படியும் இவ்வளவு தெரிந்து வைத்து இருப்பவன் இதையும் தெரிந்து வைத்து இருப்பான் என்ற நம்பிக்கையில் கேட்டான்.

“பேமிலி கோர்ட்ல ஏதோ டைவர்ஸ் கேஸ்…!”

டைவர்ஸ் கேஸ் என்றதும் தனது நண்பரின் டைவர்ஸ் டைவர்ஸ் கேஸ் நினைவில் வர, ஏற்கனவே மனதிற்குள் அவள் மேல் இருந்த கோபம் வெளியில் வர, ‘இவளுக்கு நல்ல விஷயமே பண்ண தெரியாது போல இருக்கு டைவர்ஸ் கேஸ், இல்லேன்னா இந்த மாதிரியா வில்லங்கமா ஏதாவது ஒரு காரியம் பண்றது, இது தான் தெரியும் போல இருக்கு…’ என்று வாய்விட்டு சொன்னவன் “சரி, வா போகலாம்…” என்று தங்களது கேஸ் நடக்க இருக்கும் இடம் நோக்கி சென்றனர்.

சாந்தி, சேகர் இருவரும் லேடி ஜட்ஜ் முன்னால் நின்றனர்…

சேகரின் வக்கீல் டைவர்ஸ் கேட்டு தனது வாதங்களை முன் வைக்க சாந்தியின் பிரதிநிதியாக ரங்கா எழுந்தாள்

"மை லார்ட், எனது கட்சிக்காரருக்கு கணவனை பிரிந்து வாழ்வது உடன்பாடு இல்லை... ஆனால் அவரது கணவர் சாந்திக்கு குழந்தை பிறக்காது, அதனால் டைவர்ஸ் வேண்டும் என்று கேட்டுள்ளார்.

'இதோ சாந்தியின் மெடிக்கல் ரிப்போர்ட்..'' என்று தனது கையிலுள்ள மெடிக்கல் ரிப்போர்ட் எடுத்து குமாஸ்தாவிடம் கொடுத்தாள்...

''மை லார்ட் இந்த ரிப்போர்ட்டின் படி, சாந்திக்கு எந்தக் குறையும் இல்லை... தற்போது உள்ள காலகட்டத்தில் அன்நோன் பிரக்னன்சி என்பது சர்வ சாதாரணமாக உள்ளது... அதற்கு மருத்துவம வழிமுறைகளும் உள்ளது...

அதை விட முக்கியமான விஷயம் தனது கணவருக்கு குறை இருக்கிறது என்று தெரிந்தும் சாந்தி அவருடன் தான் வாழ விரும்புகிறாள்... அந்த உண்மையை அவள் தனது கணவரிடம் சொல்லக்கூடாது, என்று நினைத்ததால் சொல்லவில்லை... இதுதான் பெண்களின் தாய்மை குணம் என்பது...

ஆனால் அதே மனைவி என்பவள் தன்னில் சரிபாதி, எனக்கு

என்ன பாதிப்பு என்றாலும் அவளுக்கு வலிக்கும் என்பதுபோல... அவளுக்கு பாதிப்பு என்றால் தனக்கு வலிக்கும் என்று நினைப்பது கிடையாது...

சிலருக்கு மனைவி என்பவள் கருவேப்பிலை போல... தேவைப்படும்போது உபயோகப்படுத்திக் கொண்டு, மற்ற நேரம் அவளைப் பற்றி கண்டுகொள்ளாமல் தூக்கி எறிவது இதைத்தான் சாந்தியின் கணவரும் செய்துள்ளார்... இந்த உண்மை தெரிந்த எந்தப் பெண்ணும் இவரை இரண்டாவது திருமணம் செய்து கொள்ள முன்வருவார்களா... அவரையே கேட்டுப் பாருங்கள்...'' என்று கூற...

பெண் நீதிபதி சாந்தியின் கணவரிடம், '' என்ன சார் இதுக்கு மேல உங்களுக்கு டைவர்ஸ் வேணுமா...? இன்னொரு பெண்ணை நீங்கள் திருமணம் முடித்தாலும், ட்ரீட்மென்ட் சென்றால்தான் உங்களுக்கு குழந்தை அப்படி இருக்கையில், அதே ட்ரீட்மென்ட் நீங்கள் ஏன் சாந்தியுடன் சேர்ந்து செய்து கொள்ளக்கூடாது அவர் உங்கள் மனைவி...!'' என்று கேட்க...

உண்மை தெரிந்த சேகர், ''சாரி மேடம் நான் டைவர்ஸ் கேட்டது தப்புதான்... நாங்க சேர்ந்து வாழறோம்...'' என்று கூறிவிட சாந்திக்கு மகிழ்ச்சியில் கண்ணீரே வந்துவிட்டது...

நீதிபதியும் அவர்களது கேஸ் வித்ட்ராயல் பண்ணி அவர்களை அனுப்பி விட்டார்... வெளியில் வந்த சாந்தியும், சேகரும் ஒருவரை ஒருவர் தேற்றி கொண்டிருக்க, ரங்கா புன்னகையுடன் அதைப் பார்த்துக் கொண்டு இருந்தாள்.

சரவணன், “ ரங்கா நான் இதை எதிர்பார்க்கவே இல்லை... இதுக்கு முன்னாடி ரெண்டு டைவர்ஸ் கேஸ் நீதான வாங்கிக் கொடுத்தே... இந்த கேசுக்கு மட்டும் என்ன...?”

“அந்த கேஸ் வேற இது வேற... அதுல அவங்க ரெண்டு பேருமே டைவர்ஸ் விரும்பினாங்க... ஆனா இதுல சாந்திக்கு டைவர்ஸ் விருப்பமில்லை... பொதுவா டைவர்ஸ் ஆன ஆண்களுக்கு திருப்பி கல்யாணம் ஈஸியா நடந்திடும். ஆனால் பெண்களுக்கு அது அத்தனை சுலபம் இல்லை...

முதல் டைவர்ஸ் கேஸ், ஆண் சைக்கோ... அதனால் அந்தப் பெண்ணால் குடித்தனம் நடத்த முடியாது... இரண்டாவது கேஸ்ல பத்து வயசு குழந்தையை வைத்து கொண்டு இன்னொரு பொண்ணு பின்னாடி போன ஆணை பிடித்து இழுத்து வர முடியாது... அதனால அவங்க ரெண்டு பேருக்கும் டைவர்ஸ் வாங்கி கொடுத்துட்டேன்...

இது அப்படி இல்லையே... குடும்பத்து ஆட்கள் இவங்க

ரெண்டு பேரையும் பிரிச்சு விட்டிருக்காங்க… அதை நாம கொஞ்சம் குழப்பிவிட்டா ஜெயிக்கலாம்னு நெனச்சேன்… அதுதான்… அவள் பேசிக்கொண்டு இருக்கும்போது அருகில் வந்த சாந்தி ரங்காவின் காலிலேயே விழுந்து விட்டாள்…

“ஐயோ என்ன இது…? எழுந்திரிங்க…!”

“ரொம்ப நன்றி மேடம்… எங்க என்னோட வாழ்க்கையே முடிஞ்சிருச்சோன்னு நெனச்சேன்… நீங்க அதை எனக்கு முழுசா திருப்பி கொடுத்துட்டீங்க மேடம்…” என்று அழுதவளை தனது தோளோடு அணைத்துக் கொண்டாள்…

“ச்சச… அதெல்லாம் ஒண்ணும் இல்லை… உண்மையிலேயே உங்களுக்கு உள்ள எந்த பிரச்சனையும் கிடையாது… மிஸ்டர் சேகர் நீங்க முதல்ல தனிக்குடித்தனம் போயிடுங்க. அப்புறம் ஒரு நல்ல டாக்டர் கிட்ட ட்ரீட்மென்ட் எடுத்து குழந்தை பெத்துக்கோங்க… கண்டிப்பா உங்க ரெண்டு பேருக்கும் குழந்தை பிறக்கும்… ஓகேவா, அதை விட்டுட்டு இன்னொரு வாழ்க்கையை பற்றி சிந்திக்காதீங்க… கடவுள் இன்னார்க்கு இன்னார்னு முடிச்சுப் போட்டு வச்சிருபாரு… ஆல் தி பெஸ்ட்…” என்று வாழ்த்தி விடை கொடுத்தாள்…

“சபாஷ்…” என்று ஒரு குரலும், இரண்டு கைத்தட்டலும்

கேட்க, திரும்பிப் பார்த்தவள் உபேந்திராவை பார்த்து ஒரு கணம் திகைத்து போனாள்… ஆனால் அடுத்த நொடியே தனது வழக்கமான அலட்சிய பார்வை கண்ணில் தெரிய, ‘என்ன விஷயம்…?’ என்பது போல் அவனைப் பார்த்தாள்…

“ஊருக்குத்தான் உபதேசம்… உனக்கு இல்லை போல இருக்கு…!” என்று போலியாக வியந்த, உபேந்திராவை பார்த்து…

“என்ன உளறீங்க…?” என்று கேட்க… சரவணன் அதற்குள் அங்கு உள்ள சூழ்நிலையைப் புரிந்துகொண்டு, சேகர், சாந்தியை, “இங்கே வாங்க…” என்று அழைத்துக் கொண்டு போய், பீஸ் பற்றி பேசுவது போல் பேசி அவர்களை அனுப்பி வைத்தான்…

“இல்ல பெரிய, பெரிய தத்துவம் எல்லாம் சொல்றீங்க… அதுல எதுவும் உங்களுக்கு கிடையாது போல இருக்கு…!” என்று கேட்டவன் பார்வை விஷமத்துடன் அவளது வயிற்றில் படிந்தது… அவன் கேட்க வரும் விஷயம் என்னவென்று புரிய, கோபத்துடன் முகம் சிவந்தவள்…

“என்னை ரொம்ப க்ளோசா தெரிஞ்சவங்களுக்கு, நான் எந்த தப்பும் பண்ணலைன்னு தெரியும்… என்னை பத்தி தெரியாதவங்கள பத்தி நான் என்னைக்கும் கவலைப்படுவது கிடையாது…

“ஆமாம்… ஆமாம்… இந்த மாதிரி விஷயத்துகெல்லாம்

கவலைப்பட்டா நடமாட முடியுமா…? அல்லது அதைத் தான் மனசார செய்ய முடியுமா…?’’

‘‘ஹலோ… இப்ப உங்களுக்கு என்ன வேணும்…?’’

‘‘ஒண்ணுமே வேண்டாமே… இல்லை என்னோட சரித்திரத்துல ஒரு பொண்ணுகிட்ட வக்கீல் தொழில்ல ரெண்டு தடவை தோத்து இருக்கேன்… அதனாலேயே அவங்கள என்னை விட சிறந்த அறிவாளி நினைச்சிருந்தேன்… ஆனா உங்க மேதாவித்தனம் எல்லாம், இப்படித்தான் இருக்கும்னு இப்பத்தான் தெரியுது… கல்யாணம் ஆகாமலே குழந்தை பெற்றுக் கொள்வது… அல்லது லிவிங் டுகெதேர், இதுதான் உங்களுடைய மேதாவித்தனமா…!

‘‘ஹலோ ரெண்டு தடவையும் கேஸ்ல நான் உங்கள ஜெயிக்கனும்னு ஜெயிக்கலை… என் பக்கம் நியாயம் இருந்தது… அதனால கடவுள் என்னை ஜெயிக்க வைத்தார்… ஞாபகம் வச்சுக்கோங்க…!’’

‘‘சரி, நியாயம் இருந்ததாகவே வெச்சுடுவோம்… இப்ப இதுல என்ன நியாயம் இருக்கு…?’’

‘‘அதைப் பத்தி உங்களுக்கு என்ன…? கல்யாணம், குழந்தை இதெல்லாம் என்னோட பர்சனல்… அதை கேட்க நீங்கள் யார்?’’ ரங்காவின் கோபம் எகிறிக் கொண்டிருந்தது.

சரவணன் அவளிடம், “ ரங்கா வா... போகலாம் பிரச்சனை வேண்டாம்... இது பப்ளிக் பிளேஸ்...!” என்று சொல்ல...

“மிஸ்டர் சரவணன், உங்க கொலீக்குக்கு பப்ளிக் பிளேஸ், மானம், அவமானம் இதெல்லாம் எதுவுமே தெரியாது... அவங்களுக்கு தெரிஞ்சது எல்லாம் தேவை இல்லாத கோபம், தனக்கு தான் எல்லாம் தெரியும்கிற அகம்பாவம்... அவ்வளவுதான்...!” என்றவன் ரங்காவிடம் திரும்பி...

“ஆமா... அது எப்படி எப்படி? கல்யாணம் உங்க சொந்த விஷயம்...? ஆனா இதுக்கு ரெண்டு பேர் வேண்டுமே... நீயா விரும்பி போனியா... அல்லது யாராவது உன்னை ஏமாத்திட்டாங்களா... உன்ன பார்த்தா ஏமார்ற ஆளு மாதிரி தெரியல... ஏமாற்றுகிற ஆள் மாதிரி தான் இருக்கு... எப்போதுமே ஏமாத்துறவங்க மத்தவங்களுக்கு தான் பிரச்சினை வர்ற மாதிரி பண்ணுவாங்க... அது எப்படி உன் விஷயத்தில் மட்டும் உல்டாவா... உனக்கே பிரச்சினை வர்ற மாதிரி நீ நடந்து இருக்க...? என்று கேட்டுவிட்டு மெலிதாக சிரிக்க...

கோபத்தில் ரங்காவுக்கு பேச்சு வராமல் திணறுவதைப் பார்த்த சரவணன், அவள் கையைப் பிடித்து தரதரவென்று இழுத்துக்கொண்டு தனது காருக்கு சென்றான்... அவர்கள் செல்ல, செல்ல உபேந்திராவும் அவனை சுற்றி நின்றவர்களும் சிரிப்பது

இவர்கள் இருவருக்கும் நன்கு கேட்டது.

“விடுங்க… விடுங்க என்னை… நான் ரெண்டுல ஒண்ணு அவங்களை பாத்துட்டு வரேன்…!” என்று கத்தியவளை கண்டுகொள்ளாமல் காரின் பின்பக்கம் ஏற்றிவிட்டு தானும் ஏறி காரை கிளப்பியவன் கோபத்தில் ஆக்சிலேட்டரை மிதித்தான்…

“சரவணன் நிறுத்துங்க… அவங்க பாட்டுக்கு பேசிட்டே போறாங்க… பதில் சொல்ல விடாமல் என்னை ஏன் இழுத்துட்டு வந்தீங்க…?”

“அங்க நீ என்ன பேசினாலும் அது எடுபடாது ரங்கா…! அவங்க வேணுமின்னே பேசுவாங்க… உன்னோட நிலைமை இப்ப வேற… நீ உன்னை பொறுத்த அளவுல நியாயமாக இருக்கலாம்…

ஆனால் சமூகத்தைப் பொறுத்த அளவுல இது தப்புன்னு காலம் காலமா மனசுல பதிஞ்சு இருக்கிற ஒரு விஷயம் இது… அதை அவ்வளவு சீக்கிரம் அழிக்க முடியாது… அதுக்கு இன்னும் நிறைய தலைமுறை மாறனும்…"

“இப்படி சொல்லி, சொல்லிதான் பெண்களை அந்த காலத்துல இருந்தே அடிமைப்படுத்தி வச்சிருக்கீங்க…”

"பெண்ணியமா…?"

“அப்படி எங்களை ஆக்குனதே நீங்க தானே…!”

“இல்லைன்னு சொல்லல… பெண்களுக்கு அந்த காலத்துல யாரும் நியாயம் செய்யல… உண்மைதான்… ஆனா இப்ப காலம் அப்படி இல்லை… நிறைய மாறிடுச்சு…

எந்தப் பெண்ணும், இப்ப யார் பேச்சையும் கேட்டு, அடங்கி ஒன்றும் இருக்கிறது இல்லை… அவங்களோட ரைட்ஸ் கேட்டு வாங்கிக்கிறாங்க… அதைவிட முக்கியம் இன்னைக்கு பெற்றவர்களே பெண்களை கேட்டு அவங்க விருப்பத்தை நிறைவேத்தறாங்க…!”

“இருந்தாலும் ஆண் பெண் உறவு அப்படின்னு வரப்ப பெண்களை தானே இழிவுபடுத்தி பேசுறீங்க…!”

“உண்மைதான் ரங்கா இல்லைன்னு சொல்லலை… நான் கொஞ்சம் வெளிப்படையாவே கேட்கிறேன்… ஒரு ஆணால் எந்த நிலைமையிலும் தகப்பனாக முடியும்… ஆனால் ஒரு பெண்ணால் குறிப்பிட்ட வயது வரைதான் தாயாக முடியும். இது எதனால…? ஒரு நிமிஷம் இதை யோசிச்சு பார்த்தியா…?

“இயற்கையின் படைப்பு அப்படி…? ஆனா அதை அவங்க அட்வாண்டேஜா எடுத்துக்கிறாங்க…!”

“கரெக்டு தான்... ஆண்கள் அதை யூஸ் பண்ணிக்கிறாங்க... ஆணும், பெண்ணும் சமம்... அப்படின்னு நீங்க சொல்றீங்க...? அது சரிதான்... அப்படின்னாலும் இயற்கை ஏன் அவர்களை இப்படி வித்தியாசமாக படைச்சிருக்கு...?”

அவள் பதில் சொல்லாமல் மௌனமாக வரவே, “நான் எனக்கு தெரிஞ்ச பதில் சொல்றேன் சரியான்னு பாரு... மன உணர்வுகளால் ஆணும் பெண்ணும் சரி சமம் தான்... இயற்கையின் படைப்பில் உடல் அமைப்பில் இருவருக்குமே வேறுபாடு இருக்கு...

காரணமாத்தான். பெண் என்பவள் உருவாக்குபவள்... சக்தியின் சொரூபம்... ஆனால் அந்த அக்கினி அவளுக்குள் என்றும் அணையா நெருப்பா உள்ளுக்குள் தான் தெரியுமே தவிர வெளியே தெரியாது...

அந்த அக்னி உள்ளுக்குள் இருக்கும் வரைதான் அவளுக்குப் பெருமை... அக்கினி வெளியே வரும் போது அவளையும், அவளைச் சார்ந்தவர்களையும் உருத் தெரியாமல் அழித்துவிடும் இதுதான் நிஜம்...

ஆண் என்பவன் காப்பவன்... சிவனின் சொரூபம்... பெண் உருவாக்குபவர்களை, அதாவது தங்களது மக்களை குடும்பத்தை காப்பவன் ஆண்...

அதற்குரிய பலமும், புத்தியும் இருக்க வேண்டும் என்பதற்காக அவனின் உடல் அமைப்பு வேறுபட்டது… உண்மையில் ஆணும், பெண்ணும் சமம் என்றாலும் ஒருவருக்கு ஒருவர் ஒப்பு நோக்கக் கூடிய தகுதி இல்லாதவர்கள்…!’’

"ஒப்புநோக்கும் தகுதி இல்லேன்னா அப்புறம் எதுக்கு கம்பேர் பண்றாங்க…?"

"அது தான் சொல்றேன். பெண்ணும், ஆணும் அவங்க ஒருத்தர ஒருத்தர் கம்பேர் பண்ண வேண்டிய அவசியமே இல்லை… நான் பெரிது… நீ பெரிது… நீ ஏன் இந்த வேலையை செய்யக் கூடாது… நான் செய்யலியா… வேலைக்கு போயிட்டு வந்து நான் வீட்டு வேலை பார்க்கலியா… உனக்கு மட்டும்தான் உரிமையா…? இந்த மாதிரி கம்பேர் பண்ண வேண்டிய அவசியமே இல்லை…

பெண்ணுக்கு என்று தனியான பொறுப்புகள் கடமைகள் இருக்கு… அதே மாதிரி ஆணுக்கும் தனியான பொறுப்புகள் கடமைகள் இருக்கு… அத ஒருத்தருக்கு ஒருத்தர் சரியாக செய்தாலே போதும்… அதையும் மீறி, கணவனுக்கு மனைவி உதவி செய்வதும், மனைவிக்கு கணவன் உதவி செய்வதும் அன்பின் ஆழத்தால் நடக்கவேண்டுமே தவிர கட்டாயத்தால் நடக்க கூடாது…

துரதிஷ்டவசமாக இப்போ பெண்கள் பொருளாதாரத்துக்காக வெளிய வராங்க… என்னைக் கேட்டால் அதுதான் அவர்களுக்கு மிகப்பெரிய பிரச்சினை கொடுக்குது… வீட்டை விட்டு வெளியில் வர ஒவ்வொரு பொண்ணும் வெளி வேலையையும், வீட்டையும் சேர்ந்து சுமக்கிறாள். அதனாலதான் அவளுக்கு கோபமும் டென்ஷனும் அதிகம் வருது… அதை வேலையில் காட்டும் போதுதான் பிரச்சினை…

என்ன கேட்டா வீட்டிலிருந்தபடியே ஏதாவது வருமானம் செய்கிறது தான் பெண்களுக்கு சேப்டி, பிளஸ் டென்ஷன் கிடையாது. ஆனால் நான் இதைச் சொன்னால் ஆணாதிக்கம் என்று சொல்லுவீங்க…

ஆணாதிக்கம், பெண்ணாதிக்கம் தனித்தனியா எதுவும் கிடையாது. எல்லாம் அவரவர் மனசுப்படி… ஆணோ, பெண்ணோ இரண்டு பேர் சேர்ந்து இருந்தால், ஒருத்தருக்கு ஒருத்தர் அனுசரித்து, விட்டுக்கொடுத்து போகணும்… அதுதான் நியதி… நியதிகளும், கட்டுபாடுகளும் இருவருக்கும் பொதுவானவை… இதை ஆணுக்கு என்று ஒரு விதமாகவும், பெண்ணுக்கு ஒரு விதமாகவும் உருவாகியது யார்…?''

''நீங்க தான்…'' என்று ரங்கா அவசரமாய் சொல்ல…

“உருவாகியது அவர்களாக இருந்தாலும்… அதற்கு தண்ணீர் ஊற்றி உரம் போட்டு வளர்த்து யார்…? பெண்களாகிய நீங்கள்… ஏய், அவன் ஆம்பிளைப் பையன்… அவன் எதுக்கு பெருக்கணும்… அவன் எதுக்கு பாத்திரம் தேய்க்கணும்… அவன் எதுக்கு சமைக்கணும்…? ஆம்பிளப் பிள்ளை அழக் கூடாது… அண்ணன் சொன்னால் கேட்டுக்கணும்… தம்பியா இருந்தால் கூட கேட்டுக்கணும்… ஏன்னா அவன் ஆம்பிளைப் பையன்… இப்படி சொல்லி வளர்ப்பது யார்… பெண்களாகிய நீங்கள்… அப்புறம் எப்படி மொத்த குற்றத்தையும் ஆண்கள் மேல் சுமத்துகிறீர்கள்…?”

சரவணன் பேச, பேச அதில் உள்ள உண்மை சுட அவள் மௌனமானாள்… சரவணன் மேலும் “உனக்கு எதனால ஆண்கள் மேல இவ்வளவு வெறுப்புன்னு எனக்கு தெரியல… ஆண் குழந்தையோ, பெண் குழந்தையோ சரியானபடி வளரலைன்னா அதுக்கு காரணம் அந்த பெற்றோர் தான்…! அதை விடுத்து நீ எதுக்கு ஆண் சமுதாயம் மேலேயே ஒரு கோபத்தை வைத்துவிட்டு இந்த மாதிரி பண்ணின…?

"எனக்கு என்னவோ ஆண்களையே சுத்தமா பிடிக்கல… அதனால கல்யாணமும் பிடிக்கல…!”

"அப்ப இந்த குழந்தைகளை பெத்து நீ ஆளாக்கிற வரை நிறைய கேட்க வேண்டி இருக்கும்… இந்த இடத்தில் திரும்ப

பேசினா, அது உனக்கு தான் அசிங்கம்… அமைதியா போய் பழகு… என் இடத்துல வாசு இருந்தாலும் இதுதான் சொல்லி இருப்பார்…!" சரவணன் முடித்துக் கொண்டான்.

சரவணனே அவளை கொண்டுவந்து அவளது வீட்டில் இறக்கிவிட்டு விட்டு சென்று விட்டான். ‘‘என்ன ரங்கா யார் கூட வந்தே…?’’ எனறு பாட்டி கேட்க…

‘‘சரவணன் கூட தான் வந்தேன் பாட்டி…’’ என்று சொன்னவள் நேராக தனது அறைக்கு சென்று அங்கு உள்ள சேரில் உட்கார்ந்து காலை நீட்டி தலையை பின்னால் சாய்த்து கண்களை மூடிக்கொண்டாள்…

அவளுக்காக மோரை எடுத்துக்கொண்டு வந்த பாட்டி ‘‘ரங்கா…’’ என்று தோளை தட்டி ‘‘இத கொஞ்சம் குடிம்மா…!’’ என்றார்.

‘‘எனக்கு வேண்டாம் பாட்டி…’’

‘‘உனக்கு வேண்டாம். ஆனா உன்ன நம்பி, இரண்டு உயிர் இருக்கு இல்லையா…! அதுக்காகவாது கொஞ்சம் குடி…! என்று சொல்லவும் மறுக்கமுடியாமல் வாங்கிக் குடித்தாள்.

‘‘ஏன் சரவணனை உள்ள கூப்பிடல…?’’

“சாரி… தோணலை பாட்டி…!”

“ஏன்…? என்ன பிரச்சனை…? என்று கேட்டதும் அதுவரை பொறுத்துக் கொண்டு இருந்தவள் தாங்க முடியாமல் அத்தனையும் பாட்டியிடம் கொட்டினாள்…

அவள் அருகில் உட்கார்ந்து கையை பிடித்துக் கொண்ட பாட்டி, “வேண்டாம் ரங்கா, வருத்தப்படாத… இது இயற்கைதான்… இப்படியெல்லாம் நடக்கும்னு எனக்கு தெரியும்… அதனாலதான் நான் வேண்டாம்னு சொன்னேன்…!

“எனக்கும் தெரியும் பாட்டி…! நான் இல்லைன்னு சொல்லலை…! நான் யார் வம்புக்காவது போனால் தானே அவங்க என்னை பேசணும்…! இவருக்கு என்ன.,. இவர் கூட நான் இன்னைக்கு பேசக்கூட இல்லை… ஏன் அந்த கேசுக்கு அப்புறம் நான் அவரை பாக்க கூட இல்ல…!”

“அது அப்படித்தான் ரங்கா… பொதுவாகவே ஆண்களுக்கு ஈகோ ஜாஸ்தி… அதிலும் தொழிலில் மிக உயரத்தில் இருப்பவர்களுக்கு, தன்னை விட்டால் யாருக்கும் எதுவும் தெரியாது என்ற கர்வம் இருக்கும்… நீ ஜெயித்தது அந்த கர்வத்தை… அந்த ஈகோவை… பிறகு எப்படி அவரால் அதைத் தாங்கிக் கொள்ள முடியும்… அதற்கு பதிலடி கொடுக்கத்தான்

இந்தப் பேச்சு…!

“அதுக்காக என்னோட பர்சனலை பேசக்கூடிய உரிமையை யார் கொடுத்தது…?”

“நீ தான் கொடுத்தே…! நீ கொடுத்தேன்னா… நேரடியாக கொடுக்கல… நீ அவரை தோல்வியடையச் செய்து அதன் மூலம் அவருக்கு உன்னை பழி தீர்த்துக் கொள்ளக் கூடிய வாய்ப்பை கொடுத்தே… அவருக்கு இன்னைக்கு அந்த வாய்ப்புக்கு வசதியாக, விதி மீறிய உன்னுடைய செயல் அமைந்தது விட்டது…!

“பழிதீர்க்கணும்னா இப்படித்தான் பேசுவாங்களா…?”

“இதை விட மோசமா பேசுவாங்க… அதுதான் உண்மை… உனக்கு தெரியல ரங்கா. இந்த உலகத்துல ஆண்களுக்கு உடல் வலிமை ஜாஸ்தி… பெண்களுக்கு மனவலிமை ஜாஸ்தி… ஒரு ஆண் உடல் பலத்தால் இன்னொரு ஆணை எளிதில் ஜெயிக்க முடியும்… அதே மன வலிமை கொண்ட பெண்ணை ஜெயிக்கிறது கஷ்டம்…

அதனால்தான் ஆண்கள் எடுத்த எடுப்பில பெண்ணோட மனவலிமையை சுக்குநூறாக்கி, அதுக்கு அப்புறம் அவங்க கிட்ட மோதும் போது ஈஸியா ஜெயிச்சிடலாம்… ஒருத்தருக்கு ஒருத்தர் மோதும்போது இந்த மாதிரியான தந்திரம் எல்லாம் ஆண்களுக்கு

நல்லாவே தெரியும்…

“அப்படியாவது ஜெயிக்கணுமா என்ன…?”

“என்ன அப்படி சொல்லிட்ட…? மனிதனோட இரத்தத்திலேயே போர்க்குணம் ஓடுது… அதுல ஜெயித்தல் ங்கிறது அவசியமாகிறது… ஜெயிக்கணும்னா ஒரே வழி எதிரியோட பலவீனம் எது என்று தெரியணும்…!

மகாபாரதத்தில் துரியோதனனோட பலவீனம் அவனுடைய தொடை வரை உள்ள இடைதான்… அதை கிருஷ்ணன் பீமனுக்கு சொல்லி, கதாயுதத்தால் அவனை அந்த இடத்தில் அடிக்க செய்து வெற்றியை பாண்டவர்களுக்கு பரிசாக அளித்தான்… துரியோதனனை பீமனை தவிர யாராலும் கொல்ல முடியாது… அதுவும் வேறு எங்கு தாக்கினாலும் அவனை கொல்ல முடியாது… பலவீனமான இடம் அந்த இடையோடு சேர்ந்த தொடைதான். அது தெரிந்தால் மட்டுமே பீமனாலும் அவனை வெற்றி கொள்ள முடிந்தது… இந்த தந்திரத்தை சொல்லிக் கொடுத்தது யார்…? இந்த உலகையே தன் மாய புன்னகையால் கட்டிப் போட்டிருக்கும் அந்தக் கள்வன்…

“அப்படி அவர் என்னை பேசியதால் கிடைத்தது என்ன…? எப்படி என்றாலும் கேசில் அவரை ஜெயித்தது ஜெயித்தது தான்…”

“உண்மைதான்… நீ இப்ப சொன்ன இல்ல. நான் அவரை ஜெயித்தது ஜெயித்தது தான்னு… இதுதான் நீ… உன்னுடைய உள்ளுணர்வு… அதில் உள்ள ஒரு சந்தோஷம் ஒரு சின்ன கர்வம்…

இன்றைக்கு உன் ஒழுக்கத்தை தவறாக பேசியதன் மூலம் நீ கொடுத்த தோல்விக்கு ஒரு சிறிய மருந்து, அவரது மனதுக்கு, ஒரு ஆத்ம திருப்தி…

பெருசா ஜெயிச்சுட்டேன்னு சொன்னியே… இந்த சமூகத்தில் உனது நிலை என்ன…? உனது மதிப்பென்ன…? உனது இடம் என்ன…? என்று கேட்பதன் மூலம் அன்றைய புண்ணுக்கு இன்றைக்கு அவர் மருந்து போட்டுக் கொண்டார்… அவ்வளவுதான்… சிம்பிள் கான்செப்ட்… விட்டுத்தள்ளு… எதையுமே சுமந்துகிட்டு இருந்தால் தான் கஷ்டம்… இறக்கி வச்சுட்டே இல்லை… நிம்மதியா தூங்கு…!

இன்னும் இந்த குழந்தை பிறந்த பிறகு நிறைய விஷயங்கள் இந்த மாதிரி நடக்கும்… எல்லாத்தையும் தூர தள்ள பழகிக்கோ…!” என்று சொன்ன பாட்டி தம்ளரை எடுத்துக்கொண்டு கிச்சனுக்குள் சென்றாள்…

பாட்டி சொன்னதை மனதிற்குள் அசை போட்டுக்

கொண்டிருந்த ரங்கா, “உண்மைதான் யாரோ, எவரோ சொன்னதற்காக நாம் ஏன் வருந்த வேண்டும்…? எனக்கு வேண்டியது என்னுடைய குழந்தைகள்… நடப்பது நடக்கட்டும் பார்த்துக் கொள்வோம்…” என்று மனதை சமாதானப் படுத்திக் கொண்டு, பாட்டி சொன்னது போல் சற்று நேரம் தூங்கலாம் என்று கட்டிலில் படுத்து கண்ணை மூடினாள்.

# அத்தியாயம் 18

காலேஜில் ஒரு சீனியர் மாணவன் கொஞ்ச நாட்களாக ரங்காவை பின் தொடர்ந்து கொண்டிருந்தான்...

அதை கவனிக்காத ரங்கா கூட படிக்கும் மாணவி அவனை வைத்து அவளைக் கிண்டல் செய்ய அதன் பின்னரே அவனை கவனித்தாள்...

பெரிய பணக்கார குடும்பத்து பையன், லோக்கல் அரசியல்வாதியின் மகன்... தங்கள் தொழில்களுக்கு ஏற்ற வக்கீல் வேண்டும் என்பதற்காகவே அந்த படிப்பை எடுத்து படிப்பவன் இந்த விஷயங்களை, கூட படிக்கும் தோழர்கள் மூலம் அறிந்தவள், வீட்டில் பாட்டி. வாசுவிடம் சொன்னாள்.

‘‘நான் வேணும்னா உனக்கு துணைக்கு வரட்டுமா...?’’

‘‘எத்தனை நாளைக்கு? இது ரெண்டாவது வருஷம். இன்னும் ஒரு வருஷம் இருக்கு... எல்லா நாளும் என் கூட வந்து கொண்டிருக்க முடியாது... என்னோட பிரச்சினையை நானே பாத்துக்கிறேன்... உங்ககிட்ட விஷயத்தை சொன்னேன் அவ்வளவுதான்...!’’

அவனுடைய அப்பாவை நேரிலேயே சந்திக்கச் சென்றாள்...

"என்னம்மா என்ன விஷயம்? எதுவும் டொனேஷனா அல்லது உதவியா...?''

‘‘உதவி தான் சார்...!'' தன்னைப் பற்றி சுருக்கமாக சொன்னவள், ‘‘சார் எனக்கு காதல், கல்யாணம் இதெல்லாம் நம்பிக்கை இல்லை... கொஞ்ச நாளா உங்க பையன் என்னை பின்தொடர்ந்து வர்றார்... அது எனக்கு தெரிய கூட செய்யாது... என் நண்பர்கள் சொல்லித்தான் தெரியும்...

அது தப்புன்னு சொல்ல மாட்டேன்... வயது கோளாறு... காதல், அந்தப் பொண்ணுக்கும் விருப்பம் இருக்கிற பட்சத்தில, ஓகே... ஆனால் எனக்கென்று சில கனவுகள் இருக்குது கல்யாணத்தை தவிர...

உங்க பையன் கிட்ட நேரடியா சொல்லி அவர் மனசசை சங்கடப் படுத்துவதை விட உங்க கிட்ட சொல்லி, நான் இதை பிரச்சினை இல்லாம முடிக்க நினைக்கிறேன்...

‘‘உங்க பையன் பின் தொடர்வதை தவிர வேற எந்த தொந்தரவும் கொடுக்கலை... தொந்தரவும் பண்ணலை.

இன்னும் சொல்லப்போனால் அந்தஸ்து, பணம் பழக்கவழக்கம் எல்லாத்திலேயும் எதுவுமே ஒத்துப் போகாத ஒரு வாழ்க்கை முறை எங்களது... இது உங்க கிட்ட சொன்னால்தான் புரியும்னு

உங்களை பார்க்க வந்தேன்... நீங்களே அவர் கிட்ட இதை சொல்லிடுங்க...!'' என்றவள் பதிலை எதிர் பாராமல் வந்து விட்டாள்...

அடுத்த இரண்டாவது நாளே அவள் முன்னால் வந்த அந்த சீனியர் மாணவன் தன் நடத்தைக்கு மன்னிப்பு கேட்டதோடு மட்டுமில்லாமல் காலேஜ் முடியும் வரை அவளுக்கு எந்த தொந்திரவும் யாரும் தராமல் பார்த்து கண்டான்,

***"Do not live someone else's life and someone else's idea of what womanhood is.womanhood is you."***

***-Viola Davis***

''ரங்கா இந்த கேஸ் பத்தி கொஞ்சம் குறிப்பு எடுத்து வைத்திரு... நான் அப்புறமா செக் பண்ணிக்கிறேன்... என்று சொல்லிவிட்டு ரங்கபாஷ்யம் கோர்ட்டுக்கு கிளம்பிவிட, ரங்கா அலுவலக லைப்ரரியிலிருந்து தடித்தடியாய் புத்தகங்களை எடுத்துக்கொண்டு வந்து வைத்து பக்கங்களை புரட்ட ஆரம்பித்தாள்...

''ஏய் என்ன பண்ற நீ...'' என்றவாறு அருகில் வந்த லீலா,

''எதுக்கு இவ்வளவு பழைய புத்தகம் எல்லாம்

எடுத்துக்கொண்டு வந்து வச்சிருக்க…'' என்று கேட்க…

''இல்ல லேட்டஸ்டா உள்ள புக்ஸ் எல்லாம் நமக்கு சாப்ட்வேர்ல கிடைச்சுடும்… ஆனா இதெல்லாம் சீனியரோட தாத்தா படிச்ச புக்ஸ்… இதில நெறைய விஷயம் நமக்கு கிடைக்க வாய்ப்பு இருக்கு,.

அந்த காலத்திலேயே எந்த மாதிரி ஜட்ஜ்மெண்ட் கொடுத்திருக்காங்க அப்படின்னு நம்ம ப்ரூவ் பண்ணி சொல்றப்ப ஸ்ட்ராங்கா நிக்கும்… அதுக்காக எடுத்து படிக்கலாம்னு. கொஞ்சம் எப்படியும் ஃப்ரீ டைம் இருக்குல்ல அதுல படிப்பேன்…!''

''என்னதான் சொல்லு நீ யோகக்காரி தான்… சீனியர் உன்னை ஒரு வார்த்தை சொல்ல அனுமதிக்க மாட்டேன் என்கிறார்…!'' என்று குத்தலாக லீலா சொல்ல…

''அப்படியா எனக்கு எதுவும் தெரியாது…'' என்று பொத்தம் பொதுவாக முடித்து கொண்டாள்.

இப்பொழுது அலுவலகத்தில் அலுவலக வேலை தவிர வேறு எதுவும் பேச வந்தால் நாசுக்காக ரங்கா ஒதுங்கி விடுவது, எல்லோருக்கும் தெரிந்துதான் இருந்தது… தேவையில்லாமல் மற்றவர்களுக்கு பதில் சொல்ல வேண்டியதில்லை என்று ஒதுங்கி செல்ல ஆரம்பித்தாள்.

இதனால் மற்றவர்கள் அவள் இல்லாத சமயம் அவளைப் பற்றி கூடி விவாதித்தனர்… இது தெரிந்த ரங்கபாஷ்யம் ஒரு நாள் அனைவரையும் கூப்பிட்டு, "எதுக்கு இந்த மாதிரி பண்றீங்க…?" என்று கேட்க, பதில் சொல்ல முடியாமல் அனைவரும் விழித்தனர்.

அவரே மேலும், ‘‘உங்கள்ல யாருக்கும் ஏதாவது பிரச்சினை என்றால், ரங்கா இந்த மாதிரி பேசி இருப்பாளா அதை மட்டும் யோசிங்க, தேவையில்லாம அடுத்தவங்கள பத்தி பேசாதீங்க… இதுக்கு மேல இந்த மாதிரி பேசுவதை நான் கண்டேன், என்னோட ஆபீஸ்ல அவங்க இருக்க வேண்டாம்…" எச்சரித்து அனுப்பி விட்டார். அதைத்தான் லீலா என்று சுட்டிக்காட்டினாள்…

லேசாக பார்த்துவிட்டு, ரங்கா புத்தகத்தில் ஆழ்ந்துவிட, லீலா தனது தோளைக் குலுக்கிக் கொண்டு தன்னுடைய இடத்திற்கு சென்று விட்டாள்…

இவள் சீனியரின் அறையில் இருந்ததால் வேறு யாரும் அங்கு இல்லை… லீலா சென்றதும், தனது வேலையில் கவனமாக மூழ்கிவிட்டவளை, ‘ம்கூம்’என்ற தொண்டை செருமல் இவ்வளவு உலகுக்கு அழைத்து வந்தது…

நிமிர்ந்து பார்த்தால் விஷ்வா… ஆறு மாதம் கழித்து ஊருக்கு வந்தவன் இன்று அவளை பார்க்க என்றே தந்தை இல்லாத சமயம் அலுவலகத்துக்கு வந்திருந்தான்…

கம்ப்யூட்டர் டேபிளுக்கு முன்னால் இருந்த சேரில் உட்கார்ந்து இருந்ததால் அவளது வயிறு, டேபிளின் முன் முகப்பு மறைத்திருந்தது...

அவளைப் பற்றிய விஷயம் தெரியாத விஷ்வா, "என்ன ரங்கா... எப்படி இருக்கீங்க...?'' என்று விசாரித்துக்கொண்டு அவளின் பின்னால் வந்து நின்றான்...

திடீரென்று பின்பக்கமிருந்து குரல் வரவும் நிமிர்ந்து பார்த்தே ரங்கா, விஷ்வா என்றதும் சற்று மிரண்டு போனாள்... 'அய்யோ இவனா... விஷயம் தெரிஞ்சு பேச வந்து இருக்கானா அல்லது விஷயம் தெரியாமலேயே பேச வந்து இருக்கானா, ஐயோ எப்படி இருந்தாலும் சமாளிக்க வேண்டுமே...!' என்று மனதிற்குள்ளேயே குழம்பியவள்...

வெளியே சிரித்துக்கொண்டு, வாங்க எப்ப வந்தீங்க...? நல்லா இருக்கீங்களா...?'' என்று கேள்விகளை அடுக்கினாள்...

"ரிலாக்ஸ்... எதுக்கு இத்தனை கேள்வி வரிசையா...! நேத்து வந்தேன்... நல்லா இருக்கேன்... போன தடவையே உன்னை பார்த்து பேசணும்னு நினைத்த விஷயம் அப்படியே இருக்கு... அதனால உன்ன பார்த்து பேச தான் இப்ப வந்தேன்...

ரங்கா எனக்கு உங்களை ரொம்ப பிடிச்சிருக்கு... நீங்க

சரின்னு சொன்னா, நான் உங்கள கல்யாணம் பண்ணிக்கிறேன். எங்க வீட்ல கண்டிப்பா சம்பாதிப்பார்கள்… உங்க பாட்டி கிட்ட… நான் எங்க அப்பா வீட்டு பொண்ணு கேட்கிறேன்…!"

'ஐயோ இவன் கிட்ட எப்படி மறுப்பு சொல்வது' என்று தெரியாமல் மொட்டையாக "சார் எனக்கு கல்யாணத்துல இன்ட்ரஸ்ட் இல்ல… ப்ளீஸ் நீங்க தப்பா நினைக்காதீங்க…"

"இன்ட்ரஸ்ட் இல்லைன்னா… என்ன அர்த்தம் புரியல…!"

"கல்யாணமே பண்ணிக்க போவதில்லை என்று அர்த்தம்…!"

"வாட்… கல்யாணமே பண்ணிக்க போறதில்லையா…!"

"இதுல என்ன இவ்வளவு ஆச்சரியம்… கல்யாணம் பண்ணிக்காம பொண்ணுங்க நிறையபேர் இல்லையா என்ன…!"

"இருக்காங்க அவங்களுக்கெல்லாம் எதோ ஒரு காரணத்தினால் கல்யாணம் நடக்காமல் இருக்கும். ஒண்ணு அவங்க அழகுல ஏதாவது மைனஸ்… அல்லது வேறு ஏதாவது குறை… இல்ல வசதி வாய்ப்புகள் கம்மியா இருக்கலாம்… அவங்களுக்கு ஏதாவது குடும்ப பொறுப்புகள் இருக்கலாம்… இப்படி பல விஷயம்… உங்களுக்கு இதுல என்ன விஷயம்…?"

"இந்த மாதிரி கமிட்மென்ட் இருந்தால்தான் கல்யாணம்

நடக்காமல் போகும்னு நீ யார் சொன்னா...? ஆண்களையே பிடிக்கலைன்னாலும் கல்யாணம் நடக்காமல் போகும்...!'' என்று ரங்கா சொன்னதும் சிரித்து விட்டான்...

''குட் ஜோக்... ஏன் ஆண்களை பிடிக்கல...? அப்படி பார்த்தா நீங்க ஆண்கள் கூட, ஐ மீன் ஆபீஸ்ல எல்லார் கூடவும் நல்லா தான் பேசுறீங்க... உங்களுக்கு ஒரு பிரதர் உண்டுன்னு என்று நான் கேள்விப் பட்டிருக்கேன். யார் கிட்டேயும் தேவையில்லாமல் கோபப்பட்டதில்லை, வெறுப்பை காட்டியதில்லை, அப்புறம் என்ன...?''

''சில விஷயத்துக்கு காரணம் எல்லாம் சொல்ல முடியாது...!''

''அது எப்படி காரணமில்லாமல் ஒண்ணு பிடிக்காமல் போகும்... எனக்கு என்னவோ இது உன்னோட உண்மையான பதிலை தெரியல... என்ன தவிர்க்க நீ சொல்ற பதிலா தான் தோணுது...!''

''ச்ச அப்படி எதுவும் இல்லை...''

அதற்குள் வேறு யாரோ அறைக்குள் வரும் அரவம் கேட்டு விஷ்வா வெளியில் சென்று விட்டான். அவன் போகும்வரை இவள் எழுந்திருக்காததால் அவளுடைய நிலையை அவன் அறியவில்லை...

மாலையில் கொஞ்சம் பொருள்கள் வாங்க கடைக்கு செல்ல வேண்டும் என்று வாசுவிடம் சொல்லி வைத்திருந்ததால் அவன் மதியம் சாப்பாடு முடிந்ததும் கிளம்பி ரங்காவை அழைக்க வந்து விட்டான்…

ரங்காவும் சீனியரிடம் போனில் சொல்லிவிட்டு கிளம்பினாள். அவள் வாசலுக்கு செல்லவும் அப்போதுதான் அம்மாவை வெளியே காரில் அழைத்துச் சென்றுவிட்டு திரும்பிய விஷ்வா, காரை நிறுத்திவிட்டு வீட்டுக்குள் நுழைய, வாசலில் அம்மாவுடன் ரங்கா நின்று பேசிக்கொண்டு இருப்பதை பார்த்தான்…

"என்னம்மா இன்னைக்கு சீக்கிரம் கிளம்புனா மாதிரி இருக்கு…!”

ஆமா ஆன்ட்டி கொஞ்சம் பர்சேஸ் பண்ணனும், அதுக்காக கடைக்கு போறேன்…!”

“மந்திலி செக்கப் எல்லாம் போயிட்டு வந்துட்டியா…? நல்லா இருக்கா…?”

“ஆமா ஆன்ட்டி…” என்று சொல்லிக்கொண்டே வாசலை பார்த்தவள், அங்கு விஷ்வா இவளது தோற்றத்தை பார்த்துவிட்டு அதிர்ந்து நிற்பது தெரிந்தது…

முகம் கருக்க கோபத்துடன் தன்னை உறுத்து விழித்தவனிடம்

என்ன பதில் சொல்வது என்று தெரியாமல், சங்கடமாய் அவனை நோக்கவும்,...

அவளது பார்வை சென்ற திசையை பார்த்த மீனா, "விஷ்வாவை பார்க்கிறாயா... நேத்துதான் வந்தான். என்னமோ இந்த தடவை கல்யாணத்துக்கு சரின்னு சொன்ன மாதிரி இருக்கு. இனிமே தான் பொண்ணு பார்க்க ஆரம்பிக்கணும் என்று சொல்ல...

"ஆண்களை பிடிக்காது என்று சொன்னவள் இப்படியா..." என்று அவன் மனதுக்குள் இகழ்ந்ததை அவனுடைய பார்வையே சொல்ல...

சற்று முன்னர் ஒரு தேவதை போல தன்னை நினைத்து பார்த்தவனின் பார்வை ஒரு நொடியில் மாறிய விதத்தை கண்டு முதன்முறையாக அவமானத்தில் சுண்டினாள்...

"சரிமா... மாமாவுக்கு சாப்பாடு வைக்கணும். விஷ்வா நீயும் வா..'' என்று சொல்லிவிட்டு மீனா நேராக உள்ளே சென்று விட...

மெதுவாக ஆனால் அழுத்தமான காலை வைத்து அருகில் நெருங்கிய வந்த விஷ்வா, "அது எப்படி? ஆண்களையே எனக்கு பிடிக்காது, என்று சொன்னவள் இதுக்கு...!'' என்று பார்வையாலேயே அவளது நிலையை குறிப்பிட்டு, கேள்வி கேட்டவன்... அவள் பதில் சொல்லாததை கண்டு...

"உன்ன நான் ரொம்ப பெருசா நினைசசிருந்தேன்… அனால் நீ இத்தனை கேவலமான பொண்ணா இருப்பேன்னு நான் சத்தியமா எதிர் பார்க்கலை…

அட, நான் அத்தனை கேட்டப்ப… இல்ல சார்… எனக்கு கல்யாணம் ஆகிடுச்சு அப்படின்னு ஒரு வார்த்தை சொல்லி இருக்கலாம்ல… ஒரு கல்யாணம் ஆனவ கிட்டேயா நான் என்னை கல்யாணம் பண்ணிக்க சொல்லி கேட்டே ங்கிறப்ப, எனக்கு எத்தனை அவமானமா இருக்கு, தெரியுமா…?''

திருமணமாகி தான் குழந்தை உண்டாகி இருக்கிறாள் என்று நினைத்துக் கொண்டவன் பேச… அதற்கும் அவள் 'ஐயோ இன்னும் உண்மை தெரிந்தால் என்ன நினைப்பான்' என்று மனதுக்குள்ளேயே தலையில் கையை வைத்துக் கொண்டவள், ''ச்ச…'' என்ற ஒற்றைச் சொல்லோடு விஷ்வா நகரவும், ஒரு விடுதலை உணர்வோடு வெளியேறினாள்…

அவசரமாக வந்து காரில் வெளியேறிய ரங்காவை பார்த்தவன், என்ன ரங்கா அவசரமா வர… மெல்ல வர வேண்டியதுதானே.

''இல்ல நீ வந்து நேரம் ஆச்சுல்ல…''

''அதனால் என்ன.? சரி… எங்க போகணும் சொல்லு…''

“ஏதாவது ஒரு பெரிய ஜவுளிக் கடைக்கு போ…”

அவர்கள் வீட்டுக்குப் போகும் வழியிலேயே உள்ள மிகப் பெரிய ஜவுளிக் கடையில் இறக்கிவிட்டு, "நீ உள்ள போய் வெய்டிங் ஹாலில் உட்காரு… நான் காரை பார்க் பண்ணிட்டு வந்துடறேன்…!” என்று சொல்லி விட்டு வாசு சென்று விட்டான்…

மெல்லப் படியேறி கீழ்தளத்தில் உள்ள வெயிட்டிங் ஹாலில் சோபாவில் அமர்ந்து அவள் சுற்று முற்றும் வேடிக்கை பார்த்தாள்…

பத்து நிமிடம் கழிந்தது வாசு வந்ததும், இருவரும் லேடிஸ் இன்னர் செக்சன் சென்றனர். வாசு அவளை உள்ளே அனுப்பிவிட்டு வாசலில் உள்ள சோபாவில் உட்கார்ந்தான்…

கொஞ்ச நேரத்தில் ரங்கா வந்துவிட, “முடிஞ்சுதா…” என்று கேட்ட வாசுவுக்கு…

“எனக்கு முடிஞ்சது…!” பாட்டிக்கு ரெண்டு சாரி எடுக்கணும்… அப்புறம் உனக்கு ஷர்ட்…”

"பாட்டுக்கு மட்டும் எடு… எனக்கு வேண்டாம்… என்று கூறிய வாசு அங்கே இருந்த பணியாளிடம் “வயதானவர்களுக்கு அணியும் காட்டன் சாரி உள்ள செக்சன் எது…?” என்று கேட்டு அவளை அழைத்து சென்றான்…

லிப்டுக்கு இவர்கள் போகவும், இடது புறம் இருந்த ஒரு பெரிய அறையில் இருந்து, வெளியே வந்த உபேந்திரா, கூடவே வந்த ஒருவரின் கையை பிடித்து குலுக்கி விடை பெற்று, லிப்டை நோக்கி நடந்தான்…

இவர்களும் லிப்டுக்காக காத்திருக்க,, அருகே வந்த உபேந்திரா, ரங்காவை பார்த்ததும் இகழ்ச்சியுடன் உதட்டை வளைத்து விட்டு, வாசுவைப் பார்த்து…

‘‘உங்க சிஸ்டர்னு தானே அன்னைக்கு நீங்க என்கிட்ட சொன்னீங்க…? உங்க கிட்டயாவது உண்மையை சொன்னாங்களா.? அல்லது நீங்களும் அவங்க மாதிரி தானா…?’’ என்று அக்கறையாய் கேட்பது போல கேட்க, அதில் உள்ள குத்தல், நக்கல் புரிந்த வாசு…

‘‘சார் உங்க வேலை எதுவோ அதை மட்டும் பாருங்க… அனாவசியமா எங்களைப் பத்திய பேச்சு வேண்டாம்…!’’ என்றான் அடக்கப் பட்ட கோபத்துடன்…

‘‘என்னோட வேலையைத்தான் பார்க்கிறேன்… என் வேலை விசயமா தான் இந்தக் கடைக்கு வந்துட்டு போறேன்…

இந்தக் கடை ஓனர் என்னுடைய கிளையன்ட்… அது தெரியுமா… அதே மாதிரி பெரிய பெரிய பிஸ்னஸ் மேன்

எல்லாரும் என்னோட கிளையன்ட்... ஆனா உங்க தங்கைக்கு ஒரு ஆள் கேஸ் கிடைச்சதும், என்னம்மா துள்றாங்க... அப்ப என்னோட எதிரியை பழிவாங்குவதும் என்னோட வேலைதான்...''

''சார் அது பிசினஸ். அவங்க அவங்க தொழில் அதுக்கும் சொந்த வாழ்க்கைக்கும் முடிச்சுப் போடுவது எந்த விதத்தில் நியாயம்...?'

''எப்படி நியாயம் இல்லை என்னோட ஃபிரண்ட் அமரேஷ் கேஸ்ல அவன் டைவர்ஸ் கேட்டது தப்பு அப்படின்னு உங்க தங்கை தானே சொன்னாங்க... ஆனா தப்பு ரைட் பத்தி சொல்றதுக்கு கூட ஒரு தகுதி வேணும்... அந்த தகுதி உங்க தங்கச்சி கிடையாது. ஏன்னா அவங்க தப்பானவங்க தானே...!'' என்பவன் லிப்டுக்காக அதிக கூட்டம் இருக்கவும் படி வழியாக நடந்து சென்று விட்டான்...

அவன் சென்றதும் லிப்டில் இறங்கி, காரில் ஏறி வீடு வந்து சேரும் வரை ரங்கா ஒரு வார்த்தை பேசவில்லை... கோபத்தில் கொதித்து கொண்டிருந்த மனதுடன் வந்த வாசு வும் ஒன்றுமே பேசவில்லை...

அவளை வீட்டில் இறக்கி விட்டு ''போயிட்டு வரேன் பாட்டி...'' என்று கிளம்பிய வாசுவிடம் ஒரு பார்சலை கொடுத்து

கீர்த்தியிடம் கொடுத்து விடு…'' என்று சொன்ன ரங்கா மேலே அவன் பேசுமுன் தனது அறைக்குள் சென்று விட்டாள்…

''என்ன வாசு உம்முன்னு போறான்…?''

''ஒண்ணுமில்லை…'' என்றவள் பேசாமல் படுத்து விட்டாள்… கண்மூடி படுத்திருந்த பேத்தியின் அருகில் வந்த பாட்டி அவள் நெற்றியை வருடிவிட்டு ''என்னடா என்ன பிரச்சனை…? உனக்கும் அவனுக்கும் சண்டையா…? அதான் கோபமா போய்ட்டானா…?''

கண் விழித்து பார்த்தபோது என் கண்களிலிருந்து கண்ணீர் வழியவும், என்னம்மா சொல்லு…? வயித்துல குழந்தை இருக்கும்போது, சிரிச்சுக்கிட்டே இருக்கணும், கோபப்படக்கூடாது, வருத்தப்படக் கூடாது… உன்னோட உணர்வுகள் அத்தனையும் உன்னோட குழந்தையை பாதிக்கும்… இதுக்கு தான் நான் உன்னை வெளியில போகாதேன்னு சொல்றேன்…

''வெளியில் போகாமல் வேலை பார்க்காமல் எப்படி பாட்டி வாழ முடியும்…? நான் எப்படி இருந்தால் இவனுகளுக்கு என்ன…?''

''அது நமக்கு தெரியுது… ஏதோ ஒரு விதத்துல அவங்களுக்கு புரியலை இல்லையா…? அப்படின்னா நீ எந்த விதத்திலேயோ அவங்களை பாதித்து இருக்கேன்னு அர்த்தம்…!'

“அதுக்கு நான் என்ன செய்றது…? நானா என்னை விரும்ப சொன்னேன்…?” என்று அவள் வாயை விட

‘இது என்ன புது கதையா இருக்கு’ என்று மனதுக்குள் நினைத்தபடி அவளிடம்…

“யாரும்மா…? என்ன சொன்னா…? சொன்னாதானே தெரியும்…!?”

ரங்க பாஷ்யத்தின் மகன் விஷ்வா பேசியது கூறினாள்… ‘நல்ல இடம்… கொஞ்சம் லேட்டா சொல்லிட்டான்…” என்று பாட்டி கூற…

‘முன்னாடியே சொல்லியிருந்தா என்ன செஞ்சு இருப்பீங்க…?”

“உன்ன சம்மதிக்க வைக்கவாது முயற்சி பண்ணி இருப்பேன்…!”

“நீங்க எப்ப சொல்லியிருந்தாலும் என்னோட பதில் நோ தான்…!”

“சரி விடு. அந்தப் பையன் உனக்கு கல்யாணம் ஆயிருச்சு அப்படின்னுதானே நினைத்து இருக்கான்… அப்படியே இருக்கட்டும்…”

“அது மட்டும் இல்லை. இன்னொரு விஷயமும் நடந்தது…” என்று உபேந்திராவை சந்தித்ததையும், வாசுவிடம் அவர் பேசியது சொன்னாள்…

‘இந்த பையன் எதுக்கு அடிக்கடி இவ விஷயத்தில் தலையிடறான்…?’ என்று யோசித்த பாட்டி, ‘இதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டும்’ என்று மனதுக்குள் தீர்மானித்துக் கொண்டார்.

“சரி விடு… நான் இட்லி பண்ணி வச்சிருக்கேன்… சாப்பிட்டு ரெண்டு பேரும் தூங்குவோம். அப்புறம் ஒரு விஷயம் சொல்ல மறந்துட்டேன்… தாராவை ஆஸ்பத்திரில சேர்த்து இருக்கு… சரவணன் போன் பண்ணி சொன்னான்…”

“நம்ம வீட்ல இருந்து யாரும் போன் பண்ணலையா பாட்டி…?”

“இல்ல… ஆனா பணம் வேணும்னு மட்டும் கேட்டாங்க…?”

“யார் கேட்டா…?

“காயத்ரியை விட்டு கேட்டாங்க…!”

“ஓ… நீங்க என்ன சொன்னீங்க…?”

“நாளைக்கு காலைல வந்து வாங்கிட்டு போன்னு சொல்லி இருக்கேன்… சரி நம்ம வேலையை பார்ப்போம்… அவங்க

அப்படித்தான் தெரியும்... இதுல புதுசா வருத்தப்பட என்ன இருக்கு...!'' என்று சொன்ன பாட்டி சாப்பாடு எடுத்து வைக்க உள்ளே சென்று விட்டார்...

மறுநாள் அதிகாலையிலேயே காயத்ரி வந்து கதவை தட்ட, ''உள்ள வா...'' என்று அவளை அழைத்து உள்ளே உட்கார வைத்துவிட்டு பாட்டி வந்து ரங்காவை எழுப்பினார்...

''என்ன பாட்டி...?''

''காயத்ரி வந்திருக்கா...''

''ஓ... ஓ... இந்த வரேன்...''

''மெல்ல படக்குனு எழுந்ருந்திருக்க கூடாது. ஒரு சைடாக திரும்பி படுத்து ஒரு கையை மெல்ல ஊணி அப்புறம் தான் எழுந்திருக்கணும்...''

''பாட்டி இந்த குழந்தை பெத்துக்குறதுக்குள்ள நிறைய ரூல்ஸ் அண்ட் ரெகுலேஷன்ஸ் உங்ககிட்ட இருந்து தெரிஞ்சுக்கணும் போல இருக்கு...!'' என்று வேடிக்கையாய் சொல்லிக்கொண்டே மெல்ல எழுந்தவள், முகம் கழுவ சென்றாள்...

''தாரா எப்படி இருக்கா...?''

''நல்லா இருக்காங்க பாட்டி... ஆனால் சிசேரியன்தான்

பண்ணனும்னு டாக்டர்ஸ் சொல்லியிருக்காங்க…?''

''சிசேரியனா நிறைய செலவாகுமே…?''

''ஆமாம், அம்மாகிட்டேயும் இவர் கிட்டேயும் அவ்வளவு பணம் இல்லை… அதான் உங்க கிட்ட கேக்க சொன்னாங்க…!'' அவள் சொல்லிக்கொண்டு இருக்கும்போதே ரங்கா வந்துவிட…

''அக்கா எப்படி இருக்கீங்க…?'' கேட்ட காயத்ரி எழுந்து வந்து அவள் கையைப் பிடித்துக்கொண்டாள்…

''நல்லா இருக்கேன். நீ எப்படி இருக்க? வீட்ல அம்மா அப்பா மோகன் எல்லாரும் எப்படி இருக்காங்க…?''

''எல்லாரும் நல்லா இருக்காங்க அக்கா… ஆமா வயிறு பெருசா இருக்கு உங்களுக்கு…! தாரா அக்காவுக்கு இவ்வளவு பெருசா இல்லையே…?''

''ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு மாதிரி இருக்கும்… நாளைக்கு உனக்கு எப்படி இருக்கும்னு எப்படி சொல்ல முடியும்…?'' பாட்டி பதில் சொல்ல காயத்ரிக்கு வெட்கம் வந்தது…

''நீ மட்டும் தனியாவா வந்த…?''

''இல்ல அக்கா எனக்கு உங்க வீடு தெரியாது. அவர்தான்

கூட்டிட்டு வந்தாரு...!''

''அப்ப அவன் எங்க...?''

''வாசல் கேட்டுக் கிட்டே நிற்கிறார்... நான் உள்ளே வர சொன்னேன். மாட்டேன்னுட்டார்...''

''அதற்குள் பாட்டி ஐம்பதினாயிரம் ரூபாய் எடுத்துக்கொண்டு வந்து ரங்கா கையில் கொடுக்க, ரங்கா அதை காயத்ரியின் கையில் கொடுத்து ''இவ்வளவுதான் எங்க கிட்ட இருக்கு... கொஞ்சம் சிக்கனமா செலவு பண்ண சொல்லு அம்மாவை...!'' என்று கூறி அவளுக்கு காபி கொடுத்து உபசரித்து அனுப்பி வைத்தாள்...

அவள் சென்றதும் பாட்டி, ''வாசல் வர வரத்தெரியுது... ஆனால் வீட்டுக்குள்ள வந்து நீ எப்படி இருக்க, என்று ஒரு வார்த்தை கேட்க மனசு இல்ல... !'' என்று புலம்ப...

''தெரிஞ்சதுதானே விடுங்க... ஏற்கனவே என்னை பிடிக்காது... இப்ப என் மேல கோபம் வேற...!

''அதான் கோபம் இருக்குல்ல... அப்புறம் எதுக்கு பணம் கேட்டு விடணும்...!

''இவ்வளவு நாள் எந்த கேள்வியும் கேட்காமல் நீங்க தானே

உதவி செஞ்சீங்க… இப்ப நான் தான் இந்த மாப்பிள்ளையை தேடிபிடித்து கல்யாணம் பண்ணி கொடுத்தேன்… அப்ப நீயே செய்… அப்படின்னு சொல்லாமல் சொல்றாங்க… யாருக்காக செய்யணுமோ, இல்லையோ… சரவணனுக்காக நாம இது செஞ்சுதான் ஆகணும் பாட்டி… விட்டு தள்ளுங்க…!'' என்றவள் சற்று நேரம் நடந்து விட்டு வருவதாக கூறி கீழே இருக்கும் பார்க்குக்கு சென்றாள்…

விஷ்வா மனம் தாளாமல் அப்பாவிடம், ''என்னப்பா ரங்காவுக்கு கல்யாணம் ஆயிடுச்சுன்னு நீங்க சொல்லவே இல்ல…?'' என்று கேட்க…

''கல்யாணம் ஆயிடுச்சுன்னு யார் சொன்னா…?''

''கல்யாணம் ஆகலையா…? என்ன சொல்றீங்க…? அவங்க பிரக்னென்சி போல தெரியுது…!''

''இப்ப எதுக்கு உனக்கு அது…? உன் வேலை எது உண்டோ அதை மட்டும் பாரு…?'' என்று மகனிடம் ரங்கபாஷ்யம் சத்தம் போட…

''இல்லப்பா நான் கல்யாணம் பண்ணிக்கிறேன் சொன்னதே அவளை மனசுல வச்சு தான்… அதனால எனக்கு உண்மைத் தெரிஞ்சாகனும்…'' என்று சொன்ன மகனை, சற்று பரிதாபத்துடன்

பார்த்தார்…

“என்னப்பா என்ன விஷயம்…?”

“இதை நீ கொஞ்ச நாளைக்கு முன்னாடியே சொல்லி இருந்திருக்கலாம்…!”

“ஏன் அப்படி சொல்றீங்க…!”

“ஆக்சுவலா எனக்கும் அந்த எண்ணம் இருந்தது… சரி, அவங்க வீடு, இப்ப அவளோட வருமானத்தை நம்பி தான் இருக்குது. கொஞ்ச நாள் ஆகட்டும் அப்படின்னு நினைச்சேன். அது தப்புன்னு தோணுது. அப்பவே ஒரு வேளை நான் பேசி இருந்தேனா, அவங்க வீட்ல கல்யாணத்துக்கு சம்மதிச்சு இருப்பாங்களோ என்னவோ…?”

“ஏன் இப்ப நீங்க கேட்டா அவங்க முடியாதுன்னு சொல்லிட்டாங்களா…?”

“கேட்கக்கூடிய சூழ்நிலையிலேயே அவங்க இல்லை…! இதுக்கு மேல எதுவும் கேட்காதே… என்னை நம்பி ஒருத்தர் என்கிட்ட சொன்ன உண்மையே நான் எக்காரணம் கொண்டும் வெளியில் சொல்ல மாட்டேன்… அவளை மறந்துடு… உனக்கு வேற பொண்ணு பார்க்கலாம்…!” என்று சொல்லிவிட்டு அவர்

வெளியில் சென்று விட...

அம்மாவிடம் என்னம்மா ஒரே மர்மமா இருக்கு... "லவ் மேரேஜா, அல்லது ஏதாவது தப்பு தண்டா நடந்துருச்சா...?"

"நான் கேட்டதற்கும் இதே பதில்தான்டா... அதுல அவகிட்ட எதுவுமே கேட்க கூடாது, அவளுக்கு இடையில் ஏதாவது குடிக்க கொடுன்னு எனக்கு ஆயிரம் அட்வைஸ்...

கேட்டதற்கு நான் சொன்னதை செய்னு, ஒரே திட்டு வேற... அதனால நான் எதுவுமே கேட்கல...

ஆபீஸ்ல எல்லாரும் அவளை தப்பா தான் பேசுறாங்க. ஆனா அவள் எதைப்பற்றியும் கவலைப் பட்ட மாதிரியும் தெரியல. காதில் போட்டுக்கவும் இல்லை... வர்றா... அப்பா சொன்ன வேலையை செய்றா... கிளம்பி போய்டுறா... இப்படித்தான் நடக்குது..." தன் பங்கிற்கு மிகவும் புலம்பி விட்டு சென்றார். மொத்தத்தில் அவனுக்கு எந்த விஷயமும் தெரியவில்லை...

மதியம் இரண்டு மணிக்கு தாராவுக்கு பெண் குழந்தை பிறந்தது. சிசேரியன், ஆபரேஷன் பண்ணி தான் குழந்தையை வெளியில் எடுத்தனர்...

சரவணனுக்கு பெண்குழந்தை என்பதில் மிகவும் மகிழ்ச்சி... மோகனிடம் "பாட்டிக்கு சொல்லியாச்சா...?" என்று கேட்க அவன்

தயங்கி நின்றதைப் பார்த்து ‘சொல்லவில்லை’ என்று புரிந்து கொண்டு, அனைத்து விஷயத்தை தெரிவித்தான்.

"ரொம்ப சந்தோஷம் தாராவும் குழந்தையும் எப்படி இருக்காங்க...?"

"நல்லா இருக்காங்க... ஆபரேஷன் தான்... அவ இன்னும் மயக்கத்தில் இருந்து எந்திரிக்கலை...!

"ரங்கா கிட்ட சொல்லிடுங்க...!"

"சரி..." என்ற பாட்டி விஷயத்தை ரங்காவிடம் போன் பண்ணி சொன்னாள்...

“ஈவினிங் கிளம்பி இருங்க. நம்ம நாலு பேரும் போய் பார்த்துட்டு வருவோம்...!”

“தேவையா ரங்கா...!”

“தேவைன்னா தேவை... தேவையில்லை என்றால் தேவையில்லை... என்னோட ஆபீஸ்ல கூட வேலை பாக்குற ஒருத்தருக்கு குழந்தை பிறந்திருக்கு... நாம போய் பார்ப்போம்..."

"சரி" என்ற பாட்டி அரைமனதாய் சம்மதித்தாள்.

நாலு மணிக்கு அலுவலகத்திலிருந்து ரங்காவும், வாசுவும் திரும்பிவிட்டனர்... அதன் பிறகு கிளம்பி வாசு, ரங்கா கீர்த்தி,

பாட்டி நான்கு பேருமே ஹாஸ்பிடலுக்கு தாராவை பார்க்க சென்றனர்…

ஏற்கனவே காயத்ரியிடம் இந்த ஹாஸ்பிடல் என்று கேட்டு வைத்திருந்ததால் நேராக அங்கு சென்றனர்

ரூம் நம்பர் தெரியுமா…?

“தெரியாது…” என்றதும் வாசு ரிசப்சனில் விசாரித்து விட்டு அங்கு அழைத்துச் சென்றான்…

அவர்கள் செல்லும்போது அறைக்கு தாராவையும் குழந்தையை மாற்றி இருந்தனர்… அம்மாவும், ராஜமும் தாராவுக்கு துணை இருந்தனர்…

வைதேகி அவர்களை வா, என்று கூட கேட்கவில்லை ராஜம் மட்டும் பொதுவாக எல்லாரையும் பார்த்து “வாருங்கள்…” என்றார்…

நேராக தொட்டிலுக்கு சென்று குழந்தையை பார்த்தவளுக்கு சின்னஞ்சிறு ரோஜா ஒன்று கை கால் முளைத்து இருப்பதுபோல் இருந்தது.

பெண் குழந்தை நல்ல கலராகவும் தாராவின் ஜாடையிலும் அழகாக இருந்தது,…

டாக்டர் எழுதி கொடுத்த மருந்து சீட்டை வாங்க போயிருந்த சரவணன் அறைக்குத் திரும்பியதும் பாட்டி, ரங்காவை பார்த்துவிட்டு சந்தோஷமாக ‘‘வாங்க, வாங்க…’’ என்றான்…

‘‘கங்கிராட்ஸ் சரவணன்…’’ என்று வாசு கட்டிப்பிடித்துக் கொள்ள ரங்கா,’’ வாழ்த்துக்கள்…’’ என்றாள்.

பாட்டிக்கு தனது அடுத்த தலைமுறையை பார்த்ததும் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது…

சரவணன் எல்லாருக்கும் சாக்லெட்டை எடுத்துக் கொடுத்துவிட்டு ‘‘உட்காருங்க…’’ என்று அங்கிருந்த நாற்காலியை நகர்த்தி போட்டான்…

‘தன்னை எப்படி இருக்கிறாய்? என்று ஒரு வார்த்தையாவது அம்மாவா தங்கையாவது கேட்பாரகள்’ என்று எதிர்பார்த்திருந்த ரங்கா, அவர்கள் இவளை வா என்று அழைக்காதது மட்டுமல்லாமல், ஏன் வந்தாய் என்ற ரீதியில் பார்த்து வைக்க, முதன்முதலாய் அவளுக்கு மனதுக்குள் வலித்தது…

தாராவின் அருகில் படுக்க வைத்திருந்த குழந்தையை பக்கத்தில் சென்று பார்த்து விட்டு தூக்க முனைந்த போது, ‘‘தொடாதே…’ என்று வைதிகேயின் குரல் கேட்டு, குழந்தையை தூக்க சென்ற கைகளை பின்னுக்கு இழுத்துக் கொண்டவள்

அம்மாவின் முகம் பார்த்தாள்.

அதில் தோன்றிய வெறுப்பையும், கோபத்தையும் பார்த்தவள், தன்னையறியாமல் தான் கையில் கொண்டு வந்த பொருட்களை தங்கையின் அருகில் வைத்து விட்டு திரும்பினாள்.

வைதேகியின் முகத்தை சரவணன் அதிருப்தியோடு நோக்கவும், மற்ற எல்லோரும் பார்க்கவும், வைதேகி, “இல்ல டாக்டர் யாரும் குழந்தையை தூக்க விடாதீங்க… இன்பெக்ஷன் ஆயிடும்னு சொல்லி இருக்காங்க… அதனாலதான் அப்படி சொன்னேன்…” என்று சமாளிக்கவும் யாராலும் எதுவும் சொல்ல முடியவில்லை.

தான் வாங்கி வந்து இருந்த குழந்தைக்கான பொருள்களை கொடுத்ததும், வாசுவின் முகம் பார்க்க அவளின் முகத்தையே பார்த்து இருந்த வாசு "போவோமா…” என்றான்…

சரவணனுக்கும் அங்குள்ள சூழ்நிலை புரிந்ததால் இதனால் ரங்காவின் நிம்மதி கெட வேண்டாம் என்று அவர்களை செல்ல அனுமதித்தான்…

“வாசு கொஞ்ச நேரம் கடற்கரையில் இருந்து வீட்டுக்கு போகலாமா…? கீர்த்தியும் கல்யாணம் ஆனதிலிருந்து எங்கேயும் போகல… என்ன கீர்த்தி போகலாமா…?”

“போகலாம்...” என்றதும் மெரினா பீச் சென்றனர்... அங்கு சற்று தள்ளி சென்று கொஞ்சம் கூட்டம் குறைவான இடம் பார்த்து அமர்ந்த ரங்கா, வாசுவையும், கீர்த்தியையும் அழைத்து “கொஞ்ச நேரம் அப்படியே நடந்துட்டு வாங்க... எப்ப பார்த்தாலும் வேலை, வேலைன்னு நீயும் அவளும் இருக்கீங்க... கொஞ்சம் ரிலாக்ஸ் பண்ணிட்டு வாங்க...’ என்று அனுப்பி வைத்தாள்.

# அத்தியாயம் 19

ரங்கா மூன்றாவது வருடம் கல்லூரியில் படித்துக் கொண்டு இருந்தாள்... ரங்கா புட் புராடக்ட்ஸ் நல்ல வளர்ச்சி கண்டு இருந்தது... வழக்கம் போல் எல்லோருக்கும் தீபாவளிக்கு ட்ரெஸ் எடுத்துக் கொடுத்தார் பாட்டி...

“தீபாவளிக்கு நீங்க எல்லோரும் இங்க வந்திடுங்க...” என்று அதிசயமாய் வைதேகி சொல்ல, பாட்டி “சரி” என்று சொல்லி வந்து விட்டார்...

“பாட்டி நாம வழக்கம் போல நம்ம வீட்டில கொண்டாடுவோம். அங்க போனா எதாவது பிரச்சினையை அவங்க இழுத்துடுவாங்க... வேண்டாம்...”

“அதெல்லாம் மாட்டாங்க... உங்க அம்மாதான் இந்த தடவை கூப்பிட்டு இருக்கா...!”

“அதனாலதான் எனக்கு சந்தேகமே பாட்டி...”

“ரங்கா அவ உன்னை பெத்தவ...!”

“பெத்தது மட்டும்தான் பாட்டி... அவங்களுக்கு நான் ஒருத்தியா இருந்திருந்தா தன்னோட குழந்தைன்னு நினைவு

இருந்து இருக்குமோ என்னவோ...? ஆனால் தனக்கு இன்னும் இரண்டு குழந்தைகள் இருப்பதால், அந்த ஏக்கம் வர வழியில்லை... அல்லது ஏதோ ஒன்று... என்னோட இடத்தை நிரப்ப ஆள் இருக்கு... தட்ஸ் ஆல்...!''

பாட்டியால் ரங்காவின் ஆதங்கத்திற்கு பதில் சொல்ல இயலவில்லை... தீபாவளிக்கு முந்தின நாள் சென்றனர்... எல்லோரையும் வாங்க, வாங்க என்று வீட்டில் உள்ள அனைவரும் வரவேற்க, பாட்டியும், வாசுவும் சந்தோசமாய் அவர்களுக்கு பதில் அளித்தனர். ஆனால் ரங்கா வழக்கம் போல் ஒட்டாமல் பதில் சொன்னாள்.

இரவு உணவு முடிந்ததும், எல்லோரும் அமர்ந்து பேசி கொண்டு இருக்க, ரங்கா படிக்கும் சாக்கில் தனது புத்தகத்தை விரித்து வைத்துக் கொண்டு பேச்சை கவனித்து கொண்டு இருந்தாள்...

கேசவன் அம்மவிடம், ‘‘அம்மா உன்னோட கம்பெனி நன்னா போறதா...?'' என்றார்...

‘‘ஓரளவு போகுது...''

‘‘அம்மா அது முழுக்க முழுக்க உன்னோடது தானே...!''

‘‘ஆமா அதுக்கு என்ன இப்போ...?''

“இல்ல… நம்ம மோகனை உன் கூட கூட்டு சேர்த்துட்டு தொழில் கத்துக் கொடுத்தால், கொஞ்ச நாள் கழித்து உனக்கு வயசாகும் போது அவன் பார்த்துப்பான்… என்ன சொல்றே… என்ன இருந்தாலும் உன்னோட பேரன் தானே…?”

“என்னோட பேரன் தான்… யார் இல்லேன்னா…? ஆனால் இவனுக்கும், உழைப்புக்கும் ரொம்ப தூரம் ஆச்சே… சும்மா அங்க உட்கார்ந்து கல்லா பெட்டி எண்ண முடியாது…!”

“ஹிஹி… அதெல்லாம் கத்துக்குவான்…!”

“அப்ப ஒண்ணு பண்ணு… நாளேல இருந்து அங்க அவனை வேலைக்கு வர சொல்லு… டெய்லி சம்பளம் போட்டு கொடுத்திடலாம்…!”

“என்னது தினக் கூலியா…?” என்று வைதேகி ஆங்காரமாய் கேட்க…

“ஏன் தினக் கூலின்னா மட்டமா…? அடிப்படை வேலை எல்லாம் தெரிஞ்சா நல்லது… ஏன்னா இது சின்ன கம்பெனி… ஒரு வேளை வேலை ஆள் வரலைன்னாலும் நாம மானேஜ் பண்ணலாம்…!”

“ஏன் அதுக்கு கம்பெனில இருக்கிற மத்தவங்க செய்ய

வேண்டியதுதான்… நாளைக்கு முதலாளி ஸ்தானத்துக்கு வரப் போறவன் கிட்ட இப்படி தான் வேலை சொல்வீங்களா… வேலைக்காரன் வேலைக்காரந்தான், முதலாளி, முதலாளி தான்…" என்று ஜாடையாய் வாசுவை பார்க்க…

"உண்மைதான்… நானும் பாட்டியுமே அங்க வேலைக்காரங்க தான்… அப்ப உங்க பையனும் வேலை பார்க்கிறது தப்பில்லை… ஏன்னா கம்பெனி முதலாளி வாசுதான்… அவன் நினைச்சா இந்த நொடி எங்க ரெண்டு பேரையும் வேலையை விட்டு தூக்கி விடும் ரைட்ஸ் இருக்கு…" என்றவள் அடுத்த நொடி பாட்டியையும், வாசுவையும் கிளப்பிக் கொண்டு வந்து விட்டாள்…

எனக்கு தெரியும், இப்படித்தான் ஏதாவது வில்லங்கம் இருக்கும்னு தெரியும்… அதான் நான் வேண்டாம்னு சொன்னேன்…" என்று சொல்ல பாட்டியும் வாசுவும் பதில் சொல்ல வகையற்று போனனர்…

"***I didn't get there by wishing for itor hoping for it, but by working for it.***"

***-Estee Lauder***

அந்த மிகப்பெரிய மாலில் புதிய பொட்டிக் திறப்பு விழா… திரையுலக புள்ளிகளின் கூட்டம் நிரம்பி வழிந்தது…

வாணி தனக்கென்று ஒரு அடையாளம் வேண்டும் என்று தனக்குத் தெரிந்த தையற்கலையை வைத்து புதிதாக பொட்டிக் ஒன்று ஆரம்பிக்க முடிவு செய்தாள்…

அதற்காக ஆறு மாதம் தனியாக பயிற்சி எடுத்துக்கொண்டு சில பொட்டிக் போய் நேரடியாக பார்த்து விட்டு, அதன் பின்னர் தான் இந்த திறப்பு விழா நடக்கிறது… நேரடியாக வந்து அழைத்து விட்டு சென்று இருந்தாள்…

“நீங்க கட்டயம் வரணும்… நீங்க கொடுத்த தன்னம்பிக்கையில் தான் நான் இன்னைக்கு புதுசா ஒரு தொழில் ஆரம்பிக்க போகிறேன்… உங்களோட வாழ்த்து வேணும்…” திரும்ப, திரும்ப அவள் அழைத்ததை மறுக்க முடியாமல் ராங்கா வாசுவுடன் கிளம்பி இருந்தாள்…

ரங்கா வாசுவுடன் அந்த மாலுக்கு வந்து இறங்கியபோது, விஐபிக்களின் கூட்டம் அப்போது சற்று குறைந்திருந்தது… அன்று விடுமுறை என்பதால் மாலுக்கு வருவோரின் எண்ணிக்கையும் அதிகமாய் இருக்க, கூட்டமாக தெரிந்தது…

ரங்காவை இறக்கி விட்டு, “ரங்கா ஐந்தாவது மாடிதானே நான் வந்துடறேன் நீ முதல்ல போ… எனக்கு எப்படியும் பார்க் பண்ணிட்டு வருவதற்கு பத்து நிமிஷம் ஆகும்…” என்று

சொல்லிவிட்டு வாசு காரை எடுத்துக் கொண்டு சென்றான்.

ஆறாவது மாதம் முடிந்து, ஏழாவது மாதம் தொடங்கி இருந்தது… வயிறு மிகவும் பெரிதாக இருந்தது. நடப்பதற்கு அவளுக்கு சற்று சிரமமாக இருந்தது… எஸ்கலேட்டரில் போவது ரிஸ்க் என்று நினைத்தவள் லிஃப்ட் இருக்கும் பக்கம் சென்றாள்…

லிப்ட் வாசலில் ஏகப்பட்ட பேர் நின்று கொண்டிருக்க 'ஆஹா இந்த கூட்டத்தில் எப்படி போவது…?' என்று தோன்றினாலும் வேறு வழி இல்லாததால் அங்கேயே நின்றாள்…

"எஸ், வந்துட்டேன். இன்னொரு பைவ் மினிட்ஸ்ல வந்துருவேன்… வெயிட் பண்ணு…" யாரிடமோ போனில் பேசிக் கொண்டே லிப்ட் அருகில் வந்த உபேந்திரா, அங்கு நின்று கொண்டிருந்த ரங்காவை கண்டான்… இவனைக் கண்டதும் அவளுடைய முகம் சற்று மாறியதை கண்டவன், அவளை இரண்டு தரம் அழுத்தமாக பார்த்துவிட்டு திரும்பி நின்று கொண்டான்.

லிப்ட் வந்து என்றதும் அதிலிருந்த மக்கள் வெளியற, வெளியே காத்து நின்ற கூட்டம் உள்ளே நுழைந்தது… நாலைந்து பேர் நுழைந்ததுமே ரங்காவும் உள்ளே நுழைந்து விட, பின்னால் இருந்த மக்கள் அவளை அழுத்தி லிட்டின் ஒரு ஓரத்தில் தள்ள, அவளது பெரிய வயிறு தடுப்பதை அறியாமல், மற்றவர்கள் நெருக்க, ரங்கா ஒரு நொடி திணறிப் போனாள்…

அவளுடைய நிலையை புரிந்துக் கொண்ட உபேந்திரா, தன் அருகில் இருந்த இரண்டு ஆண்களை, இந்த பக்கம் இழுத்து விட்டு, தான் முன்னேறி அவள் அருகில் சென்று நின்றான்… அவள் பக்கம் திரும்பி அவளைப் பார்த்து நின்றவன், அவளை மேலே இடிக்காமல் இரு கைகளையும் லிப்டின் பக்கவாட்டில் ஊன்றி அவளுக்கு அரணாக நிற்பது போல் நின்று, அவளது வயிறு இடிக்காமல், மூச்சு விட வசதியாக, அவள் நிற்கும்படி செய்தான்…

ஒரு சென்டி மீட்டர் இடைவெளியில் தன் அருகே நின்ற உபேந்திராவை விழிவிரிய ரங்கா பார்த்தாள்… அவளே பெண்களில் சற்று அதிகமான வளர்த்தி, அவனது தோள்வரை தான் ரங்கா இருந்தாள்… அலை அலையாய் புரண்ட கேசமும், அழுத்தமான பிடிவாதத்தை காட்டும் உதடுகளும், கூர்மையான கண்களும், நேரான நாசியும், செதுக்கி வைத்த கிரேக்கச் சிற்பம் போல உடலமைப்பும், கொண்ட உபேந்திராவை அவள் கண்கள் அளவெடுத்தன…

நாசி அவனது மேலிருந்து வீசிய ஆப்டர் ஷேவ் லோஷனின் நறுமணத்தை முகர்ந்தது… அங்கும் இங்கும் நகரமுடியாமல் அவனது கை சிறைக்குள் அவள் நின்ற கோலம், தன்னை சிறை எடுக்க வந்த ராஜகுமாரன் போல் தோற்றமளிக்க, ஒரு நொடி

அவளது முகம் சுணங்கியது…

ஆனாலும் அவன் தன்னுடைய பாதுகாப்புக்காகத்தான் அப்படி நிற்கிறான் என்பது அறிவுக்கு புரிந்ததால், 'நேற்று இல்லாத மாற்றம் இன்று எப்படி' புத்திக்கு தோன்ற, அதற்கு எதிர்ப்பதமாக மனதுக்குள் சாரல் அடிக்க, அந்த நொடிகளை அனுபவிப்பதா, அல்லது கடப்பதா என்று புரியாமல், பார்த்த விழி பார்த்து இருக்க, நின்றாள்.

தனது தோள் வரை நின்று தன்னை அண்ணார்ந்து விழி விரித்து பார்த்தவளை உபேந்திராவும் 'எதற்கு இந்தப் பார்வை' என்று நினைத்தான். ஏற்கனவே அழகிதான்… அதிலும் தாய்மை இப்பொழுது அவளுக்கு பூரிப்பை அள்ளித் தெளித்து இருந்தது…

உப்பிய கன்னக் கதுப்புகளும், கோவைப்பழம் போல் சிவந்த அதரங்களும், அவள் விழி விரித்தபோது பெரிதான கண்களும், வில் போன்ற புருவங்களும், நெற்றியில் சுருண்டு கிடந்த முடிக்கற்றைகளும், தன்னுடைய நெருக்கத்தை தாளமுடியாமல், அவள் முகத்தில் பூத்திருந்த வியர்வை பூக்களும் அவன் கண்களுக்கு விருந்தாக, முதன் முறையாக அவளை எதிரியாக பார்க்காமல் ஒரு பெண்ணாக ரசித்துப் பார்த்தான்…

அவள் மேலிருந்து வீசிய சோப்பும், பெர்ப்யூம் கலந்த ஒருவித நறுமணம், அவனது நாசிகளில் அவன் விரும்பாமலே

நுழைந்தது… அது வேறு அவனுக்கு சுகந்த வாசத்தை அளிக்க, தன்னை அறியாமலே அவளது அருகாமையை மிகவும் ரசித்தான்.

ஐந்து நிமிடங்கள் ஐந்து யுகங்களாக தோன்ற இவள் இறங்கவேண்டிய ஐந்தாவது தளம் வந்தது… உபேந்திரா இறங்க வேண்டியது ஆறாவது தளம்… ரங்கா அவனிடம், ‘‘இறங்கணும்’’ என்று சொல்ல, அவளை பாதுகாப்பாக நகர்த்தி வெளியே கொண்டு வந்து விட்டான்…

நன்றி சொல்ல வேண்டும் என்று தோன்றினாலும், சொல்ல வாய் வராததால், ஒருமுறை அவனைப் பார்த்து விட்டு அவள் நடக்க ஆரம்பிக்க, அவனும் கூட நடந்தான், எஸ்கலேட்டரை நோக்கி…

பத்து அடி செல்வதற்குள் எதிரே வந்த மதிவாணன் இவர்கள் இருவரும் ஒன்றாக நடப்பதைப் பார்த்து ‘‘ஹாய்’’ என்று இருவருக்கு எதிரிலும் பொதுவாக வந்து நின்றான்.

அவன் எதிரே நின்றதால், நகர முடியாமல் இருவரும் நிற்க, ‘‘வாட் எ சர்ப்ரைஸ்… எதிர்க்கட்சியா இருந்தவங்க எப்போ ஒரே கட்சியா மாறுனீங்க…?’’ என்று கேட்க…

புரியாமல் விழித்த இருவரிடம், ‘‘அதான் சார், வாணி மேடம் கேஸ்ல ரெண்டு பேரும் எதிர்க்கட்சியா இருந்தீங்க… இப்ப எப்படி

ஹஸ்பன்ட் அன்ட் வொய்ப் ஆ...?"

"வொய்பா... அதுவும் இவங்களா... எனக்கு...?" என்று நிறுத்தி நிதானமாக, எள்ளலாக கேட்டவன் தன் பாயும் விழிகளை அவள் பக்கம் திருப்பி, "குட் ஜோக் பார் தி இயர்..." என்று சொல்ல...

அவமானத்தில் முகம் சுருங்கி, தன் உதட்டை கடித்தவள், "நோ, ஏ.சி சார், ஐ அம் நாட் மாரீட்...!" என்ற உண்மையை உரைத்ததும், அவன் முகம் போன போக்கையும் பார்த்துவிட்டு, "பை..." சார் என்று சொல்லிவிட்டு தன் போக்கில் நடந்தாள்...

அவள் சொன்ன செய்தி, மூளைக்கு எட்ட சில நொடிகள் தேவைப்பட்டது மதிவாணனுக்கு... வியப்புடன் அவள் சொல்வதை திரும்பிப் பார்த்த அவனிடம் "என்ன ஏ.சி சார், அப்படி பாக்குறீங்க அவங்களை...! அவங்க சொன்னது உண்மைதான்... she's not married but has carried... !"

"What is the problem...?"

"I don't know. லீவ் இட்... என்ன இந்த பக்கம்...?"

"விவி சாரோட டாட்டர் இன்னைக்கு இங்க ஒரு பொட்டிக் திறக்கிறாங்க... அதுக்கு வந்தேன்... ஓகே பார்க்கலாம் சார்..."

என்று கை குலுக்கி விடை பெற்றான்… ஆனாலும் ரங்காவின் விஷயத்தில் ஒரு ஆர்வம் வந்தது…

நடந்து கொண்டிருந்த ரங்காவுக்கு மதிவாணன் தங்கள் இருவரையும் பார்த்து கணவன், மனைவி என்று நினைத்ததும், அடுத்த நொடி உபேந்திராவின் பதிலால் அவன் அதிர்ச்சி அடைந்ததும், அவள் இருந்த நிலையும், அவளுடைய பதிலும், அவனுக்கு அதிர்ச்சியின் உச்சத்தை அளித்தது என்றால் மிகையில்லை… என்பது புரிந்தது… புரிந்த விஷயம் மனதுக்கு உவப்பனதாயில்லை…

அதற்குள் இவளை பார்த்த வாணி வெளியே வந்து இவளை அழைத்துக் கொண்டு தனது கடைக்கு சென்றாள், சிறிய ரூம் தான்… ஆனால் விதவிதமாக பெண்களுக்கென்று சுடிதார், சாரீஸ், பட்டு சாரி என்று ரகம் ரகமாக இருந்தது…

தனக்கு போடுவதற்கு இரண்டு சுடிதார் மெட்டீரியல் எடுத்து அதற்கு பில் போடச் சொன்னாள்… “ வேண்டாம்…” என்று வாணி எவ்வளவோ மறுத்த போதும், பணத்தை பிடிவாதமாக அவள் கையில் திணித்து விட்டாள்…

சற்று நேரம் இருந்து கடையை பார்வையிட்டு, நடக்கும் வியாபாரத்தை பார்த்துவிட்டு, அவள் தந்த கூல்ட்ரிங்க்ஸை குடித்துவிட்டு கிளம்பலாமா என்று யோசிக்கையிலேயே வாசுவும்

உள்ளே நுழைந்தான்.

அவனை வாணிக்கு அறிமுகப்படுத்த, அவனும் கீர்த்திக்கு இரண்டு செட் சுடிதார் எடுத்தான்… உடனே இருவரும் கிளம்பிவிட்டனர்… வெளியே வந்து காரில் ஏறியதும்… “ நான் ஏசி மதிவாணனைப் பார்த்தேன்…!”

“ம்ம்… நானும் பார்த்தேன்…!” என்று ரங்கா சொல்லவும், அவள் முகத்தில் என்ன தெரிகிறது என்று உற்றுப் பார்த்தான்… சலனமே இல்லாமல் இருந்த அந்த முகத்தை பார்க்கும்போது ‘கடப்பாரையை விழுங்கிவிட்டு கசாயம் குடிக்கும்’ குழந்தை போல தான் அவள் தோன்றினாள்…

“என்ன ரங்கா எதுவும் சொன்னாரா…?”

“இல்ல… அதுக்கு பதிலா இன்னொருத்தர் சொன்னார்…”

“யாரு…?”

“உபேந்திரா…”

“உபேந்திராவா, அவர் இங்கெங்கு வந்தார்…?”

“தெரியாது…” ஒற்றை வார்த்தையில் அவள் பதில் அளித்த திலிருந்தே, அவளது மனநிலை சரியில்லை என்று புரிந்து கொண்ட வாசு நேராக வண்டியை வீட்டுக்கு விரட்டினான்…

வீட்டிற்குள் சென்றதும், ரங்கா நேராக தனது அறைக்குள் சென்று விட, வாசு பாட்டியிடம் நடந்ததைக் கூறினான்…

“அவளை பாத்தா பாவமா இருக்கு பாட்டி… சொல்லவும் முடியாமல், முழுங்கவும் முடியாமல் அவள் தவிக்கிற தவிப்பு பார்த்து எனக்கு தாங்கல. எதுக்கு இப்படி ஒரு முடிவு எடுக்கனும்…? இப்ப கஷ்டப்படணும்…? ஒரு வருஷம் ரெண்டு வருஷத்துல தீர்ற கஷ்டமா இது…? வாழ்க்கை முழுவதும் இந்த ஒரு அவச்சொல் அவளைத் துரத்திக் கொண்டே இருக்குமே… நீங்க எப்படி அவளை தெரிஞ்சே இவ்வளவு பெரிய குழிக்குள்ள தள்ளலாம்…?” என்று அவரிடம் காய்ந்தான்…

“நான் எவ்வளவோ சொன்னேன்… அவள் கேட்க மாட்டேன்னுட்டா… வாழ்க்கை முழுவதும் யாருமே இல்லாமல் தனிமையா போயிடுவான்னு தான், நான் இதுக்கு சம்மதிச்சேன். கண்டிப்பா கேசவனும், அந்த வைதேகியும் இவளை பார்க்க மாட்டாங்க. மோகனும், தாராவும் கேட்கவே வேண்டாம்…!”

அதற்காக இப்படி ஒரு தவறான முடிவு எடுக்க வேண்டுமா…?

தவறான முடிவு இந்தக் காலத்துல சரி… வருங்காலத்தில் இதுவே நடைமுறை ஆனாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை… இந்த கால இளைஞர்களின் போக்கு அப்படி தாண்டா இருக்கு…

"என்னவோ போங்க... எனக்கு அவளைப் பார்த்தாலே கஷ்டமா இருக்கு...!'' என்று கிளம்பிக் கொண்டே வெளியில் சென்று விட்டான்

பாட்டி ஒரு முடிவுடன் ரங்காவின் அறைக்கதவை சாத்தி விட்டு, ஹாலுக்கு வந்து லேண்ட் லைனில் தனது நண்பர் சேதுராமனை அழைத்தார்...

''என்ன ரங்கா...? என்ன விஷயம்...? போன்ல எல்லாம் கூப்பிட மாட்டேயே...!''

''ஒரு முக்கியமான விஷயம் உங்ககிட்ட பேசணும்...'' என்றவர் இரண்டு, மூன்று தடவையாக உபேந்திராவுக்கு ரங்காவுக்கு இடையில் நடந்த பிரச்சினைகளைப் பற்றி கூறினார்.

''ஓ... அப்படியா, நீ முதல் தடவை நடந்தப்பவே இதை சொல்லி இருக்கலாமே...?''

''சரி. முதல் தடவை இது ஒரு பெரிய விஷயமா நினைக்கவேண்டாம்னு நெனச்சேன். ஆனா மறுபடியும் மறுபடியும் ரெண்டு பேரும் முட்டிக்கும் போது ரங்காவோட மனசு காயப்படும்... அவ சந்தோசமா இருக்க வேண்டியது ரொம்ப முக்கியம்...!

அதனால தான் இன்னைக்கு உங்க கிட்ட சொல்லிடலாம்னு சொல்லிட்டேன். நீங்க எப்படியாவது நாசுக்கா இந்த பிரச்சனையை கையாளுங்க... ஆனால் உண்மையை தயவுசெய்து சொல்ல வேண்டாம்...!"

"ஓகே... நான் பாத்துக்குறேன்..."

பாட்டிக்கு அவரிடம் சொன்ன பிறகு தான் சற்று நிம்மதி ஏற்பட்டது...

இரவு நேரம் கழித்து வீட்டுக்கு வந்த உபேந்திரா தாத்தா தூங்காமல் விழித்திருப்பது பார்த்து, "என்ன தாத்தா இன்னும் தூங்கலையா...? நான்தான் லேட்டா வருவேனு போன் பண்ணி சொன்னேன் இல்ல... எதுக்கு முழிச்சிட்டு உடம்பை கெடுத்துக்கிறீங்க...!"

"எனக்கு ஒரு விஷயம் உன்கிட்ட பேசணும்...!"

"அது நாளைக்கு காலையில பேசக்கூடாதா...!"

"இல்ல... அதை எனக்கு கேட்கலைன்னா தூக்கமே வராது...!"

"அப்படி என்ன விஷயம், உங்களைத் தூங்கவிடாது அளவுக்கு...?"

"உட்கார் ஃபர்ஸ்ட்... சாப்டாச்சா..."

“அதெல்லாம் டின்னர் ஆச்சு ஆச்சு… நீங்க…?

“ம்ம்… ஆச்சு…”

“என்ன விஷயம் தாத்தா…! சொல்லுங்க…!”

“என்னோட ஃபிரண்ட் ரங்கா பாட்டி உனக்கு தெரியுமில்ல…!”

“ஆமா, தெரியும்…!”

“அவங்க இன்னைக்கு போன் பண்ணாங்க, எனக்கு…!”

“உங்க பிரண்டு உங்களுக்கு தான் போன் பண்ணுவாங்க…! பின்ன எனக்கா பண்ணுவாங்க…!”

“டேய், விளையாண்டது போதும்டா, நான் சொல்லுறத கேளு, நீ அவங்க பேத்தி ரங்கா கிட்ட, ரெண்டு மூணு தடவையா அவளை டீஸ் பண்ற மாதிரி பேசுனியா…!”

"ஓ… அவ எனக்கு பதில் சொல்ல முடியாமல், பாட்டிய விட்டு உங்களுக்கு தூதனுப்பிச்சிட்டாளா…?”

"டேய் அதெல்லாம் இல்லடா… ரங்காவா தான் போன் பண்ணி என் கிட்ட சொல்லி இருக்கா. என்னோட யூகம் சரின்னா அதுகூட அந்த பொண்ணுக்கு தெரிஞ்சிருக்காது. அது ரொம்ப சுயமரியாதை பாக்குற பொண்ணுடா…!”

“தாத்தா சுய மரியாதை பார்க்கிற பொண்ணு, இந்த மாதிரி செயல் எல்லாம் செய்ய மாட்டாங்க…!”

“அது அவளோட பர்சனல்… அதை எதுக்கு தேவை இல்லாம பேசுறே…? ஏதோ ஒரு கேஸ்ல அவ உன்னை ஜெயிச்சதாவே இருக்கட்டுமே… அதுக்காக பெர்சனல் பத்தி பேசுவதெல்லாம் நல்ல பழக்கம் இல்லை…!

ஏன், இதுக்கு முன்னாடி நீ எந்த கேசிலேயும் தோத்ததே இல்லையா ஆரம்பத்துல?

நீயும் கல்யாண வயசுல தான் இருக்கே? நீ தப்பு பண்ணினது இல்லைன்னு என்கிட்ட சொல்லு பார்ப்போம்…"

"தாத்தா…"

“இனி ஒரு தடவை அந்த பொண்ணு கிட்ட நீ வம்பு வச்சுக்க கூடாது… அப்படி தெரிஞ்சுதுன்னா நான் உன்கூட பேசவே மாட்டேன்… அவ்வளவுதான்…” என்று கோபமாக சொன்னவர், தூங்குவதற்கு எழுந்து சென்றார்

முதன்முறையாக தாத்தாவின் கோபம் அவனை ஆச்சரியப்பட வைத்தது… ‘தன்னோட பிரெண்டோட பேத்தி என்றதும் தாத்தாவுக்கு தாங்கல போல இருக்கு' என்று எண்ணிக் கொண்டவன் அசால்டாக தோள்களைக் குலுக்கிக் கொண்டு மாடி

ஏறி விட்டான்…

இரவு பால்கனியில் உள்ள சேரில் உட்கார்ந்து வெளியே நிலவைப் பார்த்துக் கொண்டிருந்த ரங்காவிடம் வந்த பாட்டி ‘‘என்னடா தூக்கம் வரலையா…?’

‘‘இல்ல… இன்னைக்கு மதியம் நடந்ததை நினைச்சேன்… என்ன சொல்றதுன்னு புரியல, உங்ககிட்ட நான் சொல்லவே இல்ல…’’

‘‘வாசு சொல்லிட்டான்…’’

‘‘சொல்லிட்டானா… நான் அவன் கிட்டயும் எதுவும் சொல்லல…!’’

‘‘அதுக்குதான் வருத்தமாய் இருக்கியா…!’’

‘‘ஆமா பாட்டி கொஞ்சம் சங்கடமா இருந்தது…!’’

‘‘ஒரு முடிவு எடுக்கக் கூடாது… எடுத்தச்சுன்னா அதிலிருந்து பின்வாங்கக்கூடாது. இனிமே நீ எதைப் பற்றியும் கவலைப்படாதே… உன்னோட பிள்ளைகளை வளர்த்து ஆளாக்க வேண்டியது உன் பொறுப்பு…

விஷயங்கள் நமக்கு எதிரா தான் இனிமே நடக்கும்… இந்த சொசைட்டி இந்த மாதிரியான விஷயங்களை லேசில் விடாது…’’

“ஏன் இப்படி இருக்காங்க பாட்டி...?”

“எப்பவுமே நமக்கு கிடைக்காத விஷயம் மத்தவங்களுக்கு கிடைக்கும் போது, அதில் ஒரு லேசான ஒரு பொறாமை உணர்வு இருக்கும்... அவங்க மட்டும் என்ன அப்படி பெரிசான்னு...?

ஸ்கூல் படிக்கும்போதே பாரேன்... டீச்சர் ஏதாவது ஒரு டிசிப்ளின் ரூல் சொல்லுவாங்க... அதை யாராவது ஒருத்தருக்கு லேசா ரிலாக்ஸ் பண்ணினா... அவன் மட்டும் என்ன டீச்சர் ஸ்பெசல்? அவன் மட்டும் அப்படி பண்ணலாமா? அந்த மாதிரியான புகார் மற்ற குழந்தைகள், டீச்சர் கிட்ட சொல்லும்...

எல்லா மனிதர்களுக்கும் அந்த மனப்பான்மை இருக்கத்தான் செய்து. நாம ஆளு தான் வளர்ந்திருக்கோம்... ஆனால் குணங்கள் அப்படியேதான் இருக்கு...

வளர வளர நாம் என்ன செய்கிறோம்... நம்ம நல்ல குணங்களை மட்டும் வெளிய காட்டிக்கிறோம்... கெட்ட குணங்களை வீட்ல உள்ளவங்க கிட்ட மட்டும் காட்டுறோம்...

அதே, நமக்கு ஏதாவது ஒரு இடத்துல கஷ்டம், துன்பம் மத்தவங்க செய்தாங்க, அப்படின்னா அவங்க கிட்ட நாம் ஒரிஜினல் குணத்தை காட்டிடறோம்... இதுதான் உண்மை...

இந்த சமூகத்தில் நிறைய பாதிக்கப்பட்ட பெண்கள்

இருக்காங்க… அவங்க எல்லாருக்கும் எங்கேயோ, எப்போதோ, யாரோ ஒருவர் பழிச்சொல் சொல்லி இருப்பாங்க… எல்லாருக்கும் அது நடந்திருக்கும்.

மாமனார், மாமியார், கணவன் அல்லது சொந்த வீட்டிலேயே, இப்படி ஏதாவது ஒரு ரூபத்தில் அவர்களுக்கு நிறைய கண்டன பேச்சுக்கள் கிடைத்திருக்கும். அதற்கெல்லாம் வடிகால்…

இந்த மாதிரி யாராவது தப்பு பண்ணும் போது, அவங்களை சொல்வதன் மூலம் தன்னை ஒழுக்கமானவ, கெட்டிக்காரி நல்லவங்க இந்த மாதிரி ப்ரூஃப் பண்ணிப்பாங்க… இது ஆணுக்கும் பொருந்தும்… எல்லாம் தனக்கு தானே… வேற வழி இல்லை… ஏதோ ஒரு ஆறுதல் தேவைப் படுது… அல்லது காயம் பட்ட மனதுக்கு மருந்து…

அதுதான் பிரச்சினை… நாம இருக்கிறது அமெரிக்கா இல்லை இந்தியா. இந்த நாட்டோட அடிப்படை அமைப்பு குடும்ப அமைப்புதான்…

அது இப்ப கொஞ்சம். கொஞ்சமா சிதறி, சின்னா பின்னமாகி, சிதைந்து கிட்டு வருது… அதனுடைய உச்சம்தான் நீ எடுத்திருக்க முடிவு…

என்னை பொறுத்த அளவுல நீ ஒரு ஆரம்பம்… கண்டிப்பா

இது வருங்காலத்தில் ஒரு தொடர்கதையா மாறுவதற்கு வாய்ப்பு இருக்கு…

இந்த சமூகத்தில் குடும்ப அமைப்புகளே இருக்காது… எந்தக் குழந்தைக்கும் தாய் யார்? தந்தை யார்? என்று நிச்சயம் உண்மையாக தெரியாது…

வளர்க்கிறவங்க தாயாக இருக்கலாம்… தந்தையாக இருக்கலாம்… ஆனால் வேர் எது?

இப்ப ஒரு செடி இருக்கு. அல்லது ஒரு மரம் இருக்கு. அதனுடைய வேர்… அல்லது விதை அதனுடைய அடுத்த செடியை அல்லது மரத்தை உருவாக்க உபயோகப்படுது…

விஞ்ஞானம் என்ற பெயரில் இப்ப நிறைய கிராஸ் பண்றாங்க… ஒரிஜினல் எங்கேயும் கிடையாது… அதே நிலைமை தான் இன்னிக்கி சமூகத்தில் மக்களுக்கும்… நிறைய கிராஸ், நேரடியாகவும், மறைமுகமாகவும்… ஆயிரத்தில் ஒன்றாக இருக்கும் போது அது மாயம், விஞ் ஞானம், சரித்திரம்… ஆனால் அதுவே வாழ்க்கையில் எல்லோரும் கடை பிடித்தால் அது ஆயுதம்…

ஒரு நாட்டை கெடுக்கணும்னா, அல்லது சீர் குலைக்கணும்னா குண்டு போட வேண்டாம்… அந்த நாட்டோட கலாச்சாரத்தை சீரழித்தாலே போதும்…

ஏன்...? ஆதி காலத்துல அயல் நாட்டு மன்னர்கள் எல்லோரும் வந்து நம்ம நாட்டில் உள்ள கோவில் நகைகள், புரதான பொக்கிசங்களை கொள்ளை அடித்தார்கள்... மக்களை கொன்று குவித்து இருக்கலாமே...?

மக்கள் மடிந்தாலும் புதிய தலைமுறையை இருக்கும் மக்கள் உருவாக்குவார்கள்... செல்வமும், வளமும், கனிமங்களும் இருந்தால், நாட்டோட வளர்ச்சியை புதிய தலைமுறை கொண்டு சாதிக்க முடியும்... ஆனால் மக்கள் வாழும் வழியையே அடைத்து விட்டால்... அதைத்தான் அவர்கள் செய்தார்கள்...

இன்று மற்ற எதிரிகள் தேவை இல்லை... நமக்கு நாமே செய்து கொள்கிறோம்... உணவு, உடை, வாழ்க்கை முறை எல்லாத்திலும் கலாச்சார சீரழிவு... இது இந்த நாட்டையே அளிக்கும் மாபெரும் ஆயுதம்...

இதை பெருமையாக சொல்றதா, விஞ்ஞான வளர்ச்சின்னு எடுத்துக்கொள்றதான்னு, எங்களை மாதிரி வாழ்க்கையின் கடைசிப் பகுதியில் இருக்கிற பெரியவங்களுக்கு புரியல...

பெண்ணின் கரு முட்டையும், ஆணின் விந்தணுவும் சேர்ந்து ஒரு உயிர் உருவாகுது... ஒரு செல்... அதில் இருபத்தி மூன்று குரோமோசோம்... இரண்டும் சேர்ந்து இரண்டு செல் 46 இதுதான் ஒரு உயிர்... அந்த உயிருக்கு 23 தலைமுறை முன்னோர்களின்

குணநலன்களும், நிறம் உருவ அமைப்பு, அல்லது வியாதிகள் எல்லாமே அதற்குள் அடங்கியிருக்கு…

இப்படி பாரம்பரியமான அந்த தாயுடைய 23 தலைமுறை, தந்தையோட 23 தலைமுறைக்கு உள்ள விஷயங்கள் ஒரு குழந்தை கிட்ட இருக்கு…

தெரியாத ஒரு ஆணோட விந்தனு மூலமா உருவாகிற குழந்தையின் குண நலன்களை எப்படி சொல்லுவது? அல்லது உருவ அமைப்பு, நிறம் இதையெல்லாம் எப்படி சொல்ல முடியும்? அதில் நல்லது கேட்டது எல்லாம் கலந்து இருக்கு…

எல்லா மனிதர்களும் நல்லவர்கள் இல்லை… அந்த விந்தணு யாருடையதாகவும் இருக்கலாம்… ஒரு தீவிரவாதி, திருடன், கொலைகாரன்… இந்த மாதிரியாக இருந்தால் பிறக்கும் குழந்தையிடமும் அந்த குணநலன்கள் படியாது என்பது என்ன நிச்சயம்…?

இதற்குத்தான் குலம் பார்த்து கோத்திரம் பார்த்து கல்யாணம் பண்ணி வெச்சாங்க… ஏன் அப்படி குலம் பார்த்து கோத்திரம் பார்க்கிறவங்க கிட்டயும் இந்த தப்புகள் இல்லையா…? அப்படின்னு நீ கேட்கலாம்…

வெளிப்படையா தெரிஞ்சு இருந்தா நாம செய்து வைக்க

மாட்டோம் இல்ல... அதையும் மீறி நடந்தால் அது பகவானின் செயல்...

மேலும் வேணுமின்னே யாரும் இப்படி போய் செய்கிறதில்லை இல்லை...!" பாட்டியின் பிரசங்கத்தைக் கேட்ட ரங்காவிற்கு தலைசுற்றி போயிற்று...

அதில் உள்ள உண்மைகள் உரைக்க, முதன் முதலாய் தன் வயிற்றில் வளரும் குழந்தைகள் பற்றிய கவலை வந்தது... அந்தக் குழந்தை பிறக்க மூலமாய் இருந்தவன் நல்லவன் ஆக இருக்க வேண்டும் என்ற பிரார்த்தனையும் வந்தது...

# அத்தியாயம் 20

மூன்றாவது வருடம் படிக்கும்போது ஒரு ஞாயிற்றுக்கிழமை தீவில் வாசு அவளிடம் வந்து, ‘‘கிளம்பு நம்ம வெளில போறோம்...’’

‘‘எங்க...?’’

‘‘சஸ்பென்ஸ்...’’ என்று அவளை கூட்டிக் கொண்டு சென்ற இடம் ஒரு டூ வீலர் ஏஜென்சி...

‘‘என்ன இங்க கூட்டிட்டு வந்திருக்கே...! உனக்கு பைக் வாங்க போறியா...!’’

‘‘உள்ள வா சொல்றேன்...!’’ என்றவன் அங்குள்ள ரிசப்ஷன் சென்று ‘‘ஒரு ஸ்கூட்டி பார்க்கணும்...’’ என்றான்.

‘‘ஏய் உனக்கு பைக் வாங்கு...! எதுக்கு ஸ்கூட்டி வாங்குற...!’’

‘‘எனக்கு வாங்கல... உனக்குதான் வாங்குறேன்...!

‘‘எனக்கா...! எனக்கு எதுக்கு...? நீதான் ஒரு பழைய டிவிஎஸ் வண்டி வைத்திருக்க... உனக்கு பிசினஸ் பண்ண இப்ப கட்டாயம் புது வண்டி தேவை... உனக்கு வாங்கு...!’’

“இன்னும் ரெண்டு மாசம் கழிச்சு எனக்கு வாங்கிக்கலாம்… உனக்கு இன்னும் ரெண்டு மாசத்துல படிப்பு முடிஞ்சிரும் அதுக்கு அப்புறம் நீ டெய்லி ரங்கபாஷ்யம் சார் ஆபீஸ்க்கு போகணும். வண்டி ஓட்டி படிச்சிக்கோ, அதான் நல்லது…” என்றவன் அவள் மறுப்பைப் ஏற்றுக்கொள்ளாமல் வண்டியை அவள் பெயருக்கே வாங்கினான்…

பாட்டியிடம் சொன்னதும் அவரும், அம்மா சொன்னதையே சொன்னார்… “பாட்டி இது என்னோட ஆசை… அவளுக்கு வாங்கிட்டு தான் எனக்கு வாங்கணும்னு நான் நினைச்சேன் அதனால இத பத்தி நீங்க மேல பேசாதீங்க…!”

அதன் பிறகு வண்டியை ஓட்ட அவனே சொல்லிக் கொடுத்தான்… “முதல்ல கொஞ்ச நாள் பக்கத்தில் மட்டும் ஓட்டு… அப்புறம் மெல்ல மெல்ல ஓட்டி பழகு, எடுத்த எடுப்பில் டவுனுக்குள்ள போயிராத…” அவனுடைய அன்பும் அக்கறையும் பாசமும் ரங்காவை பிரமிக்க வைத்தது…

சம்பாதிக்க ஆரம்பித்ததும் ரங்காவுக்கு கழுத்துக்கு ஒரு மெல்லிய செயின் காதுக்கு கம்மல் வாங்க என்று அவன் பணம் கொடுத்த போது ரங்கா மறுத்துவிட்டாள்…

அதுவும் அவளை கேட்காமல் தானே வாங்கி வந்து கையில்

கொடுத்து, “ என்னோட தங்கையா இருந்தா செய்ய மாட்டேனா, நீ இனி வேலைக்கு போக போறே… இப்படி போலியானது போட்டுட்டு போனா நல்லாவா இருக்கும்… என்னை உன் கூட பிறந்தவனாக நினைச்சேன்னா நான் எது செஞ்சாலும் நீ மறுக்க கூடாது…! அன்றிலிருந்து வாசு எது சொன்னாலும் அவள் மறுத்ததுதில்லை கல்யாணத்தை தவிர…

இந்த விஷயங்கள் எல்லாம் வைதேகிக்கு தெரியவர, அவள் ரங்காவையும், வாசுவையும் கண்டாலே எரிந்து விழ ஆரம்பித்தாள்… ஆனால் ரங்காவும், வாசுவும் எதையும் கண்டுகொள்ளாமல், வைதேகி குடும்பத்திற்கு பண உதவி செய்தனர்.

பணம் கொடுக்கும்போது மட்டும், ஏதோ அது இவர்கள் கடமை என்பது போலவும், அவர்கள் உரிமை உள்ளவர்கள் என்பது போலவும் பேசும் வைதேகி கண்டு எப்போதும் ரங்காவிற்கு சிரிப்பு தான் வரும். ஆனால் அதற்கும் ஏதாவது பேச்சு வரும் என்பதால் கவனமாக அதை கடந்து விடுவாள்.

***Women are complicated. women are multifaceted not because women or crazy. but because people are crazy, and women happen to be people.***

***-Tavi gevinson***

பாட்டியும் ரங்காவும் ஹாஸ்பிடல் வந்திருந்தனர்... மகாலட்சுமி ரங்காவை பரிசோதித்துவிட்டு, “இப்ப ஏழாவது மாசம் நடக்குது இனி கொஞ்சம் நீங்க வாக்கிங் போகலாம். ஈவினிங்... ஒரு அரை மணி நேரம். அப்புறம் கொஞ்சம் சாப்பாட்டுல உப்பு கொஞ்சம் குறைச்சுக்கோங்க... மத்தபடி எல்லாம் நார்மலாக இருக்கு. இன்னும் ஒரு இருபது நாள் கழிச்சு வாங்க குழந்தையோட ஹார்ட் பீட் இதெல்லாம் எப்படி இருக்குன்னு செக் பண்ணி பாத்துடலாம்...”

“டாக்டர் டெலிவரி எப்ப இருக்கும் உத்தேசமா...?” பாட்டி தான் கேட்டார்...

“ஒன்பதாவது மாதம் முதல் வாரம் அல்லது இரண்டாவது வர இருக்கும்... நிச்சயமா சிசேரியன்தான்... ஆனாலும் எட்டாவது மாதம் பாதியில் இருந்தே நாம கொஞ்சம் கேர்ஃபுல்லா இருக்கலாம்... ஏதாவது வித்தியாசமா இருந்தா உடனே ஹாஸ்பிட்டல் வந்துருங்க... இங்கேயும் வெளியூர் எதுவும் போக வேண்டாம்...

“டெலிவரிக்கு எவ்வளவு ஆகும்னு உத்தேசமா சொல்ல முடியுமா? நாங்க கொஞ்சம் அதை தயார் பண்ணி வச்சுக்கிறோம்...”

“எனக்கு சரியா தெரியல. நான் இங்கு உள்ள சிஸ்டர்ட்ட சொல்லி வைக்கிறேன். அவங்க விசாரிச்சு உங்க நம்பருக்கு போன் பண்ணுவாங்க…

“ரொம்ப தேங்க்ஸ் டாக்டர்” என்று சொல்லி வெளியே வந்தனர்… தனது வழக்கமான இன்ஜெக்ஷனை போடுவதற்காக ரங்கா சிஸ்டர் இருக்கும் இடம் சென்றாள்… அப்போது அங்கு உள்ள ஸ்டாப்ஸ் நர்சுகளிடம், ஒரு சிறிய பரபரப்பு தென்படவே, என்னவென்று பார்க்க டாக்டர் கல்யாணசுந்தரமும், அவரது பேரன் உபேந்திராவும் தங்களது அறைக்கு சென்று கொண்டு இருந்தனர்…

“எதுனாலும் நீயே பார்த்துக்க வேண்டியது தானே…? என்ன எதுக்கு இழுக்குற…?

“நோ தாத்தா உங்களுக்கும் எல்லாம் தெரிஞ்சு இருக்கணும்,, இது நீங்க உருவாக்கின ஹாஸ்பிடல். நாளைக்கு உன் இஷ்டத்துக்கு எல்லாம் மாத்திட்டேன்னு சொல்லக்கூடாது…”

“என்னோடதா இருந்தா என்ன…? அது எல்லாமே உனக்கு தான் சொந்தம்…!” பேசிக்கொண்டே தங்களது அறைக்குள் நுழைந்து கொண்டனர்… ரங்கா தான் அவர்களைப் பார்த்தாள்… ஆனால் உபேந்திரா அவளைப் பார்க்கவில்லை…

கம்பெனி வரவு செலவு கணக்கு ஆடிட்டிங் நடந்து

கொண்டிருந்தது… ஹாஸ்பிடல் இன்னும் கொஞ்சம் நவீனம் ஆகலாம் என்ற எண்ணத்தோடு அதைப் பற்றி பேசுவதற்கு தாத்தாவையும் அழைத்து வந்திருந்தான்…

அங்கு ஏற்கனவே இருந்த ஆடிட்டர் மற்றும் சில தலைமையை மருத்துவர்களுடன் அவர்களது டிஸ்கஷன் ஆரம்பித்தது… டாக்டர் சேதுராம் வந்திருப்பதை அறிந்து மகாலட்சுமியை நேரடியாக அவருக்கு போன் செய்தாள்…

“அதான் உங்களுக்கு தான் டாக்டர் மகாலட்சுமி…” போனை எடுத்த உபேந்திரா தாத்தாவின் கையில் கொடுத்து விட…

அதை வாங்கியசேதுராம், “சொல்லுங்க டாக்டர் என்ன விஷயம்…?”

“சார், உங்க பேமிலி பிரண்ட் பேத்தி ரங்கா வந்திருந்தாங்க, செக்கப்புக்கு… பாட்டியும் கூட வந்து இருந்தாங்க… டெலிவரிக்கு என்ன என்ன செலவாகும்னு கேட்டாங்க…? உங்க கிட்ட கேட்டு சொல்றேன் சொல்லிட்டேன்…!”

“நோ எந்த சார்ஜ் கிடையாது… இதுவரைக்கும் பீஸ் எதுவும் வாங்கி இருக்கீங்களா…?”

“இல்லசார்…!”

“அப்படியே மெயின்டெயின் பண்ணுங்க… ஆமா அவங்க போய்ட்டாங்க இருக்காங்களா…!”

“ரிஷப்ஷனில் இருக்காங்க சார்… ஓகே நீங்க அங்க வாங்க நானும் வரேன்…” என்றவர் “இப்ப வந்துடறேன்…” என்று சொல்லிவிட்டு வெளியே சென்றார்.

ரிசப்ஷனில் அமர்ந்திருந்த ரங்காவின் முன்னால் சென்ற டாக்டர் சேதுராம், “என்ன ரங்கா பேத்தியை காணோம்.?” என்று கேட்க…

அவரது குரலால் கலைந்த பாட்டி ரங்கா… “நீங்களா…? என்ன இவ்வளவு தூரம்…?”

“இந்த கொஞ்சம் வேலை இருந்தது…? எங்க ரங்கா…?”

“அதோ, இன்ஜெக்க்சன் போட்டுட்டு வரா…!” என்று பாட்டி ரங்கா சொல்லவும், திரும்பிப் பார்க்க, பெரிய வயிற்றுடன் சற்று சிரமத்துடன் நடந்து வந்த பேத்தி ரங்காவை பார்த்தார்…

ரங்கா அவர்களது அருகில் வந்ததும் சேதுராம், “எப்படி இருக்கேம்மா…?” என்று சிரித்த முகத்தோடு கேட்க…

முதலில் அவரை பார்த்து திகைத்த ரங்கா, அவரது இயல்பான விசாரிப்பில் சற்று ஆசுவாசப் பட்டு, “நல்லா

இருக்கேன் தாத்தா…!” என்று பளிச்சென்று சிரித்த வண்ணம் கூறினாள்.

அதற்குள் மகாலட்சுமியும் அங்கு வந்துவிட, “ டாக்டர் இவங்க ரிப்போர்ட்ஸ் எப்படி இருக்கு…?” என்று சேதுராம் கேட்க, அடுத்த பத்து நிமிடம் அவர்கள் இருவரும் ஆங்கிலத்திலேயே உரையாடிக் கொண்டனர்…

“ஓகே யூ கேரி ஆன்…!” என்று மகாலட்சுமி அனுப்பி வைத்துவிட்டு, பாட்டியிடம் திரும்பி “டோன்ட் வொரி, எல்லாம் நார்மலா இருக்கு… கேர்புல்லா பாத்துக்கோ…” என்று கூறி…

பேத்தி ரங்காவின் தலையை தடவி, “பயப்படாதே எல்லாம் நல்லபடியாக நடக்கும்” என்று ஆசீர்வதித்து அவர்களை அனுப்பி வைத்தார்…

அறைக்குள் தனது வேலையில் இருந்தாலும் உபேந்திராவுக்கு தாத்தா எங்கு சென்றார் என்பது ஒரு குடைச்சல் ஆகவே இருந்தது… அப்போது தற்செயலாக தனது கம்ப்யூட்டரில் உள்ள சிசிடிவி கேமராவை பார்க்க அதில் ரிசப்ஷனில் தாத்தா பாட்டியுடன் பேத்தியுடன் பேசிக்கொண்டிருப்பது தெரிந்தது… ‘ஓ இதுக்குத்தான் இவ்வளவு அவசரமா போனாரா…’என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டான்.

உபேந்திராவுக்கு தாத்தா ரங்காவை ஆசீர்வாதம் செய்தது புதிதாக இருந்தது… பொதுவாக அவனுடைய அப்பா அம்மாவை விட தாத்தா ஒழுக்கத்திற்கும் நேர்மைக்கும் அவ்வளவு முக்கியத்துவம் கொடுப்பவர்… அப்படியாப்பட்ட ஒரு மனிதர், ரங்காவின் செயலை எவ்வாறு எடுத்துக் கொண்டார்…? ஒருவேளை தப்பாகவே இருந்தாலும் தனது தோழிக்காக பொறுத்துக் கொண்டாரா…?அல்லது வீட்டில் தனக்கு மட்டும்தான் உபதேசமா? மற்றவர்களுக்கு கிடையாதா?'' பலவிதமான கேள்விகள் அவனுள் எழுந்தன…

திரும்ப அந்த தாத்தாவிடம், ''என்ன வேலை தாத்தா…?'' என்று தெரியாதது போல் கேட்டான்.

''ஒன்னும் இல்ல… ஒரு பழைய பிரண்டு ஒருத்தர் வந்திருந்தார் அவர பார்த்துட்டு வந்தேன்…!''

அதன் பிறகு இருவருமே விட்ட பேச்சை தொடர, மருத்துவமனை இன்னும் சற்று நவீனமாக்க சில திட்டங்களை உபேந்திரா கூறினான்…

''நவீனமாக்கிறது முக்கியம்தான்… ஆனால் கட்டணத்தை பெரிதளவு ஏற்றக்கூடாது… இது என்னுடைய கோரிக்கை…!''

''ஓகே அதை நான் பாத்துக்கறேன்…'' என்றவன்…

“அது சம்பந்தமாக எவ்வளவு செலவாகும்னு, ஒரு எஸ்டிமேட் கொடுங்க…!” என்று கூறி அவர்களை அனுப்பி வைத்தான்.

காரில் திரும்பும் போது தாத்தாவிடம், “ஆமா உங்க ஃப்ரெண்ட் எதுக்கு வந்தாரு…?”

“பிரெண்டு எதுக்கு வருவாங்க…? என்ன பார்க்கத்தான் வந்தாங்க…?”

“உங்களுக்கு 25 வயசுலே எல்லாம் பிரண்ட் இருக்கும் போல இருக்கு… எனக்கு கூட அந்த மாதிரி பிரெண்டு எல்லாம் கிடைக்கலை…!”

“அப்படியா, நீ பிரெண்ட் மாதிரி ட்ரீட் பண்ணி இருக்க மாட்ட…” நான் அந்த வயதிலும் தனது குசும்பை காட்ட…

“அது எப்படி பிரண்டு மாதிரி ட்ரீட் பண்றது…?”

“பிரண்ட, பிரண்டா தான் நடத்தணும்… உன் கூட பழகுற கேஸ் எல்லாம் பிரண்ட் லிஸ்ட்ல சேர்க்காத… அதெல்லாம் பிரண்டுன்னு சொல்லிட்டு வேற லெவல்ல பழகுற கேஸ்…!” தாத்தா ஒரே போடாக போட, அவன் வாயை மூடிக்கொண்டான்… அது உண்மைதானே… டெல்லியில் இருக்கும் வரை நட்பு வட்டம் நட்போடு நின்றதில்லை…

சென்னையில் தாத்தா இருப்பதால் கொஞ்சம் அடக்கி வாசிக்கிறான்… அவன் பழகும் சொசைட்டியில் இதெல்லாம் சர்வ சாதாரணம்… அந்த ஒரு காரணத்தினாலேயே அவனுக்கு பெண்களின் மீது மதிப்பும் இல்லை, கல்யாணத்தில் இஷ்டமும் இல்லை…

நாட்கள் விரைந்து கொண்டிருந்தது… பகலில் கொஞ்ச நேரம் ஆபீஸ் சென்று விட்டு ஈவினிங் சீக்கிரமே வந்து விடுவாள் ரங்கா…

தனது அப்பார்ட்மெண்ட் பக்கத்தில் இருக்கும் சிறிய பூங்காவில் நடந்து விட்டு அருகில் இருக்கும் விநாயகர் கோவிலில் ஒரு சுற்று சுற்றிவிட்டு வீட்டுக்கு வந்து விடுவது வழக்கம் ஆயிற்று.

ரங்காவுக்கு கடவுளிடம் பெரிதாக எதுவும் வேண்டிக்கொள்ள வேண்டும் என்றும் தோன்றியதே இல்லை…

ஆனால் தற்போது இரண்டு மூன்று தடவையாக, அந்த விநாயகரிடம், ‘இந்த குழந்தைகள் பிறப்பிலேயே நல்ல குழந்தைகளாக இருக்க வேண்டும்…’ என்று தன் வயிற்றை தடவி அந்த கடவுளிடம் ஒரு வேண்டுகோள் வைத்தாள்…

இன்னும் பத்து நாள்கள் கழித்து விடுமுறை எடுத்துக் கொள்ளலாம் என்று நினைத்து சீனியரிடம் கேட்டபோது,

“தாராளமா எடுத்துக்கோ... ஆறு மாசம் கழிச்சு ஆபிஸ் வா போதும்...! என்றார்

“சார், அவ்வளவு நாள் நான் வேலைக்கு வராம இருந்தா என்னோட வேலையே மறந்து போயிடும்...!”

"அதெல்லாம் பார்த்துக்கலாம்..." என்று ஒரே வார்த்தையில் முடித்துவிட்டார்...

சரவணனிடம் "குழந்தை எப்படி இருக்கிறது...?" என்று கேட்டதற்கு...

“பாப்பா நல்லா இருக்கா... நாளை மறுநாள் உபநயனம், பெயர் வைக்க ஏற்பாடு பண்ணி இருக்காங்க...”

"ஓ அப்படியா..." என்று முறுவலித்தவளிடம்...

"அப்போ உங்களுக்கு சொல்லவில்லையா...!?” என்று விசாரிக்க...

“இல்லை...” எனும் விதமாக தலையாட்டினாள் ரங்கா...

"நான் சொல்றேன், தாரா கிட்ட உங்களை கூப்பிட சொல்லி...!"

"வேண்டாம்... கூப்பிட்டாலும் என்னால வர முடியாது... அதுக்கு எதுக்கு அவங்களை கூப்பிட சொல்லணும்... விட்ருங்க எதுவுமே தானா வரணும்...!"

"அம் சாரி ரங்கா...!''

"நோ ப்ராப்ளம்..." என்றவள் தனது அறைக்கு சென்றுவிட்டாள்...

'இவங்க கிட்டேயும் பேச முடியல, யார்கிட்டயும் சொல்ல முடியல... என்னதான் பண்றது...' மனதுக்குள்ளே சலித்துக் கொண்டான்...

ஆபீஸில் இருந்து வந்ததும் தனது பீரோவில் எதையோ தேடிக் கொண்டிருந்த ரங்காவிடம் பாட்டி, " என்ன தேடிட்டு இருக்கே...?''

''என் பாஸ் புக் பாட்டி...!''

''அது எதுக்கு இப்போ...?''

''பாட்டி விளையாடுறீங்களா... அடுத்த மாசம் எவ்வளவு பணம் வேணும்... உங்களுக்கு தெரியாதா...?''

''அதெல்லாம் நான் பார்த்துக்கிறேன். உன்னோட சேவிங்க்ஸ் இருக்கட்டும்... பின்னால தேவைப்படும்...''

''சரி, முதல்ல பாஸ்புக் இருக்குதான்னு செக் பண்ணிக்கிறேன்...'' தனது உடைகளுக்கு இடையில் இருந்த பாஸ் புக்கை தேடி எடுத்து விட்டாள்... எவ்வளவு இருக்கு என்று

பார்க்கையில் ஒரு லட்ச ரூபாய் அதில் இருந்தது…

“பாட்டி ஒரு லட்ச ரூபாய் இருக்கு போதுமா…?”

“போதும் எங்கிட்ட குடு. நான் பத்திரமா வச்சிருக்கேன்…” என்று வாங்கி வைத்துக் கொண்டார்…

“குழந்தைக்கு தேவையான சாமான் வாங்க வேண்டாமா…!”

“வாங்கணும்…!”

“இன்னைக்கு போய் வாங்கலாமா…!”

“குழந்தை பிறப்பதற்கு முன்னாடி எதுவும் வாங்கி வைக்க கூடாது…!”

“இது என்ன புது ரூல்ஸ்…?”

“புதுசு இல்ல பழசுதான்… அந்த காலத்திலேயே எங்க அம்மா சொல்லி இருக்காங்க, குழந்தை பிறந்த பிறகுதான் புதுசு எதுவும், அதுக்கு வாங்கணும்… அந்தக் காலத்துல குழந்தை பிறந்ததும் பழைய வேஷ்டியில் தான் குழந்தையை சுத்தி வச்சிருப்பாங்க…!”

“பாட்டி அது உங்க காலம்… இப்ப எல்லாம் இன்பெக்ஷன் ஆயிடும்…!”

“அதுவும் சரிதான்… ஆனாலும் குழந்தை பிறந்த பிறகுதான்

புதுசு...''

''அப்ப நான் செலக்ட் பண்ணி வாங்க முடியாதா...?''

''கொஞ்சமா நாங்க வாங்குகிறோம்... அப்புறம் நீ நிறைய வாங்கு...!''

''என்ன, ரெண்டு பேரும் தீவிரமா எதை பத்தி பேசிட்டு இருக்கீங்க...?'' என்று கேட்டுக்கொண்டே கீர்த்தியும் வாசுவும் உள்ளே நுழைந்தனர்...

''அவளுக்கு இப்பவே குழந்தைகளுக்கு டிரஸ் எடுக்கணுமாம்...?''

''இப்பவே, வா போவோம்...!''

''நீ இப்படி சொல்லி தாண்டா அவளைக் கெடுத்து வச்சிருக்கே...!''

''என்ன பாட்டி நீங்க...? அவ என்ன அவளுக்கு டிரஸ் வேணும்னு கேட்டாளா...? நகை எடுக்கணும்னு சொன்னாளா...? குழந்தைகளுக்கு தானே எடுக்கணும்னு சொல்றா...? இதுல என்ன தப்பு...?''

''தப்பு எதுவும் இல்லை... ஆனால் குழந்தை பிறந்த பிறகு

தான் எடுக்கணும்… அது தான் ஐதீகம்…!”

“ஓகேடா… குழந்தை பிறந்த பிறகு நாம எல்லாரும் போய் நிறைய எடுத்துடலாம்…!” அவன் சொன்னதைக் கேட்டு கீர்த்தி சிரித்தாள்…

“ஏய் நீ எதுக்கு சிரிக்கிற…?”

“இல்ல, குழந்தை பிறந்ததும் அக்கா கொஞ்ச நாளைக்கு வெளியவே வர முடியாது. அப்புறம் எங்க டிரஸ் செலக்ட் பண்றது…?”

“ஒரு மாசம் கழிச்சு போகலாமில்ல… அப்ப போறோம் என்ன ரங்கா…?” என்று வாசு அவளுக்கு பரிய…

“அதானே, நீங்க அக்காவை விட்டு கொடுத்துடுவீங்களா என்ன…?”

“அவ எந்த காலத்திலேயும் என்னை விட்டுக் கொடுத்ததே கிடையாது… அப்புறம் நான் எப்படி…?” என்றவனுக்கு கண்கள் லேசாக கலங்கியது.

“எப்ப இருந்து நீ லீவு போடற…?”

“இன்னும் பத்து நாள் தான் ஆபீஸ் போகணும்… அப்புறம்

லீவு தான்...!”

“அடுத்த செக்கப் எப்போ...?”

லீவு எடுத்த அன்னைக்கே ஹாஸ்பிடல் போய் செக் பண்ணிட்டு வந்துடலாம்... அப்புறம் அவங்க சிசேரியனுக்கு நம்மள தான் நாள் பார்க்கச் சொல்லி இருக்காங்க... ஒரு நல்ல நாள் பார்த்து ஹாஸ்பிடலில் அட்மிட் ஆயிட வேண்டியதுதான்...!” பாட்டிதான் பதில் சொன்னார்.

பத்து நாட்கள் கழித்து ரங்கா லீவு போட்டு வந்ததும் ஹாஸ்பிடல் சென்று செக்கப் பண்ணி விட்டு வந்தனர்...

அடுத்த பத்து நாட்களில் ஒரு நல்ல நாள் பார்த்து பாட்டி சொல்ல அன்று சிசேரியன் செய்வது என்றும் முடிவு செய்யப்பட்டது.

வாசுவும் கீர்த்தியும் கொஞ்சநாள் இவர்களோடு வந்து தங்கி விடுவது என்று முடிவு செய்தனர்...

பாட்டி மட்டும் தனியாக ஒரு பிரசவத்தை சமாளிக்க முடியாது என்று வாசு தீர்மானமாகச் சொல்லி விட்டான்...

பாட்டியும் அது சரிதான் என்பதால் மவுனமாக ஒத்துக்கொண்டார்... குறிப்பிட்ட நாளில் ஹாஸ்பிட்டலில் ரங்கா

சேர்க்கப்பட்டாள்…

மறுநாள் காலை முதல் சிசேரியன் ரங்காவுக்கு தான்… இரவு சற்று மனக் கலக்கத்துடன் இருந்த பேத்தியிடம் பாட்டி, “ரங்கா நான் உன்னை என்றுமே ஒரு பக்குவமான அனுசரித்துப் போகக் கூடிய பொண்ணாதான் பார்த்து இருக்கேன்…

இப்ப நான் சொல்லப்போறது உனக்கு தெரிந்தாலும் கூட அதை அனுபவபூர்வமாக உணர்ந்தவள் என்கிற முறையில நான் சொல்றதை கொஞ்சம் கவனமா கேட்டுக்கோ…

பிரசவம் என்பது குழந்தைக்கு மட்டும் பிறப்பு கிடையாது ஒரு தாய்க்கும் அது பிறப்பு தான்… சிறு குழந்தையாக பிறந்து, சிறுமி, குமரி, மனைவி என்ற பருவம் மாறி தாய் என்கிற கருணை தேவதை அங்கு பிறக்கிறாள்…

யாரும் சொல்லி வைத்து அது நடக்கிறது இல்லை… அந்த தொப்புள் கொடிக்கான பந்தம் அந்தத் தாயை பிறக்க வைக்கிறது…

குழந்தைக்கு பால் கொடுக்கும் போதும் சரி, அது பசியில் அழும் போதும் சரி, அதன் குரல் கேட்கும் போதும் சரி, அதன் அம்மாவுக்கு ஏற்படும் பரவசம், துடிப்பு அதை உணர்ந்து பார்த்தால்தான் தெரியும்…

எல்லாருக்கும் இது சாதரணமா நடக்கும்… ஆனால் உனக்கு ஒரு கட்டத்தை மீறி அசாதரணமா இந்த கட்டம் நடக்குது…

மனைவிங்கற பருவத்துல உனக்கு கிடைக்க வேண்டிய சந்தோஷம் எதுவும் கிடைக்கல… நீ அதுல உள்ள பிரச்சினைகளை மட்டும் தான் பார்த்த ரங்கா, அதிலும் சில நினைவுகள், சந்தோஷங்கள் எல்லாமே இருக்கு… அதை அனுபவிக்காமல் அதுக்கு அடுத்த கட்டத்துக்கு நீ தாவிட்டே… இந்தத் தாய் என்கிற இந்த ஸ்தானத்திலாவது உன்னோட சந்தோசத்தை பரிபூரணமாக நீ அனுபவி…

எதுவும் நம்ம கையில இல்ல… ஒவ்வொரு தாயும் தன்னுடைய குழந்தைகளுக்காக தன்னை உருக்கிக்கிறா… இந்த குழந்தைகளுக்காக நீயும் உன்னை உருக்கிகித்தான் போறே… அந்த சமயத்தில் எந்த விதமான எதிர்ப்பு வந்தாலும் ஒரு நொடி கூட இந்த குழந்தைகளை, விடவோ, வெறுக்கவோ கூடாது…

இந்தக் குழந்தைக்காக நீ என்ன வேணா செய்யணும்… ஏன்னா அது தான் உன்னோட வாழ்க்கை. உன்னோட லட்சியம்… இதை மட்டும் உன் மனசுல வச்சுக்கோ… உனக்கு தைரியம் தானா கிடைக்கும்…! பாட்டி அவளுக்கு புரியும் படி எடுத்து உரைத்தார்…

‘‘பாட்டி ரொம்ப தேங்க்ஸ்…!

“எதுக்கு.?

“முதல்ல நான் இப்படி ஒரு முடிவு எடுத்ததை நீங்க ஆதரிப்பீங்கன்னு நான் எதிர்பார்க்கல… இரண்டாவது எனக்கும் இந்த உலகத்தில், எனக்காகவே என்னை நேசிக்கிற ஏதாவது ஒரு ஜீவன் வேண்டும்னு ஒரு ஆசை இருந்தது… அது கணவனா தான் இருக்கணும்னு எதிர் பார்க்கலை…

ஆனால் குழந்தைங்ககிறது நாம அன்பு செலுத்தும்போது பிரதிபலன் பாராமல் அதுவும் திருப்பி நம்ம கிட்ட அன்பு செலுத்தும் இல்லையா…? அதுவும் எந்தக் குழந்தைக்கும் அம்மான்னா ஸ்பெசல்… அதான் நான் இப்படி ஒரு முடிவு எடுத்தேன்… கண்டிப்பா நான் என் குழந்தைகளுக்காக எந்தவித சோதனையும் தாங்கி வாழ்வேன் பாட்டி… இது உங்க மேல சத்தியம்…!” மனபூர்வமாக ரங்கா பாட்டியிடம் கூறினாள்…

மறுநாள் அதிகாலையிலேயே ரங்காவுக்கு ரெட்டை குழந்தைகள் பிறந்தது… ஆண் ஒன்று, பெண் ஒன்று. ஆபரேஷன் முடிந்து வெளியில் வந்த டாக்டர் மகாலட்சுமி "பாட்டி உங்க பேத்திக்கு ஆணும், பெண்ணுமா இரட்டை குழந்தைங்க… சூப்பரா இருக்கு பிள்ளைங்க… போய் பாருங்க…!” என்று கூறிக் கொண்டே தனது அறைக்கு சென்றார்.

அங்கு சென்றதும் முதல் வேலையாக சேர்மன் சேதுராமிற்கு போன் பண்ணி, ‘‘சார் ரங்காவுக்கு சிசேரியன் முடிஞ்சிருச்சு… ஆண் குழந்தை ஒன்று… பெண் குழந்தை ஒன்று…’’ என்று சொன்னதும்…

அவர் ‘‘ரொம்ப தேங்க்ஸ். மகாலட்சுமி உங்க உதவி இல்லைனா இது நடந்திருக்காது… எனிவே நான் உங்களுக்கு நிறைய நன்றிக்கடன் பட்டிருக்கேன்…’’

‘‘டாக்டர், என்ன இது? நாங்க உங்க ஆஸ்பத்திரியில் வேலை பாக்குற டாக்டர். நீங்க சொன்னதை நான் செஞ்சு தான் ஆகணும்…!’’

‘‘உதவி வேற, கடமை வேற. நீங்க செஞ்சது உதவி… அதுக்கு நான் நன்றிக்கடன் பட்டிருக்கேன்…

நல்ல பன்னீர் ரோஜா நிறத்தில், சுருட்டை முடியுடன், கருவண்டு விழிகளை கொண்டு பிறந்த குழந்தைகளை பார்த்த பாட்டிக்கும், வாசுவுக்கும், கீர்த்திக்கும் சந்தோஷம் தாங்க முடியவில்லை…

சந்தோஷத்தில் பாட்டி போன் பண்ணி வைதேகிக்கும், கேசவனுக்கும் விஷயத்தை சொல்ல, "உங்களுக்குத்தான் மானம் இல்லை என்றால் எங்களுக்கு இல்லையா…? அப்பன் பெயர்

தெரியாத பிள்ளைகளுக்கு நீங்க சந்தோசப்பட்டு நிக்கிறீங்க…! வெக்கமா இல்ல… போனை கீழே வைங்க… நாங்க பார்க்க வருவதாக இல்லை…!" என்று பொரிந்து விட்டு போனை கீழே வைத்தாள்.

# அத்தியாயம் 21

ரங்கா காலேஜில் முதல் ரேங்க் எடுத்து பாஸ் பண்ணி இருந்தாள்… ரிசல்ட் வந்ததும் ரங்க பாஷ்யத்திற்கு போன் பண்ணி, அங்கிள் நான் பாஸ் பண்ணிட்டேன் டிஸ்ட்ங்சன்…'' என்று சொல்ல…

''ஓகே, கங்குராஜுலேசன்ஸ். நல்ல நாள் பார்த்து நம்ம ஆபீஸ் வந்துருமா…?

''தேங்க்ஸ் அங்கிள்…!'' என்றவள் அவர் சொன்னபடி நல்ல நாள் பார்த்து ஆபீஸில் சேர்ந்துவிட்டாள்.

அவள் கூடவே புதிதாக நான்கு பேர் வேலைக்கு சேர்ந்தனர். சரவணன், லீலா, மகேஷ், வினோத்

ஆரம்பத்தில் மற்றவர்கள் எடுத்து வைத்த குறிப்பை டைப் பண்ணி கொடுப்பது, சில விஷயங்கள் காப்பி பண்ணி கொடுப்பது என்று சின்னச் சின்ன வேலைகள்தான் கொடுக்கப்பட்டது…

முதன்முதலாக கேஸ் குறிப்புகள் கொண்ட பேப்பரை எடுத்துக் கொண்டு சீனியருக்கு உதவியாக ஒரு நாள் கோர்ட்டுக்கு சென்றாள்.

முதல் நாள் என்பதால் சற்று படபடப்பாக இருந்தது… வழக்கமாக வரும் இன்னொரு உதவியாளர் அன்று லீவு வரவில்லை… எனவே ரங்காவையும், மகேஷையும் அழைத்துக்கொண்டு சீனியர் கோர்ட்டுக்கு சென்றிருந்தார்…

முக்கியமான கிரிமினல் கேஸ் வேறு… இரண்டு மூன்று ப பைல்களில் அவரது குறிப்புகள் இருந்தது…

நேரம் பார்த்து அவற்றை அவரிடம் சேர்ப்பிக்க வேண்டிய வேலை மகரிஷிக்கும், ரங்காவுக்கும் கொடுத்திருந்தார்…

முதலில் பயந்தாலும் சற்று தெளிந்து விட்ட ரங்கா, நிதானமாக அவர் கேட்க, கேட்க ஒவ்வொரு பேப்பராக மாற்றி, மாற்றி எடுத்து கொடுத்ததில் சந்தோசமடைந்த ரங்கபாஷ்யம் வீட்டுக்கு வந்ததும், ‘‘பரவாயில்ல நீ பயந்து விடுவேன்னு நினைச்சேன் சமாளிச்சிட்டே… இப்படித்தான் இருக்கணும் வெரி குட்…" என்று பாராட்டினார்.

முதல் மாத சம்பளமாக ஒரு சிறிய தொகை எல்லோருக்கும் வழங்கப்பட்டது… மற்றவர்கள் எல்லோரும் சாதாரணமாக வாங்கிக்கொள்ள ரங்கா மட்டும் அவரது காலில் விழுந்து வணங்கி வாங்கிக் கொண்டார்.

‘‘என்னம்மா இதெல்லாம்…?’’ என்று கேட்டதற்கு…

“எங்க பாட்டிக்கு அப்புறம் நான் நல்லா இருக்கணும்னு நினைக்கிறது நீங்க மட்டும் தான் சார்… நீங்க ஆசீர்வாதம் பண்ணினால் எனக்கு சந்தோஷம்…" என்று அவள் சொன்ன பதில், ரங்க பாஷ்யத்தை நெகழ்த்தி விட்டது…

“*I was smart enough to go thorugh any door that opened.*”

*-Joan Rivers*

ரங்கா கண் விழித்ததும் கீர்த்தியும், பாட்டியும் அவளிடம் குழந்தைகளை கையில் ஏந்திக் கொண்டு வந்து காட்டினர்…

குழந்தைகளை பார்த்ததும் ரங்காவின் கண்களில் தன்னை அறியாமல் கண்ணீர் சுரந்தது…

சின்னஞ்சிறு கண்ணும், வாயும் கொண்டு ஒரு உள்ளங்கை அளவே இருந்த இரண்டு குழந்தைகளும், இரண்டு குட்டி ரோஜாப்பூக்கள் கை கால் முளைத்து இருப்பது போல் அவளுக்கு தோன்றியது.

ஒரு நாள் முழுவதும் அவளை ஐசியூவில் வைத்திருந்துவிட்டு இன்று காலை நான் அறைக்கு மாற்றி இருந்தனர்.

சற்று நேரத்தில் ஒரு நர்ஸ் உள்ளே வந்து மற்றவர்களை

வெளியே அனுப்பிவிட்டு பாட்டியின் உதவியோடு இரண்டு குழந்தைகளுக்கும் ரங்காவை தாய்ப்பாலூட்ட வைத்தார்…

“இந்த மாதிரி தான் கொடுக்கணும். அரை மணி நேரத்துக்கு ஒரு பத்து நிமிஷம் கொடுங்க, அவ்வளவுதான் அதுக்கு வயிறு… முதல் ஒரு மாதம் ஒரு நாளைக்கு இருபது தடவையாவது இந்த மாதிரி பண்ணனும்…!”

குடுக்கிறதுக்கு முன்னாடி என்னென்ன செய்ய வேண்டும் என்பதை விளக்கமாக சொல்லி விட்டு பாட்டியிடம் “நீங்க இருக்கீங்க… எல்லாம் கொஞ்சம் பாத்துகோங்க பாட்டி…!” என்று சொல்லிவிட்டு சென்று விட்டாள்.

பிறந்த பச்சை மண், அது தன் செப்பு வாயில் பால் குடிக்கும்போது கங்காவிற்கு இந்த உலகமே மறந்த்து. குழந்தையின் தலையை தன் மார்போடு அணைத்து, அதன் கால்களை வருடி, அதற்கு அமுதூட்டி அதன் வாயை துடைத்து, பசி ஆறி தூங்கிய குழந்தையை பாட்டி வாங்கி தன் அருகில் கிடத்திய போது ரங்காவிற்கு எழுந்த உணர்வுகளை வார்த்தையால் வடிக்க இயலாது போயிற்று…

அதிலும் இரண்டு குழந்தைகள் தன் உயிரே இரண்டாகப் பிரிந்து இரண்டு குழந்தைகளாக உருக்கொண்டதோ என்ற

நினைவில் அவைகள் லேசாக வீறிடும் முன் தன்னை அறியாமல் குழந்தைகளுக்காக பாட்டியிடம் கையேந்தினாள்…

மறுநாள் ரங்காவையும், குழந்தைகளையும் அவர்களது ரூமில் பார்க்க வந்த சேதுராம், குழந்தைகளைப் பார்த்ததும் பாட்டி ரங்காவிடம் வெரி குட், பெண் ஒண்ணு ஆண் ஒண்ணு… ஒரே கல்லுல ரெண்டு மாங்கா… பேத்தியும், பேரனும்… வஞ்சனை இல்லாம ரெண்டு கிடைச்சிருச்சு என்ன ரங்கா…? சொல்லி சிரிக்க பாட்டியும் இணைந்து சிரித்தார்.

‘‘அப்புறம் முக்கியமான விஷயம். அதை சொல்லத்தான் வந்தேன். பத்து நாள் ஆஸ்பத்திரில இருந்துட்டு போங்க. இங்கே உங்களுக்கு மட்டும் ஸ்பெஷலா ஒரு நர்ஸ் போட சொல்லி இருக்கேன்… ஒத்தையில சிரமப்பட வேண்டாம்…"

‘‘எதுக்கு தேவை இல்லாம…?’’

‘‘மூச்… ஒன்றும் பேசக்கூடாது… நீ மட்டும் தான் இங்க துணை இருக்க. கீர்த்தி வீட்டுக்கு போய் சமையல் பண்ணி எடுத்துட்டு வரா… அப்புறம் என்ன? நர்சு துணை இருக்கட்டும்…!’’ என்று முடித்துவிட்டார்.

பாட்டி ரங்காவுக்கு மிகவும் சந்தோஷம். உதவி செய்த நண்பனுக்கு மனதார நன்றி கூறினார்.

இடையில் ஒரு நாள் ஹாஸ்பிடலுக்கு வந்த உபேந்திராவுக்கு ரங்காவுக்கு இரட்டை குழந்தைகள் பிறந்திருக்கும் விஷயம் தெரிந்தது…

வீட்டிற்கு சென்றதும் தாத்தாவிடம் “உங்க பிரெண்டு பேத்திக்கு ஜாக்பாட் அடிச்சிருக்கு போல இருக்கு…”

“என்ன சொல்ற…?”

“டிவின்ஸ் பிறந்திருக்கிறதை தான் சொல்றேன்…!”

”அதுவா… ஆமா ஆசைக்கு ஒரு பெண்… ஆஸ்திக்கு ஒரு ஆண்…!”

“யாரோட ஆசைக்கு…? யாரோட ஆஸ்திக்கு…!” அவ்வளவு பெரிய பணக்காரங்களா என்ன…?”

“ஏன் அப்ப பணம் இருக்கிறவங்கதான் அவங்க ஆஸ்திக்கு குழந்தை பெத்துக்கணுமா என்ன…? பணம் இல்லாதவங்க குழந்தை வந்தா கூட அதை அழிச்சிரணுமா என்ன…?”

“அப்படி இல்ல… நீங்க ஆஸ்திக்குன்னு சொன்னீங்களே…!”

“ஆமா சொன்னேந்தான்… அதெல்லாம் அர்த்தத்தோட பார்க்கணும்… அவங்க கிட்ட என்ன இருக்கோ அதுதான் அவங்க

ஆஸ்தி… அது எவ்வவளவு வேணா இருக்கட்டும்… அதைதான் சொன்னேன்… ஏன் நீ கூட இப்ப பணக்காரனா தான் இருக்கே… உனக்கு எந்தப் பிள்ளை இருக்கு…? உன்னோட ஆஸ்திக்கு…?'' என்றவர் அவன் பதில் சொல்லுமுன் எழுந்து சென்றார்…

தாத்தாவின் கோபத்தை கிளறி விட்டு விட்டோம், என்று உபேந்திராவுக்கு நன்கு புரிந்தது…

ரங்கபாஷ்யம் தனது மனைவி மீனாவோடு குழந்தைகளை பார்க்க ஹாஸ்பிடல் வந்தார்… ``வாங்க சார்…!'' என்று புன்னகையோடு வரவேற்ற ரங்காவை பார்த்து, `` ரொம்ப சந்தோஷம்மா, நீ ஒரு குழந்தை கேட்ட, இறைவன் இரண்டு கொடுத்துட்டேன் போல இருக்கே… இன்னும் பொறுப்பு ஜாஸ்தியா ஆயிடுத்து…!'' என்று சொல்லிக்கொண்டே தன் மனைவி கையில் இருந்த, குழந்தைக்கு வாங்கியிருந்த பொருட்களை பாட்டியிடம் கொடுத்தார்.

நிறைய வாங்கியிருந்தார்… டிரஸ் குழந்தைகள் குளிப்பதற்கு சோப்பு, க்ரீம் டவல் என்று ஒரு பெரிய பார்சல்…`` எதுக்கு சார் இவ்வளவு வாங்கிட்டு வந்திருக்கீங்க…?''

``எனக்கு ஒரு பேரனோ, பேத்தியோ பிறந்தான் வாங்கி தர மாட்டேனா… எனக்கு நீ ஒரு மக மாதிரிதான்ம்மா. அது

என்னவோ உன்னை மட்டும் என்னால பிரிச்சு பார்க்க முடியல... என்ன இரண்டு குழந்தைக்கு வாங்கனேன், அதனால ரெண்டு செட் வாங்கிட்டேன்...!

மீனாவின் முகமே சரியில்லை... அதை வைத்து அவருக்கு விருப்பமில்லை என்பதை புரிந்து கொண்டு பாட்டியும் ரொம்ப பேசவில்லை. கேட்ட வார்த்தைக்கு பதில் சொன்னதோடு சரி...

குழந்தைகளை பார்த்து விட்டு ரங்கபாஷ்யம் "ரொம்ப அழகா இருக்கு உன்ன மாதிரியே... நல்லா பார்த்துக்கோ... ஆறு மாசம் கழிச்சு முடிஞ்சா வேலைக்கு வா... இல்லைனா ஒரு வருஷ லீவு எடுத்துக்கோ...!"

"பார்க்கலாம் சார்... முடிஞ்சவரை சீக்கிரமா வர பார்க்கிறேன்...!"

சற்று நேரம் இருந்து பாட்டியிடம் ரங்காவின் உடல்நிலை, குழந்தைகளைப் பற்றி எல்லாம் பேசி விட்டு, கடைசியில் "இந்தாங்க..." என்று பாட்டியின் கையில் ஒரு பணக்கட்டை எடுத்துக் கொடுத்தார்.

"ஐயோ என்ன இது...?"

"இல்ல இருக்கட்டும்... உங்களுக்கு இப்ப கண்டிப்பா

தேவைப்படும்… ரங்காகிட்ட முதலிலேயே கொடுக்கணும்னு நினைச்சேன்… ஆனா அவ ரொம்ப தன்மானம் பார்க்கிறவ, வாங்க மாட்டான்னு தெரியும்… அதனாலதான் உங்க கிட்ட கொடுக்கிறேன்… உங்க பையன் கொடுத்தா வாங்கிக்க மாட்டீங்களா…? என்னை உங்க பையனா நெனைச்சுக்கோங்க… உங்களால எப்ப முடியுமோ எனக்கு அப்பா திருப்பிக் கொடுங்கள்… கடனாக தான் தரேன்…'' என்று சொல்லி கொடுக்க, பாட்டியால் மறுக்க இயலவில்லை.

''கடன்தான்… எப்படியாவது நானும் ரங்காவும் திருப்பிக் கொடுத்திடுவோம்…!''

''கண்டிப்பா வாங்கிக்கிறேன்…'' என்றவர் சொல்லிக் கொண்டு கிளம்பினார்.

வீட்டுக்கு சென்றதும் மீனா ரங்கபாஷ்யத்தை பிலுபிலுவென்று பிடித்துக்கொண்டாள்… ''நீங்க என்ன நினைச்சுட்டு இருக்கீங்க உங்க மனசுல…?'

''ஏன், திடீர்னு இப்படி ஒரு கேள்வி…?''

''போகும்போது எங்க போறோம்னு சொல்லவே இல்ல… ஏற்கனவே தேவையான பொருள் வாங்கி சாமான வச்சிட்டீங்க போல இருக்கு, அங்க போனதும் தூக்கி குடுக்குறதுக்கு ரெடியா…

அப்ப நான் இதை விரும்பமாட்டேன்னு உங்களுக்கு தெரிஞ்சு தானே இருக்கு. அப்புறம் எதுக்கு என்னை கூட்டிட்டு போனீங்க...?''

''பாட்டி ரங்கா உன்னோட சொந்தம்... நான் மட்டும் போனா நீ வரலைன்னு, உன்னை தப்பா நினைக்க மாட்டாங்க...!''

''இதுல தப்பா நினைக்க அதுக்கு என்ன இருக்கு...? தப்பா நடந்திருக்கிற ஒரு விஷயத்துக்கு நான் வரலைன்னா தப்பில்லை...!''

''தப்பா பேசாத மீனா...?''

''என்ன தப்பா பேசாத... ஆமா நானும் தான் கேட்கிறேன்... தட்டழிந்தது, கெட்டழிந்து போனவளை நீங்க எதுக்கு தலையில தூக்கி வெச்சு கொண்டாடுறீங்க...?''

''ரங்கா தப்பா நடந்து இருக்க மாட்டா... அதைவிட முக்கியம் தப்பான ஒரு காரியத்துக்கு பாட்டி துணை போயிருக்க மாட்டா...!''

''ஓ... உங்களுக்கு பாட்டியும் பேத்தியும் ரொம்ப நல்லா தெரியும் போல இருக்கு...!'' மீனாவின் வார்த்தைகளில் குத்தல் தெரிந்தது.

''என்ன பேசுற நீ...? பார்த்து பேசு...! உனக்கு இன்னொரு

பொண்ணு இருந்து, அவளுக்கு இந்த மாதிரி ஒரு நிலைமை என்றால், நீ சப்போர்ட் பண்ண மாட்டியா...!''

''என் வயித்துல பொறந்த பொண்ணு இந்த மாதிரி பண்ண மாட்டா... அப்படி பண்ணுனா நான் வெட்டி போட்டுருவேன்...!''

''முட்டாள்தனமா பேசாதே... குழந்தைங்க நம்ம மூலம் இந்த பூமிக்கு வந்தவங்க, அவ்வளவுதான். அவங்களோட வாழ்க்கையில் தலையிட கூடிய உரிமை யாருக்கும் கிடையாது... இது தெளிவா புரிஞ்சதுனால தான் பாட்டி அவளுக்கு சப்போர்ட் பண்ணி நிக்கிறாங்க...!''

''அவங்க பேத்தி, அதனால சரி... ஆனால் உங்களுக்கு என்ன உறவு...?'' என்று மீனா கேட்டதும் கோபத்தில் கொதித்து எழுந்த ரங்கபாஷ்யம் மனைவியை ஒரு அறை விட...

அத்தனை நேரம் ஏதோ சத்தமாக இருக்கே என்று உள்ளே வந்து அவர்களுக்கு தெரியாமல் வாக்குவாதத்தை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த விஷ்வா ''அப்பா...'' என்று அதட்டினான்...

''ஏய் நமக்கு கல்யாணம் ஆகி இருபத்தி ஐந்து வருஷத்துக்கு மேல ஆயிடுச்சு... இதுக்குள்ள நீ என்ன புரிஞ்சுக்க வச்சுருக்க வேண்டாம். அப்படி புரியலைன்னா நாம வாழ்ந்த வாழ்க்கைக்கு அர்த்தமே இல்லை... ச்ச...'' என்றவர் அறையை விட்டு உடனே

வெளியேறி விட்டார்.

“என்னமா பிரச்சினை…? எப்போதும் அப்பாவுக்கு கோபம் வந்தா நீங்க அமைதியா போயிடுவீங்க… இன்னைக்கு என்ன…?”

“ஒண்ணும் இல்ல… அந்த கேடு கெட்டவளுக்கு ஆஸ்பத்திரியில் இரட்டை குழந்தை பிறந்து இருக்கு… அதை பார்ப்பதற்கு என்னை என்கிட்ட சொல்லாமலே கூட்டிட்டு போனார்… அது மட்டும் இல்ல, அந்த குழந்தைகளுக்கு ஒரு செம சாமான் வாங்கி இருக்கிறார் எனக்கு தெரியாமல்… அங்கே போயி ஒரு லட்ச ரூபாய் கட்ட எடுத்துக் கொடுத்து செலவுக்கு வச்சுக்கோங்கன்னு சொல்லிட்டு வந்திருக்கிறார்… இவ்வளவு தூரம் செய்யறதுக்கு அவ என்ன நமக்கு ரொம்ப முக்கியமான ஆளான்னு நான் கேட்டேன், இது தப்பா…?” அம்மாவின் உணர்வுகளை அவனால் புரிந்து கொள்ள முடிந்தது.

“சரிம்மா விடுங்க…” அம்மாவிடம் சொல்லி விட்டான். ஆனாலும் ரங்கா விஷயத்தை ஜீரணிக்க முடியவில்லை…

‘எப்படி இந்த மாதிரியான ஒரு விஷயத்துக்கு அவள் சம்மதித்தாள்’ என்பது அவனுக்கு புரியாத புதிராகவே இருந்தது… அப்பாவின் அலுவலகத்தில் வெகுநாட்களாக பணிபுரிபவள் என்ற விதத்தில் அவனுக்கு அவளை நன்றாகவே தெரியும்… மேலும்

அப்பாவும் அடிக்கடி அவளைப் பற்றி வீட்டில் நல்லவிதமாகவே சொல்லி இருந்தது வேறு அவனுக்கு அவளைப் பற்றிய நல்லெண்ணத்தை மனதில் விதைத்து இருந்தது…

முக்கியமாக எந்தவித அலட்டலும் இல்லாத பாவனையை அவளிடம் அவன் எப்போதும் கண்டிருக்கிறான்… அந்த ஒன்றே அவளிடம் அவனுக்கு பெருமதிப்பை தோற்றுவித்திருந்தது…

இந்த கால பெண்களின் நடை, உடை, பாவனை, பேச்சு எல்லாமே சற்று எல்லை மீறியதாக தோன்ற, அவளுடைய நேர்மையும், தன்னம்பிக்கையும், தன்மானமும் அவனுக்கு மிகவும் பிடித்துப்போக காதல் என்று சொல்லி தன்னுடைய இமேஜை குறைத்துக் கொள்ள விரும்பாமல் நேரடியாக கல்யாணம் செய்து கொள்ள ஆசைப்பட்டான்…

அவன் சொல்வதற்கு முன்னே அவள் இப்படி ஒரு முடிவெடுப்பாள் என்றும், அதற்கு பின்னாடி ஒரு காதல் அல்லது ஒரு ஏமாற்றம் இருக்கும் என்றும் அவனால் கணிக்க முடியவில்லை… காதலித்து ஏமாற்றி விட்டு விட சிறிய குழந்தை அல்ல… அது அவனுக்கு தீர்மானமான எண்ணம்… அவளை அறியாமல் இந்த குழந்தை வந்திருக்க வாய்ப்பு இல்லை… எப்படி என்று அவனும் தெரிந்த விதத்தில் எல்லாம் மண்டையை குழப்பி கொண்டான். ஆனால் பதில்தான் கிடைக்கவில்லை…

ஒருவேளை கல்யாணம் யாருக்கும் தெரியாமல் பண்ணி கொண்டனரோ...? அதன்பிறகு அவர்களுக்கு இடையில் பிரிவு ஏற்பட்டிருக்குமோ இந்த மாதிரி தான் நினைக்கத் தோன்றிற்று...

வெளிப்படையாக அப்பாவிடம் கேட்கவும் தயக்கமாக இருந்தது... இன்னும் தன்னுடைய எண்ணத்தை வீட்டில் சொல்லாததால், அவளுடைய இந்த முடிவு அவனுக்கு அவள் மீது ஒரு தப்பபிப்பிராயத்தை ஏற்படுத்த, அதை அவரிடம் சொல்ல முடியாத நிலையில், இருந்து வந்தான்.

இப்போது அப்பா அவளுக்கு சப்போர்ட் பண்ணி பேசவும், அம்மாவின் கோபம் நியாயமானது என்று தோன்ற, “ அப்பா வரட்டும் நான் கேட்கிறேன்... நீங்க இப்ப பேசாம இருங்க...! என்று சொல்லி அம்மாவை சமாதானப்படுத்தி வைத்தான்...

கோர்ட்டுக்கு சென்று விட்டு திரும்பி வந்த அப்பாவிடம் விஷ்வா “எதுக்குப்பா அம்மாவுக்கு பிடிக்காத விஷயத்தில் எல்லாம் நீங்க தலையிடுகிறீங்க...?”

“என்னோட விஷயம் உங்க அம்மாவுக்கு பிடிக்கணும் எந்த கட்டாயமும் இல்லை... அவளுக்கு பிடிக்கலைன்னா அவளை ஒதுங்கிக்க சொல்லு... அதை விட்டுவிட்டு தேவையில்லாத பேச்சோ, பிரச்சனையோ இருக்கக் கூடாது... நான் யாருக்கு உதவி

பண்ணனும், உதவி பண்ண கூடாது இதெல்லாம் சொல்லக்கூடிய அதிகாரம் யாருக்குமே கிடையாது… நான் குடும்பத்திற்கு தேவையான எல்லா விசயமும் கரெக்டா செஞ்சுட்டு தான் இருக்கேன்… உங்களுக்கு எதையும் பாக்கி வச்சுட்டு நாம மத்தவங்களுக்கு அள்ளிக் கொடுக்கலை…

ஒரு நேர்மையும், தன்னம்பிக்கையும் நிறைஞ்ச பொண்ணு அவ… உங்களுக்கு எல்லாம் தப்பா தெரியற ஒரு விஷயம் அவளுக்கு சரியாக தெரிஞ்சிருக்கு… அதனால அப்படி பண்ணி இருக்கா… என்கிட்ட வாய் திறந்து அவ உதவி கேட்கல… ஆனா இன்னும் ஆறு மாசம் ஆகும் வேலைக்கு வர… இரண்டு குழந்தைகள் வேற, சம்பளத்துக்கு பதிலா, கொஞ்சம் பண உதவி செஞ்சேன் இதுல என்ன தப்பு? கண்டிப்பா திருப்பித் தந்துவிடுவா… எனக்கு நம்பிக்கை இருக்கு…

இப்பமே அவ தனியா போர்டு போட்டா நிறைய கேஸ் அவள் கிட்ட வரத்தான் செய்யும்… ஆனால் எந்த காலத்திலும் அந்த மாதிரி என் கிட்ட பேசினது இல்ல… அவள் கேசுக்கு குறிப்பு எடுத்துக் கொடுக்கிற விதமே அலாதியாக இருக்கும்… ரொம்ப கெட்டிக்காரி… ஆனா நான் மத்தவங்க கிட்ட சொன்னது கூட கிடையாது… அவளும் என்கிட்ட எதையும் எதிர் பார்த்தது கிடையாது. ஒரு சின்ன விஷயம், இது உங்க அம்மாவுக்கு

பொறுக்காமல் என்னை தப்பா பேசலாமா…? என்னோட வயசு என்ன…? அவளோட வயசு என்ன…? அதுதான் எனக்கு தாங்கல…!'' என்றவர் சாப்பிடாமலே அவரது அறைக்கு சென்றுவிட்டார்…

ஒரு ஆணாக, அப்பாவின் கோபம் அவனுக்கு நியாயமாக தெரிந்தது… ஆனால் இதில் தான் செய்ய ஒன்றும் இல்லை என்பதும் புரிந்தது… கணவன் மனைவிக்கு இடையில் அது மகனாக இருந்தாலும் அவர்கள் விரும்பாமல் தலையிடுவது தவறு… அப்பாவின் சொல்லில் இருந்த ஒவ்வொரு வார்த்தையும், அவரது நேர்மையையும், ரங்காவின் மேல் அவர் வைத்திருக்கும் மதிப்பையும் காட்டியது… இதே காரணத்தினால் தான் அவளுக்கும் ரங்காவை மிகவும் பிடித்து தொலைத்தது…

'ஆனால் இப்போது…? இந்த நிலையிலும் ரங்காவின் மீது அப்பா வைத்திருக்கும் நம்பிக்கை, தனக்கு இல்லையோ…?' என்று எண்ணும்போதே, தன்னைப்பற்றி கீழானவனாக உணர்ந்தான்.

வைதேகி கேசவனை வறுத்து எடுத்து விட்டாள்… ''கொஞ்சமாவது உங்க அம்மாவுக்கு அறிவு இருக்கா…? ஏற்கனவே, அவளோட திமிருக்கும், அகம்பாவத்துக்கும் உங்க அம்மா தான் காரணம். இப்ப இந்த மாதிரி ஒரு காரியத்தை பண்ண வச்சு, அவ வாழ்க்கையையே கெடுத்தது உங்க

அம்மாதான்...

எல்லாத்துக்கும் மூல காரணம் நீங்க... நீங்க ஒழுங்கா சம்பாதித்திருந்தா, நான் ஏன் என் பொண்ண அவங்களுக்கு தாரை வார்க்க போறேன்... உங்க சம்பாத்தியம் பத்தல, நான் அவளை படிக்க வைக்கிறேன், அப்படின்னு சொல்லி அவளை கூட்டிட்டு போயி குட்டிச் சுவராக்கி இன்னைக்கு இப்படி பண்ணி வச்சிருக்காங்க...

அதை பெருமையாக வேற என்கிட்ட சொல்றாங்க ‘‘இரட்டைப் பிள்ளை பிறந்திருக்கு வந்து பார்க்க வான்னு...’

ஏற்கனவே வெளியில் தலைகாட்ட முடியல. தெரிஞ்சவங்க எல்லாம் அவகிட்ட கேக்குறதுக்கு பயந்துகிட்டு என்கிட்ட கேட்கறாங்க. உங்க பொண்ணுக்கு கல்யாணம் ஆயிடுச்சா...? அப்படின்னு...

இல்லைன்னு, சொன்ன அடுத்த நிமிஷம், அப்புறம் குழந்தை உண்டாகி இருக்காங்களே எப்படின்னு அடுத்த கேள்வி வேற...

எனக்கு தெரியாது, எனக்கும் அவங்களுக்கும் சம்பந்தம் இல்லைன்னு, சொல்லி, சொல்லி நானும் அலுத்துப் போய் விட்டேன்...

நல்லவேளை தாராவுக்கு, மோகனுக்கும் கலியாணம் நடந்து

முடிஞ்சுது. இல்லைன்னா அவங்க ரெண்டு பேர் கல்யாணமும் கேள்விக் குறியாய் போயிருக்கும்…

இப்படி ஒரு பெண்ணை பெத்ததுக்கு, பெறாமல் இருந்திருக்கலாம்…!'' என்று ஆரம்பித்து நாள் முழுவதும் கேசவனை திட்டி தீர்த்தாள். நின்றால் குற்றம், உட்கார்ந்தார் குற்றம். எல்லாம் உங்களால் எல்லாம் உங்களால்தான்…

பொறுக்க முடியாமல் கேசவன் ''நான் என்ன பண்ணுனேன் வைதேகி, என்னையே குற்றம் சொல்ற? நீ எதுக்கு எங்க அம்மாகூட அவளை அனுப்பி வைச்சே, நீயேன் வைத்திருக்க வேண்டியது தானே…!''

''அதைத்தானே ஏன்னு இவ்வளவு நேரம் பாடம் எடுத்தேன். அது கூட புரியாமல் பேசிட்டு இருக்கீங்க… மூன்று பிள்ளைகளைப் படிக்க வைக்க வசதி வேண்டாமா…!''

''ஆமா, எங்க அம்மாவோட பைசா மட்டும் வேணும். மத்தபடி அவங்கள பாக்க கூட மாட்டேன்னு சொன்னது யாரு…? அவங்களும் நம்ம கூடவே இருந்திருந்தால் இந்த பிரச்சினை வந்திருக்குமா…?'' என்று சந்தடி சாக்கில் வைதேகியை சொல்லிக் காட்ட…

''ஓஹோ… இன்னும் அது வேற உங்களுக்கு குறை இருக்கா…

அவங்களையே இங்க வீட்ல வச்சுட்டு... இப்ப ஏதோ ஒண்ணு ரெண்டு பேர் பார்த்தும், பாராமல் கேட்டாங்க...

அவங்க இங்கேயே இருந்திருந்தா எனக்கு வேற வினையே வேண்டாம்... என்று சொல்லி அதற்கும் பெரிய பாட்டு பாடினாள்.

தற்செயலாக போன் பண்ணிய தாராவிடம் வேறு, "உங்க அப்ப பாட்டியை நான் பார்த்துக்கலைன்னு ஒரே சண்டை..." என்று சொல்லி அழ, "போனை அப்ப கிட்ட கொடு...!" என்று சொன்ன தாரா அடுத்த அரைமணி நேரம் அப்பாவை திட்டி விட்டுதான் ஓய்ந்தாள்.

திட்டி முடித்ததும் அம்மாவிடம் பேசிய தாரா, "என்னம்மா அக்காவுக்கு ரெட்ட குழந்தை பிறந்து இருக்கா...?"

"ஆமா..."

"எனக்கு ஏன் நீங்க சொல்லல...?"

"இது என்ன சொல்லி பெருமை படுற விஷயமா...?"

"அதுக்கில்ல, முதலே தெரிஞ்சிருந்தா நான் இவரை போகவிட்டு இருக்க மாட்டேன் இல்லை...!"

"என்ன சொல்ற...?"

“உன் மருமகன் நேத்து போய் பார்த்துட்டு வந்துட்டு என்கிட்ட சொன்னார்…!”

“என்ன சொன்னாரு…?”

“உங்க அக்காவுக்கு ரெட்டை பிள்ளை பிறந்திருக்கு. ஹாஸ்பிடல்ல இருக்காங்க… குழந்தைங்க ரெண்டும் நல்லா இருக்கு அப்படின்னாரு…!

நான் கேட்டேன், உங்களுக்கு எப்படி தெரியும்னு…? போய் இப்பதான் பார்த்துட்டு வந்தேன் அப்படின்னார்…

நானே போகல. இங்க வீட்டில் யாரும் போகல. நீங்க மட்டும் என்ன…? அப்படி என்ன ஆத்திரம்…? என்று கேட்டதற்கு,

உங்க வீட்ல நீங்க போங்க, போகாம இருங்க, அதை பத்தி எனக்கு கவலை இல்லை. நான் உன்னை கல்யாணம் பண்றதுக்கு முன்னாடியே அவங்க என் கூட வேலை பார்க்கிற ஒரு ஆபீஸ் ஸ்டாப். நான் போகாமல் இருக்க முடியாது. நாளைக்கு என்னோட சீனியர் கேட்டால் நான் பதில் சொல்லணும் இல்ல… அப்படின்னு சொல்லி முடிச்சிட்டாரும்மா…!”

“ம்கூம், நாம இவங்களுக்கெல்லாம் பதில் சொல்ல சொல்லியா கொடுக்கணும்…?”

“போனியா அம்மா பார்க்க…?

“இல்ல நான் போகல… இந்த மானங்கெட்ட பொழப்புக்கு, நான் வேற போய் பார்க்கணுமாக்கும்…!

“மோகன்…?”

“சும்மாவே திட்டிட்டு இருக்கான். நம்ம போனா அதுக்கு வேற திட்டுவான்…!”

“ஆமாம்மா எனக்கு எங்க மாமியார் கிட்ட பேசவே கொஞ்சம் சங்கடமா இருக்கு… இவள பாத்துட்டு என்னை எதுவும் சொல்லிடுவாங்களோ என்று பயமா இருக்குமா…!”

“அவ உங்கள பத்தி, எங்கள பத்தி எல்லாம் கவலைப் பட்டு இருந்தா இந்த மாதிரி செய்வாளா…?”

“யாரும் எப்படியும் போகட்டும் எனக்கு எப்படி தோணுதோ அப்படி தான் நான் இருப்பேன்… உங்க பாட்டி கிட்ட இருக்கிற அதே அகம்பாவம் தாண்டி…!” அவளால் தன் மாமியாரை சொல்லாமல் இருக்க முடியவில்லை…

“சரிமா, கவலைப்படாத. என்ன செஞ்சு தொலைக்க? இவ கூட பிறந்ததற்கு இன்னும் என்ன எல்லாம் அனுபவிக்க வேண்டுமோ…? என்று புலம்பிக்கொண்டே தாரா போனை

வைத்தாள்.

ரங்காவும் பாட்டியும் இருப்பது முப்பத்தி இரண்டு வீடுகள் கொண்ட நான்கு மாடி அப்பார்ட்மெண்ட்… ஒவ்வொரு தளத்திலும் எட்டு, எட்டு வீடுகள்…

குறைந்த எண்ணிக்கையில் இருப்பதால் ஒருவருக்கு ஒருவர் நன்கு அறிமுகமானவர்கல், பழக்கமும் உண்டு…

ரங்காவின் பிரக்னன்சிக்கு பிறகு அவளிடம் நேரில் கேட்கும் தைரியம் இல்லாததால், ஒருவருக்கு ஒருவர் அவளைப் பற்றி பேசிக் கொள்ளவே செய்தனர். இது எல்லாம் ரங்காவுக்கும் பாட்டிக்கும் தெரிந்தாலும் வெளி நபர்களிடம் தன்னை ஒப்பிக்க வேண்டிய அவசியமில்லை என்று தெளிவாக கூறிவிட்டாள் ரங்கா…

இப்பொழுது ஆஸ்பத்திரியில் இருந்து குழந்தைகளை கூட்டிக்கொண்டு அந்த அப்பார்ட்மெண்ட்டுக்கு தான் வந்தனர்.

வீட்டில் வேலை செய்யும் பெண்மணி ஆரத்தி எடுத்து வரவேற்க கீர்த்தியும், ரங்காவும் ஆளுக்கொரு குழந்தையை எடுத்துக் கொண்டு வீட்டுக்குள் வந்தனர்…

ரங்காவின் பெட்ரூமில் கட்டிலுக்கு அருகில் இரண்டு தொட்டில்கள் போடப்பட்டு பக்கத்திலேயே பாட்டிக்கும் இன்னொரு

சின்ன கட்டில் போடப்பட்டிருந்தது…

குழந்தைகளைத் தொட்டிலில் இட்டு விட்டு விச்ராந்தியாக கட்டிலில் உட்கார்ந்த ரங்காவுக்கு எப்படி இதுகளை வளர்க்கப் போகிறோம் என்று ஒரு நொடி மலைப்பு தோன்றி மறைந்தது…

‘‘ரங்கா வசதி எல்லாம் போதுமா பாரு…?’’ என்று வாசு வந்து நிற்க…

‘‘போதும்… வாசு உனக்கும் கீர்த்திக்கு ரொம்ப தேங்க்ஸ்… இரண்டு பேரும் இல்லைன்னா நானும் பாட்டியும் ரொம்ப சிரமப்பட்டு இருப்போம்… இதுக்கு எனக்கு எப்படி நன்றி சொல்றதுன்னு தெரியல…!’’

‘‘என்ன நன்றி எல்லாம் சொல்லி என்னை தள்ளி வைக்கிறியா…? அதெல்லாம் தேவையில்லை…’’ என்றவன் அவள் அருகில் ஒரு சேரை இழுத்துப் போட்டு உட்கார்ந்தான்…

‘‘கீர்த்தி, பாட்டி இங்க வாங்க…!’’

‘‘என்ன வாசு…?’’ என்று வந்து நின்ற பாட்டியிடம்…

"கேட்டுக்கோங்க, எனக்கு ஒரு சின்ன யோசனை தோணுது…? எல்லோருக்கும் சம்மதம் என்றால் அது படி செய்யலாம்…!’’

"என்ன…?"

“என்னோட அபார்ட்மென்ட்டையும், இந்த வீட்டையும் வாடகைக்கு விட்டுட்டு, புதுசா ஒரு த்ரி பெட்ரூம் அப்பார்ட்மெண்ட் பார்த்து நம்ம எல்லாரும் ஒண்ணா இருக்கலாமா...?

வேலைக்கு ஒரு ஆள் வெச்சிக்கலாம். காலையில கீர்த்தியும், பாட்டியும் எல்லாம் பார்த்துக்குவாங்க. அப்புறம் கீர்த்தி என் கூட ஆபீஸ் வந்துரட்டும். ஈவினிங் திரும்பியதும் மீதத்தை பார்த்துக்கலாம்...!

பகல்ல ஒரு ஆள் குழந்தையை கவனிக்க மட்டும் மட்டும் வச்சுக்கிட்டா... மற்றதை நம்ம பாத்துக்கலாம்... என்ன கீர்த்தி சம்மதமா...? நாம தனியா இருந்தா எனக்கு தான் கஷ்டம். நான் இங்கேயும் அங்கேயுமா அல்லாடணும்.

இன்னும் ஒரு ஆறு மாதத்துக்காவது நம்ம உதவி ரங்காவுக்கு கட்டாயம் தேவைப்படும்...!” என்று சொன்னதும் கீர்த்தி உடனே சம்மதம் சொல்லி விட்டாள்...

"வாசு என்ன இது...? நானும் பாட்டியும் சமாளிச்சுக்குவோம்... கீர்த்தியும் நீயும் உங்க வாழ்க்கைய பாருங்கடா... கல்யாணமாகி ஒரு வருஷம் ஆச்சு உங்களுக்குன்னு ஒரு வாழ்க்கை இருக்கு... அதைப் பார்க்க வேண்டாமா...?

எதுவாக இருந்தாலும் இந்த ஆறு மாதத்துக்கு அப்புறம்தான்… இந்த குழந்தைக்கு தாய்மாமன் என்கிற முறையில் சொல்றேன், இது என்னோட முடிவு… மாற்றம் எதுவுமில்லை…!'' தீர்மானமாகச் சொல்லி விட்டு, ''கொஞ்சம் வெளிய வேலை இருக்கு போயிட்டு வரேன்…'' என்று சொல்லிவிட்டு சென்றான்.

# அத்தியாயம் 22

ரங்கா வேலைக்கு செல்ல ஆரம்பித்து ஒரு வருடம் ஆகிவிட்டது. வாசுவிற்கு கம்பெனி நன்றாக லாபம் கொடுத்தது. மூவருமே சிக்கனமாக செலவு செய்ததால் பணம் தாராளமாக சேர ஆரம்பித்தது...

வாசு பாட்டியிடம் ‘‘ரங்காவிற்கு நகைகள் செய்யலாம்...’’ என்று சொல்ல...

ரங்கா அதை மறுத்தாள். ‘‘பாட்டி முதல்ல நம்ம குடியிருக்க ஒரு நல்ல வீடு வேணும். அதுக்கப்புறம் தான் மத்த எந்த விஷயமும்...’’

‘‘மெட்ராஸ்ல தனி வீடு வாங்குற அளவு நம்மகிட்ட வசதி இல்லை ரங்கா...!’’

‘‘தனி வீடு எதுக்கு வாங்கணும் பாட்டி, அப்பார்ட்மெண்ட் வாங்கிக்கலாம்...’’

வாசுவிற்க்கும் அவள் சொன்னது சரி என்று படவே, அப்பார்ட்மெண்ட் வாங்க இடம் தேட ஆரம்பித்தனர்.

ஒதுக்குப்புறமாக வேண்டாம் மெயின் ஏரியாவிலேயே

பார்ப்போம், கொஞ்சம் விலை அதிகம் என்றாலும் அதுதான் வசதி, என்று தெளிவாக திட்டமிட்டனர்

அதன்படியே முதலில் ஒரு அபார்ட்மெண்ட் வாங்கி அதில் குடியேறினர்…

வழக்கம்போல் வைதேகி ‘‘நாங்க இதுநாள் வரைக்கும் வாடகைக்கு தான் இருக்கிறோம். எங்களுக்கு ஒரு வீட்டு வசதிக்கு வாய்ப்பே இல்லை நீங்க மட்டும் புதுவீடு அதுக்குள்ள வாங்கியாச்சா…!’’ என்று மல்லுக்கு நிற்க…

‘‘இது எங்க வீடு இல்லை. வாசு வாங்கியிருக்கிறான். நான் என்னோட சம்பாத்தியத்தில் வாங்குவது தான் என்னுடைய வீடு…’’ என்று உறுதியாக மறுத்து விட்டாள் ரங்கா…

‘‘என்ன ரங்கா இப்படி சொல்றே…?’’ என்று வாசு வருத்தப்பட…

‘‘இருக்கட்டும் வாசு, எனக்கு உன்னை பத்தி தெரியும். நீ இலாபத்தில் சரிவிகிதம் சேமித்து இருப்ப, இன்னொரு சதவீதத்தை பேங்க்ல போட்டு வச்சிருக்கே, அது பாட்டியோட பங்குன்னு என்று சொல்லுவே… அதனால இப்ப வாங்கின வீடு உனக்கு தான். பாட்டியோட பங்கு பாட்டிக்கு உரியது…!

இன்னும் ரெண்டு வருஷத்துல எனக்கும் கொஞ்சம் பணம்

சேர்ந்ததும் நானும் ஒரு வீடு வாங்குறேன். அப்ப தேவைன்னா நான் உன்கிட்ட பண உதவி வாங்கிக்கிறேன்...!'' என்று முடித்துவிட பாட்டி தனது பேத்தியை பெருமையாக பார்த்தாள்...

"***A women With a voice is, bydefinition a strong woman.***"

***-Melinda Gates***

வாசு சொன்னபடியே அருகிலுள்ள இன்னொரு ஏரியாவில் மூன்று பெட்ரூம் வாடகைக்கு எடுத்து இரண்டு வீட்டையும் காலி பண்ணி எல்லோரும் அங்கு ஒரே இடத்தில் குடி புக செய்தான்...

ரங்காவுக்கும் பாட்டிக்கும் மூச்சு விட நேரமில்லை... கீர்த்தி வீட்டின் மற்ற பொறுப்புகளை ஏற்க, பாட்டி 24 மணி நேரமும் குழந்தைகளுடனும் ரங்காவுடனும் நேரத்தை கழித்தார்... சுற்று வேலைக்கு ஒரு ஆள், ஏற்பாடு பண்ணிக் கொண்டு கீர்த்தி சமையல் மற்றும் ஆபீஸ் கணக்கு வழக்குகளை வீட்டில் வைத்தே கவனிக்க, வாசு கம்பெனிக்கு செல்ல ஆரம்பித்தான்... படித்து முடித்து வேலை தேடிக்கொண்டிருந்த இன்னொரு பையனை சேர்த்துக் கொண்டு, கீர்த்தி இல்லாத குறையை நிவர்த்தி செய்துகொண்டு, வாசு கம்பெனியை நடத்தினான்...

நேராக முப்பதாவது நாள் பெயர் வைத்து விடலாம் என்று

பாட்டி சொல்ல, வைத்துக் கொள்வது என்று முடிவு செய்யப்பட்டது… பாட்டி ''ரங்காவின் சீனியருக்கும், டாக்டர் சேதுராமுக்கும் மட்டும் சொல்லுவோம்…'' என்று வாசுவிடமும் ரங்கா விடவும் கேட்க…

''வேற யாருக்கும் சொல்ல வேண்டாமா…?'' என்று மறைமுகமாக வாசு கேட்டான்…

''வேண்டாம்… என்ன தான் தப்பு பண்ணியிருந்தாலும், பெத்த பொண்ணு… அவ குழந்தைய வந்து பார்க்க முடியல… பிறகு எதுக்கு அவங்களுக்கு சொல்லணும்…? இனி எது வேணும்னாலும் அவங்களா தான் என்னை தேடி வரணும்… நான் தேடி போறதா இல்லை…'' பாட்டி தீர்மானமாகச் சொல்லிவிட்டார்…

பாட்டியே ரங்கபாஷ்யத்தை போனில் அழைத்து, ''நான் ரங்காவோட பாட்டி பேசுறேன்… நாளைக்கு குழந்தைகளுக்கு புன்யாண்யம் வைச்சிருக்கோம். காலையில 9 மணியிலிருந்து 10 மணிக்கு உள்ள… நீங்க கண்டிப்பா வரணும்…''

''வரேம்மா… ரங்கா குழந்தைகள் நல்லா இருக்காங்களா…?''

''நன்னா இருக்காங்க…''

சேதுராமிடமும் அழைத்து கூறினார்… ''நானே கேட்கணும்னு

நினைச்சேன். நீ சொல்லிட்டே… கண்டிப்பா வரேன்…''

மறுநாள் அதிகாலையிலேயே எழுந்து குழந்தைகளை குளிக்க வைத்து தயார் செய்து விட்டு, ரங்காவும் குளித்து பாட்டி வாங்கி வைத்திருந்த புது சேலை உடுத்தி, தயாராகினாள்… எட்டு மணிக்கெல்லாம் ஐயர் வந்து ஹோமம் வளர்க்க ஆரம்பித்தார்… ரங்க பாஷ்யமும் சேதுராமும், வந்து விட்டனர்…

குழந்தைகள் சற்று சதைப் பிடித்து அழகாக இருந்தனர்… அதை பார்த்த இருவருக்கும் மிகவும் சந்தோஷமாக இருந்தது. அருகில் வந்து பார்த்துவிட்டு, ரங்கா உன் பேத்தியும், பேரனும் ரொம்ப அழகு… தினமும் திருஷ்டி சுத்தி வைக்கிறியா…?''

''ஆமா, கட்டாயமா…''

''குழந்தைகளை தூக்கிட்டு அம்மாவை வர சொல்லுங்க…'' என்று ஐயர் அழைக்க, ரங்காவும், கீர்த்தியும் ஆளுக்கொரு குழந்தைகளைக் கொண்டு வந்தனர்.

''பெரியவா யார் இருக்கா பெயர் வைக்கிறதுக்கு…?''

''பாட்டி நீங்க உக்காருங்க…'' என்று வாசு சொல்ல.

''நீங்க ரெண்டு பேரும் உட்காருங்க… ஆளுக்கு ஒரு குழந்தையை மடியில் வைத்துகொண்டு… நீங்க தான் பெயர்

வைக்க போறீங்க…'' என்று சேதுராமையும் ரங்கபாஷ்யத்தையும் பார்த்து பாட்டி சொல்ல, அவர்கள் இருவரும் திகைத்துப் போயினர்…

‘‘என்ன ரங்கா இது…?''

‘‘இந்த குழந்தைகளுக்கு நீங்களும் தாத்தா தான்… அப்புறம் என்ன உக்காருங்க… வாசு உள்ள இரண்டு வேஷ்டி வச்சிருக்கேன் அதை எடுத்து கொடு, அவங்க ரெண்டு பேருக்கும்…'' என்று சொல்ல வாசு அவ்வாறே செய்தான்.

அடுத்த ஐந்து நிமிடத்தில் இருவரும் வேஷ்டியை கட்டிக்கொண்டு வந்து ஐயரின் முன்னால் உட்கார, ‘‘ ரங்கா உன் கையில் உள்ள குழந்தையை டாக்டர் கிட்ட கொடு…''

‘‘கீர்த்தி உன் கையில் உள்ள குழந்தையை சார் கிட்ட கொடு…!'' என்று பாட்டி உத்தரவிட்டார்…

அவர்கள் முன்னால் இரண்டு தாம்பாளங்களில் பச்சரிசி பரப்பப்பட்டு, விரலி மஞ்சள் அதில் வைக்கப்பட்டிருந்தது…

‘‘மோதிரம் போட்டிருக்கேளா…? என்று அய்யர் வினவ,

‘‘இருக்கு…'' என்று இருவரும் கழட்டினர்.

‘‘அத வச்சு பச்சரிசியில் குழந்தையோட பெயரை

எழுதுங்கோ…''

''என்ன பெயர் நீங்க சொல்லுங்க…!'' என்று ரங்காவிடம் கேட்க…

''பையன் பெயர் பார்த்தா… பெண் பெயர் பாவனா…'' என்றாள்…

''பேஷ், இரண்டுமே அர்ஜுனனின் இன்னொரு பெயர் என்று சிலாகித்த ஐயர்… எழுதுங்கோ…'' என்றார்.

சேதுராம் பார்த்தா என்று எழுதி, குழந்தையின் காதில் மூன்று தடவை பார்த்தா, பார்த்தா, பார்த்தா என்று கூறினார்.

ரங்கபாஷ்யமும், பாவனா என்று எழுதி, குழந்தையின் காதில் மூன்று தடவை பாவனா, பாவனா, பாவனா என்று கூறினார்.

''அப்புறம் அம்மா கிட்ட குடுங்க. அவ குழந்தை காதுல மூணு தடவை சொல்லட்டும்… அப்புறம் மத்தவங்க சொல்லுங்க…'' என்று சொல்ல அதுபோலவே அனைவரும் குழந்தைகளின் காதில் அந்த பெயரை உச்சரித்தனர்…

சேதுராம் தான் கையோடு வாங்கி வந்திருந்த செயினை எடுத்து குழந்தைகளின் கழுத்தில் போட, ரங்க பாஷ்யமும் தான் வாங்கி வந்து இருந்த செயினை குழந்தைகளின் கழுத்தில்

போட்டார்… வாசு குழந்தைகளுக்கு தங்க வளையல்கள் அணிவித்தான்… பாட்டி தன் பங்கிற்கு இடுப்பு செயின் அணிவித்தாள்…

சந்தோஷத்தில் ரங்காவுக்கு கண்ணீரே வந்துவிட்டது… ‘‘ ஏய் எதுக்கு இப்ப அழறே…?’’ என்று உரிமையாய் வாசு அதட்ட…

‘‘ஒன்றுமில்லை…’’ என்று ஒரு நொடியில் தன்னை சமன்படுத்திக் கொண்டாள்… ஐயர், மற்றவர்கள் முன்னிலையில் தன்னுடைய, உணர்ச்சிகளை காட்டிக்கொள்ள அவள் விரும்பவில்லை…

பாட்டி தான் இருவரிடமும் ‘‘எதுக்கு இதெல்லாம் நீங்க செஞ்சது அதிகம்…? திரும்பத், திரும்ப எங்களை கடனாளி ஆக்கறீங்க…?

‘‘இப்படி பேசினா எனக்கு ரொம்ப கோபம் வரும்… நீ எந்த உரிமைலயில அந்த குழந்தைக்கு என்னை பெயர் வைக்கச் சொன்னேயோ, அதே ஒருமையில் தான் நாங்க ரெண்டு பேரும் செஞ்சுருக்கோம்… இதுக்கு மேல இதை பத்தி பேசக்கூடாது… என்ன டிபன் அதைக் கொடு முதல்ல…! என்று உரிமையாய் டைனிங் டேபிளுக்கு சென்று அமர்ந்து விட, வாசுவும் கீர்த்தியும், அவர்களுக்கு பரிமாறினர்.

அதற்குள் குழந்தைகள் சிணுங்கவே அவற்றிற்கு பசி யாற்றுவதற்காக ரங்கா தனது அறைக்குள் எடுத்து சென்று விட்டாள்.

“ரங்கா உனக்கு என்ன ஹெல்ப் பண்ணா கிட்ட கேளு, நான் செய்ய கடமைப்பட்டு இருக்கிறேன்… ஒரு நர்ஸ் வேணும்னா கொஞ்ச நாளைக்கு அப்பாயிண்ட் பண்ணி விடட்டுமா…?”

“இல்ல அதெல்லாம் தேவையில்லை… வாசு இப்ப எங்க கூட தான் இருக்கிறான்… அதனால கீர்த்தியும் நானும் பாத்துக்குவோம்… அதுபோக வெளி வேலைக்கு ஆள் வச்சிருக்கேன்… இது போதும்… ஒரு ஒரு வருஷம் கஷ்டமா இருக்கும். அப்புறம் குழந்தைங்க வளர்ந்திடுவாங்க…!” என்று பாட்டி முடித்து விட்டார்.

‘நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக’ என்பதற்கு ஏற்ப குழந்தைகள் வளர ஆரம்பித்தனர்… குழந்தைகளின் ஒவ்வொரு அசைவும் ரங்காவுக்கு உலகத்தில் உள்ள மொத்த சந்தோஷமும் அவளுக்கே கிடைத்தது போல் இருந்தது…

குழந்தைகளுக்கு பால் கொடுக்கும் போதும், அவைகளை மடியில் வைத்து தூங்க வைக்கும் போதும், முழித்து இருக்கையில் கைகால்களை உதைத்துக் கொண்டு, ‘ங்கா’ என்று அவர்கள்

பேசும்போது, இத்தனை சந்தோஷம் உலகத்தில் உண்டா என்று அவளுக்கு தோன்றிற்று…

“பாட்டி பார்த்தாவை பாருங்களேன்… சத்தம் போடும் போதே ஓங்கி குரல் கொடுக்கிறான்… அதே பாவனா கொஞ்சம் மெல்லிசா சத்தம் கொடுக்கிற மாதிரி இருக்கு இல்ல…!”

“அதெல்லாம் இருக்காது… உனக்கு பெண் குழந்தை அப்படின்ன உடனே, அதே நோக்கத்தோடு பார்க்கிறதுனால் அப்படித் தோணுது… 3 மாசம் வரைக்கும் அவர்களுக்கு ஒன்றுமே புரியாது… தெரியாது… மூணு மாசத்துல தாய் முகம் தெரிய ஆரம்பிச்சுடும்… அப்புறம் மத்தவங்களை கொஞ்சம் கொஞ்சமா பார்க்க ஆரம்பிக்கும்… அப்ப தான் அதுக்கு நிறங்கள் தெரியும்… அதுவரைக்கும் நிறங்கள் எல்லாம் தெரியாது…

ஆனால் குரல் நல்லா மனசுல பதியும்… யார் அடிக்கடி வச்சிட்டே இருக்காங்களோ அவங்களோட குரல் நல்லா தெரியும்…!”

“அப்படியா…”

“ஆமா பாரேன்… உன்னோட குரல் என்னோட குரலோடு வாசுவோட குரலும் நல்லா தெரியும்… நீயே பார்… காலையிலயும் ராத்திரியும் அவன் தானே பிள்ளைகளை வச்சுட்டு இருக்கான்…”

என்று சொல்லவும் வாசு வரவும் சரியாக இருந்தது…

கம்பெனியில் இருந்து வந்த வாசு முதல் வேலையாக குளித்துவிட்டு வந்து, பார்த்தாவை கையில் எடுத்தான்…

“கீர்த்தி காபி…!” என்று குரல் கொடுத்து விட்டு…

“என்னடா மருமகனே…? நான் வருவேன்னு முழிச்சிட்டு இருக்கியா… பால் குடிச்சாச்சா…?” என்று அவனிடம் பேச, குழந்தை கை கால்களை அசைத்துக் கொண்டு அவனைப் பார்த்து சிரித்தான்…

அதற்குள் பாவனா லேசாக சிணுங்கவே, “என்ன மருமகளே, அதுக்குள்ள உனக்கு பொறாமையா…? உன்னை தூக்கலைன்னு…” என்று கூறிக்கொண்டே, “ ரங்கா அவளை தூக்கி இந்த மடியில வை…”

“ரெண்டு குழந்தைய வைக்க முடியாது… கீழ தவற விட்டுறாதீங்க… அக்கா நீங்க அவர் சொல்றார்னு கொடுக்காதீங்க…” காபியைக் கொண்டு வந்த கீர்த்தி கூறினாள்.

“ஏய் நீ சும்மா இருடி… அதெல்லாம் நான் மேனேஜ் பண்ணிருவேன்…! ரங்கா நீ வை… மருமக அழறா பார்…!”

“சரி நான் வைக்கிறேன்… முதல்ல பார்த்தாவை கீழே

விட்டுட்டு டிபன் சாப்பிடு… அப்புறம் உன்னோட மருமகனையும், மருமகளையும் நானே உன் மடியில வைக்கிறேன். ஓகே வா…!” ரங்கா சொன்னதும் கீர்த்தியிடம் இருந்து அவசரமாக காப்பியை வாங்கி குடித்தவன், அவள் தந்த வடையும் சாப்பிட்டுவிட்டு, “ம்ம், ஆச்சு… இப்ப கொடு…”என்று சொல்ல…

ரங்கா ஒரு குழந்தையையும், பாட்டி ஒரு குழந்தையையும் எடுத்து அவனது இரு மடியிலும் வைத்தனர். அருகிலேயே உட்கார்ந்த கீர்த்தி, ஒரு குழந்தையை லேசாக பிடித்துக்கொள்ள, இன்னொரு குழந்தையை ரங்கா பிடித்துக்கொண்டாள்…

இரண்டு குழந்தைகளையும் மாறி, மாறி வாசு கொஞ்சிய அழகை பார்த்து, எல்லோருக்கும் சிரித்து, சிரித்து வயிறு வலித்து விட்டது…

ஒரு மணி நேரம் குழந்தைகளுடன் விளையாடிய பின்னரே குழந்தைகளை கீழே இறக்கி விட்டான்… பின்னர் அவன் வெளியே சென்றதும் குழந்தைகளுக்கு அமுதூட்டி, இரண்டையும் தொட்டிலில் இட்டு தூங்க வைத்தவள் வெளியே சாப்பிட வந்தாள்…

அதுவரை அவளுக்காக கீர்த்தியும், வாசுவும் காத்துக் கொண்டிருந்தனர்… “வாசு நீ சாப்பிட வேண்டியதுதானே…? நேரமாகுதுல்ல…!”

இருக்கட்டும் நீ வா...'' பாட்டி ஏற்கனவே சாப்பிட்டு விட்டார் அதனால் மூவரும் சாப்பிட உட்கார்ந்தனர்.

''வாசு பிஸினஸ் எப்படி போகுது...?''

''நல்லா போகுது...''

''அப்ப என்ன...? இன்னும் கொஞ்சம் புது வகைகள் தயார் பண்ணி மார்க்கெட்டிங் பார்க்க வேண்டியதுதானே...''

''செய்யணும்... பாட்டி கிட்ட ரெசிபி வாங்கணும். இன்னும் ஒரு ரெண்டு மூணு மாசம் ஆகட்டும்... முதல்ல பாட்டியோட பக்குவத்துல புதிய பொருள்கள் அறிமுகப்படுத்தினால் தான் நமக்கு மார்க்கெட்டிங் பிடிக்க முடியும்... இப்ப குழந்தைகளுக்கு நாலாவது மாசம்... ஆறாவது மாசம் அன்ன பாயசம் கொடுக்கணும்னு பாட்டி சொல்லி இருக்காங்க, அதுவும் குருவாயூரில்... அது முடிஞ்சதும், இதைப் பத்தி பேசலாம்...!''

''நானுமே ஆறு மாசத்துக்கு அப்புறம் வேலையை வீட்ல வைத்து பார்க்கலாம்னு நினைக்கிறேன்...!''

''இப்ப என்ன அவசரம்...?''

''நீயும் பாட்டியும் எத்தனை நாள் தான் என்னோட பாரத்தை சுமப்பீங்க...!''

“நாங்க உன்கிட்ட இதை பாரம்னு சொன்னோமா…? ஏய் இத்ததனை சந்தோசத்தை தருகிற என்னுடைய மருமக பிள்ளைகளைப் பார்த்துகிறது எனக்கு பாரமா…! இனி இந்த மாதிரி பேசாத…!”

“இந்த வாசு அது சரி வராது… என்னால கீர்த்தியும் பாதிக்கப்படறா, அதை நான் ஒப்புக்கொள்ள முடியாது… அன்ன பாயசம் குடுத்துட்டு வீட்டுக்கு வரும்போது கீர்த்தி எனக்கு நல்ல செய்தி சொல்லலைன்னா நான் கண்டிப்பா தனியா போயிடுவேன்… என்ன பத்தி உனக்கு தெரியும்… உங்க வாழ்க்கையும் நல்லா இருந்தாதான், எனக்கு சந்தோஷம்… அதை நினைவில் வை…!” என்றவள் கை கழுவிவிட்டு தனது அறைக்குள் சென்றாள்.

ரங்கா சென்றதும் வாசுவும் கீர்த்தியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்… “ஏய் நீ எதுவும் அவ கிட்ட சொன்னியா…?” என்று அவளை வாசு அதட்ட…

“இல்ல நான் ஒண்ணும் சொல்லலை…” பயந்து கொண்டே கீர்த்தி பதிலளித்தாள்.

வாசு அங்க என்ன சத்தம்…?”என்று ரங்கா உள்ளிருந்து குரல் கொடுக்கவும்,

“ஒண்ணும் இல்லை…!” வாசு அவசரமாக பதில் சொன்னான்…

அவன் அதை பார்த்து வாயைப் பொத்திக் கொண்டு சிரித்த கீர்த்தியிடம், “ என்ன சிரிப்பு பொத்துகிட்டு வருது…?”

“இல்ல உங்க அரட்டல், உருட்டல், மிரட்டல் எல்லாம் எங்கிட்டயும் பாட்டி கிட்டயும் தான்… அக்கா கிட்ட செல்லுபடியாகாது…!”

“அதுல உனக்கு ரொம்ப சந்தோஷம் போல இருக்கு…!”

“பின்ன, நான் என்ன சொன்னாலும் உங்க காதுல விழுதா…? இப்ப அக்காவும் அது தான் சொல்றாங்க…!”

“போதும் உடனே ஆரம்பித்து விடாதே…” என்றவன் கைகளை விட்டு தங்கள் அறைக்குள் நுழைந்தான்…

எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்தி விட்டு உள்ளே நுழைந்த கீர்த்தி கதவை சாத்தி தாழ்ப்பாள் போட்டுவிட்டு அவன் அருகில் வந்து உட்கார்ந்தாள்…

“என்னாச்சு ஒரே யோசனையா இருக்கு…?”

“இல்ல, கம்பெனியை கொஞ்சம் பெருசா ஆக்கணும்… இவ்வளவு நாள், ரங்கபாஷ்யம் சார் கொடுத்த பணம், கொஞ்சம் உதவியாய் இருந்தது. அதையும் திருப்பிக் கொடுக்கணும்… வீட்டு செலவை சமாளிக்கணும். இதுக்கு இடையில நமக்கு குழந்தை

வந்தால் சரியாக வருமா கீது…?’’

‘‘அதுக்கு, அலை ஓய்ந்து தான் கடல்ல குளிக்கணும்னு நெனச்சா, அது நடக்கவே நடக்காது… அந்த குழந்தைகளோட நம்ம குழந்தையை சேர்ந்து வளரட்டும்… அது அது அந்தந்த காலத்தில் நடந்தால் தான் பிரச்சனை கிடையாது… காலம் தப்பிட்டுன்னா, நம்ம கேட்டாலும் கிடைக்காது…’’ அவள் சொன்னதில் உள்ள நியாயம் புரிய மௌனம் காத்தான்…

‘‘இதுக்கு தான் நான் கல்யாணமே பண்ணாம இருந்திடலாம் நினைச்சேன்…’’ என்ற வார்த்தையை அவன் விட, கீர்த்திக்கு கோபம் வந்தது.

‘‘அப்ப என்னை கல்யாணம் பண்ணியது தான் உங்களுக்கு பிரச்சினைன்னு சொல்றீங்களா…?’’

‘‘அப்படி சொல்லல… மொத்தத்தில் நான் கல்யாணம் பண்ணி இருக்கக் கூடாதுன்னு சொல்றேன்…’’ என்று அவன் சொன்னதும், கட்டிலை விட்டு இறங்கி ஒரு போர்வையை கீழே போட்டு கீர்த்தி பேசாமல் படுத்து விட்டாள்…

‘அது என்ன கல்யாணம்னு மொட்டையா… நான்தான் அவரை கட்டி இருக்கேன்… அப்ப நான் இருக்கிறது தான் பிரச்சனையா… இல்லேன்னா அவர் அவங்களை மட்டும் பாத்துட்டு இருப்பாரா…

இப்படி நினைக்கிறவர், நான் என் காதலை சொல்லும்போது, இல்ல எனக்கு கல்யாணம் பண்ற ஐடியா இல்லைன்னு சொல்லி இருக்கலாமே…' மனது பலவாறு நினைக்க, தான் அவர்களுக்கு இடைஞ்சலாக இருக்கிறோமோ என்ற நினைப்பு மனதுக்குள் ஓட தாங்க முடியாமல் அழுகை வந்தது.

வாசுவுக்கும் அவள் அழுவது தெரிந்தே இருந்தது. ஆனால் அவனுக்கு இருந்த மனநிலையில், அவளை சமாதானப் படுத்துவது இயலாத காரியம் என்று அப்படியே இருந்து விட்டான்…

ஏற்கனவே பண நெருக்கடி… கம்பெனியை விரிவாக்க பணம் தேவை… இன்னும் வேலை ஆட்கள் போட்டு கம்பெனியை பெரிது பண்ணினால் லாபம் வருவது நிச்சயம்… ஆனால் இன்வெஸ்ட்மென்ட் கையில் சுத்தமாக இல்லை… இப்போது கம்பெனி நன்றாக ஓடினாலும் வருமானம் மிகவும் குறைவு… இரண்டு வீட்டு வாடகை இந்த வீட்டுக்கு வாடகையாக சரியாக போய்விடுகிறது.

இரண்டு குழந்தைகள், மற்றும் மூன்று பெரியவர்கள், இவர்களின் செலவு, அதுபோக ரங்காவின் அம்மாவிற்கும் பணம் கொடுக்க வேண்டும். மாத மாதம் காயத்ரி வந்து வாங்கி சென்று விடுவாள்…

குழந்தைகள் மருத்துவம் அவர்கள் பிறந்த ஹாஸ்பிடலில்

கவனித்துக் கொள்வதால் அது மட்டும் செலவு இல்லை… என்ன செய்வது என்று அவன் சொல்ல முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறான்… இந்த நிலையில் தங்களுக்கு ஒரு குழந்தை என்றால் அதை எவ்விதம் வளர்ப்பது என்ற பொருளாதாரப் பிரச்சினை பூதாகரமாக கண் முன்னால் நிற்க, கீர்த்தியின் ஏக்கமும் எதிர்பார்ப்பும் புரிந்தும், கோபம் என்ற போர்வையில் அதை தன் மனதுக்குள் போட்டு புதைத்துக் கொண்டான்.

அவனுக்கு தெரியும் கீர்த்தி எத்தனையோ விட்டுக்கொடுத்து போய் இருக்கிறாள் என்று…? தன்னை தவிர வேறு யாரையாவது மணமுடித்து இருந்தால் இதற்குள் கையில் ஒரு குழந்தை இருக்கும். அவர்கள் சந்தோஷத்திற்கும் குறைவு இருக்காது… தன்னை மணம் முடிக்க போய்தான் அவளுக்கு இத்தனை பாரங்கள் என்பது அவனுக்கு புரிந்துதான் இருந்தது…

கல்யாணம் முடிந்து ஒன்றரை வருடங்களில் தனக்கென்று அவள் வாய் திறந்து எதுவும் அவனிடம் கேட்டதும் கிடையாது. தன்னுடைய ஆசைகளை சொன்னதும் கிடையாது. அவனது ஒவ்வொரு மூச்சும் பாட்டி, ரங்கா என்று துடிப்பது அவளுக்குப் புரிந்து தானிருந்தது.

என்றாவது ஒருநாள் அவனது காதல் தனக்கு மட்டும் கிடைக்கும் என்ற ஏக்கத்தில் அவள் வாழ்ந்து கொண்டிருந்தாள்…

ஒரு பெருமூச்சுடன் கீர்த்தியை பார்த்துவிட்டு அவன் உறங்க முற்பட்டான்.

மறுநாள் காலையில் கீர்த்தியின் முகத்தை பார்த்த ரங்காவிற்கு சந்தேகம் வந்தது… “என்ன கீர்த்தி முகமெல்லாம் வீங்கி இருக்கு…?”

“அது அக்கா நைட் ஒரே தலைவலி. தூக்கமே இல்லை… ஏசி ஒத்துக்கல நினைக்கிறேன்…!”

“ஓ… அப்ப ஹாஸ்பிடல் போயிட்டு வாயேன்…!”

“இல்லக்கா சரியாயிடும்… நான் தலைவலிக்கு மாத்திரை போடுவது இல்லை. கை பக்குவமா ஏதாவது பார்த்துக்கிறேன்…”

“அப்போ ஒன்னு பண்ணு. நீ போய் குழந்தைகளை பார்த்துக்கோ. நான் கிச்சன்ல நிக்கிறேன்…!”

“ஐயோ அதெல்லாம் வேண்டாம் நான் பார்த்துக்குறேன் நீங்க போங்க…!”

“கீர்த்தி நான் சொன்னா கேப்பியா மாட்டியா…?” ரங்காவின் அழுத்தமான குரல், அவள் சொன்னதை செய்யாவிட்டால் இப்போது வேறு ஏதாவது நடக்கும் என்பது புரிய கீர்த்தி மௌனமாக அறைக்குள் சென்று குழந்தைகளை பார்த்துக்

கொண்டாள்…

காலை டிபன் செய்து முடித்த ரங்கா, மதியத்திற்கும் காய்கறிகளை எடுத்து கட் செய்ய ஆரம்பித்தாள்… அப்போதுதான் வாக்கிங் போயிட்டு உள்ளே வந்த வாசு, ‘‘கீர்த்தி காபி…’’ ஹாலில் உள்ள சோபாவில் சாய்ந்தான்…

காபியை கொண்டுவந்து பாட்டி நீட்ட, ‘‘ கீர்த்தி எங்க…?’’

‘‘உள்ள பெட்ரூம்ல குழந்தைகளோட இருக்கா…!’’

‘‘அப்ப ரங்கா…?’’

‘‘கிச்சன்ல சமையல் செய்றா…!’’

‘‘ஏய் கீர்த்தி…!’’ என்று அவன் ஓங்கி குரல் கொடுக்க, ‘‘இப்ப எதுக்கு நீ அவளை கூப்பிடுறே…’’ இந்த பாட்டி கேட்டுக்கொண்டிருக்கும் போதே, கீர்த்தி வந்து அவன் முன்னால் நின்றாள்.

‘‘ஏன் நீ சமையல் பண்ணல…? ரங்கா எதுக்கு கிச்சனில் நிற்கிறாள்…? உனக்கு அதை விட என்ன வேலை…?’’

‘‘இல்ல நான் தான் பண்றேன்னு சொன்னேன்… அக்காதான் வேண்டாம் நீ உள்ள போய் குழந்தைகளை பார்த்துக்கோ… நான் சமைக்கிறேன் சொன்னாங்க…’’ சொல்லிக் கொண்டு இருக்கும்

போதே அங்கு வந்த ரங்கா…

“நான் தான் அவளை குழந்தைகளை பார்த்துக்க சொன்னேன். இப்போ என்ன…? ஒரு ஆறு மாசமா அவதான பண்றா… எனக்கு இன்னைக்கு நான் சமைக்கணும் போல தோணுச்சு… அதனால நான் செய்யறேன்… ஏன் நான் சமைச்சா நீ சாப்பிட மாட்டியா…?”

“ச்சச… அப்படி யார் சொன்னது…? உனக்கு சமையல் சரியா தெரியாது இல்ல…!”

“இனிமேல் கத்துக்க வேண்டியது தான். தனியா போனா பாட்டி குழந்தையை பார்த்துப்பாங்க. நான் சமைச்சுட்டு ஆபீஸ் போகணும்… அதுக்கு இப்ப ட்ரையல்…!”

“ஏய் இப்ப எதுக்கு தனியா போகணும்…?”

“இல்ல, உன் பொண்டாட்டி சமையல் தானே நல்லா இருக்கும்னு நீ சொன்ன…?”

“நான் எப்ப சொன்னேன்…?”

“எனக்கு சமைக்க தெரியாதுன்னு சொன்னா, என்ன அர்த்தம்…?’ அவள் மாற்றி, மாற்றி கேட்டதில் கடுப்பானவன்,

“ஏய் ரங்கா எதுவா இருந்தாலும் நேரடியா சொல்லு. இப்படி

சுத்தி வளைச்சு என்னை கடுப்பு ஏத்தாத...?''

''நேரடியா பேசுறவங்க கிட்ட நேரடியாக பேசலாம்... இப்படி சுத்தி வளச்சு பேசுறவங்க கிட்ட இப்படி தான் பேச முடியும். ஒழுங்கா சாப்பிட்டு ஆபீஸ் போற வழிய பாரு...'' என்றவள் பேச்சு முடிந்தது என்பது போல் கிச்சனுக்குள் நுழைந்து கொண்டாள்.

இனி கடவுளே வந்தாலும் அவளை பேச வைக்க முடியாது என்று தெரிந்த வாசு நேரமாகி விட்டதால் குளித்து கிளம்ப சென்றான்...

கீர்த்தி பரிமாற சாப்பிட உட்கார்ந்தான்... எதிரில் ஒரு குழந்தையை வைத்துக் கொண்டு ரங்கா இருந்தாள். பாட்டி இன்னொரு குழந்தையை ஹாலில் வைத்து இருந்தார்...

''டிபன் எப்படி இருக்கு...?''

மிகவும் சுமாராக இருந்தாலும் சொல்ல முடியாமல், விழுங்கிவிட்டு, '' சூப்பர்...'' என்றான்.

''கீர்த்தி டெய்லி நானே சமைச்சுதரேன்... நீ குழந்தைகளை பாத்துக்கோ...'' என்று ரங்கா சொல்ல கீர்த்தி வந்த சிரிப்பை வாய்க்குள் அடக்கினாள்.

“ஏய் இங்க என்ன சிரிப்பு வேண்டி கிடக்கு…? என்னோட ஆபீஸ் பை எடுத்து வை…” என்று கீர்த்தியிடம் பாய…

“இப்ப எதுக்குடா அவகிட்ட பாயுற…?”

“என் பொண்டாட்டி… நான் பாயறேன்…? உனக்கு என்ன…?”

“உன் பொண்டாட்டிங்கிறது இப்பதான் நினைவு வந்ததாக்கும்…!”

“எப்பவுமே நினைவில் தான் இருக்கு…!”

“பாத்தா அப்படி தெரியலையே… நேத்து ராத்திரி உன் பொண்டாட்டிக்கு தலைவலி தூங்கவே இல்லையாமே… உனக்கு தெரியுமா…?” ரங்கா வேண்டுமென்றே வம்பு இழுப்பது தெரிய, கீர்த்தியை ஒரு முறை முறைத்தவன், எழுந்து கை கழுவச் சென்றான்…

அவன் பின்னாலேயே சென்று ஆபிசுக்கு தேவையானதை எடுத்துக் கொடுத்து அவனை வழி அனுப்பி விட்டு வந்த கீர்த்தியை, “இங்கே வா, சாப்பிடுவோம்…!” என்று ரங்கா அழைத்தாள்…

குழந்தைகள் தூங்கி விடவே, பாட்டியும் பூஜை முடித்து சாப்பிட வந்து உட்கார்ந்தார். “என்ன கீர்த்தி சாப்பாடு எப்படி

இருக்கு…?”

“நல்லா இருக்கு அக்கா… நான் முதன்முதலில் சமைக்கும் போது இந்த அளவு கூட வரல…!”

“அப்புறம் உன் வீட்டுக்காரன் அரை குறையா சாப்பிட்டு போறான்…” என்றவள், “அதெல்லாம் இருக்கட்டும்… எத்தனை வருஷம் பிளானில் இருக்கீங்க…!”

“அப்படியெல்லாம் ஒண்ணும் இல்ல அக்கா…”

“இந்த பாரு குழந்தைகளுக்கு அன்ன பாயாசம் கொடுக்க குருவாயூர் போறோம்… திரும்பி வந்து உனக்கு ஒரு நல்ல செய்தி அப்படினா உன்னை கவனிக்க நானும் பாட்டியும் கூட இருக்கோம்… இல்லேன்னா நாங்க பழையபடி எங்க வீட்டுக்கு போறோம்… இதை தெளிவா உன் புருஷன் கிட்ட சொல்லி வை…!” என்றவள் குழந்தையின் அழுகுரல் கேட்டு எழுந்து உள்ளே சென்று விட்டாள்.

பாட்டியும் கீர்த்தியிடம் “வாசு இப்படி பண்ணுவான்னு நான் நெனைக்கவே இல்லை. எங்களுக்காக பார்த்தா மட்டும் போதுமா…? உன்னையும் பார்க்க வேண்டாமா…! ரங்கா சொல்றதுதான் சரி… எங்க பிரச்சினை எங்களோட… பிரச்சனை இருக்குன்னு தெரிஞ்சு தானே, இதெல்லாம் செஞ்சோம்… அதனால

சமாளிக்கிறது எங்க வேலை தான்...!'' வருத்தப்பட்டு பேசிக்கொண்டிருக்க வாசலில் காலிங்பெல் அடிக்கும் சத்தம் கேட்டது...

எழுந்து கையைக் கழுவிவிட்டு கீர்த்தி சென்று கதவை திறந்தாள். டாக்டர் சேதுராம் நின்று கொண்டு ''உள்ள வரலாமா...'' என்று கேட்க...

''வாங்க டாக்டர்...'' என்று அழைத்து உட்கார வைத்துவிட்டு உள்ளே சென்று பாட்டியிடம் ''டாக்டர் தாத்தா வந்திருக்காங்க...''

''உட்கார சொல்லுமா... இதோ வரேன்...''

கை கழுவி விட்டு வந்து, '' வாங்க வாங்க... என்ன இந்த பக்கம்? எங்கிட்ட சொல்லவே இல்ல...!''

இந்த பக்கம் வேற ஒரு வேலையா வந்தேன்... அப்படியே குழந்தைகளை பார்த்துட்டு போலாம்னு எனக்கு ஒரு ஆசை...!''

''தாராளமா... அதுக்கு முன்னாடி என்ன குடிக்கிறீங்க...?

''ஸ்ட்ராங்கா ஒரு பில்டர் காபி...''

''சரி, இதோ போட்டு எடுத்துட்டு வரேன். கீர்த்தி குழந்தைகள் குளிச்சாச்சுன்னா நீயும் ரங்காவுமா தூக்கிக் கொண்டு வந்து காட்டுங்க... என்று கூறிவிட்டு காபி போடுவதற்காக கிச்சனுக்குள்

சென்றார்.

அப்போது தான் குழந்தைகளுக்கு குளிப்பாட்டி அழகாக டிரஸ் அணிவித்து, பவுடர் மை எல்லாம் போட்டு அழகு படுத்தி இருந்தாள் ரங்கா...

ஹாய் செல்லம் உங்களை பார்க்க ஒரு தாத்தா வந்து இருக்காங்க வாங்க போகலாம்... என்று கூறிக்கொண்டே பாவனாவை கீர்த்தி தூக்கிக் கொள்ள,

“யார் வந்திருக்கா கீர்த்தி?”

“பாட்டியோட பிரண்டு டாக்டர் தாத்தா.!”

“அவரா...” என்று கூறிவிட்டு பார்த்தாவை தான் தூக்கிக் கொண்டு வெளியே வந்தாள்...

இரண்டு குழந்தைகளையும் அவர் அருகில் சோபாவில் உட்கார்ந்து கீர்த்தியும், ரங்காவும் காட்ட, குழந்தைகளின் கன்னத்தை லேசாக தடவி, கொடுத்தவர், “என்னமா மன்த்லி செக்கப் எல்லாம் பண்ணிட்டியா...? தடுப்பூசி போட்டாச்சா...? இனி அடுத்த தடுப்பபூசி எப்ப போடணும்.?"

ரங்கா அவருடைய எல்லா கேள்விக்கும் பொறுமையாக பதில் சொன்னார்...

"பரவாயில்லை வெயிட் போட்டு தான் இருக்கு... மதர் பீட் நிறுத்தி விடாதே. ஆனால் இரண்டு குழந்தைகள் அதனால வேற ஏதாவது எழுதிக் கொடுத்து இருக்காங்களா? டாக்டர் யாரு பூபதி தானே சைல்ட் ஸ்பெஷலிஸ்ட்...!''

"ஆமா..."

''டேய் குட்டி பையா...'' பார்த்தாவை அழைக்க அது கையை காலை ஆட்டி பொக்கை வாய் கொண்டு சிரித்தது...

அதற்குள் பாட்டி காபி கொண்டு வந்து விட அதை வாங்கிக் குடித்தவர் ''என்ன வாசு ஆபீஸ் போயாச்சா... வேற என்ன விசேஷம்?

''விசேஷம் ஒன்றும் இல்லை... மூணு மாசம் கழிச்சு ஆபீஸ்க்கு போகலாமான்னு ரங்கா சொல்லிட்டு இருக்கா...!''

''ஏன், இப்ப என்ன அவசரம்...?

"அவசரம் இல்லை... எனக்கும் அதுதான் சரின்னு தோணுது...' என்று பாட்டியும் சொல்ல, மூவரையும் நிதானமாக பார்த்தவர், பாட்டியிடம் ''உண்மையிலேயே நீ என்னை உன் ஃப்ரண்டு என்று நினைத்தால், இப்ப என்ன அவசரம் வேலைக்கு போக, அதுக்கு மட்டும் பதில் சொல்லு...?

பாட்டி ரங்காவுக்கும், வாசுவுக்கும் இடையில் நடந்த வாக்குவாதத்தை சொல்ல, ‘‘இவ்வளவுதானே இதுக்கு சொல்யூஷன் வாசு கிட்ட நான் கொடுக்கிறேன் நீங்க யாரும் பேச வேண்டாம்… ஆபீஸ் அட்ரஸ் மட்டும் கொடு நான் இப்ப போற வழியிலேயே அவனை பார்த்து விட்டு போறேன்…" என்று கூறி வாசுவின் அட்ரஸ் போன் நம்பர் வாங்கி விட்டு தான் கிளம்பினார்.

# அத்தியாயம் 23

ரங்கா ஆசைப்பட்டபடியே இரண்டு வருடத்தில் அவளும் ஓரளவு பணம் சேர்த்து விட்டாள்... வாசு கொஞ்சம் பாட்டியின் பணத்திலிருந்து எடுத்துக்கொடுக்க இரண்டையும் சேர்த்து இன்னொரு அப்பார்ட்மெண்ட் வாங்கினர்...

வாசு ரங்காவின் கல்யாணத்தை மனதில் நிறுத்தி தன்னுடைய அபார்ட்மெண்டில் தான் வசிப்பதாக கூறி விட்டான்... பாட்டியும் ரங்காவும் தங்களது அபார்ட்மெண்ட்டில் குடியேறினர்...

மோகன் படித்து முடித்து வேலை வேண்டும் என்று கேட்க தனக்கு தெரிந்த இடத்தில் எல்லாம் சொல்லி வாசுவும் ரங்காவும் வேலை மாற்றி, மாற்றி வாங்கி கொடுக்கதான் செய்தனர்... ஆனால் ஒரு இடத்திலும் அவன் நிலையாக இருந்ததே இல்லை.

அதுபோக, நண்பர்களுடன் சேர்ந்து ஊரைச் சுற்றுவது, அனாவசிய செலவு என்று அம்மாவிடம் அடிக்கடி தனது சம்பளம் போக பணம் வாங்கிவிடுவான்... தாராவும் மாதம் ஒரு தடவை அம்மாவை அழைத்துக்கொண்டு சினிமா ஹோட்டல் என்று செலவழித்து இருக்கிற காசை கரியாக்கி விடுவாள்...

அவர்களிடம் கொடுத்தால் அத்தனையும் செலவழிந்து விடும்

என்பது புரிந்து கொடுப்பதில் ஒரு பகுதியை சேமித்துவிட்டு மீதத்தை கொடுக்க ஆரம்பித்தாள் ரங்கா…

அதற்கு வைதேகி அவளிடம் சண்டை போட, “அம்மா நீயும் தாராவுக்கும் எதுவும் சேமிக்க மாட்டேங்கிற… அவளுக்கு கல்யாணம் பண்ணனும்னா கட்டாயம் இந்த பணம் இருந்தால்தான் முடியும். அதுக்காக தான் சேமிக்கிறேன்… இல்லையென்றால் சொல்லு உன்கிட்ட தந்திடறேன். நீ சேமிச்சுக்.கோ கல்யாணத்தப்ப என்கிட்ட கேக்காத… என்று கட் அண்ட் ரைட்டாக சொல்லிவிட, தன் கையில் இருந்தால் மகனும் மகளும் பிடுங்கிவிடுவார்கள் என்று தெரிந்த வைதேகி அடங்கினாள்.

அப்பாவும், தம்பியும் வீட்டைப் பற்றிக் கவலைப்படாமல் அப்படியே இருக்க ரங்காவுக்கு ஆண்கள் மேல் ஒரு வெறுப்பு வளர்ந்து விட்டது… அதுபோக கோர்ட்டில் அவள் கேள்விப்படும் விஷயங்களும் கல்யாண வாழ்க்கை மீதும் ஆண்கள் மீதும் ஒரு நம்பிக்கையின்மையை தோற்றுவிக்க தனது வாழ்வில் கல்யாணம் என்பதே வேண்டாம் என்று முடிவு எடுத்தாள்…

“***I think the best role models for women are people who are fruitfully and confidently themselves, who drink light into the world.***”

*-Meryl streep*

ஒரு பெரிய காரில் பாட்டி, வாசு, குழந்தைகள் கீர்த்தி மற்றும் சேதுராம் அனைவரும் குருவாயூருக்கு பயணப்பட்டு கொண்டிருந்தனர்...

குழந்தைகளுக்கு அன்னபாயாசம் குருவாயூரப்பன் முன்னிலையில் கொடுப்பது விசேஷம் என்பதால் இந்த பயணம்... சேதுராம் பிடிவாதமாக பயணத்துக்கு ஏற்பாடு செய்து தானும் கூட வருவேன் என்று கூறிவிட்டார்.

உபேந்திரா "எதுக்கு தாத்தா நீங்க...?" என்று ஆட்சேபித்த தற்கு...

"நீ மட்டும் உன் ஃப்ரென்ட்ஸ் கூட ஊரை சுத்துற, நான் போக கூடாதா...?" சின்ன பிள்ளை போல் மல்லுக்கு நிற்க அவன் "சரி" என்று விட்டான்.

அவனை வைத்து அங்கு நல்ல ஹோட்டல் புக் செய்து, இங்கிருந்து இரண்டு நாள் பயணமாக எல்லோரும் சென்றனர்.

குருவாயூரப்பன் முன்னிலையில் நிவேதன பிரசாதத்தை குழந்தைகளுக்கு வாயில் ஊட்டி பிரார்த்தனையை நிறைவேற்றினார் பாட்டி...

ஒரு நாள் முழுவதும் கோயிலை நன்கு சுற்றி பார்த்து தரிசனம் செய்து விட்டு, அன்று அங்கேயே தங்கியிருந்து விட்டு மறுநாள் கிளம்பி வந்தனர்…

வந்ததுமே வாசுவை அழைத்து அவனது கம்பெனி பெரியதாக்க என்னென்ன உதவிகள் செய்ய வேண்டுமோ அனைத்தையும் கல்யாணசுந்தரம் செய்துவிட்டார்…

"கம்பெனி எம்டி நீதான்… வேலைக்கு எத்தனை ஆட்கள் போடணுமோ, போட்டு கம்பெனியை நடத்து… உன்னோட லாபத்துல கொஞ்சம் கொஞ்சமா நான் கொடுத்த ரூபாயை திருப்பிக் கொடுத்துடு…

“என்னை நம்பி இவ்வளவு பெரிய அமௌன்ட் இன்வெஸ்ட் பண்ணிட்டீங்களே… ஒருவேளை என்னால் முடியலை என்றால்…!”

“இந்த எண்ணமே தவறு… ஒரு விஷயம் ஆரம்பிக்கும் முன்னாடி அதோட சாதகம், பாதகம் எல்லாம் பார்க்கணும். ஆனா முடிவு எடுத்தாச்சுன்னா, ஜெயிக்கிறது மட்டும்தான் குறிக்கோளா வச்சுக்கணும்…" என்றவர் “கண்டிப்பா நீ ஜெயிப்ப… கவலைப்படாதே…” என்று ஆசீர்வதித்தார்…

ரங்கா ஆசைப்பட்டபடியே கீர்த்தியும் குழந்தை உண்டாக அவர்கள் எல்லோருக்கும் மகிழ்ச்சியாக இருந்தது.

வீட்டிலிருந்து வேலை செய்கிறேன் என்று ரங்கபாஷ்யத்திடம் கேட்டதற்கு… “ஒண்ணும் அவசரம் இல்ல, குழந்தைகளோட முதல் பிறந்தநாள் கழிந்தபிறகு நீ வேலைக்கு வநதால் போதும்…” என்று சொல்லிவிட்டார்…

எது தப்பினாலும் மாதம், மாதம் ரூபா வாங்க காயத்ரி வருவது நிற்கவில்லை… ஆனால் இப்போது இரண்டு மாதமாக மோகன் வர ஆரம்பித்தான். அவன் பாட்டியிடம் மட்டும் தான் பேசுவான். ரங்காவிடம் பேசுவது கிடையாது…

பாட்டி காயத்ரி எங்கே என்று கேட்டதற்கு அவளும் கருவுற்றிருக்கிறாள் என்ற செய்தி தெரிந்து மிகவும் சந்தோஷம் அடைந்தார்…

“நல்லா பார்த்துக்கோ…” என்ற ஒரே வார்த்தையோடு, பாட்டி மாதா, மாதம் தான் கொடுக்க வேண்டிய பணத்தை கொடுப்பதோடு நிறுத்திக் கொண்டார்…

“திருமணத்திற்கு பொண்ணு பார்க்கலாமா…?” என்று விஸ்வாவிடம் கேட்டபோது “இப்போதைக்கு திருமணம் செய்யும் உத்தேசம் இல்லை…” என்று அவன் மறுத்து விட்டான்…

குழந்தைக்கு எட்டு மாதம் ஆகிவிட்டதால் அப்பார்ட்மெண்டில் உள்ள கீழே உள்ள பார்க்கில் குழந்தையைக்

கொண்டு போய் வேடிக்கை காட்டி விட்டு வருவார்கள் பாட்டியும், பேத்தியும்

மற்றவர்கள் பேச வரும் பொழுது பொதுவான விஷயங்களை பேசுவார்களே தவிர, மற்ற கேள்விகளை தவிர்த்து விடுவார்கள்…

அதையும் மீறி குழந்தைகளுடைய அப்பா எங்கே இருக்கிறார். எந்த வேலையில் இருக்கிறார், பாரினில் இருக்கிறாரா…? என்ற பல கேள்விகள் இவர்கள் முன்னே எழுந்த வண்ணம் இருந்தன…

இந்தக் கேள்விகளுக்கு பதில் தெரியாமல் சில சமயம் ரங்காவுக்கு கோபம் வரும்… கோபத்துடன் பாட்டியிடம் "குழந்தையை பார்த்தமா, கொஞ்சினமா இல்லாம, ஏன் பாட்டி தேவை இல்லாத கேள்வி எல்லாம்…?’’

‘‘அது எல்லாருக்கும் பொதுவானது. அது தெரிஞ்சுக்காம அவங்களால இருக்க முடியாது ரங்கா… ஊரோட இருக்கும்போது. ஒத்து தான் போகணும்… நாளைக்கு எனக்கு பிறகு நீ மட்டும் தனியா இருந்தேன்னா அக்கம்பக்கம் உதவி வேண்டாமா உனக்கு… எல்லாரும் சாசுவதம் இல்ல. அதனால எல்லாருக்கும் பக்கத்தில் இருப்பவர்கள். தயவு தேவை படுது… உன்னை பத்தி விபரங்களை தெரிந்து கொள்ளணும்னு நினைக்கிறார்கள் இது ஒண்ணும் தப்பில்லையே…?

முடிஞ்சவரை பதில் சொல்லு இல்லைன்னா அமைதியாக இருந்து விடு…

பிறந்தநாளுக்கும் யாரையும் அழைக்கவில்லை. அப்பார்ட்மெண்டில் தெரிந்த ஒரு சிலருக்கும் டாக்டர் சேதுராம், இருவருக்கு ரங்கபாஷ்யம் மட்டும் அழைப்பு விடுத்து கோவிலில் பூஜைக்கு கொடுத்து வீட்டில் வைத்து கேக் வெட்டி சிம்பிளாக பிறந்தநாள் கொண்டாடி முடித்தனர்.

இந்த ஒரு வருஷ காலத்தில் வைதேகியும், கேசவனும் வந்து எட்டி கூட பார்க்கவில்லை… சரவணனும் தன்னால் தேவையில்லாத வம்பு வந்துவிடக்கூடாது என்பதால் வரவில்லை.

வாசுவுக்கும் கீர்த்திக்கும் ஆண் குழந்தை பிறந்தது. மோகனுக்கு பெண் குழந்தை பிறந்தது… மனசு கேளாமல் பாட்டி மட்டும் போய் பார்த்துவிட்டு ஒரு செயின் பரிசளித்து விட்டு வந்தார்…

ரங்கா தான் வரவில்லை என்று கூறிவிட்டாள்…கீர்த்திக்கும் டாக்டர் மகாலட்சுமியிடம் டெலிவரி வைத்துக் கொண்டனர்…

பாட்டியும், ரங்காவும்… கீர்த்தியையும், குழந்தையும் நன்கு பார்த்துக் கொண்டனர் கீர்த்தியின் அம்மாவும் உதவிக்கு வந்து இருந்ததால் அவர்களுக்கு கொஞ்சம் எளிதாக இருந்தது…

ஏற்கனவே வாசுவின் கடின உழைப்பும் குழந்தை பிறந்த யோகமும் சேர்ந்து இப்பொழுது அவர்களது பிசினஸ் மிகப்பெரிய அளவில் தமிழ்நாடு முழுவதும் ரங்கா புட் பராடக்ட்ஸில் கிடைக்காத மசாலா பொருட்களை இல்லை எனும் அளவு பெயர் வாங்கி வளர்ந்து நின்றது…

ஒரு வருடம் இரண்டு மாதம் ஆனதும் இதற்குமேல் தன்னால் வீட்டில் இருக்க முடியாது என்று வேலைக்கு ஒரு பெண்ணை அமர்த்திவிட்டு ரங்கா, பாஷ்யத்தின் அலுவலகத்துக்கு செல்ல ஆரம்பித்தாள்…

குழந்தைகளுக்கு ஒன்றரை வயது ஆனதால் அவர்கள் அம்மா வெளியே செல்லும் பொழுது சமர்த்தாக டாட்டா காட்டிவிட்டு, மாலை அவள் வரும் வரும் நேரத்தை கணக்கிட்டு வழிமேல் விழி வைத்து பார்த்துக் கொண்டு இருப்பர்.

குழந்தைகளைக் கவனிக்க பகலில் ஒரு பெண்மணியை வேலைக்கு அமர்த்தி இருந்தார் பாட்டி… பாட்டி வீட்டிலேயே இருப்பதால் கவலை இல்லாமல் குழந்தைகளை அந்த பெண்மணியின் பொறுப்பில் விட்டுவிட்டு ரங்காவும் வக்கீல் ஆபீசுக்கு சென்று வந்ததாள்.

குழந்தைகள் அப்போது தான் அம்மா, பாட்டி, அத்தை மாமா என்று பேச பழகி இருந்தனர்…

பாதி நேரம் இருவருக்கும் சண்டை. பஞ்சாயத்து தீர்க்கவே ரங்காவுக்கு, பாட்டிக்கும் நேரம் சரியாக இருந்தது.

‘‘பார்த்தா அப்படியே அம்மா ஜாடை. பாவனா வேற மாதிரி இருந்தாள். பாட்டி பார்த்தா கொஞ்சம் நம்ம ஜாடை மாதிரி இருக்கு. ஆணால் பாவனா வேற மாதிரி இருக்காளே…!’’

‘‘ஆமா அவ அப்பா ஜாடை இருக்கலாம் இல்லை…!’’

‘‘அந்த மாதிரி ஒண்ணு இருக்கு இல்ல. நான் யோசிக்கவே இல்லை… அப்படி இருந்தா என்ன…? எப்படின்னாலும் ஏன் பொண்ணுதான்…’’

‘‘உண்மைதான் யார் இல்லைன்னு சொன்னா…!’’ பேசிக் கொண்டிருக்கையிலேயே இரண்டு பேரும் ஒரு காருக்கு சண்டை போட…

‘‘பாவனா உனக்கு கார் இந்த இருக்கு பாரு… எதுக்கு அவனோடது எடுக்கிற…?’’

பாவனா காலை உதைத்துக் கொண்டு, சத்தமாக அழ ஆரம்பிக்க பார்த்தா இரண்டு காரையும் எடுத்துக்கொண்டு தரமாட்டேன் என்று ஓடினான்…

இவர்கள் போட்ட சத்தத்தில் வாசுவின் பையன்

முழித்துக்கொண்டு அழ ஆரம்பித்தான்.

அவனது பெயர் ஹர்ஷத்… “நீங்க போட்ட சத்தத்தில் ஹர்ஷத் முழிச்சுட்டு அழறான் பார்…!” என்று இருவரையும் சத்தம் போட

“ஏய் ரங்கா, நீ இதுக்கு எதுக்கு குழந்தைகளை சத்தம் போடுற…? இன்னும் கொஞ்சம்தான் அதுக்காக அழுது ஊரைக் கூட்டும்…!” என்ற பாட்டி அமைதியாக அவளை சமாதானப்படுத்த ஆரம்பித்தார்…

அதற்குள் வாசுவும் வந்துவிட இருவரும் அவனிடம் ஓடினர். அவன் அவர்கள் இருவரையும் தூக்கி கொண்டு உள்ளே நுழைந்தான்…

“வாசு ரெண்டு பேரையும் இறக்கி விடு. நீயே இப்பதான் உள்ள நுழைஞ்சிருக்க. முதல்ல டிபன் ஏதாவது சாப்பிடு. அப்புறம் அவங்க கிட்ட விளையாடலாம்…!”

“இருக்கட்டும். குழந்தைகள் இத்தனை நேரம் என்னை தேடி இருப்பாங்க. எனக்கு இதுதான் சந்தோஷம்…!” என்றவன் தனது அறைக்குள் சென்று அவர்களை இறக்கி விட்டு, “நான் முகம் கழுவிட்டு வந்து உங்க கூட விளையாடறேன்…” என்று கூறி, அதே மாதிரி பிரஷ் ஆகி வந்து விளயாட ஆரம்பித்தான்.

இது அவனுக்கு வழக்கமான ஒன்று. அவனுடைய பையன் கட்டிலில் கையைக் காலை உதைத்துக் கொண்டு கிடக்க இவர்கள் இருவரும் அவன் மேல் ஏறி ஓடிப்பிடித்து விளையாட...

"இந்தாங்க காபி..." என்று கீர்த்தி கொண்டு வந்த காபியை வாங்கி குடித்தவன், "இன்னைக்கு என்ன விசேஷம்...? உன் பையன் என்ன பண்றான்...?" என்று கேட்க

"அதுக்குள் நானு, நானு..." என்று பார்த்தாவும் பாவனாவும் வந்தனர்...

"என்னடா சொல்லுங்க...?"

"மாமா, மாமா. பாப்பா ஓ... அழுது, பால் குடிச்சு, சுச்சு போய்... பாட் பாப்பா...!" என்று தங்களுடைய மழலை குரலில் அவனுடைய மகன் அழுததை அவனிடம் கூறினார்கள்...

"ஹர்ஷத் நீ அழுதியாடா குட்டி பையா... இதோ பார் பார்த்தாவும், பாவனாவும் நீ அழுததா சொல்றாங்க..." என்று கேட்க அவனுடைய மகன் பொக்கைவாய் கொண்டு சிரித்தான்...

எல்லோர் நொடியையும் பார்த்துக்கொண்டே இருந்த ரங்கா, "நாளைக்கு கொஞ்சம் கடைக்கு போகணும் வாசு... கீர்த்தி நீ வர்றியா...?'

“ம்ம், போகலாம் அக்கா…” என்று சொல்ல மறுநாள் லீவு என்பதால் பாட்டியைத் தவிர அனைவரும் கிளம்பினர்…

குழந்தைகளை வைத்து சமாளிச்சுடுவியா…? என்று பாட்டி கேட்க அதெல்லாம் பார்த்துக்கலாம் பாட்டி என்று கூறிவிட்டு கிளம்பி வந்து இருந்தாள்…

மிகப் பெரிய ஜவுளி கடை அது… ஏழு எட்டு தளங்கள்… குழந்தைகள் பிரிவுக்கு மூவரும் வந்திருந்தனர்… இருவரையும் விளையாடவிட்டு, ஹர்ஷத் வாசுவின் கையில் இருந்தான்… அவனை கையில் வைத்துக்கொண்டே இவர்களை கண்காணித்துக்கொண்டு வாசு இருக்க, இவர்கள் இருவரும் குழந்தைகளுக்கு வேண்டிய ட்ரெஸ் செலக்ட் செய்தனர்…

விளையாடிக் கொண்டிருந்த குழந்தைகள் கொஞ்சம் கொஞ்சமாய் அங்கும் இங்குமாக பிரிய, வாசு கையில் ஹர்ஷத் இருந்ததால் பிடிக்க முடியாமல், தடுமாறிக் கொண்டிருந்தான்.

பாவனா ஒரு பொம்மையை வைத்துக் கொண்டு விளையாடிக் கொண்டிருந்தவள், அடுத்து ஏதோ ஒரு சாமானை எடுக்க சற்று இடம் பெயர்ந்து நகர்ந்து விட்டாள். பார்த்தாவை கையில் பிடித்தவன் பாவனாவை எங்கே என்று தேட, அவள் எங்கு இருக்கிறாள், என்று தெரியவில்லை… வரிசையாக குழந்தைகளுக்கு உள்ள விளையாட்டு சாமான்கள் இருக்க, அடுத்த வரிசையில்

உள்ள ஏதோ ஒரு சாமானை பிடித்து இழுத்துக் கொண்டு இருந்தாள்.

“ஹாய் பாப்பா அது வேணுமா…?” என்று ஒரு குரல் கேட்க…

நிமிர்ந்து பார்த்தவள் “வேண்டும்…” என்பதாக தலையாட்ட அந்த பொம்மையை எடுத்து அவள் கையில் கொடுத்து அவளை தூக்கிக் கொண்டான் உபேந்திரா…

தெரிந்த வக்கீல் ஒருவருக்கு பேரக் குழந்தை பிறந்திருந்தது, அதற்கு ஏதாவது வாங்கிப் பரிசளிக்கலாம் என்று, தனக்கு ட்ரஸ் பர்ச்சேஸ் பண்ண வந்தவன், தற்செயலாக குழந்தைகள் பிரிவுக்கு வந்திருந்தான்… இந்த குழந்தை பொம்மையை எடுக்க முடியாமல் இழுக்கவும், அதை எடுத்துக் கொடுத்தவன் குழந்தையின் அழகில் கவரப்பட்டவனாய் அதை தூக்கினான்…

“உன்னோட பெயர் என்ன…?”

“பா…!”

“அப்படின்னா…?”

“பா…”

அவளுக்கு முழு பெயரும் சொல்லத் தெரியாது… ஆதலால்

குழந்தை “பா…” என்றதை “அப்பா” என்று சொல்லுவதாக தவறாக அர்த்தம் புரிந்து கொண்டு, அந்தக் குழந்தையின் அப்பா எங்கே என்று தேடினான்…

அப்போது ‘பாவனா’ என்று வாசு தேடிக் கொண்டு வர, அவனைப் பார்த்ததும் குழந்தை இவனிடம் இருந்து இறங்கி ஓடவும், அவன்தான் குழந்தையோட அப்பா என்று நினைத்துக்கொண்டு, “நீங்களா, இங்கதான் தனியா நின்னிட்டிருந்தா, கேட்டதுக்கு “பா” என்று சொன்னாள்…” என்று அவன் தன்னிலை விளக்கம் கொடுத்துக் கொண்டிருக்கும் போது,

“வாசு முடிஞ்சிருச்சு, குழந்தைங்க எங்க…?” என்று ரங்கா தேடிக் கொண்டு வர, உபேந்திராவை பார்த்ததும் ரங்காவின் முகம் மாறியது…

“இது உன்னோட குழந்தையா…? இவர்தான் குழந்தைக்கு அப்பாவா…? இதை முதலில் சொல்வதற்கு என்ன…? குழந்தை சொல்லித்தான் தெரிய வேண்டுமா…?” என்றவன் அவள் பதில் பேசு முன் முகத்தைச் சுளித்து விட்டு நடந்தான்…

உபேந்திராவின் பேச்சு கேட்டு அதிர்ந்து நின்றது ரங்கா மட்டுமல்ல, வாசுவும் தான், இப்படி ஒரு அவச்சொல் தனது நண்பனுக்கு தன்னால் வந்துவிட்டதை எண்ணி, பேச முடியாமல்

நொந்து போய் நின்றாள்…

நல்ல வேளை அங்கு கீர்த்தி வரவில்லை… அவள் இன்னும் பையனுக்கு ட்ரெஸ் எடுத்துக் கொண்டு இருந்தாள்… வெளிறிய முகத்தோடு நின்ற தன் தோழியை பார்த்தவன், “விடு அவருக்கு தோணியதற்கு எல்லாம் நாம் விளக்கம் கொடுக்கணும்னு அவசியம் இல்லை… பேசாமல் வா… யாரிடமும் சொல்ல வேண்டாம்…!” என்று சூசகமாக அறிவுறித்தி அவளை அழைத்துக் கொடு வந்தான்…

அலுவலகத்தில் விஷ்வா இவளை சந்தித்து, “ரங்கா எனக்கு எல்லாம் தெரியும்… நடந்தது ஓ.கே. இப்ப கூட நீ சம்மதித்தால் இந்தக் குழந்தைகளை நம் குழந்தைகளா வளர்க்கலாம்…!” என்று கேட்க இப்போதும் அவள் அதிர்ந்து விட்டாள்…

அவனுக்கு பதிலே சொல்லாமல் வீட்டுக்கு கிளம்பி வந்து விட்டாள்… ஏற்கனவே உபேந்திரா பேசியது… இப்போது விஷ்வாவின் கேள்வி எல்லாம் சேர்ந்து முதன் முதலாக அவளுக்கு தான் செய்தது தவறோ என்ற எண்ணம் வர அவளுக்கு அழுகை முட்டிக் கொண்டு வந்தது…

இனி காலம் முழுவதும் இந்த மாதிரி கேள்விகளுடன் தான் தனது வாழ்க்கை கழியும் என்பது புரிய, அவளது மனது விட்டு

போயிற்று…

# முற்றும்

# பின்னுரை

முன்னுரையில் நான் குறிப்பிட்டது போல அன்றைய காலகட்டம் எப்படி இருக்கும் என்பது நாம் அறியாதது... ஒரு வேளை அந்த காலத்துக்கு இந்த கதை பொருந்தவும் செய்யலாம், பொருந்தாமலும் போகலாம்... ஆனாலும் பெண்களின் நிலை இந்த மாதிரி ஒரு சூழ்நிலையில் போய் நிற்கக் கூடாது என்ற கருத்தில் நான் எழுதியது தான் இந்த கதை... ஒருவேளை இந்தக் கதை அந்த காலகட்டத்துக்கு பொருந்திப் போனால் இதனுடன் நிறைவுற்றது...

ஆனால் நாம் இப்பொழுது 21ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இருக்கிறோம்... இப்போது உள்ள ரங்காவை போன்ற பாட்டிகள் தனது பேத்தியின் வாழ்க்கை முறை இப்படி இருப்பதை ஒப்புக் கொள்ள முடியாததால், இந்த கதைக்கு இரண்டாம் பாகம் எழுதி இருக்கிறேன்... அதில் ரங்காவின் வாழ்க்கை எவ்வாறு சீர்படுகிறது என்பதை பார்க்கலாம்...

# பாகம் 2

# அத்தியாயம் 1

**பெய்யுமாமுகில் போல்வண்ணா உன்றன்**

**பேச்சும்செய்கையும், எங்களை**

**மையலேற்றி மயக்கவுன்முகம்**

**மாயமந்திர தான்கொலோ**

**நொய்யர்பிள்ளைக ளேன்பதற்குன்னை**

**நோவநாங்க ளுரைக்கிலோம்,**

**செய்யதாமரைக் கண்ணினாயேங்கள்**

**சிற்றில் வந்து சிதையேலே**

**நாச்சியார் திருமொழி...**

பாட்டி ரங்கா பூஜை அறையில் பாடலைப் படித்து முடித்து தீபாராதனை காட்டி, வணங்கிவிட்டு வெளியே வந்தாள். ஹாலில் குழந்தைகள் இருவரும் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொண்டிருந்தனர்...

ரங்கா தனது அலுவலகத்துக்கு கிளம்பிக் கொண்டு இருந்தாள். ‘‘ஏய் பாவனா, நான்தான் முதல்ல போடுவேன். நீ அப்புறம்தான் போடணும்...’’

“முடியாது போடா… நானும்தான் ஸ்கூலுக்கு கிளம்புறேன்… ஷூ, நான் தான் பர்ஸ்ட் போடுவேன். நீ தள்ளிக்கோ…” ஷூ ராக் அருகில் ஒரு சிறிய ஸ்டுல் இருந்தது. அதில் அமர்ந்து ஷூ போட்டு விடுவது வழக்கம். குழந்தைகளை கவனிக்கும் வேணி, “பாப்பா நீ உட்காரு. உனக்கு சாக்ஸ் போட்டுட்டு அண்ணாவுக்கு போடுவோம்…”

“இல்ல, எனக்கு முதல்ல போடுங்க ஆன்ட்டி…!” என்று பார்த்தா பிடிவாதம் பிடிக்க…

அங்கே வந்த பாட்டி, “வேணி நீ அவளுக்கு போடு… நான் பார்த்தாவுக்கு போடுறேன்… பார்த்தா நீ ஷூ சாக்ஸ் எடுத்துட்டு இங்கே வா, நாம கட்டில்ல வைத்து போடுவோம்…” என்று அவனை அழைத்துக்கொண்டு வந்து ஷூவை மாட்டி விட்டார்…

இருவரும் அருகிலுள்ள ஒரு பள்ளியில் சேர்ந்திருந்தனர்… அதற்குள் உள்ளே இருந்து வந்த ரங்கா, இருவருக்கும் இட்டிலியை ஊட்டி விட ஆரம்பித்தாள்… “ம்ம், குய்க். யார் ஃபர்ஸ்ட் சாப்பிடுறான்னு பார்ப்போம்…!”

“ நான்தான் பர்ஸ்ட்… ஆ…” என்றது பாவனா…

“நான் இது சொல்லல, சாப்பிட்டு முடிக்கறதுல, யார் பர்ஸ்ட்டு சொன்னேன்…!” என்று சொன்னதுதான் தாமதம், இருவரும் மடமடவென்று மாறி, மாறி இட்டலியை வாங்கினர்.

“மெதுவா மென்று முழுங்கணும்… அப்பதான் ஜீரணமாகும்…” பாட்டி கற்றுக் கொடுக்க, இருவரும் சமர்த்தாக தலையாட்டினர்.

“பாட்டி நீங்க கிளம்பலையா…?”

“இதோ கிளம்புறேன். நீ குழந்தைகளை ஸ்கூலில் கொண்டு போய் விட்டுட்டு வா. வாசு வர்றதுக்குள்ள நான் ரெடி ஆயிடுவேன்…”

அதற்குள் வாசு வந்துவிட, குழந்தைகள் மாமா, மாமா என்று குதித்தனர். “ஹாய் பார்த்தி, பாவனா கிளம்பியாச்சா.? மாமா கூட கார்ல வரீங்களா…? அம்மா கூட பைக்ல போறீங்களா…?”

“மாமா கூட கார்ல…!”

“வாசு நீ ரொம்ப குழந்தைகளைக் கெடுக்கிற…!”

“நான் என்ன கெடுக்கிறேன்…!”

“தினமும் கார்ல கூட்டிட்டு போனா, அதுவே அவர்களுக்கு பழகிடும்… அப்புறம் கார் தான் வேணும்னு கேட்பாங்க…!”

“இருக்கட்டுமே… டெய்லி நான் கொண்டு போய் விட்டுர்றேன்… எப்படியும் அடுத்த வருஷம் ஹர்ஷாவை ஸ்கூல்ல விடனும்… மூணு பேரையும் கூட்டிட்டு போய் விட்டா போச்சு…!”

“அப்புறம் கம்பெனிக்கு எப்ப போறது…?”

“அதெல்லாம் பார்த்துக்கலாம்… ஒன்பது மணிக்கு ஸ்கூல் பத்து மணிக்கு ஆபீஸ் போய்ட மாட்டேன்… அதெல்லாம் சரியா வரும்…!”

அதற்குள் குழந்தைகள் அவன் கையைப் பிடித்து தயாராக நின்றனர்… “ஓகே நீங்க ரெண்டு பேரும் கிளம்பி இருங்க… நான் போய் விட்டுட்டு வரேன்…” என்றவன் குழந்தைகளை அழைத்துக் கொண்டு பள்ளிக்கு சென்றான்…

அருகிலுள்ள ஆங்கில பள்ளியில் இருவரும் எல்கேஜி படிக்கின்றனர்… பெரிய ஸ்கூலில் முதலில் சேர்க்க வேண்டும் என்று ரங்கா முயற்சி செய்தாள். அது சரி வராது போகவே இந்த ஸ்கூலிலேயே சேர்த்துவிட்டாள்…

“ரெண்டு பேரும் கிளாஸ்ல சண்டை போடாம சமத்தா இருக்கணும். ஓகேவா… மிஸ் என்ன சொன்னாலும் கேட்டுக்கணும். அவங்க சொல்லித் தருவதை படிக்கணும்…”

“ஓகே அங்கிள்... ஹர்ஷா எங்க கூட எப்போ ஸ்கூலுக்கு வருவான்...?”

“அடுத்த வருஷம். மூணு பேரும் ஒரே ஸ்கூல். ஓகேவா.!”

“ஓகே. டன். அதற்குள் ஸ்கூல் வந்துவிடவே இருவரையும் அழைத்துக்கொண்டு உள்ளே சென்று எல்கேஜி வகுப்பில் விட்டு விட்டு வந்தான்...

வீட்டுக்கு வந்ததும் ரங்காவும் பாட்டியும் ரெடியாக இருக்க, “பாட்டி நீங்க சாப்டீங்களா...?”

“இல்ல. ரங்கா சாப்பிடல. அதான் நானும் சாப்பிடல...!”

“நான் சொன்னதை கேளு. சாப்பிடு, கேஸ் நீதானே ஆஜராக போறே...? ஏன் ரங்கா, டைரக்ட்டா பேசிப் பார்க்க வேண்டியது தானே... எதுக்கு தேவை இல்லாம கேஸ்...? விஷயம் எல்லாருக்கும் தெரிஞ்சிடும்...!”

“பேச முடியாது. அவரோட கோரிக்கை நான் ஏத்துக்க முடியாது... அவர் விட்டுக் கொடுக்க மாட்டார். அப்ப கோர்ட்டில் தான் பார்க்கணும்...!”

“ என்ன பாட்டி இது...?’

“என்ன செய்யறது சொல்லு…? சில விஷயங்கள் இப்படித்தான் நடக்கணும்னு இருந்தா, அதை யாராலும் மாற்ற முடியாது… சரி என்னதான் சொல்கிறார், என்று பார்ப்போம்…!”

வாசுவின் வற்புறுத்தலுக்கு இணங்கி இருவரும், பெயருக்கு சாப்பிட்டு எழுந்தனர். ரங்காவும் பாட்டியும் வந்ததும் அவர்களை அழைத்துக் கொண்டு கோர்ட்டுக்கு கிளம்பினான்…

இந்த இரண்டு வருடங்களில், ரங்கா ஓரளவு பிரபலமாக இருந்தாள். அவள் அட்டன்ட் செய்த கேஸ் அத்தனையும் தனித் தன்மையோடு வாதிட்டு அவளுக்கென்று ஒரு பெயர் இருந்தது…

அவள் பெயரில் வக்கீல் நோட்டீஸ் வந்ததும், அதை தனது சீனியர் ரங்கபாஷ்யத்திடம் காட்ட அவர், “இந்த கேசுக்கு நான் வேணா வாதாட வா…!” என்று கேட்டார்.

“இல்ல சார் நானே பாத்துக்கிறேன். உங்களுக்கு தெரியணும்னு தான் காட்டினேன்…!”

“ரங்கா, எதுக்கு கோர்ட் வர போகணும்…? எனக்கு அந்த பையனை நல்லா தெரியும்…! நான் சொன்னா கேட்பான். அவுட் ஆப் தி கோர்ட், பேசி பார்க்கலாம்…!”

“இல்ல சார். அவருக்கு என் மேல கோபம்… நான் அவரை ஜெயிச்சுட்டேன்னு கோபம்… அதனால என்னை

அசிங்கப்படுத்துணும்னு தான் இந்தக் கேஸ் பைல் பண்ணியிருக்கார்...!”

அப்படினாலும் அவரும்தானேமா அசிங்கப்பட போறார்... அப்படி எதுவும் இருக்காது... என்ன கேட்டா நீ இந்த ப்ரொபோஸல ஒத்துக் கொள்வது நல்லது...!”

“இல்ல சார்... நான் பார்த்துக்கிறேன். இது எவ்வளவு பெரிய அயோக்கியத்தனம்...? இதற்கு அவர் என்ன பதில் சொல்றாருன்னு நான் கேட்கிறேன்...!”

இப்போது நேரடியாகவே அவனை சந்திக்க வேண்டும்... நினைத்தாலே தீப்பற்றி எரிவது போலிருந்தது... எவ்வளவு தைரியம்...? இந்த வார்த்தையை சொல்வதற்கு...? அப்படி என்றால் இத்தனை நாள் ஏன் காத்திருக்க வேண்டும்...? முதலிலேயே சொல்ல வேண்டியது தானே...? குழந்தைகளுக்கு இப்பொழுது மூன்றரை வயது ஆகிறது...!

இந்த மூன்றரை வருடங்கள் எங்கு சென்றான்...? இந்த ஊரில் தானே இருந்தான். இப்ப என்ன புதுசா...? எண்ணங்கள் தறிகெட்டு ஓட, அவனுடைய கேள்விகளுக்கு எந்த மாதிரியாக பதில் சொல்ல வேண்டும் என்று மனதுக்குள் பட்டியலிட்டுக்கொண்டே காரில் மவுனமாக வந்தாள்...

பாட்டிக்கு ஒன்றுமே ஓடவில்லை… ‘இந்த பிரச்சனை எப்படி தீரும்…? ஏற்கனவே இந்த மூன்றரை வருடங்களாக நிறைய பிரச்சனைகளை சந்தித்து ஆயிற்று… ஒவ்வொன்றிலிருந்தும் மீண்டு வந்து இப்பொழுதுதான் குழந்தைகளை பள்ளியில் சேர்த்து இருக்கிறது… இப்பொழுது அடுத்த பிரச்சினை…

இதிலிருந்து ரங்கா வெளியில் வந்து விடுவாளா…! பெருமாளே நீ தான் நல்ல வழிகாட்ட வேண்டும்…’ என்று மனதுக்குள் பெருமாளை பிரார்த்தித்துக் கொண்டே வந்தார்.

கோர்ட்டில் கார் பார்க்கிங்கில் வாசு கொண்டு போய் காரை நிறுத்தியதும், ரங்காவும் பாட்டியும் இறங்கினர்… இவர்களை எதிர்பார்த்து காத்துக்கொண்டு நின்ற சரவணன், பாட்டி, ரங்காவை பார்த்ததும் அவர்கள் அருகில் வந்தான்.

“வாங்க பாட்டி…!”

“ நம்ம கேஸ் எத்தனை மணிக்கு சரவணன்…?”

“அனேகமாக பர்ஸ்ட் நம்ம கேசாதான் இருக்கும்…”

“எவ்வளவு நேரம் இருக்கு? ஜட்ஜ் எல்லாம் வந்தாச்சா…?”

“இன்னும் அரை மணி நேரம் இருக்கு…!”

“ ஆமா அங்க என்ன கூட்டம்…!”

“பிரஸ் மாதிரி தெரியுது. பிரஸ் பீப்பிள்க்கு எப்படி தெரிஞ்சதுன்னு தெரியல...!”

“ரெண்டு மூணு முக்கியமான பத்திரிக்கையிலிருந்து வந்துட்டாங்க...!” பேசிக்கொண்டே கோர்ட் வளாகத்திற்குள் வந்தனர்.

“ரங்கா நீ சீனியர் சேம்பர் போயிடு. ஜட்ஜ் வந்ததும் நான் வந்து கூப்பிடுறேன்...!”

“ம்ம்... என்று கூறி விட்டு, பாட்டியை அழைத்துக் கொண்டு சேம்பரை நோக்கி நடந்தாள்.

எதிரில் உபேந்திரா. அவ்வப்போது கோர்ட்டில் ஏதோ ஒரு மூலையில் நிற்பதை பார்த்து இருந்தாலும், மிக அருகில் பார்ப்பது இன்று தான்...

கருப்பு கலர் பேண்ட்... வைட் கலர் ஷர்ட்... வக்கீலுக்கு உரிய தோரணையில் கண்களில் கூலருடன் நின்றவன், “ஹாய்...” என்றான்.

“வழியை விடுங்க, போகணும்...!”

“எப்படி போனாலும் வந்து தான் ஆகணும்...!”

“என்னது...?”

“இல்ல கேஸ் நடக்கிறப்ப, ஜட்ஜ் முன்னாடி வந்து தான் ஆகணும். அதை சொன்னேன்...!”

“அது எங்களுக்கு தெரியும், இப்ப வழி விடுங்க...” என்று சொல்லி ரங்கா நகர்ந்து விட...

பின்னல் வந்த பாட்டியிடம் “பாட்டி எப்படி இருக்கீங்க...? எங்க தாத்தா உங்களை ரொம்ப விசாரித்ததா சொல்ல சொன்னார்...!”

“நல்லா இருக்கேன்பா. அவர் எப்படி இருக்கிறார்...?”

“பைன் பாட்டி...!”

“பாட்டி இப்ப என் கூட வர போறீங்களா இல்லையா...?” என்று ரங்கா அதட்டவும், “நீங்க போங்க பாட்டி...” என்று கூறி வழி விட்டான்.

லெமன் எல்லோவில் கரு நீல கலர் பூக்கள் போட்ட காட்டன் சுடிதார் அணிந்து, நன்றாக வளர்ந்திருந்த கூந்தலை பின்னி, இடது கையில் கருப்பு கவுன் படுத்து கிடக்க நடந்து சென்றவளை உபேந்திராவின் கண்கள் பருகியது...

அதற்குள் அவனது ஜூனியஸ், “சார் பிரஸ்ல இருந்து வந்து இருக்காங்க... உங்க கிட்ட கேள்வி கேட்கணுமாம்...!”

“இப்ப இல்ல, கேஸ் அட்டன்ட் பண்ணிட்டு வந்து பதில் சொல்றேன்னு சொல்லு…” என்று சொல்லி விட்டு, கேஸ் நடக்கும் இடம் நோக்கி சென்றான்…

“ரங்கா வா போவோம். கேஸ் ஆரம்பிக்க போகுது…” சரவணன் வந்து அழைக்க…

அவனுடன் நடந்து கொண்டே, "ஜட்ஜ் வந்தாச்சா…?"

“ஆமா. அவரோட சேம்பரில் வந்தாச்சு…”

வழக்கு நடக்கும் அறைக்குள் சென்று வக்கீல்கள் அமரும் இருப்பிடத்தில் அமர்ந்தாள்…

எதிரே நிமிர்ந்து பார்த்தபோது, உபேந்திரா இவளை பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது…

"பார்க்கிறதைப் பாரு, என்னமோ பொண்ணையே பார்க்காத மாதிரி பார்க்கிறான்… பேர்தான் பெரிய வக்கீல்… பொறுக்கி ரேஞ்சுல இருக்கான்…" மனதுக்குள் குமுறிய கோபத்தினால், என்ன மாதிரி யோசிக்கிறோம் என்றே தெரியாமல், அவனை அர்ச்சித்துக் கொண்டிருந்தாள்…

ஜட்ஜ் வந்து அமர்ந்ததும், குமாஸ்தா எழுந்து கேஸ் பற்றிய அறிமுகம் சொல்ல... ஜட்ஜ் அதைக் கேட்டுவிட்டு, "வாதி அவர் தரப்பை சொல்லலாம்..." என்றார்.

உபேந்திரா எழுந்து, "மை லார்ட், எனது குழந்தைகளை என்னிடம் நீங்கள் மீட்டுத்தர வேண்டும்..." என்று ஆரம்பித்தான்.

"மிஸ்டர் உபேந்திரா உங்க கேசுக்கு நீங்கதான் வாதாட போறீங்களா...?"

"எஸ் யுவர் ஆனர்...?"

"அப்ப கேஸ் என்னன்னு விளக்கமா சொல்லுங்க...!"

"யுவர் ஆனர் எனக்கு இரண்டு குழந்தைகள் இருப்பது போன வாரம் தான் தெரிந்தது... என்னுடைய குழந்தைகளிடம், ஒரு அப்பாவுக்கு உள்ள உரிமையை நீங்கள் எனக்கு பெற்று தர வேண்டும்...!"

"உங்களுக்கு குழந்தைகள் இருப்பது போன வாரம்தான் தெரிஞ்சுதா...?"

"ஆமா யுவர் ஆனர்...!"

"யார்கிட்ட இருக்குது. என்ன குழந்தைங்க...?"

“மிஸ் ரங்காவிடம் என்னுடைய குழந்தைகள் இருக்கிறது… ஆண் ஒன்று,பெண் ஒன்று." என்று உபேந்திரா சொன்னதும்

ரங்கா எழுந்து, "அப்ஜெக்சன் யுவர் ஆனர். அவைகள் என்னுடைய குழந்தைகள்…!” என்றாள்…

“வாட் இஸ் திஸ் மிஸ் ரங்கா…? இடையில என்ன இது…?”

“யுவர் ஆனர், இந்த கேசில் பிரதிவாதி நான்தான். எனக்காக நானேதான் ஆஜராக இருக்கேன். இவர் சொல்வது பொய். அவை என்னுடைய குழந்தைகள்…!”

"ரங்கா நீங்க சொல்ல வந்தது கூண்டில் ஏறி சொல்லுங்க…"

“எஸ் யுவர் ஆனர். மூன்றரை வருடங்களுக்கு முன்பு கல்யாண் மருத்துவமனையில் எனக்கு இரட்டை குழந்தைகள் பிறந்தன…

அதற்கான பர்த் சர்டிபிகேட், மற்றும் டெலிவரி சம்பந்தமான பேப்பர்ஸ், எல்லாம் என்னிடம் உள்ளது… அவர்கள் எனக்கு பிறந்தவர்கள். என்னுடைய குழந்தைகள். மிஸ்டர் உபேந்தரா, தொழில் முறையில் என் மேல் எழுந்த கோபத்தை, இந்த மாதிரி பொய் வழக்கிட்டு, என்னை அவமானப் படுத்துவதன் மூலம், அவர் என்னை பழிவாங்க நினைக்கிறார்…”

“அப்ஜெக்சன் யுவர் ஆனர், குழந்தைகள் ரங்காவுக்கு மட்டும் சொந்தமானது அல்ல. எனக்கும் அவைதான் குழந்தைகள்...” என்று உபேந்திரா சொல்ல, ஜட்ஜ் தலையை பிடித்துக் கொண்டார்...

மிஸ்டர் உபேந்திரா, நீங்கள் மிகப்பெரிய வக்கீல். ரங்காவும் தொழிலில் நல்ல பெயர் பெற்றவர். இருவரும் இந்த நீதிமன்றத்தை, பொழுதுபோக்கு இடமாக நினைக்காமல், என்ன நடந்தது என்று கோர்வையாக சொல்லுங்கள்...

அப்போதுதான் வழக்கு என்னவென்று புரியும். இருவரும் தன்னுடைய குழந்தைகள் என்று சொல்வதில் ஒரே ஒரு அர்த்தம் தான் உண்டு.

குழந்தைகளுக்கு அம்மா ரங்கா... அப்பா நீங்கள் என்று புரிகிறது... ஆனால் எப்படி...? உங்கள் இருவருக்கும் எப்பொழுது திருமணம் ஆயிற்று...?"

“எங்கள் இருவருக்கும் திருமணம் ஆகவில்லை...” உபேந்திரா பதில் கூற... ஜட்ஜ் அருகிலிருந்த தண்ணீரை எடுத்து குடித்துவிட்டு நிமிர்ந்து உட்கார்ந்தார்... (என்னங்கடா இது என் வாழ்க்கையிலேயே நான் இப்படிப்பட்ட கேசு சந்தித்ததே இல்லை.)

"மிஸ் ரங்கா இவர்கள் உங்கள் குழந்தைகள் என்றால் எப்படி...?"

"யுவர் ஆனர் எனக்கு திருமணத்தில் விருப்பம் இல்லாததால், என்னுடைய பாட்டியின் அனுமதியின் பேரில் எனக்கென்று குழந்தை பெற்றுக்கொள்ள தீர்மானித்து, டாக்டர் மகாலட்சுமியிடம் டெஸ்ட் டியூப் மூலம் இந்த இரட்டை குழந்தைகளை, மூன்றரை வருடத்திற்கு முன்னால் பெற்றுக் கொண்டேன்.

இவர் இப்பொழுது திடீரென்று வந்து இவைகள் என்னுடைய குழந்தைகள் என்னிடம் கொடுத்துவிடு என்று கேட்கிறார். இது முடியாது..."

"உபேந்திரா உங்களுக்கு இவைகள் உங்களுடைய குழந்தைகள் தான் என்று உறுதியாக தெரியுமா...?"

"தெரியும் டாக்டர் ஆதாரம் இருக்கிறது...?"

"என்ன ஆதாரம்...?"

“யுவர் ஆனர் குழந்தை உருவாவதற்கு அல்லது பிறப்பதற்கு பெண் மட்டும் போதாது, ஆணும் தேவை. ஆதலால் தான் திருமணம் என்ற ஒரு சடங்கை ஏற்படுத்தி ஒரு ஆணும் பெண்ணும் சேர்ந்து இல்லற வாழ்க்கையை ஆரம்பித்து அடுத்த சந்ததியை உருவாக்குகின்றனர்...

ஆனால் நமது எதிர்க்கட்சி வக்கீல் ஆண்களே தேவையில்லை, அதாவது கணவனை தேவை இல்லை, ஆனால் குழந்தை மட்டும் வேண்டும் என்று புதிய புரட்சிக்கு வித்திட்டு, டெஸ்ட் டியூப் மூலம் குழந்தைகள் பெற்றுள்ளார்.

அந்த டெஸ்ட்டியூப் பேபிக்கு உபயோகப்படுத்திய ஆணின் விந்தணு என்னுடையதுதான். இதற்கான ஆதாரம் சாட்சி எல்லாம் என்னிடம் இருக்கிறது. ஆதலால் இந்த குழந்தைகள் எனக்கும் சொந்தம். அதாவது அப்பா நான்தான். ஆதலால் என்னுடைய குழந்தைகள் மேல் அப்பா என்ற உரிமை எனக்கு வேண்டும். இதுதான் என்னுடைய வழக்கு.

"இல்லை யுவர் ஆனர். இருக்கவே இருக்காது…!"

“மிஸ்டர் உபேந்திரா உங்களுடைய சாட்சிகளை கோர்ட்டில் ஆஜர் படுத்த முடியுமா…?”

“தாராளமாக, அடுத்த முறை இந்த கேஸ் நடைபெறும் போது எனது சாட்சிகளை இங்கு ஆஜர் படுத்துகிறேன்.

ஓகே… மிஸ்.ரங்காவும், மிஸ்டர்.உபேந்திராவும் அடுத்த தடவை தங்களது சாட்சிகளை இங்கு ஆஜர் படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்த கேசை அடுத்த வாரத்திற்கு ஒத்தி

வைக்கிறேன்…” என்று கூறி ஜட்ஜ் எழுந்து சென்று விட கோர்ட் கலைந்தது…

அவனை முறைத்தபடியே கருப்புக் கவுனை கழற்றி கையில் மடித்து தொங்கவிட்டு கொண்டு வெளியில் வந்தாள் ரங்கா…

இன்னொரு வாசல் வழியே உபேந்திராவும் வெளியே வர, வெளியில் காத்திருந்த பத்திரிக்கை நிருபர்கள் அனைவரும் இவர்கள் இருவரையும் சூழ்ந்து கொண்டனர்…

"மேடம் அவங்க உங்க குழந்தைங்ன்னு நீங்க சொல்றீங்க…? உபேந்திரா தன்னுடைய குழந்தைகள் என்று சொல்கிறார்…? இதில் எது உண்மை…?"

"அவர்கள் என்னுடைய குழந்தைகள்…" இதுமட்டும் தான் என்னால் இப்பொழுது சொல்ல முடியும்… நோ மோர் கொஸ்டீன்ஸ் ப்ளீஸ்…" அவர்களை விலக்கிக் கொண்டு நடக்க எத்தனிக்க, நகழ விடாமல் கூட்டம் அவளை நெருக்கி அடித்தது…

கோபத்தில் முகம் ஜிவு,ஜிவுக்க, "எல்லாம் இந்த பொறுக்கி யால் வந்தது… என்னோட வாழ்க்கையை ஒரு ஓபன் பிச்சர் ஆகிட்டான்…' என்று பல்லைக் கடித்தாள். அந்தக் கூட்டத்தை தாண்டி வெளியேற முயற்சித்தாள்…

இன்னொரு வாசலில் அருகே நின்று பத்திரிக்கையாளர் கேட்ட கேள்விக்கு பதில் அளித்துக் கொண்டிருந்த உபேந்திரா, அவள் தத்தளிப்பதை அறிந்து, சத்தமாக" ஹாய் கைஸ், இங்க வாங்க நான் சொல்றேன்..." என்று சொல்லவும் இங்கிருந்த கூட்டம் திபுதிபுவென்று அவன் பக்கம் ஓடியது...

அவர்கள் சென்றதும் சரவணனும் வாசுவும் இவளை நெருங்க, "திமிர் பிடித்தவன். பாரேன், மெனக்கட்டு எல்லாரையும் கூப்பிட்டு பதில் சொல்கிறான்..." என்று திட்ட...

வாசுவும் சரவணனும், "பாட்டி கார்ல வெயிட் பண்றாங்க. வா ரங்கா..." என்று அவளை பிடிவாதமாக அழைத்துச் சென்றனர்...

அவளை வாசுவும், சரவணனும் பத்திரமாக அழைத்துச் சென்றதை கவனித்தவன் அடுத்த நொடி, "ஹாய் கைஸ். ஒரு ரிக்வெஸ்ட். நீங்க என்ன கேட்கணும்னாலும் என் கிட்ட கேளுங்க. நான் பதில் சொல்றேன்... மிஸ்.ரங்காவை தொந்தரவு படுத்த வேண்டாம்...!"

"அது எப்படி சார்...? அவங்கதானே உங்களுக்கு எதிரா நிக்கிறாங்க...!"

"அப்கோர்ஸ், ஆனா அவங்க என் குழந்தைகளோட அம்மா... சோ டோன்ட் டிஸ்டர்ப் ஹெர்...!" என்று அழுத்தமான குரலில்

சொல்லியவன், "இன்னொரு ரெண்டு சிட்டிங்கில் இந்த கேஸ் முடிஞ்சிடும். கடைசி நாள் மொத்த ஸ்டோரியும் சொல்றேன் ஓகேவா…" என்றவன் அவர்களிடம் விடைபெற்று தனது காருக்குள் ஏறிக் கொண்டான்.

"என்ன ரங்கா என்ன ஆச்சு…?

“ஏன் பாட்டி…? நீங்க உள்ள வரலையா…?

"இல்ல ரொம்ப கூட்டமா இருக்கு. நீங்க வேண்டாம் இங்கேயே இருங்கன்னு வாசு சொல்லி விட்டான். அதான் கேட்கிறேன்…!"

“பாட்டி என் குழந்தைகளை அவன் அவன் குழந்தைகள் என்று சொல்றான் பாட்டி…!”

"அது எப்படி…?"

“அதான் பாட்டி எனக்கும் தெரியல. டெஸ்ட் ட்யூப்பேபிக்கு யூஸ் பண்ணிய டோனர் அவனோடது, அப்படின்னு சொல்றான்… நம்ம டாக்டர் மஹாலக்ஷ்மியை போய் நாளைக்கு பார்க்கணும்…!”

“அப்படியா…?”

“அப்புறம் வேற என்ன சொன்னான்…?”

“அவனோட குழந்தைகளாம். அதனால அந்த குழந்தைகளோட அப்பாங்குற உரிமை அவனுக்கு வேண்டுமாம்…”

“நல்லது தானே, குழந்தைக்கு அம்மா மட்டும் இருந்தால் போதுமா…? அப்பாவும் வேணும் இல்லையா…!”

“பாட்டி…” என்று கத்தினாள் ரங்கா…

“என்ன ஆச்சு…? ஏன் கத்தறே?”

“அப்பா, நொப்பான்னு எவனும் வரக்கூடாதுன்னு தானே, நானே இப்படி ஒரு முடிவு எடுத்தேன்…!”

"என்ன செய்ய…? நீ என்ன முடிவு எடுத்தாலும் கிரகம் நம்மளை புடிச்சு ஆட்டுது…! என்றாள் பாட்டி…

“கிரகம் எல்லாம் இல்ல. எல்லாம் அந்த உபேந்திரா பார்க்கிற வேலை…”

“சரி ஏதோ ஒண்ணு… இப்ப என்ன பண்ண போற…?”

“கேஸ் இன்னும் முடியல பாட்டி… ஒரு பொண்ணு குழந்தையை பத்து மாசம் வயித்துல சுமந்து அப்புறம் பெத்து, பாலூட்டி சீராட்டி மூணு வருஷம், நான் வளர்த்து வைத்திருப்பேன்… இவன் அலுங்காமல், குலுங்காமல் வந்து என் பிள்ளைங்கன்னு கூட்டிட்டு போக விட்டுடுவேன். ஒரு கை

பார்த்துவிட்டு தான் மறு வேலை..." என்று மங்கம்மாள் சபதம் போல், கைகளை தேய்த்த ரங்காவை வாசுவும், பாட்டியும் பார்த்திருந்தனர்...

வீட்டுக்கு சென்ற உபேந்திராவை சேதுராம் ஆவலோடு எதிர் கொண்டார்... "என்னடா ஆச்சு...? கேஸ் நம்ம பக்கம் தீர்ப்பு ஆயிடுச்சா...?"

“இப்பதானே ஆரம்பிச்சிருக்கு... இன்னும் ரெண்டு மூணு சிட்டிங் போகும்... எப்படியும் ஜெயிச்சிடலாம்...!”

"டேய் இந்த கேஸ்ல நீ ஜெயிச்சு, என் பேரப் பிள்ளைகளை நம்ம வீட்டுக்கு கூட்டிட்டு வந்துடணும்... அப்பதான் நீ வக்கீல் படிச்சதுக்கு ஒரு மரியாதை...!"

“விடுங்க தாத்தா, நம்ம பசங்க நம்ம வீட்டுக்கு வந்திடுவாங்க. டோன்ட் வொரி...” என்றவன் விசிலடித்துக் கொண்டே மாடி ஏறி விட்டான்...

டாக்டர் மகாலட்சுமிக்கு அழைத்த சேதுராம் சில விஷயங்களை அவரிடம் சொல்லி, இந்த மாதிரியே பதில் சொல்லிடுங்க... என்ன வந்தாலும் நான் பாத்துக்கறேன்..." என்று சொல்லிக் கொடுத்தார்.

தனது பி.ஏ பாபுவை அழைத்த உபேந்திரா மறுநாள் காலை என்ன செய்ய வேண்டும் என்பதை குறிப்பிட்டு, அது முடிந்தவுடன் எனக்கு தகவல் சொல்லு, என்று கூறி போனை வைத்தான்…

‘ரங்கா என்னையா ஜெயிச்ச நீ… இந்த கேஸ்ல நான் ஜெயிச்சு உன்னை மண்ணை கவ்வ வைக்கிறது மட்டும் இல்லாம, என்னோட குழந்தைகளை நான் என்கிட்ட கொண்டு வர்றேன்னா இல்லையா பார்…' என்று தனக்குள் அவளுக்கு எதிராக சவால் விட்டவன், தான் அடுத்தடுத்து செய்ய வேண்டியவை மனதுக்குள் பட்டியலிட்டு விட்டு தூங்க சென்றான்…

# அத்தியாயம் 2

ரங்காவும், வாசுவும் கல்யாண் மருத்துவமனைக்குள் நுழைந்தனர். ரிசப்சனில் "டாக்டர் மகாலட்சுமி மேடம் வந்திருக்காங்களா அவங்கள பாக்கணும்...?" என்று வாசு கேட்க...

"அவங்க லீவு மேடம்... அவங்க சொந்த ஊர்ல விசேஷம் அதுக்கு போய் இருக்காங்க..."

"என்னைக்கு வருவாங்கன்னு தெரியுமா...?"

"தெரியலையே மேடம். ஒரு வார லீவு சொன்னாங்க. நேத்துதான் போயிருக்காங்க..."

"ஓ... அப்படியா..." என்றவள் வாசுவை அழைத்து கொண்டு திரும்பினாள்.

உண்மையில் ரங்காவுக்கு சேதுராமனின் பேரன்தான் உபேந்திரா என்பது தெரியாது... ஆதலால் மருத்துவமனைக்கு உபேந்திரா எதற்கு வந்தான்...?

எப்படி தனக்கு டோனராக மாறினான் என்பது டாக்டர் மகாலட்சுமியிடம் விசாரித்தால் மட்டுமே அறிந்து கொள்ள முடியும், என்பதால் டாக்டரை பார்க்க இருவரும் வந்திருந்தனர்.

“ரங்கா எனக்கென்னமோ இதுல வேற விஷயம் ஏதோ இருக்கிற மாதிரி இருக்கு.?” என்று வாசு சொல்ல...

"என்ன விஷயம்...?

“இந்த ஹாஸ்பிடல் ஓனர் யார்...? இது நம்ம முதல்ல விசாரிப்போம். ஒருவேளை உபேந்திரா இதன் ஓனருக்கு மிகவும் வேண்டியவராக இருந்தால், இப்படி யோசி. ஏதோ ஒரு காரணத்திற்காக மருத்துவமனை வந்தபோது அவர் டோனராக மாறி இருக்க வாய்ப்பு இருக்கலாம் இல்லையா...!”

“அப்படின்னாலும் டோனர் கிட்ட விஷயம் சொல்ல கூடாது என்பது ஹாஸ்பிடல் ரூல்ஸ் அதை எப்படி இவங்க மீறலாம்...?...”

“உண்மைதான்... ஆனால் இதில் எந்த அளவு உனக்கு சாதகமாக பதில் கிடைக்கும் என்று எனக்கு சந்தேகமாக இருக்குது...!

ஏன்னா, டாக்டர் மகாலட்சுமி ஒரு வாரம் லீவு... அடுத்த வாரம் நம்ம கேஸ் ஹியரிங் இருக்கு... நான் சந்தேகப் படுவது சரியா இருந்தா, டாக்டர் மகாலட்சுமி அவர்களுக்கு சாதகமாக தான் சாட்சி சொல்வார்கள்.

அவன் சொன்னதைக் கேட்டு தலையைப் பிடித்துக் கொண்ட, ரங்காவிடம், "ப்ளீஸ் அப்செட் ஆகாதே...!

“வாசு, அப்ப என் குழந்தைகளை என்கிட்ட இருந்து பிரிச்சுடுவாங்களா...?"

“ஏய், அதெல்லாம் நடக்காது... நாங்க இல்ல அப்படி விட்ருவோமா...!’

“இல்ல வாசு எனக்கு பயமா இருக்கு... அந்த ஆளு என்ன வேணா செய்வான்... அவனுக்கு என் மேல ரொம்ப கோபம்...!”

“அதெல்லாம் ஒண்ணுமில்ல ரங்கா. நீ வீணா கற்பனை பண்ணிக்காத. முதல்ல வீட்டுக்கு போய், நிதானமா யோசி...”

“என்ன யோசிக்க சொல்கிறே?”

“அவர்கிட்ட உன் குழந்தைகளை கொடுக்க வேண்டாம்... ஆனால் அப்பாங்கிறே உரிமையை கேட்கும் போது, அதைக் கொடுக்கச் சொல்லி கோர்ட்டு உத்தரவு போட்டுச்சுன்னா, என்ன செய்யலாம்னு யோசி...!”

"நோ, நான் அதுக்கு சம்மதிக்க மாட்டேன்...! ரங்காவின் பிடிவாதம் வாசு அறிந்ததுதான்...

'இப்போது இதை யோசிக்க மாட்டாள்... தீர்ப்பு வரட்டும். அப்போது அவள் யோசனை செய்வாள்' என்று வாசுவுக்கு தோன்றியது.

வீடு வந்ததும் வாசுவுக்கும் முன்னால் விடுவிடுவென்று, வீட்டுக்குள் நுழைந்தவள் பாட்டியிடம் நேராக சென்று, "பாட்டி அந்த டாக்டர் பிராடு போல இருக்கு. நேத்துதான் கேஸ் கோர்ட்டுக்கு வந்து இருக்கு. இன்னைக்கி அங்கு ஊரிலேயே இல்ல..."

பாட்டிக்கு ஏதோ புரிவது போல் தோன்றியது. ஆனால் இப்போது அதை ரங்காவிடம் சொன்னால் கோபம் தன்மீது திரும்பிவிடும் என்று தெரிந்து அமைதி காத்தார்...

“சரி, ரிலாக்ஸா யோசிக்கலாம். பிள்ளைங்க அப்போதே இருந்து உன்னத் தேடிட்டு இருக்காங்க...!”

“எங்க அவங்க...?”

“பெட்ரூம்ல கீர்த்தி கூட மூணு பேரும் இருக்காங்க...!”

ரங்கா பெட் ரூமுக்குள் நுழையவும், அம்மா என்று முதலில் பாவனா வந்து காலை கட்டிக் கொள்ள, போட்டிக்கு என்று பார்த்தாவும், ஹர்ஷத்தும் வந்து கட்டிக் கொண்டனர்...

“எப்ப வந்தீங்க, ஸ்கூல்ல இருந்து...?"

“நாங்க அப்பவே வந்துட்டோம் மம்மி. உங்களைத்தான் காணோம். நீங்க இன்னைக்கு எங்கள கூப்பிட வரல. பாட்டி தான் ஆட்டோல வந்தாங்க…

“அம்மாக்கு வெளியில வேலை இருந்துச்சுடா கண்ணா…!”

“நான் என்ன சொல்லி இருக்ககேன். என்ன வேலை இருந்தாலும் நீங்க தான் எங்களை கூப்பிட வரணும்…!”

"ஓகே. சாரி, சாரி நாளைக்கு நான் வந்துடறேன்…”

“சாரி கேட்டதுனால, போனாப் போகுதுன்னு விடறோம் இல்லடா பார்த்தி…!” என்று பாவனா சொல்ல, ஆமாம் என்று பார்த்தி தலை அசைத்தான்…

இன்னைக்கு என்ன சொல்லிக் கொடுத்தாங்க ஸ்கூல்ல…? என்றதும் மடை திறந்த வெள்ளம் போல் குழந்தைகள் இருவரும் காலை முதல் மாலை வரை நடந்ததை அவளிடம் சொல்ல ஆரம்பித்தனர்…

ஹர்ஷத் இன்னும் பேச்சு வராததால், ‘ம்கூம்’ என்று சொல்லிக்கொண்டு பொம்மையை வைத்து அருகில் இருந்து விளையாடிக் கொண்டிருந்தது…

அதற்குள் உள்ளே சென்ற கீர்த்தி மூன்று குழந்தைகளுக்கும் சாப்பாடு எடுத்து வந்தாள்.

ரங்காவிடம் ஒரு தட்டை கொடுத்துவிட்டு இன்னொரு தட்டில் இருந்து ஹர்ஷத்துக்கு ஊட்ட ஆரம்பிக்க, ரங்காவும் குழந்தைகளிடம் பேசிக்கொண்டே ஊட்ட ஆரம்பித்தாள்…

உள்ளே இவர்களின் கவனம் குழந்தைகளிடம் இருப்பதைக் கண்ட வாசு, பாட்டியிடம் மெதுவாக, "உபேந்திரா சேதுராம் சார் பேரன்னு ரங்காவுக்கு தெரியுமா…?

“தெரியாது…”

“நீங்க சொன்னது இல்லையா…?”

“இல்ல, நான் சொன்னது கிடையாது.”

“அப்ப இது அவர் வேலையா இருக்குமா…?”

அப்படித்தான் நானும் நினைக்கிறேன். ஆனா என்கிட்ட இதைப் பற்றி அவர் எதுவும் சொல்லவே இல்லை…

"ஒருவேளை இது நன்மையா முடிஞ்சா கூட நல்லது தான்… நாம கொஞ்சம் அமைதியாக இருப்போம்…" என்றான் வாசு பாட்டியிடம்…

நானும் அதை தான் நினைக்கிறேன்... ஆனா அதை அவள் கிட்ட சொல்ல கூடாது.அதற்குள் ரங்காவும் குழந்தைகளும் வெளியில் வரும் சத்தம் கேட்டு இருவரும் அமைதி ஆகினர்.

போவோமா என்று கீர்த்தி கேட்டதும், வாசுவும் கீர்த்தியும் கிளம்பினர்...

சாப்பிட்டு போக வேண்டியது தானே என்று பாட்டியும் ரங்காவும் எவ்வளவோ சொல்லியும், "இல்ல அக்கா, அங்க மாவு மீதம் ஆயிடும். அடிக்கிற வெயிலுக்கு இவர் பழசு சாப்பிடவே மாட்டார்... அங்க போய் சாப்பிடலாம்..." என்று கூறி விட்டு கிளம்பி விட்டனர்.

இரவு குழந்தைகள் தூங்கியதும், அருகில் படுத்திருந்த ரங்கா எழுந்து உட்கார்ந்து இருவரையும் பார்த்துக் கொண்டே இருந்தாள்...

தூக்கமே வரவில்லை... மனதிற்குள் ஏதேதோ நினைவுகள் கற்பனைகள். ‘ஒருவேளை அப்பாவுக்குத்தான் அதிக உரிமை குழந்தைங்க அவங்ககிட்ட போய் விட்டால்...' நினைக்கையிலேயே தாங்க முடியவில்லை ரங்காவுக்கு...

'கடவுளே நான் என்ன தப்பு செய்தேன்...! நான் பாட்டுக்கு நான் உண்டு என் குழந்தைங்க உண்டுன்னு தானே இருக்கேன்...

இவனுக்கு என்ன இந்த குழந்தைங்க விட்டா வேற குழந்தைகளே பெத்துக்க முடியாதா…?

ஆள ஜம்முனு ஹீரோ கணக்கா தான் இருக்கான்… எவளையாவது கல்யாணம் பண்ணி குழந்தை பெத்துக்க வேண்டியதுதானே…?

ஐயோ எங்கிருந்துதான் வந்தானோ…? என் உயிர வாங்கண்ணே…?' இருந்த பயத்திலும் கோபத்திலும் உபேந்திராவை முடிந்த அளவு திட்டி தீர்த்தாள்…

பாதித் தூக்கத்தில் புரண்டு படுத்த பாட்டி, ரங்கா தூங்காமல் முழித்துக் இருப்பதைப் பார்த்து, "என்ன ரங்கா தூங்கலையா…? தூங்கு பேசாமல், தூக்கம் இல்லேன்னா உடம்பை பாதிக்கும்…

"பாட்டி தூக்கம் வரமாட்டேங்குது… பயமா இருக்கு என்னால இவங்கள விட்டுட்டு ஒரு நிமிஷம்கூட இருக்க முடியாது பாட்டி…!"

"அதெல்லாம் பயப்படாத… இந்தப் பெருமாள் இருக்கிறார் எத்தனையோ கஷ்டத்தில் நமக்கு உதவலையா…? அதே மாதிரி இதுக்கும் ஒரு வழி வைத்திருப்பார்…!"

"என்ன வழி பாட்டி…? என்னால குழந்தைகளை விட்டுக் கொடுக்க முடியாது…!"

அவ்வளவுதானே விடு தீர்ப்பு வரட்டும். அதை வச்சு நாம யோசிப்போம்...!' என்று பாட்டி பலவிதமாக சமாதானப் படுத்தி அவளை தூங்க வைத்தார்...

மறுநாள் குழந்தைகள் ஸ்கூலுக்கும், ரங்கா அலுவலகம் சென்றவுடன், ஒரு ஆட்டோ பிடித்த பாட்டி நேரே சென்ற இடம் சேதுராமனின் பங்களா.

"வா ரங்கா... உன்னைத்தான் எதிர் பார்த்திட்டு இருக்கேன்..."

“அப்ப இப்ப நடக்கற விஷயத்துக்கு மூல காரணம் நீங்கதான்...!

“வந்த உடனே சண்டை ஆரம்பிக்கணுமா...? முதல்ல ஜூஸ் குடி... அப்புறம் தெம்பா சண்டை போடு...!”

“ஏன் இப்படி பண்ணுறீங்க சேது...?

“எப்படி...?”

“உங்க பேரன் தான் டோனர் என்று எனக்கு தெரியாது. எதுக்காக இப்படி...?”

“ரங்கா நான் உன்னை ஒரு கேள்வி கேட்கிறேன். அதுக்கு உண்மையான பதில் வேணும்...!”

“கேளுங்க…!”

“உன்னோட பேத்தி கல்யாணம் ஆகாம இப்படி குழந்தைகளை வச்சிட்டு, ஒரு சிக்கலான வாழ்க்கை வாழ்வது, உனக்கு சந்தோஷமா…?”

“இல்ல வருத்தமா தான் இருக்கு… ஆனால் அவள் தேர்ந்தெடுத்த வாழ்க்கை. சம்மதம் வேற சொல்லி இருக்கேன். அப்புறம் அதை சகித்துக் கொண்டு தானே ஆகணும்…!”

“உன்னோட பேத்திக்கு கல்யாணம் ஆகி இதே குழந்தைகளோட வாழ்ந்தா சந்தோஷமா…?”

“அப்படி ஒன்று நடந்தால் என்னைவிட சந்தோஷப்படுவது வேற யாரும் இல்லை…!”

“அப்ப நடக்கிறது வேடிக்கை பாரு. நடக்கப் போவதையும் பாத்துக்கிட்டே இரு. எந்த பதிலும் சொல்லாதே மற்றதை நான் பாத்துக்குறேன்…!”

“நீங்க என்ன சொல்றீங்க எனக்கு புரியல…!”

“என்னோட பேரன் தான் உன் பேத்திக்கு மாப்பிள்ளை…!”

“உண்மையாவா சொல்றீங்க…?”

“ஆமா நடக்கும். நடத்தி காட்டுறேன்…!”

“ரெண்டும் முட்டிக்கிட்டு நிக்கிதுங்களே…!”

“அதுக்கு தானே இப்ப கோத்து விட்டிருக்கேன்…!”

“முட்டி மோதி வரட்டும்… முந்தி அவங்க தனித்தனியாக நின்னாங்க… ஆனா இப்ப அவங்களைக் இணைக்கிற சங்கிலியா ரெண்டு குழந்தைங்க இருக்குது… கண்டிப்பா அவங்க மாறித்தான் ஆகணும்… மாறுவாங்க…!

சில விஷயங்களை நீ எப்படி பேசணும்… அப்படிங்கற அதையும் நான் சொல்லி தரேன்… அது மாதிரி பேசு…!”

“நடக்குமா சேது…!”

“ரங்கா இந்த பிளான நான் இப்ப போடல… நீ என்னைக்கு உன்னோட பேத்தி பிரச்சினையே என் முன்னால கொண்டு வந்தியோ, அன்னைக்கு நான் யோசிச்சு போட்ட ப்ளான் இது…!”

“அதனாலதான் உன்னோட பேரன் பேத்தி பங்ஷன்ல நான் ரொம்ப சந்தோஷமா கலந்துகிட்டேன். உனக்கு மட்டும் அவங்க பேரன் பேத்தி இல்ல. ரங்கா எனக்கும் அவங்கதான் பேரன் பேத்தி. நம்ம குழந்தைகளுக்காக நாம இவங்க ரெண்டு பேரையும் சேர்த்து வைக்கிறோம்… ஓகேவா…!”

“ரொம்ப தேங்க்ஸ் சேது… என்னோட பேத்திக்கு ஒரு குடும்ப வாழ்க்கை கிடைக்கும் அப்படின்னா நான் எது செய்யவும் தயாரா இருக்கேன்…!”

“சரி கவலைப்படாதே…!” என்றவர் டிரைவரை அழைத்து ரங்காவை வீட்டுக்கு கொண்டு விட செய்தார்…

திங்கள் கிழமை கோர்ட்டுக்கு தான் வரவில்லை என்று பாட்டி கூறிவிட்டார்…

கேட்டதற்கு, "எனக்கு படபடன்னு இருக்கு… உனக்கு துணைக்கு வாசு வருவான்… எதுனாலும் டென்ஷன் ஆகாதே ரங்கா…” என்று சொல்லி வழியனுப்பி வைத்தார்…

வழக்கு நடக்கும் இடத்திற்கு செல்லும் முன், ரங்காவை சந்தித்த உபேந்திரா, "ஹாய், குட்டீஸ் நல்லா இருக்காங்களா…?" என்று கேட்க…

“ஹலோ அவங்க என்னோட பசங்க. அவங்கள பத்தி நீங்க கேட்க வேண்டிய அவசியம் இல்லை!” என்று பதில் கூறி அவனை உறுத்து விழிக்க,

இடதுகை பேன்ட் பாக்கெட்டுக்குள் இருக்க, வலது கையால் முகவாயை தடவிக்கொண்டே, "என்னோட பசங்க தான் வளராம, குட்டி பிள்ளையா இருப்பாங்கன்னு நெனச்சேன்… ஆனா அவங்க

மம்மியும் வளரவே இல்லை போல இருக்கே..." என்று மெதுவாக, ஆனால் நக்கல் தெறிக்கும் குரலில் கிசுகிசுத்தான்.

"என்ன கொழுப்பா...!"

"கொழுப்பு உனக்கா, எனக்கா நாலு பேருக்கு கேட்போமா...! தெளிவா சொல்லுவாங்க... ஏன்னா நீ ஆல் ரெடி பண்ணி இருக்கிற காரியம் அப்படி..."

'போடா டேய்' என்று வாய் வரை வந்த வார்த்தையை, தொண்டைக்குழிக்குள் விழுங்கியவள், அவனை ஒரு முறை முறைத்துவிட்டு உள்ளே சென்றாள்...

'கியூட் பேபி ரொம்ப சூடா இருக்கு' மனசுக்குள் சொல்லிக் கொண்டவன் தனது சேம்பரை நோக்கி நடந்தான்...

அன்று விசாரணையில் டாக்டர் மகாலட்சுமி உபேந்திராவுக்கு ஆதரவாக சாட்சி சொன்னார்...

"டாக்டர் ரங்காவுக்கு டெஸ்ட் டியூப் பேபிக்கு நீங்க யூஸ் பண்ணிய டோனர் மிஸ்டர் உபேந்திராவோடதா...?"

"ஆமாம் யுவர் ஆனர்...!"

"ஹவ் இட் இஸ் பாசிபிள்...?"

“ஆக்சுவலாக, இப்ப எல்லாம் நிறைய அன் நோன் பிரக்னன்சி கேஸ் வருது. அதனால அது சம்பந்தமா ஒரு ஆராய்ச்சி நாங்க டாக்டர்ஸ் எல்லாரும் பண்ணிட்டு இருக் கோம். நிறைய இன்றைய கால இளைஞர்கள் ஸ்பெர்ம் எடுத்து அதனுடைய குவாலிட்டி கவுண்ட்ஸ் எல்லாம் செக் பண்ணினோம்…

அப்ப நிறைய பேர்கிட்ட கலெக்ட் பண்ணியதில் உபேந்திரா வும் ஒருவர்… மிஸ்.ரங்கா ட்ரீட்மெண்ட் வந்தபோது அவங்க பாட்டி என்கிட்ட கேட்டது ஒரு நல்ல பையனோட குழந்தை என் பேத்திக்கு வேண்டும்…

எனக்கு அந்த மாதிரி யாரையும் தெரியாது. ஆனா மிஸ்டர்.உபேந்திராவை நல்லாவே தெரியும்… சோ அவரோட குணநலன்கள் எனக்கு பெஸ்ட்டுன்னு தோணுச்சு… அதனால அவரோடது யூஸ் பண்ணினேன்…!”

“ஓகே… ஆனால் சட்டதிட்டத்தின்படி யாரோடது நீங்க யூஸ் பண்ணினாலும், அதை சம்பந்தப்பட்ட இருவருக்குமே தெரிவிக்கக் கூடாது இல்லையா…!”

“ஆமாம்…”

“அப்புறம் எப்படி தெரிஞ்சுது…?”

“நான் சொல்லல. ஆனா வேற வழியா தெரிஞ்சிடுச்சு… எனக்கு அசிஸ்ட் பண்ணவங்க பேசிட்டு இருக்கேல சார் கேட்டுட்டாரு… ஏன்னா எங்க ஹாஸ்பிட்டல் எம்.டி மிஸ்டர் உபேந்திரா தான்…!”

இதைக் கேட்டதும் எதிரில் இருந்த ரங்காவுக்கு எல்லா விஷயமும் புரிந்தது… சொல்லி முடித்த மகாலட்சுமி அது சம்பந்தமாக எல்லாவித ரிப்போர்ட் பேப்பரும் குமாஸ்தாவிடம் கொடுக்க, அவர் நீதிபதியிடம் காண்பித்தார்.

மிஸ்.ரங்கா நீங்கள் உங்கள் குழந்தைகளுக்கு தாய் என்றால், மிஸ்டர். உபேந்திரா தான் தகப்பன் என்றாகிறது… எனவே அவர் கூறியது போல் உங்கள் குழந்தைகளின் தகப்பன் என்ற உரிமையை நீங்கள் அளிக்க வேண்டும்…!”

“மிஸ்டர் உபேந்திரா நீங்கள் எந்தவிதமான உரிமையை எதிர்பார்க்கிறீர்கள்…?”

“என்னோட குழந்தைகள் என்னை அப்பா என்று அழைக்க வேண்டும். அவர்களை நான் வளர்க்க வேண்டும்…!”

“அப்ஜெக்சன் யுவர் ஆனர்… இந்த மூன்று வருஷமா என்னுடைய குழந்தைகளுக்கு அப்பா என்ற ஒரு சொல்லே

தெரியாது… அவர்கள் இவரை அப்பா என்று ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்… பழக மாட்டார்கள்…

அப்படி இருக்கையில் இவர் எதை வைத்து என்னுடைய குழந்தைகளை வளர்க்க வேண்டும் என்று சொல்கிறார்…!”

“குழந்தைகள் ஒருநாள் என்னுடன் பழகினால் போதும். அப்பா நான்தான் என்று புரிந்து கொள்வார்கள்…!”

“சாத்தியமே இல்லை அது எப்படி புரிந்துக் கொள்வார்கள் யுவர் ஆனர்…!”

“வேண்டுமானால் நான் நிரூபித்துக் காட்டுகிறேன்…!”

“எப்படி…?”

“ஏற்கனவே அவர்களை ஆளனுப்பி கூட்டி வர சொல்லி இருக்கிறேன்… இப்போது வந்துவிடுவார்கள்… வந்தது தெரியும்…”

“அது எப்படி குழந்தைகளை எனக்கு தெரியாமல் கூட்டி வர சொல்லலாம்…?”

“நான் நேராக கோர்ட் மூலமாக தான் ஏற்பாடு செய்து இருக்கிறேன்…!”

எந்த வகையிலும் அவனை குற்றம் சொல்ல முடியாமல் அவனது செய்கை இருக்க ரங்கா உண்மையில் தவித்துப் போனாள்.

வழக்கு நடந்து கொண்டிருக்கையில் குழந்தைகள் ஒரு பெண் காவலர் துணையுடன், வாசுவும் உடன் வர வந்தனர்...

கோர்ட்டில் உள்ள கூட்டத்தை பார்த்த குழந்தைகள் மிரண்டு போய் வாசுவிடம் ஒட்டிக்கொள்ள, அவன் இருவரையும் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு உள்ளே வந்தான்...

குழந்தைகளுக்காக கீழே இறங்கி வந்த ஜட்ஜ் "ஹாய் குட்டீஸ் இவங்க யாரு...? என்று ரங்காவை காட்டி கேட்க...

"இது கூட உங்களுக்கு தெரியாதா...? அது எங்க அம்மா..."

'தேவைதான் எனக்கு...” என்ற ஜட்ஜ், “இது யாரு...?” என்று உபேந்திராவை காட்டி கேட்டார்.

அப்போதுதான் உபேந்திரா நிற்பதை பார்த்த குழந்தைகள், "ஹாய் அப்பா...” என்று அவனை நோக்கி ஓடினர்.

தன்னை நோக்கி ஓடிவந்த குழந்தைகளை தன் இரு கையிலும் வாரிக் கொண்டவன் நீதிபதியிடம் “யுவர் ஆனர் இவர்கள் இருவரும் எனக்கு இரண்டு நாள் தான் பழக்கம். ஆனால் என்னிடம் நன்கு ஒட்டிக் கொண்டனர்... இதுதான் ரத்த

பாசம் என்பது...!” என்றவன் ரங்காவை வெற்றியுடன் பார்வையிட்டான்.

நடப்பதை பார்த்த ரங்காவினால் அதை ஜீரணிக்க முடியவில்லை... ஒரே நாள் பழக்கத்தில் குழந்தைகள் தன்னிடம் காட்டிய அதே பாசத்தை அவனிடம் காட்ட முடியுமா...?

அப்போ இது தான் அவன் சொன்ன ரத்தபாசமா...? பத்து மாதம் வயிற்றில் சுமந்து, பின்னர் பாலூட்டி, சீராட்டி வளர்த்த அன்னைக்கு நிகரான பாசத்தை இத்தனை நாள் முகமே அறியாத அவனிடம் அந்தக் குழந்தைகள் காட்ட வேண்டுமென்றால் அந்த பந்தத்தை என்னவென்று சொல்வது...?

“மிஸ்.ரங்கா இப்போது என்ன சொல்கிறீர்கள்...?” என்று நீதிபதி கேட்க அவள் பதில் சொல்ல முடியாமல் தயங்கி நின்றாள்...

“மிஸ்டர் உபேந்திரா உங்களது விருப்பம் என்ன...?”

“என்னதான் நான் தந்தை என்று நிலை நாட்டினாலும், மிஸ் ரங்கா இந்த குழந்தைகளை பெற்று வளர்த்து ஆளாக்க தனி ஒரு மனுஷியாக, இத்தனை வருடம் போராடியதை நான் மறுக்க இயலாது...

குழந்தைகள் அவருக்கும் சொந்தம். எனக்கும் சொந்தம். இந்த குழந்தைகளுக்கு சமூகத்தில் மதிப்பும், மரியாதையும் இருக்க வேண்டும் என்றால் குழந்தைகளின் இனிஷியலும், தந்தையின் கவனிப்பும் மிகவும் அவசியம்… அதே போல் தாயின் கவனிப்பும் மிகவும் அவசியம்…

ஆதலால் என்னுடைய வேண்டுகோள், குழந்தைகளுடன் அவர்களது அம்மாவும் எங்கள் வீட்டில் வந்து வசிக்கலாம். குழந்தைகளின் அம்மாவாக மட்டும், மற்றபடி எனக்கும் அவருக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை…!”

“என்ன ரங்கா உங்களுக்கு சம்மதமா…?”

“நோ யுவர் ஆனர். என்னால் குழந்தைகளை விட்டுத்தர முடியாது. அவர் வீட்டில் சென்று வசிக்க முடியாது…!”

“ரங்கா நீங்கள் அப்படி சொல்ல முடியாது… உங்களுக்கு எத்தனை உரிமை இந்த குழந்தைகள் மீது இருக்கிறதோ, அதே உரிமை குழந்தைகள் மீது உபேந்திராவுக்கும் இருக்கிறது…

அதனால் குழந்தைகளின் பொருட்டு நீங்கள் ஒரே வீட்டில் தான் வசிக்க வேண்டும்… உங்களுக்கு அங்கு செல்ல விருப்பமில்லை என்றால் உங்கள் வீட்டில் அவரை ஒரு பேயிங் கெஸ்டாக வைத்துக் கொள்ளுங்கள்… இதுதான் இந்தக் கோர்ட்

வழங்கும் தீர்ப்பு…!” என்று நீதிபதி தன்னுடைய தீர்ப்பை வழங்கிவிட்டு சென்றார்.

தீர்ப்பைக் கேட்ட ரங்கா சிலையென நிக்க, குழந்தைகளை கைகளில் அள்ளிக் கொண்டே உபேந்திரா வழக்கு நடந்த அறையை விட்டு வெளியே வந்தான்…

அவன் வரவுக்காகக் காத்திருந்த அத்தனை பத்திரிகை நிருபர்களும் குழந்தைகளை அவன் கையில் வைத்திருக்கும் அழகை தங்களது கேமராவில் கிளிக்கி தள்ளினர்.

கேள்விக்கணைகள் உபேந்திராவை நோக்கிச் சீறிப் பாய, அவன் அதற்கு திறமையாக பதிலளித்தான்…

பதில் அளித்து முடித்ததும், தனது அருகில் நின்ற குழந்தைகளை பார்க்க, அத்தனை நேரம் தனது தந்தையை வேடிக்கை பார்த்த மக்கள், அப்பா, அம்மா எங்கே…?” என்று கேட்டேனர்.

உள்ள தான் இருப்பாங்க, வாங்க பார்க்கலாம்…!” என்று திரும்பவும் அதே அறைக்குள் செல்ல, அவன் எதிர்பார்த்தபடியே, பொதுமக்கள் உட்காரும் பெஞ்சில் ஒரு ஓரமாக ரங்கா அமர்ந்து, தலையை கவிழ்ந்து பெஞ்சில் சாய்ந்து இருந்தாள்…

“அதோ இருக்காங்க. போய் கூப்பிடுங்க…!” என்று அவர்களை ரங்காவின் பக்கம் அனுப்பி வைத்தான்…

குழந்தைகள் அவளருகில் வந்து, “அம்மா எழுந்திருங்க…” என்று அழைக்க, அவர்களின் குரலில் எழுந்தவள் இருக்கும் சூழலை புரிந்து “வாசு மாமா எங்கே…?” என்று கேட்டாள்.

“தெரியல…” என்று கைவிரித்தனர்…

அங்கு பத்திரிக்கையாளர்களிடம் பேசிக்கொண்டிருந்த வாசு, ரங்கா தேடுவதை அறிந்து உள்ளே வந்தான்…

“வா… ரங்கா கிளம்பலாம்…” என்று அவளையும் குழந்தைகளையும் அழைத்துக்கொண்டு வெளியே வர, “மிஸ்டர் வாசு ஒரு நிமிஷம்…” என்ற உபேந்திராவின் குரல் கேட்டது…

‘என்ன…?’ என்பது போல் வாசு அவனை பார்த்து நிற்க, ஜட்ஜ்மெண்ட் கேட்டீங்க இல்ல… “நான் இன்னும் இரண்டு நாளில் அவங்க வீட்டுக்கு வந்து விடுவேன். எனக்கு ஒரு ரூம் தயார் பண்ணி வைக்க சொல்லுங்க…!”

“அதெல்லாம் முடியாது…!”

“அப்படின்னா அடுத்த கேஸ் போட்டு குழந்தைகளை, நான் மட்டும் வளர்க்கலாம்னு பெர்மிஷன் வாங்கிடுவேன்… எதுனாலும்

எனக்கு ஓகே…!” என்றவன் ஜட்ஜ்மேண்டின் ஒரு காப்பியை கையில் கொடுத்து விட்டுச் சென்றான்…

அவன் பேசி முடித்ததுமே குழந்தைகளை கையில் பிடித்துக்கொண்டு விடுவிடுவென்று காரை நோக்கி ரங்கா சென்று விட்டாள்… அவள் செல்வதையே பார்த்துக்கொண்டு நின்ற உபேந்திராவிடம், “சார், நான் ஏற்பாடு பண்ணிட்டு உங்களுக்கு கால் பண்றேன்…” என்று கூறி விட்டு வாசு விரைந்து சென்றான்…

காரில் எதுவுமே பேசாமல் அமைதியாக வந்த ரங்காவை பார்த்தவன், “ரங்கா நீ இப்ப இருக்கிறது டபுள் பெட்ரூம் வீடு… பேசாம ஒரு ட்ரிபிள் பெட்ரூம் பார்த்து விடுவோமா… ஏன்னா ஒரு ரூம்ல நீ இருக்க… இன்னொரு பெட்ரூம்ல பாட்டி இருக்காங்க… அவர் வந்தா இடம் பத்தாது…”

“வரட்டும், வந்து ஹாலில் படுக்கட்டும்… அப்ப தான் புத்தி வரும்…!” என்று கடுகடுத்தவளை, “ரங்கா கொஞ்சம் அமைதியா யோசிச்சு பாரு… உனக்காக இல்லை உன்னுடைய குழந்தைகளுடைய நன்மைக்காக…!” என்றவன் அதற்கு மேல் எதுவும் பேசாமல் வீட்டிற்கு வண்டியை செலுத்தினான்.

# அத்தியாயம் 3

கோர்ட்டிலிருந்து வந்ததிலிருந்து அழுது கொண்டு இருந்த பேத்தியை சமாதானப்படுத்த முடியாமல் பாட்டி தவித்துக் கொண்டிருந்தார்… குழந்தைகளை வாசு தன் வீட்டுக்கு அழைத்து சென்றுவிட்டான்…

“என்ன ஆச்சு ரங்கா தீர்ப்பு…?”

“அவனுக்கு சாதகமாக முடிஞ்சிருச்சு பாட்டி…”

“அப்ப குழந்தைகளை அவன் கூட அனுப்பனுமா…?”

“அது தேவையில்லையாம்… அவன் குழந்தைகள் கூட இருக்கணுமாம்… அதனால ஒண்ணு அவன் வீட்டுல நாம போய் இருக்கணும். அல்லது அவன் நம்ம வீட்டுல வந்து இருக்கணும்…!”

“நீ என்ன சொன்ன…?”

“நான் அங்க வர மாட்டேன்னு சொல்லிட்டேன்…!”

“அப்ப அந்த தம்பி இங்க வர போகுதம்மா…”

“ஆமா, இன்னும் ரெண்டு நாள்ல துரை வந்து விடுவாராம்…,,’

“சரி விடு… வந்து ரெண்டு நாள் இருந்தா நம்ம வீட்டு வசதி பத்தாது. அவரே கிளம்பி போய்விடுவார்…” என்று பாட்டி பேத்தியை சமாதானப்படுத்தினார்.

“எனக்கு அதெல்லாம் கஷ்டமா தெரியல பாட்டி, கோர்ட்ல குழந்தைங்க அவனை பார்த்ததும் அப்பான்னு தாவிகிச்சு… அதைதான் என்னால் தாங்க முடியலை… மூணு வருஷம் வளர்த்த என்னை விட மூன்று மணி நேரம் கூட தெரியாத அந்த ஆள் பெரிசா போயிட்டான்…” பொருமினாள்.

“அவர்களுக்கு எப்படி தெரியும் இவனை…?”

“அதான்… ஸ்கூல்ல போயி ஒக்காந்து அதுககிட்ட நான் தான் உங்க அப்பான்னு சொல்லி பழகி இருக்கான்…”

“அப்படியா… முதல்ல ஸ்கூல மாத்து… நம்ம பர்மிஷன் இல்லாம வெளி ஆளுங்ககிட்ட குழந்தையை எப்படி பழகவிடலாம்…?” என்று பாட்டி சத்தம் போட…

“ஒரே நாள்ல அவன் கிட்ட இப்படி ஒட்டிக்கிச்சே, நாளைக்கு என்ன விட்டுட்டு வான்னு கூப்பிட்டா, இதுக ரெண்டும் அவன் பின்னால போய் விடும் போல இருக்கு. அப்ப நான் இவ்வளவு நாள் கஷ்டப்பட்டு வளர்த்தது எல்லாம் வீண் தானா…?”

“அதெல்லாம் எதுவும் கிடையாது… குழந்தைகளுக்கு விபரம் புரியாது இல்லம்மா. அதனால அவங்க அப்பாவை பார்த்ததும், அவன் கூட ஒட்டிகிட்டாங்க… அதுக்காக உன்ன விட்டு கொடுக்க மாட்டாங்க… எந்த குழந்தைக்கும் தாய் தான் முதல்ல… நீ கவலைப்படாத ரங்கா…!” என்று தேற்றினார்.

ஆனால் ரங்காவின் மனதில் பாட்டியிடம் கூட சொல்ல முடியாத வேதனை நெஞ்சுக்குள் இருந்தது… வாசுவை தவிர யாரையும் அவள் வீட்டுக்குள் அனுமதித்ததே இல்லை…

அவன் இங்கு வந்து எப்படி இருப்பான் என்பதை விட, தான் அவன் முன்னால் எப்படி நடமாடுவது என்ற எண்ணமே அவளுக்கு அவமானமாக இருந்தது… என்ன இருந்தாலும் அம்மா, அப்பா என்ற பந்தம் திருமணத்திற்குப் பின்னால், வந்து ஒருவேளை கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் பிடிக்கவில்லை என்றாலும் குழந்தைக்காக ஒரு வீட்டில் இருப்பது என்பது தவறாகாது…

ஆனால் எந்தவித பந்தமும் இல்லாமல் ஒரு ஆணை தங்களுடன் தங்க வைக்க அவளுக்கு மிகவும் அவமானமாகவும், வேதனையாகவும் உணர்ந்தாள். பாட்டியும் எதற்கு இப்படி சம்மதிக்கிறார் என்று புரியாமல் வேதனை அடைந்தாள்…

‘உன்னால்தான் பாட்டி சம்மதிக்கிறார் என்று மனசாட்சி அவளைக் குத்திக் கிழிக்க, அவளால் பாட்டியிடமும் கேள்வி கேட்க முடியாமல் போயிற்று.’ தான் இப்படி ஒரு காரியம் பண்ணாமல் இருந்தால், பாட்டி இந்த மாதிரி ஒரு செயலுக்கு ஒப்புக் கொள்ளவே மாட்டார், என்பது புரிந்துதான் இருந்தது அவளுக்கு…

தனியாக ஒரு பெண் குழந்தைகளை வைத்துக் கொண்டு இருப்பது என்பது வேறு… அதே ஒரு ஆடவன் எந்தவிதமான பந்தமும் இன்றி ஒரு வீட்டில் ஒரு பெண்ணோடு இருப்பது என்பது வேறு… இதற்கு என்னவெல்லாம் பேச்சு கிளம்புமோ…? என்னவெல்லாம் கேட்பார்களோ, என்று நினைக்கையிலேயே, பேசாமல் குழந்தைகளை அவனிடத்திலேயே கொடுத்து விடலாமா என்று ஒரு நொடி யோசித்தாள்…

ஆனால் அது தன்னால் முடியாது என்பதை விட, பாட்டி ஒருபோதும் அதற்கு ஒத்துக் கொள்ள மாட்டார்… தன்னுடைய குழந்தைகள் மீது உயிரையே வைத்து இருப்பது அவளுக்கு நன்றாக தெரியும்… அந்த குழந்தைகளுக்காக தான் தன்னுடைய பிடிவாதத்திற்கு பாட்டி சம்மதம் சொன்னது… கடவுளே நான் இன்னும் என்னவெல்லாம் சந்திக்க வேண்டுமோ…? என்று நினைத்துக் கொண்டே உட்கார்ந்து இருந்தாள்

“என்ன உபேந்திரா கேஸ் சக்சஸ் ஆயிடுச்சு போல இருக்கு…!” போனவுடன் தாத்தா கேட்ட முதல் கேள்வியே இதுதான்…

“யார் சொன்னா உங்களுக்கு…? பாபு போன் பண்ணி சொன்னானா…?”

“உன் முகத்துல எரிகிற தவுசண்ட் வாட்ஸ் பல்பு சொல்லுச்சு…” என்று சொன்னதும் “ஹா, ஹா, ஹா” என்று சிரித்தவன்,

“சக்சஸ், அந்த திமிர் பிடித்தவளுக்கு இது ஒரு பாடம்… தாத்தா கோர்ட்டில் பிள்ளைக என்கிட்ட தாவினதும் அவள் முகம் போன போக்கைப் பார்க்கணுமே, ஹா, ஹா, ஹா” என்று சிரித்தவன், இஞ்சி தின்ன குரங்கு மாதிரி ஆயிடுச்சு… ஏற்கனவே என் மேல சிவகாசி பட்டாசு மாதிரி வெடிக்கிறவ, ஆட்டம் பாம் மாதிரி, இனி வெடிப்பான்னு நினைக்கிறேன்… ஐ வில் என்ஜாய்…!”

“என்ன நடந்தது சொல்லு…?” என்றதும் விளக்கமாய் சொன்னவன் தீர்ப்பை பற்றியும் கூறினான்…

“என்னடா இது நம்ம வீட்டுக்கு வர அந்த பொண்ணு சம்மதிச்சுட்டாளா…?”

“நீங்க வேற, அந்த ராங்கிக்காரி அதுக்கெல்லாம் சம்மதிப்பாளா என்ன...?”

“அப்புறம்...?”

“நான் அவங்க வீட்டுக்கு பேயிங் கெஸ்ட் ஆக போகப் போறேன்...”

“டேய், உனக்கு அங்க வசதி படுமா...?”

“அதெல்லாம் பார்த்துக்கலாம்... முதல்ல அந்த வீட்டுக்குள் நுழைவோம்... அப்புறம் நம்ம வசதியை கரெக்ட் பண்ணி விடலாம்...!”

“வீக்லி ஒரு நாள் நான் குழந்தைகளை இங்க கூட்டிட்டு வரேன்... நாம ஜாலியா இருக்கலாம்...”

“குழந்தைகள் கிட்ட எப்படி பழகினே?”

“அது என்ன பெரிய கம்ப சூத்திரமா... அவ குழந்தைகளை சேர்த்திருந்த ஸ்கூல் என் க்ளையன்ட்டோடது... அப்புறம் என்ன மேட்டர் பினிஷ்ட்...”

“பாவம் அந்த பொண்ணு... ரொம்ப படுத்திடாத...!”

“ஹலோ தாத்தா, எனக்கும் அவளுக்கும் எந்த பந்தமும் கிடையாது… அப்புறம் ஏன் நான் அவளை படுத்தப் போறேன்… எனக்கு வேண்டியது என்னோட பசங்க… அவ்வளவுதான்…!”

‘போன பிறகு தானே உனக்கு தெரியும்…’ மனதுக்குள் தோன்றியதை சொல்லாமல், “ஆனாலும் இன்னொரு வீட்டில் இருக்க போறே… உன்னால எந்த பிரச்சினையும் வராமல் பார்த்துக்கொள்…!” என்று பெரியவராய் அவனுக்கு அறிவுரை சொன்னார்…

“ஓகே தாத்தா நான் நாளைக்கு அங்க போய் விடலாம் இருக்கேன்… ஆனா டெய்லி உங்களை வந்து பார்ப்பேன்… ஓகே…” என்று கூறிவிட்டு சென்றான்…

அவன் வெளியே சென்றதும் ரங்காவுக்கு போன் செய்த சேதுராம், “ரங்கா நாளைக்கு உபேந்திரா உங்க வீட்டுக்கு வர்றான்… ஏதாவது தெரியாமல் பேசினாலும் மனசில் வெச்சுகாதே… முதல்ல ரெண்டு பேரும் முட்டிமோதி கட்டும்… அப்புறம் எல்லாம் சரியா வரும்…”

“எனக்கு என்னமோ இது சரியா வரும்னு தோணலை… வீணா ரங்காவோட பெயர் ரிப்பேர் ஆயிடும்னு தோணுது…!”

“உண்மைதான் நான் கூட ஜட்ஜ் இப்படி ஒரு தீர்ப்பு சொல்வாங்கன்னு எதிர்பார்க்கல… சரி நம்மை மீறி நடக்குது… நல்லதையே நினைப்போம்…” என்றவர் போனை வைத்தார்.

சனிக்கிழமை லீவு என்பதால் குழந்தைகளும் எழும்பவில்லை… ரங்காவும் அன்று வேலைக்கு செல்ல வேண்டாம் என்று நினைத்து அவளும் குழந்தைகளுடன் தூங்கிக் கொண்டிருந்தாள்… பாட்டி மட்டும் எழுந்து குளித்துவிட்டு பூஜை செய்து கொண்டிருந்தார்…

காலிங் பெல்லின் ஓசை கேட்டு இப்போது யார் வந்து இருப்பார் என்று யோசித்துக்கொண்டே பாட்டி வந்து கதவை திறக்க, “ஹாய் குட்மார்னிங் பாட்டி…” என்று சொல்லிக் கொண்டு நின்றான் உபேந்திரா…

அதிகாலையில் அவனை எதிர்பார்க்காததால், திகைத்து நின்று கொண்டிருந்த பாட்டியை, “கொஞ்சம் வழி விடுறீங்களா…!” என்று கேட்டு அவர் நகர்ந்ததும் உள்ளே நுழைந்து ஹாலை சுற்றிப் பார்த்தான்… பின்னாலேயே வந்த டிரைவர் உபேந்திராவின் இரு பெட்டிகளை உள்ளே கொண்டு வந்து ஹாலில் வைக்க, “ பாட்டி அந்த ரூம் நான் எடுத்துக்கலாமா…! என்று திறந்திருந்த பெட்ரூம் கதவை காட்டி கேட்க, பாட்டி தலையசைக்க வேண்டியது ஆயிற்று.

“உள்ள கொண்டு போய் வச்சுட்டு, கீழே போய் நீ வெயிட் பண்ணு…” என டிரைவரை அனுப்பி விட்டு…

“ ப்ளீஸ் ஒரு கப் பில்டர் காபி கிடைக்குமா…?”

“ நேரம் தான்…” என்று தனக்குத்தானே முனங்கிக் கொண்டு உள்ளே சென்ற பாட்டி காபி கலந்து கொண்டு வந்து அவனிடம் கொடுத்தார்… ரிமோட்டை எடுத்து ஆன் செய்து நியூஸ் சேனல் வைத்தவன் சவுண்ட் குறைத்து வைத்துக் கொண்டு காபியை குடிக்க ஆரம்பித்தான்…

பாட்டி உள்ளே சென்று தனது பூஜையை தொடர, காலிங் பெல் சத்தம் கேட்டு எழுந்த ரங்கா நேரே பாத்ரூம் சென்று பிரஷ் பண்ணி விட்டு வந்து பெட்ரூம் கதவை திறந்தாள்… கதவு திறந்ததும் நேரெதிரே கால் மேல் கால் போட்டுக்கொண்டு காபியை குடித்துக் கொண்டிருந்த உபேந்திராவை பார்த்ததும், அவளுக்கு ஷாக் அடித்தது…

“ஹாய் குட்மார்னிங்… பசங்க இன்னும் எந்திரிக்கலையா…?”

“காலையிலேயே உனக்கு யார் கதவை திறந்து விட்டது…?”

“உங்க பாட்டி தான்…!” என்றவன் சாவகாசமாக காலை நீட்டிக்கொண்டு டிவியை பார்க்க…

பிரிந்து கிடந்த கூந்தலை அள்ளி முடித்தவள், “பாட்டி, பாட்டி என்று கத்திக்கொண்டே, கிச்சனுக்கு அருகிலிருந்த பூஜை அறைக்கு செல்ல…

“எதுக்கு கத்துற ரங்கா…?”

“இந்த ஆளுக்கு கதவு திறந்து விட்டது நீங்களா…?”

“ஆமா அதுக்கு என்ன இப்ப…?”

“ஏன் பாட்டி, ஒன்பது மணிக்கு மேல வான்னு சொல்ல வேண்டியதுதானே…!”

“இன்னைக்கு ஒருநாள் தானே அப்படி சொல்ல முடியும்… நாளையிலிருந்து விடியறதே இங்க தானே…!”

“ஐயோ என்னோட ப்ரீடமே போச்சு…” என்றவள் கிச்சனுக்குள் நுழைந்து ஒரு கப் காப்பியை எடுத்து கொண்டு, ஹாலுக்கு வந்து டிவி ரிமோட்டை கையில் எடுத்து சேனலை மாற்றினாள்… இதற்குள் தனது அறைக்குள் சென்றிருந்த உபேந்திரா, பேண்டை மாற்றிவிட்டு ஒரு டீ சர்ட், நைட் பேண்ட் சகிதம் வெளியில் வந்தான்.

நேராக குழந்தைகள் படுத்திருக்கும் அறைக்குள் சென்றவன், “ஹாய் குட்டீஸ் என்று சவுண்ட் கொடுக்க, முழித்த குழந்தைகள், “ஹாய் அப்பா…” என்று எழுந்து உட்கார்ந்து விட்டன…

அடுத்த அரை மணி நேரம் அந்த அறைக்குள் யாரும் செல்லவே முடியவில்லை… இரண்டு குழந்தைகளும் மாறி, மாறி அவனிடம் விளையாடுவதும் பேசுவதுமாக இருக்க, அவனும் அவர்களுடன் ஒன்றிவிட்டான்…

பொறுத்துப், பொறுத்துப் பார்த்த ரங்கா, “ஏய் பார்த்தி பாவனா பிரஷ் பண்ண வேண்டாமா…? பால் குடிக்க வேண்டாமா…” என்ற அறை வாசலில் நின்று கத்த.

“போ மம்மி… இன்ட்ரெஸ்ட்ஆ கதை போகுது… அது அப்பா முடிச்ச உடனே நாங்க வரோம்…”

“ஹலோ அது என்னோட பெட் எந்திரிங்க…”

“அதான் ஒரே ஸ்மெல் தாங்கல…” என்றவன் உருண்டு அடுத்த பெட்டில் படுத்துக்கொண்டு “இங்க வாங்கடா குட்டீஸ்” என்று பாவனாவை நெஞ்சிலும், பார்த்தியை அருகில் வைத்துக்கொண்டு விட்ட கதையைத் தொடர்ந்தான்…

“யூ…யூ…” என்று பல்லைக் கடிக்க…

“பார்த்து, பல்லு உடைஞ்சிடப் போகுது… அப்புறம் எல்லாரும் உன்னை பொக்கைவாய்னு சொல்லுவாங்க…” என்று சொல்ல…

குழந்தைகள், “பொக்கை வாய்னா என்னப்பா…?” என்றன.

“அதுவா, இப்போ உங்களுக்கெல்லாம் எத்தனை பல்லு இருக்கு…!”

“கவுண்ட் பண்ணலையே…!”

“அப்ப கவுண்ட் பண்ணலாமா…!”

“ம்ம், பண்ணலாம்…”

“பிரஸ் பண்ணிட்டே பண்ணலாம்… பிரஸ் பண்ணும் போது எப்படி வாய் திறப்பீங்க…?”

“ஆ, ஆ,…”

“இப்படியே இந்த கையில பிரஷ் வச்சுகிட்டு, இப்படி தேய்க்கணும்… சொல்லிக் கொடுத்தான்…”

“நாக்கு, நாக்கு என்றது பாவனா…!”

“உனக்குதான், இங்கே வா.” என்று அவளுக்கும் பிரஷ்ஷில் பேஸ்ட் வைத்து எப்படி பல் தேய்க்க வேண்டும், என்று விளக்கினான்…

பல் தேய்த்ததும் இருவரும் வாயை திறக்க சொல்லி பற்களை எண்ணி அவர்களிடம் சொல்லிவிட்டு “இந்த பல் எல்லாம் இல்லை என்றால் எப்படி இருக்கும் உங்க வாய்…?”

“பாட்டி வாய் மாதிரி இருக்கும்…” பார்த்தி ரகசியமாக சொன்னான்.

“டேய் பாட்டிக்கு பல் இருக்குடா…” அதைவிட ரகசியம் பேசினாள் பாவனா…

“ஐய அது டூப்ளிகேட்… நீ பார்த்தது இல்லை… பாட்டி கையில் எடுத்து வெச்சுப்பாங்க…” அவர்கள் இருவர் பேசியதையும் கேட்ட உபேந்திராவுக்கு சிரிப்பு அள்ளியது…

“ஓகே. ஓகே. புரிஞ்சிடுச்சு இல்ல. யார் கிட்டயும் சொல்லிடாதீங்க. பால் குடிக்கலாமா. உனக்கு என்ன போட்டு பால், வேணும்? உனக்கு…?” என்று இருவரிடமும் கேட்க…

“ஐ அம் எ காம்ப்ளான் பாய்…” இது பார்த்தி…

“நோ, பூஸ்ட் இஸ் சீக்ரெட் ஆப் எனர்ஜி,” இது பாவனா… அவர்கள் இருவர் ஆக்ஷன் பார்த்து இருவரையும் அள்ளி கொண்டவன் வெளியில் வந்து பாட்டியிடம் “இரண்டு பேருக்கும் பால் கொடுங்க…” என்றான்.

“ஏய் பல் தேய்ச்சாச்சா இல்லையாடா…? பல் தேய்க்காமல் ஏமாத்திட்டு பால் குடிக்க போறியா…?”

“நோ மம்மி. நாங்க எல்லாம் பல் தேச்சாச்சு… இல்லப்பா…” சாட்சிக்கு அழைத்தாள் பாவனா…

“அவங்க பல் தேச்சுட்டாங்க… பால் கொடு… நான் கீழே கிரவுண்ட்ல கூட்டிட்டு போய் கொஞ்ச நேரம் விளையாட்டு காட்டிட்டு வரேன்…” மொட்டையாக சுவரைப் பார்த்துக் கொண்டு கூறினான்…

பாட்டியும் ரங்காவும் ஆளுக்கு ஒரு டம்ளர் பாலை கொண்டு வந்து கொடுக்க, “எனக்கு வேண்டாம். பூஸ்ட் தானே நான் கேட்டேன்…” என்று அழ ஆரம்பித்தாள் பாவனா…

“பூஸ்ட் இல்லையா…?”

“ஒரு மாசம் பூஸ்ட். ஒரு மாசம் காம்ப்ளான் மாத்தி, மாத்தி வாங்குறது. கேப்பாங்க, குடிக்க மாட்டாங்க… அது வேஸ்டாபோயிடும்.” பாட்டி விளக்கம் அளித்தார்.

“ஓகே அடுத்த மாசம் பூஸ்ட். நோ காம்ப்ளான்…” மகளை சமாதானம் செய்தான்…

“ஏன்பா இரண்டு வாங்கினால் என்ன...? இந்த பாட்டியும் அம்மாவும் இப்படித்தான்... எதுவுமே வாங்க கூடாதுன்னு சொல்லிடுவாங்க...” அவனுக்கு புரிந்தது... ‘அவர்களுடைய நிலையில் இருந்து பார்த்தால் அது சரியே... தேவை இல்லாமல் செலவழிக்க கூடாது என்ற மனப்பான்மை கொண்டவர்கள். இப்போது தான் வாங்கி கொடுப்பதாக சொன்னால் அவர்கள் செய்தது தவறு என்று குழந்தைகள் மனதில் பதிந்து விடும்.’ என்று யோசித்தான்...

“என்னப்பா பதிலே சொல்லல...?”

“பாட்டியும் அம்மாவும் எதுக்கு வாங்க கூடாதுன்னு சொன்னாங்க...?”

“வேஸ்டா போயிடும் சொல்றாங்க...?”

“அது உண்மைதானே நீங்க ஒழுங்கா குடிக்கலேன்னா ரெண்டு சீக்கிரம் வீணாப் போயிடும்... அதனால சொல்லி இருப்பாங்க... நீங்க இரண்டு நேரம் குடிக்கிறதா எனக்கு ப்ராமிஸ் பண்ணுங்க. நான் வாங்கித் தரச் சொல்லி ரெக்கமெண்ட் பண்றேன்...” என்று கூறி அவர்களை குடிக்க வைத்தான்...

கேட்டுக்கொண்டிருந்த பாட்டிக்கு மனது நிறைந்து போயிற்று... தங்களுடைய மிடில் கிளாஸ் வாழ்க்கையை குறை சொல்லாமல்,

தான் பணக்காரன் என்ற பந்தா காட்டாமல், குழந்தைகளிடத்தில் தங்கள் இருவரையும் விட்டுக் கொடுக்காமல் அவன் பேசிய விதத்திலிருந்தே உபேந்திராவின் நல்ல குணத்தை பாட்டி ஒரு நொடியில் புரிந்து கொண்டார்…

ரங்காவுக்கும் அது புரிந்தாலும், காலையில் வந்ததில் இருந்து குழந்தைகளை தன் பக்கம் இழுத்துக் கொண்ட அவன் மேல் கடும் கோபத்தில் இருந்தாள்… குடித்து முடித்தவுடன் இருவரும் பந்தை தூக்கிக்கொண்டு அப்பாவின் பின் செல்ல, “ஏய் பார்த்தி குளிக்க வேண்டாமா…?”

“அப்பா எங்களுக்கு பால் விளையாட சொல்லித் தரேன்னு சொல்லிருக்காங்க. நாங்க விளையாண்டுட்டு வந்து குளிப்போம்…” என்று சொல்லிவிட்டு உபேந்திராவின் பின்னால் இரண்டும் ஓடிவிட்டது…

அவர்கள் சென்றதும் உள்ளே வந்து பாட்டியிடம், “பாருங்க பாட்டி காலையில் இருந்து பிள்ளைகளை அவன் பக்கமே வச்சுக்கிட்டான். ஒரு நிமிஷம் கூட அவங்க என் பக்கம் வரவில்லை… சொல்லும் போதே ரங்காவுக்கு கண் கலங்கிற்று…

“ரங்கா நான் ஒண்ணு சொல்லுவேன் தப்பா நினைக்காதே… அந்த தம்பிக்கு இப்பதான் குழந்தைகளைப் பற்றி தெரிஞ்சிருக்கு…

பெத்த குழந்தைகளை இந்த மூனு வருஷமா, பார்க்கல, கொஞ்சலை, அந்த ஏக்கம் தீர ஒரு வாரம் கொஞ்சுவாரா, கொஞ்சி விட்டு போகட்டும்… அப்புறம் தன்னால குறைந்துவிடும்… இப்ப உனக்கே ஒரு வருஷம் உன் பிள்ளைகளை பாக்கல என்றால் எப்படி இருக்கும்.? அப்படி நினைச்சுப் பாரு…”

“பெரிய பணக்காரன் திமிரு வேற…?”

“அப்படி என்ன திமிரா அவர் செய்தார்…?”

“அது என்ன பூஸ்ட் வாங்கலியான்னு நம்மக்கிடையே கேள்வி…?”

“அவன் பொண்ணு பூஸ்ட் வேணும்னு அவன் கிட்ட சொல்லி இருக்கா… பூஸ்ட் இல்லையான்னு தானே கேட்டாரு. ஏன் வாங்கலைன்னு கேட்கலையே… அதுக்கும் மேல நம்ம சொன்ன பதில் அந்த குழந்தைக்கு புரியிறமாதிரி எப்படி சொன்னார். அவன் நெனைச்சா நொடியில் எல்லாம் வாங்கலாம்…

ஆனா அப்படி செய்தால் குழந்தைக்கு நம்ம மேல மதிப்பு இல்லாமல் போய்விடும், மேலும் நம்முடைய சூழ்நிலையை அவர் சுட்டிக் காட்டியதா ஆயிடும்னு, அப்படி செய்யவில்லை… இந்த பண்பு ஒன்னு போதும் ரங்கா… நீ நினைக்கிற மாதிரி அந்த பையன் கெட்டவன் இல்லை… ஒரு நல்லவன் தான் உன்

குழந்தைகளுக்கு அப்பாங்கிறதே எனக்கு மிகப்பெரிய திருப்தி...” என்று சொல்லிவிட்டு பாட்டி அடுப்பறையில் சென்று காலை டிபன் வேலையை பார்க்க ஆரம்பித்தார்...

அபார்ட்மெண்ட் கீழே உள்ள இடத்தில் குழந்தைகளுடன் பால் விளையாட கற்றுக் கொடுத்தான்... சற்று நேரம் அவர்களுக்கு எப்படி பந்தை எறிவது காலால் எற்றுவது எல்லாம் கற்றுக் கொடுத்து விளையாட வைத்து அவர்களை வீட்டுக்கு அழைத்து வந்தான்...

“போய் அம்மா கிட்ட சமத்தா குளிச்சிட்டு வாங்க சாப்பிடுவோம்...” என்று அவர்களை அனுப்பிவிட்டு போனை எடுத்துக் கொண்டு உட்கார்ந்தவன் போன் பேச ஆரம்பித்தான்...

அம்மா என்று வந்த பார்த்தியை, “ஏண்டா இப்ப தான் என்ன கண்ணு தெரியுதா...?”

“இல்லையம்மா எப்பவுமே தெரியுமே...” என்று குழந்தை எப்போதும் போல் பதில் சொல்ல,

‘அப்படியே அவன் புத்தி...’ என்று தன்னை அறியாமல் நினைப்பு ஓட, ‘இதுவரை இல்லாமல் இன்று ஏன் இந்த கம்பேரிசன்.’ என்று தனக்குத்தானே ஒரு கொட்டு வைத்துக்கொண்டாள்.

பாட்டி சொன்னது நினைவில் வர குழந்தைகளிடத்தில் வம்பு வைத்துக் கொள்ளாமல் அவர்களை அழைத்துச் சென்று குளிப்பாட்டி விட்டு உடை அணிவித்தாள்… எப்போதும் சேட்டை பண்ணி குளிக்கும் குழந்தைகள், இன்று அப்பாவுடன் சாப்பிடும் ஆசையில் சமத்தாக குளித்துவிட்டு வந்து விட ரங்காவுக்கு ஆச்சரியமாக இருந்தது…

“அப்பா நாங்க ரெடி…? நீங்க ரெடியா…”

“அட ரெண்டு பேரு ரெடி ஆயாச்சா… அப்ப நான் தான் லேட் போல… ஜஸ்ட் பைவ் மினிட்ஸ். அப்பா இப்ப வந்துடுறேன் பார்…” என்று அவர்களிடத்தில் சொல்லிவிட்டு, தான் பாக் வைத்த அறைக்குள் சென்று நிமிடத்தில் குளித்துவிட்டு வந்தான்.

“சாப்பிட வாங்க…” என்று அழைத்த பாட்டி மூவருக்கும் தட்டு வைத்தார்.

“பசங்க சாப்பிடட்டும். நான் வெளியில் சாப்பிட்டுக்கிறேன். என்னால உங்களுக்கு எதுக்கு சிரமம்…?”

“ஏன் தம்பி. எங்க வீட்டிலேயே தங்க வந்து இருக்கீங்க… அப்ப சாப்பிட்டா என்ன…? எங்களுக்கு உங்க வீடு மாதிரி விதவிதமா சமைக்க தெரியாது… ஆனால் ஏதோ செய்வோம்…

சாப்பிடற மாதிரி இருக்கும். சாப்பிடுங்க…" என்று சொல்லவும் பாட்டியின் அன்பில் கனிந்தவன் சாப்பிட ஆரம்பித்தான்…

இரண்டு பேரும், சாப்பிட தெரியாமல் வைத்துக் கொண்டிருக்க அங்கு வந்த ரங்கா, பார்த்திக்கு ஊட்ட ஆரம்பித்தாள்…

"அம்மா நேக்கு நேக்கு…" என்று பாவனா கத்த ஆரம்பிக்க…

"அண்ணாக்கு ஊட்டிட்டு வந்து உனக்கு ஊட்டறேன்…"

"நான் ஊட்டி விடவா…" என்று உபேந்திரா கேட்க, பாவனா தலையாட்டியது…

தன் கையை கழுவிவிட்டு வந்து குழந்தைக்கு ஊட்ட ஆரம்பித்தான்… "நீங்க சாப்பிடுங்க ரங்கா பார்த்துப்பா…"

"இல்ல இருக்கட்டும்… அவன் சாப்பிடும்போதே இவளும் சாப்பிடட்டும்…! என்று கூறி அவளுக்கு முழுவதும் ஊட்டிவிட்டு, தண்ணீர் கொடுத்து குடிக்க வைத்து வாயை துடைத்து விட்டான்…

அதற்குள் அவன் தட்டில் வைத்திருந்த தோசை ஆறி இருக்கவே, பாட்டி அதை எடுத்து விட்டு சூடாக அவனது தட்டில் வைத்தார்…

“வேண்டாம் வேஸ்டா போயிடும்…” தயங்கிக்கொண்டே உபேந்திரா சொல்ல…

“உங்கள் லெவலுக்கு ஆறின தோசை எல்லாம் கொடுக்கக் கூடாது… இதெல்லாம் உங்களுக்கு வேஸ்ட்ன்னு ஒரு கணக்கா என்ன…?” அவனை வாரியவள், தனக்கு ஒரு தட்டு வைத்து சாப்பிட ஆரம்பித்தாள்…

எனக்கு இதெல்லாம் ஒரு கணக்கு கிடையாது… என்னோட லெவலுக்கு நீ வரவும் முடியாது… ஆனா உங்களுக்கு லெவெலுக்கு வேஸ்ட் வேண்டாம் என நான் நினைக்கிறேன்…” என்று அவள் மூக்கை உடைத்தவன், சாப்பிட்டு எழுந்து விட்டான்…

“பாட்டி நான் குழந்தைகளை கூட்டிட்டு கடைக்கு போயிட்டு வரட்டுமா…” என்று பாட்டியிடம் அனுமதி வேண்ட, ஊருக்கு முன்னால் கிளம்பி இருந்த குழந்தைகளை பார்த்த பாட்டி மறுப்பு சொல்லாமல் சம்மதித்தார்…

“குழந்தைகள் பத்திரம்…!”

“அவங்க என்னோட குழந்தைங்க… கிரிமினல் லாயர் உபேந்திராவோட பிள்ளைகளை தொடுவதற்கு எவனுக்கும் தைரியம் கிடையாது…! என்றவன் அவ்வளவு அக்கறை உள்ளவ

நீயும் வர வேண்டியது தானே…!” என்று அவளை பதிலுக்கு வார…

“இல்ல நான் வரலை… மதியம் சாப்பிட குழந்தைகளை கூட்டிட்டு வந்துடுங்க… வெளியில தேவையில்லாதது வாங்கிக் கொடுக்க வேண்டாம்… அவங்களுக்கு சேராது…”

“எதுவும் சாப்பிடணும்னா, உன் கிட்ட பர்மிஷன் கேட்க சொல்றேன் போதுமா…?” என்றவன் குழந்தைகளை அழைத்துக்கொண்டு காரில் கிளம்பினான்…

பால்கனியில் நின்று அவர்கள் காரில் செல்வதை பார்த்திருந்த ரங்காவுக்கு தனது உயிரையே அவன் பிரித்துக் கொண்டு செல்வதுபோல் தோன்ற, பெருகிய கண்ணீரைத் துடைக்காமல் பார்த்தவண்ணம் நின்றாள்…

காரில் இருந்து எட்டிப் பார்த்த குழந்தைகள் மாடியில் அம்மா நிற்பதை பார்த்து, “அம்மா பை…” என்று கையை ஆட்டி விட்டு சென்றனர்…

# அத்தியாயம் 4

இதுநாள் வரை குழந்தைகள் அவளை விட்டு தனியாக எங்கேயும் சென்றது இல்லை என்பதால், அவளால் அதைத் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை…

மனதுக்குள் ஏதேதோ எண்ணங்கள் தோன்ற, இங்கு இருந்தால் தனக்கு பைத்தியம் பிடித்து விடும் என்று நினைத்தவள் குளித்து உடைமாற்றிக் கொண்டு அலுவலகத்துக்கு கிளம்பினாள்…

“என்ன ரங்கா நீ எங்க கிளம்பிட்ட? ஆபீஸ் போக போறது இல்லன்னு சொன்னே…?”

“அப்படி தான் சொன்னேன்… இங்கே இருந்தா சரி வராது பாட்டி. ஆபீஸ்க்கு போனாலாவது என்னோட மூடு கொஞ்சம் சரியாகும்…!” ரங்காவுக்கு பேத்தியின் மன நிலை நன்கு புரிந்தது… அவள் வெளியே சென்று வரட்டும் என்று நினைத்தவர் “சரி போய்ட்டு வா. மதியம் சாப்பாட்டுக்கு வருவியா…”

“இல்ல பாட்டி வரல… இட்லி இருக்கு இல்ல… அதை எடுத்துட்டு போயிடறேன்…” என்று அதை ஒரு டப்பாவில் போட்டு எடுத்துக்கொண்டு கிளம்பினாள்…

“காலையில் சாப்பிடலை, அப்ப இந்த பாலாவது குடிச்சிட்டு போ…” என்று வலுக்கட்டாயமாக ஒரு டம்ளர் பாலை குடிக்க வைத்து அனுப்பினார்… அவள் தனது ஸ்கூட்டியை எடுத்து கொண்டு கிளம்பும் வரை மாடி பால்கனியில் நின்று பார்த்துக் கொண்டிருந்த பாட்டி ஒரு பெருமூச்சுடன் வீட்டுக்குள் நுழைந்தார்…

சற்று நேரத்தில் அங்கு வந்த வாசு வீட்டில் ஒருவரையும் காணாமல், “என்ன பாட்டி குழந்தைங்க எங்க…?”

“அவங்க அப்பாவோட வெளியில போயிருக்காங்க…!”

“அப்பாவோடவா… அப்ப உபேந்திரா வந்தாச்சா…?”

“ஆமா காலங்காத்தாலேயே வந்தாச்சு…!” என்ற பாட்டி அவன் வந்தது முதல் நடந்ததை விவரித்துவிட்டு, “ரங்கா ஒரே மூட் அவுட்… என்னோட குழந்தைங்க அவன்கிட்ட ஒட்டிக்கிச்சு ஒரே புலம்பல்… அதான் ஆபீசுக்கு போய் இருக்கா… நானும் அங்க போய் கொஞ்ச நேரம் இருந்துட்டு வரட்டுமே சரின்னு சொல்லிட்டேன்…”

அவனுக்கும் ரங்காவின் மனநிலை புரிந்ததால், “இதுல யாரை குறை சொல்வது என்று தெரியல பாட்டி…? அவரைப் பொருத்தவரை அளவில் அவரோட ஆசையும் கரெக்டு தான்.

எந்த மனுஷனுக்கும் தன்னோட குழந்தைகளை பார்க்கணும், பேசணும், கொஞ்சணும்னு ஆசை இருக்காதா…? அதனால அவரை குறை சொல்ல முடியாது…

ரங்காவையும் குறை சொல்ல முடியாது… கஷ்டப்பட்டு பெத்து இத்தனை காலம் வளர்த்த பசங்க, தன்னை விட அப்பா பெருசுன்னு சொல்லும்போது அவளுக்கு வலிக்குது… குழந்தைகளையும் குறை சொல்ல முடியாது. அவங்களுக்கு அப்பா அம்மா ரெண்டு பேருமே தேவை… எந்த குழந்தைக்கும் அம்மாவோட அன்பும், கவனிப்பும் ஒரு விதத்தில் தேவைன்னா, அப்பாவோட துணையும், ஆதரவும் ஒரு ஒருவிதத்தில் தேவை… சின்ன குழந்தைங்க அவங்க புரிஞ்சுக்கிட்ட அளவுக்கு பெரியவங்க புரிஞ்சுக்கலன்னா என்ன பண்றது…?” வாசு புலம்பினான்…

“நீயும் நானும் புலம்பி ஒன்றும் ஆகப் போவதில்லை… அவங்க ரெண்டு பேரும் புரிஞ்சுக்கணும். காலம் அவர்களுக்கு புரிய வைக்கும். ரங்கா விளையாட்டுத்தனமா ஒரு முடிவு எடுத்தா…! அது அவளை மட்டும் சார்ந்ததுன்னு அவ நினைச்சா. அது தப்புன்னு இப்பதான் புரிஞ்சிருக்கு.

இன்னும் அதனோட விளைவுகள் வேற மாதிரி வரும்னு இனிமேல் தான் புரியும். இவ்வளவு நாள் இல்லாத பேச்சு இனி அவளைப் பத்தி கிளம்பும். ஏற்கனவே ஒரு வாரமா பேப்பர்ல

இவங்க ரெண்டு பேர் பற்றிய செய்திதான். அதை இன்னும் முழுசா வாசித்துப் பார்க்கல. இப்ப இத பாத்துட்டு, ரொம்ப தெரிஞ்சவங்க பேசினது பத்தாதுன்னு, இவளை தெரியாதவங்க, எல்லாருமே பேசுவாங்க… அதையெல்லாம் தாங்கிக்கிற பக்குவம் இருந்தாலும், மனசு ஒரு கட்டத்தில் வெறுத்துப் போய் விடும். எனக்கு அதுதான் கவலையா இருக்கு. எல்லாம் பெருமாள் செயல். ஹர்ஷத் என்ன பண்றான்…?"

"அதை சொல்ல தான் வந்தேன். ஹர்ஷத்துக்கு அந்த ஸ்கூல்ல இடம் கிடைச்சிருச்சு. நேத்துதான் தபால் அனுப்பி இருந்தாங்க…!"

"ஓ… அப்படியா சந்தோஷம். இந்த குழந்தைகளுக்கு தான் சீட் தர மாட்டேன்னு சொல்லிட்டாங்க… உன்னோட குழந்தைக்காவது கொடுத்தாங்களே, அந்த மட்டும் சந்தோஷம்…"

"ஆனா எனக்குதான் கஷ்டமா இருக்கு… நம்ம மூணு பேரும் தான் எல்லா குழந்தைகளுக்கும் சீட் கேட்டு அந்த ஸ்கூலுக்கு போனோம். ஆனால் பார்த்திக்கும், பாவனாவுக்கும் சீட்டு கிடையாதுன்னு சொல்லிட்டாங்க… இப்ப ஹர்ஷத்தை மாத்திரம் எப்படி அங்க கொண்டு போய் சேர்கிறது…?"

“அதெல்லாம் நீ யோசிக்காதே… நல்ல ஸ்கூல்ல சீட்டு கிடைச்சிருக்கு. அங்கேயே படிக்க வை. நீ எங்களை மட்டும் யோசிச்சேன்னா அது கீர்த்திக்கு மன சங்கடத்தை கொடுக்கும். எந்த உறவிலேயும் கொஞ்சம் இடைவெளி இருக்கிறது நல்லது. “பாட்டியின் வார்த்தைகள் வாசுவுக்கும் புரிந்தது…

ஸ்கூலில் சேரச் சொல்லி தபால் வந்ததிலிருந்து கீர்த்திக்கு மிகவும் சந்தோஷம். இப்போது வேண்டாம் என்று சொன்னால் அவள் மிகவும் வருத்தப்படுவாள்… “சரி பாட்டி ஹர்ஷத்தை அங்கேயே சேர்த்து விடுகிறேன்…! என்றவன் வீட்டுக்கு கிளம்பினான்.

கோர்ட், கேஸ் என்று ஒரு வாரமாக ரங்கா அலுவலகம் வரவில்லை. சனிக்கிழமை கோர்ட் கிடையாது என்பதால் எல்லோருமே அலுவலகத்தில் தான் வேலை பார்த்துக்கொண்டிருந்தனர். இவள் உள்ளே நுழைந்ததும் ஒருவருக்கொருவர் பார்த்துக்கொண்டு, கண்ணால் பேசியதை அறிந்தும் அறியாமலும், தன் இடத்திற்கு சென்று அமர்ந்தாள்.

சற்றுப் பொறுத்து உள்ளே வந்த சீனியர், ரங்காவை பார்த்ததும், “ரங்கா உள்ள வாம்மா…!” என்று கூறி விட்டு தனது அறைக்குள் சென்றார். பின்னாலேயே ரங்கா சென்றதும், “உட்கார்.” என்றவர் “என்ன ஆச்சு.? ஜட்ஜ்மென்ட் அவருக்கு சாதகமாக

ஆச்சுன்னு தெரியும். நீ அப்ப அவங்க வீட்டுக்குப் போகப் போறியா…?”

“இல்ல சார். நான் போகல. ஆனா அவரே எங்க வீட்டுக்கு வந்துட்டாரா…?” என்று ரங்கா சொன்னதும் ஆச்சரியப்பட்ட பாஷ்யம், “கோடீஸ்வரன்மா, மல்டி மில்லியனர். அவன் உன் வீட்டில்…” என்று இழுத்தவர் “ஆச்சரியமா இருக்கு. உண்மையிலேயே அவருக்கு தன்னோட குழந்தைகள் மேல பிரியம் போல இருக்கு…” என்றார்.

“ஏன் அப்படி சொல்றீங்க…?”

“இல்ல, எனக்கு அவரைப் பற்றி ஓரளவு தெரியும்… டெல்லியிலே இருந்தவர். மேல்தட்டு நாகரிகம். கல்யாணத்து மேல அவ்வளவு நம்பிக்கை கிடையாது… அதனாலேயே தாத்தா கல்யாணம் பண்ண சொல்லியும் இவ்வளவு நாள் பண்ணவே இல்ல… இப்படி குடும்பம் கல்யாணம் இதெல்லாம் நம்பிக்கை இல்லாதவருக்கு எப்படி குழந்தைகள் மேல ஒரு பிடிப்பு வந்தது எனக்கு ஆச்சரியமா இருக்கு…?” என்றார்…

‘அவனும் தன்னைப் போல தானா…?’ மின்னல் போல ஒரு எண்ணம் தோன்றி மறைய, ‘ச்ச நானும், அவனும் ஒண்ணா…?’ என்று நினைத்து தலையைக் குலுக்கிக் கொண்டாள்…

“என்னமா என்ன யோசனை…? அவனும் உன்னைப் போலத்தான் கல்யாணமே வேண்டாம்னு சொன்னான். இப்போ வகையா மாட்டிக்கிட்டான்…!” என்று தன் போக்கில் பாஷ்யம் சொல்ல ரங்கா திடுக்கிட்டாள்.

“ஆனா இது உனக்கு பிரச்சினையாகுமேம்மா…?”

“ஆமா அது தான் எனக்கும் யோசனையா இருக்கு… ஆனால் அவரோட முடிவு ஒண்ணு குழந்தைகள் கூட நான் இருக்கணும். அல்லது குழந்தைகள் என்கிட்ட இருக்கணும், என்பதுதான். என்னால குழந்தைகளை விட்டு விட்டு எப்படி இருக்க முடியும்…? எனக்கு காலையில் இருந்து ஒண்ணுமே ஓடல. அதான் ஆபீசுக்கு கிளம்பி வந்துட்டேன்…” உண்மையை ஒளிக்காமல் சொன்னாள்.

“சரி வருத்தப்படாதம்மா. எந்த பிரச்சனைக்கும் ஒரு தீர்வு உண்டு. அது உனக்கும் கிடைக்கும். அதுவரைக்கும் கொஞ்சம் பொறுமையாக போ…!” என்றவர் சற்று நேரம் அலுவலக விஷயங்களை பேசி அவளை அனுப்பி வைத்தார்…

தன் இருப்பிடத்திற்கு வரவும் மதிய உணவு வேளைக்கு என்று மற்றவர்கள் வெளியில் சென்று இருக்க, காலையிலேயே சாப்பிடாததால் அவளுக்கும் பசித்தது. தன்னுடைய டிபன் பாக்ஸ்

எடுத்துக்கொண்டு டைனிங் ஹால் நோக்கி சென்றவள், அங்கு காலியாக இருந்த ஒரு சேரில் உட்கார்ந்து சாப்பிட ஆரம்பித்தாள்.

இவள் வரும்வரை ஜாலியாக பேசி அரட்டை அடித்துக் கொண்டிருந்தவர்கள், இவள் வந்ததும் அமைதியாக, அவளுக்கு ஒரு மாதிரியாக இருந்தது. ‘என்னவோ வேண்டுமென்றே அவர்கள் தன்னை இரிடேட் செய்வது போல் தோன்ற, வேகமாக உண்டு முடித்தவள், கையை கழுவிவிட்டு தனது இருப்பிடத்திற்கு வந்து உட்கார்ந்து வேலை செய்ய ஆரம்பித்தாள்… அதன் பிறகு அவளது கவனம் முழுவதும் கம்ப்யூட்டரில் குறிப்புகள் எடுப்பதும், மற்றும் பைல்கள் பார்ப்பதும் என்று பொழுது ஓடிற்று…

மாலை ஆனதோ, மற்றவர்கள் எழுந்து சென்றதோ எதுவுமே கவனமில்லாமல், வெறித்தனமாக வேலையை மட்டும் கவனித்துக் கொண்டிருந்த அவளை மற்றவர்கள் கவனித்தாலும், அதை அவளிடம் அறிவுறுத்த யோசித்துக்கொண்டு, சனிக்கிழமை என்பதால் சீக்கிரமே சென்றுவிட்டனர்…

இரவு ஏழு மணி ஆகும் போதுதான் ரங்காவுக்கு தான் அதிக நேரம் சுற்றுப்புறத்தை கவனிக்காமல் இருப்பது புரிந்தது. நிமிர்ந்து பார்த்தாள், ஒருவரையும் காணவில்லை. காபி குடிக்காமல் இருந்தது தலைவலிக்க, கம்ப்யூட்டரை சட்டவுன் செய்து எல்லாவற்றையும் எடுத்து வைத்துவிட்டு கிளம்பினாள்…

அவளது இருப்பிடத்திற்கு செல்ல ஒரு மணி நேரம் ஆகும். வண்டி ஓட்டிக் கொண்டு செல்லும் மனநிலை இல்லாததால் பஸ்சில் சென்று விடலாம் என்று நினைத்துக் கொண்டு அலுவலகத்தை விட்டு வெளியே இறங்கினாள். அலுவலகத்தில் இருந்து சற்று தூரத்தில் பஸ் ஸ்டாப்… அதற்கு நடக்க ஆரம்பிக்க ஒரு நூறு அடி தூரம் சென்றதும் அவளை உரசுவது போல் ஒரு கார் வந்து நிற்க, கதவு திறந்து வாசு, அவளிடம் “உள்ள ஏறு ரங்கா…” என்றான்.

அவள் மவுனமாக ஏறி அமர்ந்ததும் காரை செலுத்திக் கொண்டே, “எத்தனை தடவைதான் உனக்கு போன் பண்றது…? ஃபுல் ரிங்க் போகுது. நீ அட்டென்ட் பண்ணவே இல்ல… போன எங்க வெச்ச…?” கோபத்துடன் கேட்டான்…

அப்பொழுதுதான் கைப்பையில் இருந்து செல்போனை எடுத்துப் பார்த்தவள் அதில் ஏகப்பட்ட மிஸ்டுகால் இருக்க, வேலை செய்வதற்காக தான் சைலன்ட்டில் போட்டது நினைவுக்கு வந்தது.

பாட்டியும், வாசுவும் மாறி, மாறி அழைத்து இருப்பது தெரிந்தது… இடையில் இன்னொரு புதிய நம்பரும் தெரிய அது யாரோடது என்று யோசித்தாள்…

“சாரி வாசு. வேலைக்கு இடஞ்சலா இருக்கும்னு சைலன்ட்ல போட்டேன் கவனிக்கல. ஆனால் தேங்க்ஸ்டா. ஒரே தலை வலி. எப்படி வண்டி ஓட்டுவது நினைச்சேன்…! கரெக்டா நீ வந்துட்டே…!”

அவள் தலைவலி என்று சொன்னதும், ஹோட்டல் ஒன்றில் நிறுத்தி, “இறங்கு, காபி குடிச்சிட்டு போகலாம்…”

“இல்லடா இப்போ பரவாயில்லை…”

“இந்த பார்… கண்டிப்பா நீ சரியா சாப்பிட்டு இருக்க மாட்ட. உள்ள வா…” என்று வற்புறுத்தி அழைத்து சென்று காபி வாங்கிக் கொடுத்தான்…

காலையில் உபேந்திரா வந்ததிலிருந்து அவளது குழந்தைகள் அவளை விட்டு ஒதுங்கி போக, ஏதோ ஒரு தனிமை உணர்வு அவள் மனதை அழுத்த, அதை வாய்விட்டு யாரிடமும் சொல்ல முடியாமல் மனதுக்குள் மறுகிக் கொண்டு இருந்தவள், வாசுவின் அன்பில் உடைந்தாள்.

கண்ணீர் கரை கட்ட, ஹோட்டலில் நாலு பேர் பார்க்க அழுவது அசிங்கம் என்று, கண்ணை சிமிட்டி கண்ணீரை உள்ளே இழுத்துக்கொண்டு, காபியை குடித்தவளைப் பார்த்து முதன் முறையாக வாசுவுக்கும் கண்கலங்கிற்று… அவன் அறிந்த ரங்கா

எதற்கும் அழ மாட்டாள். அவளது தைரியமே அவளது அடையாளம், அவளது பலம்…

வைதேகியும் கேசவனும் அவளை ஒதுக்கி வைத்து வருஷங்கள் மூன்று ஆயிற்று. இன்று வரை அதற்காக அவள் ஒரு சொட்டு கண்ணீர் விட்டது இல்லை கலங்கியதும் இல்லை. பாட்டி மட்டுமே உலகம் என்றிருந்த ரங்காவுக்கு, குழந்தைகள் பிறந்ததும் குழந்தைகள் மட்டுமே உலகமாக இருந்தது. குழந்தைகளுடைய முழு அன்பும் அவளுக்கு கிடைத்தது…

அந்த ஒன்றிற்காக எத்தனையோ பேச்சுக்கள், பார்வைகள் அனைத்தையும் தாண்டி, அவர்களை பெற்றெடுத்து அவர்களுக்காகவே வாழ்ந்து கொண்டு இருப்பவள். திடீரென்று இன்னொருவர் வந்து குழந்தைகளுக்கு உரிமை கொண்டாடும் போது, அவளால் தாங்க முடியாது போயிற்று.

“ஏய் ரங்கா, நீ என்ன சின்ன குழந்தையா? இதைவிட எத்தனையோ பெரிய விஷயத்தை எல்லாம் தூசி மாதிரி தட்டி இருக்கே… இதுவும் சரியாப் போகும்… எத்தனை நாளைக்கு அவன் நம்ம வீட்டில் குப்பை கொட்ட முடியும்…? அவனால நம்ம மிடில் கிளாஸ் வாழ்க்கை எல்லாம் அட்ஜஸ்ட் பண்ணிட்டு போக முடியாது… தன்னால் துண்டை காணோம் துணியை காணோம்

கிளம்பிப் போவான்...” என்று அவளை சமாதானப்படுத்தி வீட்டிற்கு அழைத்து வந்தான்...

வீட்டிற்குள் நுழையும் போது மணி ஒன்பது ஆயிற்று. மதியமே அந்த குழந்தைகள், சாயங்காலம் எப்பொழுதும் ரங்கா வரும் நேரம் தெரிந்து அவளைத் தேட ஆரம்பித்தனர். அதிலிருந்து நொடிக்கு ஒரு தடவை பாட்டியிடமும், அப்பாவிடமும் அம்மா எப்ப வருவாங்க? அம்மா எங்க பாட்டி? அம்மா எங்க அப்பா? என்ற கேள்விகளுக்கு பாட்டியும், உபேந்திராவும் பதில் சொல்லி களைத்து போயினர்...

பாவனா அழவே ஆரம்பித்து விட்டாள். இரண்டு குழந்தைகளும் சாப்பிட மாட்டேன் என்று அடம் பிடிக்க ஒருவழியாக உபேந்திரா அவர்களை தாஜா செய்து சாப்பிட வைத்தான். முதன் முறையாக அவனுக்கு ரங்கா மேல் கடுமையான கோபம் வந்தது.

என்னதான், தான் வந்தது பிடிக்காமல் இருக்கட்டுமே அதற்காக மூன்றரை வருடம் உயிராய் நினைத்த குழந்தைகளை, எண்ணிப் பார்க்காமல் தன் கோபமே பெரிது என்று வெளியே சென்ற ரங்காவை அவன் வெறுத்தான்...

“ பாட்டி எப்பவுமே கோபம் வந்தா இப்படித்தானா...?”

“இல்ல தம்பி. இப்படி ஒரு நாளும் நடந்துக்க மாட்டா. எங்க போனாலும் சொல்லிட்டு தான் போவா. இன்னைக்கு இத்தனை போன் பண்ணி பாத்துட்டேன்… எடுக்க மாட்டேங்கறாளே…?” அவர் தன் பங்குக்கு புலம்ப…

“நீங்க அவளுக்கு அதிகமாக செல்லம் கொடுத்துட்டீங்க… காலம் கெட்டு கிடக்கு. ராத்திரி பெண்கள் தனியா வர்றது அவ்வளவு சேப் இல்ல. இதெல்லாம் அவளுக்கு நீங்க சொல்லலையா…?” என்று வெளியுலகம் தெளிந்தவனாய் அவன் பாட்டியைச் சாட, அவன் கூற்றில் இருந்த உண்மை பாட்டியை மௌனமாக இருக்க செய்தது.

தற்செயலாக ரங்காவை பார்க்க வந்த வாசு நிலைமையைத் தெரிந்துகொண்டு உடனே அவளை அழைத்து வர கிளம்பிவிட்டான்…

உள்ளே வந்தவள் குழந்தைகள் தூங்கி விட்டதையும் பாட்டி கோபமாக இருப்பதையும் கவனித்து, “ஐ அம் சாரி பாட்டி. நீங்க போன் பண்ணப்ப நான் கவனிக்கல. போன் சைலன்ட்ல இருந்தது. குழந்தைங்க என்ன ரொம்ப தேடினாங்களா…?” என்று கேட்க…

“அவங்க குழந்தைங்க, தேடத்தான் செய்வாங்க. உன்னை மாதிரி வளர்ந்திருந்தா அவங்களுக்கும் ஈகோ வந்திருக்கும்

அப்படி என்ன உனக்கு கோபம்...? எந்த விதத்திலாவது நான் உன்ன டிஸ்டர்ப் பண்ணிட்டேனா...? என்னோட குழந்தைகளோட கொஞ்ச நேரம் வெளியில் போயிட்டு வந்தேன். இது ஒரு இமாலய குத்தமா...? உன் கிட்ட சொல்லிட்டு தானே கூட்டிட்டு போனேன். மதியம் சாப்பிட வீட்டுக்கு கூட்டிட்டு வந்திருங்கன்னு, நீதான சொல்லி அனுப்பினே... அப்புறம் மதியம் நீ வீட்ல இல்லாம எங்க போன...?” உபேந்திரா இருக்கிற கோபத்தில் அவளை குதறி எடுத்தான்.

மதியம் குழந்தைகள் வரும்போது நான் இல்லாதது தப்புதான்... ஆனால் நான் எங்கே போகிறேன், எப்ப வாரேன், கேட்கிற அதிகாரம் உங்களுக்கு கிடையாது... இனி இதுமாதிரி குழந்தைகள் விஷயத்தில் நான் தப்பு பண்ண மாட்டேன், அவ்வளவுதான்...” என்று மூஞ்சியில் அடித்த மாதிரி பதில் சொன்னவள் தனது அறைக்குள் சென்று விட்டாள்.

“பாத்தீங்களா பாட்டி... எங்க போன? தனியா போயிட்டு வந்து இருக்கேயேன்னு ஒரு அக்கறையில கேட்டது தப்பா. உடம்புல புல்லா திமிரு. அதனாலதான் இப்படி இருக்கா...” என்று பாட்டியிடமே அவளைப் பற்றி கரித்தவன், தனது அறைக்குள் சென்று கதவை சாத்திக் கொண்டான்.

இவர்கள் இருவரும் தங்களது அறைக்குள் நுழைந்து கொண்டதும் தலையில் கை வைத்து கொண்டு உட்கார்ந்த பாட்டியிடம் வாசு, "நீங்க சாப்பிட்டு படுங்க... இதுக்கெல்லாம் கவலைப் படாதீங்க... நாரதர் கலகம் நன்மையில் தான் முடியும் என்கிற மாதிரி, இந்த உபேந்திராவோட கலகமும் ஒருவேளை நன்மையில் முடியலாம்..." என்று கூறி பாட்டியை வற்புறுத்தி சாப்பிட வைத்து, ஹாலில் படுக்க வசதி செய்து கொடுத்து விட்டு பின்னரே வாசு சென்றான்...

மறுநாள் காலை கண்விழித்ததுமே குழந்தைகள் இருவரும் தங்கள் பக்கத்தில் படுத்திருந்த அம்மாவை பார்த்துவிட்டு, "அம்மா..." என்று அழைத்தனர்...

அவர்களின் அழைப்பில் கண்விழித்த ரங்கா, "பார்த்தி, பாவனா..." என்று அணைத்துக் கொண்டாள்...

"எங்கம்மா போனீங்க...? எங்களுக்கு ரொம்ப பயமா இருந்தது...? எங்கள விட்டுட்டு ஏன் போனீங்க...?" என்று பாவனா மறுபடியும் அழ ஆரம்பிக்க...

"ஆபிசுக்கு தான் போயிருந்தேன். கொஞ்ச லேட் ஆயிடுச்சு உங்ககிட்ட சொல்ல மறந்துட்டேன். அம் சாரி..."

“போங்கம்மா ஆபீஸ் போனா நீங்க சாயங்காலமே வந்துடுவீங்கல்ல. நேத்து ஏன் லேட்...?”

“அது அம்மாக்கு ஆபிஸ்ல நிறைய வேலை இருந்தது. அதான் சாரி சொல்லிட்டேன்ல... இன்னைக்கு நம்ம எல்லாரும் விளையாடலாம் ஓகேவா...”

“ஓகே... ஆனா அப்பா சேர்த்துக்கலாமா...” மெல்ல பார்த்தி கேட்டான்...

குழந்தைகள் இருவரும் தன் முகத்தையே பார்ப்பது அறிந்து, அரை மனதாக “ம்ம்...” என்று சொன்னாள்...

முதல்ல சமத்தா எந்திருந்துச்சு பல் துலக்கி பால் குடிச்சிட்டு, அப்புறம் விளையாடுறது பத்தி யோசிக்கணும்...” என்று கூறி அவர்களை பல் துலக்கி அப்படியே குளிக்க வைத்து டிரஸ் பண்ணி வெளியே அழைத்து வந்தாள்.

பெட்ரூமை விட்டு வெளியே வந்ததும் நேராக உபேந்திராவின் அறையைத் திறந்து கொண்டு உள்ளே சென்று அப்பாவை தேடின. அவனை அங்கு காணாததால் வெளியே வந்து பாட்டியிடம் “பாட்டி அப்பா எங்கே...?” என்று கேட்டது பாவனா...

“அப்பா வாக்கிங் போய் இருக்காங்க. இப்ப வந்துருவாங்க நீங்க சமத்தா பால் குடிங்க…” என்று கலந்து வைத்திருந்த பாலை குழந்தைகள் கையில் பாட்டி கொடுத்தார்.

வாங்கி கடகடவென்று குடித்துவிட்டு, கப்பை மேஜையில் வைத்துவிட்டு இரண்டும் பால்கனிக்கு சென்றேன் அப்பா வருகிறாரா என்று பார்த்தனர். “என்னடா இங்க வந்து நிக்கிறீங்க…?”

“இல்லம்மா, அப்பா வர்றாங்களான்னு இங்கே இருந்து பார்த்தால் தெரியும் இல்ல, அதுக்காக வந்தோம்…? நேற்று இங்க நின்னுதாம்மா நீங்க வர்றீங்களான்னு பாத்திட்டே இருந்தோம்…” என்று பார்த்தி கூறினான்…

முதல் முறையாக குற்றம் செய்த உணர்வு ரங்காவுக்கு தோன்றிற்று. பேச்சை மாற்றி பிள்ளைகளை உள்ளே அழைத்து வந்து அவர்களுடன் தரையில் அமர்ந்து, விளையாட்டுச் சாமான்களை வைத்து விளையாட ஆரம்பித்தாள்…

சற்று நேரத்தில் வாக்கிங் போயிட்டு உள்ளே வந்த உபேந்திராவை பார்த்ததும் குழந்தைகள் ஆசையோடு அவன் பக்கம் ஓடினர். “அப்பா” என்று இரண்டும் காலை கட்ட, இருவரையும் இரண்டு கைகளில் தூக்கிக் கொண்டவன், “பார்த்தி,

பாவனா குட்டி. ரெண்டு பேரும் இன்னைக்கு குளிச்சாச்சா, ப்ரெஷ்ஷா இருக்கீங்க…! அப்ப கொஞ்சம் கீழ இறங்குங்க… அப்பா வாக்கிங் போயிட்டு வந்திருக்கேன். வியர்வை, பேட் ஸ்மெல் இருக்கும். நானும் குளிச்சிட்டு வரேன்…” என்று அவர்களைக் கீழே இறக்கி விட்டான்…

அதற்குள் பாட்டி காபி கொண்டு வந்து கொடுக்க, அதை வாங்கி குடித்துக்கொண்டே, டிவியில் ஹெட்லைன்ஸ் பார்க்க ஆரம்பித்தான்… ரங்கா எழுந்து பாட்டிக்கு உதவியாக கிச்சனுக்குள் வேலை செய்யச் சென்றுவிட்டாள். குழந்தைகள் இருவரும் கீழே உட்கார்ந்து விளையாட ஆரம்பிக்க அவர்களிடம் பைவ் மினிட்ஸ் அப்பா வந்திடுவேன்…” என்று கூறி சொன்னது போல் ஐந்து நிமிடத்தில் குளித்துவிட்டு வந்தான்.

“அம்மா, அப்பாவும் வந்தாச்சு வாங்க விளையாடலாம்…” என்று பாவனா கிச்சனுக்குள் வந்து ரங்காவின் சுடிதாரை பிடித்து இழுக்க, “சாப்பிட்டு விளையாடலாம். எல்லாரும் டேபிளுக்கு வாங்க…” என்று அவளை அனுப்பி வைத்தாள்.

பாவனா உபேந்திராவிடம் சென்று, “வாங்கப்பா சாப்பிட்டுட்டு அம்மா விளையாடலாம்னு சொல்லி இருக்காங்க, வாங்க, பார்த்தி நீயும் வா” என்று இருவரையும் இழுத்துக் கொண்டு வந்து விட்டது…

அடுத்த ஒரு மணி நேரம் இவர்கள் இருவரும் மாற்றி மாற்றி குழந்தைகள் இருவரும் என்ன சொன்னார்களோ அதை செய்ய என்று சலிக்காமல் அவர்களுடன் தங்கள் நேரத்தை செலவிட்டனர். இடையிடையே இருவருக்கும் ஏதாவது ஒரு பேச்சு வந்தாலும் அதை காட்டிக்கொள்ளாமல் முறைப்போடு ரங்கா ஒதுங்கிக் கொள்ள, 'போடி பெரிய இவளா நீ…' என்று உபேந்திராவும் அமைதியாக முறைத்தான்…

பதினோரு மணிவாக்கில் குழந்தைகளிடம் "அப்பா வெளியில போயிட்டு சாயங்காலமா வருவேன்… நல்ல பசங்களா இருக்கணும் ஓகே வா…!" என்று அனுமதி வேண்ட…

"அப்பா எங்க போறீங்க…?"

"பாவனா போகும்போது எங்க போறீங்கன்னு கேட்கக் கூடாது…!" பாட்டி சொல்லிக் கொடுத்தார்…

"ஆபீஸ் வேலையா வெளிய போறேன். சாயந்தரம் வரும்போது சாக்லேட் வாங்கிட்டு வரேன். இப்ப என்னை விடுவீங்களா…?" என்று அவன் டீல் பேச…

"இப்பவே லஞ்சத்தை பழக்காதீங்க…!" சுள்ளென்று ரங்கா கூறினாள்.

“இதுக்கு பெயர் லஞ்சம் கிடையாது. அப்பா குழந்தை களுக்கு கொடுக்கிற பாசம், அன்பு. இந்த வேலையைச் செய்ய உனக்கு இது வாங்கி தரேன் சொன்னாதான் அதற்கு பெயர் லஞ்சம்…” என்று விளக்கம் அளித்தவன், “அவங்கள லஞ்சம் கொடுத்து கெடுக்கணும்னு எனக்கு அவசியம் இல்லை. என் குழந்தைகள் மேல எனக்கு அக்கறை இருக்கு…” என்று அவளுக்கு ஒரு கொட்டு வைத்து விட்டு வெளியில் சென்றான்.

# அத்தியாயம் 5

திங்கட்கிழமை காலை குழந்தைகளை ரங்கா பள்ளிக்கு கிளப்பிக் கொண்டு இருந்தாள். வாக்கிங் போய்விட்டு திரும்பி வந்த உபேந்திரா, உடனே தானும் குளித்து தயாராகி குழந்தைகளுடன் சாப்பிட அமர்ந்தான்.

‘இவனும் சீக்கிரமே எங்கே கிளம்பிட்டான்…?’ கேள்வி மனதுக்குள் எழுந்தாலும், ‘இவன்கிட்ட போய் பேசவா’ என்ற எண்ணம் தலைதூக்க குழந்தைகளுக்கு சாப்பாடு ஊட்டி கொண்டு இருந்தாள்.

“நீயும் சாப்பிடு… ஸ்கூலுக்கு போயிட்டு வர நேரம் ஆகும்…!” என்று உபேந்திரா அவளைப் பார்த்து மொட்டையாக சொல்லவும், ‘அதிகாரத்தை பாரு… என்னமோ கட்டுன புருஷன் மாதிரி…’ என்று உள்ளுக்குள்ளே கடிந்து கொண்டாள்.

“நான் ஸ்கூலுக்கு போயிட்டு வந்து தான் சாப்பிடுவேன்… இப்ப நேரம் ஆயிடுச்சு. ஸ்கூல் ஆரம்பிச்சிடும்…” என்றாள் வேண்டுமென்றே…

“நம்ம டீசி தான் வாங்க போறோம்… அதனால லேட் ஆனா பரவாயில்ல சாப்பிட்டுட்டு கிளம்பு…” என்றவனை அதிசயமாக பார்த்தாள்…

“ஹலோ என்ன அதிகாரம் தூள் பறக்குது…? கஷ்டப்பட்டு சீட்டு வாங்கி ஸ்கூல்ல சேர்த்து இருக்குது நானு. இன்னைக்கு வந்துட்டு நிமிஷமா டிசி வாங்க போறேன்னு, கூலா சொல்றீங்க…? என்ன நினைச்சுட்டு இருக்கீங்க மனசுல…?” என்றாள் கொதிப்புடன்.

“நான் சரியாதான் நினைச்சுட்டு இருக்கேன். உனக்கு தான் நான் யார் என்கிற நினைப்பு அப்பப்ப மறந்து போகுது… இதைவிட நல்ல ஸ்கூல்ல அவங்க படிக்கிறதுக்கு நான் ஏற்பாடு பண்ணிட்டேன். இப்ப நீ வர்றியா அல்லது நானே கூட்டிட்டு போயி டிசி வாங்கி, அந்த ஸ்கூல்ல சேர்த்துடட்டுமா…?” என்று அவன் அலட்டிக் கொள்ளாமல் பதில் சொல்ல…

அவளுக்கு அப்போது தான் அவன் சொன்னதன் விளக்கம் புரிந்தது. “என் கிட்ட ஒரு வார்த்தை கேட்காமல் நீங்க எப்படி முடிவெடுக்கலாம்…?” என்று கடுப்புடன் ரங்கா கேட்டாள்.

“அதான் இப்ப சொல்லிட்டேனே…? நேரமாகுது கிளம்பு…” அவள் கிளம்பியாக வேண்டும் என்ற தொனி அதில் இருக்க,

அந்தக் குரலை அலட்சியம் செய்ய முடியாமல் முணுமுணுத்துக் கொண்டே தனது அறைக்குள் சென்று கதவை ஓங்கி சாத்தினாள்…

கதவை ஓங்கி சாத்தியதும், அந்த சத்தத்தில் சற்றே முகம் சுளித்தவன், பார்த்தி அவனை “அப்பா…”என்று அழைக்க, அந்த குரலில் கலைந்தவன், “என்னடா, அப்பா உங்களை இதைவிட பெரிய ஸ்கூல்ல சேர்த்து விடுறேன். படிக்கிறீங்களா…?” என்று இருவரிடமும் கேட்க…

“அந்த ஸ்கூல்ல டீச்சர் அடிப்பாங்களா…?” என்று பாவனா கேட்டாள்…

குழந்தையை எடுத்து தன் மடிமேல் இருத்திக் கொண்டவன், “பாவனா குட்டிய யாருமே அடிக்க மாட்டாங்க. அங்க உள்ள டீச்சர் எல்லாருமே நல்லவங்க. நீங்க சமர்த்தா இருந்தா அவங்க உங்களுக்கு நிறைய பாடம் சொல்லிக் கொடுப்பாங்க. என்ன போகலாமா…?”

“போகலாம்பா…” என்று கோரசாக இருவரும் சொன்னனர்… ஐந்தே நிமிடத்தில், வழக்கம்போல் கையில் கிடைத்த காட்டன் சுடிதாரை எடுத்து மாட்டிக்கொண்டு வந்தவளைப் பார்த்து, “என்ன இது.?” அவளது உடையை காட்டி நக்கலாக கேட்டான்…

“ஏன் பார்த்தா கண்ணு தெரியல, சுடிதார் தான் போட்டு இருக்கேன்… என் டிரஸ் பற்றி நீங்க ஒண்ணும் சொல்ல வேண்டியது இல்லை…!” என்றாள் விரைப்பாக…

“உன்ன பாத்தா இந்த குழந்தைகளோட அம்மா மாதிரியா இருக்கு. ஆயா மாதிரி இருக்கு. போய் கொஞ்சம் நல்ல டிரஸ் பண்ணிட்டு வா…!” என்று அவன் கடுப்புடன் சொல்ல…

“என்னை யாரும் இதுவரை அந்த மாதிரி கேட்டது இல்லை…!” என்று பெருமையாக ரங்கா சொன்னாள்…

“உன்ன போய் புத்திசாலின்னு நினைச்சேனே. இதை யாராவது நேரடியா சொல்லிட்டு இருப்பாங்களா. மனசுக்குள்ள தான் நினைப்பாங்க… நமக்குதான் தெரியணும். ஆள் பாதி ஆடை பாதின்னு கேள்விப் பட்டதில்லை… அப்பான்னு நானும், அம்மான்னு நீயும் போய் இந்தக் கோலத்துல நின்னா, அவங்க என்ன நினைப்பாங்க…” என்று எரிச்சல் பட்டான்…

“ஓ.நீங்க அப்பாவாகவும், நான் அம்மாவாகவும் இருப்பதால் உங்களுக்கு சமமா நான் டிரஸ் பண்ணலேன்னா, உங்க பிரஸ்டீஜ் குறைந்து விடுமா என்ன…?” ரங்கா குத்தலாக வினவ…

“எனக்கு மட்டும் இல்ல… என்னோட குழந்தைகளுக்கும் அது கவுரவக் குறைச்சல் தான்…!” என்றவன் நான் குழந்தைகளோட கீழ

போறேன். பத்து நிமிஷத்துல கீழ வா…" என்று ஆர்டர் போட்டு விட்டு குழந்தைகளை அழைத்துக் கொண்டு சென்று விட்டான்…

"பெரிய மகாராஜா உத்தரவு போடறான்…" பாட்டியிடம் பொருமிக் கொண்டே போய் டிரஸ் மாற்றி விட்டு வந்தாள். பார்த்துக் கொண்டிருந்த பாட்டி, 'இவன்தான் சரி இவளுக்கு' என்று மனத்துக்குள் நினைத்துக்கொண்டார்.

குழந்தைகளும் இவளும் பின்பக்கம் ஏறிக்கொள்ள உபேந்திரா காரை எடுத்தான். பள்ளி மிக அருகில் இருந்ததால் பத்து நிமிடத்தில் அதை அடைந்து விட்டனர். நேராக பிரின்ஸ்பல் அறைக்கு குழந்தைகளுடன் சென்றவன், "எக்ஸ்கியூஸ் மீ மேடம். அம் எ பாதர் ஆப் பார்த்தா அன்ட் பாவனா…" என்று சொல்ல, பிரின்ஸ்பால் அவனை எதிரே இருந்த நாற்காலியில் அமரச் சொன்னார்.

"சொல்லுங்க சார்…"

"நீங்க தப்பா நினைக்கலேன்னா, குழந்தைகளோட டிசியை வாங்கிட்டு போக தான் நான் வந்திருக்கேன்…" என்று சொன்னவனை பிரின்சிபால் மேடம் பார்த்தார். அவன் தோரணையும், பேச்சும், உடையும் அவனது செல்வச் செழிப்பை பறைசாற்ற, அவர்கள் நிச்சயம் வேறு பள்ளியில் இந்த

குழந்தைகளை சேர்க்க முடிவு செய்திருப்பார்கள் என்று புரிந்து கொண்டார்.

“குழந்தைகளை சேர்க்கும் போது அவங்க அம்மா உங்களை பத்தி எதுவும் சொல்லவே இல்லையே…!”

“எஸ் மேம். நீங்க சொல்றது கரெக்ட் தான். இப்பதான் எனக்கே தெரியும். அதைப்பத்தி நான் பேச விரும்பல. நீங்க பீஸ் எதுவும் ரிட்டன் தர வேண்டாம். டிசி மட்டும் கொடுத்தால் போதும்…!” அவர்களுக்கு என்ன தேவையோ அதை மட்டும் தெளிவாகப் பேசினான்.

இதற்கு மேல் இவனிடம் விஷயம் வாங்க முடியாது என்று தெரிந்து கொண்டவர், தனக்கு நஷ்டம் எதுவுமில்லை என்பதால் பத்து நிமிடங்களில் குழந்தைகளின் டிசியை கையில் தந்து விட்டார்.

அடுத்த அரை மணி நேரத்தில் குழந்தைகளை அழைத்துக்கொண்டு அவன் சென்ற இடம் முதன் முதலில் ரங்கா குழந்தைகளுக்காக இடம் கேட்ட பள்ளி. சென்னையிலேயே முக்கியமான பள்ளிகள் என்று குறிப்பிடப்பட்ட பள்ளிகளில் ஒன்றான, அந்தப் பள்ளியில் இவர்கள் நுழைந்த பத்து நிமிடத்தில் குழந்தைகள் சேர்க்கப்பட்டனர்…

“சாரி சார், உங்க குழந்தைங்கன்னு தெரியாது. மேடம் சொல்லவே இல்ல. சொல்லி இருந்தா நாங்க முதலிலேயே சீட்டு கொடுத்திருப்போம்…” அந்த பிரின்ஸ்பால் இவனிடம் குழைந்தார்.

அதற்கு பதில் சொல்லாமல் தன் காரியத்திலேயே கண்ணாக அப்ளிகேஷன் பார்மை ஃபில் செய்து, பெற்றோர் என்ற இடத்தில் கையெழுத்து போட்டு அவளிடம் கொடுத்து நீயும் போடு, என்று சொல்லி பிரின்ஸ்பால் கையில் கொடுத்தான்.

அடுத்த நிமிடம் அவர் மணி அடிக்க அங்கு வந்த கிளார்க்கிடம், இந்த குழந்தைகளுக்கு அட்மிஷன் போட்டு விடுங்க…” என்று கூறி அவனிடமிருந்து பணத்தை வாங்கி அவரிடம் கொடுத்தார்.

குழந்தைகளுக்கு வேண்டிய யூனிபார்ம், மற்றும் புத்தகங்கள் பற்றி விசாரித்து, புத்தகத்தை பள்ளியிலேயே வாங்கி கொண்டு நேராக கடைக்கு சென்றனர். யூனிஃபார்ம் எடுத்து தைக்க கொடுத்த பின்பே வீட்டுக்கு அவர்களை அழைத்து வந்தான்.

“அப்பா ஸ்கூலுக்கு போக வேண்டாமா…?” என்று குழந்தைகள் அவனிடம் கேட்டனர்.

“நாளையிலிருந்து போகலாம். இன்னைக்கு உங்களுக்கு யூனிஃபார்ம் ரெடியாயிடும். புக்ஸ் வாங்கிட்டு வந்தாச்சு. எல்லாம்

அட்டை போட்டு நாளைக்கு நீங்க ஸ்கூலுக்கு போய் விடலாம்… அப்பா இப்ப ஆபீஸ் போக போறேன். நீங்க ரெண்டு பேரும் சமத்தா பாட்டி கிட்ட இருங்க…”

“அப்ப, அம்மா வீட்ல இருப்பாங்களா…?” என்று பார்த்தா கேட்க, குழந்தைகளோடு சேர்த்து அவனும் அவள் முகம் பார்த்தான்.

“நானும் ஆபிஸ் போயிடுவேன். நீங்க ரெண்டு பேரும் இருங்க. அதான் வேணி ஆன்ட்டி வருவாங்கல்ல…”

“புக்ஸ் எப்பம்மா அட்டை போடுவது…?”

“நான் நைட் வந்து பண்ணி தரேன்டா செல்லம்…”

“தேவை இல்லை. என் கார்லதான இருக்கு போற வழியில அட்டை போடுறதுக்கு ஒரு கடை இருக்கு. போகேல கொடுத்து ஈவினிங் நான் வாங்கிட்டு வரேன்…” என்று பதில் அளித்தான்.

“ம்ம், பணத்திமிர்…” ரங்கா உதட்டை சுழித்தாள்.

“நீ வேலைக்கு போயிட்டு வந்து டயர்டா இருப்ப… இத்தனை புக்ஸும் அட்டை போடணும்னா அதுக்கு நீ கஷ்டப் படணும். வேண்டாம் என்று தான் வெளியில் கொடுத்து வாங்கிட்டு வரேன்னு சொல்றேன். இதுல எங்க இருந்து பணத்திமிர் வந்தது…? எனக்கு

அது ரொம்ப ஈஸியான விஷயம். ஒருத்தருக்கு கஷ்டமான விஷயம் இன்னொருத்தங்களுக்கு ஈசியா இருந்தா, அதை தப்பா நினைக்க கூடாது. அது அவங்க அவங்க கெப்பாசிட்டின்னு நினைக்கனும்...!" அவனது விளக்கம் மிகவும் சரியாக இருந்தது.

'தங்களுடைய அனாவசிய செலவு, அவனுக்கு தேவையான செலவு...' என்று அவன் சொல்வது புரிந்தது.

"நான் போகும்போது உன்னை சார் ஆஃபீஸ்ல இறக்கி விட்டு விடவா... உன் ஆபீஸ் தாண்டி தான் என் ஆஃபீஸ்க்கு போகணும்...!"

"வேண்டாம் நானே போய்க்குவேன்..." என்றாள் வீம்பாக.

"உன்னோட வண்டி ஆபீஸ்ல தான் இருக்கு. அப்புறம் எப்படி போவ...?"

"நான் பஸ்ஸில் போய்க்கிறேன் நீங்க போங்க..." என்றவள் தனது அறைக்குள் போய் விட, தோள்களை குலுக்கி விட்டு பாட்டியிடம் சொல்லிவிட்டு கிளம்பினான்.

'சரியான சண்டிராணி, எதுக்காவது அடங்குறாளா, நான் என்ன இவளை கடிச்சா முழுங்கிடுவேன். ச்ச, என்னவும் செய்து தொலையட்டும். குழந்தைகளுக்காக பார்த்தா, என்னமோ பெரிய பிகு பண்ணிக்கிறா. இனி குழந்தைகளை மட்டும் கவனிச்சுக்கனும்.

இவள கண்டுக்கவே கூடாது…!' தனக்குள் முடிவு எடுத்துக் கொண்டான்.

'அவன் பணக்காரன்னா அது அவனோட வச்சுக்கணும். நாம என்ன அவன் பணத்தை பார்த்து வாயை பிளந்தோமா. பெருசா வந்துட்டான் நான் கொண்டு போய் விடுவேன், டிரஸ்ஸ மாத்துன்னு, அச்சச்சோ தாங்க முடியல, இந்த லொள்ளெல்லாம் வேண்டாம்னு தானே கல்யாணம் பண்ணாம இருந்தேன். பண்ணலைன்னாலும் எங்க இருந்துடா வருவீங்க?'

மறுநாள் முதல் குழந்தைகளை அவனே காரில் ஸ்கூலுக்கு அழைத்து சென்றான். "அம்மா நீங்களும் வாங்கம்மா…" என்று குழந்தைகள் ஆசைப்பட முதல்நாள் அவர்களுடன் சென்றாள்.

"குழந்தைகளிடம் சாயங்காலம் அங்கிள் வருவாங்க…" என்று சொல்ல…

"எந்த அங்கிள்…?" புருவத்தை சுருக்கியபடி அவளிடம் கேட்டான்.

"வாசு, அவன் குழந்தையை கூப்பிட வரும்போது இவர்களையும் கூட்டிட்டு வந்துவிடுவான்.

"அதெல்லாம் தேவையில்லை. நானே வந்து பிக்கப் பண்ணிக்கிறேன். இல்லைன்னா என்னோட பிஏ பாபு வருவான்…"

என்று சுருக்கமாய் முடித்துவிட, சுள்ளென்று கோபம் வந்தது ரங்காவுக்கு.

“அவன் ஏன் வரக்கூடாது. இந்த குழந்தைகளுக்கு அம்மா நான். இதுவரை இவங்கள உயிருக்கு உயிராக வளர்த்தது நான்தான். பாட்டியும், வாசுவும் இல்லைன்னா, இவர்களை இந்த அளவுக்கு ஆளாக்கி இருக்க முடியாது. இன்னைக்கு வந்துட்டு எல்லாத்தையும் மாத்தணும்னு நினைச்சா, நான் பொல்லாதவள் ஆயிடுவேன். வாசுவோட பையன் இந்த ஸ்கூல்ல தான் படிக்கிறான். வீணா பிரச்சனை பண்ணாதீங்க…” என்று அடக்கப்பட்ட கோபத்தோடு அவனிடம் சீறினாள்.

வெளியில் வைத்து வீண் தர்க்கம் வேண்டாம் என்பதால், பிறகு பார்த்துக் கொள்வோம் என்று நினைத்து, “சரி அவனே கூட்டிட்டு வரட்டும்…” என்று சொல்லிவிட்டான்.

அவன் சென்றதும் தனது ஆபீசுக்கு செல்லாமல் தலையில் கையை வைத்துக் கொண்டு உட்கார்ந்த பேத்தியிடம், “என்ன ரங்கா ஆபீசுக்கு போகல…?”

“இல்ல பாட்டி… எனக்கு போகவே பிடிக்கல. இவன் வந்ததிலிருந்து, குழந்தைகளோட விஷயம் எல்லாத்திலும்

தலையிடறான். அது மட்டும் இல்லாமல் என்னை வேற அதிகம் அதிகாரம் பண்றான். எனக்கு பிடிக்கவே இல்லை…” என்றாள்.

“நீ முதல்ல அந்த ஸ்கூல்ல தானே குழந்தைகளை சேர்க்கணும்னு ஆசைப்பட்ட, அதுதான் பண்ணியிருக்கிறார். வேற எதுவும் செய்யலையே…” பாட்டி எடுத்துச் சொல்ல, அது உண்மையாக இருந்தாலும் ஒப்புக் கொள்ள அவளுக்கு மனதில்லை.

மனதுக்குள் அன்றைய நாள் நினைவுக்கு வந்தது. ரங்கா முதலிலேயே அந்த பள்ளியில் அப்ளிகேஷன் வாங்கி, குறிப்பிட்ட நாளில் அதை நிரப்பி அங்கிருந்த உதவியாளரிடம் கொடுத்தாள்.

“கொஞ்சம் உட்காருங்கம்மா, ஃபீஸ் எவ்வளவுன்னு சொல்றேன், கட்டிட்டு போயிடுங்க…!” என்று முதலில் சொன்ன உதவியாளர் சற்று நேரத்தில் அவளை அழைத்து, மேடம் பார்ம்ல அப்பா பெயர் எழுதலை…”

“ குழந்தைகளுக்கு அப்பா கிடையாது…”

“ஓ…சாரி மேம். ஆனா பெயர் உங்களுக்கு தெரியும்ல… அதை நிரப்புங்க…”

“இல்லங்க தெரியாது… குழந்தைகளுக்கு இன்ஷியலை என் பெயர் வைத்து தான் வச்சிருக்கேன்…” என்று அவள் சொல்ல, அவளை விநோதமாகப் பார்த்தார்.

“அது எப்படி மேடம் அப்பான்னு ஒருத்தர் இல்லாம குழந்தைங்க வரும்…”

“எக்ஸ்க்யூஸ் மீ, அப்பா பெயர் போடாமல் தான் அப்ளிகேஷன் தருவேன். உங்களுக்கு இங்கே என் பிள்ளைகளுக்கு சீட் கொடுக்க முடியுமா, முடியாதா…” என்று அவள் சத்தம் போட, அருகில் இருந்த ஒன்றிரண்டு பேர் திரும்பிப் பார்த்தனர்.

“கொஞ்சம் இருங்க மேடம். பிரின்ஸ்பால் கிட்ட கேட்டுட்டு வந்துடறேன்…” என்று அவர்களை அமர வைத்து விட்டு பிரின்ஸ்பால் அறைக்கு சென்றார்…

பிரின்ஸ்பால் வேறு இரண்டு பேருடன் பேசிக் கொண்டு இருக்க, இவர் சென்றதும் “ஒரு நிமிஷம்…” என்று கூறிவிட்டு இவரிடம் விவரம் என்னவென்று கேட்டார்.

இவர் விபரத்தை சொன்னதும், “சீட் தர முடியாதுன்னு சொல்லிடுங்க… நம்ம ஸ்கூல் டிசிப்ளினுக்கு பெயர் போனது. இவங்கள மாதிரி ஒரு சிலரால் நம்ம பெயரை கெடுத்துக்க

கூடாது…” நிர்தாட்சண்யமாக பிரின்சிபால் மறுத்துவிட, அதைக் கேட்டதும் கோபத்துடன் ரங்கா பிரின்ஸ்பல் அறைக்குள் நுழைந்தாள்.

“எக்ஸ்க்யூஸ் மீ மேடம், நீங்க எந்த காலத்துல இருக்கீங்க… குழந்தைகளுக்கு கார்டியனாக யாராவது இருக்கணும்…! அம்மா நான் இருக்கேன். பீஸ் கட்ட போறேன். இதுக்கு மேல உங்களுக்கு என்ன வேணும்…? கவர்மெண்ட் கூட அம்மா பெயரின் முதல் எழுத்தை குழந்தைகளோட இன்சியல் ஆக வைத்துக் கொள்ளலாம்னு ரூல்ஸ் இருக்கு உங்களுக்கு தெரியுமா…?”

“தெரியும் மேடம். இல்லைன்னு யார் சொன்னா…? அப்பா பெயரை சொல்லி ஏதோ ஒரு காரணத்தினால் அவர் இல்லாமலோ அல்லது பிரிந்து இருந்தாலோ, ஓகே… ஆனா நீங்க சொல்ற காரணம் ரொம்ப வினோதமா இருக்கே… அப்பா பெயரே தெரியாது அப்படின்னா… எந்த மாதிரி எடுத்துக் கொள்வது…?” என்றார் நக்கலாக…

அவர் கேட்ட விதம், தொனி எல்லாமே குழந்தைகளின் பிறப்பைப் பற்றி அவளுக்கு கேவலமாக உணர்த்த, தன்னுடைய முடிவை அவரிடம் விளக்க முடியாமல் எதிரே வேறு இரண்டு பேர் இருக்க பதில் சொல்லாமல் கோபத்துடன் திரும்பினாள்.

திரும்பும் போது தற்செயலாக பார்க்கையில் எதிரே இருந்த இரண்டு பேரில் ஒருவன் உபேந்திரா…

அதன் பின்னர் தங்கள் வீட்டின் அருகில் உள்ள பள்ளியிலேயே பிள்ளைகளை சேர்த்து விட்டாள். இப்போது அது நினைவுக்கு வர ஒருவேளை அதன் காரணமாகவே உபேந்திராவுக்கு தன்னுடைய உண்மை தெரிந்திருக்குமோ என்று அவளுக்கு மனதுக்குள் ஒரு சந்தேகம் எழுந்தது.

“என்ன ரங்கா…?” என்று பாட்டி மீண்டும் கேட்க, அவள் கலைந்தாள்.

“பாட்டி எனக்கு ஒரு சந்தேகம். அந்த ஸ்கூல்ல அன்னைக்கு சீட் கேட்கும்போது அவன் அங்கே இருந்தான்னு சொன்னேன்ல, அதுல தான் அவனுக்கு விஷயம் ஏதோ தெரிஞ்சிருக்கணும்…”

“ நானும் அப்படிதான் நெனச்சேன்…” என்றார் பாட்டி… மேலும் அவராகவே ஸ்கூல் பிரச்சினை தீர்ந்து போச்சு. ஆனா வேற விதமா பிரச்சனை ஆரம்பிச்சுருச்சு…!”

“என்ன பாட்டி…?”

“இல்ல நம்ம வேலைக்காரி சொர்ணம் இருக்கால்ல, அவ நேத்து வந்து ஒரு விஷயம் சொன்னா…!”

“என்ன சொன்னா…?”

“உபேந்திரா இங்கே வந்து நம்ம கூட தங்கி இருக்கிறதைப் பத்தி தப்பா பேசுறாங்களாம், நம்ம அப்பார்ட்மெண்ட் முழுவதும்…!”

“ஆமாம், ஆபீஸ்சிலேயும் இதுதான் ஓடிக்கிட்டு இருக்கு. இன்னும் என் முகத்துக்கு நேராக யாரும் கேட்கல…!”

“சரி பார்க்கலாம்… நம்ம கிட்ட கேட்டா பதில் சொல்லிக்கலாம்…” என்று பாட்டி சொன்னாலும், அது தனக்காக பாட்டி சொல்கிறார் என்பது ரங்காவுக்கு புரிந்தது.

பள்ளி நாட்கள் விரைந்து சென்றது. அனேகமாக ஸ்கூலில் கொண்டு போய் விட்டு விட்டு, தனது ஆபிசுக்கு செல்பவன் இரவு ஒன்பது மணிக்கு சாப்பாடு முடித்துதான் வருவான். வந்ததும் குழந்தைகளுடன் அரை மணி நேரம் ஒரு மணி நேரம் விளையாடிவிட்டு, அவர்கள் தூங்கியதும் தானும் தூங்க சென்றுவிடுவான். அவனைப் பொறுத்தவரை இந்த வீடு ஒரு லாட்ஜ், அவ்வளவுதான். குழந்தைகள் அவனுடைய குழந்தைகள். வேறு எந்த விதத்திலும் அவன் மற்றவர்களை தொந்தரவு செய்யவில்லை. அவனது உடமைகளை கார் டிரைவர்

எடுத்துக்கொண்டு போய், சலவை செய்து கொண்டு வந்து கொடுத்து விடுவார்.

காலை காபியும், டிபனும் மட்டும் தான் அவன் வீட்டில் சாப்பிடுவது… அதனால் அவனை எந்த வகையிலும் குறை சொல்ல முடியவில்லை. ஆனால் எந்த உறவும் இல்லாத ஒரு ஆண்மகன் இங்கு தங்கி இருப்பது எல்லோர் கண்ணையும் உறுத்திற்று. தங்களுக்குள் பேசிக் கொண்டிருந்தவர்கள், வெள்ளிக்கிழமை மாலை குழந்தைகள், ஸ்கூல் இன்னும் இரண்டு நாளில் லீவு என்பதால் கீழே உள்ள அப்பார்ட்மெண்ட் காம்பவுண்டுக்குள் விளையாடிக் கொண்டிருந்தார்கள்…

சற்று நேரத்தில் பார்த்தியும் பாவனாவும் அழுது கொண்டு வர, பாட்டி என்னவென்று விசாரித்தார். “பாட்டி கீழ பசங்க எல்லாரும் என் கூட விளையாட மாட்டேங்கிறாங்க…” இரண்டு குழந்தைகளும் அழுது கொண்டே சொல்ல…

“என்னடா பேசறாங்க…?”

“பாட்டி அவங்க எல்லாரும் எங்களை பார்த்து கேலி பேசறாங்க. கேட்டா தப்பு, தப்பா பேசறாங்க…” என்றான் பார்த்தி…

மேலும் அவனே "நம்ம வீட்ல இருக்குற அப்பா, எங்க அப்பா இல்லையாம். அவர் வேற யாரோவாம்... அம்மா பொய் சொல்றாங்களாம்...!" அப்படின்னு அசோக் சொல்றான்...

"இல்ல அம்மா பொய் சொல்லல, அதுதான் எங்க அப்பான்னு நாங்க சொன்னோம்... அதுக்கு அவன், ம்ம்... ம்ம்..." என்று அழுதுகொண்டே, "உங்க அம்மா கெட்டவங்க... அந்த ஆள வச்சி இருக்காங்க. உங்க அம்மாவும் பாட்டியும் ரொம்ப கெட்டவங்க... அப்படின்னு சொல்றான்...! என்று சொல்லிவிட்டு அழ கேட்ட பாட்டி உறைந்து போய் நின்று விட்டார்...

அப்போதுதான் அலுவலகத்திலிருந்து வந்த ரங்காவும் பார்த்தி சொல்வதைக் கேட்டுவிட்டு, அதிர்ச்சியில் வாசலிலே நின்றாள். அம்மாவை பார்த்த பாவனா 'அம்மா' என்று அழுது கொண்டே ஓடி வர பின்னாலேயே பார்த்தியும் வர, முட்டி போட்டு கீழே உட்கார்ந்து இரு குழந்தைகளையும் அணைத்துக்கொண்டாள்.

அவர்களின் முதுகை நீவி விட்டவள், கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது. கண்ணீர் வழிய குழந்தைகளை அழைத்துக்கொண்டு அவள் இருந்த கோலம் பாட்டியின் கண்களில் கண்ணீரை வரவழைத்தது...

கண்ணீரைத் துடைத்துக் கொண்டவள், “நீங்க ரெண்டு பேரும் பாட்டிகிட்ட இருங்க அம்மா இப்ப வரேன்…” என்றவாறு செருப்பை மாட்டிக்கொண்டு அசோக்கின் வீட்டிற்கு சென்றாள்.

அங்கு சென்று காலிங் பெல் அடித்ததும் வெளியில் வந்தவர் அசோக்கின் அப்பா… “என்ன வேணும்…?” என்று அவர் கேட்க…

“உங்க பையன் தேவை இல்லாம என் பிள்ளைங்க கிட்ட பேசறான் சார். கொஞ்சம் கண்டிச்சு வைங்க.” என்று கூறிக் கொண்டு இருக்கும் போது அசோக்கின் அம்மாவும் அசோக்கும் அங்கு வந்து விட்டனர்…

“என்ன பேசினான்…?” என்று அவர் கேட்க, சுருக்கமாக நடந்ததைக் கூறி “இந்த மாதிரி பேச்சு குழந்தைங்க கிட்ட வேண்டாம்ன்னு சொல்லுங்க…” என்று அவள் கூற…

அதற்கு அசோக்கின் அம்மா, “பெரியவங்க செய்யறத குழந்தைகள் சொல்லுது… நீங்க ஒழுங்கா இருந்தா ஏன் மத்தவங்க பேச போறாங்க. நல்ல குடித்தனங்கள் இருக்கிற இடத்துல நீங்க இப்படி இருந்தா நல்லாவா இருக்கு…! தெரியாம இந்த அப்பார்ட்மெண்ட்ல வீடு வாங்கிட்டோம். என் பையன் பேசினதுல என்ன தப்பு…? என்னை கேட்டா என் பையன் உங்க குழந்தைங்க

கிட்ட பேசுவதும், விளையாடுவதும் தப்புன்னு சொல்லுவேன்…!” என்று தன் இத்தனை நாள் ஆத்திரத்தை பொரிந்து தள்ளினார்.

“குழந்தைகள் இடத்தில் என்ன பேச வேண்டுமோ அதை மட்டும் பேசுங்க. மற்றதை என் கிட்ட பேசுங்க. நான் உண்மை எதையும் மறைத்து செய்யல. கோர்ட்ல கேஸ் நடந்து தீர்ப்பு இப்படி இருக்கறதுனால தான், அவங்க அப்பா இங்க வந்து இருக்கிறார். புரிஞ்சுக்கோங்க…”

“நாங்க எல்லாம் உன்ன மாதிரி மெத்தப்படித்த மேதாவிங்க கிடையாது. எங்களுக்கு தெரிஞ்சதெல்லாம் கல்யாணம் ஆகி குழந்தை பிறந்தால் தான் பிள்ளைங்க அம்மா, அப்பா குடும்பம்னு இருப்பாங்க… இந்த மாதிரி இரவில் அப்பா, குந்தி போல ஒரு அம்மா, இதெல்லாம் நாங்க கதையில்தான் படிச்சிருக்கோம். கதைங்கிறது, அதுல இருந்து நமக்கு உள்ள நீதிகளை கற்றுக் கொடுக்கத் தான்…

என்னதான் கர்ணன் கொடைவள்ளல் ஆக இருந்தாலும் ஊருக்கு தெரியாம பிள்ளை பெற்றுக் கொண்டதனால், அவன் சொந்த சகோதரன் கூடவும், தாய் கூடவும் இருக்க முடியாமல் அவச்சொல் கேட்டு தான் வாழ்ந்தான்… அத மாதிரி தான் இருக்கு உன்னோட வாழ்க்கை. உன்னையும் உன் பிள்ளைகளையும், பார்த்து வளர்ந்தா எங்க பிள்ளைகளுக்கும் அந்த புத்தி வராது

என்ன நிச்சயம். உங்க சங்காத்தமே வேண்டாம். டேய் அசோக் இனி அந்த பிள்ளைங்க கிட்ட பேசுவதை நான் பார்த்தேன் வாயில சூடு வச்சுருவேன். நீ போ முதல்ல வெளியில...!” என்றாள்.

ஒருவர் வெளியே போ, என்று சொன்ன பிறகும், நிற்பது நாகரீகம் இல்லை என்று வெளியே அவள் காலடி எடுத்து வைத்ததும், அடுத்த நொடி முகத்தில் அறைந்தாற்போல் அவர்களது வீட்டு கதவு அடைத்து சாத்தப்பட்டது...

# அத்தியாயம் 6

இரவு பத்து மணிக்கு உபேந்திராவின் கார் அவனது பங்களாவிற்குள் நுழைந்தது. பொழுது போகாமல் டிவியை பார்த்துக் கொண்டிருந்த சேதுராம் காரின் சத்தமும் அதை தொடர்ந்து உபேந்திராவின் பேச்சும் வெளியில் கேட்க, 'என்ன இன்னைக்கு இங்க வந்துட்டான்...?' என்ற எண்ணம் ஓட உள்ளே வந்த பேரனை பார்த்தார்.

ஷர்ட் பட்டனை கழட்டி விட்டுக் கொண்டு அப்படியே ஹாலில் தளர்ந்து உட்கார்ந்த உபேந்திரா, "என்ன தாத்தா தூங்க போகலையா...?"

"தூக்கம் வரல. கொஞ்ச நேரம் உக்காந்து இருக்கலாம்னு இங்க வந்தேன். நீ சாப்டாச்சா...? இல்ல டைனிங் டேபிள்ல என்ன இருக்குன்னு போய் பாரு..."

"சாப்பிட்டாச்சு. இன்னைக்கு ஒரு பார்ட்டி. அதனாலதான் லேட்டாயிடும்னு நெனச்சு அங்க வரலைன்னு சொல்லிட்டேன். அப்புறம் பார்த்தா பார்ட்டி சீக்கிரம் முடிஞ்சுருச்சு... ரெண்டு நாளா உங்களை பார்க்கலையே அதான் இங்க வந்துட்டேன்..."

“எப்படி இருக்காங்க பசங்க…?” என்ற தாத்தாவின் கேள்விக்கு அரை மணி நேரம் அமர்ந்து திறந்த வாயை மூடாமல் அவன் பிள்ளைகளை பற்றி அளந்தான். “இந்த சண்டே நான் இங்க கூட்டிட்டு வரேன் பாருங்க… இரண்டும் க்யூட் தாத்தா…” அவனுக்கு பெருமை பிடிபடவில்லை…

“ஆமா எப்போதும் பார்ட்டின்னா, மிட்நைட் வேற மாதிரி வருவ…? இன்னைக்கு என்ன…?” தாத்தா வேண்டும் என்றே கேட்க…

அதை கண்டுகொள்ளாமல், “உண்மைதான். ஆனா இன்னைக்கு என்னமோ எனக்கு அது வேணுமின்னு தோணல. அது பக்கமே நான் போகல… எப்படா பார்ட்டி முடியும் வீட்டுக்கு போகலாம் தோணுச்சு… கிளம்பி வெளியில வந்துட்டேன்… அப்புறம் பார்த்தா பத்து மணிக்கு மேல ஆயிடுச்சு… வீடு வேற ரொம்ப தூரம். போக பதினோரு மணி ஆயிடும்… ரங்கா பாட்டி பாவம் அவங்கள டிஸ்டர்ப் பண்ண வேண்டாம்னு வந்துட்டேன்… ஓகே குட்நைட். நான் எர்லி மார்னிங் அங்க போயிடுவேன். சண்டே பாக்கலாம்…” என்றவன் இரண்டே தாவலில் மாடி ஏறினான்…

இந்த பத்து நாட்களாக தன் பேரனின் மாற்றத்தையும் உற்சாகத்தையும் பார்த்த சேதுராமனுக்கு மிகவும் மகிழ்ச்சியாக

இருந்தது. அவனுக்கு இந்த விஷயம் தெரிய வந்த நாளை நினைத்துப் பார்த்தார்…

ஒரு மாதத்திற்கு முன்னால் ஒரு நாள் நைட் சாப்பிடும் வேளையில் தற்செயலாக, தன்னுடைய வேலை சம்பந்தமாக தாத்தாவிடம் பேசிக்கொண்டு இருந்தான்… “தாத்தா ஒரு விஷயம். இன்னைக்கு நான் உங்க பிரண்டோட பேத்தியை பார்த்தேன்…!” என்று உபேந்திரா சொல்ல…

ஒரு நொடி அவன் யாரை சொல்கிறான் என்று புரியாமல், “யாரோட பேத்தி…?” என்றார்.

“அதான். அந்த ராங்கிக்காரி… சும்மா சொல்லக் கூடாது தாத்தா. உங்க ஃபிரண்டுக்கு அவங்க பேத்தியை பத்தி, பிறக்கிறதுக்கு முன்னாடியே நல்லா தெரிஞ்சிருக்கு… அதனாலதான் ரங்கான்னு பேரு வச்சிருக்காங்க… சரியான ராங்கி… என்கிட்ட தான் அப்படின்னு பார்த்தா, எல்லா இடத்திலும் ராங் தான் போல இருக்கு…”

“என்ன சொல்ற…? புரியும்படியா சொல்லு…” என்று சேதுராமன் கேட்டதும்,

“தாத்தா, இன்னைக்கி ஒரு கேஸ் விஷயமா என் கிளையன்ட்ட கூட்டிட்டு அவரோட ஸ்கூலுக்குப் போயிருந்தேன்.

அங்க பிரின்சிபால் கிட்ட பேசிட்டு இருக்கும்போது, இந்த ராங்கிகாரி உள்ள திடுதிடுப்புன்னு வந்தா. பிரின்சிபால்கிட்ட, கவர்மெண்ட்டே அம்மா பெயரை இனிஷியலாக போடலாம்னு சொல்லி இருக்கு. அப்புறம் என்ன…? நான் பீஸ் கட்டுறேன். நீங்க சேர்த்துக்க வேண்டியதுதானே…? அப்படின்னு ஒரே சண்டை…

அதுக்கு அந்த பிரின்சிபால் மேடம், எங்க ஸ்கூல் டிசிப்ளினுக்கு பெயர் போனது. ஏதோ ஒரு காரணத்தினால் அப்பாவை பிரிஞ்சு இருந்தா பரவாயில்லை. ஆனா இன்னார் அப்பான்னு தெரிஞ்சு இருக்கணும். நீங்க இந்த குழந்தைகளுக்கு அப்பா யாருன்னே தெரியாதுன்னு சொல்றீங்க… அப்ப என்ன அர்த்தம்…? அந்த மாதிரி குழந்தைகளை நான் என்னோட ஸ்கூல்ல சேர்த்துக்க முடியாதுன்னு, கட் அண்ட் ரைட்டா சொல்லி அனுப்பி விட்டாங்க…

தேவையா…? இதனால அந்த பாட்டிக்கும், அவர் குடும்பத்துக்கும் கெட்ட பெயர்… எவனையாவது லவ் பண்ணி இந்த மாதிரி வந்திருந்தது என்றால் கூட, அவன் பெயர் கூடவா தெரியாமலா இருக்கும். அதை சொல்லித் தொலைய வேண்டியதுதானே. இல்லை முதலிலேயே அழித்து இருக்கணும்…

இப்ப இவ செஞ்ச காரியத்தாலே அந்த குழந்தைகளுக்கும் கெட்ட பெயர். நம்ம செய்ற காரியம் அடுத்தவங்களுக்கு

இடைஞ்சலா எப்பவும் இருக்கக்கூடாது. அந்த குழந்தைகளோட எதிர்காலத்தை பாதிக்கும் படியான காரியத்தை ஏன் செய்யணும்? அதுக்கு அந்தப் பிள்ளைகளை இல்லாமலே ஆக்கி இருக்கலாம் இல்லையா...?" அவன் கோபத்தோடு பொரிந்துவிட்டு கை கழுவ எழுந்தான்...

"அந்த பொண்ணுக்கு கல்யாணமே பிடிக்காமல் வேற மாதிரி குழந்தை பெத்துருக்கலாம் இல்லையா...? அப்படின்னா குழந்தையோட தகப்பன் பெயர் உண்மையிலேயே அவளுக்கு தெரியாமல் இருந்திருக்கலாம்...!" என்று சொல்லிக் கொண்டே பின்னாலேயே வந்து தாத்தாவும் கை கழுவினார்...

"என்ன சொல்றீங்க தாத்தா...?" என்று தாத்தா பின்னாலேயே வர, ஹாலுக்கு வந்து அமர்ந்தவர் "உட்கார். எனக்கு உன் கிட்ட பேசணும்..." என்றதும் எதிரில் இருந்த சோபாவில் அமர்ந்தான்.

"சொல்லுங்க தாத்தா..." என்றதும் தாத்தா அவனிடம், "எனக்கு ரங்காவை பத்தி எல்லாம் தெரியும். அந்த பொண்ணுக்கு கல்யாணம் பண்ணிக்க பிடிக்கல. அதனால பாட்டி கல்யாணம் பண்ணிக்க சொல்லி வற்புறுத்தும் போது, "உங்களுக்கு என்னோட குழந்தைகள் தானே வேணும். அதுக்கு கல்யாணம் பண்ணனும்னு அவசியம் இல்லை. நான் ஆண்களையே வெறுக்கிறேன்.

வேணும்னா டெஸ்ட் ட்யூப் மூலம் குழந்தை பெத்துக்கிறேன், நீங்க சம்மதிச்சா…" அப்படின்னு பாட்டி கிட்ட சொல்லி இருக்கா…

ரங்கா என்கிட்ட வந்து புலம்பி அழுதா. எனக்கு அப்புறம் என்னோட பேத்திக்கு யாருமே துணையில்லை. என்னோட மகனும், மருமகளும் எப்போதும் அவளை கண்டுக்கவே மாட்டாங்க. அவளுக்கு ஒரு பிடிப்பு வாழ்க்கையில வேண்டும் என்பதற்காக தான் அவளை கல்யாணம் பண்ணிக்க சொல்றேன். அடிச்சாலும் பிடிச்சாலும் புருஷன்னு ஒரு துணை இருக்கும்… ஆனா அது அவளுக்கு புரிய மாட்டேங்குது…

இப்படி குழந்தை பெத்தா, ஊர் உலகம் என்ன சொல்லும்…? குலம், கோத்திரம் பார்த்து கல்யாணம் பண்றது எதுக்கு…? நல்ல குழந்தைகள் பிறக்கணும் அப்படிங்கறதுக்கு தானே… இது புரியாமல் பேசுறா…? டெஸ்ட் ட்யூப் பேபிக்கு கொடுக்கிற டோனர் எப்படி இருப்பார்னு யாருக்குத் தெரியும்…? ஒரு கொலைகாரனா, ஒரு தெருப்பொறுக்கியா இருந்தா குழந்தைகள் எப்படி இருக்கும்…? என்று அவள் தன் கவலையை சொல்லி அழுதபோது, எனக்கு என்ன பண்றதுன்னு தெரியல…"

"ஏன் தாத்தா அவளுக்கு ஆண்கள் மேல அவ்வளவு வெறுப்பு…?"

"அதுக்கு அவளுடைய குடும்ப சூழ்நிலை ஒரு காரணம். அதுபோக அவருடைய வக்கீல் தொழிலில் பார்த்த கேஸ்கள் கூட ஒரு காரணமாக இருக்கலாம். ஏதோ ஒரு விதத்தில் அவளுக்கு ஆண்கள் மேல் ஒரு வெறுப்பு. இதை காரணம் காட்டி அவள் கல்யாணத்தை மறுத்து இப்படி ஒரு முடிவு எடுத்தது, பாட்டி ரங்காவுக்கு ரொம்ப வேதனையாக இருந்தது.

நான் அவளுக்கு உதவி பண்ணுவதற்காக நம்ம ஹாஸ்பிட்டல்ல உள்ள டாக்டர் ஏற்பாடு பண்ணி டெஸ்ட் டியூப் பேபி நான்தான் வழி செய்தேன்..."

"என்னது நம்ம ஹாஸ்பிட்டல்ல நீங்கதான் ஏற்பாடு பண்ணீங்களா...? என்ன சொல்றீங்க...?"

"ஆமாம் பாட்டி ரங்கா கேட்டுக் கொண்டபடி, ஒரு நல்லவனோட விந்தணுவை தான் ரங்காவோட கேசுக்கு டோனர் ஆக யூஸ் பண்ண சொன்னேன்..."

"அப்போ உங்களுக்கு அந்த குழந்தைகளோட தகப்பன் யாருன்னு தெரியும் அப்படித்தானே...?"

"ஆமா தெரியும்..."

“அப்ப அவன் கிட்ட அதை சொல்லி அந்த குழந்தைகளுக்கு ஒரு கௌரவத்தை கொடுக்கலாமே…?”

“கொடுக்கலாம் தான். ஆனா அதுலயும் ஒரு சிக்கல் இருக்கு. ஏன்னா டோனர் என்கிறப்ப இந்த விஷயத்தை வெளியில் சொல்லக் கூடாது. இரண்டாவது அந்த தகப்பன் அந்த குழந்தைகளுக்கு உரிமையை கொடுப்பதற்கு விரும்பணும்…!”

“சொத்து எதுவும் வேண்டாம்… ஒரு அடையாளம். ஒரு கௌரவம், இதுக்காகவாவது நாம அந்த டோனர் கிட்ட பேசி பார்க்கலாம்…”

“சம்மதிப்பாங்கிற…!”

“நான் பேசறேன் தாத்தா. சொத்து வேண்டாம்னு சொல்லி விட்டா கண்டிப்பா சம்மதிப்பான். வேற யாருக்கும் தெரியாம வச்சுக்கலாம்… ஜஸ்ட் ஸ்கூல் சர்டிபிகேட், காலேஜ் அட்மிஷன் இந்த மாதிரியான முக்கியமான விஷயங்களுக்கு உதவும்…!”

“ஆமா, உனக்கு என்ன திடீர்னு அந்த குழந்தைங்க மேல இவ்வளவு அக்கறை…?”

‘‘அந்த குழந்தைகளை பார்த்தா, ஏதோ ஒரு உணர்வு, எனக்கு தோணுது. அந்த உணர்வு எனக்கு புதுசா இருந்தா கூட என்னால்

அந்த குழந்தைகளை மறக்கவே முடியல. நான் இன்னைக்கு தான் முதன் முதலில் அந்த குழந்தைகளை பார்த்தேன். அவங்க பாட்டி கூட கொஞ்சம் தள்ளி ஒரு இடத்தில நின்னுகிட்டு இருந்தாங்க. வெரி க்யூட்… எப்படித்தான் அவளுக்கு மனசு வந்ததோ…?”

“அவளை ஏன் குத்தம் சொல்ற…?”

“குற்றம் சொல்லாமல் ஒரு சில ஆண்களால ஒட்டுமொத்த ஆண் குலத்தையே தப்பா நினைச்சு, இந்த மாதிரி தப்பு பண்ணி இரண்டு குழந்தைகளோடு எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கி வைத்திருக்கிறாளே…? அவளை தப்பு சொல்லாம, அவளுக்கு கொடி பிடிக்க சொல்றீங்களா…!” என்று உபேந்திரா கோபத்தோடு கேட்க…

“சபாஷ், தான் ஆடாவிட்டாலும் சதை ஆடும் சும்மாவா சொல்லி வச்சிருக்காங்க பெரியவங்க…!” என்று சேதுராமன் சொல்ல…

புரியாமல், “நான் ஒண்ணு சொன்னா நீங்க என்ன சொல்றீங்க என்ன தாத்தா…?” என்று எரிச்சலுடன் உபேந்திரா பேச…

“இவ்வளவு படிச்சிருக்கே, முக்கியமாக கிரிமினல் லாயரா இருக்க… இரண்டும் இரண்டும் நாலு என்று கணக்கு போட தெரிய வேண்டாம். என்ன படித்து என்ன பிரயோஜனம்.? மனிதர்கள்

மனதை படிக்க தெரியணும். அவர்கள் உன்னோட குழந்தைகளாய் இருந்தா…! அதைத்தான் நான் இப்ப பூடகமாய் சொன்னேன்…" என்றார் தாத்தா தெளிவாக…

"என்னது என்னுடைய குழந்தைகளா? வாட் நான்சென்ஸ்… நான் எப்ப டோனர் ஆனேன்…? என்ன தாத்தா…? கனவு ஏதும் கண்டீர்களா…?"

"நல்ல ஞாபக படுத்தி பாரு… நீ எப்ப டோனர் ஆனேன்னு உனக்கு புரியும்…!" என்று தாத்தா சிரித்துக்கொண்டே சொன்னதும் அவனுக்கு ஒரு விஷயம் ஞாபகம் வந்தது.

ஒரு தடவை மருத்துவமனையில் உள்ள லேபில் இருக்கும் ஒரு டாக்டர் இவனை சந்தித்து, சார் நிறைய ஆண்களுக்கு இப்ப விந்தணு குறைபாடு இருக்கு… அத எதனால? இப்போ உள்ள உணவு, மற்றும் வேலை டென்ஷன், இதெல்லாம் ஆணின் ஆண்மையை எப்படி பாதிக்கிறது என்பது பற்றி ஒரு ரிசர்ச் நம்ம ஆஸ்பிட்டல்ல ஓடிட்டு இருக்கு.

அதுக்கு எல்லாவிதமான வேலையில் உள்ள ஆண்களின் ஸ்பெர்ம் எடுத்து நாங்கள் ஆராய்ச்சி பண்ணிட்டு இருக்கோம். நீங்களும் உங்களோடத கொடுத்து கொஞ்சம் உதவுங்க சார்… என்று அவர் கேட்டதும் இவனும் கொடுத்ததும் ஞாபகம் வந்தது…

“அப்போ அந்த ஆராய்ச்சி…?” என்று கேள்வியாய் தாத்தாவை பார்க்க…

“அப்படி அவரை சொல்ல சொன்னதே நான்தான். உன்னோடதை ரங்காவோட கேசுக்கு டோனரா, நான் தான் மகாலட்சுமி கிட்ட சொல்லி யூஸ் பண்ண வச்சேன். இந்த விஷயம் எனக்கும், மகாலட்சுமிக்கு மட்டும்தான் தெரியும். இன்னும் பாட்டி ரங்காவுக்கு, பேத்திக்கு தெரியாது… இதுதான் உண்மை…! இப்ப சொல்லு உன்னோட குழந்தைகளோட கௌரவத்தை நிலை நிறுத்துவதற்காக நீ உண்மையை சொல்லுவியா…?” என்று கேட்டார் தாத்தா…

“தாத்தா நீங்க இப்படி செய்வீங்க நான் எதிர்பார்க்கவே இல்லை…?” என்று உபேந்திரா கோபப்பட…

“என் மேல கோபப்படுவது எல்லாம் இருக்கட்டும். நான் கேட்ட கேள்விக்கு பதில் சொல். உன்னோட குழந்தைகள் இந்த மாதிரியான ஒரு அவசொல்லோட வாழறது உனக்கு விருப்பமா…?

இல்லேன்னா அவங்களுக்கு நான் தான் அப்பான்னு சொல்லி, அவங்களோட கவுரவத்தை நீ மீட்டுக் கொடுக்க போறியா, இதுக்கு மட்டும் பதில் சொல்லு…!”

“என்னை யாருன்னு நினைச்சீங்க… கிரேட் சேதுராமன் பேரன். நான் ஆயிரம் தப்பு பண்ணி இருக்கலாம்… அதெல்லாம் சின்ன சின்ன தப்பு… குடும்ப கௌரவத்தை பறக்கவிடற மாதிரி நான் எந்த பெரிய தப்பும் பண்ணினதே இல்லை. என்னோட குழந்தைகள் இப்படி ஒரு அவமானச் சின்னத்துடன் வளரணுமா.? நெவர்… என் குழந்தைகளை எனக்கு எப்படி வளர்க்கணும்னு எனக்கு தெரியும். நாளைக்கே பாருங்க…!”

“என்ன அவகிட்ட போய் குழந்தைகளை கேட்க போறியா…?”

“அதுக்கு வேற ஆளைப் பாருங்க. நான் போய் கேட்டாலும் அவ தரமாட்டான்னு எனக்கு தெரியும். இனி என்ன நடக்குதுன்னு வேடிக்கை பாருங்க…! இன்னும் பத்து நாள்ல என்னோட குழந்தைகள் என்கிட்ட…” என்று தாத்தாவிடம் பொரிந்து விட்டு, மாடி ஏறி சென்று விட்டான்.

“அப்பா இப்பத்தான் நிம்மதியா இருக்கு. இனிமே அவன் பாடு அவன் பிள்ளைங்க பாடு, அவ பாடு… முட்டி மோதி ஒரு குடும்பமாக வாங்கடா…!” என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டவர் நிம்மதியாக உறங்கச் சென்றார்.

ரங்கா தங்கள் வீட்டு பால்கனியில் அமர்ந்திருந்தாள். உபேந்திரா தற்செயலாக அன்று லேட்டாக வருவேன் என்று

பாட்டிக்கு ஏற்கனவே போன் பண்ணி சொல்லி விட்டதால் குழந்தைகளை சமாதானப்படுத்தி சாப்பிட வைத்தாள்…

சாப்பிடுவதற்கு அவர்கள் ஆயிரம் கேள்வி கேட்டனர். “அம்மா நீங்க கெட்டவங்களா…? கெட்டவங்கங்கனா என்ன…? நல்லவங்கன்னா என்ன…?”

பேத்தி பதில் சொல்லாமல் மவுனமாக இருக்க, "அம்மாவுக்கு ரொம்ப தலைவலியா இருக்காம், அதனால உங்க கேள்விக்கெல்லாம் நாளைக்கு பதில் சொல்வாங்க… நீங்க சமத்தா சாப்பிட்டு தூங்குங்க…" பாட்டிதான் அவர்களுக்கு பதில் கூறினார்.

குழந்தைகளும் அம்மாவின் முகத்தை பார்த்துவிட்டு, அம்மாவின் முகம் எப்போதும் போல் இல்லாததால், அமைதியாக சாப்பிட்டு தூங்க சென்றுவிட்டனர்…

பாட்டியும் பேத்தியும் சாப்பிடவில்லை. பாட்டி தனது தள்ளாமை காரணமாக படுத்து விட்டார். ரங்காவுக்கு தூக்கமே வரவில்லை.

அசோக்கின் அம்மாவின் பேச்சைக் கேட்டதில் இருந்து, அவளுக்கு உலகமே இருண்டு விட்டது போலத் தோன்றியது. ரங்காவுக்கு எப்போதுமே நேர்மையான குணம். தன்னைப்பற்றி பற்றி வெளிப்படையாக எல்லாம் தெரிந்தும் அவர் பேசியது

அவளுக்கு கோபத்தையும், மிகுந்த வருத்தத்தையும் ஏற்படுத்தியது.

அவளுடைய கேஸ் நடைபெற்றபோது எல்லா பத்திரிக்கைகளிலும் அவளை பற்றி எழுதியிருந்தது தெரியும். எல்லோரும் படிக்காமலா இருந்திருப்பார்கள்... தெரிந்திருக்கும்... ஆனாலும் மற்றவர்கள் மனதை வேண்டுமென்றே புண்படுத்த நினைப்பவர்களிடம் எது பேசினாலும் அது வேலைக்கு ஆகாது என்பது திண்ணம்.

இதுநாள் வரை இல்லாமல் இப்போது பிரச்சனை வர காரணம் ஒன்றே ஒன்றுதான். அது உபேந்திரா அங்கு இருப்பது. என்ன இருந்தாலும் திருமணமாகாமல், எந்த உறவும் இல்லாமல் அவன் இங்கு இருப்பது எல்லோருடைய பார்வையிலும் வித்தியாசமாக தெரிகிறது. ரங்காவுக்கு முதன்முறையாக அவமானத்திலும், வெட்கத்திலும் மிகுந்த அழுகை வந்தது. வெகு நேரம் அழுது கொண்டிருந்தவள் இதற்கு என்ன தீர்வு என்று யோசித்து, யோசித்து பார்த்தாள்.

ஒன்று, குழந்தைகள் அவளிடம் இருக்க வேண்டும் இல்லையெனில் அவனிடம் இருக்க வேண்டும். இதை தவிர வேறு எந்த தீர்வும் இல்லை என்பது தெளிவாக தெரிந்தது. அவன் இங்கு வந்து கிட்டத்தட்ட பதினைந்து நாட்கள் தான் ஆகிறது.

அதற்குள்ளே இத்தனை பிரச்சனை இன்னும் காலம் முழுவதும் இருப்பதாக இருந்தால், தனக்கு மட்டுமில்லாமல் குழந்தைகள் மனதிலும் எல்லோரும் நஞ்சை கலந்துவிடுவார்கள். அதன்பிறகு அவர்களுக்கு அம்மா என்றாலே பிடிக்காமல் போய்விடும். அதைவிட தான் விலகிக் கொள்வது மேல் என்று நினைத்தாள்…

தாயின் கவனிப்பு ஆரம்ப நிலையில் குழந்தைகளுக்கு கட்டாயமான ஒன்று. அந்தப் பருவத்தை அந்த குழந்தைகள் தாண்டிவிட்டன. இனி உபேந்திரா கூட ஏதாவது வேலை ஆள் போட்டு குழந்தைகளை பார்த்துக் கொள்ளலாம். தன்னால் இந்த மாதிரியான பேச்சுகளை நேரடியாக கேட்க முடியாது என்பது அவள் புரிந்து கொண்டாள்.

நான் என்ன தப்பு பண்ணினேன். அவளைப் பொறுத்தவரையில், தேவை இல்லாமல் யாரிடமும் பேசக் கூட மாட்டாள். அவள் உலகமே வீடும் ஆபிஸிசும்தான். சிறுவயதிலிருந்தே உழைக்க கற்றுக் கொண்டவள். தனக்கென்று எந்த விதமான சந்தோஷத்தையும் அனுபவித்து அறியாதவள். சுருங்கச் சொல்லப்போனால் அவளுக்கு சந்தோஷம் என்றாலே என்னவென்று தெரியாது. அதை அவளுக்கு உணர வைக்கும் சக்தி யாருக்கும் யாருக்கும் இல்லை என்பதுதான் உண்மை…

வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளுக்கும், மற்ற பொருளாதாரத்திற்கும் போராடிய வாழ்க்கையை நடத்தினார்கள் பாட்டியும் பேத்தியும். அதனாலேயே அவளுக்கு தன் வயது பெண்கள் அடைந்த சின்ன, சின்ன சந்தோஷங்கள் கூட கிடைக்கவே இல்லை…

பாட்டி மாதிரியே தன்னுடைய குடும்பத்தையும் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் கொண்டதால், தன்னுடைய சம்பாத்தியம் தனக்கு மட்டும் இருந்தால் போதும் என்ற எண்ணம் இல்லை. கையில் கிடைக்கும் ஒவ்வொரு பைசாவும் அவளுக்கு அவள் தேவைகள் போக, குடும்பத் தேவைகளுக்கு உதவியாக இருந்தது. தன்னுடைய சந்தோஷத்தை ஒதுக்கிதான் அவள் குடும்பத்திற்கு உதவியாக இருந்தாள். இது தான் அவள் செய்த தவறு.

அவர்கள் அதை புரிந்து கொள்ளவும் இல்லை… புரிந்துகொள்ளாவிட்டால் கூட பரவாயில்லை. அவளும் தங்கள் குடும்பத்தில் ஒருத்தி தான் என்ற எண்ணம் கூட அவர்களுக்கு இல்லை.

இரவு ஒரு மணிக்கு மேல் குழந்தைகள் அருகில் வந்து படுத்தவள் தன்னை அறியாமல் தூங்கி விட்டாள். அதிகாலையில் அழைப்பு மணி அடிக்கும் சத்தம் கேட்டு, ரங்காவுக்கு முழிப்பு

வந்தது… தற்செயலாக மணியை பார்க்க எட்டு என்றது. எழுந்தவள் பாட்டி குளிக்கும் சத்தம் கேட்டு நானே கதவை திறக்க வாசலுக்கு சென்றாள்

வாசலில் உபேந்திரா… ஒன்றும் சொல்லாமல் உள்ளே நுழைந்தவன், அவளது அறையை எட்டிப் பார்த்தான்… “குழந்தைகள் இன்னும் எழுந்திருக்கவில்லையா…?”

பதிலே சொல்லாமல் அவள் உள்ளே சென்றாள். “உன் கிட்ட தான் கேட்டேன்…!” பின்னாலேயே வந்தவன் அவளிடம் கேட்க, அதற்கும் அவளிடம் பதிலில்லை… நேராக பாத்ரூம் சென்று கதவை அடைத்துக் கொண்டாள்.

“உடம்பு புல்லா திமிரு. கேட்ட கேள்விக்கு பதில் சொன்னா என்ன வாயிலிருந்த முத்தா கொட்டிடும்…” அவன் சத்தமாகவே சொன்னான்.

அதற்குள் அவனது சத்தம் கேட்டு குழந்தைகள் முழித்து விட்டனர்… ‘அப்பா’ என்று இரண்டு பேரும் குரல் கொடுக்க, அவர்கள் அருகில் சென்றான்… ‘அப்பா’ என்று இரண்டு குழந்தைகளும் அவனது கழுத்தைக் கட்டிக் கொண்டனர்…

“ஏம்பா நீங்க நேத்து ராத்திரி வரல…?”

“இல்லடா கண்ணா நேரமாயிடுச்சி. அதான் வரல…

“நீங்க வராததினால் அம்மா அழுதாங்க…” என்றது பாவனா.

“நான் வராததனால அம்மா அழுதாங்களா… என்னடா…?”

“இல்லப்பா அதுக்கு அழல. கீழ் வீட்டு ஆன்ட்டி அவங்கள திட்டிட்டாங்க…” அதற்குள் பிரஷ் பண்ணிவிட்டு வெளியில் வந்தவள் “பார்த்தி, பாவனா பிரஷ் பண்ண வாங்க…” என்று அழைத்தாள்.

குழந்தைகளும் என்ன நினைத்தார்களோ தெரியவில்லை. உடனே அவளிடம் வந்தனர். இருவரையும் பிரஷ் பண்ண வைத்து, வெளியில் அழைத்து வந்தவள், “வாங்க பால் குடிச்சிட்டு போங்க.” என்று கிச்சனுக்குள் அழைத்துச் சென்றாள்.

உபேந்திரா பின்னால் எழுந்து வந்தான். பாலை எடுத்துக் கொண்டு வந்து டைனிங் டேபிளுக்கு வந்தவள், பால் சூடு அதிகமாக இருக்க, அதை ஆற்ற ஆரம்பித்தாள்… அழுது வீங்கியிருந்த கண் இமைகளும் வாடியிருந்த முகமும், ஏதோ நடந்திருக்கிறது என்பதை தெளிவாக காட்ட, ‘என்ன விஷயம் கேட்கலாமா வேண்டாமா’ என்று தனக்குள் குழம்பிக் கொண்டு அவளை பார்த்திருந்தான்…

பாட்டி பூஜை அறையில் இருந்தார். அதற்குள் ஹாலில் யாரோ நுழையும் சத்தமும், பேச்சுக் குரலும் கேட்க, யாராக இருக்கும்

என்று உபேந்திரா யோசிப்பதற்குள், ரங்கா எழுந்து ஹாலுக்கு சென்றாள்...

# அத்தியாயம் 7

“இதோ வந்துட்டாளே உங்க அருமை மகள்...? நம்ம வீட்டு மானத்தை ஏலம் போடுவதற்கென்றே பிறந்தவ. மூணு வருஷத்துக்கு முன்னாடியே எல்லார் மானத்தையும் வாங்கியாச்சு... இப்பதான் அதை எல்லாரும் மறந்து கொஞ்சம் நிம்மதியாய் இருக்க ஆரம்பிச்சோம். அது பொறுக்கலையே உனக்கு. திரும்பவும் ஆரம்பிச்சுட்டியா...?”

“வாம்மா, இப்ப என்ன ஆச்சுன்னு, நீ இங்க வந்து சத்தம் போடுற...?” என்று ரங்கா கேட்க...

“இன்னும் என்ன ஆகணும்...? ஏண்டி நீ என்னதான் நினைச்சுட்டு இருக்க உன் மனசுல...? கல்யாணம் பண்ண மாட்டேன்ன...? தொலையுதுன்னு விட்டோம். ஆனா அப்படியே இருந்தியா...! புதுமை, புரட்சின்னு கல்யாணம் ஆகாமலே ஒண்ணுக்கு ரெண்டு புள்ளையை பெத்து கிட்ட, அதுக்கு உங்க பாட்டி வேற உனக்கு சப்போர்ட். ம்ம்...

ஆம்பள துணையே வேண்டாம். நானே தனியாய் இருந்து என் பிள்ளைகளை வளர்த்துக்கிடுவேன்னு சொல்லிதானே, பிள்ளை

பெத்துகிட்ட. அப்புறம் என்னடி? அப்படியே இருந்து தொலைய வேண்டியதுதானே…?

இப்ப எதுக்கு புதுசா அப்பான்னு ஒருத்தன் வீட்டுக்குள்ள கூட்டிட்டு வந்து வச்சு, கும்மி அடிக்கிற…! எங்க மானம் மரியாதை, கவுரவம் எல்லாம் போச்சு தலைநிமிர்ந்து நடக்க முடியல ரோட்டில. நீயும் உங்க பாட்டியும் எப்படித்தான் நடமாடுறீங்களோ…? வெக்கமாயில்ல…” வைதேகி கோபத்தில் உரத்துச் சப்தமிட்டாள்.

“அப்படி எல்லாம் எதுவும் இல்லமா… அந்த குழந்தைகளோட அப்பா அவர்தான். அவர் குழந்தைகளை வந்து பார்த்துட்டு போய் விடுவார். நான் அவர் கிட்ட தேவையில்லாமல் பேசுவது கூட கிடையாதும்மா. என்னை பத்தி உனக்கு தெரியாதா…? நான் யார் கிட்டயும் பேசக்கூட மாட்டேன்மா, ப்ளீஸ் என்ன நம்பு…” என்று ரங்கா கெஞ்சிக் கொண்டு இருக்கையிலே, பாட்டியும் உபேந்திராவும் குழந்தைகளையும் கையில் பிடித்துக் கொண்டு அங்கு வந்தனர்…

“சபாஷ். உள்ள ஆள வச்சுகிட்டு தான் இவ்வளவு நாடகமும் போடுதியா…? ஏண்டி காலங்காத்தால இவனுக்கு உங்க வீட்ல என்ன வேலை?’

“இப்பதான் குழந்தைகளை பார்க்க வந்தார். கோர்ட் உத்தரவு. இல்லேன்னா நான் அனுமதிக்க மாட்டேன், இது தெரியாதா உனக்கு. அந்த உத்தரவை மீறினால் தப்புமா...”

“கோர்ட்டு உத்தரவு போட்டால் வாசலில் வைத்து, பார்க்க வைத்து அனுப்ப வேண்டியது தானே. எதுக்கு உள்ள விடறே...? ஏய் எல்லாம் கேள்விப்பட்டு தாண்டி வாரேன். இங்க இருக்கிறவங்க எனக்கு போன் பண்ணி கதை கதையாய் சொல்றாங்க...? நீயும் அவனும் போட்டி போட்டுக் கொண்டு குழந்தைகளை கூட்டிட்டு வெளியில போறதும், வாரதும், ராத்திரி அவன் இங்கே வருவதும் என்னடி நெனச்சிட்டு இருக்க...?

நீயே இப்படி இருந்தேன்னா... உன்னோட குழந்தைகள் எந்த லட்சணத்துல வளரும்...? அதுகளும் உன்ன மாதிரி தட்டு கெட்டு, தட்டழிந்து தான் போகும். உங்க அப்பா உதவாக்கரை தான், சம்பாதிக்க துப்பில்லாதவர்தான். அதுக்காக நான் இப்படி அவரை விட்டுப் போயிருந்தேன் அப்படின்னா உங்க எல்லார் நிலைமையும் என்னவாயிருக்கும்...?

விதிப்படி வாழ்க்கை அமையும். அதை சகித்துக் கொண்டு வாழணும்... அப்படி இல்லைன்னா கடைசிவரை கல்யாணம் பண்ணாம தனியா இருந்து வாழணும். இரண்டும் இல்லாமல், இரண்டும் கெட்டானா வாழ்ந்து எங்க உயிரை வாங்க கூடாது...!”

“போதும் நிறுத்து. அவ உன்னோட பொண்ணு வைதேகி… பெத்த பொண்ணுகே இப்படி சாபம் கொடுப்பியா…? அவ பார்க்க தான் பலாப்பழம் மாதிரி முள்ளா தெரிவா. அவ மனசு பலாச்சுளை மாதிரி இனிப்பாய் இருக்கும். ரொம்ப மென்மையான மனசு அவளுக்கு. அந்த குழந்தையை திட்ட உனக்கு எப்படி மனசு வந்தது…?

அவளை கூட பரவாயில்லை. அவ பெத்த பிள்ளைகள் உனக்கு பேரக்குழந்தைகள். அவங்களை திட்டுவதற்கு யார் உனக்கு உரிமை கொடுத்தது…? ஒரு நாள் ஒரு பொழுது ஒரு நொடி அந்த குழந்தைகளை நீ தொட்டு பார்த்து இருப்பியா…? பிடிக்கலைன்னு மொத்தமா விலக்கி யாச்சு. அதுக்கப்புறம் வந்து எங்களை தொந்தரவு பண்ற…?”

“நாங்க எங்க தொந்தரவு பண்றோம்… இங்க உள்ளவங்க போன் பண்ணியதால் தான் நாங்க வந்தோம்…!” என்று பதிலுக்கு வைதேகி கத்த, வாசலில் பார்த்தால் அப்பார்ட்மெண்டில் உள்ள பாதி பேர் அங்கு நின்று கொண்டிருந்தனர்…

அசோக்கின் அம்மா வைதேகியிடம் “நல்ல கேளுங்கம்மா… இது என்ன குடித்தனக்காரர்கள் இருக்கிற வீடா, அல்லது வேறு எதுவுமா…? அப்படித்தான் நான் இருப்பேன் அப்படின்னா, தனியாக ஒரு வீடு எடுத்து என்னமோ செஞ்சு தொலைக்கணும்.

இப்படி மத்த குடித்தனக்காரர்களுக்கு இடைஞ்சலாக இருக்கக் கூடாது. இவன் ஒருத்தன் தான் வருவானா, அல்லது வேற யாரும் வராங்களான்னு யாருக்கு தெரியும். இவங்கள பார்த்து எங்க வீட்டுக்காரங்க எங்களை சந்தேகப்பட்டால், எங்க குழந்தைங்க தப்பா பேச ஆரம்பிச்சா...! என்று வாசலில் நின்றுகொண்டே அவள் பேச...

“நிறுத்துங்க எல்லாரும். இனி ஒரு வார்த்தை பேசினீங்க. நடக்குறதே வேற...” என்று உபேந்திரா கர்ஜித்தான். “பாட்டி குழந்தைகளை கூட்டிட்டு நீங்க உள்ள போங்க.” என்றவன் அவர்கள் சென்றதும் அந்த கதவை இழுத்து சாத்தினான்...

“என்ன கேட்டீங்க...? இவளை பாத்து என்ன கேட்டீங்க...? ஆள வச்சிருக்கியான்னா...? அதுவும் உங்க ஐந்து வயது பையன் கேட்பானா...? அதுக்கு அர்த்தம் தெரியுமா அவனுக்கு...? அப்படிப்பட்ட வார்த்தைகளை குழந்தைக்கு சொல்லிக் கொடுக்கிற நீங்க, மத்தவங்களோட ஒழுக்கத்தைப் பற்றி பேச வந்துட்டீங்க...

என்ன தெரியும் இவள பத்தி...? எனக்கு ஒரு வாரமா தான் இவளை தெரியும். அதுக்கு முன்னாடி தெரியாது. ஒரு வக்கீல் அது மட்டும்தான் தெரியும். இந்த ஒரு வாரத்துல நான் இவளை கவனிச்சதுல, இப்படிப்பட்ட ஒரு பொண்ண பார்த்ததே இல்லை. யாரையும் தப்பா நினைக்காத ஒரு குணமும், எல்லாருக்கும் உதவி

பண்ற மனப்பான்மையும், ஆடம்பரம்னா என்னனு தெரியாத ஒரு வாழ்க்கை முறையும், ஆண்களை கண்டால் பேசாமல் ஒதுங்கி போற பண்பும், உங்க யாருக்குமே கிடையாது…

பொதுவாக இப்ப உள்ள பெண்கள் எல்லாருமே, பணக்காரனா ஒருவனை கண்டால் அவன் கிட்ட பேசற விதம், பழகும் விதமே தனி. ஆனால் பணத்துக்கு மதிப்பு கொடுக்காத பெண்ணை நான் முதல் முறையாக இப்பதான் பார்க்கேன். தன்னோட உழைப்பு மூலமே வாழணும் நினைக்கிற அந்தப் பண்பு நான் இப்பதான் பார்க்கேன்…

ஓசில கிடைச்சா என்ன வேணா வாங்கிகிற இந்த சமூகத்துல, சின்ன குழந்தையில் இருந்தே உழைத்து, தானே படிச்சு, தன் கால்ல நின்னு தன் குடும்பத்தை காப்பாத்தியவளுக்கு பெத்த அம்மா நீங்க குடுத்த பட்டம் போதும். யாராவது அவளை பத்தி ஒரு வார்த்தை சொன்னீங்க, இருந்த இடம் தெரியாம அழிச்சுருவேன். சந்தேகம் இருந்தால் திரும்பி பாருங்க…” என்று சொல்ல, அங்கே ஏசி மதிவாணன் நின்றிருந்தான்… பாட்டி போன் பண்ணி வாசுவிடம் சொல்லிவிட, வாசுவும் அங்கு வந்து சேர்ந்தான்.

“என்ன பிரச்சினை மிஸ்டர்.உபேந்திரா…?”

“நானும் என் மனைவியும் இரு குழந்தைகளும் இருக்கிற வீட்ல, எங்கள பத்தி என்ன எதுன்னு தெரியாம, எங்களை தாறுமாறா பேசினதுக்காக நான் இவங்க மேல கம்ப்ளைன்ட் கொடுக்கிறேன். நீங்க இவங்க எல்லாத்தையும் அரெஸ்ட் பண்ணுங்க…” என்றான்.

அரஸ்ட் என்றதும், மற்ற குடித்தனக்காரர்கள் மெதுவாக கலைய ஆரம்பிக்க, அசோக்கின் அம்மாவையும் அப்பாவையும், மதிவாணன் தடுத்து நிறுத்தினார்… “நீங்க இருங்க சார். எங்க போறீங்க…? உங்க மேல தான் சார் கம்ப்ளைன்ட் சொல்லிட்டு இருக்காரு… இருந்து பதில் சொல்லிட்டு போங்க…

நீங்க யாரும்மா…? என்று வைதேகியும் கேசவனையும் அதட்ட…

“நாங்க ரங்காவோட அம்மா அப்பா…?”

“ஏன்மா, பெத்த பொண்ண இப்படியா பேசுவீங்க…? சார் யார் தெரியுமா…? ஃபேமஸ் கிரிமினல் லாயர்… உங்க மருமகனாக போறவர்… அவர் நெனச்சா குடும்பத்தையே உள்ள தூக்கி வைக்க முடியும்…”

“மருமகனா…”

“பின்ன, அடுத்த வாரம் கல்யாணம் வச்சிருக்காங்க. குழந்தைங்க ரொம்ப தேடுறதுனால இங்க பிள்ளைகளை பார்க்க வந்து போயிட்டு இருக்கார். உங்க வீட்ல எல்லாம் ஆயிரம் ஓட்டை வெச்சுக்கிட்டு எதுக்கு அடுத்த வீட்டைப் பத்தி பேசுறீங்க. இப்ப வீட்டுக்கு வீடு காதல் கல்யாணம், ஓடிப் போவது எல்லாம் தான் நடக்குது. அதை இவங்க வந்து உங்க கிட்ட பேசிட்டு இருக்காங்களா…?” என்று போலீஸ் தோரணையில் அதட்டினான்.

அதற்குள் கதவு திறந்து பாட்டி ரங்கா வெளியே வந்தார்… ஏசி மதிவாணனை பார்த்து எந்த பிரச்சனையும் வேண்டாம் சார். எல்லாரையும் வெளியில் போக சொல்லுங்க. தம்பி தப்பா நினைக்காதீங்க. நீங்களும் உங்க வீட்டுக்கே போயிடுங்க. அவ தாங்க மாட்டா தம்பி. எனக்கு என் குழந்தையை பற்றி நல்லா தெரியும்…

நீங்க போகும் போது உங்கள் குழந்தைகளை கூட அழைச்சிட்டு போயிடுங்க. நான் அவளை சமாதானப் படுத்திக்கிறேன். எனக்கு என் பேத்தி மட்டும் இருந்தால் போதும். இங்க பாருங்க சிலையாய் நிற்கிறதை. இத்தனை ஏச்சுக்கும், பேச்சுக்கும் அவள் எந்தவித பதிலும் சொல்லாமல் நிற்கிறாள் என்றால், ஏதோ தப்பா படுது தம்பி…” என்று பாட்டி சொல்லும்

முன், வாசு அவள் அருகில் சென்று, “ரங்கா” என்று அழைக்க, அவள் புரியாது அவனைப் பார்த்தாள்.

“ரங்கா” என்று அழைத்து வாசு அவள் தோளை அசைக்க, வாசுவை மட்டும் தெரிந்து கொண்டவள், “வாசு, உனக்கு என்னை தெரியும்தானடா. நான் தப்பு பண்றவளா, நான் இவரை வச்சிருக்கேனாம், எல்லாரும் சொல்றாங்க… என்னை பெத்தவளும் சொல்றா…? வச்சிருக்கேன் அப்படின்னா என்னடா அர்த்தம்…? எனக்கு இங்கே வலிக்குதுடா…” என்று நெஞ்சைத் தொட்டுக் காட்டியவள், “ஐயோ எனக்கு தாங்கவில்லையே, என்னமோ மாதிரி மூச்சு முட்டிகிட்டு வருது. கல்யாணம் வேண்டாம்னு சொன்ன நானா ஒரு ஆம்பள மேல ஆசைப்பட்டு இருப்பேன். ஐயோ எனக்கு என்னமோ பண்ணுதே…” என்றவள் அடுத்த நொடி மயங்கிச் சரிய, வாசு அவளை கையில் ஏந்திக் கொண்டான்.

குழந்தைகள் இருவரும் “அம்மா, அம்மா” என்று கதற, பாட்டி, “ரங்கா உனக்கு என்னம்மா செய்யுது…?” என்று கேட்டவர், தாங்கமாட்டாமல் மயங்கி விழுந்து விட்டார். என்ன செய்வது என்று புரியாமல் திகைத்த உபேந்திரா அடுத்த நிமிஷம் ஹாஸ்பிடலுக்கு அழைத்து, ஆம்புலன்ஸ் அனுப்பச் சொன்னான்.

உபேந்திரா பாட்டியை கொண்டு போய் கட்டிலில் கிடத்த, வாசு ரங்காவை ஒரு கட்டிலில் படுக்க வைத்தான். இருவருக்கும்

தண்ணீர் தெளித்து பார்த்தனர். ஆனால் மயக்கம் தெரியவில்லை. அதற்குள் கதறிய குழந்தைகளை தன் இரு தோளிலும் தூக்கிய உபேந்திரா வாசுவிடம் “வாசு குழந்தைகளை உங்க வீட்ல கொண்டு போய் விட்டுட்டு வாங்க. குயிக், இப்ப ஆம்புலன்ஸ் வந்துடும். நம்ம இவர்களை ஆஸ்பிட்டல்ல அட்மிட் பண்ணிடலாம்…” என்று சொல்ல…

வேறு வழி இல்லாததால் குழந்தைகளை தன் வீட்டில் விட்டு விட்டு வந்தான். அடுத்த ஒரு மணி நேரத்தில் இருவரும் கல்யாண் ஹாஸ்பிட்டலில் அட்மிட் செய்யப்பட்டனர். மதிவாணன் எல்லோரையும் எச்சரித்து அனுப்பி விட்டு, உபேந்திராவுக்கு போன் செய்தான்…

“இப்ப எப்படி இருக்காங்க ரெண்டு பேரும்…?”

“இன்னும் மயக்கம் தெளியவில்லை. ரெண்டு பேரும் கொஞ்சம் அனிமிக்கா இருக்காங்க… மற்றபடி வேற ஒரு பிரச்சினையும் இல்லை…”

“மிஸ்டர் உபேந்திரா சொல்றேன்னு தப்பா நினைக்காதீங்க. மிஸ். ரங்கா என்னை பொருத்தவரை மிகவும் நல்ல பெண். நீங்க முடிஞ்சா அவங்களை நல்லா பார்த்துக்கோங்க. இல்லேன்னா ஒரேடியா விலகிடுங்க. அவங்க தனியா இருந்தா கூட நிம்மதியா

இருப்பாங்க. ஏன்னா அவங்கள ஒரு அஞ்சாறு வருஷமா நானும் பார்த்துட்டு தான் இருக்கேன். இது என்னோட ரிக்வெஸ்ட்…" என்று போனை வைத்தான்.

விஷயம் தெரிந்து சேதுராமனும் ஹாஸ்பிடல் வந்து சேர்ந்தார். உபேந்திராவை பார்த்து "என்னடா என்ன ஆச்சு…?" என்று கேட்க…

உபேந்திரா நடந்ததைக் கூற, "இந்த மாதிரி பிரச்சனை எல்லாம் வரும்னு எனக்கு தெரியும்…" என்றவர் உள்ளே சென்று இருவரையும் பார்த்து வந்தார்…

வெளியில் கவலையாக ஒருபுறம் நின்ற வாசுவின் அருகில் சென்றவர், "கவலைப்படாதே எல்லாம் சரியாயிடும், நீ கொஞ்சம் என்னோட ரூமுக்கு வா. கொஞ்சம் உன்கிட்ட பேசணும்…" என்று அவனை மட்டும் அழைத்து சென்றார்…

சேதுராமன் அறைக்குள் சென்று பத்து நிமிஷம் ஆகியும் ஒன்றும் பேசாமல் தனக்குள் இருவரும் அவரவர் சிந்தனைகளில் மூழ்கி இருந்தனர்.

இந்த மாதிரி பிரச்சினை வெடிக்கும் என்று தெரிந்தாலும் இத்தனை சீக்கிரம் அது வெடிக்கும், அதனால் இருவருமே இந்த

மாதிரி பாதிக்கப்படுவார்கள் என்று சேதுராமன் எதிர்பார்க்கவில்லை.

பிரச்சனைகள் லேசாக வரும்பொழுது தன்னிடம் ரங்கா அதை சொன்னால், தானே இருவரிடமும் பேசி திருமணத்துக்கு ஏற்பாடு செய்து விடலாம், என்பதுதான் அவரது எண்ணமாக இருந்தது…

ஆனால் வேறு மாதிரியான விளைவுகளை ஏற்படுத்தும் என்று அவர் எதிர்பார்க்கவில்லை.

வாசுவும் அதே மாதிரி சிந்தனை ஓட்டத்திலேயே இருந்தான். உபேந்திரா ரங்காவின் வீட்டுக்கு வந்த நாள் முதல், தானும் சென்றால் பிரச்சினை வேறு மாதிரி திசை திரும்பி விடக்கூடாதே என்று அதிகமாக செல்லாமல் போன் மூலமாகவே எல்லாம் விசாரித்து அறிந்து கொண்டான்.

அதையும் மீறி பிரச்சனை வந்தால் ரங்காவிடம் பேசி இதற்கு தீர்வு காண வேண்டும் என்று நினைத்து இருக்கையிலேயே, காலையில் பாட்டி போன் பண்ணி விட்டார். எதற்கும் கலங்காத பாட்டி, "வாசு நீ உடனே வா. இங்க ஒரே பிரச்சினையா இருக்கு. வைதேகி வந்திருக்கிறாள்…" என்று சொன்னதுமே நிலமையை புரிந்து கொண்டு அடித்து பிடித்துக் கொண்டு வந்தான். அதற்குள் எல்லாமே கை மீறி போய்விட்டது…

"வாசு" என்று சேதுராமன் அழைப்பில் நிமிர்ந்தவன், என்ன என்பது போல் பார்க்க, "வருத்தப்படாதப்பா, எல்லாம் சரியாயிடும். இல்லேன்னா நாம சரியாக்கணும். அதுக்கு எனக்கு உன்னோட அனுமதி தேவை...!" என்று அன்புடன் சொன்னார்.

"ஐயோ என்ன சார் இது? பெரிய வார்த்தையெல்லாம் சொல்லிக்கிட்டு, எனக்கு ரங்காவோட வாழ்க்கை சீராகி, பாட்டியும் அவளும் நிம்மதியாய் இருந்தாலே போதும். குழந்தைகளோட அப்பா உங்க பேரன்னு ஆயிடுச்சு. யாருக்காக இல்லைனாலும் அந்த குழந்தைகளுக்காக ரங்கா உங்க பேரனை ஏத்துக்கிட்டு தான் ஆகணும். ஆனா அது இரண்டு பேரும் மனது ஒத்து போய் நடக்கணும். அதுதான் என்னோட வேண்டுதல்...!"

"புரியுதுப்பா நீ என்ன சொல்ல வரேன்னு...! இவனுக்கும் கல்யாணத்துல அவ்வளவு இன்ட்ரஸ்ட் இல்ல. அவளும் கல்யாணம் பண்ணிக்க பிரியப்படவில்லை... இது தெரிஞ்சு தான் உபேந்திராவை டோனரா ரங்காவோட கேசுக்கு உபயோகப்படுத்தினேன்.

அதனால இப்ப அதை சரி செய்ய வேண்டிய பொறுப்பும் எனக்கு இருக்கு. நம்ம அவங்க ரெண்டு பேர்கிட்டயும் பேசி கல்யாணத்துக்கு சம்மதம் வாங்கினால் மட்டும் போதும்.

அவங்களை சேர்த்து வைக்கிற வேலையை அவங்க குழந்தைங்க பார்த்துப்பாங்க. இதுதான் உண்மை…!”

“அது எப்படி சார்…?”

“அது அப்படித்தான். குழந்தைங்க தான் பெத்தவங்களோட நெருக்கத்தை இன்னும் அதிகப்படுத்துவது. அதை அவங்க அனுபவப்பூர்வமா புரிஞ்சுக்கிட்டாங்கன்னா தன்னால ஒன்று சேர்ந்துடுவாங்க.

நீ செய்யவேண்டியது ஒன்றுதான். எனக்காக ஒரு விசயம் பண்ணு. ரங்கா கண்ணு முழிச்சதும் கல்யாணத்துக்கு அவளோட சம்மதம் மட்டும் எனக்கு வாங்கி கொடு…" என்று வேண்டினார்.

"கண்டிப்பா வாங்கித் தரேன் சார்…! எனக்குமே அவ பட்ட கஷ்டத்துக்கு, இது ஒண்ணுதான் தீர்வுன்னு தோணுது…” என்றவன் அவரிடம் விடைபெற்று வெளியில் சென்றான்…

அவர்கள் இருவரும் கண்விழித்ததும் தன்னிடம் சொல்லுமாறு அங்கிருந்த செவிலி பெண்ணிடம் சொல்லிவிட்டு, தனது அறைக்கு வந்த உபேந்திரா யோசனையில் ஆழ்ந்தான்.

அவனுக்கு இன்று காலை முதல் அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சி. முதலில் ரங்கா அவனை ஒரு பொருட்டாக நினைக்காதது, பேசாதது அதிர்ச்சியாக இருந்தது.

குழந்தைகளின் அப்பாவாக, உள்ள உரிமையை அவன் எடுத்தாலும், அதற்கு கோபப்பட்டாலும் கூட கேட்ட கேள்விக்கு எப்பொழுதும் பதில் சொல்லி விடுவாள். ஆனால் அன்று பேசாமல் முகம் திருப்பிக் கொண்டு போனது அவனுக்கு தன்னை இன்சல்ட் செய்ததாக தோன்றியது.

ஆனால் அடுத்த நிமிடம் முந்தைய நாள் நடந்த விஷயத்தைப் பற்றி சொல்லி அம்மா அழுததாக சொல்லவும், புதிதாக நடந்திருக்கிறது என்று புரிந்து கொண்டான்.

இதை பற்றி கேட்டு, எதுவும் பிரச்சினை என்றால் தான் உதவி பண்ணலாம் என்று நினைக்கையிலேயே, வைதேகி வந்து கொட்டிய வார்த்தைகளை கேட்டு அவனுக்கு ஒரு நொடி சகலமும் அதிர்ந்து விட்டது.

அவன் வாழுகின்ற ஹைகிளாஸ் சொசைட்டியில் எப்படியாபட்ட அப்பட்டமான அவமானக் கேடு நடந்தாலும், முகத்திற்கு நேரே சம்பந்தப்பட்டவர்களிடம் தேனொழுக பேசுவர்.

பின்னால் அவர்களைப்பற்றி கழுவி, கழுவி ஊற்றினாலும், அவர்களுடைய பணமும் பதவியும் தங்களுக்கு எப்பொழுதும் வேண்டும் என்பதால் முகத்திற்கு நேரே அதை பேசவே மாட்டார்கள்...

அதே மாதிரி தான் இருக்கும் என்று நினைத்துக் கொண்டு தான், அவர்கள் வீட்டில் தங்குவதும் மூலம் என்ன பிரச்சனை பெரிதாக வந்துவிடும் என்று நினைத்து விட்டான்.

ஆனால் நடுத்தரக் குடும்பங்களில் எந்த ஒரு விஷயமும், மற்றவர்கள் கண் பார்வையில் தப்பாது என்பதும், அதை முகத்துக்கு நேராக பேசுவார்கள் என்பதும் அவன் அறிந்து கொள்ளாத ஒன்று.

மகன் சொன்னதுமே, தேவையில்லாத பேச்சு தன்னால் வந்துவிட்டதே என்று நினைத்து அவளிடம் எப்படி இதை விளக்குவது என்று நினைத்துக் கொண்டிருக்கையிலேயே, அவளது அம்மாவும் வந்து, தரக்குறைவாக பேச, அவனால் தாங்க முடியாது போயிற்று.

தன்னிடம் அவள் தேவையில்லாமல் பேசியதுகூட இல்லை. அது தெரியாமல் அவர்கள் பேசப் பேச, ஒரு உத்தமமான பெண்ணை இந்த மாதிரி பேசுகிறார்களே என்று கோபத்திலும், அவற்றைவிட தன்னுடைய குழந்தைகளின் அம்மா அவள், நம்முடைய குழந்தைகள் தனக்கு முக்கியம் என்றால் குழந்தைகளுக்கு அவள் முக்கியம் என்ற விதத்தில், தன்னை அறியாது உரிமை உணர்வு எழ கோபத்தில் என்ன பேசுகிறோம் என்று தெரியாமல், தன்னுடைய மனைவி ஆகப் போகிறவள்

என்றும் அடுத்த வாரம் திருமணம் என்றும் சொல்லிவிட்டு வந்து விட்டான்…

இப்போது இதை அவள் ஏற்றுக் கொள்வாளா…? முதலில் தான் ஒரு குடும்ப பந்தத்தில் கட்டுப்பட்டு இருக்க முடியுமா…? அதிலும் ரங்காவின் சுய கவுரவம் பார்க்கும் குணம், அவர்கள் இருவருக்கும் ஒத்துப் போகுமா…?

குடும்ப வாழ்க்கை என்பது விட்டுக்கொடுத்தல் நிறைந்த ஒன்று. அதில் ஏட்டிக்குப் போட்டி கணவன், மனைவி இருவரில் யார் பண்ணினாலும் வாழ்க்கை நரகம் தான். அவர்கள் அம்மா, அப்பா வாழ்க்கையைப் பார்த்து அவர்களின் சண்டையை எப்பொழுதுமே பார்த்துக் கொண்டே இருந்த அவனுக்கு, இப்படி ஒரு வாழ்க்கை அமைந்து விட்டால் என்ன செய்வது என்ற பயத்திலேயே அவன் திருமணத்தை விரும்பவே இல்லை.

மேலும் பெண்களை அவன் அறியாதவன் அல்ல. அவனுடைய மேல்தட்டு நாகரீக வாழ்க்கை அதை அவனுக்கு எளிதில் கிடைக்கச் செய்ய, அவன் கல்யாண பந்தத்தில் சிக்க விரும்பவில்லை…

ஆனால் எதிர்பாராத விதமாக குழந்தைகள் பற்றிய செய்தி தெரிந்ததும், தன்னுடைய வம்சம், வாரிசு, தன்னுடைய இரத்தம்

என்று அறிந்ததும், தன்னை அறியாமலேயே குழந்தைகள் மீது ஒரு பிடிப்பு வந்துவிட்டது.

அந்தக் குழந்தைகளை பார்க்காமலும், பேசாமலும் இனி அவனால் இருக்க முடியாது என்பது தெளிவாக தெரிந்து போயிற்று. யாருக்காகவும், எதற்காகவும் குழந்தைகளை அவனால் விட்டுக் கொடுக்க முடியாது…

இந்த சூழ்நிலையில் வைதேகியின் பேச்சு, அவனுக்குக் கோபத்தை உச்சகட்டத்தில் ஏற்றிவிட, அவன் ஏசி மதிவாணனை அழைத்துவிட்டான். அவனுக்கு இருந்த கோபத்தில் அவர்களை உள்ளே தள்ளி நாலு தட்டு தட்ட தான் ஆசை.

ஆனால் பாட்டி அதை விரும்பாததுதான் அவர்களை விட்டு விடும்படி ஆயிற்று. பாட்டியே குழந்தைகளை நீங்கள் வைத்துக்கொள்ளுங்கள் எனக்கு ரங்கா மட்டும் தான் முக்கியம் என்று சொல்ல, விழிப்பது இப்போது அவன் முறை ஆயிற்று.

என்னதான் குழந்தைகளை தான் வளர்த்தாலும், தாயில்லாமல் வளர்வதில் அவனுக்கு ஒப்புதல் இல்லை. எத்தனை கோடி பணமிருந்தாலும் தாயின் இடத்தை யாராலும் நிரப்ப முடியாது…

சாதாரண தாய்க்கே இந்தச் சொல் பொருந்தும் எனில், அந்த குழந்தைகளுக்காக தன்னுடைய மானம், கௌரவம், வாழ்க்கை

அத்தனையும் அடகு வைத்த ரங்காவின் செயல் அவனுக்கு பிரமிப்பில் ஆழ்த்தியது…

அத்தகைய பெண்ணிடமிருந்து அவள் குழந்தைகளைப் பிரித்து தான் மட்டும் வளர்ப்பது என்பது மனசாட்சிக்கு விரோதமான செயல். கடவுளுக்கு அது பொறுக்காது என்பதால், அவளை திருமணம் செய்து கொள்ளலாம் என்று முடிவெடுத்தான்.

ஆனால் இந்த திருமணத்திற்கு அவள் ஒத்துக் கொள்வாளா…? ஆண்கள் என்றாலே காத தூரம் விலகிச் செல்லும் அவளது குணத்தை மாற்றிக் கொள்வாளா…?

தன்னுடைய சுயத்தை விட்டுக் கொடுக்காமல் வாழும் வாழ்க்கை வேண்டும் என்பதற்காகவே, கல்யாணம் பண்ணாமல், தன்னுடைய சந்தோஷத்துக்காக மட்டும் குழந்தைகளை பெற்றெடுத்து, அவர்களை நல்ல முறையில் வளர்க்க வேண்டும் என்று ஆசைப்பட்ட ரங்கா, அவளும் குழந்தைகளும் இருக்கும் வாழ்க்கையில் என்னையும் இணைத்து கொள்வாளா…?

அப்படியே இணைத்துக் கொண்டாலும் எங்கள் இருவரின் எண்ணங்களும் ஒத்துப் போகுமா…? இல்லையென்றால் இருவரும் இரு திசையில் நிற்போமா?

அப்போது எங்கள் குழந்தைகளின் கதி...? என்று பலவிதமாக குழம்பியவன், பதில் தெரியாமல், சேரின் பின்னால் தலை சாய்த்து கண்களை மூடி, யோசித்து இருந்தான்.

# அத்தியாயம் 8

முதலில் ரங்காவுக்கு தான் நினைவு வந்தது… அவள் விழித்ததும், அங்கிருந்த செவிலிப் பெண், வெளியில் வந்து அங்கு காத்திருந்த வாசுவிடம் சொல்லி அவனை அழைத்துக்கொண்டு உள்ளே சென்றாள்.

"வாசு எனக்கு என்ன ஆச்சு…? பாட்டி எங்க…?

அவள் அருகில் வந்தவன், தலையை தடவிக் கொடுத்தான். "ஒண்ணும் இல்லடா டென்ஷன்ல கொஞ்சமா மயக்கம் ஆயிட்டே. இப்ப சரியா போச்சு. கொஞ்சம் எனர்ஜியா இருக்கும்னு ட்ரிப்ஸ் போட்டிருக்காங்க, அவ்வளவுதான்…" என்று ஆறுதலாக கூறினான்.

அவன் பேசியதற்கு மாறாக அவன் கண்களிலிருந்து இரண்டு சொட்டு கண்ணீர் அவள் மேல் விழுந்தது. அவனைப் பொறுத்தவரை மிகவும் தைரியமானவள் ரங்கா.

எந்த விஷயத்திற்கும் எதற்காகவும் அவள் கலங்கி அவன் பார்த்ததே இல்லை. வைரத்தைப் போல உறுதியான மனதை பெற்றிருந்தாலும், மலரைவிட மென்மையானவள் ரங்கா…

நட்புக்காகவும், பாசத்துக்காகவும், குடும்பத்திற்காகவும் எந்தவிதமான தியாகத்தையும் செய்யத் தயங்காதவள்… ஆனால்

அவள் எதிர்பார்க்கிற ஒரே விஷயம் நேர்மை… நேர்மை தவறி அவளிடம் யார் நடந்தாலும் அதை அவளால் மன்னிக்கவே முடியாது.

அத்தகைய அவனது உடன்பிறவாச் சகோதரி, அவனது ஆருயிர் தோழி, மனதளவில் சோர்ந்து போய், வாடிய கொடியாய் பார்த்தவனுக்கு, உடன் வளர்ந்த பாசம், கண்களில் கண்ணீர் பெருகியது.

வாசுவின் கண்களில் கண்ணீரை பார்த்தவள், "ஏய் எதுக்குடா அழற, அதுதான் நான் முழிச்சிட்டேனே…? பாட்டி எங்க…?"

"பாட்டியும் அடுத்த ரூம்ல இருக்காங்க…?"

"ஏன், அவங்களுக்கு என்ன ஆச்சு…?"

"நீ மயங்கி விழுந்ததை பார்த்ததும், அவங்களுக்கு ஒரு மாதிரி இருந்துச்சு. அதனால இங்க கொண்டு வந்து அட்மிட் பண்ணிட்டேன். தூக்கத்துக்கு ஊசி போட்டதுனால தூங்கிட்டு இருக்காங்க…!"

"குழந்தைங்க…"

"அவங்க என் வீட்ல கீர்த்தி கிட்ட இருக்காங்க…" என்று சொன்னதும், ஒரு பெருமூச்சுடன் கண்ணை மூடிக்கொண்டாள்.

“வாசு எனக்கு குழந்தைகளை பாக்கணும் போல இருக்கு. கூட்டிட்டு வரியா…?”

“ம்ம், டாக்டர் கிட்ட கேட்டுட்டு கூட்டிட்டு வரேன். ஆனா ஒரு கண்டிஷன் டாக்டர் என்ன சாப்பிட சொன்னாலும் அதை சாப்பிடணும்…”

“சரி நீ முதல்ல குழந்தைகளை கூட்டிட்டு வா…” என்றதும் அங்கு இருந்த ட்யூட்டி டாக்டரிடம் சென்று சாப்பிட கொடுக்கலாம் என்று கேட்டு கொண்டு கிளம்பினான்.

போவதற்கு முன் உபேந்திராவை பார்த்து, “நான் குழந்தைகளை கூட்டிட்டு வர போறேன். நீங்க கொஞ்சம் இங்க பார்த்துக்கோங்க…” என்று சொல்லிவிட்டு கிளம்பினான்.

ரங்கா முழித்து விட்டதாக ஏற்கனவே ஒரு நர்ஸ் வந்து சொல்லி இருக்க, அவளைப் பார்க்க போகலாமா வேண்டாமா என்று பட்டிமன்றம் நடத்திக் கொண்டிருந்தவன், வாசு சொல்லவும், அவளைப் பார்க்க சென்றான்.

ரங்காவை தனி அறையில் தான் வைத்திருந்தனர். அவன் அறைக்குள் நுழையவும் அங்கிருந்த நர்ஸ் “சார் ஒரு அஞ்சு நிமிஷம் பாத்துக்கோங்க, நான் இப்ப வந்துடுறேன்…” என்று சொல்லி வெளியே சென்றாள்.

கதவுக்கு அருகிலேயே நின்று ரங்காவை பார்த்தவனுக்கு, பொலிவு இழந்த அவளது முகமும், வாடிய தோற்றமும் கண்ணில் பட, மனதுக்குள் ஒரு குற்ற உணர்வு எழுந்தது… பார்த்த நாள் முதலாய் எப்பொழுதும் துருதுருவென்று இருப்பவள், இன்று நடந்த நிகழ்வுகள் அவள் மனதை பாதித்தது மட்டுமல்லாமல், உடலையும் பாதித்து இருப்பது தெரிந்தது…

தன்னை வைத்து அவளது கற்பும், மானமும் மற்றவர்களின் கேலிக்கும், பரிகாசத்திற்கும் காரணமாக அமைந்து விட, 'ஒரு சொல் வெல்லும், ஒரு சொல் கொல்லும்' என்பதற்கிணங்க, சூழ இருந்தோரின் வார்த்தைகளும், பெற்ற தாயின் வார்த்தைகளும் அவளைக் கொல்லாமல் கொன்று இருக்கும், என்று தெரிந்ததால், அவளிடம் பேச வார்த்தை வராமல் நின்றான்…

ரங்கா விற்கும் அவனது முகத்தை பார்க்கும் தைரியம் இல்லை. தன்னை அனைவரும் கேவலமாக பேசிய போது, அதை தாங்க இயலாமல், மற்றவர்களிடம் அவன் கொதித்தது அவளது கண்ணில் நின்றது… தான் அவனை எப்போதும் தப்பிதமாக நினைத்திருக்க, தன்னிடம் கோபமாக பேசினாலும், தன்னை பிடிக்காது இருந்தாலும், தன்னுடைய குணத்தை அவன் கணித்து இருந்த விதமும், தனக்காக அவன் மற்றவர்களிடம் வாதாடிய

விதமும் அவளுக்கு அவன் மேல் ஒருவித மதிப்பை முதன்முதலாக ஏற்படுத்தியிருந்தது…

எப்படி இருந்தாலும், அவனை வைத்து தன்னுடைய நடத்தையை கேவலப்படுத்தியதன் காரணமாக, 'என்னதான் ஆதரவாக வெளியில் பேசினாலும், மனதிற்குள் தன்னைப் பற்றி என்ன நினைத்திருப்பான்' என்ற எண்ணம் மேலோங்க, அவன் முகத்தை பார்ப்பதை தவிர்த்தாள். அவன் உள்ளே வந்ததை உணர்ந்தும் கண்விழிக்காமல், அப்படியே படுத்து இருந்தாள்…

மெல்ல நடந்து அவள் அருகில் வந்தவன், ஏதோ ஒரு உணர்வு உந்த தன் வலது கையை அவளது நெற்றியில் வைத்தான். முதன்முதலாக ஒரு ஆணின் ஸ்பரிசம்… அவனது உள்ளங்கை நெற்றியில் படிந்ததும், அவளது உடம்பில் ஒருவித நடுக்கம் ஓடி மறைந்தது. அவனது உள்ளங்கையில் இருந்த மெல்லிய சூடு அவள் நெற்றியில் தெரிய, தன் மனதில் அவள் மேல் தோன்றிய, பரிதாபத்தை அவன் தன் கைகளின் வழியே கடத்தியபோது, அவனுடைய கைவிரல்கள் அதை உணர்த்திய போது, ரங்கா அதை உணர்ந்தாள்.

அவள் முழித்து தான் இருக்கிறாள் என்பதை உணர்ந்தவன், " இப்ப எப்படி இருக்கு…?" என்று மிருதுவாக கேட்டான்…

‘இத்தனை மென்மையாக இவனுக்கு பேச தெரியுமா?’ என்று ஆச்சரியப்பட்ட ரங்கா, ‘இம்’ என்று மென்மையாக முனங்கினாள்.

“அயம் சாரி...” உபேந்திராவின் அர்த்தம் நிறைந்த வார்த்தைகள் அவள் காதில் விழுந்ததும், கண்விழித்து அவன் முகத்தை பார்த்தாள்.

‘சொன்னது நீதானா?’ என்ற விதத்தில் அவள் பார்வை இருக்க, அதற்கு பதிலளிக்கும் விதமாக, “ஐ அம் ரியலி சாரி. எனக்கு இந்த மாதிரி நடக்கும் என்று சத்தியமா தெரியாது. நான் இருக்கிற சொசைட்டி வேற. நான் அந்த மாதிரி நெனச்சுட்டேன். ப்ளீஸ் மறந்திடு...?”

“எதை மறக்க சொல்றீங்க...?” என்று மெலிதாக பேசியவள், அதை மறக்க முடியாமல், திரும்பவும் கண்கலங்கினாள். “என் உயிர் உள்ளவரைக்கும் அந்த வார்த்தைகளை என்னால் மறக்க முடியாது...” அவளது வாய் வார்த்தைகளை உதிர்க்க, கண்கள் அதன் வேதனையை பிரதிபலிக்க, அவள் உள்ளம் ஊமையாய் அழுதது, அவனுக்கு தெரிந்தது...

‘உண்மைதானே, அந்த மாதிரி வார்த்தைகளை தானும் கேட்க நேர்ந்தால் இப்படித்தானே நினைப்போம்’ என்பதால் அவனால் அவளுக்கு ஆறுதல் சொல்ல முடியவில்லை.

அதற்குள் வெளியே சென்ற நர்ஸ் திரும்பி வந்துவிட, அவளிடம், “பார்த்துக்கோங்க எதுவும் தேவைன்னா, என் கிட்ட சொல்லுங்க…” என்று சொல்லிவிட்டு சென்றான்.

ஒரு மணி நேரத்தில் வாசு குழந்தைகளை அழைத்துக்கொண்டு, ரங்காவுக்கு உணவு எடுத்துக்கொண்டு கீர்த்தியுடன் வந்து சேர்ந்தான். இரண்டு குழந்தைகளும் அம்மாவை பார்த்ததும், அவள் கட்டிலில் படுத்திருப்பதை கண்டு அழ ஆரம்பிக்க, ரங்கா அவர்களிடம், “பார்த்தி, பாவனா நீங்க ரெண்டு பேரும் சமத்து தானே, அப்ப அம்மா சொன்னதைக் கேக்கணும். எனக்கு ஒண்ணும் இல்ல. நாளைக்கு நான் வீட்டுக்கு வந்து விடுவேன். ரெண்டு பேரும் அழக்கூடாது…”

“எதுக்கும்மா உனக்கு ஊசி போட்டு வச்சுருக்காங்க… எழுந்துருங்கம்மா, எனக்கு பயமா இருக்கு…” பாவனா பயப்பட, வாசு, கீர்த்தி இருவருமே அவர்களை சமாதானப் படுத்த முயன்று தோற்றனர்.

வேறு வழியில்லாமல் வாசு உபேந்திராவை அழைத்து விட, அவன் விரைந்து வந்தான். அவனைக் கண்டதும் குழந்தைகள் மேலும் அழ ஆரம்பித்தது மட்டுமல்லாமல், “அம்மாவை எழுந்து உட்கார சொல்லுங்க, எங்களுக்கு பயமா இருக்கு. எங்களுக்கு

அம்மா வேணும்…” என்று அவன் கழுத்தை கட்டிக் கொண்டு அழ…

“ஒண்ணும் இல்ல. இன்னைக்கு நைட் வரதான் அம்மாவுக்கு ஊசி போட்டு இருப்பாங்க. நாளைக்கு காலைல நம்ம கூட வந்துடுவாங்க… இப்ப நீங்க ரெண்டு பேரும் அழாம இருந்தா, அப்பா உங்களை வெளியில கூட்டிட்டு போயி பொம்மை வாங்கி கொடுத்து ஹோட்டல்ல சாப்பாடு வாங்கி கொடுப்பேன். நீங்க ரெண்டு பேர், ஹர்ஷா எல்லாரும் போலாமா…!” பேச்சை மாற்றினான்…

குழந்தைகளுக்கு ஆசை இருந்தாலும் அம்மாவை விட்டு விட்டு செல்ல மனமில்லை. நீங்களும் வாங்கம்மா, டாக்டர் கிட்ட கேட்டுட்டு நாம போகலாம்…?” என்று சொல்லிய பார்த்தா வெளியே குடுகுடுவென்று ஓடி டாக்டர் அறைக்கு சென்று அவரை கையோடு அழைத்து வந்து விட்டான்.

உபேந்திராவுக்கு மிகவும் நெருங்கியவர்கள் என்று தெரிந்ததால் டாக்டரும் அவன் உடனே வந்தார். “டாக்டர் எங்க அம்மா கையில உள்ள ஊசியை எடுத்து விடுங்க. அவங்க எங்க கூட வரட்டும்…” என்று பார்த்தி சொல்ல,

டாக்டர் அவனிடம். “யூ ஆர் எ குட் பாய். இன்னைக்கு ஒரு நாள் உங்க அம்மா ரெஸ்ட் எடுக்கட்டும். நீ வீட்டுக்கு போயிட்டு

காலைல வா. உங்க அம்மா ஜம்முனு உன்கூட எழும்பி வந்துடுவாங்க. ஓகேவா…” என்று சொல்லி சமாதானப் படுத்தினார்.

எல்லோரிடமும் சொல்லிவிட்டு உபேந்திரா குழந்தைகளை அழைத்துக்கொண்டு வெளியே சென்றான். ‘ஹர்ஷா என்னை விட்டு இருக்க மாட்டான்’ என்று கீர்த்தி சொல்லிவிட்டதால் அவனை அழைத்து செல்லவில்லை…

கடைக்கு சென்று குழந்தைகள் விருப்பப்பட்ட விளையாட்டுப் பொருட்களை வாங்கிக் கொடுத்து, பின்னர் வீட்டுக்கு அழைத்து வந்தான். வரும்போதே அவர்களுக்கு என்ன சாப்பாடு வேண்டும் என்று கேட்டு வீட்டில் உள்ள சமையல்காரருக்கு போன் பண்ணி அதை செய்ய சொல்லி இருந்தான்.

வீட்டை பார்த்ததும் குழந்தைகள் இருவருக்கும் உற்சாகம் தாளவில்லை. எவ்வளோ பெரிய வீடு. இது உங்க வீடா அப்பா…?” என்று குழந்தைகள் கேட்க, இனி இதுதான் நம்ம வீடு புரியுதா…? உபேந்திரா குழந்தைகளிடம் கூறினான்.

சேதுராம் குழந்தைகளைப் பார்த்ததும், கண்கள் பனிக்க அவர்களை அணைத்துக் கொண்டார்… “அப்பா இந்த தாத்தா யாரு…?”

“இவங்க என்னோட தாத்தா…!”

“அப்படின்னா…”

“அங்க அந்த வீட்ல ஒரு பாட்டி இருந்தாங்கல்ல, அது யாரு…?”

“அது ரங்கா பாட்டி. எங்க அம்மாவோட பாட்டி…”

“அதே மாதிரி இது அப்பா தாத்தா. அப்பாவோட தாத்தா…” என்று குழந்தைகளுக்கு விளக்கினான்.

குழந்தைகளை மேல் கழுவ வைத்து, டிரஸ் மாற்றி சமையற்காரர் உதவியுடன் ஊட்டிவிட்டு, அவர்களுடன் விளையாடி, பின்னர் தனது அறையில் தனக்கு அருகில் இரண்டு பக்கமும் இருவரையும் படுக்க வைத்து தானும் படுத்தான். அவன் மேல் கால்களைப் போட்டுக் கொண்டு அவனைக் கட்டிப் பிடித்துக் கொண்டு இரண்டு குழந்தைகளும் தூங்கின.

முதன் முதலாக தன் குழந்தைகளுக்கு இடையில் படுத்திருந்த அந்த தந்தையின் உள்ளம் அந்த சந்தோஷத்தில், பெருமிதத்தில் தூக்கம் வராமல் தவித்தது… இந்த சுகத்தை இந்த அன்பை அவளால் எப்படி விட்டுக் கொடுக்க முடியும்…? ரங்காவின் மனநிலையை அவனே எண்ணி பார்த்தான்.

மறுநாள் காலையிலேயே பாட்டிக்கும், ரங்காவுக்கும் சரியாகிவிட்டது. ரவுண்ட்ஸ் வந்த ட்யூட்டி டாக்டர், அவர்கள்

வீட்டுக்குப் போகலாம் என்று சொல்லிவிட இருவரும் வாசுவுடன் கிளம்பினர். வாசு நேராக தங்கள் வீட்டுக்கு அவளை அழைத்துச் சென்றான்…

ஒரு பத்து நாள் இங்கேயே இரு ரங்கா. அதுக்கு அப்புறம் என்ன செய்யறதுன்னு யோசிக்கலாம். இனி நீங்க அந்த அபார்ட்மெண்ட் போக வேண்டாம்…” என்று தீர்மானமாக வாசு சொல்லியது அவர்களுக்கும் சரி என்று பட்டது…

“நான் போய் குழந்தைகளை அழைச்சிட்டு வரவா…?”

“வேண்டாம் வாசு…” என்றாள் ரங்கா…

“இன்னைக்கு மட்டும் வேண்டாமா அல்லது எப்பவுமே வேண்டாமா…?” என்ற வாசுவின் கேள்விக்கு,

அவனை திரும்பி தீர்க்கமாக பார்த்த ரங்கா, “எப்பவுமே வேண்டாம்… இந்த ஏழை அம்மாகிட்ட இருப்பதைவிட, எல்லா வசதியும் நிறைந்த அந்த அப்பா கிட்ட இருக்கிறது தான் அந்த குழந்தைகளுக்கு சேப், கௌரவம் எல்லாம். நான் ஒரு பைத்தியக்காரி. என்ன மாதிரியே இந்த உலகமும் நேர்மையாக இருக்கும் நெனச்சிட்டேன். இல்லை, ‘பனை மரத்துக்கு அடியில் நின்று பாலைக் குடித்தாலும் அதுவும் கள்ளுதான் என்று சொல்லும்

உலகம்' என்று எனக்கு செருப்பால அடிச்ச மாதிரி புரிய வச்சிட்டாங்க…

இனி அந்த குழந்தைகளை நாம் வளர்ப்பது என்பது, அவர்களுடைய எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கி விடும். அவங்க அப்பா கிட்ட இருந்தா அம்மாவை பத்தி கேட்டா இல்லைன்னு பொதுவா ஒரு வார்த்தை சொல்லிட்டு போயிடலாம். அதனால் அங்கேயே இருக்கட்டும்… நானுமே இங்கே உள்ள வேலையை விட்டுட்டு வேற ஏதாவது ஒரு ஊருக்கு செல்லலாம் என்று யோசிச்சிட்டு இருக்கேன். பாட்டிய வேணா நீ வச்சுக்கோ. எனக்கு எப்பவாது உங்க எல்லாரையும் பார்க்கணும்னு தோன்றப்ப நான் வந்து உங்களை பார்த்துக்கிறேன்…" என்று அவள் முடிவை அறிவிக்க, பாட்டியும் வாசுவும் அதிர்ந்து போனார்கள்.

"சரி ரெஸ்ட் எடு…" என்று கூறி விட்டு வாசு அலுவலகத்திற்கு சென்று விட்டான். பத்து மணிக்கு மேல் ஹாஸ்பிடல் வந்து ரங்காவையும் பாட்டியையும் தேடிய உபேந்திரா, அவர்கள் இருவரும் டிஸ்சார்ஜ் ஆகி சென்று விட்டார்கள் என்றதும், கடும் கோபம் வந்தது.

"யார் டிஸ்சார்ஜ் பண்ணி அனுப்புனது…?" என்று கேட்க, அந்த டாக்டர் பதறியடித்துக் கொண்டு வந்தார்.

"டிஸ்சார்ஜ் பண்ணா எனக்கு ஒரு வார்த்தை சொல்லணும்னு உங்களுக்கு தெரியாதா...?"

"சாரி சார்..." என்று அவர் சொல்ல...

"அவங்க யாருன்னு நினைச்சீங்க... என்னோட மிஸ்ர்ஸ் ஆகப் போறவங்க. இந்த ஹாஸ்பிடல் ஓனர். அந்த குழந்தைங்க என்னோட குழந்தைகள். அண்டர்ஸ்டாண்ட்... இனியாவது பார்த்து நடந்துக்கோங்க..." என்றவன் அவர்கள் யாருடன் போனார்கள் என்பதை விசாரித்து அறிந்து கொண்டு நேராக வாசுவின் வீட்டுக்கு வந்தான்...

அவன் வரவை எதிர்பார்த்து இருந்த ரங்கா, ஒன்றும் சொல்லாமல் மௌனமாக அவனை ஏறிட்டாள். பாட்டியிடம் முதலில் "உங்க உடம்பு பரவாயில்லையா.?" என்று உபேந்திரா கேட்க...

"சரி ஆயிடுச்சுப்பா..." என்று கூறிய பாட்டி மேலும், "ரொம்ப தேங்க்ஸ்..." என்றார் உணர்வுபூர்வமாக...

"எதுக்கு தேங்க்ஸ்...?"

"இல்ல எங்கள பாத்து கிட்டதுக்கு, என்னோட பேத்திக்கு பரிஞ்சு பேசினதுக்கு...!"

“அது என்னோட கடமை. அதுக்கெல்லாம் நன்றி சொல்லாதீங்க. முதல்ல நீங்க எங்க தாத்தாவோட க்ளோஸ் ஃப்ரெண்ட். இரண்டாவது என் குழந்தைகளோட பாட்டி. அவ என் குழந்தைகளோட அம்மா. அப்ப எப்படி நான் உங்க எல்லாரையும் விட்டு கொடுப்பேன்...? எனக்கு என் குழந்தைகள் உயிர் என்றால், என் குழந்தைகளுக்கு அவர்களுடைய தாய் முக்கியம். அப்ப எனக்கும் அவள் முக்கியம். அவளுக்கு வேணா தெரியாம இருக்கலாம்... ஆனா நான் அதை உணர்ந்து விட்டேன்...” என்றவன் ரங்காவை பார்த்து முறைத்தான்.

அவன் முறைப்பை கண்டாலும் சட்டை செய்யாது அமர்ந்திருந்தாள். “குழந்தைங்க அங்க நம்ம வீட்டில இருக்காங்க... நீ எதுக்கு இங்க வந்து உட்கார்ந்து இருக்கே...?”

“அவங்க உங்க குழந்தைங்க... உங்க வீட்டில இருக்காங்க... அதுதான் நியாயம்... அந்த நியாயத்துக்காக தானே நீங்க போராடிணீங்க...? அப்புறம் என்ன...?”

“நான் நடந்ததை பற்றி பேசலை. நடக்கப் போறதை பத்தி பேசுறேன். இனி உங்க ரெண்டு பேருக்கும் அதுதான் வீடு. வாசு உன்னோட சகோதரன் தான். இல்லைன்னு நான் சொல்லல. வந்து போய் இருக்கலாம் அவ்வளவுதான்... உன்னோட வீடு அதுதான்.

உன்னோட குழந்தைகள் இருக்கக்கூடிய இடம் தான் உனக்கும், இதை ஞாபகம் வச்சுக்கோ…”

“இல்லை அது சரிவராது…?”

“சரி வந்தாலும் வராவிட்டாலும் அது தான். தெரிந்தோ தெரியாமலோ நீ ஒரு தப்பு பண்ணினே… அதைமாதிரி நானும் ஒரு தப்பு பண்ணினேன். ஆனா இப்ப அந்த தப்பை திருத்தக்கூடிய நேரம் வந்தாச்சு. இனி குழந்தைகளுக்காக தான் நாம வாழணும். உன்னைவிட்டு, என்ன விட்டு, அவங்க இருக்க மாட்டாங்க. நம்மள்ல யாரோ ஒருத்தர் இல்லேன்னாலும் அவங்களை ஒரு நிறைவு பெற்ற மனிதர்களாக வளர்க்க முடியாது.

ஏதோ ஒரு குறை அவங்க மனதில் ஏற்பட்டதுன்னா, அந்தக்குறை அவங்க வாழ்க்கையில ஏதோ ஒரு இடத்தில் பிரதிபலிக்கும். அந்த மாதிரியான கஷ்டத்தை நான் அவர்களுக்கு கொடுக்க விரும்பல. என்னைவிட உனக்கு அதிக உரிமை உண்டு. உண்மையிலேயே கஷ்டப்பட்டு பெத்து இவ்வளவு நாள் வளர்த்த நீ, உன்னோட குழந்தைகள் எப்படியும் போகட்டும் நெனச்சேன்னா, நீ என்ன முடிவு எடுத்திருக்கியோ அதை செயல்படுத்து. இல்ல என்னுடைய குழந்தைகள் ஆரோக்கியமா, முழு நிறைவு பெற்ற குழந்தைகளா வரணும்னு நினைச்சேன்னா, நீயும் பாட்டியுமா அங்க வாங்க. என்ன முடிவுனாலும், இன்று மாலைக்குள் எனக்கு போன்

பண்ணு. ஏன்னா குழந்தைகள் ஏற்கனவே உன்னை தேடி அழுதுட்டு இருக்காங்க. அவங்களை இன்னும் அழ வைக்க முடியாது.” என்றவன் தனது விசிட்டிங் கார்டை எடுத்து அவள் முன்னால் வைத்துவிட்டு வெளியே சென்று விட்டான்.

அவன் சென்றதும் சற்றுப் பொறுத்து அவள் அருகே வந்த பாட்டி, “ரங்கா உன் கூட நான் கொஞ்சம் பேசணும்…”

“என்ன பாட்டி நீங்களும் அதையே சொல்லப் போறீங்களா…?”

“இல்ல ரங்கா. இது வேற விஷயம். நானும் உன்னை மாதிரிதான் நெனச்சேன். குழந்தைகள் பிறக்கும் வரை கொஞ்சம் பிரச்சனை இருக்கும். அதுக்கப்புறம் காலப்போக்குல எல்லாரும் மறந்துடுவாங்க, அப்படின்னு. ஆனா பிரச்சனை இந்த மாதிரி வரும் நான் எதிர் பார்க்கவே இல்லை. கடைசிவரை குழந்தையோட அப்பா யாருன்னு தெரியாம அம்மாவா நீ வளர்த்திடுவேன்னு தான் நினைச்சேன். நான் ஒன்று நினைக்க கடவுள் ஒன்று நினைப்பார் என்கிறது, இப்பதான் புரியுது. என்ன மன்னிச்சுடுடா, கண்ணு…“ என்று சொன்ன பாட்டி அழ முற்பட…

“ஐயோ என்ன பாட்டி இது…? நீங்க எதுக்கு என்கிட்ட மன்னிப்பு கேட்கிறீங்க…? கல்யாணம் வேண்டாம்னா எதுவுமே

வேண்டாம் இருந்திருக்கணும். அதை விட்டுட்டு தான் தோன்றித்தனமாக நான் எடுத்த முடிவுல, நம்ம குடும்பத்தில் உள்ள எல்லாருமே பாதிக்கப்பட்டுட்டாங்க. அம்மா என்னை திட்டினது எந்தவிதமான தப்பும் இல்ல பாட்டி. அவங்களுக்கு நான் உபயோகமாக தான் இருந்தேன்.

அதுக்காக அவங்களோட கவுரவத்தையும், மரியாதையையும் கெடுப்பதற்கு எனக்கு என்ன ரைட்ஸ் இருக்கு...? அவங்க பொண்ணுங்கற ஒரே காரணத்தினால், என்ன தப்பு செஞ்சாலும் அதை அவங்களையும் பாதிக்க தானே செய்து. அதை கொஞ்சம் நான் யோசிச்சு இருக்கணும். அப்ப யோசிக்காட்டாலும், இப்ப ஜட்ஜ்மெண்ட் வந்தப்ப யோசிச்சிருக்கணும். யோசித்து குழந்தைகளை அவங்ககிட்ட கொடுத்திருக்கணும். அதுதான் நான் செஞ்ச பெரிய தப்பு...

குழந்தைகளை முதலிலேயே அவர் கிட்ட கொடுத்து இருந்தால், இப்ப இவ்வளவு பெரிய பிரச்சினை வந்து இருக்காது இல்லையா. அவருக்கு இருக்கிற வசதிக்கு ஆள் வெச்சு குழந்தைகளை வளர்த்துக் கொள்வார். கொஞ்ச நாளைக்கு பிள்ளைங்க என்னே தேடுவாங்க. அப்புறம் மறந்துடுவாங்க...!"

" குழந்தைகளை விட்டுவிட்டு நீ எப்படிமா இருப்பே...?"

" வேற என்ன செய்யறது பாட்டி...?"

"ரங்கா வயசுலயும் அனுபவத்திலேயும் உன்னைவிட இரண்டு தலைமுறை மூத்தவங்கிற உரிமையில் சொல்றேன். நீ அந்த தம்பியை கல்யாணம் பண்ணிட்டு, இந்த குழந்தைகளை வளர்க்க வழியை பாரு..." ரங்கா ஏதோ பேச முற்பட...

"இரு நான் முழுசா சொல்லி முடிச்சிடறேன்..." என்ற பாட்டி மேலும் சொல்ல ஆரம்பித்தார். "உனக்கு கல்யாணம் என்கிற பந்தம் பிடிக்காமல் போனதற்கு, நானும் ஒரு வகை காரணம். நம்ம குடும்பத்தை நான் பார்த்ததோட இல்லாம, உன்னையும் அந்த பந்தத்துக்குள் இழுத்து விட்டுட்டேன். அதை நான் செஞ்சிருக்க கூடாது... ஆரம்பத்திலேயே உனக்குன்னு ஒரு தனி வாழ்க்கை இருக்குங்கிறதை சொல்லி இருக்கனும். சொல்லாததுனால, நீ அதை பத்தி யோசிக்கவே இல்லை...

எல்லா ஆண்களும் கெட்டவங்க இல்ல ரங்கா. சந்தர்ப்பமும் சூழ்நிலையும் தான் மனிதனை எல்லாவிதத்திலும் மாற்றுது... படித்து முடித்து நல்ல வேலையில் இருக்கிற, அறிவுள்ள மாப்பிள்ளைன்னு நெனச்சு எத்தனையோ பேர் கல்யாணம் பண்றாங்க. ஆனா அவங்க எல்லாம் ஒருத்தருக்கு ஒருத்தர் புரிஞ்சுகிட்டு வாழ்க்கை நடத்துவார்களா என்பது சந்தேகம்தான்...

அறிவாளியான மாப்பிள்ளையை விட, புத்திசாலியான மாப்பிள்ளை தான் நல்லவனாக இருப்பான்… அறிவுங்கிறது படிப்பினால் வருவது. புத்திங்கிறது பிறக்கும் போதே கடவுள் கொடுத்தது. இந்த பையன் கிட்ட புத்தியும் இருக்கு, எதையும் சீர்தூக்கிப் பார்க்கிற மனப்பான்மையும் இருக்கு. அதுக்கு காரணம் அந்த பாரம்பரியம் தான். எனக்கு என்ன தோணுதுன்னா இவரை கல்யாணம் பண்றதுனால உனக்கு எந்தவிதமான பிரச்சினையும் வராது.

உன்னோட சுயமரியாதையை மதிக்கிற மனுசனா தான் இவர் இருப்பார். அதை நீ முதல்ல புரிஞ்சுக்கணும். நீ எப்படி மத்தவங்க உணர்வுகளை புரிஞ்சு நடக்கிறாயோ அதே மாதிரி தான் அவரும் இருக்காரு. ஒருவேளை கடவுள் இவரைத்தான் உனக்கு இணைன்னு காட்டுவதற்காக தான் இத்தனை பிரச்சினை உண்டு பண்ணினாரோ என்னவோ, கொஞ்சம் யோசி…

அதையும் மீறி நீ நினைக்கிறது தான் செய்வேன் அப்படின்னா நான் உன்னை தடுக்கல. ஆனால் என்னையும் உன்கூட கூட்டிட்டு போயிரு ரங்கா, என்னால உன்னை விட்டு இருக்கவே முடியாது…” பாட்டியின் வார்த்தைகள், ரங்காவை யோசிக்க வைத்தது. அவளாக யோசித்து ஒரு முடிவுக்கு வரட்டும் என்று பாட்டி

அவளைத் தனியே அந்த அறையில் விட்டுட்டு வெளியே சென்றார்.

# அத்தியாயம் 9

திருப்பதியில் திருமணம் முடிந்தது. கீழ் திருப்பதியில் உள்ள திருச்சானூர் தலத்தில் பத்மாவதி அம்மையாரின் முன்னிலையில் ரங்காவின் கழுத்தில் தாலி கட்டி உபேந்திரா அவளை மனைவியாக ஏற்றுக் கொண்டான்.

ரங்கா சம்மதம் சொன்னதுமே, கல்யாண ஏற்பாடுகளை துரிதமாக செய்ய வேண்டும் என்று சேதுராமனும், பாட்டியும் சொல்லிவிட்டனர். பாட்டியின் விருப்பப்படி திருப்பதியில் திருமணத்தை சுருக்கமாக வைத்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்யப்பட்டது.

அதன்படியே உபேந்திரா எல்லா ஏற்பாடுகளையும் ஒரே நாளில் செய்து முடித்தான். கல்யாணம் முடியும் வரை பாட்டியும், ரங்காவும் வாசு வீட்டில் இருப்பது என்றும், குழந்தைகளும் அவர்களுடனே இருப்பது என்றும் தீர்மானித்தனர். இருவருக்கும் கல்யாணம் என்று கேள்விப்பட்டதும் குழந்தைகளோட மகிழ்ச்சிக்கு அளவே இல்லை…

அவர்கள் இருவரும் கல்யாணம்னா என்ன…? எங்கு நடக்கும் எப்படி நடக்கும்? என்று கேள்விகளால் ரங்காவையும், பாட்டியையும் துளைத்து எடுத்து விட்டனர்…

ரங்கா பதில் சொல்ல சிரமப்படுவதை அறிந்து, பாட்டி அவர்களை அழைத்து தன்னிடம் வைத்துக்கொண்டு, கல்யாணத்தைப் பற்றி விரிவாகச் சொன்னார்... "அப்படின்னா எங்களுக்கும் இந்த மாதிரி கல்யாணம் நடக்குமா...?" என்று அடுத்த கேள்வி அவர்களிடமிருந்து பிறந்தது.

"கண்டிப்பா நடக்கும். ஆனா இப்ப கிடையாது... அம்மா மாதிரி பெரிய பெண் ஆன பிறகு...!"

"ஓ அப்ப எனக்கும் பாப்பா இருக்கும். என்னோட பாப்பாவுக்கு நான் என் கல்யாணத்தை காட்டுவேன்..." என்று பாவனா சொல்ல பாட்டிக்கு, குழந்தை சொன்னதைக் கேட்டு அழுவதா, சிரிப்பதா என்று தெரியவில்லை. குழந்தைகள் நாம் சொல்வதைக் கேட்டு வளர்வதில்லை. நாம் செய்வதை பார்த்து வளர்க்கின்றனர். கேட்டுக்கொண்டிருந்த ரங்காவுக்கு தன்னுடைய தவறு இப்பொழுது பூதாகரமாக தெரிந்தது.

கேட்டுக்கொண்டிருந்த கீர்த்தி சிரித்து விட, " பாட்டி அத்தை சிரிக்கிறாங்க... என்னை கேலி பண்றாங்க..." என்று பாவனா ஓவென்று அழுதது...

அவளுக்கு தான் பேசும் போது யாரும் அவளைக் கிண்டல் செய்து சிரித்து விட கூடாது. பெரிய தன்மான பிரச்சனையாக

தோன்றும்… “இல்லம்மா நான் அதுக்கு சிரிக்கல…” என்று கீர்த்தி சொன்னாலும் அவள் சமாதானம் ஆகவில்லை. வாசு வந்ததும் முதல் வேலையாக அவனிடம் கம்ப்ளைன்ட் செய்து அவன் கீர்த்தியை பொய்யாக திட்டுவது போல் நடித்த பின்னரே அவள் சமாதானமானாள்.

“ நீங்க குட் மாமா. அத்தையை நலலா திட்டுங்க…” என்று வாசுவுக்கு பாராட்டுப் பத்திரம் வாசித்து, தன் காரியத்தைச் சாதித்துக் கொண்டது குட்டி.

“அக்கா உங்க பொண்ணு சரியான ஆளு. யாரை வைத்து யாரை கவுக்கணும், யார் கிட்ட சொன்னா நமக்கு வேண்டியது நடக்கும். எல்லாம் தெளிவா தெரியுது. உண்மையிலேயே நீங்க அப்பாவி அக்கா…” என்று சிரித்துக் கொண்டே கூறினாள் கீர்த்தி. ரங்கா எதற்கும் பதில் சொல்லவில்லை. கல்யாணம் என்று முடிவு செய்ததிலிருந்து அவளுடைய பேச்சே குறைந்து விட்டது. எப்போதும் ஏதோ ஒரு சிந்தனை. வாசுவும், பாட்டியும் மாற்றி, மாற்றி பேசி அவள் மனதைக் கரைத்து இருந்தனர்.

இதோ திருமணம் முடிந்து, ஏழுமலையானை தரிசித்துவிட்டு, எல்லோரும் திரும்பிக் கொண்டு இருந்தனர். தனது செல்வாக்கால், வெங்கடாசல பெருமாள் சந்நிதியின் மிக அருகில் நின்று மாலை மாற்றிக் கொள்ள ஏற்பாடு செய்திருந்தான். திருமணம்

நடைபெற்றது கீழ்த் திருப்பதியில், ஆனாலும் பெருமாளின் சன்னதியில் மாலை மாற்றுவது விசேஷம் என்பதால் இந்த ஏற்பாடு…

காரில் கீழே வந்து, அங்கு தங்கியிருந்த ஹோட்டலில் டிரஸ் சேஞ்ச் பண்ணி விட்டு சாப்பிட்டு உடனே கிளம்பினர். டிரைவர், குழந்தைகள், ரங்கா, உபேந்திரா தாத்தா ஒரு காரிலும், வாசு, கீர்த்தி, பாட்டி, ஹர்ஷத் மற்றொரு காரிலும் கிளம்பினர். வரும்போது உபேந்திரா தனியாக முன்னாடியே வந்து விட்டான். தாத்தா முன்னாடி இருந்ததால் பின் சீட்டில் குழந்தைகள் நடுவில் இருக்க ரங்காவும், உபேந்திராவும் ஏறினர்.

சற்று தூரம் சென்றதுமே நடுவில் இருக்க குழந்தைகளுக்கு போரடித்தது. கொஞ்ச நேரம் பேசிக்கொண்டே வந்த பார்த்தி அம்மாவிடம், “அம்மா ப்ளீஸ் நான் ஜன்னலோரம், வெளிய பாக்கணும்…” என்று கேட்டு ஜன்னலோரம் சென்றுவிட்டான்.

அவன் சென்றதை பார்த்த பாவனாவும், அப்பாவின் ஜன்னலோரம் சென்று அவனை உள்ளே தள்ளினாள். வேறு வழியில்லாமல் இருவரும் நடுவில் உட்கார்ந்து கொண்டு குழந்தைகளை ஜன்னல் ஓரம் இருக்க செய்தனர். குழந்தைகள் அமைதியாக உட்காராமல் திரும்பவும், வெளியே பார்க்கவும் இவர்களிடம் பேசுவதற்கு வசதியாக, உள்ளே திரும்பவும் என்று

மாறி மாறி சேட்டை செய்ததில் அவர்கள் பாதி இடத்தை அடைத்துக் கொள்ள, ரங்காவுக்கு ஒழுங்காகவே உட்கார முடியவில்லை…

உபேந்திரா அசைந்தான் இல்லை. அவன் நன்றாக உட்கார்ந்து கொண்டு வசதியாக பின்னால் சாய்ந்து கொண்டான். “ஏய் பார்த்தி ஒழுங்கா உட்கார்ந்து வா. இல்லேன்னா அம்மா அந்த பக்கம் வரேன். நீ நடுவுல வா…’

“அதெல்லாம் முடியாதும்மா, நடுவுல இருந்தா ஒண்ணுமே தெரியாது. பாவனா மட்டும் அந்த சைடு உட்கார்ந்து இருக்கா. அவளை ஏதாவது சொல்றீங்களா…? என்ன மட்டும் எப்ப பார்த்தாலும் திட்டிட்டு இருக்கீங்க…?” பாவனாவோடு அவன் போட்டி போட, “விடு, குழந்தைகள் அப்படித்தான் இருப்பாங்க…" என்றான் அலட்டிக்கொள்ளாமல்…

'இவனுக்கு என்ன அசையாம அப்படியே சக்கு பிள்ளையார் மாதிரி உட்கார்ந்துட்டு, சொல்லுவான், எனக்கு எல்லாமே அவஸ்தையா இருக்கு.' மனதுக்குள் அவனுக்கு அர்ச்சனை செய்தாள். ஓரக்கண்ணால் அவளை பார்த்தவனுக்கு சிரிப்பு, வந்தது. சிரித்தால் கொன்றுவிடுவாள், முதல் நாளே சண்டை போட வேண்டாம் என்று நினைத்து வந்த சிரிப்பை வாய்க்குள் அடக்கிக்கொண்டான்.

அவனது வட்டாரத்தில் ஆண் பெண் அருகில் உட்கார்வது, கைகுலுக்கி கொள்வது, கட்டிப் பிடித்துக் கொள்வது எல்லாம் சர்வ சாதாரணம் என்பதால் அவளது அருகாமை அவனை எந்த விதத்திலும் பாதிக்கவில்லை. மிக சாதாரணமாக அமர்ந்திருந்தான்.

ஆனால் ரங்காவுடைய பழக்க வழக்கம் வேறு. அவனுக்கு வாசுவை தவிர வேறு யார் கூடவும் வெளியில் சென்று உட்கார்ந்து பழக்கமே கிடையாது. முதன்முதலில் ஒரு அந்நிய ஆணின் அருகாமை அவளுக்கு அன்ஈஸியாக இருந்தது.

அவன் சௌகரியமாக இருக்க வேண்டும் என்பதற்காக தன்னுடைய வலது கையை சீட்டின் பின்னால் நீட்டி சாய்ந்து அமர்ந்து கொண்டான். அதுமட்டுமல்லாமல் இரண்டு நாள் அலைச்சல் அவனுக்கு தூக்கத்தை வரவழைக்க அவன் நிம்மதியாக தூங்க ஆரம்பித்தான்…

இவள் பின்னால் தலையை சாய்த்தால், தலையை நீட்டி இருக்கும் அவனது வலது கையில் தான் வைக்க வேண்டும். அதனால் சாயாமல் உட்கார்ந்து வந்தாள்.

பிருத்விதா இல்லம் வந்தவுடன் அவளுக்கு முதன் முதலில் அவனை அந்த பங்களாவில் சந்தித்தது நினைவுக்கு வந்தது… வேலை பார்க்கும் ரஞ்சிதம்மாவும் கீர்த்தியும் சேர்ந்து ஆரத்தி எடுக்க இருவரும் வீட்டுக்குள் நுழைந்தனர்…

பாட்டி, வாசு, கீர்த்தி எல்லோரும் ஹாலில் அமர்ந்து விட உபேந்திரா மாடிக்கு தனது அறைக்கு சென்றான். குழந்தைகளுக்கு ஏற்கனவே பழக்கம் என்பதால் அவர்கள் ‘அப்பா’ என்று அழைத்துக் கொண்டு மாடிக்கு சென்று விட்டனர்.

என்ன செய்வது என்று தெரியாமல் விழித்துக்கொண்டு நின்ற ரங்காவிடம் சேதுராம் “மேல மாடிக்கு போம்மா. குழந்தைங்க அங்க தான் இருப்பாங்க…” என்று சொல்ல மெல்ல மாடி ஏறினாள்.

சினிமாவில் வருவது போல் மாடிப்படி முடிந்ததும் உள் பக்கமாக ஹாலின் எல்லா இடமும் தெரியுமாறு ஒரு பால்கனியும், அதன் பிறகு உள்ளே நுழைந்தால் எதிரெதிராக நான்கு அறைகளும் இருந்தன…

அந்த அறையில் அவர்கள் எதில் இருக்கிறார்கள் என்பது தெரியாமல் ஒரு நிமிடம் தயங்கி நின்றாள். அதற்குள் ஒரு அறை கதவை படாரென்று திறந்துகொண்டு பார்த்தி வெளியே வர, "அம்மா இங்க ஏன் நிக்கிறீங்க? வாங்க இதுதான் நம்ம ரூம்…” என்று அவளைக் கையைப் பிடித்து அழைத்து சென்றான்.

உள்ளே பாவனா கட்டிலில் உருண்டு கொண்டு இருந்தது… அவர்களுக்கு என்று வாங்கிய விளையாட்டு சாமான்கள் கட்டிலிலும் கீழேயும் பரத்தி இருக்க, பாவனா அதன் நடுவில் உட்கார்ந்து இருந்தாள்.

“அம்மா, இது எப்படி விளையாடணும்னு சொல்லிக் கொடுங்க…” என்று ஒரு பொம்மையை எடுத்துக் காட்ட அதற்குக் கீ கொடுத்தவுடன் அது ஓடியது.

“இறங்கிப் போய் எடுத்துட்டு வா. இப்படி தான் கீ கொடுக்கணும். பார்த்தி இங்கே வா. விளையாட்டு சாமான் எல்லாத்தையும் ஒரு ஓரமாக எடுத்து வை… "

"அம்மா, என்று சிணுங்கிய மகனிடம், இப்போ ஓரமா எடுத்து வச்சாதான் அடுத்து விளையாட எடுத்து தருவேன். இல்லை என்றால் இப்பவே எல்லாத்தையும் எடுத்து மேலே தூக்கி வெச்சுடுவேன்…" என்று அவள் அரட்டிய அரட்டலில் பார்த்தி முனங்கிக் கொண்டே எடுத்து வைத்தான்.

பாவனாவிடமும் அதே போல் அமைதியாக எடுத்துச் சொல்லி பொம்மைகள் அனைத்தையும் ஒரு இடமாக ஒதுக்க செய்தாள்.

அதற்குள் குளித்துவிட்டு, இடுப்பில் துண்டுடன் வெளியில் வந்தான் உபேந்திரா. சட்டென்று அவனை அப்படி பார்த்ததும், கூச்சமாகிவிட, முகத்தை திருப்பிக் கொண்டாள்…

அதை கவனித்தும் கவனிக்காதது போல், குழந்தைகளிடம் “டேய் என்னடா பண்றீங்க…?” என்றான்.

"அம்மா இதையெல்லாம் எடுத்து வைக்க சொல்லிட்டாங்க..." புகார் அளித்தனர்.

"ரங்கா பிள்ளைங்க விளையாடுவதற்கு தான் வாங்கி போட்டு இருக்கு. அதை எடுத்து எதுக்கு எடுத்து வைக்க சொல்கிறே?"

விளையாடட்டும். வேண்டாம்னு நான் சொல்லலை. அதுக்காக விளையாண்டு முடிஞ்சவுடனே அந்தந்த சாமான அந்தந்த இடத்தில் வைக்கணும்னு சொல்லிக் கொடுக்கிறேன். இப்பவே அது பழகலேனா நாளைக்கு அவங்களுடைய சாமான்களை அவங்களுக்கு பத்திரமா வைச்சுக்க தெரியாது...

அந்த பழக்கம் ரொம்ப அவசியம். இல்லேன்னா, எதுக்கெடுத்தாலும் யாரையாவது எதிர்பார்த்து தான் நிக்கணும் அவங்க. இங்கே தான் நிறைய கப்போர்டு இருக்குல்ல. அதுல ஒரு ஓரத்தில் வைத்துக்கட்டும் தேவையானதை எடுத்து விளையாடட்டும்..." அவனை நிமிர்ந்து பார்க்காமலே பதில் சொல்லி முடித்தாள்...

துண்டுடன் கண்ணாடி முன்னால் நின்று தலை சீவிக் கொண்டவன், அடுத்து உடலெங்கும் பவுடரை அள்ளித் தெளித்து கொண்டான்.

அவன் திரும்பி நின்றாலும் அவள் பக்கத்தில் இருந்த கண்ணாடியில், எதிர்ப்புறம் இருந்த கண்ணாடியில் அவன் டிரஸ் பண்ணுவது தெரிந்தது…

ஆறடிக்கு மேல் நன்கு உயரமும், நிறமும், சீரான உடற்பயிற்சியினால் ஏற்ப்பட்ட கட்டான உடலும், அடர்ந்த சிகையும், அடர்த்தியான மீசையும் அதற்குக் கீழ் அழுத்தமான உதடுகளும், நீண்ட முக வாயும் கூர்மையான கண்களும், ஒரு அழகான ஆண்மகனாக காட்ட, இத்தனை நெருக்கத்தில் யாரையும் பார்த்திராத அவளுக்கு, கூச்சம் பிடுங்கித் தின்றது.

வேறொரு பக்கம் முகத்தை திருப்பினாலும் அங்கும் அவனது பிம்பம் தெரிய "என்னங்கடா இது சுத்தி, சுத்தி கண்ணாடி போட்டு வச்சிருக்கானோ' பார்த்தால் லேமினேஷன் இல் அவனது உருவம் தெரிந்தது…

பேன்ட் டி-சர்ட் அணிந்து, வாட்சை எடுத்து கையில் கட்டிக் கொண்டவன், “ஓகே, பசங்களா அம்மாகிட்ட இருங்க. நான் கொஞ்சம் வெளியில போயிட்டு வரேன்…” என்று குழந்தைகளிடம் சொல்ல, அவர்கள் அவன் காலை கட்டிக்கொண்டனர்.

“அப்பா நாங்களும் வரட்டுமா…?” என்று பாவனா கேட்க,…

“நாளைக்கு நம்ம எல்லாரும் வெளியில் போகலாம். எனக்கு முக்கியமான வேலை ஒண்ணு இருக்கு. அதை முடித்து விட்டு நான் வந்துடறேன். ஒரு நாள் நீங்க அட் ஜஸ்ட் பண்ணிக்கணும்...” என்றவன் குறிப்பாக ரங்காவை பார்த்தான்.

"ரெண்டு பேரும் இங்க வாங்க. நம்ம கொஞ்ச நேரம் விளையாடலாம்..." என்று ரங்கா அழைத்ததும் குழந்தைகள் அவளிடம் ஓடி வந்தனர்.

"க்கூம்..." என்று தொண்டையைச் செருமினாள். திரும்பிப் பார்த்தவன் "என்ன...?" என்று கேட்க...

"முதல்ல உங்களை எப்படி கூப்பிடுவது என்று சொல்லுங்க...?"

"என் பெயர் உனக்கு தெரியும் தானே...? பேர் சொல்லி கூப்பிடு. இப்ப என்ன வேணும்..."

“எனக்கு டிரஸ் மாத்தணும். என்னோட பாக் எல்லாம் எங்க இருக்கு...?"

"டிரைவர் கொண்டு வந்து உள்ள வச்சிருப்பான். நான் ரஞ்சிதம்மாவை எடுத்து வர சொல்றேன். அப்புறம் ஒரு விஷயம் கேக்கணும். பாட்டி நம்ம கூடவே இருக்கட்டும். உங்க ரெண்டு பேர் டிரஸ் போக, வேற என்ன சாமான் வேணும்...?

இங்கே கொண்டு வந்து ஒரு ரூம்ல போடுவதைவிட வாசுக்கு தேவையானதை கொடுத்துட்டு, முக்கியமானது எடுத்துட்டு மிச்ச எல்லா சாமானும் டிஸ்போஸ் பண்ணிடலாம்... என்ன சொல்ற...?"

"சரி, ஆனா பாட்டியை கூட்டிட்டு போய் அவர்களுக்கு தேவையானது எதுவும் இருந்ததனால் எடுத்துக்கொண்டு வந்துடுங்க... எனக்கு என்னோட சர்டிபிகேட் என்னோட புக்ஸ் இதுதான் முக்கியம்... வேற எதுவும் எனக்கு தேவையில்லை..." என்றாள்.

"நான் பாத்துக்குறேன். இன்னைக்கு நான் வர கொஞ்சம் லேட் ஆகும். குழந்தைகளை தூங்க வைச்சிடு..." என்றவன் கீழே சென்றான்.

வாசுவும் கீர்த்தியும் ஏற்கனவே போயிருக்க, பாட்டியிடம் வந்தவன், "பாட்டி நீங்க எங்க எங்க கூடவே இருங்க... கீழ தாத்தாவுக்கு ஒரு ரூம் இருக்கு. அதுக்கு அடுத்த ரூம் உங்களுக்கு ஒதுக்கித் தர சொல்றேன். ரெண்டு பேருக்கும் பேச்சுத் துணையாக இருக்கும். எங்களுக்கும் நீங்க இருக்கிறது சந்தோஷமா இருக்கும்.

நான் இப்போ வாசு கிட்ட ரங்கா கூட ட்ரெஸ், பைல்ஸ் இதெல்லாம் எடுத்து வர சொல்ல போறேன். அதோட உங்களுக்கு என்ன தேவைன்னு வாசு கிட்ட சொல்லிடுங்க. அதை மட்டும்

எடுத்துட்டு வாசுவுக்கு தேவையானதை கொடுத்துட்டு எல்லாத்தையும் டிஸ்போஸ் பண்ண சொல்லிடறேன். உங்களுக்கு சம்மதமா?” என்று பாட்டியிடம் கேட்க...

“ரங்கா என்ன சொன்னா...?” என்று கேட்டார் பாட்டி.

"ரங்கா ஓகேன்னு சொல்லிட்டா...”

“அவள் சொன்னபடியே செஞ்சுடுங்க... நான் வாசு கிட்ட சொல்லிடறேன்..." என்றார் பாட்டி ரங்கா.

வாசுவை அழைத்து விவரத்தை சொன்னவன், நாளைக்கு ஒரு நாள் நீங்க இதை பண்ணி கொடுத்துடுங்க வாசு...” என்று உபேந்திரா கேட்க...

"நாளைக்கே நான் காலி பண்ணிடறேன்... அப்புறம் வீட்டை பூட்டி போடவா...?"

"வேண்டாம் நீட்டா ஒயிட் வாஷ் பண்ணி வாடகைக்கு விடுங்க... மாதா மாதம் வாடகை வாங்கி பாட்டி பெயரில் அக்கவுண்டில் போட்டுருங்க... பாட்டிக்கு உதவும்...!"

"ஷ்யூர் அப்படியே பண்ணிடுறேன்...? என்று வாசு பதிலளித்தான். உபேந்திரா வெளியில் சென்று விட சற்று நேரத்தில் இவளது பையை மாடிக்கு கொண்டு வந்து ரஞ்சிதம்மா கொடுத்தார்...

“நீங்க இங்க என்னவா இருக்கீங்கம்மா…?”

“அம்மா நான் சுத்து வேலை பார்ப்பேன். அதுபோக சமையல் பண்றதுக்கு உதவியாக எல்லாம் வெட்டி கொடுத்து எல்லா வேலையும் பார்ப்பேன்…!”

“சமையலுக்கு.,.?”

“ரொம்ப நாளா சாமையான்னு ஒரு ஆளு இருக்காரு. சின்னையாவோட அப்பா காலத்திலிருந்து அவர்தான். அவருக்கு இப்ப கொஞ்சம் வயசானதனால கையாளு நானு…!”

“குழந்தைகளுக்கு கொஞ்சம் ஜூஸ் போட்டு வைங்க. நான் இப்ப கூட்டிட்டு வரேன்…” என்றவள் பையிலிருந்து சுடிதார் ஒன்றை எடுத்துக் கொண்டு குளிக்கச் சென்றாள்…

நிமிடத்தில் தானும் குளித்துவிட்டு குழந்தைகளுக்கும் டிரஸ் மாற்றி அவர்களை அழைத்துக் கொண்டு கீழே வந்தாள். பாட்டியும் அதற்குள் குளித்து டிரஸ் மாற்றி இருக்க, பாட்டி நீங்களும் தாத்தாவும் சாப்பிட்டுட்டு ரெஸ்ட் எடுக்க வேண்டியதுதானே…?”

“ஆமா நீ வரட்டும்னுதான் வெயிட்டிங். உபேந்திராவுக்கு வேலை இருக்குன்னு வெளியில போயிட்டான்…” என்று பதிலளித்தார் தாத்தா.

எல்லோரும் ஒன்றுபோல் சாப்பிட அமர்ந்தனர். குழந்தைகளுக்கு ஊட்டிக்கொண்டே பாட்டிக்கும் தாத்தாவுக்கும் பரிமாறிய ரங்கா, குழந்தைகள் சாப்பிட்ட பின்பு தானும் சாப்பிட்டு முடித்தாள்…

தாத்தாவும், பாட்டியும் ஒரு டம்ளர் பாலுடன் படுக்க சென்றுவிட்டனர். குழந்தைகள் வெயில் நேரம் என்பதால் பால் வேண்டாம் ஜூஸ்தான் வேண்டும் என்று கேட்டனர். அவர்களுக்கு ஜூஸ் கொடுத்து விட்டு தானும் ஒரு டம்ளர் பாலை குடித்துவிட்டு, ரஞ்சிதம்மாவை அழைத்து, நீங்க சாப்பிட்டு போய் படுங்க அம்மா…” என்றவள் மாடி ஏறி விட்டாள்…

இரவு பன்னிரண்டு மணிக்கு மேல் வந்த உபேந்திரா தனது அறைக்குள் வந்து விடிவிளக்கு எரிய விட்டான். கட்டிலின் ஒரு ஓரத்தில் ரங்காவும், இரண்டு குழந்தைகள் நடுவிலும் படுத்திருந்தனர். இன்னொரு ஓரத்தில் இரண்டு தலையணைகளை அடுக்கி குழந்தைகள் உருண்டு விடக்கூடாது என்று வைத்திருந்தாள்…

நைட் பேண்ட் மட்டும் அணிந்தவன், இருந்த அலுப்பில் தலையணைகளை நகர்த்திவிட்டு அப்படியே கட்டிலில் சரிந்தான்…

மறுநாள் காலை அனைவரும் தூங்கிக் கொண்டிருக்க ரங்காவுக்கு அதிகாலையிலேயே விழிப்பு வந்தது. எழுந்து பல் துலக்கி விட்டு பால்கனி கதவை திறந்து வெளியில் வந்தவள் வெளிச்சத்தில் சுற்றுப்புறத்தை நோக்கினாள்.

பங்களாவைச் சுற்றி மிகப் பெரிய தோட்டம் பரந்து விரிந்திருந்தது. விதவிதமான மரங்களும் செடிகளும் பூக்களும் தோட்டக்காரன் பராமரிப்பில் செழிப்பாக தெரிய அதற்கு நடுவில் ஒரு நீச்சல் குளமும், இன்னொரு ஓரத்தில் குட்டி பார்க் போன்று வடிவமைக்கப்பட்ட சீசா ஊஞ்சல், சறுக்கு போன்றவைகளும் இருந்தன…

பணம் இருந்தால் எல்லாவற்றையும் தங்கள் கைக்குள் அடக்கி விடலாம் என்பதற்கு உதாரணமாக அந்த பங்களா இருந்தது. குழந்தைகள் இதைப் பார்த்தால் மிகவும் சந்தோஷப்படுவார்கள், என்று நினைத்தவள் மெல்ல கீழிறங்கி தோட்டத்தைச் சுற்றி வரலானாள்.

விதவிதமான ரோஜாக்கள் பலவித கலரில் பூத்திருந்தன. அவன் பக்கத்தில் நின்று அந்த பூக்களை பார்த்துக்

கொண்டிருப்பதை பார்த்த தோட்டக்காரன் அருகில் வந்து ''ஏதாவது பூ பறித்து தரவா'' என்று கேட்டான்.

“இல்ல, வேண்டாம்...'' என்று கூறிவிட்டு வீட்டுக்குள் நுழைந்து டீப்பாயில் இருந்த பேப்பரை பார்த்தான். எல்லாவிதமான தமிழ் ஆங்கில தினசரிகள் மற்றும் வாரப் பத்திரிகைகளும் அங்கு இருந்தது. அனைத்திலும் அட்டைப்படமாக அல்லது பெரிய படமாக ரங்காவும் உபேந்திராவும் மாலையும் கழுத்துமாக சிரித்துக் கொண்டிருந்தனர்...

அதைப் பார்த்ததும் கோபம் பொசுக்கென்று எழுந்தது... 'இதுக்கு தான் ஐயா நேத்து ராத்திரி வெளியில போய் இருக்கார் போல இருக்கு. இப்ப எதுக்கு இவ்வளவு பெரிய விளம்பரம்...? நான் பெரிய தியாகின்னு காட்டிக்கவா...?' சுர்ரென்று எழுந்த கோபத்துடன் பத்திரிக்கையை கையில் எடுத்துக்கொண்டு மாடியேறினாள். அப்பொழுதுதான் உபேந்திரா முழித்து இருக்க, அவன் முன்னால் இந்த பேப்பர்களை கொண்டு போய் பொத்தென்று போட்டாள்.

"என்ன இது...?"

“எங்கிட்ட கேட்டா? கொண்டு வந்த உனக்கு தெரியாதா, இது பேப்பர்னு...!

"நான் அத கேக்கல. இது எதுக்கு இத்தனை விளம்பரம் எல்லா பேப்பர்லயும், எங்க பாத்தாலும் நம்ம ரெண்டு பேர் முகமும் தான் தெரியுது...!” அதான் கேட்டேன்...

இது என்னமோ சொன்ன மாதிரி இருக்கே என்னோட கல்யாணம்...? கிராண்டா பண்ணல. இன்பர்மேசன் எல்லாருக்கும் தெரிய வைக்க வேண்டாமா.? விளம்பரம் கொடுத்தேன்.

"அதுதான் ஏன் என்கிறேன்...? ஒரு பேப்பரில் மட்டும் கொடுத்தால் போதாதா. நீங்க கொடுத்திருப்பதை பார்த்தா உங்களுக்கு சுயவிளம்பரம் தேடுகிற மாதிரி இருக்கு...!”

“என்னன்னு...?”

“ரெண்டு குழந்தையோட நான் ஒரு பொண்ண கல்யாணம் பண்ணி இருக்கேன். நான் மிகப்பெரிய தியாகின்னு சொல்லாம சொல்ற மாதிரி இருக்கு...?”

“அப்புறம்...?”

“வேறென்ன...? அதான் சொல்லிட்டு தானே இருக்கேன்... உங்களை உயர்த்தி காட்டுவதற்கு, என்னை இப்படி காட்டணுமா...?”

“இதை வாசித்து பாத்தியா நீ…? என்னை உயர்த்தி உன்னை தாழ்த்தியோ ஏதாவது விளம்பரம் வந்திருக்கா…?”

“அதான் படத்தைப் பார்த்தாலே தெரியுது. வாசித்து வேற பார்க்கணுமா. ஏற்கனவே நம்ம ரெண்டு பேர் படமும் இதுக்கு முன்னாடி வந்து இருக்கு. அப்புறம் என்ன…?” அவளது முகம் பழைய நினைவில் கோபத்தில் சுருங்கியது.

அருகில் வந்தவன் அவள் முகத்தை உற்றுப் பார்த்தான்… “எதுவுமே பார்க்கிற பார்வையில் தான் இருக்கும்… இனியாவது நீ நல்லவிதமா பார்த்து பழகு…”

“எதை நான் நல்லவிதமா பார்க்கல…!”

“உன் கூட இருக்கிறவங்கள, முக்கியமா ஆண்களை. இந்த விளம்பரம் கொடுத்ததற்கு முக்கிய காரணமே, இனி யாரும் நம்ம ரெண்டு பேரையும் பத்தி எந்த விதமான பேச்சும் பேசக் கூடாது என்கிறது தான்…

இதுநாள் வரை தனித் தனியா இருந்ததுனால, அவங்களால இஷ்டத்துக்கு பேச முடிந்தது. இனி இந்த உபேந்திராவோட முகமே வேற. ஹை கோர்ட் கிரிமினல் லாயர் உபேந்திரவின் மனைவி, மக்களைப் பற்றி பேசினால் என்ன ஆகும்னு

அவங்களுக்கு ஒரு எச்சரிக்கை கொடுக்க தான் இந்த விளம்பரமே…!

யாரும் நாக்கு மேல பல்லைப் போட்டு பேச மாட்டாங்க… இத முக்கியமா நான் கொடுப்பதற்கு காரணமே நீ தான். என்னோட ஹைகிளாஸ் சொசைட்டில எனக்கு விமர்சனங்களும், என்னைப்பற்றி அபிப்பிராயங்களும் நான் பெருசா நினைச்சுக்கிட்டது இல்லை…

ஆனா இந்த ஒரு வாரமா உன்னோட முகத்தை நான் பார்த்துட்டுதான் இருந்தேன். பிறர் பேசினதுக்காக நீயும் பாட்டியும் வருத்தப்பட்டது தான் என்னால தாங்க முடியல. அதனாலதான் இந்த விளம்பரம்…

இதைத்தான் நான் நல்ல விதமாக பார்த்து பழகுன்னு சொன்னேன். பிடிக்குதோ, பிடிக்கலையோ நீ என்னோட மனைவி. நான் உன்னோட கணவன். நம்ம ரெண்டு பேரோட எண்ணங்கள் முழுவதும் ஒத்துப் போகணும் அவசியமில்லை.

ஆனா ஒருத்தரை ஒருத்தர் ஹர்ட் பண்ணாம இருக்க முதல்ல கத்துக்கணும்…! என்றவன் பாத்ரூமுக்குள் நுழைந்து விட்டான்.

# அத்தியாயம் 10

குழந்தைகளுக்கு பாலும், உபேந்திராவுக்கு காபியும் எடுத்து வந்தவள், விளையாடிக் கொண்டிருந்த குழந்தைகளை அழைத்து "பாலை குடிச்சிட்டு விளையாடுங்க…" என்று சொல்லவும், அவர்கள் சமத்தாக குடித்து முடித்து விட்டு, "அப்பா தோட்டம் பெருசா இருக்கு கீழே போகலாமா…?" என்று கேட்டனர்…

"இன்னைக்கு வேண்டாம். நாளைக்கு போகலாம்… இன்னைக்கு நிறைய பேர் நம்ம எல்லாரையும் பார்க்க வருவாங்க, அதனால குளிச்சிட்டு புது டிரஸ் போட்டு கீழே போய் தாத்தா கூட இருக்கணும்…!"

"புது டிரஸ், எங்க காட்டுங்க…?" என்று அவர்கள் கேட்டதும், தான் முந்திய இரவில் வாங்கி வந்திருந்த டிரஸ் எடுத்து காட்டினான். நிறைய டிரஸ் இருந்தது.

ரங்காவிடம் "இப்ப எனக்கு வேண்டிய டைலர் ஒருத்தர வர சொல்லி இருக்கேன். கீழேயே மிஷின் இருக்கு. சைஸ் கரெக்ட் பண்ணி கொடுத்திடுவார்…" என்றவன் இன்னொரு பையை எடுத்து கொடுத்தான். அவளுக்கும் அழகான சுடிதார் இரண்டு வாங்கியிருந்தான்…

ஒரு சுடிதாரின் விலை குறைந்தது பத்தாயிரமாவது இருக்கும். அத்தனை அழகாக இருந்தது. “இது உனக்கு போட்டுக்கோ...?

“நான் உங்க கிட்ட கேட்டேனா...?

“நீ கேட்டு வாங்கிக் கொடுக்கணும்னு அவசியமே இல்லை. இன்னைக்கு எனக்கு ரொம்ப நெருங்கினவங்க, நம்மள பார்த்து வாழ்த்து சொல்ல வருவாங்க. சாரி எடுத்தால் பிளவுஸ் தைக்க நேரமில்லை. அதனால சுடிதார் எடுத்தேன். இப்ப இதை போடுறதுல உனக்கு என்ன பிரச்சனை...?”

“எனக்கு ரொம்ப ஆடம்பரமாக டிரஸ் பண்ண பிடிக்காது...!”

“உன்னை எப்போதும் போட சொல்லலையே. இடத்துக்கு தகுந்த டிரஸ் பண்ணித்தான் ஆகணும். நானும் முதலிலேயே சொல்லிட்டேன். நம்ம விருப்பப்படி வாழ முடியாது. குழந்தைகளுக்காக அம்மா, அப்பா வேஷம் கட்டியாச்சு. அப்போ அதை தொடர்ந்து தான் ஆகணும்... எனக்கும்தான் உங்க வீட்டில இருக்கும்போது சவுகரியங்கள் கம்மியா தான் இருந்தது. நான் அட்ஜஸ்ட் பண்ணிக்கல...”

“உங்களை யாரும எங்க வீட்டுக்கு வர சொன்னா...? வராமல் இருந்திருந்தால் இவ்வளவு பிரச்சனை இல்லை...!”

“உண்மைதான். நீயும் எங்க ஹாஸ்பிட்டல் வராம இருந்தா எந்த பிரச்சனையும் இல்லை…! அதுக்கு என்ன பண்றது. பழசை பேசாதேன்னு நான் சொல்லிட்டே இருக்கிறேன்…!” அவன் கோபத்தில் குரலை உயர்த்தவும், குழந்தைகள் மிரண்டு விழித்தன…

“ச்ச… உனக்கு என்னடி பிரச்சனை…? நான்தான் படிச்சு, படிச்சு சொல்றேன்ல. அல்லது உன்ன வேற மாதிரி ஏதும் தொந்தரவு பண்ணினேனா…? இல்லைல்ல… அவ்வளவு நான் விட்டுக் கொடுக்கும் போது நீ ஒரு சிலது விட்டுக் கொடுத்தால் என்ன…? உடனே பெமினிசம் பேசாதே. இதை கட்டிட்டு கீழே வரதா இருந்தா வா. இல்லையென்றால் மேலேயே இருந்துகோ. குழந்தைகளை மட்டும் அனுப்பு…” என்று சொல்லிவிட்டு அவன் குளித்து மிக அழகாக டிரஸ் பண்ணி கீழே சென்று விட்டான்…

குழந்தைகளை குளிக்க வைத்து டிரஸ் பண்ணி கீழே அனுப்பியவள் தானும் குளிக்க சென்றாள். அதற்குள் கீழே சில ஆட்கள் வந்து விடவே அவர்களிடம் குழந்தைகளை அறிமுகப்படுத்தி பேசிக்கொண்டிருந்தான். அவர்கள் எல்லோரும் சேதுராம் குடும்பத்துக்கு மிகவும் வேண்டியவர்கள்…

“ரங்கா எங்கே…? என்று தாத்தா கேட்க… “தெரியல, குளிக்கப் போய் இருப்பான்னு நினைக்கிறேன்…” என்று முடித்துக் கொண்டான்.

தாத்தா ரஞ்சிதம்மாவிடம், ”மேல போயி ரங்காவை கூட்டிட்டு வாங்க” என்று சொல்லி அனுப்பி வைத்தார். ரஞ்சிதா மேலே சென்றதும் பாட்டியும் பின்னாலேயே மாடிக்கு சென்றார். ரஞ்சிதம்மா சென்று ரங்காவிடம், “அம்மா உங்களை பெரியய்யா வரச் சொன்னாங்க. ஐயாவுக்கு ரொம்ப வேண்டியவங்க வந்திருக்காங்க…” என்று சொல்ல பின்னாலேயே வந்த பாட்டி, “நீங்க கீழே இறங்குங்க, நான் வரச் சொல்றேன்…” என்றார்.

ரஞ்சிதம்மா சென்றதும் கதவை சாத்தி தாழ்ப்பாள் போட்டவர், “என்ன ரங்கா குளிச்சிட்டு பேசாமல் உட்கார்ந்து இருக்கே…!”

“ஐயோ பாட்டி, ஒண்ணுமே பிடிக்கல. நான் சாதாரண சுடிதார் போடக் கூடாதுன்னு, புதுசா வாங்கி கொடுத்துட்டு இதைத்தான் போட்டுட்டு வரணும் அப்படின்னு ஆர்டர் போட்டு போயிருக்கிறான்…”

“ஏன் நல்லா இல்லையா…?”

“நல்லாத்தான் இருக்கு. அது பிரச்சனை இல்ல ரொம்ப காஸ்ட்லியா இருக்கு. நான் இப்படி எல்லாம் போட்டதே இல்லை…”

“உண்மைதான் ரங்கா, எல்லாத்துக்கும் நம்மளோட பழக்கவழக்கம் தான் காரணம். இத்தனை நாள் நம்மை மாத்திக்க வேண்டிய சூழ்நிலை இல்லை. ஆனா இப்ப மாத்திக்க வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறோம்… போட்டுக்கோ, நல்லாதான் இருக்கும். யாருக்காக இல்லேன்னாலும் எனக்காகவும் குழந்தைகளுக்காகவும் நீ கொஞ்சம் மாறிக்கோ…” என்று குழந்தைக்குச் சொல்வது போல் சொன்னதும் அதை போட்டுக் கொண்டு வந்தாள்…

அந்த டிரஸ் முற்றிலும் அவளது தோற்றத்தை வேறு மாதிரியாக காட்டியது. அவளுடைய நிறத்திற்கும் உயரத்திற்கும் அந்த உயர்ரக சில்க் காட்டன் பட்டு சுடிதார் மிகவும் பாந்தமாக பொருந்தி இருந்தது. நீலமும் பச்சையும் கலந்த அந்த சுடிதாருக்கு ஏற்ற வண்ணம் பாட்டி தனது கையில் வைத்திருந்த தனது பழைய கால அணிகலன்களை அவளுக்கு அணிவித்தார்…

“இதெல்லாம் எதுக்கு…?”

“மூச்… பேசப்படாதுன்னா பேசப்படாது… ரங்கா எனக்காக நீ ஒரு வாக்கு தருவியா…?”

“என்ன பாட்டி…?”

“இந்த உலகத்திலேயே இனிமேல் உனக்கு முக்கியமான உறவு அப்படி என்றால் அது உபேந்திரா மட்டும்தான். குழந்தைகள் எல்லாம் இரண்டாம் பட்சம். அவர்களுக்காகத்தான் இந்த உறவு அப்படினா கூட, உன்னோட சொந்த சுய வெறுப்பு விருப்பு எல்லாத்தையும் கழட்டி வைத்துவிட்டு அவன் பக்கம் இருக்கிற நியாயத்தை மட்டும் பாரு. எதுவும் தப்பா தெரியாது. கொஞ்ச நாள்ல உனக்கே அவரோட அருமை புரியும். அவனும் உன்னை மாதிரி நல்லவன்தான். நீ வளர்ந்த சூழ்நிலை வேற, அவன் வளர்ந்த சூழ்நிலை வேற அவ்வளவுதான். யாராவது ஒருத்தர் தன்னுடையதை விட்டுக் கொடுக்கணும். நீ விட்டுக்கொடு எனக்காக…” என்று கண் கலங்க கையேந்தி பாட்டி கேட்க, அவளால் அதை மறுக்க முடியாது போயிற்று.

“சரி பாட்டி இனி எதுக்காகவும், அவர் சொன்னதை எதிர்த்து நான் எதுவும் செய்ய மாட்டேன்…” என்று பாட்டியின் கை மீது அடித்து சத்தியம் செய்தாள்.

ரஞ்சிதம்மா கொண்டு வந்து கொடுத்த பூவை, ரங்காவின் தலையில் வைத்துவிட்டு அவளை கையோடு அழைத்து கொண்டு கீழே வந்தார்…

மாடிப் படியில் இறங்கி வந்த ரங்காவின் தோற்றத்தை கண்ட அனைவரும் வைத்த விழி எடுக்காமல் பார்த்தனர். உபேந்திராவே அவளது தோற்றத்தைக் கண்டு, மயங்கி நின்றான். கிளிப் போட்டு இடை வரை பிரித்துவிட்ட கூந்தலும், அதில் தொங்கிய மல்லிகைச்சரமும், நல்ல உயரமும் அதற்கேற்ற உடல் அமைப்பும், வட்ட முகத்தில் நீள் விழிகள் நீந்த, ரூஜ் இல்லாமலே சிவந்த கன்னங்களும், கனிந்த அதரங்களுமாய் இறங்கி வந்தவளைப் பார்த்ததும், அனைவரும் 'பொண்ணு நல்லாத்தான் இருக்கா' என்று நினைத்தனர். அவளைக் கண்டதும் குழந்தைகள் அம்மா என்று அழைத்துக் கொண்டு ஓடிவந்தனர்.

அவர்களை இரு கைகளில் பிடித்துக்கொண்டு அங்கு வந்தாள். குழந்தைகள் அவர்களாகவே அவளை இழுத்துக்கொண்டு உபேந்திராவின் பக்கம் சென்றனர். "அப்பா அம்மாவுக்கும் ட்ரெஸ் சூப்பர்." என்று அறிவித்தனர்.

தன்னையே பார்த்துக் கொண்டிருந்த உபேந்திராவை ஒரு வினாடி விழி உயர்த்தி பார்த்துவிட்டு, வந்தவர்களுக்கு பொத்தம் பொதுவாக ஒரு வணக்கம் வைத்தாள்… சேதுராம் அவளைத் தன்

பக்கம் அழைத்து, “ரங்கா இவர்களும் நானும் கிட்டத்தட்ட நாப்பது வருஷமா ஃபேமிலியா பழகிட்டு வரோம். இவர்கள் எல்லோருமே என் கூட வேலை பார்த்த டாக்டர்ஸ்…” என்று அறிமுகப்படுத்தி வைக்க, அவர்களுக்கு வணக்கம் செலுத்தினாள்…

அவர்கள் எல்லோரும் ஒருமித்த குரலில், “சேதுராம், பொண்ணு பார்க்க அழகா மட்டும் இல்லை குணமாவும் இருக்கு… நீங்க கொடுத்து வச்சவர் தான்…” என்று சொல்லி அவளிடமும் “நல்லா இரும்மா…” என்று வாழ்த்தினர்.

வந்தவர்களுக்கு ஜூஸ் வகையறாக்களை, ரஞ்சிதம் எடுத்துக்கொண்டு வர, அவளிடமிருந்து ஒன்று ஒன்றாக எடுத்து எல்லோர் கையிலும் ரங்கா கொடுத்தது, தாத்தாவுக்கு மிகுந்த மன நிறைவாக இருந்தது. அவளுடைய செய்கை அத்தனையும் பார்த்துக் கொண்டிருந்த உபேந்திராவுக்கு, மனசுக்குள் கோபமும் வெளியில் சிரித்த உதடுகளாகவும் இருந்தான்.

‘நான் சொன்னா, டிரஸ் போட மாட்டாளா…! அதே பாட்டி சொன்னா தான் செய்வாளா. நான் என் கூட கொஞ்சிக் குலவி, குடித்தனம் நடத்துன்னா சொல்றேன். நாம இருக்கிற இடத்துக்கு தகுந்த மாதிரி டிரஸ் போடுன்னு தானே சொல்றேன். இதே வாசு சொன்னா, பாட்டி சொன்னா கேட்க தெரியுது. அப்போ நான் யாரு…?’ மனதுக்குள் குமைந்து கொண்டிருந்தான்.

அடுத்து ஒவ்வொருத்தராக வர ஆரம்பிக்க எல்லோரையும் வரவேற்று அவர்கள் வாழ்த்துக்களை பெற்றுக் கொண்டனர். இடையிடையே குழந்தைகளுக்கு சாப்பாடு என்று ஒரு பக்கம் அவர்கள் பின்னால் வேறு ஓட வேண்டியிருந்தது…

ஆட்கள் வரும்போது அவன் உள்ளே வந்து அழைக்க, வெளியில் சென்று அவர்களுக்கு வணக்கம் சொல்லிவிட்டு பின்னர் குழந்தைகள் பின்னால் ஓடி விடுவாள்…

ஒரு கட்டத்தில் எரிச்சலானாவன், “குழந்தைகளை ரஞ்சிதம்மா பொறுப்பில் விட்டுட்டு வா. கொஞ்ச நேரம் தொடர்ந்து இருக்க மாட்டியா…?” என்று மற்றவர்கள் அறியாது பல்லைக் கடித்தான்…

சிரித்த முகமாகவே அவனுக்கு அருகில் நின்று, “என்னமோ குழந்தைகளுக்காக தான் நான் சொன்னீங்க… இப்ப என்ன புதுசா குழந்தைகளை வேற ஆள் பொறுப்பில் விட சொல்றீங்க…?” என்று பதிலுக்கு அவளும் அவனை வார, ‘சண்டி தான் இவ… இவளுக்கு தார்க்குச்சி போடுறதுக்குள்ள நம்ம ஆயுசே தீர்ந்து விடும் போல இருக்கு…’ என்று நினைத்து முகத்தைத் திருப்பிக் கொண்டான்…

இவர்கள் இருவரையும் பேசுவதை கவனித்துக் கொண்டே இருந்த பாட்டி, “நீ போ ரங்கா. நான் பார்த்துகிறேன் பிள்ளைங்கள…” என்று பொறுப்பை தனதாக ஏற்றார்…

அதற்குள் ரங்கபாஷ்யம் தனது மனைவியுடன் வந்துவிட்டார். அவரைக் கண்டதும் மிக்க மகிழ்ச்சியுடன் பாட்டியும், ரங்காவும் வரவேற்ற்றனர்.

“தாத்தா லாயர் ரங்கபாஷ்யம் சார் அவங்க மனைவியோட வந்திருக்கார். இவங்க கிட்ட தான் ரங்கா வேலை பார்த்துட்டு இருக்கா...!” என்று அவர்களை தாத்தாவிடம் அழைத்து வந்தான்.

“ரொம்ப வருஷம் ஆச்சு உங்களைப் பார்த்து...” ன்று மகிழ்ச்ச்சியுடன் வரவேற்ற டாக்டர் சேதுராமனிடம், “ஆமா நானும் நினைப்பேன். ஆனால் சந்தர்ப்பம் அமையலை...” என்றவர் தொடர்ந்து...

“ரங்கா என் பொண்ணு மாதிரி, ரொம்ப நல்லவ, திறமைசாலி, எல்லாவற்றையும் விட சுயமரியாதை உள்ளவ, தேவையில்லாம யார்கிட்டயும் எதுவும் பேச மாட்டா. உங்க பேரனுக்கு அவ மனைவியா கிடைச்சது, உண்மையிலேயே சந்தோஷமான ஒரு விஷயம்...” என்று ரங்காவை புகழ்ந்தார்...

“தாத்தாவும், ஒரு வகையில் பாட்டி ரங்கா என்னோட பள்ளி தோழி. அவள மாதிரியே இருக்கிற பேத்தி ரங்காவை என் பேரனுக்கு மணமுடித்தது சந்தோஷம்தான்...” என்று கூறினார்.

இருவரும் அருகருகே உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்க இருவரின் காலிலும் பணிந்த ரங்கா "என்னை ஆசிர்வாதம் பண்ணுங்க." என்று அவர்களிடம் கேட்க இருவரும் மனமார வாழ்த்தினர்.

"ஆன்ட்டி நீங்களும் ஆசிர்வாதம் பண்ணுங்க..." என்று மீனாவிடமும் காலில் விழுந்தாள். அதுவரை இருந்த கோபமும் வெறுப்பும் மீனாவுக்கும் அகல அவளும், "நல்லா இருக்குமா... இனியாவது எந்த கஷ்டமும் இல்லாம நீ சந்தோஷமா இருக்கணும்..." என்று வாழ்த்தினாள்...

இதை கவனித்த உபேந்திரா, அவளை அதிசயமாக நோக்கினான்... 'ஏதேது இவளுக்கு இந்த அளவு பணிவு கூட உண்டு போல இருக்கு...' என்று நினைத்தவன் தன் புருவத்தை ஏற்றி காட்டி அவளிடம் அதைச் சுட்டிக்காட்ட, ''போடா, அவர் எங்க அப்பாவுக்கு சமம்' என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டாலும் அவனிடம் சொல்லவில்லை.

மாலை வரை, ஒவ்வொருத்தராக வந்து கொண்டிருக்க இருவருக்கும் அன்று முழுவதும் ஓய்வே இல்லை... தாத்தா கூட அவனிடம் யாருமில்லாது இருக்கும்போது, "ஏன் உபேந்திரா பேசாம நீ ஒரு ரிசப்ஷன் வைத்திருக்கலாம்...!" என்று சொல்ல...

நேரடியாகவே அவரைப் பார்த்தவன், “வைத்திருக்கலாம் எனக்கு ஒண்ணும் இல்ல. ஆனா உங்க பேத்திக்கு பிடிக்கணும் இல்ல. அவளுக்காக தான் வைக்கல. இன்னைக்கு ஒருநாள் தானே முடிஞ்சிடுச்சு, இனிமே யாரும் வர மாட்டாங்க…” என்று சொல்லி சோம்பலுடன் கைகளை நெட்டி முறித்து, கால்களை நீட்டி தளர்வாக சோபாவில் அமர்ந்தான்…

“ரங்கா ப்ளீஸ் கொஞ்சம் தண்ணீர்…” என்று அவளிடம் கேட்க, யாருமறியாமல் முறைத்துக்கொண்டே, ஒரு கிளாஸில் சில் வாட்டரை எடுத்துக் கொண்டு வந்து கொடுத்தாள்…

அவள் கொடுத்ததும் வாங்கியவன், “ஆமா தண்ணி தான கேட்டேன். வேற ஏதோ முத்தம் கேட்ட மாதிரி, உன் கண்ணாலேயே எரிக்கிறே…” மற்றவர்கள் காதில் விழாமல் வேண்டுமென்றே அவளை எரிச்சலூட்ட…

“அதைக் கேட்டுத்தான் பாருங்களேன் என்ன நடக்குது அப்புறம் தெரியும்…!” என்றாள் துடுக்காக…

“போடி, அதுக்கு எல்லாம் எனக்கு வேற ஆள் இருக்கு…” என்றான் வேண்டுமென்றே… அவனுக்கு அவளிடம் வார்த்தையாட மிகவும் பிடித்திருந்தது.

“அப்ப அவளைப் கூப்பிட்டு தண்ணி கேட்க வேண்டியதுதானே…” என்றாள் தன் உதட்டை சுழித்துக் கொண்டு…

“ம்ம், என்ன செய்ய… அதுக்கு வாய்ப்பு இல்லையே…!” என்று அவன் ஒரு மாதிரி குரலில் சொல்ல, இவர்கள் என்ன பேசுகிறார்கள் என்று தெரியாவிட்டாலும், ஏதோ அவனை எதிர்த்துப் பேசுகிறாள் என்பது புரிந்த பாட்டி “ரங்கா உள்ள போய் பிள்ளைங்க என்ன செய்றாங்கன்னு பாத்துட்டு கூட்டிட்டு வா…” என்று அவளை திசை திருப்பி விட்டார்.

“இன்னொரு நாள் உங்களுக்கு வச்சுக்கறேன் கச்சேரி…” என்று அதுக்கும், அவனுக்கு பதில் சொல்லிவிட்டு தான் நகர்ந்தாள். புன்னகையோடு அவளைப் பார்த்த அவனுக்கு, மனதில் சாரல் அடித்தது…

மற்ற பெண்களைப் போலல்லாமல், பார்க்க பார்க்கவும், பழக பழகவும் ரங்கா இனிமையானவளாக தெரிந்தாள். அவன் பார்த்து பழகிய பெண்கள் அனைவரும் அவனுடைய உயரத்திற்காகவே அவனிடம் போலியாக பழகினார். நட்பு பாராட்டினர். அதற்கு மேலும் சென்றனர். அவனை கைக்குள் போட்டுக் கொள்வதற்காக எந்த எல்லைக்கும் சென்ற பெண்களை அவனும் அறிவான்… அவர்களை எல்லாம் எந்த எல்லையோடு நிறுத்த வேண்டும் என்று அவனுக்குத் தெரிந்திருந்தது…

அந்தப் பெண்களைப் போல இல்லாமல், முற்றிலும் ஒரு மாறுபட்ட கதாபாத்திரமாக, ஒரு ராங்கிக்ரியாக அவனுக்கு அறிமுகமான ரங்கா, இன்று காட்டியது வேறு ஒரு பரிணாமம்... அதை அவன் மிகவும் ரசித்தான்...

ஏழு மணிக்கு மேல், எல்லோரும் டயர்டாகி விடவே, அவரவர் அறைக்கு சென்று விட்டனர். அதற்கு மேல் போன் பண்ணி அவர்களிடம், உபேந்திரா நாசுக்காக தவிர்த்து விட்டான்... தனது அறைக்கு சென்று குளித்துவிட்டு, வெறும் ஷார்ட்ஸ் அணிந்து கொண்டு குழந்தைகளுடன் விளையாட ஆரம்பித்தான்...

“அப்பா நாங்க சாயங்காலம் தோட்டம் பார்த்தோம். அதில் நீச்சல் குளம் இருக்கு. எங்களுக்கு அதுல குளிக்கணும்...” என்று பார்த்து சொல்ல...

“அங்கே எல்லாம் யார் துணையும் இல்லாமல் போக கூடாது. நான் நீச்சல் கற்றுக் கொடுக்க ஏற்பாடு பண்றேன். அதுக்கு அப்புறம் தான் நீங்க அங்க போகணும் சரியா. ஈவினிங் பார்க்ல அம்மாவாது, அப்பாவாவது இருக்கணும்... மூவரும் பால்கனியில் உட்கார்ந்து விளையாடி கொண்டிருந்தனர். பால்கனி மிகவும் விஸ்தாரமாக இருந்ததால் அதில் ஊஞ்சல், சேர் எல்லாமே இருந்தது. வெளிக்காற்று வேண்டும் என்ற எண்ணத்தில், குழந்தைகளுக்கும் மெல்லிசாக ஒரு டிரஸ் அணிவித்துவிட்டு

தானும் வெறும் ஷார்ட்ஸ் மட்டும் அணிந்து மேல் சட்டை எதுவும் இல்லாமல் விச்ராந்தியாக உபேந்திரா அவர்களுடன் இருந்தான்…

குழந்தைகள் தங்களுடைய பொம்மைகள் அனைத்தையும் எடுத்துக் கொண்டு வந்து வைத்து அவரிடம் கேட்டு, கேட்டு விளையாட ஆரம்பித்தன. அவர்கள் பேச்சுக்கு பதில் சொல்லிக்கொண்டு, அவர்களிடம் பேசிக் கொண்டு அந்த நிமிடங்களை ரசித்துக் கொண்டிருந்தவன், ஏதோ சத்தம் கேட்டு திரும்பி பார்க்க, ரங்கா அங்கு வந்து நின்றாள்…

"பார்த்தி பாவனா சாப்பிடலையா…" என்று கேட்டுக் கொண்டே திரும்பிப் பார்த்தவள், அவனுடைய அரைகுறை ஆடையை கண்டு, "என்ன இது கொஞ்சம் கூட டீசன்ஸி இல்லாமல்…?" என்று முகத்தைச் சுளித்தாள்…

"என்ன சொல்றே…! எனக்கு வீட்ல இப்படி இருந்துதான் பழக்கம். ஒவ்வொருத்தருக்கு ஒவ்வொரு மாதிரி பழக்கம். மற்ற யார் முன்னாடியுமா நான் இப்படி இருக்கேன். முந்தி, எங்க தாத்தா இருக்கும்போது, இப்ப என் பசங்க முன்னாடி. அப்புறம் நீ என்ன வேற்றாளா. என் வொயிப் தானே…" என்றான் கூலாக…

"ஆமா நான் இப்படி இருக்குறதுல உனக்கு என்ன பிரச்சனை…? சொல்லப்போனால் எனக்குதான் கூச்சமா

இருக்கணும்… எனக்கு இல்லப்பா. ஒருவேளை உனக்கு என்ன பாத்தா ரொமான்டிக் மூடு வருதோ…?” என்று கண்ணடித்து சிரிக்க…

“குழந்தைங்க முன்னாடி என்ன பேச்சு இது…?” என்று தன்னை அறியாமல் ஒரு தாயாக அவள் சொல்லிவிட…

“அப்ப தனியாய் இருக்கும் போது பேசலாம்கிறியா…?” என்றான் சிரித்துக்கொண்டே…

‘சரியான விடாக்கண்டனா இருக்கானே’ என்று மனதுக்குள் அர்ச்சித்தபடி, நான் உங்களை ரசிச்சா தானே, ரொமான்ஸ் எல்லாம் வரும். என்ன பொறுத்த அளவுல, உங்க வீட்ல நான் இருக்கேன், இந்த குழந்தைகளுக்கு அம்மா என்கிற பெயரில் அவ்வளவுதான். நீங்க எப்படியும் இருங்க…?” என்றாள் சிடுசிடுத்தபடி…

“ஓகே தேங்க்ஸ். நான் பிரியா இருக்கிற மாதிரி நீயும் வேணும்னா நைட்டி மட்டும் போட்டு அந்த ரூம்ல இருக்கலாம். இல்ல நைட் பேன்ட் கூட வாங்கித்தரேன்… ஆனா ஒரு விஷயம் ஞாபகம் வச்சுக்கோ, நான் உன்னை என் குழந்தைகளோட அம்மாவா மட்டும் பார்க்கலை, என்னோட வொயிபாவும் தான் நெனச்சிருக்கேன்…” என்று சொல்லி அவள் பிபியை எகிற வைக்க…

“உங்க கிட்ட போய் பேச வந்தேனே…! என்னை சொல்லணும். வாங்கடா சாப்பிட போவோம்…” என்று அழைக்க…

“அம்மா இங்க கொண்டு வந்து ஊட்டி விடுங்களேன்…” என்றனர் கோரசாக…

“டேய் அதெல்லாம் நடக்குற காரியமா? நான் எத்தனை தடவை மாடி ஏறி இறங்குறது…” என்று சொல்ல…

“கவலைப்படாதே…” என்று இன்டர்காமில் சமையல்காரரை அழைத்து “குழந்தைகளுக்கு சாப்பாடு, எனக்கு சாப்பாடு எல்லாம் மாடிக்கு கொடுத்து அனுப்புங்க…” என்று சொல்லி, குழந்தைகளிடம் என்ன வேண்டும் என்று கேட்டு, அதை அனுப்பி விட சொன்னான்.

“நீயும் அவங்க கூட உட்கார்…” என்றவன் போனை எடுத்து தாத்தாவிடம் “தாத்தா நீங்க சாப்பிட்டு படுங்க. நாங்க மாடியிலேயே சாப்பிடுறோம்…” என்று அவர்களுக்கும் விஷயத்தை சொல்லி விட்டான்.

குழந்தைகள் அவள் கையைப் பிடித்து எடுத்து அருகில் உட்கார வைத்துக் கொண்டனர். வேறு வழி இல்லாமல் கீழே காலருகில் உட்கார்ந்தாள். அவன் சேரில் உட்கார்ந்து காலை நீட்டி,

குழந்தைகளிடம் பேசிக்கொண்டிருக்க அவர்கள் மூவரும் கீழே உட்கார்ந்து இருக்கும் படி இருந்தது…

“அம்மா, அப்பா எங்களுக்கு நீச்சல் சொல்லித் தரேன் சொல்லிருக்காங்க…?”

“ம்ம்…”

“அப்புறம் நாங்க, லீவு நாள்ல ஈவினிங் தோட்டத்தில் விளையாடுவோம்… அப்பாவும் வரேன்னு சொல்லி இருக்காங்க… நீங்களும் வருவீங்கல்லாமா…!’

“நான் எதுக்கு அதான் உங்க அப்பா வரேன்னு சொல்லி இருக்கார்ல…!” என்றாள் கடுப்புடன்… குழந்தைகளை வைத்து அவன் விளையாடுவது நன்றாக புரிய அவளுக்கு எரிச்சலாக வந்தது…

“ஆசையா கூப்பிடுதுங்க, அதை விட உனக்கு என்னடி வேலை. கிச்சன்ல வேலை செய்ய ஆள் இருக்கு, மற்ற எல்லாத்துக்குமே ஆள் இருக்கு. அப்புறம் குழந்தைங்க கூட விளையாட வேண்டியதுதானே…!”

“ஏன் என்னோட ஆபீஸ் வேலை இல்லையா…?”

“அத பத்தி நானே உன்கிட்ட பேசணும் நினைச்சேன். நானும் ரங்கபாஷ்யம் சாரும் பெரும்பாலும் எதிரெதிராகதான் மோதிக் கொள்வோம். சோ, அங்க நீ வேலை பார்க்கிறது சரிவராது. நீ பகல்ல குழந்தைங்க ஸ்கூலுக்கு போய் இருக்க நேரம் கொஞ்ச நேரம் நம்ம ஆபீஸ் மானேஜ் பண்ணு. ஈவினிங் குழந்தைகள ஸ்கூல்ல இருந்து கூட்டிட்டு வீட்டுக்கு வந்துரு. குழந்தைகளை கொண்டு போய் விடுவது நம்ம ரெண்டு பேருமே சேர்ந்தார் போல கொண்டு போய் விட்டுடலாம்… மேடம் என்ன சொல்றீங்க…?” என்றான் கிண்டலாக…

“அதெப்படி அவர்கிட்ட பொசுக்குன்னு வேலைக்கு வரமாட்டேன்னு சொல்றது…”

“இந்த ஐடியாவே அவரோடதுதான். இன்னைக்கு வந்தவரு என்னை கூப்பிட்டு மெனக்கெட்டு சொல்லிட்டு போனார்… நம்பிக்கை இல்லை போனை போட்டு கேளு…

“ரங்கா என்னோட ஆபீஸ்ல வேலை பார்க்கிறது அவ்வளவு நல்லா இருக்காது. நாலு பேர் நாலுவிதமா பேசுவாங்க… நீங்க அதுக்காக அவள வீட்டிலேயே வைச்சுராதீங்க… அவ ரொம்ப எபிசியன்ட். அது தான் உங்களுக்கு தெரியுமே, ரெண்டு தடவை உங்களை ஜெயிச்சிருக்காளே… அப்படின்னு ஒரே அட்வைஸ் மயம்…

நான்கூட அவர்கிட்ட “சார், குழந்தைகளைப் பார்க்க வேண்டாமா…? அப்படின்னு கேட்டதற்கு, “குழந்தைகள் ஸ்கூலுக்கு போய் இருக்க நேரம் உங்க ஆபீஸ்ல அவளை உட்கார வையுங்க, அப்படின்னு சொல்லிட்டு போயி இருக்காரு. பார்த்தியா என் நிலைமையை, தி பேமஸ் கிரேட் கிரிமினல் லாயர் உபேந்திரா செகண்டரி ஆயிட்டான்…” என்றான் சிரித்துக்கொண்டே…”

“இப்ப என்ன? நான் வேணா உங்க ஆபீஸ் மெயின்டேயின் பண்ணல. நீங்களே பாத்துக்கோங்க நான் வீட்ல இருக்கேன்…” என்று அவள் முறுக்கிக் கொள்ள…

“ச்ச, டேய், இந்தர் உன்னோட வொயிப் ரொம்ப சுயமரியாதை பார்க்கிறவங்க… இது கூட உனக்கு தெரியாதாடா, வாயை கொடுத்துட்டு ஏண்டா வாங்கி கட்டற…?” என்று தனக்குத் தானே தன்னையே வடிவேலு பாணியில் சாடிக் கொள்ள, பார்த்த குழந்தைகள் இருவரும் கலகலவென்று வாய்விட்டு சிரித்தனர்.

அவளுக்கும் சிரிப்பு வந்தது அடக்கிக் கொண்டாள்… “டேய், உங்க அம்மா சிரிச்சிட்டாடா…” என்று குழந்தைகளிடம் அவன் உரத்துச் சொல்ல அவர்கள் இன்னும் அம்மாவை பார்த்து நன்றாக சிரித்தனர்…

அதற்குள் ரஞ்சிதம்மா ஒரு ட்ரேயில் வைத்து எல்லாவற்றையும் கொண்டு வந்துவிட, அவனுக்கு ஒரு பிளேட் எடுத்துக் கொடுத்துவிட்டு குழந்தைகளுக்கு ஊட்ட ஆரம்பித்தாள். திரும்பவும் என்ன வேண்டும் என்று கேட்டு ரஞ்சித்ம்மா எல்லாவற்றையும் மாடிக்கு கொண்டு வந்து விட்டார்…

குழந்தைகளிடம் பேசி சிரித்துக் கொண்டே உண்டதில் நேரம் போனதே தெரியவில்லை. பதினோரு மணிக்கு மேல், எல்லாவற்றையும் டிரேயில் வைத்து மூடி வைத்துவிட்டு, அலுப்பு மிகுதியால் அனைவரும் படுத்து விட்டனர்.

# அத்தியாயம் 11

வாழ்க்கை வண்ணமயமாக தெரிந்தது பாட்டி ரங்காவுக்கும் சேதுராமனுக்கும்… அவர்கள் இருவரும் தங்கள் பழைய கால நினைவுகளை பகிர்ந்து கொண்டு குழந்தைகளோடு கொஞ்சி மகிழ்ந்து கொண்டு இருந்தனர்…

உபேந்திராவுக்கு குழந்தைகள் வந்ததும் தங்கள் வீடு மாறிவிட்டது போல் தோற்றமளித்தது… எப்பவும் அவர்களின் சில்வண்டு சத்தமும், தன்னிடம் உயிராய் இருப்பதும் அவனுக்கு புதிய மாற்றத்தையும் சந்தோசத்தையும் தர, முடிந்தவரை தனது வேலை நேரம் போக அவர்களுடன் கழிக்க ஆரம்பித்தான்…

ரங்காவுக்கு மட்டும் தன்னுடைய வாழ்க்கையை அப்படியே திருப்பி போட்டது போல் இருந்ததால் கொஞ்சம் தடுமாறித்தான் போனாள். காலையில் சீக்கிரமே எழுந்து குழந்தைகளை கிளப்பி தானும் கிளம்பி ஸ்கூலுக்கு இருவரும் கொண்டு போய்விட்டு பின்னர் உபேந்திராவின் அலுவலகம் சென்றனர்.

அங்கு அவள் அவன் சொல்லிய வேலைகளை செய்தது போக, வேலை செய்யும் மற்றவர்களையும் கவனிக்கும் பொறுப்பை ஏற்றாள். அவன் பத்து மணிக்கு கோர்ட்டுக்கு போக வேண்டும்

என்பதால், அலுவலகம் வந்த பத்து நிமிடங்களில் டிரஸ் மாற்றி விட்டு கிளம்பி விடுவான்.

மதியம் வருபவன் அலுவலகத்தில் இருந்து புதிய கேஸ் விபரங்களை கவனிப்பான். மதியம் இருவருக்குமே வீட்டிலிருந்து சாப்பாடு வந்துவிடும். மூன்று மணி ஆனதும் பெரும்பாலும் இருவரும் கிளம்பி விடுவர். இல்லையெனில் அவள் மட்டும் கிளம்பி குழந்தைகளை பள்ளியில் சென்று அழைத்துக்கொண்டு வீடு வந்து விடுவாள்.

வரும்போது அவர்கள் சொல்லும் அத்தனையும் கேட்டுக் கொண்டே வர வேண்டும்... வீட்டிற்கு வந்ததும் அவர்களுக்கு உடை மாற்றி, சாப்பிட ஏதாவது கொடுத்து தோட்டத்திற்குள் சென்றால் வீட்டுக்குள் வர இருட்டிவிடும்...

பின்னர் ஹோம் ஒர்க் படிப்பு சாப்பாடு. அதற்குள் உபேந்திரா வந்துவிட்டால் அவனுடன் விளையாடி விட்டுத்தான் தூங்க செல்வான். இது வழக்கமாயிற்று.

அன்று அப்பா வந்ததும் அவன் மேல் ஏறி விளையாடிக் கொண்டிருந்த பாவனா, "அப்ப நீங்க ஈவினிங் எங்க கூட விளையாட வரேன்னு சொன்னேங்க, வரவே இல்ல..."

"ஆபீஸ்ல வேலை இருக்கு இல்லடா..."

“நீங்க பொய் சொல்றீங்க. அம்மா வந்துடறாங்க. அவங்க வேலை பாக்குற ஆபீஸ்ல நீங்களும் வேலை பாருங்க… அப்பதான் உங்களையும் விடுவாங்க…”

“டேய் உங்க அம்மா ஆபீஸ்ல தான் நான் வேலை பார்க்கிறேன்… அவ வீட்டுக்கு வரணும்னு, எனக்கு நிறைய வேலையை கொடுத்துடறா…!” அவள் குழந்தைகள் புத்தகங்களை எடுத்து வைத்துக் கொண்டிருப்பது கவனித்து கொண்டே பதிலளித்தான்.

“அப்ப நீங்க வேற ஆபீஸ் போயிடுங்க. வேலை கம்மியா கொடுக்கிற ஆபீஸ். என்னடா…?” அண்ணனையும் துணைக்கு அழைத்தாள்…

“உங்க அம்மாகிட்ட சொல்லி, வீட்டிலேயே ஒரு ஆபீஸ் போட்டுத் தரச் சொல்லு…” அவள் பதில் பேசாததால், அவளை வம்புக்கு இழுக்கும் நோக்கோடு குழந்தைகளை ஏவி விட்டான்…

அது சரியாக வேலை செய்தது. அவனிடமிருந்து இறங்கி ஓடிய பாவனா, அம்மாவின் கன்னத்தை பிடித்து திருப்பி, “அம்மா, அப்பா வீட்டிலேயே இருக்கணும்னா இங்கே ஒரு ஆபீஸ் போட சொல்றாங்க… போட்டுருவோம்மா…”

“உங்க அப்பா வேணா வீட்டிலே இருக்க சொல்லுங்க… நான் வேணா ஆபீஸ்ல பத்து மணிவரை இருந்துட்டு வரேன்…” ரூட்டை மாற்றி விட்டாள்…

அங்கிருந்தபடியே அப்பாவிடம் “அம்மா ஆபீஸ்லேயே இருக்காங்களாம். உங்களை வீட்ல இருக்க சொல்றாங்க, உங்களுக்கு ஓகேவா…”

“அம்மா ரொம்ப வேலை பார்த்தா நமக்கு யார் சாப்பாடு கொடுப்பா, அப்புறம் டிரஸ் பண்ணி விடுவா… தூங்க வைப்பா… அதனால அம்மா வீட்டுல இருக்குறது தான் சரி. எனக்கு மட்டும் வீட்டில் ஆபீஸ் ஆரம்பிக்க பர்மிஷன் வாங்கி கொடு…”

திரும்பவும் குழந்தைகள் அவளிடம் வர, எழுந்து அவன் அருகில் வந்தாள்.

இடுப்பில் இரண்டு கைகளையும் ஊன்றி, “ நீங்க என்னதான் மனசுல நினைச்சுட்டு இருக்கீங்க…?”

“என் பொண்டாட்டி பிள்ளைகளை தான். வேற யாரையும் இப்ப நினைக்க முடியலையே, ம்ம்… ப்ரீ பேர்டா இருந்தேன்… உன்னால இப்படி ஆகிட்டேன்…” பாவம் போல சொன்னான்.

“நானா, எங்களை வலுக்கட்டாயமா உங்களோட சேர்த்துக்க சொன்னோம்…? இப்ப என்ன குறை உங்களுக்கு…? குழந்தைங்க

என்னை விட உங்ககிட்ட தான் உயிரா இருக்காங்க…! சொல்லப் போனால் நான்தான் கோபப்படணும். உங்களால என் வாழ்க்கை முறையே மாறிடுச்சு…!” என்று அவள் சொன்னதும் அவனுக்கு சுர்ரென்று கோபம் ஏறிற்று…

“உனக்கு மட்டுமா மாறுச்சு. எனக்கும்தான் மாறி இருக்கு. நான் சந்தோஷமா ஏத்துக்கல. நீ ஏண்டி இப்படி இருக்க.? மாறிகிட்டே வர்றது தான் வாழ்க்கை. படிச்சவ தானே. இது கூட தெரியாதா…? எப்பவும் குழந்தையாகவா இருக்கோம். சும்மா ஜாலிக்கு பேசிட்டு இருந்தா, அதைக்கூட புரிஞ்சிக்காம…!” என்று இரைந்தவன் கோபத்துடன் அறையை விட்டு வெளியேறினான்.

‘இவனுக்கு மட்டும் தான் கோபம் வருமா…? அவன் வீடு, என்ன செய்யறதானாலும் அவனே செய்ய வேண்டியது தானே, இதுல பெருசா என்கிட்ட கேக்குறதுக்கு என்ன இருக்கு…? குழந்தைங்க முன்னாடி பில்டப் பண்றான்.’ மனசுக்குள் தேவையில்லாமல் ஏதேதோ எண்ணங்கள்…

திரும்பிப் பார்த்தவள் திகைத்துப் போனாள். குழந்தைகள் இருவரும் பயந்த முகத்துடன் அவளைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

“ரெண்டு பேரும் ஹோம் ஒர்க் முடிச்சாச்சா…?” பேச்சை மாற்றினாள்.

“முடிச்சாச்சும்மா…” சுரத்தே இல்லாமல் பதில் சொன்னனர்.

“சரி படுங்க…” என்று அவர்களிடம் சொல்லிவிட்டு தான் பாத்ரூமுக்குள் சென்று நைட்டியை மாற்றிக் கொண்டு வந்து படுத்தாள். குழந்தைகள் இருவரும் படுக்காமல் அங்குள்ள சோபாவில் உட்கார்ந்து இருக்க, “என்னடா வந்து படுக்கலையா…” என்று கேட்டாள்…

“ம்கூம், அப்பா வரட்டும்…!” என்று பிடிவாதமாக அங்கு உட்கார்ந்து இருந்தனர். பதில் சொல்லாமல் தான் மட்டும் கண்களை மூடி சும்மா படுத்து இருந்தாள்…

மெல்ல பாவனா அவள் அருகில் வந்து, “அம்மா நீங்க ஏன் அப்பா கிட்ட சண்டை போட்டுட்டே இருக்கீங்க…?” என்று கேட்டது.

“நான் எங்கடி சண்டை போட்டேன்…?” என்று கேட்க…

“இல்லமா நீங்கதான் சண்டை போட்டீங்க… அதான் அப்பா கோபிச்சிட்டு போயிட்டார்… எனக்கு பயமா இருக்கும்மா…! அப்பா எங்கேயும் போயிருவாரா. அல்லது நம்மள இந்த வீட்டை விட்டு

அனுப்பி விட்டுருவாரா…? நம்ம பழையபடியே அப்பா இல்லாம இருக்கணுமா…?” என்று கேள்விகளை அடுக்க… ரங்கா விக்கித்துப் போனாள்.

கோபத்துடன் வெளியில் சென்ற உபேந்தரா சற்று நேரம் தோட்டத்தில் உலவி விட்டு, அறைக்குத் திரும்பினான். கதவை திறந்ததும் பாவனா பேசியதை நின்று கேட்டவன், கதவை அடைத்து விட்டு விரைந்து வந்து மகளை தூக்கிக் கொண்டான்.

“யார் சொன்னது அப்படி…? நான் எங்கேயும் போகமாட்டேன். உங்கள விட்டுட்டு நான் எங்க போவேன். என்னோட உயிரே இங்கே இருக்கும் போது நான் எங்க போவேன். உங்களையும் எங்கேயும் அனுப்ப மாட்டேன். இனி இதுமாதிரி பேசக்கூடாது…!” என்றவன் கண்ணீர் மல்க குழந்தையை அணைத்துக் கொண்டான். மகள் அப்படி கேட்டதும் அவனை அறியாமல் அவனது பாசம் அங்கு துடித்தது…

பார்த்தியும் அவன் அருகில் வர இருவரையும் தூக்கி படுக்கையில் விட்டவன், தானும் அருகில் படுத்து, “தூங்குங்க… அப்பா உங்க பக்கத்துல தான் இருக்கேன்…” என்று சொல்ல…

“நீங்க அம்மாகிட்ட சத்தம் போட்டீங்களே எங்களுக்கு பயமா இருந்ததுபா…” என்றது பாவனா. பார்த்தி எதுவும்

சொல்லாவிட்டாலும், அவனது முகக் குறிப்பு அதையே சொல்ல, குழந்தைகள் அறியாமல் அவளை முறைத்தான்.

“ஓகே இனிமே உங்க அம்மா கிட்ட நான் கோபப்பட மாட்டேன். போதுமா…?” அவர்களை தட்டிக் கொடுக்க, அம்மா சைடு இருந்த பார்த்தி “அப்பா நானும் உங்க கூட…” என்று கேட்க, பாவனாவை தூக்கி தன் மேல் போட்டவன், பார்த்தியை தனது அருகில் இழுத்துக் கொண்டான். இரு குழந்தைகளும் அப்பாவை கட்டிப் பிடித்துக் கொண்டு தூங்க ஆரம்பித்தனர்.

குழந்தைகள் தன்னை விட்டு விலகிப் போவது போல தோன்றியது அவளுக்கு. தன்னை அறியாமல் கண்களில் கண்ணீர் பெருக சுவரை நோக்கி திரும்பி படுத்து இருந்தாள். பாவனா தூங்கியதும் அப்படியே இருந்தவன் அவளை பார்த்திக்கும், ரங்காவுக்கும் இடையில் விட, அவனது கைகள் அவள் மேல் பட்டு விலகியது…

“திடுக்கிட்டுத் திரும்பியவள், என்னவென்று பார்க்க, “சத்தம் போடாமல் எழுந்து கொஞ்சம் பால்கனிக்கு வா…” என்று அழுத்தமாய் ஆனால் மெல்ல உரைக்க, எழுந்து மௌனமாக அவன் பின்னால் வந்தாள்.

அவள் வந்ததும் பால்கனி கதவை இழுத்துச் சாத்tதியவன், “நான் என்னடி உன் கிட்ட கேட்டேன். வீட்ல ஒரு ஆபீஸ் போடலாமான்னு? எதுக்கு கேட்டேன்...? எது செஞ்சாலும் உன்கிட்ட கன்சல்ட் பண்ணாம செய்யக்கூடாது. நீ என்னோட மனைவி. அதுக்குள்ள உரிமையை உனக்கு கொடுக்கணும்னு கேட்டேன். இது புரியாம எதுக்கு வில்லங்கமா பதில் சொல்றே? இப்ப பாரு குழந்தைங்க மனசுல என்ன இருக்குன்னு...?

பெருசா அப்பா இல்லாமல் வளர்த்துட முடியும்னு நினைச்சியே...? அவங்களோட மனசுல என்ன இருந்து இருக்குன்னு இப்ப தெரிஞ்சிக்கிட்டியா. உன்னை சமமா நடத்தணும், உனக்கு மரியாதை கொடுக்கணும்னு நான் நெனச்சா கூட, நீ அதை நடத்த விட மாட்டே...? இனி உன் கிட்ட ஏதாவது பேசினா என்னன்னு கேளு. நான் என் இஷ்டப்படி இருப்பேன். நீ உன் இஷ்டப்படி இரு. ஆனால் குழந்தைகளுக்கு ஏதாவது மன வருத்தப்படும்படி பண்ணினே, அப்புறம் நான் மனுஷனா இருக்க மாட்டேன். ஞாபகம் வச்சுக்கோ...!” எரி அம்புகளாய் வார்த்தைகளை விட்டவன், கதவு திறந்து உள்ளே நுழைந்து படுத்துக்கொண்டான்.

அவன் கோபத்தில் சென்றதுமே, அவள் செய்த தப்பு புரிந்து விட்டது... ஆனாலும் தன்மானம் அதை ஒப்புக்கொள்ள இடம்

கொடுக்கவில்லை. அதற்குள் குழந்தைகள் பயத்தில் பேசியதை கேட்டவனுக்கு, கோபம் வந்துவிட்டது… கோபத்தில் அமைதியாக இருந்துவிட்டு, கோபம் குறைந்த பின் பேசுவது என்பது தீர்வை கொடுக்கும்.

ஆனாலும் பெரிய இவ, உன்ன தாங்கிகிட்டே போனால் ரொம்பதான் துள்ளுறா…? போடி… என்று அவனும் நினைத்துக் கொண்டு பேசி விட, பிரச்சினை பெரிதாயிற்று.

அவன் உள்ளே சென்று வெகு நேரமாகியும் ரங்காவுக்கு தூக்கமே வரவில்லை அமைதியாக அங்கு உள்ள சேரில் உட்கார்ந்து வானத்தைப் பார்த்துக் கொண்டு இருந்தாள். தோட்டத்தில் மரங்களில் உள்ள சில்வண்டுகளின் ரீங்காரமும், பால் வண்ண நிலவும், வீசிய தென்றல் காற்றும், மேனியை குளிர்வித்தது. ஆனால் உள்ளத்தில் இருந்த எரிமலையை அணைக்க முடியவில்லை.

மறுநாளிலிருந்து இருவருக்கு இடையில் கண்ணாமூச்சி ஆட்டம் ஆரம்பித்தது. மிகுந்த தேவை என்றாலும் கூட குழந்தைகளை வைத்து பேசிக்கொண்டனர். அதற்கும் சில சமயம் ரங்கா பதில் சொல்லாமல் போய்விடுவாள். ‘திமிரு…’ உடம்பு புல்லா அது மட்டும் தான். அவன் பல்லைக் கடிப்பான்.

கொஞ்சம் கொஞ்சமாக வீட்டுப் பொறுப்பு ரங்காவுக்கு வந்தது. ஆரம்பத்தில் சமையல்காரர் தாத்தாவிடமோ அல்லது உபேந்திராவிடமும் என்ன செய்வது என்று கேட்டுக் கொண்டிருக்க, தாத்தா ஒரு நாள் அவளை அழைத்து, கொத்து சாவியை கையில் கொடுத்து, “எனக்கு வயசு ஆயிடுச்சு. இனி இந்த வீட்டு பொறுப்பு நீ பாத்துக்கோ…” என்றதோடு மட்டுமல்லாமல், லாக்கர் சாவி எப்படி திறக்க வேண்டும், வீட்டுச் செலவுக்கு எப்படி பணம் கொடுக்க வேண்டும், வேறு யாருக்கு எவ்வளவு சம்பளம், என்ன மாதிரி வேலை, எப்படி வேலை வாங்க வேண்டும், எல்லாம் சொல்லிக் கொடுத்தார்.

“ஐயோ தாத்தா நான் எப்படி…?” என்று தயங்க…

“நீ பார்க்காமல் யார் பாப்பா…? என்ன ரங்கா நீ சொல்லு உன் பேத்திகிட்ட…” என்று சொல்ல, பாட்டியும் அதை ஆமோதிக்கவே, சாவியை வாங்கி கொண்டாள்.

சாவி அவளிடம் கொடுத்தது உபேந்திராவுக்கு தெரியாது… இரவு சாப்பிடும் பொழுது, “தாத்தா நாளைக்கு வாசல்ல உள்ள அந்த சைட் ரூம் ஆபிசா மாத்த போறேன். ஈவினிங் வர்ற கிளையண்ட்ஸ் என்னை இங்கே வந்து பார்க்கட்டும். அதை செட் பண்ண ஆள் வருவாங்க. அதுக்கு பணம் கொடுத்துடுங்க…” என்று சொல்ல…

“எல்லாம் உன் வீட்டுக்காரி ரங்கா கிட்ட சொல்லு… கொத்து சாவி அவ கிட்டதான் இருக்கு…” சொல்லிவிட்டு தாத்தா சென்றுவிட, அவளிடம் எப்படி கேட்பது என்று திகைத்துப் போனான். ஒன்றுமே சொல்லாமல் சாப்பிட்டு முடித்து அவன் எழுந்து சென்று விட, தாத்தா பாட்டி இருவருக்கும் பால் கொடுத்துவிட்டு, ரஞ்சிதம்மாவிடம் மற்ற வேலைகளைச் சொல்லிவிட்டு, கொத்து சாவியுடன் மாடிக்கு வந்தாள்.

டிவியில் கார்ட்டூன் படம் போட்டு, கட்டிலில் சாய்ந்து காலை நீட்டி, குழந்தைகளுக்கு சுவராசியமாக கதை சொல்லிக் கொண்டிருந்தான். மெல்ல அவன் அருகில் வந்தவள், கொத்து சாவியை அவனுக்கு அருகில் வைத்தாள். பேசாமல் திரும்பியவளிடம்…

“எதுக்கு இத இங்க வச்சுட்டு போறே…?”

“தாத்தா கேட்ட பணம் கேட்டீங்க இல்ல, அதுக்கு தான்…!”

“ஏன் அந்த பணத்தை நாளைக்கு நீ எடுத்து கொடுக்க மாட்டியா…?”

“நீங்க என் கிட்ட சொன்னீங்களா…?”

“ஓ… மகாராணிக்கு உங்ககிட்ட நாங்க பணம் கேட்கணுமாக்கும். தாத்தா கிட்ட சொல்லும்போது கேட்டுட்டு தானே இருந்தே, அப்புறம் என்ன…?”

“என்கிட்ட சொன்னாதான் நான் செய்ய முடியும்…” என்று வீம்பு பிடிக்க…

“ஏய், நான்தான் உன் கிட்ட பேசலைன்னு சொல்லி இருக்கேன்ல, அப்புறம் எதுக்கு வம்பு பண்ற…? தாத்தா உன்ன ட்ரஸரியா நியமித்திருக்கிறாரு. அந்த வேலையை யார் சொன்னாலும் பார்க்க வேண்டியதுதானே…!”

“இந்த பாருங்க, வாய்க்கு வந்ததை பேசாதீங்க. உங்களுக்கு என்கிட்ட சாவி கொடுத்தது பிடிக்கல. நான் வேண்டாம்னு தான் சொன்னேன். தாத்தா தான் கேட்கல…!”

“ஏய் எதுக்கும், எதுக்கும் முடிச்சு போடற…? நான் சொன்னேனா, சாவி கொடுத்தது பிடிக்கலைன்னு…!”

“சொன்னாதானா… ஒருத்தர் நடந்துக்கொள்வதை வைத்து தெரியாது…”

“சபாஷ், சரியான ஆளுடி நீ. அப்ப நீ மட்டும் ஒழுங்கா நடத்துகிறதா நினைப்பா…! இப்பதான் நீ வக்கீல்னு ப்ரூஃப் பண்ற.

ஆனால் இது கோர்ட்டுக்கு ஒகே. வீட்டுக்கு உதவாது. அப்புறம் ரெண்டு பேரும் கோர்ட்டில் தான் போய் நிக்கணும்.

நிக்கலாம். நிக்கவிடுவேன்னு கனவுகூட காணாத. ஒழுங்கா சாவிய எடுத்துட்டு போ, நாளைக்கு அவங்க வந்தா பணத்தை கொடு…" சொல்லிவிட்டு திரும்பவும் குழந்தைகளுடன் ஐக்கியமானான்.

அதுவரை இரண்டு பேர் வாக்கு வாதத்தையும் வேடிக்கை பார்த்த குழந்தைகள் முகம் கலங்கி இருக்க, அவன் சொன்னது கோபத்தை வரவழைத்தாலும், பல்லை கடித்துக்கொண்டு சாவியை எடுத்துக்கொண்டு சென்றாள்.

அதன் பிறகு தேவை இல்லாமல் இருவரும் பேசிக் கொள்ளவே இல்லை. சனிக்கிழமை குழந்தைகள் மிகவும் ஆசைப்பட்டதால் வெளியே கூட்டிச் செல்வதாக காலையிலேயே சொல்லி வைத்திருந்தான். வெளியே போய்விட்டு மதியம் வந்தவன் குழந்தைகளிடம் "அஞ்சு மணிக்கு கிளம்புங்க… ஏதாவது ஒரு மாலுக்கு போயிட்டு, ஹோட்டலுக்கு போயிட்டு வரலாம்…" என்று சொல்ல குழந்தைகள் உற்சாகம் ஆயினர்…

நாலு மணிக்கே இருவரும் அம்மாவிடம் வந்து "அம்மா டிரஸ் பண்ணனும். வெளியில போகணும்…" என்று அரிக்க ஆரம்பிக்க, தாங்கமுடியாமல் இருவருக்கும் டிரஸ் பண்ணி

விட்டாள். டிரஸ் பண்ணியதும் நேராக சென்று அவர்கள் அப்பாவின் மேல் விழுந்தவர்கள் “அப்பா நாங்க ரெடி…” என்க அப்போதுதான் சற்று கண்ணயரலாம் என்று படுத்திருந்த உபேந்திரா விழித்தான்.

“நீங்க மட்டும் கிளம்பி இருக்கீங்க உங்க அம்மா…?” என்று கேட்க… “அம்மா வர்ற மாதிரியே தெரியல. டிரஸ் பண்ணவே இல்ல. அவங்க ரூம்ல உட்கார்ந்து இருக்காங்க…” இப்போதெல்லாம் பகலில் அடுத்த அறையில் ஏதாவது ஒரு வேலையை வைத்துக் கொண்டு ரங்கா இருந்து விடுவது வழக்கம். இரவு மட்டுமே அவனது அறைக்குள் வருவது. இது அவனுக்கும் தெரிந்தே இருந்தது…

“உங்க அம்மாவையும் கூப்பிடுங்க. டிரஸ் பண்ண சொல்லுங்க. நான் அரை மணி நேரத்துல கிளம்பிடறேன். வரலைன்னு சொன்னா உங்க பாட்டி கிட்ட போய் சொல்லுங்க…!” என்று அவர்களை கிளப்பி விட்டான்.

குழந்தைகள் அழைத்து பார்த்தும் அவள் வர மறுத்ததால், அவர்கள் நேராக ரங்கா பாட்டியிடம் போய் சொல்லி விட்டனர். அம்மாவை இங்க கூட்டிட்டு வாங்க…” என்று பிள்ளைகளிடம் சொல்லி அனுப்ப…

“என்ன பாட்டி…?”என்று வந்து நின்றாள்.

“பிள்ளைங்க என்னமோ சொல்றாங்க… வெளியில போக போறாங்களாம். நீ ஏன் போகல…?”

“அவங்க அப்பா கூட தானே போறாங்க பாட்டி. நான் போகல…” அவள் சொன்ன விதமே, அவளுக்கு கோபம் என்பது தெரிந்தது.

“பசங்களா நீங்க மேல போங்க. அம்மா வருவா…!” அவர்கள் சென்றதும் ரங்காவிடம் திரும்பி, “என்ன பிரச்சினை உனக்கும் மாப்பிள்ளைக்கும்…?”

“ஆமா ஊர்ல இல்லாத பொல்லாத மாப்பிள்ளை…!”

“முதல்ல இப்படி பேசறத நிறுத்து. இப்ப என்ன குறைச்சல் அவருக்கு…! மரியாதை இல்லாமல் பேசுற. இந்த காலத்து பிள்ளைங்க பெயர் சொல்லிக் கூப்பிடறது மட்டுமில்லாமல், வாடா, போடாங்குதுங்க… அப்புறம் எப்படி புருஷன் சொன்னதைக் கேட்கும்…?”

“பாட்டி ஆரம்பிக்காதீங்க… நான் ஒண்ணுமே சொல்றது இல்லை. எதுக்கெடுத்தாலும் அவர்தான் மூஞ்சிய தூக்கி

வச்சுக்கிட்டு பேசறார்… கொத்து சாவி என்கிட்ட இருக்குன்னு தெரியும். பணம் குடுன்னு என்கிட்ட கேட்டா என்ன…?”

“உனக்கும் அவருக்கும் சுமூகமான உறவு இருந்தால் கேட்டிருப்பார். நீ என்ன பண்ணி வச்சியோ…!”

“உங்களுக்கு எப்பவுமே என்னை பத்தி நல்ல அபிப்ராயம் கிடையாது…”

“அப்படி இல்ல ரங்கா. உன்னோட பிரச்சினையே வேற. உன் மனசுக்குள்ள நீயா ஒரு வட்டத்தை போட்டுட்டு அதுக்குள்ளேயே இருக்க… அதுக்குள்ள வேற ஒருத்தரை சேர்த்துக்க மாட்டேங்குற… உன் புருஷன் உன் குழந்தைகள் அப்படின்னு வரும்போது, தன்னால இந்த ஈகோ எல்லாம் காணாமல் போயிருக்கும்… எப்போதும் அவர் உன்னை திட்டிட்டா இருக்காரு, சொல்லு…” என்று கேட்க, அவளுக்கு பதில் சொல்ல தெரியவில்லை.

ஆனால் மனதுக்குள், ‘அது எப்படி எனக்குள்ள அவனை சேர்த்துக் கொள்வது…?’ என்ற கேள்வி பிறந்தது… ‘’அதுக்கு எனக்கு அவனை பிடிக்க வேண்டாமா…!’ என்ற நினைப்பு மனதில் ஓடியது.

“சரி. போய் கௌம்பு. இரண்டு குழந்தைகளை அவரால் ஒத்தையில சமாளிக்க முடியாது…” என்ற பாட்டி சத்தம் போட, வேறு வழியில்லாமல் கிளம்பினாள்.

அன்றும் அவள் இஷ்டம் போல் ஒரு சாதாரண சுடிதாரை போட்டுக்கொண்டு கிளம்பியவளை பார்த்து, அவனுக்கு கோபம் வந்தது. கேட்டால் பிரச்சினை வரும் என்று, பேசாமல் காரை எடுத்தான்…

ஆனால் அவன் அறியாதது ஒன்று உண்டு. உண்மையிலேயே ரங்காவிடம் நிறைய டிரஸ் கிடையாது… அவன் அன்று வாங்கி வந்தது இரண்டு சுடிதார் இரண்டுமே பங்சனுக்கு போடுவது மாதிரி இருந்தது… அது போக அவளிடம் உள்ளதெல்லாம் மிகவும் சாதாரணமான காட்டன் சுடிதார் மட்டுமே. அவள் அதை பற்றி என்றுமே கவலைப் பட்டது இல்லை. அவள் பாட்டுக்கு கிளம்பினாள்.

விளையாட்டு வசதி அதிகம் உள்ள, நவீனமான மாலுக்கு சென்றான். அங்கு சென்றதும் குழந்தைகள் விளையாடுவதற்கு ஏற்றார்போல் கார்டு வாங்கி ஒவ்வொரு இடத்திலும் அவர்கள் விளையாட சொல்லிக் கொடுத்தான்.

இருவரும் ஒரே நேரத்தில் விளையாட வேண்டும் என்பதால் அடுத்தடுத்து உள்ள இடத்தில் ரங்காவும், உபேந்திரா விளையாட சொல்லிக் கொடுத்தனர்…

குழந்தைகள் மிகவும் சந்தோஷமாக ஒவ்வொரு விளையாட்டாக ஏறி, ஏறி விளையாடி கொண்டிருக்க, தற்செயலாக அவரது நண்பரும் முக்கியமான கிளையன்டுமான தொழில் அதிபர் ஒருவரை அவரது மனைவியுடன் சந்திக்க நேர்ந்தது…

“ஹாய் உபேந்திரா, வெரி நைஸ் டு மீட் யு. உங்களுக்கு மேரேஜ் ஆயிடுச்சு நான் கேள்விப்பட்டேன். ஆக்சுவலா நான் அப்ப பாம்பேயில் இருந்தேன்…!” என்று அவர் சொல்ல…

“மிஸ்டர் சுனில்…” என்று அவரிடம் கை குலுக்கினான்…

“எங்க உங்க மிஸஸ் அவங்கள கூட்டிட்டு வரலையா நீங்களும் குழந்தைகளும் மட்டும் தான் வந்தீர்களா…?” என்று சுனில் கேட்க, அருகிலிருந்த ரங்காவை அறிமுகப் படுத்தினான்.

அவளைப் பார்த்த மிஸஸ். ரீனா சுனில், “இவங்க தானா அது. நான் கூட உங்க மிஸஸ் வரல போல, அதனால குழந்தைகள் கேர் டேகர் தான் கூட்டிட்டு வந்துட்டீங்க போல இருக்குன்னு நினைத்தேன்…” தோளைக் குலுக்கிக் கொண்டு அசால்டாக சொல்ல, ஒரு நொடி அவளை தீர்க்கமாக திரும்பி

பார்த்தவன், அவர்களிடம் அவங்களுக்கு ஆடம்பரம் பிடிக்காது. ஓகே, நாங்க ஆல்ரெடி கிளம்பிட்டோம். நீங்க பாருங்க…” என்று கூறி குழந்தைகளை அழைத்துக் கொண்டு கிளம்பி விட்டான்…

அவன் பார்த்த பார்வையில், அனல் பறந்தது. காரில் ஏறியதும் அதை அவன் கிளப்பிய வேகத்திலேயே, குழந்தைகள் கூட ஒரு நிமிடம் பதறி விட்டனர். அவர்கள் பதறவும் தான், அவனுக்கு தான் இருந்த சூழ்நிலை உறைத்தது. தன்னை சற்று நிதான படுத்தி கொண்டான், ஆனாலும் கோபம் குறையாததால், வேகமாக காரை செலுத்தி நேராக வீட்டுக்கு வந்து விட்டான்.

குழந்தைகளுக்கு ஹோட்டல் போகாததால் மிகவும் ஏமாற்றமாக இருந்தது. ஆனாலும் அப்பா ஏதோ கோபமாக இருக்கிறார் என்பது புரிந்தது, ஆதலால் அவர்கள் அடம் பிடிக்கவில்லை. போனவர்கள் சீக்கிரமே வந்ததோடு, உபேந்திரா யாரிடமும் பேசாமல் மாடியேறி சென்றது, ஹாலில் இருந்து பேசிக்கொண்டிருந்த சேதுராம், பாட்டிக்கு வித்தியாசமாக தெரிந்தது.

“என்னம்மா சீக்கிரம் வந்துட்டீங்க…?” என்று சேதுராமன் கேட்க.

“தாத்தா அப்பாவுக்கு கோபம் வந்துருச்சு. அதான் ஹோட்டலுக்கு போகாமல் வந்துட்டோம்…” என்று குழந்தைகள் உண்மையை சொல்லி விட்டனர்.

ரஞ்சிதம்மாவை அழைத்து, குழந்தைகளை சாப்பிட அழைத்து போக சொன்னவர், “என்னம்மா பிரச்சனை என்றார்…?”

பாட்டியும் அதே கேள்வியைக் கேட்க, ரங்கா நடந்ததை கூறி விட்டாள்… “அந்த லேடி கேட்டதற்கு நான் என்ன பண்றது…?” என்று கேட்டுவிட்டு குழந்தைகளை கவனிக்க உள்ளே சென்று விட்டாள்…

பெரியவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்து கொண்டனர். “என்ன சொல்றதுன்னு தெரியல ரங்கா…! பொதுவாகவே பெண் தனித்து இயங்கும் தன்மையைப் பெற்று விட்டால், அவர்களது விட்டுக்கொடுக்கும் தன்மை குறைந்துவிடும். இது தெரிந்துதான் அந்த காலத்தில் பெண்கள் என்ன படித்தாலும், வேலைக்கு சென்று தன் காலில் நிற்பதற்கு முன் திருமணத்தை முடித்துவிட்டனர். இந்த காலத்துக்கு அது உதவாது…

பொருளாதாரரீதியாக பெண்களும் வேலைக்குச் செல்ல வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றனர். இருவரும் சமமான அளவு படிப்பும், சம்பாத்தியமும் இருந்து விட்டால் போதும் என்று

நினைக்கின்றனர். அது சரிதான். ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுக்கும் வரை…

ஆனால் சுயமரியாதை இருவரும் பார்க்க ஆரம்பித்து விட்டால், அங்கு விட்டுக் கொடுக்கும் தன்மை குறைந்து நீயா, நானா என்ற போட்டி ஏற்பட்டுவிடும். இப்ப பிரச்சனை ரெண்டு பேருக்குள்ள இதுதான். இதை தீர்க்க அவர்கள் தான் இறங்கி வரவேண்டும். இறங்கி வருவார்களா என்று தெரியவில்லை…!” என்று ஒரு பெருமூச்சுடன் சொல்லி முடித்தார்.

# அத்தியாயம் 12

குழந்தைகள் சாப்பிட்டு முடித்ததும், தாத்தாவையும் பாட்டியையும் சாப்பிட அழைத்தாள். பாட்டி ரங்காவிடம், நீ போய் மாப்பிளையை சாப்பிட கூட்டிட்டு வா...!” என்று சொல்ல சேதுராம் அறியாமல் பாட்டியிடம் ‘முடியாது’ என்று தலையசைத்தாள்.

அதற்குள் சேதுராமே பேரனை போனில் அழைக்க, அவன் அதை எடுக்கவில்லை. பாட்டி திரும்பவும் அதை ரங்காவிடம் சொல்ல, தாத்தா முன்னால் பதில் பேச முடியாமல், ‘பெரிய இவன், இவனை சாப்பிட வேற ஒவ்வொருத்தரா தாங்கணுமா...!’ என்று வாய்க்குள் முனங்கி கொண்டே மாடி ஏறினாள்...

மாடியில் அவனது அறையில் அவனைக் காணாது ஒவ்வொரு இடமாக தேட, எங்கும் அவன் இல்லை. கீழே இறங்கி வந்த மாதிரியும் தெரியவில்லை... ‘எங்க போனான்...? ஒருவேளை யட்சிணி எதுவும் வந்து தூக்கிட்டு போய் இருக்குமோ...? என்று வாய் விட்டு சொல்லிக் கொண்டே, ‘சரி கீழ போய் பதில் சொல்லிவிடலாம் நிம்மதி,’ என்று நினைத்து திரும்ப போனவள், தற்செயலாக மொட்டை மாடிக்கு செல்லும் மாடிப்படிகளை பார்க்க, மேலே எப்போதும் பூட்டியிருக்கும் அந்த கதவு திறந்து இருந்தது.

'ஐயா மொட்டை மாடியில காத்து வாங்குறாராக்கும். ம்ம், பணம் இருந்தால், காத்து கூட டிசைன் டிசைனா வாங்கலாம்…' என்று புலம்பிக்கொண்டே மொட்டை மாடிக்கு சென்றாள். அவள் அதுவரை அங்கு வந்ததே இல்லை… மொட்டை மாடியில் முதல் ஒரு சுற்றில் நெஞ்சு அளவு உயரத்தில் ஒரு கைப்பிடி சுவரும், அதில் ஒரு அடி உயரத்தில் கம்பியும் போடப்பட்டிருந்தது.

அதுபோக உள்பக்கம் முக்கால் அடி இடைவெளியில் இன்னொரு சுவர் உயரம் கம்மியாக கட்டப்பட்டு அதில் மண் நிரப்பி வரிசையாக செடிகளை நட்டு பராமரித்து இருந்தனர். அத்தனையும் பூச்செடிகள் அதையும் அவர்கள் சீராக வெட்டி ஒரே அளவாக இருக்கும்படி பராமரித்து இருந்தனர். பார்க்கவே கண்கொள்ளா காட்சியாக இருந்தது… அதுபோக ஒரு கார்னரில் கொடிகளால் ஆன மிகப் பெரிய பந்தல் இருந்தது. அதில் பல வகையான கொடிகள் பின்னப்பட்டிருந்தது. மயில் மாணிக்கம், பிச்சி, முல்லை எல்லாவிதமான கொடிகளும் நெருக்கமாக பின்னப்பட்டு அவைகளும் அழகுற பராமரிக்கப்பட்டு இருந்தது…

அதனடியில் ஒரு டேபிள் நான்கு சேர் ஒரு ஓரமாக போடப்பட்டு இருந்தது அதுபோக ஒரு பென்ச் ஒன்று இருந்தது. அதற்கும் அருகில் ஒரு ஊஞ்சல் ஒன்று இருந்தது. நிலவொளியில் இவைகள் எல்லாம் துல்லியமாக தெரிய உள்பக்கம் சற்று

இருட்டாக இருந்ததால் அந்த ஊஞ்சலில் யாரோ உட்கார்ந்து இருப்பது வரிவடிவமாக தெரிந்தது.

ரங்காவுக்கு எப்போதுமே பேய், பூதம் என்றால் கொஞ்சம் பயம். அதுவும் இல்லாது இருட்டு என்றால் அங்கு மனிதர்கள் இல்லாவிட்டால், பேய் இருக்கும் என்று நினைத்து, தனியாக செல்ல பயப்படுவாள். கூட்டமாக இருக்கும் இடங்களில் இருட்டு என்றால் அவளுக்கு பயம் தெரியாது.

திடீரென்று அந்த இருட்டில் சிவப்பாக ஏதோ மின்னி மறைய 'ஆஹா, அவன் இல்ல போல இருக்கே, கொள்ளிவாய்ப் பிசாசு ஏதேனும் இருக்குமோ…! இவன் எங்க போய் தொலைஞ்சான்…!' பயத்தில் மனது ஏதேதோ கற்பனையை மனதுக்குள் தோற்றுவித்தது. வீட்ல இத்தனை மனுஷங்க இருக்காங்க இல்ல. அங்கேயே இருந்து தொலைக்க வேண்டியது தானே. இங்க தனியா வந்து நம்மள பயமுறுத்திட்டு இருக்கான்…

எதுக்கும் கொஞ்சம் தள்ளி போய் பார்ப்போம். அவன்னா கூப்பிடுவோம் இல்லேன்னா பிச்சு பிடுங்கி கீழே போயிடலாம்,' என்று நினைத்துக் கொண்டே அருகில் செல்லலானாள். சிவப்பு தீக்கங்கு சில சமயம் நன்கு மின்னி மின்னி எரிய, இவளுக்கு வயிற்றுக்குள் பயப்பந்து உருண்டது…

ஊரில் உள்ள தெய்வங்களை எல்லாம் துணைக்கு அழைத்துக் கொண்டு ‘இங்க ஒரு லைட் போட்டால் என்ன…? கஞ்ச பிசினாரி…’ என்று அதற்கும் திட்டிக் கொண்டு நடந்தாள். அருகில் சென்றதும் நாசி வேறு ஒரு வாசனையை உணர அது சிகரெட் என்று மூளைக்குள் எட்டுவதற்குள் இவள் பந்தலின் உள் பக்கம் வந்து விட்டாள். சரியாக அப்போது வீசிய காற்றில் மேலிருந்த கொடிகளில் ஒரு நீளமான கொடி இவளது தோளில் உராய, “வீல்…” என்று இவள் அலறிய அலறலில், சிகரெட்டை தூக்கி எறிந்தவன் ஒரே தாவலில் இவளிடம் ஓடிவந்தான்.

கண்ணை இறுக மூடிக்கொண்டு கத்திக்கொண்டு நின்றவள், “ஏய் ரங்கா…” என்று அவன், அவள் தோளில் இரு கைகளை வைத்து அசைக்க, யார் என்பதை அறியாமலே “பேய், கொள்ளிவாய்ப் பிசாசு…” என்றவள் அப்படியே அவனை கட்டிக் கொண்டு விட்டாள்.

அவள் பிசாசு என்றதும், ‘பிசாசா அது எங்க…?” என்று கேட்டவன் சுற்றுமுற்றும் பார்க்க, அவளது கை மட்டும் உயர்ந்து அவன் உட்கார்ந்திருந்த இடத்தை காட்டியது… முகத்தை அவள் அவனது நெஞ்சிலே வைத்து கண்களை இருக்கி மூடிக்கொள்ள, அவனை அறியாமல் அவனது கைகள் உயர்ந்து அவளை இறுக்கிக் கொண்டது…

ஆதரவாக அவளது முதுகை வருடியவன் தன்னை கட்டிக்கொண்டிருக்கும் அவளை அந்த நிலவொளியில் நன்கு பார்த்தான். பயத்தில் கண்களை இறுக மூடிக் கொண்டிருந்த அவளது முகத்தில் தெரிந்த பய உணர்ச்சியும், தன்னை இறுக கட்டிக்கொண்டு இருந்த விதமும் அவளுக்கு பேய் என்றால் ரொம்ப பயம் என்று நன்றாக தெரிந்தது…

நெற்றியில் புரண்ட சிறு மயிரிழைகளும், மூடியிருந்த நீண்ட இரு சிப்பி போன்ற கண்களும், கூர்மையான மூக்கும், அவன் நெஞ்சை தொட்டு தடவி இருந்த அவளது இதழ்களும், வெகு அருகில் தெரிந்த அவனது கன்ன கதுப்புகளும், அவளை பேரழகியாக அவனுக்கு காட்டியது… முதன் முதலாக அவளை ஒரு பெண்ணாக உற்றுப் பார்த்தான்…

அதற்குள் சற்றே பயம் தெளிந்தவள் திடுக்கிட்டு கண்ணை விழித்து நிமிர்ந்து பார்க்க, அவள் நின்ற கோலம் முதன்முதலாக அவளுக்கு சுரணையே வரவழைக்க, தன்னை அறியாது தானும் ஒரு பெண் என்ற உணர்வு தாக்க, இந்த இருபத்து ஒன்பது வருட வாழ்க்கையில் முதன்முதலாக தான் தொட்டு நின்ற ஆணை அவளும் பார்த்தாள்.

வழக்கம்போல் அவன் வெற்று மார்பும், ஷார்ட்ஸும் ஆக நிற்க, அப்பொழுதுதான் அவளுக்கு தன்னுடைய கன்னம் அவனது

மார்பில் அழுந்தி இருப்பதும், அவனது மார்பில் உள்ள முடிகள் அவளுக்கு குறுகுறுப்பை உண்டாக்குவதும் தெரிந்தது. மருந்துக்குக் கூட எந்த ஆணையும் தன்னுடைய எல்லைக்குள் வரவிடாமல் இத்தனை வருடம் விரதம் காத்தவள், அந்த வயதுக்கே உரிய உணர்வுகளுக்கும், எண்ணங்களுக்கும் தன்னுடைய புத்தியால் கடிவாளம் இட்டவள், விதியால் எழுதப்பட்ட நாடகத்தில் தன் மதியை இழந்து மயங்கி நின்றாள்.

தன்னை அவன் சற்று குறும்புச் சிரிப்புடன், ‘இவ்வளவுதானா உன் பிரதாபம்’ என்ற கேலிப் பார்வையுடன் நிற்பது கண்டு முதன்முதலாக அவளுக்கு அவமானமாக இருந்தது… அதையும் மீறி அவனை அணைத்த போது அவனது வலிமையான கரங்களுக்குள் தான் நின்ற தோற்றம், மனதுக்குள் திரும்பவும் வர, அதுவரை அவள் அடக்கி வைத்திருந்த அந்த உணர்வுகள் அவளுக்கு மிக மெதுவாக தெரிய ஆரம்பிக்க, அந்த உணர்வினால் வந்த வெட்கமுமாய், அவள் கன்னங்கள் சிவக்க, மெல்ல விலகினாள்…

அவள் மேல் விளைந்த கோபத்தால், அதைக் காட்ட முடியாத நிலைமையால் மொட்டை மாடியிலிருந்து தனிமையில் அமர்ந்தவன், ஒரு சிகரெட்டை எடுத்து பற்ற வைத்தான். அடிக்கடி பிடிக்கும் பழக்கம் அவனுக்கு இல்லை. ஆனால் தாங்க முடியாத

கோபமோ, வெறுப்போ வரும்போது, அதை காட்ட இயலாவிட்டால், எப்போதாவது ஒன்று என்ற அளவில் நிறுத்தியிருந்தான்.

அவளது அணைப்பில், அவள் முகத்தில் வந்து போன உணர்வுகளில், சற்று யோசனை பிரதிபலிக்க, அவள் முகத்தை பார்த்தவன், இதுவரை இந்த மாதிரி உணர்வுகளுக்கு அவள் சற்றும் இடம் கொடாதவள் என்பது புரிந்தது.

அந்த அணைப்பினால் அவனது கோபம் மட்டுப் பட்டாலும் முழுவதும் குறையவில்லை. “என்ன விஷயம்…?” என்று கேட்க,

‘தான் பயந்ததை கேலி பண்ணுவானோ’ என்று அவமானத்தில் தன் உதட்டை கடித்து நின்றவள், அதை ஒரு பொருட்டாக நினைக்காமல் அவன் பேச்சை மாற்றவும், ‘உஷ் அப்பாடா’ என்று தனக்குள்ளே ஒரு நிம்மதியுடன், “தாத்தா உங்கள சாப்பிட கூட்டி வர சொன்னாங்க…” என்றாள்.

“எனக்கு பசிக்கலை சாப்பாடு வேண்டாம்… நீ சொல்லிடு…” என்று அவன் பதில் சொல்லவும் சுர்ரென்று அவளுக்கு ஏறிற்று.

“நீங்களே வந்து பதில் சொல்லுங்க. நான் சொன்னா நம்ப மாட்டாங்க… ஏதோ என்னால தான் நீங்க சாப்பிடாமல் இருக்கிற மாதிரி நினைப்பாங்க…” என்று அவள் வாய் விட…

“யார் நம்ப மாட்டாங்க…?” என்று சந்தேகத்துடன் அவளைப் பார்த்தான்.

“பாட்டி தான். ஏற்கனவே என்னாலதான் சண்டைன்னு அவங்க நினைச்சுட்டு இருக்காங்க…!” என்று இவள் முனங்கவும்,

“அப்ப பிரச்சனை உன்னால இல்லை, என்னால தான் அப்படிங்கிற…!”

“பின்னர் ஒன்றும் இல்லாததற்கு எல்லாம் கோவிச்சிட்டு வந்தது நானா…!” என்று அவள் எகிற…

“ஏண்டி என் மரியாதை குறையிற மாதிரி டிரஸ் பண்ணிட்டு வந்து, என் மானத்தை வாங்கினதும் இல்லாமல், நான் வேணுமின்னே கோபிச்ச மாதிரி சொல்ற…? இன்னைக்கு அவன் என்னை பார்த்த பார்வை எப்படி இருந்தது தெரியுமா. என்னடா உன் மனைவியை ஒரு வேலைக்காரி ரேஞ்சுக்கு வச்சிருக்கேன்னு சொல்லாமல் சொன்ன மாதிரி இருந்தது…

எனக்குன்னு இந்த சொசைட்டில ஒரு மரியாதை இருக்கு. நான் வளர்ந்தது அப்படி தான். வாழறதும் அப்படித்தான்… முப்பத்தி இரண்டு வருஷ பழக்கம்டி. எனக்கு மாத்திக்கணும்னு அவசியமும் இல்லை. மாத்திக்கவும் முடியாது. முதலில் அதை புரிஞ்சுக்கோ…

உனக்கு என்ன பிரச்சனை…? நல்லா டிரஸ் பண்றது ஒரு குத்தமா. இருந்த நிலையை விட்டு மேலான நிலைமைக்கு தானே உன்ன காட்டிக்க போறே. இதுல என்ன தப்பு…? குழந்தைங்க, என் கூட வர்றே, நல்ல டிரஸ் பண்ணிட்டு வரணும்னு தெரியாது. அதுவும் இப்ப தான் நம்ம ரெண்டு பேருக்கும் கல்யாணம் ஆயிருக்குன்னு ஊர் பூரா தம்பட்டம் அடித்து இருக்கு. பார்க்கிறவன் என்ன நினைப்பான்…? என்னோட இமேஜை ஸ்பாயில் பண்ணனும்னு நீ நினைச்சிருக்கே அப்படித்தானே…?

அப்படி என்னடி என்னோட பகை…? சொல்லப்போனா நான்தான் உன் மேல பகை தீர்த்துக்கணும். பழி தீர்த்துக்கணும். நானே என் குழந்தைகளுக்காக, எல்லாத்தையும் மறந்து உன்னை என் மனைவியா ஏத்துகிட்டு வாழணும்னு நினைக்கிறேன். ஆனா உனக்கு இருக்கிற தெனாவட்டு இருக்கு பாரு, ச்ச… இப்படி ஒரு அகராதி பிடிச்சவளை நான் பார்த்ததே இல்லை…! என்று சரமாரியாக இருந்த கோபத்தில், அவன் வார்த்தைகளைப் போட்டு தாக்க, தாங்கமாட்டாமல் அவளுக்கு கண்ணீர் வந்துவிட்டது.

ஒரு நொடி அவனை நிமிர்ந்து தீர்க்கமாக பார்த்தவள் பதில் சொல்லாமல் விடுவிடு என்று கீழே இறங்கிவிட்டாள்… நேராக தான் எப்பொழுதும் குளித்து டிரஸ் பண்ணும் அறைக்குச் சென்றவள் அங்கிருந்த கட்டிலிலேயே பேசாமல் படுத்து விட்டாள்.

அவள் சென்றதும், “அதானே உன்னை குறை சொல்லிவிட்டால், அடுத்த நிமிஷம் பேசாம போயிருவியே… எப்படி ஆளு நீ…? பதில் சொன்னால் முத்து உதிர்ந்து விடும் பாரு. போடிப்போ, எத்தனை நாள் போவேன்னு நானும் பார்க்கிறேன்…” என்றான் வாய்விட்டு.

அரை மணி நேரம் கழித்து அவன் கீழே இறங்கி வந்தபோது குழந்தைகள் இருவரும் ஹாலில் தாத்தா பாட்டியுடன் இருந்தனர்… இவன் டைனிங் டேபிளுக்கு சென்று ரஞ்சிதம்மா பரிமாற சாப்பிட்டு வந்தான். “அப்பா அம்மா எங்கே…? என்று இருவரும் அவனிடம் கேட்க…

அவர்களுக்கு பதில் சொல்லாமல், பாட்டியிடம் “ரங்கா அப்பவே கீழே வந்துவிட்டாளே, இங்க வரலையா…?” என்றதற்கு…

“இல்லப்பா. இங்க வரலை. நாங்க நீங்க ரெண்டு பேரும் பேசிட்டு இருக்கீங்க, அப்படின்னு நெனைச்சோம். வரவும் இல்லை. அவள் சாப்பிடவும் இல்லை…” என்றதும்,

குழந்தைகளிடம், “வாங்க மாடிக்கு போவோம். குட்நைட் சொல்லிட்டு வாங்க. அங்க தான் அம்மா இருப்பாங்க…” என்று பாட்டிக்கும் தாத்தாவுக்கும் குட்நைட் சொல்ல வைத்து, குழந்தைகளை அழைத்துக்கொண்டு மாடியேறி சென்றான்.

தங்களது அறைக்குள் சென்றதும், குழந்தைகள் இருவரும் டிவியைப் போட்டு கார்ட்டூன் சேனலை பார்க்க உட்கார்ந்து விட, தனது அறையில் அவளைக் காணாது, அடுத்த அறைக்கு சென்றான்… அறை இருட்டாக இருக்கவும், சிறிய விளக்கை எரிய விட்டு, அவள் எங்கே என்று பார்க்க கட்டிலில் தூங்குவது தெரிந்தது…

திரும்ப போனவன், அங்கிருந்த சோபாவை பார்க்க அதில் அலமாரியிலிருந்த டிரஸ்கள் எல்லாம் பரப்பி கிடந்தது. யோசனையோடு அதன் அருகில் நின்று சென்று பார்க்க அவன் வாங்கி கொடுத்த சுடிதார் தவிர, மற்ற எல்லாமே மிகவும் சாதாரணமாக இருந்தது. அப்போதுதான் அவளிடம் நல்ல ட்ரெஸ் இல்லை என்பது தெரிந்து, நொந்து போய் விட்டான்.

'நாம ஒரு மடையன். இவ குணத்தை வைத்தே இவகிட்ட விலை உயர்ந்த டிரஸ் இருக்காதுன்னு, நமக்கு தெரிந்திருக்க வேண்டாம். பார்ட்டிக்கு எடுத்த டிரஸ் போட்டுட்டு மாலுக்கு வர முடியாது. அதனாலதான் அவள் சாதாரண டிரஸ் போட்டுட்டு வந்து இருக்கா. அதை கவனிக்காமல் இருந்துட்டு நம்ம பேசி என்ன பிரயோஜனம்…?' என்று தனக்குத் தானே கொட்டு வைத்துக் கொண்டவன், சத்தம் காட்டாமல் கதவை சாத்தி விட்டு வெளியேறிவிட்டான்…

குழந்தைகள் இருவரும் அம்மா, அம்மா என்று கேட்க… “அம்மாவுக்கு தலைவலி. அடுத்த ரூம்ல தூங்குறாங்க. இன்னைக்கு நீங்க அப்பா கூட தூங்குங்க ஒகேவா…”என்று ஒருவாறு அவர்களை சமாதானப்படுத்தி, அவர்களுக்கு வேறு அட்ரஸ் அணிவித்து, பாத்ரூம் செல்ல வைத்து, தன்னுடன் படுக்க வைத்துக் கொண்டான்…

குழந்தைகள் இருவரும் நன்கு தூங்கி விட்டனர். ஆனால் அவனுக்கு தூக்கமே வரவில்லை. தன்னால் அவள் சாப்பிடாமல் படுத்தது வேற மனதை உறுத்த வெகுநேரம் பால்கனியில் அமர்ந்திருந்தான். ‘மறுநாள் காலை அவளுக்கு முதல் வேலையாக டிரஸ் எடுக்க வேண்டும்’ என்று தீர்மானித்த பிறகு தான் அவனுக்கு மனது சமாதானம் ஆயிற்று.

ஞாயிற்றுக்கிழமை என்றாலும் சில குறிப்பிட்ட கடைகள் இருக்கும் என்பதால் காலையிலேயே குழந்தைகளையும் கிளப்பி அவளையும் வலுக்கட்டாயமாக கிளப்பிக்கொண்டு, கடைக்கு எல்லோரும் வந்தனர்.

எங்கு போகிறோம் என்று சொல்லாமல், தாத்தா பாட்டி முன்னிலையில் வாங்க, வாங்க என்று வலுக்கட்டாயமாக டிரஸ் கூட மாற்ற விடாமல் அப்படியே கடைக்கு கூட்டி வந்தவனை என்னவென்று பார்த்தாள். “இப்ப எதுக்கு இங்க…?” என்று

ஜவுளிக்கடையை பார்த்ததும், காரிலிருந்து இறங்கி கேள்வி கேட்டவளிடம்,

“எனக்கும் குழந்தைகளுக்கும் டிரஸ் எடுக்கணும். கீழே இறங்கு…” என்று சொல்ல… குழந்தைகள் உடனே, “ஐ, புது டிரஸ்ஸாப்பா, அம்மா ப்ளீஸ் இறங்குங்க…” என்று கையை பிடித்து அசைக்க, அவனை முறைத்தபடியே கீழே இறங்கினாள்.

கார் கதவை பூட்டி விட்டு, தங்களுடன் நடந்தவனை ஓரக்கண்ணால் பார்த்தாள். வழக்கமாக கோர்ட்டில் பிளாக் அண்ட் ஒயிட் சர்ட் என்பதால், வெளியில் வரும்போது உபேந்திரா பிளாக் பேன்ட் தவிர்த்து விடுவான். கருப்பும், அடர் பச்சையும் கலந்த அழுத்தமான நிறத்தில் பேண்டும், கிரீன் கலர் பொடி கட்டங்கள் போட்ட ஷர்ட்டும் அணிந்து, வலது கையில் பாவனாவையும் இடது கையில் பார்த்தியை பிடித்துக்கொண்டு நடந்து வந்தவனை அவளது கண்கள் அளந்தது…

‘நல்லாத்தான் இருக்கான்…’ என்று மனது அவனுக்கு அழகு சர்டிபிகேட் கொடுக்க, தன்னையறியாமல் அவள் தனது டிரஸ்சையும் தன்னையும் குனிந்து பார்த்துக்கொண்டாள்… அவனது அருகில் தான் மிக சுமாராக தெரியவும், தன்னை அறியாமல் அவளது முகம் கூம்பி போயிற்று… அவன் கடைக்குள் நுழையவுமே அங்கிருந்த சிலர், அவனுக்கு வணக்கம் சொல்ல,

ஒருவர் அருகில் வந்து “என்ன சார் பாக்கணும்…?” என்று கேட்க…

“குழந்தைகளுக்கு டிரஸ்…” என்று அவன் கூறவும், “தேர்ட் ப்ளோர்… வாங்க சார்” என்று அழைத்துக்கொண்டு சென்று அங்கு இருந்த சேல்ஸ் கேர்ளிடம் அறிமுகப்படுத்தி “பார்த்துக்கோங்க” என்று சொல்லியே பின்னரே சென்றான்.

“ரெண்டு பேருக்கும் சைஸ் பார்த்து எடு. நல்ல காஸ்டிலியா எடு. நிறைய எடு…” என்று சொல்லி தானும் கூட இருந்து செலக்ட் பண்ணி ஆளுக்கு பத்து டிரஸ் எடுத்தான். அதே பெண்ணிடம் லேடீஸ் செக்சன் எங்கே என்று கேட்க… “போர்த் ப்ளோர் சார்…” என்று பதில் சொல்லவும்,

ரங்கா அவனிடம், “இப்ப எதுக்கு லேடிஸ் செக்சன்…?” என்றாள்.

“என்னோட ஃபிரண்டு தங்கைக்கு பார்த்த டே, டிரஸ் எடுக்கணும் வா…!” திரும்பிப் பாராது பதில் கூறிவிட்டு மேலே செல்ல பின்னாலேயே அவளும் செல்ல வேண்டியதாயிற்று…

அங்கு சென்றதும் அவளிடம், “உன்னோட உயரம், கலர் இருப்பா. நல்லதா ஒரு டிரஸ் செலக்ட் பண்ணு…” என்று சொல்ல அவள் தன்னுடைய அளவில் ஒரு சுடிதாரை செலக்ட் செய்தாள்.

நைஸாக அந்த நம்பரை பார்த்துக் கொண்டவன், அடுத்து மடமடவென்று தனக்கு பிடித்த நிறம், டிசைனில் ஏகப்பட்ட சுடிதார் வாங்கினான். அதன் மெட்டீரியல் அத்தனையும் விலை உயர்ந்தவை…

சாரீஸ் எங்க இருக்கு மேடம்…? என்று அந்த பெண்ணிடமே கேட்டு அங்கு சென்று, தனக்கு பிடித்தவை எல்லாம் அவன் வாங்கிக் குவிக்க, அவனருகில் நெருங்கி, "என்னது இன்னொரு கடை வைக்கப் போறீங்களா…?"

கடை வைக்கிறதா இருந்தால் பாம்பேல எனக்கு நிறைய சேட் தெரியும், அவங்ககிட்ட இருந்து மொத்தமாக சரக்கு இறக்கிருவேன். இது எனக்கு…"

"நீங்க சாரி எல்லாம் கட்டுவீங்களா…?" என்று வேண்டுமென்றே அவள் அவனிடம் கேட்க…

பதில் சொல்லாமல் அவளை முறைத்தவன், "உன்னை எல்லாம் ஒரு அறை விட்டு, அடக்கி வைக்காமல் கெஞ்சிக்கிட்டு இருக்கேன் இல்ல, நீ இதுவும் கேப்ப இதுக்கு மேலயும் கேப்பே…?" என்றவன், சேல்ஸ் கேர்ள் தள்ளி செல்லவும், "என்னைப் பார்த்தால் உனக்கு ஆம்பளையா தெரியலையா…? சேலை கட்டுன பொம்பள மாதிரி இருக்கா.? இன்னைக்கு வேணா

ப்ரூப் பண்ணி காட்டவா…!” என்று உதடுகள் அவள் காதில் உரசும் படியாக நெருங்கி நின்று கேட்க, அரண்டு போய் விட்டாள்…

‘ஆத்தாடி இந்த மாதிரி ஒரு எபெக்ட் நான் இவன்கிட்ட எதிர்பார்க்கவே இல்லையே… கொஞ்சம் அடக்கி வாசிக்கணுமோ… ச்ச… சும்மா சொல்லுவான்…’ தன் நினைவில் தலையைக் குலுக்க…

“என்ன செய்ய மாட்டேன்னு நினைச்சியா…? அதெல்லாம் செய்வேன்… அதனால கொஞ்சம் எச்சரிக்கையாக இரு…” என்று அமர்த்தலாக பதில் சொல்லவும்…

‘மைண்ட் குள்ள யோசித்தால் கூட கண்டு பிடிச்சிடறானே… பெரிய வில்லனா இருப்பான் போல இருக்கு. டீ, ரங்கா எதற்கும் ஜாக்கிரதையாக இரு!” என்று தனக்குள் சொல்லிக்கொண்டாள்.

சில்க் காட்டன், மைசூர் சில்க், பிரின்டட் சில்க், லெனின் காட்டன், டிசைனர் சாரீஸ், என்று சேல்ஸ்மேன் காட்ட காட்ட ரகத்திற்கு நாலு என்று இருபது சேலைகளும், இருபது சுடிதார்களும் எடுத்த பின்பு தான் ஓய்ந்தான். மொத்தத்தில் பில் மட்டும் ஒரு லட்சத்தை தாண்டியது… கவலையே படவில்லை செக்கை கிழித்து கையில் கொடுத்துவிட்டு, கிளம்ப, கடை ஆள் அத்தனை பார்சலையும் கொண்டு வந்து காரில் வைத்தான்…

அடுத்து அவன் சென்ற இடம் ஒரு பேமஸ் ஜூவெல்லர்ஸ். ரங்கா எப்போதும் காதில் ஒரு சின்ன ட்ராப்ஸ் கைகளில் ஒற்றை வளையல் மட்டுமே அணிந்து இருப்பாள். அவளிடம் எதுவுமே கேட்கவில்லை. அவளுக்கு வாங்கிய சேலையின் அத்தனை கலரிலும் சின்னதாக கல்வைத்த ட்ராப்ஸ் விதவிதமாய், மோதிரம் இரண்டும் வாங்கினான்.

அதுபோக கைகளுக்கு இரண்டிரண்டு தங்க வளையல்கள், கழுத்திற்கு ஒரு ஆரம்... பாவனாவிற்கு சிறியதாய் இரண்டு தோடுகள், ஒரு செயின் வளையல், பார்த்திக்கு செயின் மோதிரம். கிட்டத்தட்ட பத்து லட்சம் பில். அதற்கும் செக்கை கொடுத்துவிட்டு அனைவரும் வீடு வந்து சேர்ந்தனர்.

"எங்கடா போனீங்க...?" என்று தாத்தா கேட்டதற்கு...

"சும்மா ஷாப்பிங் போனோம் தாத்தா... நேரமாயிடுச்சு பசிக்கிது என்ன இருக்குன்னு பாரு...!" என்ற ரங்காவை ஏவ, அவள் கிச்சனுக்குள் சென்றாள்.

அவள் சென்றதும் அங்கிருந்த ரங்கா பாட்டியிடம், " சாரி, நான் அவ இங்க வந்ததுமே செஞ்சிருக்கனும் மறந்துட்டேன்... எனக்கு நேத்துதான் அவகிட்ட இந்த மாதிரி காஸ்ட்லி டிரஸ் இல்லைங்கிறது புரிஞ்சுகிட்டேன். அதான் போய் பர்சேஸ்

பண்ணிட்டு வந்தோம். ஆனா இத உங்க பேத்தி கிட்ட சொன்னா பிரஸ்டீஜ் இஷ்யூ ஆயிடும் இல்லையா. அதான் சொல்லலை…” என்று சொன்னவனை மரியாதையுடன் பார்த்தார் பாட்டி.

“ரொம்ப தேங்க்ஸ்… நீ அவள புரிஞ்சுக்கிட்டதுக்கு. உண்மைதான் யார்கிட்டயும் எதுவும் வாங்கிக்க மாட்டா. எனக்கு தெரிஞ்சு ஸ்கூல் வரைக்கும் தான் நான் அவளை படிக்க வச்சேன். காலேஜ் பீஸ் அவளே சம்பாதித்துதான் கட்டினாள். அத்தனை தன்னம்பிக்கை, உழைப்பு எல்லாம் அவகிட்ட உண்டு. என்னையும், வாசுவையும் தவிர அவ யார்கிட்டயும் எதுவும் வாங்கிட்டதா சரித்திரமே இல்லை…”

“இன்னைக்கு நான் கொடுக்கிறேன். என்ன சொல்றான்னு பார்ப்போம்…!” என்றவன் ரஞ்சிதம்மாவை அழைத்து, “இதெல்லாம் என் ரூம்ல கொண்டு போய் வச்சுருங்க… வாங்க, தாத்தா, பாட்டி சாப்பிடலாம்…”என்று அவர்களையும் அழைத்துக்கொண்டு சாப்பிட சென்றான்…

# அத்தியாயம் 13

உபேந்திரா வழக்கம்போல் பால்கனியில் அமர்ந்து இருந்தான். குழந்தைகள் இருவரும் அவனுக்கு காலுக்கு கீழே பொம்மைகளை வைத்து விளையாடிக்கொண்டு இருந்தனர்...

வானில் நிலவொளியும், தோட்டத்தில் இருந்து வீசிய மெல்லிய பூங்காற்று இதமாக இருக்க, அவனது யோசனை ரங்காவில் நிலைத்திருந்தது...

'ட்ரெஸ் எடுத்தது அவளுக்குத்தான் என்பது அவள் அறிந்திருக்கக்கூடும், அதற்கு எந்தவிதமான சம்மதமோ அல்லது ஆட்சேபனையோ தெரிவிக்கவில்லை.

அதை விட முக்கியமாக அந்த உடைகளை அவள் தேர்ந்தெடுக்கவும் இல்லை... அதுதான் அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது ஏதோ ஒரு கட்டத்தில் இல்லை எனக்கு இந்த கலர் பிடிக்கல, இந்த டிசைன் வேண்டாம் அப்படி ஏதாவது சொல்லுவாள் என்று அவன் அவள் முகத்தை பார்க்க, யாருக்கு வந்த விருந்தோ என்பது போல், நீ என்ன வேணா செய்துகொள் என்று அருகில் நின்று கொண்டிருந்தாள்...

பாட்டி சொன்னது போல் இப்போது கொடுத்தாலும் என்ன பதில் வரும் என்பது அவனுக்கு கேள்விக்குறியாகவே இருந்தது...

கதவு திறந்து அவள் உள்ளே வரும் சத்தம் கேட்க, பாவனா அப்பாவிடம் “அம்மா வந்தாச்சு...” என்றாள்...

சொன்னதோடு மட்டுமில்லாமல் அம்மா, என்று கூவிக் கொண்டே அவளை நோக்கி செல்ல, ‘என்ன பவி...?” என்று செல்லப் பெயரிட்டு அழைத்தாள்...

"சுச்சு” என்று பதில் சொன்னதும் பாத்ரூமுக்கு அழைத்துச் சென்று, அவள் பாத்ரூம் போக உதவி செய்து பின்னர் அழைத்து வந்தாள்.

நானும் அண்ணாவும் ஃபிஷ் கேம் விளையாடுறோம், நீங்க வரிங்களா?"

“ஓகே...” என்று அவர்களுடன் உட்கார்ந்து ஃபிஷ் கேம் விளையாட ஆரம்பித்தாள்...

சற்று நேரம் அவர்கள் விளையாடுவதை வேடிக்கை பார்த்த உபேந்திரா, "ரங்கா” என்று அழைத்தான்..."

என்ன என்பது போல் அவனை நிமிர்ந்து பார்க்க, “ஜஸ்ட் டூ மினிட்ஸ் உள்ள வாயேன்...!” என்று அவன் அழைக்க, “டேய் ஒரு

அஞ்சு நிமிஷம் வெயிட் பண்ணுங்க... அடுத்த கேமுக்கு வந்து விடுவேன்.'' என்று இருவரிடமும் சொல்லி விட்டு உள்ளே வந்தாள்.

ஒரு பையிலிருந்து புடவையை எடுத்து அவள் கையில் கொடுத்து, ''இந்தா ரங்கா வாங்கிக்கோ. நான் உனக்கு தான் வாங்கினேன். சும்மா ஒரு பிரண்டுக்கு என்று பொய் சொன்னேன்...'' என்று கூற...

''இப்ப எதுக்கு? எனக்கு கேட்டேனா, நான் உங்ககிட்ட...?

''அம் சாரி ரங்கா. நேத்து உன்ன சாப்பிட கூப்பிட உன் அறைக்கு வந்தேன். அப்ப தற்செயலா பார்த்தப்ப, உன்கிட்ட இருக்கிறது எல்லாமே நார்மல் ட்ரஸ்னு தெரிஞ்சு கிட்டேன்...

முன்னாடியே யோசிச்சு உனக்கு டிரஸ் வாங்கி கொடுத்து இருந்திருக்கணும். அப்படி செய்யாமல் நேத்து உன் மேல தேவையில்லாமல் கோபப்பட்டது தப்புதான். அதான் இன்னைக்கு கூட்டிட்டு போய் வாங்கினேன்...

அங்கேயே சொல்லி இருப்பேன். ஆனா நீ எந்த மாதிரி ரியாக்ட் பண்ணுவேன்னு எனக்கு தெரியல...?''

''ஓகே, வாங்கிக்கிறேன். ஆனா ஒரு கண்டிஷன் எனக்கு இத்தனை டிரஸ் வேண்டாம். ஏதோ ஒண்ணு, ரெண்டு போதும்.

அதுவும் உங்க கூட வரும்போது வெளியில போடுறதுக்கு. ஓகேவா…”

“ஏன் எல்லாவற்றையும் வாங்கி கிட்டால் என்ன?”

“ஒரு ஆளுக்கு, டிரஸ்சுக்கு இத்தனை காசு போடுவீங்களா.? நோ, எனக்கு மனசே ஒத்துக்கல…”

நீ சொல்றது சரிதான் ரங்கா. ஆனா நம்ம கிட்ட வசதி இருக்கு. வாங்க வாய்ப்பு இருக்கு. அப்ப வாங்கி கிட்டா என்ன?

“வசதி உங்ககிட்ட இருக்கு. என்கிட்ட இல்ல. நான் இன்னும் அதே சாதாரண ரங்காதான். நான் இது அத்தனையும் வாங்கி கிட்டால் எனக்கு ஒரு கில்ட்டி பீல் வந்துரும்…”

“ஏய், எதுக்கு என்னென்னவோ பேசுறே? நீ என்னோட வைஃப்… அந்த உரிமையில் தான் நான் வாங்கி வந்தேன்…”

“நானும் அதனாலதான் சொல்றேன். அதை நான் வாங்கிக்கும் போது, என்னால பதிலுக்கு சும்மா இருக்க முடியாது. அதுக்குள்ள உரிமைகளை நான் உங்களுக்கு கொடுக்காதபோது நான் மட்டும் அந்த உரிமைகளை அனுபவிக்கிறது தவறு…”

"ஐயோ ஏண்டி இப்படி டிசைன், டிசைனா முடிச்சு போடுற…?"

உண்மையா தான் சொல்றேன். நான் உங்க கூட வெளியில் வரலாம். ஜாலியா ஊர் சுத்தலாம். உங்க மனைவிக்கு உள்ள அத்தனை சௌகரியங்களையும் அனுபவிக்கலாம். ஆனா அதே உரிமையை நீங்க என்கிட்ட எதிர்பார்த்தா என்னால் கொடுக்க முடியாது. அப்பா வீணா பிரச்சனை வரும். அது வேண்டாம்னு நினைக்கிறேன்…"

"இதை கொடுத்து உன்னை மயக்கப் பார்க்கிறேன்னு பச்சையா சொல்றியா…?"

மௌனமாக பதில் சொல்லாமல் நிற்க அந்த மௌனமே அவள் அப்படித்தான் நினைக்கிறாள் என்று சொல்லாமல் சொல்லியது.

"என்ன பொண்ணுடி நீ. ஒரு நிமிஷம் இங்கே வா…" என்றவன் "என் குழந்தைகள் மேல சத்தியமா சொல்றேன். நான் உன்கிட்ட அதை எதிர்பார்க்கவே மாட்டேன்டி…

அதுக்காக நான் பொண்ணுங்களையே தெரியாதவன் கிடையாது. எல்லாத்தையும் விளையாட்டாக எடுத்துக் கொண்டு ஷேர் பண்ணுற பண்ணுங்க நிறைய பேர் இருக்கிறாங்க. அவங்களோட நானும் ஷேரிங்ல இருந்து இருக்கேன். அந்த நிமிஷததோட அவங்களும் மறந்துட்டாங்க. நானும் மறந்துட்டேன்…"

“இதை சொல்ல உங்களுக்கு வெட்கமில்ல...?”

“நான் எதுக்கு வெட்கப்படணும். அவங்கதான் வெட்கப் படணும். சில பொண்ணுங்கள பார்த்த உடனே பிடிக்காமல் போய்விடும். சில பொண்ணுங்கள பார்த்தாலே அவங்க வேற விஷயத்துக்கு மட்டும் தான் யூஸ் ஆவாங்கன்னு தெரியும். சில பொண்ணுங்களைப் பார்த்தா சகோதரியாக தாயாக மதிக்கிற அளவுக்கு ஒருவித பாச உணர்வு தோன்றும்.

மனைவியாய் இருக்கிறவ, இதுல எந்த கேட்டகிரியிலும் இருக்கக் கூடாது. அவளைப் பழகப்பழக புரிஞ்சு அதனால் வரக்கூடிய காதலினாலே, அவளை ரொம்ப பிடிக்கணும்... இந்த ஒரு காரணத்துக்காகவே அழகான பொண்ணா இருக்குன்னு கல்யாணம் பண்ணி, ஒருவேளை அவ குணம் பிடிக்கலைன்னா, என்ன செய்யறதுன்னு நான் பயந்து போய் கல்யாணமே வேண்டாம்னு இருந்தேன்...”

“அப்படி யாரும் கிடைக்கலியா...?” கேலியாக வழிந்தன அவளது உதடுகள்...

“எனக்கு இந்த கண்டவுடன் காதல், இதில் எல்லாம் நம்பிக்கை கிடையாது. ஆனா முதன் முதல்ல உன்ன பார்த்தப்போ உன்னோட கேரக்டர் என்னை கவர்ந்தது.

ஆனா நீ என்னை ஜெயிச்சதும் என்னோட ஈகோ தலைதூக்கி, உன் மேல எனக்கு ஒரு கோபத்தைத்தான் உண்டாக்குச்சு…”

“அதானே பார்த்தேன். உங்க இனத்துக்கே உண்டானது…!”

“ஏன் இப்ப உனக்கு இல்லையா. திரும்பக் கேட்டா உனக்கு தான் அதிகமா இருக்கு…!” என்று பதிலடி கொடுத்தவன் மேலும் தொடர்ந்தான்…

“ஆனா என்னைக்கு நம்ம குழந்தைகளோட அம்மான்னு தெரிஞ்சுதோ, அப்பவே நான் டிசைட் பண்ணி விட்டேன். எந்த வகையிலும் உன்னோட மதிப்பு குறைய விடக்கூடாதுன்னு. அதனாலதான் வம்படியா உன்னை கல்யாணம் பண்ணினேன். இப்பதாண்டி எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு உன்னை…!”

“ஆனால் எனக்கு யாரையும் பிடிக்காது.!”

“அது தெரிஞ்ச சங்கதிதானே…” என்றவன், ஆனால் எனக்கு அப்படி இல்லை. எதற்கும் ஆசைப்படாத, நியாயமான, நேர்மையான ஒரு பொண்ணு எனக்கு மனைவியா கிடைச்சிருக்கா, என்பது பெரிய சந்தோஷம். எல்லா பொண்ணுங்களுக்கும் எப்படினாலும் நகை, புடவை, சொத்து, இது மேல ஒரு குறிப்பிட்ட சதவீத ஆசை இருக்கும்…

ஆனா எதுவுமே வேண்டாம்னு நீ சொல்ற பாரு… இத்தனைக்கும் நான் உனக்கு கொடுக்கணும்னு அவசியமே இல்ல. என்னைக்கு நமக்கு கல்யாணம் ஆச்சோ அன்னைக்கே உனக்கும் இதுல சம உரிமை இருக்கு, அப்படி இருந்தும் வேண்டாம்னு சொல்ற பாரு. உண்மையிலேயே நீ எனக்கு ஒரு பெரிய கிப்ட்…!”

“அப்பா தாங்கலை. நைட் நேரம் குளிருது…!” என்று போலியாய் நடுங்கினாள்.

அவளை முறைத்தவன், “ஆனா உனக்கு என்ன பிரச்சனைன்னு உனக்கே புரியல. உனக்குள்ளே ஒரு வட்டத்தை போட்டுட்டு ஆண்களை பார்க்கிற பார்வையில் ஒரு முகமூடி போட்டுட்டு வாழ்ந்துட்ட ரங்கா. தப்பு இல்ல…” என்றவன் அவள் அருகில் நெருங்கி நின்றான்…

“ஆண் இல்லாமல் பெண் இல்லை, பெண் இல்லாமல் ஆண் இல்லை. புரிஞ்சுக்கோ. அந்தந்தக் காலக்கட்டத்தில், நமக்கு இயற்கை என்ன கொடுத்திருக்கோ அதை அனுபவித்து வாழ பழகிக்கணும்…

நீயும் பெரிய பொண்ணா ஆகி இருக்கும் போது, உனக்கு ன்னு மனசுக்குள்ள கனவுகள் பூத்தது இல்லை…! அப்படி இல்லைன்னா நீ வலுக்கட்டாயமாக அதை ஒதுக்கி வைத்து

இருக்கேன் அர்த்தம்...!” என்று கூறி விட்டு அவள் முகத்தை பார்த்தான். அந்த நாட்களின் நினைவில் அவள் முகம் கசங்கியது...

“அதுக்கு காரணம் நீ வளர்ந்த சூழ்நிலையா இருக்கலாம். ஆனா இப்போ அந்த சூழ்நிலையும், காரணமும் மாறிடுச்சு ரங்கா. கணவன், மனைவி எப்படி இயல்பா இருப்பா ங்களோ அப்படி இருக்க பாரு. நான் இவைகளெல்லாம் உனக்கு வாங்கித் தருவதுனால உன்னை எல்லா விஷயத்திலேயும் கம்பெல் பண்ணுவேன்னு தயவு செய்து நினைக்காதே...!” என்று பரிவுடன் கூற, அவன் சொல்லியது சந்தோசத்தை தருவதிற்கு பதில் வருத்தத்தை தந்தது.

அது ஏன் என்று கூட அவளுக்கு புரியவில்லை. “நான் உன்னை சாதாரணமாக தொடுவதோ, தோள் சாய்த்துக்க நினைப்பதோ, ஒருவித அன்பு பாசம் தாண்டி. நீ குழந்தைகளை அணைக்கலையா, பாசத்துல...

கணவன் மனைவி பாசம்கிறது அப்படித்தான்... இளமை காலத்தில் உடலில், தவிப்பும், தாபமும், ஆசையும் தேவையும் இருக்கும். வயதாகி முதுமை வரும்போது ஆறுதலும் அரவணைப்பும் மட்டும் தாண்டி இருக்கும்...

இப்ப இது நிறைவா இருந்தால்தான் அப்ப அது சாதாரணமாக வரும். இல்லேனா நீ உன் உணர்வுகளை மறுக்க மறுக்க, அதை அடக்க அடக்க உன் மனசு பூரா ஆண்கள் மேல இருக்கும் வெறுப்பு இன்னும் கூடிக் கொண்டுதான் போகும். அந்த ஸ்ட்ரெஸ் வேற விதமா வெளிப்படும்...

அது உன்னைப் பொறுத்தவரை சரியாக இருக்கலாம்... ஆனால் பாவனா உன்ன பார்த்துதான் வளர்வா. அவளுக்கும் விவரம் தெரியும் போது நம்ம ரெண்டு பேர் வாழ்க்கை தன்னாலே புரியும்.

அவளும் இதே மாதிரி ஆண்கள் மேல் ஒரு வெறுப்பை கொண்டு வாழ்ந்தால், அவளுடைய வாழ்க்கை எப்படி இருக்கும். ஒரு நிமிடம் யோசித்துப் பார். நான் இத்தனை சொல்லியும் இது வேண்டாம் என்றால் அப்படியே வைத்துவிடு...” என்றவன் அறையை விட்டு வெளியே சென்று விட்டான்.

ரங்கா தலையை பிடித்துக் கொண்டாள். அவளுக்கு அவன் சொன்னது எல்லாம் சரியா, தவறா என்று கூட யோசிக்க முடியவில்லை. 'ஒருவேளை நாம நார்மல் இல்லையோ, கல்யாண வாழ்க்கைக்கு நமக்கு தகுதி இல்லையோ. அதனாலதான் எதை எடுத்தாலும் இப்படி ஒரு கோபம் வருதோ...!' என்று பலவாறாக சிந்தனைகள்...

அதற்குள் ‘அம்மா’ என்று குழந்தைகள் அழைக்கும் சத்தம் கேட்டு தற்காலிகமாக பிரச்சினையை ஒதுக்கி வைத்துவிட்டு அவர்களுடன் விளையாட சென்றாள்…

வீட்டிலேயே இப்பொழுது அலுவலகம் மாலையில் இயங்க ஆரம்பித்துவிட்டது. மூன்று மணிக்கு ரங்காவுடனே குழந்தைகளை அழைத்துக் கொண்டு வீட்டுக்கு வந்து படுபவன், ஆறு மணிக்கு வீட்டில் உள்ள அலுவலகத்தில் போய் உட்கார்ந்து விடுவான்.

இங்கு ஒரு டைப்பிஸ்ட், ஒரு உதவியாளரும் ஏற்பாடு பண்ணிக் கொண்டான். சில முக்கியமானவர்கள் வீட்டுக்கு வந்து சந்திக்க, இரவு எட்டு மணி வரை அலுவலகத்தில் இருந்து விட்டு பின்னர் தான் வீட்டுக்கு வருவான்…

ரங்கா தேவை என்றால் மட்டுமே அலுவலகத்திற்குள் செல்வாள். இல்லையென்றால் குழந்தைகளை தோட்டத்தில் விளையாட விட்டு அவளும் பாட்டியும் அங்கு உட்கார்ந்து பேசிக் கொண்டு இருப்பர்…

கிட்டத்தட்ட கல்யாணம் நடந்து ஒரு மாதம் ஆகி விட்டது. வாசு அப்பப்ப போனில் நலம் விசாரித்ததோடு சரி. அன்று தோட்டத்தில் குழந்தைகள் விளையாடிக் கொண்டிருக்க பாட்டியும் ரங்காவும் பேசிக்கொண்டிருக்க, வாசு போனில் அழைத்தான்…

ரங்கா அவனிடம் "வாசு எப்படி இருக்க...? டேய் உன்னை பார்த்து ரொம்ப நாளாச்சு... நாளைக்கு சாட்டர்டே தானே நம்ம வீட்ல தான் டிபன், லஞ்ச் எல்லாம். காலையிலேயே வந்துருங்க...!"

"எதுக்கு ரங்கா தேவையில்லாம...?"

"பாட்டி நீங்க சொல்லுங்க...!"

"வாசு நீ குழந்தையையும், கீர்த்தியையும் அழைச்சிட்டு வா. நானும் இங்க கொஞ்சம் எல்லாரும் செட்டில் ஆகட்டும் அப்படின்னுதான் இதுவரை உங்களை கூப்பிடல. நாளைக்கு நீங்க எல்லாரும் வர்றீங்க...! சொன்னதும் மறுக்கமுடியாமல் வாசுவும் “சரி” என்றான்.

இரவு படுக்கும் போது குழந்தைகள் "அப்பா நாளைக்கு சாட்டர்டே வெளியில போலாமா...!" என்று கேட்டதும், வாசு வருவது நினைவுக்கு வர ரங்கா, "ஏய் பாவனா நாளைக்கு ஹர்ஷத் வரான். வீட்டில விளையாடுங்க..." என்று குழந்தைகளிடம் சொல்லி விட்டு, அவனிடம், பாட்டி நாளைக்கு வாசு ஃபேமிலி வரச் சொல்லி இருக்காங்க...!" என்றாள்.

"ஒகே அப்ப நாளைக்கு பகல் ஃபுல்லா வீட்டில் விளையாடுங்க. ஈவினிங் அவங்களோட வெளியில் போகலாம்..."

"அப்ப எங்க போகலாம்...? கடற்கரைக்கு போகலாமா...!"

"ஓகே பீச்சுக்கு போயிட்டு, அப்படியே சாப்பிட்டு வரலாம்...!

“போங்கப்பா போன வாரம் நீங்க ஹோட்டலுக்குப் போகலாம்னு சொன்னீங்க. அப்புறம் அம்மா கூட சண்டை போட்டுட்டு ஹோட்டலுக்கு போகாமல் வந்துட்டோம்..."

“இல்ல. இனிமே இந்த மாதிரி நடக்காது. நான் உங்க அம்மா கூட சண்டை போடவே மாட்டேன் ஓகே. ஆனா அதே மாதிரி உங்க அம்மாவும் என் கூட சண்டை போடக்கூடாதுன்னு சொல்லி வைங்க...!” என்று அவர்களிடம் சொன்னான்.

“ஓகேபா, நாங்க பார்த்துக்கிறோம். உங்க கூட சண்டை போட்டாங்க இருக்கு...” என்றது பாவனா. “எஸ் டாடி” என்றான் பார்த்தி...

"ஏதேது குழந்தைகள் சப்போர்ட் பயங்கரமா இருக்கு போல இருக்கு..." என்று அவள் வாய் விட...

“ஆமா எப்ப ஏவுகணைத் தாக்கும்னு தெரியாது. கொஞ்சம் பாதுகாப்பா இருந்தால்தானே நல்லது...

"ஹலோ நான் என்ன ராக்கெட்டா...?” என்றாள் கோபத்தோடு...

“சாரி, நான் அப்படி சொல்வேனா. வேற மாதிரி சொல்லுவேன். ஆனா உனக்கு பிடிக்காது…” போலியாய் பயந்தான்.

“இல்ல சொல்லுங்களேன் பார்ப்போம். எனக்கு பிடிக்குதா, பிடிக்காதா நானும் பார்க்கிறேன்…” கெத்தாக சொல்ல…

“குழந்தைகள் தூங்கட்டும் சொல்றேன்…” என்றவன் அவளை ஒரு மாதிரி பார்த்தான். பார்வையே ஒரு மாதிரி தெரிய ‘தேவை இல்லாம பில்டப் பண்ணிட்டமோ. ரொம்ப செக்சியா எதுவும் பேசுவானோ…’ மனடைக்குள் நண்டு பிராண்டியது. சற்று நேரம் அப்பா மேலேறி விளையாடி அவனை பாடாய் படுத்தி விட்டு, இரண்டும் தூங்க ஆரம்பித்தனர்…

அதற்குள் அவள் தனது அறைக்கு சென்று குளித்துவிட்டு நைட்டியுடன் இந்த அறைக்கு வந்து சேர்ந்தாள்… குழந்தைகளை சரியாக கட்டிலின் நடுமையத்தில் இழுத்துப் போட்டுவிட்டு, லைட்டை அணைக்க போகையில், உபேந்திரா அங்கு இல்லாதது கவனத்தில் வந்தது…

பால்கனிக்கு சென்று பார்க்க மார்பின் குறுக்கே கையைக் கட்டிக்கொண்டு, நிலவைப் பார்த்துக் கொண்டு அவன் நிற்பது தெரிந்தது…

மெல்ல அருகில் சென்று, "படுக்க வரலையா...?"

"ம்ம். பிள்ளைங்க தூங்கிட்டாங்களா...?

"ஆமா, அதான் உங்களை தூங்க வரலையானு கேட்டேன்...!

"நீ கேட்ட கேள்விக்கு பதில் தெரிய வேண்டாமா?”

"என்ன கேள்வி...?

"நான் என்ன ராக்கெட்டான்னு கேட்டியே. அதுக்கு பதில் வேண்டாமா...?"

"சொல்லுங்க பார்ப்போம்..."

“இப்படி தள்ளி நின்னுட்டு சொல்லுன்னு சொன்னா எப்படி சொல்றது...? கொஞ்சம் பக்கத்துல வந்து நில்லு...

அவனை நெருங்கி நின்றாள். "கவலைப்படாதே என் விரல் நுனிகூட உன் மேல படாது. ஓகே. என்றவன், அந்த ஏவுகணை மூலம் ஒரு ராக்கெட் தான் போகும். ஆனா உன்கிட்ட பல ஏவுகணைகள் இருக்கு அது தெரியுமா உனக்கு...? என்றான் மர்மப் புன்னகையோடு...

“போரடிக்காதீங்க...!” என்றாள் வேண்டுமென்றே...

"இந்த கண்ணு இருக்குல்ல, கண்ணு' என்று சொல்லிக் கொண்டே வலது கை ஆட்காட்டி விரலால் அவள் கண்களை சுட்டிக்காட்டினான்.

அவனது விரல்கள் அருகில் வரவும் அது கண்ணைக் குத்தி விடும் என்ற பயத்தில் அவள் கண்களை படபடவென்று அடிக்க, ‘‘பாத்தியா, பறவைகள் பயத்துல சிறகை விரித்து அடிச்சுக்குமே, அதே மாதிரி உன்னோட கண்ணு பட படவென துடிக்கிறச்சே, அதுல இருந்து நீ எத்தனை ஏவுகணைகளை எனக்கு அனுப்புன தெரியுமா…? என்று ரசனையோடு கேட்க, அவன் பேச்சும், அதில் ஒளிந்திருந்த ரசனை மிகுந்த சொற்களும், மேலிருந்து வீசிய ஒருவித நறுமணமும், அவளுக்கு தோன்றியிராத ஒரு புது வித உணர்வை தோற்றுவிக்க மோன நிலையில் நின்றாள்.

“அடுத்து இந்த மூக்கு இருக்கே மூக்கு, உனக்கு கோபம் வரும்போது விடைக்கும் பாரு, அப்ப அதிலிருந்து வரக்கூடிய அனல் மூச்சிலேயே இருந்து, எத்தனை அம்புகள் என்னை நோக்கி வரும் தெரியுமா…?

அப்புறம் இந்த உதடு இருக்கே உதடு, நீ பேசும் போதும், சிரிக்கும் போதும் உதட்டை சுழிக்கும் போதும், ஒவ்வொரு நேரத்திலும், ஒவ்வொரு விதமான பாணத்தை என் மேல விடுமா. அத்தனையிலும் நான் அப்பப்ப ப்ளாட்டாகி, அப்புறம் எழும்பி

நிற்கிறேன்…” அவன் சொல்ல, சொல்ல அவனது வார்த்தை ஜாலத்தில் அவளது மனம் மயங்கியது…

“அப்புறம்” என்றவன் தனது விரல்களை கீழ்நோக்கி கொண்டு வந்து, முகவாய், நாடிக்கு கீழாக சென்று நெஞ்சுக்கு நேரே விரலை நீட்டவும், வேறு எதுவும் சொல்லி விடுவானோ என்ற பயத்தில் சட்டென்று அவன் வாயை தனது வலது கை கொண்டு பொத்தினாள்…

“ஏய் என்ன இது? நான் உன்னை தொடல…! நீதான் என்ன தொட்டு இருக்கே?”

“சும்மா இருங்க. வேறு எதுவும் சொல்லிடாதீங்க…”

“நான் இன்னும் ஆரம்பிக்கவே இல்லைடி. இனிதானே தமிழ் கவிஞர்கள் சொல்லிய வர்ணனை பகுதிகள் வருது… கொஞ்சம் எடுத்து விடவா…?”

‘இங்க எடுத்துவிட்டது, அவுத்து விட்டதெல்லாம் போதும் வந்து படுங்க…”

"இல்லை. கவி சக்கரவர்த்தி கம்பனும், இளங்கோவடிகளும், மற்றும் குறுந்தொகை, ஆண்டாள் திருமொழியில் என்று அனைத்து இலக்கியத்திலும் இதை வர்ணிச்சு இருக்காங்க. அது உனக்கு தெரிஞ்சு இருக்கணும். மெல்ல உன் காது பக்கம் சொல்றேன்…”

என்றவன் காதருகில் வந்து, "உங்கிட்ட இருக்கிற மன்மத பாணங்களில் சிறந்த பாணம் இதுதாண்டி. இதுக்கு மேல நிறைய இருக்கு. அதெல்லாம் இப்போ வேண்டாம்... இப்படி ஆயிரக்கணக்கான மன்மத ஏவுகணைகளை உங்கிட்ட வச்சுக்கிட்டு, நான் என்ன ராக்கெட்டான்னு கேட்டா...? நான் என்ன பதில் சொல்றது? எப்படி பதில் சொல்றது? என்று சொல்லவும், அவளுக்கு சங்கோஜத்தில் முகம் சிவந்தது...

"இப்படி எல்லாம் பேசுவீங்களா...?" என்று பரிதாபமாக அவள் அவன் முகம் பார்க்க...

"பொம்பளைங்களே இதைவிட மட்டமா பேசுறாங்க. நாங்க பேசினா என்னடி...?"

"அதென்ன பொம்பளைங்களே...!"

"அம்மா தாயே, தெரியாம சொல்லிட்டேன். கன்னத்தில் வேணா போட்டுக்கிறேன். இந்த காலத்துல பொண்ணுங்களும் பேசறாங்க, ஆண்களும் பேசுறாங்க போதுமா.?"

"ம்ம், அப்படி வாங்க வழிக்கு...?"

"ஏண்டி இப்ப இதுதான் பிரச்சனையா...? நான் கேட்கிற கேள்விக்கு பதில் சொல்லு. நீ என்னைக்காவது பேசி இருக்கியா...?"

“அப்படின்னா...?”

“இல்ல காலேஜ் டேஸ்ல, ஸ்கூல் டேஸ்ல, உன்னோட ஃப்ரெண்ட்ஸ் கூட இந்த மாதிரி ரகசியம் பேசி இருக்கியா...? அல்லது காதல் பற்றி, ஆண்கள் பத்தி இந்த மாதிரி பேசி இருக்கியா...?”

“அதுக்கெல்லாம் எது நேரம்? எனக்கு கேர்ல் ப்ரெண்ட்ஸ் கிடையாது. உண்மையை சொல்லணும்னா பிரெண்ட்சே கிடையாது. வாசு மட்டும்தான் தெரியும்...

ஸ்கூல்ல இருந்து நாங்க ரெண்டு பேரும் ஒண்ணாதான் படிச்சோம். என்ன விஷயம்னாலும், நாங்க ரெண்டு பேரும் தான் பேசிக்குவோம். ஸ்கூல் முடிச்சு அவன் காலேஜு க்கு போகும்போதே, நான் பார்ட் டைம் வேலைக்கு போயிட்டேன்...

அப்புறம் லாயர் படிப்பு, சம்பாத்தியம், குடும்பம் எனக்கு தெரிஞ்சு நான் சந்தோஷமா ஒரு சினிமா கூட போனது கிடையாது...

வாசுவும் நானும் உழைப்பு, உழைப்பு, அந்த கம்பெனி, பாட்டி இதுதான் எனக்கு தெரியும். அதனாலதான் சொல்றேன் உங்களுக்கு ஏத்த மனைவி நான் கிடையாது என்கிட்ட உங்களுக்கான காதலும், தேடலும் கிடையாது.

அது எனக்குள்ள பூக்குமா, அல்லது உங்க மேல வருமா, எனக்கு தெரியாது. ஆனா ஒண்ணே ஒண்ணு மட்டும் எனக்கு தெரியும். மனசுல ஒருத்தர் மேல நேசம் இல்லாம என்னால என்னை அவர் கிட்ட ஒப்படைக்க முடியாது. குட் நைட் வந்து தூங்குங்க…” என்று சொன்னவள் உள்ளே போய் குழந்தைகள் பக்கத்தில் படுத்து விட்டாள்.

"அடிப்பாவி விடிய விடிய கதை கேட்டு சீதைக்கு ராமன் சித்தப்பன்னு போயிட்டியே…! நானே விழுந்து, விழுந்து உனக்கு கதைசொல்லி எப்படியாவது கொஞ்சம் ரொமான்டிக் மூடு ஏத்தி விடலாம் நினைச்சேன். உன்ன பார்த்து, பார்த்து நான் எனக்கு ஏத்தி கிட்டது தான் மிச்சம்… பேசாம போய் படுடா. தேவையா எனக்கு…" என்று தனக்குத்தானே புலம்பிக் கொண்டே வந்து படுத்தான்.

மறுநாள் காலையிலேயே வாசு குடும்பம் வந்துவிட்டனர். நாள் கழித்து குழந்தைகள் அவனை பார்த்ததால் அவனிடம் மாமா, மாமா என்று ரொம்ப நேரம் விளையாடிக் கொண்டே இருந்தனர்.

ஹர்ஷத்துடன் விளையாட ஆரம்பித்ததும் பெரியவர்கள் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தனர். வாசுவின் அருகில் உட்கார்ந்து ரங்கா முகம் மலர பேசும் அழகை உபேந்திரா பார்த்துக்கொண்டிருந்தான்…

இங்கு வந்த நாளில் இருந்து, அவள் இத்தனை மலர்ச்சியுடன் இருந்தது இந்த நிமிடத்தில் தான், என்று அவனுக்குத் தோன்றிற்று… கீர்த்தியும், பாட்டியும் பேசிக்கொண்டிருக்க, வாசுவும், ரங்காவும் வெகு நாள் விட்டுப் போன கதைகளை சுவராசியமாக பேசிக்கொண்டு இருந்தனர். அவர்கள் பேசட்டும் என்று கௌரவமாக உபேந்திரா மாடிக்குச் சென்று விட்டான்.

“என்னடா பணம் வாங்க இப்ப யார் வர்றா வீட்டிலிருந்து.?”

“மோகன் தான் வர்றான்…”

“வீட்ல எல்லாரும் எப்படி இருக்காங்களாம்…?”

“அதெல்லாம் எதுவுமே சொல்ல மாட்டான். உங்க ரெண்டு பேர் பத்தியும் கேட்க மாட்டான். வருவான், பணம் கேட்பான், கொடுத்து விடுவேன். போய்விடுவான்…”

“இன்னும் அப்படியே தான் இருக்காங்க இல்ல…” என்றாள் ஒரு பெருமூச்சுடன்…

“எத்தனை ஜென்மம் எடுத்தாலும் அவங்க அப்படித்தான் இருப்பாங்க விட்டுத்தள்ளு…”

“ஆமா நீ எப்படி இருக்க…? அவர் நல்லா உன்னை பார்த்து கிறாரா…?” என்று வாசு கேட்கவும் கலகலவென்று ரங்கா சிரித்தாள்.

பாட்டி அவளை என்னவென்று பார்க்க, வாசு கேட்டதை சொன்னவுடன் பாட்டி மௌனமாக சிரித்துவிட்டு, "வாசு அவ கிட்ட அப்படி கேட்க கூடாது…! இவ அவர நல்லா பாத்துக்கணும், சொல்லிட்டு போ, உன்னோட அருமை தங்கச்சிக்கு…" என்றார்.

"அப்படியா ரங்கா…?"

“சச…அதெல்லாம் கிடையாது. அவரோட வாழ்க்கை முறை வேற என்னோட வாழ்க்கை முறை வேற. கொஞ்சம் உரசிக்குது அவ்வளவுதான்டா…”

“பத்திக்காம. பார்த்து…” என்று அவள் பாணியிலே பதில் கொடுத்த வாசுவை பொய்யாய் முறைத்தாள்.

“சரியாயிடும்னு அவர் நம்பறார். பார்க்கலாம்,,” என்று பதில் சொன்ன தோழியை, அன்புடன் வாசு பார்த்தான்.

“இப்ப அவர் எங்க.?”

“தெரியல இங்கதான் இருந்தாரு. மாடிக்கு போயிருப்பார்…”

“நான் அவர் கிட்ட பேசலாமா…?”

“அதுக்கு ஏன் என்கிட்ட கேள்வி கேட்டுட்டு இருக்கே? போய் பேசு. நானும் கிச்சனில் சமையல் ரெடி ஆகிட்டுதா போய் பார்த்துட்டு வரேன்." என்று சொல்லிவிட்டு அவள் சென்றுவிட வாசு மெல்ல மாடி ஏறினான்.

# அத்தியாயம் 14

கடற்கரையில் குழந்தைகள் மூவரும் அலையில் விளையாடிக்கொண்டிருக்க, அவர்களை கீர்த்தியும் ரங்காவும் கவனித்துக்கொண்டே தாங்களும் அலையில் கால் நினைத்துக் கொண்டிருந்தனர்…

சற்று தள்ளி நின்று வாசுவும், உபேந்திராவும் அதனை கவனித்துக் கொண்டிருந்தனர்…

"ரொம்ப உள்ள தள்ளிப் போக கூடாது…? மகனை எச்சரித்த வண்ணம், மகளை ஒரு கையில் பிடித்துக்கொண்டு, பாதம் நினைக்கும் அளவு அலையில் நின்று கொண்டு இருந்தாள்.

அதைவிட சற்று தள்ளி கீர்த்தி ஹர்ஷத்தை பிடித்துக்கொண்டு நிற்க, "கீர்த்தி ஹர்ஷத்தை தூக்கிக் கோ. அவ ரொம்ப சின்ன பையன்…”

“இல்லக்கா அவன் கீழே இறங்கி நிக்கணும்கிறான். அதான் நான் கொஞ்சம் பின்னால தள்ளி நிக்கிறேன்…” இருவரும் பிள்ளைகளை கையில் பிடித்துக் கொண்டு, பேசிக் கொண்டு இருந்தனர்…

உபேந்திரா வாசுவிடம், "உங்க தங்கச்சி பார்க்கத்தான் ரொம்ப தைரியசாலி. ராத்திரியானால் பேய்க்கு அந்த பயம் பயப்படறா...!"

"அதுவா, நாங்க சின்னப் பிள்ளையா இருக்கும்போது கிராமத்துல இருந்தோம். கிராமத்தை பற்றி உங்களுக்கு தெரியாதா. அங்க பேய்க்கதை நிறைய உலாவும். அதைக் கேட்டு கேட்டு அவளுக்கு உள்ள ஒரு பயம். ஏன் உங்க வீட்ல எந்த பேய் இருக்கு...?"

“அதான் நீங்க ஒண்ணு அனுப்பி வச்சு இருக்கீங்களே...!” என்றான் உபேந்திரா சிரித்துக்கொண்டே...

உண்மையோ என்று பதறிய வாசு, பயத்துடன் பார்க்க, அவன் தோளைத் தட்டி உபேந்திரா, "என்ன மச்சான் பயந்துட்டீங்களா...?" என்று கேட்க அவனை ஆச்சரியத்துடன் பார்த்தான்.

“என்னையா மச்சான் கூப்பிட்டீங்க...?” வாசு சந்தேகத்துடன் கேட்க,

சுற்று முற்றும் பார்த்த உபேந்திரா, இங்க வேற யாரும் இல்லையே. நீங்க எனக்கு மச்சான் முறை தானே வேணும். நீங்கதான் என்ன முறை சொல்லிக் கூப்பிட மறந்துட்டீங்க. நான்

கூப்பிடலாம்னு நெனச்சேன்...! என்று சொன்னதும் அவனை கட்டிபிடித்து ஆனந்தக் கண்ணீர் விட்ட வாசு...

"ரொம்ப தேங்க்ஸ்... எங்க நீங்க என்னை ரங்காவோட சகோதரனா நினைக்க மாட்டீங்களோன்னு நெனச்சேன்... இனி ரங்காவை அவ்வளவு ஈசியா பார்க்க முடியாது, பேச முடியாதுன்னு, ஒரு மாசம் நானும், கீர்த்தியும் பட்ட பாடு எங்களுக்குத்தான் தெரியும்.

அவளுக்கு ஒரு தங்கச்சி, ஒரு தம்பி இருக்காங்க. ஆனா எல்லாத்தையும் விட நானும் அவளும்தான் கூட பிறந்தவங்க மாதிரி வளர்ந்தோம். அந்த பாசம் என்கிட்ட எப்பவும் இருக்கும். அதனால் என் தங்கச்சியை பார்க்க வரலாமா...? என்று அவன் கைகளை பிடித்துக்கொண்டு கண்ணீரோடு கேட்க...

“உங்களுக்கு இல்லாத உரிமையா...? தாராளமா வாங்க... அவ இங்கே வந்து இத்தனை நாள்ல நான் இன்னைக்கு தான் அவ முகத்துல முழு மலர்ச்சியை பார்த்து இருக்கேன். உங்ககிட்ட மட்டும் தான் அவ இயல்பாய் இருக்கா. அதுக்காகவாவது நீங்க அடிக்கடி வரணும்...!”

“ரொம்ப நன்றி...”

“நன்றி எல்லாம் எதுக்கு மச்சான். என்ன, உங்க அண்ணன் தங்கச்சி கூட்டணில என்னையும் கொஞ்சம் சேர்த்து கிட்டா நல்லா இருக்கும். ஆனா அவ மனசுல எனக்கு இடம் தருவாளான்னு எனக்கு சந்தேகமா இருக்கு…!” என்று ஒரு மாதிரி குரலில் சொன்னவனை பார்த்து…

“கட்டாயம் நடக்கும் மாப்பிள்ளை. ஒரு ஆணா எனக்கு உங்க மனசுல உள்ள ஏக்கம் புரியுது. ஆனால் அது உங்க ரெண்டு பேருக்கும் இடையில உள்ள விஷயம். உங்க மேல அவளுக்கு ஒரு பிடிப்பு உண்டாகி வாழ்க்கையை நீங்க ரெண்டு பேரும் சந்தோஷமா வாழ்வீங்க…

“ஆனா ஒண்ணு மட்டும் சொல்றேன். அவளுக்கு உங்க மேல ஒரு பிடிப்பும், நம்பிக்கையும் வந்துடுச்சுன்னா, அப்புறம் அவ உங்ககிட்ட எடுத்துக்கிற உரிமை இருக்கே, அதை நீங்க தாங்க மாட்டீங்க…

எல்லாமே அவளுக்குத் தான் முதல்ல நீங்க செய்யணும்னு எதிர்பார்ப்பா. அதை மட்டும் புரிந்து வச்சுக்கோங்க. ஏன்னா நிறைய தடவை நான் அதுல பல்பு வாங்கி இருக்கேன். அடி கூட வாங்கி இருக்கேன்…” என்று சொல்லி சோகமாக முகத்தை வைத்துக் கொண்டான்.

"ஹா ஹா ஹா..." என்று உபேந்திரா சிரித்த சத்தத்தைக் கேட்டு ரங்கா திரும்பிப் பார்த்தாள். ஆறடி உயரத்திற்கு மேலாக, கட்டான உடல் அமைப்புடன், பார்த்த பெண்கள் அனைவரும் திரும்பி ஒரு முறை பார்க்க வைக்கும் கவர்ச்சிகரமான தோற்றத்துடன் நின்று சிரித்துக் கொண்டிருந்த அவனின் சிரிப்பு நெஞ்சை அள்ளியது.

முதல் முறையாக உபேந்திராவை அவள் நிறுத்தி நிதானமாக பார்த்தாள். தற்போதைய நவநாகரிக யுவதிகள் விரும்பும் கவர்ச்சிகரமான தோற்றமும், அவனது நடை, உடை பாவனைகளும் மேல்தட்டு நாகரீக இளைஞனை அப்படியே பிரதிபலிக்க, கம்பீரமாக இருந்தான் உபேந்திரா.

அவள் பார்த்துக் கொண்டிருக்கும் போதே, அந்த சைடு வந்த கல்லூரி பெண்களின் கூட்டம் ஒன்று அவர்களை பார்த்ததும் சற்றே தங்கள் நடையை மெதுவாக்கி, தங்களுக்குள் கிசுகிசுத்த வண்ணம் சென்றனர்.

"ஏய் அங்க நிக்கிற ரெண்டு கைஸ் நல்லா இருக்காங் கல்ல...!"

“அதுலயும் ஹைட்டா இருக்கிறவன் அப்படியே ஹீரோ கணக்கா அள்ராண்டி...!” என்று இன்னொருத்தி சொல்ல...

“நாம எல்லாம் சைட் தாண்டி அடிக்க முடியும். யார் யாருக்கு கொடுத்து வச்சிருக்கோ…” என்று இன்னொருத்தி பெருமூச்சு விட, “ஹலோ கேர்ள்ஸ்…” என்று கைதட்டி அவர்களை கூப்பிட்டாள்…

அவளுடைய குரலில் அந்தப் பெண்கள் மட்டுமல்லாது வாசுவும், உபேந்திராவும் கூட திரும்பிப் பார்த்தனர்…

“எங்களையா மேடம் கூபிட்டீங்க…?”

“ஆமா உங்கள தான், இங்க வாங்க…?” என்றவள் “எந்த காலேஜ்…?” என்று அவர்கள் கல்லூரி பற்றி விசாரித்தாள்.

“லா காலேஜ் ஸ்டூடண்ட்ஸ் மேடம்…!”

“அப்படியா ரொம்ப வசதியா போச்சு…” என்று அவள் சொல்லவும்,

“எதுக்கு மேடம்…?”

“இல்ல இப்ப கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி, பேசிட்டு இருந்தீங்கல்ல, அவங்களை உங்களுக்கு இன்ட்ரட்யூஸ் பண்றேன்…” என்று கூறி, உபேந்திரா பக்கம் வந்து, “மீட் மிஸ்டர் உபேந்திரா அன்ட் வாசு… இவர் ஐகோர்ட் வக்கீல், அவர் பிசினஸ் மேன்…” என்று அறிமுகப்படுத்தவும், அந்தப் பெண்கள், “ஹாய்ர்ரே…” என்றனர்…

“சார், நாங்கல்லாம் லா காலேஜ் ஸ்டூடண்ட்ஸ். முடிச்சிட்டு வந்தா உங்க கிட்ட ஜூனியராக ஜாயின் பண்ணிக்கலாமா சார்...!” என்று ஆளாளுக்கு கேட்க...

“ வெயிட் வெயிட்... நீங்க எல்லாம் எந்த வருஷம்...?”

“நாங்க பைனல் இயர் ஸ்டூடன்ட் தான் சார். உங்கள மாதிரி ஒரு பேமஸ் லாயர் கிட்ட ஜூனியரா சேரணும்னு எங்களுக்கு ரொம்ப ஆசை சார்...” என்று கோரசாக சொல்ல...

“பார்க்கலாம். அல்ரெடி என்கிட்ட நிறைய ஜூனியர் இருக்காங்க. நீங்க முடிச்சிட்டு வாங்க. முதல்ல உங்களோட பெர்பாமர்ன்ஸ் பார்த்துட்டு முடிவு பண்ணலாம். இல்லைனாலும் வேற நிறைய பேர் இருக்காங்க, மேடம் கூட ஒரு வக்கீல்தான்...” என்று அவளை மாட்டி விட்டான்...

“அப்படியா, அவங்க சொல்லவே இல்ல. உங்களைத்தான் வக்கீல்னு எங்கிட்ட சொன்னாங்க. ஆமா சார், மேடம் உங்களுக்கு என்ன வேணும்...?”

“என்னோட மிஸ்ர்ஸ்...” என்று அவன் சொன்னதும், அவர்கள் அத்தனை பேர் முகத்திலும் அசடு வழிந்தது...

பார்த்துக் கொண்டிருந்த ரங்காவின் முகத்தில் புன்முறுவல் தவழ, “என்னக்கா…?” என்றாள் கீர்த்தி.

“ஒன்றுமில்லை வா…” என்று அவளையும் அழைத்து, “ இது அவர் மிசர்ஸ். பசங்களும் எங்க ரெண்டு பேரோடதுதான்…” என்று சொல்ல, அந்தப் பெண்களும் “ஹோ…”ன்று சிரித்தனர்.

“மேம். நீங்க சரியான ஆளு… உங்க வீட்டுக்காரரை சைட் அடிச்சோம்னு தானே, நீங்க எங்கள அவங்க கிட்ட மாட்டி விட்டீங்க…” ஒரு துடுக்கான பெண் கேட்க…

“அப்படி எதுவும் இல்லை. நீங்க போட்ட கடலையே நான் கொஞ்சம் வறுத்து கொடுத்தேன் அவ்வளவுதான்…!” என்றாள்.

“கேட்ட அத்தனை பெண்களும், மீண்டும் சிரித்துவிட்டு அவளிடம் கைகுலுக்கிவிட்டு, அவளது நம்பரை வாங்கிக் கொண்டே சென்றனர். இவள் இப்படி கூட பேசுவாளா? என்று உபேந்திராவும், வாசுவும் வாயை பிளந்து கொண்டு நின்று பார்த்துக் கொண்டிருந்தனர்…

“வாங்க போகலாம்…” என்று கீர்த்தியும், ரங்காவும் நடந்துவிட, வாசுவும் அவனும் அங்கேயே நின்றனர்… குழந்தைகள் “அப்பா” என்று அழைத்த பின்னரே இருவரும் தன்னுணர்வுக்கு வந்து நடக்க ஆரம்பித்தனர்…

“என்ன மச்சான் நடக்குது இங்க...? உங்க தங்கச்சி தானா...?”

“அதானே...! நானே அவதானான்னு அதிசயமாக பாத்துட்டு இருக்கேன். நீங்க வேற...!” என்று சொல்லிக்கொண்டே வாசுவும் வந்தான். எல்லோரும் ஹோட்டலுக்கு சென்று சாப்பிட்டுவிட்டு அவரவர் வீடு திரும்பினர்.

குழந்தைகள் வரும் பொழுதே தூங்கிவிட, அவர்களை ஆளுக்கு ஒருவராக தூக்கிக்கொண்டு வந்து படுக்கையில் படுக்க வைத்தாள். தனது அறைக்கு சென்று உடை மாற்றிவிட்டு படுக்க வந்தவளிடம், “ஆமா எனக்கு ஒரு சந்தேகம். இங்க வா...” என்று பால்கனிக்கு அவளை அழைத்து வந்தான்...

“என்ன விஷயம் அங்கேயே சொல்லவேண்டியதுதானே...?”

“சப்தம் கேட்டால் குழந்தைங்க முளிச்சுடுவாங்க. ஆமா இன்னைக்கு எதுக்கு திடீர்னு அந்த பொண்ணுங்களை எனக்கு இன்ட்ரட்யூஸ் பண்ணி விட்டே...?”

“சும்மாதான். அவங்க உங்க ரெண்டு பேரையும் சைட் அடிச்சிட்டு, சூப்பர் கைஸ் அப்படின்னு சொல்லிட்டு போனாங்க. சரிதான் கூடக் கொஞ்சம் என்ஜாய் பண்ணட்டுமேன்னு கோத்து விட்டேன்...!”

“அது மட்டும்தானா அல்லது வேற எதுவும் இருக்கா…?”

“வேற எதுவும் இல்லையே…!” என்று சொல்லிவிட்டு அவள் உள்ளே திரும்பப் போக, வழியை மறித்தவன், சுவரில் இரு பக்கமும் கைகளை ஊன்றி அவள் நகரவிடாமல் சிறை செய்தான்…

“இப்ப எதுக்கு இந்த போஸ்…?”

“நீ நகராமல் இருக்கதான். நீதானே சொல்லி இருக்கே, என்னை தொடக்கூடாதுன்னு. உண்மைய சொல்லு, அவங்க என்ன சைட் அடிச்சாங்கன்னு உனக்கு பொறாமை தானே…? என்று கேட்டவனின் கண்கள் குறும்பாய் சிரிக்க, உதடுகள் புன்னகையில் விரிய, அவளுடைய பதிலுக்காக ஆவலுடன் காத்து நின்றான்.

“அதெல்லாம் இல்லை…!” என்று தலையாட்டி மறுத்தவளின் கண்கள் பொய் சொல்லுவதையும், கன்னங்கள் செம்மையுறுவதையும், கண்டவனின் விழிகளில் ரகசிய சிரிப்பு உதயமாயிற்று…

‘ஐயோ இவன் நம்மை கண்டு கொண்டானே’ என்ற நினைவில் கன்னங்கள் மேலும் சிவக்க, அதை தடுக்கும் முயற்சியாக கால்களை அழுந்த ஊன்றி நின்றாள். அந்தப் பெண்கள் சைட் அடித்ததும், யாருக்கு கொடுத்து வைத்திருக்கிறதோ என்று கேட்டதும் அவள் காதில் விழ,

என்னோட ஹப்பிதான் என்று சொல்லும் எண்ணத்திலேயே அவள் அவனை அறிமுகப்படுத்தி வைத்தது. மனதின் ஒரு ஓரத்தில் தோன்றிய ரகசிய விதையை தோண்டி எடுத்த அவனது புத்திசாலித்தனத்தின் மேல், அவளுக்கு கோபம் வந்தது…

‘ஆனாலும் இவன் இவ்வளவு கெட்டிக்காரனா இருக்க வேண்டாம்…’ மீண்டும் அவள் மனதில் ஓடிய எண்ணத்தை படித்து, “உன்னோட சர்டிபிகேட்டுக்கு நன்றி…” என்று சொல்லி அவன் வழி விட, விட்டால் போதும் என்று உள்ளே ஓடி விட்டாள்…

அவள் சென்றதும் அவனும் சிரித்துக் கொண்டே பின்னாடியே வந்து பார்த்தியின் பக்கத்தில் படுத்து விட்டான். எப்போதுமே படுத்தவுடன் தூங்கிவிடும் பழக்கமுள்ள ரங்காவிற்கு இப்போது சிறிது நாட்களாக தூக்கம் உடனே வருவேனா என்றது. அதுவும் இன்று உபேந்திராவின் சிரிப்பும் பேச்சும், அவனுடைய ரகசிய பார்வையும் அவளுக்குள் பதுக்கி வைத்து இருந்த உணர்வுகளை தட்டி எழுப்ப, தூக்கம் வராமல் தவித்தாள்…

பாவனாவின் பக்கம் திரும்பி ஒருக்களித்து படுத்து அவளை அணைத்தார் போல் கையை வைத்துக் கொண்டு தூங்குவது வழக்கம். இல்லையெனில் பாவனா அவளை வலுக்கட்டாயமாக தன் பக்கம் திருப்பும். இன்றும் அது போல் படுத்து இருந்தாலும்

தூக்கம் வராமல் கண்களை விழித்துப் பார்க்க, அவனும் பார்த்தியை அணைத்துக் கொண்டு, அவளைப் பார்த்து படுத்து இருந்தான். கண்கள் மூடி இருக்க அவன் தூங்குகிறானா, இல்லையா என்று அவளுக்கு தெரியவில்லை...

ஆனால் நைட் லாம்பின் வெளிச்சத்தில், மெல்லிய வரிவடிவமாக அவனது உருவம் தெரிய, கலைந்து நெற்றியில் புரண்ட சிகையும், வில் போன்ற நீண்ட புருவங்களும், நேரான நாசியும், அழுத்தமான உதடுகளும் அதற்குமேல் அடர்த்தியான மீசையும், அவளைக் கவர்ந்து இழுத்தது...

எப்போதும் போல் இல்லாமல் இன்று அவன் முகம் சிரிப்பில் மலர்ந்திருக்க, அதை பருகி கொண்டிருந்தவள், தற்செயலாக அவன் அசையவும் படக்கென்று கண்களை மூடி கொண்டாள்.

உண்மையில் உபேந்திராவும் தூங்கி இருக்கவில்லை... ரங்காவின் சிறிதளவு மாற்றமே, அவனுக்கு மிகப் பெரிய சந்தோஷத்தைக் கொடுக்க, அவளை நினைத்துக் கொண்டே கண்களை சும்மா மூடி படுத்திருந்தான்...

டெல்லியில் இருக்கும் போது அவனது வாழ்க்கை முறையை வேறு. பேரன் ஒரேடியாக கெட்டுவிடக் கூடாது என்று நினைத்து சேதுராம் தன்னை காரணம் காட்டி சென்னைக்கு அவனை இழுத்துக் கொண்டார்...

இங்கு வந்த பின்பும் தேவையில்லாமல் அவன் வெளியில் தங்குவதையும் நேரம் கழித்து வருவதையோ தான் விரும்பவில்லை என்பது நாசுக்காக தெரிவிக்க, உபேந்திரா அவருக்காக தன்னை கொஞ்சம் மாற்றிக் கொண்டான்…

பார்ட்டிகளுக்கு சென்றாலும் சரி, எப்போதுமே அவனுக்கு ட்ரிங்க்ஸ் அருந்தும் பழக்கம் கிடையாது. அவன் மேல் வந்து விழும் பெண்களிடம் சற்று தாராளமாக பழகுவான் அதோடு சரி.

அதுவும் இப்பொழுது தன்னுடைய குழந்தைகளை கண்ட பின்பு, அவனுக்கு தானும் ஒரு குடும்பமாக வாழ வேண்டும் என்ற ஆசை மேலோங்கி இருந்தது…

குழந்தைகளை காரணம் காட்டி அவளை மணமுடித்தாலும் கொஞ்ச நாட்களிலேயே தன்னை அறியாது தன் குழந்தைகளின் தாய் என்ற என்ற எண்ணமோ அல்லது என்ன இருந்தாலும் நம் நாட்டின் பண்பாடு அவன் மனதில் மிச்சமிருந்ததாலோ, அல்லது தாலி கட்டி அதனால் வந்த உரிமையினாலோ ஏதோ ஒன்று, அவனுக்கு ரங்காவை பிடித்துப் போயிற்று…

தாம்பத்திய வாழ்வு வாழாமலே, இரண்டு குழந்தைகளுக்கு தந்தையான விந்தையை அடிக்கடி நினைத்து தனக்குள் சிரித்துக் கொண்டாலும், தனது மனைவியை முதன் முதலில் அறிந்து கொள்ளும் ஆர்வம் மேலோங்க, இயற்கையாக அந்தந்த வயதில்

ஏற்படக்கூடிய உணர்வுகளும், அவனுக்கு அவனது தேவையை நினைவுபடுத்த, அவன் ரங்காவின் மனமாற்றத்தை ஆவலோடு எதிர் பார்க்கலானான்…

ஆனால் ரங்காவின் நிலையே வேறு. எல்லோரையும் போல அவளுக்கு பெற்றவர்கள் நிழலில், அவர்களின் அரவணைப்பில், அன்பில் வளர்ந்து இருந்தால், கவலைகளும் பொறுப்பு மற்ற பருவத்தை அவளும் ரசித்திருந்தால், அவளுக்கும் மனதிற்குள் தனது வாழ்க்கையை பற்றிய, ரகசிய கனவுகள் எழுந்திருக்கும்…

ஆனால் சூழ்நிலை அவர்களுக்கு பொறுப்பையும் கவலையும் சிறுவயதிலேயே கொடுத்துவிட, அதனால் தன்னுடைய கனவுகளையும் கற்பனைகளையும் வளரவிடாமல் எண்ணங்களை திசை திருப்பியதன் விளைவு, அவ்ளுடைய உணர்வுகள் இறுகிப் போய் இருந்தன…

அதை இளக்கி உருகச் செய்யும் சக்தி அவளை சந்தித்த எந்த வாலிபனுக்கும் இல்லை, என்பது அவளது துரதிர்ஷ்டமா, அல்லது அதிர்ஷ்டமா என்பது தெரியவில்லை…

எதிர்பாராத விதமான கல்யாணமும், அதனால் ஏற்பட்ட உபேந்திராவின் அருகாமையும், அவனது குணமும், பாறையாய் இருகிப் போயிருந்த அவளது மனதில், அன்பு எனும் விதை, அவளறியாமலே விதைக்கப்பட்டு விட்டது…

அது செடியாக முளைத்து, மலர்களை சொரியும் போது தான், அவள் மனதிலும் காதல் பூ பூக்கும். இதை புரிந்து கொண்ட உபேந்திரா, அவளது லேசான மாற்றத்தை கூட விரும்பி வரவேற்றான்...

நாட்கள் விரைவாக செல்ல ஆரம்பிக்க, அலுவலகத்தில் ரங்காவின் கவனிப்பில் உபேந்திராவுக்கு அதிக அளவு வேலைகள் இல்லை. அவருடைய அலுவலகத்தில் எந்த கேஸ் வந்தாலும் அதற்குரிய வேலைகளை பரிபூரணமாக அவள் செய்து வைத்துவிடுவாள். மற்றவர்களுக்கு கொடுக்கும் வேலைகளையும் மேற்பார்வை செய்து விடுவதால், உபேந்திராவுக்கு நன்றாகவே நேரம் கிடைத்தது...

அதனால் அவன் மருத்துவமனையை விரிவுபடுத்தும் திட்டத்தின் பொருட்டு அங்கு சென்று அதனுடைய வேலைகளை அவ்வப்போது கவனிக்க ஆரம்பித்தான். அப்படி ஒரு நாள் சென்று இருக்கும்போது, தாராவும் சரவணனும், தங்கள் குழந்தையை வைத்துக்கொண்டு கவலையோடு அங்கு அமர்ந்து இருந்தனர்...

குழந்தைக்கு திடீரென்று காய்ச்சல், லூஸ் மோஷன். வழக்கமாக காட்டும் டாக்டரிடமே காட்ட, தமிழ் மருந்துகள் கொடுத்தார். ஆனால் கொஞ்ச நாள் நிற்கும், திரும்பியும்

ஆரம்பித்துவிடும். இது அடிக்கடி நிகழவே ஸ்பெஷலிஸ்ட் யாரிடம் காட்டலாம் என்று கேட்டதற்கு அந்த மருத்துவமனையில் உள்ள குழந்தைகள் டாக்டரை அவர் அறிவுறுத்தி இருந்தார்...

அவரிடம் காட்ட அவர்கள் இருவரும் வந்து இருந்தனர். டாக்டரை பார்க்க இன்னும் அரைமணி நேரம் இருக்க அப்பொழுது உபேந்திரா மருத்துவமனைக்குள் வந்தான். செல்போனில் பேசிக் கொண்டே வந்தவன், இவர்களை கவனிக்கவில்லை.

கவனித்தாலும் சரவணனை மட்டுமே அவன் ஒரு முறை பார்த்து இருக்கிறான். தாராவை பார்த்ததே இல்லை... அதனால் இவனுக்கு அவர்களை தெரியாது. ஆனால் சரவணனுக்கு நன்றாக நினைவு இருந்தது...

அவர்களை கிராஸ் பண்ணி அவன் சென்றவுடன், தாராவிடம், "இவர்தான் மிஸ்டர் உபேந்திரா. கிரிமினல் லாயர்.

"அப்படின்னா அவர் எதுக்கு இங்க வந்து இருக்கிறார்...? உங்களுக்கு அவரை தெரியுமா.?"

ஒரு தடவை ரங்கபாஷ்யம் சார் அறிமுகப்படுத்தி வச்சார்... நான் வக்கீல் அப்படிங்கறதுனால ஒருவேளை அவருக்கு ஞாபகம் இருக்கலாம்...

"இங்கே எதுக்கு வந்திருக்கிறார்...?"

"எனக்கும் தெரியல...!" என்றவன் அருகே கவுண்டரில் இருந்த நர்சிடம் கேட்க,

அவன் "இந்த ஆஸ்பிடல் ஓனரே அவர்தான்..." என்றாள்.

அதை அவன் தாராவிடம் வந்து சொல்லவும், "அப்படியா இவ்ளோ பெரிய ஹாஸ்பிடல் வைத்திருக்கிறவர் அப்புறம் எதுக்கு வக்கீலா இருக்காரு?"

"அந்தத் தொழில் அவருக்கு பிடித்து இருக்கலாம். ஒரு விஷயம் தெரியுமா...?" என்று அவன் கேட்க...

"என்ன விஷயம்...?"

"இவர் தான் உங்க அக்கா ரங்காவோட ஹஸ்பண்ட் என்றான். அதைக் கேட்ட தாராவுக்கு மிக அதிர்ச்சியாக இருந்தது...

“என்ன சொல்றீங்க? இவரா சின்ன வயசா இருக்காரு...? என்றாள் பொறாமையுடன்.

“உங்க அக்காவுக்கு என்ன தொண்டு கிழவி வயசா ஆயிடுச்சு...? உன்னைவிட இரண்டு வயசு பெரியவ அவ்வளவுதானே?” என்று சரவணன், சற்று கடுப்புடன் சொல்ல...

"உங்களுக்கு எதுக்கு அவ மேல இவ்வளவு கரிசனம்...?" என்று தன் குறுக்கு புத்தியை அவனிடம் காட்டினாள்...

"ஏய் உங்க அக்கா தங்கம்டி. ஆனா அத புரிஞ்சிக்க உனக்கும் உங்க வீட்டு ஆட்களுக்கும் மனசில்ல. அவங்களை புரிஞ்சுகிட்டது, பாட்டியும் வாசுவும் தான்...

ஆனால் ஆண்டவன் அவங்க நல்ல மனசுக்கு நல்ல குழந்தைகளையும் நல்ல வாழ்க்கையும் கொடுத்து இருக்கான்...” என்று மனதார வாழ்த்தினான்...

“ம்ம்கூம், உங்களுக்கு எப்பவும் அவன்னா உசத்திதான்..." என்று தாரா பொரும...

“நான் உன்னை கல்யாணம் பண்றதுக்கு முன்னாடியே அவங்களோட ஆபீஸ்ல சேர்ந்து ஒர்க் பண்ணியிருக்கேன்... இன்னும் சொல்லப் போனா உன்னையும் அதே மாதிரி நல்ல குணமா இருப்பேன்னு நினைச்சு தான் நான் உன்னை கல்யாணம் பண்ணினேன். சத்தியமா நீ இப்படி இருப்பேன்னு நான் நினைக்கவே இல்லை..." என்று அது நாள் வரை தன் மனதில் மறைத்து வைத்திருந்த ஆதங்கத்தை கொட்டி விட்டான்.

அதற்குள் அவர்கள் முறை வந்துவிடவே, இருவரும் டாக்டரிடம் சென்றனர். அவர் நிறைய மருத்துவச் சோதனைகள்

எழுதிக் கொடுத்து இது எல்லாம் பார்த்துட்டு வாங்க. கடைசில தான் முடிவு சொல்லலாம்" என்று அவர்களை அனுப்பி விட்டார்...

அத்தனை டெஸ்டும் அந்த ஹாஸ்பிடலிலேயே எடுத்தனர். ரிசல்ட் இரண்டு நாள் கழித்து தான் கிடைக்கும் என்று சொல்லிவிடவே இரண்டு நாள் கழித்து குழந்தையை எடுத்துக் கொண்டு அங்கு வந்தனர்...

இவர்கள் சைல்ட் ஸ்பெஷலிஸ்ட் டாக்டர் அறையில் முன்னர் இருந்த சேரில் குழந்தையை வைத்துக் கொண்டு காத்திருக்க, தற்செயலாக அன்று உபேந்திராவுடன் ரங்காவும் ஹாஸ்பிடலுக்கு வந்தாள்.

மதியம் சாப்பிட்டு முடித்ததும், "ரங்கா இன்னைக்கு கொஞ்சம் சீக்கிரம் கிளம்பு, ஹாஸ்பிடல் போயிட்டு அப்புறம் ஸ்கூல்ல போய் பிள்ளைகளை கூப்பிடலாம்...?" என்று உபேந்திரா சொல்ல இருவரும் கிளம்பினர்.

ஹாஸ்பிடலுக்கு வந்து நேராக எம்டிக்கு என்று ஒதுக்கப்பட்ட அறைக்கு இருவரும் வந்துவிட்டனர். உபேந்திரா ஹாஸ்பிடலின் பொறுப்பாளரை அழைத்து என்ன வேலை நடக்கிறது, என்பதைப் பற்றி பேசிக் கொண்டிருக்க, சும்மா உட்கார்ந்து இருந்த ரங்கா அங்கிருந்த சிசிடிவி கேமராவில் தெரிந்த காட்சிகளைப் பார்த்துக்கொண்டே இருந்தாள்.

அப்போது குழந்தைகள் பிரிவு டாக்டரின் முன்னால் சரவணனும், தாராவும் அமர்ந்திருப்பது தெரிந்தது. திரும்பவும் நன்கு உற்றுப் பார்க்க அவர்கள் தான் என்று உறுதியாகத் தெரிந்ததும், மெல்ல எழுந்துவெளியில் வந்தாள்.

சைல்ட் ஸ்பெஷலிஸ்ட் டாக்டர் இருக்கும் அறைக்கு பக்கத்திற்கு சென்று, ஓரமாக நின்று அவர்களை கவனித்தாள்...

அப்போது அவர்கள் டாக்டரிடம் செல்லும் முறை வரவே, தாராவும் சரவணனும் உள்ளே சென்று விட்டனர். அங்கு இருந்த நர்சிடம் என்ன பிரச்சனை என்று கேட்க, அவள் தெரியவில்லை என்று சொன்னாள்.

"அவங்க வெளியில் வந்ததும், உள்ளே இருக்க நர்சுக்கிட்ட என்ன பிரச்சனைன்னு கேட்டு என்கிட்டே வந்து சொல்லு..." என்று சொல்லிவிட்டு தங்களது அறைக்கு திரும்பினாள்.

அரைமணி நேரத்தில் அந்த நர்ஸ் பிரச்சனையை தெரிந்து கொண்டு அவர்களது அறைக்கு வந்தாள்.

“எக்ஸ்க்யூஸ் மீ மேடம்” என்று எட்டிப் பார்த்தவள் இடம், ‘நானே வரேன் இரு’ என்று சைகை காட்டி ரங்கா வெளியில் எழுந்து சென்றாள்...

"மேடம் குழந்தைக்கு வயிற்றில் ஏதோ ப்ராப்ளம். அது ஆபரேஷன் பண்ணணும் சொல்றாங்க போல இருக்கு... கொஞ்சம் நிறைய செலவாகும்..."

"நிறையன்னா...!"

"ஒரு ரெண்டு, மூணு லட்சம்..."

"ஓஹ்..." என்றவன் "ரொம்ப தேங்க்ஸ் நீங்க போங்க...!" என்று அவளை அனுப்பி வைத்துவிட்டு உள்ளே வந்தாள்.

அதற்குள் உபேந்திராவின் வேலை முடிந்து இருக்க, "போலாமா நேரமாச்சு ஸ்கூலுக்கு போகணும்...?" என்று அவன் அவசரப்பட, இருவரும் கிளம்பினர்

# அத்தியாயம் 15

காரில் ஏதோ யோசனையாக வந்த ரங்காவை பார்த்த உபேந்திரா, "என்ன யோசனை பலமா இருக்கு…?" என்று கேட்க…

"ஒண்ணும் இல்ல…" என்றவள் ஸ்கூல் வந்துவிட, குழந்தைகளை கூப்பிட மவுனமாக இறங்கி சென்றாள்… வரும்போதே, "அம்மா எங்க ஃப்ரெண்ட்ஸ் எல்லாம் லீவுக்கு வெளியூர் போறாங்களாம். நாங்களும் போகணும்…"

"இப்ப என்ன லீவு வருது…?"

"நெக்ஸ்ட் வீக் மூணு நாள் தொடர்ந்து லீவு வருது…"

"அப்படியா" என்றவள் அவளுக்கு இருந்த மனநிலையில் எந்த பதிலும் சொல்லவில்லை…

ஆனால் காரில் ஏறியதும் குழந்தைகள் அப்பாவிடம் சொல்லி விட்டனர். "ஓகே எங்க போகலாம்னு உங்க அம்மா கிட்ட கேட்டு ப்ளான் பண்ணுங்க போகலாம்…!" என்று அவன் சுலபமாக சொல்லி விட, குழந்தைகளை கையில் பிடிக்க முடியவில்லை…

அப்பாவும் பிள்ளைகளும் மாறி, மாறி ஒவ்வொரு ஊராகச் சொல்லி பேசிக்கொண்டிருக்க எந்த கவனமும் இல்லாமல் 'எப்படி

சரவணன் குழந்தைக்கு உதவுவது' என்று யோசித்துக்கொண்டிருந்தாள்...

வீட்டுக்கு வந்ததும் உடைமாற்றும் போது, "அம்மா, நாங்க எல்லாம், கொச்சி ஒண்டர்லா போயிட்டு வரலாம்னு ப்ளான் பண்ணி இருக்கோம்." பெரிய மனிதன் தோரணையில் பார்த்தி பேச...

"போயிட்டு வாங்க" என்றாள் பொதுவாக

"ஏம்மா நீங்க வரலையா.?"

"என்னை எங்க கூப்பிட்டீங்க.? அப்பாவும் பிள்ளைகளும் தானே பிளான் பண்ணி இருக்கீங்க..." என்று சொல்ல,

"நீங்களும் வாங்கம்மா..." என்று அழ ஆரம்பித்தது பாவனா.

"சரி உனக்காக மட்டும் வரேன்..." என்றவள் ஓரக்கண்ணால் மகனையும் உபேந்திராவையும் பார்த்தாள்...

அவள் பேசுவதைக் கேட்டுக் கொண்டே இருந்த உபேந்திரா, "ஏண்டா உங்க அம்மா கிட்ட தா னே நீ முதல்ல எங்க போலாம்னு கேட்டே?"

"ஆமாப்பா..."

“அப்போ ஏதோ கோட்டையை பிடிக்கிற யோசனையில் இருந்துட்டு இப்ப என்னன்னு கேளு, உங்க அம்மாகிட்ட...?”

“அதெல்லாம் நான் சொல்லிட்டாலும், கடைசில நீங்க என்ன நெனச்சு இருக்கீங்களோ அங்க தான் போவீங்க... அதுக்கு எதுக்கு என்கிட்ட கேட்டுட்டு, இப்ப என்ன நானும் வரணும் அவ்வளவுதானே வரேன்...” என்று இருக்கிற எரிச்சலில் சலிப்பாக சொல்லிவிட்டு கீழே இறங்கி சென்றாள்.

பாட்டியின் அறைக்கு சென்று, "பாட்டி எனக்கு உங்க கிட்ட ஒரு விஷயம் பேசணும்...!"

"என்ன ரங்கா...?"

“நான் இன்னைக்கு ஹாஸ்பிட்டல்ல தாராவையும், சரவணனையும் பார்த்தேன். குழந்தைக்கு ஏதோ உடம்பு சரியில்லை போல காட்ட வந்திருந்தாங்க...”

“நீ பேசுனியா...”

“இல்ல பாட்டி... அவங்க என்னை பார்க்கல. அதனால நான் போய் பேசல, ரெண்டு மூணு லட்சம் செலவாகும்னு நர்ஸ் சொன்னா...”

“அவ்வளவு பணத்துக்கு எங்கே போவாள்...?”

“அதுதான் எனக்கும் கவலையா இருக்கு...!”

“பாட்டி நம்மகிட்ட ஏதாவது ரூபாய் இருக்கா...!”

“இல்லையம்மா. கொஞ்சம் ரூபாய் இருந்தது. பிஸினஸ் டெவலப் பண்ண வாசு ரொம்ப கஷ்டப்பட்டு இருந்தான். அவன் கிட்ட கொடுத்திட்டேன்...”

"என்னோட சேவிங்க்ஸ் அக்கவுன்ட்ல ஒரு ஐம்பதாயிரம் ரூபாய் இருக்கு. ஆனா அது பத்தாது. உங்ககிட்ட கொஞ்சம் நகைகள் இருக்குல்ல...”

“அதெல்லாம் பழைய காலத்து நகைகள். என்னோட நினைவா நான் உனக்கு கொடுக்க வைத்திருக்கிறது. மேலும் அது நிறைய விலையும் போகாது...”

“பரவாயில்லை பாட்டி குடுங்க. இப்போதைக்கு அதை நான் யூஸ் பண்ணிக்கிறேன். அப்புறம் உங்களுக்கு நான் அதைத் திருப்பித் தருகிறேன்...” என்று வாங்கி வைத்துக் கொண்டாள்.

மறுநாள் அலுவலகம் சென்றதும், உபேந்திரா சென்றவுடன் ஒரு ஆட்டோ பிடித்துக் கொண்டு சேட் ஒருவரிடம் அடமானம் வைத்து, பணத்தை பெற்றுக் கொண்டவள் பேங்கிலிருந்து தனது பணத்தையும் எடுத்துக்கொண்டு சரவணனுக்கு ஃபோன் செய்தாள்.

“என்ன ரங்கா எப்படி இருக்க...?”

“நான் இருக்கிறது இருக்கட்டும் குழந்தைக்கு என்ன உடம்புக்கு...?

“அது வந்து...” என்று தயங்கினவனிடம்

“ஏன் என் கிட்ட சொல்லக் கூடாதா...?”

“அப்படி இல்ல ரங்கா. உனக்கு எதுக்கு கஷ்டம், அதனால சொல்லலை...”

“பரவாயில்லை விஷயத்தை சொல்லுங்க...” என்று அவன் விஷயம் முழுவதும் சொன்னதும், “ஆபரேஷனுக்கு ஏற்பாடு பண்ணியாச்சா...?” என்று கேட்டாள்.

“என்ன, பணம் ரெடி பண்ணிட்டு இருக்கேன். அனேகமா அடுத்த வாரம் ஆபரேஷன் பண்ண ஏற்பாடு பண்ணிடுவேன்...”

“சரி, இப்ப நீங்க எங்க இருக்கீங்க...?”

“ஆபீஸ்லதான்...” பாஷ்யம் அலுவலகத்துக்கும் இவர்களது அலுவலகத்துக்கும் இடைவெளி அதிகம் இல்லை என்பதால், அருகில் இருந்த தனக்கு தெரிந்த ஹோட்டல் ஒன்றுக்கு அவனை வர சொன்னாள்.

சரியாக அரை மணி நேரத்தில் சரவணன் அங்கு வந்துவிட, "இந்தாங்க, இதுல ரெண்டு லட்சம் இருக்கு. குழந்தைக்கு முதலில் ஆபரேஷன் பண்ணுங்க…”

“வேண்டாம் ரங்கா. உன் கிட்ட பணம் வாங்கினால் நல்லா இருக்காது…”

“இது என்னோட, பாட்டியோட பணம்தான். தாராளமா வாங்கிக்கோங்க. முதல்ல குழந்தையைப் பாருங்க. நான் உங்களுக்கு செய்ய கடமைப்பட்டவள் தான்…” என்று ரங்கா சொல்ல…

“இல்ல ரங்கா. இந்த பணத்தை வாங்கிக்க எந்த உரிமையும் கிடையாது. என் மனைவி உன்னை பேசிய பேச்சுக்கு இன்னொருத்தின்னா பேசியிருக்கவே மாட்டா. எதையும் மனசுல வச்சுக்காமல் நீ பேசுவதே பெருசு. உங்கிட்ட பணம் வாங்கினால் என் மனசாட்சியே என்னை குத்தும்…”

“சரி. உங்களுக்கு எப்ப திருப்பிக் கொடுக்கணும்னு தோணுதோ, அப்ப திருப்பிக் கொடுங்க…” என்று வலுக்கட்டாயமாக அவன் கையில் பணத்தைத் திணித்து விட்டு கிளம்பினாள்…

மறுநாள் காலையில் அவர்கள் எல்லோரும் கொச்சினுக்கு கிளம்புவதாக இருந்தது. உபேந்திரா வாசு கீர்த்தியையும் அழைத்திருந்தான். அவர்களை அழைத்தது ரங்காவுக்கு தெரியாது.

போகும் வழியில் அவர்களை பிக்கப் பண்ணிக் கொள்ள, குழந்தைகள் "அம்மா வாசு மாமா அத்தை...!" கூக்குரலிட ஒரு நொடி ஆச்சரியமடைந்தாள்... வாசுவையும் கீர்த்தியையும் பார்த்தது அவளுக்கும் உற்சாகமாக இருந்தது.

“ஏய் நீங்க எப்படி...?”

“பாத்தியா டூர் போறோம்ன்னு உடனே நீ என்னை மறந்துட்டே. ஆனா மாப்பிள்ளை என்ன மறக்கல...!” என்று வாசு விளையாட்டாக சொல்ல...

“டேய், நானா டூர் கூட்டிட்டு போறேன். அவங்க போறாங்க. குழந்தைகளுக்கு நான் வேணும். அதனால போறேன்... அப்புறம் எப்படி நான் கூப்பிடறது...? உன் பிரண்டு கிட்ட இப்ப சம்பாத்தியம் இல்லை. ஜீரோ...” என்று கையை சுழற்றி காட்டினாள். அவள் பேசியது கண்டு வாசு வேடிக்கையாக எடுத்துக் கொண்டாலும், உபேந்திராவால் சாதாரணமாக அதை எடுத்துக்கொள்ள முடியவில்லை...

இரண்டு நாளாக ஏதோ ஒரு வித்தியாசம் அவனுக்கு அவளிடம் தெரிந்தது. சற்று நேரத்தில் எல்லோரும் இயல்பாகி விட குழந்தைகள் முதன்முதலில் பிளைட்டில் போகும் உற்சாகத்தில் இருந்தனர்.

அடுத்த இரண்டு மணி நேரத்தில் கொச்சியில் இறங்கி விட்டனர். உபேந்திரா முன்கூட்டியே எல்லா ஏற்பாடும் செய்து வைத்திருந்ததால், அவர்கள் தங்கியிருந்த ஹோட்டலில் இருந்து கார் அவர்களை பிக்கப் பண்ண வந்திருந்தது…

ஹோட்டலுக்கு சென்று குளித்து உடை மாற்றி, கீழே போய் சாப்பிட்டு விட்டு அனைவரும் வொண்டர்லா குழந்தைகள் விளையாட்டு திடலுக்கு கிளம்பினர்…

அதை பார்த்ததுமே, "அம்மா நிறைய கேம்ஸ் இருக்கு. நீயும் எங்க கூட வர்றியா…?" என்று ஆசையாய் கேட்க…

“பார்க்கலாம். பயமா இருக்கும்டா…" என்றாள்.

“அதெல்லாம் பயமாய் இருக்காது. குறிப்பிட்ட கேம் நாம் இல்லாமல் குழந்தைகள் மட்டும் போக முடியாது. நீயும் வா…” என்றான் அழுத்தமாக உபேந்திரா…

அப்பொழுதுதான் அவனை கவனித்தாள். கேம்ஸ் விளையாடுவதற்கு ஏதுவாக வாசு, உபேந்திரா இருவரும் ஷார்ட்ஸ் பனியனில் வந்திருந்தனர்.

மேலே உள்ள ராட்டினம் எல்லாம் முடித்து குழந்தைகள் விளையாடும் குதிரை, ரயில், எல்லா விளையாட்டுக்களும் முடித்து, கடைசியில் வாட்டர் கேம்ஸ் பக்கம் வந்தனர்…

மேலிருந்து சறுக்கி தண்ணிக்குள் விழும் விளையாட்டுகள் விதவிதமான வடிவங்களில் இருக்க, முதலில் குழந்தைகளை வைத்துக்கொண்டு வாசுவும் உபேந்திராவின் சறுக்கி வந்தனர்.

பின்னர் வாசு, கீர்த்தி அழைத்துக் கொண்டு சறுக்க, உபேந்திரா, ரங்காவிடம், “வா நாம போகலாம்…” என்றான்.

அவனுடன் செல்வதற்கு கூச்சமாக இருக்க, “இல்ல, நான் வரலை…” என்று அவனை டீலில் விட்டு கொண்டிருந்தாள்.

வலுக்கட்டாயமாக அவள் கையைப் பிடித்து கரகரவென்று இழுத்து அவன், மேலே ஏறி விட்டான். மற்றவர்கள் முன்னிலையில் மறுக்க முடியாமல் அவனுடன் மேலே ஏறினாள்.

மேலிருந்து அந்த வளைவான சறுக்கை பார்த்ததும் பயம் தொற்றிக்கொள்ள, அவன் கையை இறுக பிடித்தாள். அவனின் பயம் புரிந்து இடையோடு அணைத்துக்கொண்டவன் “ஹேய்

பயப்படாத, நான் இருக்கேன்…" என்று ஆறுதல் சொல்லி சறுக்க ஆரம்பித்தான்.

ஆரம்பித்ததுதான் தெரியும். பனிக்கட்டியில் வழுக்குவது போல் சர், சர்ரென்று வழுக்கிக் கொண்டு செல்ல, கண்களை இறுக மூடிக்கொண்டு, "இந்தர் எனக்கு ரொம்ப பயமா இருக்கு…" என்று கத்தினாள்.

அவன் மேலும் அவள் இடுப்பை இறுக்கி தன்னோடு அழுத்திக்கொண்டு, வழுக்கி நேராக நீருக்குள் விழுந்தான். விழுந்து அவன் எழுந்து நிற்க…

ஆனால் ரங்கா அந்த நீச்சல் குளத்தில் திவங்கி விட்டாள். அவளை எழுப்பியும் பயம் போகாமல், அவனை இறுகப் பிடித்துக் கொண்டே கரையேறியவளைப் பார்த்து, "நான் என்னவோ உன்னை பத்தி, புலியை முறத்தால் விரட்டிய புதுமைப் பெண்ணுன்னு நெனச்சிகிட்டு இருக்கேன். தண்ணிக்கு பயப்படுற…! என்று அவளை சீண்டினான்.

ஆனால் பதில் சொல்லும் மன நிலையில் அவள் இல்லை. உபேந்திராவின் அண்மையும், அவனது அணை ப்பும், அவனது இடையில் அழுந்திய வலிமையான கரங்களும், அவளுக்கு என்னமோ போல் இருக்க, உடலில் மின்சாரம் பாய்ந்தது போல் இருந்தது.

அதுபோக பயத்தில் அவளாகவே அவனது தோளில் சாய்ந்து முகத்தை வேறு பதித்துக் கொள்ள, முதன் முதலாக ஒரு ஆண்மகனின் தேகத்தை அவளது உடல் உணர்ந்தது. மந்திரித்து விட்ட கோழி போல் நின்ற மனைவியை பார்த்து, மனதுக்குள் நகைத்துக் கொண்டவன்...

"இப்ப ஓகேவா ரங்கா...? என்று காதருகில் மென்மையாக வினவினான்... "ம்ம்" என்று முனங்கி கொண்டே அவனை விட்டு சற்றே விலகி நிற்க, உடலோடு ஒட்டிய சுடிதாரில் அவனது கண்களை கவர்ந்தாள், ரங்கா...

"இன்னொரு விளையாட்டு இருக்கு போகலாமா...?"

"ஐயோ வேண்டாம் நான் வரல..."

"இது குகை மாதிரி இருந்தது. அது வெளிப்படையா பெரிய சறுக்கு. நிறைய பெண்டு வரும் சூப்பராயிருக்கும். கீழே நீச்சல் குளம். குழந்தைங்க ஆசைபடுறாங்க போகலாம்..." என்றவன், முதலில் குழந்தைகளை வாசுவுடன் ஏற்றி அனுப்பிவிட்டு, ரங்காவை ஒரு கையில் பிடித்துக் கொண்டு தானும் ஏறினான்.

ஒன்று போல அனைவரும் கத்திக்கொண்டே சறுக்க, ரங்கா மட்டும் உபேந்திராவுடன் அட்டை போல் ஒட்டிக் கொண்டாள்.

நீச்சல் குளத்தில் ரப்பர் டியூபில் எல்லோரும் மிதக்க, ரங்கா பிடிவாதமாக மாட்டேன் என்று கரையேறி விட்டாள்…

உபேந்திராவும் அவளை வா, என்று வற்புறுத்தாமல் குழந்தைகளுக்கு மட்டும், சற்று நேரம் துணையிருந்து விட்டு மேலே ஏறினான்.

மாலை வரை எல்லோரும் நன்றாக ஆடிவிட்டு, ரூமுக்கு திரும்பினர். குழந்தைகளை நல்ல தண்ணீரில் குளிக்க வைத்து வேற ட்ரஸ் அணிவித்து, கீழே போய் சாப்பிட்டு வந்து, படுத்ததும் அலுப்பில் அவர்கள் தூங்கி விட்டனர்.

மறுநாள் சோட்டானிக்கரை கோவிலுக்கு போய்விட்டு அப்படியே பிளைட் ஏறுவதாக பிளான். குழந்தைகளை தட்டிக் கொடுத்துக் கொண்டே இருந்தவள், அவர்கள் தூங்கியதும் தூங்கலாம் என்று அருகில் படுத்தாள்.

ஆனால் உபேந்திராவை காணாமல் எங்கே என்று திரும்பிப் பார்க்க அவன் பால்கனியில் நின்று இருப்பது தெரிந்தது… மெல்ல எழுந்து சென்று,

“தூங்கவில்லையா…? என்று அவனிடம் கேட்க…

“இல்ல. தூக்கம் வரல…” என்றவன் அவளை தனது கூர்மையான பார்வையால் அளவிட்டான். "உனக்கு தூக்கம் வருதா ரங்கா…? என்று அவன் கேட்க…

"இல்லை…! எனும் விதமாக தலையசைத்தாள். அவளை நெருங்கி நின்ற, "ஆமா ஏன் தூக்கம் வரலைன்னு உனக்கு புரியுதா…?" என்று அவளிடம் கேட்க…

வழக்கம்போல அவனது வெற்று மார்பும், கம்பீரமும், அவளை தடுமாற செய்ய, "இதுதான் புருஷன் பொண்டாட்டி க்கு இடையில பாய்கிற மின்சாரம் போல இருக்கு. அதனாலதான் அந்தக் காலத்துல மாப்பிள்ளையும் பொண்ணும் ஒருத்தரை ஒருத்தர் பார்க்காவிட்டாலும், அவர்களைப் பற்றி தெரிந்து கொள்ளா விட்டாலும், இந்த காந்த சக்திதான், அவர்களை இணைக்கும் ஈர்ப்பு சக்தியாக இருந்ததோ…!” என்று தோன்ற, யோசித்துக் கொண்டே நின்றாள்…

"ரங்கா என்ன யோசனை.? இன்னைக்கு நீ என்னை புது பெயர் சொல்லிக் கூப்பிட்டியே அதுவா…?”

“புதுப் பெயரா…! அது என்ன பெயர்…?”

“இந்தர். எனக்கு ரொம்ப பிடிச்சிருந்தது…” என்றவன் அவளது முகத்தில் தனது ஆட்காட்டி விரலால் கோலமிட, அவளது மேனி கூசி சிலிர்ப்பது இருவருக்குமே தெரிந்தது…

அவளுடைய கண்களை நேருக்கு நேராகப் பார்க்க, அதில் அவளுக்காக அவன் எங்கும் ஏக்கமும், தாபமும் தெரிய "இந்தர் எனக்கு ஒரு சந்தேகம்.? உங்களுக்கு என்னை காதலிக்காமலே, எப்படி என்னைப் பிடித்தது…? காதல்னா அது காலேஜ் படிக்கும்போது, அல்லது சின்ன வயசிலேயே வரக்கூடியது. ஆனா நாம ரெண்டு பேருமே அந்த வயசு கடந்து குழந்தைகளும் பிறந்து, அது எப்படி பிறந்தது என்பது கேள்வியில்லை, அம்மா, அப்பா ஆன பிறகு, ஒரு கட்டாயத்திற்காக சேர்ந்திருக்கிறோம். ஒரு ஆணா உங்களுடைய தேவைக்கு, நான் மனைவியா தேவைப்படுகிறேனா…?" என்று வெளிப்படையாக கேட்க…

"காதல், அதுக்கு அர்த்தம் தெரியுமா உனக்கு…? அதுக்கு அர்த்தமே, ஒருத்தர் மேல ஒருத்தர் வைக்குற தீராத நம்பிக்கைதான். அடிப்படை புரிதல் இருக்கும் போது, அந்த நம்பிக்கை வரும். அந்தப் புரிதலும் அன்பும் சேர்ந்து காதலா மாறும்…

காதலிப்பதற்கு வயது ஒரு தடை இல்லை. என்ன காலேஜ் டேஸ்ல காதலிக்கும் போது, அவங்க என்ஜாய்மென்ட்க்காக ஒண்ணு சேர்ந்து சுத்துவாங்க. வெளியில் போவாங்க, வருவாங்க...

அப்ப அவங்களுக்கு எந்த கமிட்மென்ட்டும் இருக்காது. அதனால ஒருத்தருக்கு ஒருத்தர் காத்துக் கிடக்கிறது, கிப்ட் கொடுக்கிறது, கிண்டலடிக்கிறது, எல்லாத்துக்கும் நேரம் இருக்கும்...

அதே அவங்க கணவன் மனைவியா ஆன பின்பு, கமிட்மெண்ட் வந்த பிறகு, அந்த காதல் அப்படியே இருக்கும். ஆனா அதை பரிமாறிக்க நேரம் இருக்காது...

அதே குழந்தைகள் பிறந்த பிறகு, இருவருக்குமே குழந்தைகள்தான் முக்கியமாக இருக்கும். அதுக்கு இடையிலேயும் அந்த காதல் இருக்கும். அந்த அன்பு இருக்கும்...

எனக்கு உன் மேல காதல் இல்லைன்னு யார் சொன்னா...? கட்டாயமாகதான் நான் உன்னை மணந்தேன். ஆனா பிடிக்காமல் கல்யாணம் பண்ணல. அந்த பிடித்தமே இப்போ என்னோட காதலா மாறியிருக்கு..." என்று அவள் கண்களைப் பார்த்து பேசியவன், ஒரு விரல் கொண்டு அவளது முகவாயை உயர்த்தினான்.

காதல்ங்கறது உடம்பு சம்பந்தப்பட்டதே இல்லை ரங்கா, மனசு சம்பந்தப்பட்டது. மனதும், மனதும் இடம் மாறி, ஒருத்தர் மனசுல இன்னொருத்தர் நுழையும் போது, தனக்கு பிடித்தவரின் காதல் கிடைத்ததே சந்தோஷமாக இருக்கும்.

ஆனா அதே காதல் பூரணம் ஆவது, மனதோடு சேர்த்து, நம்முடைய உணர்வுகளும், உடலோடு உடலாக கலக்கும் போது தான். என்றாவது ஒரு நாள் உனக்கும், அது போன்று, என்னிடம் தோன்றும்...," மெல்ல அவளது உச்சந்தலையில் முத்தமிட்டான்.

பின்னர் அவளது நெற்றியில் இதழ் பதித்து, விலகி நின்று "இன்னைக்கு இது போதும், உனக்கும் என்னிடம் இதே மாதிரி தோன்றும்போது, உனக்கே காதல் என்றால் என்ன என்று புரியும். போய் படுத்து தூங்கு..." என்று இதமாக சொல்லி அவளை உள்ளே அனுப்பினான்.

அவன் சொன்னதை யோசித்து கொண்டே படுத்து தூங்கிவிட்டாள். மறுநாள் சோட்டானிக்கரை சென்று அம்மனை தரிசித்துவிட்டு, உடனே சென்னை திரும்பி விட்டனர்.

அடுத்தநாள் அலுவலகம் சென்றதும், உதவியாளர் ஒருவரை அழைத்து, தனி நேம் போர்டு அவளது பெயர் போட்டு, மேலும் பெண்களுக்கான வழக்கறிஞர் என்று அடியில் எழுதச்சொல்லி, வாங்கி வரச் சொன்னாள்.

இரண்டு மணி நேரத்தில் அந்த உதவியாளர், அதே மாதிரி செய்து கொண்டு வந்து தர, அந்த நேம் போடு வாசலில் அவளது உத்தரவின் பேரில் மாட்டப்பட்டது.

அன்று உபேந்திராவுக்கு மதியம் கோர்ட்டில் ஒரு வேலை இருந்ததால், அங்கு சென்றிருந்தான். தற்செயலாக அவனை சந்தித்த சரவணன், “சார்” என்று அழைத்தான்...

ரங்கபாஷ்யம் ஜூனியர் என்பது தெரிந்ததால், "எஸ் நீங்க ரங்கபாஷ்யம் ஜூனியர் தானே,..." என்று கேட்க...

ஆமா சார். அதோட உங்க மனைவியின் தங்கை தாராவின் கணவன்..." என்று சொல்ல, உபேந்திராவின் முகம் மாறியது.

அவனுக்கு அவர்கள் வீட்டில், ரங்காவின் அம்மா, அப்பா வந்து பேசியது நினைவுக்கு வர, அவர்கள் வீட்டு ஆட்களை, அவன் சந்திக்கவே விரும்பவில்லை...

“சொல்லுங்க...” என்று அழுத்தமாக வினவ...

“ரொம்ப தேங்க்ஸ் சார்... சமயத்துல உதவினதுக்கு...!” என்று அவன் சொல்ல, புரியாமல் பார்த்தான்.

“என்ன சொல்றீங்க...?” என்று கேட்டதும்

“அதான் ஆபரேஷன் செலவுக்கு ரெண்டு லட்சம் ரங்கா கொடுத்தாங்களே, அதுக்குத்தான்…”

தனக்குத் தெரியாமல் எதுவோ நடந்திருக்கிறது என்பது புரிய, விஷயத்தை அறிந்து கொள்ளும் பொருட்டு, “ஆமாமா ஆபரேஷன் முடிந்து விட்டதா? ஆமா யாருக்குன்னு சொன்னீங்க?” என்று மறந்து விட்டது போல் கேட்க,

சரவணன் எல்லா விஷயத்தையும் சொல்லிவிட்டான். அந்த ஆஸ்பிட்டல் கூட உங்க ஹாஸ்பிட்டல்னு சொன்னாங்க…" என்று சொல்லி மறுபடியும் நன்றி சொல்லி அவன் விடைபெற்றான்.

‘இவ்வளவு நடந்திருக்கு ஒரு வார்த்தை என் கிட்ட சொன்னாளா? சொன்னா நான் என்ன கொடுக்க வேண்டாம்னா சொல்லப்போறேன்…! கொத்து சாவி அவளிடம் இருப்பதால், வீட்டுப் பணத்தில் இருந்து தான் கொடுத்திருப்பாள்’ என்று தீர்மானமாக நம்பி தன்னிடம் சொல்லவில்லையே, என்ற கோபத்துடன் அலுவலகத்துக்கு வந்தால், அங்கு அவன் கண்ணில் அந்த நேம் போர்ட் பட்டது.

அவ்வளவுதான் உபேந்திராவின் கோபம் தாறுமாறாக பல்ஸ் ரேட்டில் ஏற தொடங்கியது. என்னடா கொஞ்ச நாளா சரியா இருக்காளேன்னு நெனச்சேன். அவ வழக்கம் போல, தனக்கு என்ன தோணுதோ அதை மட்டும்தான் செஞ்சிகிட்டிருக்கா.

மத்தவங்களை மதிப்பதே கிடையாது… மனதிற்குள், அவனை மதிக்கவில்லை என்ற அகங்காரம் கோபமாய் கிளம்ப, கோபத்துடன் வீட்டுக்கு வந்தான்…

வீட்டுக்கு வந்ததும் ஹாலில் இருந்து கொண்டே, "ரங்கா" என்று கோபத்தோடு அழைக்க, ஒரு நாளும் அந்த மாதிரி உபேந்திரா கூப்பிடாததால், ஹாலில் இருந்த பாட்டியும், சேதுராமனும் ஆச்சரியத்தோடு அவனைப் பார்த்தனர்.

எதற்கோ கூப்பிடுகிறான் என்று நினைத்து வந்த ரங்கா, அவன் அங்கு கோபத்துடன் அமர்ந்திருப்பதைப் பார்த்து, ‘என்ன’ என்று கேட்காமல் மௌனமாக நின்றாள்.

எடுத்த எடுப்பிலேயே, "நீ என்னதான் உன் மனசுல நெனச்சிகிட்டு இருக்கே…?" என்று அதிகாரமாய் கேட்க…

எப்பொழுதுமே மற்றவர்கள் முன்னிலையில் பேச்சு வாங்க விரும்பாத ரங்கா, ‘‘என்ன விஷயம்னு தெளிவா சொல்லுங்க இந்த அதற்ற வேலை என்கிட்ட வேண்டாம்…" என்று பதிலுக்கு பேச பாட்டி "ரங்கா கொஞ்சம் அமைதியா இரு…" என்றார்.

"சரவணனுக்கு நீ பணம் கொடுத்தியா…?" என்று மொட்டையாக அவன் கேட்க…

*ஆமாம் கொடுத்தேன் அதுக்கு என்ன இப்ப...?” என்றாள் இவளும் மொட்டையாக...

"என் கிட்ட ஒரு வார்த்தை கேட்க வேண்டாமா...!"

"எதுக்கு கேக்கணும்...? அவரோட கஷ்டம் பார்த்து நான் கொடுத்தேன்..."

“இருக்கட்டும். ஆனால் என்கிட்டே கேக்கணுமா.? வேண்டாமா...?”

‘‘உங்க கிட்ட கேட்டா ஒருவேளை உங்களுக்கு பிடிக்காமல் போகலாம். ஏன்னா, எங்க வீட்டு ஆட்களை உங்களுக்கு பிடிக்க வாய்ப்பு இல்லை. அவங்க செய்தது தப்புதான். ஆனாலும் கஷ்டபப்படும்போது மனசு கேட்கல, அதனால கொடுத்தேன்... ஒருவேளை நீங்க வேண்டாம்னு சொன்னா அதை நான் மீற வேண்டி இருக்கும். அதனால கேட்கல...!"

"அந்த அளவுக்கு மனிதாபிமானம் இல்லாதவங்க நாங்க கிடையாது. ஆனா கொத்துசாவி உன்கிட்ட இருக்கிறது னால இப்படி சொல்லாமல் எடுத்து செலவழித்தால் என்ன அர்த்தம்...?” இதைக் கேட்டதும் ரங்கா அவனை பார்த்தாளே ஒரு பார்வை, ‘அது எதற்கு...?’ என்று அவன் குழம்பி நின்றான்.

பதிலே பேசாமல் உள்ளே சென்றவள், கொத்து சாவியைக் கொண்டு வந்து அவன் முன்னால் இருந்த டீப்பாயில் வைத்தாள். இன்னொரு டைரியை பக்கத்தில் வைத்தாள். எ"ன் கையிலே இந்த சாவி வந்த நாளிலிருந்து, இன்றைக்கு வரைக்கும் உள்ள கணக்கு இதில் இருக்கிறது. சரியா இருக்கான்னு பாத்துக்கோங்க..." என்றவள் விடுவிடுவென்று மாடியேறி விட்டாள்.

"ச்ச..." சரியான திமிர் பிடித்தவள், இப்படித்தான் அரைகுறையா பதில் சொல்லிட்டு போறது. இது மட்டுமா பண்ணியிருக்கா தாத்தா, ஆபீஸ்ல புதுசா நேம் போடு செஞ்சு மாட்டி இருக்கா...

தனியா இவ பேரு, அதுக்கு கீழ பெண்களுக்கு மட்டும் தனி வக்கீல் அப்படின்னு. அதுக்கு என்ன அர்த்தம்...? அதைக் கேட்டா கூட இவகிட்ட பதில் கிடைக்காது...! என்று சொல்லி தலையை பிடித்துக் கொண்டான்.

# அத்தியாயம் 16

ஹாலில் இருந்த பாட்டியும், சேதுராமனும் தர்மசங்கடத்தில் இருந்தனர். பாட்டிக்கு ரங்காவின் கோபம் எதனால் என்பது புரிந்தது... அதேசமயம் உபேந்திராவின் மனதும் புரிந்தது...

காலம், காலமாய் வரும் ஆண்களின் ஈகோ உபேந்திராவுக்கும் பலமாகத் தாக்கப்பட்டு இருக்க, அவனையும் தவறு, என்று சொல்ல முடியவில்லை.

ஆனால் ரங்கா சுயம்பு. சுயமாக நின்றவள். அவளால் அத்தனை எளிதாக கணவன் என்ற வட்டத்துக்குள் சுருங்க முடியாது என்பது பாட்டி அறிந்ததே. ஆனால் அதை எப்படி நாம் சொல்வது...?

இவர்களாக ஒருவருக்கு ஒருவர் அறிந்து கொள்ள வேண்டிய விஷயம். அடுத்தவர் சொல்லும் போது பிரச்சனை இன்னும் பூதாகாரமாக தெரியும் என்பதால் பாட்டி மௌனம் காத்தார்...

சேதுராமனுக்கும் உபேந்திரா ரங்காவை ஏதோ தவறாக புரிந்து கொண்டான், என்பது புரிந்தது. காலம் மாறி விட்டது பெண்கள் தங்களுக்கென்று ஒரு ஒரு அடையாளத்தைத் தேடுகிறார்கள். அது

மட்டுமல்ல தன்னுடைய சுய மரியாதை எந்த இடத்திலும் பாதிக்கப்படக்கூடாது, என்று நினைக்கிறார்கள்...

அதை விட முக்கியமாக சில விஷயங்களை தங்கள் இஷ்டப்படி செய்ய, தங்களுக்கு வருமானம் இருந்தாலும், அதை கணவன் அனுமதியோடுதான் செலவழிக்க வேண்டுமா...? என்று நினைக்கிறார்கள். முக்கியமாக, அதுவும் அவர்கள் பிறந்த வீட்டுக்கு செய்யும் போது... இப்போது எது பேசினாலும் அவனுக்கும் புரியாது, என்பதால் சேதுராமன் அவனிடம், ‘‘சரி. நீ ட்ரஸ் பண்ணிட்டு உன்னோட ஆபீஸ்க்கு போ. ஆபீஸ்ல ஆட்கள் வந்துருவாங்க..." என்று அவனை கிளப்பிவிட்டார்.

தாத்தாவிடம் மறுக்க முடியாமல், கீழேயே முகம் கழுவி காபி குடித்துவிட்டு அலுவலகத்துக்கு சென்று விட்டான்... விளையாட சென்றிருந்த குழந்தைகள் திரும்பி வர, ரங்கா அவர்களுக்கு பாடம் சொல்லிக் கொடுத்தாள்...

பாடம் சொல்லிக் கொடுக்கும் பொழுது, அவன் கேட்ட கேள்வி நினைவுக்கு வர அவளுக்கு அவ்வப்போது கண் கலங்கியது, 'ச்ச கடைசில அவனோட பணக்காரபுத்தியைக் காட்டிட்டான்...! அவங்க பணத்தை கேட்காமல் நான் எடுத்துக் கொடுத்து இருக்க மாட்டேன், அப்படிங்கிற நம்பிக்கை அவங்களுக்கு ஏன் இல்லாம போச்சு...?

இதுல வேற பெருசா, கல்யாணம் ஆகி விட்டாலே என்னோட எல்லா சொத்திலேயும் உனக்கும் பங்கு இருக்கு அப்படின்னு பில்டப் வேற…

நல்லவேளை சாமி, நாம அதை நம்பி இங்கே இருந்து எதையும் எடுத்துக் கொடுக்கலை, எனக்கு அந்த புத்தி கிடையாது… அதனால தப்பிச்சேன்…!' என்று மனதை சமாதான படுத்திக்கொண்டாலும், அவன் சந்தேகப்பட்டது மனதை வாள் கொண்டு அறுக்க, கண்களில் கண்ணீர் தன்னால் வழிந்தது.

“ஏம்மா அழறீங்க…?”

“ஒண்ணுமில்ல. கண்ணுல தூசி விழுந்துருச்சு…”

“நான் தொடச்சி விடவாம்மா…” என்று இரு குழந்தைகளும் அவளது கண்ணீரை துடைக்க, அவள் விம்மி விட்டாள்…

"சரி நான் இனி அழலை. நீங்க சீக்கிரம் படிச்சிட்டு தூங்குங்க. நாளைக்கு காலையில ஸ்கூலுக்கு போகணும்…” என்று அவர்கள் மனதை மாற்றி படுக்க வைத்து சாப்பிட வைத்து சீக்கிரமே தூங்க வைத்தாள்…

தான் சாப்பிடவும் இல்லை, யாரிடமும் பேசவும் இல்லை… அவளைத் தொந்தரவு பண்ண வேண்டாம் என்று நினைத்து பாட்டியும், சேதுராமும் சாப்பிட்டு விட்டு சென்றனர்…

பத்து மணிக்கு அலுவலகத்திலிருந்து உள்ளே வந்த உபேந்திரா ரஞ்சிதம்மாவிடம் "எல்லாரும் சாப்பிட்டுட்டு படுக்கப் போய்ட்டாங்களா...?" என்று கேட்க...

"ஆமாங்கய்யா போய்ட்டாங்க... நீங்க சாப்பிடுங்க என்று சாப்பாடு வைத்தாள்.

“குழந்தைங்க எங்க...?”

“அவங்க அப்பவே சின்னம்மா கூட மேல போயிட்டாங்க...” இதற்குமேல் ஏதும் கேட்டால் தப்பாக படும் என்று தெரிந்து வாயை மூடிக்கொண்டு சாப்பிட்டான்.

அவனது அறைக்குள் வந்து பார்க்க எல்லோரும் நன்கு தூங்கி விட்டது தெரிந்தது. 'செய்யறதையும் செஞ்சிட்டு நிச்சிந்தையாக தூங்குகிறதா பாரு...?' தூங்குவதைப் பார்த்து கோபமாக வந்தது.

'ச்ச, கோபத்தைக்கூட உரிமையா காட்ட முடியலை. பேசாம இவளை எல்லாம் கல்யாணம் பண்ணாம, குழந்தைகளை மட்டும் நம்ம கிட்ட வாங்கிட்டு, விட்டு இருக்கணும்...

இந்த காலத்துல கல்யாணம் பண்ற ஆம்பளைங்க எல்லாருமே முட்டாள். அப்பா இந்த பொண்ணுங்களை மேய்க்கிறதுக்கு உள்ளார சன்னியாசம் வாங்கிட்டு போயிடலாம்...' லைட்

போடாமலே தனது டிரஸ்சை மாற்றிக் கொண்டு நேராக பால்கனிக்கு சென்று ஒரு சிகரெட்டைப் பற்றவைத்துக் கொண்டு அமர்ந்தான்.

அப்போதைய கோபத்திற்கு வடிகாலாக அது இருக்க, சிகரெட் ஸ்மெல் நாசியைப் துளைக்க தூங்கிக் கொண்டிருந்த ரங்கா எழுந்து பால்கனிக்கு வந்தாள்.

"என்ன இது புது பழக்கம், குழந்தைகள் இருக்கிற இடத்துல...?"

'நான் கேட்டா பதில் சொல்ல மாட்டாள். இவ கேட்டா மட்டும் வக்கணையா பதில் எதிர்பார்ப்பா...? மனதிற்குள்ளே புகைந்து கொண்டு, இறுமாப்புடன் அவன் பதில் சொல்லாமல் இருக்க, திரும்பவும் அதே கேள்வியைக் கேட்டாள்.

சிகரெட்டை காலின் கீழேபோட்டு நசுக்கி விட்டு, அவள் அருகில் வந்தவன், "நான் கேள்வி கேட்டால் நீ பதில் உடனே சொல்லிடறியா...? பதில் சொல்லு...?"

"அந்த பிரச்சினைக்கும் இதுக்கும் என்ன சம்பந்தம்...? இது குழந்தைகளுக்குத் தெரியக் கூடாத விஷயம். சிகரெட் ஸ்மெல் உள்ளவரை வருது..." என்று முகத்தைச் சுழிக்க...

அவள் கன்னத்தை வலது கையால் அழுத்திப் பிடித்தான். "அது எனக்கும் தெரியும். இப்ப குழந்தைங்க இங்கே தூங்கிட்டு இருக்கிறதுனாலதான் இங்க சிகரெட் பிடிச்சேன். இல்லேன்னா மொட்டை மாடிக்கு போயிருப்பேன்…”

“தூங்கினாலும் புகை அவங்களுக்கு கெடுதிதானே…?”

“ஆமா அதுக்கு என்ன? இப்போ உள்ள பொண்ணுங்களுக்கு எல்லாருக்குமே உங்களுக்கு மட்டும்தான் அறிவு இருக்கு, யோசிக்கிற திறன் இருக்கு நினைக்கிறீங்க. அப்ப நாங்க என்ன முட்டாளா…?” அவன் நக்கலாக வினவ

“அப்படி நாங்க ஒண்ணும் சொல்லலியே. நீங்களா நினைச்சுக்கிட்டா அதுக்கு நாங்க என்ன பண்றது…?” அதைவிட அலட்சியமாக அவள் பதில் சொன்னாள்.

"உனக்கு இருக்குற திமிர் இருக்கே… உலகத்தில் உள்ள அத்தனை பொண்ணுங்களோட திமிரை நீதாண்டி குத்தகைக்கு எடுத்து இருக்கே. ஆனால் அந்தத் திமிர் தான் எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு…" என்றவன் முகவாயை அழுத்தி ஒரு விரலால் அவள் உதட்டை அளவிட…

"என்ன இது, வலிக்குது விடுங்க…?"

“நீ சொல்றதும், செய்யறதும் மனசுல வலிக்குது. அதை நான் வலிக்குதுன்னு சொன்னேனா…?" அவன் வேண்டுமென்றே வம்பு செய்தான்.

மேலும் அவனே "ஆமா எதுக்கு நம்ம ஆபீஸ்ல போர்டு மாட்டி இருக்க…?"

"ஏன் மாட்டக் கூடாதா…? அதை நீங்க செஞ்சிருக்கணும். செய்யல, அதனால நான் மாட்டினேன். எனக்குன்னு வருமானம் வேண்டாம்…!"

“இப்ப வருமானத்துக்கு என்னடி குறைச்சல்…? நம்ம ஆபீஸ்ல எவ்வளவு வருமானம் தெரியுமா உனக்கு…?”

“எனக்கு தெரிஞ்சு என்ன ஆகப்போகுது? என்றாள் ஏளனமாக…

"ஏய்…" என்று அவன் அழுத்தமாக கத்த…

"சும்மா கத்தாதீங்க. உங்க ஆபீஸ்ல எத்தனை வருமானம் வந்தால் எனக்கென்ன…? நானா அள்ளி கட்டிட்டு போகப் போறேன்…!

உங்களுக்கு என்னை பத்தி என்ன தெரியும்…? அகம்பாவம், திமிரு இப்படி தானே தெரியும். கிட்டத்தட்ட பதினைந்து

வருஷமா, நான் என்னோட சுய சம்பாத்தியத்தில் தான் இருந்து இருக்கேன்…

திடீர்னு என்னை புடிச்சு கூண்டில் அடைச்சு போட்டமாதிரி போட்டுட்டு, நான் வெளியில போய் வேலை பார்த்தா உங்க கவுரவம் குறைஞ்சு போயிடும்னு, ஒரு சாக்கு சொல்லிட்டு, உங்க ஆபிஸிலேயே, என்னை வேலைக்கும் வச்சு, வேலையும் வாங்கிட்டு, இவளோட கைச் செலவுக்கு என்ன பண்ணுவா…! என்ற யோசனை கூட இல்லாத, உங்களை மாதிரியான ஆம்பளைங்களுக்கு என்னை மாதிரி உள்ள பொண்ணுங்களை பத்தி என்ன தெரியும்…?” சாட்டையாய் சுழன்றன அவளது கேள்விகள்…

ஒரு பேட் வாங்கணும்னா கூட, உங்க கிட்ட தான் கையேந்தி நிக்கணுமா…? ஆபீஸ்ல எத்தனை பேருக்கு சம்பளம் போட்டீங்களே? எனக்கு என்ன கொடுத்தீங்க…? அட்லீஸ்ட் சம்பளம் வேண்டாம், ஏய், உனக்கு என்னடி வேணும் அப்படின்னு கேட்டீங்களா…?

என் தங்கச்சி பிள்ளைக்கு உடம்பு சரியில்ல ரூபா கொடுத்தேன். நீங்க என்னை மதிச்சு எனக்கு என்ன வேணும்னு கேட்டு செஞ்சு இருந்தீங்கன்னா, நானும் உங்க கிட்ட கேட்டுட்டு,

அதுக்கப்புறமும் என்னோட சேமிப்புல தான் நான் எடுத்துக் கொடுத்து இருப்பேன்…

உங்க ஆபீஸ்ல எப்படி நான் வேலை பார்க்கிறேனோ, அதே மாதிரி வீட்டிலேயும் மேனேஜ்மென்ட் வேலைதான் பார்த்தேன். உங்க கொத்து சாவி என்கிட்ட இருந்ததுனால அதில் இருந்து பணத்தை நான் திருடி எடுத்துக் கொடுக்க லை…

என்கிட்ட இருந்த சேவிங்ஸ், பாட்டி நகையை அடமானம் வைத்து, அந்தக் குழந்தைக்கு கொடுத்தேன். அவங்க எல்லாரும் என்ன திட்டினாங்க தான். இல்லைன்னு சொல்லல. அதுக்கு அந்த குழந்தை என்ன பாவம் பண்ணிச்சு…? அதுவும் நம்ம பார்த்தி மாதிரி, பாவனா மாதிரி பச்சைக் குழந்தை தானே. அந்த பரிதாபம் தான் என்னை கொடுக்க வைத்தது…

அதுக்கு என்னவெல்லாம் பேசிட்டீங்க…! என்னவோ நான் உங்க பணத்தை திருடி கொடுத்த மாதிரி, உங்க பணக்காரப் புத்தியைக் காட்டிட்டீங்க இல்ல…" மூச்சு விடாது தன்னோட ஆங்காரத்தை எல்லாம் அவள் வார்த்தைகளாக கொட்டி விட, வந்த கோபத்தில் கன்னத்தில் அழுத்தி இருந்த விரல்களை அப்படியே கழுத்துக்கு கொண்டு வந்து, சுவரோடு அவளை நெரித்தவன்…

"உனக்குத்தான் தெரியும் ஏதாவது பேசிக்கிட்டே போன, அப்படியே கொன்னுடுவேன் வாயை மூடு… " என்றவன் அவள் விழி பிதுங்கி மூச்சுக்கு திணறுவதை பார்த்து, “ச்ச” என்று ஒரு ஓரம் தள்ளி விட்டான்.

"பேஷ், கிரிமினல் லாயர்ல, அதான் என்ன பண்ணுனாலும் தப்பித்து விடலாம்கிற எண்ணம்…" என்று அதற்கும் அவள் பேச…

வந்தக் கோபத்தை அடக்கமுடியாமல், சுவர் பக்கம் திரும்பி ஒரு குத்து விட்டவன், "ஏய் உன்ன கல்யாணம் பண்ணின துக்கு அப்புறம் நீ என் பொண்டாட்டி தானே. பொண்டாட்டி க்கு எவனாவது சம்பளம் கொடுப்பானா…? நான் சம்பாதிக்கிறது எல்லாம் உனக்கும் பிள்ளைகளுக்கும் தானே…? ஆபீஸ்ல இருந்து உன் செலவுக்கு பணத்தை எடுத்துட்டு, இவ்வளவு எடுத்திருக்கேன்னு சொன்னா நான் என்ன தப்பாவா நினைக்க போறேன், அல்லது உன் கிட்ட சண்டை போடுவேனா…

உன்னோட பாட்டிகிட்ட, வாசு கிட்ட உரிமையா சொல்ற மாதிரி, என்கிட்ட ஏன் நீ சொல்ல மாட்டேன்கிற…? அது தாண்டி என் கோபம்…! அதுக்குதான் கத்தினேன். அப்ப நான் யாரு…? அட புருஷனா மதிக்க மதிக்க வேண்டாம்… கூட இருக்கிற மனுசனா நினைச்சு, எல்லாத்தையும் சொல்லலாமில்ல…

உன் தங்கச்சி பிள்ளைக்கு பணம் கொடுக்க வேண்டாம்னு சொன்னேனா. அவங்க நம்ம ஹாஸ்பிட்டல்ல தானே ட்ரீட்மெண்ட் எடுத்து இருக்காங்க. என்கிட்ட உரிமையா சொல்லி ஃப்ரீ ட்ரீட்மெண்ட் கொடுக்க வச்சுக்கலாமே. அது ஏன் உனக்கு தோணல...?

ஏன்னா இவங்கிட்ட கேட்கிறதா அப்படிங்கற ஈகோ, அப்படித்தானே. போடி, போ. உன் ஈகோவை கட்டிட்டு அப்படியே அழு. கடைசில உன் பிள்ளைங்களும் உன்னை மாதிரியே வளர்ந்து, இன்னும் நாலு பேரை நாசம் பண்ணட்டும்..." என்று கோபத்தோடு வார்த்தைகளை கடித்துத் துப்பியவன், அறையை விட்டு மொத்தத்தில் வெளியேறிவிட்டான்.

சற்று நேரத்தில் கார் புறப்படும் சத்தம் கேட்டு பால்கனியில் இருந்து எட்டிப் பார்க்க, அவனது கார் சீறிப் பாய்ந்து கொண்டு வெளியே சென்றது.

அன்று இரவு முழுவதும், மறுநாளும் அவன் வீட்டுக்கு வரவே இல்லை. காலையில் எழுந்ததும் குழந்தைகள் “அப்பா எங்கே?” என்று கேட்க, முதலில் பதில் சொல்ல தெரியாமல் விழித்தவள், சுதாரித்துக் கொண்டு, “வெளியூர் போயிருக்காங்க வருவாங்க...” என்று சமாளித்தாள்.

குழந்தைகளை பள்ளிக்கு கிளப்பி தானும் கிளம்பி, அவன் வந்துவிடுவான் என்று எதிர்பார்க்க, பள்ளி செல்லும் நேரம் ஆகியும் வராததால், இன்னொரு காரில் டிரைவர் துணையுடன் குழந்தைகளைப் பள்ளிக்குக் கொண்டு போய் விட்டாள்.

வீட்டுக்கு வந்தால், பாட்டியிடமும் தாத்தாவிடமும் என்ன சொல்வது என்பது தெரியாமல் நேரே அலுவலகத்திற்கே சென்று விட்டாள். அங்கே சென்றதும் அவனது உதவியாளர் பாபு, “மேடம் சார் எங்க? இன்னும் வரல…! போன் அடிச்சா ரீச் ஆக மாட்டேங்குது…!" என்று கேட்க…

"ஏதோ வெளியூர் போய் இருக்கிறதா சொன்னாரு தெரியல…!"

“இல்ல மேடம். ஒரு முக்கியமான கேஸ். சார் தான் பார்ப்பாங்க. இன்னிக்கு கட்டாயம் பார்க்கணும்னு சொல்றாங்க…”

“என்ன கேஸ்…?

“ஒரு மந்திரியோட பொண்ணு கேஸ். அதுசார் தான் பார்த்துட்டு இருக்காங்க. இப்ப அதுல புதுசா ஒரு சிக்கல் வந்து இருக்கு. அதான் சாரை பாக்கணும்னு பிரியப் படுறாங்க…”

“யார் பாக்கணும்னு பிரியப்படறா…?”

“சென்ட்ரல் மினிஸ்டர் தான் மேடம்…”

“கேஸ் பத்தி சொல்லுங்க. பைல் எடுத்துக் குடுங்க. மதியத்துக்கு மேல அவர்கிட்ட அப்பாயின்மெண்ட் வாங்குங்க. நானும் நீங்களும் போய் பார்த்துட்டு வருவோம்...!”

“ஓகே மேடம்...” என்றவன் கேஸ் பற்றி சுருக்கமாக சொல்லி பைலை கையில் கொடுத்துவிட்டு சென்றான்...

"பாபு என்னைக்கு கேஸ் வருது...?"

"இரண்டு தடவை வாய்தா வாங்கியாச்சு மேடம். அடுத்த தடவ ஹியரிங் இருக்கு. கட்டாயமா போகணும்..."

மந்திரியின் மகள் பிளஸ் டூ படிக்கும் மாணவி. அவளை பள்ளிக்கு அனுப்பும் போது காரில் அனுப்ப, கார் டிரைவர் சிறிய வயது அவன் இந்தப் பெண்ணிடம் ஆசை வார்த்தைகள் காட்டி, காதலிப்பதாக சொல்லி நம்ப வைத்து, இந்தப் பெண்ணை அழைத்துக் கொண்டு சென்று விட்டான்.

விஷயம் வீட்டுக்குத் தெரிந்து, அடுத்த பத்து மணி நேரத்திற்குள் அவர்களை பிடித்து விட்டனர். பையனை நன்கு கவனித்து அனுப்பிவிட்டு பெண்ணை வீட்டோடு வைத்துக் கொண்டனர்.

இரண்டு நாட்கள் கழித்து அந்த டிரைவர் சடலமாக கிடக்க அவனது உறவினர்கள் இதை பெரிதாக்கி மந்திரி தான் ஆள் வைத்து கொன்னதாக கேஸ் கொடுத்துள்ளனர்.

“சாட்சி விசாரணை எல்லாம் எப்படி போயிட்டு இருக்கு...?”

“அந்த பொண்ண கோர்ட்டுக்கு இழுக்கணும் அப்படிங்கிறதுல ரொம்ப குறியா இருக்காங்க மேடம். அதை வச்சு மந்திரியோட இமேஜை டேமேஜ் பண்ணி, அவரைக் கவுக்கணும்..." அதனால எதிர்க் கட்சி ஆளுங்க அந்த டிரைவர் குடும்பத்திற்கு மறைமுகமாக சப்போர்ட் பண்றாங்க.

“அப்படியா...! சரி நீங்க போங்க, நான் படிச்சிட்டு, போய் அவரைப் பார்த்து பேசுவோம்...”

“கேசை தரோவாக படித்தாள். அதில் சில குழப்பங்கள் இருந்தது... "பாபுவிடம் இந்த கேஸ் யார் பார்த்தா...? சாரா அல்லது வேறு யாருமா...?"

"இல்ல மேடம் சார் தான்..."

“போன் பண்ணி, சார் எங்க இருக்காருன்னு கேட்க வேண்டியதுதானே...?"

"போன் பண்ணுனேன் மேடம். ரீச் ஆகலையே..."

"சரி, ஈவினிங் வாங்க. நம்ம ரெண்டு பேரும் போவோம்..." இருவரும் அவரை சந்திக்கச் சென்றனர்...

பாபுவிடம் அவர் வீட்ல, ஹால்ல வெச்சி சந்திக்கலாம்னு சொல்லிடுங்க... அலுவலகம் வேண்டாம்...” என்று சொல்ல அவனும் அவ்வாறே ஏற்பாடு செய்தான்.

"வாங்க மேடம். உக்காருங்க, உங்க சார் இல்லையா...?"

“அவர் எதோ முக்கியமான வேலையா வெளியூர் போயிருக்கிறார். சொல்லுங்க சார், எதுக்கு பார்க்கணும்னு சொன்னீங்க...?

“இல்ல, கேஸ் என்னைக்கு கோர்ட்டுக்கு வருது...? இத்தனைக்கும் மீடியாவில் பரபரப்பாக ஆக்காமல் ஒப்பேத்தி ஆச்சு. ஆனால் எப்படியாவது பொண்ண சாட்சி சொல்ல வரவழைக்கணும்னு முயற்சி பண்றாங்க. ஏன்னா இப்ப இருக்கிறது அவங்களோட ஆட்சி...!”

“இந்த கேஸ்ல ரொம்ப முனைப்பா இருக்கிறது யார் சார்...? பையனோட அம்மா, அப்பா கூட, கொஞ்சம் சொன்னா கேட்டுக்குவாங்க. ஆனா அக்கா மாப்பிள்ளை ஒருத்தன் இருக்கான்... அவன் தான் ரொம்ப குதிக்கிறான்... அவன் பேச்சைதான் தான் இவங்க கேட்கிறாங்க...!”

“சரி,எனக்கு ஒரு உண்மை தெரிஞ்சாகணும்…”

“சொல்லுங்க மேடம்?”

“இந்த பையனை உண்மையிலேயே நீங்க கொன்னுட்டீங்களா?”

“இல்லம்மா. நான் அந்த மாதிரி அரசியல்வாதி இல்லை. நம்ம ஆட்கள் நாலு தட்டு தட்டுனாங்க, அவ்வளவுதான். நீயே சொல்லுமா ஒரு மைனர் பொண்ணை கடத்திட்டு போனா, கோபம் வருமா வராதா…?”

“எல்லாம் சரிதான் சார். அந்த டிரைவர் எப்படி உங்க கிட்ட வேலைக்கு வந்தான்…?”

“என்னோட இன்னொரு டிரைவர் மூலமாதான் வந்தான்… அதுல எல்லாம் பிரச்சனை இல்லம்மா…? எல்லாம் சரியாத்தான் போயிட்டிருந்தது. அவனோட மச்சான் கொஞ்சம் ரவுடி மாதிரி இருக்கான். அவனுக்கு இப்ப பேக்ரவுண்டு எதிர்க் கட்சி ஆட்கள். அதுதான் பிரச்சினை…”

“உங்க பொண்ணை பார்க்கலாமா…?”

"தாராளமா பாருங்கம்மா…” என்றவர் மனைவியை அழைத்து சொல்ல, அவர் அவளை கூட்டிக்கொண்டு மாடியேறி மகளது

அறைக்கு அழைத்து சென்றார். அவரது பெண்ணை பார்த்தால், நிரம்பவும் சின்னப் பெண்… அவளிடம் பேச்சுக் கொடுத்ததில், பயந்து பயந்து அந்த பெண் பேசிற்று…

“பயமா இருக்கு. கோர்ட்ல என்ன கேட்பாங்க அக்கா…?”

"இவ்வளவு பயப்படுகிறவ ஏன் தப்பு பண்ணுன…?”

“தெரியல அக்கா. இது தப்பு, இப்படியெல்லாம் ஆகும்னு எனக்கு தெரியல. அவன் சொல்லித்தான் நான் செஞ்சேன். ஆனால் கடைசிவரை ஏமாத்திட்டாங்க…” என்று உளறிவிட,

“யாரு டிரைவர் பன்னீரா…?”

சிறிது தயக்கத்துடனே “ஆமாம்” என்றாள். அதன் பின்னர் அவளிடம் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்து விட்டு, தைரியம் சொல்லி, இனி இந்த மாதிரி பண்ண கூடாது என்பதையும் அறிவுரையாக சொல்லி, அதன் பின்னரே விடைபெற்றாள்…

“சரி சார், நானும் சாரும் பார்த்துக்கிறோம்…” என்று அவரிடம் விடை பெற்று வீடு திரும்பினர்.

போகும் வழியிலேயே, ஏசி மதிவாணனுக்கு அழைத்தவள் “சார் எனக்கு உங்கள பாக்கணும்…?” நீங்க ஸ்டேசன்ல இருக்கீங்களா…?" என்று கேட்க…

"எஸ் வாங்க.!" என்றான்…

"என்ன ரங்கா எப்படி இருக்கீங்க…?"

“நல்லா இருக்கேன் சார். நீங்க எப்படி இருக்கீங்க…?”

“நான் நல்லா இருக்கேன். சார் எப்படி இருக்கிறார்…?”

“ம்ம், பைன். நான் ஒரு உதவி கேட்டு உங்ககிட்ட வந்து இருக்கேன்…”

“சொல்லுங்க உங்களுக்கு இல்லாத உதவியா…?” என்றதும் மடமடவென்று கேஸ் விஷயத்தை சொல்லி தனக்கு ஏற்பட்ட சந்தேகத்தையும் கூறினாள்…

"கேஸ் நாளை மறுநாள் கோர்ட்டுக்கு வருது. அதுக்குள்ள இதுல ஏதாவது கண்டுபிடிக்க முடியுமா…? இல்லைனா கொஞ்சம் சிக்கல் ஆயிடும். இரண்டுமே பெரிய இடம். எவிடன்ஸ் இல்லாம எதுவும் செய்ய முடியாது…"

"இவ்வளவு சொல்லிட்டீங்க இல்ல. இன்னும் இரண்டு நாள் இருக்கு. நான் எல்லாம் பண்ணிட்டு உங்களுக்கு கால் பண்றேன்…" என்று உறுதி அளித்தான். அவனிடம் நன்றி சொல்லி குழந்தைகளை அழைத்துக் கொண்டு வீடு திரும்பினாள்…

ஸ்கூலிலேயே குழந்தைகள் “அப்பா இன்னும் வரலையா அம்மா...? என்று கேட்க, அவளுக்கு கோபம் வந்தது...

'எனக்கும் தான் அவன் மேல கோபம். அதுக்காக நான் என்ன எங்கேயாவதா போயிட்டேன். வீட்ல இருக்கல. ஆம்பளைங்களுக்கு இது ஒரு சாக்கு. எங்கேயாவது போக, தண்ணி அடிக்க. எத்தனை ஜென்மம் எடுத்தாலும் இவனுங்கெல்லாம் திருந்த மாட்டாங்க...' (அதற்கும் ஒரு கவுண்டர் கொடுத்துக் கொண்டாள்).

பிள்ளைகளை ஒருவாறு சமாதானம் செய்து, படிக்க வைத்து சாப்பிட வைத்து, தூங்க வைத்தாள்... பாட்டியையும், தாத்தாவையும் பார்க்கத்தான் அவளுக்குப் பாவமாக இருந்தது...

இருவரும் தன்னிடம் ஏதோ சொல்ல நினைப்பதையும், சொல்ல முடியாமல் தவிப்பதையும், அவளுக்கு தெரியத்தான் செய்தது. அவள் அவர்களிடம் பேச முற்படவில்லை.

உபேந்திரா நடுநிசிக்கு மேல் வந்து சேர்ந்தான். காலையில் கண் விழித்ததும் அவனைப் பார்த்த குழந்தைகள், "அப்பா வந்தாச்சு...” என்று உற்சாகத்துடன் அவனைக் கட்டிப் பிடித்துக் கொண்டனர்...

"எங்கப்பா போனீங்க? ஊருக்கு போய்ட்டீங்கன்னு, அம்மா சொன்னாங்க!"

“ஆமா ஒரு அவசர வேலையா டெல்லிக்குப் போயிருந்தேன்...!"

"ஏன் எங்க கிட்ட சொல்லாம போனீங்க...! நாங்க உங்கள ரொம்ப தேடினோம் தெரியுமா...? வி மிஸ் யூ..." இரண்டு குழந்தைகளும் அவனை கட்டிப் பிடித்து மாறி, மாறி முத்தம் கொடுக்க. அவனுக்கே ஒரு மாதிரி ஆகி விட்டது...

'பெரிய தப்பு பண்ணிட்டேன். குழந்தைகளை பத்தி நினைக்காம அவளைப் பத்தி நினைச்சு சொல்லாம போனதுக்கு தப்பு...' மனதுக்குள் மறுகினான்...

"இனி சொல்லாம போக மாட்டேன் வெரி சாரி...'”அதையே காலையில் டைனிங் டேபிளில் தாத்தா கேட்க, சொல்ல வேண்டியதாயிற்று...

"கோபத்தில் போன சரி, உன்னை நம்பி நானும், இந்த குழந்தைகளும் இருக்கோம். அதை எப்பவும் ஞாபகம் வச்சுக்கோ... " என்று வருத்தத்துடன் சொன்னார்...

“ஏன் போன? எதுக்கு போன? எந்த வார்த்தையும் ரங்காவிடமிருந்து வெளிப்படவில்லை. அவனுக்கு அவள் பேசி,

இரண்டு வார்த்தை திட்டி இருந்தால் கூட பரவாயில்லை. ஒரு பார்வை பார்த்தவள், மௌனமாக தன் கடமையை மட்டும் செய்ய... 'திமிர் மட்டும் கிடையாது அகம்பாவமும் சேர்ந்து ஜாஸ்தியா இருக்கு. அழுத்தம், அழுத்தம்...' இப்படித்தான் தோணிற்று...

அதற்குள் பாபுவிடமிருந்து போன் வர, அவனிடம் பேசினான். "ஓகே நான் மறந்துட்டேன் இப்ப கிளம்பி வரேன்...” என்றவன் அவசரமாக கிளம்பி சென்றான்...

# அத்தியாயம் 17

பாபு சொன்ன விஷயத்தை கவனமாக கேட்டுக் கொண்ட உபேந்திரா, “இந்தக் கேஸ் திங்கட்கிழமை, இதை ஏன் எனக்கு முன்னாடியே நீ ஞாபகப்படுத்தலை…?”

“நேத்து ஞாபகப்படுத்த ரிமெம்பர் கால் வச்சுருந்தேன். ஆனா உங்கள நேத்து பிடிக்கவே முடியல…”

“டெல்லியில ஒரு கேஸ். திடீர்னு எனக்கு ரொம்ப வேண்டிய வக்கீல் கூப்பிட்டாரு. மறுக்க முடியல, அதான் போயிட்டேன். சரி இப்ப என்ன விஷயம்…? மேடம் என்ன சொன்னாங்க…?”

“தெரியல சார். நேத்து ஏசிபி மதிவாணனனை போய் பார்த்தாங்க. என்ன பேசினாங்கன்னு தெரியலை…?” என்று பேசிக் கொண்டிருக்கும் போதே மதிவாணன் லைனில் வந்தான்.

“குட் மார்னிங் சார்…” நானே உங்களை கூப்பிடணும்னு நினைச்சேன்.

“குட் மார்னிங். நேத்து உங்க மிசர்ஸ் இங்கே வந்து இருந்தாங்க. அது விஷயமா கொஞ்சம் பேசணும். இப்ப அவங்க இருக்காங்களா…?”

“இல்ல வீட்ல தான் இருக்காங்க… நீங்க எங்க வீட்டுக்கு வர முடியுமா, இல்ல நாங்க வந்து உங்கள பாக்கணுமா…!”

“இல்ல உங்க மிசர்ஸ் கூட்டிட்டு, மினிஸ்டர் வீட்டுக்கு வந்துருங்க. போறதுக்கு முன்னாடி அவங்க கிட்ட பர்மிஷன் வாங்கிடுங்க. நீங்க கிளம்பும்போது சொல்லுங்க, நானும் வந்துடறேன்…” என்று ஏசிபி சொல்லவும், வேற ஏதோ விஷயம் என்பதை புரிந்து கொண்டான்.

“பாபு கேஸ் பைல் என்கிட்டே கொடு. மினிஸ்டர் வீட்டுக்கு போன் பண்ணி வீட்டுக்கு வரலாமா? முக்கியமான விஷயம்னு சொல்லு. நான் வீட்டுக்கு போய் மேடத்தை கூட்டிட்டு மினிஸ்டர் வீட்டுக்கு போகணும்…” மேலும் சில வேலைகளை பாபுவிடம் ஒப்படைத்துவிட்டு கிளம்பினான்.

ஏற்கனவே ஏசிபி அவளிடம் பேசி இருந்ததால் ரங்காவுமே அவனை எதிர்பார்த்து தான் இருந்தாள். வந்ததும் “கிளம்பு, வெளியே போகணும்…” என்று சொல்லி அவளைக் கூட்டிக் கொண்டு கிளம்பினான்…

‘ஏதாவது கேட்பான்’ என்று அவளும், ‘மினிஸ்டர் வீட்டுக்கு போயிட்டு வந்து இருக்காளே, அதைப்பற்றி ஏதாவது சொல்லுவாள்’ என்று அவனும் மௌனமாகவே காரில்

பயணித்தனர். அங்கு செல்லும் வரை இருவரும் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ளவே இல்லை.

முக்கியமான விஷயம் என்பதால் மினிஸ்டர் வீட்டிலேயே இருக்க, ஏசிபியும் அங்கு வந்து சேர்ந்தார். மதிவாணன் மினிஸ்டரிடம், “சார் பிரச்சனை வேற இடத்துல இருந்து… உண்மையிலேயே உங்க டிரைவரை கொன்றது வேற ஒரு ஆள். அது மேடம் தான் கண்டுபிடிச்சு சொன்னாங்க…” என்றதும் ரங்கா தனக்கு ஏற்பட்ட சந்தேகத்தை சொன்னாள்.

“இப்ப என்ன செய்யலாம்…?” என்று அவர்களிடமே ஆலோசனை கேட்க, அது உண்மையான்னு முதல்ல உங்க பொண்ணு கிட்ட கேட்டு கன்பார்ம் பண்ணனும். உண்மைன்னா பையனை தூக்கிடலாம். நீங்க மேடத்தை அனுப்பி உங்க பொண்ணுகிட்ட கேளுங்க…” என்று வழி சொல்லி கொடுத்தான்.

மினிஸ்டர் தனது மனைவியை அழைத்து ரங்காவை உள்ளே கூட்டிப்போய் மகளை சந்திக்க ஏற்பாடு செய்ய, அந்தப் பெண் இவளைப் பார்த்ததும் திரும்பவும் பயந்தது. அவள் அம்மாவை அனுப்பிவிட்டு, மெதுவாக பேச்சை ஆரம்பித்தாள்…

“உனக்கு என்ன படிக்கணும்…?”

“எனக்கு இன்ஜினியரிங் டாக்டர் அதெல்லாம் பிடிக்கல... எனக்கு பேஷன் டிசைனிங் படிக்கணும்...”

“அப்பா கிட்ட சொல்லியாச்சா...”

“சொல்லிட்டேன். ஆனா அவங்களுக்கு விருப்பமில்லை...”

“படிச்சிட்டு என்ன பண்ண போற...?”

பெரிய, பெரிய செலிபிரிட்டிக்கு பேஷன் டிசைனராக வொர்க் பண்ணனும், இதுதான் என்னோட கனவு...”

“கட்டாயம் உன்னால முடியும். பண்ணலாம், ஆனால் அதுக்கு முன்னாடி ஒரு விஷயத்தை தெளிவா புரிஞ்சுகிடணும். படிச்சு முடிச்சு, நீ உன்னோட கனவுல ஜெயிக்கிற வரைக்கும் வேற எதை பத்தியும் சிந்திக்க கூடாது. ஏன்னா இந்த வயசு அப்படி...? அலைபாயிற வயசு. இப்ப உன் மனச வேற எதுல விட்டாலும் உன்னால ஜெயிக்க முடியாது. நீ உன்னோட லட்சியத்தில் ஜெயிச்ச பிறகு, உனக்குன்னு ஒரு வாழ்க்கை தன்னால அமையும்...

இப்ப நடந்ததை மறந்திடு. இதிலிருந்து வெளியே வரணும் அப்படினா நடந்ததை மறைக்காம என்கிட்ட சொல்லு. நான் எப்படியாவது இந்தக் கேஸ்ல உன் பெயர் வெளியில் வராமல், உன்னை காப்பாத்துறேன், உண்மையிலேயே உனக்கு பழக்கம் பன்னீர் கூடவா? அல்லது ஸ்டீபன் கூடவா...? என்று அவள்

கேட்டதும் அப்படியே அந்தப் பெண் பயந்து போய் அழ ஆரம்பித்தாள்.

“பயப்படாதே…” என்று அவளுக்கு பலவிதமாக ஆறுதல் சொல்லி அந்தப் பெண்ணிடமிருந்து விஷயத்தை வாங்கி விட்டாள். “ஆமா, எனக்கு ஸ்டீபன் கூட தான் பழக்கம். ஸ்கூல்ல இருந்து வர்ற வழியில உள்ள காலேஜ்ல தான் அவன் படிக்கிறான். ஸ்டீபனுக்கு எப்படியோ பன்னீர் தெரியும் போல இருக்கு. அவங்க ரெண்டு பேரும் பிரண்ட்ஸ். அடிக்கடி எனக்காக கார்ல காத்துக்கிடக்கற நேரம் ஸ்டிபனும் அவன் கூட இருப்பான். அப்படித்தான் பழக்கம்…

இவன் கூட போனால் தான் வீட்ல சந்தேகம் வராது நெனச்சு என்ன வர சொன்னாங்க. நாங்க கிளம்பி போயிட்டோம். மறுநாள் ஸ்டீபன் எங்ககூட வந்து சேர்ந்துகிறதா இருந்தது. ஆனா அதுக்குள்ள அப்பாவுக்கு நியூஸ் தெரிஞ்சு இவனை பிடிச்சிட்டாங்க. நானும் ஸ்டீபன் பத்தி எதுவும் சொல்லல…!” உண்மையை சொல்ல அதை தன்னுடைய மொபைலில் ரெக்கார்ட் பண்ணி வைத்துக் கொண்டு வந்து கீழே போட்டு காட்டினாள்.

“அதான் சார், டிரைவர் மூலம் தான் யார்னு தெரிஞ்சிடும்னு அவன்தான் டிரைவரை கொன்னு இருக்கணும்… அவன் ஏற்கனவே சில பெண்களை இந்த மாதிரி ஏமாற்றி இருக்கான்னு தெரியுது…

அதனால நீங்க கவலைப்படாதீங்க. அவனை பிடிச்சிட்டா, கேஸ் ஈசியா முடிஞ்சிடும்.” மதிவாணன் சொல்லிவிட்டான்…

“நாளைக்குள்ள பிடித்து விடலாமா…?”

“நான் நேற்றே அவன் எங்க இருப்பான்னு விசாரிக்க சொல்லி இருக்கேன். அனேகமா சிக்கிருவான். பிடிச்சிட்டா சொல்லிடறேன். நாளைக்கு கோர்ட்டுல பார்ப்போம் சார்…” ஏசிபி விடைபெற்றார்…

மினிஸ்டர் ரங்காவுக்கு தனியாக நன்றி சொல்லி, உபேந்திராவிடம், “உங்க மிசர்ஸ், ரொம்ப புத்திசாலி… முதல் தடவை என் பொண்ணு கூட பேசிட்டு வந்ததும் உடனே கண்டுபிடிச்சுட்டாங்க. ரொம்ப நன்றிமா. ஏற்கனவே எதிர்க்கட்சி ஆட்கள் எதை வச்சு நம்மள பேசலாம் பார்த்துட்டு இருப்பாங்க. இதுல இருந்து வெளியே வரலைன்னா அது பெரிய சிக்கல் ஆயிடும்…!” என்று சொல்லி வழி அனுப்பினார்…

காரில் திரும்பும் போதும் மௌனமே ஆட்சி செய்ய, “கேஸ் நாளைக்கு கோர்ட்டில் வருது. நீயே ஆஜராகு…!” என்று உபேந்திரா சொல்ல…

“அதெல்லாம் வேண்டாம். நேத்து வேற வழி இல்லாததுனால உங்களுக்கு பதிலா நான் போய் அவரைப் பார்க்கப் போனேன். அதனால இந்த விஷயம் தெரிய வந்தது அவ்வளவுதான். எனக்கு

கிரிமினல் கேஸ் எதுவும் வேண்டாம். சிவில் கேஸ் போதும்…” என்றாள்…

வீட்டுக்கு வந்ததும் திரும்பவும் ஆளுக்கொரு திசையில் முகத்தைத் தூக்கிக் கொண்டு தங்களது வேலைகளை கவனிக்க ஆரம்பித்தனர். “அப்பா வாங்க நம்ம தோட்டத்துல போய் விளையாடலாம்…” என்று குழந்தைகள் நச்சரிக்க ஆரம்பிக்க, “உங்களுக்கு ஸ்விம்மிங் கத்துக்கணுமா…?” என்று கேட்டான்.

“ஆமாம்…” என்று குழந்தைகள் சொன்னதும், கோச்சரிடம் பேசி ஏற்பாடு பண்ணி விட்டு, அவளிடம் “நாளையிலிருந்து வாரத்தில் இரண்டு நாள் குழந்தைகளுக்கு ஸ்விம்மிங் சொல்லிக் கொடுக்க வீட்டிற்கு கோச் வருவாங்க, கூட இருந்து பாத்துக்கோ…” என்றான்.

“அப்பா சாவி இந்தாங்க…” என்று மேஜையில் இருந்த கொத்துசாவியை மகள் கொண்டு வந்து கொடுக்க… "இந்த சாவியை நீ இன்னும் எடுக்கலையா…?" என்று கேட்க,

"எனக்கு வேண்டாம் நீங்களே பாத்துக்கோங்க…"அவள் பிடிவாதமாய் பதிலளிக்க…

"நான் வீட்ல உக்கந்து சமையல் பார்க்கிறேன். நீ ஆபீஸ் பார்க்கிறியா…? என்றான் கடுப்புடன்…

"ஏன் பார்த்தால் என்ன தப்பு...? இப்ப ஃபாரின்ல வேல பாக்குற எல்லோரும் செல்ப் குக்கிங் தானே...! அதே மாதிரி வருங்காலத்துல குடும்பத்துக்கும் சமைப்பாங்களா இருக்கும்..." என்றாள் கெத்தாக...

"ரங்கா ப்ளீஸ், என் கோபத்தை கிளறாதே. நீ பேசின, பதிலுக்கு நானும் பேசிட்டேன். நீ நினைக்கிறதுக்கும் நான் நினைக்கிறதுக்கும் மலையளவு வித்தியாசம் இருக்கு. அதுதான் பிரச்சினை. நம்ம பிரச்சினையில் பெரியவங்களையும், பிள்ளைகளையும் டீல்ல விடாதே... ஒழுங்கா சாவி எடுத்துக்க..." என்றவன் கீழே இறங்கி சென்றான்.

ரங்கா குழந்தைகளுக்கு தனது அறையில் பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்க அவன் கீழே உள்ள அலுவலகத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்தான்...

அப்போது பாட்டி ரங்கா அவனைப் பார்க்க உள்ளே வந்தார்... "வாங்க பாட்டி என்ன விஷயம்...?"

"எனக்கு உன்கிட்ட கொஞ்சம் பேசணும்பா..."

"சொல்லுங்க பாட்டி..."

"உனக்கும் ரங்காவுக்கு இடையில் என்ன பிரச்சனை...?"

"பிரச்சினை எல்லாம் எதுவும் இல்ல பாட்டி..."

“அப்புறம் எதுக்கு நீ சொல்லாம கொள்ளாம ஊருக்கு போனே…?” என்றதும் பாட்டியிடம் எப்படி சொல்வது என்று அமைதியாக இருந்தான்…

“எனக்கு எல்லாம் தெரியும்பா. உன் மேலயும் தப்பு இல்ல. அவ மேலயும் தப்பு இல்ல. ரெண்டு பேரும் வளர்ந்த விதம் அப்படி. இதுல யாரை விட்டுக் கொடுத்து போகச் சொல்லணும்னு எங்களுக்கு தெரியல…”

"சாரி, பாட்டி என் மேல தான் தப்பு. நான் அப்படி அவளை பேசி இருக்கக் கூடாது. அவ என்கிட்ட எதுவுமே சொல்ல மாட்டேங்குறாங்க கோவம் தான்…”

“புரியுதுப்பா. ஆரம்பத்திலிருந்தே அவ தானே சம்பாதித்து சுயமா தன்னோட காலுல நின்னுட்டா. இப்ப அவள ஒருத்தர டிபெண்ட் பண்ணி இருக்க சொல்றது ரொம்ப கஷ்டம். அதை நீயும் புரிஞ்சுக்கணும். எனக்கு என்னவோ நான் ரொம்ப நாள் இருக்க மாட்டேன்னு தோணுது. என்னை தவிர அவளுக்கு யாரும் தெரியாது. வாசு இருக்கான் தான். ஆனால் அவனுக்கும் ஒரு குடும்பம் இருக்கு.

என்ன பிரச்சனை வந்தாலும் நீ அவளை விட்டுக்கொடுக்க மாட்டேன்னு எனக்கு சத்தியம் பண்ணி கொடுப்பியா…? இப்படி

உன்கிட்ட கேட்கிறது எனக்கு கஷ்டமா தான் இருக்கு. பேத்தியை ஒழுங்கா வளர்க்க தெரியல, நம்மகிட்ட சொல்ல வந்துட்டாங்க அப்படின்னு நீ நினைக்கலாம்...!"

"இல்ல நான் அப்படி நினைக்க மாட்டேன். காலம் மாறிடுச்சு. பொண்ணுங்க ரொம்ப தெளிவா இருக்காங்க எனக்கு புரியத்தான் செய்யுது... ஆனா ஒரு விஷயம் மட்டும் புரியல...

ரெண்டு பிரண்ட்ஸ் இருந்தா கூட, அங்க ஒருத்தருக்கு ஒருத்தர் விட்டுக் கொடுத்து போனால்தான் அந்த நட்பு நிலைக்கும். பிரெண்ட்ஸ் என்ன பிரண்ட்ஸ், ஒரு மனிதனோடு இன்னொரு மனிதர் சக தோழமையா இருக்கணும்னா கூட, அங்க ஏதோ ஒரு புரிதல் வேணும்...

அப்ப ஏன், அது கணவன், மனைவிக்குள்ள இருக்க மாட்டேங்குது. நானாவது அவளை புரிஞ்சிக்கவாவது முயற்சி பண்றேன். அவ அது கூட செய்ய மாட்டீங்கறா. நான் ரெண்டு ஸ்டெப் அவளை நோக்கி போனால் அவ ரெண்டு ஸ்டெப் பின்னோக்கி போறா. அதுதான் எனக்கு என்ன பண்றதுன்னு புரியல...?" என்றான் கவலையுடன்...

"எதுவா இருந்தாலும் உங்களை இணைக்கின்ற பாலமா உங்க குழந்தைங்க இருப்பாங்க. அவங்களை பாருங்க..." என்று அவனிடம் சொல்லிவிட்டு கிளம்ப...

"பாட்டி, ரங்கா அந்த நகையை எங்கு அடகு வச்சி இருக்கான்னு கேட்டு சொல்லுங்க. நான் கேட்டா சொல்ல மாட்டா…!"

"இருக்கட்டும்பா. என்னோட நகை தான். நான் ஆசையா ரங்காவுக்கு கொடுக்கணும்னு வைத்திருந்தது. ஆனா அவளே அதை வாங்கிட்டு போய் அடகு வச்சுட்டா. இனி எதுக்கு? போனா போகட்டும்…

“இல்ல, உண்மையிலேயே நீங்க என்னை உங்களுடைய பேரனா நெனச்சா, அதை நான் திருப்பி வாங்கி ரங்காவுக்கு கொடுப்பதற்கு உதவி பண்ணுங்க…" என்று சொல்ல பாட்டி சம்மதம் சொல்லி விட்டு உள்ளே சென்றார்.

மினிஸ்டர் கேசில் உபேந்திராவின் வாதம், வெற்றி பெற்றது. மினிஸ்டர் மீது எந்த பழியும் இல்லாமல் விடுதலை செய்யப்பட, அந்த டிரைவரை கொன்ற உண்மையான குற்றவாளியை காவல்துறை கைது செய்தது. டிரைவரின் மச்சான் கேஸ் வேறு பக்கம் திரும்பியது கண்டு அமைதியாகி சென்று விட்டான்.

மினிஸ்டர் சந்தோஷத்தில் உபேந்திராவிடம் நன்றி சொன்னதோடு மட்டுமில்லாமல், ஒரு பிளாங் செக் கொடுத்து ‘‘உங்க இஷ்டப்படி ஆறு டிஜிட்டில் நீங்க பில் பண்ணிக்கோங்க…’’ என்று சொல்லிவிட்டார். அதுபோக அவனிடம் ‘‘இனி எந்த ஒரு

ஆலோசனை என்றாலும் உங்களது உதவி எனக்கு தேவை…'' என்று சொல்லி வழியனுப்பி வைத்தார்…

ஏற்கனவே உபேந்திராவுக்கு நல்ல பெயர். இந்த கேசில் இன்னும் அவன் பிரபலமானான். வீட்டுக்கு வந்தவன், ரங்காவை அழைத்து, அவளிடம் அந்த பிளாங் செக்கை கொடுத்து, ''இந்த செக் உனக்குரியது… நீ எவ்வளவு வேண்டுமானாலும் பில் பண்ணிக்கலாம், ஆறு இலக்கத்தில்…'' என்று சொல்ல…

அவள் பேனா எடுத்து, 'இரண்டு லட்சம்' என்று எழுதி அவனிடம் கொடுத்தாள். கேள்வியாய் அவளை நோக்க, ''எங்க பாட்டி நகையை திருப்புவதற்கு. எனக்கு இது போதும்…'' என்று சொல்ல, உபேந்திரா அவளது நேர்மையை நினைத்து வியந்தான்.

''வேண்டாம்'' என்று போலியாக பாசாங்கு செய்யவில்லை. அதே சமயத்தில் அளவுக்கு அதிகமாகவும் ஆசைப் படவில்லை. மினிஸ்டராக தந்தால் கூட கண்டிப்பாக ஐந்து லட்சம் தந்திருப்பார். அந்த வகையில் அவருக்கும் லாபம்தான். ரங்கா அவனது மனதில் சிம்மாசனமிட்டு அமர்ந்து கொண்டாள்…

'தான் பாட்டி நகையை திருப்பிக் கொடுத்து அவளுக்கு உதவி செய்யவேண்டும் என்று நினைக்க, ஆனால் ஒரு நொடியில் தன்னுடைய வருமானத்தின் மூலம், அவள் தனது மரியாதையைக்

காப்பாற்றிக் கொண்டது, அவனுக்கு உண்மையிலேயே பெருமையாக இருந்தது.'

தான் திருப்பி கொடுத்திருந்தால் கூட அவள் மகிழ்ந்திருக்க மாட்டாள் என்பது தான் உண்மை. இது புரிந்ததுமே, அவள் தனியாக கேஸ் நடத்திக் கொள்ளட்டும். அந்த வருமானத்தை அவளே வைத்துக் கொள்ளட்டும்.

அதுதான் அவளை நிமிர்ந்து நிற்கச் செய்யும். எந்தவிதத்திலும் அவளுடைய சுய அடையாளத்தை அழித்து விட்டால், அவளால் அதைத் தாங்க முடியாது…

தனக்கு உண்மையிலேயே அவள் மீது அன்பு இருந்தால் தான் செய்ய வேண்டியது என்ன என்பது அவனுக்கு புரிந்து விட்டது…

அலுவலகத்தில் அவளுக்கு என்று சிறிய தனி கேபின் அமைத்துக் கொடுத்து, அவள் ஆசைப்பட்டபடி பெண்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளை அவளை அணுக செய்தான்…

குழந்தைகளுக்கு வாரம் இரு நாள் நீச்சல் பயிற்சி கொடுப்பதற்கு பயிற்சியாளர் வீட்டுக்கு வந்தார். மாலை நேரம் பயிற்சி. ஞாயிற்றுக்கிழமை என்றால் உபேந்திராவும் அந்த நேரம் குழந்தைகளுடன் இருப்பான். பள்ளி நாட்களில் ரங்காவின் பொறுப்பு…

ரங்கா தனது பாட்டியின் நகையை அவரிடமே திருப்பிக் கொடுத்து விட்டாள். பாட்டி அவளிடம் அதைத் திருப்பிக் கொடுத்து “ரங்கா இந்த நகை உனக்குத்தான். உனக்கு அப்புறம் பாவனாவிற்கு கொடுத்துவிடு. கொஞ்ச நாட்களாவது என் நினைவாக நீ இதை அணிந்துகொள்ள வேண்டும்…” என்ற நிபந்தனையோடு அவள் கையிலேயே கொடுத்து விட்டார்…

இருவருக்குமிடையில் பனித்திரை இன்னும் இருந்தது… ரங்காவால் அத்தனை எளிதாக, அவன் கேட்டதை மறக்க முடியவில்லை. எவ்வளவுதான் இறங்கி பேசினாலும் தேவையான கேள்விகளைத் தவிர பதிலே அவள் வாயில் இருந்து பிறக்காது. அன்று எப்படியாவது அவளை பேச வைக்க வேண்டும் என்ற பிடிவாதத்துடன், குழந்தைகளுடன் தோட்டத்தில் தானும் விளையாடிக் கொண்டிருந்தான்…

நீச்சல் கற்றுக் கொடுக்க கோச் வரவே எல்லோரும் நீச்சல் குளத்திற்கு சென்றனர். அவர் கற்றுக் கொடுப்பதை வேடிக்கை பார்த்தபடி கரையிலுள்ள சாய்வு நாற்காலியில் சாய்ந்திருக்க, ரங்காவும் அங்கு வந்தாள்…

“ரங்கா உனக்கு நீச்சல் தெரியுமா…?”

“ இல்ல எனக்கு தெரியாது…?”

“அப்ப நீயும் கத்துக்கோயேன். எல்லாருமா குளிக்கலாம்...”

“ஐயோ அதெல்லாம் எனக்கு வேற யார் கிட்டேயும் கத்துக்க பிடிக்காது...”

“மகாராணி சம்மதிச்சா அடியேன் சொல்லிக் கொடுக்கிறேன்...” நாடக பாணியில் வேண்டுமென்றே அவன் சொல்ல...

தன்னிடம் பேசுவதற்காக அவன் வம்பு வளர்ப்பது புரிந்து, “அதெல்லாம் எதுக்கு...? இதெல்லாம் பணக்கார விளையாட்டு...! நான் சாதாரண ரங்கா தான். எனக்கு வேண்டாம்...!” அவள் வேடிக்கையாய் சொல்ல...

சிறுசொல் கூட பொறுக்காத உபேந்திராவுக்கு கோபம் வந்தது. “அது என்னடி பணக்கார விளையாட்டு? ஆரோக்கியம் சம்பந்தப்பட்டதுன்னு சொல்லு. ஒத்துக்குறேன். ஏன் கிராமத்துல எல்லாவனும் குளத்துல, கிணத்துல,தலைகீழா டைவ் அடிச்சு, நீச்சல் கத்துக்கறானே...? அப்ப அது என்ன விளையாட்டு? ஏழைங்க விளையாட்டா...?

அவங்களுக்கு இயற்கை பெரிய அளவில் நீச்சல் குளம் கொடுத்திருக்கு. அதை அனுபவிக்கிறான். பணக்காரன் காசு கொடுத்து அந்த நீச்சல் குளத்தை வாங்க வேண்டி இருக்கு. என்னை கேட்டா, அந்த கிராமத்துக்காரன் தான் பணக்காரன்னு

சொல்லுவேன். அவனுக்கு எல்லாமே இலவசமாக கிடைக்குது. ஆனால் அதை அவன் நல்ல முறையில் பேணி பாதுகாக்க தெரியல. அதனோடு அருமை தெரியல...

பணக்காரனுக்கு காசு கொடுத்து வாங்குறதுனால, அதோட அருமை தெரியுது. அவன் அதைப் பேணி பாதுகாக்கிறான். இது தாண்டி உண்மை...”

அவள் பதில் சொல்லாமல் தோள்களை குலுக்க, “நான் எது சொன்னாலும், அதற்கு எதிர்வாதமா ஏதாவது சொல்லணுமா...? உன்னை நீச்சல் படிக்க சொன்னது ஒரு பாதுகாப்புக்கு, குழந்தைங்க குளிக்கும் போது, ஒரு ஹெல்ப் வேணும்னா உனக்கும் தெரிஞ்சு இருந்தா அது வசதி, அதுக்கு தான் சொன்னேன்...” என்றதும் அரைமனதாய் சம்மதித்தாள்.

“ ஓகே, ஆனா இப்ப இல்லை. நைட் ஆகட்டும்...”

“ ஏய் இங்க யாரும் வர மாட்டாங்க...”

அது அவளுக்கு தெரிந்தாலும் அவளால் வெளிச்சத்தில் அவனிடம் நீச்சல் கற்றுக் கொள்ள விருப்பமில்லை. முதல் காரணம் யாராவது வந்து விட்டால் என்ன செய்வது என்ற பயம்...? இரண்டாவது வெளிச்சத்தில் கற்றுக்கொள்ளும் போது அவளுடைய முகம் காட்டும் உணர்வுகளை உபேந்திரா படித்து

விடுவானோ என்ற உள்ளூர பயம். இதை அவனிடம் வெளிப்படையாக சொல்ல தயங்கி, இரவில் கற்றுக் கொள்ளலாம் என்று கூறினாள்...

“ஓகே அப்ப இன்னைக்கு நைட் வருவோம்” என்று சொன்னவன் மறக்காமல் இரவு சாப்பாட்டுக்குப் பின்பு குழந்தைகளை பாட்டியிடம் விட்டுவிட்டு, அவளை அழைத்துக்கொண்டு வந்தான். நீச்சல்குளம் அருகிலேயே உடை மாற்றும் ஒரு அறை இருக்க அவளிடம், “உள்ள ஸ்விம் டிரஸ் இருக்கு. போய் வேணா மாத்திட்டு வர்றியா...?”

“தேவையில்லை. நான் சுடிதார் தான் போட்டிருக்கேன்... இதுவே போதும்...”

“ஓகே, அப்ப உள்ள கேப் இருக்கும். அதையாவது எடுத்து வந்து போட்டுக்கோ...” என்று சொல்ல அதை எடுத்து தலையில் மாட்டிக் கொண்டாள்.

நீச்சல் குளத்தின் உள்ளே தான் இறங்கி, அவளை கையை பிடித்து உள்ளே இறக்கி விட்டான். மார்பளவு தண்ணீரில் அவள் நிற்க, அவனுக்கு அதைவிட கம்மியாக இடுப்பளவு இருந்தது.

தன் உள்ளங்கை இரண்டையும் நீட்டி “இதுல படுத்துட்டு காலையும் கையையும் வேகமாக அடி...” என்றான்.

“படுத்துட்டா…”

“ஆமாம் உனக்கு பிடிமானம் வேணுமில்ல… முதல்ல இப்படி அடி… உனக்கு கொஞ்சம் பழகியதும் தன்னால வரும்…” என்று அவன் சொல்ல அவனது உள்ளங்கையில் படுத்துக்கொண்டு காலையும் கையையும் வேகமாக அடித்தாள்.

தண்ணீருக்குள் அவன் கையை வைத்து இருந்ததால், அவள் அவன் கைகள் மேல் படுத்து இருந்தது அவனுக்கு வெயிட்டாக இல்லை. ஆனால் அவளது மென்மையான பகுதிகள் அவனது கைகளில் அழுந்த, அவனது உணர்வுகளில் மெல்ல ஒரு மாற்றம் உண்டாயிற்று. ஆனால் அவள் கைகளையும் கால்களையும் படபடவென்று அடிக்க, அதில் கவனம் செலுத்தியவன் அதை ஒழுங்கு படுத்தி எப்படி அடிப்பது என்று கற்றுக் கொடுத்தான்.

சற்று நேரம் அடித்தவள், பின்னர் இறங்கி நேராக நிற்க, “அவ்வளவுதானா” என்றான்.

“ஏன் போதாதா…?”

“இதெல்லாம் பத்தாது. டெய்லி அரை மணி நேரம் இந்த மாதிரி பிராக்டிஸ் பண்ணனும் முதல்ல. அதுக்கப்புறம் என்னோட துணையில்லாமல் ஆழம் இல்லாத இடத்துல இதே மாதிரி அடிச்சு பழகணும். அப்புறம் கையை துடுப்பு போல பின்னால தண்ணீரை

தள்ளி நீ முன்னால போகணும். இதெல்லாம் கொஞ்சம், கொஞ்சமா தான் வரும். அஞ்சு நிமிஷம் அடிச்சுட்டு, நீச்சல் வந்துடும்னு நினைச்சியா…?” என்று வழக்கம் போல் அவளைக் கேலி செய்தான்…

“அந்த அளவுக்கு நான் முட்டாள் இல்லை…!”

“அது தான் தெரியுமே வேற என்ன நினைச்சே…!” என்று அவன் கேட்டதும், அவன் கைகளில் தான் தவழ்ந்தது, அவளுடைய உணர்வுகளிலும் பெரும் மாற்றத்தை விதைக்க, அதை சொல்ல முடியாமல், “குளிருது அதான் போகலாம்னு நினைச்சேன்.” என்றாள்.

“ஏய் இது நல்ல சம்மர்டி. இதெல்லாம் ஒரு குளிர். டிசம்பர் குளிரில் உன்னை உள்ளே இறக்கிவிட்டு இருக்கணும். அவ்வளவுதான்…” என்று சொன்னவன் தொடர்ந்து, “ஏய் உனக்காக நான் இறங்கி தண்ணீரில் நிக்கிறேன்…” என்று சொல்லவும் வேறு வழி இல்லாமல் திரும்பவும் பத்து நிமிடம் அவன் கைகளில் நீச்சல் அடித்து பழகினாள். போதும் என்று அவள் நிமிர்வதற்குள், அவளை இடையோடு இழுத்து, தன்னுடன் அணைத்துக் கொண்டு நீச்சல் அடிக்க ஆரம்பித்தான்…

“என்ன இது...?” என்று திணறியவளிடம், “தலைய மட்டும் மேல தூக்கு. நான் எப்படி அடிக்கிறேன்னு பார். அதுக்கு தான்...” என்றவன் ஒரு கையால் அவளை இழுத்துக் கொண்டு இன்னொரு கையால், நீச்சல் அடித்துக் கொண்டு அந்த குளத்தை வலம் வந்தான்.

அவன் இரண்டு சுற்று சுற்றுவதற்குள் இடையோடு அழுந்திக் கிடந்த அவனது கரத்தில், அவனது உடலோடு ஒட்டிய தனது அங்கங்களின் உரசலில், நீரின் குளிர்ச்சியும் மீறி வெம்மை பாய, அவளது உணர்வுகளில் பெரும் மாற்றம் ஏற்பட்டது. அந்த உணர்வுகளின் கனம் தாங்காமல் அவளறியாமல், பயம் என்று நினைத்து இன்னும் அவன் உடலோடு ஒட்டிக் கொண்டு அவன் இழுத்த இழுப்புக்கு செல்ல, இரண்டு மூன்று தடைவை அவளுக்கு குளத்தை சுற்றி வந்து காண்பித்து விட்டு, பின்னர் கரையேறினான்.

அவளையும் கைகொடுத்து கரையேற்றி விட்டவன் அங்கிருந்த பூத்துவாலையால் தனது முகத்தை துடைத்துக் கொண்டு அவளிடம் நீட்டினான்.

வாங்கி முகம் துடைத்துக் கொண்டவள் தான் எடுத்து வந்திருந்த வேறு ட்ரெஸ்ஸை அங்கிருந்த அறையில் மாற்றிக் கொண்டு, இருவரும் பங்களாவிற்குள் சென்றனர்.

# அத்தியாயம் 18

குழந்தையை பார்க்க வந்திருந்த வைதேகியிடம் தாரா "அம்மா நீ ஒரு தடவையாவது பாட்டியை போய் பார்த்தியா…?" என்று கேட்டாள்

"என்னடி திடீர் அக்கறை? இத்தனை நாள் போகவே கூடாதுன்னு சொல்லிட்டு இருந்தே, இப்ப என்ன புதுசா…!" வைதேகி சந்தேகத்தோடு வினவ…

"ஏம்மா உனக்கு விஷயமே தெரியாதா…?"

"என்ன விஷயம்னு சொன்னாதானே தெரியும்…! மோகனும் எது தெரிஞ்சாலும் சொல்ல மாட்டான். உங்க அப்பா அதுக்கு மேல, நீ தான் சொல்லுவே…" என்று சொல்ல…

"என்னோட பையன் ட்ரீட்மென்ட்க்கு ஒரு ஹாஸ்பிடல்ல அட்மிட் பண்ணியிருந்தோம்ல, அந்த ஹாஸ்பிடல் ரங்காவோட மாப்பிள்ளைக்கு சொந்தமானது. அதுபோக ஏகப்பட்ட வசதி போல இருக்கு. அதனாலதான் அவ இரண்டு லட்சம் கொண்டு வந்து கொடுத்து இருக்கா…"

"அப்ப அது பாட்டி ரூபான்னு சொன்ன…!"

"அப்படி சொல்லி தான் என் வீட்டுக்காரர் கிட்ட கொடுத்து இருக்கா, அவளுக்கு தான் நிறைய பணம் இருக்கே, பாட்டியும் அவ கூட தான் இருக்காங்க. அப்புறம் என்ன...? தரட்டும்னு வாங்கிக்கிட்டேன். அதான் நீயும் அந்த கம்பெனியில் பாட்டி பங்கு மோகனுக்கு எழுதித் தரச் சொல்லி வாங்கிடும்மா. ரங்கா பங்கு வேண்டாம்னு சொல்லிட்டா, எல்லாத்தையும் எழுதி வாங்கு.

"அது எப்படிடி தருவாங்க...? வாசு இருக்கான்ல..."

"அவன் யாரும்மா...? அவன் என்ன நம்ம வீட்டுல பிறந்தவனா...? ஒட்டா? உறவா? அவனை இவ்வளவு நாள் வளர்த்தது போதாது. சொத்துல பங்கு கொடுக்கணுமா...!" முடிந்தவரை அம்மாவை ஏற்றி விட்டாள்.

"நான் சொன்னா உங்க அப்பா கேட்கணுமே...!"

"ஐயோ அம்மா, இதெல்லாம் எதுக்கு அப்பா கிட்ட சொல்றே...? மோகனை அழைச்சிட்டு ஒரு வக்கீல் கிட்ட போ. மோகன வச்சு கேஸ் குடுக்க சொல்லு. முழுசா கிடைக்காட்டியும் ஒரு பங்காவது கிடைக்கும்...!" சொல்லிக் கொடுத்தாள்.

"மோகனுக்கு கம்பெனி வாங்கி கொடுத்து என்னடி பிரயோஜனம்...? அதை நடத்த தெரியணும் இல்ல..."

“அதெல்லாம் நடத்துவான்மா. நீ முதல்ல அவன்கிட்ட விஷயத்தைச் சொல்லு…” என்று சொல்லி அம்மாவை அனுப்பி வைத்தாள்.

வைதேகிக்கும் அவள் சொல்வது சரி என்றே தோன்றிற்று. மோகன் வீட்டிற்கு வந்ததும் அவனிடம் விஷயத்தை கூறினாள். “யாரும்மா உங்களுக்கு சொன்னா…?”

“ நம்ம தாரா தான்டா…”

“அவ சொன்னா அதுல உண்மை இருக்கும். இப்ப என்ன பண்ணலாம் சொல்லுமா…?”

“எனக்கு என்னடா தெரியும்…? உங்க அப்பாகிட்ட, அவங்க அம்மா கிட்ட கேளுங்க அப்படின்னா, நமக்கு எதிரா தான் பேசுவார். எதுக்கும் நீ ஒரு வக்கீல் கிட்ட போய் என்ன செய்யலாம்னு கேளு…” வைதேகி ஐடியா கொடுத்தாள்.

“என்ன கேட்கிறதுமா…? எதுக்கும் நீயும் வா. நீதான் என்னை விட தெளிவாப் பேசுவே…!”

“ஏன்டா நீதான் உங்க பாட்டிக்கு வாரிசு. ஆனா எவனோ ஒருத்தன் உங்க பாட்டி சொத்தை அனுபவிச்சுட்டு இருக்கான். இதைக்கூட உனக்கு வக்கீல் கிட்ட ஒழுங்கா பேசி, என்ன

செய்யறதுன்னு கேட்க தெரியாதா...?'' என்று திட்டியவள், ''சரி நாளைக்கு காலையில, யார்கிட்ட போறதுன்னு விசாரிச்சு வை. போவோம்...'' என்று கூறினாள். அருகிலிருந்து அனைத்தையும் கேட்டுக் கொண்டிருந்த காயத்ரி, சற்று நேரம் கழித்து அம்மாவும் மகனும் படுக்க போனதும் தனது செல்போனை எடுத்துக்கொண்டு வாசலுக்கு வந்தாள்.

தங்களது அறையில் அமர்ந்து குழந்தைகளுடன் டிவியில் நகைச்சுவை சேனலை பார்த்துக்கொண்டிருந்த உபேந்திரா தனது அருகில் இருந்த ரங்காவின் அலைபேசி ஒலிப்பதை பார்த்தான். ரங்கா எதற்காகவோ அடுத்த அறைக்கு சென்றிருந்ததாள். ஒரு முறை அடித்து ஓய்ந்ததும் திரும்பவும் ஒலிப்பதைக் கண்டு எடுத்து காதில் வைத்தான்.

"அக்கா நான் தான் காயத்ரி பேசுறேன்...'' என்று சற்று பதட்டத்துடன் ஒலித்த குரலைக் கேட்டு, சற்றே குழம்பி பதில் சொல்ல முற்படும் முன், அந்த காயத்ரியே தொடர்ந்து பேசினாள். ''அக்கா, அம்மாவும், இவரும் ஏதோ பிளான் போடுறாங்க. எனக்கு புரியல. ஆனா உங்க அம்மா இன்னைக்கி தாராக்கா வீட்டுக்கு போய்ட்டு வந்தாங்க. பாட்டி கம்பெனியை பாட்டி கிட்ட இருந்து வாங்கணும், அப்படின்னு பேசிட்டு இருந்தாங்க. நாளைக்கு போய் வக்கீலை பார்க்கப் போறாங்களாம். நீங்க கொஞ்சம் கவனமா

இருந்துக்கோங்க. இது சொல்லத்தான் கூப்பிட்டேன். யாரோ வர்ற சத்தம் கேட்குதுக்கா. நான் வச்சிடறேன்.” பேசியவள் போனை வைத்து விட்டாள்.

உபேந்திராவுக்கு காயத்ரியை தெரியாது. ஆனால் பாட்டியின் கம்பெனி என்றால் அது ரங்கா புட் ப்ராடக்ட்ஸ் மட்டுமே. என்ன பிரச்சனை என்று எப்படி தெரிந்து கொள்வது…? ரங்காவிடம் சொல்லலாமா…? வேண்டாமா…?” என்று யோசித்தான்.

முடிவில் வாசுவிடமே பேசிக் கொள்வோம் என்று என்று நினைத்தவன், அவளது போனில் காயத்ரியின் அழைப்பை அழித்துவிட்டு இருந்த இடத்திலேயே வைத்து விட்டான். குளித்து நைட்டியை போட்டு கொண்டு வந்தவள், “ஏய் படுக்கலையா…! காலையில ஸ்கூலுக்கு போகணும் படுங்க…” என்றதும் இருவரும் டிவியை அணைத்துவிட்டு அப்பாவின் மேல் ஏறுவதற்கு சண்டையிட்டனர்.

“என்னடா…?”

“கதை சொல்லுங்கப்பா… அம்மாவோட முடியல.” என்று பார்த்தா காதில் கிசுகிசுக்க, “டேய் உங்களுக்கு மட்டும்தான் திட்டு விழுந்திருக்கு. இன்னும் கொஞ்சம் பொறுத்தால் எனக்கும் விழும். ஏன்டா…?”

“நாங்க மட்டும் திட்டு வாங்கினா நல்லா இருக்கதுப்பா...” என்று மகன் கிளுக்கி சிரிக்க, “டேய் திருட்டுப் பயடா நீ...” என்றதும் கூட கொஞ்சம் இருவரும் சிரித்தனர்.

“என்ன சிரிப்பு அங்க...?” ரங்கா குரல் எழுப்ப...

“மிலிட்டரி மம்மி கூப்பிட்டாச்சு. போய் படுங்க...” என்றதும் குழந்தைகள் இருவரும் சமத்தாக நடுவில் படுத்துக்கொண்டனர். அதிகாலை வாக்கிங் செல்லும்போது வாசுவிற்கு அழைத்து, “உன்னை நான் உடனே பாக்கணும்.” என்று கேட்க...

“என்ன மாப்பிள அவசரம்...?”

“நேர்ல சொல்றேன். நீங்க ஹோட்டல் அடையார் ஆனந்த பவன் வந்திருங்க...” என்றான்.

ரங்காவிடம் எனக்கு முக்கியமான கிளையன்ட் ஒருத்தர பாக்கணும். டிரைவர் கூட நீங்க கார்ல போயிடுங்க...” என்று கூறிவிட்டு தனது காரை எடுத்துக்கொண்டு வாசுவை சந்திக்கச் சென்றான்.

“என்ன மாப்ள, எதுக்கு அவசரமா ஒரு சொன்னிங்க...?”

“காயத்ரி யார்...?”

“மோகனோட வொயிப்...”

“ஓகே, தப்பா நினைக்க கூடாது. ரங்கா புட் ப்ரோடக்ட்ஸ் கம்பெனி எப்படி ஆரம்பிச்சீங்க...? யார் ஓனர்...?”

“பேங்க் லோன் வாங்கி ஆரம்பிச்சோம். பாட்டி பெயரிலும், என்னோட பெயரில் மேஜர் ஷேர்ஸ் இருக்கு. ரங்கா பெயரில் இருபது பர்சண்டேஜ் ஷேர் இருக்கு."

“உழைப்பு யாரோடது?”

“தயாரிப்பில் பாட்டியோட பங்கு இருக்கு. மற்றது எல்லாம் நான் பாத்துகிட்டேன். ஆமா எதுக்கு இதெல்லாம் விசாரிக்கிறீங்க?"

"சொல்றேன். அதுக்கு முன்னாடி இன்னைக்கு ஈவினிங் ஆறு மணிக்கு வீட்டுக்கு வாங்க."

"எதுக்குன்னு சொன்னாதானே தெரியும்?"

"நீங்க ரங்காவை எவ்வளவு தூரம் நம்புறிங்களோ, அதே அளவு என்னையும் நம்பலாம்..." என்றவன் அதற்கு மேல் வேறு எதுவும் சொல்லாமல் கோர்ட்டுக்கு கிளம்பிவிட்டான்.

வாசுவிற்கு ஏதோ ஒரு பிரச்சினை என்பது மட்டும் புரிந்தது. மாலை வீட்டுக்கு வந்தவன், பாட்டியிடம் “ஒரு ஆறு மணிக்கு இங்கு உள்ள ஆபீஸ் வாங்க." என்று சொல்ல...

"என்ன எதுவும் பிரச்சனையா? ரங்கா ஏதாவது சொன்னாளா...?"

"அதெல்லாம் இல்ல வேற ஒரு சர்ப்ரைஸ்." என்று சொல்லிவிட்டு மாடிக்குச் சென்று விட்டான்.

குறிப்பிட்ட நேரத்தில் வாசுவும் வந்துவிட, ரங்கா அவனிடம் ஆச்சரியமாக,

"என்னடா திடீர்னு சொல்லாம கொள்ளாம வந்து நிற்கிறே?"

"ஏன் உன்னை பார்க்க நான் சொல்லிட்டுத்தான் வரணுமா?"

"அட அது இல்லை. நீ எப்ப வேணா வரலாம். ஆனா உன் வேலைய விட்டுட்டு வர மாட்டியே அதனால கேட்டேன்."

"இல்ல மாப்பிள்ளை தான் வர சொன்னார்."

"அட பாருடா, மாப்பிள்ளையாம்ல மாப்பிள்ளை" என்று புருவத்தை உயர்த்த...

"அப்படி எல்லாம் பேசக்கூடாது...!"

"நீயும் ஆரம்பிக்காத. அந்தா உன்னோட மாப்பிள்ளையே வந்துட்டாரு..." என்று அவனிடம் கூறி விட்டு காபி கொண்டு வர உள்ளே விரைந்தாள்.

“வாங்க மச்சான்…” என்று வாசுவை கட்டிப் பிடித்துக் கொண்டு வரவேற்றவன்,

“வாங்க ஆபீஸ் போகலாம்.” கையோடு அங்கே அழைத்துச் சென்று விட்டான்.

காபியை எடுத்துக்கொண்டு வந்த ரங்கா, ஹாலில் தேடவே அங்கிருந்த சேதுராம், “ஆபீஸ் ரூம்ல இருக்காங்க பாரு…” என்று சொல்லவும் அங்கு சென்றாள்.

காபியை இருவரிடமும் கொடுக்க, “ரங்கா ப்ளீஸ் பாட்டியை கூட்டிட்டு நீயும் வா…”என்று சொல்ல, பாட்டியை அழைக்க உள்ளே சென்றாள்.

அவர்கள் இருவரும் வந்ததும், “உட்காருங்க…” என்று வாசுவுக்கு அருகிலிருந்த சேரை காட்டியவன், அவர்கள் அமர்ந்ததும் ஒரு டாக்குமென்ட் எடுத்து “இதில் மூவரும் சைன் பண்ணுங்க” என்று கேட்டான்.

“என்ன விஷயம்,,?” என்று ரங்கா தான் முதலில் வாய் திறந்தாள்.

“ரங்கா புட் ப்ராடேக்ட்ஸ் கம்பெனி” வாசு பேர்ல எழுதி இருக்கேன். உனக்கும் பாட்டிக்கும் மாச சம்பளம் பிக்ஸ் பண்ணி இருக்கேன். என்ன பொறுத்த வரை ரங்கா உனக்கு அந்த

கம்பெனியில் எதுவும் தேவை இல்லை. உனக்கு தனி வேலை ஒன்று இருக்கு. அதுபோக உன்னை கவனிச்சுக்க கணவன் என்ற முறையில் நான் இருக்கேன். அதனால நீ அதை விட்டுக் கொடுத்துட்டா எனக்கு ரொம்ப சந்தோஷம்.

ஆனால் பாட்டிக்கு அப்படி இல்லை. இப்போதைக்கு அவங்க பெயர்ல கம்பெனி இருக்கிறது சேப் இல்லை. அதனால அவங்க காலம் வரைக்கும் ஒரு அமௌன்ட் வாசு கொடுக்கட்டும். இதுக்கு ஓகேன்னா, இந்த பத்திரத்தில் கையெழுத்து போடு…” என்று இன்னொரு பத்திரத்தை தூக்கி காட்டினான்.

“எதுக்கு இதெல்லாம்…?” என்று வாசு இடையிட, ஏதோ புரிந்து கொண்ட பாட்டி “நீ என்ன சொன்னாலும் நான் செய்றேன்பா, எதுல கையெழுத்துப் போடணும்…” என்று கேட்க…

உபேந்திரா கொடுத்த இரண்டாவது பத்திரத்தில் கையெழுத்துப் போட்ட ரங்கா, அதையே பாட்டியிடம் கொடுத்து, “பாட்டி இதிலேயே கையெழுத்து போடுங்க…” என்று கூறினாள். பாட்டியும் அதிலேயே கையெழுத்துப் போட்டுக் கொடுத்தார். அதன்படி இப்பொழுது கம்பெனி வாசுவின் பெயருக்கு முழுவதுமாக எழுதப்பட்டிருந்தது.

“மாப்பிள இது சரியில்லை…?” என்ற வாசு சொல்ல…

“என்னடா சரி இல்ல. நான் அன்னைக்கே இது தான் சொன்னேன். பேங்க் லோன் வாங்கியது நீ. அதை கட்டி முடித்தது நீ. முழு உரிமை உனக்குத்தான். அதனாலதான் அப்பவே நான் எங்களுக்கெல்லாம் அதுல பங்கு வேண்டாம் சொன்னேன். நீ கேக்கல. இப்பவாது கேளு…” என்று பாட்டி உறுதியாக சொல்லிவிட ஒரு காப்பியை வாசுவிடம் கொடுத்தவன், இன்னொரு காப்பியை ரங்காவிடம் கொடுத்து “நீ பத்திரமாக வைத்துக்கொள்…” என்று கூறிவிட்டான்.

அதுபோக தன்னிடம் ஒரு காப்பி இருப்பதையும் சுட்டிக் காட்டினான்.

சற்று நேரம் பேசியிருந்து விட்டு வாசு சென்றுவிட, எல்லோரும் சாப்பிட்டு முடித்து தூங்க சென்றனர். குழந்தைகள் தூங்கியதும், அவனிடம் மெதுவாக “இப்ப என்ன அவசரம்…? நீங்க எதுக்கு இந்த மாதிரி கையெழுத்து வாங்கினீங்க…? எங்க வீட்டுல இருந்து யாராவது வந்தாங்களா.? அல்லது போன் பண்ணாங்களா…?” ரங்கா தனது சந்தேகத்தை கேட்க…

சொல்லிவிடலாமா என்று முதலில் நினைத்தவன், பிறகு “இல்லை ஏதோ மனசுக்குள்ள தோணுச்சு. எப்பவுமே சம்பந்தம் இல்லாம ஒரு விஷயம் மனசுக்குள்ள நோண்டும் போது, அதை

செஞ்சிடறது என்னோட வழக்கம்...” சொல்லி விட்டு தூங்குவது போல பாசாங்கு செய்தான்.

அவன் சொன்னது பொய்யென்று அவளுக்கு புரிந்தாலும், ‘எதுவாக இருந்தாலும் விஷயம் வெளியில் வந்து தானே ஆகணும்’ மனதுக்குள் எண்ணம் வர, தானும் தூங்க முயற்சித்தாள். அவள் எண்ணியது போலவே மறுநாளே அதற்கு விடை தெரிந்தது. மதியம் குழந்தைகளை அழைத்துக் கொண்டு வீட்டுக்கு வந்ததும் தபால் பெட்டியில் இருந்த தபால்களை உபேந்திரா செக் செய்ய, பாட்டியின் பெயருக்கு வந்திருந்த கவரை ரங்காவிடம் கொடுத்தான்.

அதை பிரித்து படித்தவள், அவனை அழுத்தமாக ஒரு முறை பார்த்துவிட்டு பாட்டியிடம் எடுத்து சென்றாள். “பாட்டி இந்தாங்க...”

“என்னது...?”

“உங்க பேரன் உங்களுக்கு வக்கீல் நோட்டீஸ் அனுப்பி இருக்கான்...” என்று சொல்லிக் கவரைக் கொடுக்க, ரங்காவை போல் அவரால் எளிதில் அதை எடுத்துக் கொள்ள முடியாததால், “என்ன சொல்றே ரங்கா...? அதுல என்ன எழுதி இருக்கு...?”

“உன்னோட பேரன் நீ ஆரம்பிச்ச கம்பெனிக்கு தான் தான் வாரிசுன்னு கேஸ் போட்டு இருக்கான்.”

“நான் ஆரம்பிச்ச கம்பெனியா…? அது வாசு ஆரம்பிச்சது இல்ல. என்ன இது…? அது பேங்க் லோன் வாங்கி அவன் ஆரம்பிச்சு, ராப்பகலா உழைச்சு, கம்பெனியை முன்னுக்கு கொண்டு வந்தது அவன். அதுல வந்து வேலை பாருன்னு சொன்னது கூட கேட்காமல், கௌரவம் பார்த்தது இவன். கம்பெனி எப்படி இவனுக்கு சொந்தமாகும்…?

அதனாலதான் நேத்து தம்பி வாசு பேர்ல கம்பெனியே மாற்றி எழுதிக் கொடுத்ததோ. அப்ப உனக்கு இந்த விஷயம் முன்னாடியே தெரியுமா…?”

“இல்லை எனக்கும் தெரியாது. ஆனால் எனக்கு ஒரு சின்ன டவுட் இருந்தது… அது இன்னைக்கு தெளிவாயிடுச்சு. என்ன ஒரு கேவலமான புத்தி…?” என்று ரங்கா திட்ட, பாட்டிக்கு தனது பேரனின் நடவடிக்கை, மனதை மிகவும் வருத்தியது.

முதலிலிருந்தே வாசுவை வளர்த்தது அவர்களுக்குப் பிடிக்கவில்லை என்றாலும் அதற்காக இப்படியா. தனக்கு எந்த விதத்திலும் உதவியும் இல்லை. பெற்ற பெண்ணை கவனித்துக் கொள்ளவும் இல்லை. ஆனால் சொத்தில் மட்டும் வாரிசு உரிமை

பாராட்டுவதற்கு இவர்களுக்கு என்ன உரிமை இருக்கு? நினைக்க நினைக்க பாட்டிக்கு கோபமும் வருத்தமும் ஏற்பட, அவரது தள்ளாமையின் காரணமாக அவருக்கு ஒரு மாதிரி இருந்தது.

எதையும் காட்டிக் கொள்ளாமல், "எனக்கு இதெல்லாம் தெரியாது ரங்கா. நீயே தம்பி கிட்ட சொல்லி ஏதாவது பதில் அனுப்பிடு…"

"நாங்க பாத்துக்குறோம் பாட்டி. நீங்க வருத்தப்படாதீங்க…" என்றவள் நேராக உபேந்திராவிடம் வந்தாள்.

"இதற்கு என்ன பதில் அனுப்புறது, நீங்க ஏதாவது யோசித்து வச்சிருப்பீங்களே…?"

"ம்ம், பதில் ரெடியாதான் வச்சிருக்கேன். அதை அனுப்பிடலாமான்னு படிச்சுட்டு சொல்லு." என்றவன் தான் ரெடியாக வைத்து இருந்த தபாலை அவளிடம் கொடுத்தான்.

அதில் கம்பெனி ஆரம்பித்தது வாசு என்றும், உழைப்பும் அவனுடையது என்பதால், கம்பெனி அவனுக்கு உரியது, பாட்டிக்கு, ரங்காவுக்கு எந்தவிதமான சம்பந்தமில்லை என்பதை தெளிவாக இருந்தது. அது மட்டுமல்லாமல் டாகுமெண்ட்டின் ஜெராக்ஸ் காப்பி ஒன்றும் அதனுடன் இணைத்து வைத்திருந்தான்…

“ஓகே, இதையே அனுப்பிடுங்க...! நல்ல வேளை நீங்க இந்த டாக்குமென்ட் தயார் பண்ணினது...” என்று கூறி அவனிடமே கொடுத்து விட்டாள்.

மறுநாளே உபேந்திரா பதில் நோட்டீஸ் அனுப்பி விட அடுத்த இரண்டு நாட்களில் அதனுடைய விளைவு தெரிந்தது.

அதிகாலையில் குழந்தைகளை பள்ளிக்கு கிளப்பிக் கொண்டிருக்க உபேந்திரா குளிக்க சென்றிருந்தான்.

அப்போது கீழே ஒரே இரைச்சலாக கேட்கவே என்னவென்று பதறியவாறு ரங்கா இறங்கி ஓடி வந்தாள். கீழே மோகனும் வைதேகியும் வந்து நின்று கூச்சலிட்டுக் கொண்டிருந்தனர்.

"நீங்க எல்லாம் ஒரு பெரிய மனுஷியா? சொந்தப் பேரனை விட்டுட்டு, ஊர் பெயர் தெரியாதவனுக்கு சொத்தை எழுதிக் கொடுத்திருக்கீங்களே, உங்களை...

உங்க உதவாக்கரை மகனே கட்டிட்டு நான் படுற பாடு உங்களுக்கு கண்ணுக்கு தெரியல...

பேரன், பேத்தி அவங்க பிள்ளைங்க எல்லாம் எப்படியோ போகட்டும். ஆனால் நான் நினைத்தது தான் செய்வேன்னு நீங்க செய்றீங்க...

அதனாலதான் உங்க பேத்தியும் உங்களை மாதிரியே அகங்காரம் புடிச்சு ஆடினா. அவமானம் எல்லாம் எங்களுக்கு. சொத்தெல்லாம் அடுத்தவனுக்கு…

நீங்க என்ன செஞ்சாலும் அதுக்குள்ள அவமானத்தை, நாலுபேர் எங்கள கேட்கும்போது அதை சகித்து கொள்ளணும்…" என்று வைதேகி கத்தும் போதே…

“அம்மா அதை எல்லாம் இந்த நன்றி கெட்டவங்க கிட்ட ஏன் பேசிட்டு இருக்கே? கொஞ்சமாவது அவங்களுக்கு மகனோடு குடும்பம் கஷ்டப்படுகிறதே என்கிற அக்கறை இருக்கா…

நல்ல ஜம்முனு ஒரு பணக்காரன் கிடைச்சான்னு அவன்கூட பேத்தியை அனுப்பிவிட்டு, தானும் பின்னாலேயே வந்து இங்கே உட்கார்ந்து இருக்காங்க…

இதெல்லாம் அந்த வாசு பையன் கொடுத்த ஐடியாவா இருக்கும். அப்பதானே அவன் முழுசா சொத்தை கொள்ளை அடிக்க முடியும்… த்தூ… இதெல்லாம் ஒரு பொழப்புண்ணு…" அதற்கு மேலே பேசுவதற்குள் ரங்காவின் கை அவனது கன்னத்தில் இடியாய் இறங்கியது.

"டேய் நானும் போனா போகுதுன்னு பார்த்துகிட்டே இருக்கேன். பாட்டின்னு ஒரு மரியாதை இல்லை. அவங்க இல்லைன்னா நீங்க, நான் எல்லாரும் இல்லடா...

பெற்றது மட்டும் தான் இவங்க, நம்மள வளர்க்கிறதுக்கு பாட்டியோட சம்பாத்தியம் பெரிய அளவில் உதவி பண்ணி இருக்கு. அந்த நன்றி கூட இல்லாமல் என்ன பேச்சு பேசற நீ...?”

"உன்னை வளர்த்தாங்க, அந்த வாசுவை வளர்த்தாங்கனு சொல்லு, அதான் நீங்க ரெண்டு பேரும் ஒரு மாதிரி செட்டில் ஆயிட்டீங்களே...

இந்த அதட்டற, அடிக்கிற வேலை எல்லாம் எங்கிட்ட வச்சுக்காத... ஒரு நேரம் போல இருக்காது..." என்று எள்ளலாக தமக்கையை பேச, கேட்டுக்கொண்டே இறங்கி வந்த உபேந்திரா மோகனை ஒரு அறை அறைந்தான்.

“செக்யூரிட்டி...” என்று அவன் அலறிய அலறலில் வாசலில் கேட் அருகில் நின்றவன் பதறிக் கொண்டு ஓடி வர, அவனிடம் "உனக்கு யாரை உள்ள விடணும்னு அறிவு இல்ல. அஞ்சு நிமிஷத்தில் இருந்த இடம் கிளியரா இருக்கணும். இனி இவங்க நிழல் கூட இந்த வீட்டுக்குள் நுழையக்கூடாது..." என்று கர்ஜித்தவன் அவர்களிடம் திரும்பி,

"யாரைப் பார்த்து என்ன வார்த்தை பேசுறீங்க...? என்றவன் ரங்காவை ஒரு கையால் அணைத்துக் கொண்டு, "இவ இதுக்கு முன்னாடி உங்க உறவா இருந்திருக்கலாம். ஆனா இப்ப ஒன்லி மிசர்ஸ். உபேந்திரா, கிரிமினல் லாயர் வொயிப். தேவை இல்லாம பேசுனீங்க உள்ள தூக்கி வச்சிருவேன்..." என்று ஒருவிரல் காட்டி எச்சரித்தான்.

அதற்குள் செக்யூரிட்டி தனது கடமையைச் செய்யவே அடுத்த ஐந்து நிமிடத்தில் அவர்கள் வெளியேற்ற ப்பட்டனர்.

எதுவுமே பேசாமல் சிலையாய் நின்று இருந்த பாட்டியை நெருங்கிய ரங்கா "பாட்டி..." என்று அழைக்க பதிலே பேசாமல் தனது அறைக்குள் சென்று விட்டார்.

பின்னாலேயே சென்ற ரங்கா, அங்கே பாட்டி இடிந்து போய் கட்டிலில் அமர்ந்து இருப்பதை பார்த்து, "விட்டுத்தள்ளுங்க பாட்டி, அவங்க குணம் தெரிஞ்சதுதானே. இது நாள் வரைக்கும் கொடுத்து பழக்கி விட்டுட்டீங்க. இப்ப அது மொத்தமா இல்லேன்னு ஆகும்போது, அவங்களால அதை ஜீரணிக்க முடியலை. அதுக்காக வாசுவோட உழைப்பை நாம இவர்களுக்கு சுரண்டிக் கொடுக்க முடியாது..." என்ற ஆறுதல் சொன்னாள்.

ஆனாலும் பாட்டி மௌனமாக இருப்பதை பார்த்து, அவளுக்கு சற்று பயமாகக் கூட இருந்தது.

அதற்குள் உள்ளே வந்த உபேந்திரா, "பாட்டி நீங்க பயப்பட வேண்டாம். உங்களுக்கு ரங்காவும், வாசுவும் இருக்காங்க... நானும், தாத்தாவும் உங்களை கவனித்துக் கொள்வோம்... விட்டு தள்ளுங்க..." என்றவன் ரங்காவை பார்த்து

"ஸ்கூலுக்கு நேரம் ஆயிடுச்சு,கிளம்பு..." என்றான்.

காரில் செல்லும் போது மௌனமாக வந்த ரங்காவிடம், "இதையெல்லாம் வாசு கிட்ட சொல்லிட்டு இருக்காதே...! என்று உபேந்திரா சொல்ல தலையாட்டி வைத்தாள் ரங்கா.

ஆனால் மதியமே சேதுராமன் பாட்டிக்கு ரொம்ப முடியாமல் தங்களது ஆஸ்பத்திரியில் சேர்த்து இருப்பதாக தகவல் சொல்ல, உபேந்திராவும் ரங்காவும் குழந்தைகளை அழைத்துக்கொண்டு ஹாஸ்பிடலுக்கு சென்றனர்...

பாட்டி ஐசியூவில் அனுமதிக்க பட்டிருந்தார். உபேந்திரா தாத்தாவிடம் விசாரிக்க, அவர் "காலையில் ரங்கா சாப்பிடவே இல்லை. சரி, மதியமாவது கொஞ்சம் சாப்பிடட்டும் என்று அவளைக் கூப்பிட அவளது அறைக்குப் போனேன. ரங்கா படுத்து தான் இருந்தாள். கூப்பிட, கூப்பிட பதில் இல்லாததால் அசைத்துப் பார்த்தேன். மயங்கி இருப்பது தெரிந்தது. அதான் உடனே கொண்டு வந்து சேர்த்தேன். பாப்போம் திடீர் அதிர்ச்சி பலமாய் இருதயத்தை தாக்கி இருக்கும்னு நினைக்கிறேன்..." என்றார்.

பாட்டியை ஐசியூவில் பார்த்ததும் ரங்காவுக்கு பஹீரென்று இருந்தது. அவளது பேச்சு, சிரிப்பு, சுவாசம் எல்லாமே பாட்டி தான். பாட்டி படுத்ததை அவளால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. அழுகையை அடக்கி கொண்டு ஐசியூவில் வாசலில் உள்ள ஒரு நாற்காலியில் அவள் அமர்ந்திருந்த கோலம், பரிதாபமாக இருந்தது.

விஷயம் தெரிந்து வாசு கீர்த்தியுடன் வந்துவிட்டான். அவனைக் கண்டதும் அத்தனை நேரம் அடக்கி வைத்திருந்த அழுகை வெடித்தது. அவனது தோளில் சாய்ந்து அழுதாள்.

தனது கண்ணீரை அடக்கிக் கொண்டு "ஏய் ரங்கா என்ன இது? பாட்டிக்கு ஒண்ணும் ஆகாது. ஆகவிட மாட்டேன். பயப்படாதே. எதுக்கு அழறே? நீ அழுதால் குழந்தைகளும் அழும். கண்ணைத் துடை..." என்று அவளது தோளில் தட்டி ஆறுதல் படுத்தினான்.

தாங்க முடியாத துன்பம் வரும்போது, மனம் தனக்கு நெருக்கமானவரையே தேடும். அவரது தோள் சாய்ந்து ஆறுதல் தேட மனம் துடிக்கும். அவரது வார்த்தைகளில் மனதின் துயரினை மறக்க நினைக்கும். இது மனிதருக்கே உரிய நியதி. அந்த வகையில் ரங்காவின் உற்ற நண்பனாய் நான் இல்லையே...? என் தோள் சாய்ந்து அவள் ஆறுதல் தேடவில்லையே? உபேந்திராவின்

மனம் சுணங்கிற்று. தன்னவளின் துயர் தீர்க்க அவனது மனம் தவித்தது. ரங்கா உன் மனதுக்கு நான் எப்பொழுது நெருக்கமாவேன்…? என்ற கேள்வியோடு அவன் தனது மனையாளை பார்த்திருந்தான்.

# அத்தியாயம் 19

"பாட்டிக்கு என்ன ஆச்சு ரங்கா?" என்ற கேள்விக்கு எந்தவிதமான பதிலும் சொல்லாமல் அழுதுகொண்டே இருந்தவளை, சமாதானப்படுத்த முடியாமல், கீர்த்தியிடம் கண்அசைத்துக் காட்டி, அவளைப் பார்த்துக்க சொல்லிவிட்டு, உபேந்திராவிடம் வந்தான் வாசு.

"மாப்ள என்ன ஆச்சு? பாட்டி நல்லாதான இருந்தாங்க… இந்த அளவு சீரியஸா ஆகணும்னா என்ன பிரச்சனை? உங்க ரெண்டு பேருக்குள்ளே ஏதாவது பிரச்சினையா?" என்று தன் சந்தேகத்தை வாசு, உபேந்திராவிடம் கேட்க…

"அதெல்லாம் ஒண்ணும் இல்ல மாப்பிள்ள. இது வேற…"

"அப்படின்னா. ரங்காவோட அம்மா அல்லது மோகன் வந்தாங்களா…?" என்று அவனாகவே யூகித்தான்.

உபேந்திரா பதில் சொல்லாமல் மவுனமாக இருக்கவே, அப்படித்தான் என்பது புரிந்தது…

"அப்ப நீங்க அன்னைக்கு எல்லாம் தெரிஞ்சு தான் என் கிட்ட கையெழுத்து வாங்கினீங்க, அப்படித்தானே…!"

"எல்லாம் தெரியாது. ஆனா ஒரு சின்ன யூகத்தின் அடிப்படையில் உன் கிட்ட கையெழுத்து வாங்கினேன். நான் செஞ்சது சரின்னு பாட்டியும், ரங்காவும் சொல்லிட்டாங்க. நீங்க அத பத்தி கவலை படாதிங்க..."

"இல்ல மாப்ள நான் என்ன சொல்ல வரேன்னா...!" என்றவனை இடையில் கையமர்த்தி தடுத்தான்.

"இப்ப முக்கியம் பாட்டியோட உடல் நிலைதான். அதைப் பார்ப்போம் வாங்க" என்றவன் டாக்டரை பார்க்க வாசுவையும் அழைத்து சென்றான்.

உபேந்திராவை கண்டதும் அந்த டாக்டர் மரியாதையுடன், "வாங்க சார் உக்காருங்க..." என்றார்.

"பாட்டியோட நிலைமை எப்படி இருக்கு...?"

“கொஞ்சம் க்ரிட்டிக்கல் தான். பலமான அதிர்ச்சி அவங்கள தாக்கியிருக்கு. சாப்பிடாம வேற இருந்திருக்காங்க. ரெண்டும் சேர்ந்து மயக்கத்துக்கு போயிருக்காங்க. முதல்ல கண்ணு முழிக்கட்டும். அப்புறம் அடுத்த ட்ரீட்மென்ட் பற்றி யோசிக்கலாம்..." டாக்டர் தனது தரப்பினை தெளிவாகச் சொன்னார்.

"எப்ப கண் விழிப்பாங்க?" என்ற வாசுவின் கேள்விக்கு...

"இப்ப நிறைய மெடிசின் கொடுத்திருக்கு. நாளை காலை வரை ஆகும். நர்சு கூடவே இருக்க வச்சிருக்கோம். கண்விழித்தால் அவங்க உடனே சொல்லிடுவாங்க. ரொம்ப வயசாயிடுச்சி, அது ஒரு காரணம் சார்."

"ஓகே புரியுது..." என்றான் உபேந்திரா.

பாட்டியின் அறை வாயிலில் உறைந்து போய் அமர்ந்திருந்த ரங்காவிடம், "வீட்டுக்கு போகலாம் வா. குழந்தைங்க உன்னை தேடுவாங்க." என்றான்.

"இல்ல நான் வரல. நீங்க போங்க..." என்றவள் கண்ணை மூடி சேரின் பின்னால் சாய்ந்து கொண்டாள்.

நேரமாகி விட்டபடியால் ஏற்கனவே தாத்தாவுடன் குழந்தைகளை வீட்டுக்கு உபேந்திரா அனுப்பியிருந்தான். இப்போது தானும் செல்லாவிடில் தாத்தாவால் குழந்தைகளை சமாளிக்க முடியாது என்பதால் வாசுவை அழைத்து, "வாசு, நீயும் கீர்த்தியும் எங்க வீட்டுக்கு போங்க. நான் ரங்காவை பார்த்துக்கிறேன்..." என்றான்.

"வேண்டாம் மாப்பிள்ளை. நீங்க வீட்டுக்கு போங்க. ரெண்டு பேரும் இல்லைன்னா குழந்தைங்க திண்டாடி விடும். வேணும்னா கீர்த்தியையும் உங்க வீட்டுக்கு அழைச்சிட்டு போய் விடுங்கள்.

எல்லா குழந்தைகளையும் கீர்த்தி பார்த்துப்பா. நான் இங்க ரங்கா கூட இருக்கேன்." என்று பிடிவாதமாக சொல்லி, கீர்த்தியையும் குழந்தையையும் உபேந்திராவுடன் அனுப்பி விட்டான்.

வீட்டுக்கு வந்ததும் குழந்தைகள், "அப்பா அம்மா எங்கே? நீங்க மட்டும் வந்து இருக்கீங்க? அம்மாவுக்கும் உடம்பு சரி இல்லையா! பாட்டி மாதிரி அவங்களும் படுத்து இருக்காங்களா? டாக்டர் ஊசி போட்டாரா? இருவரும் மாறி, மாறி கேள்விகளால் துளைத்து எடுத்தனர்.

முடிந்த வரைக்கும் பதில் சொல்லி குழந்தைகளுக்கு சாப்பாடு கொடுத்து பின்னர் கீர்த்தியுடன் விளையாட அனுப்பி வைத்தான்.

"ரங்கா எப்படி இருக்கிறா?" என்று கேட்ட தாத்தாவிற்கு, "இன்னும் கண் விழிக்கலை தாத்தா. நீங்க என்ன நினைக்கிறீங்க?" தாத்தாவை மருத்துவராக நினைத்து கேள்வி கேட்க...

"எனக்கும் நம்பிக்கை இல்லை. ஹார்ட் ரொம்ப வீக்கா இருக்கு. எனக்கு என்னவோ அவளுக்கு ரொம்ப நாள் இந்த ப்ராப்ளம் இருந்திருக்கணும். அதைச் சொல்லாமல் மறைத்து இருக்கணும்."

"இருக்கலாம் தாத்தா. ஏற்கனவே பிரச்சனையான வாழ்க்கை. அதிலும் கடைசி இப்போ ஒரு மூணு வருஷம் ரங்காவால வேற

பிரச்சனை. எல்லாத்தையும் மனசுக்குள்ள வச்சுட்டு புழுங்கிகிட்டே இருந்து இருப்பாங்க."

"எனக்கும் அப்படி தான் தோணுது. ரங்கா உன் கூட வரலையா?" தாத்தா கேட்டார்.

"வரலைன்னு சொல்லிட்டா...!"

"சரி பார்த்துக்கோ...!" என்று சொல்லி தாத்தாவும் படுக்கச் சென்று விட, தங்களது அறைக்கு வந்த உபேந்திராவுக்கு அறையில் குழந்தைகளும் ரங்காவும் இல்லாதது வெறிச்சென்று இருந்தது.

மூன்று மாதங்களாக தான் இந்த மாற்றம். அதற்கு முன்னர் தனியாகத்தான் இருந்தான். ஆனால் இப்போது ரங்காவும் குழந்தைகளும் இல்லாமல் அவனால் இருக்க முடியவில்லை.

கீர்த்தியை அழைத்து, "நீங்க உங்களோடவே குழந்தைகளை வச்சுக்கோங்க. நான் ஹாஸ்பிடல் போறேன்." என்று கூறிவிட்டு கிளம்பினான்.

அங்கு சென்று பார்த்தபோது அதே நிலையிலேயே ரங்கா சாய்ந்திருக்க, அருகிலேயே இன்னொரு சேரில் வாசு இருந்தான்.

"வாசு நீங்க ரெண்டு பேரும் ஏதேனும் சாப்பிட்டீங்களா?" என்று கேட்க...

"ரங்கா எதுவும் வேண்டாம்னு சொல்லிட்டா...!" என்று அவன் பதில் சொல்ல, அங்கிருந்த சிஸ்டரிடம் ஒரு பிளாஸ்க் வாங்கி தானே சென்று இருவருக்கும் பால் வாங்கி வந்தான்.

வாசுவிடம் கொடுத்து குடிக்கச் சொல்ல, வாசு குடித்து விட்டான்.

ஆனால் ரங்கா, அவன் அழைப்பை காதில் கேட்காமல் அமர்ந்திருந்தாள். "ரங்கா ப்ளீஸ், இந்த பாலையாவது கொஞ்சம் குடி. உனக்கு எப்படி உன்னோட பாட்டி வேணுமோ, அதே மாதிரி எனக்கும், என்னோட குழந்தைகளுக்கும் நீ வேணும். ப்ளீஸ் அடம் பிடிக்காதே.!" கிட்டத்தட்ட தன் குழந்தையிடம் கெஞ்சுவது போல் கெஞ்சினான்.

குழந்தைகள் பெயர் சொல்லவும் சற்றே அசைந்தவள் அந்தப் பாலை குடித்துவிட்டு மறுபடியும் அப்படியே அமர்ந்து விட்டாள்.

வேறு வழியில்லாமல் உபேந்திராவும் அவர்களுடன் அங்கேயே இருந்து விட, மூவரும் தூங்கவும் இல்லை. கனத்த மௌனத்தில் இடையே இரவு வேலை பார்க்கும் நர்ஸ், டாக்டரின் நடமாட்டத்தை தவிர வேறு எதுவும் இல்லாமல் அமைதியாக இருந்தது.

அதிகாலை நான்கு மணி அளவில் பாட்டிக்கு நினைவு வர, அங்கிருந்த நர்ஸ் உடனே வெளியில் வந்து ரங்காவிடம் “மேடம் அந்த பாட்டிக்கு நினைவு வந்துருச்சு. ஏதோ ஒரு பேர் சொல்றாங்க வந்து பாருங்க..." என்று சொன்னதும், மூவருமே உள்ளே சென்றனர்.

ரங்காவையும், வாசுவையும் பார்த்த பாட்டியின் விழிகள் பிரகாசித்தது. கண்களில் கண்ணீர் வழிய ரங்கா "பாட்டி நீங்க எழுந்து வாங்க. நீங்க இல்லாம என்னால இருக்க முடியாது. ப்ளீஸ் பாட்டி நீங்க வேற எதுவும் நினைக்காதீங்க..." என்று அழ, வாசுவும் கண் கலங்கினான்.

"பாட்டி கம்பெனியை வேணா அவங்களுக்கே கொடுத்துடுவோம். நாம வேணா புதுசா ஒண்ணு ஆரம்பிக்கலாம். ஆனா நீங்க படுத்துட்டா எங்களால் எதுவும் செய்ய முடியாது..." என்று அவனும் சின்ன குழந்தையாய் அழ, பாட்டி சிரமப்பட்டு பேசினாள்.

"வாசு கம்பெனி உனக்குத்தான் சொந்தம். எக்காரணம் கொண்டும் யாரிடமும் கொடுக்காதே. எல்லாருக்கும் தேவையான அளவு செஞ்சாச்சு. அது உன்னோட உழைப்பு. உண்மையிலேயே நீ என் மேல அன்பு வைத்திருந்தால் என்னோட இந்த

வார்த்தையை மீறக் கூடாது." என்றவர் ரங்காவின் கையை பிடித்து உபேந்திராவை தன் அருகில் சைகையால் அழைத்தார்.

அருகில் அவன் வந்ததும் அவளது கையை உபேந்திரா விடம் பிடித்துக் கொடுத்து, "எத்தனைப் பிரச்சனை வந்தாலும், இவள் உங்க கிட்ட கிட்ட எந்த மாதிரி நடந்து கொண்டாலும், இவளையும் குழந்தைகளையும் விட மாட்டேன்னு எனக்கு சத்தியம் பண்ணுப்பா…” என்று கேட்டார்.

“என்னோட உயிரே போனாலும் நான் இவர்களை விட்டுக் கொடுக்க மாட்டேன். நீங்க முதல்ல குணமாகி வாங்க. மனச போட்டு உளப்பிக்காதீங்க…!” என்றான். அவன் அப்படி சொன்னதும், கண்களிலும் முகத்திலும் மெல்ல சாந்தம் குடிகொள்ள, நிம்மதியான பார்வையோடு அவரது மூச்சு ரங்காவை பார்த்தபடியே பிரிந்தது.

அவர் உயிர் பிரிந்தது கூட அறியாமல், தேசஜோடு ஜொலித்த அவரது முகத்தைப் பார்த்து, “பாட்டி…” என்று மெதுவாக ரங்கா அழைத்தாள். அவரது கண் விழிகள் அசையாமல் நின்று இருக்கவே சந்தேகம் கொண்ட உபேந்திரா நர்சை அழைத்தான்.

நர்ஸ் வந்து பார்த்துவிட்டு டாக்டரை அழைக்க விரைந்து சென்றாள். ஏதோ விபரீதம் என்று தெரிந்து கொண்ட ரங்கா, “வாசு பாட்டிக்கு என்ன ஆச்சு, பாரு…!” என்று கதற ஆரம்பிக்க, அவள்

கையைப் பிடித்து தடுத்த உபேந்திரா, “ரங்கா, இது ஐசியூ. இங்க கத்தக் கூடாது.” என்று அவளை அடக்கினான்.

அதற்குள் விரைந்து வந்த டாக்டர், பாட்டியின் நாடியை பரிசோதித்துப் பார்த்துவிட்டு, “சாரி சார். முடிஞ்சிடுச்சு…” என்று தனது வருத்தத்தை தெரிவிக்க, ரங்காவின் வாயில் இருந்து “பாட்டி” என்ற அலறல் புறப்பட்டது.

வாசுவும் அழுகையில் குலுங்க, அதிர்ச்சியில் மயக்கமாகி விட்ட ரங்காவை, ஒரு அறையில் படுக்க வைத்து முதலுதவி அளித்தனர். அதற்குள் விஷயத்தை சேதுராமிடம் தெரிவித்த உபேந்தரா, அடுத்து என்ன செய்வது என்று கேட்டான்.

“நீ எதுக்கும் அவங்க வீட்டுக்கு தகவல் தெரிவிச்சுடு. இல்லேன்னா பிரச்சனை வேற மாதிரி திரும்பும்…?” அனுபவசாலியான தாத்தா சொல்லிவிட வாசுவிடம் வந்து, “வாசு, நீயே இப்படி அழுதால் ரங்காவை எப்படி சமாளிப்பது? நீ எதுக்கும் அவங்க வீட்டுக்கு தகவல் சொல்லிடு…” என்றான்.

வாசுவும் நிலைமையைப் புரிந்துகொண்டு, அவர்கள் வீட்டுக்கு அழைத்து விஷயத்தை சொல்ல, போனிலேயே வைதேகி, “அட பாவிங்களா சொத்துக்காக அவங்கள கொன்னுட்டீங்களா?” என்று கேட்க, மனது தாளாமல் வாசு போனை வைத்து விட்டான். அடுத்து மடமடவென்று காரியங்கள் நடந்தேறியது. ரங்காவை

மயக்கம் தெளிவித்து உபேந்திரா தன்னுடன் அழைத்துச் செல்ல, வாசு பாட்டியை வீட்டுக்கு கொண்டு வரும் பொறுப்பை ஏற்றுக்கொண்டாள்.

வீட்டுக்கு வந்ததும் குழந்தைகள், சிலையாய் இருந்த அம்மாவையும், படுத்துக் கிடந்த பாட்டியையும் பார்த்து பயந்துவிட்டனர். “அப்பா அம்மா ஏன் எப்படி இருக்காங்க…? பாட்டி ஏன் எழுந்திருக்க மாட்டேங்கிறாங்க? அவங்களை எதுக்கு ஹாலில் படுக்க வச்சு இருக்கீங்க? என்று சந்தேகம் கேட்க, தனக்கு தெரிந்த வகையில், பதில் சொல்லி அவர்களை சமாதானம் செய்து, கீர்த்தியுடன் மாடிக்கு அனுப்பி வைத்தான்.

அதற்குள் வாசலில் பெரிதாக சத்தம் கேட்கவே என்னவென்று பார்த்தபோது கேசவன், வைதேகி, மோகன், காயத்ரி, தாரா, சரவணன் எல்லோரும் வந்திருந்தனர்.

அவர்களை உள்ளே விடச் சொல்லி உபேந்திரா சொல்லிவிட, “உள்ள போய் சத்தம் போட்டீங்கன்னா, வெளியில் அனுப்பிடுவாங்க…” என்று எச்சரித்து வாட்ச்மேன் உள்ளே அனுப்பி வைத்தான். சரவணன் தாராவை எதுவும் பேசக்கூடாது என்று சொல்லி அழைத்து வந்திருந்ததால், அவள் எதுவும் பேசவில்லை. ஆனால் மோகனும் வைதேகியும் விடாமல் வாசுவை நிந்தித்தனர்.

இறுதியாக வாசுவை இறுதி காரியங்கள் செய்ய தயாராக உபேந்திரா சொன்னபோது, வைதேகி “அது எப்படி? பெத்த பிள்ளை இருக்கிறார். யாரோ ஒரு அநாதை அவங்களுக்கு காரியம் பண்ணறதா…?” என்று பிரச்சினையை கிளப்ப, கூடியிருந்த அத்தனை பேரும் சுவராசியமாக வேடிக்கை பார்க்க ஆரம்பித்தனர்.

"வாசு என்ன இருந்தாலும் பாட்டியோட பையன் இருக்கிறார். அவரே பண்ணட்டும்…” என்று சேதுராமன் தீர்மானமாக சொல்லிவிட, வாசுவும் புரிந்து கொண்டு ஒதுங்கி விட்டான்.

கேசவன் அனைத்து காரியங்களையும் செய்ய, பேரன் பேத்தி செய்ய வேண்டிய சடங்குகளை ரங்காவும், வாசுவும், மோகன், தாராவோடு சேர்ந்து செய்தனர். அதற்கும் வாசு செய்யக்கூடாது என்று வைதேகி ஒரு முணுமுணுக்க, “பேசாமல் காரியம் மட்டும் பண்றதா இருந்தா இருங்க. இல்லேன்னா நீங்க எல்லாரும் கிளம்புங்க…!” என்று உபேந்திரா உறுதியாக சொல்லிவிட, மோகன் அம்மாவிடம் அமைதியாக இருக்கும்படி சைகை செய்தான்.

ரங்கா, ஐயர் செய்ய சொல்லிய சடங்குகளை இயந்திர கதியில் செய்து முடித்தவள், பாட்டியை எடுத்துகொண்டு சென்றதும் திரும்பவும் மூர்ச்சித்து விழுந்தாள். பாட்டியின் சுவாசம் நின்றதும் ‘பாட்டி’ என்ற அலறலோடு கீழே விழுந்தவள்தான், அதன் பிறகு

ஒரு வார்த்தை பேசினாள் இல்லை. கண்களிலிருந்து ஒரு சொட்டுக் கண்ணீரும் விழவில்லை. கற்பாறை போல இறுகி இருந்தவள், திரும்பவும் மயங்கி விழ, அருகிலிருந்த கீர்த்தி அவளை தாங்கி பிடித்தாள்.

அவள் மயங்கியதை கண்ட உபேந்திரா அவளை தூக்கிக் கொண்டு கீழே இருந்த அறை ஒன்றில் படுக்க வைத்து, ஆஸ்பத்திரியிலிருந்து வந்திருந்த டாக்டரை அழைத்து பார்க்கச் செய்தான்.

“ரொம்ப அழுத்தமான மனநிலையில இருக்காங்க. தூக்கத்துக்கு ஊசி போடறேன். தூங்கி அவங்களா விழிக்கட்டும். அதுதான் நல்லது…” என்று கூறி ஊசி போட்டு விட்டு சென்றார்.

கீர்த்தயிடம் “பார்த்துக்கோம்மா…” என்று கூறிவிட்டு உபேந்திரா மற்றவர்களுடன் பாட்டியின் இறுதி யாத்திரைக்கு சென்றான். மின் மாயனத்தில் எல்லாம் முடித்து விட்டு அவனும், வாசுவும் திரும்பும் போதும் ரங்கா தூக்கத்தில் இருந்து எழுந்திரிக்க வில்லை.

தாத்தாவிடம் சென்று, “என்ன தாத்தா ரங்காவுக்கு இன்னும் விழிப்பு வரவில்லை…?” என்று கேட்க அவரும் வந்து பரிசோதித்து பார்த்து விட்டு. “இன்னும் ஒரு மணி நேரம் பார்க்கலாம். பயம் எதுவும் இல்லை…” என்று கூறினார்.

குழந்தைகளைத்தான் உபேந்திராவால் சமாளிக்க முடியவில்லை. பெரிய பாட்டியும் இல்லை, அம்மாவுக்கும் ஏதோ என்று பயந்து போய் அழுத குழந்தைகளை மாடிக்கு அழைத்து வந்து, “பார்த்தா நீ சமத்து தானே…?” என்றான் மகனிடம்…

“ம்ம்…” என்று தலையாட்டினான் மகன்…

“நீ அப்பா மாதிரி பெரிய ஆளா வருவேன்னு சொல்லி இருக்கேன் இல்ல…!” என்று சொன்னதும்…

“ஆமா…”

“அப்ப, நீதான் தங்கச்சி அழாம பார்த்துக்கணும். நீதானே அவளுக்கு அண்ணன். எனக்கு அப்புறம் நீதானே அவளை பார்த்துக்கணும்…” என்று பொறுப்பை மகன் தலையில் கட்டவும் அவனும் பெரிய மனிதன் மாதிரி தலையாட்டினான்.

“இப்பதான் நீ குட் பாய். தங்கச்சியை அழாம பார்த்துக்கோ. ஹர்ஷா கூட இரண்டு பேரும் விளையாடுங்க. அம்மாவுக்கு ஒண்ணும் இல்லை. சாப்டாம இருந்ததுனால டயர்ட் ஆக இருக்குன்னு தூங்கறாங்க. இப்ப எழும்பிடுவாங்க. சரியா…?” ஒருவாறு அவர்களை சமதானப் படுத்தி கீர்த்தி கூட அனுப்பி வைத்தான். அதுக்கே அவனுக்கு மூச்சு முட்டிற்று.

கீழே வந்து ரங்கா படுத்திருந்த அறைக்குள் நுழைந்தான். அப்போதுதான் இமைகளை சற்று பிரிக்க முயன்று கொண்டு இருந்தவளை பார்த்து அவள் அருகில் சென்று, "ரங்கா, எழுந்திரு. பசங்க உன்னை தேடறாங்க…" எதை சொன்னால் அவளது கவனம் மாறுமோ, அந்த வார்த்தையை சொன்னதும் சிரமப்பட்டு கண் விழித்தாள்.

"என்ன இது ரங்கா…? உன்னை நான் ரொம்ப தைரியமான பொண்ணுன்னு நினைச்சேன். ஆனால் நீ என்ன இப்படி இருக்கே…? பாட்டி நம்ம கூட தெய்வமா இருப்பாங்க. நீ அவங்களை மட்டுமே யோசிக்கக் கூடாது…" என்று அவன் சொல்லவும், கீர்த்தியும் குழந்தைகளும் உள்ளே நுழைந்தனர்.

ரங்கா விழித்து விட்டதை பார்த்து பாவனா "அம்மா…" என்று அழைத்துக் கொண்டு வந்து அவள் மடியில் ஏறியது. தன்னையறியாமல் அவளது கைகைள் குழந்தையை வளைக்க, மௌனமாய் இருந்த அம்மாவை பார்த்து, முகத்தை தன்னை பார்த்து திருப்பி, "இப்ப சரியாயிடுச்சா…?" என்று தன மழலைக் குரலில் கேட்க, அப்போதுதான் தன் மடியில் இருந்த பாவனாவை பார்த்தாள்.

"அம்மா பாட்டி எங்க…? சாமி கிட்ட போயிட்டாங்களா…? இனி வரவே மாட்டாங்களா…?" குழந்தையின் கேள்வி ரங்காவின்

மனதை உலுக்க, ‘இனி வரவே மாட்டாங்களா…! பார்க்க முடியாதா, அப்ப எனக்கு யார் இருக்கா…? நான் எப்படி இந்தக் குழந்தைகளை வளர்ப்பேன்…? பாட்டி…’ மறுபடியும் ஏதேதோ எண்ணங்கள் குமிழியிட, தன் தலையை பிடித்துக் கொண்டாள்.

மறுபடியும் அவள் ஸ்டெரெயின் ஆவதை புரிந்து கொண்ட உபேந்திரா, “பட்டுக் குட்டி, அம்மா முதல்ல குளிச்சு சாப்பிடட்டும். அப்புறம் அவங்க கூட நாம் பேசலாம்…” என்றவன் ஏற்கனவே ரஞ்சிதம்மா கொண்டு வந்த ஜூசை அவளது வாயில் வைத்து புகட்டினான்.

எதிர்ப்பே காட்டாமல் ஜூசை குடித்தவள், மீண்டும் தலையணையில் சாய்ந்து கண்களை மூடிக் கொள்ள, “ரங்கா மாடிக்கு போகலாம். உன்னால் நடக்க முடியுமா…?” என்று அவளிடம் கேட்க, முடியும் என்பது போல தலை அசைத்தவள் கட்டிலை விட்டு இறங்க முற்பட்டாள்.

இரண்டு நாளாக சரியான சாப்பாடு இல்லாமல் இருந்ததால் தள்ளாட, உபேந்திரா அவளை தாங்கி பிடித்துக் கொண்டான். அனிச்சையாய் அவளது உடல் சிலிர்த்து அடங்க, அதை உணர்ந்தும் உணராதவன் போல, “ரொம்ப வீக்கா இருக்க, நான் கூட்டிட்டு போறேன்…” அவள் காதோரம் சொன்னவன், அவளை கைபிடியாய் அழைத்துக் கொண்டே மாடியேறினான்.

தங்களது அறைக்குள் வந்ததும், அவள் முன் போல அங்கிருந்த சேரில் உட்கார்ந்து விட, என்ன செய்வது என்று புரியாமல் கீர்த்தியை அழைத்தான்.

“என்ன அண்ணா?” என்று வந்தவளிடம், “குழந்தைங்க எங்க...?” என்று கேட்க...

“அவர் கிட்ட இருக்காங்க...!”

“சரிம்மா, இவ கிட்ட பேசி, குளிக்க சொல்லும்மா. அப்புறம் ரஞ்சிதம்மா கிட்ட சாப்பாடு கொடுத்து அனுப்பறேன்...” என்று கூறி விட்டு கீழே சென்றான்.

கீர்த்தி மெல்ல ரங்காவின் அருகில் சென்று, “அக்கா இப்படியே இருந்தா எப்படி...? முதல்ல குளிச்சு சாப்பிடுங்க...” என்று அவளை கிளப்பி தானே அவளது உடைகளை தேடி பிடித்து எடுத்து கொடுத்து குளிக்க பாத்ரூமிற்குள் அனுப்பி வைத்தாள். உள்ளே குளிக்க சென்றவள் பத்து நிமிடம் ஆகியும் வெளியில் வராமல் இருக்க பயந்து போன கீர்த்தி கதவை தட்ட, ரங்கா திறக்கவே இல்லை.

மீண்டும் மீண்டும் தட்ட கடைசியில் ஒரு வழியாய் கதவை திறந்தாள். அரைகுறையாய் சுடிதாரை மாட்டிக் கொண்டு வந்த ரங்காவை சரி செய்து அவள் தலையை உலர்த்தி விட்டு, அவளை

கட்டில் உட்கார வைத்து விட்டு வாசுவிடம் வந்தவள், "நீங்க குழந்தைகளோடு அக்கா கிட்ட இருங்க. நான் கீழே போய் ஏதாவது சாப்பிட எடுத்துட்டு வரேன்..." என்று சொல்லி, வாசுவையும் குழந்தைகளையும் ரங்காவின் அறைக்கு அனுப்பி விட்டு சென்றாள்.

குழந்தைகள் மூவரும் கட்டிலில் குதிக்க ஆரம்பிக்க அதை மௌனமாய் பார்துக் கொண்டே அமர்ந்து இருந்த ரங்காவை பார்த்த வாசுவிற்கு தாங்கவில்லை. இதற்குள் எத்தனை சண்டை அவனிடம் போட்டு இருப்பாள். எத்தனை பேச்சு...? அத்தனையும் எங்கே போனது...?"

"ரங்கா..." என்று அவளை அழைத்தான்.

'என்ன...?' என்பது போல அவனைப் பார்த்தாலும் பதில் பேசவில்லை...

"என்னடா.? என்ன செய்யுது...? தலை வலிக்குதா...?" என்று அவளிடம் மெல்ல பேச்சு கொடுத்து பார்த்தான். அவனது கேள்வி கேட்டு, அவளது நெற்றி சுருங்கியதே தவிர பதில் சொல்வே விழையவில்லை. அதற்குள் கீர்த்தி தான் கொண்டு வந்த சாப்பாடு தட்டை அவளிடம் நீட்ட, வாங்கிக் கொண்டவள் பாதியை சாப்பிட்டு விட்டு கையை கழுவி விட்டாள். வாசுவும்,

குழந்தைகளும் மாறி மாறி பேசினாலும் அவள் காதில் எதுவுமே விழவில்லை...

அவளது நினைவுகள் எங்கோ பயணித்தன. சிறு வயதில் இருந்து பாட்டியுடன் இருந்த நினைவுகள் அவளுக்கு வரிசையாக வர அதில் இருந்து மீள முடியாமல் தவித்தாள். அவளது மனது பாட்டியின் மறைவை ஒப்புக் கொள்ள மறுத்தது. தன்னுடைய ஒவ்வொரு முடிவுக்கும் உறுதுணையாக இருந்த ஒரே பற்று கோல் வீழ்ந்து போக, பற்றிக் கொள்ள கொழுகொம்பு கிடைக்காமல் அவளது மனம் காற்றில் சிக்குண்ட கொடியாய் அலை பாய்ந்தது.

கீழே வந்தவர்கள் அனைவரும் விடை பெற்று சென்றிட மேலே வந்த உபேந்திரா, வாசு, கீர்த்தி, குழந்தைகள் அனைவரும் தங்கள் அறையிலே ரங்காவை சுற்றி அமர்ந்து இருப்பதை கண்டான். அவனைக் கண்டதும் எழுந்த கீர்த்தியையும், வாசுவையும் பார்த்து, “நீங்க இருங்க, ரங்கா சாப்பிட்டாளா.?” என்று கேட்க...

“கொஞ்சம் சாப்பிட்டாங்க. ஆனால் ஒரு வார்த்தை கூட பேசலை. அப்படியே இறுகிப் போன மாதிரி இருக்குது...” என்று கீர்த்தி சொல்ல...

“மாப்பிளை எனக்கு என்னமோ ரங்காவை டாக்டர் கிட்ட காட்டலாம்னு தோணுது. இதுக்குள்ள என் கிட்ட நூறு சண்டை போட்டிருப்பா. அவ இப்படி இருந்து நான் பார்த்ததே இல்லை...” சொல்லும் போதே வாசுவுக்கு குரல் கரகரத்து, கண் கலங்கிற்று.

‘நீ வெளியில் சொல்லிட்டே, நான் சொல்ல முடியாமல் தவிக்கிறேன்' மனதிற்குள் புழுங்கிய உபேந்திரா, அவள் அருகில் சென்று “ரங்கா...” என்று அழைத்து அவனது அழைப்பை ஏற்றார் போல் அவனது முகம் பார்க்கவும், “பார்த்தாகிட்டேயும் பாவனா கிட்டேயும் பேசு. அவங்க நீ பேசணும்னு ரொம்ப ஆசைப் படறாங்க...” மென்மையாக அவளுக்கு புரியும்படி சொன்னான்.

மறுப்பு எதுவும் சொல்லவில்லை. சரி என்பது போல தலையாட்டியவள், திரும்பவும் தனது எண்ணங்களில் மூழ்கிப் போக, உபேந்திரா அவள் அருகிலேயே சோர்ந்து போய் அமர்ந்தான்.

அவன் அருகில் வந்த வாசு, “மாப்பிளை நீங்களே இப்படி மலைச்சு போயிட்டா, நாங்க என்ன பண்ணுவோம். தைரியமா இருங்க...!’ என்று தன் கவலையை மறந்து அவனுக்கு ஆறுதல் சொல்ல...

“இல்ல இந்தக் குழந்தைகளை நான் எப்படி சமாளிக்கப் போறேன்…?” என்று உண்மையான கவலையுடன் மறுகியவனை பார்த்து…

“கவலைப் பாடாதீங்க. ரங்கா சரியாகிற வரை நானும் கீர்த்தியும் இங்கேயே இருக்கோம். கீர்த்தி மூணு குழந்தைகளையும் பார்த்துப்பா. நீங்க நாளைக்கே ரங்காவை டாக்டர் கிட்ட கூட்டி போங்க…” என்று வாசு உதவிக் கரம் நீட்டினான்.

“ரொம்ப தேங்க்ஸ் மச்சான்…” என்று நெகிழ்ச்சியுடன் வாசுவை அணைத்துக் கொண்ட உபேந்திரா, “நானும் தனியாகவே வளர்ந்ததுனால உண்மையான உறவும் பாசமும் என்னனு தெரியாமத்தான் வளர்ந்தேன். எனக்கும் என்னோட தாத்தாவை தவிர எந்த உறவும் தெரியாது. ஆனாலும் என்னோட பாதை வேற மாதிரி இருந்ததுனால என்னால சமாளிக்க முடிஞ்சது. உண்மையிலே மனைவி, அவளோட உறவுகள், அவங்க பிரச்சினைகள் மட்டுமே யோசித்த எனக்கு, இப்படி ஒரு அன்பான உறவும் இருக்கும், அதுவும் எனக்கு கிடைக்கும்னு, எனக்கு புரிய வச்சதுக்கு ரொம்ப நன்றி…” என்றவன் மீண்டும் அவனை தழுவிக் கொண்டான்.

இரவு குழந்தைகள் இருவரும் அம்மாவிடம் பேச முயற்சித்து பின்னர் அப்பாவின் மேலேறி வழக்கம் போல கதை பேசி

அப்படியே உறங்கி விட்டனர். அதுவரை பால்கனியில் உள்ள நாற்காலியில் அமர்ந்து வானத்தை வெறித்து பார்த்துக் கொண்டிருந்த ரங்காவை, மெல்ல எழுப்பி வந்து தூங்க வைத்தான்.

உள்ளே அழைத்து வந்து “படு…” என்று சொன்னதும் கோழிகுஞ்சாய் சுருண்டு படுத்தவளைப் பார்த்து அவனுக்கு மனது கனத்து போயிற்று. அவள் தூங்கி விட்டாள் என்பதை உறுதி செய்து கொண்டு வந்து பால்கனியில் அமர்ந்தவன், தனது இறுக்கத்தை போக்க, ஒரு சிகெரெட்டை எடுத்து பற்ற வைத்தான். ஒரு இழுப்பு இழுத்து புகையை வெளியே விட்டதும், அவன் எதிரில் வந்து நின்று ரங்கா முறைத்தாள்.

“குழந்தைங்க தூங்கறாங்க, அவங்க இருக்கிற இடத்துல சிகெரெட் பிடிக்கக் கூடாதுன்னு சொல்லி இருக்கேனா, இல்லையா? என்று அவளது பிம்பம் வந்து அவனை முறைக்க, தன்னை அறியாமல் சிகரெட்டை அணைத்து தூர வீசியவன் “ரங்கா உனக்கு என்ன ஆச்சு? நீ பழையபடி என் கிட்ட சண்டை போடவாவது பேசேன்…!” அவனது வாய் தானாக முணுமுணுக்க, கண்களில் இருந்து ஒரு துளி நீர் வெளியே கசிந்தது.

# அத்தியாயம் 20

ரங்காவிற்கு தேவையான அனைத்து பரிசோதனைகளையும் முடித்து ரிசல்ட்டுக்காக வெயிட்டிங்...

ரங்கா தூங்கிக்கொண்டிருக்க 'டாக்டரின் பதில் என்னவாக இருக்கும்?' என்ற யோசனையோடு அவள் அருகில் அமர்ந்திருந்த உபேந்திராவை செவிலிப் பெண் அழைத்தாள்.

"சார் உங்களை டாக்டர் மேகநாதனும், டாக்டர் சித்ராவும் கூப்பிடறாங்க..."

"நீங்க இங்க இருங்க,." என்று அவளை ரங்காவுக்கு துணையாக வைத்துவிட்டு தான் மட்டும் டாக்டரை சந்திக்கச் சென்றான்.

டாக்டர் மேகநாதன், சித்ரா பிரபலமான மனநல மருத்துவர்கள். தம்பதி சகிதமாக இருவருமே மனநலம் பற்றிய நோய்க்கு அறிவுரைகளை நோயாளிகளுக்கு கொடுப்பவர்கள்.

இவன் உள்ளே நுழைந்ததும், "உக்காருங்க சார்...!" என்று சொன்ன டாக்டர் "இப்ப அவங்க எப்படி இருக்காங்க...?" என்று கேட்டார்.

"தூங்கிட்டு தான் இருக்கா? அதே கண்டிஷன் தான். எதுவும் சொன்னா செய்றா. ஆனா பேசுவதே கிடையாது. தானா எந்த முயற்சியும் எடுக்கிறது இல்ல."

"உங்களுக்குத் தெரிந்த அளவில் நீங்க அவங்கள பத்தி எல்லாம் சொல்லிட்டீங்க. அவங்க வாழ்க்கையில பாட்டி மட்டும்தான் அவர்களுடன் நெருக்கமாக இருந்து இருக்காங்க. அதுவும் ரொம்ப எளிமையான இலகுவான வாழ்க்கை இல்லை.

இப்ப அவங்க பாட்டி இறந்ததும் தனக்கு நெருக்கமான உறவை இழந்ததுனால, தான் மட்டும் இந்த உலகத்துல தனியா நிற்கிற மாதிரியான ஒரு இன்செக்யூரிட்டி ஃபீலிங்ஸ் அவங்களை இந்த மாதிரி நிலைமையில் நிறுத்தி இருக்கு. இத கொஞ்சம், கொஞ்சமா சரி பண்ணிடலாம். ஆனா அதுக்கு முன்னாடி எங்களுக்கு இன்னொரு விஷயம் தெரியணும்...?"

"என்ன விஷயம்?"

"உங்களுடைய ஃபேமிலி லைப் எப்படி இருக்கு? ஐ மீன் உங்க கணவன் மனைவி உறவு?"

இதற்கு என்ன பதில் சொல்வது என்று உபேந்திரா தயங்கினான். அவனது தயக்கத்தை பார்த்த டாக்டர் சித்ரா, "சார் இதைக் கேட்கிறதுக்கு காரணம் இருக்கு. ஒரு கணவன்

மனைவிக்குள்ள செக்ஸ் லைப் இயல்பாய் இல்லேன்னா அது பல பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும். அதுக்காக தான் கேட்கிறோம். பதில் சொல்லுங்க..." என்றதும் அவன் தங்களது வாழ்க்கையை விரிவாகக் கூறினான்.

"ஓ மை காட். சோ உங்க ரெண்டு பேருக்குள்ள இன்னும் கணவன் மனைவிக்குள்ள உறவு மலரலை. இதுவே அவங்களோட மன நிலைமைக்கு முக்கியமான காரணம்.

ஒரு ஆணுக்கும் சரி, பெண்ணுக்கும் சரி. அந்தந்த வயதில் உள்ள இயல்பான தேவைகள் சரிவர கிடைத்தால் தான் அவங்களால ஒரு சந்தோஷமான வாழ்க்கையை நடத்திக்க முடியும்.

அப்படிப் பார்த்தா ரங்கா தன்னுடைய எல்லா உணர்வுகளையும் சப்பிரஸ் பண்ணி வாழ்ந்திருக்காங்க. பாட்டி இருந்த வரைக்கும், அவங்களோட சப்போர்ட், ஆறுதல் அவங்களை இந்த அழுத்தத்தில் இருந்து ஓரளவு காப்பாத்தி இருக்கு.

ஆனால் இப்போ பாட்டி இல்லாதது எல்லா விதத்திலேயும் அவங்களை பாதிச்சிருக்கு..." என்றார்.

"இப்ப இது சரி பண்ண என்ன வழி? டாக்டர். ரெண்டு குழந்தைங்க. அவளுக்கு சரியானாதான் அந்த குழந்தைகளுக்கு அம்மாவா இருக்க முடியும். அதுக்காகவாவது அவளுக்கு குணமாகணும்..." உபேந்திரா கவலையுடன் சொல்ல...

"அப்ப உங்களுக்கு மனைவியா அவங்க முக்கியம் இல்லையா?" டாக்டரின் கேள்வி கூர்மையுடன் இருந்தது.

உபேந்திரா ஒரு நொடி தடுமாற, "பதில் சொல்லுங்க மிஸ்டர், உங்களுக்கு அவங்க உங்களோட மனைவியா வேண்டாமா? டூ யூ லவ் ஹெர்?"

"எஸ் ஐ லவ் ஹெர். எனக்கு அவ வேணும். எனக்கு மட்டும் சொந்தமான ரங்காவா வேணும்..." ஒரு தீவிரத்துடன் பதில் சொன்னவனிடம்...

"ஆர் யூ ஷ்யூர் அபௌட் இட்?"

"எஸ்... அம் ஷ்யூர் அபௌட் இட்"

"ஓகே. அப்ப நீங்க முதல்ல அவங்கள உங்க மனைவியாக நடத்துங்க. உங்க கணவன் மனைவி உறவு பலப்படுத்துங்க. அந்த சமயத்துல உங்களோட அன்பையும் காதலையும் அவங்களுக்கு மட்டும் தான்கிறதை புரிய வையுங்க. அவங்களுக்கு துணையா நீங்க எப்பவும் இருப்பீங்க என்ற நம்பிக்கையை அவங்களுக்குள்ள

விதைங்க. சில விஷயங்களை வாய்மொழியாக சொல்லும்போது புரியாத விஷயங்கள், உங்க இல்லற வாழ்க்கை மூலமாக அவங்களுக்கு புரியும்.

செக்ஸ்ங்கிறது சும்மா பொழுது போக்கு, அல்லது இச்சையை மட்டும் தீர்த்துக் கொள்வது அல்ல. ஒரு நல்ல புரிதல் உள்ள கணவன், மனைவிக்கு அதுதான் ஸ்டெரஸ் ரீலிபுக்கு நல்ல வழி. எல்லாத் துன்பத்தையும் அது மறக்கடிக்கும். ஒருவருக்கொருவர் உயிராக நினைக்க வைக்கும்.

இன்றைய காலகட்டத்தில் நிறைய தம்பதி கோர்ட் வாசல்ல போய் டைவர்ஸ்க்கு நிக்கிறதுக்கு இதுதான் அடிப்படை காரணமாக இருக்கு. கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் புரிந்து கொண்டு அவங்களோட இல்லற வாழ்க்கையும் சந்தோஷமாக இருந்தால் அங்கு ஈகோ இருக்காது.

கருத்து வேறுபாடு வந்தாலும் யாராவது ஒருவர் தன்னாலேயே விட்டு கொடுத்து போயிடுவாங்க.

ஆணும், பெண்ணும் படிச்சு வேலைக்கு போனதும் கார் வாங்குவது, வீடு வாங்குவது தான் லட்சியமாய் இருக்கு. சரியான வயசுல கல்யாணம் பண்ணி கணவனும் மனைவியும் ஒத்துமையா குடித்தனம் பண்ணி, முறையாக குழந்தை பிறந்ததுனா அவங்க ஆரோக்கியமான குழந்தையாக இருப்பாங்க...

ஆனா மனித உறவுகளுக்கும், அடுத்த தலைமுறைக்கும் முக்கியத்துவம் கொடுக்காத இந்த தலைமுறை உயிரற்ற பொருட்கள் மீது லட்சியத்தை வைத்து ஏதோ ஒன்றில் ஜெயிப்பது வாழ்க்கையின் குறிக்கோளாக வச்சிருக்காங்க. குறிப்பிட்ட வயதை விட்டுட்டு அப்புறம் குழந்தைக்காக ஹாஸ்பிடல்ல போயி லட்சக் கணக்குல பணத்தை கொடுக்கிறாங்க...

வேற எதுலேயோ ஜெயிச்சு, சொந்த வாழ்க்கையில கோட்டை விடுவது எதற்கு? நான் சொல்வது உங்களுக்குப் புரியும் என நினைக்கிறேன்..." என்று டாக்டர் பொதுவாக இன்றைய தலைமுறையை பற்றி தனது ஆதங்கத்தை கூறினார்.

"உண்மைதான். எனக்கும் இதுநாள் வரை புரியாமத்தான் இருந்துச்சு. ஆனா என்னோட குழந்தைகளை பார்த்த பிறகு வாழ்க்கையில மனைவி மக்களுக்கு தான் முதலிடம் கிறதை நானும் புரிஞ்சுக்கிட்டேன். கட்டாயம் நீங்க சொல்றபடி நான் நடந்துக்குறேன். அடுத்து எப்ப கூட்டிட்டு வரணும்...? என்று அவரிடம் கேட்டான்.

சில மருந்துகள் எழுதிக் கொடுத்து அடுத்து வரவேண்டிய நாளைக் குறிப்பிட்டு, "ஆல் தி பெஸ்ட். உங்களோட அன்புல அவங்க சீக்கிரம் குணமாகணும்..." என்று வாழ்த்தி விடை கொடுத்தார்.

ரங்காவை அழைத்துக் கொண்டு வீடு வந்ததும், தாத்தாவிடம் விஷயத்தை கூறினான்.

"முதல்ல உன்னோட துணை அவளுக்கு இருக்குன்னு என்று புரிய வை…" என்று அவரும் அதையே கூறினார்.

கேட்டுக்கொண்டிருந்த வாசுவும் "ஆமா மாப்ள, சொல்ல சொல்ல கேட்காம இப்படி ஒரு வாழ்க்கையைத் தேர்ந்தெடுத்தா…! என்னால ஒரு அளவுக்கு மேல அவ கிட்ட பேச முடியல. டாக்டர் சொல்றது தான் கரெக்ட். நீங்க முதல்ல அவளை உங்க மனைவியா நடத்துங்க…" என்றான்.

தனது உதவியாளர் பாபுவை அழைத்து "கொஞ்ச நாளைக்கு நம்ம ஜூனியர் வக்கீல் எல்லாரையும் இங்க வீட்டுல உள்ள என்னோட ஆபீஸ்ல வந்து பார்க்கச் சொல்லுங்க. இன்னும் கொஞ்ச நாளைக்கு நான் கோர்ட்டுக்கு வர்றதா இல்லை. மத்தவங்களே பார்த்துக் கொள்ளட்டும்…"

"ஓகே சார் அப்படியே சொல்லிடறேன்…" என்று சொன்னவன், அதன்படியே அனைத்து ஜூனியர்களையும் அழைத்து விஷயத்தைக் கூறினான்.

மறுநாள் முதல் தனது அலுவலக வேலைகளை வீட்டில் வைத்தே பார்த்துக் கொள்ள ஏற்பாடு செய்து கொண்ட உபேந்திரா

இன்னொரு பெண்மணியை குழந்தைகளை மட்டும் கவனித்துக் கொள்ள நியமித்தான்.

அவர்களின் உதவியோடு கீர்த்தி மூன்று குழந்தைகளையும் பள்ளிக்கு அனுப்பி, திரும்ப அழைத்து வருவது, சாப்பாடு கொடுப்பது என்று எல்லாவற்றையும் அவள் கவனித்து கொண்டாள். வாசு தனது கம்பெனி நேரம் போக கீர்த்தியோடு சேர்ந்து குழந்தைகளை கவனித்துக் கொள்ள, முழுநேரமும் ரங்காவை மட்டும் உபேந்திரா கவனித்துக் கொண்டான்

காலையில் எழுந்து பல் துலக்க அவளுக்கு பேஸ்ட் எடுத்து கொடுப்பதில் இருந்து, குளிக்க உதவி செய்வது, பின்னர் அவளுக்கு என்று ரஞ்சிதம்மா கொண்டு வரும் உணவை, தானே ஊட்டிவிட்டான்.

முதலில் வாங்க மறுத்தவளிடம், "ப்ளீஸ் வாங்கிக்கோ. நீயா சாப்பிட்டா சரியா சாப்பிட மாட்டேங்குற. டாக்டர் நீங்க நல்லா சாப்பிட்டு ஹெல்தியாகணும்னு சொல்லியிருக்கிறார். அதனால நான் தான் இனிமேல் உனக்கு ஊட்டி விடுவேன்..." என்று சொல்லி அவளது தலையை ஆதரவாக கோதி கொடுக்க, கொஞ்சம் தயக்கத்துடன் தலையாட்டினாள்.

"ஆ காட்டு...!" ஒவ்வொரு வாய் ஊட்டும் போதும், தன்னைப் பற்றிய சிறு வயது நினைவுகளை அவளுடன் பகிர்ந்து

கொண்டான். இடையில் அவளைப் பற்றி கேள்வி கேட்கவும் மறக்கவில்லை. ஆனால் அதற்கு பதில்தான் அவளிடமிருந்து இருக்காது.

அதைப்பற்றி எல்லாம் கவலைப்படாமல் தன்னைப்பற்றி, தனது அம்மா அப்பாவை பற்றி, தாத்தாவைப் பற்றி தனது இத்தனை வருட வாழ்க்கையில் அவனுக்கு நினைவு இருந்ததையெல்லாம் அவளிடம் ஒப்பித்தான்.

ஒரு சில சமயம் அவள் அதை கவனிக்கிறாள் என்பது புரியும். சில சமயம் அவள் சிந்தனை வேறு எங்கோ இருக்கும். அந்த மாதிரி நேரத்தில், அவளது கவனத்தைத் திருப்ப, குழந்தைகளைப் பற்றி அவர்கள் செய்யும் சேட்டையை பற்றி, பேசினால் அவளிடம் ஒரு சிறுமுறுவல் தோன்றும்.

காலை பதினொரு மணிக்கு மேல் அலுவலகத்தில் இரண்டு மணி நேரம் செலவழிப்பவன் அடுத்து மாலை ஆறு மணிக்கு தான் அலுவலகம் செல்வான்.

நாலைந்து நாட்கள் தன்னுடைய அருகாமையை அவள் தவிர்க்காமல் ஏற்றுக்கொள்ளும்படி செய்தவன் அன்று முதன் முதலாக அவள் குளித்துவிட்டு எப்போதும் போல் தலையை துவட்டாமல் வந்து நின்றதும், தலையைத் துவட்டி கூந்தலைப் பிரித்து விட்டு, அவளுக்கு முகத்தில் பவுடர் பூசி, நெற்றியில்

ஸ்டிக்கர் பொட்டு வைத்து விட்டு, அவளது முகத்தை தனது உள்ளங்கையில் ஏந்தி அவளது கண்களை உற்றுப் பார்த்தான்.

கரிய பெரிய விழிகள், அதில் அவள் மனதைப் போலவே அங்கும் இங்கும் அலைபாயும் கண்மணிகள், சிப்பி போன்ற இமைகள், கூர்மையான மூக்கு, செவ்வரி ஓடிய சதைப்பற்றான இதழ்கள், நீள் வட்டமான முகம், அணு அணுவாய் அவளது முகத்தில் பார்வையை பதித்து தனது பார்வையால் அவளது முகத்தை வருட, அவனது தீர்க்கமான பார்வையைத் எதிர்கொள்ள முடியாமல் அவளது விழிகள் பட்டாம் பூச்சிகளாக சிறகடித்தன.

விழிகள் படபடக்க தன்னை அவனிடம் இருந்து பிரித்துக் கொள்ள தோன்றாமல் மீண்டும் அவன் முகத்தை ரங்கா பார்க்க, அவள் முகத்தை அருகில் இழுத்து தனது உதடுகளை அவளது துடிக்கும் இமைகளில் ஒற்றி எடுத்தான்.

மீண்டும் அவள் முகம் பார்க்க, அவளது கண்கள் விரிந்து அவனை விழுங்குவது போல் பார்க்க, ஏற்கனவே அவளது அருகாமையில் கொஞ்சம் கொஞ்சமாய் தன்னை தொலைத்திருந்தவன் அவளது இதழ்களில் அழுந்த முத்தமிட்டான்.

ஒரு சில நொடிகளே கொடுத்த அந்த முத்தத்தில், உதடுகள் நடுங்க, கண்கள் படபடக்க, சற்றே அவனை விட்டு விலகி, கட்டிலில் உட்கார்ந்தவளை கவனிக்காதது போல், "சாப்பாடு

வந்திருச்சு சாப்பிடலாமா...?" என்று கேட்டு அவளது பதிலை எதிர்பாராமல், ஊட்ட ஆரம்பித்தான்.

சாப்பிடும்போது அவ்வப்போது அவனது முகத்தை ஏறிட்டுப் பார்க்க நேர்ந்தாலும், அவனது கண்களை சந்திக்காமல் பார்வையை விலக்கிக் கொண்டவளை பார்த்து மனதுக்குள் சிரித்துக்கொண்டான்.

'பரவாயில்லை. உனக்குள்ள ஓரளவு தெளிவு இருக்க தான் செய்யுது. இது போதும் எனக்கு. உன்னை முற்றிலுமாக நான் மீட்டெடுப்பேன்.' தன் மனதில் உறுதியோடு எண்ணிக்கொண்டான்.

அதன் பிறகு அவளுக்கு வேண்டிய சேவைகளை எந்த நேரம் செய்தாலும் அவனது அணைப்பும் இதழ் ஒற்றலும், அவளுக்கு தவிர்க்க முடியாத ஒன்றாக மாறியது.

இரவு எட்டு மணிக்கு அலுவலகத்திலிருந்து வந்தவனை பார்த்தாவும், பாவனாவும் அன்று பிடித்துக் கொண்டனர். "அப்பா அம்மாதான் ஊட்டணும். எங்களுக்கு வேணி ஆண்டி வேண்டாம்..." என்று பாவனா அழ ஆரம்பித்தாள்.

கீர்த்தி எவ்வளவு சமாதானப்படுத்தியும் அவள் சாப்பிட மறுக்கவே வேறு வழி இல்லாமல், உபேந்திராவிடம் கொண்டு வந்து விட்டாள்.

"சரிமா நான் பாத்துக்குறேன். ரஞ்சிதம்மாட்ட எல்லாருக்கும் சாப்பாடு மேலே கொண்டு வர சொல்லு..." என்றவன் உடை மாற்றிவிட்டு பாவனாவை தூக்கிக் கொண்டான்.

பால்கனியில் சேரை போட்டு எங்கோ வெறித்து பார்த்துக் கொண்டு இருந்த ரங்காவின் அருகில் சென்று பாவனாவையும், பார்த்தாவையும் உட்கார வைத்தவன், ஹர்ஷாவை அருகிலுள்ள குட்டி சேரில் உட்கார வைத்தான்.

"இப்ப எல்லாருக்கும் சாப்பாடு அப்பாதான் ஊட்ட போறேன். வரிசையா வரும். இடையில கேட்கக்கூடாது. ஓகேவா...!"

"ஓகே ஓகே..." என்று பாவனாவும் பார்த்தாவும் சொன்னதைப் பார்த்து ஹர்ஷாவும் கட்டைவிரலை தூக்கினான்.

ரஞ்சிதம்மா, கீர்த்தி இருவரும் பரிமாற தோசையை அனைவருக்கும் ஊட்டிவிட்டான்.

"அம்மா பெரியவங்க தானே. அவங்களுக்கு ஃபர்ஸ்ட். அப்புறம் பார்த்தா, பாவனா, ஹர்ஷா..." என்று வரிசையாக ஊட்டிவிட குழந்தைகள் மன நிறைவோடு சாப்பிட்டனர்.

"அண்ணா நீங்க பாவனாவுக்கு மட்டும் ஊட்டி விடுங்க. நான் வேணும்னா மத்த ரெண்டு பேருக்கும் சாப்பாடு கொடுக்கிறேன்..." என்று கீர்த்தி சொல்ல...

"பரவாயில்லை இருக்கட்டும். ஒரு வாரமா அவங்கள கவனிக்கவில்லை, அதான் அவ அடம்பிடிக்கிறா. இன்னைக்கு ஒரு நாள் நான் கவனிச்சிட்டா, ஒரு ரெண்டு மூணு நாள் தொந்தரவு பண்ண மாட்டா" என்று கூறி அவர்களுக்கு ஊட்டிவிட்டு பின்னர் கதை சொல்லி மூவரையுமே தூங்க வைத்தான்

தூங்கிய பிறகு குழந்தைகளை வாசுவும், கீர்த்தியும் தங்களது அறைக்கு எடுத்துச் சென்றனர். அதன் பின்னர் கீழே சென்று தாத்தாவைப் பார்த்து விட்டு சாப்பிட்டு அவன் மேலே வரும் வரை ரங்கா அந்த இடத்தை விட்டு அசையவே இல்லை.

"ரங்கா தூக்கம் வரலையா?" என்று அவளிடம் சென்று கேட்க, பதில் சொல்லாமல் மௌனமாக அமர்ந்திருந்த அவளைப் பார்த்து அவனுக்கு ஒரு பெருமூச்சு எழுந்தது.

அருகிலேயே இன்னொரு சேரை இழுத்துப் போட்டு உட்கார்ந்தவன், அவளது வலது கையை எடுத்து தனது உள்ளங்கைக்குள் பொத்தி வைத்து வைத்துக்கொண்டு, "ரங்கா நான் ஒரு விஷயம் சொல்லப் போறேன். அது எந்த அளவு நீ கவனிக்கிறேன்னு எனக்கு தெரியலை..." என்றவன்...

சற்று இடைவெளி விட்டு "நீ பாட்டிய ரொம்ப மிஸ் பண்றே. அது எனக்கு புரியுதுடா. உனக்கு இனிமேல் நான் இருக்கேன். பாட்டி உன்னை எந்த மாதிரி பார்த்துக்கிட்டாங்களோ, அதே

மாதிரி நானும் உன்னைப் பாத்துக்கறேன். உன்னுடைய எல்லா விதமான முயற்சிக்கும் என்னோட சப்போர்ட் உண்டு. நீ என்னை உன்னோட டியர் மோஸ்ட்டா நினைச்சுக்கோ..." என்று அவள் கண்களைப் பார்த்து மென்மையாக அவள் மனதில் பதியும் படி கூறினான்.

"என்னடா நான் சொன்னது புரிஞ்சுதா...!" என்று கேட்க, அவளுக்கு புரிந்ததோ இல்லையோ, தலையை மட்டும் ஆட்டி வைத்தாள்.

"உங்க பாட்டி உன்னை சின்ன வயசுல அம்முலுன்னு கூப்பிடுவாங்களாமே, நானும் இனி உன்னை அம்முலுன்னு தான் கூப்பிட போறேன்... ஓகேவா.?"

"அம்முலு தூங்க போலாமா...?" வேண்டாம் எனும் விதமாக அவளது தலை மறுப்பாக ஆடியது.

"உனக்கு தூக்கம் வரல. ஆனா எனக்கு தூக்கம் வருது. இன்னைக்கு நான் உன்னைத் தூங்க வைக்கிறேன்..." என்றவன் அவளை அலாக்காக தூக்கி கொண்டான்.

தனது வலிமையான கரங்களால் அவளைத் தூக்கி தன் முகத்திற்கு அருகில் கொண்டு வந்தவன், "வீட்டிலேயே இருந்து சாப்பிட்டு நல்ல வெயிட் போட்டுட்ட. சிக்ஸ்டி கேஜி இருப்பேன்னு

நினைக்கிறேன்..." என சிரித்துக்கொண்டே சொல்ல, அவனது வெற்று மார்பும், அகன்ற தோள்களும், திரண்ட புஜங்களும், தன்னையறியாமல் அவளுக்கு ஒருவித கூச்சத்தை கொடுத்தது.

என்னதான் தன் நிலை மறந்து இருந்தாலும், இயல்பாகவே பெண்மைக்குரிய உணர்வுகளும், கூச்சமும் அவளை ஆட்கொள்ள, கீழே இறங்க சற்று திமிறினாள்.

"அம்மு டார்லிங், நோ வே, இன்னிக்கு நீ நான் சொல்றபடி தான் கேக்கணும்..." என்று கூறிக் கொண்டே கட்டிலில் அவளை படுக்க வைத்து விட்டு, பால்கனி கதவை சாத்திவிட்டு வந்து அவள் அருகில் படுத்தான்.

தன்னைக் குறுக்கிக் கொண்டு சுவரைப் பார்த்து முகத்தை வைத்து படுத்து இருந்தவளை அவனது பார்வை அளந்தது.

டாக்டர் சொன்னது மனதில் நினைவுக்கு வர, தனது வலது கை கொண்டு அவளது இடுப்பை வளைத்து தன் பக்கம் திருப்பியவன், "அம்மு எத்தனை நாளைக்கு தான், நீ இப்படியே இருப்பே? இப்ப நீ என்னுடைய மனைவி. உன் மேல எனக்கு அன்பு, பாசம், காதல், ஆசை எல்லாம் இருக்கு. அதை இப்ப நான் உனக்கு காட்டப் போறேன். உனக்கு பார்த்தா, பாவனா ரொம்ப பிடிக்குமா?"

“…”

"பிடிக்கும் இல்ல. அதே மாதிரி எனக்கு என் அம்முவை ரொம்ப புடிக்கும்…" என்றவன் அவளை மிகவும் அருகில் இழுத்து, நெற்றியில் தனது முத்திரையைப் பதித்தான்.

அவனது முத்தத்தில் திகைத்து விழித்தவளிடம், “என்ன பார்க்கிற? நான் தான் உன்னை ரசிச்சு பார்க்கணும், இந்த மருண்ட விழிகளை, தாமரை போன்ற கன்னங்களை, செர்ரி பழ உதடுகளை பார்க்கும் போது, எனக்கு எப்படி இருக்கு தெரியுமா?” என்று கூறிக்கொண்டே ஒரு விரலால் அவள் முக வடிவை அளந்தவன், அவள் கூச்சத்தில், தனது கண்களை மூட, தன் இதழ் கொண்டு அவளது முகத்தை வருடியவன் துடிக்கும் இதழ்களில் தனது இதழை பொருத்தினான்.முதன் முதலில் அவன் இதழில் வெகு நேரம் நிலைக்க, அவளது நிலையில் மாற்றம் ஏற்பட்டது.

இது நாள் வரை, அவள் அடக்கி வைத்திருந்த உணர்வுகள், கட்டவிழ்ந்து வெடித்து சிதற, அவள் தன்னையறியாமல், அவளது கைகள் கொண்டு அவனது பின்னத் தலையை தனக்கு வாகாக அழுத்தினாள்.

அவளது கைகள் அவனது அடர்ந்த சிகையை கலைத்துவிட, அவளது நிலை புரிந்த உபேந்திரா தன்னுடயவளை அறிந்து

கொள்ளும் முயற்சியில் தனது தேடுதலை, உதடுகளாலும், கைகளாலும் அவளது மேனி எங்கும், அலைய விட்டான்.

அவனது கைகள் இரண்டும் அவளது உடலின் மறைவிடங்களில் ஊர்ந்து செல்ல, உதடுகள் அவளது முகத்திலும், கழுத்துக்கு அடியிலும் தேடுதலை பரவச் செய்ய, தனது உடலில் அலை அலையாய் எழுந்த இன்ப உணர்வுகளை தாங்க முடியாமல் அவள் அவனோடு ஒன்றினாள்.

"அம்மு உனக்கு இது பிடிச்சிருக்கா...?" என்ற அவனது கேள்விக்கு, இன்னும் அவனை இறுக்கமாக கட்டிக்கொண்டு அவனது நெஞ்சில் தன் முகத்தைப் புதைத்து கொண்டவளை சந்தோசத்தோடு அவனும் அணைத்துக் கொண்டான்.

அதன் பிறகு நடந்ததெல்லாம், காமதேவன் நடத்திய விளையாட்டுக்கள். இயற்கையாக ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் நடந்த உன்னதமான, உணர்வு பூர்வமான இதயத்தின் பரிமாற்றம், ஈருயிர் ஓர் உயிரான விந்தை, உடல்களின் சங்கமம்...

வன்முறையே இல்லாத மென்மையான கையாளாலால், அவளை மிருதுவாக தழுவி, அவளுக்குள் உறைந்து போயிருந்த உணர்ச்சிகளை கிளற செய்து, மொட்டு ஒன்று பூவாக மலர்வது போல், மிக மிக மெதுவாக அவள் பெண்மையை மலரச் செய்த, தன்னவனை, ஆசையோடு அணைத்தது அந்தப் பெண்மை.

தான் இது வரை வாழ்ந்த வாழ்க்கையின் அர்த்தம் பூரணம் அடைந்தது போல், தன்னையும் இந்த மாதிரி ஒரு ஆத்மா நேசிக்க முடியமா? இந்த மாதிரியான ஒரு அன்பும் அரவணைப்பும், தன்னுடைய வாழ்க்கையில் உண்டா என்பது போல், அவளது உணர்வுகள் பொங்கி சந்தோசம் ததும்பி வழிய, அவளது நினைவுகள் எங்கோ தறிகெட்டு ஓட, "ரங்கா கல்யாணத்துல நீ கெட்டதை மட்டும் பார்க்கிற, அதுல சிலருக்கு, சில சமயம் நல்ல துணைகளும் கிடைக்கிறது உண்டு' பாட்டியின் வார்த்தைகள் காதில் ஒலிக்க, அது இப்போது நனவானது கண்டு, அவளது கண்களில் கண்ணீர் அரும்பியது.

எல்லாம் முடிந்த நிலையில், அவளை அணைத்துக் கொண்டு படுத்து இருந்தவன் நெஞ்சில் அவளது கண்ணீர் துளிகள் பட, ஈரத்தை உணர்ந்து, அருகில் இருந்த விளக்கை எரியவிட்டு, அவளது முகத்தை நிமிர்த்தி கண்களை கலக்க விட்டான்.

அவள் கண்களில் கண்ணீரை கண்டதும், 'ஒருவேளை விருப்பம் இல்லாமல் தான் தனக்கு இணங்கினாளோ என்ற எண்ணம் தலைதூக்க' பதறி போனவனாய், "என்னடா அம்முலு என்ன ஆச்சு...?" என்று கேட்டதும், பதிலே சொல்லாமல் இன்னும் அவனை அழுத்தமாக கட்டிக்கொண்டு நெஞ்சில் முகத்தை

புதைத்துக் கொண்டு கேவிக் கேவி அழுதவளை, தன்னோடு அணைத்துக் கொண்டான்.

தானாகவே அழுது ஓய்ந்தவள், அப்படியே தூங்கிவிட்டாள். தன்னில் இருந்து அவளை பிரித்து கலைந்திருந்த அவளது ஆடைகளை அணிவித்து, நெற்றியில் புரண்டு கொண்டிருந்த அவளது முடிக்கற்றைகளை ஒதுக்கிவிட்டு, அவளது நெற்றியில் இதழ் பதித்து அவன், "குட் நைட் டா செல்லம்" என்று கூறி, பெட் சீட் ஐ போர்த்தி விட்டு, அவளை அணைத்தார் போல் படுத்து தூங்கி விட்டான்.

வழக்கம்போல அதிகாலையில் விழிப்பு வர, கண் விழித்தவன் தனது தோளுக்குக் கீழே நெஞ்சை ஒட்டினாற் போல் முகத்தை வைத்து, சீரான சுவாசத்துடன், முகத்தில் நிம்மதியுடன் தூங்கிக் கொண்டிருந்த தனது புது காதலியான மனைவியை ரசித்துப் பார்த்தான்.

'ஒரு நொடி என்னை கலங்கடிச்சுட்டியேடி? உன்னோட இந்த நிம்மதியான தூக்கம் தான், என் மனசை இது நேரம் வரைக்கும் அரிச்சுகிட்டு இருந்த கேள்விக்கு பதில்... தேங்க் யூ டி அம்மு...' என்று கூறி அவளது கன்னத்தில் ஒரு முத்தம் கொடுத்து விட்டு, அவளது தூக்கம் கலையாமல் எழுந்து வெளியே சென்றான்.

அவன் வாக்கிங் போய்விட்டு வீட்டுக்கு வந்தபோது அதிசயமாக ரங்கா அவன் சொல்லாமல் தானே குளித்துவிட்டு அரைகுறையாய் வந்து நின்றாள்.

அவளது கோலம் பார்த்தவன் கதவை சாத்தி தாழ்ப்பாள் போட்டுவிட்டு அருகில் வந்து அவள் ட்ரெஸ் அணிவதற்கு உதவி செய்ய ஆரம்பித்தான்.

நேற்றைய நிகழ்வுக்குப் பிறகு, அவளது மேல் இருந்த உரிமையும் பார்வையும் வேறு விதமாக இருக்க, அவனால் வழக்கம் போல் இயல்பாக உதவ முடியவில்லை.

சுரிதார் டாப்சின் பின்பக்கம் இருந்த ஜிப்பை மேலே இழுத்தவனின் விரல்கள், அவளது கழுத்தில் கோலம் போட்டு, காது மடல்களை நிரடி விட, சருமம் கூசி சிலிர்த்தவளை, தன் பக்கம் திருப்பி, முகவாயை தன் வலது கையால் நிமிர்த்தியவன், “என்ன அம்முலு இன்னைக்கு நான் வராமலே குளிச்சிட்டே…?” என்று கேட்க…

வழக்கம் போல பதில் சொல்லாமல் திருதிருத்தாள் அவனது அம்முலு. அவனது தொடுகையில் அவளது பூனை முடிகள் குத்துகாலிட்டு நிமிர்ந்து நிற்பதை பார்த்து, அந்த பூனை முடிகளை வருடி விட்டு கொண்டே, “என்னடி இன்னுமா உன் கூச்சம் போகலை…?” என்று கேட்டுக் கொண்டே அவள் உதட்டு வடிவை

அளந்தவன், “இனி உன்கிட்ட கேட்டு, கேட்டு எல்லாம் வாங்க முடியாது. நானா எடுத்துக்குறேன்…” என்றவன் அவளது உதடுகளில் ஆழ்ந்த முத்தம் ஒன்றை வைக்க, அது தந்த போதையில் தன்னை மறந்து அவனோடு இழைந்தவளை அவனும் இறுக்கிக் கொண்டான். சற்று பொறுத்து அவளை விடுவித்த போது அவள் தடுமாற, அவளது தோளை பற்றி விழுந்து விடாமல் நிறுத்தியவன், “என்னடி…?” என்று கண்ணை சிமிட்ட, தன்னை மறந்து அவனை பார்த்து சிலையாய் நின்றாள் அவனது தர்ம பத்தினி.

# அத்தியாயம் 21

ரங்காவை டாக்டரிடம் அழைத்து வந்திருந்தான் உபேந்திரா. அவளை பரிசோதித்த டாக்டர் மேகநாதன், சித்ரா "உடல் ரீதியா அவங்க ஓகே. மன ரீதியா நீங்கதான் சொல்லணும்...?"

"எப்படி இருக்காங்க?"

"கொஞ்சம் பரவாயில்லை என்று சொல்லலாம், இப்ப கொஞ்சம் தானே தன்னுடைய வேலைகளை செய்துகிறா. குழந்தைங்க அவ கிட்ட வந்தா விலக்கி விடறது இல்லை. அதுக்காக ஒரேடியா அவங்கள கொஞ்சறது இல்லை. மடியில் ஏறி உட்கார்ந்தால் அவங்களை வச்சுக்கிறா. ஆனா இன்னும் பேச முயற்சிக்கலை..."

"ஓகே உங்களுடைய ஃபேமிலி லைஃப் எப்படி இருக்கு? அவங்ககிட்ட இருந்து ஏதாவது எதிர்ப்பு வந்ததா?"

"இல்ல டாக்டர். எதிர்ப்பு வரல...!"

"விருப்பம்..."

"அது பத்தி மனசு அளவுல எனக்கு தெரியல. ஆனால் உடலளவுல விருப்பம் இருக்கு..."

"குட். இதுவே நல்ல இம்ப்ரூவ்மென்ட் தான். பதினைந்து நாளிலே இவ்வளவு முன்னேற்றம் இருக்கு இல்லையா...? அடுத்த பதினைந்து நாள் பார்க்கலாம். அவங்க உங்க மனைவி தான், நீங்கதான் அவங்களோட கணவர், என்பது மனசளவுல பதியணும். அது உங்க கைலதான் இருக்கு. உங்க தாம்பத்ய உறவில் தான் அது மனதளவில் பதியும். அதனால ஒரு நாள் கூட மிஸ் பண்ணாம உங்க உறவை தொடருங்கள். அடுத்த சிட்டிங் பார்க்கலாம்..." என்று கூறி அனுப்பி வைத்தனர்.

உபேந்திராவும் டாக்டர்கள் சொன்னதை அப்படியே கடைபிடித்தான். அலுவலகத்தில் இருக்கும் சில மணி நேரங்கள் தவிர, மற்ற நேரங்களில் ரங்கா உடனேயே இருந்தான். அவளை எப்போதும் யோசிக்க விடாமல், டிவியில் ஏதாவது ப்ரோக்ராம் வைத்து, தான் பார்க்கும் போது அவளையும் பார்க்கச் செய்தான்.

அதைப் பற்றிய விவரங்களை அவள் கேட்டாலும், கேட்காவிட்டாலும் சொல்லுவான். முடிந்தவரை தாங்கள் தனிமையில் இருக்கும் நேரமெல்லாம் அவளைத் தன் கை வளைவுக்கு உள்ளேயே வைத்திருக்கும் வித்தையை கற்று வைத்திருந்தான்.

இப்போதெல்லாம் அவன் அருகில் வந்து உட்கார்ந்தாலே அவளாகவே அவனது தோளில் சாய்ந்து டிவி பார்ப்பதோ,

அல்லது யோசனையில் இருப்பதோ இயல்பாக இருந்தது. இரவு குழந்தைகளுடன் அவன் விளையாடும் போது, தான் கலந்து கொள்ளாவிட்டாலும் வேடிக்கை பார்த்து இருப்பாள்.

ஒவ்வொரு இரவும், அவர்களுக்கு புதிதாகவே இருந்தது. புதுமணமகனுக்கு உரிய ஆர்வத்தோடு அவன் அவளை நெருங்க, பதில் கொடுக்காவிட்டாலும், அவனுடைய ஆர்வத்துக்கு தடை போடாமல், அத்தனையும் அனுமதித்தாள்.

பெண் என்பவள் மென்மையானவள். மனதளவில் அனிச்ச மலர் போன்றவள். உடல் அளவில் மிருதுவான ரோஜாப்பூ போன்றவள். அத்தகையை பெண்களை மென்மையாக கையாளும் பொழுது, அவர்களுக்குள் இருக்கும் ஆசையும் காதலும், கணவனிடத்தில் தஞ்சமென குடி புகுந்து விடும்.

ஒவ்வொரு இரவிலும் மருத்துவர்கள் சொன்னார்கள் என்பதற்காக கடமையாக அவளை கையாளாமல், காதலோடும், ஆசையோடும், அவளிடம் பேசி, அவளது மனதையும், விருப்பத்தையும் அவளது முகக்குறிப்பிலிருந்து அறிந்துகொண்டு, தனது தேவை என்று பாராமல், அவளது தேவையும் பூர்த்தி செய்து, அவளை சந்தோசப் படுத்தியதன் மூலம், உபேந்திரா ரங்காவின் மனதின் ஆழத்தில் அவளறியாமல் ஒரு நிலையான இடத்தை பிடித்தான்.

அன்று காலை விழிக்கும் போதே தன்னுள் ஏதோ வித்தியாசமாக உணர்ந்த ரங்கா என்னவென்று பார்க்க பீரியட்ஸ் ஆகி இருப்பது தெரிந்தது. உடனே குளித்து வந்தவள், வயிற்று வலி அதிகமாக இருக்கவே சுருண்டு படுத்துக் கொண்டாள்.

குழந்தைகளை பள்ளியில் விட்டுவிட்டு வந்த உபேந்திரா ரங்கா சுருண்டு படுத்திருப்பதைப் பார்த்து அருகில் அமர்ந்து, "என்ன அம்முலு இன்னைக்கு காலையிலே படுத்துட்டே...?" என்று கேட்டதற்கு, பதில் எதுவும் சொல்லாமல் திரும்பி படுத்து கொண்டாள்.

'சரி இன்னைக்கு ஏதோ மூடு சரியில்லை' என்று நினைத்த உபேந்திரா, அன்று அலுவலகத்தில் ஒரு முக்கியமான நபரை சந்திக்க வேண்டி இருந்ததால், ரஞ்சிதம்மாவை அழைத்து சாப்பாடு கொடுக்க சொல்லி விட்டு கீழே சென்று விட்டான்.

மதியம் இரண்டு மணிக்கு அவன் வரும்போது, தன்னையறியாமல் அவள் தூங்கி இருக்க, அவளது படுக்கையிலும் சுடிதாரின் பின்பக்கமும் இரத்தத்தை பார்த்தவன், பயந்து போனான்.

அவசரமாக கீர்த்தியை அழைத்து, ரங்காவை காட்டி விபரம் என்னவென்று கேட்க, “அண்ணா எனக்கு என்னவோ பீரியட்ஸ்

ஆகியிருப்பாள் என்று நினைக்கிறேன்..." என்றவள் கையோடு நாப்கினை எடுத்துக்கொண்டு வந்தாள்.

"கீர்த்தி அவளுக்கு வேற டிரஸ் மட்டும் எடுத்துட்டு வா..." என்று சொல்லி டிரஸ்சை வாங்கி அவளை வெளியே அனுப்பிவிட்டு, ரங்காவை மெதுவாக எழுப்பினான்.

"அம்முலு டிரஸ் சேஞ்ச் பண்ணிக்கலாமா?" என்று அவளிடம் கேட்டுக்கொண்டே, அவளது டிரஸ்சை மாற்ற உதவி செய்தான். களைந்த அனைத்து டிரஸ்சையும் தானே வாங்கிக் கொண்டுபோய் வாஷிங் லிக்விட்டில் முக்கி எடுத்து, பிழிந்து கொடியில் போட்டான்.

"என்னடா பீரியட்ஸ் ஆயிட்டா என்கிட்ட சொல்ல வேண்டியதுதானே. காலையிலேயே பேட் எடுத்துக் கொடுத்திருப்பேன்ல..." என்று அவள் கையைப் பிடித்து, முகத்தை பார்த்து கேட்க, பரிதாபமாக அவனைப் பார்த்தாள்.

"சரி போகட்டும் விடு. இனி எனக்கு எப்படியாவது சொல்லிடணும் சரியா?" என்றவன் ரஞ்சிதம்மாவை அழைத்து சாப்பாடு எடுத்து வர சொன்னான்.

ரஞ்சிதம்மா மதிய சாப்பாடு கொண்டுவந்து கொடுத்துவிட்டு, "ஐயா காலையில அம்மா ஒண்ணுமே சாப்பிடலைங்க...!" என்றார்.

"ஏன் சாப்பிடல? உங்களை ஊட்டி விடச் சொன்னேனே?"

"ஆமாங்க ஐயா. நான் கொடுத்தேன் வாயைத் திறக்க மாட்டேனுட்டாங்க..."

"உடனே என்கிட்ட சொல்லி இருக்கலாமே...!"

"ஐயா நீங்களே முக்கியமான வேலை இருக்க போய் தான் என் கிட்ட சொல்லிட்டு போயிருக்கீங்க. எப்படி நான் உங்க கிட்ட சொல்லுறது.?" என்று அவர் விளக்கம் அளிக்க...

"சரி நீங்க போங்க நான் பார்த்துக்கிறேன்..." என்று அனுப்பி விட்டு, அவளுக்கு சாப்பாடு ஊட்டி விட ஆரம்பித்தான்

சமத்தாக வாயைத் திறந்து படபடவென்று சாப்பிட்ட வளைப் பார்த்து, அவனுக்கு பாவமாகி போயிடுச்சு. "சாரிடா... இனி என்ன வேலை இருந்தாலும், உனக்கு சாப்பாடு ஊட்டி விட்டு தான் நான் போவேன்..."என்று உறுதி அளித்த பின்பு தான் அவனுக்கு கொஞ்சம் நிம்மதி ஆயிற்று.

"என்னை தவிர வேறு யார் கிட்டேயும் நீ சாப்பிட மாட்டியா...?" என்று கேட்க புரிந்து கொண்டவள் ஆமாம் என்னும் விதமாக தலையாட்டினாள்.

அதைப் பார்த்ததும் மனசு சந்தோஷத்தில் மிதக்க, "ஐ லவ் யூ அம்முலு. லவ் யூ டா செல்லம்..." இன்று மனைவியை தன்னுடைய இன்னொரு குழந்தையாக நினைத்து கொஞ்சினான்.

எது புரிந்ததோ இல்லையோ, அவன் கொஞ்சுவது அவளுக்குப் புரிந்தது. பிடித்திருந்தது. தான் சின்ன குழந்தையாக இருக்கும்பொழுது பாட்டி தன்னை எப்பொழுதும் கொஞ்சுவது போல இருக்க அந்த நினைவில் சாப்பிட்டு முடித்ததும் அவனது மடியில் சாய்ந்தாள்.

"என்னடா தூக்கம் வருதா...?" ஒரு பத்து நிமிஷம் பொறுத்துக்கோ. நானும் சாப்பிட்டு வந்து உன்ன மடியில சாய்ச்சுக்கிறேன்."

அவளிடம் சொன்ன மாதிரியே பத்து நிமிஷத்தில் சாப்பிட்டு முடித்து ரஞ்சிதம்மாவிடம் எல்லாவற்றையும் எடுத்துப் போக சொல்லிவிட்டு, டிவியை ஆன் செய்து விட்டு கட்டிலில் முதுகில் ஒரு தலையணையை வைத்து சாய்ந்து உட்கார்ந்து காலை நீட்டி, மடியில் அவளைச் சாய்த்து கொண்டான்.

சிறு குழந்தையாய் மாறி அவனது மடியில் தூங்கியவள் இரண்டு மணி நேரம் எழுந்திருக்கவே இல்லை. பள்ளியிலிருந்து குழந்தைகளை அழைத்துக் கொண்டு வந்த வாசு, நேராக அவர்களது அறைக்கு வர, உபேந்தரா ரங்காவை தூங்க

வைத்திருப்பதைப் பார்த்து, அவனுக்கு ஆனந்தக் கண்ணீரே வந்துவிட்டது.

"மாப்பிள்ளை உண்மையிலேயே என் தங்கச்சி ரொம்ப கொடுத்து வச்சவ.!" என்று சொல்லி கண்கலங்க...

"அவளுக்கு இன்னைக்கு கொஞ்சம் முடியல அதான்..." என்று இவன் பதில் சொல்லவும்...

"என்ன செய்து மாப்பிள்ளை?"

“ஒண்ணும் இல்ல பீரியட்ஸ்..."

"ஓ அப்படியா. அந்த சமயம் அவளுக்கு பயங்கர வயிற்று வலி இருக்கும். பாட்டி மடியிலே தான் கிடப்பா. அதான் இப்போ உங்ககிட்ட சுருண்டு படுத்து இருக்கா. எதுவா இருந்தாலும் பாட்டிக்கு பதிலா அவளை மடி தாங்க நீங்க இருக்கீங்க என்கிறதே எனக்கு பெரிய சந்தோஷம்..." என்றான் வாசு.

"மச்சான் என்ன இருந்தாலும் அவ என் பொண்டாட்டி. நான் நான் தாங்காமல் வேறு யார் தாங்குவா?" சொன்னவன், வாஞ்சையுடன் அவள் தலைமுடியை ஒதுக்கி, "ரங்கா எழுந்திரு. பசங்க ஸ்கூல்ல இருந்து வந்தாச்சு..." என்று அவளை எழுப்பினான்.

அதற்குள் பாவனாவும், பார்த்தாவும் கட்டிலில் ஏறி, "நாங்களும் படுக்கப் போறோம்..." என்று அப்பாவின் மேலே சாய்ந்தனர்.

குழந்தைகள் சத்தத்தில் எழுந்த ரங்கா, தாங்கள் மூவரும் உபேந்திராவை அமுக்கிக் கொண்டு இருப்பதை பார்த்து, பாவனாவை தன் பக்கம் இழுத்தாள்.

கொஞ்ச நாட்களாக தங்களிடம் பேசாமல், எதுவும் செய்யாமல் இருந்த அம்மா, இன்று தானாகவே அவளை தூக்கவும், ஆசையுடன் அம்மாவின் கழுத்தை கட்டிக் கொண்டது.

"அம்மா உங்களுக்கு சரியாயிடுச்சா? நீங்க இனிமே பேசுவீங்களா? எங்களுக்கு சாப்பாடு ஊட்டுறீங்களா...?" என்று சந்தேகத்தோடு அவளிடம் கேட்க,.

"அம்மாவுக்கு பாதி சரியா இருக்கு. இன்னும் கொஞ்ச நாள்ல முழுவதும் சரியாயிடும். அப்புறம் எல்லாம் செய்வாங்க பாவனா குட்டிக்கு..." என்று சொல்லிக் கீர்த்தி அவளை தூக்கிக் கொண்டாள்.

உபேந்திரா பார்த்தாவை சமாதானம் பண்ணி வேணியை அழைத்து, "நீங்க குழந்தைகளுக்கு ட்ரெஸ் சேன்ஜ் பண்ணி, சாப்பாடு கொடுங்க..." என்ற அவளுடன் அனுப்பி வைத்தான்.

ரங்கா வழக்கம்போல பால்கனியில் தஞ்சம் புக, குழந்தைகளின் நச்சரிப்புத் தாங்காமல் அவர்களை அழைத்துக் கொண்டு தோட்டத்திற்கு சென்றான்.

பால்கனியில் இருந்து ரங்கா குழந்தைகளுடன் அவன் விளையாடுவதைப் பார்த்துக் கொண்டே இருந்தாள். இப்போதெல்லாம் பழைய நினைவுகளுடன், குழந்தைகளின் நினைவும் அவ்வப்போது வர, அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை கவனிக்க ஆரம்பித்தாள்.

வாசு, உபேந்திரா இருவருமே குழந்தைகளுக்கு விளையாட கற்றுக் கொடுத்தனர். "டேய் கிரிக்கெட் ஆடலாமா?" என்று மகனிடம் உபேந்திரா கேட்டான்.

"ஓகே டாடி. வாசு அங்கிள் நீங்களும் வாங்க..." என்று அவனையும் அழைத்துக் கொண்டான் பார்த்தா.

உடனே பாவனா "ஊஞ்சல்தான் விளையாடனும்" என்று ஆரம்பிக்க, கீர்த்தி அவனையும் ஹர்ஷாவையும் அழைத்துக்கொண்டு ஊஞ்சலுக்கு சென்றாள்.

கிரிக்கெட் விளையாடுகிறோம் என்று அதகளப்படுத்தி கொண்டிருந்தவர்களை மாடியில் இருந்து பார்த்த ரங்காவுக்கு புதிதாக ஏதோ தோன்றியது.

"என்ன செய்றாங்க? வாசு, கீர்த்தி பசங்க, உபேந்திரா, விளையாடுறாங்க... வாசு வந்திருக்கானா...?" ஏதேதோ நினைவுகள் மண்டைக்குள் ஓட, தாங்க

முடியாமல் உள்ளே சென்று படுத்துக் கொண்டாள்.

குழந்தைகளுடன் விளையாடிக் கொண்டிருந்தவன், பால்கனியில் ரங்கா இல்லாததை கவனித்து விட்டு, "வாசு கொஞ்ச நேரம் விளையாடு, ரங்கா என்ன செய்றான்னு பார்த்துட்டு வரேன்...!" என்று வீட்டுக்குள் வந்தான்.

அவள் உள்ளே கட்டிலில் திரும்பவும் சுருண்டு படுத்திருப்பதைப் பார்த்து, "என்ன அம்முலு, பால்கனியில் தானே இருந்த? அதுக்குள்ள உள்ளவந்து படுத்துட்டே? என்ன செய்து?" என்று கேட்டுக் கொண்டே அவளது அருகில் அமர்ந்தான்.

சைகையில் பசிக்குது, என்று அவள் சொல்லவும் அப்போதுதான் மதியம் அவளுக்கு சாப்பாடு கொடுத்த பிறகு எதுவுமே கொடுக்கவில்லை என்பது அவனுக்கு நினைவுக்கு வந்தது.

"ஐ அம் சாரிடா. பசங்களை பார்த்த உடனே உன்னை கவனிக்க மறந்துட்டேன்.

இதோ கொண்டு வரச் சொல்றேன்..." என்றவன் ரஞ்சிதம்மாவிடம் அவளுக்கு பிடித்த வெங்காய தோசையும், தேங்காய் சட்னியும் கொண்டுவரச் சொன்னான்.

ரஞ்சிதம்மா கொண்டு வந்தவுடன் தானாகவே தட்டை வாங்க கையை நீட்டியவளை தடுத்து விட்டு, அவனே ஊட்டி விட ஆரம்பித்தான். உனக்கு பிடிச்ச வெங்காய தோசை நல்லா இருக்கா, அவனது கேள்விக்கு அவளது முகத்தின் விகசிப்பு பதில் சொன்னது.

அவை சாப்பிட்ட வேகத்தைப் பார்த்து தன்னைத் தானே நொந்து கொண்டவன், 'ஒருத்தியின் பசியை ஒழுங்காக அறிந்து நம்மால் போக்க இயலவில்லை. ஆனால் கணவன், குழந்தைகள் மற்றும் வீட்டில் உள்ள அனைவருக்கும் எப்போது பசிக்கும், என்ன பிடிக்கும், என்பதை அறிந்து, அந்த நேரம் அவர்களுக்கு உணவளித்து, மற்றும் அனைத்து தேவைகளையும் கவனிக்கும் பெண்களை நினைத்து ஆச்சரியம் ஏற்பட்டது.

பெண்ணின் இயல்பு தாய்மை, கருணை எனில் ஆணின் இயல்பு தலைவன், காவலன் என்பது அவனுக்கு புரிய இரண்டும் இணைந்து இருந்தால்தான் வாழ்க்கை ருசிக்கும் என்பதையும் புரிந்து கொண்டான்.

தலைவன் இல்லாத குடும்பமும், தாய்மை இல்லாத வீடும் எந்த விதத்திலும் சிறப்பாக இருப்பதில்லை. ஏதோ ஒரு வகையில் அந்த குடும்பத்தில் உள்ளவர்களுக்கு ஒரு வெற்றிடம் ஏற்படுகிறது.

தலைவனும், தலைவியும் இயைந்து வாழ்வது தான் வாழ்க்கை. சங்ககால இலக்கியங்களில் இருந்து அதிநவீன நாகரீகமாக விளங்கும் இந்த இருபதாம் நூற்றாண்டில் கூட, குடும்பம் என்பது ஆணும், பெண்ணும் திருமணம் செய்து குழந்தைகள் பெற்று, ஒரே குடும்பமாக வாழ்வது என்பது நடைமுறையில் உள்ளது.

ஆனால் சில பல காரணங்களால் இன்றைய இளைய தலைமுறையினர் திருமணத்தைத் தவிர்த்து, சேர்ந்து வாழ்வது, அல்லது தனியாக வாழ்வது, சிங்கிள் பேரண்ட், இதெல்லாம் சர்வ சாதாரணமாக மாறிக் கொண்டு வருவதில், உள்ள சிரமங்களும், தடைகளும் அடுத்த சந்ததியினருக்கு கண்டிப்பாக ஒருவித மன அழுத்தத்தை கொடுக்கும் வாய்ப்பாக இருக்கும் என்பது, திருமணத்தையே வேண்டாம் என்று தவிர்த்த உபேந்திராவுக்கு புரிந்தது தான் விந்தையிலும் விந்தை.

பலவித யோசனைகளில் ஊடே அவளை சாப்பிட வைத்தவன், அவளைப் படுக்க சொல்லி விட்டு குழந்தைகளை கவனிக்க கீழே சென்றான்.

தொடர்ந்து பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை அவளை கவுன்சிலிங்க்கு அழைத்து செல்ல அவளது நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டது. பேசவில்லையே ஒழியே தன்னுடைய வேலைகளை தானே செய்து கொள்ள ஆரம்பித்தாள்.

சில நேரங்களில் குழந்தைகள் என்ன கேட்கிறார்கள் என்பதை கவனித்து, அருகில் இருந்தால் அதை எடுத்து கொடுக்கவோ, இல்லை எனில் அவர்களை தன் மடியில் வைத்துக் கொண்டு அமர்ந்திருப்பதும் வழக்கமாயிற்று.

பிள்ளைகளுக்கும் அம்மாவின் மாற்றம் தெரிந்ததாலோ என்னவோ, சில நேரங்களில் அவளது மடியில் ஏறி உட்கார்ந்து கொண்டு படிக்கவோ அல்லது டிவி பார்க்கவும் செய்தனர்.

இதற்கிடையில் பாட்டியின் வாரிசு தான் என்பதாக கேசவன் வழக்குத் தொடுத்து இருக்க, அந்த வழக்கை உபேந்திரா நடத்த வேண்டியதாயிற்று.

வாசு கூட ஒருவித வெறுப்பில் உபேந்திராவிடம், "மாப்பிள்ளை இந்த கம்பெனி வேணும்னா கொடுத்துடுவோம். நான் கூட வேற ஏதாவது தொழில் ஆரம்பிக்கிறேன்..." என்று சொல்லிப் பார்த்தான்.

"மச்சான் விளையாடாதீங்க. இப்ப உங்கள நம்பி ஒரு குடும்பம் இருக்கு. நீங்க பாட்டுக்கு எந்த முடிவும் தனியாய் எடுக்க முடியாது. எல்லாம் புரிஞ்சுதான் பாட்டி உங்ககிட்ட சத்தியம் வாங்கி இருக்காங்க.

இன்னைக்கி ரங்கா இப்படி இருக்கான்னா, அதுக்கு அவங்க எல்லாரும்தான் மூலக்காரணம். நீங்க தயவுசெய்து இதில் தலையிடாதீங்க. கேஸ் நான் பாத்துக்கிறேன். உங்க பிசினசை நீங்க கவனிங்க..." என்று அவனை அடக்கவும், அவன் கூற்றிலுள்ள உண்மையை புரிந்து வாசுவும் அமைதியானான்.

பாட்டி இறந்து மூன்று மாதங்கள் கடந்துவிட்ட நிலையில், ஒரு முக்கியமான கேஸ் ஒன்றிற்காக உபேந்திரா தானே குறிப்புகள் தேடிக்கொண்டிருந்தான்.

அது ஒரு அரசியல்வாதியின் கேஸ். அவர் அவனைத் தவிர வேறு யாரும் வாதாடக் கூடாது என்று பிடிவாதமாக இருந்ததால், அவனால் அதை தவிர்க்க இயலவில்லை. அந்த விஷயமாக ஒரு வாரமாக உபேந்திரா கொஞ்சம் பிஸி.

அத்தனை வேலையிலும் ரங்காவின் தேவைகளை கவனித்து விட்டு அலுவலகம் சென்று வந்தான். ரங்காவின் நிலைமையிலும் சற்று முன்னேற்றம் இருந்ததால், உபேந்திரா வால் அவளை விட்டு கொஞ்சம் வேலையில் கவனம் செலுத்த முடிந்தது. வாசுவும்,

கீர்த்தியும் கீர்த்தியின் உறவினர் வகையில் ஒரு திருமணம் ஒன்றிற்காக வெளியூர் சென்றிருந்தனர்.

அன்று மாலை வந்ததுமே குழந்தைகள் அப்பாவைத் தேடினர். ஆனால் உபேந்திர வீட்டில் இல்லை. எனவே அவர்கள் ரங்காவிடம் வந்து, "அம்மா ப்ளீஸ் நீங்க எங்க கூட தோட்டத்தில வந்து இருங்கம்மா. நாங்க அங்க விளையாடறோம்..." அவளை வலுக்கட்டாயமாக கையை பிடித்து இழுத்தனர்.

மறுக்காமல் குழந்தைகள் கூட தோட்டத்திற்கு சென்றாள். அங்கு அவளை ஒரு பெஞ்சில் உட்கார வைத்து விட்டு, இருவரும் ஊஞ்சல், சறுக்கு, சீசா என்று ஒவ்வொன்றாக விளையாடிக் கொண்டு இருந்தனர்.

திடீரென்று பார்த்தாவுக்கு நீச்சல் அடிக்கும் ஆசை வரவே அவன் பாவனாவிடம், "பாவனா நீச்சல் அடிக்கலாமா?" என்று கேட்டான்.

"ஸ்விம்மிங் மாஸ்டர் வரலையே, அப்புறம் எப்படி நீச்சல் அடிக்கிறது?"

"இல்லடி நமக்குதான் நீச்சல் தெரியும் இல்ல. டியூப் இருக்குல்ல, அதில் உட்கார்ந்து நீச்சல் அடிக்கலாம்", என்று பெரிய

மனிதன் போல் சொல்ல ஒன்றும் புரியாத பாவனா ‘சரி’ என்று தலை அசைத்தது.

ரங்கா பூங்காவிலேயே இருக்க குழந்தைகள் இருவரும் நீச்சல் குளத்திற்கு சென்றனர். அருகில் இருந்த அறையில் இருந்து ரப்பர் டியூபை எடுத்துக் கொண்டு வந்து தண்ணீரில் போட்டு முதலில் தங்கையை இறக்கி விட்டான். பின் பார்த்தாவும் இறங்கினான்.

இருவரும் தண்ணீரை கைகளால் தள்ளிக் கொண்டே மிதக்க ஆரம்பிக்க, சிரிப்பும் விளையாட்டுமாய் இருந்தனர். பாவனா சற்று ஆழ பகுதிக்கு செல்ல, பார்த்தா அவளிடம், "பாவனா அங்க போகாத. அந்த இடத்துக்கு போக கூடாதுன்னு அப்பாவும், மாஸ்டரும் சொல்லியிருக்காங்க..." என்று கத்தினான்.

ஆனால் பாவனா கேட்காமல் ஆழமான பகுதிக்கு சென்றாள். சற்று நேரம் மிதந்து கொண்டிருந்தவள் அண்ணனிடம் பேசிக் கொண்டே சற்று வேகமாக கைகளை அடிக்கடி ரப்பர் டியூப் வேகமாக நகர்ந்தது.

அந்த சந்தோஷத்தில் அவள் இன்னும் வேகமாக கைகளை தண்ணீரில் அடிக்க எதிர்பாராத விதமாக அவளது ட்யூப் கவிழ்ந்ததில் பாவனா தண்ணீருக்குள் விழுந்தாள்.

சரியாக நீச்சல் தெரியாததால் தண்ணீருக்குள் தத்தளிக்க, அதை பார்த்து பயந்த பார்த்தா பாவனா, பாவனா என்று கத்தி கூச்சலிட்டான். அவள் தண்ணீரில் தத்தளித்து மூழ்க ஆரம்பிக்கவும், தான் கரையேறி அம்மாவிடம் ஓடி வந்தான்.

"அம்மா பாவனா தண்ணிக்குள்ள விழுந்துட்டா. வாங்கம்மா..." கையை பிடித்து இழுத்து வர, அங்கே பாவனா தண்ணீருக்குள் மூழ்கி, மூழ்கி உயிருக்கு போராடி தத்தளித்து மேலே வர முயற்சிப்பது இருவருக்கும் தெரிந்தது.

"அம்மா பாவனாம்மா, அம்மா ப்ளீஸ்மா, காப்பாத்துங்க ம்மா..." பார்த்தா கத்திக்கொண்டே கதற, அந்த கதறலும் மகளின் உயிர் போராட்டமும், ரங்காவின் நினைவுகளை தட்டி எழுப்ப, பாட்டியின் மரணத்தில் உறைந்து போன அவளது நினைவுகள் உயிர் பெற்று எழ, தன்னை அறியாமலே பாவனா என்று கத்திக்கொண்டே தண்ணீரில் குதித்தாள்.

அதுவரை கத்திக்கொண்டிருந்த பார்த்தா அம்மாவும் தண்ணீரில் குதிக்கவும், பயந்துபோய் நேராக வீட்டை நோக்கி ஓடினான். இவன் கத்திக்கொண்டே ஓடவும் அவனது சத்தம் கேட்டு உள்ளிருந்து சேதுராமும், ரஞ்சித ம்மாவும் வெளியே வரவும், வாசல் கேட்டுக்குள் உபேந்திராவின் கார் நுழைந்தது.

வாசலில் பதட்டமாக தாத்தாவையும், ரஞ்சிதம்மாவையும் கண்டவன், "என்ன தாத்தா?" என்பதற்குள் பார்த்தா அவனிடம் "அப்பா பாவனா தண்ணிக்குள்ள விழுந்துட்டா. அம்மா உள்ள குதிச்சிட்டாங்க..." என்று சொன்ன நொடியில் உபேந்திரா தலைதெறிக்க நீச்சல் குளத்தைப் பார்த்து ஓடினான்.

அங்கு மனைவியும், மகளும் தண்ணீரில் தத்தளிப்பது பார்த்து, உள்ளே குதித்தவன் அடுத்த சில நொடிகளில் இருவரையும் காப்பாற்றி கரைக்குக் கொண்டு வந்து சேர்த்தான்.

அதற்குள் சேதுராமன் ஹாஸ்பிடலுக்கு போன் செய்து ஆம்புலன்ஸ் அனுப்ப ஏற்பாடு செய்துவிட்டு, அங்கு வந்தார். அவரும் உபேந்திராவும் இருவருக்கும் முதலுதவி செய்தனர்.

பத்து நிமிடங்களில் ஆம்புலன்ஸ் வந்துவிட இருவரையும் ஏற்றிக் கொண்டு சென்று மருத்துவமனையில் சேர்த்தனர். பார்த்தாவை ரஞ்சிதம்மாவிடம் ஒப்படைத்து கவனமாக பார்த்துக் கொள்ளும்படி சொல்லி விட்டு, உபேந்திரா பின்னாலேயே விரைந்து சென்றான்.

மனைவியையும், மகளையும் ஐசியூவில் பார்த்தவனுக்கு தன்னுடைய உலகமே சூனியமாக தெரிந்தது. இன்னதென்று அறியாத ஒரு துக்கம் மனதினுள்ளே அழுத்த, மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் ஒரு வித மனபாரத்துடன்,

தலையை கைகளால் தாங்கி அவன் அமர்ந்திருந்த கோலம் பார்ப்பவர் நெஞ்சை உருக்குவதாக இருந்தது.

ஊரிலிருந்து அப்போதுதான் வந்த வாசுவுக்கும் விஷயம் தெரிய, அவனும் கீர்த்தியும் பதறிக் கொண்டு ஹாஸ்பிடல் வந்தனர்.

"மாப்பிள்ளை என்ன ஆச்சு?" என்ற உபேந்திராவிடம் விசாரிக்க...

"என்ன நடந்ததுன்னு தெரியல. நான் வரும்போது இரண்டு பேரும் தண்ணிக்குள்ள தத்தளிச்சுட்டு இருந்தாங்க. காப்பாத்தி இங்க கொண்டு வந்து இருக்கேன். இவங்க எப்படி நீச்சல் குளம் பார்க்க போனாங்க? வீட்ல ரஞ்சிதம்மாவுக்கும் தாத்தாவுக்கும் இவங்க தோட்டத்து பக்கம் போன விஷயமே தெரியல...! நல்ல வேளை நான் தற்செயலா வீட்டுக்கு வந்து சேர்ந்தேன். இல்லைனா, என்ன ஆயிருக்கும், என்று எனக்கு நினைச்சுப் பார்க்கவே முடியல...! என்று உபேந்திரா புலம்பினான்.

"இப்ப டாக்டர் என்ன சொல்றாங்க?"

"உயிருக்கு ஆபத்து இல்லை. கண் விழிக்கட்டும் பார்க்கலாம்னு சொல்லியிருக்காங்க..."

"பயப்படாதீங்க மாப்பிள்ளை. ஒண்ணும் ஆகாது. கடவுள் நம்ம பக்கம் இருக்கிறார்..." ஆறுதல் சொன்ன வாசு தனது வலது கை கொண்டு உபேந்திராவின் தோளை ஆறுதலாக அழுத்தினான். அவன் கைகளை எடுத்து அதில் தன் முகத்தை புதைத்து கொண்ட உபேந்திராவின் கண்களிலிருந்து, இறங்கிய சூடான கண்ணீர் வாசுவின் உள்ளங்கையை நனைத்தது.

# அத்தியாயம் 22

வாழ்க்கையை ஒரு சிலரால் மட்டுமே அதன் போக்கில் எடுத்துக்கொள்ள முடியும். உபேந்திரா அப்படிப்பட்ட ஒருவன்தான். ஒரே பையன், செல்லம் இருந்தாலும் தாத்தாவின் கண்டிப்பு அவனை வழி நடத்திற்று.

அம்மா, அப்பா காதல் திருமணமாக இருந்தாலும் அவர்களுக்கு இடையே இருந்த கருத்து வேறுபாடு திருமணத்திற்கு பின் பெரிய இடைவெளியை உண்டாக்க அதைப் பார்த்து வளர்ந்த உபேந்திராவுக்கு திருமணம் என்ற பந்தத்தின் மீது அதிக அளவு நம்பிக்கை இல்லை.

கருத்துக்கள் முரண்படும்போது, மற்றவருக்காக விட்டுக் கொடுக்க இயலாத சூழ்நிலையில், ஒரு பிரச்சனையாக உருவெடுக்க, தேவையில்லாமல் ஒரு புது பந்தத்தை நாமாக உருவாக்கிக்கொண்டு, பின்னர் ஒத்துப்போகவில்லை என்றால் பிரச்சினையை எதிர்நோக்க நேரிடும். அதுக்கு கல்யாணமே பண்ண வேண்டாம் என்று முடிவெடுத்து அதை தீவிரமாக அமுல் படுத்தியவன்…

தாத்தாவின் எல்லாவித கண்டிஷனுக்கும் கட்டுப் பட்டவனால் இந்த ஒரு விஷயத்தில் மட்டும் அவருடைய எந்த வார்த்தையும்

அவனை கட்டுப் படுத்தவில்லை. தோளுக்கு மேல் வளர்ந்தால் தோழன் என்ற நிலையில், படிப்பு முடித்து, தனது தொழிலில் தனி முத்திரையோடு கால் ஊன்றி நின்ற பேரனை ஒரு அளவுக்கு மேல் சொல்ல முடியாமல் சேதுராமன், மனதில் பேரனின் வாழக்கையை குறித்த கவலையோடு இருந்தார்.

பேரனுடைய கல்யாணம் என்பது தனது கனவாகி விடுமோ என்று நித்தமும் மனத்துக்குள் மறுகி கொண்டு, இறைவனிடம் அவனது மனதை மாற்றும்படி நாள்தோறும் பிரார்த்தனை வைத்த அந்த வயோதிகரின் விருப்பத்திற்கு கடவுளே செவிசாய்த்தார் போல், பாட்டி ரங்காவின் ரூபத்தில், பிரச்சனையை அவரிடம் கொண்டு வந்தார்.

அதைக் கேட்டதும், தனக்கு ஏற்பட்ட பிரச்சினை போலவே கிட்டத்தட்ட இருக்க, தனது அடுத்த தலைமுறையை தான் உயிரோடு இருக்கும் போது பார்க்கும் ஆசையில், பேத்தி ரங்காவின் திட்டத்திற்கு சம்மதம் சொல்லும்படியும் தான் பொறுப்பு ஏற்பதாகவும் கூறி அதன்படியே செய்து முடித்தார்.

எதிர்பார்த்தபடியே குழந்தைகள் தனது என்றதும், தன்னுடைய பேரன் குழந்தைகளை விட்டுக்கொடுக்க மாட்டான் என்ற அவரது நம்பிக்கை பொய்த்துப் போகாமல், குழந்தைகளை ஏற்றுக்

கொண்டதோடு மட்டுமல்லாமல் ரங்காவையும் கைபிடித்தது அவருக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது.

ஆனால் அவர் எதிர்பாராதது பாட்டி இறந்ததும், அந்த அதிர்ச்சியில் ரங்கா மனம் பேதலித்து, இப்படி பேசாமடந்தையாக மாறுவாள், என்பது…

இத்தனை பிரச்சினையிலும் ஒரே நன்மையாக பேரன் அவர் ஆசைப்பட்ட படியே தன்னுடைய மனைவி குழந்தைகளை ஏற்றுக் கொண்டதோடு மட்டுமல்லாமல், ரங்காவை கவனித்துக் கொண்ட விதத்தில், ரங்காவின் மேல் அவன் வைத்திருந்த அன்பையும், காதலையும் உணர்ந்து கொண்டார்.

அவள் குணமாகி இருவரும் சந்தோஷமாக வாழ வேண்டும் என்று அவர் நித்தம் பிரார்த்தித்துக் கொண்டிருக்கும் போது, ரங்காவுக்கும் பேத்திக்கும் ஏற்பட்ட விபத்து அவரை உலுக்கிவிட்டது.

உபேந்திரா செயலற்றுப் போய் இருக்க, சேதுராமனே நேரடியாக வந்து நிற்கவும் மருத்துவர்கள் அனைவரும் இருவரையும் காக்க போராடினர். அதிர்ஷ்டவசமாக முதலுதவி செய்து தண்ணீரை வெளியேற்றி விட்டதால், உயிருக்கு ஆபத்தில்லை என்று தெரிந்தாலும், அவர்கள் கண் விழிக்கும் வரை, சேதுராமனும் தனது அறையிலேயே இருந்தார்.

கிட்டத்தட்ட இரண்டு மணி நேரத்திற்குப் பின்பு முதலில் கண் விழித்தது பேத்தி பாவனா தான். அவள் கண் விழித்து விட்டாள் என்று ஐசியூவில் இருந்த சிஸ்டர் வந்து சொல்லியதுமே, சேதுராமனும், உபேந்திரா, வாசு எல்லோரும் அங்கு விரைந்தனர்.

சேதுராமன் பேத்தியை பரிசோதித்து விட்டு, "செல்லக்குட்டி எப்படி இருக்கீங்க?" என்று பரிவாக பேத்தியிடம் கேட்க, அங்கிருந்த உபகரணங்கள், டாக்டர் எல்லோரையும் பார்த்த பாவனா 'அம்மா' என்று அழ ஆரம்பித்தாள்.

உபேந்திரா தனது மகளை எடுத்து அணைத்துக் கொண்டு, "ஒண்ணும் இல்லடா. பயப் படக்கூடாது. இவங்க எல்லாரும் நமக்கு தெரிந்த அங்கிள்தான். அம்மாவுக்கு ஊசி போட்டு இருக்காங்க. அப்பா இருக்கேன்ல...! என்று எத்தனையோ சமாதானப்படுத்தியும் காது கொடுத்து கேட்க மறுத்தவள், தனது அழுகை சத்தத்தை கூட்ட, அதே வார்டில் இன்னொரு அறையில் படுத்து இருந்த ரங்காவிற்கு பாவனாவின் அழுகை சத்தத்தில், மயக்கம் தெளிந்தது.

எழுந்து உட்கார்ந்தவள், அறையை சுற்றும் முற்றும் பார்த்தாள். தான் இருப்பது ஹாஸ்பிடல் என்பது புரிந்ததும், அங்குதான் பாட்டி இறந்தது என்பது நினைவுக்கு வர, அந்த அதிர்ச்சியில் தான் மயங்கி விட்டது புரிந்தது.

தனக்கு என்ன நடந்தது என்பது ஓரளவு கலங்கலாக நினைவுக்கு வர, கடைசியாக பாவனா தண்ணீரில் தத்தளித்தது அவளது கண்களில் காட்சியாய் தெரிய, தான் உள்ளே குதித்தது மட்டுமே அவளுக்கு உணர்வு இருக்க, குழந்தைக்கு என்ன ஆனதோ என்ற பயத்தில் கையில் ஏறிக் கொண்டிருந்த டிரிப்ஸை பிடுங்கி ஏறிந்தவள், பாவனா என்று அலறிக்கொண்டே அந்த அறையை விட்டு பைத்தியக்காரி மாதிரி வெளியே ஓடி வந்தாள்

அவளது அலறல் சத்தத்தில், அங்கிருந்த நர்ஸ் டாக்டர்கள் அவளை சென்று பிடிக்க முயற்சிக்க, அவர்களையெல்லாம் தள்ளிவிட்டு குழந்தையின் சத்தம் கேட்ட பகுதிக்கு ஓடிவந்தாள்.

அவள் வந்த வேகத்தில் குழந்தையை பிடித்தால் பயந்து விடுவாள் என்பதால், பாவனாவை கட்டிலில் விட்டுவிட்டு எழுந்தவன், வேகமாக ஓடிவந்த ரங்கவை தனது இரு கைகளாலும் தடுத்து பிடித்தான்.

"விடுங்க என்னை, விடுங்கன்னு சொல்றேன்ல, பாவனா தண்ணியில விழுந்துட்டா எப்படி இருக்கான்னு பாக்கணும், துடித்தவளை, "ஷ் ரங்கா நீ இப்படி பதறிக் கொண்டே அவளை போய் பிடிச்சீன்னா குழந்தை பயந்துடுவா. அவளுக்கு ஒண்ணும் இல்லை. நல்லா இருக்கா. நீ அழாம, பயப்படாம அவ கிட்ட

போ. அவளது இரு புஜங்களையும் அழுந்தப் பற்றி அவளது முகத்தைப் பார்த்து அழுத்தமாக உபேந்திரா உரைத்தான்.

கண்கள் விரிய அவனைப் பார்த்தவள், தன்னுடைய துக்கத்தை காட்டும் விதமாக ‘இந்தர்’ என்று அழைத்து, அவன் சட்டை காலரை பற்றி உலுக்கி, "பாட்டி போயிட்டாங்க, என்னை தனியா விட்டுட்டு போய்ட்டாங்க. இந்த உலகத்தில எனக்குன்னு இருந்தது அவங்க ஒருத்தங்க தான். அவங்கதான் போய்ட்டாங்கன்னா பாவனாவும் தண்ணிக்குள்ள விழுந்துட்டா, என் பொண்ணு... ஐயோ என் பிள்ளைங்க மட்டும்தான் எனக்கு, என் பொண்ணுக்கு ஒண்ணுன்னா உயிரோடவே இருக்க மாட்டேன்..." என்று கதற, அவளை நெஞ்சோடு அணைத்துக் கொண்டான்.

அவனது மார்பில் ஒன்றி கதறித் தீர்த்தவளை பார்த்து, அவர்களை தனியாக விட்டு மற்றவர்கள் விலகினர். அவள் அழுவது தான் நல்லது என்பது புரிந்ததால், அவள் முதுகை ஆதரவாக நீவி விட்டுக்கொண்டு, அவள் மனதில் உள்ள அத்தனை குழப்பங்களும் தீரும் வரை அழட்டும் என்று அமைதியாக நின்றான்.

அவளது அழுகை சற்றே மட்டுப்பட்டதும் டிரிப்ஸ் ஏறிய கையில் இருந்து ரத்தம் வடிந்து அவளது உடையிலும், தனது உடையிலும் பரவி இருப்பதை கவனித்தான். நர்சை அழைத்து

அந்தக் காயத்திற்கு முதலுதவி செய்ய சொல்ல, அவள் ரத்தத்தைத் துடைத்து விட்டு அந்த இடத்தில் ஒரு பேண்ட் எய்ட் போட்டு விட்டாள்.

"இப்ப நான் பாவனாகிட்ட உன்னை கூட்டிட்டு போறேன். அவளை பயப்படுத்துற மாதிரி எதுவும் செய்யக் கூடாது…" என்று சொல்லியே, பாவனாவின் அருகில் அவளை கூட்டி சென்றான்.

ரங்காவை பார்த்ததும் 'அம்மா' என்று தாவிய குழந்தையை அருகில் உட்கார்ந்து மடியோடு அணைத்துக் கொண்டவள், குழந்தையின் கன்னத்தில் மாறி, மாறி முத்தமிட்டாள்.

"செல்ல குட்டி எப்படி இருக்க?" என்று கண்ணீர் வழிய கேட்டு மகளை அணைத்துக் கொள்ளவும், கொஞ்ச நாட்களாக தங்களிடம் பேசியிராத அம்மா பேசிய சந்தோஷத்தில் அதுவும் கழுத்தை கட்டிக் கொண்டு அழுதது. மகளை மெல்லிய குரலில் அவள் சமாதானப்படுத்தும் போதே, உபேந்திரா டாக்டர்களிடம் பேசினான்.

"இன்னைக்கு நான் வீட்டுக்கு கூட்டிட்டு போறேன். நாளைக்கு ரெண்டு பேரையும் கூட்டிட்டு வந்து இன்னொரு செக் அப் பண்ணிக்கிறேன். வீட்ல பையன் இருக்கான். அவனை பார்க்கணும்னு ரங்கா சொல்லுவா… இப்ப கூட்டிட்டு போறதுனால எந்த பிரச்சினையும் இல்லையே?" என்று அவர்களிடம் கேட்க…

"நோ. நீங்க தாராளமா கூட்டிட்டு போகலாம். நல்லா ஆயிட்டாங்க. நாளைக்கு எதுக்கும் உங்க திருப்திக்கு ஒரு செக் பண்ணிக்கோங்க..." என்று கூறி அனுப்பி வைத்தனர்.

காரில் வரும் போதும் மகளை தன் மடியிலேயே இருத்திக் கொண்டு அழுது கொண்டே வந்தவளை, திரும்பி, திரும்பி பார்த்துக் கொண்டே காரை ஓட்டி வந்தான். வாசு, கீர்த்தி தாத்தா ஒரு காரில் சென்று விட இவர்கள் மூவரும் இன்னொரு காரில் வீட்டுக்கு திரும்பினர்.

வீட்டில் ஏற்கனவே பயந்து போயிருந்த பார்த்தா அம்மாவையும், தங்கையையும் பார்த்ததும் அழ ஆரம்பிக்க, அவனையும் தனது அருகில் இழுத்து அணைத்துக் கொண்ட ரங்கா, "ஒண்ணுமில்ல பயப்படாதே. ரெண்டு பேரும் நல்லா இருக்கோம்..." என்று அவனை சமாதானப்படுத்த...

"சாரிமா. இனி நாம் நீச்சல் குளம் பக்கம் தங்கச்சிய கூட்டிட்டு போக மாட்டேன்..." என்று மறுபடியும் அவன் அழுதான்.

"அதெல்லாம் ஒண்ணும் இல்லை. அப்பா அல்லது கோச் இருக்கும்போது போங்க சரியா? அதுக்காக நீச்சலை பாதியில் விடக்கூடாது. எதுலனாலும் ஆபத்து இருக்கத்தான் செய்யும். கவனமா இருக்கணும்..." மகனுக்கு தைரியம் சொல்லி அவனுடைய பயத்தை போக்கினான் உபேந்திரா.

அப்பாவின் பேச்சை கேட்டதும் "சரிப்பா" நீங்க சொல்ற படியே கேட்கிறேன், என்று கூறியவன் அம்மாவிடம், "அம்மா உங்களுக்கு சரி ஆயிடுச்சா?" என்று கேட்க கண்ணீரோடு அவனை அணைத்துக் கொண்டு, "சரி ஆயிடுச்சுடா கண்ணா. சாரி உங்களையெல்லாம் நான் ரொம்ப கஷ்டப்படுத்திட்டேன் இல்ல…" என்று தன் இரு குழந்தைகளையும் அணைத்துக் கொண்டு அழ முற்பட அவளைப் பார்த்து, "ஷ் போதும் ரங்கா, எதுக்கு இப்ப பழச பேசிட்டு வா…" என்று அவர்களை மாடிக்கு அழைத்துச் சென்றான்.

தனது இரு குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு பழையபடி தான் படுக்கும் இடத்தில் படுத்த ரங்காவை பார்த்தவனின் உள்ளம் துடித்தது. அவளுடைய நினைவுகள் திரும்பி வந்ததில் சந்தோஷம் அடைந்தாலும், இடையில் நடந்த நிகழ்வுகள் எத்தனை தூரம் அவளுக்கு தெரிந்திருக்கும் என்பதில் அவனுக்கு சந்தேகமாக இருந்தது.

தான் பழைய ரங்கா இல்லை என்று எப்பொழுது அவளுக்கு தெரியும்? தெரிந்தால் அதற்கு அவளுடைய ரியாக்சன் என்னவாக இருக்கும்? என்ற யோசனையால் அவனுக்கு தூக்கம் வர மறுத்தது. எல்லாவற்றையும் விட பழைய ரங்கா திரும்பிவிட்டாள். ஆனால் தன்னுடைய காதலியாக, மனைவியாக இருந்த புது

ரங்காவை அவனது மனம் தேட, உடலும் உள்ளமும் பரிதவிக்க அவளது அணைப்புக்கும், அன்புக்கும் ஏங்கினான்.

அவளை தனது மனைவியாக நடத்தியபோது எதுவும் பேசாவிட்டாலும் அவளது உடல் மொழியும், ஆசையும், பார்வையும் அவனை அங்கீகரித்த விதத்தில், அவனுக்கு மிகவும் நெருக்கமான உறவாக மாறி இருந்த மனைவியை இப்பொழுது காணாமல், இனி இதை புரிய வைக்க எத்தனை போராட வேண்டுமா? என்று தோன்றியதும், இதை ஒத்துக் கொள்வாளா, என்னை அவளது கணவனாக ஏற்றுக் கொள்வாளா? இந்தக் கேள்விகள் வேறு அவனது சிந்தையில் எழ, தூக்கம் வராமல் மெதுவாக எழுந்து பால்கனியில் வந்து அமர்ந்தான்.

மருந்தின் வீரியத்தில் ரங்கா உறங்கிவிட, குழந்தைகளும் நன்கு உறங்கி விட்டனர். காலையில் விழிப்பு வந்தபோது உபேந்திராவை அங்கு காணவில்லை.

பழைய நாட்களைப் போல எழுந்த ரங்கா குழந்தைகளை எழுப்பி பள்ளிக்கு செல்ல தயார் செய்தாள். அவளுக்கு வேணியும் உதவி செய்யவே குழந்தைகள் சீக்கிரமே கிளம்பி விட்டனர்.

அவர்கள் அறையை விட்டு வெளியே வந்தபோது கீர்த்தி தங்களது அறையிலிருந்து ஹர்ஷாவை கிளப்பிக் கொண்டு வர, "

கீர்த்தி நீ ஹாஸ்பிடல்ல இருந்து நேரா வீட்டுக்கு போகலையா? அப்ப வாசு எங்கே?" என்று கேட்க.

"வாசு அண்ணாவோட வாக்கிங் போய் இருக்கிறார்...!" இப்படி சொல்லிக்கொண்டு இருக்கும்போதே, வாசுவும் உபேந்திராவும் அங்கு வந்தனர்.

"என்ன வாசு, நீ எப்படி இருக்க? அவனை புதிதாக பார்த்ததுபோல் விசாரிக்க, அவளது நிலைமையை புரிந்து கொண்ட வாசு "நல்லா இருக்கேன் ரங்கா' என்று பொதுவாக பதில் சொன்னான்.

"ரங்கா நீ கீர்த்தி கூட குழந்தைகளை கீழே அனுப்பி சாப்பிட சொல்லு. ஒரு நிமிஷம் உள்ள வா..." என்று கூப்பிட...

"என்ன நீங்க, இப்பவே மணி எட்டு ஆயிடுத்து. குழந்தைங்க சாப்பிட்டு ஸ்கூலுக்கு கெளம்பணும். நீங்க குளிச்சிட்டு வர்றீங்களா அல்லது நான் டிரைவர் கூட போகவா?" என்று பதில் கேள்வி அவனை கேட்க...

"ப்ளீஸ் ஜஸ்ட் ஒன் மினிட்.!" என்று வலுக்கட்டாயமாக கையை பிடித்து உள்ளே அழைத்து அழைத்து வந்தவன், "பாட்டி இறந்து மூணு மாசம் ஆச்சு. இந்த மூணு மாசமா வாசுவும், கீர்த்தியும் உனக்குப் பதிலாக குழந்தைகளை இங்கே இருந்து

பார்த்துக்கிட்டாங்க. அதனால அவங்க கிட்ட வேற விதமா பேசி அவங்கள சங்கடப்படுத்திடாத. ப்ளீஸ் புரிஞ்சுக்கோ..." சொல்லவும் தான் ரங்காவுக்கு தனது உண்மை நிலையே புரிந்தது.

"ஓ... அதை நான் மறந்துட்டேன். சாரி. ஓகே, நான் இனிமே இப்படி பேச மாட்டேன். ஸ்கூலுக்கு போகலாமா...?"

"நீ கீழே போ. பத்து நிமிஷத்துல வரேன்..." என்று அவளைக் கீழே அனுப்பி வைத்துவிட்டு தான் குளிக்க சென்றான். கீழே டைனிங் டேபிளில் பாவனா சாப்பிட அடம் பிடித்துக் கொண்டிருக்க, "பாவனா செல்லம் அம்மா ஊட்டி விட ட்டா...?" என்று கேட்டு அவளுக்கு ஊட்ட ஆரம்பித்தாள்.

உடனே பார்த்தாவும், ஹர்ஷாவும் கூட அவளிடம் சாப்பிட வந்துவிட்டனர்.

மூன்று குழந்தைகளுக்கும் மகிழ்ச்சியோடு தானே ஊட்டிவிட்டு அவர்களுக்கு வாயை துடைத்து, தானும் சாப்பிட்டதாக பெயர் பண்ணி, "சரி கிளம்புங்க போகலாம்... " என்று சொல்லவும் உபேந்திரா கீழே வரவும் சரியாக இருந்தது.

"நேரமாயிடுச்சு நீங்க இன்னும் சாப்பிடலையே...!"

"பரவாயில்ல ஸ்கூலுக்கு போயிட்டு வந்து சாப்பிடறேன்..." என்றவன் குழந்தைகளையும் அவளையும் அழைத்துக் கொண்டு காரில் கிளம்பினான்.

"வாசு நீ கம்பெனிக்கு போ. ஹர்ஷாவை ஸ்கூல்ல நாங்களே விட்டுடறோம்..." என்று கூறவும் வாசு அவனிடம் "நானும் கீர்த்தியும் வீட்டுக்கு கிளம்பறோம். ஈவ்னிங் நான் ஹர்ஷாவை பிக்கப் பண்ணிக்கிறேன்..." என்று பதில் கூறினான்.

"உடனே போகணுமா...? கொஞ்ச நாள் இருந்துட்டு போகலாமே..." உபேந்திராவும், சேதுராமும் எவ்வளவோ கூறியும் அவர்கள் கிளம்பி விட்டனர்.

பள்ளியில் குழந்தைகளை இறக்கி விட்டுவிட்டு திரும்பவும் வீடு நோக்கி காரை செலுத்தியவனிடம் "என்ன நீங்க ஆபீஸ் போகலை...?" என்று ரங்கா ஆச்சரியமாக கேட்க, அவளை திரும்பி ஒருமுறை அழுத்தமாக பார்த்துவிட்டு காரை செலுத்தினான்.

தான் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லாமல் அழுத்தமாக தன்னை பார்த்தவனே, புரியாமல் அவளும் பார்த்தாள்.

'தான் கேட்டதில் ஏதோ சரி இல்லை' என்பது புரிந்தவளாக மௌனமாக வர, அவனும் இவளிடம், இதுவரை நடந்தவைகளை

எப்படி அவளிடம் சொல்வது என்ற யோசனையில் மௌனமாகவே காரை ஓட்டினான்.

வீட்டிற்குள் நுழைந்ததும் நேராக தாத்தாவிடம் சென்றவள், "தாத்தா எப்படி இருக்கீங்க? சாப்பிட வாங்க..." என்று பழைய நினைவில் அழைத்தாள்.

"ரங்கா நீ எப்படி இருக்க? ஆர் யூ ஓகே நவ்?"

"ஆமா தாத்தா. நேத்து நைட்டே நான் சரியா ஆயிட்டேன்..." நேற்று நடந்ததை மட்டும் நினைவில் கொண்டு அவள் சொல்ல, தாத்தாவிற்கும் அவளது நிலை புரிந்தது.

பின்னாடியே வந்து நின்ற பேரனை பார்த்தவர் அவனது முகத்தில் உள்ள குழப்பத்தை கண்டு மௌனமாக இருக்கும்படி கண்களால் சைகை செய்தார்.

"நீங்களும் சாப்பிடலைல, வாங்க..." என்று கூறி விட்டு அவள் கிச்சனுக்குள் சென்று விட, தாத்தாவிடம் உபேந்திரா "என்ன இது தாத்தா? அவளுக்கு பழசு ஞாபகம் வந்துருச்சு. ஆனா இப்ப நடந்தது அவளுக்கு ஞாபகம் இருக்கான்னு எனக்குத் தெரியலையே...? எனக்கு என்ன பண்றதுன்னே புரியல!"

"கவலைப்படாதே. இப்ப நடந்ததும் மனசுல ஒரு ஓரத்துல கண்டிப்பாய் இருக்கும். அது தன்னாலே வெளிவரும். முதல்ல

அவ சரியானதுக்கு சந்தோஷப்படு. மற்ற விஷயங்கள் நீ பொறுமையா இருந்தா தானா நடக்கும்..." என்று அறிவுரை சொல்லி, அவனை கைப்பிடியாக சாப்பிட இழுத்துக் கொண்டு வந்தார்.

இருவருக்கும் டிபன் பரிமாறி விட்டு, மதிய சமையலுக்கு ரஞ்சிதம்மாவிடம் சொல்லிவிட்டு, உபேந்திராவிடம், "ஆபீஸ் போக போறீங்களா, நானும் வரவா?" என்று கேட்டாள்.

"நான் இப்ப ஆபீஸ் வீட்ல தான் வச்சிருக்கேன். நீ இன்னும் கொஞ்ச நாள் ரெஸ்ட் எடு. அப்புறம் ஆபீஸ் வரலாம்..." என்று கூறிவிட்டு வாசலில் உள்ள தன்னுடைய அலுவலகத்திற்கு சென்று விட்டான்.

சற்று நேரம் வேலை பார்த்தவன், ஹாஸ்பிடலுக்கு கால் செய்து டாக்டர் மேகநாதன், சித்ரா வந்தவுடன் தனக்கு தகவல் சொல்லுமாறு பணித்தான்.

சற்று நேரத்திலேயே அவர்கள் மாலை ஐந்து மணிக்கு வருவார்கள் என்று அங்குள்ள ரிசப்ஷனிஸ்ட் கூறினாள்.

“எனக்கு ஒரு அப்பாயின்மென்ட் வாங்கி வை”என்று அவளிடம் சொன்னவன், ‘அவர்களிடம் தான் மட்டும் முதலில் சென்றுபார்க்க வேண்டும்’ என்று முடிவு செய்தான்.

மதியம் சாப்பிடும்போது அவனிடம், "நாளையிலிருந்து நாம மெயின் ஆபிஸ் போகலாமா?" என்று ரங்கா அவனிடம் கேட்க...

"என்ன விஷயம்?" என்றான்.

"இல்ல, நான் எந்த கேஸ் பார்த்துட்டு இருந்தேன். அது எல்லாம் என்ன ஆச்சு? அதையெல்லாம் தெரிஞ்சுக்கணும்..."

"அதுக்கு என்ன அவசரம்...?"

"ஒரு டைவர்ஸ் கேஸ். அந்த பொண்ணு ரொம்ப பாவம். அவன் அந்த பெண்ணை ஏமாற்றி கல்யாணம் பண்ணியிருக்கான். நீங்கதான் எப்படியாவது டைவர்ஸ் வாங்கித் தரணும்னு ஒரே அழுகை. எனக்கே பார்க்க பாவமாய் இருந்தது. அந்த கேஸ் என்ன ஆச்சு யார் நடத்தினா? எல்லாம் பாபு தானே பார்த்துக்கிறார்."

"நீ சொல்றது சரிதான். ஆனா உனக்கு இன்னும் ஒரு செக்கப் இருக்கு. டாக்டர் கிட்ட காட்டிட்டு அதுக்கப்புறம் ஆபீஸ் போகலாமே?" என்று அவன் சொன்னதும் அவளது முகம் சுணங்கிற்று.

அவனைத் தனது வேலையை எவ்வளவு நேசித்தாள் என்பது அவனுக்கும் தெரியும் ஆதலால், அவளிடம் தன்மையாகவே பேசினான்.

"ரங்கா உன்னோட ஆர்வம் எனக்கு புரியுது. ஆனால் கிட்டத்தட்ட மூணு மாசமா நீ, நீயாகவே இல்லை. அன்னைக்கு பாவனாவுக்கு ஏற்பட்ட விபத்தை பார்த்து உன்னோட பழைய இயல்பு திரும்பிட்டாலும், ஒரு தடவை டாக்டர் செக்கப் போயிட்டு வர்றது நல்லது..." என்று பேரன் சொல்லவும் கூடவே இருந்த சேதுராமும், "ஆமாம்மா இன்னொரு செக்கப் போயிட்டு வந்து கம்ப்ளீட்டா குணமான பிறகு உன்னோட வேலைக்கு போ. உன்னோட பாட்டி இருந்தாலும் இதைத்தான் சொல்லி இருப்பாங்க..." என்று சொல்லவும் அவளால் மறுக்க முடியாது போயிற்று.

வாசுவும், கீர்த்தியும் ஏற்கனவே குழந்தைகள் ஸ்கூலுக்கு சென்றதும் அவர்கள் தங்களது வீட்டிற்கு சென்று விட்டனர். எனவே மதியம் குழந்தைகளை அழைக்க ரங்கா தானும் வருவதாக சொன்ன போது, வேண்டாம் எனக்கு ஒரு இன்னொரு வேலை இருக்கு, அதை முடிச்சிட்டு நான் அப்படியே குழந்தைகளை கூட்டிட்டு வந்துர்றேன்..." என்று அவளை தவிர்த்து விட்டு உபேந்திரா மட்டும் தனியாக சென்றான்.

குழந்தைகளை வீட்டிற்கு கொண்டு வந்து விட்டதும் "ரங்கா நான் வெளியே போயிட்டு வருவேன். கீழே தோட்டத்துக்கெல்லாம்

போக வேண்டாம், இங்கேயே இருங்க." என்று அவளிடம் சொல்லிவிட்டு சென்றான்.

நேராக மருத்துவமனைக்குச் சென்று டாக்டரை சந்தித்தான். "சொல்லுங்க சார், இப்ப உங்க மிஸஸ் எப்படி இருக்காங்க?"

"அதை பத்தி பேச தான் நான் வந்தேன். அவங்க பழைய மாதிரி ஆயிட்டாங்க. ஆனால் எனக்கு என்ன பிரச்சினைனா, இடையில் நடந்த விஷயங்கள் அவங்களுக்கு எவ்வளவு தூரம் நினைவில் இருக்குன்னு தெரியல? பாட்டி இறப்பதற்கு முன்னாடி என்கிட்ட எப்படி இருந்தாங்களோ அப்படி இருக்காங்க...!"

"உங்க மனைவியா நீங்க அவங்களை ஏற்றுக்கொண்டது அவங்களுக்கு இன்னும் புரியலைன்னு சொல்றீங்க!"

"புரியலையா, அல்லது உணரலையா எனக்கு தெரியலை. அதுல இன்னொரு பிரச்சினை இருக்கு. தனக்கு சரியான நினைவு இல்லாதப்போ அவங்கள ஏமாத்தி, அவங்க சம்மதம் இல்லாமல் அவளை அடைந்ததா நெனச்சா, இன்னும் பிரச்சனை பெரிதாகும். அதை எப்படி அவாய்ட் பண்றது எனக்கு தெரியல...!"

"ஓகே, ஒண்ணு பண்ணலாம். தானா தெரிஞ்சா கஷ்டம். நீங்க இங்க கூட்டிட்டு வாங்க. அவங்க எப்படி இருந்தாங்க எந்த மாதிரி ட்ரீட்மெண்ட் கொடுத்து அவங்கள குணப்படுத்தினோம்னு நாங்க

சொல்றோம். அதுதான் பெஸ்ட்ன்னு எங்களுக்கு தோணுது. அப்படின்னா உங்க மேல கோபம் வர காரணம் இருக்காது. நீங்க அவங்களை இங்க கூட்டிட்டு வாங்க. நான் பேசுறேன்." டாக்டர் சித்ரா அவனுக்கு தைரியம் சொன்னாள்.

மனதுக்குள் ஒரு சிறிய கலக்கம் இருந்தாலும், அவள் மேல் உள்ள அன்பும் காதலும், தன்னை அவள் மறுக்காமல் ஏற்றுக் கொள்ள வேண்டுமே, என்ற ஆசையும் தோன்றியது.

எந்த விதத்திலும் தன்னுடைய மனைவி குழந்தைகளை விட்டுக் கொடுக்க இயலாது என்பதை புரிந்து கொண்டவன், இத்தகைய ஒரு வாழ்க்கையையா நாம் ஏன் பைத்தியக்காரத்தனமாக தாத்தாவிடம் மறுத்தோம்...?' என்று தனக்குத் தானே மனதிற்குள் ஒரு குட்டு வைத்துக் கொண்டான்.

'இளவயதில் ஏதோ ஒரு சில காரணங்களுக்காக நாம் தள்ளி வைக்கும் சில விஷயங்கள், உண்மையில் அப்படி இல்லை என்பது அந்த உறவுகளுக்குள் வாழ்ந்த பார்த்த பின்புதான் புரிகிறது.

'அம்மா, அப்பாவின் வாழ்க்கையைப் பார்த்து கல்யாணத்தையே மறுத்துவனுக்கு இப்போது மனைவி குழந்தைகளே உலகம் என்று ஆயிற்று. தன்னைத் தானே எண்ணி மனதுக்குள் சிரித்துக் கொண் டவன், 'அவள் எப்படி இருந்தாலும்,

என்னுடைய காதலை அவளுக்கு புரிய வைப்பேன்.' என்று தீர்மானம் செய்த பிறகு தான் அவனால் நிம்மதியாக இருக்க முடிந்தது.

# அத்தியாயம் 23

குழந்தைகள் பாடம் படிப்பதை அருகில் இருந்து கவனித்துக் கொண்டிருந்த ரங்காவின் மனதில் சில சந்தேகங்கள் ஓடிக்கொண்டு இருந்தது.

இடையிடையே குழந்தைகளின் கேள்விக்கு பதில் சொன்னாலும், மனது முழுவதும் உபேந்திராவே நிறைந்திருந்தான். அவனுடைய நடவடிக்கையில் நிறைய வித்தியாசங்கள் தெரியவே, இந்த மூன்று மாதத்தில் என்ன நடந்திருக்கும் என்ற எண்ணம், எங்கேயோ நடந்தது போல் கலங்கலாக தோற்றம் தர, திரும்பத் திரும்ப அதை யோசித்து நன்கு நினைவுக்குக் கொண்டுவர போராடினாள்.

ஆனாலும் அவளது கேள்விகளுக்கு பதில் கிடைத்த பாடில்லை. உபேந்திராவின் பார்வையும், பேச்சும் மிகவும் உரிமையோடு இருக்க, இதற்கு முன்னால் அவன் பேசிய தருணங்களை நினைத்து பார்த்தாள்.

பெரும்பாலும் இருவருக்குள்ளும் வாக்குவாதமும், விட்டுக்கொடுக்காத பேச்சுக்களும் மட்டுமே நினைவில் ஓட, இப்பொழுது அவனது பார்வை சொன்ன செய்தியை அவளால் நம்ப முடியவில்லை.

உன்னுடைய அனுமதி இல்லாமல் உன்னை நெருங்க மாட்டேன் என்று அவன் வாக்கு கொடுத்தது நினைவுக்கு வர, சந்தேகப்படவும் முடியவில்லை.

ஆனாலும் நேற்று மருத்துவமனையில் அவன் நெஞ்சில் சாய்ந்து அழுத போது, அவனது இறுகிய அணைப்பும், முதுகை தடவி ஆறுதல் சொல்லிய போது அந்த தழுவலும், தனக்கு ஏற்கனவே பரிச்சயமானது போன்ற ஒரு உணர்வு ஏற்பட்டதை, அப்போதிருந்த மனநிலையில் கவனிக்காவிட்டாலும் இப்போது அதை யோசித்துப் பார்க்கையில், அந்தத் தழுவலும், அணைப்பும் தனக்கு மிகவும் பரிச்சியமானதாக தோன்றியது.

மேலும் தன் மனம் அதை விரும்புவதையும், நேற்று இரவு, தான் தூங்கிவிட்டதாக நினைத்து அவன் வெகுநேரம் அவளைப் பார்த்துக் கொண்டிருந்ததையும், அவள் அறிந்துதான் இருந்தாள்.

எதையும் சரியாக தெரிந்து கொள்ளாமல், அவனிடம் கேட்க கூடாது என்ற ஒரு காரணத்தினாலேயே, பழையபடியே தான் இருப்பதாக காட்டிக் கொண்டாலும், தான் குணம் அடைந்ததில் அவனுக்கு மகிழ்ச்சியைக் காட்டிலும் குழப்பமே அதிகம் இருப்பது அவளது கூர்மையான புத்திக்கு தெரிந்தது.

குழந்தைகள் பாடம் எழுதி முடித்ததும், "அம்மா பசிக்குது…" என்று கேட்க அப்பொழுதுதான் மணியை பார்த்தாள். கடிகாரம் ஒன்பது மணியை காட்டியது.

அவர்களை கீழே அழைத்துக் கொண்டு வந்து சாப்பாடு ஊட்டிவிட்டு, தாத்தாவையும் சாப்பிட அழைத்தாள்.

"உபேந்திரா இன்னும் வரலையாமா…?" என்று அவர் கேட்க…

"வரலை தாத்தா. நீங்க சாப்பிடுங்க…" என்று சொல்லி அவருக்கு சாப்பாடு வைத்தாள்.

"நீ சாப்பிடு. அவன் வந்த பிறகு சாப்பிடட்டும்…"

"இருக்கட்டும் தாத்தா, நீங்க சாப்பிடுங்க…" என்று அவரை கட்டாயப்படுத்தி சாப்பிட வைத்து, மாத்திரை பால் எல்லாம் கொடுத்து விட்டு, ரஞ்சிதம்மாவிடம் நீங்க சாப்பிட்டு படுங்க மற்றதெல்லாம் மேஜையில் இருக்கட்டும், என்று கூறிவிட்டு குழந்தைகளைத் தூங்க வைப்பதற்காக மாடிக்கு சென்றாள்.

உபேந்திரா ஹாஸ்பிடலில் இருந்து நேரடியாக தனது அலுவலகத்துக்கு சென்று முக்கியமான சில வேலைகளை முடித்துவிட்டு, நேரத்தை பார்க்கும் போது இரவு மணி பத்து என்று தெரிந்தது.

அப்போது தான் பசியை உணர்ந்தான். ரங்காவிடமும் எதுவும் சொல்லவில்லை என்பதால் விரைந்து வீட்டுக்கு வந்தான். அவனக்கு கதவு திறந்து விட்ட ரஞ்சிதம்மாவிடம், "எல்லாரும் சாப்பிட்டுட்டு படுக்கப் போய்ட்டாங்களா...?" என்று கேட்டான்

"அம்மாவை தவிர மற்ற எல்லாரும் சாப்பிட்டு படுக்க போய்ட்டாங்க. அம்மா மேல இருக்காங்க..." என்றார்

'மொத நாளே இப்படி சொதப்பிட்டியேடா இந்தர்' தனக்குத் தானே சாடிக் கொண்டவன், மாடியை இரண்டிரண்டு படிகளாக கடந்தான்.

தங்களது அறைக்குள் நுழைந்ததும் இருட்டாக இருக்கவே லைட்டை போட, அப்போதுதான் தூங்க ஆரம்பித்து இருந்த ரங்கா கண் விழித்து பார்த்தாள்.

குழந்தைகள் நன்றாக தூங்கியதால் அவள் அருகில் வந்து, "வெரி சாரி ரங்கா, அடுத்த வாரம் ஒரு முக்கியமான கேஸ். நான்தான் அட்டெண்ட் பண்ணனும். இந்த வேலைல கொஞ்சம் பிஸியா இருந்துட்டேன். ப்ளீஸ் சாப்பிடவா..."

அப்போது வரை அவனுக்காக காத்திருந்தவள், அவனைக் கண்டதும் அது கோபமாக மாற, "இல்லை எனக்கு பசிக்கலை. நீங்க சாப்பிடுங்க..." என்று சொல்லிவிட்டு திரும்பி படுக்க முயல,

பழைய நினைவில் அவளை மெல்ல திருப்பி, அப்படியே அலேக்காக தூக்கினான்.

"ப்ளீஸ் அம்முலு, லேட்டா வந்தது தப்பு தான். எத்தனை தோப்புக்கரணம்னாலும் போடுறேன். ப்ளீஸ் எனக்காக, உண்மையை சொல்லு, நான் இல்லாம நீ சாப்பிட பிடிக்காமல் தானே சாப்பிடாமல் இருந்த, அப்ப எனக்கு மட்டும் உன்னை விட்டுட்டு சாப்பிட மனசு வருமா, இந்த மூணு மாசமா என் கையால தாண்டி சாப்பிட்டே நீ..." என்று அவன் சொல்லிக்கொண்டே போக, அவன் தன்னை தூக்கி யதிலேயே அதிர்ந்தவள், அவன் பேசிய அனைத்தையும் கேட்டதும், என்ன நடந்திருக்கும் என்று ஒரு மாதிரி அனுமானித்துக் கோண்டாள்.

தன்னுடைய பேச்சுக்கு எந்த விதமான பதிலும் சொல்லாமல், தன் கையிலிருந்து திமிறக் கூட முயற்சிக்காமல் திகைத்த முகத்துடன், தன்னையே விழி அகலாது பார்த்தவளை கண்டதும், இப்போதைய அவளுடைய நிலைமையும், தான் அதை மறந்து வழக்கம்போல் அவளிடம் நடந்து கொண்டதையும் நினைத்து, மறுபடியும் மனதுக்குள் 'அவசரப்பட்டுட்டியேடா இந்தர்' மறுபடியும் தனக்கு ஒரு கொட்டு வைத்து விட்டு, அவளை மெல்ல இறக்கி விட்டான்.

அவளைத் தரையில் இறக்கி விட்டவன், இடுப்பிலிருந்தும் தோளிலிருந்தும் கையை எடுக்காமலே, அவளது பார்வையை கவ்வி நின்றது அவனது விழிகள். கண் சிமிட்டாத அவளது பார்வை, அவனை குற்றம் சாட்ட, முகம் இறுக அவளை இறக்கி விட்டவன் உதடுகள் “சாரி” என்று தானாக முணுமுணுத்தது.

தான் போகாமல் அவனும் சாப்பிடமாட்டான் என்பது தெளிவாக தெரிய, தானும் அந்த மாதிரியான ஒரு உணர்வில் தானே இது வரை காத்திருந்தோம், என்ற உண்மையும் மனது உணர்த்த, பேசாமல் கீழே இறங்கி சென்றான்.

உடை மாற்றி விட்டு அவள் பின்னாலேயே சென்றவன் அவள் பரிமாறிய சப்பாத்தியை மௌனமாக சாப்பிட ஆரம்பித்தான். ஒருவாய் வைத்ததும், "செல்ப் சர்வீஸ் பண்ணிக்கலாம். உக்காந்து நீயும் சாப்பிடு..." என்று அவளுக்கும் தட்டை நகர்த்தி வைத்தான்.

பசி எடுக்கவே தானும் இரண்டு சப்பாத்தியை முழுங்கிவிட்டு, அவனுக்கு பாலைச்சுட வைத்துக் கொடுத்து விட்டு, டேபிளில் இருக்கும் மற்ற எல்லாவற்றையும் ஒழுங்கு செய்தாள்.

அதுவரையிலும் பொறுமையாக அவளுக்காக காத்து இருந்தவனின் பார்வை அவளைப் பின் தொடர, அந்தப் பார்வையில் தெரிந்த வெறுமையில், தீர்க்கத்தில் அவளது மனம் சற்றே குழம்பியது.

தங்கள் அறைக்கு சென்றதும் மறுபடியும் குழந்தைகளுக்கு மறுபுறம் கட்டிலின் ஓரம் படுக்கச் சென்றவளிடம், "நாளைக்கு குழந்தைகளை ஸ்கூல்ல விட்டுட்டு அப்படியே ஹாஸ்பிடல் போகணும். ரெடியாயிரு…" என்றதும்,

"எதுக்கு…?" என்றாள்.

"ஏற்கனவே நேத்தே சொன்னதுதான். டாக்டர் கிட்ட ஒரு தடவை செக் பண்ணிட்டு வந்துடலாம்…" என்று சொல்லிவிட்டு பால்கனிக்கு சென்று விட்டான்.

ஒரு விஷயம் நமக்கு கிட்டாவிட்டால், அது இல்லாமல் வாழ்வது எளிது. ஆனால் இந்த இரண்டு மாத காலமாக ரங்காவின் அருகாமையும், அவளது நெகழ்ச்சியும் அவனை பெருமளவு மாற்றியிருந்தது.

ஒரு சில முறைகள் டெல்லியில் தான் பழகிய மேல்தட்டு நாகரிகத்தின்படி சில பெண்களுடன் டேட்டிங் வைத்திருந்தாலும், அதில் எல்லாம் கிடைக்காத ஒரு வித நிம்மதியும், அன்பும் ரங்காவுடன் இருந்த இந்த இரண்டு மாதங்களில் உணர்ந்தான்.

கணநேர மகிழ்ச்சிக்காக, நாகரீகம் என்ற பெயரில் ஆணும் பெண்ணும் கூத்தடிப்பது, பின்னர் அதை மறந்துவிட்டு

இன்னொருவருடன் செல்வது என்ற வாழ்க்கையில் கிடைக்கும் சந்தோஷம் கானல் நீருக்கு ஒப்பானது.

அதை ஒரு சில வருடங்கள் கழித்து என்றாலும் புரிய வைத்த தனது தாத்தாவுக்கும், பாட்டி ரங்காவுக்கும் அவனது மனதுக்குள் நன்றி செலுத்தினான். தன்னை மாதிரியே ரங்காவும் அவர்கள் இருவரையும் புரிந்துகொள்ள வேண்டும் என்பதே தற்போதைய அவனது விருப்பமாக இருந்தது.

குழந்தைகளை பள்ளியில் விட்டுவிட்டு நேராக ஹாஸ்பிடலுக்கு சென்று டாக்டர் சித்ராவை சந்தித்தனர்.

"வாங்க மிசர்ஸ் உபேந்திரா…" என்று வரவேற்றார் டாக்டர் சித்ரா.

புன்முறுவலோடு அவரது வரவேற்பை அங்கீகரித்த ரங்காவை டாக்டரின் விழிகள் கூர்மையாக அளவெடுத்தது.

"சார் உங்களுக்கு வேலை இருந்ததுனா நீங்க போகலாம். ஒரு ஒரு மணி நேரம் கழிச்சு வாங்க. அது வரைக்கும் நான் கொஞ்சம் ஃப்ரெண்ட்லியா அவங்க கிட்ட பேசிட்டு இருக்கேன்… " என்று நாசுக்காக டாக்டர் சொல்ல…

உபேந்திராவும் "எனக்கு கொஞ்சம் வெளிய வேலை இருக்கு. ஒரு ஒன் அவர் கழித்து வந்துடறேன்." சொல்லி விட்டு கிளம்பினான்.

டாக்டர் சித்ரா மெதுவாக அவளிடம், "எப்படி இருக்கீங்க?" என்று ஆரம்பித்தார்.

"நல்லா இருக்கேன் மேடம். ஆனால் இந்த மூணு மாசம் எனக்கு என்ன ஆச்சு?" தன் சந்தேகத்தை அவரிடம் கேட்க…

"பெரிதாக ஒன்றும் இல்லை, ஒரு சிறு மன குழப்பம். உங்க பாட்டியோட இழப்பை தாங்க முடியாமல், தற்காலிகமா உங்களுக்கு நினைவுகள் எல்லாம் ஸ்தம்பித்து போச்சு. அதனால நீங்க கொஞ்சம் நாள் பேசக்கூட இல்லை…" அவளது பயத்தைப் போக்கும் வண்ணம் எளிதாக கூறினார்.

"ஒஹ், நான் எப்படி இருந்தேன்?"

"எதுவும் பேசல. எந்த செயலுமே நீங்களா செய்யலை. கிட்டதட்ட உங்க குழந்தைங்க மாதிரி இருந்தீங்க… உங்கள உங்க ஹஸ்பன்ட் தான் கவனித்துக் கொண்டார்…"

"அப்படியா…" என்ற சொல்லோடு அவள் மௌனமாக, டாக்டர் பாட்டியைப் பற்றி அவளிடம் பேச ஆரம்பித்தார்.

பாட்டியை பற்றி பேச ஆரம்பித்ததும் ரங்காவின் நினைவுகள் பாட்டியோடு சஞ்சரிக்க ஆரம்பித்தன. அரைமணி நேரத்தில் பாட்டி தன்னை எடுத்துக் கொண்டு வந்து வளர்த்தது முதல், வாசுவும் அவளும் ஒன்றாக வளர்ந்தது. தன்னுடைய படிப்பு, வேலை எல்லாவற்றையும் சொல்லி முடித்தாள்.

"வெரி குட். ஐ அப்பிரிசியேட் யூ. ஆனால் நீங்க மிஸ்டர் ரங்காவை இப்பதான் கல்யாணம் பண்ணுனீங்க. குழந்தைங்க பெரியவங்களா இருக்காங்களே எப்படி? ஜஸ்ட் தெரிஞ்சுக்க கேட்டேன். தப்பான நோக்கம் எதுவுமில்லை..." என்று சேர்த்தே சொல்ல,

சற்று முகம் கருக்க, பதில் சொல்ல மறுத்தவளை பார்த்து, "ரங்கா நீங்க என்ன உங்க ஃப்ரண்டா நினைச்சுக்கோங்க. உடம்புல வர்ற வியாதி மருந்து கொடுத்தா சரியாயிடும். ஆனா மனசுல வரக்கூடிய குழப்பங்கள், சரியான விதத்தில் தீர்ந்தால்தான் திரும்ப பிரச்சனை வராமல் இருக்கும்.

இத்தனை நாள் வரை உங்களுக்கு பாட்டியோட அரவணைப்பு இருந்ததனால உங்க மனசுல இருந்த அழுத்தம் வெளியே தெரியாமல் இருந்தது.

ஆனா இப்ப நீங்க அப்படி இல்லை. உங்க மனசுல ஒரு இன்செக்யூரிட்டி ஃபீலிங்ஸ் இருக்கு. அது முதல்ல போகணும்.

அதுக்குதான் நான் உங்ககிட்ட பேசிட்டு இருக்கேன். ப்ளீஸ் கோ ஆப்பரேட் பண்ணுங்க..."

தயங்கிக் கொண்டே, தான் திருமணத்தையே வெறுத்ததும், பாட்டி தனக்கு பிறகு அவள் உறவுகள் இல்லாமல் தனித்து நிற்கக் கூடாது என்று வற்புறுத்தியதும், அதனால உறவுகளாக குழந்தைகளை பெற்றெடுக்க முடிவு செய்ததும், முதலில் அதை மறுத்த பாட்டி பின்னர் சம்மதம் சொன்னதும், அதன்படியே இதே ஹாஸ்பிட்டலில் அந்த குழந்தைகளை டெஸ்ட் டியூப் மூலம் பெற்றதும், விரிவாக சித்ராவிடம் கூறினாள்.

அப்படியே குழந்தைகளோட வாழ்ந்திடலாம் தான் நினைச்சேன். ஆனால் எதிர்பாராத விதமாக டோனர் உபேந்திராவுக்கு விஷயம் தெரிந்து, அவர் குழந்தைகளுக்காக தன்னை திருமணம் செய்ததுவரை சொல்லி முடித்தாள்.

முழு கதையையும் கேட்ட சித்ராவிற்கு அவளது மன அழுத்தம் எதனால் என்பது புரிந்தது. "ஓகே நடந்தது நடந்துருச்சு. அப்புறம் உங்க லைஃப் எப்படி இருந்தது?"

"நீங்க எதை கேட்கிறீங்க டாக்டர்?"

"உங்களோட மேரீட் லைஃப் பத்தி கேட்கிறேன்...?"

"மேரீட் லைஃப் அதுல என்ன இருக்கு…? குழந்தைகளுக்கு அம்மாவா நான் இங்க இருக்கேன். தட்ஸ் ஆல். எனக்கு தெரிஞ்சு மிஸ்டர் உபேந்திராவுக்கும், கல்யாணம் என்கிற பந்தத்து மேல அத்தனை நம்பிக்கை இல்லை என்று நான் கேள்விப்பட்டேன்…"

"சரி, நான் இப்போ உங்களை ஒரு கேள்வி கேட்கிறேன்? இப்போ ஒருவேளை அவரோட மனசு மாறி அவர் உங்களை மனைவியாக ஏத்துக்கிட்டா, உங்களுக்கு அது விருப்பமா…?" என்று கேட்டதும் பதில் சொல்ல முடியாமல் திணறினாள்.

"அது எப்படி மேடம்? ஒரு கம்பெல்சனுக்காக இணைந்திருக்கும், நாங்கள் எப்படி கணவன், மனைவியா நடந்துக்க முடியும்?"

"கம்பெல்சனுக்காக இணைந்து இருக்கலாம். ஆனால் மனசுங்கிறது மாறக்கூடியது தானே. இப்ப அவர் உங்களை மனைவியை ஏத்துகிட்டா நீங்க அவரை கணவனா ஏத்துக்கிறீங்களா?"

எத்தனை யோசித்தும் அவளால் அதை அக்செப்ட் பண்ணிக் கொள்ள முடியவில்லை. அதை புரிந்து கொண்ட டாக்டர் சித்ரா, "உங்களுக்கு என்ன தயக்கம், அத சொல்லுங்க?" என்று கேட்க.

"எனக்கு அது தேவை இல்லைன்னு தோணுது…?"

"எதனால?"

"இன்னைக்கு பொருளாதாரத்திலிருந்து எல்லா விஷயத்திலும் பெண்கள் தன் காலில் நிற்கிறாங்க. என்னை கேட்டா ஆணை விட பெண்ணுக்கு தான் பொறுப்பு ஜாஸ்தியா இருக்கு. ஒரு குடும்பத்துல ஆண்களால் எந்தவிதத்திலும் பெண்களுக்கு உதவியோ, அன்போ, அரவணைப்போ இல்லை. குடும்பத்தையும் பார்த்துட்டு குழந்தைகளையும் வளர்த்துட்டு, வேலைக்கு போயிட்டு வர பெண்களோட கஷ்டத்தை நான் பார்க்கிறேன்.

ஆண்கள் கல்யாணம் பண்ணிகிட்டாலும், பெயருக்கு குடும்பத் தலைவனாக இருக்காங்க. முடிவுகளை எடுக்கிறது மட்டும்தான் அவங்களோட வேலை. செயல்படுத்துவது எல்லாம் பெண்கள் தான். அதனால வர்ற அத்தனை கஷ்டம் பெண்களுக்குதான் இருக்கு. இதுக்கு எதுக்கு அவங்க?" என்று தன் கருத்தை அழுத்தமாக பதிவு செய்தாள்.

"நீங்க நினைக்கிறது தப்பு. எல்லாருக்கும் அந்த மாதிரியான ஒரு வாழ்க்கை அமையவில்லை. அதே மாதிரி எல்லாருக்கும் அதே மாதிரியான கணவர்கள் கிடைப்பதில்லை. எப்படி இந்த உலகத்துல நீங்க ஒரு தனித்துவமோ (unique) அதே மாதிரி உங்களோட வாழ்க்கையும் தனித்துவம் வாய்ந்தது.

அதை நீங்க கையாள்கிற விதத்தில் தான் இருக்கு. உங்களோட ஹஸ்பண்ட்டை நீங்க முதல்ல புரிஞ்சுக்கோங்க. புரிஞ்சிக்கணும்னா அடிப்படை அன்பு வேணும். உங்க பாட்டி மேல வச்ச அன்பையும், நம்பிக்கையையும் உங்க ஹஸ்பண்ட் மேலே வையுங்க. கண்டிப்பா நீங்க நினைக்கிறது தவறுன்னு உங்களுக்கு புரியும்.

இதைவிட இன்னொரு விஷயம் சொல்றேன். கடவுள் ஆணையும் பெண்ணையும் சமமாக படைத்திருக்கிறார். இரண்டு பேரும் சேர்ந்து வாழணும்கிறது இயற்கையின் நியதி. ஏன்னா நமக்கு எப்படி பசி, தூக்கம், தாகம், உடல் உபாதைகள், எல்லாத்தையும் தடுக்க முடியாதோ, அதே மாதிரி செக்ஸ்லையும் அப்படித்தான். அதோட தேவைகள் நம்முடைய இளமை காலத்தில் காலத்தில் ஆரம்பிச்சு நடுத்தர வயது வரை கட்டாயம் தேவைப்படும்.

அதில் உறைகின்ற அன்புதான் பிற்காலத்தில் வயதான பின்பு ஒரு தம்பதிகளை ஒருத்தரை ஒருத்தர் அனுசரணையோடு பார்க்க வைக்குது. நீங்க இயற்கையை மீறும் போது உங்களுடைய மன அழுத்தம் அதிகரிக்க வாய்ப்பு இருக்கு. இயல்பா இருங்க. இந்த உலகத்தில யாரையும் உங்களால் மாற்ற முடியாது. ஆனா நீங்க மாறிக் கிட்டீங்கன்னா உங்க வாழ்க்கை சொர்க்கம் தான்.

பாட்டி இறந்ததும் உங்களை எங்க கிட்ட உங்க ஹஸ்பண்ட் கூட்டிட்டு வந்தாரு. உங்கள நாங்க குணப்படுத்துவதற்கு அவருக்குச் சொல்லிக் கொடுத்த வழிதான், தன்னோட மனைவியாக உங்களை நடத்த சொன்னது. அது படி தான் அவர் செஞ்சார்.

அதன் விளைவு நீங்க படிப்படியா உங்களோட ஸ்டிரெஸ்ல இருந்து வெளில வந்தீங்க. அதையே தான் உங்க கிட்டே யும் சொல்றேன். நீங்க புரிஞ்சிப்பீங்கன்னு நினைக்கிறேன். நீங்களும் அதே மாதிரி அவரோட மனைவியா நடந்துகிட்டா, பிரச்சினை எல்லாமே சால்வ் ஆயிடும்." நல்ல விதத்தில் அவளிடம் பேசி அவளை மனதளவில் தயார் செய்தார்.

அதே நேரம் உபேந்திராவும் வந்து சேர, "இன்னும் ஒரு ரெண்டு மாசத்துக்கு பதினைந்து நாளைக்கு ஒரு முறை நீங்க ரெண்டு பேரும் வந்து என்னை பாருங்க..." என்ற அறிவுரையோடு அவர்களை அனுப்பி வைத்தார்.

திரும்பும்போது வழியில் காரில் மௌனமாக இருந்தவளிடம் எதுவும் கேளாமல், வண்டி ஓட்டி கொண்டிருந்தவன், தற்செயலாகத் திரும்பிப் பார்க்க கண்களில் நீரோடு அவள் சீட்டில் சாய்ந்து இருந்ததை பார்த்து ஆதுரத்தோடு தன் இடது கை கொண்டு அவளது வலது கையை பிடித்து அழுத்தினான்.

அவனது தொடுகையில் சிலிர்த்து திரும்பியவள் அவனை பார்க்க, "எதையும் தேவையில்லாம நினைச்சு குழம்பாதே. உனக்கு பிடிக்காத எதுவுமே நடக்காது. சரியா. நாம இப்ப குழந்தைகளை கூப்பிட போறோம். உன் முகத்த பார்த்தா அவங்க என்ன, என்னனு கேட்பாங்க...?" என்று சொல்லவும் சற்று இயல்புக்கு வந்தாள்.

வீட்டுக்கு வந்ததும், குழந்தைகளை கவனிக்க வேண்டி இருந்ததால் மற்றவைகள் கொஞ்சம் மறந்து போய் விட்டது. ஆனால் இரவானதும் அவனின் முகம் பார்ப்பதை தவிர்க்க, அவளுடைய மனச்சங்கடம் புரிந்தவன், தேவையில்லாமல் பேசி அவளை தொந்தரவு படுத்தாமல் சற்றே விலகி நின்றான்.

மறுநாள் சனிக்கிழமை என்பதால் வாசுவும் கீர்த்தியும் குழந்தையும் அவளைப் பார்க்க வந்தனர். பரஸ்பர விசாரிப்புக்கு பின், ரங்காவிடம் பேசிக்கொண்டிருக்கும் போது, கீர்த்தி உபேந்திரா அவளைக் கவனித்துக் கொண்டதை பற்றி அனைத்தும் சொன்னாள்.

அதுவும் பீரியட்ஸ் ஆகி இருக்கும் போது கூட, கொஞ்சம் கூட அசூயை படாமல் அவளுடைய ட்ரெஸ் முதற்கொண்டு அவன் அலசி போட்டதை சொன்னதும் அவளுக்கு தனது பாட்டி ஞாபகம் தான் வந்தது.

"அக்கா நீங்க ரொம்ப கொடுத்து வெச்சவங்க. நீங்களா பார்த்து இருந்தா கூட

இவ்வளவு அன்பான மாப்பிள்ளை கிடைத்திருப்பாரா என்பது ஆச்சரியம்தான். உங்க குழந்தைங்க உங்களுக்கு கொடுத்த கிப்ட் உபேந்திரா தான். தன்னோட ரெண்டு குழந்தைகளை விட மூணாவது குழந்தையா உங்களை பாத்துகிட்டார்.

ஆனா இன்னைக்கு அவர்கிட்ட ஒரு விலகலையும் தவிப்பையும் நான் பார்க்கிறேன். என்னாச்சுக்கா, எதுவும் பிரச்சினையா உங்களுக்குள்ள?" என்று கேட்டாள்.

"இல்லை" என்று தலையாட்டியவளுக்கு தன்னுடைய தவிப்பை அவளிடம் சொல்ல முடியவில்லை. காதல் இல்லாமல் கணவன், மனைவி என்பதற்காக மட்டும் ஒருவனிடத்தில் தன்னை முழுதாக ஒப்படைக்க முடியுமா? இரண்டு குழந்தை பெற்ற பிறகு புதிதாக காதல் பிறக்குமா? அல்லது குழந்தைகளுக்காகவும், வாழ்க்கைக்காகவும் கட்டாயம் காதலிக்க வேண்டுமா?

அப்படியே அவனையே காதலித்தாலும் அதை முழுமனதோடு நம்மால் சொல்ல முடியுமா? சொன்னாலும் இந்த வயதில் உனக்கு காதலா என்று அவன் கேலி செய்வானா? அல்லது தன் காதலை புரிந்து கொள்வானா? பலவிதமான கேள்விகள் அவள் மனதை

ஆக்கிரமிக்க வெளியில் சொல்லாமல் கீர்த்தியும், வாசுவும் சொன்னதற்கெல்லாம் தலையாட்டிக் கொண்டு இருந்தாள்.

எல்லாவற்றிற்கும் மேலாக கீர்த்தி சொன்ன சில விஷயங்கள் அவள் மனதில் உபேந்திராவை பற்றி உயர்ந்த அபிப்ராயத்தை விதைத்தது.

இரவு டின்னர் முடித்து விட்டு கிளம்பும் போதும் வாசு அவளை தனியாக அழைத்து, "ரங்கா நீ உயிரா நெனச்சிருந்த உன்னோட பாட்டிக்கு ஏதாவது செய்யணும்னு ஆசைப் பட்டா, அவங்களோட ஆத்மா நிம்மதியாய் இருக்கணும்னு நினைச்சா, அது உபேந்திராவோட நீ வாழற வாழ்க்கையில் இருக்கு. இதுவரைக்கு இருந்த மாதிரி இல்லாம உண்மையான காதலோடு அவர் கூட அவரது மனைவியா, இந்த குழந்தைகளை வளர்க்கணும். அதுதான் பாட்டியோட கடைசி ஆசையும் கூட...!" என்று அவள் மனதில் பதியும்படி சொல்லி விடைபெற்றான்.

ஏற்கனவே அவள் எடுத்து இருந்த முடிவை வாசுவின் இந்த பேச்சு உறுதி ஆக்கியது. மறுநாளிலிருந்து ஒரு புதிய ரங்கா உதயமானாள். எதுவுமே பேசாமல் மௌனமாக வீட்டையும் குழந்தைகளையும் கவனித்துக் கொண்டு, உபேந்திராவுக்கு வேண்டிய அனைத்தையும் செய்தவள் மறந்தும் தன்னுடைய

தொழிலை பற்றியோ அல்லது அவனது வேலையைப் பற்றியோ, பேசினாள் இல்லை.

எப்போதும் சதா யோசனையிலேயே அவளது நேரம் கழிந்தது. அதுமட்டுமில்லாமல் மௌனமாக இருக்கையில் அவளது பார்வை அவனைத் தவிர வேறு எங்கும் செல்லவில்லை. அவனது கம்பீரம் ஆண்மை, குழந்தைகளை கவனிக்கும் பாங்கு, தாத்தாவிடத்தில் மரியாதை, அவளிடத்தில் பேசும்போது கனிவும், காதலும் நிறைந்த பார்வை அத்தனையும் அவளது கண்ணில் பட்டு கருத்தில் நிறைந்தது. தன்னை அறியாமல் அவளது மனம் அவன் பக்கம் சாய துவங்கியது.

இரண்டு நாட்கள் அவளது மவுனத்தை பொறுத்த உபேந்திரா மூன்றாவது நாள், "என்ன ரங்கா உடம்பு சரி இல்லையா…? டாக்டர்கிட்ட போயிட்டு வந்ததிலிருந்து நீ சரியா பேசுவது இல்லையே?" என்று கேட்க…

"அதெல்லாம் ஒண்ணும் இல்ல. ஒரு விஷயம் கீர்த்தி சொன்னா. அதைப் பத்தி யோசிச்சுட்டு இருக்கேன்…" என்று சொல்லவும்…

"என்ன விசயம்…?" என்று கேட்டவனுக்கு

“எனக்கு உடம்பு சரியில்லாம, பேசாமல் இருக்கும் போது நீங்க தானே எனக்கு எல்லாம் செஞ்சீங்களாம். டாக்டரும், கீர்த்தியும், வாசவும் அவ்வளவு சொல்றாங்க...? அது உண்மையா இல்லையான்னு செக் பண்ணி பார்க்க மவுனமாய் இருந்தேன். உண்மை இல்லை போல இருக்கே, ஒருவேளை நீங்க லாயர்ங்கிறதுனால எப்படி பேசணும்னு சொல்லி கொடுத்தீங்களோ?" என்று அவள் வினவ, அவளுடைய அந்தப் பதிலில் அவன் திகைத்து நின்றான்.

அவனது திகைத்த பார்வையும், சுருங்கிய வதனமும், அவளுக்கு என்னவோ போல் இருக்க தனது விளையாட்டை கைவிட்டு குறும்புச் சிரிப்புடன், "என்ன பயந்துட்டீங்களா? சாரி சும்மா விளையாடினேன். ரொம்ப நல்லா பாத்து கிட்டதா எல்லாரும் சொன்னாங்க. எனக்கு நினைவு இல்லாதப்ப நீங்க பார்த்துக்கிட்டது எப்படி என்னால உணர முடியும்? இப்ப அது போல பாத்துகிட்டா எப்படி இருக்கும்னு நெனச்சு பார்த்தேன். அதனாலதான் ரெண்டு நாளா மௌனமா உங்களையே பார்த்துட்டு இருந்தேன். ஆனால் நீங்க எனக்கு ஒண்ணுமே பண்ணலையே...!” என்று உதட்டை பிதுக்கியவள், “எனிவே தேங்க்ஸ்...” என்றாள் தன் முகம் மலர...

அந்த மலர்ந்த முகமும், அவளது குறும்பு பேச்சும் உபேந்திராவுக்கு பன்னீரை தன் மேல் தூவியது போல சிலிர்த்தது.

# அத்தியாயம் 24

ரங்காவின் மாற்றமும் அவள் இயல்பாக அவனிடம் பழக முயற்சிப்பதும் புரிந்து, அதற்கு ஏற்றாற்போல் அவளுடன் இருக்கும் பொழுதுகளை, தங்களுடைய விருப்பங்கள் ரசனைகள் அவற்றைப் பகிர்ந்து கொள்வதன் மூலம், தனது அருகாமை அவளுக்கு எப்போதும் இருக்கும்படி பார்த்துக் கொண்டான்.

இரு துருவங்களாக இருந்தவர்கள் உடனடியாக ஒன்று சேர்வது என்பது முடியாத காரியம். உபேந்திராவுக்கு அவளுடைய தயக்கம் புரிந்தது.

அவளுடைய தயக்கத்தை உடைத்தெரிய தனது குழந்தைகளை தங்களுக்கு இடையில் முன்பைவிட அதிகமாக நிறுத்தினான்.

ஸ்கூல் விட்டு குழந்தைகள் வந்ததுமே, "டேய் சீக்கிரம் டிரஸ் சேன்ஜ் பண்ணுங்க. நம்ம தோட்டத்துல போய் விளையாடலாம்..." என்றதும் குதித்துக் கொண்டு இருவரும் அம்மாவிடம் ஓடினர்.

"அம்மா நாங்க கீழ போய் விளையாட போறோம். சீக்கிரம் எங்களுக்கு டிரஸ் சேஞ்ச் பண்ணி விடுங்க..." என்று கூறி டிரஸ் சேஞ்ச் பண்ணி பால் குடித்து விட்டு அப்பாவிடம் வந்து நின்றனர்.

"நம்ம மட்டும் போகலாமா, இல்லை அம்மாவும் கூப்பிடலாமா...!" இந்த ரகசியமாக பாவனாவிடம் கேட்க, 'சரி' என்றது தலையசைத்தது.

"அப்ப போய் கூட்டிட்டு வா...!" மகளை ஏவி விட்டான்.

"அம்மா எங்க கூட தோட்டத்துக்கு வாங்க...!"

"நான் எதுக்கு செல்லம். நீங்க போய் விளையாடுங்க. அம்மா கிச்சன்ல கொஞ்சம் ஒர்க் இருக்கு..." அப்படியே வந்து அப்பாவிடம் சொல்ல, அடுத்த நொடி அவனது குரல் ரஞ்சிதம்மாவை அழைத்தது.

"என்னங்கய்யா...!" என்று வந்தவளிடம், "இப்ப நீங்க எதுவும் கிச்சனில் சமையல் பண்றது இல்லையா...?" என்று வேண்டும் என்றே கேட்க...

அவர் பதறிப்போய், "அய்யா நான் தான் பண்றேன். அம்மா கொஞ்சம் ஊடே,ஊடே வந்து நிப்பாங்க..." என்றதும்...

"இனி நானும் குழந்தைகளும் வந்தாச்சுன்னா, அம்மா கிச்சனுக்குள்ளே வரக்கூடாது. அப்படி பாத்துக்க வேண்டியது உங்க பொறுப்பு...!" என்று ரங்காவை பார்த்துக்கொண்டே சொல்ல,

"நீங்க போங்க அம்மா..." என்று ரஞ்சிதம்மாவை அனுப்பிவிட்டு, இப்ப எதுக்கு அவங்கள மிரட்டிட்டு இருக்கீங்க...!" என்று அவனிடம் போலி கோபத்தோடு கேட்டாள்.

"இல்ல, என்னால உன்னை மிரட்ட முடியல. அதான் அவங்களை மிரட்டி பார்க்கலாம்னு..." என்று நமட்டுச் சிரிப்போடு சொன்னவனை பார்த்து இடுப்பில் கைவைத்து முறைத்தாள்.

"டேய் உங்க அம்மாவை தோட்டத்துக்கு விளையாட வான்னு கூபிட்டா, சீரியல்ல வர்ற வில்லி மாதிரி மொறைச்சுட்டு நிக்கிறா. பயமா இல்ல உங்களுக்கு...? "

"ஆமாப்பா ரொம்ப பயமா இருக்கு. அந்த சீரியலில் கூட ஒரு பாட்டி இப்படிதான் முறைச்சிட்டு நிப்பாங்க. அது என்னடா சீரியல்...? சீரியசாக பார்த்தாவிடம் கேட்டது பாவனா.

"அந்த குண்டு பாட்டி தானே, பெயர் என்னவோ..." என்று சொல்லிக்கொண்டே நெற்றியில் ஒரு விரலால் தட்டிய மகனைப் பார்த்து,

"ஏன்டா என்னை பார்த்தா உங்களுக்கு பாட்டி மாதிரி இருக்கா...?" என்று கையில் கிடைத்த ஸ்கேலை எடுத்து கொண்டு அவனை அடிக்க ஓட, இரண்டு குழந்தைகளும் சோபாவை சுற்றி ஓட ஆரம்பித்தது. கடைசியாக அப்பாவிடம் வந்து தஞ்சம்

அடைந்தவர்கள், அவனையும் தள்ளிக் கொண்டு சோபாவில் விழுந்து விட, அவர்களைச் சுற்றிக் கொண்டு மூச்சு வாங்க முன்னால் வந்து நின்றவள், குழந்தைகளை அடிக்கப் போக, இரு குழந்தைகளையும் அவன் அணைத்துக் கொண்டான்.

"சும்மா அதுக உன்னை கலாய்ச்சது. அதுக்குப் போய் அடிப்பியா...?" என்று எட்டி அவள் கையைப் பிடிக்க.

"எல்லாம் உங்க வேலை தானே...?"

"பின்ன வா, அவங்க தோட்டத்தில் விளையாடட்டும் நம்ம ரெண்டு பேரும் உக்காந்து பேசிட்டு இருக்கலாம்..."

குழந்தைகளும் ஆசைப்படவே, தோட்டத்திற்கு சென்றாள். இருவரும் விளையாட ஆரம்பிக்க, அங்கிருந்த மர பெஞ்சு ஒன்றில் உட்கார்ந்து குழந்தைகள் விளையாடுவதை வேடிக்கை பார்க்க ஆரம்பித்தனர்.

"உனக்கு கேம்ஸ் இன்ட்ரெஸ்ட் உண்டா...?"

"கேம்ஸ் எனக்கு அவ்வளவா பிடிக்காது. மியூசிக் படிக்கணும்னு ஆசை இருந்தது. ஆனா அப்ப அதுக்கு வசதி இல்லை. கண்டிப்பா நம்ம பாவனாவை மியூசிக் படிக்க வைக்கணும்."

"அவளுக்கு விருப்பம் இருந்தா படிக்க வைக்கலாம்..."

"விருப்பமில்லை என்றாலும் ஜஸ்ட் பார் ரிலாக்சேசன் படிக்க வைக்கலாம். விருப்பம் இருந்து அதுல பெரிய அளவில் வர்றது அவளோட தீர்மானம். படிப்பைத் தவிர எக்ஸ்ட்ராவா ஏதாவது ஒரு விஷயம் நமக்கு தெரிஞ்சு இருந்ததுனா, இப்ப இருக்க குழந்தைகளுக்கு அது ஒரு பெரிய ரிலாக்சேஷன் ஆயிருக்கும்..."

"ஓகே. பார்த்தாவை என்ன படிக்க வைக்கலாம் நினைக்கிறே?"

"அவனுக்கு எந்த விளையாட்டில் ஈடுபாடு இருக்கோ அது கண்டிப்பா தனியா கோச்சிங் கொடுக்கணும். அதை வாழ்க்கையா மாத்திக்கிறது அவனோட விஷ். படிப்பும் அதே மாதிரிதான் அவனுக்கு எதுல இன்ட்ரெஸ்ட் இருக்கோ அதை படிக்க வைங்க..."

"இதெல்லாம் நல்லா யோசிக்கிறே. எனக்கு புதுசா என்ன இன்ட்ரெஸ்ட் இருக்குன்னு கேட்க மாட்டியா...?" என்று குறும்புடன் கேட்க...

அதை கவனிக்காமல் "என்ன இன்ட்ரஸ்ட் உங்களுக்கு?"

"டூர் போறதுன்னா எனக்கு ரொம்ப பிடிக்கும். அதுவும் இப்பவும் என்னோட வைஃப்போட ஹனிமூன் போகலாமான்னு பிளான் பண்ணிட்டு இருக்கேன்... " என்று சொல்ல.

"வொய்போட தானே போயிட்டு வாங்களேன்..." வழக்கம் போல் கவனிக்காமல் பதில் சொன்னாள்.

"அப்படியா நெஜமாவா நீ ரெடியா?" அவன் கேள்விகளை அடுக்கவும், அப்போதுதான் அவளுக்கு அவன் தன்னை குறிப்பிட்டு சொன்னதே உறைத்தது.

பதில் சொல்ல முடியாமல் முகம் சிவக்க அவள் தடுமாற, புதிதாக வந்த வெட்கத்தை அவன் ரசித்தான். "என்ன லாயர் மேடம் பதிலே காணோம்...?" காதருகில் அவன் குரல் சீண்டியது.

"இப்ப எதுக்கு திடீர்னு? அதுவும் குழந்தைகளை விட்டுவிட்டு...!"

"ஹனிமூன்னு சும்மா சொன்னேன் ரங்கா. எனக்கு இரண்டு நாள் கழிச்சு டெல்லிக்கு முக்கியமான ஒரு வேலையா போக வேண்டி இருக்கு. நீயும் வாயேன் போயிட்டு வரலாம்..."

மறுப்பு சொல்லாமல் "குழந்தைகள் ஸ்கூலுக்கு போகணும்...?" என்றாள் மொட்டையாக...

"அதெல்லாம் வாசு பார்த்துப்பான். அவங்க வீட்டுல ரெண்டு நாள் இருக்கட்டும். என்ன சொல்ற? உன் கிட்ட கேட்டுட்டு தான் டிக்கெட் புக் பண்ணனும்..."

டாக்டர் சித்ரா சொன்னது நினைவில் வர, "சரி" என்று தலையசைத்தாள் அரைமனதாக...

அதற்குள் பாவனா அருகில் வந்து அவளை கையை பிடித்து இழுத்து "அம்மா என்னை ஊஞ்சலில் உட்கார வைத்து ஆட்டி விடுங்க..." என்று கூற, அவளுடன் எழுந்து சென்றாள்.

அந்த நேரத்தில் வாசுவிற்கு அழைத்தவன், "மச்சான் ஒரு ரெண்டு நாள் என் பிள்ளைகளை பார்த்துகிறியா...?" என்று கேட்டான்.

"ஷ்யூர். ஆனா ரங்கா எங்கே?"

"அவளும் நானும் ஒரு சின்ன ட்ரிப் போயிட்டு வரலாம்னு யோசிக்கிறேன்..."

"என்ன ஹனிமூனா?"

"டேய் ஹனிமூன் போயிட்டாலும், உன் தங்கச்சிய தேத்தவே ஒரு ட்ரிப் போக வேண்டியிருக்கு..." என்று சலிப்புடன் இவன் சொல்ல...

"பின்ன ரங்கான்னா சும்மாவா...?"

"ஏண்டா அவளும் ஒரு பொண்ணு தானே. பெண்களுக்கே உள்ள காதல், வெட்கம் இதெல்லாம் கிலோ என்ன விலை என்று

கேட்பா போல இருக்கு...? அதெல்லாம் சொல்லிக் கொடுத்து வளர்க்க மாட்டீங்களா? ரங்கான்னா சும்மாவான்னு பில்லா ரேஞ்சுக்கு வளர்த்து வச்சுட்டு பில்டப் கொடுக்கிறே? என்று இவன் காய, எதிர்முனையில் வாசு வாய் விட்டு சிரித்தான்.

"மாப்பிள நாங்க எல்லாம் பொண்ணுங்களை தைரியமா வளர்த்து வைத்திருப்போம், பில்லா ரேஞ்சுக்கு..."

"ஆமாண்டா டேய், எங்களுக்கு பில்லா ரேஞ்சு. உங்களுக்கு மட்டும் பவ்யமான பொண்ணு, டேய் பொண்ண பொண்ணா வளர்க்கணும்."

"மாப்பிள நீங்க அதை எனக்கு சொல்லாதீங்க. நான் பையன் தான் வச்சிருக்கேன். நீங்கதான் பொண்ணு வச்சிருக்கீங்க. உங்க பொண்டாட்டிய நாங்க வளர்த்த மாதிரி வளர்த்துடாதிங்க. பிறகு வரப்போற மருமகன் பாடு ரொம்பத் திண்டாட்டமா போயிரும்..."

"உண்மை தாண்டா. தாத்தா என்னோட கல்யாணத்தைப் பத்தி பேசும் போதெல்லாம், அடிக்கடி சொன்ன வார்த்தை இதுதான், பெண்கள் பெண்களா இருக்கணும். ஆண்கள் ஆண்களாக இருக்கணும். இரண்டு பேருக்கும் தனித்துவம் இருக்கு. அத மறந்துட்டு நாகரிகம் என்கிற பெயரில் தேவையில்லாத விஷயங்களை கற்றுக் கொள்வது நாளை, உங்களோட அடுத்த தலைமுறையை தான் பாதிக்கும் என்று சொல்வார். அது எவ்வளவு

உண்மை என்கிறது என்னோட குழந்தைகள் வந்த பிறகுதான் எனக்கு தெரியுது..." என்றவன், "சரி மச்சான் குழந்தைகளை பார்த்துக்கோங்க. நாங்க ரெண்டு நாள் டெல்லி போயிட்டு வரோம்..." என்று கூறி விட்டு போனை வைத்தான்.

மறுநாள் ஸ்கூலில் இருந்து குழந்தைகளை நேராக வாசு வீட்டுக்கு கொண்டு சென்று விட்டு வந்தான். குழந்தைகள் கேட்டதற்கு, "டுடேஸ் அம்மாவை ஹாஸ்பிடல்ல டாக்டர் பார்த்துக்கிறேன்னு சொல்லி இருக்காங்க. ரெண்டே நாள்ல நாங்க திருப்பி வந்து உங்களை கூட்டிட்டு போவோம். உங்களுக்கு என்ன எல்லாம் வேணும்? நான் வாங்கிட்டு வரேன்..." என்று சமாதானம் செய்து அவர்களிடம் நல்ல விதமாகவே சொல்லி வைத்தான்.

ஏற்கனவே ரங்காவிடம் நைட் எட்டு மணிக்கு ஃப்ளைட், நீ டிரஸ் எல்லாம் பேக் பண்ணி ரெடியா இரு. நான் வந்ததும் போவோம்." என்று சொல்லி வைத்திருந்ததால், அவளும் அதன்படி தயாராக இருந்தாள்.

அவன் வந்ததும் தாத்தாவிடம் சொல்லி விட்டு கிளம்பினான். "பசங்க என்ன சொன்னாங்க...? அழலையா?" என்று கேட்டவளுக்கு, நாம டெல்லி போறான்னு சொல்லல. ஹாஸ்பிடல் போறதா சொல்லி வச்சிருக்கேன். நீயும் அதையே மெயின்டேன் பண்ணு என்றான்.

நடு இரவு அவர்கள் டெல்லி சென்றுவிட்டனர். நல்ல குளிர் காலம் ஆதலால் கையில் வைத்திருந்த ஸ்வெட்டரை அணிந்துகொண்டு விமானத்தை விட்டு இறங்கினர்.

ஏற்கனவே உபேந்திரா எல்லா ஏற்பாடும் செய்து வைத்திருந்ததால் அவர்கள் தங்கியிருந்த ஹோட்டலில் இருந்து கார் அனுப்பியிருந்தனர். நேராக அறைக்குச் சென்று பிளைட்டில் விட்ட தூக்கத்தை இருவரும் தொடர வழக்கம்போல் அதிகாலையில் உபேந்திராவுக்கு விழிப்பு வந்தது.

டெல்லியில் உள்ள மத்திய மந்திரி ஒருவர் அவனது கிளையன்ட். அவர் ஒரு முக்கியமான விஷயமாக அவனை வரச் சொல்லி இருக்க, அவருடன் காலை எட்டு மணிக்கு ஒரு அப்பாயின்மெண்ட் இருந்தது.

அதற்காக வெந்நீரில் குளித்து ரெடி ஆனவன், சாவியை உள்ளே வைத்து கதவை வெளிப்பக்கமாக லாக் செய்து கிளம்பிவிட்டான். வெளியில் சென்று போனில் வாய்ஸ் மெசேஜில் தான் அவசரமாக செல்வதாகவும் மதியத்திற்குள் வந்துவிடுவதாகவும், ரூம் சர்வீஸ் அழைத்து சாப்பிட்டு பத்திரமாக இருக்கும்படி அறிவுறுத்தி சென்றிருந்தான்.

நன்கு தூங்கி எழுந்தவள் அறையில் அவனைக் காணாமல் தேடினாள். பின்னர் எழுந்து குளித்துவிட்டு அவனுக்கு போன்

செய்யலாம் என்று போனை பார்த்தபோது அவனது வாய்ஸ் மெசேஜ் வந்திருந்தது. அதைக் கேட்டுவிட்டு, 'நம்மள கூட்டிட்டு வந்து ரூம்ல அடைச்சு போடுவதற்கா' என்று கோபம் வர, முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு சாப்பிடாமலே படுத்து திரும்பவும் தூங்கிவிட்டாள்.

அவன் திரும்பி வரும்போது மதிய சாப்பாடு நேரம் ஆகியிருந்தது. காரில் வரும்போது போன் பண்ணியும் அவள் போனை எடுக்காததால், சற்று பதட்டமாகவே அறைக்கு திரும்பி வந்தான்.

தன் கையில் இருந்த சாவியை போட்டு திறந்து பார்த்தான். ரங்கா தூங்கிக்கொண்டு இருந்தாள். 'இன்னுமா தூங்கி கொண்டு இருக்கிறாள்' என்ற நினைப்பில் அவள் அருகில் சென்று, அவள் ‘கன்னம்’ தொட்டு ரங்கா என்று அழைக்க, தலைக்கு குளித்து இருந்ததால் முடியை ஹேர் ட்ரையர் கொண்டு வைத்து காய வைத்தவள், விரித்துப் போட்டு அப்படியே தலையணையில் படுத்து இருந்தாள்.

அவளுடைய கார்குழல்கள் முழுவதும் பின்புறம் தலையணையில் விரிந்து இருக்க, மயில் தோகை ஒன்று விரித்து அதில் அவளது முகம் தெரிய, அவனது கை பட்டதும் அந்த

ஸ்பரிசத்தில், கண்விழித்த அவளின் எதிரில் மிகவும் நெருக்கமாக அவனது முகம் தெரிந்தது.

கவலையோடு நெற்றியை தொட்டுப் பார்த்தவன் “என்னடா உடம்பு சரி இல்லையா...? இன்னும் தூங்கிட்டு இருக்கே? எழுந்திருக்கலையா...? என்று கனிவுடன் கேட்ட விதம், அந்த பாட்டியை நினைவுபடுத்த, தன் கோபத்தை மறந்து ஒரு நொடி கண்கலங்கினாள்.

அவள் கண் கலங்கவும் பதறியவன், "சாரிடா சென்ட்ரல் மினிஸ்டர் அப்ப்யின்மென்ட். வர மாட்டேன்னு சொல்ல முடியாது. அவர் வீட்டுக்கு உன்னை கூட்டிட்டு போக முடியாது. அபிஷியல் மீட்டிங். தேவையில்லாம நீ எதுக்கு அதனால்தான் கூட்டிட்டு போகல. வெரி சாரி. சாப்பிட்டியா?" என்று கேட்க இல்லை எனும் விதமாக தலையாட்டினாள்.

"காலைல இருந்து ஒண்ணுமே சாப்பிடலையா?" என்று கேட்டவன், உடனே ரூம் சர்வீசுக்கு ஆர்டர் செய்தான்.

“பத்து நிமிஷத்துல கொண்டு வரோம் சார்...” என்று பதில் கிடைத்ததும், “சரி எழுந்து குளிச்சிட்டு வா அதுக்குள்ள சாப்பாடு வந்துரும்" என்று சொல்ல...

"என்னை பாத்தா குளிச்ச மாதிரி தெரியலையா?" என்று கேட்டாள். அப்பொழுதுதான் அவளை நன்றாக ஊன்றிப் பார்த்தான்.

"குளிச்சு ட்ரஸ் பண்ணிட்டு உங்கள பார்த்தா ஆள காணோம். அதான் பேசாம படுத்துட்டேன்."

"ஏய் நான் உனக்கு மெசேஜ் போட்டுட்டு தானே போனேன்."

"அபிஷியல் மீட்டிங்கு நான் எதுக்கு? அதுவும் குழந்தைகளை விட்டுவிட்டு…" என்று கோபத்தோடு அவள் சொல்ல…

"சாரிடா, என்னதான் இருந்தாலும் குழந்தைங்க முன்னாடி, நம்மளால கொஞ்சம் ஃப்ரீயா இருக்க முடியாது. நீ வேற எங்கேயுமே போனது இல்லைன்னு சொன்னியா…? அதான் டெல்லிய உனக்கு சுத்தி காட்டலாம்னு கூட்டிட்டு வந்தேன்…"

ஆணின் கெஞ்சலும், கொஞ்சலும், குழைவும், அவளுக்கு சற்றே கர்வத்தை கொடுக்க, தன்னையும் நேசிக்க ஒருவன் இருக்கிறான் என்ற உண்மையும், அவளுக்கும் அவன் மேல் அன்பையும், காதலையும் தோற்றுவித்தது.

அதைக் காட்டிக் கொள்ளாமல், சற்றே கர்வமாக, அதை மறைத்திருக்க, தன் மனைவியிடம் தன் காதலைச் சொல்ல என்ன தயக்கம் என்ற நிலையில், எந்த கர்வமும் பார்க்காமல், தனது

செயல்களால் தனது அன்பை காதலை அவளிடம் நிரூபித்துக் கொண்டு இருந்தான்.

ரூம் சர்வீஸில் இருந்து அவர்கள் ஆர்டர் பண்ணிய சாப்பாடு வந்து சேர, கொண்டு வந்தவன் வைத்துவிட்டு வெளியே சென்றதும் கதவை அடைத்து தாள் போட்டுவிட்டு, கைகளை அலம்பி வந்தவன், ஒரு தட்டை எடுத்து அதில் உள்ள சப்பாத்தியை பிய்த்து பருப்பு தொட்டு அவள் வாய்க்கு அருகில் கொண்டு சென்றான்.

அவன் தட்டை எடுத்ததும், ‘உனக்கு சாப்பாடு ஆர்டர் கொடுத்து இருக்கேன்னு சொல்லிட்டு, இப்ப தான் மொக்கி க்கிறது பாரு' மனதுக்குள்ளே கவுண்டர் கொடுத்துக்கொண்டு அவனை முறைத்துக் கொண்டு இருந்தவள், சப்பாத்தியை தன் முகத்துக்கு நேராக நீட்டவும் திகைத்துப் போய் பார்த்தாள்.

"ம்ம், சாப்பிடு. கிட்டத்தட்ட இரண்டரை மாதம் நான் தான் உனக்கு ஊட்டி இருக்கேன். இந்த பத்து நாளா உனக்கு ஊட்டி விடாமல் எனக்கு என்னவோ போல இருந்தது. இன்னைக்கு ப்ளீஸ் ரெண்டு வாயாவது வாங்கிக் கோயேன்..." என்று அவன் சொல்லியதும் தன்னை அறியாமல் வாயை திறந்து சப்பாத்தியை வாங்கிக் கொண்டாள்.

அங்குள்ள லஞ்சில் சப்பாத்தி அதன் பின்னரே சாதம் என்பதால், சப்பாத்தி முடித்ததும் சாதத்திற்கு என்ன வேண்டும் என்று கேட்டு, கேட்டு அவளுக்கு பிசைந்து ஊட்டி விட்டான். முழுவதும் அவளுக்கு ஊட்டி விட்ட பின்பே, தன்னுடைய தட்டை கையில் எடுத்தாள்.

சாப்பிட்டுக் கொண்டே, "கொஞ்சம் குயிக்கா கிளம்பு வெளியில போயிட்டு வரலாம்" அவன் சொல்லவும், அந்த அறையிலேயே இருந்த தடுப்பிற்கு பின்னால் சென்று டிரஸ் மாற்றி விட்டு வந்தாள்.

இளமஞ்சள் சல்வாரில் குங்குமகலர் அள்ளித் தெளித்தார் போல் டிசைன் செய்து இருக்க, குங்கும கலர் ஷாலை தோளில் நழுவவிட்டு, காதோரம் இருந்த முடிகளை கற்றையாக எடுத்து நடுவில் கிளிப் செய்து, பின்னால் முடியை விரிய விட்டு, நெற்றியில் ஸ்டிக்கர் பொட்டும் கண்களில் காஜலும், உதடுகளின் லிப் கிளாசுமாக வந்தவளை பார்த்தவனுக்கு இமைக்க முடியவில்லை.

அவனது பார்வையின் வித்தியாசத்தை உணர்ந்தவள், சற்று கூச்சத்துடன் அவனிடம்,"எங்க போறோம் இந்த டிரஸ் போதுமா?" என்று கேட்க, லேசாக விசிலடித்து, "இது சென்னை அம்மாமி

ரங்கா தானா? உனக்கு இப்படி எல்லாம் டிரஸ் பண்ண தெரியுமா?" என்று கேட்டு புருவத்தை உயர்த்தினான்.

"தெரியாம என்ன? என்னோட சிட்டுவேஷன் நான் அதை விரும்பல. நான் தவிர்க்க நினைச்ச விஷயங்களில் இதுவும் ஒன்று. ஆனா உங்களுக்கு நான் அப்படி இருந்தா பிடிக்காது. அதனால இப்படி டிரஸ் பண்ணினேன்."அவனது பதிலில் அவன் கண்கள் மின்னியது.

அருகில் வந்து அவள் தோள்களில் தன் இரண்டு கைகளையும் வைத்து கண்களை நேராக உற்றுப் பார்த்தவன், "நாம் ட்ரஸ் பண்ணிக்கிற விதத்திலேயே நம்மளுடைய குண இயல்பு ஓரளவு தெரிஞ்சிடும். நீட்டாவும், கம்பீரமாகவும் டிரஸ் பண்ணிக்கிறது தப்பே இல்லை. அதே மாதிரி இடத்துக்கு தகுந்த மாதிரி டிரஸ் பண்ணிக் கொள்வதும் தப்பு இல்ல. நம்ம தகுதிக்கு ஏற்ற மாதிரி டிரஸ் வாங்குவதோ, அல்லது டிரஸ் பண்ணுவதோ நமக்கு தன்னம்பிக்கை கொடுக்கும்.

எதுவுமே இல்லாது வாழ்க்கையின் கடைக் கோடியிலிருந்து தன்னம்பிக்கையோடு போராடி மேல வந்தவங்களை பார்த்தால் ஒரு விஷயம் புரியும், தன்னுடைய தோற்றத்திற்கு கண்டிப்பாக முக்கியத்துவம் கொடுப்பாங்க. ஏன்னா நம்முடைய புறத்தோற்றம், நம்மளால எதுவும் முடியும்கிற பாசிட்டிவ் எனர்ஜியை கொடுக்கும்.

ஆணும், பெண்ணும் மத்தவங்க பார்வையை உறுத்துற மாதிரி டிரஸ் பண்றது தான் தப்பு. யூ லுக் லைக் எ ஏஞ்சல்...'' என்றவன் அவள் முகத்தை தன் கைகளில் ஏந்தி, "ஏய் உன்ன பாத்தா இரண்டு குழந்தைக்கு அம்மான்னு சொல்ல முடியாததுடி. இப்பதான் காலேஜ் படிக்கிற பொண்ணு மாதிரி இருக்க..." என்றவன் மிக மென்மையாக அவளது நெற்றியில் முத்தமிட்டான்.

தன் உணர்வோடு இருக்கையில், அவனது நெருக்கமும், முத்தமும், அவளது மேனியை சிலிர்க்க செய்ய, ஒருவித எதிர்பார்ப்பில் கண்கள் மயங்க நின்றவளை, கன்னத்தில் தட்டி, ''இப்ப இது போதும், இதுக்கு மேல போனா என்னால கண்ட்ரோல் பண்ணிக்க முடியாது அப்புறம் ப்ரோக்ராம் கேன்சல் ஆகிடும்..." கள்ளச் சிரிப்போடு சொல்ல, வெட்கத்தில் முகம் சிவக்க, தலை குனிந்தாள்.

"வா போகலாம்..." என்று கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு வெளியில் வந்து கதவை பூட்டிக்கொண்டு இருவரும் காரில் கிளம்பினார்.

லட்சுமி நாராயணன் பிர்லா டெம்பிள், விஜய் சவுக், இந்திரா காந்தி மெமோரியல் ஹால், பிரசிடெண்ட் ஹவுஸ், பார்லிமென்ட், எல்லா முக்கியமான இடங்களையும் காரிலேயே சுற்றி பார்த்தனர்.

கடைசியாக தான் இங்கு இருக்கும் நாட்களில் வழக்கமாக செல்லும் தாஜ் ஹோட்டலுக்கு அழைத்துச் சென்றான், "எதுக்கு இங்க கூட்டிட்டு வந்திருக்கீங்க?

"ஏய் ஹோட்டலுக்கு எதுக்கு வருவாங்க. சாப்பிட தான் வா..."

"அதுக்கு இவ்வளவு பெரிய ஹோட்டலுக்கா..."

"நான் இங்கே இருக்கும் போது அடிக்கடி ஏதாவது ஒரு பார்ட்டின்னு இங்க வருவேன். நாம என்ன இங்கேயா இருக்க போறோம். அதனால ஒரு சர்ப்ரைஸா இருக்கட்டும்னு உன்ன கூட்டிட்டு வந்தேன்...” என்றவன், ஏற்கனவே தான் ரிசர்வ் செய்த டேபிளுக்கு அவளை அழைத்து வந்தான்.

கேண்டில் லைட் டின்னர்... "வெல்கம் மை டியர் ஏஞ்சல்" என்று இடை வரை குனிந்து அவளுக்கு சேரை நகர்த்தி உட்கார சொன்னவன், "இந்த ட்ரீட் ஒன்லி ஃபார் யூ. நீ உனக்கு வேண்டியது ஆர்டர் பண்ணு..." மெனு கார்டை அவள் பக்கம் நகர்த்தி வைத்தான்.

"எனக்கு இதெல்லாம் எதுவுமே பழக்கம் இல்லை. நீங்களே சொல்லுங்க..." என்று சிரித்து பதட்டத்தோடு சொன்னவள் சுற்றிலும் திரும்பிப் பார்த்தாள்.

குறைந்த விளக்கொளி கண்களுக்குப் பழக, சுற்றிலும் இருந்த பெண்களும், ஆண்களும் கையில் மதுவோடு தாராளமாய் ஒருவொருக்கொருவர் இழைந்தபடி இருந்த தோற்றம் கண்களில் பட, அவளுக்கு ஒரு மாதிரியாக இருந்தது.

"டேக் இட் ஈசி ரங்கா. அது அவங்களோட வாழ்க்கை அதை எப்படி செலிபரேட் பண்ணலாம்னு நினைக்கிறது அவங்க இஷ்டம். என்னோட ஆசைக்காக தான் நான் இங்க உன்னை கூட்டிட்டு வந்தேன் ப்ளீஸ்…" என்று சொல்லவும் அவளால் அதை மறுக்க முடியவில்லை.

சூப், ஸ்டாட்டர்ஸில் ஆரம்பித்து விதவிதமாக அவன் ஆர்டர் செய்ய, பார்த்துக் கொண்டிருந்தவள் அருகில், தனது சேரை இழுத்துப் போட்டு, அவள் பக்கம் சாய்ந்தவன், முகத்துக்கு அருகில் தன் தலையை சாய்த்து, அவள் கழுத்தில் வாசம் பிடித்தான்.

அவனது மீசை கழுத்தில் குறுகுறுக்க, சற்றே திரும்பியவளிடம் “என்ன இப்படி ஆச்சரியமா பார்க்கிற…?” என்று கேட்டான்.

“இல்ல இப்படி கூட பப்ளிக்கா பழகுவாங்களா…? இவங்க எல்லாரும் கல்யாணம் ஆனவங்களா…?” என்று கேட்க…

“யாருக்கு தெரியும். கல்யாணம் ஆனா கூட அடுத்தவங்க கூட இப்படி இருப்பாங்க. இங்க இந்த மாதிரி கல்ச்சர்தான் ரொம்ப வேகமா வளருது…” என்று பதில் சொன்னான்.

“அது எப்படி முடியும்…? சாதரணமா பழகுகிற ஒரு மனிதரை, தொட்டு பேசுவதோ, அணைத்து முத்தமிடுவதோ எப்படி முடியும்…?” அவள் கேட்டு வாய் மூடுவதற்குள், “ஹாய் உபேந்திரா…” என்று படு ஸ்டைலாக வந்த நவநாகரிக யுவதி, அவனை அணைத்து கன்னத்தில் முத்தமிட்டாள்.

“ஹேய், உங்களை பார்த்து ரொம்ப நாள் ஆச்சு? இப்ப நீங்க சென்னையில இருக்கிறதா சொன்னங்க. எப்ப வந்தீங்க டெல்லிக்கு…?” என்று கேட்டு அவன் அருகில இருந்த சேரில் “எக்ஸ்க்யூஸ்மி…” என்றவாறு அமர்ந்தாள்.

அவள் அவனை முத்தமிட்டபோது, ரங்காவின் முகம் போன போக்கை பார்த்து, ‘ஆஹா வில்லங்கம் தானா வந்து, நமக்கு ஆப்பு வைக்குதே’ என்று மனசாட்சி குரல் கொடுக்க, அவள் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லாமல், “திஸ் இஸ் மே வொயிப் ரங்கா. திஸ் இஸ் அவர் ஹனிமூன் ட்ரிப்…” என்றான்.

“வாட் ரங்கா. ஜென்ஸ் நேம் போல இருக்கு…” என்று கவலைப் பட்டவளிடம், ‘ஏய் எனக்கு பாய் நேமா இருக்கு,

அல்லது அனிமல் நேமா கூட இருக்கு. அது பத்தி உனக்கு என்ன…?'' என்று ஒரு மூச்சு சென்னை தமிழில் வரிந்து கட்டி சண்டயிடலாமா…?' என்று ரங்கா யோசிப்பது உபேந்திரா கண்ணில் பட, அவசரமாய் அவளை கிளப்பினான் உபேந்திரா.

அவள் சென்ற பிறகு, ''என்ன ரொம்ப நாள் பழக்கம் போல இருக்கு. ஒரேடியா உருகுறா?'' என்று ரங்கா கேட்க…

''ச்ச, ச ரொம்ப நாள் பழக்கம் எல்லாம் இல்ல. ஒரே ஒரு தடவை டேட்டிங் தான் போயிருக்கோம்…'' என்று வாயை தெரியாமல் விட்டான் உபேந்திரா

# அத்தியாயம் 25

ஆக்ராவில் உள்ள விமான நிலையத்தில் இருந்து ஆக்ரா தாஜ் ஹோட்டலுக்கு சென்று லக்கேஜ் வைத்து விட்டு போர்ட் பார்க்க காரில் சென்று கொண்டு இருந்தனர், இருவரும். நேற்று ஹோட்டலில் அந்தப் பெண் வந்து சென்றதில் இருந்து கேட்ட கேள்விக்கு மட்டும் ஓரிரு வார்த்தையில் பதில் கூறி, உம்மென்று இருந்தவளை பேச வைக்க அவனும் எவ்வளவோ முயற்சித்து பார்த்தான்.

அதற்கெல்லாம் மசியிற ஆளாக தெரியவில்லை. ஆக்ரா பார்க்க வர மாட்டேன் என்று சொன்னவளை, "எல்லா ஏற்பாடும் பண்ணியாச்சு ரங்கா. இப்ப கேன்சல் பண்ணினா எல்லாமே நஷ்டமாயிடும்…" என்று சொல்லவும், பணத்தை வேஸ்ட் பண்ணுவது அவளுக்கு பிடிக்காது என்பதால் அவள் கிளம்பி வந்து இருந்தாள்.

நேற்றுமே ஆர்டர் பண்ணிய உணவு வீணாகக் கூடாது என்றுதான், ஒன்றுமே பேசாமல் அவனுடன் சாப்பிட்டவளின் மனது அவனுக்கு புரிந்தது. இன்னொருத்தி என்றால், உணவு வேஸ்ட் ஆனாலும் பரவாய் இல்லை என்று கிளம்பி இருப்பாள். ஆனால் பாட்டியின் வளர்ப்பு ரங்காவை அப்படி செய்ய விடவில்லை.

ஒவ்வொரு தேவைக்கும் அவர்களே உழைத்து முன்னேறியதால், எதையும் வீணாக்கக் கூடாது என்ற நல்ல பண்பினை பாட்டி அவர்களுக்கு கற்றுக் கொடுத்திருந்தார்.

அதையறிந்து கொண்டதும் அதை வைத்தே அவளை மடக்கி ஆக்ராவுக்கு அழைத்து வைத்து இருந்தான். காலையிலே கிளம்பி விட்டதால் தாஜ் ஹோட்டலில் டிபனை முடித்துக் கொண்டு, முதலி ஆக்ரா போர்ட் பார்க்க சென்றனர்.

பின்னர் டோம்ப் ஆப் அக்பர் (Tomp of Akbar), ஜும்மா மஸ்ஜித், இரண்டும் பார்த்தனர். தாஜ்மஹாலை இரவில் நிலவில் அவளுக்கு காட்ட வேண்டும் என்று மாலை நான்கு மணிக்கு அங்கு கூடி சென்றான். உள்ளே சென்ற சுற்றிப் பார்க்க இரண்டு மணி நேரம் வேண்டும். ஆறு மணிக்கு வெளியில் வரும் போது இருட்டி விடும். நிலவின் ஒளியில் தாஜ்மஹால் பார்க்க மிக அழகாக இருக்கும். அவனது ப்ளான்படி நாலு மணிக்கு தாஜ்மஹால் சென்றனர்.

முகலாயப் பேரரசர் ஷாஜகான் தனது மனைவி மும்தாஜிற்காக கட்டப்பட்ட கல்லறை தான் தாஜ் மஹால். உலகின் ஏழு அதிசயங்களில் ஒன்றாக கருதப்படும் தாஜ்மஹால், வெள்ளை பளிங்கு கற்களால் கட்டப்பட்டு உள்ளது. ஆக்ராவில் யமுனை நதிக்கரை ஓரம் இருக்கிறது.

தனது மனைவியை காதலித்து இறுதிவரை அவருடன் இணைபிரியாமல் வாழ்ந்து, அவளது மறைவிற்கு நினைவுச் சின்னமாக இந்த கல்லறையை எழுப்பி, அதை கடைசி வரை பார்த்துக் கொண்டே உயிர் துறந்த ஒரு உத்தமமான கணவனின் காதல் வரலாறு அதில் பின்னிப்பிணைந்து கிடைக்கிறது.

ரங்காவிடம், "நான் டெல்லியிலே இருக்கும்போது நிறைய தடவை இங்கே வந்து இருக்கேன். தாஜ்மஹாலைப் பற்றி விதவிதமாக கதைகள் சொல்லப்பட்டாலும், உண்மையான தகவல் ஒரு சிலரால் மட்டுமே சொல்லப்படுகிறது. உனக்கு அந்த வரலாறு தெரியுமா?" என்று கேட்டான்…

"எனக்கு விரிவாக தெரியாது…" என்று அவள் பதில் சொல்லவும், எனக்கும் தெரியாது. ஒரு தடவை நாங்க நெறைய நண்பர்கள் டூர் வந்த போது, அவர்கள் அரண்மனையில் காலம், காலமாக வேலை செய்த ஒருவரின் வம்சாவழியில் வந்த பெரியவர் ஒருவர் இந்த கதையை அப்போது தாஜ்மஹால் பார்க்க வந்திருந்த எங்களைப் போன்ற சிலரிடம் கூறினார்.

சலீம் என்கிற ஜாஹங்கீருக்கு முதலில் குஸ்ரு என்ற மகனும், அடுத்து குர்ரம் என்ற மகனும் உண்டு. குர்ரம் என்ற ஷாஜஹான் தான் ஜகாங்கீருக்கு அடுத்தபடியாக, ஆட்சிக்கட்டில் ஏறியவன்.

இவன் தனது பாட்டன் அக்பரைபோல திறமையாக ஆட்சி நடத்தியதாக சில வரலாற்று அறிஞர்கள் சொல்கிறார்கள்.

டெல்லியை தலைநகரமாகக் கொண்டு ஒருகுடையின்கீழ் பல நகரங்களை திறமையாக ஆண்டுகொண்டு இருந்தான் ஷாஜஹான். மொகலாயர் ஆட்சியில், அரண்மனையில் வருடத்திற்கு ஒரு முறை சந்தை வளாகத்தை ஏற்படுத்தி, அங்கே பலப் பெருட்களை வைத்து விற்பனை செய்யும் வழக்கம் அரசகுல பெண்களிடம் இருந்து வந்ததாம். அப்படிதான் அன்றும் ஒருநாள் சந்தை நடந்துகொண்டு இருந்தது, சந்தையைக்காணச் சென்ற ஷாஜஹான் அங்கே சந்தைக்கு வந்த ஒரு கிளியை கண்டுவிட்டான், அப்பொழுதே மனதை அவளிடம் இழந்துவிட்டான்.

அந்த கிளியின் பெயர் அர்ஜுமான் பானு பேகம் என்பதாம், அர்ஜுமான் பானு பேகத்தின் அழகில் மனதை பறி கொடுத்த ஷாஜகான், தனது தந்தை ஜஹாங்கீரின் சம்மதத்தோடு திருமணம் செய்துகொண்டான்… திருமணத்திற்கு பிறகு அந்த அர்ஜுமான் பானு பேகம், மும்தாஜ் என்று அழைக்கப்பட்டாள்.

தனது மனைவி மும்தாஜ் மீது அன்பும், பாசமும் கொண்டிருந்தான் ஷாஜஹான். உடலாகவும், உயிராகவும் இருவரும் இல்லறவாழ்க்கையை இன்பமாக அனுபவித்தனர். இருவரும் நண்பர்களைப்போல பழகினார்கள். அரச ரகசியங்களையும்,

அரியணை இயக்கங்களையும் தினமும் தனது மனைவியிடம் பகிர்ந்து கொள்வது ஷாஜகானின் வழக்கம். அதேபோல் ஷாஜகான் எங்கு சென்றாலும் மும்தாஜ் அவனோடு செல்வது வழக்கம். ஷாஜகானை பிரிந்து மும்தாஜ் தனியாக இருந்ததில்லை என்றே கூறலாம். இப்படி அன்பும் பாசமும் நேசமுமாய் இருந்த அந்த தம்பதியரின் வாழ்க்கைக்கு கிடைத்த மொத்த பரிசு பதினாலு குழந்தைகள். இதில் துரதிஷ்டவசமாக ஏழு எமலோகம் போய்விட்டதாக வரலாற்று பதிவுகள் தெரிவிக்கின்றன.

அன்று 1631 ஜூன் 7 ஆம் தேதி, பீஜப்பூர் சுல்தானை தனது கட்டுப்பாட்டில் கொண்டு வரும் நோக்கத்தோடு, அந்த நாட்டின் எல்லைப்பகுதியான ஒரு காட்டில் தனது படை பரிவாரங்களோடு, முகாமிட்டுருந்தான் ஷாஜகான். அப்பொழுது அவனுடன் சென்றிருந்த மும்தாஜ், தனது பதினாலாவது குழந்தையைப் பெற்றெடுத்தாள். குழந்தை பிறந்த சிறிது நேரத்தில் உடம்பு சிலீரால் தூக்கி, தூக்கி போட்டதாம், இதைக்கண்ட ஒரு தாதிப்பெண் ஓடிவந்து ஷாஜகானிடம் கூற, பதறிப்போன ஷாஜகான் ஓடிச்சென்று அவளை தூக்கி தனது மடியில் கிடத்தி இருக்கிறான், அடுத்த கணமே மும்தாஜியின் உயிர் உடலை விட்டு பிரிந்து போனதாம்.

மனைவியின் இழப்பை தாங்கமுடியாமல் கதறி அழுத ஷாஜகான், அந்த இழப்பின் பிடியில் இருந்து மீள இரண்டு வருடங்களுக்குமேல் ஆகிவிட்டது. தனது இயல்பான அரசர்க்குரிய ஆடை அலங்காரங்களை முற்றிலும் அவன் விரும்பாமல், சாதாரணமாகவே இருந்து வந்தான். அவன் எண்ணம் எப்பொழுதும் மும்தாஜேயே வட்டமிட்டுகொண்டு இருந்தது. ஒரு நாள் நெருங்கிய சிலரோடு உரையாடிக்கொண்டு இருக்கையில், மும்தாஜ் பற்றி பேசி இருக்கிறார்கள், மனைவியின் நினைவினால் மிகுந்த உணர்ச்சிவசப்பட்ட ஷாஜகான் அவளுக்காக ஒரு நினைவு மண்டபம் கட்டவேண்டும் என்றாராம்,

அந்த எண்ணம் மிக வலுவடைந்தது. மும்தாஜ் இறந்த ஓராண்டிற்கு பிறகு தாஜ்மகால் கட்டும்பணி தொடங்கப்பட்டது. பல கட்டிடக்கலை வல்லுனர்களின் கூட்டுமதி நுட்பத்தினாலும், அவர்களின் இருபது ஆண்டுகால உழைப்பினாலும் தாஜ்மஹால் விண்ணோக்கி எழுந்தது நின்றது.

பாரசீகம், ரஷ்யா, திபெத் போன்ற நாடுகளில் இருந்தெல்லாம் வைரம், வைடூரியம், முத்து, பவளம், கோமேதம் போன்ற விலைமதிப்பற்ற செல்வங்கள் வாங்கிவந்து தாஜ்மஹாலில் பதிக்கப்பட்டன. ஆங்கிலேயரின் ஆக்கிரமிப்பில் இருக்கும்பொழுது

அந்த செல்வங்கள் எல்லாம் ஆங்கிலேயர்கள் நோண்டி எடுத்துக் போனது இன்னொரு வரலாறு ஆகும்.

ஒரு கணவன் தன் உயிருக்கு உயிரான மனைவிக்கு கட்டிய கல்லறைதான் இந்த உலக புகழ்பெற்ற புனித தாஜ்மஹால் ஆகும். மொகலாயர்களின் ஆட்சியின் காலங்களில் தாஜ்மஹாலுக்குள் செல்ல இஸ்லாமியர்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டதாக தகவல். இந்த தாஜ்மஹாலை கண்டு பொறாமைகொண்ட ஆங்கிலேயர்கள் இதை இடித்துவிட செய்த சதியில் இருந்து அதிர்ஷ்டவசமாக தப்பிவிட்டதால், இன்று உலக அதிசயங்களில் ஒன்றை நாம் இழந்துபோய்விடாமல் இருக்கிறோம்.

தனது தந்தை ஷாஜகானால், தனக்கு வரப்போகிற ஆட்சி அரியணை, தனது சகோதரனுக்கு போய்விடுமோ என்று எண்ணிய ஔரங்கசீப் தனது தந்தையை, தந்தை என்றும் பாராமல் சிறையிலடைத்து வைத்துவிட்டு அரசு கட்டில் அமர்ந்தான். இந்த ஔரங்கசீப்தான் ஷாஜகானின் மூன்றாவது மகன்.

மும்தாஜ் நினைவோடு தனது வாழ்நாளை சிறையில் கழித்த ஷாஜகானுக்கு அனைத்துமே மறுக்கப்பட்டன, அவரது அறையில் தாஜ்மஹாலை பார்பதற்காக மட்டும் ஒரே ஒரு ஜன்னல் திறந்து வைக்கப்பட்டு இருந்தது. எப்பொழுதும் அவர் தனது மனைவி புதைக்கப்பட்ட கல்லறையான தாஜ்மஹாலை ஜன்னல்

சிறைகளுக்குள் இருந்து பார்த்து பார்த்து தனது காலத்தை போக்கினார்.

1666 ஜனவரி 22 ஆம்நாள் 74 வயதான அந்த உத்தம புருஷன் இந்த மண்ணுலகைவிட்டு விடைபெற்றார், தனது தந்தை ஷாஜகானையும் அந்த மும்தாஜ் புதைக்கப்பட்ட தாஜ்மஹாலுக்குள்ளே புதைத்தான் ஔரங்கசீப். இப்பொழுதும் அந்த தாஜ்மஹாலுக்குள் ஒரு உன்னதமான கணவனும் மனைவியும் உறங்கிக்கொண்டு இருக்கிறார்கள் அமைதியாக...” அவன் சொன்ன வரலாற்று செய்தியை கேட்டதும் ரங்காவுக்கு ஆச்சரியமாக இருந்தது.

“ப்யூட்டிபுல், ஒரு மனைவியிடத்தில் எத்தகைய அன்பு இருந்தால் இந்தமாதிரி ஒரு நினைவுச் சின்னத்தை கட்ட முடியும்...?” என்று அதே ஆச்சரியத்தோடு ரங்கா சொல்ல...

“எனக்கும் இதே மாதிரி தான் அப்போ தோணுச்சு. காதல் இந்த ஒரு வார்த்தைக்குதான் எத்தகைய சக்தி...? எங்க அம்மாவும், அப்பாவும் லவ் மாரேஜ் தான். ஆனால் ஏதோ ஒரு காரணத்துனால கல்யாணத்துக்கு அப்புறம் அவங்களுக்குள்ள ஒற்றுமை இல்லாம போச்சு. யாரோ ஒருவரின் புரிதல் இல்லாம அவங்க இரண்டு பேருக்குள்ள விரிசல் வந்துடுச்சு.

கடைசி வரை இரண்டு பேரும் ஒருவர் மேல் ஒருவர் மனக்கசப்போடு வாழ்ந்ததை நான் பார்த்ததுனால எனக்கும் காதல், கல்யாணம் இது மேல எல்லாம் நம்பிக்கை இல்லை. அதனால நானும் இதைப் பார்த்ததும் இப்படி கூட இருப்பாங்களா...? அப்படின்னு நினைச்சேன். இத்தனைக்கும் அந்தக் காலத்துல ராஜாக்கள்னாலே நிறைய மனைவிகள் இருப்பாங்க...''

“உண்மைதான். பலதாரம்கிறது அந்தக் காலத்துல சகஜமா இருந்தது. பெண்களும் அதை ஏத்துட்டு இருந்தாங்க. ஆனால் அதுக்கப்புறம் நிறைய மாற்றங்கள்...''

“அதெல்லாம் போயி இப்ப ஆணோ, பெண்ணோ கல்யாணத்தை பெரிசா நினைக்கிறது இல்லை. இன்பாக்ட் அந்த கமிட்மென்ட்குள்ள சிக்கிக்கொண்டு அவஸ்தைப் பட யாரும் தயாரா இல்லை. ஓபனா சொல்றதா இருந்தா, நான் கூட அந்த மனநிலையில் தான் இருந்தேன். அதுக்கு காரணம் எல்லாமே ஈசியா கிடைச்சிடுது. இன்னொன்னு பொருளாதாரப் பிரச்சினை, அந்தக் காலத்துல தேவைகள் கம்மி. அடிப்படை விசயங்கள் மட்டும் தான் பிரச்சினை. அதை நிறைவேற்ற மட்டுமதான் உழைக்க வேண்டி இருந்தது.

விஞ்ஞானம் வளர, வளர அடிப்படை தேவைகள் தவிர ஆடம்பர தேவைக்குத்தான் மக்கள் அதிகமா சம்பாதிக்க வேண்டி

இருக்கு. இதுக்கு இடையில் உள்ள பொல்யூஷன், தண்ணீர் பிரச்சினை, மருத்துவப் பிரச்சினை எல்லாமே அந்த ஆடம்பரத்தை அத்தியாவசியம் ஆக்கிடுச்சு. அதனால் காதல் கூட பொருளாதரத்தை பார்த்துதான் வருது…”

“உண்மைதான். என்னோட மனசிலேயும் இதே எண்ணம்தான். ஆண்கள் தன்னோட சுயநலத்தை மட்டும் பார்க்கிறாங்க. ஒரு குடும்பம்னா அதுல கணவன் மனைவி இருவருக்கும் சம உரிமை இருக்கணும். அது கிடையாது. தனக்கு போக மீதம்தான் குடும்பத்துக்குன்னு நினைக்கிறவன் கல்யாணம் பண்ணி குழந்தைங்க பெத்துக்க கூடாது. நான் நிறைய பேரை அப்படி பார்த்துட்டேன்.

குடும்பத்தலைவன்னு சொல்லி கிட்டா போதுமா…? வரவுக்கு தக்க குடும்பத்தை மனைவியோட சேர்ந்து, இரண்டு பெரும் கலந்து ஆலோசிச்சு நடத்துறதுக்கு பேரு குடும்பம். இப்ப பெரும்பாலான பெண்கள், வீட்டு வேலை மட்டும் இல்லாம, பணத்தேவைக்காக வெளியே போய் சம்பாதிக்க வேண்டி இருக்கு. அவதான் சம்பாதிக்கிறாளேன்னு தன்னோட பணத்தை அனாவசியமா செலவு பண்ற ஆண்கள் நிறைய பேர் இருக்கிறாங்க. இதை பார்த்து பார்த்துதான் நான் கல்யாணம் பண்ண பாட்டி சொன்னப்ப, இந்த மாதிரி ஒரு ஆணை கல்யாணம்

பண்ணிக்க முடியாதுன்னுட்டேன்…” உண்மையை அவள் ஒத்துக் கொண்டாள்.

பேசிக் கொண்டே நடந்ததில் தாஜ்மாகாலை ஒரு வழியாய் சுற்றி வந்தனர். “தாஜ்மகாலை பார்த்துட்டு இந்த மாதிரி டிஸ்கஸ் பண்ணிய முதல் ஆள் நாமாகத்தான் இருப்போம்…” கேலியாக சொல்லிக் கொண்டே காரில் ஏறினான்.

“டெல்லி தானே…” என்று ரங்கா கேட்க…

“இல்லை இப்ப நேரா ஹோட்டலுக்கு போறோம். சாப்பிட்டுட்டு ஒரு இடத்துக்கு போயிட்டு வந்து இங்கதான் ஹால்ட். நாளைக்கு இங்கே இருந்தே நேரே சென்னை பிளைட். அதான் எல்லா லக்கேஜும் எடுத்துட்டே வர சொன்னேன். இந்தக் கார் தாஜ் ஹோட்டல்ல உள்ள ட்ராவல்ஸ் தான்…” சொல்லிக் கொண்டு இருக்கையிலே அவர்கள் தங்கியிருந்த ஹோட்டல் வர, இறங்கி அறைக்கு சென்றனர்.

“நான் குளிக்கப் போறேன். நீயும் பிரஷ் ஆகிட்டு வா. கீழே போய் டின்னர் முடிச்சிட்டு, அப்படியே வெளியே போயிட்டு வரலாம்… "

அவளுக்குமே அவன் சொன்னது போல் கசகசவென்று இருந்ததால் குளித்து கிளம்பினாள்.

சப்பாத்தி, தால், கடாய் பன்னீர், இன்னும் சில அங்குள்ள உணவு வகைகளை தருவித்தான்.

குளிர் காலமாதலால், அதிக அளவு அங்கு குளிர் தெரிந்தது. ரெஸ்டாரன்ட்க்குள் தானே என்று அவள் வெறும் ஸ்வெட்டர் மட்டும் அணிந்திருந்தாள்.

"ஷால் எடுத்து இருக்கியா?"

"வச்சிருக்கேன்...!"

"ஓகே. வா போகலாம்..." என்று இருவரும் கிளம்பினர்.

கார் ஓட்டியிடம் இந்தியில் ஏதோ சோல்ல, அவன் தலையாட்டி விட்டு காரை செலுத்தினான். அரை மணி நேரத்தில் இருட்டான ஒரு பகுதிக்குள் கார் சென்று நின்றது.

"இறங்கு..." என்று சொல்லி தானும் இறங்கினான். இறங்கி நின்று சுற்றுமுற்றும் பார்க்க, மெயின் ரோட்டிலிருந்து சற்று தள்ளி யமுனா நதிக்கரை தெரிந்தது. அந்த இடத்தில் வெளிச்சமாக இருக்க கொஞ்சம் ஆட்களும் தெரிய, "எந்த இடம்? இருட்டா இருக்கு...!"

"பயம் இல்ல வா." என்றவன் அவள் கையைப் பிடித்துக்கொண்டு நடந்தான். இருட்டில் பாதை சற்று சரிவர தெரியாததால், அவளும் அவனை ஒண்டிக் கொண்டே நடந்தாள்.

சற்று தூரம் சென்றதும், யமுனை நதி தெளிவாக தெரிய, நிலவின் ஒளியில், நதியில் தாஜ்மஹாலின் பிம்பத்தைப் பார்த்து அவளுக்குத் கண்ணிமைக்க முடியவில்லை.

ரசனையே இல்லாத ஆளாக இருந்தால் கூட, ரம்மியமான அந்த சூழலில் தெரிந்த அந்த தாஜ்மஹாலின் தோற்றம், அவர்களை மயக்கி விடும்.

இயல்பிலேயே ரசனை அதிகம் மிக்க உபேந்திரா, அந்தத் தோற்றத்தில் லயித்து நிற்க, இந்த மாதிரி ரசனை நிறைந்த காட்சிகளை, அவள் அதிக அளவில் பார்த்தது இல்லை என்பதால், முதல் முறை பார்த்த அந்த தோற்றத்தில் தன்னை மறந்து நின்றாள்.

சிலீரென்று ஊடுருவிய பனியும், பௌர்ணமி நிலவின் ஒளியும், யமுனை நதியில் சலசலக்கும் நீரோட்டமும், இந்த காட்சியை பார்ப்பதற்கு என்றே வந்திருந்த, காதலர்களின் மெல்லிய பேச்சொலியும், சிணுங்கல்களும், சற்று எல்லை மீறிய நெருக்கமும், முதன்முதலில் அவளது மனதிலும் மயக்கத்தை தோற்றுவித்தது.

அவளருகில் நெருங்கி நின்றான் உபேந்திரா. மூன்று நூற்றாண்டுகள் கழித்தும், கம்பீரமாக நிற்கும், அந்தக் காதலின் சின்னத்தை பார்த்து இருவரும் பிரமித்தனர்.

"எத்தனையோ ராஜாக்கள் ஆண்ட இந்த பூமியில், யாரும் தன்னுடைய மனைவிக்கு என்று இத்தகைய அரிய செயலை செய்தது இல்லை, இன்னும் பல நூற்றாண்டுகள் கழித்தும், உலகத்தின் தலை சிறந்த சிற்ப கட்டிடக் கலைக்கு எடுத்துக் காட்டாய், உலக அதிசயத்தின் ஒன்றாக விளங்கும் தாஜ்மஹால் இன்னும் எத்தனை தலைமுறைக்கு அவனுடைய காதலை சொல்லும்? நினைக்கவே சிலிர்ப்பாய் இருக்கு." என்று கூறிய ரங்காவின் கரத்தைப் பிடித்த உபேந்திரா…

"ரங்கா, எனக்கு இப்ப என்ன தோணுது தெரியுமா…?" என்று கேட்க, நிலவின் ஒளியில் அவன் முகம் பார்த்தாள்.

"எனக்குன்னு பெரிய ஆசை எல்லாம் இல்லாம, வாழ்க்கை என்னை இழுத்துட்டு போன போக்கில போயிட்டுருந்த நான், என்னைக்கு என்னோட குழந்தைகளை பார்த்தேனோ, அப்பவே ரத்த பாசம் என்னை முழுவதும் மாத்திட்டுது. அப்பான்னு சொல்லுற அந்த சொல்லுக்காக இந்த உலகையே விலை பேசிடலாம்னு தோணுது.

என் குழந்தைகளின் அம்மாவான உன்னை எப்ப, எந்த சூழ்நிலையில நேசிக்க ஆரம்பிச்சேன்னு தெரியல, இப்ப என் மனம் முழுவதும் நீதான் நிறைஞ்சு நிற்கிற. இந்த தாஜ்மகாலை உன்னோடு சேர்ந்து பார்க்கிறப்ப, என்னால இன்னொரு ஷாஜகானா

மாறி நினைவுச்சின்னம் எழுப்ப முடியாதுன்னாலும், இந்த ஜன்மம் முழுவதும், ஏன் இனி வரும் ஜன்மங்களிலும் நீதான் என் மனைவியா இருக்கணும்கிற பேராசை எனக்குள்ள இருக்கு…'' என்று சொன்னவனின் கண்களில் மின்னிய காதலைப் பார்த்தாள்.

அவன் முகத்தில் தெரிந்த கனிவும், காதலும் அவளை அவனிடத்தில் சரணாகதி அடைய சொன்னது. தன்னையறியாமல் அவன் நெஞ்சில் சாய்ந்தவளை பூபோன்று மென்மையாய் அணைத்துக் கொண்டான். ''என்னால உங்க அளவுக்கு காதலையோ, அல்லது அன்பையோ உங்க மேல கட்ட முடியுமான்னு தெரியலை. ஆனால் உங்கள் அன்பை மறுக்குற சக்தி எனக்கு இல்லை. நான் இதுவரைக்கும் யார் கிட்டேயும் இந்த மாதிரி பேசியதும் இல்லை. எனக்கு எதையும் வெளிப்படையா கண்பிச்சுக்க தெரியாது. ஒரு வேளை நான் வளர்ந்த சூழ்நிலை காரணமாய் இருக்கலாம்…'' என்றவளின் மன சஞ்சலத்தை அவன் உணர்ந்து கொண்டான்.

“தேவை இல்லை. எல்லாரும் ஒரே மாதிரி இருக்க முடியாது. என்னை உன்னோட வெல்விஷரா, நல்ல பிரண்டா நினைச்சு பழகு. உதரணத்துக்கு, உன்னால வாசு கிட்ட இயல்பா இருக்க முடியுது இல்லை. அதே மாதிரி இயல்பா இரு. நான் என்ன

சொல்வேனோன்னு நினைக்காம மனசுல தோணுறதை சொல்லு. நினைக்கிறதை செய். போகப், போக நீயே மாறிடுவே…!”

“என் மேல இத்தனை நம்பிக்கையா…?”

“ஆமாம். நாம் ஒருத்தர் மேல வைக்கிற நம்பிக்கை தான் காதல். அந்த வகையில உன்னோட மனமாற்றம் சீக்கிரம் நடக்கும். நான் இல்லாம உன்னால இருக்க முடியாதுங்கிற நினைப்பு உனக்குள்ள தோணும். அதுதான் காதல். இந்த மூணு மாசத்துல நான் அதை உணர்ந்துட்டேன். என்னால உன்னையும் குழந்தைகளையும் விட்டு இருக்க முடியாது. ஐ லவ் யூ ரங்கா…” என்று மனப்பூர்வமாக தன்னுடைய அன்பை வெளிப் படுத்தினான்.

காதலில்லா ஜீவன் தான் எது? அன்பும், காதலும் பிரித்தறியா சொற்கள். வயதும், சொந்தமும், நமது அன்பை பகுத்தறிகிறது. தன் குழந்தையிடத்தில் தோன்றும் அன்பு பாசமாகவும், இணையிடத்தில் தோன்றும் அன்பு காதலாகவும் வெளிப்படுகிறது. தன் தந்தை, தாயிடத்தில் கிட்டாத அன்பு பாட்டியிடம் மட்டும் கிட்டியதால், நல்ல மனுஷியாக ரங்கா வளர்ந்து இருந்தாலும், தம்பதிக்குள் வரும் காதலைப் பற்றி அறிந்து இருக்கவில்லை.

நேரம் பதினொன்றை தாண்டவே குளிர் அதிகமாக இருந்தது. ஸ்வெட்டரை மீறியும் அவள் தேகம் குளிரில் சிலிர்க்கவே, அவள்

கையில் வைத்திருந்த சால்வையை வாங்கி அவளுக்கு போர்த்தி விட்டான்.

“உங்களுக்கு…?”

“இல்ல. எனக்கு ஸ்வெட்டர் மட்டும் போதும். பழக்கம் தான். வா போகலாம். இதுக்கு மேல நீ தாங்க மாட்ட…” என்றவன் அவள் கையை பிடித்து அழைத்துக் கொண்டு வந்தான். குளிரில் அவளது விரல்கள் சில்லிட்டு இருப்பதையும், நடுங்குவதையும் பார்த்தவனுக்கு, “நீ நார்த் சைட் வந்தது இல்லையா…?”

“இல்லை. சென்னையை தாண்டி வந்தது கிடையாது…”

“அதனாலதான் இந்தக் குளிர் உனக்கு பழக்கம் இல்லை. நான் இங்கேயே ஏழு, எட்டு வருஷம் இருந்ததுனால, இந்தக் குளிர் பழக்கம் தான்…” என்றவன் அவளை தோளோடு அனைத்துக் கொண்டான்.

அந்தக் குளிருக்கு இதமாக இருந்தது அவனது அணைப்பு. காரில் ஏறி ஹோட்டல் வரும் வரை, அவள் தோளைசுற்றி போட்டு இருந்த கைகளை அவன் விலக்கவே இல்லை. ஸ்வெட்டரையும் மீறி மூக்கு, காது, உதடு எல்லாம் பனியில் உறைந்து விட்டது போல் அவளுக்கு தோன்றியது. அவனிடம் சொல்லாமல், எலும்பு

வரை ஊடுருவிய குளிரை, சமாளித்துக்கொண்டு அவனை ஒண்டியபடியே வந்து சேர்ந்தாள்.

பொதுவாக ஆண்களுக்கு வேலையின் நிமித்தம் அலைவதால், எந்த சூழ்நிலையும் ஓரளவு பழகிவிடும். அதற்கு ஏற்றபடி உடல் அந்த சீதோஷ்ண நிலையை தாங்கிக்கொள்ளும். பெண்கள் அதிக அளவு வெளியில் செல்லவேண்டிய அவசியம் இல்லாததால் சிறிதளவு சீதோஷ்ண நிலை மாற்றம் ஏற்பட்டால், அதை தாங்க இயலாது.

சென்னையில் அதிக வெப்ப நிலைக்கு பழகியிருந்த ரங்காவால் அந்தக் குளிரைத் தாங்க முடியாது போயிற்று. அவள் அணிந்திருந்த ஸ்வெட்டர் கையில்லாதது. ஸ்கார்ப் வேறு எடுத்து வரவில்லை. ஆதலால் குளிரை தாங்க முடியாது அவளது உடல், சில்லிட்டுப் போயிற்று.

அறைக்குள் வந்ததும், குளிரால் வெடவெடத்தவளை, “ஏய் என்ன இது? இப்படி நடுங்குற? உட்காரு, என்று கட்டிலில் உட்கார வைத்துவிட்டு ஹீட்டரை ஆன் செய்தான். பற்கள் கிட்டியடிக்க, கைகளை மார்பின் குறுக்கே கட்டிக்கொண்டு, அமர்ந்து இருந்தவளின் அருகில் வந்தவன், அவளது கைகளை தனது கை கொண்டு பரபரவென்று தேய்த்து சூடாக்க முயற்சித்தான். அப்படியும் அவளது குளிர் குறையாததால், அவளோடு

படுக்கையில் சரிந்து, குல்ட் போர்வை கொண்டு இருவரையும் மூடிக்கொண்டான்.

அணைத்தவாறே படுக்கையில் சரிந்ததால் இருவரின் முகமும் மிகவும் அருகில் இருக்க, அவனது உடலின் உராய்வு ஒருவித உணர்வை தோற்றுவிக்க, அவனது கண்களை நேரில் பார்க்க முடியாமல், மூடிக்கொண்டாள்.

“அம்முலு இப்ப குளுருதா…?” காதருகில் அவனது உதடுகள் உரச, கண்களை திறந்து அவனை ஒரு முறை பார்த்து விட்டு, இல்லை என்னும் விதமாக தலையாட்டினாள்.

“இன்னும் கூட உன்னோட காது ஜில்லுன்னு தான் இருக்கு…” என்றவன் காதில் அழுந்த முத்தமிட்டான். ஓரிரு நொடிகள் அவனது மூச்சுக் காற்று அவளது முகத்தில் பட, காதருகில் சிலிர்த்த ரோமங்கள் அவளது தவிப்பை சொல்ல, “இப்ப காது சூடாகிடுச்சுல்ல…” என்று சொல்லிக்கொண்டே அடுத்து மூக்கிலும், கண்களிலும், கன்னத்திலும், அவனது சூடான உதடுகள் புதைய, அவளது உடலிலும் ரசாயன மாற்றங்கள் ஏற்பட ஆரம்பித்தது. அவளது மூச்சு காற்றும், உடலும் சூடாக, அணிந்திருந்த ஸ்வெட்டர் கசகசக்க ஆரம்பித்து.

ஏற்கனவே ஹீட்டர் போட்டு கொஞ்ச நேரம் ஆகிவிட்டபடியால், ரூம் டெம்பரேச்சர் நார்மல் நிலைக்கு வந்திருந்தது. மேனியில் விரல்கள் படாமலே, முத்தத்திலே, அவளது குளிரைப் போக்கியவன், "என்ன அம்முலு ஐயாவோட ட்ரீட்மெண்ட் எப்படி?" என்று குறும்புடன் கண்ணை சிமிட்டினான்.

"இதிலெல்லாம் எக்ஸ்பெர்ட் போல இருக்கு...!" வேண்டு மென்றே அவனை சீண்டினாள்.

"ஆமாம்..." என்றவன் அதோடு நிறுத்திக் கொள்ளாமல், "நான் ஒரு விஷயம் சொன்னா கோவிச்சுக்க கூடாது...!" என்று சொல்லவும்,

அவன் சொன்ன விதத்திலேயே ஏதோ வில்லங்கமாக சொல்லப் போகிறான் என்பது அவளுக்குப் புரிந்தது. "என்ன...?" ஏதோ கேட்க ஆசை இல்லாததுபோல் நடித்து கொண்டே அவள் கேட்க,

"அத அப்புறம் சொல்றேன். ஸ்வெட்டரை முதல்ல கழட்டு. இல்லைன்னா சுள்ளுசுள்ளுன்னு அரிக்கும்..." என்று அவன் சொன்னதைக் கேட்டு எழுந்து உட்கார்ந்து ஸ்வெட்டரை மட்டும் கழட்டினாள்.

“இப்ப சொல்லுங்க…?” என்று உட்கார்ந்து கொண்டே கேட்க, மல்லாந்து படுத்துக் கொண்டவன், “இப்ப சொன்னா நீ சண்டைக்கு வருவே, இன்னொரு நாள் பார்க்கலாம்… பேசாமல் படு…” என்று சொல்லவும்,

“முடியாது. இப்பவே சொல்லணும்…” என்று சிறு பிள்ளையாய் அவள் அடம் பிடித்தாள்.

“வேண்டாம் அம்முலு…” என்று அவனது பதிலில் கோபத்துடன் அவனுக்கு முதுகு காட்டி படுத்துக் கொண்டாள். அவளது பொய்கோபம் அவனுக்கு சிரிப்பை வரவழைக்க, மெல்ல அவளது காதருகில் நெருங்கி, “கோபமா…?” என்று இழைய, பதில்வராமல் போகவே, “சரி நான் சொல்றேன், அப்புறம் என்கூட சண்டை போடக் கூடாது…” என்று கூறி விட்டு, சொல்ல ஆரம்பித்தான்.

அவர்களது மூன்று மாத வாழ்வின் ரகசியத்தை, அவளது உணர்வுகளை அவன் அறிந்து கொண்ட விதத்தை, அவனது உணர்வுகளுக்கு அவள் பதில் கொடுத்த விதத்தை, அவன் விவரிக்க ஆரம்பித்ததும், வெட்கமும், பொய் கோபமும் போட்டியிட, அவனது பக்கம் திரும்பியவள், அவனது வாயை தனது கரம் கொண்டு பொத்தி, “ச்ச இப்படி எல்லாமா பேசுவாங்க…?” என்று சொல்ல…

“நான் சொல்ல மாட்டேன்னு தானே சொன்னேன். நீதானே சொல்லுன்னு சொன்னே, பாதியில நிறுத்த முடியாது. மீதியும் சொல்லிடறேன்…” என்று அவன் சொல்ல, அவனது வாயை பொத்தும் முயற்சியில் இறங்கியவளிடம் இருந்து அவன் திமிற, கடைசியில் அவன் அத்தனை விசயத்தையும் செயலில் அவளுக்கு விளங்க வைத்தான்.

ஆரம்பித்தது அவளாக இருக்க, முடித்தது அவனாக இருக்க, காதலின் புதிய பாடத்தை அவன் நடத்திய பரிணாமம் கண்டு மெய் சிலிர்த்தாள். அவள் நினைவில் இல்லாத விசயங்களுக்கு அவளது உடலின் உணர்வுகள் பதிலளித்த விதத்தில், எங்கோ ஒரு மூலையில், மூளையில் பதிவு ஆயிருந்த விசயங்கள் தானாக நடக்க, அவளது மனதில் ஆண்களைப் பற்றியும், தாம்பத்தியத்தை பற்றியும் இருந்த வெறுப்புகளும், மறுப்புகளும் கானல் நீராய் மறைய, தனக்குள் எழுந்த எதிர்ப்பு அலை, மங்கி மறைவது கண் கூடாய் உணர்ந்தாள்.

நல்ல காதலனாய் மட்டும் இல்லாமல், நல்ல கணவனாய் அவளது உணர்வுகளுக்கு அவன் மதிப்பளித்த விதமும், அந்த உணர்வுகளை அவன் அடையாளம் காட்டிய விதமும், தன்னுடன் வாழந்த அந்த மூன்று மாதத்தில் அவன் தன்னை கொண்டாடியிருக்க வேண்டும். அதனாலயே தனது மனதில் அவன்

உணர்வுகளாய் ஆழப் பதிந்து போயிருக்கிறான் என்பதை உணர்ந்து கொண்டாள்.

தன் நினைவோடு அவள் தன்னை ஒப்புக் கொடுத்த விதமும், முந்தி சுய நினைவு இல்லாத போது தன்னோடு உறவாடிய பொழுதுகளை அவளது ஆழ்மனத்தில் பதிந்து போயிருக்க, இன்று தொட்டவுடன் பாகாய் குழைந்த அவளது தேகம் அதை உறுதிப் படுத்த, எங்கே அதை தப்பாய் புரிந்து கொள்வாளோ என்ற பயத்துடனே அவன் முன்னேற, நல்லவேளை அப்படி எதுவும் நடக்காமல், அவள் புரிந்து கொண்டது மட்டுமில்லாமல், அவனுடன் இணைந்து தன் உணர்வுகளை வெளிப்படுத்தியதில் பூரண நிறைவு, சந்தோசமும் அவனுக்கு தோன்றியது.

அந்த சந்தோசத்தில் அவளை முத்தத்தால் அர்ச்சித்தவன் கடைசியில் அவளிடம் “தேங்க்யூ அம்முலு…” என்று கூறி அவளை தன்னுடன் அணைத்துக் கொண்டவன் “சரி தூங்கு. காலையில பிளைட்…” என்று கூறி தானும் தூங்க முற்பட்டான்.

# அத்தியாயம் 26

மறுநாளே இருவரும் சென்னை வந்து விட்டனர். குழந்தைகளுக்கு டெல்லியிலும் சென்னையிலும் ஏகப்பட்ட பொருள்களை உபேந்திரா வாங்கியிருந்தான்.

வாசு ஸ்கூலில் இருந்து நேரடியாக குழந்தைகளை இவர்கள் வீட்டுக்கே கூட்டி வந்துவிட்டான்.

மூன்று குழந்தைகளுக்கும் தான் வாங்கிய பரிசுகளை உபேந்திரா கொடுக்க, "அய், காரு, பொம்மை..." என்ற மூவரும் மகிழ்ச்சியில் திளைத்தனர்.

மூவருக்கும் சமமாகவே எல்லா பொருட்களும் வாங்கி இருந்தாலும், பசங்களுக்கு கார் பொம்மை நிறைய, மகளுக்கு பெண் குழந்தைகள் விளையாடும் பொருட்கள் என்று தனித்தனியாக பொருள்கள் கொஞ்சம் இருந்தது.

"அப்பா எனக்கு கிச்சன் செட் இல்லை..." மகன் குறைபட...

"டேய், கிச்சன் செட் உனக்கு எதுக்கு? லேடிஸ் தான் சமைக்கிறாங்க. அதான் பாவனாவுக்கு வாங்கினேன்..." என்று கூறினான்.

கேட்டுக்கொண்டிருந்த ரங்கா, "அதெல்லாம் இப்ப எல்லா வேலையும் எல்லாரும் தெரிஞ்சு இருக்கணும். இப்ப பொண்ணுங்களும், ஆணுக்கு சரிக்கு சமமா வேலைக்கு போறாங்க. பொருளாதாரத்தில் பாதி அவங்க நான் மானேஜ் பண்றாங்க.

கல்யாணம் ஆனாலும் மாப்பிள்ளை ஓரிடம் பொண்ணு, ஓரிடம் வேலை நிமித்தம் இருக்க வேண்டி இருக்கு. ஹோட்டல்ல சாப்பிட்டா உடம்பு தான் கெட்டுப்போகும். இந்த மாதிரி சொல்லி வளர்க்காதீங்க. ஆம்பள பிள்ளைங்க இதைச் செய்யணும், செய்யக் கூடாதுன்னு ஏதாவது சட்டம் இருக்கா? வீட்டை சுத்தமாக வெச்சிருக்க, தன்னோட வேலைகளை தானே செய்ய குழந்தைகளை கண்டிப்பா பழக்கணும். அதுதான் அவங்களுக்கு நல்லது."

"அப்படின்னாலும் நம்ம வீட்டுல வேலையாள் இல்லையா? அவங்க செய்வாங்க..."

"இருக்காங்க தான். என்னை பொறுத்தவரை தெரிந்து வைத்துக் கொள்வது நல்லது..." என்று கூறியதோடு மட்டுமில்லாமல் குழந்தைகளையும் அழைத்து, "உங்க வேலையை நீங்க செஞ்சு பழகணும்..." என்று பத்து நிமிடம் அட்வைஸ் செய்து விட்டு தான் ஓய்ந்தாள்.

"சரிடா கேட்டுக்கோங்க. நான்தான் ஏற்கனவே மிலிட்டரி மம்மின்னு பேர் வச்சிருக்கேன்ல!" என்று அவன் குழந்தைகளை சமாதானப்படுத்தினான்.

"மில்ட்ரி மம்மி" என்றதும் ரங்காவுக்கு கோபம் வந்துவிட்டது. கோபத்தோடு உள்ளே சென்று விட்டாள்.

"டேய் உங்க அம்மாவுக்கு கோபம் வந்திருச்சுடா. இன்னைக்கு என் பாடு திண்டாட்டம்தான்..." என்று அவன் தனக்குத்தானே புலம்ப...

பாவனா அவனிடம் "யப்பா உங்களுக்கு எதுக்கு திண்டாட்டம்...?"

"சொன்னா உனக்கு புரியாதுடா..." என்று அவன் பெருமூச்சு விட...

"புரியும்படியா சொல்லுங்க..." என்றது பெரிய மனுஷியாக.

"அப்படியே அம்மா வாய்..."

"இல்லையே எனக்கு தனி வாய் தான் இருக்கு..." என்று மகள் சொல்ல, அவளை அள்ளிக்கொண்டான்.

வாசு, ஹர்ஷா சற்று நேரம் கழித்து சென்று விட்டனர். குழந்தைகள் விளையாடும் போது உபேந்தரா அருகிலேயே இருந்தான்.

இரவு சாப்பாட்டின் போதும் ரங்கா அமைதியாக இருக்க, குழந்தைகள் அறியாமல் அவளிடம், "ஏய் குழந்தைகளுக்காக சும்மா சொன்னேன். அதுக்கு கோச்சிப்பையா…? என்றதும்,

"மனசுல உள்ளதுதான் வாயில வரும்…!" என்றாள், அவனை முறைத்துக் கொண்டே.

"எனக்கே தெரியாம சொல்லிட்டேன் போதுமா. நீ பாட்டுக்கு இதையே சாக்காக வைத்து, ராத்திரி பட்டினி போட்டுறாதே…!" என்று சொல்ல…

"ஸ்… குழந்தைகள் முன்னாடி என்ன பேச்சு…?"

"நான் உன் கிட்ட ரகசியமா தான் சொன்னேன்…!" என்றான் வழிந்து கொண்டே…

அதற்குள் பாவனா, "அப்பா எங்களுக்கு தெரியாம அம்மா கிட்ட என்ன சொல்றீங்க…? எனக்கு சொல்லுங்க…!" என்று அழ ஆரம்பிக்க…

"ஒண்ணும் இல்லை. சாப்பிட்டுட்டு சீக்கிரம் தூங்க போகணும்னு சொன்னேன்…" 'இவனுகளை வைச்சிட்டு

பொண்டாட்டி கிட்ட பேசக் கூட முடியலை' மெல்ல அவள் காதில் மட்டும் முணுமுணுக்க, அவள் குழந்தைகளுக்கு தெரியாமல் உதட்டை சுழித்தாள்.

"இல்லப்பா நிறைய விளையாட்டு சாமான் இருக்கு, நம்ம எல்லாரும் விளையாண்டுட்டுதான் தூங்கணும்..." என்றதும் ரங்கா நமுட்டு சிரிப்பு சிரித்தாள்.

"ஓகேமா ஓகே..." மகளிடம் உடனே சரணாகதி அடைந்தான். குழந்தைகள் திரும்பவும் மாடிக்கு போய் விளையாட ஆரம்பிக்க, ரங்கா கீழே உள்ள வேலைகளை முடித்துவிட்டு மாடிக்கு சென்று வழக்கமாக தான் படுக்கும் இடத்தில் படுத்து விட்டாள். அவளுக்கு என்னவோ மிகவும் சோர்வாக இருந்தது.

உபேந்திரா பால்கனியில் இருந்து உள்ளே வரும் போது அவள் தூங்கி இருக்கவே, குழந்தைகளும், அவனும் அவளைத் தொந்தரவு செய்யாமல் தங்கள் இடத்தில் படுத்து தூங்கினர்.

மறுநாளிலிருந்து இருவருக்கும் வழக்கமான வேலைகள் இருக்க, வாழ்க்கை சக்கரம் வேகமாகச் சுற்ற ஆரம்பித்தது. உபேந்திராவுக்கு தனது வக்கீல் தொழில் மட்டுமல்லாது, பிசினஸ் சம்பந்தமாக வேலைகளும் அதிகமாக இருக்க அவன் இரவு வருவதற்கு மிகவும் நேரமாயிற்று. அதற்குள் ரங்காவும்

குழந்தைகளும் அனேகமாக தூங்கிவிடுவார். அப்படியே பதினைந்து நாட்கள் கழிந்தது.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை. முந்தின நாளே குழந்தைகள் அவனிடம் வெளியே போக வேண்டும் என்று சொல்லி இருக்க, ஞாயிறு அன்று கூட்டி செல்வதாக வாக்களித்திருந்தான்.

காலையில் எழும்பும் போது ரங்காவுக்கு தலைச்சுற்றல் அதிகமாக இருக்க, திரும்பவும் படுத்து விட்டாள். உபேந்திரா வாக்கிங் சென்றுவிட்டு திரும்பிய போதும் அவள் படுத்திருக்க, உடம்பு சரியில்லையோ என்று நினைத்து அருகில் சென்றவன், அவள் கழுத்தில் கை வைத்து பார்த்தாள்.

அவனது ஸ்பரிசத்தில் கண் விழித்தவளிடம் "என்ன ரங்கா உடம்பு சரி இல்லையா...?"

"அதெல்லாம் இல்லை. கொஞ்சம் தலை சுத்துற மாதிரி இருக்கு அதான் படுத்து இருந்தேன்..."

"டாக்டர் கிட்ட போகலாமா...?" பசங்க வெளியில போகணும்னு சொன்னாங்க...!"

"நீங்க எல்லாரும் போய்ட்டு வாங்க...! எனக்கு டடயர்டா இருக்கு...!"

"அதெல்லாம் வேண்டாம். நீ இல்லாம எனக்கு போக இஷ்டம் இல்லை…"

"நான் எதுக்கு, நீங்க மட்டும் போங்க…"

"வேண்டாம், அதெல்லாம் வேண்டாம். நாம ரெண்டு பேரும் டாக்டர் கிட்ட போகலாம். வாசு கிட்ட சொல்லி குழந்தைகளை வெளியில் கூட்டிட்டு போக சொல்றேன்…" என்றவன் அதன்படியே வாசுவை அழைத்து கூறிவிட்டான்.

குழந்தைகளை அவனை கிளப்பிவிட, வாசு வந்து அழைத்துச் சென்றதும், ரங்காவை அழைத்துக்கொண்டு ஹாஸ்பிடல் சென்றான்.

டாக்டர் சித்ராவே அவளை பரிசோதித்து விட்டு, "எதுக்கும் ஒரு பிளட் டெஸ்ட், யூரின் டெஸ்ட் எடுத்துப் பார்த்துவிடலாம்…" என்று சொல்ல, அதன்படியே செய்தனர்.

ரிசல்ட் வந்ததும் அதை எடுத்துக்கொண்டு சித்ராவிடம் சென்றனர். பார்த்துவிட்டு சித்ரா "கங்கிராசுலேசன்ஸ் ரங்கா அன்ட் உபேந்திரா, நீங்க ரெண்டு பேரும் அம்மா, அப்பா ஆகப் போறீங்க…" என்று சொன்னதும் ஒரு நொடி ரங்காவுக்கு ஒன்றுமே புரியவில்லை.

ஆனால் உபேந்திராவுக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது. ரங்காவின் குழம்பிய முகத்தை பார்த்துவிட்டு சித்ராவே அவளிடம்,

"ரங்கா அறுபது நாள் ஆகிடுச்சு. பயப்படாதீங்க எல்லாம் நார்மலா இருக்கு. இன்னும் ஒரு மாசம் கழிச்சு ஸ்கேன் எடுத்துப் பார்க்கலாம்..." என்று கூறி தேவையான விட்டமின் மருந்துகளை எழுதி கொடுத்து அனுப்பினாள்.

“தேங்க்யூ டாக்டர்...” என்று மிகவும் சந்தோஷத்துடன் சொல்லிய உபேந்திரா, அவளை அழைத்துக் கொண்டு காருக்கு வந்தான். காரில் ஏறியதும் அதை எடுக்காமல் திரும்பி உட்கார்ந்து அவளைப் பார்த்து, "என்ன ரங்கா, சந்தோஷமா இல்லையா? ஏன் ஒரு மாதிரி இருக்கே...?"

"இல்ல, இது எப்படி எனக்கு தெரியாம போச்சுன்னு யோசனையா இருக்கு...!"

"ஏய் டேக் இட் ஈசி. உனக்கு உடம்பு குணமாகி ஒரு மாதம் கூட ஆகல. ஆனால் இந்த குழந்தை நம்மளுடைய அன்புலதான் உருவாகியிருக்கு. ஏற்கனவே டாக்டர் சித்ரா உன் கிட்ட சொல்லி இருப்பாங்க இல்லை..."

"ஆமாம்..."

"அப்புறம் என்ன தயக்கம்? எல்லா பிரச்னையும் டெல்லியுடன் முடிஞ்சிருச்சுன்னு நான் நினைச்சேன்..." அவன் மனவருத்தத்துடன் அவளிடம் சொல்ல...

"ஐயோ நான் அப்படி சொல்லல. ஒரு பொண்ணா எனக்கு பீரியட்ஸ் மிஸ் ஆயிருக்கது தெரிஞ்சிருக்கணும். அது எப்படி தவற விட்டேன்னு தெரியல..."

"இது ஒரு பிரச்சனையா? அப்ப எதுவுமே உனக்கு சரியாய் ஞாபகம் இல்லை. அதனால என்ன...? என்னதான் இருந்தாலும் இந்த குழந்தை நம்மளுடைய அன்பின் அடையாளம். பாவனா, பார்த்தி நம்ம குழந்தைகள்தான். இல்லைனு, சொல்லலை. ஆனா அவங்க உருவான விதம், அந்த சந்தோஷத்தை நீயும் அனுபவிக்கலை, நானும் அனுபவிக்கவில்லை. அதுக்கெல்லாம் சேர்த்து இந்த சந்தோஷத்தை கடவுள் கொடுத்து இருக்கதா நினைத்துக் கொள்வோம்...!" என்று உணர்ச்சி பூர்வமாக கூறினான்.

அவனது வார்த்தைகளில் ஆறுதல் அடைந்த ரங்கா, “சரி கிளம்புங்க...” என்று சொன்ன பின்னரே காரை எடுத்தான். வீட்டிற்கு வந்ததும் தாத்தாவிடம் விஷயத்தை சொல்ல அவர் மிகவும் சந்தோஷமடைந்து, ரங்காவிடம், "உன்னோட பாட்டியே உனக்கு குழந்தையா வந்து பிறப்பாள்.!" என்று ஆசிர்வாதம் செய்தார்.

அந்த வார்த்தையை கேட்டதும் ரங்காவிற்கு, சந்தோஷத்தில் கண் கலங்கி விட்டது. அவளது கண்ணீரை பார்த்த உபேந்திரா அவளை அணைத்துக் கொண்டான்.

"ஏய் உன்னோட பாட்டியை நினைத்து சந்தோஷம்தான் படணும். அப்பதான் அவங்களே நமக்கு குழந்தையா வந்து பிறப்பாங்க. இனி எதுக்காகவும் கண்கலங்க மாட்டேன்னு என்னை பாத்து சொல்லு. உங்க பாட்டி உன்னை கவனிச்ச மாதிரியே நான் உன்ன கவனிச்சுக்குறேன்..." சிறு குழந்தையை அணைப்பது போல் அணைத்துக் கொண்டு உபேந்திரா சொல்லவும், அவள் ஆறுதல் அடைந்தாள்.

மாலை குழந்தைகளுடன் வந்த வாசுவுக்கும் விஷயம் தெரிந்ததும் மிகவும் சந்தோஷமடைந்தான்.

"ரங்கா உண்மையிலேயே பாட்டி சாதிச்சுட்டாங்க. அவங்களோட கவலையே உன்னோட வாழ்க்கை, நல்ல படியா அமையணும் என்பதுதான். இப்ப நிச்சயமா அவங்களோட ஆத்மா ரொம்ப சந்தோஷப்பட்டு இருக்கும். அந்த சந்தோஷத்தோடு அவங்களே உனக்கு குழந்தையா வந்து பிறப்பாங்க...!" என்ற வாழ்த்தவும், கண்ணீரோடு சிரித்தாள்.

பின்னர் மெல்ல குழந்தைகளுக்கும் விஷயத்தைச் சொல்லவும், அவர்கள் சந்தோஷத்தில் குதித்தனர்.

"அய்... விளையாட குட்டி பாப்பா வர போகுது. அது எப்படி இருக்கும்? எப்ப வரும்...?"

"இன்னும் பத்து மாதத்தில் வந்துரும். அப்புறம் உங்க கூட விளையாடும்...!"

"அதுவரை எங்க இருக்கும்?"

"அதுவரை...!" என்று உபேந்திரா இழுக்க...

"உங்களுக்கு தெரியலேன்னா அம்மாகிட்ட கேட்கிறோம்...!" என்று அவர்கள் ஓடி வந்து அவள் மேலே விழுந்தனர்.

பின்னாலே பதறியபடி வந்த உபேந்திரா, "டேய் மெல்லடா, அம்மா வயித்துல தான் பாப்பா இருக்கு. அதுக்கு வலிக்கும்..." என்று சொன்னதும்...

"அப்படியாமா...? எங்க காட்டுங்க..." என்றது பாவனா.

"இப்ப தெரியாது. கொஞ்ச நாள் கழிச்சு தெரியும், சரியா...! அப்பா உங்களுக்கு காட்டுறேன்..." என்று சொல்லி சமாதானம் செய்து. அவர்களை விளையாட அனுப்பி வைத்தான்.

"ஏய் குழந்தைகள் கிட்ட கொஞ்சம் கவனமா இரு ரங்கா..." என்று உபேந்திரா கவலையுடன் சொன்னான்.

"சரி இந்தர். நான் பாத்துக்குறேன். இதுக்கு எதுக்கு இவ்ளோ டென்ஷன் ஆகுறீங்க...?"

"இல்லடி, எனக்கு நீயும், இந்த குழந்தையும் ரொம்ப முக்கியம். குழந்தைகளும் முக்கியம்தான். ஆனா அவங்களுக்கு விவரம் தெரியாது. விவரம் தெரிஞ்ச நீதான் கொஞ்சம் கவனமா இருக்கணும் ப்ளீஸ்..."

"ஓகே ஓகே... கவனமாகக் இருக்கேன்." அவனது கவலை புரிந்து இதமாகக் கூறினாள்.

அதன் பிறகு உபேந்திரா அவளை உள்ளங்கையில் தாங்கினான். குழந்தைகளை கவனிக்க இன்னொரு ஆள் நியமித்து ரங்காவிற்கு முழு ஓய்வு இருக்கும்படி பார்த்துக் கொண்டான்.

தனது வேலை நேரம் போக, மற்ற நேரமெல்லாம் ரங்கா வுடனே இருந்தான். மசக்கையில் அவள் துவளும் போது தாயாய் அவளை மடி தாங்கினான். அவனுக்கும் எதுவும் தெரியாது என்றாலும், தனது தாத்தாவிடமும் டாக்டர் சித்ராவிடமும், கர்ப்பிணிப் பெண்களின் சிரமத்தை கேட்டு தெரிந்து கொண்டு, அதற்கு ஏற்றபடி ரஞ்சிதம்மாவிடம், அவள் வாய்க்கு ஏற்ற ருசியான உணவு வகைகளையும், சத்தான உணவுகளையும் செய்து அதை அவளுக்கு ஊட்டி விட்டான்.

அவனுடைய கவனிப்பில் திக்குமுக்காடிப்போன ரங்கா சில நேரம் அவனிடம், "இப்படி பாதி நேரம் வீட்டிலேயே

இருக்கீங்களே உங்க கோர்ட் வேலை, பிசினஸ் இதெல்லாம் என்ன ஆகிறது...?" என்று கேட்டாள்.

"எல்லாத்துக்கும் எக்ஸ்ட்ரா ஆள் போட்டாச்சுடி. எனக்கு இப்போ உன்னையும், குழந்தையும் கவனித்துக் கொள்வது மட்டும்தான் வேலை. முதல்ல நீ இந்த ஜூஸை குடி..." என்று அவள் கையில் தம்ளரை திணித்தான்.

"ப்ளீஸ் வேண்டாம் இந்தர். அதுவும் இந்த மாதுளை ஜூஸ் குமட்டிட்டு வருது..."

"பரவாயில்லை. வாந்தி எடுத்தாலும் உள்ள போயிட்டு தானே வெளியில வருது..." என்று கம்பெல் பண்ணி அவளை குடிக்க வைத்தான்.

மதியம் அலுவலகத்திலிருந்து வருபவன், அவளை சாப்பிட வைத்து தானும் சாப்பிட்டதும், ரங்காவை தனது மடியில் படுக்க வைத்துக் கொள்வான். சில சமயங்களில் எதுவும் வேலை இருந்தால் அவள் அருகில் வைத்து அதை பார்த்து முடித்து விடுவான்.

ஈவினிங் குழந்தைகளை அழைத்து வந்ததும், தனது மேற்பார்வையிலேயே அவர்களை கிளப்பி, வீட்டிலேயே டியூஷனுக்கு ஏற்பாடு செய்தான்.

"என்ன இது, எனக்கு போர் அடிக்கும். நான் சும்மாதான் இருக்கேன். நான் சொல்லி கொடுக்கிறேன்...” என்று ரங்கா எவ்வளவோ கேட்டுப் பார்த்தாள்..."

"ப்ளீஸ் அம்முலு, எனக்காக நீ கொஞ்சம் இதையெல்லாம் விட்டுக் கொடுத்துதான் ஆகணும். குழந்தை பிறந்து ஒரு வருஷம், நீ இவங்கள மட்டும் கவனிச்சா போதும். அதுக்கப்புறம் உன்னோட இஷ்டப்படி நீ என்ன வேலைனாலும் செய்..." அதிகாரமாய் சொல்லாமல் அன்பாக சொல்லி, அவளிடம் காரியம் சாதித்துக் கொண்டான்.

"ரொம்ப தேறீட்டீங்க இந்தர்..." என்று ரங்கா சலித்துக் கொள்ளவும்,

"எதுல...?"

"என்னை எப்படி கவுக்கிறதுன்னு, நல்லாவே தெரிஞ்சிருக்கு உங்களுக்கு...!"

"என்ன பிரயோஜனம்? முக்கியமான விஷயத்தில் உன்னை எப்படி கவுக்கிறதுறதுன்னு தெரியலையே...!" என்று விளையாட்டாய் சொன்னான்.

முகம் சிவக்க அவன் முதுகில் ஒன்று போட்டவள், "அங்க சுத்தி, இங்க சுத்தி நீங்க அதிலேயே இருங்க..." என்றாள்.

"ஏய், நீயே சொல்லு. இப்பத்தான் ஒரு வழியா டெல்லியில் வைத்து உன்னை சமாதானப்படுத்தி கூட்டிட்டு வந்தேன். அதுக்கப்புறம் பதினைந்து நாள் ஒரே பிஸி. அடுத்து இந்த சந்தோஷமான செய்தி. அப்புறம் உன்னையும் உன் பிள்ளையும் கவனிக்க தான் எனக்கு நேரம் இருக்கு. என்னை எங்க நீ கவனிக்கிறே...?"

கட்டிலில் சாய்ந்து கால் நீட்டி இருந்தவள், அவன் கையை பிடித்து இழுத்து தன் அருகில் அமர வைத்தாள். அவனது இரு கன்னங்களையும் பிடித்து முகத்தை தன்னருகில் இழுத்தாள்.

அவனது கண்களை உற்றுப் பார்த்து, "எனக்கு கொஞ்சம் பயமா இருக்கு. அதனாலதான் உங்களுடைய ஏக்கமும், தவிப்பும், தெரிஞ்சும் நான் அமைதியா இருக்கேன். இல்ல கண்டிப்பா வேணும்னா... " அவள் மேலே பேசும் முன், தன் வலது கையால் அவள் வாயை பொத்தினான்.

"வேண்டாம். நான் உன்னை சும்மா சீண்டினேன்...!" அவனது பதிலில் மனம் கரைந்தவள், அவனது கன்னத்தில் தனது அதரங்களை அழுந்த பதித்தாள்.

எதிர்பாராத அவளது செயலில் திகைத்து போனவன், “ஹேய் என்ன இது...?” என்க, அவள் வெட்கத்துடன் முகம் சிவந்தாள். “உனக்கு வெட்கப் பட கூடத் தெரியுமா...?” என்று கேட்டு உரத்த

குரலில் சிரிக்க, அவசரமாய் அவன் வாயை பொத்தியவள், "எதாவது கேலி பேசினீங்க, அப்புறம் எல்லாத்துக்கும் ஒன் பார்ட்டி போர்தான்..." என்று மிரட்ட...

"இல்லை. எதுவும் பேசலை. ஆனால் அதுக்கு ஏதாவது லஞ்சம் உண்டா...?"

"அடப் பாவமே, எதுல எல்லாம் லஞ்சம் விளையாடுது...?" என்று போலியாய் அவள் அதிசயித்தாள்.

அவள் முகம் பற்றி அதரங்களில் தன் உதடுகளை பொருத்தியவன், சில நொடிகள் அதில் உள்ள தேனை பருகிவிட்டு விடுவித்தான். உதடுகளை துடைத்துக் கொண்டே "உங்களுக்கு லேசா இடம் கொடுத்திரக் கூடாதே..." என்று சிணுங்க...

"இந்த விசயத்துல ஆரம்பிச்சா நிறுத்தக் கூடாதுடி..." என்று கண்ணை சிமிட்டியவன், "லஞ்சம் நீ கொடுக்கலை. அதனால் நானே எடுத்துக் கிட்டேன்..." என்று சொல்லி அவள் கன்னத்தை கிள்ளினான்.

"ஆ வலிக்குது... என்ன இது...?"

"இல்ல. உன் கன்னம் இரண்டும் பார்க்க, பார்க்க பாவனா கன்னம் போல புசு புசுனு தெரிஞ்சுதா, கிள்ளணும் போல

தோணுச்சு. சாரி வலிச்சுட்டுதா, நான் வேணா ஒத்தணம் கொடுக்கவா…! அவன் மீண்டும் உதட்டை குவிக்க…

“சாமி ஆளை விடுங்க…” என்று அவள் சொல்லி தப்பித்தாள். ரங்காவின் மனதில் இப்போது உபேந்திரா முழுமையாக நிறைந்து இருந்தான். அவளுடைய பயம், ஆண்களை பற்றிய அபிப்பிராயம் எல்லாமே மாறி விட்டது.

பாட்டி போனதும் தனிமை இருளில் தவித்தவளுக்கு, உபேந்திரா தனது செயல்களால், அவனது அன்பை நிரூபித்து அவளது மனதில் இருந்த இருளை நீக்கினான். தன்னுடைய குறை தெரிந்தும், அதை பெரிதாக நினைத்து தன்னை ஒதுக்காமல், தன்னை மாற்றுவதற்கு அவன் மேற்கொண்ட செயல்கள், அவளது மனதில் தன் கணவன் பால் நேசத்தை தோற்றுவித்தது.

மாதந்திர செக்கப்புக்கு அவனே அழைத்து சென்று டாக்டரிடம் பேசினான். ஐந்து மாதம் முடிந்ததும் சித்ராவே “இனி ஒரு பயமும் இல்லை. குழந்தை நன்றாக இருக்கிறது. சின்ன சின்ன வேலைகள் செய்யலாம். பாமிலி வேயில் இருக்கலாம்…!” என்று குறிப்பாக சொல்லவும்…

“அதுல எதுவும் ப்ராப்ளம் வராதே…?” என்று ரங்காவின் பயம் அறிந்து, அவனே டாக்டரிடம் கேட்ட போது…

“அதெல்லாம் எதுவும் வராது. கொஞ்சம் கவனமா இருக்கணும். அவ்வளவுதான்…” என்று சொல்லி டானிக், மருந்துகள் கொடுத்து அடுத்து செக்கப் வரவேண்டிய நாளையும் சொல்லி அனுப்பினாள்.

காரில் வீட்டுக்கு திரும்பும் போதே அவன் விசில் அடித்துக் கொண்டே காரை ஓட்ட, அவன் மனநிலை புரிந்து “என்ன ரொம்ப குஷியா இருக்கிற மாதிரி இருக்கு…?” என்றாள் வேண்டுமென்றே…

“பின்ன, நல்ல விஷயம் சொல்லி இருக்காங்க, டாக்டர். அந்த சந்தோசம் தான்…”

“அப்படியா…?” என்று கேட்டவள், மனதுக்குள் சிரித்துக் கொண்டாள். இரவில் பால்கனியில் அமர்ந்து வானத்தை பார்த்துக் கொண்டு இருந்தவள், யாரோ வரும் அரவம் கேட்டு திரும்பவும், குழந்தைகளும் உபேந்திராவும் வந்தனர்.

“சாப்பிட்டாச்சா…?” என்று குழந்தைகளிடம் கேட்க, “ஆமாம்மா…” என்று கூறியவர்கள் தங்கள் விளயாட்டு சாமானை எடுத்து விளயாட ஆரம்பித்தனர்…

அவள் அருகில் இன்னொரு சேரில் உட்கார்ந்த உபேந்திரா அவள் கையை எடுத்து மடியில் வைத்துக் கொண்டு, “ரங்கா

வளைகாப்பு பண்ணனும்னு தாத்தா சொல்றாங்க. உனக்கு சம்மதமா…?”

அவள் பதில் சொல்லாமல் மௌனமாய் இருக்கவும், “என்ன ரங்கா…?” என்று மறுபடியும் அழுத்தி கேட்டான்.

“இல்ல, நீங்க என்ன சொல்றீங்க…?”

“எனக்கும் ஆசைதான்…”

“யாரவது மூணாவது பிள்ளைக்கு விமரிசையா வளைகாப்பு பண்ணுவாங்களா…?”

“ஓ… நீ அப்படி யோசிக்கிறியா…? அதெல்லாம் நினைக்காதே. நம்ம கதையே வேற. மத்தவங்க என்ன சொல்வாங்கன்னு எப்ப நீ யோசிக்க கத்துகிட்டே…?”

“அப்படி யோசிக்காம நான் செய்த விஷயம் தான், இப்ப என்னை யோசிக்க வைக்குது…”

“உண்மைதான். ஆனால் இதுவும் அதோட விளைவுதான் நினைச்சு சமதானப் படுத்திக்கலாம். இதுக்கு அப்புறம் வேற பிரச்சினை எதுவும் வராது. தாத்தாவுக்காகவும், எனக்காகவும் ப்ளீஸ்…” அவனது கெஞ்சலை மறுக்க முடியாமல் தலையாட்டினாள்.

சேரில் இருந்து அவள் மெல்ல எழும்ப உதவி செய்தவன், “பார்த்தி, பாவனா படுக்க வாங்க, காலையில ஸ்கூலுக்கு கிளம்பணும்...” என்று சொல்லி அவர்களையும் கிளப்பினான். அவர்களுக்கு, தனக்கு அருகில் இன்னொரு கட்டில் ஏற்பாடு செய்து இருந்தான். அவர்களை அதில் படுக்க வைத்து தட்டி கொடுக்கவும், அவர்கள் தூங்கி விட்டனர். குழந்தைகளுக்கு போர்த்தி விட்டு லைட்டை அணைத்து அவன் படுக்க வருவதற்குள், ரங்கா அவளது இடத்தில் தூங்கி இருந்தாள்.

மூன்று பேர் படுக்கும் கட்டில் அது. அதில் உள்பக்கமாய் படுத்து, சுவர் ஓரமாய் திரும்பி இருந்தவளை பார்த்ததும், ஒரு பெரு மூச்சு விட்டு, ‘டேய் உனக்கு இன்னிக்கு அவ்வளவுதான் அதிர்ஷ்டம்...’ என்று தனக்கு தானே வாய் விட்டு சொல்லிக் கொண்டு, நன்கு தூங்கியவளை எழுப்ப மனம் வராமல் தானும் படுத்து கண்களை மூடினான்.

டாக்டர் சொன்னதிலிருந்து மனதில் ஒரு எதிர்பார்ப்புடன் வளைய வந்தவனுக்கு, அவள் தூங்கி விட்டது கொஞ்சம் ஏமாற்றமாக இருந்தது. 'சரி டயர்டாக இருக்கும்' என்று மனதை சமாதானப்படுத்திக் கொண்டாலும், தன்னைப் போல அவளுக்கும் ஏக்கம், எதிர்பார்ப்பு இல்லையோ என்ற எண்ணமே, அவன் மனதை சுணங்க செய்தது.

சற்று நேரம் தூக்கம் வராமல் தவித்தவன் புரண்டு, புரண்டு படுக்க, ஒரு கட்டத்தில் அவள் முழித்து விடக்கூடாது என்று மெதுவாக எழுந்து, அறைக் கதவைத் திறந்து, சத்தமில்லாமல் சாத்திவிட்டு மொட்டை மாடிக்கு சென்றான்.

அங்கு சென்று வழக்கம் போல் தான் அமரும் ஊஞ்சலில் ஒரு சிகரெட்டை பற்ற வைத்துக் கொண்டு உட்கார்ந்தான். மனதை மாற்றும் முயற்சியாக, வலுக்கட்டாயமாக வேறு விஷயங்களை நினைத்தாலும், மனம் என்னும் சண்டிக் குதிரை அடங்காமல், திமிறிக்கொண்டு, தன்னுடைய தேவையில்லையே நிற்க, ஒரு சிகரெட்டை முடித்துவிட்டு அடுத்ததை பற்ற வைக்கலாமா என்று யோசிக்கையில், அவனது இருப்பிடத்தை நோக்கி யாரோ வரும் சத்தம் கேட்டது.

உற்று கவனிக்கையில், ரங்காவின் கொலுசொலி மெலிதாக கேட்க, 'இவள் எதற்கு மாடிக்கு வந்தாள்...? படி ஏறக்கூடாது என்று சொல்லி இருக்கையில்...' என்று நினைத்தவன், கையில் உள்ள சிகரெட்டை, தூக்கி தூர எறிந்து விட்டு அவளை நோக்கி நடந்தான்.

மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க, வந்து நின்றவளைப் பார்த்து, "எதுக்கு நீ இப்ப மேல வந்தே?" என்றான் கோபத்துடன்.

இடுப்பில் ஒரு கையும், அவன் தோளில் ஒரு கையும் வைத்து, தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு நின்றாள்.

"தற்செயலா முழிப்பு வந்தது. பாத்தேன், நீங்க பக்கத்துல இல்ல. சரி பால்கனியில இருப்பீங்கன்னு நெனச்சு பார்த்தா பால்கனி கதவு சாத்தி இருந்தது. அதான் இங்க தேடி வந்தேன்..." இதை சொல்வதற்குள் அவள் மூச்சு வாங்க திணறினாள்.

அவள் திணறுவதைப் பார்த்தவன், "உன்னை மாடி ஏற கூடாதுன்னு சொல்லி இருக்கேன் இல்ல... " என்று அவளை கடிய...

"இப்ப நீங்க எதுக்கு தூக்கத்தை கெடுத்து இங்க வந்து உட்கார்ந்திருக்கீங்க...?" என்று பதில் கேள்வி கேட்டாள்.

"ஒண்ணும் இல்ல தூக்கம் வரல. பால்கனியில் உட்கார்ந்து சிகரெட் பிடிச்சா கத்துவ, அதான் மொட்டை மாடிக்கு வந்தேன்..." என்றவனை தீர்க்கமாக பார்த்தாள்.

"சரி வாங்க கீழே போவோம்..." என்று அவள் சொன்னதும், சட்டென்று அவளை இரு கைகளில் அள்ளிக் கொண்டவன், மாடிப்படியில் இறங்கினான்.

"ஏறதான் கஷ்டம், இறங்குகிறது ஈசிதான், விடுங்க என்னை...!" எவ்வளவோ சொல்லியும் காதில் வாங்கிக் கொள்ளவில்லை.

"இனி தேவையில்லாம மாடி ஏறினேன்னு தெரிஞ்சது, இருக்கு உனக்கு...!" என்று அவன் திட்டிக் கொண்டே வரவும், அவனது அக்கறை பார்த்தவளுக்கு சிரிப்பு வந்தது. சிரித்தால் கோபம் வரும், என்று அமைதியாக அவனது கழுத்தில் தனது கரங்களை கோர்த்துக் கொண்டு, அவனது தோளில் வாகாக சாய்ந்து கொண்டாள்.

தங்களது அறைக்குள் வந்து கட்டிலில் இறக்கி விட்டவன், திரும்ப சென்று மொட்டை மாடிக் கதவையும், அறை கதவையும் தாள் செய்து வந்தான்.

வேறு எதுவும் பேசாமல் அவன் படுக்க, அவனை நெருங்கி தோளில் கை வைத்து தன் பக்கம் திருப்பியவள், "தூக்கம் வந்துருச்சு என்று தூங்கினேன். அது ஒரு குத்தமா? எதுக்கு மாடிக்கு போனீங்க...? என்னை எழுப்ப வேண்டியது தானே...?" என்று விடி விளக்கின் வெளிச்சத்தில் அவன் முகம் பார்த்து கேட்டாள்.

'இதற்கு என்ன பதில் சொல்வது என்ற நினைப்போடு அவளைப் பார்க்க' அவளாகவே அவனது கரங்களை எடுத்து

தனது இடுப்பில் தவழ விட்டவள், "என்ன, சொல்றதுன்னு யோசிக்கிறீங்களா? எனக்கும் புரியுது..." என்று கூறிக்கொண்டே, அவனை நெருங்கி, நெஞ்சில் சாய்ந்து, முதுகை வளைத்துக் கொள்ள, தான் சொல்லாமலே புரிந்து கொண்ட, மனைவியை மகிழ்ச்சியுடன் அவனும் அணைத்துக்கொண்டான்.

குழந்தைக்கு எதுவும் இடஞ்சலாக இருக்குமோ என்று, பயந்து, பயந்து காதல் செய்த தன்னவனை, இறுக்கிக் கொண்டவள் ஒரு கட்டத்தில், "பாக்கத்தான் வீரம், என்ன பயம் பயப்படுறீங்க...?" என்று கிண்டலடிக்க...

"ஏய் குழந்தை பிறக்கட்டும், உன்னை வச்சுக்கிறேன்..." என்றவன் தன் காரியத்தில் கண்ணானான்.

கடைசியில் மகிழ்வுடன் மனைவியின் நெற்றியில் முத்தமிட்டு, "தேங்க்ஸ் ரங்கா, இந்தப் புரிதல் தான் நான் உன்கிட்ட எதிர்பார்த்தது...!" என்று கூறினான்.

“இதைக் கற்றுக் கொடுத்ததே ஒருவகையில உங்களோட பொறுமையும் அன்பும் தான். நான்தான் உங்களுக்கு நன்றி சொல்லணும்.”

“கணவன் மனைவிக்குள்ள நன்றியும், ஈகோவும் எப்பவும் இருக்கக் கூடாது. எந்த விஷயமானாலும் ஒருவருக் கொருவர்

மனசு விட்டு பேசிக் கொள்வது ரொம்ப நல்லது. இத மட்டும் எந்த கட்டத்திலேயும் நாம நினைவு வச்சுக்கிட்டா, குடும்பத்தில் பிரச்சினையே வராது. தாத்தா சொல்லும்போது புரியல, ஆனா உன்னோடவும் குழந்தைகளுடனும், வாழ ஆரம்பித்த பிறகு புரிஞ்சிடுச்சு. ஒருவகையில் நாம ரெண்டு பேரும் தாத்தாவுக்கும், ரங்கா பாட்டிக்கும் தான் நான் நன்றி சொல்லணும். அவங்க ரெண்டு பேரும்தான் நாம சேரணும்னு முடிவு எடுத்தது..." என்று உபேந்திரா, உண்மையை சொல்ல, ரங்காவும் அதை ஒத்துக் கொண்டாள்.

நாட்கள் வேகமாக செல்ல ரங்காவுக்கு எட்டாவது மாதம் வளைகாப்பு ஏற்பாடு செய்தனர். கல்யாணம், மிகவும் சிம்பிளாக செய்ததால், வளைகாப்புக்கு தனக்கு நெருக்கமானவர்களை அழைக்க வேண்டும் என்பதில் தாத்தாவும், பேரனும் ஒற்றுமையாக முடிவு செய்தனர்.

அதன்படி அவர்கள் வீட்டிலேயே பங்சன் வைத்து நூறு பேருக்கு மேல் அழைத்து இருந்தனர். வாசுவும், கீர்த்தியும் தவிர யாரையும் அழைக்க மாட்டேன் என்று உபேந்திரா பிடிவாதமாக சொல்லி விட்டான்.

பிறந்த வீட்டு சீர் ஆக வாசு உபேந்திராவுக்கு, ரங்காவுக்கு குழந்தைகளுக்கு டிரஸ் எடுத்தான். ரங்காவின் நிறத்திற்கேற்ப,

அரக்கு சிவப்பில், உடல் முழுவதும் சரிகை கட்டமும், முந்தானையில் தவழும் கிருஷ்ணன் உருவமும் கொண்ட பட்டு சாரியில், தாய்மையின் பொலிவோடு வந்து அமர்ந்த மனைவியை விட்டு உபேந்திராவின் பார்வை அங்கும், இங்கும் விலகவில்லை.

வருபவர்களை வரவேற்றுக் கொண்டே மனைவியை கண்ணால் ரசித்துக்கொண்டிருந்த உபேந்திராவிடம், "என்ன மாப்ள கொஞ்சம் அந்த சைடு போய் தான், எல்லோரையும் வரவேற்கிறது...?" வேண்டுமென்றே வாசு கலாய்க்க...

"மச்சான் எப்படியும் எல்லாரும் உள்ள வந்துதானே ஆகணும். நான் இங்கே இருந்து எல்லாருக்கும் வணக்கம் சொல்லிக்கிறேன்...!" என்று சொல்ல வாசு சிரித்த சிரிப்பில், எல்லோரும் திரும்பிப் பார்த்தனர்.

"மச்சான் மானத்தை வாங்காம கொஞ்சம், எனக்கு பதில் வாசல்ல நின்னு எல்லாரையும் வரவேற்று உள்ள அழைச்சிட்டு வாங்க...!" அவன் தலையில் பொறுப்பை கட்டி, வாசலுக்கு அனுப்பி வைத்தான்.

இவர்கள் இருவரும் பேசுவதை பார்த்த ரங்கா, கண்ணால் கணவனை அழைத்து,"என்ன விஷயம்...?" என்று கேட்க...

"ஒண்ணும் இல்ல, நான் இங்கே இருக்கேன் இல்ல, அது உங்க அண்ணனுக்கு உறுத்துது. அதான் அவனை கொஞ்சம் வெளியில பேக் பண்ணி விட்டேன்..." என்று என்று சொல்லிவிட்டு, சிரித்த அவனைக் கண்டு, மையல் கொண்டாள்.

பட்டு வேட்டி சட்டையில், கம்பீரமாக இருந்த கணவனை அவளது கண்களும் பருகியது. மனைவியின் பார்வையை கவனித்தவன், சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு "என்னடி என்னையே சைட்டு அடிக்கிறியா...?" என்று கேட்டதும்,

"ஆமாம். ஆனா மொத மொதல்ல உங்களை பார்த்ததுமே, சைட் அடிக்க தான் செய்தேன்..." என்று சொல்லவும்...

அதிக ஆர்வத்தோடு "எப்ப?எப்ப.? என்று கேட்க...

"முதன் முதல்ல, உங்களை இந்த வீட்டில நான் பார்த்தேன் இல்ல அப்ப...! என்று சொல்லவும் அவனுக்கும் அந்த நினைவு வந்தது.

அதற்குள் விருந்தினர்கள் அனைவரும் வந்து விட, ரஞ்சிதம்மாவும், கீர்த்தி, கீர்த்தி அம்மா, ரங்கபாஷ்யத்தின் மனைவி மீனா அனைவரும் சேர்ந்து வளைகாப்பு வைபவத்தை சிறப்பாக நடத்தினர்.

கீர்த்தி தங்கள் சார்பில் தங்க வளையல்களும், சூல்காப்பும் ரங்காவுக்கு அணிவித்தாள். உபேந்திரா தனது அம்மாவின் நகைகளை ஏற்கனவே அவளிடம் கொடுத்து அணியச் சொல்லி இருந்தான்.

உபேந்திராவின் தாத்தா, "நீங்க ரெண்டு பேரும் இதே மாதிரி எப்பவும் ஒற்றுமையா, சந்தோசமா வாழணும்... என்று வாழ்த்தினார்.

குழந்தைகள் அம்மாவுக்கு நடந்த விஷேசத்தை பார்த்து சந்தோசத்தோடு வலம் வந்தனர். வளைகாப்பு முடிந்து ஒரு மாதத்திலேயே ரங்காவுக்கு வலி எடுக்க, அவர்களது ஹாஸ்பிடலிலே உபேந்திரா அவளை அட்மிட் செய்தான்.

அவள் வலியில் துடிக்கும் போது அருகிலேயே இருந்த உபேந்திரா டாக்டரிடம், "எதுக்கு இன்னும் பார்த்துட்டே இருக்கீங்க. சிசேரியன் பண்ணி குழந்தையை எடுக்க வேண்டியது தானே...?" என்று அவசரப்பட...

"அதெல்லாம் தேவையில்லை. இன்னும் அரை மணி நேரத்தில் குழந்தை தன்னாலேயே பிறந்திடும். நீங்க முதல்ல வெளியில போங்க...!" என்று சித்ரா கூறினார்.

"அதெல்லாம் முடியாது, நானும் கூடவே இருப்பேன்...!" என்று பிடிவாதமாக சொல்லி, மனைவியின் அருகிலேயே இருந்து, அவள் கைகளை இறுகப் பற்றிக் கொண்டான்.

அடுத்த அரை மணி நேரத்தில் ரங்காவின் வலி அதிகமாக, அவளுக்கு ஆறுதலாக இருந்த உபேந்திராவின் நிலைதான், சொல்ல முடியாததாக இருந்தது, ரங்கா படும் கஷ்டத்தை பார்த்தவன், ஒரு குழந்தையை வெளியில் கொண்டுவர பெண்ணாக, அவள் படும் கஷ்டத்தை பார்த்து, தாய், மனைவி, சகோதரி என்ற அனைத்து பெண்களின் மேலும் அவனுக்கு ஒரு மரியாதை உருவாகிற்று.

அரைமணி நேரத்தில் அவனது மகள் ரங்காவின் அலறலோடு, அவளும் வீல் என்று அலறிக்கொண்டு இந்த மண்ணுலகில் காலடி எடுத்து வைத்தாள்.

குழந்தையை சுத்தம் செய்து நர்ஸ் அவன் கையில் கொடுக்க, பன்னீர் ரோஜா கலரில் இருந்த தன் மகளை பார்த்து அவனுக்கு சந்தோஷத்தில் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது.

உயிரை உருவாக்க ஆண் தேவை என்றாலும், அதை இரத்தமும் சதையுமாக வளர்த்து இந்த பூமியில் கொண்டுவர ஒரு பெண்ணால் மட்டும்தான் முடியும். அதனால் தான் அவளுக்கு

பொறுமையின் சின்னமாக பூமாதேவி என்று கூறுகின்றனர் என்ற உண்மை அவனுக்கு முகத்தில் அறைந்தாற்போல் புரிந்தது.

கண்விழித்த மனைவியிடம் மகளை காட்டி, "ரங்கா இந்த குழந்தை நீ எனக்கு அளித்த ஈடில்லா பரிசு..." என்றவன் அவளின் நெற்றியில் உதட்டை ஒற்றி எடுத்து தனது அன்பினை தெரிவித்தான்.

சரியாக முப்பது நாட்கள் கழித்து உபேந்திராவின் வீட்டில், பெயர் சூட்டும் விழா. தாத்தாவின் ஆசைப்படி, தாத்தாவின் மனைவியின் பெயரான, காஞ்சனை என்ற பெயரை மகளுக்கு இருவரும் சூட்டினர்.

காஞ்சனையின் வரவால் மகிழ்ந்த பார்த்தாவும், பாவனாவும் எப்போதும் குழந்தையை சுற்றி, சுற்றி வந்தனர். அவர்கள் மூவரையும் கவனிப்பது மட்டுமே ரங்காவின் வேலையாயிற்று. மனைவி, மூன்று குழந்தைகள் இவர்கள் மட்டுமே உபேந்திராவின் உலகம் ஆயிற்று.

வாழ்க்கை நமக்கு கற்றுக்கொடுக்கும் அனுபவ பாடம் ஏராளம். எதையும் அறிந்து கொள்ளாமலே, தன்னாலேயே முடிவெடுக்கும் இளைய சமுதாயத்தின் பிரதிநிதியாக இருந்த உபேந்திராவும், ரங்காவும், தங்களுடைய வாழ்க்கையின் மூலம், குடும்பத்தில் கணவன், மனைவி, குழந்தைகள், எந்த வித

சச்சரவும் இல்லாமல் இருக்க, தாம்பத்தியத்தில் விட்டுக் கொடுத்தலும், புரிதலும், அடிப்படை அன்பிற்கு வழிவகுக்கும் என்பதை புரிந்து கொண்டனர்.

# முற்றும்